# கந்தபுராணம்.

28-3

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

# கந்த புராணம்

[வசனம்]

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்**

அவர்களுடைய ஆணையின் வண்ணம்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் இளவரசு

**ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

அவர்களால் வெளியிடப்பெற்றது

**ஆக்கியோர் :**

**வித்துவான் இ. பட்டுச்சாமி ஓதுவார்**

திருச்சிராப்பள்ளி

**விஜய ஆண்டு ஐப்பசி—கந்தசஷ்டி**

 :: [நவம்பர் 1953

உ

சிவ சிவ

# அருள் பெறும் வழி

வற்று அருள்சேர் குமரேசன்வண்
 காதை தன்னைச்
சொற்றாரும் ஆராய்ந் திடுவாரும்
 துகளு ருமே
கற்றாருங் கற்பான் முயல்வாரும்
 கசிந்து கேட்கல்
உற்றாரும் வீடு நெறிப்பாலின்
 உறுவர் அன்றே.

—கந்தபுராணம்

28-3

உ

செந்திலாண்டவன் துணை

# பதிப்புரை

---o---

உலகிலுள்ள நூல்களை மூன்று தரமாகப் பிரித்தனர் நமது முன்னோர்கள். அவை பதி நூல், பசு நூல், பாச நூல் எனப் பெறும். இறைவனது பேராற்றலையும், அவனை அடையும் வழியினையும், அதனால் அடையும் நிலைத்த இன்பத்தினையும் விளக்குவனவற்றைப் **பதி நூல்** என்றும், மக்கள் செம்மையாக வாழ வழி வகுத்து உலக இன்பத்தை நியாய முறையில் அடைய வழிதுறை கூறும் நூல்களைப் **பசு நூல்** என்றும், ஐம்பூதங்களையும் அவற்றின் சேர்க்கையால் உண்டாகிய உலகையும் விரித்துக் கூறும் நூல்களைப் **பாச நூல்** என்றும் கொண்டனர்.

பதி நூல்களுள் ஒன்று **கந்த புராணம்.** ஸ்காந்தமென்ற வடமொழி நூலிலிருந்து இது மொழி பெயர்க்கப்பெற்றதாகும். இந்த நூலினைச் செந்தமிழ்த்திறம் ஆக்கிய பெரியார் **ஸ்ரீகச்சியப்ப சிவாசாரியர்** ஆவர். இந்நூல் 10,345-செய்யுட்களைக்கொண்ட ஆறு காண்டங்களாகத் திகழ்கின்றது. இது குறிஞ்சிநிலக் கடவுளாகிய முருகனது தோற்றத்தினையும், பேராற்றலின் பெருந்திறத்தினையும் விளக்குகின்றது; தீயன செய்யும் உயிர்களது இயல்பும், அவற்றின் கொடுமையையும், முடிவையும் விளக்குகின்றது; அறத்தின் இயல்பும், அதன் முன் மறச்செயல் அழிந்தொழிவதனையும் நமக்கு விளக்கிக் காட்டுகின்றது; அதனால் மக்கள் தீயவை நீங்கி அறத்தினை அடுத்து வாழ வகை செய்கின்றது; அசுரர்களது கொடுமையையும் ஆறுமுகப்பெருமானால் அவர்கள் அழிவுபடுவதனையும் நமக்கு விளக்குகின்றது. இவை மட்டுமா? காவியக் கருத்தும், ஓவியக் கருத்தும், தத்துவக் கருத்தும் தன்னுள்ளே அடக்கியுள்ளது. இவற்றை எளிதில் யாவரும் உணரும்படியாக உரைநடையில் இன்று கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு முன் பல உரைநடை நூல்

களிருப்பினும் இந்நூல் இடங்களுக்கேற்பத் தலையங்கம் அமைக்கப்பெற்றுச் சிறப்புடன் விளங்குகின்றது; இடையிடையே கந்த புராணப் பாடல்களும் சேர்க்கப்பெற்றுள்ளது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த முறையில் கந்த புராண உரை நடை நூலை எழுதியவர், திருவருட் சோதித் தலமாகிய திருவண்ணுமலையில் சைவ வேளாள பரம்பரையில் தெய்வத்திருமுறை ஓதிவரும் குலத்தில் தோன்றியவரும், செந்தமிழ்த் திறத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவரும், மாணவர்களுக்கேற்ற பாட புத்தகங்கள் பல வெளியிட்டு வருபவரும், தமிழ் அன்பு, தெய்வீகப் பற்று, அடியார் வழிபாடு முதலிய சைவத் திறங்களில் மிக்க உறுதிப்பாடு உடையவரும், திருச்சி பொன்னையா உயர் நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியரும் ஆகிய **வித்துவான் திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்** ஆவர்.

இவ்வன்பருக்கு நமது அன்பும் ஆசியும் உரியனவாகுக. இந்நூலினைப் பயின்று பயனடையும் சைவ உலகும், தமிழுலகும் அன்னருக்குத் தங்கள் நன்றியினைக் காட்டும் கடப்பாடு உடையதாகும். செந்திலாண்டவன் திருவருளால் அன்னருக்குச் சகல நன்மையும் உண்டாவதாக.

இச்சிவப் பணியைச் செய்வித்தருளிய எங்கள் மாபெருந் தலைவரும், சைவ சமயப் பணிகளுக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும், பிற பொதுநலத் தொண்டுகளுக்கும், இடையருமல் திருவருள் புரிந்தருள்பவர்களுமாகிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின்** பொன்னர் திருவடி மலர்களைப் போற்றி வழிபடுகின்றேன்.

இங்ஙனம்

ஸ்ரீகாசிமடம்
திருப்பனந்தாள்
12—11—'53

**மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**
இளவரசு

உ

செந்திலாண்டவன் துணை

# முன்னுரை

—o—

புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியன் ஆக்கி இருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி!

—**கந்தபுராணம்**

ஸ்ரீ முருகப்பெருமானின் கருணைப்பெருக்கினை உலக மக்கள் எளிதிற் பெற்றுய்யுமாறு வாரி வாரி வழங்குவதும், மாந்தரைக் "கருக்கடல் முருக்கி முத்திக்கரை" தனில் சேர்க்கவல்லதும், பத்திச்சுவை நனி சொட்டச் சொட்ட அமைதியான ஆற்று நீரோட்டம் போன்று செந்தமிழ் நடையில் திகழ்வதும், பிற்கால இலக்கியங்களில் சிறப்புற்று விளங்குவதும், மெய்யடியார்களால் நாடோறும் பத்தியுடன் பாராயணம் செய்யப்பெறுவதும், உரைப்போர் கேட்போர் முன்னெலாம் புரிந்த வினை அனைத்தும் தீர்த்து முத்தி தர வல்லதும், சைவ புராணங்களில் தலை சிறந்ததாகத் திகழ்வதுமாகிய உயரிய நூல், காஞ்சிபுரம் **ஸ்ரீகச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்** அவர்கள் அருளிச் செய்த **கந்த புராணம்** ஆகும்.

இந்நூல் உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தக்ஷ காண்டம் என்ற ஆறு காண்டங்களில் முன்னர் பாயிரம், கடவுள் வாழ்த்து முதலான ஏழு பகுதிகளையும், பின்னர் 135-படலங்களையுங் கொண்டு 10,345-செய்யுட்களாகப் பரந்து, பெருங்கடல்போலப் புகழுடன் விளங்கும் புண்ணிய நூலாகும். இது செய்யுள் வடிவத்தில் திகழ்வதால் இதனைப் பயில்வோர் இலக்கிய இலக்கணப் பயிற்சி பெரிதும் உடையவராக இருத்தல் வேண்டும்; ஏனை

யோர் பயிலுதல் எளிதன்று. ஆதலால், கந்தபுராணச் செய்யுட்களின் போக்கைப் பெரும்பாலும் தழுவிய உரைநடையைச் சாதர்ரண மக்களும் எளிதிற் பயின்று இறைவனின் உண்மையையுணர்ந்து இன்பம் துய்க்கவும், கந்த சட்டி விரதம் அநுட்டிப்போர் ஆறு நாட்களில் முழுவதும் பாராயணம் செய்து பயன் பெறவும் வேண்டும் என்ற அருள் நோக்கங்கொண்டு, உரைநடையில் அமைந்த கந்த புராணமாகிய இந்நூல் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் அருளாட்சியோடு எழுந்தருளியிருக்கும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்** திருவுளப்பாங்கின்படி, **விஜய ஆண்டு ஐப்பசித் திங்கள் கந்த சட்டியாகிய இந்நன்னாளில் ஸ்ரீகாசிமடத்து வெளியீடாக** வெளிவருகின்றது.

சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்க நாளும் அருட்கொடை வழங்கியருளும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களை** நம் தாயகம் நன்கு உணரும். இதுகாறும் அவர்கள் வழங்கிய அருட்கொடைகளும் நூல் வெளியீடுகளும் மிகப் பலவாகும்; திருமுறை வளர்ச்சிக்காகவும், கல்வி அபிவிருத்திக்காகவும், சைவ சித்தாந்தத்தைப் பரப்பவும், அன்னதானம் செய்யவும், வைத்தியம் புரியவும், ஏனைய பொது நலப் பணிகளுக்காகவும் 127-பேரறக் கட்டளைகளை ஏற்படுத்தி 20,88,745-ரூபாய் மூலதனம் வைத்து அருள் புரிந்துள்ளார்கள். இன்னும் பற்பல வகைகளுக்கு அருட்கொடை வழங்கியருளும் புனிதமூர்த்தியாகிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கட்கும்**, அவர்கள் திருவுளக் குறிப்பின் வழியே ஒழுகி அறம் பல வளர்க்கும் ஸ்ரீகாசிமடத்து **இளவரசு ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கும்** இந்நானிலம் என்றும் அன்புடன் நன்றி செலுத்தும் கடமைப்பட்டுள்ளது.

கந்த புராணத்தைச் செந்தமிழ் உரைநடையில் ஆக்கித் தருதற்கு உடனிருந்து உறுதுணை புரிந்தவர் எனது மருகர் **திருவாளர் ஆர். எம். மதுரைநாயகம்** அவர்கள் ஆவர். அத்தகைய அரும்பணி புரிந்த அவர்கட்கும், இப்பதிப்பு நன்முறையில் அமையுமாறு தம் கருத்துக்களை அவ்வப்போது வழங்கிய திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்சிபால் **திருவாளர் வித்துவான் கே. எம். வேங்கடராமையா, எம். ஏ., பி, ஓ. எல்.** அவர்கட்கும், இந்நூல் அச்சா

குங் காலத்து உடனிருந்து ஒப்பு நோக்கிய எனது நண்பர் **வித்துவான் கோ. இரத்தினம் பிள்ளை** அவர்கட்கும் என் நன்றி என்றும் மிக உரித்தாகும்.

சைவத்துடன் தமிழினையும் தம் கண்களேபோலப் போற்றும் அருட்பெருங்கடலாகிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களும்**, அவர்கள் ஆணைவழி நின்றொழுகும் **ஸ்ரீமத் இளவரசு சுவாமிகள் அவர்களும்** அடியவனை இச்சைவ நற்பணியில் ஈடுபடுத்திக் கந்தபுராணக் கடலுள் மூழ்கித் திளைத்துக் கரையேறத் திருவருள் புரிந்தமைக்கு அடியவன் எழுமையும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன். அவர்கள் திவ்விய திருவடிமலர்களை அடியவன் என்றும் சிரத்திற்கு அணியெனக்கொண்டு வந்தித்து வழிபடுகின்றேன்.

திருச்சிராப்பள்ளி
12—11—'53

இங்ஙனம்
**தி. பட்டுச்சாமி ஓதுவார்**

உ

செந்திலாண்டவன் துணை

# உள்ளுறை

—(o)—

## 2. அசுர காண்டம்

## 3. மகேந்திர காண்டம்

## 4. யுத்த காண்டம்



## 5. தேவகாண்டம்

——00——



ஸ்ரீ செந்திலாண்டவன் திருவடி வாழ்க !

உ
செந்திலாண்டவன் துணை
திருச்சிற்றம்பலம்

# கந்த புராணம்

## [வசனம்]

—o—

## பாயிரம்

—o—

### விநாயகர் காப்பு

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்[1]
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம். 1

### சுப்பிரமணியர் காப்பு

மூவிரு முகங்கள் போற்றி ;
முகம்பொழி கருணை போற்றி ;
ஏவரும் துதிக்க நின்ற
இராறுதோள் போற்றி ; காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி ; அன்னான்
சேவலும் மயிலும் போற்றி ;
திருக்கைவேல் போற்றி போற்றி. 2

——oo——

1. திகழ் + தசம் + கரம் = திகட சக்கரம். திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான் - விளங்காநின்ற பத்துக் கரங்களையும் அழகிய ஈசான முதலிய ஐந்து முகங்களையுமுடைய சிவபெருமானின் ; விளங்காநின்ற பத்துத் திருக் கரங்களையும் செவ்விய ஐந்து திருமுகங்களையும் உடைய எனினுமாம். விநாயகர் பத்துத் திருக்கரங்களையும் ஐந்து திருமுகங்களையும் உடையவர் என்பதை விநாயக புராணம் கூறும். கச்சியப்ப சிவாசாரியர் காஞ்சிபுரத்தி லிருந்து கந்த புராணம் இயற்றியதால் அந்நகரிலுள்ள விகட சக்கர விநாய கரைத் துதித்தனர். இவ்விநாயகர் ஏகாம்பரநாதர் ஆலயத்திலுள்ள ஆயிரக் கால் மண்டபத்தில் எழுந்தருளியுள்ளார்.

## கடவுள் வாழ்த்து

### சிவபெருமான்

திருவந்த தொல்லைப் புவனத்தொடு தேவர் போற்றிப்
பெருவந் தனைசெய்து அறிதற்குஅரும் பெற்றி எய்தி
அருவந் தனையும் உருவத்தையும் அன்றி நின்றான்
ஒருவன் தனது பதந்தன்னை உளத்துள் வைப்பாம். 3

### சிவசத்தி

செறிதரும் உயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறும் அரனிடம் மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவும் ஆக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி ஏத்துவாம். 4

### விநாயகர்

மண்ணுல கத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம். 5

### சுப்பிரமணியக் கடவுள்

இருப்பரங் குறைத்திடும் எஃக வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
**திருப்பரங் குன்றமர் சேயைப்** போற்றுவாம். 6

சூரலை வாயிடைத் தொலைத்து மார்புகீண்டு
ஈரலை வாயிடும் எஃகம் ஏந்தியே

---

தக்கன் யாகத்தை யழித்த வீரபத்திரர்மீது திருமால் கோபங்கொண்டு விடுத்த சக்கரத்தை வீரபத்திரர் அணிந்திருந்த வெண்டலை கௌவிக் கொண்டது. திருமாலின் சேனாதிபதியாகிய விடுவசேனன் அச்சக்கரத்தை மீட்கக் கருதி விகடக் கூத்தாடினான். அதைக் கண்டு வெண்டலை நகைக்க அச்சக்கரம் கீழே வீழ்ந்தது. அதை விநாயகர் விரைந்தோடி எடுத்துக்கொண்டார். விடுவசேனன் விநாயகர் முன் மீண்டும் விகடக் கூத்தாடி வேண்டினான். விநாயகர் விடுவசேனனிடம் அச்சக்கரத்தைக் கொடுத்தருளினார். அதனால், அவ்விநாயகர் விகட சக்கர விநாயகர் எனப்பெயர் பெற்றார்.

வேரலை வாய்தரு வெள்ளி வெற்பொரீஇச்
**சீரலை வாய்வரு சேயைப்** போற்றுவாம். 7

காவினன் குடிலுறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர விளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மாலுற
**ஆவினன் குடிவரும் அமலற்** போற்றுவாம். 8

நீரகத் தேதனை நினையும் அன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடும்
தாரகத் துருவமாந் தலைமை எய்திய
**ஏரகத்[1] தறுமுகன் அடிகள்** ஏத்துவாம். 9

ஒன்றுதொ ரூடலை ஒருவி ஆவிமெய்
துன்றுதொ ரூடலைத் தொடங்கி ஐவகை[2]
மன்றுதொ ரூடிய வள்ளல் காமுறக்
**குன்றுதொ ரூடிய குமரற்** போற்றுவாம். 10

எழுமுதி ரைப்புனத்து இறைவி முன்புதன்
கிழமுதிர் இளநலங் கிடைப்ப முன்னவன்
மழமுதிர் களிறென வருதல் வேண்டிய
**பழமுதிர் சோலையம் பகவற்** போற்றுவாம். 11

ஈறுசேர் பொழுதினும் இறுதி இன்றியே
மாறிலா திருந்திடும் வளங்கொள் **காஞ்சியில்**
கூறுசீர் புனைதரு **குமர கோட்டம்வாழ்**
**ஆறுமா முகப்பிரான் அடிகள்** போற்றுவாம். 12

## திருத்தொண்டர்கள்

அண்டரும் நான்முகத் தயனும் யாவரும்
கண்டிட அரியதோர் காட்சிக் கண்ணவாய்
எண்டகு சிவனடி எய்தி வாழ்திருத்
தொண்டர்தம் பதமலர் தொழுது போற்றுவாம். 13

---

1. ஏரகம் - சுவாமிமலை : மலைநாட்டகத்தோர் திருப்பதி என்பர் நச்சினார்க்கினியர். அஃது ' உடுப்பி ' ஆகும்.

2. ஐவகை மன்றுகளாவன : திருவாலங்காட்டில் இரத்தின சபையும், தில்லையில் கனகசபையும், மதுரையில் வெள்ளிசபையும், திருநெல்வேலியில் தாமிர சபையும், திருக்குற்றாலத்தில் சித்திர சபையும் ஆகும்.

### சரசுவதி

தாவறும் உலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் துணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம். 14

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க ;
மலிவளம் சுரக்க ; மன்னன்
கோன்முறை அரசு செய்க ;
குறைவிலாது உயிர்கள் வாழ்க ;
நான்மறை அறங்கள் ஓங்க ;
நற்றவம் வேள்வி மல்க ;
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம். 15

பாயிரம், கடவுள் வாழ்த்து உட்படத் திருவிருத்தம்–30

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

# நூல் வரலாறு

**காஞ்சிமா நகர்**

சைவமும் தமிழும் தழைத்தோங்கி நிற்கும் தமிழகத்தில்,பாலாற்றின் வளம்கொண்ட **தொண்டை மண்டலம்** தனிச் சிறப்பு வாய்ந்தது. தொண்டை மண்டலத்தின் நகரங்களில் **காஞ்சிமா நகர்** மிகவும் புகழ்பெற்றுத் திகழ்வது. அஃது அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்னும் ஏழு நகரங்களுள் முதன்மை பெற்றது; காஞ்சி, திரிபுவனசாரம், காமபீடம், தபோமயம், திரிமூர்த்திவாசம், துண்டீரபுரம், இலயசித்து, பிரமபுரம், விண்டுபுரம், சிவபுரம், சகலசித்திகரம், கன்னிகாப்பு என்னும் பன்னிரு திருப்பெயர்களைக் கொண்டு விளங்குவது.

**குமரகோட்டம்**

அத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த காஞ்சி மாநகரில் சிவபெருமானுக்கெனச் சிறந்த ஆலயங்கள் இருபது உண்டு. அவற்றுள் **திருவேகம்பம்,கச்சபாலயம்,திருக்காயாரோகணம்** என்ற மூன்றும், மிகச் சிறந்தன. அம்மூன்றனுள் கம்பா நதிக்கரையிலே, வேதவடிவாய் நிற்கும் மாமரத்தினடியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருக்கோயிலாகிய **திருவேகம்பம்** உயர்தனிச் சிறப்புடையதாகும். இத் திருவேகம்பத்துள் உலகாணித் தீர்த்தக் கரையின் அருகே உமாதேவியார் காமாட்சி என்னும் திருப்பெயர் பூண்டு தவம் செய்து கொண்டிருக்கும் ஆலயம் **காமக் கோட்டம்** எனப்பெயர் பெறும்.அதன் பக்கத்தில் **குமர கோட்டம்** என வழங்கும் ஓர் ஆலயம் உண்டு. அதில் வேண்டுவார்க்கு வேண்டுவன அளிக்கும் சிவபெருமானின் திருக்குமரராகிய **முருகக் கடவுள்** எழுந்தருளியுள்ளார்.

**நைமிசாரணியம்**

காஞ்சிபுரத்திலுள்ள **கச்ச பாலயம்** என்னும் சிவாலயத்தில் நான்முகன் சரசுவதி தேவியோடு சிவபெருமானைப் பூசித்திருந் தார். சௌனகர் முதலிய முனிவர்கள் நான்முகனை அடைந்து வணங்கி, " நாங்கள் இதுகாறும் இல்லறத்தில் இருந்தோம்; இனித் தவம் செய்ய விரும்புகிறோம்; ஆதலால் தவம் செய்வதற்கு ஏற்றதோர் தபோவனத்தைப் பணித்தருளவேண்டும்" என்று வேண்டினார்கள். அதுகேட்ட நான்முகன் ஒரு தருப்பையை எடுத்துச் சக்கரமாக ஆக்கிப் பூமியில் உருட்டிவிட்டு, "இஃது எந்த இடத்தில் போய் நிற்கிறதோ அதுவே நீங்கள் தவம் செய் வதற்கு ஏற்ற இடம்" என்று கூறியருளினார். முனிவர்கள் நான் முகனை வணங்கி, அத்தருப்பை நேமியை (வளையத்தை)ப்பின் தொடர்ந்து சென்றார்கள். அந்நேமி ஒரு வனத்தில் போய்த் தங் கியது. அவ்வனம் **நைமிசாரணியம்** எனப் பெயர்பெற்றது. முனிவர்கள் அவ்வனத்தில் இருந்து தவம் புரிந்தனர். பின்னர், **சகச்சிரசமம்** என்னும் வேள்விசெய்து சித்த சுத்தியடைந்து மெய்யுணர்வு பெற்று விளங்கினார்கள்.

**நைமிசவன முனிவர்களும் சூதமுனிவரும்**

இவ்வாறு நைமிச வனத்தில் முனிவர்கள் இருந்தபோது, ஆங்கு எழுந்தருளிய வியாச முனிவரின் மாணவராகிய **சூதமுனி வரை** வரவேற்று ஆசனத்திருத்திப் பூசித்து வணங்கி, " சுவாமீ, நாங்கள் கருணாமூர்த்தியாகிய சுப்பிரமணியக் கடவுளின் சரித் திரத்தை அறிய விரும்புகின்றோம்; அதனை அடியேங்களுக்கு அருள்புரிதல்வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தனர். அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கிச் செவி சாய்த்துச் சூத முனிவர் முருகப்பெருமானின் சரித்திரத்தைச் சொல்லலானார்.

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானின் திருவருளால் தோன்றிய வேதங்கள் யாவும் ஒரு காலத்தில் ஆன்மாக்கள் செய்த தீவினையால் அடிதலை தடுமாறின. தேவர்கள் முனிவர் கள் மனிதர்கள் யாவரும் மதிமயங்கி, வேத நெறிதவறிப் புறச் சமயம் ஏற்படுத்தி அவ்வழி நிற்பாராயினர். இந்நிலையினைப் போக்கக் கருதி, இந்திரன் முதலிய தேவர்கள் சூழப் பிரமனும்

திருமாலும் திருநந்திதேவர் அனுமதி பெற்றுச் சிவபெருமானை அடைந்து, வணங்கித் துதித்து, "யாவரும் புறச் சமயநெறி விடுத்துத் தேவரீரே பரம்பொருள் எனத்துணிந்து உம்மையே வழிபட்டுய்யும் பொருட்டுச் சிறிது திருவருள்புரிய வேண்டும்" என்று வேண்டி நின்றனர்.

சிவபெருமான் திருமாலை நோக்கி, "உன் கலைகளில் ஒன்றைக்கொண்டு வியாச முனிவனாகப் பிறந்து வேதங்கள் யாவற்றையும் ஓதாதுணர்ந்து அவற்றை நான்காக வகுத்து நன்மாணக்கருக்கு எடுத்தோதுவீராக; நாம் முன்னர் பதினெண் புராணங்களையும் திருநந்தி தேவருக்கு உபதேசித்தோம்; அவர் சனக்குமாரருக்கு உபதேசித்தார்; அச்சனற் குமாரரிடத்தில் அப்புராணங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்வீராக" என்று திருவாய்மலர்ந்தருளினர். அவ்வண்ணமே செய்வதாகத் திருமால் விடைபெற்றுப் பராசர முனிவருக்கும் யோசன கந்தி (பரிமளகந்தி) க்கும் புதல்வராய்த் தோன்றினர். பின், அவர் வதரிகா வனத்தில்[1] (இலந்தை மரக் காட்டில்) வதிந்ததினால், **வாதராயணன்** என்று அழைக்கப் பெற்றார்; வேதாகமங்களை ஓதாதுணர்ந்து நான்காகப் பகுத்து நிலைபெறச் செய்தமையால் **வேத வியாசர்** எனவும் பெயர் பெற்றார்; சனற்குமார முனிவரிடம் புராணம் பதினெட்டும் கேட்டறிந்தார்; தாம் கொண்ட வேத நுண்ணறிவு கொண்டு **வேதாந்த சூத்திரம்**[2] செய்து, அவற்றையும், வேதங்களையும் **பயிலர், வைசம்பாயனர், சைமினி, சுமந்து** என்னும் நால்வருக்கும் உபதேசித்தருளினர். வியாச முனிவரின் ஆணையின்படி அந்நால்வரும் நான்கு வேதங்களையும், வேதாந்த சூத்திரத்தையும், பதினெண்புராணங்களையும் உலக முழுவதும் பரப்பினர்.

புராணம் பதினெட்டுள் சிவபுராணம் பத்து; விட்டுணு புராணம் நான்கு; பிரம புராணம் இரண்டு; சூரிய புராணம் ஒன்று; அக்கினி புராணம் ஒன்று.

---

1. இவ்வதரிகாவனம் சரசுவதி நதிக்கு அருகிலுள்ள ஒரு புண்ணிய வனம்.

2. இது வியாச சூத்திரம் எனவும், பிரமமீமாஞ்சை எனவும், உத்தர மீமாஞ்சை எனவும் பெயர்பெறும். இதற்கு நீலகண்டர், சங்கரர், இராமாநுசர், மத்துவர் என்னும் நால்வர் பாஷியங்கள் செய்துள்ளார்கள். இவற்றுள் சைவர்களால் கொள்ளப்பெறுவது நீலகண்ட பாஷியம் ஒன்றேயாம்.

**கந்த புராணம்**

சாத்துவிக குணமுடைய சைவம், பௌடிகம், மார்க்கண்டேயம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம் என்னும் சிவ புராணம் பத்துமே யாவற்றுள்ளும் சிறந்தனவாகும். அப்பத்தினுள் **காந்த புராணம்** தலை சிறந்து விளங்குவதாகும். அது சனற்குமார சங்கிதை, சூத சங்கிதை, பிரம சங்கிதை, விட்டுணு சங்கிதை, சங்கர சங்கிதை, சூர சங்கிதை என ஆறு சங்கிதைகளைக் கொண்டது. அவற்றுள் சங்கர சங்கிதை பன்னிரண்டு கண்டங்களை உடையது. அக்கண்டங்களுள் சிவ ரகசிய கண்டம் முதன்மையானது. அது பதின்மூவாயிரம் கிரந்தங்களையுடையதாய், உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம். தேவ காண்டம், தக்ஷ காண்டம், உபதேச காண்டம் என ஏழு காண்டங்களை உடையதாய்விளங்குவது.அவைகளில் முதல் ஆறு காண்டங்களும் தமிழில் **கந்த புராணம்** என்னும் பெயர்கொண்டு விளங்குகிறது. அது வேதாந்தங்களின் சாரத்தை உள்ளடக்கியது; அறம், பொருள்,இன்பம்,வீடு என்னும் நான்கு பேறுகளையும் எளிதில் தரவல்லது ; மங்கலகரம் பொருந்தியது. "புது மயில் ஊர்பரன் புராணத் துற்றிடாக் கதையிலை;அன்னது கணிதம் இன்றரோ" என்றபடி கந்த புராணத்தில் அடங்காத கதையும் இல்லை ; அவற்றிற்கு அளவும் இல்லை. இந்நூல் 'காந்தமாகிய பெருங்கடல்' என்றும் புகழப்பெறுவது. முதல் ஆறு காண்டங்களைக் **கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளும்** இறுதிக் காண்டமாகிய உபதேச காண்டத்தைக் **கோனேரியப்ப முதலியாரும்** தமிழில் செய்யுள் வடிவமாகப் பாடியுள்ளார்கள்.

**கதைச் சுருக்கம்**

கந்த புராணத்தை முதலில் சுருக்கமாகத் தொகுத்துச் சூதமுனிவர் சொல்லத் தொடங்கினர் :

"மகேந்திரபுரியை ஆண்டு வந்த சூரபன்பன் கொடுங்கோன்மை புரிந்து தேவர்களுக்கு இன்னல் பல இழைத்து வந்தான். சூரபன்மனின் இன்னல்களுக்குள்ளாகிய தேவர்கள், பிரமனையும், திருமாலையும் அணுகி, மோனநிலையில் இருந்த சிவ

பெருமானின் மோனத்தைக் கலக்கும்படி தூண்டினர். அவர்கள் விருப்பத்திற்கிணங்க மன்மதன் சிவபெருமான் மீது மலர்க்கணை எய்யச் சிவபெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்தார். மன்மதன் எரிந்து சாம்பராயினன். சிவபெருமான் மோன நிலை நீங்கித் தேவர்களுக்குத் திருவருள் புரிந்தார். மலையரசன் மகளை மணம்புரியச் சிவபெருமான் பூதங்கள் சூழ இமயமலையை அடைந்தார். பூதகணங்களின் பாரம் தாங்காமல் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. அது சமனுக அகத்திய முனிவரைச் சிவபெருமான் தென்பாலுள்ள பொதியை மலைக்கு அனுப்பிவிட்டு, மலைமகளை மணந்து, இரதிதேவியின் வேண்டுகோளின்படி மன்மதனை உயிர்ப்பித்தருளினுர்.

தேவர்கள் வேண்டுகோட்கு இணங்கிச் சிவபெருமான் நெற்றிக் கண்ணிடத்திலுள்ள தீப்பொறிகொண்டு குமாரக் கடவுளை அளித்தருளினர்; அவருக்கு உதவிபுரிய வீரவாகு தேவர் முதலிய இலட்சத்து ஒன்பது வீரர்களையும் அவதரிக்கச் செய்தார். முருகக் கடவுள் திருவிளையாடல் பல புரிந்து, நாரதர் வேள்வியில் தோன்றிய ஆட்டுக் கடாவை வாகனமாகக் கொண்டார்; பிரணவத்தின் பொருள் கூற மயங்கிய பிரமனைச் சிறையிலிட்டுத் தாமே படைத்தல் தொழிலை மேற்கொண்டார்; தந்தையின் வேண்டுகோளின்படி பிரமனைச்சிறையினின்று நீக்கிப் பிரவணப் பொருளை அகத்தியருக்கு உபதேசித்தார். சிவபெருமான் முருகக்கடவுளை நோக்கி, "தேவர்களுக்குத் துன்பம் இழைத்த சூரபன்மன் முதலியோரைக் கொன்று வருக" என்று திருவாய் மலர்ந்தருளினுர். அங்ஙனமே முருகப்பெருமான் இலட்சத்து ஒன்பது வீரர்களையும், இரண்டாயிர வெள்ளம் பூதசேனைகளையும் துணையாகப் பெற்றுப் பூவுலகை வந்தடைந்து கிரவுஞ்ச கிரியையும், தாரகனையும் அழித்தார்; தேவகிரியில் எழுந்தருளியிருந்து தென்திசை நோக்கிச் சென்று பல சிவத்தலங்களை வழிபட்டுத் திருச்சேய்ஞலூரில்[1] சிவபெருமானைப் பூசித்துப் பாசுபதம் பெற்ருர்; திருப்பரங்குன்றம் சென்று பராசர முனிவரின் புத்திரர்களுக்குத் திருவருள்புரிந்து திருச்செந்தூர் அடைந்தார்.

---

1. திருச்சேய்ஞலூர் - திருச்சேய்நலூர். இது வடமொழியில் குமாரபுரி எனப்படும். இத்தலம் திருப்பனந்தாளுக்கு அண்மையில் உள்ளது.

பிறகு, முருகப்பிரான் சூரபன்மனுதியர் வரலாற்றினைத் தேவ குருவினால் அறிந்து,வீரவாகுதேவரைத் தூதாக மகேந்திரபுரிக்கு அனுப்பிச் சூரபன்மன் எண்ணத்தை அறிந்து, கோபாவேசத்தோடு வீரமகேந்திர புரியை அடைந்து, சூரபன்மனின் கிளைஞர் முதலியோரையும், சிங்கமுகாசுரனையும் அழித்தார்; சூரபன்மன் மார்பை இரண்டாகப் பிளந்தபோது, சூரபன்மன் மயிலும் சேவலுமாக உருவெடுத்து வந்தான்; மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியாகவுங் கொண்டு அன்றே செந்திற்பதி வழியாய்த் திருப்பரங்குன்றம் அடைந்தார். இந்திரன் வேண்டுகோளுக்கு இணங்கி முருகக்கடவுள்,தெய்வயானையைமணந்தார்; இந்திரனை விண்ணுலகிற்குத் தலைவனாக முடிசூட்டினார். பின்பு முருகக்கடவுள் கயிலையங்கிரிக்கு எழுந்தருளிப் பார்வதிபாகராகிய சிவபெருமானை வணங்கி,அங்கிருந்து கந்த வெற்புக்கு எழுந்தருளி, அங்கு அளவற்ற திருவருளோடு வீற்றிருந்து, பின்பு திருத்தணிகைப்பதி வந்து எழுந்தருளினார்; நாரத முனிவரின் மூலம் வள்ளியம்மையாரின் வடிவழகு கேட்டுக் களவு முறைப்படி மறைந்தொழுகித் திருமணம் புரிந்து, திருத்தணிகை வந்தடைந்து அங்குச் சிலகாலம் தங்கியிருந்தார். பிறகு, கந்தக் கடவுள் கந்தகிரியிலிருந்த தெய்வயானையின் பிரிவைத் தவிர்த்து, வள்ளி தெய்வயானையுடன் எழுந்தருளினார்.''

இங்ஙனம் முருகக் கடவுளின் சரிதத்தைச் சுருக்கி உரைக்கக் கேட்ட முனிவர்கள் விரித்துரைக்கும்படி வேண்ட, அங்ஙனமே சூதமுனிவர் விரித்துரைக்கத் தொடங்கினார்.

| | | | |
|---|---|---|---|
| அவையடக்கம் | | திருவிருத்தம்– | 20 |
| ஆற்றுப் படலம் | | ,, | 39 |
| திருநாட்டுப் | ,, | ,, | 57 |
| திருநகரப் | ,, | ,, | 124 |
| பாயிரப் | ,, | ,, | 82 |
| | | திருவிருத்தம்– | 322 |
| | | ஆகத்திருவிருத்தம்– | 352 |

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

முதலாவது

# உற்பத்தி காண்டம்

### சிவபெருமான் வணக்கம்

பிறப்பதும் இறப்பதும் பெயருஞ் செய்கையும்
மறப்பதும் நினைப்பதும் வடிவம் யாவையும்
துறப்பதும் இன்மையும் பிறவுஞ் சூழ்கலாச்
சிறப்புடை அரனடி சென்னி சேர்த்துவாம்.

—oo—

## 1. திருக்கைலாசப் படலம்

### திருக்கயிலாயச் சிறப்பு

திருக்கயிலாய மலை என்னும் வெள்ளிமாமலை சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பெருமை வாய்ந்தது; தம்மை அடைந்த ஆன்மாக்களின் பாசத்தை நீக்கித் திருவருள் புரியும் இறைவனின் தன்மையேபோன்று, தன்னை அடைந்தாரின் மேனியின் நிறத்தை மாற்றி மெய்யொளி வீசும் தன்மை பொருந்தியது; சிவபெருமானின் வெள்ளிய இடபமும், அவனது திருநீற்றுக் கோலமும், மெய்யடியாரின் உள்ளமும்போலத் திகழ்வது; பல் கோடி சந்திர சூரியர்கள் ஒருங்கே கூடி அளிக்கும் ஒளியே போன்று பிரகாசமுடையது; திருநந்திதேவர் அன்புடன் காக்கப் பெற்றது; இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் பூத கணங்களும் நீங்காது வாழும் சிறப்புடையது; அடியும் முடியும் காணுதற்கரியதாய் விளங்குவது.

### சிவபெருமான் உமாதேவியாருடன் வீற்றிருத்தல்

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்கயிலாய மலையிலே பொன் மயமாக விளங்கும் மணி மண்டபம் ஒன்றுளது. அதன்

நடுவிலே விளங்கும் அரியாசனத்தின்மீது, எல்லா உயிர்களுக்கும் தாயாக விளங்கும் உமாதேவியாருடன் சிவபெருமான் அளவற்ற பெருங்கருணையோடும் எழுந்தருளியிருந்தார்.

அப்போது பூதகணங்கள் முதலியோர் பல வர்த்தியங்களை முழக்கினார்கள். நாரதர் முதலியோர் இன்னிசை பாடினார்கள். தேவர், முனிவர் முதலியோர் சிரமேற் கைகூப்பித் தொழுது, "ஹரஹர" முழக்கத்துடன் ஆடிப் பாடினார்கள். திருநந்தி தேவர் தமது திருக்கரத்தில் பொற்பிரம்பேந்தி அடியார் கூட்டத்தை ஒழுங்குறச் செய்துகொண்டிருந்தார்.

திருவிருத்தம்– 22
ஆகத் திருவிருத்தம்–374

——oo——

## 2. பார்ப்பதிப் படலம்

**உமாதேவியார் வேண்டுகோள்**

அவ்வமயம் உமாதேவியார் எழுந்து, பரமபதியை நோக்கி, "எம்பெருமானே! தேவரீரை இகழ்ந்த தக்கனுக்கு நான் மகளாகித் தாக்ஷாயணி என்னும் பெயர் பூண்டு, அவனிடத்தே வளர்ந்த இச்சரீரத்தைத் தாங்குதற்கு அஞ்சுகிறேன். ஆதலின், அவற்றை நீக்குமாறு பணித்தருள வேண்டுகிறேன்" என்று விண்ணப்பித்தார். அதற்கு இறைவன், "இமயமலையரசன், உன்னைத் தன் மகளாகப் பெற்று, எனக்குத் திருமணஞ் செய்து கொடுக்க வேண்டுமென்று கடுந்தவம் செய்துகொண்டிருக்கின்றான்; நீ அவனுக்கு மகளாய் அவதரித்து வளர்ந்து வருவாயாக; நாம் வந்து உன்னை மணம்புரிந்து அழைத்து வருவோம்" என்று திருவாய்மலர்ந்தருளினார். உமாதேவியார் இறைவனை வணங்கி, விடைபெற்று இமயமலையை அடைந்தார்.

**உமாதேவியார் மலையரசன் மகளாய்ப் பிறத்தல்**

இமயமலையின் ஓர்பால் **மானச வாவி** என்னும் பொய்கை உள்ளது. அப்பொய்கையைச் சுற்றிலும் பூம்பொழில் திகழும். அப்பொழிலின்கண்ணே மலையரசன் தவம் செய்துகொண்டிருந்தான். பொய்கையில் மலர்ந்திருந்த தாமரைமலர் ஒன்றில்

உமாதேவியார் குழந்தை வடிவாய் எழுந்தருளியிருந்தாள். அக்குழந்தையைக் கண்ட மலையரசன் மகிழ்ச்சி மிகுந்தவனாய்ப் பேரன்போடு எடுத்துக்கொண்டு போய்த் தன் மனைவியாகிய **மேனை** இடத்திலே அளித்தான் ; குழந்தையைப் பெற்ற வரலாற்றினையும் அவளுக்கு எடுத்துக் கூறினான். மேனை இறைவனின் திருவருளை வியந்து வணங்கி, அன்பு மேலிட்டவளாய் அக்குழந்தைக்குப் பாலூட்டிச் சீராட்டிப் பார்ப்பதி (பார்வதி) என்னும் திருப்பெயர் சூட்டி வளர்த்து வந்தாள் ; அணிகலன்கள் பல பூட்டி அழகுக்கு அழகுசெய்து கண்டு மகிழ்ந்தாள்.

**மலைமகள் தவம்**

உமாதேவியார் ஐந்து வயது நிரம்பப் பெற்றதும், சிவபெருமானையே திருமணம் புரிய வேண்டித் தவஞ்செய்யவிரும்பினாள் ; அதற்கு ஒரு தவச்சாலை அமைத்துத்தரும்படி தன் தந்தையை வேண்டினாள். மலையரசன், "குழந்தாய், நீ இவ்விளம் பிராயத்தில் தவமியற்ற இயலாது ; ஆதலால், உன் எண்ணத்தைக் கைவிடுக" என்று கூறினான். உமாதேவி, மலையரசனை நோக்கி, "நான் தவம் புரிய விரும்பியதும் எம்பெருமான் அருளால்தான்; ஆதலால், தடை ஒன்றும் செய்யற்க" என வேண்டினாள். மலையரசன் அதற்கு இயைந்து, தவச் சாலை ஒன்றை ஏற்படுத்தி உமாதேவிக்கு உதவி புரியப் பல கன்னியர்களையும் ஏற்பாடு செய்து கொடுத்தான். உமாதேவியார், தவச்சாலை புகுந்து இறைவனை நோக்கித் தவம் புரியலானாள். நாடோறும் மலையரசனும், மேனையும் உமாதேவியாரைக் கண்டு வந்தனர்

திருவிருத்தம்– 36
ஆகத் திருவிருத்தம்–410

——oo——

## 3. மேருப் படலம்

**சனகாதியர் வேண்டுகோள்**

அம்பிகை இமயமலையில் தவமேற்கொண்டிருக்கும் காலத்து, பூவுலகில் காசிப முனிவருக்கு மாயை இடத்துத் தோன்றிய சூரபன்மன் என்னும் அசுரன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அரசுபுரிந்து கொண்டிருந்தான். அப்போது **சனகர், சனந்தனர்,**

சனந்தனர், சனற்குமாரர் ஆகிய நான்கு முனிவர்களும் தவம் செய்தும் ஞானநிலை பெறாதவர்களாய்க் கயிலை சென்று, திருநந்தி தேவர் மூலம் எம்பெருமானை அடைந்து தரிசித்துச் சிவாகமத்து உட்பொருளை உணர்த்தியருள வேண்டும் என்று வேண்டினர். இறைவன் முனிவர்களை நோக்கி, "உங்களுக்கு மெய்யறிவுண் டாகும் வண்ணம் நாம் ஆகமத்துட் பொருளை உணர்த்துவோம்" என்று திருவாய்மலர்ந்தருளினார். பின்பு, திருநந்திதேவரைப் பார்த்து, "மன்மதன் அன்றி மற்றைத் தேவர் எவர்வரினும் உள்ளே விடுக்காதே" என்று பணித்தருள, அவ்வாறே திருநந்தி தேவர் கிழக்குக் கோபுர வாயிலை அடைந்து காவல் புரியலானார்.

**சொல்லாமற் சொல்லுதல்**

சிவபெருமான் தக்ஷிணாமூர்த்தியாய்க் கல்லால நிழலின் கண்ணே எழுந்தருளிச் சரியை, கிரியை, யோகம் என்னும் ஆகமத்தின் முதன் மூன்று பாதங்களையும் முனிவர்களுக்கு உபதேசித்தார். நான்காவது பாதமாகிய ஞானத்தையும் அருளும்படி முனிவர்கள் வேண்டினர். இறைவன், "அது வாக்கினாற் சொல்லக்கூடியதன்று; இவ்வாறு சும்மாவிருத்தலே" என்று ஞான முத்திரை அமைந்த திருக்கரத்தைத் தம் மார்பில் அமைத்து, ஒரு கணப்பொழுது யோகம் செய்வார் போல் இருந்தருளினார். அங்ஙனம் நிகழ்ந்த ஒரு கணம் பிரமன் முதலியோருக்குப் பல யுகங்களாயின. சிவபெருமான் போகவடிவமின்றி, யோக வடிவாகி இருந்ததால் விண்ணோரும், மண்ணோரும் மகளிரை விரும்பாமல் துறவிகள்போல் வாழ்ந்து வருவாராயினர். அதனால் உயிர்களெல்லாம் பெருக்கமற்றுக் குறைந்து வரலாயின.

**இந்திரன் தவம்**

இங்ஙனம் வாழ்ந்து வந்த தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் சூரபன்மன் இடுக்கண் பல இழைத்து வந்தான். அவற்றைப் பொறுக்க முடியாத இந்திரன் தன் மனைவியாகிய இந்திராணியோடும் தேவர்களோடும் சுவர்க்கத்தைவிட்டுப் பூலோகத்திற்கு வந்து திருக்கயிலாய மலையை அடைந்தான்; சிவபெருமானைத் தரிசிக்க இயலாமல் வருந்தி மேருமலைக் கேகினான்; சூரபன்மனின் மகனாகிய பானுகோபனால் சுவர்க்கம் எரிக்கப்பட்டுத்

தன் குமாரனுகிய சயந்தனும், தேவர்களில் சிலரும் சிறையிடப் பட்டிருப்பதையும் அறிந்தான்; சூரபன்மனுல் ஏற்பட்ட துன்பங் களேக் களேய எண்ணிச் சிவபெருமானே நோக்கி அம்மேரு மலேயி லேயே கடுந்தவம் புரிந்தான். இந்திரனின் தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் அவனுக்குக் காட்சி தந்து, "நம்மை இகழ்ந்த தக்கனின் வேள்வியில் கலந்து கொண்டதால் இங்ஙனம் துயரம் ஏற்பட்டது ; இனி, நமக்கு ஒரு திருக்குமரன் தோன்றுவான் ; அவன் சூரபன்மனேக் கொன்று உன் துயரைப் போக்குவான்" என்று கூறி மறைந்தருளினுர்.

**இந்திரன் நான்முகனிடம் செல்லல்**

சிவபெருமான் திருவருள் புரிந்த கருணையை இந்திரன் எண்ணி மகிழ்ந்தனன் எனினும், யோகநிலேயிலிருக்கும் பெரு மானுக்கும்தவமேற்கொண்டிருக்கும் உமாதேவியாருக்கும் எங்ங னம் திருக்குமரன் அவதரிப்பான் என்று எண்ணிக் கவலேயுற் ருன். பிறகு, தன் மனேவியைத் தேவகுருவின் மனேவியிடத்தில் விட்டுவிட்டுத் தான் தேவர்களோடு நான்முகன் உலகத்திற்குச் சென்ருன் ; பிரமனேக் கண்டு வணங்கித் தன் குறையினே வெளி யிட்டான். நான்முகன் உடனே இந்திரனேயும், தேவர்களேயும் திருமாலிடம் அழைத்துச் சென்று, தங்கள் துயர் நீங்க வழி காட்டவேண்டி நின்ருன்.

**திருமால் யோசனே கூறியருளல்**

திருமால், பிரமதேவன் கூறியவைகளேக் கேட்டு, "சிவ பெருமான் உமாதேவியைத் திருமணம் புரிந்து போகத்தில் ஈடு பட்டாலன்றி நம் கவலே நீங்காது ; ஆனுல் யோகத்திலிருக்கும் சிவபெருமானின் மோனத்தைக் கலேக்க மன்மதனுல் அன்றி வேறு எவராலும் இயலாது ; ஆதலால், அவனே அழைத்துச் சிவ பெருமானின் மோனத்தைக் கலேத்து உமையை மணந்து,போகத் தில் ஈடுபடச் செய்தால் திருக்குமரன் தோன்றுவான் ; நம் துயரும் தீரும்" என்று கூறியருளினுர். அதனேப் பிரமன் முத லியோர் கேட்டு மகிழ்ந்து திருமாலிடம் விடைபெற்றுக் கொண்டு திரும்பிச் சென்றனர்.

திருவிருத்தம்– 81
ஆகத் திருவிருத்தம்–491

—oo—

## 4. காம தகனப் படலம்

**நான்முகன்—காமன்**

தன் நகர் அடைந்த பிரமன், மன்மதனைத் தன்பால் வரும்படி நினைத்தான். அவ்வண்ணம் மன்மதன் பிரமனை வந்தடைந்து, வணங்கித் தன்னை அழைத்த காரணம் யாதெனக் கேட்டான். நான்முகன் மன்மதனை நோக்கி, "மதனா, நீ எங்கள் பொருட்டுச் சிவபெருமான்மீது மலர்க்கணை எய்து, அவர் கொண்ட மோனநிலையினைக் கலைத்து, உமாதேவியை மணக்கும்படி மயக்க வேண்டும்" என்று பணித்தனன். அதனைக் கேட்ட மன்மதன் கவலை மிக்குற்றவனாகி, இரு காதுகளையும் கைகளால், "சிவ, சிவ" என்று பொத்தி, "பெரிய பாவத்தைச் செய்யும்படியான சொற்களைக் கேட்டேனே! என் தந்தையாகிய திருமாலையும், நின்னையும், மற்றைய உயிர்களையும் எனது கரும்பு வில்கொண்டு மலர்க்கணை எய்து மயக்கினேன்; இந்திரனை அகலிகையிடமும், சந்திரனைத் தாரகையிடமும் மையலுறச் செய்தேன்; தேவர்களை மகளிருக்குக் குற்றேவல் புரியச் செய்தேன்; அகத்தியர் முதலிய துறவிகளின் வலிமையைக் கெடுத்தேன்; அவைகளையெல்லாம் செய்யும்படி எம்பெருமான் சத்தியே என்னை ஏவியது. ஆனால், பரமபதியாகிய அப்பெருமானை மயக்க என்னால் இயலாது. கண்ணுதலான்மேல் மலர்க்கணை எய்தால் நான் உயிரோடு வாழ முடியுமா? அப்பெருமானை எதிர்த்து உய்ந்தவர் எவர்? ஆ! ஆ!! அவனிடை செல்லேன்; செல்லேன்" என்று கூறினான்.

**காமன் சாபத்திற்கு அஞ்சுதல்**

அம்மொழிகளைக் கேட்ட பிரமதேவர் மன்மதனை நோக்கி, "நீ சென்று, சிவபெருமானின் மோனத்தைக் கலைக்காவிடில் தேவர்களின் துன்பம் நீங்காது. பிறர்பால் அன்புகொண்டு உதவி புரிவோர் அதனால் தமக்கு மரணமே நேரினும் அஞ்சார்; புகழ் ஒன்றே பயனாகக் கொள்வர். ஆதலால், மறுக்காதே. மறுத்தால் நின்னைச் சபிப்பேன்" என்றார். மலர்க்கணையோன் மலரவனின் சாபமேற்று வருந்துதலைக் காட்டிலும், கண்ணுதலான் மேல் கணையெய்து மாய்ந்தாலும் அது சிறப்புடையதாகும்

என்று துணிந்து, இரதிதேவியோடு வில்லும் மலர்க்கணையுங் கொண்டு திருக்கயிலையை அடைந்தான்.

**காமன் கணை எய்தல்**

திருநந்திதேவரின் அனுமதி பெற்று, ஐங்கணைக் கிழவன் மேற்கு வாயில் வழியாக இறைவன் இருப்பிடம் அடைந்தான். இறைவனின் மோனத் திருக்கோலம் கண்ட மன்மதன், சரபப் பட்சியைக் கண்ட சிங்கக்குட்டிபோல் கலங்கி வீழ்ந்தான். பிறகு மன்மதன் இரதிதேவியின் உபசாரத்தினால் தெளிந்து எழுந்து, ஒருவாறு மனம் தேறிக் கரும்பு வில்லை வளைத்து நாணேற்றிக் கொண்டு எம்பெருமானை அணுகினான்.

**காமன் எரிதல்**

இதற்குள், மனோவதி நகரத்திலிருந்து பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் மன்மதன் மலர்க்கணை எய்தலைக் காணப் புறப்பட்டு அம்மலையின் ஒருபால் வந்து இறைவனைத் துதித்து நின்றனர். மன்மதன் மலர்க்கணைகளைச் சிவபெருமான்மீது எய்தான். மலர்க்கணை பட்டதும் சிவபெருமான் சிறிதே பார்த்தார். அவர் நெற்றிக் கண்ணிலிருந்து எழுந்த தீயினால் மன்மதன் எரிந்து சாம்பரானான். திருக்கயிலாயமெங்கும் தீப்புகை பரவியது. அது கண்ட திருநந்திதேவர் 'மன்மதன் எரிந்துவிட்டான்' என்பதைத் தம்மைச் சூழ்ந்த கணங்களுக்குக் கூறியருளினார்.

**இரதிதேவி புலம்பல்**

சிவபெருமான் மன்மதனை எரித்துவிட்டு முன்போலவே மோனத்தில் எழுந்தருளியிருந்தார். இரதி தேவி தன் கணவன் இறந்தமை கண்டு, உடல் பதைத்துக் கீழே விழுந்து புரண்டு,

செம்பதுமை திருக்குமரா ! தமியேனுக்கு
ஆருயிரே ! திருமால் மைந்தா !
சம்பரனுக் கொருபகைவா ! கன்னல்வரிச்
சிலைபிடித்த தடக்கை வீரா !
அம்பவளக் குன்றனைய சிவன்விழியால்
வெந்துடலம் அழிவுற் றாயே !
உம்பர்கள்தம் விழியெல்லாம் உறங்கிற்றோ ?
அயனாரும் உவப்புற் றாரோ ?

நேயமொடு மறைபயிலுந் திசைமுகனைப்
புரந்தரனை நின்னைத் தந்த
மாயவனை முனிவர்களை யாவரையும்
நின்கணையால் மருட்டி வென்றாய் !
ஆயதுபோல் மதிமுடித்த பரமனையும்
நினைந்திவ்வா றழிவுற் றாயே !
தீயழலின் விளக்கத்திற் படுகின்ற
பதங்கத்தின் செயலி தன்றோ !

எனப் பலவாறு கூறிப் புலம்பி வருந்தினாள்.

திருவிருத்தம்–110
ஆகத் திருவிருத்தம்–601

——oo——

## 5. மோன நீங்கு படலம்

**சிவபெருமான் தேவர்களுக்கு அருளுதல்**

மன்மதன் எரிந்த பிறகும், சிவபெருமான் முன்போலவே மோனத் திருக்கோலத்தில் எழுந்தருளி யிருப்பதைப் பிரமன் முதலிய தேவர்கள் கண்டு அஞ்சி மனம் நடுநடுங்கினார்கள்; துன்பக் கடலில் ஆழ்ந்தார்கள்; இறைவன் எழுந்தருளியிருந்த திருக்கோபுர வாயிலை அடைந்து துதித்து நின்றனர். சிவபெருமான் தேவர்களைத் திருநந்திதேவர் மூலம் அழைப்பித்து, அவர்கள் குறை யாது எனக் கேட்டருளினார். தேவர்கள் இறைவனைப் பார்த்து, "எம்பெருமானே ! நாங்கள் சூரபன்மனின் தொல்லையால் நாடோறும் நலிவுறுகிறோம்; எங்கள் துன்பத்தை நீக்கத் தேவரீரை அன்றி வேறு யாவர் உளர் ? ஆதலால், தேவரீர் உமா தேவியாரை மணந்து, ஒரு குமரனைத் தந்து, சூரபன்மனைக் கொன்று, எங்களைக் காத்தருளல் வேண்டும்" என்று வேண்டினர். சிவபெருமான் அதற்கு இசைந்து, "நீங்கள் வருந்த வேண்டாம்; உமையை மணந்து உங்கள் துன்பத்தைப் போக்குவோம்" என்று கூறி விடையளித்தருளினார். யாவரும் துன்பம் நீங்கியவர்களாய் மேருமலைக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

### இரதிதேவி இறைவனை வேண்டுதல்

அச்சமயத்தில் இரதி தேவி கருணையங்கடலாகிய சிவபெருமானை அணுகி, "எம்பெருமானே! பிரமன் முதலிய தேவர்களின் தூண்டுதலினாலே அடியாளின் நாயகன் மலர்க்கணையெய்து மாண்டனன். ஆதலால், அக்குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்" என்று மன்றாடினள். கண்ணுதற்கடவுள், அவள்மீது கருணைபாலித்து, "நாம் உமாதேவியாரைத் திருமணம் புரியும் காலத்து உன் நாயகனை உயிர்ப்பிப்போம்" என்று வரமருளினார். இரதிதேவி இறைவனைப் போற்றி இமயமலையின் ஓரிடத்தே சென்று மேகத்தின் வரவுக்கு ஏங்கியிருக்கும் மயிலெனத் திருக்கல்யாணகாலத்தை எதிர்நோக்கி இருந்தாள்.

### சனகாதியர்களுக்கு அருளுதல்

சிவபெருமான், உமாதேவியாரைத் திருமணஞ்செய்து தேவர்களின் துன்பத்தை நீக்கத் திருவுளம்கொண்டு பிரமனது மானச புத்திரர்களாகிய சனகர் முதலிய நால்வரையும் நோக்கி, "மைந்தர்களே! ஞானயோகம் வார்த்தைகளினாற் சொல்லும் தரமன்று; மௌன நிலையில் இங்ஙனம் இருந்து நம்மை அறிவதே ஆகும்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அது கேட்ட முனிவர்கள் இறைவனை நோக்கி, "அடியவர்களாகிய நாங்கள் கொண்ட மயக்கம் தெளிந்தோம்" என்று விண்ணப்பம் செய்தார்கள். அவர்களைப் பார்த்து, "இனி நீங்கள் யோகத்திலிருந்து மேலான பதத்தை அடையக்கடவீர்களாக" என்று திருவாய் மலர்ந்து விடைகொடுத்தருளினார்.

திருவிருத்தம்–35
ஆகத் திருவிருத்தம்–636

——oo——

## 6. தவம் காண் படலம்

### சிவபெருமான் பார்வதியின் தவத்தைக் காணச் செல்லுதல்

சனகாதி முனிவர்கள் சென்றபின், சிவபிரான் உமாதேவியாரது அன்பின் திறத்தை அனைவருக்கும் காட்ட விரும்பிச் செஞ்சடையும் திருவெண்ணீறும் தாங்கிய வயோதிகப் பிரா

மண வடிவங்கொண்டு தவச்சாலையை அடைந்தார். அச்சாலையைக் காவல் புரிந்துகொண்டிருந்த கன்னியர்கள் அவர் வந்த காரணத்தை வினவி அறிந்து, தேவியாருக்கு அறிவித்தனர். தேவியார், "அவரை அழைத்து வருக" என்று கட்டளையிட, அவ்வாறே அம்மையாரிடம் வயோதிகரை அழைத்துச் சென்றனர். உமாதேவி அவரைக் கை தொழுது வணங்கி உபசரிக்க, அங்கு நின்ற தோழியாகிய விசயை என்பவள் அவருக்கு ஆசனமிட்டு அதில் அமரச் செய்தாள். அவ்வயோதிகர் உமாதேவியாரை நோக்கி, "உனது அழகெல்லாம் அழிய, உடலிலுள்ள தசை குன்றும்படி பெருந்தவம் செய்யும் காரணம் என்னை" என்று வினவினர். அதற்குப் பதில் கூறுமாறு தேவியார் தன் தோழிக்குக் குறிப்புணர்த்த அவள் அவரை நோக்கி, "சுவாமி! சிவபெருமானைத் திருமணம் புரிந்து கொள்ளும் பொருட்டுத் தவம் செய்கின்றாள்" என்று கூறினள். அது கேட்ட அம்முதியோர் நகைத்து, "பிரமதேவனாலும் திருமாலினாலும் அறியப்படாத சிவபெருமான் இவளுடைய தவத்துக்கு எய்துவரோ? எய்தினாலும் இவளை விருப்பத்தோடு திருமணம் புரிவரோ? இவள் தவத்தை விடுவதே நலமாகும்" என்று கூறினர்.

### உமாதேவியின் உறுதி

உடனே, தேவியார் கோபம் மிகுந்தவராய், "எம்பெருமான் என்னை மணம் புரியாவிடில் தவம் புரிந்து மாண்டு போவனே அன்றி, நான் என் தவத்தை விடமாட்டேன்" என்றார். மீண்டும் அவ்வயோதிகர் தேவியை நோக்கி, "சிவனுக்கு ஆடை தோல்; வாகனம் எருது; ஆபரணம் பாம்பு, என்பு, தலைமாலை, பன்றிக்கோடு; உண்ணும் கலம் தலையோடு; உண்பது நஞ்சும், பிட்சையும்; நடனசாலை சுடுகாடு; அணிவன வெள்ளெருக்கு, அறுகு, கொன்றை, நொச்சி, பாம்பு முதலியன; படைகளோ பூதங்கள்; அளவிலாச் செல்வம் மிகுந்த அரசகுமாரியாகிய உனக்கு அவன் ஏற்றவன் அல்லன்" என்று இகழ்ந்து கூறினர். அவ்வுரைகளைக் கேட்ட தேவியார் முன்னிலும் மிகச் சினந்து, "இறைவன் கொள்ளும் கோலமெல்லாம் ஆன்மாக்கள் வீடு பெறுதல் கருதிக் கொள்ளும் கோலமே; இறைவன் புகழைச் சிறிதும் அறியாது இகழ்ந்து பேசிய பொய் வேடத்தாய்! நீ புறத்துப் போதி"

என்றனள். அவ்வுரை கேட்ட வயோதிகர் வெளியே செல்லாது, "உன்மேல் இச்சைகொண்டு, உன்னை மணம் புரிந்துகொள்ள வந்த என்னை இப்படி வெளியே செல்லும்படி சொல்வது தகுமா" என்றார். பார்வதிதேவியார், "இக்கிழவனைப் போகும்படி கூறியும் இவன் போகாதிருக்கிறான்; ஆதலால், நான் வெளியே போகிறேன்" என்று அப்பால் நடந்தாள்.

**சிவபெருமான் காட்சி தந்தருளல்**

உடனே, சிவபெருமான் தாம் கொண்ட வயோதிகப் பிராமண வடிவத்தை விடுத்து இடபாரூடராய்க்கணங்கள் சூழ வான வெளியில் காட்சி தந்தருளினார். அது கண்ட மலைமகள் அவரை வணங்கி, "யான் அறியாமையால் கூறிய குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்" என்று இறைஞ்சி நாணி நின்றாள். சிவபெருமான் மகிழ்ந்து, "உமையே! நீ ஒன்றுக்கும் வருந்தாதே; உன்பால் குற்றம் ஒன்றும் இலது; நீ கூறியவெல்லாம் துதியாகவே கொண்டோம்; நாம் நாளையே வந்து உன்னைத் திருமணம் புரிவோம்" என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தருளினார். உமாதேவியின் தவத்தினைக் காண இறைவன் எழுந்தருளிய செய்தியனைத்தும் தோழியர் மூலம் அறிந்த மலையரசன் மகிழ்ந்து, தன் மனைவியுடன் வந்து பார்வதியை அழைத்துக் கொண்டு தன் மாளிகையை அடைந்தான்.

திருவிருத்தம்– 33
ஆகத் திருவிருத்தம்–669

——oo——

## 7. மணம் பேசு படலம்

**மணம் பேச முனிவர்களை அனுப்புதல் :**

பார்வதிதேவியாருக்குத் திருவருள்புரிந்து திருக்கயிலாயம் அடைந்த சிவபெருமான் முனிவர் எழுவரையும் தம்பால் வரும்படி மனத்தில் நினைத்தார். அவர்கள் அக்கணமே வந்து வணங்கி, "சுவாமி! அடியவர்களாகிய எங்களை அழைத்த காரணம் என்ன?" என்று பணிவுடன் வினவ, எம்பெருமான் அவர்கள்

மீது திருவருள் நோக்கம் செய்து, "அன்பர்களே! நீங்கள் இமவானிடம் சென்று பார்வதிதேவியை இன்றைக்கு நமக்குத் திருமணம் செய்துதரும் வண்ணம் பேசிக்கொண்டு விரைந்து நம்முன் வருவீர்களாக" என்று கட்டளையிட்டருளினார். முனிவர்கள் சிவபெருமானை வணங்கி, உடனே மலையரசன் முன் செல்ல, அவன் தன் மனைவியோடும் எதிர்கொண்டு அவர்களை வணங்கி அழைத்துச் சென்று, ஆசனத்திருத்தி, "அடியேனிடம் தாங்கள் வந்த நிமித்தம் யாதோ? என்று வினவினான். அதற்கு முனிவர்கள், "அரசே! பரமபதி உன் புதல்வியாகிய பார்வதியம்மையைத் திருக்கல்யாணம் செய்துகொள்ளத் திருவுளங்கொண்டு உன்னோடு மணம் பேசி வரும்படி எங்களை விடுத்தருளியுள்ளார்" என்று பதிலுரைத்தனர். அதுகேட்டு மகிழ்ந்த மலையரசன், "எம்பெருமானுக்கு உமாதேவியைத் திருமணம் செய்து கொடுப்பேன்; யானும் அவனடிக்குத் தொண்டனாவேன்" என்றான்.

**மேனையின் அச்சம் நீக்குதல்**

அப்போது மலையரசன் மனைவியாகிய மேனை, முனிவர்களை நோக்கி, "முன்னர்த் தக்கன் தன் மகளைச் சிவபெருமானுக்கு மணம் புரிந்து கொடுத்தான். பின்னர் அவரால் அவன் தண்டிக்கப்பட்டான். அதனை நினைக்குந்தோறும் என்மனம் அஞ்சுகிறது. யாங்கள் மகள் கொடுப்பின் என்ன நேருமோ" என்று தன் அச்சத்தைத் தெரிவித்தாள். முனிவர்கள் மேனையை நோக்கி, "நீ யாதொன்றுக்கும் அஞ்சாதே; தக்கன் சிவ நிந்தனை செய்தானதலின் தண்டிக்கப்பட்டான்; நீங்க்ள் அவ்வாறு செய்யமாட்டீர்கள்; இறைவன் உங்களுக்கு அருள் புரிவான்; வேறொன்றும் மனத்தில் நினைக்காதே" என்று கூறி, அவள் அச்சம் தவிர்த்து, அவளையும் உடன்படுத்தினர். பின்னர், மலையரசன் முனிவர்களை நோக்கி, "உமையைத் திருமணம் செய்யும்பொருட்டு எழுந்தருளும்படி சிவபெருமானுக்கு விண்ணப்பஞ் செய்யுங்கள்" என்றான். முனிவர்கள் மலையரசனிடம் விடைபெற்றுக் கொண்டு, கைலேயங்கிரியை அடைந்து இறைவனை வணங்கி யாவற்றையும் தெரிவித்து, விடைபெற்றுத் தத்தம் இருப்பிடத்தை அடைந்தார்கள்.

திருவிருத்தம்– 20
ஆகத் திருவிருத்தம்–689

—o—

## 8. வரைபுனை படலம்

**தேவதச்சன் நகரை அலங்கரித்தல்**

மலையரசன் தேவதச்சனை வரும்படி நினைக்க, அவன் வந்து கைதொழுது, "யான் செய்ய வேண்டியதைப் பணித்தருள்க" என்றான். மலையரசன் தேவதச்சனை நோக்கி, "நம்மை ஆட்கொண்டருளும் சிவபெருமானுக்கு யான்பெற்ற உமாதேவியைத் திருக்கல்யாணம் செய்துகொடுக்கக் கருதியுள்ளேன். ஆதலால், இந்நகர் முழுவதையும் அமராவதிபோல் அலங்கரிப்பாயாக" என்றான். தேவதச்சன் இமயமலையின்மேல் பல கோபுரங்களையும், மன்றங்களையும், சூளிகைகளையும், நிலத்தேர்களையும், மண்டபங்களையும், வீதிதோறும் பூம் பந்தர்களையும் உண்டாக்கினான்; வாழைகளையும் கமுகுகளையும் நாட்டித் தோரணங்களையும் கட்டினான்; பல சாலைகளையும் உண்டாக்கிக் கோயிலுக்கு ஒரு பக்கத்தே பதினாயிரம் யோசனைப் பரப்பினதாக ஒரு புரிசையையும், அதன் நான்கு வாயில்களிலும் நான்கு கோபுரங்களையும் அமைத்தான்; அதன் நடுவே செம்பொன்னாலாகிய திருமண மண்டபத்தையும், சிவபெருமானும் உமாதேவியாரும் எழுந்தருளியிருக்கும் பொருட்டு, இந்திர நீலக் கற்களினாலே ஒரு சிம்மாசனத்தையும், ஏனையோர் வீற்றிருக்கப் பல ஆசனங்களையும், பிறவற்றையும் அழகுற அமைத்தான்.

அது கண்டு மகிழ்ந்த மலையரசன் பிரமன் திருமால் முதலிய தேவர்கட்கும், முனிவர்கட்கும், அவரது மனைவியருக்கும் தூதர்களை அனுப்பித் திருக்கல்யாணத்தைத் தரிசிக்க வரும்படி தெரிவித்தான். உடனே துர்க்கை, காளி, சப்தமாதிகள், இலக்குமி, சரசுவதி, இந்திராணி, முனிபத்தினிகள், அரம்பையர் முதலானோர் அங்கு வந்து பார்வதிதேவிக்குத் திருமணக் கோலம் செய்வாராயினர். மேரு முதலிய மலைகளும், கடல்களும், நாகங்களும், திக்குயானைகளும், பிறவும் வந்தன.

**சிவபெருமானை அழைத்தல்**

மலையரசன் தன் சுற்றத்தாரோடு திருக்கயிலாய மலையை அடைந்து திருநந்தி தேவர் அனுமதி பெற்று உள்ளே சென்று சிவபெருமானை வணங்கி, "எம்பெருமானே! பங்குனி உத்தர

நாளாகிய இன்றே உமையைத் திருமணம் புரிய இமயமலைக்கு எழுந்தருளல் வேண்டும்'' எனப் பிரார்த்தித்தான். இறைவன் மலையரசனை நோக்கி, ''நாம் கணங்கள் சூழ இப்போதே எழுந்தருளுவோம்; நீ முன்னே செல்வாயாக'' என்று பணித்தருளினர். மலையரசன் எம்பெருமானை வணங்கி விடை பெற்றுத் தன் நகருக்குத் திரும்பினான்.

திருவிருத்தம்–36

ஆகத் திருவிருத்தம்–725

——oo——

## 9. கணங்கள் செல் படலம்

### காலாக்கினி ருத்திரர் முதலியோர் எழுந்தருளுதல்

சிவபெருமான் திருநந்திதேவரைப் பார்த்து, ''நம்முடைய திருமணத்தைத் தரிசிக்கும்பொருட்டு உருத்திர கணங்களையும், திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்களையும் பிறரையும் இங்கே வரும்படி செய்வாய்'' என்று பணித்தருளினர். அங்ஙனமே, நந்தியெம்பெருமான் அவர்கள் அனைவரும் வரும்படி சிந்தித்தார். உடனே காலாக்கினி, ருத்திரர், கூர்மாண்டேசர், ஆடகேசர், வீரபத்திரக் கடவுள், மகா சாத்தனர் முதலியோரும், குண்டோதரன், கண்டகன்னன், பிங்கி, பானுகம்பன், சங்குகன்னன் முதலிய பூதத் தலைவர்களும் அவர்களுடைய பல்கோடி பூதங்களும், திருமால், பிரமன், திக்குப்பாலகர் முதலிய தேவர்களும், சூரியன் சந்திரன் முதலிய கிரகங்களும், நட்சத்திரங்களும், சப்த மாதர்களும், அட்ட வசுக்களும், வித்தியாதரரும், முனிவர்களும், பிறரும் வந்து, திருநந்திதேவரின் அனுமதி பெற்றுச் சிவபெருமானை அடைந்து வணங்கித் துதித்தனர்.

### பிரமன் இறைவனை அணிகலன் அணிய வேண்டுதல்

பிரமதேவர், மணக்கோலத்திற்கு ஏற்ற முடி முதலிய பொற்கலன்களை எம்பெருமான் திருமுன் வைத்து, அவற்றை அணிந்தருள வேண்டுமென வேண்டினர். அவ்வணிகளைச் சிவபெருமான் தமது திருக்கரத்தினலே தொட்டருளி, ''நீ அன்

புடன் கொணர்ந்த அணிகளை யெல்லாம் நாம் அணிந்தாற்போல் மகிழ்ச்சியுற்றோம்'' எனக் கூறித் தம் திருமேனியிலுள்ள பாம்புப் பணிகளை யெல்லாம் இரத்தினுபரணங்களாகும் வண்ணம் திருவுளங்கொண்டார். அது கண்ட பிரமன் முதலிய யாவரும் அற்புதமடைந்து வணங்கினுர்கள்.

திருவிருத்தம்–29

ஆகத் திருவிருத்தம்–754

——oo——

## 10. திருக்கல்யாணப் படலம்

**சிவபெருமான் இமயமலைக்குச் செல்லுதல்**

சிவபெருமான் இமயமலைக்குச் செல்லத் திருவுளம்கொண்டு, தம் அருகுள்ள கணநாதர்களுக்குக் குறிப்பாலுணர்த்தி எழுந்து, திருநந்திதேவர் முன் செல்லத் தேவர்கள் முனிவர்கள் புகழ, தும்புரு நாரதர்களும் விஞ்சையர்களும் இசை பாட, வேதாகமங்கள் துதிக்கத் தமது செம்பொன் திருக்கோயிலினின்று வெளியே வந்து, குண்டோதரனின் புயத்தில் திருவடியை வைத்து இடபத்தின்மேல் ஏறியருள, யாவரும் கண்டு களித்துக் கடல்போல் ஹரஹர வென்று ஆரவாரம் செய்தார்கள். விநாயகர் ஐந்நூற்றேழு கோடி பூதங்கள் சூழ வந்து வணங்கி முன்னே சென்றருளினுர். சூரியனும் சந்திரனும் குடை பிடிக்க, வாயு சாமரம் வீச, வருணன் சாந்து ஏந்த, இந்திரன் ஆலவட்டம் தூக்கப் பூதர்கள் பல் வேறு வாத்தியங்களை முழக்க, உருத்திரர், திருமால், பிரமன், இந்திரன், தேவர்கள், முனிவர்கள், பிறரும் புடைசூழச் சிவபெருமான் திருக்கயிலாயமலையை அகன்று இமயமலையை அடைந்தருளினுர்.

**சிவபெருமானை வரவேற்றல்**

மலையரசன் தன் சுற்றத்தாரோடு சிவபெருமான் வருகையை அறிந்து எதிர்கொண்டு ஔஷதிப்பிரஸ்தமென்னும் நகரத்திற்கு அவரை அழைத்துப் போயினுன். சிவபெருமான் நகரத்து வீதிகளையெல்லாம் கடந்து உமாதேவியாரின் திருக்கோயிலுக்கு அணித்தாகச் சென்றருளினுர். மங்கையர்கள் ஆலத்தி சுற்றியபின்

திருமணச்சாலையின் முன் சிவபெருமான் இடபம்விட்டு இறங்கியருளினர். உடனே மேனைதேவி பல பெண்களுடன் அங்கு வந்து எம்பெருமான் திருவடிகளைக் காமதேனுவின் பாலினால் அபிடேகம் செய்தாள். திருநந்தி தேவரிட்ட பாதுகையில் தம் திருவடிகளை வைத்துத் திருமாலும் பிரமாவும் கை கொடுக்கத் திருமணச் சாலை புகுந்து, அங்குள்ள அழகுகளனைத்தையும் திருநந்திதேவர் காட்டக்கண்டு சிவபெருமான் மகிழ்ந்தருளினர்; பின் தமக்கென ஏற்பட்ட இரத்தின சிங்காதனத்தின்மேலே வீற்றிருந்தருளினர். அவருடன் உருத்திரர்களும், பிரமா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்களும், முனிவர்களும் தத்தம் ஆசனத்தில் அமர்ந்தார்கள்.

### அகத்தியரால் நிலவுலகு சமனுதல்

திருமணக் கோலங் காண எல்லாப் புவனங்களில் உள்ளவர்களும் வந்து கூடினமையால் இமயமலை நடுங்கியது. பூமியின் வடபால் தாழ்ந்து தென்பால் மிக உயர்ந்தது. அதனைச் சமன் செய்ய இறைவன் அகத்தியரைத் திருநந்திதேவர் மூலம் அழைப்பித்தார். அகத்தியரும் வந்து வணங்கிநின்றனர். அவரை இறைவன் நோக்கி, " இங்கு யாவரும் வந்து கூடினமையால் வடபால் தாழ்ந்து தென்பால் மிக உயர்ந்தது; அதைக்கண்டு உயிர்களெல்லாம் மிக அஞ்சுகின்றன ; ஆதலால், நீ தென்னுட்டிலுள்ள பொதிய மலைக்குச் சென்றிருப்பாயாக ; அது செய்வையாயின் பூமி சமனுகிவிடும் " என்று திருவாய்மலர்ந்தருளினர். மணக் கோலம் காண இயலாதே என்று அகத்தியர் தம் வருத்தத்தைத் தெரிவித்தபோது, சிவபெருமான், " நாம் அங்கு வந்து நமது திருக்கல்யாணக் கோலத்தை உனக்குக்காட்டுவோம்; நீ மகிழ்ந்து தரிசிக்கக் கடவை ; பின்பு சில காலமிருந்து நம் பக்கம் வருவாயாக " என்று கூறித் தேற்ற, அகத்தியர் இறைவன் திருவடிகளை வணங்கித் துதித்துப் பொதியமலை சென்றடைந்தார். வடபாலும் தென்பாலும் துலைத் தட்டுப்போலச் சமமாயின.

### பார்வதி திருமணம்

பார்வதிதேவியார், துர்க்கை காக்க, இந்திராணி அடைப்பை ஏந்தக் கங்கைகள் சாமரம் வீசக் காளிகள் குடைபிடிக்க, இலக்குமி கைகொடுப்பச் சரசுவதி துதிக்க எழுந்தருளிவந்து சிவ

பெருமான் திருவடிகளை வணங்கினார். சிவபெருமான், "நம் பக்கத்தே இருக்கக் கடவாய்" என்று பணித்தருள, உமாதேவியார் எம்பெருமான் அருகில் எழுந்தருளினார். பின், மேனாதேவி கரகத்தினின்று நீர் வார்க்க, மலையரசன் சிவபெருமான் திருவடிகளை விளக்கி, நறுமலராலும் சந்தனத்தாலும் பூசித்து, உமாதேவியாரின் திருக்கரத்தைச் சிவபெருமானுடைய திருக்கரத்தில் வைத்துத் தாராதத்தம் செய்தான். அப்போது அரம்பையர் ஆடினர்; சித்தர்களும் கந்தருவர்களும் தும்புரு நாரதர்களும் இசை பாடினர்; தேவர்களும் முனிவர்களும் வேதம் ஓதினர்; இலக்குமியும் சரசுவதியும் மங்கலம் பாடினர்; பூதர்கள் நானுவித வாத்தியங்களை முழக்கினர். பின்பு, மலையரசன் பசுப்பால், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், தேன், நெய் முதலியவற்றை ஒரு பாத்திரத்திலிட்டு இறைவனைத் திருவமுது செய்தருளும்படி வேண்டினான். இறைவன் அவற்றைத் தம் திருக்கரத்தினால் தொட்டுத் திருவருள் புரிந்தார். மலையரசன் அந்நிருமாலியத்தைக் கொண்டுபோய் ஓரிடத்தே சேமித்து வைத்தான்.

**திருமணச் சடங்குகள்**

பின்பு, பிரமதேவர் சிவபெருமானிடம் அனுமதிபெற்று, வியாழபகவான் சுக்கிராச்சாரியர் முதலியோர் அருகே சூழ விவாகச் சடங்குகளைச் செய்து முடித்தார். அங்குள்ள அனைவரும் சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்கினார்கள். மகாதேவரும் தேவியாரும் அவர்கள் யாவருக்கும் திருவருள் செய்தார்கள். அப்போது மலையரசன், சிவபெருமானின் தீர்த்தம், மலர், சந்தனம், அவி முதலியவற்றைப் பிரமன் முதலிய தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பிறருக்கும் வழங்க, அவர்கள் யாவரும் அவ்ற்றை உள்ளன்போடு பெற்று அணிந்து உட்கொண்டு பெருமகிழ்ச்சியுற்றார்கள்.

**காமனை எழுப்புதல்**

அப்போது, தாபத நிலை[1]யளாகி அங்கிருந்த இரதிதேவி வந்து சிவபெருமான்முன் வணங்கி, "சுவாமி! அடியேன் துன்பத்தை நீக்கியருள வேண்டும்" என வேண்டி நின்றாள்.

---

1. தாபதநிலை - விதவை விரதம்.

சிவபெருமான் மன்மதனை எழுப்பி, அவளுக்கு மாத்திரம் உருவமாயும், ஏனையோர்க்கு அருவமாயும் இருக்குமாறு அருள்புரிந்தார்; பின்னர் உமாதேவியாரோடு திருக்கயிலாயமலையடைந்து உடன் வந்தோருக் கெல்லாம் விடை கொடுத்து, முன்போல் உமாதேவியாரொடு சிங்காசனத்தில் வீற்றிருந்தருளினர். ஆணொடு பெண் கலப்பற்று இருந்த உலகத்துயிர்க ளெல்லாம் போகம் அனுபவித்து இன்பமுற்றிருந்தன.

திருவிருத்தம்– 96
ஆகத் திருவிருத்தம்–850

—— oo ——

## 11. திரு அவதாரப் படலம்

**வாயுதேவனை நான்முகன் அனுப்புதல்**

திருமணமாகிப் பற்பல நாட்கள் சென்றும் இறைவன் ஒரு குமரனைத் தந்தருளாது இருத்தலைக் கண்ட திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் மேருமலையில் ஒன்று கூடினர்; என்ன செய்வது என்று எண்ணிக் கலங்கினர். அப்போது நான்முகன் வாயுதேவனை அழைத்து, "நீ கயிலைமலைக்குச் சென்று சிவபெருமானின் செய்கையை அறிந்துகொண்டு வருவாயாக" என்று கூறினன். வாயுதேவன் முதலில் அஞ்சி மறுத்தனன்; பின்னர், தேவர்கள் வற்புறுத்தலுக்கு இணங்கித் தென்றலாய் அசைந்துகொண்டு சிவபெருமான் திருக்கோயிலின் முன்வாயிலை அடைந்தான்.

அது கண்ட திருநந்திதேவர் வாயுதேவன்மேல் சினங்கொண்டு அதட்ட, வாயுதேவன் இடியொலிகேட்ட நாகம்போல் கீழே வீழ்ந்து மூர்ச்சித்தான். பின்னர், ஒருவாறு தேறி, திருநந்திதேவரை வணங்கி, "நான்முகன் இந்திரன் முதலியோர்கள் என்னை இறைவன் செயலை அறிந்து வரும்படி கட்டளையிட்டனர். நான் மறுத்தும் என்னை வற்புறுத்தியதால் வேறுவழியின்றி அஞ்சி இங்கு வந்தேன்; மன்னித்தருள்க" என்று வேண்டினன். திருநந்திதேவர், "நாம் இப்பொழுது உன்னுயிரைத் தந்தோம்; இங்கு நில்லாது விரைந்தோடிப்போ" என்றுகூறச் சிவபிரானைக்

காண இயலாது வாயுதேவன், பிரமாதி தேவர்களிடம் வந்து சேர்ந்து, நந்தியெம்பெருமானின் வன்மையையும் நிகழ்ந்த நிகழ்ச்சியையும் விரித்துரைத்தான்.

**தேவர்கள் சிவபெருமானை அடைதல்**

பிரமன் முதலிய யாவரும் பெருந்துயரங்கொண்டு கயிலைமலையை அடைந்து, திருநந்திதேவரை அணுகி, அவர் அனுமதிபெற்று உள்ளே சென்று, அருட்சத்தியாகிய உமாதேவியாருடன் எழுந்தருளிய மகாதேவரைத் தரிசித்துத் துதித்துப் போற்றினார்கள். சிவபெருமான் தேவர்கள்மீது கருணை புரிந்து, “உங்கள் குறை யாது” எனக் கேட்கத் தேவர்கள் இறைவனை நோக்கி, “சூரபன்மனாதியர்களால் எங்களுக்கு ஏற்பட்ட துன்பத்தினைத் தீர்க்க உமக்கொப்பாகிய திருக்குமாரர் ஒருவரை உம்மிடத்தினின்றுந் தோற்றுவித்தருளுக” என்று வேண்டி நின்றனர்.

**தீப்பொறிகள் தோன்றுதல்**

சிவபெருமான் அருள்கூர்ந்து, ஈசானம் முதலிய ஐந்து திருமுகங்களோடு அதோ முகமொன்றுங் கொண்டு, ஆறுதிருமுகங்களை உடையவராகி, அம்முகங்களிலுள்ள நெற்றிக்கண்கள் தோறும் ஒவ்வொரு தீப்பொறியைத் தோற்றுவித்தருளினார். அப்பொறிகள் அளவு கடந்த வெப்பத்தோடு உலகெங்கும் பரவிப் பறந்தன. அவ்வெப்பத்தைத் தாங்க ஆற்றாமல் வாயுக்கள் உலைந்து ஓய்ந்தன; கடல்களெல்லாம் வற்றின; பூமி பிளந்தது; உயிர்கள் நடுங்கின. ஆனால் அப்பொறிகள் இறைவன் அருளினால் எழுந்த காரணத்தால் எவ்வுயிர்க்கும் துன்பம் விளைவிக்கவில்லை; அச்சத்தை மட்டும் உண்டாக்கின.

**தீப்பொறிகளைப் பற்றிச் சிவபெருமான் கூறுதல்**

அப்பொறிகளின் வெப்பத்தைத் தாங்காது, இறைவன் அருகிலிருந்த உமாதேவியார் திருவுளங் கலங்கித் தம் சிலம்புகள் புலம்பித் தாக்கத் தம் கோயிலை நோக்கி ஓடினார். திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் நடுநடுங்கிப் பல இடங்களில் ஓடினர்; பிறகு, திரும்பி வந்து இறைவனைத் துதித்தனர். இறைவன் புதியனவாகத்தோன்றிய ஐந்து திருமுகங்களையும் மறைத்து

ஒரு திருமுகத்தோடு முன்போல எழுந்தருளி உலகமெங்கும் பரவிய அத் தீப்பொறிகளைத் தம் திருமுன் வருமாறு திருவுளம் கொண்டருளினர். அங்ஙனமே தீப் பொறிகள் ஆறும் இறைவனை வந்து அடைந்தன. இறைவன் அக்கினிதேவனையும் வாயு தேவனையும் நோக்கி, ''நீங்கள் இப்பொறிகளைத்தாங்கிக்கொண்டு போய்க் கங்கையில் விடுக; கங்கை அவற்றைச் சரவணப் பொய்கையிலே கொண்டு சேர்க்கும்'' என்று கூறியருளினர். அவர்கள் கொடிய வெப்பமுடைய தீப்பொறிகளைத் தாங்குதற்கு இயலாமையை இறைவனிடம் விண்ணப்பித்துக் கொண்டனர். இறைவன், ''தீப்பொறிகளைத் தாங்கும் வன்மை உங்களுக்கு ஏற்படுவதாகுக'' என்று திருவாய்மலர்ந்தருள, அவர்கள் அதற்கு இயைந்து சிவபெருமானைப் போற்றி வணங்கினர். நான்முகன் முதலியோர் நடுக்கம் நீங்கி, ''இன்றே எங்கள் துன்பம் நீங்கியது'' என்று மகிழ்ச்சி கொண்டார்கள். ''இத் தீப்பொறிகள் சரவணப் பொய்கையை அடைந்து, ஒரு திருக்குமரனாய் வளர்ந்து, அவுணர்களை அழித்து உங்களுக்கு அருள்புரியும்; நீங்கள் அனைவரும் உங்கள் இருப்பிடங்களுக்குச் செல்லலாம்'' என்று. எம்பெருமான் கூறியருளினர். திருமால் பிரமன் முதலிய யாவரும் சிவபெருமானை வணங்கிக் கொண்டு அங்கு நின்றும் நீங்கினர்.

**தீப்பொறிகள் சரவணப் பொய்கையை அடைதல்**

வாயுதேவன் முதலில் தீப்பொறிகளைச் சிரமேல் தாங்கிக் கொண்டு சென்றான். திருமால் முதலிய தேவர்கள் வாயுதேவனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். ஒரு நாழிகையளவு சென்றதும் வாயுதேவன் தீப்பொறிகளின் வெம்மை தாங்காது அக்கினிதேவனிடம் சேர்த்தான். அக்கினிதேவன் அப்பொறிகளை மிக வருத்தத்துடன் தாங்கிக் கொண்டுபோய்க் கங்கையில் விட்டான். கங்கை வற்றியது. பின்பு இறைவன் அருளால் கங்கை அத் தீப்பொறிகளை இமயமலைச் சாரலிலுள்ள சரவணப் பொய்கையில் கொண்டுபோய்ச் சேர்த்தது. தேவர்கள் சரவணப் பொய்கையைச் சூழ்ந்து காத்துநின்றனர். சரவணப்பொய்கை கங்கைபோல் வற்றாமல் விளங்கியது.

**ஆறுமுகக் கடவுள் தோற்றம்**

அப்போது, அருவமாயும் உருவமாயும் அநாதியாயும் ஒன்றாயும் பலவாயும் பரப்பிரமமாயும் விளங்கும் சோதிப் பிழம்பே திருமேனியாகக், கருணை வெள்ளம் பொழியா நின்ற ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களுங் கொண்டு ஒப்பற்ற முருகக் கடவுள் உலகம் உய்யும் வண்ணம் திருவவதாரம் செய்தருளினார்.

அருவமும் உருவும் ஆகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி ஆகக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய.

முருகன்உதித்தவுடன் ஆகாயத்திலே துந்திபிகள் ஒலித்தன; வேதங்களெல்லாம் ஆர்த்தன ; திருமாலும், பிரமனும், இந்திரனும், முனிவர்களும் பூமாரி பெய்தனர் ; உலகத்து உயிர்கள் மகிழ்ச்சி கொண்டன ; அவுணர்களுக்குத் தீமைக் குறிப்புக்கள் தோன்றின. முழுமுதற் கடவுளாகிய முருகக்கடவுள் ஆறு திருமுகங்களை உடையவராகப் பேரருளுடன் சரவணப் பொய்கையிலே செந்தாமரை மலர்மீது இனிது வீற்றிருந்தருளினார்.

**கார்த்திகை மகளிர் பராமரிப்பு**

அம்முருகக் கடவுள் கைக்குழந்தைபோல் விளங்குவதைக் கண்ட திருமால் முதலிய தேவர்கள் கார்த்திகைப் பெண்களைப் பார்த்து, "குழந்தை வடிவில் எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளை வளர்க்கக் கடவீர்களாக" என்று பணித்தனர். கார்த்திகை மகளிர் அறுவரும் முருகப் பெருமானைத் துதித்து வணங்கினர். சரவணப் பொய்கையில் தோன்றிய குமரக் கடவுள் ஒருவரே ஆறு குழந்தைகளாகத் தோன்றியருளினார். கார்த்திகை மகளிர் அறுவரும் அச்சிறுவர் அறுவரையும் வெவ்வேறு எடுத்துப் பாலூட்டினார்கள். முருகக் கடவுள், திருமுறுவல் செய்து

பாலுண்டு பற்பல திருவிளையாடல்கள் புரிந்து வளர்ந்து வருவாராயினர். திருமால் முதலிய தேவர்களும் கார்த்திகை மகளிர்களும் அத்திருவிளையாடல்களைக் கண்டு களித்திருந்தனர்.

திருவிருத்தம்–127

ஆகத் திருவிருத்தம்–977

——oo——

## 12. துணைவர் வரு படலம்

**அம்பிகை திரும்பி வருதல்**

தீப்பொறிகளின் வெம்மையைத் தாங்காது அஞ்சி ஓடிய அம்பிகை திரும்பினுள்; எல்லா நிகழ்ச்சிகளையும் அறிந்தாள். சிவபெருமான் தன் மூலம் திருக்குமரனை அவதரிக்கச் செய்யாததற்குத் தேவர்களே காரணம் என்று தெரிந்தாள்; தேவர்கள்மேல் கோபங்கொண்டு அத்தேவர்களுடைய பெண்கள் அனைவரும் புதல்வர்களைப் பெருதொழியும்படி சபித்தாள்; வெம்மை நீங்கிய பின் சிவபெருமான் வாமபாகத்தில் வந்து வீற்றிருந்தருளினுள்.

**நவ சத்திகள் தோற்றம்**

உமாதேவியார் ஓடிய காலத்து அவருடைய திருவடிச் சிலம்பினின்றும் சிதறிய நவரத்தினங்கள் சிவபெருமான்முன் விளங்கின. சிவபெருமான் திருவருளால் சிதறிய ஒன்பது மணிகளிலும் உமாதேவியாரின் திருவுருவம் தோன்றியது. அவ்வுருவங்களைச் சிவபெருமான் 'வாருங்கள்' என்று அழைத்தருளினுர். ஒவ்வொரு மணியிடத்திலிருந்து ஒவ்வொரு சத்தியாக **ஒன்பது சத்திகள்** தோன்றினுர்கள். அவர்கள் வணங்கி இறைவனை விரும்ப, அப்போதே கருப்ப முற்ருர்கள். இறைவி அதனைக் கண்டு அவர்கள்மீது கோபங்கொண்டு, "நீங்கள் எமக்கு மாறுபட்டமையால் நெடுங்காலம் இச்சூலோடு வருந்தக் கடவீர்கள்" என்று சபித்தாள். சாபத்தினைக் கேட்ட நவ சத்திகளும் அஞ்சி, நடுநடுங்கி, உடல் வெயர்த்து நின்றனர்.

**இலக்கம் வீரர்கள் தோற்றம்**

சிவபெருமான் திருவருளினுலே நவசத்திகளின் வியர்வையினின்றும் ஓரிலக்கம் வீரர்கள் தோன்றினர். அவர்கள் இறை

வனை வணங்கினர். இறைவன் அவர்களை நோக்கி, "நீங்கள் அசுரர்களை அழிக்க வந்த அறுமுகனுக்குப் படைவீரர்களாகுக" என்று திருவாய்மலர்ந்தருளினர். அவ்வீரர்கள் நாடோறும் பேரன்புடையவர்களாய்ச் சிவசந்நிதியை அகலாது திருத்தொண்டு புரிந்து நின்றார்கள்.

### நவவீரர்கள் தோற்றம்

நவசத்திகள் இறைவியைத் துதித்துக்கொண்டு சூலோடு பல காலம் இருந்தனர். நவசத்திகளின் கருவிலே நந்தி கணத்தவர் குழந்தைகளாய்ப் புகுந்து, காளைப்பருவம் வரை சுகமுனிவர் போல் வெளிப்படாதிருந்தனர். சூலினைத் தாங்காது வருந்திய நவசத்திகளும் இறைவனையும் தேவியையும் வேண்டினர். அப்போது எம்பெருமான் திருவுளமிரங்கி இறைவியைப் பார்த்து, "உமையே இந்நவசத்திகள் உன் சாபங் காரணமாக நெடுங் காலம் சூலால் வருந்தினர்கள்; இனிப் புதல்வர்களைப் பெறும் பொருட்டு அருள் செய்க" என்று பணித்தருள, அம்மையார் நவசத்திகளை நோக்கி, "இனி நீங்கள் புதல்வர்களைப் பெறக் கடவீர்களாக" என்று திருவாய்மலர்ந்தருளினர். அவர்கள் அம்மை யப்பரை வணங்கித் துதித்து விடை பெற்றுக்கொண்டு ஓரிடத்தே சென்று புதல்வர்களைப் பெற்றார்கள். மாணிக்கவல்லி யிடத்திலே **வீரவாகு தேவரும்,** முத்துவல்லியிடத்திலே **வீர கேசரியும்,** புட்பராக வல்லியிடத்திலே **வீரமகேந்திரரும்,** கோமேதக வல்லியிடத்திலே **வீரமகேச்சுரரும்,** வைடூரியவல்லி யிடத்திலே **வீரபுரந்தரரும்,** வைரவல்லி யிடத்திலே **வீரராக்கதரும்,** மரகதவல்லி யிடத்திலே **வீரமார்த்தாண்டரும்,** பவளவல்லி யிடத்திலே **வீராந்தகரும்,** இந்திர நீலவல்லி யிடத்திலே **வீரதீரரும்,** தத்தம் அன்னையரின் நிறங்கொண்டு பொன்னுடை உடுத்திப் பல காலம் வளர்ந்த உறுப்புக்களோடு பிரமனைப்போல் உந்தியின் வழியே உதித்தனர். அவர்கள் உமாதேவியையும் சிவ பெருமானையும் துதித்து நின்றனர். இறைவன், அவர்களுக் கெல்லாம் தனித்தனியே வாள் கொடுத்து, "ஓரிலக்கத்தவரோடு நீங்களும் சேர்ந்து, உங்கள் தலைவனுகிய அறுமுகனுக்கு ஏவல் புரிந்து வருவீர்களாக" என்று திருவாய்மலர்ந்தருளினர். நவ வீரர்களும் இலக்க வீரர்களோடு கலந்து முருகக்கடவுளை அக

வாது அவர் பணித்த பணியில் ஒழுகி வந்தனர். நவசத்திகளும் உமாதேவியாரைப் பிரியாது அவர் பணித்த தொண்டுகளைப் புரிந்து வருவாராயினர்.

திருவிருத்தம்–37

ஆகத் திருவிருத்தம்–1,014

——oo——

## 13. சரவணப் படலம்

### இறைவன் உமையுடன் சரவணப்பொய்கை அடைதல்

சிவபெருமான் உமையை நோக்கி, "நம் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிச் சரவணப்பொய்கையில் வளரும் உன் புதல்வனை நாம் போய் இங்கே கொண்டுவருவோம்; வருக" என்று திருவாய்மலர்ந்து, உமாதேவியாரொடும் இடபவாகனத்தின்மீது எழுந்தருளிச் சிவகணத்தவர் சூழக் கைலையங்கிரியை விட்டுப் புறப்பட்டுச் சரவணப்பொய்கையை அடைந்தார். முருகக்கடவுள் உமாதேவியாரையும், சிவபெருமானையும் கண்டு திருமுகம் மலர்ந்து திருவுளம் களித்தார். அப்போது, சிவபெருமான் பார்வதியாரை நோக்கி, "நீ போய் உன் புதல்வனுகிய முருகனைக் கொண்டு வருக" என்று கூறினுர். உமாதேவியார் இடபவாகனத்தினின்றும் விரைந்து இறங்கிப் பேரன்போடு சரவணப் பொய்கையை அடைந்தார்.

### கந்தக் கடவுள்

உமாதேவியார் சரவணப்பொய்கையிலிருந்த ஆறு திருவுருவங்களையும் இரண்டு திருக்கைகளினுலும் அன்போடு எடுத்துத் தழுவி, ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்ட ஒரு வடிவம் ஆகுமாறு செய்தருளினுர். ஆறு திருவுருவமும் ஓர் உருவமாக ஆக்கப்பட்டமையால், அம்முருகக் கடவுளுக்குக் **கந்தர்** என்னும் திருநாமம் ஏற்பட்டது. உமாதேவியார் தன் திருமுலைகளினின்றும் சுரந்த பாலை மணிக்கிண்ண மொன்றில் ஏந்தி, குமரக் கடவுளுக்கு அன்புடன் ஊட்டினுள்.

கந்தக்கடவுளை, உமாதேவியார் எம்பெருமான் திருமுன்னே கொண்டுபோய் இறைவனுக்கு வணக்கம் செலுத்துமாறு கூற,

முருகக் கடவுள் சிவபெருமானை வணங்கி நின்றார். இறைவன் அக்குழந்தையைத் தூக்கித் தம் பக்கத்தில் இறைவியோடு அமர்த்திச் **சோமாஸ்கந்த மூர்த்தி**யாகத் திகழ்ந்தார். திருமால் நான்முகன் முதலான தேவர்கள் சிவபெருமானையும் உமாதேவி யாரையும் முருகக் கடவுளையும் வணங்கித் துதித்தனர்; பூமழை பொழிந்தனர்.

### கார்த்திகைப் பெண்களுக்கு அருளுதல்

அப்போது, கார்த்திகைமகளிர்கள் இறைவனைப் பேரன் போடு வணங்கி நின்றனர். இறைவன் அவர்களை நோக்கி, "நம் மகன் உங்களால் வளர்க்கப்பட்டமையால் அவன், **கார்த்திகேயன்** எனப் பெயர் பெறக்கடவன். உங்கள் நாளாகிய கார்த்திகையில் முருகனை வழிபட்டார்க்கு வேண்டும் வரங்களைக் கொடுத்து வீடு பேற்றையும் அருளிச்செய்வோம்" என்று திருவாய்மலர்ந் தருளினார்.

### பராசர முனிவர் புதல்வர்கட்கு இறைவன் கூறல்

உமாதேவியார் முருகக்கடவுளைப் பேரன்போடு அணைத் தெடுத்தபோது அவர் திருமுலையினின்றும் பொழிந்த பால் நதி போல் பெருகிச் சரவணப் பொய்கையிலே புகுந்தது. தங்கள் தந்தையாராகிய பராசர முனிவருடைய சாபத்தினால் மீன் களாய் அப்பொய்கையில் கிடந்த சிறுவர்கள் அறுவரும் அப் பாலினைப் பருகினார்கள்; மீன் வடிவம் ஒழிந்து முன்னைவடிவம் அடையப் பெற்றார்கள். அவர்கள் சிவபெருமான் திருமுன் சென்று வணங்கித் துதித்து நின்றார்கள். இறைவன் அவர்களை நோக்கி, "நீங்கள் திருப்பரங்குன்றமெய்தித் தவம் இயற்றுங்கள்; நம் குமரன் அங்கு வந்து ஞானோபதேசம் செய்வான்" என்று திருவாய்மலர்ந்தருளினார். சிறுவர்கள் அறுவரும் சிவபெருமா னிடம் விடைபெற்றுச் சென்றார்கள்.

### சிவபெருமான் விடை அளித்தல்

திருமால் பிரமன் முதலியோருக்கும், கார்த்திகை மகளிருக் கும் அவரவர் இடங்களுக்குச் செல்லுமாறு இறைவன் விடை தந்தருளினார். பின்பு, சிவபெருமான் உமாதேவியாரோடும், குமர

னேடும் திருக்கயிலை மலையை அடைந்து செம்பொற்றிருக்கோயி லிற் சென்று சிங்காதனத்தின்மேல் வீற்றிருந்தருளினர். இலக்கத்தொன்பது வீரர்களும் தங்கள் தலைவனுராகிய முருகப்பெருமானைப் பூசித்து வணங்கி அவருக்கு ஏவல் புரிந்து வந்தனர்.

திருவிருத்தம்–37

ஆகத் திருவிருத்தம்–1,051

——oo——

## 14. திருவிளையாட்டுப் படலம்

### முருகக் கடவுள் பல இடங்களுக்குச் செல்லுதல்

சிவபெருமானுக்கும், உமாதேவியாருக்கும் இடையே வீற்றிருந்தருளிய முருகக்கடவுள் பற்பல திருவிளையாடல் புரியத் திருவுளம் கொண்டார். முருகன் திருவடிகளிலே தண்டையும், கழலும், சதங்கைகளும், அரையிலே கிங்கிணியும், செவிகளிலே குண்டலங்களும், மார்பிலே மதாணியும், நெற்றியிலே வீரப்பட்டிகையும் விளங்கின. அவர் மன்றுகள், தடாகங்கள், பூஞ்சோலைகள், ஆறுகள், குன்றுகள், கடல்கள் முதலிய பல்வேறு இடங்கள் தோறும் சென்று உலாவுவர்; பற்பல உலகங்களிலும் புவனங்களிலும் உலாவுவர்; ஆறுமுகங்கொண்டு பாலராய்த் திரிவர்; ஒரு முகங்கொண்டு குமரராய்த் திரிவர்; முனிவராயும் வீரராயும் திரிவர்; கால்களால் நடந்து செல்வர்; வாகனங்களில் ஏறியும் செல்வர்; மணியசைப்பர்; குழலை ஊதுவர்; பல்வேறு இசைக் கருவிகளை முழக்குவர்; இசை பாடுவர்; கூத்தாடுவர்.

### முருகன் பெயர்ப் பெருமை

முருகக் கடவுள் புரிந்த பற்பல திருவிளையாடல்களைக் கண்டு, வியந்த உமாதேவியார் இறைவனை வணங்கி நின்று, "எம்பெருமானே! நம் குமரன் இச்சிறு குழவியாய் இருக்கும் போதே செய்யும் திருவிளையாடல்கள் வியக்கத்தக்கனவாயிருக்கின்றன; அவனுடைய பெருமையைத் திருவாய்மலர்ந்தருள வேண்டும்" என்று வேண்டினர். சிவபெருமான் மிக மகிழ்ந்து உமாதேவியைப்பார்த்து, "நம் குமரன் கங்கையால் தாங்கப்பட்டதனுல், "**காங்கேயன்**" எனவும், சரவணப் பொய்கையில் உதித்ததால்,

"**சரவணபவன்**" எனவும், கார்த்திகைமகளிரால் வளர்க்கப்பட்டமையால் "**கார்த்திகேயன்**" எனவும், உன்னாலே ஆறுருவமும் திரட்டி ஒன்றாக்கப்பட்டமையால் "**கந்தன்**" எனவும் பெயர் பெற்றான். நமக்கு ஆறுமுகங்கள் உண்டு. அவை தாமே முருகனுக்கும் முகங்களாயின. தாரகப்பிரமமாயுள்ள நமது ஆறெழுத்தும் ஒன்றாகி உன் குமாரனுடைய மந்திரமாகிய சடாக்ஷரமாயிற்று. ஆதலால், ஆறுமுகன் நம்முடைய சத்தியே ஆவன். நமக்கும் அவனுக்கும் வேறுபாடு ஒன்றும் இல்லை. அவன் நம்மைப்போல் எங்கும் வியாபித்திருப்பான். அவன் குழந்தை வடிவாய்க் காணப்படுவான்; எல்லாவற்றையும் அறியும் முற்றறிவுடையவன்; தன்னை வழிபடுவோருக்குச் செல்வத்தையும், ஞானத்தையும், வீடு பேற்றையும் கொடுக்க வல்லான்.

நன்முகம் இருமூன்று உண்டால் நமக்கவை தாமே கந்தன்
தன்முக மாகி யுற்ற தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்தம் மூவிரண் டெழுத்தும் ஒன்றாய்
உன்மகன் நாமத் தோராறு எழுத்தென உற்ற அன்றே.

ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போற் பிரிவிலன்; யாண்டும் நின்றான்;
ஏதமில் குழவி போல்வான்; யாவையும் உணர்ந்தான்; சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருள வல்லான்.

இத்தகைய பெருமை வாய்ந்த முருகன், இனி, நான்முகனைப் பிரணவத்தின் பொருளை வினவி, அவன் அதனை அறியாது மயங்கியபோது அவனைச் சிரசில் குட்டிச் சிறையில் வைத்துப் படைத்தல் தொழிலை மேற்கொள்வான்; அசுரர்களைக் கொன்று தேவர்களுக்கு நன்மை செய்வான்" என்று கூறியருளினார். உமாதேவியார் அதனைக் கேட்டுத் திருவுளம் மகிழ்ந்து சிவபெருமானுடைய இடப்பாகத்தில் எழுந்தருளியிருந்தார்.

**முருகன் திருவிளையாடல்**

குமரக் கடவுள் உலகெங்கும் சென்று திருவிளையாடல் செய்வாராயினர். அவர் குலமலைகளை ஓரிடத்தில் சேர்ப்பர்; அவைகளைத் தலை தடுமாற்றி நிறுத்துவர்; கடல்களை ஒன்றாக்குவர்.

மேருமலையைப் பாதலத்தில் புகுத்துவர்; கங்கையாற்றை அடைப்பர்; சந்திரனைச் சூரிய மண்டலத்தில் சேர்ப்பர்; சூரியனைச் சந்திர மண்டலத்தில் சேர்ப்பர். நிருமலராகிய முருகக்கடவுள் தேவர்கள் மனிதர்கள் முதலிய யாவரும் அஞ்சித் தங்கள் தங்கள் உள்ளமும் உடம்பும் தளர்தலன்றிச் சிதைவுறு வண்ணம் இவ்வாறே எண்ணில்லாத பற்பல திருவிளையாடல்களைச் செய்தருளினர்.

### கதிரவன் முதலியோர் முருகனைக்காணுதல்

பூமியிலுள்ள அசுரர்கள் முருகனின் திருவிளையாடலைக் கண்டனரே அன்றி முருகனைக் கண்டாரில்லை; இங்ஙனம் திருவிளையாடல் புரிபவர் யார் என்று திகைத்தார்கள். அதுபோலவே திசைக்காப்பாளர், கதிரோன், திங்கள் முதலாயினோரும் அறுமுகனைக் கண்டாரில்லை; "இச்செயல்கள் அசுரர்களுடையது அன்று; வேறு எவருடையதோ" என்று ஒன்று கூடிப் பேசி, மேருமலையில் இருக்கும் தேவேந்திரனிடம் சென்று நிகழ்ந்தவற்றைத் தெரிவித்தார்கள். தேவர்கோனும் நிகழ்ச்சிகளின் உண்மைகளை அறியமுடியாதவனாய்த் தேவர்கள் யாவரையும் நோக்கி, "நாம் எல்லோரும் நான்முகனிடம் சென்றுகேட்போம்; எழுங்கள்" என்று கூறினன். அப்போது அவர்கள் யாவரும் காணும் வண்ணம் ஆறுமுகக் கடவுள் ஒரு திருமுகத்தோடு அங்குப் பாலராய் வந்து தோன்றியருளினர்.

### முருகக் கடவுள் தேவர்களுடன் போரிடுதல்

தேவர்கள் கொண்ட திகைப்பை நீக்க வந்த முருகக்கடவுள் மேருமலையை அசைத்தார்; கொடுமுடிகளைப் பறித்து வீசினர். இந்திரன் முதலியோர் செவ்வேளைக் கண்டு, "மண்ணுலகத்தையும், விண்ணுலகத்தையும் மாறுபடச் செய்தவன் இவனே; இவன் ஆற்றலைப் பார்க்கும்போது இவன் அசுரரைக் காட்டிலும் மிகக் கொடியவன்; இவனைப் பாலன் எனக் கருதாமல் இவனுடன் போர் செய்து வெல்வோம்" என்று முடிவு செய்து சூழ்ந்தனர். இந்திரன், முன்னாளிலே தந்தம் ஒடிந்து திருவெண்காட்டிற் சென்று சிவபெருமானைப் பூசித்துத் தந்தம் பெற்றுக்கொண்டு அங்கே இருந்த வெள்ளையானையை வருவித்தான்.

போர்க்கோலம் பூண்டு அதன்மேல் ஏறிக்கொண்டு குலிசம், வாள், வில், வேல் என்னும் படைக்கருவிகளைத் தாங்கிச் சென்று, முருகக் கடவுளோடு போர் செய்யத் தொடங்கினான். தேவர்களும் வந்து, முருகக்கடவுளைச் சூழ்ந்து கொண்டனர். தம்மை வளைத்துக் கொண்டமையைக் கண்ட முருகக் கடவுள் திருநகை புரிந்தார். இந்திரன் படைகளை வீச, அவை மலர்போல முருகக் கடவுள் மீது வீழ்ந்தன; குலிசத்தை வீச, அஃது அவர்மேல் பட்டுத் துகளாயிற்று. ஐராவதம் பேரொலியோடு முருகன்முன் சென்றது. முருகப்பிரான் ஒரு கணை எய்ய யானை வீழ்ந்து மடிந்தது. பின்னர் தன்பால் வில்லை வளைத்த இந்திரன் தோள் மீது ஒரு கணை எய்து அவன் ஆற்றல் அழியச் செய்தார். சிவகுமாரர் மேலும் பல கணைகள் எய்ய இந்திரன் சோர்ந்து வீழ்ந்தான். பிறகு வருணன், யமன், திங்கள், கதிரவன், வாயு, அக்கினி முதலியோரைக் கொன்றார். அது கண்ட தேவர்கள் "இவன் ஒருவனே எல்லோரையும் கொன்று விடுவான்" என்று துணிந்து, சரபத்தின் வன்மையைக்கண்ட சிங்கக்கூட்டம் போல நடுநடுங்கி ஓடினார்கள். முருகக் கடவுள் அப்போர்க்களத்திலே தனித்து நின்று உலவினார்.

**நாரதர் தேவ குருவிடம் கூறுதல்**

நாரதமுனிவர் இங்ஙனம் நிகழ்ந்தவைகளைக் கண்டு தேவகுருவினிடம் சென்று கூறினார். தேவகுரு அதுகேட்டு வருந்திப் போர்க்களத்தை அடைந்து தேவர்கள் இறந்து கிடத்தலைக் கண்டு மனம் கவன்றார். முருகப்பிரானை அடைந்து வணங்கித் துதித்து, "எம்பெருமானே! இந்திரன் உமக்குத் தொண்டு செய்யவே விரும்பி இருந்தான். நீர் இவ்வாறு திருவிளையாடல் புரிவதை அறிந்திலன். இந்திரன் முதலிய தேவர்கள் சிற்றறிவு காரணமாக உமது திருவிளையாடலைத் தீது என்று நினைத்து உம்மோடு சமர்புரிந்து இறந்தனர். தாய் தந்தையர்களே தமக்குப் பிழைசெய்த தம் மக்களைக் கொல்வார்களாயின் அவர்களுக்கு வேறு யாவர் அருள் புரிவர்? சரபமானது சிங்கத்தைக் கொல்வதன்றி மின்மினியைக் கொல்லுதல் வெற்றியாகுமா? அருட்பெருங் கடலே! ஆற்றல் மிகுந்த அசுரர்களை அடியோடு ஒழித்தருளும். உம்முடைய திருவடிகளை மறவாத தேவர்களுடைய பிழைகளைப்

பொறுத்தருளும். இவர்கள் இங்கு அறிவுபெற்று எழுமாறு திருவருள் செய்க'' என்று இறைஞ்சிப் பலவாறு வேண்டினர்.

**தேவர்கள் உயிர்பெற்று எழுதல்**

வியாழபகவானின் விண்ணப்பத்தைக்கேட்ட முருகக்கடவுள் புன்முறுவல் பூத்தார்; இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் உயிர் பெற்றெழும் வண்ணம் திருவுளம் பற்றினர். உடனே தேவர்கள் யாவரும் மெய்யறிவு பெற்று உயிர்த்தெழுந்து, தாங்கள் கந்தக் கடவுளோடு போர் செய்தது அறிந்து மனங்கலங்கி நடுநடுங்கி ஒடுங்கினர்கள்; உடனே முருகப்பிரானின் திருவடி அடைந்து பன்முறை வணங்கித் துதித்து,

கந்தநம; ஐந்துமுகர் தந்தமுரு
கேசநம; கங்கை உமைதன்
மைந்தநம; பன்னிரு புயத்தநம;
நீபமலர் மாலை புனையும்
தந்தைநம; ஆறுமுக ஆதிநம;
சோதிநம; தற்ப ரமதாம்
எந்தைநம; என்றும்இளை யோய்நம;
குமாரநம என்று தொழுதார்.

அப்போது முருகக் கடவுள் அவர்களுக்குத் திருவருள் புரிந்தார்.

**முருகக் கடவுளின் பேருருவம்**

பின்பு முருகப்பிரான் தேவர்களை நோக்கி, "நீங்கள் நம்மைச் சிறுவன் என்று கருதிப் போர்புரிந்தீர்கள்; நமது வன்மையையும் பெருமையையும் நன்கு உணருமாறு இன்னும் காட்டுவோம்" என்று கூறி, யாவும் தம்முளே அடங்கிய தமது விசுவரூபத்தைக் காட்டியருளினர். அப்பேருருவத்தினைக் காண இயலாத தேவர்கள், "எம்பெருமானே! நீர் கொண்டுள்ள பேருருவத்தை முற்றும் அடியேங்கள் காணுமாறு காட்டியருளுதல் வேண்டும்" என்று வேண்டி நின்றனர். முருகப்பிரான் தேவர்களுக்குத் திவ்விய நேத்திரங்களை அளித்தார். தேவர்கள் அறுமுகக் கடவுளின் முழு உருவத்தையும் கண்டுகளித்துப் போற்றிப் புகழ்ந்தார்கள். பின்னர், முருகப்பிரான் விசுவ ரூபத்தை

மறைத்து ஆறுமுகங்களோடுங்கூடிய பழைய வடிவத்தைக் கொண்டு காட்சி தந்தார். இந்திரன் முருகக் கடவுளை நோக்கி, "கருணாமூர்த்தியே! அவுணர்களை அழித்து, அடியவனும் தேவர்களும் தொண்டுபுரிய விண்ணுலகைத் தேவரீர் அரசு புரிந்தருளல் வேண்டும்" என்று வேண்டினன். செவ்வேள் இந்திரனை நோக்கி, "நீ நமக்குத் தந்த அரசை நாம் உனக்கே திருப்பித் தந்தோம்; நீங்கள் சேனைகளாக நாமே சேனாதிபதியாகி அவுணர்கள் யாவரையும் கொல்வோம்; வருந்தாதொழிக" என்று அருளிச் செய்தார். இந்திரன் அது கேட்டுத் தேவர்களோடும் பெரு மகிழ்ச்சியுற்றான். பின்னர், இந்திரன் வேண்டுகோளின்படி முருகக்கடவுள் தம்மால் முறை பிறழ்ந்தனவற்றை யெல்லாம் முன்னைநிலை அடையத் திருவுளங்கொண்டார். தேவர்கள் யாவரும் அதுகண்டு அற்புதம் அடைந்தார்கள்.

**கந்தவெற்பு**

அப்போது, இந்திரன் கந்தக் கடவுளைத் தொழுது, "ஆதி பகவரே! அடியேன் வேதத்துச்சியில் விளங்குகின்ற உம்முடைய திருவடிகளைப் பூசித்துவழிபட விரும்புகிறேன்; திருவருள் புரிக" என்று வேண்டினன். முருகக்கடவுள் அதற்கு இசைந்து, தேவர்கள் பின்தொடர மேருமலையைவிட்டு நீங்கித் திருக்கயிலாய மலையின் ஒரு பக்கத்திலுள்ள ஒரு மலையை அடைந்தார். அங்கு இந்திரன் தேவதச்சனைக் கொண்டு ஓர் அழகிய திருக்கோயிலையும், அதனுள் ஒப்பற்ற அரியணை ஒன்றையும் அமைத்தான். அவ்வரியணையில் முருகக் கடவுள் எழுந்தருளினார். அவரை இந்திரனும் தேவர்களும் போற்றி வழிபட்டார்கள். பிறகு, முருகக் கடவுள் அங்கிருந்து கயிலைமலையை அடைந்தார். தேவர்கள் பூசிக்கக், கந்தக்கடவுள் அங்கு எழுந்தருளியமையால் அம்மலை **"கந்த வெற்பு"** எனப் பெயர் பெற்றது. கந்த வெற்பை விட்டு, இந்திரனும், தேவர்களும் தங்கள் தங்கள் இடங்களுக்குச் சென்றார்கள். கயிலையை அடைந்த முருகக் கடவுள், இலக்கத் தொன்பது வீரர்களும் பூதர்களும் தம்மைத் தொழ, அங்கு எழுந்தருளியிருந்தார்.

திருவிருத்தம்–128

ஆகத் திருவிருத்தம்–1,179

——oo——

# 15. தகரேறு படலம்

## நாரதர் வேள்வியும் ஆட்டின் இன்னலும்

நாரதமுனிவர், சிவபெருமானுக்கு விருப்பமாகுமாறு பூமியில் தேவர்களும் முனிவர்களும் அந்தணர்களும் சூழ, ஒரு வேள்வி செய்தார். அந்த வேள்வியினின்றும் ஓர் ஆட்டுக்கடா தோன்றியது. வேள்வியினைச் சூழ்ந்திருந்தோர் யாவரும் ஆட்டுக்கடாவைக் கண்டு பயந்து ஓடினார்கள். ஓடியவர்களையெல்லாம் அது துரத்திச் சென்று கொன்றது. பின்னர், உலகு எங்கும் திரிந்து அவ்வாட்டுக்கடா மிகுந்த கோபத்தோடு உயிர்களைத் தாக்கி நாசம்செய்தது. நாரதமுனிவரும் மற்றையமுனிவர்களும் தேவர்களும் ஓடித் திருக்கயிலாய மலையை அடைந்தார்கள்; மலையில் ஏறிச் செல்லும்போது, அறுமுகக் கடவுள் இலக்கத்தொன்பது வீரர்களோடு கூடி விளையாடிக்கொண்டிருத்தலைக் கண்டார்கள். "நாம் சிவபெருமானிடம் இதற்காகச் செல்ல வேண்டாம்; நமது துயரத்தை நீக்கும் பொருட்டுக் குமரக் கடவுளே இங்கு நம் முன்னே எழுந்தருளியுள்ளார்" என்று முடிவு செய்து, முருகப்பிரானை அடைந்து வணங்கித் துதித்தார்கள்; நாரதமுனிவர் வேள்வி இயற்றியதையும், அதனின்று ஆட்டுக்கடா தோன்றியதையும், அந்த ஆட்டுக்கடாவினால் ஏற்பட்ட பற்பல இன்னல்களையும் கூறி, அவைகளைப் போக்கியருளுமாறு விண்ணப்பஞ் செய்தார்கள்.

## முருகப்பெருமானுக்கு ஆடு வாகனமாதல்

முருகக்கடவுள், தேவர் முதலியோருக்குத் திருவருள் புரிந்து, "நீங்கள் அஞ்சவேண்டாம்" என்று கையமைத்து, வீரவாகு தேவரைப் பார்த்து, "வேள்வியில் தோன்றித் தீது புரிந்து எங்குந் திரியா நின்ற ஆட்டுக்கடாவை நீ விரைவில் பிடித்து வருக" என்று பணித்தருளினார். வீரவாகுதேவர் அப்பணியினைச் சிரமேற்றாங்கி ஆட்டுக்கடாவைத் தேடினார். அவ்வாட்டுக்கடா நான்முகன் உலகில் அகப்பட்டது. அக்கடாவினுடைய கொம்பைப் பிடித்திழுத்துக்கொண்டு திருக்கயிலாய மலையை வந்தடைந்து முருகன் திருமுன் விடுத்து வணங்கி நின்றார். முருகக் கடவுள் தேவர்களையும் முனிவர்களையும் பார்த்து, "ஆட்டுக்கடா

நம்மிடம் வந்துவிட்டது ; இனி நீங்கள் பூவுலகத்திற்குச் சென்று தொடங்கிய வேள்வியை முடியுங்கள் " என்று திருவாய் மலர்ந் தருளினார். அவர்கள் அது கேட்டு, முருகப்பிரானை நோக்கி, " எம்பெருமானே ! இவ்வாட்டுக் கடாவை வாகனமாக ஏற்றுக் கொண்டருளுதல் வேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர். முருகப்பெருமான், " நாம் இதனை வாகனமாகக் கொள் வோம். நீங்கள் போய் வேள்வியை முடியுங்கள்" என்று அருளிச் செய்தார். நாரதர் முதலாயினோர் முருகப்பிரானை வணங்கிக் கொண்டு பூமியிற் சென்று வேள்வியை முடித்தனர். முருகக் கடவுள் அன்று தொட்டு அவ்வாட்டுக்கடாவைத் தமக்கு வாகன மாகக் கொண்டருளினார்.

திருவிருத்தம்- 25
ஆகத் திருவிருத்தம்-1,204

——oo——

## 16. அயனைச் சிறைபுரி படலம்

### அயனின் ஆணவம்

சண்முகக் கடவுள் ஆட்டுக் கடாவின் மேலேறி எல்லா உலகங்களுக்கும் சென்று திருவிளையாடல் செய்துகொண்டு திருக்கயிலாயமலையில் எழுந்தருளியிருந்தார். ஒருநாள் பிரம தேவர் முதலாயினோர் திருக்கயிலாய மலைக்குச் சென்று, சிவ பெருமானைத் தரிசித்து வணங்கித் துதித்துத் திருவருள் பெற் றுத் திரும்பினார்கள். திரும்பி வருங்கால் முதற் கோபுரத்துள்ளே இலட்சத்து ஒன்பது வீரரும் சூழ்ந்து போற்ற முருகக் கடவுள் எழுந்தருளியிருந்தார். சிவபிரானைத் துதித்துத் திரும் பிய தேவர்களுக்குத் தலைவனாக விளங்கிய பிரமதேவனை முருகப் பிரான் பார்த்து, "இங்கே வா" என்று அழைத்தார். பிரம தேவன், முருகப் பிரானை அடைந்து கீழே வீழ்ந்து வணங்காமல் கைகளைக் குவித்துக் கும்பிட்டுநின்றான்.

### அயனைச் சிறையில் இட்டது

பிரமதேவனின் உள்ளக் கருத்தைத் தெரிந்த முருகப்பிரான் பிரமனை இருக்கச் செய்து, " நீ யாது தொழில் செய்கின்றாய் "

என்று வினவ, பிரமன், "சிவபெருமானுடைய ஆணையினாலே நான் படைத்தல் தொழில் செய்கின்றேன்" என்று விடை பகர்ந்தான். "படைப்புத் தொழிலை மேற்கொண்டிருக்கும் உனக்கு வேதங்களெல்லாம் வருமா" என்று கந்தக் கடவுள் கேட்க, பிரமன், "அவற்றை நான் அறிவேன்" என்று கூறினான். முருகக் கடவுள், "பிரமனே! அவற்றுள் ஓர் இருக்குச் சொல்லக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்தருள, பிரமதேவர் வேதங்களுக்கெல்லாம் முதலில் சொல்லப்படும் 'ஓம்' என்ற சொல்லை முன்னே சொல்லிக்கொண்டு வேதம் சொல்லத் தொடங்கினார். அப்பிரணவத்தையே தம்முடைய திருமுகங்களில் ஒன்றாக வுடைய முருகக் கடவுள் திருநகை செய்து, "நில்; நீ சொல்லிய 'ஓம்' என்னும் சொல்லுக்குப் பொருள் யாது? கூறக்கடவாய்" என்றார். பிரமதேவன், "ஓம்" என்பதற்குப் பொருள் விளங்காமையால், கண்களை விழித்து, நாணமுற்று விக்கித் திகைத்திருந்தான்.

ஈசன் மேவரும் பீடமாய் ஏனையோர் தோற்றும்
வாச மாய்எலா வெழுத்திற்கும் மறைகட்கும் முதலாய்க்
காசி தன்னிடை முடிபவர்க்கு எம்பிரான் கழறும்
மாசில் தாரகப் பிரமமாம் அதன்பயன் ஆய்ந்தான்.

பிரணவத்தைச் சொல்லுதல் மட்டுமன்றி அதன் பொருளை அறிந்திலன்; யாது செய்வான்! பிரணவத்தின் பொருள் இதுவென்று சொல்லாது மயங்கலும், உடனே முருகப்பிரான் சினந்து, "பிரணவத்தின் பொருளை அறியாத நீ படைத்தல் தொழிலை எவ்வாறு செய்வது" என்று கூறி, பிரமனின் நான்கு தலைகளும் குலுங்குமாறு குட்டிக் கீழே விழும் வண்ணம் திருவடிகளினால் உதைத்தருளினார்; கந்த வெற்பிலே கொண்டு போய் விலங்கு பூட்டிச் சிறையில் அடைக்குமாறு செய்வித்தார்.

**முருகன் படைப்புத் தொழிலை மேற்கொள்ளல்**

பிறகு, தாம் கந்த வெற்புக்குச் சென்று ஒரு திருமுகமும், நான்கு திருக்கரங்களும் கொண்டு, ஒருகை செபமாலையும் ஒருகை கமண்டலமும் ஏந்த, மற்றைய இருகைகளும் வரமும்

அபயமும் தர, நான்முகனைப்போலப் படைப்புத் தொழிலை மேற்கொண்டார். இது முருகக்கடவுளுக்கு ஓர் அருஞ்செயலோ!'

ஒருக ரந்தனில் கண்டிகை வடம்பரித்து ஒருதன்
கரத லந்தனில் குண்டிகை தரித்துஇரு கரங்கள்
வரத மோடுஅப யந்தரப் பரம்பொருள் மகனோர்
திருமு கங்கொடு சதுர்முகன் போல்விதி செய்தான்.

பிரமதேவரைச் சிறையிலிட்டது கண்ட தேவர்கள் மனம் நடுங்கி, முருகக் கடவுளைத் தொழுது தங்கள் தங்கள் இடங்களுக்குச் சென்றார்கள்.

திருவிருத்தம்–19
ஆகத் திருவிருத்தம்–1,223

——oo——

## 17. அயனைச் சிறை நீக்கு படலம்

### திருமால் சிவபெருமானை அணுகுதல்

சண்முகக் கடவுள் அளவற்ற காலம் படைப்புத் தொழிலை மேற் கொண்டிருந்தார். திருமால், சிறையிலிருந்து பிரமனை விடுவிக்க எண்ணித் தேவர்களையும் முனிவர்களையும் தம்முன் வருமாறு எண்ணினார். அங்ஙனமே எல்லாத் தேவர்களும் திருமாலை வந்தடைந்தார்கள். திருமால் தேவர்கள் சூழத் திருக்கயிலாய மலையை அடைந்து, திருநந்திதேவரை வணங்கி, அவர் அனுமதி பெற்று உள்ளே சென்று, சிவபெருமான் திருவடிகளை வணங்கித் துதித்து நின்றனர். சிவபெருமான் அவர்களுக்குத் திருவருள் சுரந்து, அவர்கள் வந்த காரணம் வினவ, திருமால் இறைவனைப் பணிந்து, "உம்முடைய திருக்குமாரனாகிய சுப்பிரமணியக் கடவுள் பிரணவத்திற்குப் பொருள் கூற மயங்கிய நான்முகனைச் சிறையில் அடைத்துவிட்டுத் தாமே படைப்புத் தொழிலை நடாத்தி வருகிறார்; நான்முகன் எண்ணற்ற காலமாகச் சிறையில் கிடந்துவருந்துகிறான்; அவனைச் சிறையினின்று நீக்கியருளல் வேண்டும்" என்று வேண்டி நின்றார்.

**திருநந்திதேவரை முருகனிடம் அனுப்புதல்**

சிவபெருமான் திருநந்தி தேவரைப் பார்த்து, "நீ நம் குமாரனிடம் சென்று, கந்தவெற்பில் அடைபட்டிருக்கும் நான்முகனைச் சிறைவிடுவித்து இங்கு மீண்டு வருக" என்று பணித்தருளினார். திருநந்திதேவர் அப்பணியைச் சிரமேற்கொண்டு, கணங்கள் சூழக் கந்தவெற்பை அடைந்து குமரக் கடவுளை வணங்கித் துதித்து நின்று, "சுவாமீ! பிரமனைச் சிறை நீக்கும் பொருட்டு உமக்குச் சொல்லும் வண்ணம் எம்பெருமான் அடியேனை இங்கு அனுப்பியருளினார்; அவனைத் தடையின்றிச் சிறைநீக்கியருளுக; பிரணவப் பொருள் அப்பிரமன் சொல்லுவதற்கு அவ்வளவு எளிதா?" என்றார். முருகக் கடவுள் கோபங்கொண்டு, "நான்முகனைச் சிறை நீக்கேன்; நீ இங்கு நிற்பாயாயின் உன்னையும் சிறையிடுவிப்பேன்; விரைந்து, ஓடிப்போ" என்று கூறியருளினார். அது கேட்ட திருநந்திதேவர் வேறொன்றும் பேசாது பயந்து நடுநடுங்கி முருகப்பிரானை வணங்கிக்கொண்டு மீண்டு சிவபெருமான் திருமுன் சென்று முருகக்கடவுள் திருவாய்மலர்ந்தருளியவற்றை விண்ணப்பம் செய்து நின்றார்.

**சிவபெருமான் பிரமதேவனைச் சிறைமீட்டல்**

அதுகேட்ட எம்பெருமான் திருநகைபுரிந்து எழுந்து, திருக்கோயிலைநீங்கி, எருதுமீதேறி, திருமால், தேவர்கள், முனிவர்கள் முதலியோர் தொழுது பின்செல்லக் கந்தவெற்பை அடைந்தார். முருகக் கடவுளின் திருக்கோயிலினுள் சிவபெருமான் புகுந்தருள, முருகப்பிரான் இருக்கை விட்டெழுந்து, எம்பெருமானை எதிர்கொண்டு வணங்கி அழைத்துப்போய்த் தமது இருக்கையில் எழுந்தருளச் செய்து, "எம்பெருமானே! தாங்கள் இங்கு எழுந்தருளி வந்த செயல் யாதோ" என வினவினார். சிவபெருமான் முருகக் கடவுளை நோக்கி, "நீ நான்முகனைச் சிறையிடுவித்தாய்; நாம் அதனை நீக்கக் கருதி வந்தோம்; அவனைச் சிறையினின்று நீக்கக் கடவாய்" என்று திருவாய்மலர்ந்தருளினார். முருகக் கடவுள் சிவபிரானை நோக்கி, "பிரணவத்தின் பொருள் தெரியாதவன் படைப்புத் தொழிலுக்குத் தக்கவனா? அவன் எவரையும் சிறிதேனும் மதிக்கின்றிலன்; ஆணவம் சிறிதும்

ஒழிந்திலன்; அதனால் சிறையினின்றும் அவனை வெளியே விட மாட்டேன்" என்றார். சிவபிரான் சற்றே சினம் கொண்டவர் போல், குமரக் கடவுளைப் பார்த்து, "மகனே! உன் செய்கை நன்றாயில்லை; நந்தியை அனுப்பிக் கூறியபோதும் கேட்கவில்லை; நாமே வந்து சொல்லியும் மறுத்துப் பேசுகின்றாய்" என்று கூறியருளினார். எம்பெருமானின் கோபத்தினைக் கண்ட முருகன், "அயனைச் சிறைவிடுவிப்பது உம் திருவுளமாகில் அங்ஙனமே செய்கிறேன்" என்று கூறினார். தம் பக்கத்திலிருந்த சில பூதர்களை அனுப்பிப் பிரமனைத் தம்முன் கொண்டு வரச் செய்தார். பூதர்கள் விரைந்து சென்று பிரமனைச் சிறைவிடுத்து முருகக் கடவுள் திருமுன் கொண்டுவந்து விடுத்தனர்.

சிறையினின்றும் விடப்பட்ட நான்முகன் எம்பெருமானை வணங்கி, வெள்கி நின்றான். சிவபெருமான் நான்முகனைப் பார்த்து, "நீ சிறையிலிருந்து வருந்தினை போலும்" என்று திருவாய்மலர்ந்தருள, நான்முகன், "சுவாமீ! குமரக்கடவுள் அடியேனுக்குத் தண்டனை அளித்து நன்மையே செய்தார்; அதனால் என் ஆணவம் அழிந்து, தீவினைகள் தொலைந்து சித்தசுத்தி அடையப்பெற்றேன்" என்று விண்ணப்பம் செய்தான். சிவபெருமான் நான்முகனை நோக்கி, "நீ இன்றுதொட்டு உன் படைப்புத் தொழிலை முன்போல் மேற்கொள்ளுவாய்" என்று கட்டளையிட்டருளினர்.

**ஆறுமுகக் கடவுள் பிரணவப் பொருளைக் கூறல்**

சிவபெருமான் குமரக் கடவுளை நோக்கித் திருமுறுவல் செய்து, "மைந்தனே! வா" என்று அழைத்து, அவரைத் தம் மடி மீது அமர்த்தி, "நான்முகன் அறியாத பிரணவத்தின் பொருள் உனக்குத் தெரியுமா? தெரிந்தால் சொல்வாயாக" என்று திருவாய்மலர்ந்தளினர். அப்போது முருகக்கடவுள், "அண்ணலே! பிரணவப்பொருளை இரகசியமாகக் கூறுவதே அன்றி யாவருங் கேட்பக் கூறலாமோ" என்று கூற, "மைந்தனே! நமக்கு இரகசியமாகவே கூறுக" என்று புன்னகையுடன் சிவபெருமான் திருவாய்மலர்ந்து தம் திருச்செவி சாய்த்தார். முருகக்கடவுள் பிரணவப்பொருளை ஓதினர். அது கேட்டு மகிழ்ந்த ஞானநாயகராகிய

கைலாசபதி திருவருள் செய்து, குமரக்கடவுளை அங்கிருக்கும் வண்ணம் பணித்துத் திருக்கயிலாயமலையை அடைந்தார். முருகக் கடவுள் கந்தவெற்பில், இலக்கத் தொன்பது வீரரும், பூதங்களும் சூழ எழுந்தருளியிருந்தார். பின்னர் தம்மை மெய் யன்போடு வழிபட்ட அகத்திய முனிவருக்குப் பிரணவப் பொருளையும் வேத சிவாகமங்களையும் உலகெலாம் உய்யும் வண்ணம் உபதேசித்தருளினார்.

திருவிருத்தம்–42
ஆகத் திருவிருத்தம்–1,265

——oo——

## 18. விடை பெறு படலம்

### அமிர்தவல்லியும் சுந்தரவல்லியும் வேண்டுதல்

முருகக் கடவுள் கந்தவெற்பில் எழுந்தருளியிருந்த போது திருமாலின் புதல்வியர்களாகிய **அமிர்த வல்லியும்,** அவள் தங்கை **சுந்தரவல்லியும்** முருகப்பிரானைத் திருமணம் புரிந்துகொள்ள விரும்பினார்கள். அவர்கள் தங்கள் விருப்பம் நிறைவேறும் பொருட்டுச் சரவணப்பொய்கையில் அருந்தவம் புரிந்தனர். முருகப்பிரான் அவர்கள்முன் தோன்றியருளினார். அவர்கள் முருகப் பிரானை வணங்கிப் போற்றி, "எம்பெருமானே! நீர் அடியவர்களாகிய எங்களைத் திருமணம் புரிந்துகொள்ளவேண்டும்" என்று வேண்டி நின்றார்கள். முருகக் கடவுள் "அமிர்த வல்லியாகிய நீ இந்திரனுக்கு மகளாக வளரக்கடவாய்; சுந்தர வல்லியாகிய நீ பூவுலகடைந்து சிவமுனிக்குப் புதல்வியாகத் தோன்றி வேடர்களிடத்து வளரக் கடவாய். இவ்வாறு தோன்றி வளரும்போது நாம் வந்து உங்களைத் திருமணம் செய்துகொள்வோம்; செல்லுங்கள்" என்று திருவாய் மலர்ந் தருளினார். கன்னியர் இருவரும் கைதொழுது விடைபெற்றுக் கொண்டு சென்றார்கள்.

### அமிர்தவல்லியை ஐராவதம் வளர்த்தல்

அமிர்தவல்லி, ஒரு குழந்தை வடிவங்கொண்டு, மேரு மலையிலிருந்த இந்திரன் முன் சென்று, "நான் உன்னோடு தோன்

றிய உபேந்திரனின் மகள்; ஆதலால் என்னை நீ வளர்த்து வருவாயாக'' என்றாள். இந்திரன் அமிர்தவல்லியை நோக்கி, "தாயே! இங்கு வா'' என்று கூறி, ஐராவதத்தை அழைத்து "இவள் நம்முடைய மகள்; இவளை அன்புடன் வளர்த்து வரக் கடவாய்; இவள் பொருட்டு இனி நமக்குப் பல நன்மைகள் உண்டாகும்'' என்றான். ஐராவதமும் அவளை மனைவதியில் இருத்தி வளர்த்து வந்தது. அதனால், அவள் **"தெய்வயானை''** எனப் பெயர் பெற்றாள். இளையவளாகிய சுந்தரவல்லி, தொண்டை நாட்டிலுள்ள வள்ளிமலையில் தவம்செய்யும் சிவ முனிவருக்கு மகளாகும் பொருட்டுச் சென்றாள்.

**சிவபெருமானிடம் தேவர்கள் முறையிடுதல்**

கன்னியர்களுக்கு வரம்அருளியபின், கந்தக் கடவுள் கந்த வெற்பை அடைந்தார்; பிறகு இலக்கத் தொன்பதின்மரும், பூதங்களும் புடைசூழத் திருக்கயிலையை அடைந்து சிவபெருனுக்கும் உமாதேவியாருக்கும் இடையே எழுந்தருளியிருந்தார். இந்திரன் முதலிய தேவர்கள், தங்கள் குறையைக் கூறித் திருமாலையும், நான்முகனையும் அழைத்துக்கொண்டு திருக்கயிலாய மலையை அடைந்தார்கள். திருநந்திதேவர் அவர்களை 'நில்லுங்கள்' என்று தடுக்க, அவர்கள் பலநாள் பெருந்துயரத்தோடு வருந்தி முறையிட்டுக் கொண்டு நின்றார்கள். பின்னர் திருநந்திதேவர் மூலம் இறைவன் அனுமதி பெற்று உள்ளே சென்று சிவபெருமான் திருமுன் நின்று வணங்கித் துதித்தார்கள்.

அப்போது இந்திரன், சிவபெருமானை நோக்கி, "அருட் சத்தியாகிய உமாதேவியாரோடு எழுந்தருளிய முழுமுதற் கடவுளே! அடியவர்களாகிய நாங்கள் பல யுகங்களாக அசுரர்களால் துன்பப்பட்டுக்கொண்டு இருக்கின்றோம்; அடியவனின் குமாரனாகிய சயந்தனும் தேவர்களும் அரம்பையர்களும் சூரபன்மனுடைய நகரில் சிறையிலிருக்கிறார்கள்; விண்ணுலகு அசுரர்களால் அழிக்கப்பட்டது; தேவரீருக்குத் திருக்குமரன் தோன்றியும் எங்கள் துன்பம் இன்னும்ஒழியவில்லையே! தீயின்மீதும் உறங்கலாம்; விஷத்தையும் உண்ணலாம்; பகைவர்கள் இழைக்கும் துன்பத்தைத் தாங்குதல் அரிது அரிது! புதல்வர்களாகிய எங்களுக்கு ஏற்பட்ட தீமைகளைப் போக்கிச் செல்வத்தை அளிக்க

வல்லவர் தாதையராகிய தேவரீரேயன்றி வேறு யாருளர்? ஆதலால், கருணாநிதியே! சிறியவர்களாகிய எங்களைக் காத்தருளும், காத்தருளும்'' என்று விண்ணப்பம் செய்து வணங்கினான். அப்போது திருமாலும் நான்முகனும் சிவபெருமானைப் பார்த்து, ''எம்பெருமானே! சூரபன்மன் உயிர்களுக்குச் செய்யும் துயரம் எங்களால் சொல்லுவதற்கரியது; இனிச்சிறிதும் காலம் தாழ்த்தாது இப்பொழுதே அருள்புரியவேண்டும்'' என்று வேண்டினார்கள்.

**சிவபெருமான் திருவருள் புரிதல்**

சிவபெருமான், அவற்றைக் கேட்டுப் பெருங்கருணை கூர்ந்து, ''இனி உங்கள் துன்பத்தை விடுங்கள்'' என்று அருளிச் செய்தார்; அங்குத் தம்மிடையில் எழுந்தருளியிருந்த குமரக் கடவுளை நோக்கி, ''மிகுந்த வலிமைபெற்றிருக்கும் சூரபன்மனை அசுரர்களோடு அழித்து, வைதிக நெறியினை நிலைநிறுத்தித் தேவர்களின் துன்பம் துடைத்து, இந்திரனுக்கு அவன் அரசை மீட்டுக்கொடுத்துத் திரும்பிவருவாயாக'' என்று திருவாய்மலர்ந்தருளினார். முருகப்பிரான் அதுகேட்டு, ''அங்ஙனமே செய்கிறேன்'' என்று விண்ணப்பம் செய்தார். அதன்பின், சிவபெருமான் பதினொரு உருத்திரர்களையும் தம் திருவுளத்தில் நினைக்க, அவர்கள் அங்கு வந்து தோன்றினார்கள். சிவபெருமான், ''நீங்கள் இவன் கையில் படைக்கலங்களாக இருக்கக் கடவீர்கள்'' என்று அவர்களைத் **தோமரம், கொடி, வாள், குலிசம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டம், வில், மழு**[1] என்னும் பதினொரு படைக் கலங்களாக்கி, முருகப்பெருமான் திருக்கரங்களிலே கொடுத்தருளினார்.

**வேலாயுதம்**

பிறகு, சிவபெருமான் **வேலாயுதம்** ஒன்றைப் படைத்தருளினார். அஃது ஐம்பெரும் பூதங்களை அழிக்கக் கூடியது; எல்லா உயிர்களையும் ஒருங்கே முடிக்கக் கூடியது; யாவர்மேல் விடுக்கினும் அவருடைய வன்மைகளையும் வரங்களையும் கெடுத்து உயிரைப் போக்கக் கூடியது; எவ்வெப்படைக்கலங்களுக்கும்

---

1. தோமரம் - எறியீட்டி. மணி - கண்டாமணி. தாமரை - தாமரை வடிவினதாகிய ஒருவகை ஆயுதம். மழு - பரசு.

தலைமை வாய்ந்தது. அதனை முருகக் கடவுளின் திருக்கரத்தில் கொடுத்தருளினார்.

ஆயதற் பின்னர் ஏவில்மூ தண்டத்து
　　ஐம்பெரும் பூதமும் அடுவது ;
ஏயபல் லுயிரும் ஒருதலை முடிப்பது ;
　　ஏவர்மேல் விடுக்கினும் அவர்தம்
மாயிருந் திறலும் வரங்களுஞ் சிந்தி
　　மன்னுயிர் உண்பதுஎப் படைக்கும்
நாயக மாவது ; **ஒருதனிச் சுடர்வேல்**
　　நல்கியே மதலைக்குக் கொடுத்தான்.

**இலக்கத்தொன்பதின்மர் முதலியோர் துணைவர்களாதல்**

பின்பு, எம்பெருமான் இலக்கத்தொன்பது வீரர்களை நோக்கி, "நீங்கள் யாவரும் அசுரர்களை அழிக்க முருகனுக்குத் துணையாகச் செல்லக்கடவீர்கள்" என்று பணித்தருளினார்; அவர்களுக்கும் பல படைக்கலங்களையும் உதவி, முருகக்கடவுளுக்கு அவர்களைத் துணைப்படைஞர்களாகக் கொடுத்தருளினார். அதன் பின்பு, **அண்டாபரணர், நந்தி, உக்கிரர், சண்டர், தீக்கண்ணர், சிங்கர்** முதலிய கணநாதர்களைப் பார்த்து, "நீங்கள் இரண்டாயிரம் வெள்ளம் பூதங்களோடு அறுமுகனுக்குச் சேனாதிபதியாகச் செல்லக்கடவீர்கள்" என்று திருவாய்மலர்ந்து, முருகக்கடவுளுக்கு அவர்களைப் படைத் தலைவர்களாக அளித்தருளினார்.

**பேராற்றல் கொண்ட தேர்**

ஐம்பெரும் பூதங்களின் வன்மை கொண்டதும், நான்முகன் முதலிய தேவர்களின் ஆற்றலைக்கொண்டதும், இலட்சம் குதிரைகள் பூட்டப் பெற்றதும், மனத்தினும் விரைந்து செல்லக் கூடியதுமான பேராற்றல்கொண்ட ஒரு தேரினைத் திருவுளத்தினாலே படைத்து முருகப்பிரானுக்கு ஏறும் வண்ணம் கொடுத்து, "இனி நீ போருக்குச் செல்லக் கடவாய்" என்று பணித்தருளினார்.

**முருகக் கடவுள் புறப்பாடு**

சுப்பிரமணியக் கடவுள் இறைவனையும், இறைவியையும் மும்முறை தொழுது வலம் வந்து அவர்கள் திருவருள் பெற்று

இலக்கத்தொன்பது வீரர்களும், பூத சேனாதிபதிகளும் தம்மைச் சூழ விடைபெற்றுப் போர்புரியப் புறப்பட்டார். திருமால், நான்முகன், இந்திரன் முதலாயினோர் இறைவனை வணங்கித் தொழச் சிவபெருமான் அவர்களை நோக்கி, "உங்களுக்கு அருள் புரியும் நாயகனாகிய குமரனோடு நீங்களும் செல்லுங்கள்" என்று விடை கொடுத்தருளினார்.

திருவிருத்தம்–45

ஆகத் திருவிருத்தம்–1,310

——oo——

## 19. படை யெழு படலம்

**முருகக் கடவுள் தேர் ஏறிப் புறப்படுதல்**

திருமால், வாயுதேவனைப் பார்த்து, "நீ முருகக்கடவுளுக்குத் தேர்ப் பாகனாய் இருந்து தேரைச் செலுத்தக் கடவாய்" என்று கட்டளையிட்டார். அவ்வாறே, வாயுதேவன் ஆகாயத்திற் சென்றுகொண்டிருந்த தேர்மேல் பாய்ந்து தன்னினமாகிய வாயுக்கள் பக்கத்துவர மகிழ்ச்சியோடு செலுத்திக்கொண்டு சண்முகக்கடவுள் திருமுன் விடுத்து, "எம்பெருமானே! இத்தேர்மீது ஏறியருளுக" என்று விண்ணப்பஞ் செய்தான். முருகக் கடவுள் பேரருள் புரிந்து தேர்மீது ஏறியருளினார். அது கண்ட இந்திரன் முதலானோர், "இனிச் சூரபன்மன் இறந்தான் இறந்தான்" என்று துள்ளி ஆரவாரம் செய்தனர்.

**முருகக் கடவுள் சேனைகளுடன் பூமியை அடைதல்**

இலக்கத் தொன்பது வீரர்களும், முருகக் கடவுளைச் சூழ்ந்தார்கள். தேவர்களும் முனிவர்களும் அவ்வீரர்களைச் சூழ்ந்தார்கள். திருக்கயிலாய மலையிலிருந்து இரண்டாயிரம் வெள்ளம் பூதப்படைகள் நூற்றெட்டுச் சேனாதிபதிகளோடும் முருகப்பிரானை அடைந்து வணங்கித் துதித்து ஆரவாரித்தார்கள். அவர்களில் சிலர் பற்பல இசைக் கருவிகளை முழக்கினார்கள். அறுமுகக் கடவுள் பூதசேனைகள் சூழத் திருக்கயிலாய மலையை விட்டுப் பூமியின்மேல் வந்து சேர்ந்தார்.

திருவிருத்தம்–18

ஆகத் திருவிருத்தம்–1,328

——oo——

# 20. தாரகன் வதைப் படலம்

## நாரதர் கிரவுஞ்சமலையைப் பற்றி முருகனிடம் கூறல்

குமரக் கடவுள் சேனையோடு செல்லும் வழியில் யாவரையும் மயக்குவிப்பதும், தாரகாசுரனுக்கு உறைவிடமாக இருப்பதுமாகிய **கிரவுஞ்சமலை** எதிர்ப்பட்டது. அதனைக் கண்டவுடன் தேவர்கள் நடுநடுங்கினார்கள்; இந்திரன் கலங்கினான். அப்போது நாரதமுனிவர் அங்குத் தோன்றி முருகக்கடவுளின் திருவடிகளை வணங்கி, "எம்பெருமானே! இக்கிரவுஞ்சமலை மிக வஞ்சகமுடையது; அகத்தியமுனிவரின் சாபத்தினால் இவ்வடிவாய் நிற்கிறது; இம்மலையின் ஒரு பக்கத்தில் **மாயபுரி** என்னும் நகர் உளது; அதில் சூரபன்மனின் இளவலாகிய **தாரகாசுரன்** இருக்கிறான்; அவன் யானைமுகத்தை உடையவன்; போரில் திருமாலின் சக்கரப் படையைப் பதக்கமாக அணிந்தவன்; அவனைக் கொன்றால் அவனுடைய தமையனாகிய சூரபன்மனைக் கொல்வது எளிது" என்று விண்ணப்பஞ் செய்தார். அது கேட்ட சண்முகக்கடவுள், "அவனை இப்பொழுதே இங்கே கொல்வோம்" எனத் திருவாய்மலர்ந்தருளினார். தேவர்கள் முதலானோர் மனக்கவலை நீங்கி, "தாரகன் இன்றே அழிந்தான்" என்று மகிழ்ச்சியுற்றார்கள்.

## முருகக் கடவுள் வீரவாகு தேவரை அனுப்புதல்

முருகக்கடவுள், வீரவாகுதேவரை நோக்கி, "தம்பீ! கிரவுஞ்சமலையின் ஒருபாலுள்ள மாயபுரியிலே தாரகாசுரன் தன் படைகளோடு இருக்கிறான்; நீ உன் தம்பியர்களாகிய இலக்கத் தெண்மர்களோடும், ஆயிரம் வெள்ளம் பூதங்களோடும், பூத சேனாதிபதிகளோடும் போய், அந்நகரை வளைத்துக்கொண்டு அசுரர்களை அழிப்பாயாக; தாரகன் வருவானாயின், அவனோடும் போர் புரிக; உன்னால் அவனை வெல்வது அரிதாயின், நாம் வந்து கொல்வோம்; நீ முன்னே போ" என்று கூறியருளினார். வீரவாகுதேவர் முருகப்பிரானை வணங்கி, "நன்று" என நின்றார். முருகக்கடவுள் ஏனையோர்களை வீரவாகுடன் செல்லுக எனப்பணித்துத் தேவதச்சனைக்கொண்டு குதிரைகளும் சிங்கங்களும் பூதங்களும் பூண்ட பல் தேர்களைச் செய்து வீரவாகுதேவருக்கும் ஏனைய

வீரர்களுக்கும் கொடுத்தருளினர். வீரவாகுதேவரும் ஏனைய வீரர்களும் முருகக் கடவுளை வணங்கித் தொழுது ஆயிரம் வெள்ளம் பூதர்களோடு சென்றார்கள். வீரவாகுதேவர் பூதப்படைத் தலைவர்களுக்கும் இலக்கத்தெட்டு வீரர்களுக்கும் தலைவராக நடுவே சென்றார். முருகக்கடவுள் வீரவாகுதேவரை முன்னே ஏவி ஆயிரம் வெள்ளம் பூதசேனைகள் சூழவும், இந்திரன் முதலியோர் வணங்கவும் கடைக் கூழையிலே சென்றார்.

**அசுரர்களை வீரவாகுதேவர் எதிர்த்தல்**

பின்னர் பல்வகை வாத்தியங்கள் மிக முழங்க, வீரர்களும் பூதர்களும் சூழ, வீரவாகுதேவர் மாயபுரியை அடைந்தார்; பூதர்கள் நகரினுள் புகுந்து எதிர்ப்பட்ட அசுரர்களோடு சமர் புரிந்தார்கள். அசுர தூதர்கள் அதனைக் கண்டு தாரகாசுரனிடம் ஓடிப்போய் வணங்கி நின்று, "அரசே! சூரபன்மன் தேவர்களுக்கிட்ட சிறையை நீக்கும்பொருட்டுக் **கந்தசுவாமி** என்னும் பெயருடைய குமாரர் ஒருவரைச் சிவபெருமான் பெற்றருளினர்; அவர் அசுரர்களையெல்லாம் கொன்றுவிடுவர் என்று ஆகாயத்தில் செல்லும் தேவர்கள் பேசியது கேட்டோம்; நாம் 'இவர்கள் வார்த்தை என்னை?' என்று இருந்தோம். ஆனால் இப்போதோ அவர்கள் கூறியது உண்மையாகப் போய்விட்டது; இரண்டாயிரம் வெள்ளம் பூதங்கள் சூழக் கந்தசுவாமி வந்திருக்கிறார்; முதலில் வந்த தூசிப்படை நமது நகரத்தை வளைந்து கொண்டது" என்று தெரிவித்தார்கள்.

அம்மொழிகளைக் கேட்ட தாரகன் மிகக் கோபம் கொண்டு தூதர்களை நோக்கி, "இந்நகரத்தை வளைத்த சேனையை உலர்ந்த புற்காட்டில் இட்ட தீயைப்போல விரைந்து அழிப்பேன்" என்று கூறி, அவுணப்படைகள் யானை, குதிரை, தேர் முதலியன சூழ, ஒரு வைரத் தண்டமும் படைக்கலங்கள் பலவும் தாங்கிக்கொண்டு தேர்மீதேறித் தன் நகர் நீங்கிச் சென்றான். அது கண்ட பூதர்கள் ஆரவாரித்து அப்படைகளை எதிர்த்துப் போர் புரிந்தனர். போரிலே குருதி பெருகி ஓடியது; தோள்களும் தலைகளும் துள்ளின; குடர்கள் அறுந்து சிந்தின; பூதர்களில் சிலர் மாண்டனர்; அசுரர்களில் பலர் இறந்தனர்.

**தாரகாசுரன் போர் புரிதல்**

தாரகன் பூதர்களால் தன்படை அழிதலைக் கண்டு பெருங் கோபம்கொண்டு தேரினின்றும் இறங்கி நிலத்தில் குதித்துத் தன் கையிலிருந்த பெருந்தண்டத்தால் பல பூதர்களைக் கொன்றான். பூதசேனாதிபதிகள் மனந்தளர்ந்து சிதறி ஓடினார்கள். அதுகண்ட இலக்கம் வீரர்கள் மிகக் கோபத்தோடு தாரகனைச் சூழ்ந்து பற்பல கணைகளைச் செலுத்த அவை தாரகனுக்கு எவ்விதத் தீமையும் செய்தில. தெய்வப் படைக்கலங்களை வீச அவைகளும் தாரகனுக்குத் தீங்கு விளைவிக்கவில்லை. அதனைக் கண்டு தேவர் கள் கலங்கி நின்றார்கள். அப்போது தாரகன் தன் வைரத் தண்டத்தைச் சுழற்றித் தன்னைச் சூழ்கின்ற தேர்ப்படைக ளெல்லாவற்றையும் அடித்து, பழைக்கையினை நீட்டி இலக்கம் வீரர்களையும் வாரிக் கடலில் தூக்கி எறிந்தான். வீழ்ந்த வீரர் கள் எழுந்து ஒரு பக்கத்தே சென்றார்கள்.

**தாரகன் நவவீரர்களோடு போர் புரிதல்**

வீரகேசரி அதனைப் பார்த்துக் கோபங்கொண்டு முருகக் கடவுளின் திருவடிகளை மனத்தால் நினைத்து நூறு கணைகளைத் தாரகன்மீது எய்து அவன் முடியைத் தள்ளினார். தாரகன் தன் முடி வீழ்ந்தது கண்டு நாணமுற்றுத் தன் கைத்தண்டத்தை வீரகேசரிமீது எறிந்தான்; தேர்மீது ஏறி வேறு முடியை அணிந்துகொண்டான். தாரகன் எறிந்த தண்டம் விரைந்து மார்பிலேபட வீரகேசரி மயங்கி வீழ்ந்தார். வீரவாகுதேவர் மிகக் கோபங்கொண்டு தாரகன்மேல் பல்வகைக்கணைகளை மாரிபோலப் பொழிந்தார்; அவனுடைய வில்லை ஒடித்தார். தாரகன் கனன்று சூலத்தை வீசி வீரவாகுதேவரை மயங்கச்செய்தான். எஞ்சிநின்ற வீரவாகுதேவரின் தம்பியரான எழுவரும் தாரகனோடு பொருது தோற்றார்கள். பிறகு, மயக்கம் தீர்ந்து எழுந்த வீரவாகுதேவரும் தாரகனும் கடும்போர் புரிந்தார்கள். அனேக விதமான தெய்வப் படைகளைத் தாரகன் செலுத்தியும் வீரவாகுதேவர் தோல்வி யடையாததால், அவரைப் படைகளால் வெல்வது இயலாது என்று கருதி, மாயையால் வெல்ல நினைத்து மாயா மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு எண்ணிலாத மாய வடிவங்களை எடுத்து, அளப்பில்லாத படைக்கலங்களைச் செலுத்திப் போர் புரிந்தான்.

**தாரகன் மாயவடிவங்கள் கொண்டு போர் புரிதல்**

தாரகனின் மாயப் போர்களைக் கண்டு தேவர்களும் பூதர்களும் மற்றவர்களும் கலங்கினர். அசுரர்கள் வீராவேசத்தோடு கொக்கரித்தார்கள். வீரவாகுதேவர் வீரபத்திரப் படைக்கலத்தைக் கையில் எடுத்தார்; எடுத்தவுடன் தாரகன் மாயைகள் புரிய இயலாதவனாகித் தனித்து நின்றான். வீரவாகுதேவரோடு பின்னர் மாயப் போர் புரியலாமென்ற கருத்துடன் தன் தேரை விட்டு இறங்கி ஓடினான். வீரவாகுதேவர் தோற்று ஓடுபவன் மேல் படைக்கலம் எய்தல் போர் நெறிக்கு உகந்ததன்று என்று வீரபத்திரப் படைக்கலத்தைத் தூணியுள் இட்டார். பின்பு, "யான் வலியிழந்து ஓடிய தாரகனைப் பிடித்துக் கட்டி முருகப் பிரான் திருமுன் கொண்டுபோய்ச் சேர்ப்பேன்" என்று தொடர்ந்தனுகினார். அவன், மாயைக்கு உறையுளாகிய கிரவுஞ்ச மலையிலுள்ள ஒரு குகையில் ஓடி ஒளிந்தான். வீரவாகுதேவர் இருள் அடர்ந்த அம்மலையின் குகையினுள் பின்தொடர்ந்து சென்று, அம்மலையின் மாயையால் மீளும் வழியினை அறியாமல், வெருண்டு, "இம்மலையின் மாயை இது" என்று எண்ணி நின்றார். அப்போது அக்கிரவுஞ்சமலை வீரவாகுதேவரின் அறிவை மயக்க, அவர் முன்னைய அறிவு இழந்து தூங்குவதுபோல் கிடந்தார். வீரவாகுதேவர் திரும்பி வாராதது கண்ட இலக்கத்தெண்மர்களும், பூதப் படைத் தலைவர்களும் சிறகில்லாப் பறவை போல மனமுடைந்து வருந்தி, "நமது தலைவர் தாரகனைத் தொடர்ந்து சென்று போர் புரிகின்றார்; இன்னும் மீண்டிலர்; நாமும் அங்கே போவோம்" என்று நினைத்து அம்மலையுள் விரைந்து சென்று அவர்களும் மயங்கித் துயின்றார்கள். அது கண்டு மகிழ்ந்த தாரகன் மலையிலிருந்து வெளியே வந்தான்; ஒரு தேர்மீது ஏறி வந்து, தலைவர்களின்றி, அஞ்சிக் கலங்கியிருந்த பூதப்படைகள்மீது கோடிகோடி கணைகளைப் பொழிந்தான். பூதர்கள் திசைகளிலும் ஆகாயத்திலும் சிதறி ஓடினார்கள்.

**நாரதர் முருகக்கடவுளிடம் நிகழ்ந்தவை கூறுதல்**

நாரதமுனிவர் நிகழ்ந்தவைகள் யாவற்றையும் கண்டு நடுநடுங்கி வருந்தி, தேவர்களோடு சென்று தேவசேனாதிபதி

யாகிய சண்முகக் கடவுள் நின்றருளிய கடைக் கூழையை அடைந்து, அவரை வணங்கி, "எம்பெருமானே ! நம் படை வீரர்கள் அசுரர்களோடு பெரும்போர் செய்து, அவர்களைக் கொன்றூர்கள். தாரகனோடு போரிட்டனர். தாரகன் சூழ்ச்சியால் வீரவாகுதேவரையும், இலட்சத்து எட்டு வீரர்களையும், பூதப்படைத் தலைவர்களையும், கிரவுஞ்சமலைக்குள் நுழையச் செய்து மயங்கிக் கிடக்கும்படி செய்துவிட்டு, நம் படைகள்மீது கணை மழை பொழிந்து தோற்று ஓடச் செய்தான். இவற்றையெல்லாம் தேவரீர் அறிவீரே" என்று விண்ணப்பஞ் செய்தார்.

**முருகக் கடவுள் பூதசேனைகளோடு புறப்படுதல்**

முருகக்கடவுள் அவற்றைக் கேட்டு, "நாமே போர்க்களம் சென்று தாரகனை வேற்படையினுல் கொல்லுவோம்; கிரவுஞ்ச மலையையும் பிளப்போம்; நொடிப்பொழுதிலே வீரர்களை மீட்டருளுவோம்; நீங்கள் வருந்தவேண்டாம்" என்று கூறியருளினுர். அதுகேட்ட அனைவரும் மகிழ்ந்தார்கள். முருகப் பெருமான் வாயுதேவனைப் பார்த்து "மனத்தினும் விரைந்து செல்லுமாறு தேரைச் செலுத்துவாயாக" என்று பணித்தருளினுர். வாயுதேவன், "நன்று" என்று வணங்கிக், குதிரைகளைத் தூண்டினுன். அப்போது, விண்ணும் மண்ணும் மலைகளும் கடல்களும் நடுங்கத் தேர் வெகு வேகத்துடன் ஆகாய மார்க்கமாகப் பறந்து சென்றது. பூத சேனைகள் முருகப்பிரானைச் சூழ்ந்து வந்தன. முருகக்கடவுள், தாரகன் போர்க்களத்தை அடைந்தார்.

**முருகக் கடவுள்—தாரகன் போர்**

பூதப் படைகளுக்கும் அசுரப் படைகளுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. பல அசுரர்கள் இறந்தார்கள்; பல அசுரர்கள் வலியழிந்து தோற்றோடினுர்கள். அசுரர்கள் இறந்தமை கண்டு, தாரகன் வெகுண்டு, முருகக்கடவுள் முன்வந்து, "இவன்தானே சிவனுடைய மகன்" என்று தூதர்களைக் கேட்டுத் தெளிந்தான். கந்தசுவாமி திருமுன் சென்று ஒளிபொருந்திய ஆறு திருமுகங்களையும், பன்னிரண்டு திருக்கரங்களையும் தண்டை ஒலிக்கும் செந்தாமரை போன்ற திருவடிகளின் அழகையும் கண்டான். "நம் மீது போர் செய்ய வந்திருக்கும் இவன் முழுமுதற்

கடவுளே போலும்" என்று கூறிக்கொண்டு, சிவபெருமான் தமக்கு அளித்த வரங்களையும் வீரத்தையும் செல்வத்தையும் பெரிதாக எண்ணிக் கோபங்கொண்டான். பிறகு, முருகப் பிரானைப் பார்த்து, "திருமாலுக்கும் நான்முகனுக்கும் இந்திரனுக்குமன்றி, சிவபெருமானுக்கும் எமக்கும் போர் நிகழ்வதற்குக் காரணம் ஒன்றுமில்லை; நீ என்மீது போர் செய்ய வந்த காரணம் என்னை? சொல்" என்று கேட்டான். முருகக்கடவுள் தாரகனை நோக்கி, "உயிர்கள் செய்யும் நன்மை தீமைகளுக்கு ஏற்ப அருளும் தண்டனையும் அளிக்கும் சிவபெருமான், நீங்கள் தேவர்களைச் சிறையில் வைத்தமையைத் திருவுளங்கொண்டு உங்கள் வீரத்தையும் வன்மையையும் அழித்து வரும்படி நம்மை விடுத்தருளினர்" என்று திருவாய்மலர்ந்தார். அது கேட்ட தாரகன், முருகனைப் பார்த்து, "என்னோடு போர் செய்த திருமாலின் சக்கரம் என் கழுத்தில் அணிகலமாய் இருப்பதை நீ பார்க்கவில்லையா? என்னோடு எதிர்த்தவர்கள் யாவரும் தோற்றோ அல்லது அழிந்தோ போனார்கள். ஆதலால், "பிள்ளாய்! நீ என்னோடு பொருது வருந்தாது உனது தந்தையாகிய சிவன்பால் செல்லுவாய்" என்றான். சிவகுமாரன் தாரகனைப் பார்த்து, "தலைமைப் படைக்கலமாகிய நம் வேற்படை திருமாலின் ஆழிப்படைபோல் பழிப்புக்கிடமாகாது; அஃது உன் உயிரை உண்டு விடும்; கிரவுஞ்ச மலையையும் பிளக்கும்; நாம் உங்கள் பேராற்றலை அழித்து நம் சேனைகளை விரைவிலே மீட்கின்றோம்" என்று திருவாய்மலர்ந்தார்.

சிவகுமாரன் கூறியவைகளைக் கேட்டு, தாரகன் சினந்து வில்லை வளைத்து நாணொலி செய்ய, முருகப்பெருமானும் வில்லினை எடுத்தார். அதினின்றும் எழுந்த ஒலி கேட்டு நான்முகன் முதலாயினோர் நடுநடுங்கினர். தாரகன் ஆயிரங் கணைகளைத் தூண்ட, முருகக் கடவுள் ஒருகணையால் அவனுடைய வில்லை ஒடித்தார்; இரண்டு கணைகளைச் செலுத்தி அவனுடைய துளையுடைய கையையும் நான்கு கோடுகளையும் துணித்து வீழ்த்தினார். உடனே தாரகன் வெகுண்டு ஆயிரம் கணைகளைத் தொடுத்து முருகனின் தேர்க்கொடியை அறுத்தான். அதுகண்ட முருகக் கடவுள் எட்டுக் கணைகளினால் தாரகன் வில்லை ஒடித்து, ஆயிரம் கணைகளினால் அவன் தேரையும், குதிரையையும் அழித்தார்;

மேலும் ஆயிரம் கணைகளைத் தாரகனுடைய நெற்றியில் செலுத்தினார். தாரகன் தன் தேர்மீது குருதி பெருகி ஓடப் புலம்பி மயங்கி வீழ்ந்தான். தாரகன் வீழ்ந்து வருந்தியது கண்ட அவன் படை வீரர்கள் ஆறுமுகக் கடவுளைச் சூழ்ந்து சூலம், ஆழி, தோமரம் முதலிய படைக்கலங்களைச் செலுத்தினார்கள். அவற்றையெல்லாம் முருகப்பெருமான் தன் கணைகளால் அழித்தார்; அவுணர்கள்மேல் கணைமாரி பெய்து குருதி கடல்போலப் பெருகச் செய்தார். பல அவுணர்கள் இறந்தார்கள். பலர் குருதிக் கடலிலே நீந்தித் தத்தம் உயிர் கொண்டு தப்பி ஓடினார்கள்.

**மயக்கம் தீர்ந்தபின் தாரகன் போரிடுதல்**

தாரகன் மயக்கம் நீங்கி எழுந்து பார்த்தான். தான் தனித்து நிற்பதைக் கண்டு, தேவப் படைக்கலங்களை முருகப்பிரான்மீது செலுத்தினான். அவை முருகக்கடவுளிடத்துச் சென்று அவருக்குத் தீங்கொன்றும் செய்யாமல், அவரைப் போற்றி நின்றன. அதுகண்ட தாரகன் தன் ஆணவத்தை ஒழித்தான்; சிறிது அஞ்சினான்; மிக விம்மிதம் அடைந்தான்; இனிச் சிவப் படைக் கலத்தை விடுவேன் எனத் துணிந்தான்; உடனே அதனை எடுத்துச் சினத்துடன் செலுத்தினான். அச்சிவப் படைக்கலம் நஞ்சையும், தேவப்படைக் கலங்களையும், பூதங்களையும், பாம்புகளையும் பிறவற்றையும் உண்டாக்கிக்கொண்டு எல்லா உலகமும் வருந்தும்படி சினந்து சென்றது. சுப்பிரமணியக்கடவுள் அதனைக்கண்டு, இறைவனைத் தியானித்து அப்படைக்கலத்தை ஒரு திருக்கரத்தை நீட்டிப் பற்றிக்கொண்டார். தாரகன் அது கண்டு கலங்கி, "இன்றே நமது வாழ்வு அழிந்தது" என்று முடிவுகொண்டு ஏங்கினான். பிறகு, மாயப்போர் புரிய எண்ணித் தாரகன் கிரவுஞ்ச மலையை அடைந்து, "கிரவுஞ்சமே! நீ வல்ல மாயைகளை விரைந்து செய்வாயாக" என்றான். உடனே கிரவுஞ்ச மலை பல மாயைகளைச் செய்யத் தொடங்கி முப்புரமாக வரத் தாரகன் அம்முப்புரத்து அசுரர்களாய் வந்தும், கிரவுஞ்சமலை பலப்பல முகில்களாய் வரத் தாரகன் இடியாய் வந்தும், கிரவுஞ்ச மலை சக்கரவாளகிரியைச் சூழும் இருளாக வரத் தாரகன் பூதர்களாய் வந்தும், கிரவுஞ்சமலை வாயுவாய் வரத் தாரகன் அக்கினியாய் வந்தும், கிரவுஞ்சமலை நெருப்புக்கொள்ளிகளாய் வரத்

தாரகன் ஆயிரங்கோடி சூரியர்களாய் வந்தும், இவைபோன்ற பற்பல மாய வடிவங்களோடு வந்து போர் புரிந்தனர்.

**தாரகன் அழிவு**

தாரகன் கிரிவுஞ்சமலேயோடு அளவில்லாத மாயைகள் செய்வதைக் கண்ட ஆறுமுகப்பெருமான் தன் கையிலுள்ள வேற்படையைப் பார்த்து, "நீ தாரகாசுரனையும் கிரவுஞ்ச மலையையும் பிளந்து உயிரை உண்டு விடு ; இலக்கத்தொன்பது வீரர்களையும் பூதப்படைகளையும் மீட்டுக்கொண்டு இங்கே வருக" என்று பணித்தருளினுர். வேற்படை விரைந்து சென்று தாரகனும் கிரவுஞ்சமலேயும் செய்த மாயைகளை அழித்தது. உடனே, தாரகன் "இதனை நான் பிடித்து முறித்துப் போடுவேன்" என்று கோபத்தோடு அதன்மேல் பாய, வேற்படை அவன் மார்பைக் கிழித்துக் கிரவுஞ்ச மலையையும் பிளந்தது; மலையினுள் துயின்ற வீரர்களையும் எழுப்பிவிட்டு, ஆகாய கங்கையில் நீராடி முருகப்பிரானின் திருக்கையில் வந்தடைந்தது. தாரகன் மார்பையும் கிரவுஞ்ச மலையையும் வேற்படை பிளந்தபோது உண்டாகிய பேரொலியைக் கேட்ட உலகினர் "பூமி பிளந்ததோ? அண்டம் உடைந்ததோ?" என்று எண்ணினர். தாரகன் பேரிடிபோல் ஆர்த்து எழுந்து துள்ளி நிலத்தில் வீழ்ந்து இறந்தான்.

தாரகனும் கிரவுஞ்சமலேயும் அழிந்தமை கண்டு, திருமால் நான்முகன், இந்திரன், தேவர்கள், முனிவர்கள் முதலியோர் மகிழ்ந்து இன்பக் கூத்தாடிப் பூமழை பொழிந்தனர். கிரவுஞ்ச மலை அழிந்தவுடனே அம்மலையினுள் மயங்கிக் கிடந்த வீரர்கள் இலக்கத் தொன்பதின்மரும் மயக்கம் நீங்கி முருகக் கடவுளை அடைந்து வணங்கி நின்ருர்கள். அவர்கள் யாவருக்கும் முருகக் கடவுள் தண்ணளியுடன் முகமன் கூறித் திருவருள் புரிந்தார் ; தாரகனிடமிருந்து தாம் கைப்பற்றிய சிவப்படைக்கலத்தை வீரவாகு தேவருக்கு அளித்தார் ; போரில் இறந்த பூதர்களை எழுப்பி, அவர்கள் சூழத் தேவர்கள் துதிக்க, நவவீரர்கள் நெருங்கப் போர்க்களத்தை விட்டு நீங்கினுர்.

திருவிருத்தம்—203

ஆகத் திருவிருத்தம்—1,531

——oo——

## 21. தேவகிரிப் படலம்

**முருகக்கடவுள் தேவகிரியில் எழுந்தருளுதல்**

முருகக் கடவுள், தேவர்களும் பூசுரர்களும் வீரர்களும் சூழ இமயமலையைக் கடந்து தென்றிசை நோக்கிச் சென்று சூரியன் அத்தமயனஞ் செய்யும்போது **தேவகிரியை** அடைந்தார். திருமால், நான்முகன், இந்திரன், தேவர்கள் முதலியோர் முருகப்பெருமானைப் போற்றித் தொழுது, "எம்பெருமானே! தேவரீர் தாரகனைக் கிரவுஞ்சமலையோடு கொன்று எங்கள் துன்பத்தினைப் போக்கி அருளினீர்கள்; உம்முடைய திருவடிகளை வழிபட எண்ணுகிறோம்; இம் மலையில் எழுந்தருளுக" என்று வேண்டினார்கள். முருகக்கடவுள் அவ்வேண்டுகோளுக்கு இசைந்தருள, தேவர்கள் மகிழ்ந்தார்கள். முருகப்பெருமான், தேவதச்சனைப் பார்த்து, "நாமும் மற்றேனையவரும் தங்குவதற்கு ஒரு நகரம் இம்மலையின்மேல் விரைவில் உண்டாக்கக் கடவாய்" என்று பணித்தருளினார். அதுகேட்ட தேவதச்சன் வணங்கி, "சுவாமீ, அவ்வாறே செய்கின்றேன்" என்று விண்ணப்பித்து, வணங்கிச் சென்று அவ்விடத்தே அழகியதோர் நகரத்தையும், அதனுள்ளே முருகக்கடவுள் எழுந்தருளியிருக்கும் பொருட்டுப் பொன் மயமாகிய திருக்கோயிலையும், அதனுள்ளே ஓர் இரத்தின சிங்காதனத்தையும் செய்தமைத்தான். முருகப்பெருமான் அத்திருநகரினுள் சென்று திருக்கோயிலின்கண் அமைந்துள்ள பேரொளி வீசும் சிங்காதனத்தில் எழுந்தருளியிருந்தார்.

**தேவ பூசை**

அப்போது தேவர்கள், சிவ குமாரனைப் பூசிக்க எண்ணினார்கள். அங்கே கங்கையை வரச்செய்து அதன் நீர் கொண்டு குமரக் கடவுளுக்குத் திருமஞ்சன மாட்டி ஆடையாபரணங்கள், நறுமலர்கள், சந்தனக்குழம்பு முதலியன சாத்தி, தூபதீபம் காட்டி, வணங்கித் துதித்து நின்றார்கள். முருகப்பெருமான் அனைவருக்கும் பெருங்கருணையுடன் திருவருள்புரிந்தார்.

திருவிருத்தம்–32

ஆகத் திருவிருத்தம்–1,563

——oo——

## 22. அசுரேந்திரன் மகேந்திரஞ் செல் படலம்

**தாரகன் மனைவி சௌரி புலம்புதல்**

சண்முகக்கடவுளின் வேலாயுதத்தினுல் தாரகன் இறந்த செய்தியைச் சில தூதர்கள் மூலம் கேள்விப்பட்ட தாரகனின் மனைவியாகிய **சௌரி,** மற்றைய மனைவியர்களும் பிறரும் தன்னைச் சூழ்ந்து பதைத்திரங்கப் போர்க்களம் அடைந்து, தன் கணவன்மேல் வீழ்ந்து புலம்புவாளாயினுள்: "தன் ஆழிப் படையை உனக்கு அணிகலமாக அளித்த திருமாலும், இந்தி ராதிதேவர்களும் இன்றன்ருே தங்கள் மனக்கவலை தீர்ந்தார்கள்; நான் உன்னைத் தழுவியும், நீ என்னைத் தழுவாது இருக்கிருயே! பல்லோருங் காணத்தழுவுவது பழி என்று நினைப்பாயேல் வாய் திறந்து ஒரு மொழியாவது பகரக் கூடாதா? வீணே துயில் கின்ருய்; என்மேல் ஏதேனும் வெறுப்புண்டோ? சிவபெருமான் உனக்களித்த வரம் உண்மையென்று இதுகாறும் நம்பியிருந் தேன்; அது பொய்யாய் விளைந்ததுவோ! என் கணவா! இறந்தனையே! ஐயோ! சிவ குமாரனேடு ஏன் எதிர்த்தாய்? இதற்குத்தானு நீ முன் அருந்தவம் செய்தாய்?" என்று பல வாறு புலம்பினுள்.

மையோடு உறழும் மணிமிடற்ருேன் தந்தவரம்
மெய்யாம் எனவே வியந்திருந்தேன் இந்நாளும்;
பொய்யாய் விளைந்ததுவோ? பொன்றினையால் என்துணைவா!
ஐயோ! இதற்கோ? அருந்தவமுன் செய்தாயே!

மற்றைய மனைவியர்களும் தாரகனைச் சுற்றி நின்று பல வாறு புலம்பித் துயருற்ருர்கள்.

**அசுரேந்திரன் வருந்துதல்**

அப்போது, சிங்காமுகாசுரனுடைய ஆசுரபுரிக்குச் சென் றிருந்த தாரகன் புதல்வன் **அசுரேந்திரன்** கேள்வியுற்றுத் திரும்பிவந்து தன் தந்தை இறந்ததனைக் கண்டான்; பெருமூச் செறிந்தான்; அழுது புலம்பினன்; மீளாத் துன்பங்கொண்டு மாதாவின் கால்களில் விழுந்து புரண்டு அலறி அழுதான். பின்பு ஒருவாறு தேறி, ஈமக்கடன்கள் செய்ய ஏற்பாடுகளைச் செய்தான்; தாரகனின் உடலை ஒரு தேர்மேல் ஏற்றி இடுகாட்

டிற்குக் கொண்டுபோய்ச் சந்தனச் சிதையில் கிடத்தி, ஈமக் கடன்களைச் செய்து தகனஞ்செய்தான். அப்போது, தாரகன் மனைவியாகிய சௌரியும் மற்றைய மனைவியர்களும் உடன் கட்டை ஏற விரும்பினர். அசுரேந்திரன் எவ்வளவோ தடுத்துக் கூறியும் அவர்கள் கேட்கவில்லை; பின்பு, தீ வளர்த்துக் கொடுக்க அதில் தாயர்களெல்லோரும் வீழ்ந்து இறந்தார்கள்.

**சூரபன்மன் அறிதல்**

அசுரேந்திரன், தன் சுற்றத்தவர் சிலர் சூழ, தென் கடலி லுள்ள வீரமகேந்திரபுரியை அடைந்தான்; தன் பெரிய தந்தை யாகிய சூரபன்மனை அடைந்து, அவன் கால்களைப் பிடித்துக் கொண்டு அழுதான். சூரபன்மன் தன் இளவல் மகனுகிய அசு ரேந்திரனைப் பார்த்து, "மைந்தனே! நீ புலம்பாதே; நிகழ்ந்தது யாது? கூறுவாயாக" என்று கேட்டான். அசுரேந்திரன் சூர பன்மனைப் பார்த்து, "தந்தையே! இந்திரன் சூழ்ச்சியினுல் சிவ பெருமானின் மகனுகிய ஆறுமுகன் பூதப்படைகளோடு வந்து உன் தம்பியைக் கிரவுஞ்ச மலையோடு வேற்படையினுலே கொன்று விட்டான்; இப்போது பூமியில் வந்துளான்" என்று கூறினுன். சூரபன்மன் அதுகேட்டு, "நன்று நன்று" என்று இடிபோலச் சிரித்து, "இது பொய் வார்த்தை; மைந்தனே! அஞ்சாமல் உண்மையைச் சொல்" என்றுன். அசுரேந்திரன், "நான் கூறியது யாவும் உண்மையே. என் தந்தையையும், கிரவுஞ்சமலையையும் சிவ குமாரன் வேற்படையினுல் கொன்று விட்டுச் சென்றுன். நான் விதிப்படி ஈமக் கடன்களையெல்லாம் முடித்துக்கொண்டு பெருந்துன்பத்தோடு உன்னிடத்து வந் தேன்" என்றுன்.

**சூரபன்மன் சினங் கொள்ளுதல்**

சூரபன்மன் தன் இளவல் கொல்லப்பட்ட செய்தியினைக்கேட்டு மிகுந்த சினம் கொண்டான். அவன் கண்கள் தீயைக் கக்கின; மூக்கினின்று புகை எழுந்தது; பற்கள் உதட்டைக் கடித்தன. தாரகன்பால் கொண்ட அன்பால் சூரபன்மன் கண்களினின்று சிந்திய நீர் அருவிபோல ஓடியது; உடலில் வேர்வை கடல் போலப் பெருகியது. சூரபன்மன் சிங்காதனத்தினின்றும் தவறிக்

கீழே வீழ்ந்து இடிபோல் சப்தமிட்டு அழுதான். அருகிருந்தவர்கள் யாவரும் ஏங்கி அழுதார்கள். நகரமெங்கும் அழுகை ஒலி எழுந்தது. அப்போது சூரமன்மன், "என் தம்பியைக் கொன்ற கந்தனை நான் சென்று பொருது வென்று வருதல் வேண்டும்" என்று கூறிப் படைக்கலங்கள் ஏந்தி, அவுணர்களுடன் போருக்குப் புறப்படலானான்.

**அமோகன் அறிவுரை**

அதனைக் கண்ட சூரபன்மனின் அமைச்சன் **அமோகன்** சூரபன்மனை வணங்கி நின்று, "அரசே! அடியேன் ஒன்று சொல்கிறேன்; கோபங்கொள்ளற்க; அறிவுள்ள வீரர்களாயினோர், பகைவர் தன் நகரையே வளைத்துக் கொண்ட காலத்தும் நன்கு ஆராயாது, சினந்து உடனே போரிடச் செல்லார்; சாம பேத தான உபாயங்களை நன்கு அறிந்து போர்மீது செல்வர்; நீ அழிவில்லாதவன்; எல்லா உலகங்களையும் ஆள்பவன்; தேவர்கள் யாவரையும் ஏவல் கொண்டவன்; திருமாலாலும் நான்முகனாலும் புகழப்படுபவன்; இந்திரன் சொற்கேட்டுப் பூதப்படை சூழவந்த பாலகனாகிய கந்தனை எதிர்ப்பின் அது வசையாகும். நீ அமைச்சர்களோடு செய்வனவற்றை ஆராய்ந்து செய். உன்னைப்போல் தாரகன் அழியா ஆற்றல் பெறாதபடியால் மழலைச்சொல் மாறாச் சிறுவனால் கொல்லப்பட்டான். அவன் இறந்ததில் வியப்பொன்றுமில்லை. ஆற்றல் மிக்காரும் ஒரு காலத்தில் வலிமை இழப்பர். வலிமை இல்லாதவரும் ஒரு காலத்தில் வீரராய்த் திகழ்வர். ஒப்பற்ற அரசனாகிய நீ சிறுவன்மேல் போர் குறித்துச் செல்வது நன்றன்று. அவனைக்காட்டிலும் வல்ல வீரரைப் படைஞரோடு ஏவி வெற்றிகொண்டிருக்கக்கடவை" என்றான்.

**சூரபன்மன் தூதர்களுக்குக் கட்டளையிடுதல்**

அமோகன் கூறியவைகளைக்கேட்டு ஒருவாறுதெளிவடைந்த சூரபன்மன் கோபம் தணிந்து, **பகன், மயூரன், சேனன், சக்கரவாகன், சுகன்** முதலிய தூதர்களைக் கூப்பிட்டு ஆறுமுகனின் இயல்பையும், அவனுடைய படைஞர்களின் தன்மையையும் அறிந்துகொண்டு வருமாறு கட்டளையிட்டான். அவர்களும் சூரபன்மனை வணங்கி விரைந்து பூமியை நோக்கிச்

சென்றுர்கள். அதன் பின்பு, சூரபன்மன் அசுரர்கள் போற்ற வீற்றிருந்து அரசு செய்தான்.

திருவிருத்தம்-65
ஆகத் திருவிருத்தம்-1,628

——oo——

## 23. வழி நடைப் படலம்

**திருக்கேதாரம்**

தேவகிரியில் எழுந்தருளியிருந்த குமரக் கடவுள், சூரியன் உதித்தவுடன் அதனைவிட்டு நீங்கிச் சேனைகளும் தேவர்களும் சூழத் தென் றிசையை நோக்கிப் புறப்பட்டார். முன்னர் உமா தேவியார், தம்மை நீக்கி வலம் செய்த பிருங்கி முனிவரின் காரண மாகச் சிவபெருமா னுடைய இடப் பாகத்தை அடைய விரும்பி, வழிபாடு செய்த **திருக்கேதாரம்** என் னும் திவ்வியத் தலத்தைக் கண்டு தரிசித்தார்.

**ஸ்ரீ காசி**

வியாசர் திருமாலே பரம்பொருள் என்று உயரத் தூக்கிய கை, தூக்கிய வண்ணமே நின்றுவிட்டதன் மூலம் **சிவபெரு மானே பரம்பொருள்** என்ற உண்மையை உணர்த்திய **ஸ்ரீ காசி யம்பதி**யைக் கண்டு போற்றி வணங்கினர்.

**திருப்பருப்பதம்**

சிலாத முனிவரின் புதல்வராகிய திருநந்தி தேவர், சிவபெரு மான் எழுந்தருளியிருக்கும் பொருட்டு, "நான் ஒரு மலை யாகுவன்" என்று அருந்தவம் புரிந்து மலையாகி இறைவனைத் தம் முடிமேல்தாங்கிய **திருப்பருப்பதம்** (மல்லிகார்ச்சுனபரு வதம்) என் னும் **ஸ்ரீ சைலத்தைக்** கண்டு போற்றினர்.

**திருவேங்கடம்**

மாங்கனியின் நிமித்தம் தாம் உமாதேவியிடம் கோபித்துக் கொண்டு, பாதாளத்திற்குச் சென்று ஒரு குகைவழியே வந்த **திருவேங்கட மலையைக்** கண்டு வழிபட்டார்.

**திருக்காளத்தி**

சிலந்தியும், பாம்பும், யானையும், சிவகோசரியாரும், கண்ணப்ப நாயனாரும், நக்கீரரும், கன்னியரும் முத்திபெற்ற தக்ஷிண கைலாசமாகிய **திருக்காளத்திமலை**யைத் தரிசித்தார்.

**திருவாலங்காடு**

காளிதேவி இப்பூமி முழுவதையும் அழிப்பதற்கு எழுந்த போது நான்முகன் முதலியோர் யாவரும் அஞ்சி நடுங்கினர். அக் காளியின் செருக்கு அழியவும் உலகம் மகிழவும் சிவபெருமான் தமது ஆடலால் வென்றருளிய **திருவாலங்காடு** என்ற தலத்தை அடைந்து வணங்கினார்.

**காஞ்சி**

ஊழிக் காலத்திலும் அழியாததும், திருமால், நான்முகன் முதலிய தேவர்களுக்கு இருப்பிடமாய் அமைந்ததும், சிவபெருமான் மாமர நிழலின்கண் வீற்றிருந்தருளுவதும், உமாதேவியினால் வழிபாடு செய்யப்பெற்றதுமாகிய **காஞ்சி** மாநகரைக் கண்டு வழிபட்டார்.

**திருவண்ணாமலை**

நான்முகனும் திருமாலும், "நானே பரம் பொருள், நானே பரம்பொருள்" என்று போரிட்ட காலத்து அவர்களின் நடுவே அழற்பிழம்பாய்த் தோன்றியதும், நினைத்த மாத்திரத்தில் வீடு பேறு அளிக்கவல்லதுமாகிய **அருணகிரியை** (திருவண்ணாமலையை)த் தரிசித்தார்.

**திருவெண்ணெய் நல்லூர்**

சிவபெருமான் ஒரு வயோதிக் அந்தணர் வடிவத்தில் வந்து அடிமை ஓலையைக் காட்டிச் சுந்தரமூர்த்தி நாயனாரின் திருமணத்தைத் தடுத்து ஆட்கொண்டருளிய **திருவெண்ணெய் நல்லூரை**க் கண்டு வணங்கினார்.

**விருத்தாசலம்**

உமாதேவியார் தம் ஆடையால் வீச, சிவபெருமான் தமது திருத்தொடையின்மேற் கிடத்தி, இறந்த குற்றமற்ற உயிர்களுக்

கெல்லாம் ஐந்தெழுத்தின் உண்மையை உபதேசித்துத் தமது சாருப பதத்தைக் கொடுத்தருளுவதும், காசியைப்போலச் சிறந்துவிளங்குவதுமாகிய **விருத்தாசலம்** என்னும் **பழமலையை** வணங்கித் துதித்தார்.

**சிதம்பரம்**

பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாத முனிவர் ஆகிய இருவரும் தரிசிக்கும்பொருட்டுச் சிவபெருமான் ஆனந்த தாண்டவம் செய்தருளிய **சிதம்பரம்** என்னும் **தில்லைப் பதியை** அடைந்தார்; அங்கே, சிவகாமி அம்மையையும் நடராசப் பெருமானையும் திருவுளம் கனிந்துபோற்றித் தரிசித்தார்; பிறகு காவிரியின் வடகரையிலுள்ள **மண்ணியாற்றங்கரையை** அடைந்தார்.

திருவிருத்தம்— 16

ஆகத் திருவிருத்தம்–1,644

——oo——

## 24. குமாரபுரிப் படலம்

**நகர் அமைத்தல்**

சண்முகக்கடவுள் மண்ணியாற்றங்கரையை அடைந்தபோது கதிரவன் மேலைக்கடலில் மறைந்தான். திருமால், நான்முகன் முதலியோர் முருகக் கடவுளை வணங்கி, "இந்த ஆற்றங்கரையில் மணற் குன்றுகள் மலிந்து, சோலைகள் பெருகியுள்ளன; எண்ணற்ற கோயில்களும் உள்ளன; ஆதலால், இந்நதிக் கரையில் எழுந்தருளுக" என்று வேண்டினார்கள். முருகப்பிரான் அதற்கு இணங்கித் தேவதச்சனை அழைத்து ஒரு நகரினை அழகுற அமைக்கும்படி பணித்தருளினார். தேவதச்சன் அவ்வண்ணமே மனத்தால் ஒரு நகர் அமைத்துக் கொண்டு, முருகக்கடவுளை வணங்கி, "எம்பெருமானே! இந் நகரிலே எழுந்தருளுக" என்று வேண்டிக்கொண்டான்.

**திருச்சேய்ஞலூர்**

முருகப் பிரான் தேரினை விட்டு இறங்கி, படைகள் தன்னைச் சூழ அந்நகரில் புகுந்து, வளங்கள் அனைத்தையும் நோக்கி,

" நாம் இருத்தற்கு இதுவே ஏற்ற நகரம் " என்று திருவாய் மலர்ந்தருளினர். அது கேட்ட தேவர்கள் அந் நகருக்குத் **திருச் சேய்ஞலூர்** எனப்பெயரிட்டார்கள். முருகப்பெருமான், தம்பியர்களும் பூதசேனுதிபதிகளும் தேவர்களும் சூழ, அங்குள்ள திருக்கோயிலினுள் எழுந்தருளியிருந்தார். நான்முகன் திருமால் முதலியோர் அவரவர்களுக்குரிய இடத்தில் அமர்ந்திருந்தார்கள்.

**இந்திரன் காமநோயால் வருந்துதல்**

இந்திரன், தாரகன் கிரவுஞ்சமலையோடு அழிந்தமையால் தன்துயர் நீங்கிப் பெருமகிழ்ச்சி கொண்டிருந்தான். அப்பொழுது சீகாழியிலுள்ள **வனதேவதை** இந்திரனை அடைந்து வணங்கி, " அரசே! முன்னுள் இந்திராணியோடு வந்து தவம் செய்யும் போது இந்திராணியின் ஆபரணங்களை வைத்துக் கட்டி என்னிடம் நீ கொடுத்துவைத்த இம் மூட்டையைப் பெற்றுக்கொள்க " என்று கூறிக்கொடுத்து நின்றது. இந்திரன், அம் மூட்டையைப் பிரித்து அதனுள் இந்திராணியின் அணிகலன்கள் இருப்பதைக் கண்டான். அவற்றைக் கண்ட அளவில் இந்திரனுக்குக் காமநோய் உண்டாகியது. பின்பு, அம் மூட்டையைச் சேமித்துவைக்கும்படி தம் ஏவலர்க்குக் கட்டளையிட்டான். அவர்கள் அவ்வாறே செய்தார்கள். பின்னர் இந்திரன், வனதேவதைக்கு விடையளித்து, இரவு முழுவதும் ஒரு பூஞ்சோலையின் புறத்துள்ள ஒரு மணற்குன்றிலிருந்து காமநோயால் மிகத் துன்புற்றான்.

**காமத் தீமை**

கதிரவன் தோன்றியதும் இந்திரன் மனத்தெழுந்த காமநோயும் தணிந்தது. இந்திரன் பதைபதைத்து விரைந்து எழுந்து, மிகுந்த நாணமடைந்து, " அந்தோ! முருகக் கடவுளோடிருக்கும் இச்சமயத்தில் எனக்குக் காம நோய் வந்ததே " என்று வருந்தினன். காமம் எல்லாத் தீமைகளையும் செய்யும்; பெருமையையும் செல்வத்தையும் அழிக்கும்; நல்லறிவைப் போக்கி நரகத்தில் கொண்டு போய்ச்சேர்க்கும்; ஆதலால், ஆராயுமிடத்துக் காமத்தைக் காட்டிலும் பெரிய பகை வேறொன்றும் இல்லை.

தீமை உள்ளன யாவையும் தந்திடும் ; சிறப்பும்
தோமில் செல்வமும் கெடுக்கும்; நல்லுணர் வினைத்தொலைக்கும்;
ஏம நன்னெறி தடுத்திருள் உய்த்திடும் ; இதனால்
காமம் அன்றியே ஒருபகை உண்டுகொல் கருதில்.

இங்ஙனம் காமத்தின் தீமைகளைப் பற்றி உணர்ந்த இந்திரன் அங்கு நின்று நீங்கித் தேவர்கள் சூழ, முருகக்கடவுளின் திருமுன்பு அடைந்து பலமுறை வணங்கி எழுந்து, துதித்துக்கொண்டு நின்முன்.

**சிவபெருமானை முருகன் வழிபடுதல்**

முருகக்கடவுள் இந்திரனை நோக்கி, "நாம் சிவபெருமானை வழிபட விரும்புகிறோம் ; நீ அதற்கு வேண்டிய உபகரணங்கள் பலவற்றையும் வருவிக்கக் கடவாய்" என்று திருவாய்மலர்ந்தருளினார். உடனே இந்திரன் தன் ஏவலாளர் பலரைக்கொண்டு திருமஞ்சனம், நறுமலர், பீதாம்பரம், திருவமுது, தூபம், தீபம் முதலியவற்றை விரைவில் சேகரித்தான். ஆறுமுகக்கடவுள் தேவதச்சனைக் கொண்டு சிவபெருமானுக்கு ஒரு திருக்கோயில் அமைத்துச் சிவாகம விதிப்படி ஒரு சிவலிங்கம் தாபித்துப் பூசித்து வணங்கித் துதித்தார். அப்போது சிவபெருமான் உமாதேவியாரோடும் இடபத்தின்மீது எழுந்தருளிக் காட்சி தந்தார். முருகக்கடவுளும் இலட்சத்து ஒன்பது வீரர்களும் தேவர்கள் முதலியோரும் சிவபெருமானைத் தரிசித்து மெய்ம் மயிர்பொடிப்ப மனங்கசிந்து உருக மும்முறை வணங்கித் துதித்தார்கள். அவர்கள் யாவருக்கும் சிவபெருமான் திருவருள்புரிந்தார்; உலக முழுவதையும் ஓர் இறைப் பொழுதில் அழிக்கவல்ல **உருத்திர பாசுபதம்** என்னும் படைக்கலத்தை முருகப் பெருமானுக்கு அளித்து, "மைந்தனே ! இது நம்மிடத்தே தோன்றிய படைக்கலம் ; பிரம விஷ்ணுக்களும் இது பெற்றிலர்; இதனைத் தாங்கவல்லவர் நீ அன்றி வேறு ஒருவரும் இலர்; இது சூரபன்மனுடைய சேனையை அழிக்கவல்லது" என்று கூறி மறைந்தருளினார்.

திருவிருத்தம்–81
ஆகத் திருவிருத்தம்–1,725

——00——

## 25. சூரம் புகு படலம்

### பாலை நிலம் சோலைபோல் விளங்குதல்

சிவபெருமான் மறைந்த பிறகு, முருகக்கடவுள், தேர் மீதேறி வீரர்களும் தேவர்களும் பூதர்களும் சூழத் திருச் செய்ஞலூரை விட்டுப் புறப்பட்டுக் காவிரி நதியைக் கடந்து, **திருவிடைமருதூர், மாயூரம், திருப்பறியலூர்** முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, **திருவாரூரை** அடைந்தார்; வீதிவிடங்கப்பெருமானையும் வன்மீகநாதரையும் வணங்கித் துதித்துப் பாலைவனத்திலே சென்றார். கொல்லனது உலைக்களத்தில் பழுக்கக்காய்ச்சிய இரும்புபோல வெப்பம் மிகுந்திருந்த அப் பாலைவனத்தில் சிவகுமாரன் செல்லலும் அப்பாலைவனம் நறுமலர் மிகுந்த சோலைபோலக் குளிர்ச்சியுடையதாகமாறியது.

### பராசரர் புதல்வர்கள் முருகனை வணங்குதல்

முருகக்கடவுள், தன் வெம்மை நீங்கிய பாலைவனத்தில் சென்றுகொண்டிருக்கையில், **திருப்பரங்குன்றிலே** தவம் செய்து கொண்டிருந்த பராசர முனிவரின் குமாரர்களாகிய **தத்தர், அநந்தர், நந்தி, சதுர்முகர், சக்கிரபாணி, மாலி** என்னும் அறுவரும் ஞான நோக்கினால் அறிந்து குமரக்கடவுளை எதிர் கொண்டு வணங்கித் துதித்து, "தேவதேவரே! அடியவர்களாகிய எங்களுக்குத் திருவருள் செய்க" என்று வேண்டி நின்றார்கள்.

### இந்திரன் முனி குமாரர்களின் வரலாறு கூறுதல்

அப்போது இந்திரன் முருகப்பிரானை வணங்கித் துதித்துப் பராசர முனிவரின் புதல்வர் வரலாற்றைச் சொல்லலானான்: "இவர்கள் பராசர முனிவரின் குமாரர்கள். பிள்ளைப் பருவத்தில் சரவணப்பொய்கையில் அங்குள்ள மீன்கள் வருந்தித் துன்புறுமாறு நீரைக் கலக்கினார்கள். அதுபோழ்து அங்குமிங்கும் துள்ளிய மீன்களைக் கரையினில் தூக்கிப் போட்டார்கள். அப்போது அங்கு மத்தியான சந்தியை முடிக்கும் பொருட்டு வந்த பராசர முனிவர் தம் மைந்தர்களின் செய்கையைக் கண்டு சினந்தார்; "நீங்கள் மீன்களாய் இப்பொய்கையில் திரியக் கடவீர்

கள்'' என்று சபித்தார். அங்ஙனமே, அவர்கள் மீன் உருவம் அடைந்து பயந்து, "மீன் உருவம் நீங்குவது எந்நாள்? சொல்லி யருளவேண்டும்'' என்றார்கள். இப்பொய்கையில் ஆறுமுகக் கடவுள் தோன்றுவார். அவரை உமாதேவியார் எடுத்தருளும் போது திருமுலைப்பால் வெள்ளமாய்ப் பெருகும். அதனை நீங்கள் உண்ணும்போது பழைய உருவம் பெறுவீர்கள்'' என்று சொல் லிச் சென்றார். எண்ணற்ற காலம் அவர்கள் மீன்களாய்த் துன் புற்றார்கள். பிறகு, அப்பொய்கையில் தேவரீர் அவதரித்திருத்த லும், தேவரீரை உமாதேவியார் எடுத்தருளும்போது திருமுலை களினின்றும் வெள்ளமாய் ஓடிய பாலைப் பருகி மயக்கம் நீங்கி, பழைய வடிவமுற்றுச் சிவபெருமானின் திருவருளினாலே திருப் பரங்குன்றத்தில் சென்று தவம் செய்துகொண்டிருந்தார்கள். இப்பொழுது தேவரீர் இங்கு எழுந்தருளுவது கண்டு வந்தடைந் தார்கள்'' என்று விண்ணப்பம் செய்தான்.

முருகப்பிரான் அது கேட்டுப் பராசர முனிவருடைய புதல் வர்களை நோக்கி, "நீங்கள் நம்மோடு வாருங்கள்'' என்று திருவாய்மலர்ந்தருளினார். அவர்கள் அறுவரும் "எம்பெரு மானே! உம்மைச் சரணடைந்தோம்'' என்று வணங்கிப் பின் செல்ல, முருகப்பிரான் சுரத்தினைக் கடந்து சென்றார்.

திருவிருத்தம்–40

ஆகத் திருவிருத்தம்–1,765

——oo——

## 26. திருச்செந்திப் படலம்

**திருச்செங்குன்றூர்**

அறுமுகக்கடவுள் சுரத்தினைக் கடந்து **திருச்செங்குன்றூர்** என்னும் சிவஸ்தலத்தை அடைந்து, அங்கு எழுந்தருளிய சிவ பெருமானைத் தரிசித்தபின், கடற்கரையிலுள்ள அலைவாயாகிய **திருச்செந்தூரை** அடைந்தார். தேவதச்சனைக்கொண்டு திருக் கோயில் ஒன்று அமைக்கச்செய்தார். தேரினின்றும் இறங்கி, வீரர்களும், பூத சேனாதிபதிகளும், தேவர்களும் சூழ, அதனுள் அமைந்த திவ்விய சிங்காதனத்தின்மேல் வீற்றிருந்தருளினார்.

**முருகன் அவுணர்கள் வரலாறு வினவுதல்**

சண்முகக்கடவுள் இந்திரனைப் பார்த்து, "சூரபன்மன் முதலாயினோர் தோன்றியதும், தவம் செய்ததும், வரம் பெற்றதும், அரசு செய்ததும், அவர்கள் மாயமும், வலியும், இதுவரையிலும் இழைத்த துன்பமும் கூறுவாயாக" என்று பணித்தருளினார். இந்திரன் தேவகுருவாகிய **வியாழ பகவானை** நோக்கி, "நீர் இச்செய்திகளைக் கூறியருளும்" என வேண்டினான். வியாழ பகவான் முருகப்பிரான் திருவடிகளை வணங்கித் துதித்து, "எம்பெருமானே! நீர் எல்லா உயிர்களிலும் நிறைந்துள்ளீர்; எப்பொருளையும் அறிவீர்; உமது செயலையும் மாயத்தையும் அறிய வல்லார் யாவர்? அசுரர்களின் தன்மையை தேவரீர் வினவியது அறியாததை அறிந்துகொள்ளும் பொருட்டு அன்று; சிறியவர்களாகிய எங்கள் துன்பம் களைந்து இன்பம் அருளும் பொருட்டேயாகும்; ஆகையால், அவர்கள் தன்மைகள் யாவற்றையும் அடியவன் அறிந்தவாறே சொல்லுகிறேன்" என்று சொல்லலுற்றார்.

திருவிருத்தம்–18
ஆகத் திருவிருத்தம்–1,783

திருச்சிற்றம்பலம்

---

**உற்பத்தி காண்டம் முற்றிற்று**

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

# இரண்டாவது

# அசுர காண்டம்

### கடவுள் வாழ்த்து

ஊரி லான்குணங் குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரி லான்ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான் மேவிலான் தனக்கு
நேரி லான்உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்.

——oo——

## 1. மாயைப் படலம்

**மாயை பிறப்பு – சுக்கிரன் சூழ்ச்சி**

காசிபமுனிவருக்குப் புதல்வர்களாகிய அறுபத்தாறு கோடி அசுரர்களுக்கு அரசனாகிய **அசுரேந்திரன்** என்பவன், **மங்கல கேசி** என்னும் அரக்கியை மணம் புரிந்து **சுரசை** என்னும் ஒரு பெண்ணைப் பெற்றான். அவள் வளர்ந்து வருங்கால், அவளுக்கு அசுர குருவாகிய சுக்கிராசாரியர் மாயையின் கல்விகள் அனைத்தையும் கற்பித்தார். அக்கல்வியில் அவள்கொண்ட திறமை காரணமாக அவளுக்கு **மாயை** எனப் பெயரிட்டார். பின்பு, அவர் மாயையைநோக்கி "மாயையே! திருமாலாலும் இந்திரனாலும் முனிவர்களாலும் கணக்கற்ற அசுரர்கள் அழிந்தார்கள். உன் தந்தையும் வலியிழந்து ஒடுங்கினான். உன்னால்தான் அசுரர்களுக்கு மேன்மை உண்டாகவேண்டும். ஆதலால், நீ இலக்குமியும் வந்து வணங்கத்தக்க பேரழகுகொண்டு காசிப முனிவரிடம் சென்று, உன் வல்லபத்தைக்காட்டி ஆசை பூட்டி இரவிலே அவரோடு கூடி, அசுரர்களை உண்டாக்கி, அவர்கள் வளம்பெறச்

செய்யவேண்டிய யாகங்களையும், தவங்களையும் உணர்த்தி மீண்டு வருவாயாக'' என்று பணித்தருளினர். மாயை அதற்கு இசைந்து சுக்கிராச்சாரியரை வணங்கி விடைபெற்றுத் தன் தந்தையிடம் சென்றுதான் செய்யப்போகும் செயலைக் கூறி, அவர் அனுமதி பெற்று மகாமேருவுக்கு வடதிசையிலே காசிபமுனிவர் தவம் செய்து கொண்டிருந்த இடத்தை அடைந்தாள்.

**மாயை காசிபரை மயக்குதல்**

அங்கு, நீர் நிலைகளையும் பூஞ்சோலைகளையும் செய்குன்றுகளையும் மண்டபங்களையும் மலர்ப்படுக்கைகளையும் உண்டாக்கினள். அவற்றையெல்லாம் காசிப முனிவர் கண்ணுற்று, ''தேவலோகம் இங்கு இறங்கிவந்ததோ? அளகாபுரி இங்கு இறங்கிவந்ததோ'' என்று வியந்தார். ''இது யாருடைய செய்கையோ? அறிகிலேன். இக்கானகத்தில் எழுந்த இவ்வழகு நன்மைக்கோ? தீமைக்கோ? இதுவும் அறிகிலேன். இங்கே யாது நிகழ்ந்தாலும் நிகழட்டும்'' என்று சிந்தித்துப் பின்பு, ஒருவாறு மனம் தேர்ந்தவராய்த் தவம்புரியச் சென்றார். அப்போது மாயை பேரழகுகொண்டு ஒரு மணிக்குன்றின்மேல் தோன்றி நின்றாள். காசிப முனிவர் அவளைக்கண்டார்; அறிவு மயங்கி மையல் கொண்டார்; தவத்தை விடுத்து அவள் எதிரே சென்று, ''இலக்குமியினும் அழகிய மாதே! நின்வரவு நன்று நன்று; உன் குலம் யாது? உன் ஊர் யாது? உன் பெயர் யாது? உன் பெற்றோர் யாவர்? கூறுவாயாக'' என்று வினவினர். அது கேட்ட மாயை, ''முனிவரே, நீர் இவ்வாறு என்னிடத்தில் தனித்து வந்து வினவிநிற்றல் தகுதியன்று; தவத்தை விடுத்து, அறிவில்லாதவர்களைப்போல் பேசிக்கொண்டு என்னை அணுகி வருதல் நீதியன்று; உம் கடமைகளைச் செய்யப்போம்'' என்றாள். காசிபமுனிவர், ''மங்கையே! கேள்: வெகுகாலமாக உடல் வருந்தத் தவம்செய்தல் வேண்டியவற்றை அடைதற்பொருட்டேயாகும்; நான் தவம் செய்தது உன்னை அடைவதற்காகவே. நீயே இங்கு வந்துவிட்டாய். என் தவத்திற்குப் பயன் கிட்டிவிட்டது. இனித் தவம் எதற்கு? உன் ஊரும், பெயரும் பிறவும் இன்னும் கூறவில்லை. அவைகளைப் பின்னால் அறிந்துகொள்கிறேன். என்னைக் காம நோய் வருத்துகிறது. என்பால்

இரங்கி அருள்புரியவேண்டும்" என்று வேண்டிநின்றார். காசிப முனிவர் கூறிய மொழிகளைக்கேட்டு மாயை நகைத்தாள்; முனிவரை நோக்கி, "நீர் நெடுந்தவம் செய்தது என்பொருட்டா! இல்லையே; இங்ஙனம் பொய்கூறல் முறையா" என்றாள். காசிபர், "நான் பொய் சொல்லமாட்டேன்; நான் நெடுங்காலம் தவம் இயற்றியது முத்திபெற்றுய்யும் பொருட்டே ஆகும்; அதனை எனக்கு அருள்செய்ய நீ வந்திருக்கிறாய்; உன்னை அடைதலன்றோ முத்தியாகும்; இதுவன்றி எனக்கு வேறொரு பேறுமில்லை; ஆதலால், உன்னையே அடைந்தேன்" என்றார்.

**மையலைத் தீர்க்கும்படி காசிபர் வேண்டுதல்**

மாயை முனிவரை நோக்கி, "நான் உத்தர பூமியிலுள்ளேன்; மேருமலைக்குத் தெற்கிலுள்ள கங்கையில் நீராடச் செல்கிறேன்; நீர் இங்கு நில்லும்" என்றாள். அதனைக் கேட்ட காசிப முனிவர், "கங்கை முதலிய ஏழு நதிகளையும், சிவ ஸ்தலங்கள், விஷ்ணு ஸ்தலங்கள் யாவற்றையும் இங்கே ஒரு நொடிப்பொழுதில் வரவழைப்பேன்; நீ காண விரும்பினால் எல்லா உலகங்களையும் இங்கு அழைப்பேன்; மும்மூர்த்திகளையும் இங்கு வரும்படி செய்வேன்; நீ எதனை விரும்பினாலும் அதனை இமைப்பொழுதில் தருவேன்; புதல்வர்களை விரும்பினும் உண்டாக்குவேன்; அவர்களை ஒப்பற்றவர்களாக்கி வானுலகத்திற்கு அனுப்புவேன்; மேனகை, அரம்பை முதலியவர்கள் வந்து உனக்குக் குற்றேவல் புரியச் செய்வேன்; என் ஆவி உய்யும் வண்ணம், தையலே! என் மையலைத் தீர்த்தருளவேண்டும்" என்று வேண்டினார். மாயை புன்முறுவல் பூத்து, "நான் தனித்து இருப்பதனால் அன்றோ? இவ்வாறெல்லாம் பேசுகிறீர்! இனி, இவ்வாறு பேசுதலை விடும்; பெரியவராகிய உமக்கு இது தகுமா? நான் முன்னர் நினைத்த இடத்திற்குப் போகிறேன்; நீர் இங்கே தவம் புரிந்துகொண்டிரும்" என்று கூறி, கங்கை நதியிருக்கும் திசையை நோக்கி விரைந்து செல்பவள்போலச் சென்றாள். காசிபர் பின்தொடர்ந்தார். உடனே மாயை அரூபமெய்தி மறைந்து போனாள்.

திருவிருத்தம்–86

— oo —

## 2. காசிபன் புலம்புறு படலம்

**காசிபர் மாயையைக் காணுது வருந்துதல்**

மாயை மறைந்ததும் காசிப முனிவருக்குக் காமம் மிகுந்தது. அவர் அங்குள்ள மான், பிடி, புரு, மயில், அன்னம், குயில், வண்டு, மலர், தென்றல், தாடகம், வேங்கை மரம், செய்குன்று முதலியவைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே பார்த்துப் பலவாறு புலம்பினுர். அவர் நோக்கிய இடமெல்லாம் மாயையின் உருவெளித் தோற்றத்தையே கண்டார். அப்போது கதிரவன், காசிப முனிவரின் தவம் மாயையால் அழிந்ததைக் காணச் சகியாதவன்போல மேற்குக் கடலில் மறைந்தான். செக்கர் வானமும், அதன்பின் இருளும் வந்து கவிந்தன; தாமரை குவிந்தது; அல்லி மலர்ந்தது. காசிப முனிவர் தன் மனவலி குலைந்து, பெருமூச்செறிந்து அறிவு அழிந்து மாயையை நினைந்து,

முன்னஞ் செய்தீர் காதலை ; நோன்பை முதலோடும்
பின்னஞ் செய்தீர் ; மாரனை ஏவிப் பிழைசெய்தீர் ;
சின்னஞ் செய்தீர் நல்லுணர் வெல்லாம் ; சிறியேனுக்கு
இன்னஞ் செய்யும் பெற்றியும் உண்டேல் இசையீரே !

வேண்டேன் வேறோர் மாதரை ; நும்பால் வியன்மோகம்
பூண்டேன்; உம்மை மாயவர் என்னும் பொருள்கண்டேன்;
ஈண்டே சென்றீர் போல்கர வுற்றீர் ; எய்தீரேல்
மாண்டேன் ; இன்னே ஆருயிர் நிற்பான் வருவீரே!

என்று பன்முறை கூறித் துன்பக் கடலில் மூழ்கிச் செயலழிந்து நின்றுர். அப்போது காசிப முனிவர் காணும்படி மாயை வந்து அவர் முன்னே நின்றுள்.

திருவிருத்தம்–52
ஆகத் திருவிருத்தம்–138

——oo——

## 3. அசுரர் தோற்று படலம்

**மாயை உடன்படல்**

கருத்தழிந்து நின்ற காசிபர், மாயையைக் கண்டு மன மகிழ்ந்து அவள்முன் சென்று, “என்னை விரைந்து ஆட்கொள்

வாயாக'' என்று வேண்டி நின்றார். மாயை அவரை நோக்கி, ''நீர் ஒன்றுக்கும் அஞ்சாதொழிக; என் பேரழகுக்கு ஏற்ற வடிவம் இப்போது தாங்குக; பின்னர் நான் கொள்ளும் ஒவ்வொரு வடிவத்திற்கும் ஏற்ற வடிவம் உடனுக்குடன் கொண்டால் நான் உம்மைக் கூடுவேன்'' என்றாள். அம்மொழி கேட்டு மகிழ்ந்த காசிப முனிவர் அழகு மிகுந்த ஒரு தேவ வடிவங் கொண்டார். மாயை அவ்வடிவத்தைக் கண்டு வியந்து, நகை புரிந்து அவர் கரம் பற்றிக்கொண்டு ஒரு மணி மண்டபத்தினுள் புகுந்து, தன் ஆணையால் உண்டாகிய அழகிய சயனத்தின்மீது அமர்ந்தாள்.

**சூரபன்மன்**

மாயை, சூரியன் அஸ்தமித்த முதல் யாமத்தில் அவரோடு கூடினாள். உடனே **சூரபன்மன்** அவளிடத்துத் தோன்றினான். அப்போது அவ்விருவர் உடலில் தோன்றிய வியர்வையினின்றும் **முப்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள்** உதித்தார்கள். அவர்களைச் சூரபன்மனோடு அங்கேயே விடுத்து, மாயை காசிபமுனிவரோடு வேறிடம் சென்றாள்.

**சிங்கமுகாசுரன்**

இரண்டாம் யாமத்தில் வேறொரு பளிங்கு மண்டபத்தில் அவர்கள் சிங்கவடிவம் கொண்டு கூடினார்கள். ஆயிரஞ் சிங்க முகங்களும், இரண்டாயிரங் கைகளும் உடைய **சிங்கமுகாசுரன்** தோன்றினான். அக்கூடலின் போது அவர்கள் வியர்வையினின்றும் **நாற்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள்** சிங்கமுகங் கொண்டு உதித்தார்கள். அவர்களைச் சிங்கமுகாசுரனோடு அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு மாயை காசிபமுனிவரை அழைத்துக்கொண்டு வேறிடம் சென்றாள்.

**தாரகாசுரன்**

மூன்றாம் யாமத்தில் யானைவடிவம் கொண்டு மற்றோர் அழகிய மண்டபத்தில் அவர்கள் கூடினார்கள். நான்கு கோடுகள் பொருந்திய யானை முகங்கொண்ட **தாரகாசுரன்** தோன்றினான். அக்கூடலின்கண் அவர்கள் வியர்வையினின்றும் யானைமுகமுடைய **நாற்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள்** உதித்தார்கள்.

அவர்களைத் தாரகாசுரனோடு அவ்விடத்திலேயே விட்டு விட்டு மாயை காசிபமுனிவரை அழைத்துக் கொண்டு வேறிடம் சென்றாள்.

**அசமுகி**

நான்காம் யாமத்தில் ஆட்டின் வடிவங்கொண்டு பிறிதோர் சித்திரமண்டபத்தில் இருவரும்கூடினார்கள். அப்போது ஆட்டின் முகங்கொண்ட **அசமுகி** என்பவள் தோன்றினாள். அக்கூடலில் அவர்கள்வியர்வையினின்றும் **முப்பதினாயிரம்வெள்ளம் அசுரர்கள்** ஆட்டுக்கடா முகங்கொண்டு உதித்தார்கள். அவர்களை அசமுகியோடு அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு மாயை காசிப முனிவரை அழைத்துக்கொண்டு வேறிடம் சென்றாள்.

**அறுபதினாயிரம் வெள்ளம் அசுரர்கள்**

பிறகு **யாளி, புலி, குதிரை, மான், பசு, கரடி, பன்றி, கூளி** முதலிய வடிவங்களெல்லாங்கொண்டு பற்பல மண்டபங்களில் இருவரும் புகுந்து வைகறையில் கூடினார்கள். அப்போது **அறுபதினாயிரம் வெள்ளம் அசுரர்கள்** தோன்றினார்கள். அக்காலையில் கதிரவன் தோன்றினான். மாயையும் காசிப முனிவரும் தங்கள் தங்கள் பழைய வடிவம் கொண்டார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளாகிய **சூரபன்மன், சிங்கமுகாசுரன், தாரகாசுரன், அசமுகி** என்னும் நால்வரையும், **இரண்டு லட்சம் வெள்ளம் அசுரர்களையும்** அற்புதத்தோடு கண்டுமகிழ்ந்து அன்பு பாராட்டினர்.

திருவிருத்தம்–38

ஆகத் திருவிருத்தம்–176

—o—

## 4. காசிபனுபதேசப் படலம்

**சூரபன்மன் செய்யவேண்டுவன வினவுதல்**

சூரபன்மன், சிங்கமுகாசுரனும் தாரகாசுரனும் தன்னுடன் வரச்சென்று தன் தாய்தந்தையர்களாகிய மாயை காசிப முனிவர் ஆகிய இருவரையும் கண்டு வணங்கி, “ நாங்கள் செய்ய வேண்டியது என்ன ? சொல்லுங்கள் ” என்று கேட்டான்.

**காசிபர் அறிவுரை**

அது கேட்ட காசிபமுனிவர், "பிள்ளைகாள்! அறிவு மிகுந்த பெரியோர்கள் வேதாகமங்களால் உணர்த்தப்படும் **பதி, பசு, பாசம்** என்னும் மூன்று பொருள்களையே ஆராய்வார்கள். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் புரியும் சிவபெருமானே **பதி**யெனப்படும் பரம்பொருள் ஆவர். அவர் தன்மை உரைத்தற்குரியது அன்று. எண்ணற்ற உயிர்கள் ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களாகிய பாசங்களால் கட்டுண்டு கிடக்கின்றன. உயிர்கள் செய்யும் நன்மை தீமைகளுக்கு ஏற்பப் பிறந்தும் அழிந்தும் உழல்கின்றன. உயிரினங்கள் தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைத் தோற்றமுடையன; நிலைத்திராது அழியும் தன்மையன; கல்வி, வீரம், செல்வம், வலிமை முதலியனவும் அங்ஙனமே நீரிற் குமிழிபோல அழியத்தக்கன. ஆனால், அறம் ஒன்றே இம்மையிலும், மறுமையிலும் இன்பம் பயக்கும். அறம் செய்யும் உயிருக்கு அன்பும் அருளும் உண்டாகி அதன் மூலம் தவம் உண்டாகும். தவத்தினால் அவ்வுயிர் சிவபெருமானை அடைந்து மும்மலங்களினின்று நீங்கிப் பேரின்பத்தை அனுபவிக்கும். ஆதலால், தவத்தைப் போலச் சிறந்தது வேறு ஒன்றுமில்லை.

தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்;
அருளெனுங் குழவியும் அணையும்; ஆங்கவை
வருவழித் தவமெனும் மாட்சி எய்துமேல்
தெருளுறும்; அவ்வுயிர் சிவனைச் சேருமால்.

சேர்ந்துழிப் பிறவியுந் தீரும்; தொன்மையாய்ச்
சார்ந்திடு மூவகைத் தளையும் நீங்கிடும்;
பேர்ந்திடல் அரியதோர் பேரின் பந்தனை
ஆர்ந்திடும்; அதன்பரிசு அறைதற்கு ஏயுமோ?

**தவத்தின் மேன்மை**

தவம் செய்யாது பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யும் தீவினையாளர்கள் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் எய்த மாட்டார்கள். அவர்கள் மீண்டும் மீண்டும் பிறவித் துன்பத்தில்

அழுந்துவார்கள் ; இஃது அறிந்தும் உலகோர் நன்னெறியில் ஒழுகுகின்றாரில்லை. இம்மை மறுமை ஆகிய இருபிறப்பிலும் இன்பமளிக்கும் தவத்திற்கு ஒப்புமில்லை. அதைக் காட்டிலும் உயர்வானது வேறொன்றுமில்லை. தவத்திற்கு ஒப்பானது தவமேயாகும்.

தவந்தனின் மிக்கதொன் றில்லை; தாவில்சேர்த்
தவந்தனை நேர்வது தானும் இல்லையால்;
தவந்தனின் அரியதொன் றில்லை சாற்றிடில்;
தவந்தனக்கு ஒப்பது தவம தாகுமே.

ஆதலால், பிள்ளைகளே, நீங்கள் அறம் செய்து பாவத்தை விலக்குங்கள். சிவபெருமானைத் தியானித்துப் பெருந்தவம் புரியுங்கள். உடல் வாடத் தவம் செய்வோர் உலகம் வியக்க வாழ்வர். இக்கருத்துக்கள் உங்கள் மனத்தில் திடமாக நிற்கும் பொருட்டு உங்களுக்கு ஒரு கதை சொல்வேன் ” என்று காசிப முனிவர் சொல்லலுற்றார்.

திருவிருத்தம்–25
ஆகத் திருவிருத்தம்–201

—— oo ——

## 5. மார்க்கண்டேயப் படலம்

### மிருக கண்டுயர்

**கடகம்** என்னும் நகரில் **குச்சகர்** என்னும் அந்தணர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவருடைய குமாரர் **கௌச்சிகர்** என்பவர் ; அவர் வேதங்களில் மிக வல்லவர் ; பிறவிக் கடல் நீந்தக் கருதிச் சிவபெருமானை எண்ணித் தவம்புரியத் துணிந்தார், அவர் ஒரு தடாகக் கரையை அடைந்து உண்டி உறக்கம் விடுத்து, மௌனமாகி, ஆதீண்டு குற்றி (பசுக்கள் உராயும் நீண்ட கல்)போல அசைவற்று, ஐந்தெழுத்தை மனத்தில் தியானித்துத் தவம் செய்தார். அவ்வழியே செல்லும் மிருகங்கள் தங்கள் தங்கள் உடம்பில் ஏற்படும் தினவை அவர் உடலில் உராய்ந்து போக்கிக்கொண்டு போகும். அதனைக் கௌச்சிக முனிவர் அறியார். அவ்வருந்தவத்தை அறிந்த திருமால், தேவர்கள் சூழ

அங்கு வந்தார்; கௌச்சிகர் உடலைத் தம் திருக்கரத்தினால் தடவி, "முனிவனே! உன் பெயர் **மிருக கண்டுயன்**" என்றார். உடனே மிருக கண்டுயர் எழுந்துநின்று திருமாலைத் தொழ, திருமால் அவரை நோக்கி, "உன்னிடத்தே சிவபெருமானது பெருங்கருணை பெருகுக; நீ முன்செய்த தீவினைகளெல்லாம் உன்னைவிட்டு நீங்குக" என்று கூறித் தேவர்களோடு மறைந் தருளினார்.

**குச்சகர் மிருக கண்டுயர்க்கு இல்லறத்தை வற்புறுத்தல்**

மிருக கண்டுயர், திருமால் மறைந்தபின், தன் தந்தையா ரிடம் சென்று அவரை வணங்கி நிகழ்ந்தனவெல்லாம் கூறினார். தன் புதல்வன் கூறியவைகேட்டுப் பலவாறு புகழ்ந்து மகிழ்ந்த குச்சகர், "மைந்தனே! நீ வேதங்கள் கூறும் பிரமசரியம், கிரு கத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் நான்கனுள் இதுகாறும் பிரமசரியத்தை மேற்கொண்டிருந்தாய்; இனிக் கிருகத்தாச்சிரமத்தை மேற்கொள்ளவேண்டும்" என்றார்.

**மிருக கண்டுயர் மறுமொழி**

மிருக கண்டுயர் அதுகேட்டுத் தன் தந்தையாரைப் பார்த்து, "தந்தையே! முன்பே தொடர்ந்த பிறவித் தளையை அறுத் துக்கொள்ள விரும்பும் நான் பின்னும் ஒரு பாசப் பிணிப்பை ஏற்றுக்கொண்டால் எவ்வாறு சிவபெருமானை அடைவேன்? பிறவித் துன்பத்தை எப்படிப் போக்குவேன்? தவ ஒழுக்கத் தைப் பின்பற்றாது இல்வாழ்க்கையில் ஈடுபடுவது, நல்ல நீர் இருக்கச் சேற்றிலே மூழ்கி அழுக்கைப் போக்கிக்கொள்ள முயற் சிப்பதை ஒக்கும். பூமியிலுள்ள பெரும் பாவங்களையே நான் முகன் பெண்ணுருவமாகப் படைத்தான். பெண்ணாசை பூமி யில் துன்பத்தைக் கொடுத்து நரகத்தில் சேர்க்கும். ஒருவர் உள்ளத்தில் பெண்ணாசை புகுந்துவிட்டால் பின்னர் நீங்குதல் அரிது. பெண் வலையில் அகப்பட்டு மயங்கியவர்களே பிறவித் துன்பத்தில் உழல்பவர்கள் ஆவர். ஆனால், கற்புடை மகளிர் உலகத்தில் இல்லையோ எனின், தத்தம் கணவர் வழி வழுவா தொழுகும் மகளிர் சிலர் இருக்கிறார்கள். ஒரு மரத்தில் பற்றி எரியும் தீ தான் பற்றல் கூடாத பலவற்றினும் போய்ப் பரவு

வதுபோல, ஒரு பெண்ணிடத்தே எழுந்த காமம் அது வளர்ந்து தான் பற்றல் கூடாத பலரிடத்தும் போய்ப் பரவும். பேரழகுடைய மகளிர் பலர் புடைசூழ இருந்தும், இந்திரன் அகலிகைமேல் விருப்பம் கொண்டு பெரும் பழி எய்தினன். பிரமன் திலோத்தமைமேல் மையல்கொண்டு நான்கு முகம் உடையவனுனன். மற்றைத் தேவர்களும் முனிவர்களும் காமத்தினுல் அடைந்த துன்பங்களுக்கு அளவில்லை. பிறவித் துன்பத்தைப் போக்க விரும்பிய நான், அத்துன்பத்தை மேன் மேலும் வளர்க்கும் இயல்புடைய பெண்கள் கூட்டத்தை விரும்பேன்; இல்வாழ்க்கைச் சிறையில் வீழ்ந்து இடர்ப்படேன்; அழியாச் செல்வமெனச் சிறப்பித்துக் கூறப்படும் தவத்தையே செய்து இன்பம் எய்துவேன்" என்றார்.

### குச்சகர் இல்லறம் பற்றி மீண்டும் இயம்புதல்

குச்சக முனிவர் அம்மொழி கேட்டு, மிருக கண்டூயர் தவத்தில் பெருவிருப்பம் கொண்டிருத்தலை அறிந்து மனம் வருந்தினார். மிருக கண்டூயரை நோக்கி, "மகனே! மங்கையை மணந்து மக்கட்பேறு அடைந்த பின்பன்றோ? தவம் புரிந்து வீடுபேறு அடைதல் வேண்டும். காமம் நுகரும் பொருட்டு, உன்னை இல்லறம் நடாத்தும்படி நான் சொல்லவில்லை. இறந்த முன்னோர்களின் துன்பத்தையும், நரகமடைதலையும் நீக்குதற் பொருட்டு மக்கட்பேற்றை அடைய ஒரு கன்னியை மணஞ் செய்துகொள்ளுதல் வேண்டும். ஒரு மலையின்மீது ஏற விரும்புவோர் அதன் சாரலை அடைந்து படிப்படியாகவே ஏற வேண்டும்; அதுபோல நீ இல்லறம் நடாத்திய பிறகே துறவறம் புகவேண்டும். இல்லற வொழுக்கத்தில் தவறுண்டாயின் அதற்குப் பரிகாரம் உண்டு; தவ வொழுக்கத்தில் தவறுண்டாயின் அதனினின்றும் மீளுதல் அரிது. அது மலை யுச்சியினின்றும் தவறுதல்போலாம். ஆதலால், உன் முன்னோர்களைப்போலவே நீயும் இல்லறம் நடத்துவாயாக. சிவபெருமான் உமாதேவியாரோடு கூடி, திருமால் பிரமன் முதலிய தேவர்களும், முனிவர்களும், மற்றை யாவரும் மனைவியரோடு இல்லறத் தொழுகும் வண்ணம் பணித்தருளினர். அச்சிவபெருமான் நிலைநாட்டிய வரம்பை நீ கடக்கலாகாது. உலகியலுக்கு மாறுபடாதே.

வசிட்ட முனிவர் அருந்ததியை மணந்தும் மேன்மையோடு விளங்கவில்லையா? நற்குண, நற்செயல்கள் நிரம்பிய மகளிரை மணந்தால் அறம் பெருகித் தவம் ஓங்கும். இம்மையிலும் மறுமையிலும் இன்பம் கிட்டும். கொண்ட கொழுநனைத் தெய்வமென்று வழிபடும் கற்புடைய மகளிர் சொற்படியே தெய்வமும் நிற்கும்; மாரியும் பெய்யும்; அவர்களுக்கு ஆண்களும் நிகரல்லர். துறவிகளுக்கு உணவு ஆடை முதலியன அளித்தும், இறந்தோர் கடனாற்றியும், அறம் பல புரிந்தும், விருந்தோம்பி இல்வாழ்வதைக் காட்டிலும் மானுடப் பிறவியால் ஆகும் பயன் வேறு யாது உளது?

துறந்தவர்கள் வேண்டியதோர் துப்புரவு நல்கி
இறந்தவர்கள் காமுறும் இருங்கடன் இயற்றி
அறம்பலவும் ஆற்றிவிருந் தோம்புமுறை யல்லால்
பிறந்தநெறி யாலுளதோர் பேருதவி யாதோ?

இல்லறமாகிய நல்லறத்தை நடாத்தியபின் துறவறத்தை ஏற்பதே சிறந்தது. அங்ஙனம் செய்தால் உனக்குக் குற்றம் ஒன்றும் வாராது. மறுத்துப் பேசாதே; இது நமது ஆணை" என்றார்.

**மிருக கண்டூயர் இணங்குதல்**

அதுகேட்ட மிருக கண்டூயர், "என் தந்தை இல்லறம் வேத நெறி என்றார்; சிவபெருமானின் பணியுமாம் என்றார்; இனிச் சொல்வதென்ன இருக்கிறது?" என்று நினைந்து வருந்தி, "தத்தம் முதுபெருங் குரவர்கள் கடலில் வீழப் பணித்தாலும் அன்போடும் அது செய்தலே புதல்வர் கடனாகும். நானும் இதனை மறுக்காமல் செய்வேன். தாய், தந்தை, குரு முதலியோர் சொல்லை மறுத்தவரும், வேத நெறியை மாற்றினவரும் செந்தழல்வாய் நரகத்தில் வீழ்வர்.

தந்தைசொல் மறுப்பவர்கள் தாயுரை தடுப்போர்
அந்தமறு தேசிகர்தம் ஆணையை இகந்தோர்
வந்தனைசெய் வேதநெறி மாற்றினர்கள் மாறாச்
செந்தழல வாயநிர யத்தினிடை சேர்வார்.

ஆதலால், நான் தந்தை சொல்லை விலக்குதல் முறையன்று" என்று துணிவுகொண்டு தந்தையாகிய குச்சகரை வணங்கி, "தந்தையே! நீர் இட்ட கட்டளைப்படியே இல்லறத்தில் நிற்பேன்; கோபங்கொள்ளாதொழிக. தன் சொல்லுக்கு மாறுபட்ட மனையாளோடு வாழ்தலைக் காட்டிலும், நரகத்தில் வீழ்தலே நன்று. அப்பெண்டிரோடு வாழும் ஆடவனுக்கு அவளையன்றி வேறோர் கூற்றுவனும், நோயும் உண்டோ?

தன்னுரைகொ ளாதமனை வாழ்க்கையது தன்னில்
வென்நிரயம் வீழும்வகை யேவிழுமி தம்மா;
அன்னவரொடு மேவியமர் ஆடவர் தமக்குப்
பின்னுமொரு கூற்றுமுள தோபிணியும் உண்டோ?

ஆதலால், அடியேன் கூறும் இலக்கணங்கள் நிறைந்த கன்னி கிடைக்கப் பெற்றால் அவளை நான் மணந்துகொள்வேன்" என்றார்.

### குச்சக முனிவர் மகிழ்ச்சி

குச்சக முனிவர் அது கேட்டு மனமகிழ்ந்து, "மகனே! நீ என் சொல்லைத் தட்டாது ஏற்றதால் நானும் உய்ந்தேன். உன் தாயும் உய்ந்தாள். என் சுற்றங்களும் தவங்களும் பிறவும் உய்ந்தன. உன் விருப்பம்போல் நீ கூறும் இலக்கணப்படி அமைந்த பெண்ணையே தேடி உனக்குத் திருமணம் செய்வேன். அப்படிச் செய்யாவிட்டால் என் தவம் குன்றுவதாகுக" என்று சூளுரை பகர்ந்தார்.

### மணத்திற்குரிய மங்கையர் தன்மை

மிருக கண்டுயர் குச்சக முனிவரின் திருவடிகளை வணங்கி, "தந்தையே! திருமணம் செய்வதற்குரிய பெண் எப்படியிருக்க வேண்டுமென்று கூறுகிறேன்: தாய் தந்தையை இழந்தவர் ஆகார். சகோதரர், சகோதரியின்றித் தனித்துப் பிறந்தவர்களும் ஆகார். சுற்றம் அற்றவர்களும், அழகு இல்லாதவர்களும், உயர் குடியில் பிறவாதவர்களும் ஆகார். நோயாளிகளான தாய் தந்தையர்களுக்குப் பிறந்தவர்களும், விலங்குகளுக்குரிய பெயரைப் பூண்டவர்களும், புறச்சமயப் படுகுழியில்

வீழ்ந்தவர்களும் ஆகார். நோயுடையவர், ஊமையர், முடவர், செவிடர், பிறர் வீட்டிற்குச் செல்வோர் ஆகிய இவர்களும் ஆகார். பொது மகளிர் போன்று விழிப்பவர், ஆடவரை நோக்கித் தெருவாயிலில் நிற்பவர் ஆகியஇவர்களும் உகந்தவர் அல்லர். பேருண்டி கொள்பவர், பேருறக்கம் உடையவர், வயதில் மூத்தோர் ஆகியஇவர்களும் ஆகார். ஒரே கோத்திரத்தில் பிறந்தவர், நெட்டையர், குட்டையர், பருத்தவர், மெலிந்தவர் ஆகியோரும் விலக்கத்தக்கவர். கரு நிறத்தவர், பொன்னிறத்தவர், பசப்பையுடையவர், குருதிநிறம் கொண்டவர், விளர்ப்பையுடையவர் ஆகிய இவர்களும் ஆகார். நாணமற்றவர், நகைப்பவர், வலிமிகுந்தவர், பெற்ருேர் சொல் கேளாதவர், சினமுடையவர், கூத்து முதலியன பார்க்க விரும்புபவர், முதலியவர்களையும் விலக்கவேண்டும். சிவபிரானிடத்து அன்பில்லாதவர், முனிவர்களை இகழ்பவர், அருள் இல்லாதவர், தீக் குணமுடையவர், ஒத்த குணமில்லாதவர், நிறையில்லாதவர், தங்குல நெறியில் நில்லாதவர் முதலியவர்களும் ஆகார். தேவரைக் கல் என்பவர், இடிபோலப் பேசுபவர், பூனைக்கண்ணுடையவர், நரைத்தவர், பெருங்கூந்தலுடையவர் ஆகிய இவர்களும் ஆகார். சிறுத்த கண்ணினர், நீண்ட மூக்குடையவர், நீண்ட பற்களையுடையவர், வளைந்த கழுத்தினர் ஆகிய இவர்களும் நல்லவரல்லர். மயிர் பரந்த கால்கள் உடையவர், அன்னம் போன்ற மென்நடையில்லாதவர், விரல்பூமியில் தோயாதவர், வாய், உள்ளங்கை, நகங்கள், உள்ளங்கால்கள் ஆகிய இவற்றில் சிவப்பில்லாதவர்களும் சிறந்தவர் ஆகார். இத்தகைய குற்றங்கள் இல்லாத கன்னிகை இருந்தால் மணம் புரிந்துகொள்வேன். ஆதலால், நீர் இவற்றை நன்கு ஆராய்ந்து திருமணம் செய்து அளிக்கவேண்டுகிறேன்" என்று கூறினர். தந்தையும் 'அவ்வாறே செய்வேன்' என்ருர்.

### மணப்பெண் தேடுதல்

சிறந்த உடல் இலக்கணம் முதலியன பொருந்திய ஒரு கன்னியைக் குச்சகர் தேடித் திரிந்தார். அவரை எதிர்ப்பட்ட சில முனிவர்கள் மூலம் சோழ தேசத்தில் **அநாமயம்** என்னும் வனத்திலுள்ள **உசத்திய முனிவர்** என்பவரிடத்தில் ஒரு பெண் இருப்பதாக அறிந்து, அவ்விடம் சென்றடைந்தார். உசத்திய

முனிவர் குச்சக முனிவரை எதிர்கொண்டு வணங்கித் தமது இருப்பிடத்திற்கு அழைத்துக் கொண்டுபோய், ஆசனத்திருத்தித் தம் மனைவியையும், புதல்வியையும் அங்கே அழைத்துக் குச்சக முனிவரை வணங்கச் செய்தார்; பிறகு, அவரை விதிப்படி பூசித்து அமுது செய்வித்தார். அதன்பின்பு, உசத்திய முனிவர் குச்சகரை நோக்கி, "சுவாமீ! நீர் அடியவனிடத்து எழுந்தருளியது என்ன?" என்று வினவினர். குச்சக முனிவர் மனமகிழ்ந்து, "நீர் பெருந்தவம் செய்து பெற்ற புதல்வியை என் புதல்வனுக்கு மணம் பேசும் பொருட்டு வந்தேன்" என்ருர். உசத்திய முனிவர் என் புதல்வியாகிய **விருத்தையை** உம்முடைய புதல்வனுக்கு மணம் செய்து கொடுக்க நான் என்ன தவம் செய்தேனே? என்று கூறித் தன் உடன்பாட்டைத் தெரிவித்தார். குச்சக முனிவரை அங்கேயே சில நாள் இருத்தி வழிபட்டார்.

**விருந்தை மரணம் அடைதல்**

ஒருநாள் விருத்தை, தன் தோழியர்களோடு காட்டாற்றிற்குச் சென்று, நீராடித் திரும்புகையில் வழியிலுள்ள சோலையிலே புகுந்து மலர் கொய்து விளையாடினுள். பிறகு அனைவரும் திரும்பினர். அப்போது மதயானை ஒன்று எதிரே வந்தது. அதைக் கண்டோர் யாவரும் பயந்து நாலா பக்கமும் சிதறித் தனித் தனியே விரைந்து ஓடினுர்கள்; விருத்தையும் கண்டு பயந்து மிக விரைந்து ஓடினுள். ஓடியபோது புதர் மூடிய கிணறு ஒன்றில் தவறி வீழ்ந்து இறந்தாள். யானை வேறு பக்கம் திரும்பிச் சென்றது. பின்பு, ஓடிய தோழியர்கள் ஒருங்குகூடி விருத்தையைத் தேடினுர்கள்; காணுமல் துன்பம் அடைந்தார்கள். அச் செய்தியை விருத்தையின் தாயாகிய **மங்கலையிடம்** சென்று தெரிவித்தார்கள். உடனே, மங்கலை கண்களில் நீர்வார வயிற்றில் அடித்துக்கொண்டு தன் கணவனிடம் போய்த் தெரிவித்தாள். உசத்திய முனிவர் அது கேட்டு வருந்தி, விருத்தையைப் பெண்களுடன் தேடியடையும்போது, ஒரு வழியில் அவளுடைய ஆபரணம் சிந்திக்கிடக்கக் கண்டு, அவ்வழியே சென்ருர். அவ்வழி ஒரு கிணற்றில் கொண்டுபோய் விட, அங்கு விருத்தை இறந்து கிடக்கக் கண்டார். கிணற்றில் குதித்து விருத்தையை வெளியே தூக்கி வந்து, கரையில் சேர்த்து அழுதார். அவள் மீது அவள் தாயும் மற்றைய பெண்களும் வீழ்ந்து புலம்பினுர்கள்.

**விருத்தை உடலை எண்ணெயில் இட்டுக் காத்தல்**

குச்சக முனிவர் நிகழ்ந்தவற்றை யெல்லாம் அறிந்து, அவ்விடம் சென்று அழுகின்ற பெண்களை நோக்கி, "இக்கன்னியை நான் உயிர்ப்பித்துத் தருகிறேன், அழாதீர்கள்" என்று கூறித் தேற்றி, மற்ருேரிடத்திருந்த உசத்திய முனிவரை அடைந்து, "கல்வியில்லாதவர், சிறியோர், முதியோர், பாலர், மகளிர் போன்று நீர் துன்புறுவதில் பயன் இல்லை; ஊழ் வினையின் முறையை அறிகிலீர்; துன்பத்தை விடும். நான் இக்கன்னியை நாளை உயிர்ப்பித்து என் மகனுக்கு மணம் செய்விப்பேன். விதியின் செயலை நான் ஞான நோக்கினுல் அறிந்தேன். இவள் உடலை எண்ணெய்த் தோணியில் இட்டு வைத்திரும். நான் தவம் செய்து உயிரை மீட்டுத் தருவேன்" என்ருர். அது கேட்ட உசத்திய முனிவர் அங்ஙனமே விருத்தையின் உடலை எண்ணெயிலிட்டு வைத்தார்.

**மதயானை குச்சகரைத் தூக்கிச் செல்லுதல்**

குச்சக முனிவர் ஒரு பொய்கையை அடைந்து அதனில் மூழ்கி நின்று, கூற்றுவனை நோக்கித்தவம் புரிந்தார். அப்போது முன்பு பெண்கள் பயந்து ஓடுமாறு செய்த அம்மதயானை மீண்டு வந்து, அப்பொய்கையில் இறங்கிப் புழைக்கையினுலே துழாவி அங்கு நின்ற குச்சகமுனிவரைப் பற்றித் தன் பிடரிமேல் தூக்கிக் கொண்டு நெடுந்தூரம் சென்றது. குச்சக முனிவர் அவ் யானை தன்னை அவ்வாறு தூக்கிச் செல்லும் காரணம் யாது என்று எண்ணித் தன் ஞான நோக்கத்தினுல், அதன் ஊழ்வினையை அறிந்து நோக்கினுர்.

**யானையின் முற்பிறவி-தருமதத்தன்-இரசவாதி**

"கலிங்க நாட்டில் **அரிபுரம்** என்னும் ஓர் ஊரில் வணிகர் குலத்தில் **தேவதத்தன்** என்னும் வணிகன் ஒருவன் இருந்தான். அவனுக்குத் **தருமதத்தன்** என்ற ஒரு புதல்வன் இருந்தான். அவன் மிக்க செல்வமுடையவன்; அறம் பல புரிந்து பெரும் புகழ் பெற்றவன். அவன் தாயும் தந்தையும் இறந்தனர். அவன் துயரம் மிகுந்து தனித்தவனுக இருந்தான். அப்போது, காதில் குண்டலங்கள் திகழ, மார்பினில் முப்புரி நூல் விளங்க, திரு

நீறும் உருத்திராக்கமும் அணிந்து, கையில் பிரம்பேந்தி ஓர் **இரசவாதி** தருமதத்தன் வீட்டிற்கு வந்தான். அவனைத் தருமதத்தன் கண்டு வணங்கித் தன் மனையினுள் அழைத்துச் சென்று அமுது படைத்து உபசரித்து முகமன் கூறி, "சுவாமீ! நீர் இங்கு வந்த காரணம் யாதோ" என்றான். இரசவாதி, "சிவபிரான் அருளிச் செய்த வித்தை யொன்று நம்பால் உள்ளது; அஃது எவருக்கும் சொல்லத் தக்கதன்று; குருபத்தி யுடையார்க்கு மட்டும் சொல்லத்தக்கது; நெஞ்சில் சிறிதும் குற்றமில்லாத உனக்கு நாம் அதனை உணர்த்துவோம்; சிவபிரானிடத்துத் தோன்றிய இரசம் உண்டு; அதன் மூலம் வேண்டிய பொன்னைச் செய்வோம். அது நமக்கு அரியது அன்று; கரிய இரும்பை நாகமாக்குவோம்; மீட்டும் அதனைப் பொன்னாக்குவோம்; மேரு மலையையும், கைலாச மலையையும் யாவரும் பார்க்கும்படி காட்டுவோம்; ஈயத்தையும் இரசத்தையும் வெள்ளி யாக்குவோம்; வங்கத்தைப் பொன்னாக்குவோம்; இரும்பில் செம்புண்டாக்குவோம்; கணக்கற்ற பிருதிவி அண்டங்களை யெல்லாம் பொன் மயமாக்குவோம்; நமது ஆற்றலைக் கூறவேண்டுமாயின் பல ஆண்டுகள் வேண்டும்; ஒரு பொன்னைக் கோடி பொன்னாக்குவோம்; கோடி பொன்னை மலைபோலக் கோடி கோடி பொன்னாக்குவோம். உன் பொருள் அத்தனையும் தருவாயாகில் உன் வீட்டில் அப் பொருளை வைத்தற்கு இடம் இல்லை எனும்படி செய்வோம்" என்றான்.

அது கேட்ட தருமதத்தன் வணங்கி, முன்னே தன்னிடத்துள்ள பொருளையும், பிறகு தன்னால் தேடப்பட்ட பொருளையும் பெட்டிகளில் உள்ள ஆபரணங்களையும் ஒன்றாகத் திரட்டி, இரசவாதிமுன் கொண்டுபோய் வைத்தான். இரசவாதி அவற்றைப் பார்த்து, ஏளனம் தோன்ற நகைத்து, "ஓகோ! வணிகர் திலகமாகிய உன்னிடம் உள்ள பொருள் இதுதானோ? இப் பொருள் நமது வித்தைக்குச் சிறிதும் போதாது. நம்முடைய உருக்குமுகத்தில் சிந்தும் அளவுக்குக்கூட உன் பொருள் ஈடாக மாட்டாது. நீ நம் பின் வந்தால் உனக்கு அளவுகடந்த பொருள் தருவோம்; இவற்றை நீயே வைத்துக்கொள்வாயாக" என்றான். அப்பொழுது தருமதத்தன் "அடிகாள்! கோபிக்க வேண்டாம்; நீர் வேண்டிய பொருள் முழுவதும் இன்னும் கொணர்வேன்"

என்று கூறித் தன்பாலுள்ள நிலம், இரத்தினம், ஆபரணங்கள், ஆடு, மாடுகள் முதலியவற்றை விற்றான்; மதிமயங்கி அறத்தையும் விற்றான்; அவ்வாறு விற்றபொருள் யாவையும் சேர்த்து இரசவாதிமுன் கொண்டுபோய் வைத்து நின்றான். இரசவாதி மனமகிழ்ந்து அவற்றையெல்லாம் உருக்கிப் பொன்னாக்கினான்; இரசம்விட்டு அம்மியில் வைத்து உரைத்து அதனை உருட்டி மருந்திட்டு ஒரு மட்குகையிலிட்டு, சீலை மண் செய்து நெருப்பிலே நூற்றெட்டுக் குக்குட புடம்போட்டு எடுத்தான்; பின்னர் தருமதத்தனை, நோக்கி, "மிகவும் மாற்று வந்தது; இனி ஒரு வராகியிலே (ஒரு மருந்திலே) பழுக்கும்; காற்றில்லாத ஓர் உறையுளைக் காட்டு" என்றான். தருமதத்தன் ஒரு அறையைக் காட்டலும், இரசவாதி அங்குச்சென்று விறகிட்டுச் சுடலைத் தீக்கொண்டு மூட்டிப் புகைப்பித்தான். உறையுள் முழுவதும் புகை கவ்வியது. தருமதத்தன் புகைதாங்காது கண்களில் நீர் வழிய, சரீரம் வெதும்பி வியர்க்க, வெளியே செல்லமுடியாமல் ஊமைபோல ஒன்றும் பேசாது சும்மா உட்கார்ந்திருந்தான். அப்போது, இரசவாதி பொற்குகையை எடுத்துத் தன் ஆடையில் மெதுவாக வைத்து மறைத்துக்கொண்டான்; பிறகு அதுபோலத் தன்னிடத்திருந்த வேறொரு குகையைப் பக்கத்தில் வைத்துப் புகையைத் தணித்தான்; பிறகு அக்குகையினைத் தருமதத்தன் கையினால் எடுத்து நெருப்பின்மேல் வைக்கச்சொன்னான். தருமதத்தனும் அவ்வாறே செய்தான். இரசவாதி தருமதத்தனை நோக்கி, "நீ உண்ணாது, ஒருவரோடும் பேசாது, பெண்களை விரும்பாது, மூன்றுநாள் நம்மையே சிந்தித்துக்கொண்டிரு; நாம் காளிகோயில் சென்று ஒரு வேள்வி புரிந்து நாலாம் நாள் இங்கு வருவோம்" என்றான். தருமதத்தன், "அவ்வாறே செய்க" என்று கூறி, இரசவாதியை மும்முறை வணங்கி அவன் பின் செல்லாது நின்றான். இரசவாதி அங்கு நின்றும் விரைந்து வெகு தூரம் சென்று தன் வேடத்தைக் கலைத்து வேறோர் இடத்தை அடைந்தான்.

தருமதத்தன் மூன்று நாள் இரசவாதி சொல்லிய விதிப்படி இருந்தான். ஆனால், இரசவாதி கூறியபடி திரும்பிவரவில்லை. தருமதத்தன் மிகக் கவலையோடு காளி கோயிலிலும், பிற இடங்களிலும் சென்று தேடினான்; எங்கும் காணாது வருந்தித் தன்

வீட்டுக்கு வந்து முன்வைத்த குகையை எடுத்துப் பார்த்தான்; அஃது இரும்பாக இருக்கக்கண்டு மிகுந்த துயரமடைந்து விழுந்து இறந்துபோனான். அவன் அறத்தை விற்ற தீவினையினால் யானையாகப் பிறந்து திரிந்து உழல்கின்றான்'' என்று குச்சக முனிவர் யானையின் முன்னைய வரலாற்றை அறிந்தார்.

**யானை நற்பேறு அடைதல்**

குச்சக முனிவர் அந்த யானையை முன்னைய வடிவு அடையுமாறு செய்யக் கருதினார்; ''நான் முன்பு செய்த தவத்திலே ஒருநாள் தவம் இந்த யானைக்கு எய்துவதாக'' என்றார். உடனே யானை, தன் வடிவத்தை ஒழித்துத் தேவ வடிவங்கொண்ட தருமதத்தன் ஆகியது. தருமதத்தன், தேவ விமானம் ஏறிக் குச்சக முனிவரை வணங்கி விண்ணுலகடைந்தான்.

**விருத்தையை உயிர்பெறச் செய்தல்**

அதன் பின்பு, குச்சக முனிவர் முன்போல் பொய்கையை அடைந்து, இயமனை எண்ணித் தவம் புரியலானார். இயமன் தோன்றி, ''முனிவரே! நாம் உம் தவம் கண்டு மகிழ்ந்தோம்; நீர் வேண்டும் வரம் யாது'' என்று வினவினான். குச்சக முனிவர் வணங்கி, ''உசத்திய முனிவரின் புதல்வியாகிய விருத்தையை என் மகனுக்கு மணம்பேச வந்தேன்; அவள் நேற்று இறந்தனள்; அவளை முன்போலத் தந்தருளும்'' என்றார். கூற்றுவன் தன் தூதன் ஒருவனை நோக்கி, ''இம்முனிவர் வேண்டிய கன்னியினது உயிரை நீ விரைவில் இங்குக் கொண்டுவந்து விடுவாயாக'' என்று கட்டளையிட்டு மறைந்தான். தூதன் அவ்வுயிரை விருத்தையின் உடலில் கொண்டுவந்து விடுத்தான். விருத்தை துயில் எழுந்ததுபோல் எழுந்தாள். அவள் தாய் மங்கலை அவளை எடுத்துத் தழுவினாள். தந்தையாகிய உசத்தியர் அவளை எடுத்தணைத்து, உச்சிமோந்து, தன் தொடையின்மீது அமர்த்தி நிகழ்ந்தனவற்றைக் கேட்க, விருத்தை நிகழ்ந்த யாவற்றையும் விளக்கமாகச் சொன்னாள்.

**உசத்தியர் நன்றி தெரிவித்தல்**

உசத்தியர் தன் மகள் கூறியவற்றைக் கேட்டுக்கொண்டு மகிழ்ந்திருக்கும்போது குச்சக முனிவர் வந்தார். உசத்தியர்

தன் மனைவியோடும் புதல்வியோடும் சுற்றத்தோடும் அவரை எதிர்கொண்டழைத்து வணங்கித் துதித்தார் ; "என் உயிரும், என் மனைவியின் உயிரும், சுற்றத்தார் நண்பர் இவர்களின் உயிரும் நிற்கும் வண்ணம் என் விருத்தையின் உயிரை மீட்டருளினீர். நீர் உயிர்களைக் காக்கும் கடவுள் என்றே என் மனம் எண்ணுகிறது" என்று பலவாறு முகமன் கூறிப் போற்றிப் புகழ்ந்தார்; அவரை அழைத்துக்கொண்டு தம் ஆச்ரமத்தை அடைந்து, அங்கே சில நாள் தங்கியிருக்கச் செய்தார்; பிறகு, "உம் மகனை இங்கே அழைத்து வாரும்; என் மகளைத் திருமணம் செய்து தருகிறேன்" என்றார். குச்சக முனிவர் தம் இருப்பிடம் சென்று மிருக கண்டுயரை அழைத்து வந்தார்.

### மிருக கண்டுயர்—விருத்தை திருமணம்

மிருக கண்டுயருக்கும் விருத்தைக்கும் ஒரு நன்னாளில் திருமணம் விதி முறைப்படி நிறைவேறியது. அவர்கள் இருவரும் அன்புகொண்டு இல்லறம் நடாத்தி வந்தனர். அதனைக் குச்சகர் பலநாள் இருந்து பார்த்து மகிழ்ந்தபின், தவம் செய்ய எண்ணி உத்தர தேசம் சென்றார். மிருக கண்டுயர் தமது பெருந்தவ வலிமையால் **மிருகண்டு** என்னும் ஒரு மகனைப் பெற்றார்; மிருகண்டுக்கு வயது ஆறு நிரம்பியதும் உபநயனம் செய்வித்தார். பின்பு, மிருக கண்டுயர் தம் தந்தையாரைப்போலத் தாமும் தவம் செய்யப் புறப்பட்டுச் சென்றார்.

### மிருகண்டு முனிவர் தவம்

மிருகண்டு முனிவர், பிரமசரியம் முடித்தபின் **முற்கல முனிவருடைய** புதல்வியாகிய **மருத்துவதியைத்** திருமணம் புரிந்து இல்லறம் நடாத்தி வந்தார்; புத்திரப்பேறு கிட்டாமையால் மனம் வருந்தித் தம் மனைவியோடும் சுற்றத்தாரோடும் அநாமயவனத்தை விட்டுக் காசியை அடைந்தார்; கங்கையில் நீராடி, **மணிகன்னிகை** என்னும் திருக்கோயிலிற் சென்று, சிவபெருமானை வணங்கித் துதித்து வழிபட்டார்; பிறகு, அத்திருக்கோயிலுக்கு அருகிலிருந்து சிவபெருமானை நோக்கி ஓராண்டு மக்கட்பேற்றை விரும்பிக் கடுந்தவம் புரிந்தார்.

**சிவபெருமான் அருள்புரிதல்**

சிவபெருமான் மிருகண்டு முனிவருக்குக் காட்சி தந்து, "நீ யாது விரும்பினுய்" என்று வினவியருளினுர். மிருகண்டு, "எம்பெருமானே! அடியேன் மக்கட்பேற்றை விரும்பினேன்; தந்தருளுக" என்று வேண்டினுர். சிவபெருமான் திருநகை புரிந்து, "தீக்குணமே உடையவனுய், அறிவு சிறிதும் இல்லாதவனுய், ஊமையும் செவிடும் முடமும் குருடுமாய், வயது நூறினும் நோயால் வருந்துவோனுய் உள்ள ஒரு புதல்வன் வேண்டுமா? அழகு மிகுந்தவனுய், உறுப்புக் குறைவில்லாதவனுய், நோயற்றவனுய், பல்கலை பயின்றவனுய், நம்பால் அன்புடையவனுய், பதினுறு வயது மாத்திரம் உள்ளவனுய் உள்ள ஒரு புதல்வன் வேண்டுமா? உன் எண்ணம் யாது? சொல்" என்று திருவாய்மலர்ந்தருளினுர். மிருகண்டு நன்கு அவற்றை ஆராய்ந்து, "பெருங் கருணைநிதியே! வயது குறுகினுலும், அறிவுடையோனுய், உடலில் குற்றம் எதுவும் இல்லாதவனுய், உம்மிடத்து அன்புடையவனுய் உள்ள ஒரு புதல்வனையே விரும்பினேன்; தந்தருள்க" என்று வேண்டினுர். சிவபெருமான், "உனக்குச் சற்புத்திரனைத் தந்தோம்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினுர். மிருகண்டு முனிவர் சிவபெருமானைத் துதித்துக் கொண்டு மனமகிழ்ந்து வணங்கித் தம் சுற்றத்தாரோடும் காசியில்தானே தங்கியிருந்தார்.

**மார்க்கண்டேயர் பிறப்பு**

மிருகண்டு முனிவரின் மனைவியாகிய மருத்துவதி கருவுற்றுள். மிருகண்டு அதுகண்டு மகிழ்ந்து, சிவனடியாருக்கு வேண்டுவன அளித்தார். மாதந்தோறும் செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் செய்துவந்தார். பங்குனி மாதத்தில், இரேவதி நக்ஷத்திரத்தில், மிதுன லக்கினத்தில், சுக்கிரனும் குருவும் உச்சநிலையிலிருக்க, சூரியன் முதலிய மற்றைக் கிரகங்கள் நட்பும் ஆட்சியும் கொண்டிருக்கும் நன்னுளில், மருத்துவதி ஒரு சற்புத்திரனைப் பெற்றெடுத்தாள். அப்போது, சுற்றத்தார் இரத்தினங்களையும், பொன்னையும், கலவைச் சந்தனத்தையும், கஸ்தூரிச் சேற்றையும் வாரி வாரி இறைத்தனர்; தேவதுந்துபிகள் முழங்கின; மும்மூர்த்திகள் தவிர மற்றை யாவரும் ஆசி கூறினுர்கள். மிரு

கண்டு முனிவர் கங்கையில் நீராடி, தானம் வழங்கினர். நான்முகன் வந்து அம்மகவுக்கு '**மார்க்கண்டேயர்**' எனப் பெயரிட்டழைத்தார். மார்க்கண்டேயர் வளர்பிறை மதியென வளர்ந்து வந்தார். அவ்வவ் வாண்டுகளில் செய்யவேண்டிய சடங்குகள் எல்லாம் செம்மையாக நிறைவேறின. ஐந்தாவது ஆண்டு நிரம்பியதும், மார்க்கண்டேயருக்கு உபநயனம் நடைபெற்றது. அவர் வேதம் முதலிய கலைகளைப் பயின்றார்; வேதங்களின் மெய்ப்பொருளை உணர்ந்து சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று துணிந்தார்; சிவபெருமானையும், அவர் அடியார்களையும், முனிவர்களையும், முதுபெருங்குரவர்களையும் சிரத்தையுடன் வழிபட்டு வந்தார்; பிரமசரியத்தை மேற்கொண்டு வழுவாது ஒழுகி வந்தார்.

**பெற்றோர் வருந்துதல்**

இங்ஙனம் பதினாறு ஆண்டுகள் சென்றன. தாய் தந்தையர் அதனை உணர்ந்து, தங்கள் புதல்வனை நோக்கித் தனித்தனியே இருந்து, துயரக் கடலில் ஆழ்ந்து வருந்தினார்கள். மார்க்கண்டேயர் தாய் தந்தையர் பாதங்களை வணங்கி, "நீங்கள் துன்பமுறும் காரணம் யாது? நிகழ்ந்ததைச் சொல்லுங்கள்" என்று வினவினர். அதற்கு அவர்கள், "மைந்தனே! முன்னாளிலே சிவபெருமான் உனக்கு வயது பதினாறு என்று அருளிச்செய்தார்; அப்பதினாறு வயது உனக்கு ஆகிவிட்டது; அதனால் துன்பமுறுகின்றோம்" என்று தெரிவித்தார்கள். மார்க்கண்டேயர் அது கேட்டு, "நீங்கள் சிறிதும் வருந்த வேண்டாம்; உயிருக்குயிராய் எங்கும் நிறைந்த சிவபெருமானைப் பூசித்து, கூற்றுவனின் ஆற்றலை மாற்றி, உங்களை விரைந்து வந்தடைவேன்; நீங்கள் இங்கேயே இருங்கள்" என்று சொல்லி அவர்களைத் தேற்றி அவர்கள் பாதங்களை வணங்கிச் சென்றார். பெற்றோர்கள் முன்னை வருத்தம் நீங்கி மனமகிழ்ந்திருந்தார்கள்.

**கூற்றுவனின் ஆற்றலை மாற்றும் தவம்**

மார்க்கண்டேயர் சிவபெருமானின் திருவருளைத் துணையாகக் கொண்டு, மணிகன்னிகை என்னும் திருக்கோயிலை அடைந்தார்; அன்பு பெருக்கெடுத்து, என்புகள் நெக்கு நெக்கு

உருக, கண்களில் ஆனந்த அருவி வழிய, சிவபெருமானை வலஞ் செய்து வணங்கித் தென்றிசையின் ஓரிடத்து இருந்துகொண்டு சிவலிங்கம் தாபித்துப் பலநாள் அன்போடு பூசித்துத் துதித்து அருந்தவம் செய்தார். பத்தி வலையிற் படுவோனாகிய சிவபெருமான் தோன்றி, "நீ குற்றமில்லாது செய்யும் பூசையைக் கண்டு மகிழ்ந்தோம்; உனக்கு வேண்டுவது யாது?" என்று திருவாய் மலர்ந்தருளினார். மார்க்கண்டேயர், எம்பெருமான் திருவடிகளைப் பலவாறு துதித்து, "சிறியேன் கூற்றுவன் கையுறாமல் உய்யத் தேவரீர் அருளல் வேண்டும்" என விண்ணப்பம் செய்தார். சிவபெருமான், "இயமனுக்கு அஞ்சற்க; அஞ்சற்க" என்று அபயம் தந்தருளி, மார்க்கண்டேயர் தலையின்மேல் தம் திருவடிகளிரண்டையும் வைத்தருளினார். மார்க்கண்டேயர், "இனி, உய்ந்தேன்; உய்ந்தேன்" என மனமகிழ்ந்து கூறச் சிவபெருமான் சிவலிங்கத்துள் மறைந்தருளினார்.

### எமதூதன் மார்க்கண்டேயரை அணுகுதல்

பின்பு, மார்க்கண்டேயருக்கு வயது பதினாறு நிரம்பியது. ஒரு இயமதூதன் தோன்றி, மார்க்கண்டேயரின் சிவபூசையைக் கண்டான்; பயந்து கூற்றுவன்பால் சென்று, "அரசே! காசியில் மார்க்கண்டேயன்என்னும் ஓர் அந்தணன் இருக்கிறான்; அவன் சிவபெருமானிடத்து அன்பு நிறைந்தவன்; சிவபெருமானின் திருவடிகள்பட்ட சிரத்தினை உடையவன்; எப்போதும் சிவபெருமான் புகழினையே பாடித் துதிப்பவன்; அப்பாலனை அணுக அஞ்சினேன்; அவன் முன்னும் சென்றிலேன்; அவன் சிவபெருமானிடத்து இருக்கின்றனன்" என்று கூறினான். அது கேட்டு இயமன் மிகக் கோபம் கொண்டான்; பெருமூச்செறிந்தான். "அச்சிறுவன், முடிவில்லாத முழுமுதற் கடவுளோ?" என்று கூறித் தன் கணக்கர்களை அழைத்து, "மார்க்கண்டேயனின் வயதெல்லை யாது" என வினவினான்.

### மார்க்கண்டேயரைக் காலன் நெருங்குதல்

**சித்திர குத்தர்** என்னும் கணக்கர்கள் இருவரும் இயமனை நோக்கி, "அரசே! சிவபெருமான் முன்னாளில் அளித்த வயது பதினாறு. அவ்வெல்லை சென்றுவிட்டது. அவன் செய்த சிவ

பூசை அறத்தின்பாலது. பெருந்தவமுடைய முனிவர்களாயினும், பெருஞ்செல்வர்களாயினும், அறிஞர்களாயினும், வலியர்களாயினும் விதியை வெல்லுதல் முடியுமோ? அச்சிறுவன் சுவர்க்கம் செல்லத் தகுதி உடையவன்; நரகத்துன்பத்தினின்று தப்பினுன்; இதுவே அவன் நிலைமையாகும்'' என்றுர்கள். இயமன் கோபம் கொண்டு, தன் அமைச்சனுகிய காலனை விளித்து, மார்க்கண்டேயனைக்கொண்டுவரக் கட்டளையிட்டான். காலன் காசியை அடைந்து, மார்க்கண்டேயரின் சிவபூசையையும் குறிப்பையும் கண்டு, அவர் கண்ணுக்குத் தெரியும் வண்ணம் சென்று, அவரை வணங்கினுன். மார்க்கண்டேயர் அவனை யாரென வினவினர். காலன் மார்க்கண்டேயரைப் பார்த்து, ''யான் கூற்றுவனுக்கு அடிமை செய்கின்ற காலன். இறைவன் உமக்கு அருளிய பதினறு ஆண்டு நேற்றே கடந்துவிட்டது. இனி நீர் தென்புலத்திற்கு வருதல் வேண்டும். இது தடுக்கக்கூடியதன்று. படைத்தல், காத்தல்கள் போல, இயமன் அழித்தலும் சிவபெருமான் இட்ட கட்டளையே ஆகும். இயமன், நீர் சிவபூசை செய்வது கேட்டு மனமகிழ்ந்து உம்மைக்காண விரும்புகின்ருன். அவன், அழித்தல் தொழில் உடையவன். ஆதலால், அவனைக் கொடியவன் என்பர் அறிவிலார். இயமபுரம் நீர் வந்தால், அவன் உம்மை எதிர் கொண்டழைப்பான். இன்மொழி பகர்ந்து, இந்திர பதவி அளிப்பான்; வாரும்'' என்று அழைத்தான். அது கேட்ட மார்க்கண்டேயன், ''சிவபெருமானை வழிபடுபவர்கள் இந்திரலோகத்தையும் விரும்பமாட்டார்கள்; உன்னேடு இயமலோகத்துக்கும் வரமாட்டார்கள்; சிவலோகமே செல்வர். நான் சிவனடித் தொண்டன். நான் இயமலோகம் வரமாட்டேன்; திருமால் நான்முகன் பதங்களையும் விரும்ப மாட்டேன். விரைந்து போய்விடு; போய்விடு'' என்று கூறினர். அதுகேட்ட காலன் விரைந்து இயமனை அடைந்து வணங்கி நிகழ்ந்தன யாவும் கூறினுன்.

**மார்க்கண்டேயரை நோக்கிக் கூற்றுவன் புறப்படுதல்**

அப்போது கூற்றுவன் பதைத்தெழுந்து எருமைக் கடாவின்மேல் ஏறி, தன் வீரர்கள் சூழ, பாசமும், தண்டமும், சூலமும் ஏந்தி, சிவந்த தலைமயிரும், கரிய சரீரமும், கோபத்தினுல்

நெருப்புப்போலச் சொலிக்கும் கண்களுமாய் மார்க்கண்டேயர் பால்வந்து அணுகினன். இயமன் வந்து அணுகியதை உணர்ந்த மார்க்கண்டேயர் எம்பெருமான் திருவடிகளை வணங்கித் துதித்தார். அப்போது இயமன் மார்க்கண்டேயரை நோக்கி, "மைந்தனே, நீ என்ன நினைந்தாய்! ஊழ்வினையையும் சிவபெருமானின் திருவாக்கையும் மாற்றமுடியுமா? இறப்பும், பிறப்பும் யாவருக்கும் பொதுவாகும். நீ செய்யும் சிவபூசை உன் பாவத்தைப் போக்குமேயன்றி, நான் வீசும் பாசத்தை விலக்கவும் வல்லதோ! என் ஆணையால் இறந்த இந்திரர்கள், தேவர்கள், அசுரர்கள் எண்ணற்றவர்கள் ஆவர். நான்முகனுக்கும், திருமாலுக்கும், எனக்கும் பிறப்பும் இறப்பும் உண்டு. நான் உன் உயிரைக் கொண்டு போகாது இன்று மீளேன். இது திண்ணம். ஆதலால், நீ என்பின் வருக" என்றான்.

**மார்க்கண்டேயர் - இயமன்**

மார்க்கண்டேயர் அதுகேட்டு, "கூற்றுவனே! கேள்: முடிவு என்பது சிவனடியார்களுக்கு இல்லை. உண்டாயினும் உன்னுலகத்திற்கு வாரார்கள். திருக்கைலாயமே செல்வார்கள். அவர்கள் இல்லறத்தி லிருந்தாலும் துறவறத்தி லிருந்தாலும் முத்தியடைவார்கள். அவர்கள் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் உண்மையினை உணர்ந்தவர்கள்; பிறவித் துன்பத்தினின்றும் நீங்கியவர்கள். அவர்களின் திருவடிகளைச் சேருதலே பரபதம் சேர்தல். சிவபெருமானுக்கும் அவருடைய அடியார்கட்கும் வேற்றுமை கருதுதல் அறியாமையே என்று வேதங்கள் கூறுகின்றன. சிவனடியார்கள் செம்மையான சிந்தையுடையவர்கள்; பற்றற்றவர்கள்; தம்மையும் துறந்து நிற்பவர்கள்; நன்மை என்பதே இயல்பாக அமையப் பெற்றவர்கள்; விண்ணுலகத்தையும் விரும்பமாட்டார்கள். அவர்களுடைய ஆற்றலை நீ சிறிதும் அறிந்திலை. உலகத்தாரைப்போல் அவர்களையும் நீ எண்ணிவிட்டாய். அச்சிவனடியார்களை அடைந்த என் உயிருக்கும் தீங்கு செய்ய நினைந்தாய். இங்ஙனம் நீ நினைந்தது உன் உயிரும் உன் தலைமையும் அழிவதற்குக் காரணமாகும். இனி, மேலே நிகழப் போவதை நீ அறியாய். ஏ! மூடனே!! நீ இங்கு நில்லாமல் ஓடிப்போ" என்றுகூறினர்.

## இயமன் எருமைக் கடாவுடன் இறத்தல்

மார்க்கண்டேயர் கூறியவைகளைக் கேட்ட இயமன் பெருங் கோபங்கொண்டு, "வலியில்லாதவனே! நீ என்னைப் பயமுறுத்துகிறாய். நான் உன் உயிரைக்கொண்டு போகமாட்டேன் என்று நினைந்தாய்போலும்" என்று கூறி, இடிபோல ஆரவாரம் செய்தான். மார்க்கண்டேயன் முன்சென்று பாசத்தை வீசி இழுத்தான். அப்போது மார்க்கண்டேய முனிவர் எம்பெருமானைத் துதித்துக்கொண்டு அவருடைய திருவடி நீழலைப் பிரியாது நின்றார். தேவர்கள், "இனி மார்க்கண்டேயன் இறந்தான்" என்று மயங்கினார்கள். இயமன் கைப்பாசம் தம் கழுத்தில் உற்றும், சிறிதும் துன்பமுறாத மார்க்கண்டேய முனிவர் முன்பு முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான், "மகனே! உன் துன்பத்தைத் தீர்க்கின்றோம்; நீ அஞ்சற்க, அஞ்சற்க" என்று திருவாய்மலர்ந்துகொண்டு இலிங்கத்தினின்று தோன்றியருளினார். இயமன் மதம் மிகுந்து நம் மகனின் உயிரைக் கொண்டுபோக நினைந்தான் என்று பெருங்கோபம்கொண்டு தமது இடது பாதத்தால் இயமனைச் சிறிது உதைத்தருளினார். உதைபட்ட இயமன் கரிய மேகத்தைப்போலப் பூமியில் வீழ்ந்து இறந்தான். கொடுந்தொழிலைச் செய்கின்றவர் அழிந்துபோகுங் காலத்தில் அவர்களைச் சேர்ந்தவர்களும் அழிந்துபோவதுபோல, இயமன் பக்கத்தில் நின்ற சேனைகளும், அவன் வாகனமாகிய எருமைக்கடாவும் ஏங்கி வீழ்ந்து இறந்தன.

## சிவபெருமான் அருள்புரிதல்

மார்க்கண்டேயர், கூற்றுவன் கீழே விழும்போது, சிவபெருமானைப் போற்றியவாறு நின்றார். சிவபெருமான் மார்க்கண்டேயரை நோக்கி, "மகனே! நீ மெய்யன்போடு நம்மைப் பூசை செய்தமையால் நாம் உனக்கு முடிவில்லாத ஆயுளைத் தந்தோம்" என்று திருவாய்மலர்ந்து சிவலிங்கத்துள் மறைந்தருளினார்.

## மார்க்கண்டேயர் சிரஞ்சீவியாக இருத்தல்

மார்க்கண்டேயர், எம்பெருமான் திருவுருவத்தை அன்போடு தியானித்து, மணிகன்னிகை என்னும் கோயிலுள் சென்று இறை

வனை வணங்கினார்; பின்னர் தம்மைக் குறித்து வருந்திக்கொண் டிருந்த தாய் தந்தையர்களைக் கண்டு அவர்கள் துன்பத்தைப் போக்கினார். பிறகு அத் திருநகரத்திலேயே சிலநாள் தங்கி யிருந்து பின்பு அங்கு நின்று நீங்கிப் பல சிவஸ்தலங்களைப் பக்தி யுடன் வழிபட்டுச் சீவன்முத்தராயினார். அவர் விண்ணுலகத்தி லும் உளர்; மண்ணுலகத்திலும் உளர்; தம்மை விரும்பி வழிபடு வோர் கருத்திலும் கண்ணிலும் உளர். அவர்கண்ட பிரமகற் பங்களும் விட்டுணுகற்பங்களும் எண்ணில்லாதனவாகும்.

**திருமால் முதலியோர் இறைவனை வேண்டுதல்**

மார்க்கண்டேயரை எதிர்த்துக் கூற்றுவன் இறந்தமையால் நிலவுலகிலுள்ள உயிர்களெல்லாம் நெடுங்காலம் இறப்பில்லாமல் வளர்ந்து பெருகின. அதனால், பூமிதேவி பாரம் தாங்காது வருந்தித் திருமாலிடம் சென்று முறையிட்டுக்கொண்டாள். திருமால், நான்முகன் இந்திரன் முதலிய தேவர்களை அழைத் துக்கொண்டு திருக்கயிலாயம் சென்று சிவபெருமானை அன் போடு வணங்கித் துதித்துநின்றார். சிவபெருமான் கருணை கூர்ந்து திருமாலைப் பார்த்து, 'நீங்கள் வந்த காரணம் யாது?' என வினவினார். அதற்குத் திருமால், "எம்பெருமானே! இங் குள்ள நான்முகன் முதலிய தேவர்கள் யாவரும் தங்கள் தங்கள் கடமைகளை வழுவாது செய்து வருகின்றார்கள். அடியவனும் உமது திருவருளால் என் காவற்றொழிலை வழுவாது செய்து கொண்டிருக்கின்றேன். ஆனால், இயமன் உமது திருவருளை நினை யாமையினால் இறந்துபோனான். அதனால் அழித்தல் தொழில் புரிவாரின்றி, பூமியிலுள்ள உயிர்கள் பிறந்து பிறந்து பின் இற வாமலே பெருகிவிட்டன. பூமிதேவி அவற்றைத் தாங்க இய லாது வருந்துகிறாள். இங்ஙனம் உயிர்கள் பெருகிக்கொண்டே போனால் என் காவற்றொழில் யாதாகுமோ? அழித்தல் தொழி லுக்குத் தலைவர் ஒருவரும் இல்லை. நீர் கோபியாது, கூற்றுவன் செய்த தீமையைப் பொறுத்தருளி, அவனை உயிர்ப்பித்தருள வேண்டும்" என்று வணங்கி வேண்டினார்.

**கூற்றுவன் உயிர்பெற்றெழுதல்**

அப்போது, சிவபெருமான் திருவருள் சுரந்து, "ஓ இய மனே! எழும்பக் கடவாய்" என்றார். அவ்வளவில் கூற்றுவன்

உயிர் பெற்றெழுந்து, கைலாசபதியை வணங்கி, "எம்பெருமானே! உம்முடைய திருவடி பட்டதனால் அடியேன் உய்ந்தேன்" என்று வணங்கி நின்றான். சிவபெருமான் கூற்றுவனை நோக்கி, "கூற்றுவனே! நம் சின்னங்களாகிய விபூதி உருத்திராக்கங்களை அணிந்துகொண்டு நம்பால் அன்பு பூண்டொழுகும் அடியவரிடம் 'நான் இயமன்' என்று கூறி நீ செல்லாதே! நம் அடியவர்களை மனிதர்கள் என்று எண்ணாதே! அவர்களை நாமென்றே நினைப்பாயாக! அவர்களைக் கண்டால் அவர்களுடைய கால்களில் வீழ்ந்து வணங்கக் கடவாய்; மற்றவர்களை அவரவர்கள் செய்யும் புண்ணிய பாவங்களுக்கு ஏற்பச் சுவர்க்கத்தையும், நரகத்தையும் அடையச் செய்வாய்" என்று திருவாய் மலர்ந்து, "நீ உன் படைஞரோடு செல்வாயாக" என்று பணித்தருளினார்.

போற்றிடு தருமனைப் புராரி நோக்கியே
சாற்றிடு கின்றனன் தயங்கு கண்டிகை
நீற்றொடு புனைந்தெமை நினையும் நீரர்பால்
கூற்றுவன் யானெனக் குறுகு வாயலை.

நண்ணருங் கதிபெறு நமது தொண்டரை
மண்ணுல கத்தவர் மனித ரேயென
எண்ணலை; அவர்தமை யாமென்று எண்ணுதி;
கண்ணுறின் அன்னவர் கழலின் வீழ்தியால்.

கண்ணிய மனமொழி காயம் ஈறதா
எண்ணிய கருவிகள் இடைய தாகவே
புண்ணிய மொடுபவம் புரியும் ஏனையர்
விண்ணொடு நிரயமேல் மேவச் செய்திநீ.

முன் இறந்த எருமைக்கடாவும், சேனைகளும் உயிர்பெற்றெழுந்தன. கூற்றுவன் சிவபெருமானை வணங்கிக்கொண்டு, தன் படைஞரோடு புறப்பட்டுத் தென்புலத்தை அடைந்து முன்போல் தன் அரசியலை நடாத்துவானாயினான். திருமால், நான்முகன், தேவர்கள் முதலியோர் சிவபெருமானை வணங்கித் துதித்து விடை பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் இருப்பிடம் அடைந்தார்கள். கூற்றுவன், மார்க்கண்டேயர் சரித்திரத்தைக்

கூறுவோர்முன் செல்லும்போதெல்லாம், "முன்போல் இன்ன மும் ஏதாவது விளையுமோ" என்று அஞ்சுவான்.

**தவத்தின் மேன்மை**

"தவத்தின் வலிமையால், குச்சக முனிவர் இறந்த பெண்ணை மீண்டும் உயிர்ப்பிக்கச் செய்தார்; மதயானையைத் தேவ வடிவம் அடையச் செய்து விண்ணுலகம் அடையச் செய்தார். அவர் மகனாகிய மிருக கண்டூய முனிவர், திருமால் நான்முகன் முதலியோர் புகழும் பெருமை பெற்றார். மார்க்கண்டேயர் ஊழையும் வென்று, கூற்றுவன் வலியை அகற்றி, எக்காலத்தும் இறவாத சிரஞ்சீவித் தன்மையினைப் பெற்றார். இதுபோல இன்னும் தவத்தின் பெருமைகளைச் சொல்வேன்" என்று காசிப முனிவர் கூறலுற்றார்.

திருவிருத்தம்–285
ஆகத் திருவிருத்தம்–486

——oo——

## 6. மாயை உபதேசப் படலம்

**மாயையும் அவள் மக்களும்**

காசிப முனிவர் இவ்வாறு தவத்தின் பெருமையை எடுத்துச் சொல்லவும், மாயை நகைத்தாள்; காசிப முனிவரை நோக்கி, "முனிவரரே! நீர் உண்மையாகிய உறுதியையே சொன்னீர். ஆயினும், முத்தி அடைய விரும்பும் முனிவர்களுக்கு அல்லாமல் நம் சிறுவர்களுக்கு இவ்வாறு சொல்லலாமா? இவர்கள் பெரும் செல்வத்தையும் வெற்றியையும் இன்பத்தையும் நீண்ட ஆயுளையும் பெரும் புகழையும் நல்ல வாழ்வினையும் அடையவேண்டும். அவற்றையெல்லாம் விரைவில் பெறுவதற்கு வழிகாட்டும்" என்று கூறினாள். காசிபர் மாயையை நோக்கி, "இதுவா உன் எண்ணம்? நீயே அதனை அவர்களுக்குச் சொல்வாயாக" என்றார். மாயை தன் புதல்வர்களை நோக்கி, "சிறுவர்களே! முனிவரர் கூறியது உண்மையே; ஆயினும், அஃது உங்களுக்கு ஏற்றது அன்று; நான் சொல்கிறேன்; கேளுங்கள்" என்று சொல்வாளாயினாள்.

**மாயை அறிவுரை - செல்வத்தின் சிறப்பு**

"அறிவினையுடைய உயிர்கள் பிறவியால் அடையும் பயன் கல்வியும் செல்வமும் ஆகும். அவற்றுள், ஏதேனும் ஒன்றை அடையாத பிறப்புப் பேய்ப் பிறப்பை ஒக்கும். ஆராய்ந்து பார்க்கும்போது கல்வியைக் காட்டிலும் செல்வமே சிறந்தது. கலைகள் எல்லாவற்றையும் கற்றவராயினும், வறுமை அடைந்தால், செல்வம் பெறவேண்டித் தம் பகைவரையும் பணிந்து நிற்பர்.

சொற்றரு கலையெலாந் தொடர்ந்து பற்பகல்
கற்றவர் ஆயினும் கழிநி ரப்பினால்
அற்றவர் ஆவரேல் ஆக்கம் வேண்டியே
பற்றலர் தம்மையும் பணிந்து நிற்பரால்.

கல்வியையும் பலவகைச் சிறப்புக்களையும் அடைவதற்குச் செல்வமே காரணம். புகழையும் அறத்தையும் வெற்றியையும், மேன்மையையும் செல்வமே உண்டாக்கவல்லது. ஆதலால், செல்வமே சிறந்தது. அச்செல்வத்தை அடைய ஊக்கம் உடையவராதல் வேண்டும். ஊக்கம் உண்டானால் பெருஞ்செல்வம் உண்டாகும். அச்செல்வம் பலவகைப்படும். அவை யெல்லாவற்றையும் நீங்கள் பெறவேண்டும். நீங்கள் எங்களிடத்து நேற்றிரவு பிறந்தமையால் அசுரர்களானீர்கள். உங்களுக்குத் தேவர்கள் யாவரும் பகைவர்கள். தேவர்கள் தங்கள் முயற்சியினால் தலைமை பெற்றார்கள். நீங்கள் அவர்களைக் காட்டிலும் சிறப்புப் பெறவேண்டும். நீங்கள் மேன்மை அடைதற்கு நான் வழி சொல்லுகிறேன்.

**வேள்வி செய்யும் முறையினை மாயை கூறல்**

"இத்திசை ஆலந்தீவு ஆகும். இதற்கு நேரே நீங்கள் வடதிசைநோக்கிச்செல்லுங்கள். அவ்விடத்திற்கு **உத்தரபூமி** என்று பெயர். அஃது அசுரர்கள் தவம் புரிதற்கு ஏற்றது. அங்குக் குண்டம் முதலியன செய்து, நச்சுச் சமித்துக்கள் இட்டுத் தீயுண்டாக்கி, ஓமப்பொருள்கள், இரத்தம், மாமிசம் முதலியன சொரிந்து, சிவபெருமானைப் போற்றி வேள்வியைப் பற்பகல் செய்யுங்கள். அவ்வாறு செய்தால் சிவபெருமான் தோன்றித்

திருவருள் புரிவார். நீங்கள் விரும்பியவற்றை யெல்லாம் தந்தருளுவார். நீங்கள் மூவிரும் உங்கள் பரிசனங்களோடு வேள்வி செய்தற் பொருட்டு அங்குச் சென்றவுடனே, வேள்விக்கு வேண்டிய பொருள்கள் யாவும் வெவ்வேருக நான் தருவேன்; செல்லுங்கள்'' என்று கூறி வேள்வி செய்யும் முறைகளையும், அதற்கு வேண்டிய மந்திரங்களையும், சூரபன்மன் முதலிய மூவருக்கும் உபதேசித்தாள். சூரபன்மன் தன் தம்பியர்களோடும் தாய் தந்தையர்களை வணங்கி விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

திருவிருத்தம்– 24
ஆகத் திருவிருத்தம்–510

——oo——

## 7. மாயை நீங்கு படலம்

### மாயை நீங்குதல் கண்டு காசிபர் வருந்துதல்

சூரபன்மன் முதலியோர் சென்றதும், மாயை காசிப முனிவரை நோக்கி, "இனி நான் மக்களைக் காப்பாற்றும் பொருட்டுப் போகின்றேன் ; நீர் வருந்தாது இரும்'' என்று கூறிப் புறப்பட்டாள். காசிபர் ஆசை மிகுதியால் அவள் பின்சென்று, "நீ என்னை விட்டுப் போதல் நீதியோ?'' என்று வினவினர். அதுகேட்ட மாயை, " முனிவரரே ! வருந்தாதீர் ! நான் வந்தது புத்திரர்களைப் பெறும் பொருட்டாகும்; உம்மோடு இருப்பதற்கு அன்று; நான் மாயை என்பதை அறிந்து கொள்ளும்'' என்று கூறி மறைந்துபோயினள். அப்போது அவள், அங்குத்தோன்றிய காலத்து உண்டாகிய பொருள்களெல்லாம் மறைந்துபோயின. காசிப முனிவர் மாயையைக் காணுது கவலைகொண்டு மதி மயங்கிப் பொருமி ஏங்கி நின்ருர்.

### நான்முகன் காமத்தின் கொடுமையைக் கூறுதல்

நான்முகன், தன் குமாரராகிய காசிபமுனிவரின் துயரத்தை அறிந்து அங்கு வந்தார். காசிபர் நான்முகனை வணங்கி நின்ருர். நான்முகன் காசிப முனிவருக்கு ஆசி கூறி, "மகனே ! நீ உன் அருந்தவத்தைவிடுத்து ஏன் வருந்துகிருய்? சொல்'' என்று கேட்

டார். காசிபர் நிகழ்ந்தனயாவும் கூறினர். நான்முகன் மனங் கூசித் தன் மகனைப் பார்த்து, "வேதம் முதலியவைகளைக் கற்றுணர்ந்த முனிவனுகிய நீ, அறிவில்லாதவர்களைப்போல ஒரு பெண்ணின் பொருட்டு மையல்கொண்டு வருந்துகிருயோ! கள், காமம் என்ற இரண்டு தீய பொருள்கள் உண்டு. அவற்றுள், கள் அருந்திய காலத்து அறிவைக் கெடுக்கும்; காமம் நினைந்த மாத்திரத்தில் உயிரைக் கொல்லும்; காமம் நினைப்பினும் சுடும்; கேட்பினும் சுடும்; ஆதலால் அது கள்ளினும் கொடியது; அது நஞ்சினும் தீயது; காமத்தை ஒழித்தவரே முத்தியை அடைந்தவர்.

உள்ளினும் சுட்டிடும்; உணருங் கேள்வியிற்
கொள்ளினும் சுட்டிடும்; குறுகி மற்றதைத்
தள்ளினும் சுட்டிடும்; தன்மை ஈதினல்
கள்ளினும் கொடியது காமத் தீயதே.

ஈட்டுறு பிறவியும் வினைகள் யாவையும்
காட்டியது இனையதோர் காமம் ஆதலின்
வாட்டமில் புந்தியால் மற்றுஅந் நோயினை
வீட்டினர் அல்லரோ? வீடு சேர்ந்துளார்.

நெஞ்சினும் நினைப்பரோ? நினைந்து ளார்தமை
எஞ்சிய துயரிடை ஈண்டை உய்த்துமேல்
விஞ்சிய பவக்கடல் வீழ்த்தும் ஆதலால்
நஞ்சினும் தீயது நலமில் காமமே.

ஆதலால், காமமுற்று வருந்தாதே. நீ மையல்கொண்ட பெண்ணும் வஞ்சகமுடைய மாயை ஆவள். அவளை விரும்பிய தன் மூலம் நீ தீமை செய்தாய். அத் தீமை நீங்கும் பொருட்டு நீ முன்போலத் தவம் செய்வாயாக" என்று அவருள்ளத்தைத் தேற்றி, அவரை அங்கேயே விடுத்துப் போயினன். அங்ஙனமே, காசிப முனிவர் தவம் செய்வாராயினர்.

**மாயை பெருந்தவம்**

அங்கு நின்று நீங்கிய மாயை, தன் மக்கள் யாகம் செய்யும் போது அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுக்கும் பொருட்

டுச் சுக்கிராசாரியரின் ஏவலினால் சிவபெருமானை நோக்கிப் பெருந்தவம் செய்தாள்.

திருவிருத்தம்– 17
ஆகத் திருவிருத்தம்–527

——oo——

## 8. அசுரர் யாகப் படலம்

**சூரபன்பன் முதலியோர் வேள்வி புரியச் செல்லுதல்**

சூரபன்மன் தன் தாயின் கட்டளைப்படி வேள்வி செய்தற் பொருட்டு வடதிசை நோக்கிப் புறப்பட்டான். தன் தம்பியர்களைப் பார்த்து, “நாம் வேள்வி செய்ய வடதிசை செல்லும் பொழுது நீங்கள் இருவரும் நமது சேனையின் முன்னும் பின்னும் காவலாக வாருங்கள்” என்று கட்டளையிட்டான். சேனைக்கு முன்னால் சிங்கமுகாசுரனும், பின்னால் தாரகாசுரனும் செல்வதாகக் கூறி, சூரபன்மனிடம் விடை பெற்றுக் கொண்டு அங்ஙனமே சென்றார்கள். அசுரர் சேனைவெள்ளம் பதினாயிரம் யோசனை அளவு, வானிலும் பூமியிலும் பரவி, வடதிசை நோக்கி ஆர்த்துச் சென்றது. அதனைப் பொறுக்க இயலாது பூமிதேவி வருந்தினள்; ஆதிசேஷனும் மற்றை நாகர்களும் தளர்ந்து போயினர்; திக்கு யானைகளும், குலமலைகளும், மேரு மலையும் சலித்தன; ஆதிகூர்மமும் வருந்தியது; இந்திரன் முதலிய திக்குப் பாலகர்கள் அஞ்சி நடுநடுங்கினார்கள். அசுர சேனை வெள்ளத்தின் முன்னணியிலே சிங்கமுகாசுரனும், பின்னணியிலே தாரகாசுரனும் செல்ல அவர்களுக்கெல்லாம் நடுநாயகமாகச் சூரபன்மன் சென்றான்.

**சூரபன்மனைச் சுக்கிராசாரியர் காணல்**

அப்பொழுது அசுர குருவாகிய சுக்கிராசாரியர், சூரபன்மன் முதலியோர்களைக் காணக் கருதினார். ஆகாய வழியாக விமானமீது ஏறி வந்து அசுர சேனைகளின் வேகத்தையும் வலியையும் ஊக்கத்தையும் கண்டு நடுங்கி, “இவ்வசுரர்களின் பேராற்றலைக் கண்டேன். முன்னே அசுரர்கள் அளவற்றவர்களைக் கண்டுள்ளேன். இவர்களுக்கு நிகரானவர் ஒருவருமில்லை.

இவர்கள் தங்களை எதிர்த்தவர்களின் ஊனையும் உயிரையும் ஒருங்கே உண்ணும் ஆற்றல்கொண்டிருக்கிறார்கள். இந்திரனை யும் திருமாலையும் வெல்வது இவர்களுக்கு ஒரு பொருளாகுமோ? இவர்கள், அவர்களுடைய முன்னோர்களைப்போலத் தவ வலிமை யும், வரமும், படைக்கலங்களும் பெறவில்லை. சிலநாள் தவம் செய்வாராயின் இக்குறை நீங்கிவிடும். இது திண்ணம். தவத் தால் இழிந்தவரும் உயர்ந்தோர் ஆவர். விசுவாமித்திரரே இதற் குச் சான்று '' என்று பலவாறு எண்ணி நின்று, முகமன் கூறிச் சூரபன்மன்முன் செல்ல முயன்றார். சூரபன்மன்முன் செல்ல இயலாததைக் கண்ட சுக்கிரன், உயிர்களை வசீகரிக்கும் ஒரு மந் திரத்தைச் சிந்தித்துக்கொண்டு சேனைக்கடலின் நடுவே புகுந்து சென்றார். வன்னெஞ்சம் படைத்த அசுரர்கள், மந்திர சத்தியின் வலிமையால் அன்புகொண்டு சுக்கிராசாரியரைக் கண்டு கைதொழுதார்கள். சூரபன்மன்முன் சுக்கிராசாரியர் சென்று, '' சூரபன்மனே ! நீ இந்திரன் முதலியோர் யாவருக்கும் மேலா கக் கடவாய்; அசுரர்களின் துன்ப நோயை அகற்றுதற்கு **ஏலாதி திரிகடுகம்** என்னும் இனிய மருந்துபோல் ஆகக் கட வாய் '' என்று ஆசி கூறினார்.

**சூரபன்மன்—சுக்கிராசாரியர்**

சூரபன்மன் சுக்கிராசாரியரை நோக்கி, '' ஐயனே ! நீர் எவ்வுலகத்துள்ளீர் ? நீர் யார் ? இங்கு வந்தது யாது காரணம்? என்னை அறியாமல் உம்பால் எனக்கு அன்பு தோன்றுகிறது. முற்பிறப்பில் செய்த தவத்தாலன்றோ உம்மைச் சந்தித்தேன்'' என இன்னுரைகள் பல மொழிந்தான். சுக்கிரன் அதுகேட்டு, '' நான் விண்வழியிற் செல்வேன் ; உன் குலத்திற்கெல்லாம் குரு வானேன்; என் பெயர் சுக்கிரன்; நான் உனக்கு உறுதி சொல் லும் பொருட்டு வந்துளேன் '' என்றார். சூரபன்மன் அம்மொழி கேட்டு மகிழ்ந்து '' அடிகாள் ! நான் உய்ந்தேன் '' என்று கூறி, சுக்கிரனை அணுகி வணங்கித் துதித்தான். அசுர குரு சூரபன் மனை நோக்கி, '' அசுரர்க்கு அரசே ! நீ தவம் செய்யும்போது பகைவர்கள் உனக்குத் துன்பம் செய்வார்கள். அதனைப் போக்க ஒரு மந்திரம் உபதேசிக்கிறேன்'' என்று கூறி, சிவபெருமானின் மந்திரமொன்றை அவனுக்கு முறைப்படி உபதேசித்தார் ; '' நீ

நாடோறும் இதனைச் செபித்துக்கொண்டு, ஐம்பொறிகளை அடக்கிக் கொலை, களவு, காமம், பொய் முதலிய தீமைகளை விடுத்துத் தவம் செய்வாயாக'' என்று கூறினர். சூரபன்மன் அசுர குருவின் பாதங்களை வணங்கி, அங்ஙனமே செய்வதாகக் கூறினன். சுக்கிராசாரியர் பல ஆசி கூறி, மறைந்துபோயினர்.

**யாகசாலை அமைத்தல்**

சூரபன்மன் அசுரர்கள் சூழ, வடதிசை சென்று ஓர் ஆலங் காட்டை அடைந்தான். அங்கே வேள்விச் சாலையை அமைக்க ஆரம்பித்தான். பதினுயிரம் யோசனை பரப்பை உள்வைத்து, அதனைச் சுற்றிலும் மலைகளினுலே மதில் செய்வித்தான். மதிலைச் சுற்றி எண்ணற்ற சேனைகளைக் காவலாக வைத்தான். நான்கு திக்குகளிலும் வாயில்கள் அமைப்பித்து, அவற்றைக் காக்க வீர மடந்தையை மந்திரத்தினுல் கூவி நிறுவினன். மதிலைச்சுற்றிக் காவல் செய்யும் பொருட்டுப் பூதங்களையும், பிசாசுகளையும், காளிகளையும் மந்திரத்தினுல் அழைத்து இருக்கச் செய்தான். வைரவர்களை மந்திரத்தால் அழைத்து, யாகத்தைக் காக்கும்பொருட்டு வைத்தான். மதிலுக்குள்ளே நடுவில் ஆயிரம் யோசனை அகலமும், ஆயிரம் யோசனை ஆழமுமுடைய ஓர் ஓம குண்டமும், அதனைச் சூழ நூற்றெட்டு ஓமகுண்டமும், அவற்றைச் சூழ ஆயிரத்தெட்டு ஓமகுண்டமும் செய்வித்தான். பிறகு, சூரபன்மன் யாகத்துக்கு வேண்டிய மற்றைய பொருள்களை நாடி, மாயையை நினைந்தான். தவம் செய்து சிவபெருமான் திருவருள் பெற்ற மாயை, உடனே சூரபன்மன்முன் வந்து தோன்றினுள்.

**வேள்விப் பொருள்களை மாயை அளித்தல்**

மாயையானவள் சூரபன்மன் முதலியோர் வேள்வி செய்யப் போகும் இடத்தில் சிங்கம், புலி, யாளி, கரடி, யானை, குதிரை, ஆட்டுக்கடா முதலிய மிருகங்களின் மாமிசம், இரத்தம், எண்ணெய், நெய், பால், தயிர், மது, கடுகு, மிளகு முதலிய திரவியங்கள், நெய்யன்னம், யாகப் பசுக்கள், செந்நெல் அரிசி, மஞ்சள் கலந்த அரிசி, மலர், கஸ்தூரி முதலிய சுகந்தம், சுருக்குச் சுருவம், தருப்பை, நெற்பொரி, நவதானியங்கள், நச்சுச் சமித்துக்கள், கொள்கலங்கள் முதலியவற்றையும் ஒரு

வச்சிரகம்பத்தையும் வருவித்து, மூவாயிரம் யோசனை இடத்தை அப்பொருள்களால் நிறைத்துவிட்டுச் சென்றாள்.

**வீர யாகம் செய்தல்**

சூரபன்மன் யாகம் செய்யத் தொடங்கினான்; நடுவேதியில் **வச்சிரகம்பத்தை** நிறுவினான். நான்கு வாயில்களுக்கும் போய், வீரமடந்தையைச் சிந்தித்துப் பூசித்து, மாமிச பலி கொடுத்தான். மதில் நடுவிலுள்ள பூதங்களுக்கும், பிசாசுகளுக்கும் பலி கொடுத்தான். ஆயிரத்தெட்டுக் குண்டங்கள்தோறும் நச்சு விற கிட்டு, அக்கினி மூட்டித் தன் தம்பியர்களோடும் சிவபெரு மானின் பெயரை உச்சரித்து அவி கொடுத்தான். பின்பு தாரகனை நோக்கி, "நீ இக்குண்டங்கள்தோறும் சென்று தீயைக் குறை யாமல் வளர்ப்பாயாக" என்றான். நூற்றெட்டுக் குண்டங்கட் குஞ் சென்று அவற்றினும் வேள்வி செய்து சிங்கமுகாசுரனை, "நீ இங்கிருந்து இவ்வேள்வியைச் செய்வாயாக" என்றான். சூரபன்மன் நடு வேள்விக் குண்டத்தை அடைந்து, சிவபெரு மானைத் தியானித்து, விதிப்படி பூசித்துத் தன் யாகத்தைச் செய்வானாயினான்; நச்சுவிறகிட்டுத் தீக்கடைக் கோலால் தீயுண் டாக்கிச் சொலிப்பித்து, அதில் நெய்யை மந்திரம் சொல்லிச் சொரிந்தான்; மாமிசத் துண்டங்களையும், குருதியையும், அன் னத்தையும் இட்டான்; நெய், எண்ணெய், பால், தயிர் முத லியவைகளை ஊற்றினான்; நெற்பொரியை இட்டான்; தேனை யும் கள்ளையும் சிந்தினான்; நவதானியங்களை இட்டான்; கடுகு, மிளகு முதலிய வெய்ய பொருள்கள் பலவற்றையும் கொட்டி னான்; நெய் சொரிந்தான். இவ்வாறே சிவபெருமானை எண் ணிச் சூரபன்மன் செய்த வீர யாகத்தினின்றும் சொலித்தெழுந்த வேள்வித் தீ, திசைகளையும் மேலுலகங்களையும் சுட்டது.

**சூரபன்மன் வேள்வித் தீயில் வீழ்தல்**

சூரபன்மன் வீரயாகம் செய்தலை நான்முகன் திருமால் இந்திரன் முதலிய தேவர்களும், முனிவர்களும் கேள்வியுற்றார் கள்; அஞ்சி நடுநடுங்கித் துயரமுற்றார்கள். சூரபன்மன் தன் இளவல்களுடன் பதினாயிர வருடம் யாகம் செய்தான். ஆயினும் சிவபெருமான் எழுந்தருளவில்லை. "சிவபெருமான் இச்செய

லுக்கு எழுந்தருளி வருவாரோ, வாராரோ '' என்று எண்ணிச் சூரபன்மன் தன் தம்பியர்களிடத்தே வேள்வித் தொழிலை அளித்துவிட்டு ஆகாயத்தையடைந்தான். அங்கு நின்றுகொண்டு தன் தசையை வாளினால் அரிந்தரிந்து ஓமகுண்டத்தில் போட்டுக் குருதியை நெய்போலச் சொரிந்தான். சதைகளை அரிய அரிய அவை முன்போலவே வளர்ந்தன. அதனைக்கண்ட சூரபன்மன், “ இஃது எம்பெருமான் அன்புச் செயலாகும் '' என்று மகிழ்ந்தான். பின்னும் ஆயிர வருடம் அவன் விண்ணில் நின்று தன் உடற் சதைகளை அரிந்து ஓமாக்கினியில் சிந்தி யாகம் செய்தான். அப்போதும், சிவபெருமான் எழுந்தருளி வந்திலர். அதனால் சூரபன்மன் மனம் வருந்தி, “ இனி நான் இறப்பதே சரி '' என்று துணிந்து, தீயினால் சூழப்பட்ட ஆதிகுண்டத்தில் செந்நிறத்துடன் நிற்கின்ற **வச்சிர கம்பத்தின்**மேல் குதித்தான். அதன் உச்சியினின்றும் உருவி அடியில் விழுந்து எரிந்து சாம்பலாயினான்.

### சிங்கமுகன் முதலியோர் புலம்பல்

சூரபன்மன் வேள்வித் தீயில் வீழ்ந்து இறந்ததைக் கண்ட சிங்கமுகாசுரன், உள்ளம் பதைத்தான்; வேள்வித் தொழிலை மறந்து கீழே வீழ்ந்து, “ மாயையினுடைய மகனே! காசிபரின் குமாரனே !! அசுரகுலத்துக்கிறைவனே !!! நீ எங்கே போய் ஒளிந்தாய்? தீய வேள்வியைப் பலநாட் செய்து பெற்ற பேறு இதுவோ? தாயும் நீ, தந்தையும் நீ, எங்கள் உயிரும் நீ என்று நினைந்திருந்தோம்; நீ அதனை நினையாது இறந்தாயே! வீரனே! உன்னைப்போல் இந்த வேள்வியைப் பன்னாள் செய்தவர் யார்? வன்கண்ணராகிய சிவபெருமான் உன்பால் அன்பற்றவர் என்பதை அறியாது, அவரைக் குறித்தா வேள்வி செய்தாய்! உன்னைப்போல் உயிரையும் கொடுத்து யாகம் செய்தவரும் இல்லை; சிவபெருமானைப்போல் அருள் செய்யாத பெரியோரும் இல்லை. நமக்குப் பயந்திருந்த இந்திரன் முதலிய தேவர்களும் மனக்கவலை தீர்ந்தது இன்றைக்குத்தானோ? பல நாட்கள் பழகியும் நுட்பங்களைச் சொல்லாமல் இறந்துபோனாய். இவர்கள் நம்மோடு துணையாக வரமாட்டார்கள் என்று கருதினையோ? எல்லாரும் காண வச்சிர கம்பத்தில் விழுந்துருவி

மாண்டாயே! புலம்பும் நாங்கள் இறந்தாயினும் உன்னைக் காண் போம்'' என்று தாயினைப் பிரிந்த கன்றெனக் கதறி அழுதான். தாரகனும் தன் துதிக்கையால் நிலத்தைப் புடைத்துக் கீழே வீழ்ந்து புரண்டு அழுது அரற்றினன். மற்ற அவுணர்களும் அழுது புலம்பினர்கள். வேள்விச்சாலை புலம்பல் சாலை ஆகியது.

**இந்திரன் இன்பமடைதல்**

இந்திரன் அவுணர்களின் புலம்பொலியைக் கேட்டான். ஒற்றர்களின்மூலம் சூரபன்மன் இறந்ததை உணர்ந்து பெரு மகிழ்ச்சிகொண்டான்; தேவர்கள் சூழ ஐராவதத்தின்மேல் ஏறிவந்து அசுரர்கள் துயருறுவதைக் கண்டு மகிழ்ந்தான்; தன் தவத்தை எண்ணி வியந்தான்.

**சிங்கமுகன் வேள்வி செய்தல்**

அவுணர்களுடன் துன்பக்கடலுள் ஆழ்ந்த சிங்கமுகா சுரன், தன் தமையன் இறக்கத் தான் உயிரோடு இருக்கலாகாது என்று மனம் வருந்தித் தன் ஆயிரம் தலைகளையும் வாளினல் அறுத்து வீரம்பேசித் தன் தமையனாகிய சூரபன்மன் வீழ்ந் திறந்த ஆதிகுண்டத்தில் போட்டான். அறுக்க அறுக்க அவன் தலைகள் வளர்ந்துகொண்டே போயின. அதனைக்கண்ட தாரக னும் தன் தலையை அறுத்து அவ்வக்கினியில் இடஇட அவன் தலையும் முன்போலவே வளர்ந்து வந்தது. இவ்விருவருடைய செயலைக் கண்ட அவுணர்களில் சிலர் தங்கள் தலைகளையும் அறுத்து அவ்வேள்வியில் போட்டு இறந்தார்கள். சிங்கமுகா சுரனும் தீயில் வீழ்ந்து இறக்கக் கருதி ஆகாயத்தில் எழுந்து போக எண்ணினன். சிவபெருமான் அவன் கருத்தை அறிந் தருளினர்.

திருவிருத்தம்–116
ஆகத் திருவிருத்தம்–643

——oo——

## 9. வரம்பெறு படலம்

**சிவபெருமான் மாறுவேடத்தில் செல்லுதல்**

சிவபெருமான், உடனே சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் திரு வெண்ணெய் நல்லூரில் ஆட்கொண்ட ஒரு வயோதிக அந்தணர்

போல வடிவம் தாங்கிக் கையில் கோலினை ஊன்றிக்கொண்டு வேள்விக்குழியின் அருகில்போய் நின்றார். அங்குச் சிங்கமுகாசுர னைப்பார்த்து, "இங்கே நீங்கள் எல்லோரும் ஏன் புலம்புகின்றீர் கள்? உங்கள் வரலாற்றைக் கூறுங்கள்" என்று கேட்டார். சிங்கமுகன் அவ்வயோதிகர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "எங்கள் துன்பத்தையும் வரலாற்றையும் கூறுகிறேன்" என்று கூறலானான்.

### சிங்கமுகன் தங்கள் வரலாற்றைக் கூறுதல்

"எங்கள் தந்தை காசிப முனிவர்; தாய் மாயை என்பவள். அவர்களுக்கு நாங்கள் மூன்று புத்திரர்கள். எங்கள் உடன் பிறந்தவர்கள் இன்னும் அனேகர் உளர். நாங்கள் மூவரும் எங்கள் தாய் மாயையின் தூண்டுதலினால் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தோம். பல்லாண்டுகளாகத் தவம்புரிந்தும் சிவபெருமான் எங்களுக்கு அருள்புரிந்திலர். எங்கள் தமையனா கிய சூரபன்மன் வேள்வித் தீயில் வீழ்ந்து இறந்தான். நாங் களும் எங்கள் உயிர்களை மாய்த்துக்கொள்ள நினைந்தோம். தேவரீரைக் கண்டமையால் சற்று நேரம் தாமதித்தோம்" என்று சிங்கமுகாசுரன் தங்கள் வரலாற்றைக் கூறினான்.

### சூரபன்மன் எழுதல்

அவ்வயோதிகர் சிங்கமுகனை நோக்கி, "நீங்களும் உங்கள் தமையனைப் போன்று இறத்தல் வேண்டாம்; யாகாக்கினி யினின்றும் அவனை இப்பொழுதே எழுப்பித் தருகின்றோம்; உங்கள் சோகத்தை விடுங்கள்" என்று அருளிச் செய்தார்; தேவகங்கையை வரச்செய்து, அதனை நடுக்குண்டத்தில் புகச் செய்தார். உடனே சூரபன்மன் ஆரவாரத்துடன் எழுந்தான். தரித்திரர் திடீரென்று பெருஞ்செல்வம் வாய்க்கப் பெற்றதைப் போலச் சிங்கமுகனும் தாரகனும் அளவு கடந்து மகிழ்ச்சியுற் றார்கள்; விரைந்தோடிச் சூரபன்மனை வணங்கி வாழ்த்தினார் கள். அவுணர்கள் மகிழ்ச்சியடைந்து, 'வாழிய' என்று ஆர வாரஞ் செய்தார்கள். இவைகளைக்கண்ட தேவர்கள் யாவரும் மேகத்தின் வரவைக்கண்ட குயில்போல, அஞ்சித் துன்பத்துடன் ஓடித் தம்மூரை அடைந்தார்கள்.

**சிவபெருமான் காட்சி தந்தருளல்**

அப்போது, சிவபெருமான் தம் வயோதிக வடிவத்தை விடுத்து, உமாதேவியோடு இடபவாகனத்தின் மீது தோன்றிக் காட்சி தந்தருளினார். சூரபன்மன் தன் தம்பியர்களோடு கீழே வீழ்ந்து வணங்கிப் பலவாறு துதித்து நின்றான். சிவபெருமான் சூரபன்மனைப் பார்த்து, "நெடுங்காலம் நம்மை நினைத்துப் பெரிய யாகத்தைச் செய்து இளைத்தாய்; உனக்கு வேண்டும் வரம் யாது? கூறுவாயாக" என்று அருளிச் செய்தார்.

**சூரபன்மன் சிவபெருமானிடம் வரம்வேண்டல்**

சூரபன்மன் சிவபெருமானை நோக்கி, "எம்பெருமானே! எல்லா அண்டங்களுக்கும் நான் அரசனாகவேண்டும்; அவற்றைக் காத்தற்குரிய ஆஞ்ஞாசக்கரமும் வேண்டும்; நினைத்தவுடனே அவ்விடங்களுக்கெல்லாம் செல்ல ஊர்தியும் வேண்டும்; என்றும் அழியாத யாக்கைவேண்டும்; திருமால் முதலிய தேவர்கள் போர் செய்தாலும் அவர்களை வெல்லும் பேராற்றலும் படைக்கலங்களும் வேண்டும்; எந்நாளும் அழியாதிருக்கவும் வேண்டும்" என்று வேண்டி நின்றான்.

**சிவபெருமான் சூரபன்மன் முதலியோர்க்கு வரம் அருளல்**

சிவபெருமான் சூரபன்மனை நோக்கி, "பிருதிவியிலுள்ள ஆயிரங்கோடி அண்டங்களுள் ஆயிரத்தெட்டண்டங்களை நூற்றெட்டு யுகம் ஆளுக" என்று அருள் செய்தார்; அவ்வண்டப் பரப்பு எங்கும் செல்லத்தக்க வலிமைமிக்க **இந்திர ஞாலம்** என்னும் தேரையும், அவ்வண்டங்களைக் காக்கும் ஓர் ஆஞ்ஞாசக்கரத்தையும், சிங்க வாகனத்தையும், தேவர்களுக்கெல்லாம் முதல்வனாகும் மேன்மையையும், எவரையும் வெற்றிகொள்ளும் வலிமையையும், பாசுபதப் படைக்கலம் முதலிய தெய்வப் படைக்கலங்களையும், எந்நாளும் அழியாத வச்சிர யாக்கையையும் அளித்தருளினார். அதன்பின்பு, கங்கையை விண்ணுலகத்துக்கு அனுப்பி அருளினார்; பின்னர், அக்கங்கை கலந்த யாகாக்கினியிலிருந்து பதினாயிரங்கோடி வெள்ளம் ரத, கச, துரக, பதாதியாகிய நால்வகைச் சேனைகளைத் தோற்றுவித்துச் சூரபன்மனுக்குக் கொடுத்தருளினார்.

இவ்வாறு சூரபன்மனுக்கு அருள் செய்த பொழுது அவனுடைய இளவல்கள் வந்து, சிவபெருமானின் திருவடிகளை வணங்கினார்கள். சிவபெருமான் அவர்களைப் பார்த்து, "நீங்கள் சூரபன்மனுக்கு இருதோள்கள் போல விளங்கி நூற்றெட்டு யுகம் சிறப்போடு வாழ்க; தேவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்யுங்கள்; தேவர்களெல்லாராலும் வணங்கப்படும் **உங்கள் மூவரையும் நம் சக்தி ஒன்றே அன்றி வேறு எவராலும் வெல்ல இயலாது**" என்று அருளிச் செய்தார்; அழியாத தேர்களையும், பாசுபதப் படையையும் அவர்களுக்கு வேறுவேறாகக் கொடுத்து அருள்புரிந்து மறைந்தருளினார்.

திருவிருத்தம்– 28

ஆகத் திருவிருத்தம்–671

——oo——

## 10. சுக்கிரன் உபதேசப் படலம்

### சூரபன்மன் அசுரர்களுக்கு முகமன் கூறிப் பதவி அளித்தல்

சூரபன்மன் பெற்ற வலிமை முதலியவைகளைக் கண்ட அசுரர்களெல்லோரும், கடல்போல ஆரவாரம் செய்து, அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். சூரபன்மன், அவுணப்படைத் தலைவர்களில் சிலரை நலன் வினவி நல்லருளைச்செய்ய, அதற்கு அவர்கள், "சிவபெருமானும் நீயும் இருக்க எங்களுக்கு ஒரு குறையுமில்லை; நிலைபெற்ற செல்வத்தையும் சிறப்பையும் பெற்றோம்; தாயுள்ள பிள்ளைகளுக்குக் குறைவுண்டோ?" என்று கூறி மகிழ்ந்தார்கள். சூரபன்மன் அவ்வசுரர்களிடம் அன்புடையனாய்த் தன் இளவல்கள் சூழப் பேராற்றலுடன் நிற்பதைக் கண்டு, தேவர்கள் அஞ்சி ஏங்கினார்கள். பழைய அவுணர்கள் போந்து பூக்களைத் தூவி, ஆடைகளைவீசி, "சூரபன்மன் வாழ்க" என்று வாழ்த்துக்கூறி ஆடிப்பாடி மகிழ்ந்து இந்திரன் மனத்துயரை நோக்கினார்கள். சூரபன்மன் தன் ரத, கச, துரக, பதாதியாகிய நால்வகைச் சேனைகளுக்குப் பல அசுரர்களைத் தலைவர்களாக்கினான்.

### சூரபன்மன் தன் தந்தையைக் காணுதல்

பிறகு, சூரபன்மன் தன் சேனைகள் மண்ணும் விண்ணும் நிறைந்து, திக்கெட்டும் செல்ல, தன் இளவல்கள் புடைசூழ,

யாகசாலையை விடுத்து, காசிப முனிவரிடம் சென்று வணங்கினன். சிவபிரானிடத்துத் தான் பெற்ற வரங்களை யெல்லாம் கூறி, "நாங்கள் இனிமேல் செய்வது என்ன?" என்று வினவினன். காசிப முனிவர் தேவர்களுக்குத் துன்பம் வந்ததை உணர்ந்து, "உங்கள் குருவாகிய சுக்கிராசாரியரிடம் சொல்லுங்கள்; அவர் உங்கள் செல்வங்கள் பெருகும் வண்ணம் நன்கு போதிப்பார்" என்று விடைகொடுத்தனுப்பினர்.

### சூரபன்மன் அசுர குருவை அடைதல்

சூரபன்மன் சுக்கிராசாரியரைக் காணப் புறப்பட்டான். சுக்கிராசாரியர் சூரபன்மன் வரவை உணர்ந்தார்; மாணவர் குழாத்தோடு அவனை முன்சென்று எதிர்கொண்டழைத்தார். சூரபன்மன், படைகளுக்கு முன்னால்போய்த் தம்பிமார்களோடு அசுர குருவை வணங்கினன். சுக்கிராசாரியர் சூரபன்மனுக்கு ஆசி கூறித் தழுவி, அவனைத் தம் மாளிகைக்கு அழைத்துச் சென்றார். சூரபன்மன் தாரகனை அழைத்துச் சேனைகளைக் காக்கும்படி பணித்துவிட்டுச் சிங்கமுகாசுரனுடன் மாளிகையினுள் சென்றான். அசுர குரு அவனுக்கு ஆசனமளித்து அமரச் செய்து, "நீங்கள் என்னிடம் வந்த காரணம் யாது?" என வினவினர். சூரபன்மன் தான் வீரயாகம் செய்து சிவபெருமானிடம் வரம் பெற்றதையும் காசிபமுனிவர் கூறியதையும் கூறி, "இனி நாங்கள் செய்யத் தக்கவைகளைக் குருவாகிய நீரே உபதேசிக்க வேண்டும்" என்று வேண்டிக்கொள்ளச் சுக்கிராசாரியர் சொல்லலானர்.

### சுக்கிராசாரியர் மாயாவாதக் கொள்கையினைக் கூறுதல்

"பாசம் உண்டு என்பது பொய். பதியும் பசுவும் இரண்டு அல்ல; ஒன்றுதான். தோற்றம் அழிவு இல்லாமல் சோதி சொரூபமாக விளங்கும் சிவபெருமான், திருவிளையாடல் புரிய விருப்பங்கொண்டு மாயையினலாகிய உடல்கள்தோறும் கலந்து நிற்பர்; ஆனல் உடல்கள் அழியுங்காலத்துத் தாம் அழியாது முன்போலவே இருப்பர். இவ்வாறு சிவபெருமான் எக்காலமும் திருவிளையாடல் புரிவர். நல்வினை தீவினை என்பதும், அவற்றிற்கு ஏற்ப இன்ப துன்பம் ஏற்படும் என்பதும் பொய்.

முத்தியென்று ஒன்று உண்டென்பதும், அதனைப் பெற முயல வேண்டுமென்று கூறுவதும் பொய். ஐம்பொறிகளும் ஐம்புலன் களும் பொய். ஆகவே, அவைகளைக் காணும் பசு என்பதும் பொய். புத்தியும் வாக்கும் வடிவமும் செயல்களும் பொய். இன்ப துன்பங்களும் பொய். பிறப்பதும் இறப்பதும் செயல் களைச் செய்வதும் சிவபெருமானுக்கு இல்லை. இவைகள் உடம் பிற்கேயாம். "அறமே நமக்குத் துணையாகும்; அதனைச் செய் வது நன்று" என்று செய்வதும், "பாவம் தீயது; அதனைச் செய்ய லாகாது" என்று நினைப்பதும் அறிவின்மையாகும். எது, எது நேர்கிறதோ, அதனை நல்லது தீயது என்று பாகுபாடு செய்யாமல், அதனைக் கடவுளின் மாயை என்று எண்ணிச் செய்வதே முறையாகும். கனவில் காணும் இன்பமும் துன்ப மும் நனவில் நடைபெறுவதில்லை. அதுபோலவே, இம்மையில் செய்யும் புண்ணிய பாவங்கள் மறுபிறவியில் பயன்படுவதில்லை. மறுபிறப்பு என்று ஒன்று கிடையாது. மறுபிறப்பு இருந்தால் தானே இப்போது செய்யும் நல்வினை தீவினைக்கு ஏற்பப் பயன் ஏற்படும்? மறுபிறப்பு என்பதே பொய். பொய்யிலிருந்து மெய் பிறக்குமா? சிலரைச் சிறியர் என்றும், சிலரைப் பெரியர் என்றும் எண்ணுவது தகுதியன்று. 'உயிர்கள் எல்லாம் ஒன்றே' என்று அறிதல் வேண்டும்; இஃது உண்மையே. இவைகள் யாவும் ஞானிகள் அறியத்தக்க நுண்பொருள்களாம்.

"திருமாலாலும் தேவர்களாலும் அடையப்பெறாத அரசுரிமை யும், வெற்றியும், ஆணையும், அழியாத செல்வங்களும் உன்னை வந்தடைந்தன. அதனால் உன்னை நீயே **பிரமம்** என்று நினைத் துக்கொள். பிரமா முதலிய தேவர்களை மேலோர் என்று கருதி வணங்காதே. தேவர்கள் உங்களுக்குப் பகைவர்கள். அவர்கள் செல்வங்களை அழித்து அவர்களைத் தண்டிப்பாயாக. இந்திரன் முன்னர் அளவற்ற அசுரர்களைக் கொன்றான். அவன் தப்பி ஓடாவண்ணம் விரைந்து அவனைப் பிடித்துச் சிறையிடு. பல தீமைகளையுஞ் செய். முனிவர்களையும் திக்குப்பாலகர்களையும் ஏவல் கொள்வாய். கொலை, களவு, காமம், வஞ்சம் முதலியவை களை உறுதி என்று செய். அதனால் உனக்குத் தீமை ஒன்று மில்லை. அங்ஙனம் செய்யாவிடில் நீ விரும்பியவைகள் உன்னை வந்தடையா; இவ்வாறு இன்றேல் உனக்கு எவர் அஞ்சி நடப்பர்.

சிவபெருமான் உனக்குத் தந்த ஆயிரத்தெட்டு அண்டங்களையும் சேனைகளோடு இப்பொழுதே சென்று, பார்வையிட்டு ஆங்காங்குச் செய்யவேண்டியவைகளைச் செய்துவிட்டு, யாவரும் புகழும் வண்ணம் மீண்டு வந்து இவ்வண்டத்தில் வீற்றிருப்பாயாக'' என்று சுக்கிராசாரியர் உபதேசித்தார்.

திருவிருத்தம்– 51

ஆகத் திருவிருத்தம்–722

——oo——

## 11. அண்ட கோசப் படலம்

**அண்டங்களின் தன்மை கேட்டல்**

அசுரகுருவாகிய சுக்கிராசாரியர் கூறிய தீயமொழிகளைக் கேட்ட சூரபன்மன், “ இது நல்லது ! உம்முடைய கட்டளையின்படியே நடக்கிறேன் ; சிவபெருமான் எனக்களித்த ஆயிரத்தெட்டு அண்டங்களைப் பற்றிய செய்திகளை எனக்குத் தெரிவிக்க வேண்டும் '' என்று வேண்டி நின்றான். சுக்கிராசாரியர் சொல்லலானார் :

**ஆதித் தோற்றம்**

“மூலப்பிரகிருதிக்கு மேலுள்ள சுத்தமாயை அசுத்தமாயை ஆகிய தத்துவங்களும் அவற்றிலே தோன்றுவனவும் நிற்க, கீழுள்ள மிச்சிரமாயையாகிய மூலப்பிரகிருதியிலிருந்து புத்திதத்துவம் தோன்றும். புத்திதத்துவத்திலிருந்து ஆங்காரதத்துவம் தோன்றும். ஆங்கார தத்துவத்திலிருந்து ஒலி முதலிய ஐம்புலன்களும் தோன்றும். ஐம்புலன்களிலிருந்து விண், காற்று, தீ, நீர், மண் என்னும் ஐந்து தத்துவங்களும் தோன்றும். மண் தத்துவத்திற்கு ஆயிரகோடி அண்டங்கள் உள்ளன. அவை பொன்னிறம் கொண்டு பரவி நிற்கும் ; ஒன்றற்கொன்று மேலுள்ளன அல்ல. அவ்வண்டங்களில் ஆயிரத்தெட்டை மட்டும் சிவபெருமான் உனக்கு அளித்தார். அவற்றுள் ஓர் அண்டத்தின் இயல்பை மட்டும் கூறுகிறேன் ; கேட்பாயாக :

**அண்டத்தின் அளவு**

சாளரத்தில் தோன்றும் சூரிய வெளிச்சத்தில் அதிநுட்பமாகக் காணப்படுகின்ற பரமாணுக்கள் இருபத்துநான்கு

கொண்டது ஒரு மயிர்நுனி ; மயிர்நுனி எட்டுக்கொண்டது ஓர் ஈர் ; ஈர் எட்டுக்கொண்டது ஒரு பேன் ; பேன் எட்டுக்கொண் டது ஒருநெல்; நெல் எட்டுக்கொண்டது ஓர் அங்குலம்; அங் குலம் இருபத்து நான்கு கொண்டது ஒரு முழம்; முழம் நான்கு கொண்டது ஒருதனு; தனு இரண்டு கொண்டது ஒரு தண்டம்; தண்டம் இரண்டாயிரங்கொண்டது ஒரு குரோசம்; குரோசம் நான்கு கொண்டது **ஒரு யோசனை.** இத்தகைய நூறுகோடி யோசனை கொண்டது ஓர் அண்டத்தின் அகலமும் உயரமும் ஆகும். மற்றைப் பிருதிவியண்டங்களின் அளவுகள் இவ்வண்டத் தைப் போன்றனவாம். நிலவுலகின் மேற்பரப்புக்கு மேலே ஐம்பது கோடி யோசனை உயரமும், கீழே ஐம்பது கோடி யோசனை ஆழமும், மேருமலையின் நடுப்பாகத்திலிருந்து ஒவ் வொரு திசையிலும், அண்டகடாகம் வரை ஐம்பது கோடி யோசனை தூரமும் ஆகும்.

கதிரெழு துகள்எண் மூன்று
கசாக்கிர கந்தான் ஆகும் ;
இதுதொகை இருநான் குற்றது
இலீக்கைஅவ் விலீக்கை எட்டால்
உதிதரும் யூகை அன்ன
யூகைஎட் டியவை என்ப
அதினிரு நான்கு கொண்டது
அங்குலத் தளவை யாமே.

அங்குலம் அறுநான்கு எய்தின்
அதுகரம் ; கரமோர் நான்கு
தங்குதல் தனுவென் றுகும் ;
தனுவிரண் டதுஓர் தண்டம் ;
இங்குறு தண்ட மான
இராயிரங் குரோசத் தெல்லை
பங்கமில் குரோசம் நான்கோ
ரியோசனைப் பால தாமே.

**பூமியின் கீழ் உள்ளவை**

பூமியின் கீழ் அடிப்பாகத்தின் எல்லையாக **அண்டகோள ஓடு** உள்ளது. அதன் மேல் **காலாக்கினி யுருத்திரர் உலகமும்,**

அதற்கு மேல் **இருபத்தெட்டுக் கோடி நரகங்களும்,** அதற்கு மேல் **கூர்மாண்ட வுருத்திரர் உலகமும்,** அதற்குமேல் **சப்த பாதலங்களும்,** அதற்குமேல் **ஆடகேசுர வுருத்திரர் உலகமும்,** அதற்குமேல் **எட்டு யானைகளாலும் எண்பெரும் பாம்புகளாலும் ஆதிசேடனாலும்** தாங்கப்படும் பூமியும் உள்ளது.

**பூமியின்மேலுள்ள ஏழு தீவுகள்**

மண்ணுலகில் **சம்புத் தீவு, சாகத் தீவு, குசைத் தீவு, கிரவுஞ்சத் தீவு, சான்மலித்தீவு, கோமேதகத் தீவு, புட்கரத் தீவு** என ஏழு தீவுகள் உள்ளன. **உவர்க்கடல், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக் கடல், தேன் கடல், நன்னீர்க்கடல்** என்னும் ஏழு கடல்கள் முறையே இத் தீவுகளைச் சுற்றி அமைந்துள்ளன. சம்புத் தீவின் பரப்பும், அதைச் சூழ்ந்த உவர்க்கடலின் பரப்பும், தனித்தனியாக் ஓர் இலக்கம் யோசனை அளவாகும். மற்றைத் தீவுகளுக்கும், கடல்களுக்கும் உள்ள பரப்பு இவற்றிலிருந்து முறையே ஒன்றற்கொன்று தனித்தனி இரட்டித்த யோசனை தூரமாகும். ஆதலால், ஏழு தீவுகளும் ஏழு கடல்களும் சேர்ந்த பரப்பு இரண்டு கோடியே ஐம்பத்துநான்கு இலட்சம் யோசனையாகும். அவற்றைச்சுற்றிப் பத்துக்கோடி யோசனைப் பரப்புள்ள **பொன் நிலம்** சூழ்ந்திருக்கும். அதனைச் சூழ்ந்த **சக்கரவாள கிரியின்** பரப்புப் பதினாயிர யோசனை ஆகும். சக்கரவாளகிரியைச் சூழ்ந்த **பெரும் புறக்கடல்** ஒரு கோடியே இருபத்தேழு இலட்சம் யோசனை பரப்பாகும். அதனைச் சூழ்ந்துள்ள **இருட்பூமி**யின் பரப்பு முப்பத்தைந்து கோடியே பத்தொன்பது இலட்சத்து நாற்பதினாயிரம் யோசனை யாகும். அதனைச் சூழ்ந்த **அண்டச் சுவரின்** கனம் ஒரு கோடி யோசனை யாகும். ஆகவே, மண்ணுலகின் மொத்த அகலம் நூறு கோடி யோசனை ஆகும்.

**பிரிய வரதன்**

நான்முகன் வலத்தோளில் தோன்றிய **சுவாயம்புவின்** புத்திரனாகிய **பிரிய விரதன்** என்பவன் பூவுலகம் முழுவதையும் ஆண்டான். அவனுக்கு **அங்கிதீரன், மேதாதி, வபுட்டு, சோதிட்டு, துதிமான், அவ்வியன், சவநன்** என்னும் ஏழு

குமாரர்கள் தோன்றினர். அவர்கள் ஏழுபேரும் முறையே சம்புத்தீவு முதலிய ஏழு தீவுகளையும் அரசு புரிந்தனர். சம்புத்தீவிற்கு அரசனுகிய அங்கிதீரன் தன் புதல்வர்களாகிய **பாரதன், கிம்புருடன், அரி, கேதுமாலன், பத்திராசுவன், இளாவிருதன், இரமியன், இரணியன், குரு** என்னும் ஒன்பது மக்களுக்கும் அத்தீவை ஒன்பது கண்டமாக்கிக் கொடுத்தான்.

### மேருமலை

சம்புத்தீவின் நடுவில் **மேருமலை** உள்ளது. அது நிலத்துக்குமேல் எண்பத்து நாலாயிரம் யோசனை உயர்ந்தும், பதினுருயிரம் யோசனை கீழே ஆழ்ந்தும் உள்ளது. அதன் முடி முப்பத்திராயிரம் யோசனையும், அடி பதினுருயிரம் யோசனையும் அகன்று தாமரை மொட்டெனத் திகழும். அதில் மூன்று அடுக்குக்கள் உள்ளன. மேல் அடுக்கிலுள்ள பல முடிகளில் நடு முடியில் நான்முகன் இருப்பிடமாகிய **மனேவதி** இருக்கிறது. மேற்கு முடியில் திருமாலின் இருப்பிடமாகிய **வைகுண்டம்** இருக்கிறது. வடகீழ்த்திசை முடியில் சிவபெருமானின் இருப்பிடமாகிய **சோதிட்கம்** இருக்கிறது. இவற்றின் அருகே எட்டுத் திசைகளிலும் எட்டுத்திக்குப் பாலகர்களின் இருப்பிடங்கள் இருக்கின்றன. மேருமலையின் கிழக்கே வெண்ணிறமுடைய **மந்தரமலையும்**, தெற்கில் பொன்னிறமுடைய **கந்தமாதனமலையும்**, மேற்கில் நீலநிறமுடைய **விபுலமலையும்**, வடக்கில் மாதுளம் பூ நிறமுடைய **சுபார்சுவமலையும்** உள்ளன. இவற்றில் முறையே **கடம்பும், நாவலும், அரசும், ஆலும்** வானுயர்ந்து நிற்கும். இம்மலைச்சாரலில் **அருணம், மானசம், அசிதோதம், மாமடு** என்னும் நீர்நிலைகளும், **சயித்திரதம், நந்தனம், வைப்பிரசம், திருதாக்கியம்** என்னும் வனங்களும் உண்டு.

### நாவலந்தீவு

மேருமலையின் தெற்கில் நாவல்மரம் நின்ற காரணத்தால் பாரதவருடம், **நாவலந்தீவு** எனப் பெயர்பெற்றது. நாவல் மரத்தின் பழச்சாறு, ஆருய்ப் பெருகி மேருமலையைச் சுற்றி வடபாற் சென்று **சாம்பூநதம்** என்னும் பெயரைப் பெறும். அதனைப் பருகினேர், உடலம் பொன்மயமாய்ப் பதின்மூவாயிரம்

ஆண்டு உயிர் வாழ்வர். மேருவின் கிழக்கில் **மாலியவான்,** தெற்கில் **நிடதம், ஏமகூடம், இமயம்,** மேற்கில் **கந்தமாதனம்,** வடக்கில் **நீலம், சுவேதம், சிருங்கம்** என்ற மலைகள் சூழ்ந்து நிற்கின்றன.

**நவகண்டங்கள்**

வடகடலிலிருந்து சிருங்கமலை வரையில் **குருவருடமும்**[1], சிருங்கமலையிலிருந்து சுவேதமலை வரையில் **இரணிய வருடமும்** சுவேதமலையிலிருந்து நீலமலைவரையில் **இரமிய வருடமும்,** மேருமலையைச் சூழ்ந்த இடம் **இளாவிருத வருடமும்,** மாலிய வான் மலையிலிருந்து கீழ்க்கடல் வரையில் **பத்திராசுவ வருடமும்,** கந்தமாதன மலையிலிருந்து மேல்கடல் வரையில் **கேதுமால வருடமும்,** நிடதமலையிலிருந்து ஏமகூடமலை வரையில் **அரிவருடமும்,** ஏமகூடம் முதல் இமயம் வரையில் **கிம்புருட வருடமும்,** தென் கடலிலிருந்து இமயம் வரையில் **பாரத வருடமும்** ஆகும்.

**கேதுமால வருடமும், பத்திராசுவ வருடமும்** தனித்தனி முப்பத்து நாலாயிரம் யோசனை அகலமும், மற்றை ஏழு வருடங்களும் தனித்தனி ஒன்பதினுயிரம் யோசனை அகலமும் உள்ளன. பாரத வருடந் தவிர மற்றை வருடங்களில் வசிப்போர்க்கு அவை தேவருலகத்தை ஒப்பனவாகும். **குருவருடத்தில்** இருப்போர், ஒரு தாய் வயிற்றில் ஒரே சமயத்தில் ஆணும் பெண்ணுமாய்ப் பிறந்து தம்முள் கூடுவர்; பச்சை நிறம் கொண்டவராய், தேவ தருவின் காய் கனிகளை உண்டு, பதின்மூவாயிரம் வயதுடன் வாழ்வர். அதன் வடபாகத்தில் பதின்மூவாயிரம் வயதுடைய வெண்ணிறம் கொண்ட சித்தர்களும், சாரணர்களும் முனிவர்களும் வசிப்பர். **பத்திராசுவ வருடத்தில்** இருப்போர் செம்மை நிறங்கொண்டு காய் கனி புசித்து பதின்மூவாயிரம் வயதுடன் வாழ்வர். **இரணிய வருடத்தில்** இருப்போர் சந்திரன் நிறங்கொண்டு, பழங்களைப் புசித்துப் பன்னீராயிரத்து ஐந்நூறு வயதுடன் வாழ்வர். **இரமிய வருடத்தில்** இருப்போர் கருங்குவளை மலர் நிறம்கொண்டு ஆலம்பழம் புசித்து பன்னீராயிரம் வயதுடன் வாழ்வர். **இளாவிருத வருடத்தில்** இருப்போர்

1 வருடம் - கண்டம்.

வெண்ணிறம் உடையவராய்க் கருப்பஞ்சாறு உண்டு, பன்னீராயிரம் வயதுடன் இருப்பர். **கேதுமால வருடத்தில்** இருப்போர் செங்கழுநீர் மலர் நிறங்கொண்டு கண்டகிப்பழம் உண்டு, பதினுயிரம் வயதுடன் வாழ்வர். **அரி வருடத்தில்** இருப்பவர் சந்திரன் நிறங்கொண்டு, காய் கனி புசித்துப் பதினுயிரம் வயதுடன் வாழ்வர். **கிம்புருட வருடத்தில்** இருப்போர் வெண்ணிறத்தினராய் இத்திப்பழம் உண்டு, பதினுயிரம் வயதுடன் வாழ்வர்.

**திருக்கயிலாயமலை**

ஏமகூடத்திற்குத் தென்பாலும் இமயத்துக்கு வடபாலும் உள்ள இக்கிம்புருட வருடத்தில் **திருக்கயிலாயமலை** அமைந்துள்ளது. அதன்மேல் உமாதேவியாரோடு சிவபெருமான் எழுந்தருளியிருப்பர். அம்மலை ஊழிக்காலத்தில் அண்டத்தின் அடிமுடி அளவும் வளரும்.

இந்த எட்டு வருடங்களில் உள்ளவர் நரை, திரை, மூப்பு, துன்பம், நோய் முதலியவைகளை எய்தார்; வலிமை, நிறை, அறிவு, உடல், ஆயுள், முயற்சி, சிறப்பு முதலிய எல்லாவற்றையும் நான்கு யுகங்களிலும் அடைவர்; பாரத வருடத்தில் பிறந்து செய்த வினைப்பயன்களை அனுபவிப்பர். அங்கே மழை பெய்யாது.

**பாரதவருடம்**

பாரத வருடத்திலுள்ளோர் உழவுத்தொழிலையும், மற்றைத் தொழில்களையும் புரிந்து, புண்ணிய பாவங்களை ஈட்டிக் கடவுளினுடைய அருளைப் பெற்று உய்வர். பெருமை, வலிமை, சீர், அறிவு, நிறை, ஆயுள், வடிவம், உணவு, செய்கை என்னும் இவைகளை யுகங்களுக்கேற்பப் பெறுவர். காய், கனி, கிழங்குகளையும், மலை நெல் முதலிய பயிரின் விளைவுகளையும், பிறவற்றையும் உண்பர். மற்றை எட்டு வருட வாசிகளும், தேவர்களும், நரகர்களும் பாரத வருடத்திற்குச் சென்று புண்ணிய பாவங்களைப் புரிந்து, அவைகளுக் கேற்பப் பயன்களை அனுபவிப்பர். ஆதலால், பாரத வருடமே நல்வினை தீவினைகளுக்கெல்லாம் காரணமாகிய இடமாகும். முனிவர்களும் தேவர்களும்

இங்கே வந்து தவங்களையும் பூசைகளையும் செய்து அவரவர்களுக்கு உண்டாகும் குறைகளை நீக்கிக்கொள்வர்.

**சம்புத் தீவு**

பாரதன் என்பவனுக்கு **இந்திரன், கசேருகன், தாமிர பன்னன், கபத்தி, நாகன், சௌமியன், கந்தருவன், வருணன்** என்னும் புதல்வர் எண்மரும், **குமரி** என்னும் ஒரு பெண்ணும் உண்டு. பாரதன் தான் ஆண்ட பாரதகண்டத்தை ஒன்பது பிரிவாகப் பிரித்து ஒவ்வொருவருக்கும் கொடுத்தான். அவற்றில் **குமரி கண்டமே** மிகச் சிறந்ததாகும். மற்றை எட்டுக் கண்டங்களும் சிறப்பிலவாம். கங்கை, கவுதமி, யமுனை, குமரி, சரசுவதி, காவிரி, நர்மதை, பாலாறு, துங்கபத்திரை, பாஞ்சாலி, சரயூ, வேணி, பொருநை, பெண்ணை முதலிய பற்பல ஆறுகளையும், மகேந்திரம், பொதியம், சையம், சத்திமான், விருட்சம், பாரியாத்திரம், விந்தம் என்னும் ஏழு மலைகளையும், காஞ்சி முதலிய ஏழு முத்தி நகரங்களையும், சிவஸ்தலங்கள் ஆயிரத்தெட்டையும், வைதிக வொழுக்கங்களையும் கொண்டு சத்தியநெறி பொருந்தியிருப்பது குமரி கண்டமேயாகும். இவைகள் யாவும் **சம்புத் தீவைச்** சேர்ந்தனவாகும்.

**சாகத்தீவு**

சம்புத்தீவுக்கப்பால், பாற்கடலால் சூழப்பட்ட **சாகத்தீவு** உள்ளது. அதனை **மேதாதி** என்பவன் அரசு புரிந்தான். அவன் தன் குமாரர்களாகிய **சாந்தவ்யன்** முதலிய எழுவருக்கும் அவரவர் பெயரால் அத்தீவை ஏழு கண்டமாக்கிக் கொடுத்தான். அங்கே சோமகம் முதலிய ஏழு மலைகளும், சிவை முதலிய ஏழு நதிகளும் உள்ளன. அங்கு வாழ்வோர் ஆரியர், விந்தர், குகுரர் என்போர். அவர்களுக்குத் தெய்வம் வாயு ஆகும்.

**குசைத்தீவு**

இதற்கப்பால், தயிர்க்கடலால் சூழப்பட்ட **குசைத்தீவு** உள்ளது. அதனை **வபுட்டு** என்பவன் அரசு புரிந்தான். அவன் தன் குமாரர்களாகிய **சுப்பிரதன்** முதலிய எழுவருக்கும் அவரவர் பெயரால் அத்தீவை ஏழுகண்டமாக்கிக் கொடுத்தான். அங்கு

உன்னதம் முதலிய ஏழு மலைகளும், சோனை முதலிய ஏழு நதிகளும் உள்ளன. அங்கு வாழ்வோர் தார்ப்பகர், கபிலர், சாரணர், நீலர், தண்டர், விதண்டர் என்போர். அவர்களுக்குத் தெய்வம் வாயு ஆகும்.

### கிரவுஞ்சத்தீவு

இதற்கப்பால், நெய்க்கடலால் சூழப்பட்ட **கிரவுஞ்சத்தீவு** உள்ளது. அதனைச் **சோதிட்டு** என்பவன் அரசுபுரிந்தான். அவன் தன் குமாரர்களாகிய **சாரணன்** முதலிய எழுவருக்கும், அவரவர் பெயரால் அத்தீவை ஏழு கண்டமாக்கிக் கொடுத்தான். அங்குக் குசேசயம் முதலிய ஏழு மலைகளும், சிவை முதலிய ஏழு ஆறுகளும் உள்ளன. அங்கு வாழ்வோர் தபதர், சடாவகர், மந்தேகர், அநேகர் என்போர். அவர்களுக்குத் தெய்வம் நான்முகன் ஆகும்.

### சான்மலித்தீவு

இதற்கப்பால், கருப்பஞ்சாற்றுக் கடலால் சூழப்பட்ட **சான்மலித்தீவு** உள்ளது. அதனைத் **துதிமான்** என்பவன் அரசு புரிந்தான். அவன் தன் குமாரர்களாகிய **குசலன்** முதலிய எழுவருக்கும் அவரவர் பெயரால் அத்தீவை ஏழு கண்டமாக்கிக் கொடுத்தான். அங்குத் திமரம் முதலிய ஏழு மலைகளும், குமுதை முதலிய ஏழு நதிகளும் உள்ளன. அங்கு வாழ்வோர் புட்கலாதர், புட்கரர், தனியர், சிசிரர் என்போர். அவர்களுக்குத் தெய்வம் சிவபெருமான் ஆகும்.

### கோமேதகத்தீவு

இதற்கப்பால், தேன் கடலால் சூழப்பட்ட **கோமேதகத் தீவு** உள்ளது. அதனை **அவ்வியன்** என்பவன் அரசு புரிந்தான். அவன் தன் குமாரர்களாகிய **விமோகனன்** முதலிய எழுவருக்கும் அவரவர் பெயரால் அத்தீவை ஏழு கண்டமாக்கிக் கொடுத்தான். அங்குச் சிங்கம் முதலிய ஏழு மலைகளும், அபாதி முதலிய ஏழு நதிகளும் உள்ளன. அங்கு வாழ்வோர் மந்தகர், ஆமங்கர், மாகதர், மானசர் என்போர். அவர்களுக்குத் தெய்வம் சந்திரன் ஆகும்.

**புட்காரத்தீவு**

இதற்கப்பால், சுத்த நீர்க்கடலால் சூழப்பட்ட **புட்கரத்தீவு** உள்ளது. அதனைச் **சவனன்** என்பவன் அரசுபுரிந்தான். அவன் தன் குமாரர்களாகிய தாதகி, மாபீதன் என்னும் இருவருக்கும் அவரவர் பெயர்களால் அத்தீவை இரண்டு கண்டமாக்கிக் கொடுத்தான். அங்கே இடபம் முதலிய ஏழுமலைகளும், குடிலை முதலிய ஏழுநதிகளும் உள்ளன. அங்கு வாழ்வோர் நகரர் நாகர் என்போர். அவர்களுக்குத் தெய்வம் சூரியன் ஆகும்.

**மானசோத்தரம்**

இப்புட்கரத்தீவின் முடிவில் **மானசோத்தரம்** என்னும் மலை ஐம்பதினாயிரம் யோசனை உயரம் உடையதாய் வண்டி உருளை போல் வளைந்து உள்ளது. அதன் எட்டுத் திசைகளிலும், எட்டுத் திக்குப்பாலகர்களும், அவரவர்களுக்குரிய எட்டு நகரங்களும் உள்ளன. இவ்வாறே ஒவ்வொரு கடலின் முடிவிலும் ஒவ்வொரு மலை அவற்றைச் சூழ்ந்து நிற்கும். சாகத்தீவு முதலிய ஆறு தீவு களில் வாழ்பவர்களுக்கு நரை, திரை, மூப்புத் துன்பங்கள் இல்லை. அவர்கள் பதினாயிரம் வயதுடன் வாழ்வர்.

**சக்கரவாளகிரி**

மானசோத்தரம் என்னும் மலையைச் சூழ்ந்து **பொற்பூமியும்,** அதனைச் சூழ்ந்து, மாணிக்க நிறமுடைய **சக்கரவாளகிரியும்** உள்ளன. அம்மலையின் உட்புறம் ஒளியுள்ளதாயும், வெளிப் புறம் இருண்டதாயும் இருக்கும். அதில் வசிப்போர் இயக்கர், இராக்கதர், பேய்கள் என்போர்.

**மகா கைலாச மலை**

*சக்கரவாளகிரிக்கு அப்பால் **பெரும்புறக் கடலும்,** அதற் கப்பால் **இருட்பூமியும்** உள்ளன. அதற்கப்பால் **அண்டச்சுவர்** இருக்கிறது. இருட்பூமியில் அறிவில்லாதவர்களும், தற்கொலை செய்து கொண்டவர்களும் கிடந்து வருந்துவார்கள். இவ்வண்

---

* சக்கரவாளகிரியை அடுத்து இருட்பூமியும். அதனை அடுத்துப் பெரும் புறக்கடலும் அதனை அடுத்து அண்டச் சுவரும் உள்ளன என மிருகேந்திராக மம் கூறுகிறது.

டச்சுவரின் அருகில் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் **மகா கைலாசமலை** இருக்கிறது. அங்கே, சிவகணங்கள் வசிப்பார்கள். சம்புத்தீவிலிருந்து அண்டச்சுவர் வரையில் நிலவுலகம் எனப்படும்.

**புவர்லோகம் - கதிரவன் உலகம்**

நிலவுலகுக்கு மேலே ஓரிலக்கம் யோசனையில் **கதிரவன் உலகம்** இருக்கிறது. கதிரவனுடன் முப்பத்து முக்கோடி தேவர்கள் சஞ்சரிப்பார்கள். நிலவுலகத்திற்கும் கதிரவன் உலகத்திற்கும் இடையில் ஒன்றற்கொன்று மேலாக முறையே கணர் (பிசாசங்கள்), குய்யகர் (தேவசாதியில் ஒருவகையினர்), தச வாயுக்கள், சத்தமேகங்கள், கிம்புருடர், கருடர், சித்தர், விஞ்சையர், தேவ கங்கை ஆதியோர் சஞ்சரிக்கும் இடங்கள் உள்ளன.

**திங்கள் உலகம்**

கதிரவன் உலகத்துக்கு மேலே ஓர் இலக்கம் யோசனையில் **திங்கள் உலகம்** இருக்கிறது.

**விண்மீன் உலகம்**

திங்கள் உலகத்துக்கு மேல் ஓர் இலக்கம் யோசனையில் **விண்மீன் உலகம்** இருக்கிறது.

**புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி உலகங்கள்**

விண்மீன் உலகத்துக்கு மேலே தனித்தனி இரண்டாயிரம் யோசனை தூரத்தில் முறையே **புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி** என்னும் இவர்களின் உலகங்கள் உள்ளன.

**சப்தமுனிவர், துருவன் உலகங்கள்**

அவற்றிற்கு மேல் **ஏழு முனிவர்கள்** உலகமும் **துருவனுடைய உலகமும்** ஒவ்வோர் இலட்சம் யோசனையில் உள்ளன. இதுவரையில் **புவர் உலகம்** எனப்படும். இங்கே ஏழுவகை மருத்துக்கள் வசிப்பார்கள். இப்புவர் உலகம் பூமியிலிருந்து பதினைந்து லட்சம் யோசனை தூரமுள்ளது.

**சுவர் உலகம்**

புவர் உலகத்துக்கு மேலே **சுவர் உலகம்** (தேவலோகம்) எண்பத்து ஐந்து இலக்கம் யோசனை தூரத்தில் உள்ளது. அதில் தேவர்களும், பிறரும் போற்ற இந்திரன் அரசுபுரிவன்.

**மகலோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம்**

சுவர் உலகத்திற்கு அப்பால் இரண்டு கோடி யோசனை தூரத்தில் **மகலோகம்** இருக்கிறது. அங்கு மார்க்கண்டர் முதலிய முனிவர்கள் உளர். மகலோகத்திற்கு அப்பால் எட்டுக் கோடி யோசனை தூரத்தில் **சனலோகம்** இருக்கிறது. அங்குப் பிதிர்க்கள் உளர். சனலோகத்திற்கு மேல் பன்னிரண்டு கோடி யோசனை தூரத்தில் **தவலோகம்** இருக்கிறது. அங்குச் சனகர் முதலிய மகா முனிவர்கள் உளர். தவலோகத்திற்குமேல் பதினாறு கோடி யோசனை தூரத்தில் **சத்திய லோகம்** இருக்கிறது. அது நான்முகன் படைப்புத் தொழில் செய்யும் இடமாகும்.

**பிரம விட்டுணு ருத்திரலோகங்கள்**

சத்திய லோகத்திற்கு மேல் மூன்று கோடி யோசனை தூரத்தில் **பிரமலோகம்** இருக்கிறது. அதற்குமேல் மூன்று கோடி யோசனையில் **விட்டுணுலோகம்** இருக்கிறது. அதற்கு மேல் நான்கு கோடி யோசனை தூரத்தில் **சிவலோகம்** இருக்கிறது. சிவலோகத்துக்குமேல் **அண்டகோள ஓடு** ஒரு கோடி யோசனை உயரம் இருக்கிறது. இந்த மண் (பிருதிவி) அண்டத்திலே நூற்றெட்டுப் புவனங்களும், உருத்திரர்களுடைய தானங்களும் உள்ளன.

வேத சிவாகமங்களும், பிறநூல்களும் அண்டங்களின் இயல்பை வெவ்வேறு விதமாகக் கூறுகின்றன. அவை சிருஷ்டி பேதமே ஆகும். அவற்றை நன்கு ஆராய்ந்து நான் உனக்குச் சொன்னேன். முன் சிவபெருமான் உனக்குத் தந்தருளிய ஆயிரத்தெட்டு அண்டங்களும் நான் கூறிய இவ்வண்டத்தைப் போன்றனவே ஆகும். மைந்தனே! நீ அவற்றைச் சென்று

காண்பாயாக'' என்று சுக்கிராசாரியர் சொல்ல, சூரபன்மன் மிகமகிழ்ச்சியோடு கேட்டு அறிந்தான்.

திருவிருத்தம்–67
ஆகத் திருவிருத்தம்–789

—oo—

## 12. திக்கு விசயப் படலம்

### சுக்கிரனிடம் விடைபெற்றுப் புறப்படுதல்

சுக்கிராசாரியரின் திருவடிகளைச் சூரபன்மனும் சிங்கமுகனும் வணங்கி விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டு அசுர சேனைக் கடலுள் புகுந்தார்கள். அதுகாறும் படைகளைக் காவல் புரிந்துகொண்டிருந்த தாரகன், சூரபன்மனையும் சிங்கமுகனையும் வந்து வணங்கி நின்றான். சூரபன்மன், தனக்கு அசுரகுரு உபதேசித்தவைகளை யெல்லாம் தாரகனுக்கு எடுத்துரைத்தான். அவற்றைக் கேட்ட தாரகன், "இனிப் பகைவர்களை விரைந்து சென்று வெல்லுதலே கடன்'' என்றான்.

### மாயை வாழ்த்திச் செல்லுதல்

அப்போது, மாயையானவள், தன் புதல்வர்கள் மூவரும் இறைவனிடம் பெற்ற வரங்களையும் வலிமையையும் அறிந்து மகிழ்வுடன் ஆகாயத்தில் வந்து தோன்றினாள். சூரபன்மன், தன் இளவல்களோடும் அசமுகியோடும் சென்று அவளை வணங்கினான். மாயை, அவர்களைக்கண்டு பெற்ற நாளினும் பெரிதும் மகிழ்ந்து அவர்களுக்கு ஆசிகூறி, "மைந்தர்களே! நீங்கள் செய்த யாகங்களையும், சிவபெருமான் உங்களுக்குக் கொடுத்தருளிய வரங்களையும் கேள்வியுற்று அன்போடு உங்களைக் காண்பதற்கு இங்கு வந்தேன். நீங்கள் உங்கள் வலிமையினால் இந்திரன் முதலியோரை வென்று, எல்லா உலகங்களையும் அரசாண்டு நிலவுலகில் நீடூழி வாழ்வீராக. நீங்கள் ஏதேனும் மாயைபுரிய எண்ணினால் என்னை அன்புடன் நினையுங்கள். அப்பொழுதே நான் வந்து நீங்கள் விரும்பினவற்றைச் செய்துமுடிப்பேன். நீங்கள் யாவரும் ஒற்றுமையுடன் இருப்பீர்களாக'' என்று கூறி, புதல்வர்கள் வணங்கச் சென்றாள்.

**அளகாபுரி செல்லுதல்**

மாயை சென்றதும், சூரபன்மன் அசுரர்களை அழைத்து, "நம் சேனைகள் அளகாபுரிக்குச் செல்லும்படி பறை அறைக" என்று கட்டளையிட்டான். பறை ஒலிகேட்ட அவுணப்படைகள் வடதிசை நோக்கி ஊழிக்கடல்போல ஆரவாரஞ் செய்து கொண்டு புறப்பட்டன. வன்குணம் பொருந்திய அசுரப் படைகளும், கடலிலும் விண்ணிலும் செல்லும் ஆற்றல் வாய்ந்த குதிரைப் படைகளும், மதங்கொண்ட யானைப் படைகளும், மலை முதலிய இடங்களில் செல்லும் அளவற்ற தேர்ப்படைகளும் அளகாபுரியை அடைந்தன.

அப்பொழுது சூரபன்மன், சிவபெருமானால் அளிக்கப்பெற்றதும், சகல ஆற்றல் வாய்ந்ததும், கதிரவன் தேரினும் சிறப்புடையதும், மிகவொளியுடையதும், விசாலமானதும், இமைப்பொழுதில் எங்கும் சென்று திரும்பக்கூடியதும், மிகுந்த அறிவுடையதும், குறிப்பிற் செல்வதும், ஒரு கோடி குதிரைகள் பூட்டப்பெற்றதும், அளவற்ற அழியாத பல சாரதிகளைப் பெற்றதும் ஆயுதங்களைத் தாங்கப்பெற்றதும், என்றும் அழியாது இருப்பதும் ஆகிய **இந்திரஞாலம்** என்னும் தேரின்மேல் அவுணர்கள் வணங்கப் புறப்பட்டுச் சென்றான். சிங்கமுகன் பல்லாயிரம் யாளிகளும், குதிரைகளும், பூதங்களும் பூண்ட ஒரு தேரின்மேல் ஏறிச் சென்றான். தாரகன் பதினாயிரம் குதிரை பூண்ட ஒரு தேரின்மேல் ஏறி ஆலகால விஷம்போலச்சென்றான். கணக்கற்ற அசுரப்படைகள், பதினெண்வகைப்படைக்கலங்களை யேந்திக் கடல்போல் எழுந்து சூரபன்மன் முதலிய மூவரையும் சூழ்ந்து சென்றன. சூரபன்மன் ரத, கஜ, துரக, பதாதியாகிய நால்வகைப் படைகள் தன்னைச் சூழ்ந்துவர நடுவே சென்றான். இவ்வாறு சேனைகளோடு சூரபன்மன் சென்று குபேரனுடைய நகரத்தை வளைத்துக் கொண்டான்.

**குபேரனை அடிமைப் படுத்துதல்**

அசுரப் படைகள் நகரை வளைத்துக்கொண்ட செய்தியை அறிந்த தூதர்கள் விரைந்து குபேரனை அடைந்து அவன் பாதங்களை வணங்கி, "சூரபன்மன் நம் நகரத்தை வளைத்துக் கொண்

டான்; அஃது இப்பொழுதே அழியும்போலும்; இனி நாம் தாழ்க்காது சேனைகளோடு போருக்கு எழவேண்டும்'' என்றார்கள். அதைக் கேட்ட குபேரன் நடுநடுங்கி, "அசுரர்கள் சிவபெருமானிடத்தில் வரம் பெற்றிருக்கிறார்கள்; அவர்களை நாம் வெல்லுதல் கூடாது; ஆதலால், அவர்களைப் புகழ்ந்து ஆசி சொல்லுதலே கடன்'' என்று கூறி விரைந்தெழுந்து, புட்பக விமானத்தில் ஏறிச்சென்று சூரபன்மனை அடைந்து வணங்கித் துதித்து, "யான் உமக்கு அடியவன்'' என்றான். சூரபன்மன், "நீ இந்நெறி தவறாதிருப்பாயாக!'' என்று கூறி, அவனை அனுப்பினான். அப்போது அவுணப்படைகள் மகிழ்ந்து ஆரவாரம் செய்தன; அளகாபுரியில் புகுந்து நிதிகளையும், மணிகளையும், விமானங்களையும், ஆயுதங்களையும், பிறவற்றையும் கவர்ந்தன. அளகாபுரி அழகை இழந்தது. அதனைப் பார்த்துக் குபேரன் நாணமடைந்து பேசாது திரும்பி நகருட் சென்றான்.

### சுவர்க்கத்தைக் கொளுத்துதல்

சூரபன்மன் அளகாபுரியைவிட்டு வடகிழக்குத் திசையை அடைந்து, "இஃது ஈசானஉருத்திரர் வீற்றிருக்கும் தலம்'' என்று எண்ணி, அதனைவிட்டு இந்திரன் இருக்கும் கீழ்த்திசையை அடைந்தான். இந்திரன் சூரபன்மன் வருவதை அறிந்து வருந்தி சுவர்க்கத்தில் போய் மறைந்துகொண்டான். அதை அறிந்து, சூரபன்மன் சுவர்க்கத்தையே கொளுத்திவிட்டு அவ்விடத்தினின்றும் நீங்கினான்.

### அக்கினி தேவனுடன் பெரும் போர்

பிறகு, சூரபன்மன் தன் சேனைகளோடு அக்கினிதேவன் நகரத்தை அடைந்தான். அதனையறிந்த அக்கினிதேவன் மிகக் கோபங்கொண்டு பல கோடி வீரர் தன்னைச் சூழச் சூரபன்மனை எதிர்த்தான். கடும் போர் நடந்தபின் அக்கினிதேவன் படைகள் தோற்றன. உடனே, அக்கினிதேவன் பேருருவம் தாங்கி, "சூரனுடைய சேனைகளை இன்றைக்கே யான் அழிப்பேன்'' என்று சூளுரை கூறி, அசுரர்களை வளைந்து அழிப்பானாயினான். சடசட என்னும் ஒலியுடன் சேனைகளை அக்கினிதேவன் அழிக்கும்போது தாரகன் கோபங்கொண்டு தேருடன் வாயு வேகத்

தில் வந்து எதிர்த்து வில்லை வளைத்து, "அக்கினியையும், தேவர்களையும், பிறரையும் இப்பொழுதே அழிப்பேன்" என்று சிவப் படைக்கலத்தை வழிபாடு செய்து எடுத்தான். அக்கினிதேவன் அதனைப் பார்த்து, "இவன் இச்சிவப்படைக்கலத்தைத் தொடுத்தால் உலகமெல்லாம் அழியும்; நானும் அழிவேன்; நான்முகன் முதலிய தேவர்களும் இன்றே அழிவார்கள்" என்று கவலையுற்றுத் தன் பேருருவத்தைக் குறுக்கிக் கொண்டான்; தாரகனுக்கு முன்வந்து, கைகளைக்கூப்பி வணங்கி, "சிவப்படைக்கலத்தை என்மேல் விடும்படி வழிபாடு செய்து எடுத்தாய்; அதனை எந்தப் புவனத்திலுள்ள உயிர்களும் எதிர்த்து நிற்க முடியாது; அதனை விடுத்தால் உலகம் எல்லாம் அழியும்; அப்படைக்கலத்துக்குத் தலைவனாகிய கடவுளும் பழிபடுவர்; ஆதலால், அப்படைக் கலத்தை விடாதே; என் பிழையைப் பொறுப்பாய்" என்று துதித்து நின்றான்.

தாரகன் அம்மொழிகேட்டுக் கோபம் நீங்கிச் சிவப்படைக் கலத்தை அக்கினிமேல் செலுத்தாது நிறுத்தினான். அசுரர்கள் அக்கினியைக் கொல்ல விரைந்து சூழ்ந்தார்கள். தாரகன் அவர்களை விலக்கி, "நீ நம் ஏவலின்வழி நிற்பாய்; உன்னுடைய நகரத்திற்குப் போவாயாக" என்று விடுத்தான். அசுரர்கள் அக்கினி தேவனுடைய நகரத்துட்புகுந்து செல்வங்களை எல்லாம் அள்ளிக்கொண்டு மீண்டார்கள். அதனைக் கண்ணுற்ற அக்கினி தேவன் நாணமடைந்து தன் நகரிற் போயினான். தாரகன் அந் நகரைவிட்டு நீங்கினான்.

### எமபுரிக்குச் செல்லுதல்

சூரபன்மன் அவற்றையெல்லாம் கண்டு எமபுரிக்குத் தேரைச் செலுத்தப் **பலிங்கன்** முதலிய பாகர்களுக்குக் கட்டளையிட்டான். தேர் இயமன் நகரை நோக்கிப் புறப்பட்டது. சேனைகளும் முரசங்களும் ஆர்த்தன. கொடிகள் விண்ணுலகத்தை முட்டின. தூசிப்படைகள் இயமபுரியை அடைந்தன. சூரபன்மன் வரவை உணர்ந்த ஒரு தூதுவன் இயமனிடம் போய் முறையிட்டான். இயமன் இடியேறுற்ற நாகம்போல் ஏங்கி நடுங்கி, "குபேரனும் அக்கினி தேவனும் சூரபன்மனை எதிர்கொண்டு துதித்துச் சென்றார்கள்; நானும் அப்படியே செய்வேன்"

என்று கூறிப் படைகள் சூழச் சூரபன்மனை அடைந்து வணங்கி வாழ்த்தி நின்றான். சூரபன்மன் மகிழ்ச்சி அடைந்து, "நம்முடைய பணிகளைச் செய்துகொண்டு உன் உறவினரோடும் இங்கே இருப்பாயாக" என்று கட்டளை யிட்டான். அசுரசேனைகள் இயமபுரியில் புகுந்து அங்குள்ள செல்வங்களைக் கொள்ளை யிட்டுச் சென்றன.

**நிருதி**

சூரபன்மன் தன் படைகளோடு தென்மேற்குத் திசையிலிருக்கும் நிருதியின்மேல் விரைந்து சென்றான். அதனைக் கண்ட நிருதி சேனைகளோடு சூரபன்மன் முன்வந்து வணங்கி, "நான் உன் கிளையைச் சேர்ந்தவன்" என்று கூறி, தாரகன் பக்கத்தில் போய் நின்றான். சூரபன்மன் அதனைக் கண்டு மகிழ்ந்து, நிருதியின் நகரத்தை நீங்கி அப்பால் சென்றான்.

**வருணன் - வாயு -சத்த பாதலம்**

சூரபன்மன் வருகையைக் கண்டு அஞ்சிய **வருணன்** கடலிலும், **வாயு** இருட் பூமியிலும் போய் நுழைந்தனர். சூரபன்மன் இவ்விருவரின் இடங்களுக்குச் சென்று, ஆங்குள்ளனவற்றைச் சூறை கொண்டான். பிறகு **சத்த பாதலங்களுக்குச்** செல்ல, ஆங்கு இருந்த அவுணர் முதலியோர் துதிக்க, அவர்களுக்கு அருள் செய்தான். கடைசியாக **நாகர்** உலகத்திற்குச் சென்றான்.

**ஆதிசேடன் தோல்வி**

ஆதிசேடன் சூரபன்மனைக் கோபத்தோடு எதிர்த்தான். சூரபன்மன் தன்படைகளால் வெற்றிகொள்ள, அவன் வியந்து போற்ற அவனுடைய இருக்கையில் ஒருநாள் இருந்தான்; தேவர்கள் தர ஆதிசேடன் வைத்திருந்த அமிர்தத்தை வலிதில் வாங்கித் தம்பியர்களோடு உண்டான்; பிறகு மற்றைப் பிலங்கள்தோறும் சென்று அங்கங்குள்ள புதுமைகளை வியப்புடன் கண்டு, சென்ற திசைகளெல்லாவற்றினும் தன்புகழை நிலை நாட்டிப் பூவுலகில் வந்து சாகத்தீவைக் கடந்து பாற்கடலுக்குச் சென்றான்.

**திருமாலுடன் போர்**

சூரபன்மன் படைகள், நிலமகளும் திருமகளும் துதிக்கத் திருமால் ஆதிசேடன் மேல் அறிதுயில் கொண்டிருக்கும் திருப்

பாற் கடலை விரைந்து அடைந்து, அக்கடலை ஆரவாரத்தோடு கலக்கின. நிலமகளும் திருமகளும் அஞ்சித் திருமாலைத் தழுவிக் கொண்டார்கள். திருமால் துயில் நீங்கிப் பெருங்கோபங் கொண்டு, கருடனை நினைத்தார். கருடன் அங்கு வந்தான். திருமால் பஞ்சாயுதங்களையும் ஏந்திக் கருடன்மீது ஏறிச் சென்று அசுர சேனையை நோக்கிக் கணைகளை [விடாமழை போலப் பொழிந்தார். அசுரப்படைகள் வலிமை குன்றிச் சூறைக் காற்றால் அடியுண்ட மேகங்கள் போல ஆயின. திருமாலைச் சூழ்ந்த அசுரர்களின் தலைகள் கீழே உருண்டன; தோள்களும், கைகளும் வீழ்ந்தன; குருதி வெள்ளம் ஓடிக் கடலை அடைந்தது. திருமாலின் போர்த்திறம் கண்டு தேவர்கள் ஆரவாரம் செய்தார்கள்.

அவற்றைக் கண்ட தாரகன், தன் மாபெரும் வில்லை ஏந்தித் திருமால் முன் வந்து கணைகளைப் பொழிந்து ஆரவாரம் செய்தான். திருமால், எண்ணற்ற கணைகளைத் தாரகன்மீது பொழிந்து அவன் தேரையும் பாகனையும் வீழ்த்தினார். தாரகன், கருடன் மீது ஆயிரம் கணைகளை எய்து வருத்தினான். திருமால் பல மாய வடிவங்கொள்ளத் தாரகனும் பல்வேறு மாய வடிவங்கொண்டு நான்குநாள் வரை போர்புரிந்தான். திருமால், கோடி கணைகள் எய்து தாரகனின் வில், தேர், குதிரை முதலியவைகளை அழித்தார். தாரகன், கடுங்கோபங்கொண்டு ஒரு தண்டாயுதத்தை எடுத்துக்கொண்டுபோய்த் திருமாலை எதிர்த்தான். திருமால் கணக்கற்ற கணை மழைகளைப் பொழிந்தார். தாரகன் அவைகளைத் தண்டினால் விலக்கிச் சென்றான். அதனைக்கண்ட திருமால் தம் சக்கரப் படையைத் தாரகன் மீது விடுத்தார். இமைப்பொழுதில் எல்லா அண்டங்களையும் அழிக்கும் ஆற்றல் கொண்ட அச்சக்கரப்படை தாரகன் கழுத்தில் விழுந்து செம்பொற்பதக்கமாக ஆயிற்று. தவத்தின் ஆக்கம்தான் என்னே!

திருமால் அதனைக் கண்டு வியந்தார்; சிவபெருமான் அருளிய வரத்தை நினைத்துத் தாரகன் ஆற்றலை உணர்ந்தார்; "சிவபெருமான் தந்தருளிய சக்கராயுதம் உன்கழுத்தில் ஆபரணமாயிற்று; ஆதலால், வெற்றியும் உன்னுடையதே; இனிவேறு போரு முண்டோ! உங்கள் பெருமையைப் பேச வல்லவர் யாவர்?

எமக்கும் நீங்கள் சுற்றத்தவர்களே '' என்று பற்பல ஆசி மொழி களைக் கூறிச் சென்றார். அசுரர்கள் அதனைக்கண்டு ஆரவாரம் செய்து மகிழ்ந்தார்கள்; தேவர்கள் துயரக்கடலில் ஆழ்ந்தார்கள். தாரகன் வேறொரு தேர்மீது ஏறிச் சூரபன்மன் முன் சென்று, நிகழ்ந்தனவற்றை யெல்லாம் கூறினான். சூரபன்மன், அவற்றைக் கேட்டு மகிழ்ந்து, அங்கிருந்து தன்படைகளோடு புறப் பட்டுச் சக்கரவாளகிரி வரையும் சென்று பார்த்து, ஆகாயவழி யாகக் கதிரவன் முதலியோர் ஆசி கூறச் சுவர்க்கத்தை அடைந் தான்.

**சுவர்க்கத்தின் மீது படை எடுத்தல்**

சூரபன்மன் சுவர்க்கலோகத்திற்கு வருவதை அறிந்த ஒற் றர்களில் சிலர், சூரபன்மன் முதலியோர் வருகையை இந்திர னுக்குச் சொன்னார்கள். இந்திரன் அஞ்சிப் பெருமூச்சுவிட் டான். '' சூரபன்மனை எதிர்த்தால் நான் அழிவேன். இங்கு இருப்பேனாயின் துன்பத்திலும் பழியிலும் மூழ்குவேன். ஆத லால், இவனை எதிர்த்து உயிர் விடேன். முன்னால் துன்பம் உற்றவர்கள் பின்னால் பெருமகிழ்ச்சி அடைவர். இதனைத் தீமை செய்கின்ற இவ்வசுரர்களிடத்தில் காண்பேன். சூரபன்மன் என் னைக் கண்டால் சிறையிடுவான்'' என்று பலவாறு எண்ணினான். பிறகு, இந்திரன் இந்திராணியோடு குயிலுருவம் கொண்டு ஆகாயத்தில் விரைந்து பறந்துபோயினான். அசுரர்கள் இந்தி ரனைத் தேடி அலைந்தனர். ஆனால், இந்திரன் கிடைக்கவில்லை. அசுரர்கள் தேவர்களைப் பிடித்து, அடித்துத் துன்புறுத்தித் தோள்களைக் கட்டி இழுத்துக்கொண்டு வந்து சூரபன்மன்முன் நிறுத்தினார்கள். தேவர்கள் சூரபன்மனை நோக்கி, '' அரசே ! நீ தவம்புரிந்து சிவபெருமான் அருள்பெற்றுத் திக்குப் பாலகர்கள் முதல் எல்லோரையும் வென்றாய். அத்தகைய பெருமை வாய்ந்த நீ எளியவர்களாகிய எங்களைத் துன்பப்படுத்துவது நன்றாகாது. நீ சினம் கொண்டால் தேவர்கள் உய்யமுடியாது ; உலகம் இப் பொழுதே அழியும். நீயே எங்கள் கடவுள்; எங்கள் அரசன்; நாங் கள் உறவு; நாங்கள் உன் பணிகளை நிறைவேற்றுவோம்'' என்று வணங்கித் துதித்தார்கள். சூரபன்மன் அவர்களைப் பார்த்து, '' உங்கள் செய்கை மிக நன்று '' என்று நகைத்து கட்டிய கட் டுக்களை அவிழ்ப்பித்து, '' இனி, நீர் நம்முடைய பணிகளைச்

செய்து கொண்டு இருப்பீர்களாக" என்று கூறி விடுத்தான். அசுரர்கள் இந்திரனுடைய செல்வங்களைக் கவர்ந்து சென்றார்கள். சூரபன்மன் தம்பியர்கள் சூழ, **மகலோகம், சனலோகம், தவலோகம்** என்னும் மூன்று உலகங்களுக்கும் சென்றான். ஆங்காங்குள்ள மார்க்கண்டேயர் முதலிய முனிவர்கள் புகழச் சூரபன்மன் சத்தியலோகத்தை அடைந்தான்.

**சத்தியலோகம் செல்லுதல்**

நான்முகன் சூரபன்மனுடைய வரவை அறிந்து நடுங்கினான்; முனிவர்கள் தன்னைச் சூழ, சூரபன்மனை அடைந்து, "நீடுழி காலம் வாழ்க, வாழ்க" என்று ஆசி கூறி, "அரசர்க்கு அரசே! நீ இங்குவர நான் என்ன தவத்தைச் செய்தேனோ? நீ சிவபெருமானை நோக்கித் தவம் செய்து பெறற்கரிய படைக்கலங்களையும் செல்வங்களையும் பெற்றுள்ளாய்; நீ திருமாலினையும், தேவர்களையும் உன் இளவலாகிய தாரகனைக் கொண்டு வெல்லச் செய்தாய்; உன்னை ஒத்தவர் உலகத்திலேயே கிடையாது; நீ என் மகனாகிய காசிபமுனிவனுடைய மகன்; ஆதலால் நான் உன் பாட்டன் ஆவேன்; உன் புகழ்கள் எல்லாம் என் புகழ்கள்; யான் பிறன் அன்று; இஃது உண்மை" என்று முகமன் பல கூறினான். நான்முகன், அழியாத ஆற்றல் பெற்ற வில்லையும் தேரையும் சூரபன்மனின் இளவல்களுக்குக் கொடுத்தான். அதனைக் கண்டு, சூரபன்மன் மகிழ்ந்து, நான்முகனை அங்கேயே இருக்கச் செய்துவிட்டு, வைகுண்டத்திற்குச் சென்றான்.

**வைகுண்டம் செல்லுதல்**

திருமால், தன் வைகுண்டம் வந்தடைந்த சூரபன்மனை நோக்கி, "நீ அழிவில்லாத வாழ்நாளோடு வாழ்வாய்" என்று ஆசியும் இன்சொற்களும் கூறினார். சூரபன்மன், அவ்வுரைகேட்டு மகிழ்ந்து, அவ்வுலக முழுவதையும் சுற்றிப்பார்த்துத் திருமாலை அங்கே இருக்கச் செய்துவிட்டுச் **சிவலோகம்** சென்றான்.

**சிவபெருமானை வணங்கி அருள்பெறுதல்**

சூரபன்மன், தன் படைவீரர்களை வெளியே நிறுத்திவிட்டுத் தம்பியர்களோடு எம்பெருமான் திருக்கோயில் புறங்கடை

வாயிலே அடைந்து, திருநந்திதேவர் அனுமதிபெற்றுப் பார்வதி சமேதராய் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் திருமுன் சென்று அன்போடு வணங்கித் துதித்து நின்முன். சிவபெருமான் சூரபன்மனைப் பார்த்து, "இனி, நீ ஏனைய அண்டங்களிலும் சென்று பார்த்துவிட்டு எண்டிசையும் புகழும்படி அரசு புரிந்து கொண்டு இருப்பாயாக!" என்று அருளிச் செய்தார். சூரபன்மன், சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளைத் துதித்து, விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்து சேனைகளுடன் சேர்ந்தான்.

**பிற அண்டங்களைக் காணுதல்**

பிறகு, சூரபன்மன் சேனைகளுடன் அண்டகோளகையை அடைந்தான். அங்கிருந்த வயிரவர்களாகிய உருத்திரர் அளவற்றவரைக் கண்டான். அவர்கள் சிவபெருமான் திருவருளை உட்கொண்டு அப்பாலுள்ள அண்டங்களுக்குச் செல்லும் வாயில்களைக் காட்டி விடுவிக்க, அங்கும் சூரபன்மன் சேனைகளோடு சென்முன்; அங்குள்ளோர் யாவரையும் வென்முன்; மற்றை அண்டங்களுக்கும் சிவகணங்களின் அருளினல் சென்று, ஆங்குள்ள தேவர்களை வென்முன்; பல வளங்களைக் கைப்பற்றினன்; பல அவுணர்களை அங்கங்கே நிறுத்தித் தன் அரசுரிமையை நடாத்தச் செய்தான்; தன் உறவினர்களை அண்டங்கள்தோறும் அரசர்களாக்கினன். பிறகு சூரபன்மன் துணைவர்களோடு மீண்டு இவ்வண்டப்பித்திகை வழியாக வந்து சுவர்க்கலோகத்தை அடைந்தான்.

திருவிருத்தம்–136
ஆகத் திருவிருத்தம்–925

——oo——

## 13. எதிர்கொள் படலம்

**அசுரேந்திரன் சூரபன்மனைக் காண விழைதல்**

முன்னர் தேவர்களால் வருந்திய அசுரர்கள், சூரபன்மன் திக்குவிசயம் செய்துகொண்டு சுவர்க்கம் வந்தடைந்தமையைக் கண்டு மகிழ்ந்தார்கள். சூரபன்மன் வரவை அசுரர்கள் அரச

ளுகிய **அசுரேந்திரன்,** தன் ஒற்றர் மூலம் அறிந்தான். அசுரேந்திரன், சூரபன்மன் பெற்ற ஆக்கத்தையும், சிவபெருமானின் கருணையையும் எண்ணிச் சேனைகளோடு சுக்கிராசாரியரை அடைந்தான்; அசுர குருவைப் பார்த்து, "நான் சூரபன்மனைக் காணச் செல்வேன். நீர் முன்னே சென்று என் வருகையையும், உறவு முறையையும், செயல்களையும் அவனுக்குச் சொல்லுவீராக" என்று கூறி அனுப்பினான்.

**சுக்கிரன் - சூரபன்மன்**

அசுரகுரு விமானமேறி முன்னே சென்றார். அசுரேந்திரன், சுற்றம் சூழ, அவருக்குப் பின்னே சென்றான். அசுரகுரு விமானத்தில் வருதலைச் சூரபன்மன் தொலைவிலேயே கண்டு எதிர் சென்று அழைத்து வணங்கினான். அசுரகுரு மகிழ்ச்சிகொண்டு, "உனக்கு வெற்றியும் செல்வமும் மேன்மேலும் பெருகுக" என்று ஆசீர்வதித்தார். சூரபன்மனின் இளவல்கள் இருவரும் வணங்கித் துதிக்க அவர்களுக்கும் அசுரகுரு ஏற்றவாறு ஆசிமொழி பகர்ந்தார். அசுரகுரு, சூரபன்மனுக்கு அசுரேந்திரன் வரவைக்காட்டி, "இவன் உன் தாயாகிய மாயையைப் பெற்றவன்; நுண்ணிய கேள்வியையுடையவன்; எண்ணில்லாத அசுரர்களைப் பாதுகாத்தவன்; இவன் இந்திரனிடம் பலநாள் போர் புரிந்து தோல்வி அடைந்தான்; அதனால் மேகத்தால் மறைக்கப்பட்ட கதிரவன்போல் வருந்தி இருந்தான்; தன் சிறுமை நீங்க உன்னுடைய ஆக்கத்தையே கருதியிருந்தான்; நீ யாகம் செய்து சிவபெருமானிடம் பெற்ற வரங்களைக் கேள்விப்பட்டு உள்ளம் பூரித்தான்; நீ திக்கு விசயம் செய்து வருவதை அறிந்து உன்னைக் காண இங்கு வருகிறான்" என்று சொன்னார். சூரபன்மன் அவ்வுரைகளைக் கேட்டு மகிழ்ச்சி கொண்டான்.

**சூரபன்மன் - அசுரேந்திரன்**

அப்போது அசுரேந்திரன் தன் சுற்றத்தோடு வந்து சூரபன்மனைத் தொழுது துதித்தான். சூரபன்மன் அவன் நலத்தினை வினவினான். அசுரேந்திரன் சூரபன்மனைப் பார்த்து, "அசுர குலத் தலைமை விளங்கும்படி தோன்றிய நீ இருக்கும்பொழுது நம்மிடம் தீயன வந்தடையுமோ? சிறுமைகள் வருமோ?"

என்று நல்லுரைபல பகர்ந்து அவனுக்கு அருகில்போய் நின்றான். பிறகு, சூரபன்மன் அசுர சேனைகள் சூழ வெற்றியுடன் பூமிக்குத் திரும்பினான்.

**திருமால் பிரமன் முதலியோர் சூரபன்மனைக் காணல்**

நான்முகனும், இந்திரன் முதலிய தேவர்களும், முனிவர்களும் சூரபன்மன் மண்ணுலகை வந்தடைந்த செய்தியைக் கேட்டுத் துன்பமடைந்தார்கள்; திருமாலைக் காணக் கருதித் திருப்பாற் கடலுக்கு விரைந்து சென்றார்கள்; அவரைக் கண்டு வணங்கிச் சூரபன்மனால் தாங்கள் அடைந்த துன்பங்கள் யாவற்றையும் கூறி, "இனிமேல் நாங்கள் என்ன செய்வது" என்று கேட்டார்கள். திருமால் அவர்களை நோக்கி, "புன்தொழிலையுடைய தக்கன் செய்த யாகத்தில் கலந்துகொண்ட தீமையினால் இத்துன்பம் நமக்கு வந்தது; இதனை விலக்க எவராலும் இயலாது; சூரபன்மன் சிவபெருமானிடத்தில் வரம் பல பெற்றுள்ளான்; எல்லா அண்டங்களையும் வென்று இருக்கிறான்; ஆதலால், அவனை வெல்ல நம்மால் முடியாது; அவனைப் போய்க் கண்டுவருவதே சாலச் சிறந்தது; புறப்படுங்கள்" என்றார். யாவரும் அதற்கு இசைந்தனர். உடனே திருமால் பிரமன் முதலிய தேவர்கள் யாவரும் புறப்பட்டுச் சூரபன்மனையடைந்து ஆசி கூறித் துதித்தார்கள். சூரபன்மன், தேவர்களோடு **பதினொரு கோடி உருத்திரர்கள்** ஒருங்கு நிற்பதைக் கண்டான்; "சிவபெருமானைப்போல் வடிவங்கொண்டிருக்கும் இவர்கள் யாவர்" என்று வினவத் திருமால் சொல்லலானார்.

திருவிருத்தம்–26
ஆகத் திருவிருத்தம்–950

——oo——

## 14. உருத்திரர் கேள்விப் படலம்

**நான்முகன் செருக்கு அடைதல்**

திருமால் சூரபன்மனை நோக்கி, "அரசர்க்கரசே! நான்முகன், முன்னொரு கற்பகாலத்தில் மூவுலகங்களையும் உயிர்களையும் படைத்து, அதனால் செருக்குக்கொண்டான்; தன்னையே முழு

முதற் கடவுள் என்று எண்ணினன். சராசரங்கள் பெருகி வளராது நின்றன. அதனைக் கண்ட நான்முகன். அதற்குக் காரணம் என்ன, என்று எண்ணினன்; ஐந்தொழில்களைச் செய்பவராகிய சிவபெருமானை நோக்கி அளவற்ற காலம் தவம் புரிந்தான். சிவபெருமான் அவனிடத்து எழுந்தருளி வந்திலர். அதனல், நான்முகன் துன்பமுற்று வருந்தி அழுதான். கண்களில் நின்றும் நீர்த்துளிகள் சிந்தின. அவன் சிந்திய கண்ணீர்த் துளிகள் பேய்களாய் மிக எழுந்து நெருங்கி நின்றன. அப்பேய்களை நான்முகன் கண்டு நடுங்கிப் பயந்து கீழே வீழ்ந்து இறந்தவனைப் போலச் சோர்ந்து கிடந்தான். சிவபெருமான் நான்முகனுக்கு உணர்வை அளித்து, அவன் கனவில் தோன்றி, "மைந்தனே! இனி வருந்தாதே; எழுக; நீ உன்னையே முழுமுதற்பொருள் என்று கருதி எம்மை மறந்தாய்; அதனல், உன் படைப்புத் தொழில் கைகூடவில்லை; அது மீண்டும் விரைவில் கைகூடும் வண்ணம் நம் பக்கத்திலுள்ள உருத்திரரை உன்னிடத்து அனுப்புவோம்" என்று அருளிச்செய்தார்.

**உருத்திரர்கள் தோற்றம்**

உடனே, நான்முகன் கனவு ஒழிந்து நனவு பெற்றதும், அக்கனவை எண்ணினன். சிவபெருமான் திருவருளினல் **பதினெரு உருத்திரர்கள்** நான்முகன் நெற்றியிலிருந்து வெளிப்பட்டு நின்றார்கள். பிரமன் அவர்களை நோக்கி, "நீங்கள் நமது நெற்றித்தலத்தில் தோன்றிய காரணம் என்னை" என்று வினவினன். உருத்திரர்கள், "உன் படைப்புத்தொழில் கைகூடும்படி சிவபெருமான் எங்களை விடுத்தருள, நாங்கள் இங்கு வந்தோம்" என்று பதிலுரைத்தனர். நான்முகன் அவர்களை நோக்கி, "என்பால் அன்போடு வந்த நீங்கள் விரைவில் உயிர்களைப் படையுங்கள்" என்று கூறினன். அவர்கள் தங்களைப் போலவே பதினெரு கோடி உருத்திரர் கூட்டத்தைப் படைத்தார்கள். நான்முகன் அதனைப் பார்த்து, "நீங்கள் உயிர்களின் இருவினைகளுக்கு ஈடாகப் படையுங்கள்; இவ்வாறு படைத்தல் முறை அன்று" என்று கூறினன். பதினெரு உருத்திரர்கள் நான்முகனைப் பார்த்து, "நீ முன்போல் உயிர்களைப் படைத்துக் கொண்டிருப்பாயாக; நாங்கள் இப்பொழுதே எங்கள் பதத்திற்

குச் செல்லுகிறோம்'' என்று கூறி, பிரமதேவன் யாவற்றையும் படைக்கும்படி செய்து, தாம் படைத்த **பதிஞெரு கோடி உருத்திரர்களையும்** தேவர்கள் கூட்டத்தில் இருக்குமாறு சொல்லிவிட்டு, ஆதிகாலத்தில் தமக்குச் சிவபெருமான் அளித்த புவனத்தை அடைந்தார்கள். அப்பதிஞெரு உருத்திரர்கள் படைக்க வந்த **பவர்** முதலிய பதிஞெரு கோடி உருத்திரராய் உள்ளவர்கள் இவர்களாகும். இவர்கள் சிவ சாரூபம் எய்தித் தேவர்குழுவோடு சேர்ந்துற்றூர்'' என்று கூறினர். சூரபன்மன் உருத்திரர்களுடைய வரலாற்றைக் கேட்டு மிக வியப்படைந் தான்.

திருவிருத்தம்–12
ஆகத் திருவிருத்தம்–962

——oo——

## 15. நகர் செய் படலம்

**சூரபன்மன் நகர் அமைக்கச் செய்தல்**

அதன்பிறகு, சூரபன்மன் அங்கிருந்த தேவதச்சனை நோக்கி, "நாம் இப்பூவுலகில் வசித்தற்கேற்ற அழகுடைய ஒரு நகரத்தை விரைவில் அமைப்பாயாக'' என்று கூறினன். தேவதச்சன், "உங்கள் நகரத்திற்கு எல்லை கூறுக'' என, சுக்கிராசாரியர் நகர் அமைக்கவேண்டிய அவ்வெல்லையைக் கூறினர். அதன்படி தேவதச்சன், தெற்குக்கடலை அடைந்து சூரபன்மனுடைய நகரம் எண்பதினுயிரம் யோசனை விரிவுடையதாகக் கோலினன்; மலைகளினல் கடலைத் தூர்த்துச் சமநிலப்படுத்தினன்; பொன்னல் மதிலையும், மதில் உறுப்புக்களையும், நான்கு வாயில்களையும், அதன்மேல் கோபுரங்களையும் அமைத்தான்; நூறு யோசனை அளவுள்ள பற்பல வீதிகளையும் அமைத்தான்; மும்மதில்கள், பொன் மாடங்கள், நடன சாலைகள், மாளிகைகள்தோறும் தெற்றிகள், மண்டபங்கள், முன்றில்கள், கோபுரங்கள், செய் குன்றுகள், குளிகைகள், அரங்குகள், மன்றங்கள் முதலியன உண்டாக்கினன்; சோலைகளையும் வாவிகளையும் தனித்தனியே அமைத்து, அதன் நடுவில் பதினுயிரம் யோசனையுடைய ஒரு மதிலைச் செய்தான்; அதன் நடுவே சூரபன்மனுக்கு ஒரு கோயிலை உண்டாக்கினன்; நால்வகைச் சேனைகளும் தங்கும் இடங்களையும், ஆடல்பாடல்களுக்கேற்ற மண்டபங்களையும், யாக மண்ட

பங்களையும், அமைச்சர் இருக்கும் மண்டபங்களையும் இயற்றினன். சிவபெருமான் அளித்த படைக்கலங்கள் வைத்தற்கு ஏற்ற மண்டபம் ஒன்றும் நிறுவினன்; சூரபன்மனும் அவனது பட்டத்துத் தேவியும் வீற்றிருக்க ஓர் உறையுளையும், அதனைச் சூழ மற்றைப் பெண்கள் இருத்தற்குரிய இடங்களையும், பல்வேறு நீர் நிலைகளையும், சோலைகளையும், செய்குன்றுகளையும், பிறவற்றையும் உண்டாக்கினன்.

**வீரமகேந்திரபுரம்**

கடலே அகழியாகக் கொண்டு அதன் நடுவில் அமைக்கப் பெற்ற அந்நகரம் அழகு மிகுந்து விளங்கியது. அதனைக் கண்டு பொன்னுலகமும் பொலிவு குன்றியது. சூரபன்மனின் வெற்றிக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப, தேவதச்சன் அந் நகரத்திற்கு, '**வீரமகேந்திரபுரம்**' என்று பெயர் சூட்டினன்; வீர மகேந்திரபுரத்தின் எட்டுத் திசைகளிலும் **ஏமபுரம், இமையபுரம், இலங்கைபுரம், நீலபுரம், சுவேதபுரம், அவுணர்புரம், வாமபுரம், பதுமபுரம்** என்னும் எட்டு நகரங்களையும் அழகு பெற உண்டாக்கினன்.

**ஆசுரம்**

வடக்குக் கடலின் நடுவில் சிங்கமுகாசுரனுக்காக எண்பதினாயிரம் யோசனை விசாலம் உடைய '**ஆசுரம்**' என்றொரு நகரத்தை அமைத்தான்.

**மாயாபுரம்**

மற்றைக் கடல்கள்தோறும் தீவுகள்தோறும் சூரபன்மன் சேனைகள் சுற்றங்களோடு தங்குவதற்குப் பல நகரங்களை அமைத்தான். பிறகு, மேருமலையின் தென்பாலுள்ள நாவலந் தீவில் ஏமகூட மலைக்கு ஒரு பக்கத்தில் தாரகாசுரனுக்காக '**மாயாபுரம்**' என்னும் நகரத்தை அழகுபெற உண்டாக்கினன். நகரங்கள் யாவும் அமைக்கப்பெற்ற செய்தியைச் சூரபன்மனிடம் தேவதச்சன் கூற, சூரபன்மன் தன் படைகளுடன் சென்று வீரமகேந்திர புரியில் குடிபுகுந்தான்.

திருவிருத்தம்– 28

ஆகத் திருவிருத்தம்–990

——oo——

## 16. பட்டாபிடேகப் படலம்

### சூரபன்மனுக்கு முடிசூட்டுதல்

சூரபன்மன் வீரமகேந்திரபுரத்துட் புகுந்து தேவதச்சன் கற்ற வித்தையின் ஆற்றலைக் கண்டு வியந்து, தன் கோயிலை அடைந்தான். நான்முகன் முதலிய தேவர்கள் சூரபன்மனுக்கு முடிசூட்ட எண்ணி, அதற்கு வேண்டிய பொருள்கள் எல்லாவற்றையும் வருவித்தார்கள். சூரபன்மன், தன் கோயிலினுட் புகுந்து ஓர் அருமையான பீடத்தில் அமர்ந்தான். தேவர்கள் கடல் நீரால் சூரபன்மனுக்கு நீராட்டினார்கள். சூரபன்மன் ஆடை ஆபரணங்கள் பூண்டு, தம்பியர்கள் புடை சூழ, அசுரர்களும் தேவர்களும் வணங்கித் துதிக்க, இந்திரன் மனம் தளர, சுக்கிரனும் முனிவர்களும் புகழ, வந்து சிங்காதனத்தில் ஏறி வீற்றிருந்தான். அப்போது பிரமதேவர், கிரீடத்தை எடுத்துச் சூட்டினார். அசுரர்கள் சூரபன்மன் கால்களை வணங்கினார்கள். தேவர்களும் முனிவர்களும் பொற்பூக்களை முடியின்மீது தூவி வாழ்த்தினார்கள். சூரபன்மனின் இளவல்கள், நான்முகனையும் திருமாலையும், 'இருங்கள்' என்று அனுமதி செய்ய அவர்கள் இருந்தார்கள்.

### தேவர்கள் ஏவல் புரிதல்

சூரபன்மனின் தம்பியர்களுடைய ஏவலினால் இந்திரன் காளாஞ்சியைத் தாங்கினான். குபேரன் அடைப்பையை ஏந்தினான். வாயு சாமரை வீசினான். அசுரேந்திரன் உடைவாள் ஏந்தினான். சூரியசந்திரர்கள் குடை பிடித்தார்கள். வருணன் ஆலவட்டம் வீசினான். கந்தருவரும் சித்தரும் இசைபாடினர். இயமனும் அக்கினியும் பிரம்பேந்தி யாவரையும் விலக்கிப் பத்தியாக நிறுத்திச் சூரபன்மன் புகழைத் துதித்தார்கள். தேவகுருவும், அசுரகுருவும், பல முனிவர்களும் பொற்கலத்தில் கங்கா சலத்தை அறுகில் தோய்த்துத் தெளித்து ஆசி பல கூறினார்கள். அரம்பை முதலிய தேவ மாதர்கள் ஆடிப்பாடினார்கள். இங்ஙனம் தேவர்களும் பிறரும் தத்தமக்குரிய ஏவல்களைச் செய்ய, சூரபன்மன் சகல சிறப்புடன் சிங்காசனத்தில் வீற்றிருந்தான்.

திருவிருத்தம்–14

ஆகத் திருவிருத்தம்–1,004

——oo——

## 17. அரசு செய் படலம்

### சூரபன்மன் கட்டளையிடுதல்

சூரபன்மன், திருமாலை நோக்கி, "நீ என் தந்தையாகிய காசிபருக்குப் பாட்டன்; ஆதலால், உன்னை நாம் அழைக்குந் தோறும் விரைந்து வருக" என்றான்; நான்முகனை நோக்கி, "நீர் எப்பொழுதும் உம் புத்திரர்களோடு இங்கு வந்து பஞ்சாங்கம் சொல்லிப் போகவேண்டும்" என்றான்; கதிரவனைப் பார்த்து, "நீ நம்முடைய நகர் மதிலின்மேல் செல்லுதல் அரிது; கிழக்கு மேற்குக் கோபுர வாயில்கள் வழியாகப் புகுந்து சென்று, எந்நாளும் இளங்கதிராய்த் திரிவாயாக" என்றான்; சந்திரனை நோக்கி, "நீ இனி வளர்தல் தேய்தலின்றி எப்போதும் பூரணகலைகளோடு கிழக்கு மேற்கு வாயில்கள் வழியாகச் சஞ்சரிப்பாயாக" என்றான்; அக்கினியைப் பார்த்து, "என் நகரத்திலுள்ளவர்கள் யார் நினைத்தாலும், அவர்கள் பணிகளை நீ வந்து செய்யவேண்டும்; யாவர் தொட்டாலும் செந்தாமரை மலர்போல் குளிர்ந்திருப்பாயாக" என்றான்; இயமனைப் பார்த்து, "மற்றை உலகத்து உயிர்களைக் கவர்ந்து செல்வது போல நம்முடைய யானை குதிரைகளையும், அசுரர்களையும் கொல்வதைக் கனவிலும் நீ கருதாதே" என்றான்; வாயுவை நோக்கி, "இங்குள்ளோர் அணிந்து எறிந்த மாலைகள், ஆபரணங்கள், சந்தனம் முதலிய குப்பைகளை அவ்வப்போது நீக்குவாயாக" என்றான்; வருணனைப் பார்த்து, "பச்சைக் கருப்பூரத்தையும், கஸ்தூரியையும், சந்தனத்தோடு பனி நீரில் கலந்து காற்றுப் பெருக்கிய இடங்கள்தோறும் தெளிப்பாயாக" என்றான்; இந்திரனை நோக்கி, "தேவர்கள், திக்குப் பாலகர்கள், முனிவர்கள் சூழ இங்குவந்து நாம் சொல்லிய பணிகளைச் செய்வாயாக; இதில் சிறிதும் தவறாதே" என்றான். பலவாறாக அவன் அனைவர்க்கும் கட்டளையிட, தேவர்கள் நடுநடுங்கிப் பயந்து அங்ஙனமே செய்வதாகக் கூறித் தவறாமல் பணி புரிந்து வந்தனர்.

### சூரபன்மனுக்கும் அவன் இளவல்களுக்கும் திருமணம்

இவ்வாறு அரசு செய்த சூரபன்மன் திருமணம் புரிந்து கொள்ள விரும்பினான். தேவதச்சன் மகளாகிய **பதுமகோமளை**

என்பாளைச் சுக்கிரன் விதிப்படி திருமணம் செய்துவைக்க, அவளோடு சூரபன்மன் கலந்திருந்தான். அதன்பிறகு சூரபன்மன், தேவர் கந்தருவர் முதலாகிய பல சாதிப் பெண்களைக் காமக் கிழத்தியர்களாக மணம் செய்து இன்பம் நுகர்ந்தான். சிங்கமுகாசுரன், இயமனுடைய மகளாகிய **விபுதை** என்பாளை மணந்தான். தாரகன், நிருதியின் மகளாகிய **சவுரி** என்பாளை மணந்தான்.

### இளவல்களுக்குச் சேனைகளை அளித்து அனுப்புதல்

இங்ஙனம் மணம் முடிந்த பிறகு, சூரபன்மன் தன் இளவல்களுக்கு இரண்டுகோடி வெள்ளம் சேனைகளை அளித்து அவரவர் நகரங்களில் போய் இருக்கும்படி கூறினன்; சேனைத் தலைவர்களில் பலரைப் பற்பல தீவுகளிலும், கடல்களிலும் அமைக்கப் பெற்ற நகரங்களுக்கு இரண்டு கோடி வெள்ளம் சேனைகளோடு அனுப்பிவைத்தான். தனக்குரிய மேலுலகம் ஏழினும் கீழுலகம் ஏழினும் ஒழிந்த எல்லாவிடங்களிலும் தன்னுடைய ஆணையை நடாத்தும்படி எல்லையில்லாத அசுரர்களை ஆறுகோடி வெள்ளம் சேனைகளோடு செல்ல ஏவினன். அசுர சேனைகள் விண்ணுலகம் மண்ணுலகம் பாதலம் முதலிய எல்லாவிடங்களிலும் மலிந்து நின்றன.

### வீரமகேந்திரபுரியிலிருந்து ஆட்சிபுரிதல்

சூரபன்மன் தான் இருக்கும் வீரமகேந்திரபுரியில் இலக்கம் வெள்ளம் அசுரர்களை மாளிகைகள்தோறும் முறையே இருக்கச் செய்தான். **யானை, குதிரை, யாளி, கரடி, புலி, பன்றி, சிங்கம், மரை** ஆகிய இவற்றின் முகங்களைக்கொண்ட எட்டு அசுரத் தலைவர்களை வீரமகேந்திரன், எட்டுத் திசைகளிலும் உள்ள நகரங்களுக்கு அனுப்பி, அந்நகரங்களைப் பாதுகாக்கும்படி ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பதினயிரம் சேனைகளையும் அளித்தான். நகரத்தைச் சூழ்ந்த நான்கு வாயில்களிலும், மதில்களிலும், கோயில்களிலும் காவல்செய்ய எண்ணற்ற வீரர்களை நிலையாக நிறுத்தினன்.

பிறகு, சூரபன்மன் **துர்க்குணன், தருமகோபன், துன்முகன், சங்கபாலன், வக்கிரபாலன், மகிடன்** முதலாயினேரை

அமைச்சர்களாகப் பெற்றுத் தேவர்கள் துதிக்க அரசுபுரிந்து வந்தான்.

திருவிருத்தம்–21
ஆகத் திருவிருத்தம்–1,025

——oo——

## 18. தேவரை ஏவல்கொள் படலம்

**தேவர்கள் முதலியோர் பணிபுரிதல்**

சூரபன்மன் இவ்வாறு அரசுபுரியும் காலத்தில் அவன் ஏவலின் வண்ணம் தேவர்களும் முனிவர்களும், மகேந்திரபுரியிலும், சிங்கமுகனுடைய ஆசுரத்திலும், தாரகாசுரனுடைய மாயாபுரத்திலும், மற்றை அசுரர்களுடைய பல பதிகளிலும் பணிகள் செய்துகொண்டு வந்தனர்.

**சூரபன்மன் தேவர்களை மீன் பிடித்துவரச் செய்தல்**

ஒரு நாள் சூரபன்மன், இந்திரனையும் தேவர்களையும் அழைத்து, "நீவிர் அவுணர்களுக்குத் தம்பியர்; அவர் பணி நும் பணியாகும்; ஆதலால், கடலிலுள்ள மீன்களை நாடோறும் வாரிக் கொண்டுவந்து கொடுங்கள்" என்று பணித்தான். தேவர்கோன் முதலியோர் அதனைக்கேட்டு மனம் நடுங்கினார்கள்; உள்ளஞ் சோர்ந்து நாணமடைந்தார்கள்; தங்கள் தங்கள் தலைவிதியை நினைந்து நொந்துகொண்டார்கள்; ஆயினும், மறுத்தற் கஞ்சி, "அவ்வாறே செய்கிறோம்" என்று கூறி, சூரபன்மனை வணங்கிக் கடலை நோக்கிச் சென்றார்கள். செல்லும் வழியில் தங்களுக்கு ஏற்பட்ட இழிதொழிலைக் கருதி யாவரும் மனம் வருந்திப் புலம்பினார்கள்.

**தேவர்கள் மீன் கொண்டு வருதல்**

இந்திரன் கடற்கரையினின்று வருணனை அழைத்து, "கடலரசன் நீயன்றோ! உன்னைக்காட்டிலும் வலிமை மிக்கவர்கள் ஒருவரும் இல்லை; திமிங்கிலம் முதலிய மீன்களை இக்கரைக்குக் கொண்டு வருவாயாக" என்றான். வருணன் கடலுட் புகுந்து, மீன்களைக் கரைக்குக் கொண்டுவந்து மலைபோலக்

குவித்தான். இந்திரன் தேவர்களை அழைத்து, "இம் மீன்களை எடுத்துச்செல்வது உங்கள் தொழில்" என்று கூறினன். தேவர்கள், கண்களில் நீர் மல்க, மீன்களைப் பாம்புகளால் கட்டினார்கள். தேவேந்திரன் அச்சுமைகளைத் தேவர்களின் தலைமீது தூக்கிவிட்டான். தேவர்கள் மீன் சுமைகளை வருந்திச் சுமந்து கொண்டு செல்லுகையில், "சூரபன்மனால் நாம் முன் வலியிழந்தோம்; இழிதொழில் செய்தோம்; நிலவுலகில் வசிக்கும் மக்கள் 'பாவம்' என்று கூறும் வலைஞர் தொழிலை நாம் செய்ய நேர்ந்ததே! விண்ணுலகை விரும்பி நாம் செய்த தவமும் வினையாகிவிட்டதே! வைதிக வொழுக்கத்திற்கும், ஞானவரம்பிற்கும் புறம்பானோம்; மீன் சுமந்து செல்வதைக் காட்டிலும் சாதல் மிக நன்று!" என்று பலவாறு புலம்பிக் கொண்டு வீரமகேந்திரத்தை அடைந்தார்கள்.

**அசுரர்கள் தேவர்களைப் பழித்தல்**

அசுரர்கள் தேவர்களைப்பார்த்து, "இவர்கள் கடலைக் கலக்கி, மீன்களைப் பிடித்துச் சுமந்து வருகிறார்களே! இவர்களுக்கு நாணமில்லையோ? நம் குலத்தை வருத்திய இவர்கள் இன்னும் என்ன பாடுதான் படார்கள்" எனப் பலவாறு எள்ளி நகையாடினார்கள். தேவர்கள் சுமந்துவந்து குவித்த மீன் குவியல்களைக் கண்ட சூரபன்மன், மகிழ்ந்து தேவர்களை நோக்கி, "நீங்கள் இங்ஙனமே நாடோறும் மீன் பிடித்துக்கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டான். தேவர்களும் அங்ஙனமே செய்துகொண்டு துயர்க்கடலில் மூழ்கி வைதிக வொழுக்கத்தைக் கைவிட்டனர்.

திருவிருத்தம்–25
ஆகத் திருவிருத்தம்–1,050

——oo——

## 19. புதல்வரைப் பெறு படலம்

**பானுகோபன் கதிரவனைச் சிறையிடுதல்**

சூரபன்மன் தான் செய்த தவத்தினால் தன் பட்டத்தரசியாகிய பதுமகோமளையிடத்தில் ஒரு குமரனைப் பெற்றான். அக்குழந்தையைப் பார்த்து மகிழ்ந்த சூரபன்மன் தன் கிளைஞர்

களுக்குச் செல்வங்களை வாரி அளித்தான். இந்திரன் முதலாயி னோர் துன்பமுற்றனர். அரம்பையர்களும் அசுரப் பெண்களும் அப்புதல்வனை ஆசீர்வதித்துத் தொட்டிலில் ஏற்றினர். அவன் வளர்பிறைபோல வளர்ந்து வந்தான். ஒருநாள் அவன் தொட் டிலில் துயிலும்போது சூரியகிரணம் ஒரு சாளரவழியால் வந்து அவன்மேல் பட்டது. அவன் கோபித்துப் பார்த்துத் தொட்டியி லிருந்து ஆகாயத்தில் பாய்ந்து கதிரவனைக் கையாற் பற்றிக் கொண்டு ஒரு நொடிப் பொழுதில் வந்து, தொட்டிலின் காலிற் கட்டிவிட்டு முன்போல் துயில்கொண்டான்.

**பிரமன் முதலியோர் கதிரவனைச் சிறை மீட்டல்**

தேவர்கள் அதுகண்டு அஞ்சினர்கள். சூரியன் ஆகாயத்தில் இயங்காமல்போகவே, நான்முகன் அதனை உணர்ந்து இந்திரன் முதலிய தேவர்களோடு சூரபன்மனிடம் வந்து, "அரசர்க் கரசே! உம் புதல்வன் கதிரவனைச் சிறையிட்டுள்ளான்; அதனை நீக்க வேண்டும்" என்று வேண்டினன். சூரபன்மன் அதனைக் கேட்டு, "என்மகன் சூரியனைச் சிறை செய்தது எனக்குத் தெரியாது; அவன் சிறை செய்யும்படி சூரியன் இழைத்த குற்றம் யாது?" என்று கேட்டான். நான்முகன் சூரபன்மனை நோக்கி, "உன் மகனுடைய முகத்தில் கதிரவனின் வெய்யில் தீண்டியது; அதனால் அவனைப் பிடித்துச் சிறை செய்தான்" என்றான். சூரபன்மன் புதல்வனுடைய வீரச்செயலைக் கேட்டு மகிழ்ந்து, "நீவிர் என் மகனை அடைந்து இனிய மொழிகளைக் கூறி அவன் சிறைவிடுத்த பின் கதிரவனை இங்கே கொணர்க" என்றான்.

பிரமன் 'நல்லது' என்று விடைபெற்று, அரம்பையர் பாடி யாட்டுகின்ற பொற்றொட்டிலில் கிடக்கும் புதல்வனிடத்தில் வந் தான்; அளவில்லாத ஆசிகளைக் கூறிப் புகழ்ந்து நின்றான். அவன் "நுமக்கு வேண்டுவது யாது? சொல்லுக" என்று நான்முகனை வினவினன். நான்முகன் கதிரவனைச் சிறையினின்று விடுவிக்கும்படி வேண்டினன். அதற்கு அப்புதல்வன், "உன் படைக்கலத்தை எனக்குத் தந்தால் சிறை விடுவேன்" என்றான். நான்முகன் அதற்கு இணங்கித் தன் மோகப் படையைக்

கொடுக்க, அவன் கதிரவனின் சிறையை விடுத்தான். கதிரவனும் நான்முகனும் அப்புதல்வனிடம் விடைபெற்றுக்கொண்டு சூரபன்மனை அடைந்து, நிகழ்ந்ததை உணர்த்தி, அவனிடம் விடைபெற்றேகினார்கள். சூரபன்மன் அந்நல்ல நாளில் தன் மகனுக்குப் '**பானுகோபன்**' என்ற பெயரை இட்டு மகிழ்ந்தான். பானுவை(சூரியனை)க் கோபித்தமையால் பானுகோபன் என்று அழைக்கப்படும் அவன், அழகில் மன்மதனை ஒத்துவளர்ந்தான்; திருமாலோடு போர்புரிந்து அவரை வென்றான்.

### அக்கினிமுகன்-இரணியன்-வச்சிரவாகு

சூரபன்மன் பானுகோபனைப் பெற்றபின்பு, **அக்கினிமுகனையும்**, அதன்பின் **இரணியனையும்**, அதன்பின் **வச்சிரவாகுவையும்*** பதுமகோமளை பெற மகிழ்ந்தான். மற்றை மனைவியர்கள் **மூவாயிரம் புதல்வர்களைப்** பெற்றார்கள். சூரபன்மன், தன் புதல்வர்கள் அனைவருடனும் மகேந்திரபுரியில் வீற்றிருந்தான்.

### இளவல்களின் மக்கள்

சிங்கமுகாசுரனுக்குப் பட்டத்துத் தேவியாகிய விபுதையினிடத்தில் '**அதிசூரன்**' என்று ஒரு குமாரனும், மற்றை மனைவியர்களிடத்தில் வலிமை மிக்க **நூறு புத்திரர்களும்** தோன்றினார்கள். தாரகனுக்குப் பட்டத்துத் தேவியாகிய சவுரியிடம் தபோபலத்தினால் ஒரு குமாரன் தோன்றினான். அசுரகுரு அவனுக்கு, '**அசுரேந்திரன்**' என்று பெயரிட்டான். அசுரேந்திரன் அழகு மிகுந்தவனாய், சகல கலைகளிலும் வல்லவனாய் வளர்ந்து வந்தான். அவன் தீமைகள் செய்யான்; பழியைக் கைக்கொள்ளான்; நீதியை அன்றி வேறு எவற்றையும் நினையான்; தன்னிடம் பகைத்து வீரம் பேசி எதிர்ப்பவர் உண்டாயின் அவர் கெடும்படி எதிர்த்துத் தன் மார்பில் படைத் தழும்பை ஏற்க நினைக்குந்தன்மையான். சதுரக் கள்ளி அகில்

---

* அக்கினிமுகனுக்கு இரு தலைகளும், இரணியனுக்கு மூன்று தலைகளும், வச்சிரவாகுவுக்குப் பத்துத் தலைகளும் உண்டு. இதனை, "முச்சிரமுண் டிரணியனுக் கிருசிரமுண் டந்தவன்னி முகற்கு மற்றை, வச்சிரவா குவுக்கொருபான் சிரமுண்டே" எனவரும் அசமுகி புலம்புறு படலச் செய்யுள் அடிகளால் அறியலாம்.

கட்டையைத் தருவதுபோலத் தாரகன் அசுரேந்திரனைப் பெற்று மாயாபுரியில் அரசுபுரிந்து வந்தான்.

திருவிருத்தம்–23
ஆகத் திருவிருத்தம்–1,073

——oo——

## 20. வில்வலன் வாதாவிப் படலம்

### அசமுகியின் தன்மை

சூரபன்மன் முதலிய மூவருக்குந் தங்கையாகிய **அசமுகி** என்பவள் மணம்புரிந்து கொள்ளாதவள்; கற்பில்லாதவள்; தருமமில்லாதவள்; தேவர்களின் மனைவியர்களைத் தன் தமையன் மார்களுக்கு மனைவியர்களாக ஆக்குபவள்; முனிவர்கள் செய்யும் யாகங்களைக் கெடுப்பவள்; பாவமே வடிவானவள்; அசுர குலங் களை அழியச் செய்யும் தீவினைபோல் எங்கும் உலாவி வருபவள்; தன் கிளைஞரை இகழ்பவர்களைக் கொன்று உண்பவள்; அழகிற் சிறந்த ஆடவர்களைத் தேடி வலிந்து கூடுபவள்.

### வில்வலன் வாதாவி தோற்றம்

அசமுகி ஒரு நாள் துருவாச முனிவருடைய ஆசிரமத்தை அடைந்தாள்; அத் துருவாச முனிவரைப் பார்த்து, "இவன் செய்யும் தவத்தை அழிப்பேன்; அதுவன்றி, இவனைக் கூடி மக்களையும் பெறுவேன்" என்று எண்ணி, அவருக்கு எதிரே சென்றாள். துருவாச முனிவர் அவளைப் பார்த்து, "பெண்ணே! நீ இங்கே தனித்து வரக் காரணம் என்ன? கூறுக" என்று வினவினார். அவள், "உம்முடன் சேர்ந்து மக்களைப் பெறுவதற் காகவே வந்தேன்" என்றாள். முனிவர், "இவள் சூரபன்மனின் தங்கை" என்று உணர்ந்து, அவள் எண்ணத்திற்கு இணங்க மறுத்தார். அசமுகி, முனிவரை நோக்கி, "நீர் தப்பி ஓடிப் போய் விடலாம் என்று கருதாதீர்; நான் உம்மைக் கூடாது போகமாட்டேன்" எனக் கூறி, அவரை வலிந்து தழுவிக் கூடினாள். அப்போது அவளிடத்தில் ஆற்றல்மிக்க இரு புதல்வர்கள் பிறந்தார்கள். அசமுகி அவர்களை நோக்கி, வருக என்று அன் போடு தழுவி உச்சிமோந்து, "மைந்தர்காள்,! நீவிர் அவுணர்

குலத்தில் தோன்றியுள்ளீர்கள்; சிறந்த தவத்தைச் செய்து வலியைப் பெறுவீர்களாக'' என்றாள். தந்தை தாயர்களின் வடிவாய்வந்த இருவரும் முறையே **வில்வலன் வாதாவி** என்னும் பெயர்களைப் பெற்றார்கள்.

**துருவாச முனிவர் சாபம்**

தாயின் சொற்படி அவ்விருவரும் தம் தந்தையாகிய துருவாச முனிவரை வணங்கினார்கள். அவர், ''உங்கட்கு வேண்டியது யாது'' என்று கேட்க, அவர்கள் ''உம்முடைய தவம் முழுவதும் நாம் பெறும்படி அருள்புரியும்'' என்றார்கள். முனிவர் ''நான் செய்த தவத்தைத் தரமாட்டேன்; வேறு எதனை வேண்டினாலும் தருவேன்'' என்று கூறினார். புதல்வர்கள் கோபங்கொண்டு முனிவரைக் கொல்ல விரைந்து எழுந்தார்கள். துருவாச முனிவர் அவர்களுடைய செயலைக் கண்டு கோபமுற்று, ''நீங்கள் நாடோறும் முனிவர்களுக்கே துன்பம் செய்யுங்கள்; பின்பு அகத்திய முனிவர் வந்து உங்கள் உயிரைக் கவர்வார்'' என்று சாபமிட்டு, விரைந்து மாயையினால் மறைந்து போயினார்.

**வில்வலன் வாதாவி தவமும் வரமும்**

பிறகு, தம் தந்தையைக் காணாத வில்வலன் வாதாவி இருவரும்,தாயாகிய அசமுகியிடம் விடைபெற்றுக்கொண்டு, வேறொரு வனத்தை அடைந்து, பிரமனை நோக்கி அக்கினியில் நின்று எண்ணற்ற காலம் கடுந்தவம் செய்தனர். ஆனால் நான்முகன் வந்திலன். வில்வலனானவன் தம்பியாகிய வாதாவியை வாளால் வெட்டிக் கிழித்து, பிரமதேவன் மந்திரத்தை உச்சரித்து இரத்தத்தையும் தசையையும் முறையே, நெய்யும் அவியுமாக நெருப்பில் சொரிந்து, ஒரு வேள்வியைச் செய்தான். அதுகண்டு நான்முகன் தோன்றி, ''உனக்கு நாம் தரும் வரம் என்ன?'' என்று கேட்க, வில்வலன் நான்முகனை வணங்கித் துதித்து, ''அக்கினியால் அவிர்ப்பாகமாக இறந்த என் தம்பி குறைவில்லாத வடிவத்தோடு விரைந்தெழல் வேண்டும்'' என்றான். நான்முகன், ''வாதாவி எழுக'' என்று கூற, உடனே வாதாவி ஆரவாரித்து எழுந்து வந்தான். அப்போது வில்வலன் அதிச

யித்து, தீமையோடு ஒரு சூழ்ச்சியை மனத்தில் எண்ணி, நான்முகனைத் துதித்து, "அடியேனுக்கு ஒரு வரம் அளித்தல்வேண்டும்" என்று அதனை வேண்டுகின்றவனாய், "ஆட்டின் உருவம் கொண்ட வாதாவி என்னும் என் தம்பி இன்னும் உடல் வெட்டுப்பட்டு இறந்தால் நான், 'தம்பியே எழுக' என்று சொல்ல, முன்னை வடிவோடு அவன் தோன்றி என்முன் வருதல்வேண்டும்; இதனையே அடியேன் பெறும்படி அருள் செய்க" என்று மன்றாடினான். பிரமதேவர், "அவ்வாறே பலகாலம் அது முடிக" என்று அருள்செய்து மறைந்தருளினர்.

**சூரபன்மனைக் காணல்**

பிறகு, வில்வலன் வாதாவி இருவரும் சூரபன்மன் முன் சென்று, "நாங்கள் உன்னுடைய மருகர்; வேறு அல்லர்" என்று சொல்லி, முனிவர்களைக் கொல்லுதற்கு நான்முகனிடத்தில் பெற்ற வரத்தையும் சொன்னார்கள். சூரபன்மன் மகிழ்ந்து அவர்களைத் தழுவித் தன்னுடனே இருக்கச் செய்தான். அங்கு அவர்கள் இருவரும் தம் மாமன் கட்டளைப்படி சிலநாள் தங்கியிருந்தார்கள்.

**முனிவர்களை வஞ்சித்துக் கொல்லுதல்**

அதன் பிறகு, நிலவுலகடைந்து குடக நாட்டில் வளமிகுந்த ஒரு காட்டில் நான்கு பக்கத்து வழிகளும் கூடும் ஓர் இடத்தில் ஆச்சிரமம் ஒன்று அமைத்தனர். அங்கு யாவரும் விரும்பும் பல பொருள்களையும் வருவித்து வைத்துக்கொண்டு அங்கே இருந்தார்கள். அவ்வழியே வரும் முனிவர்களின் உயிரைக் கவரும்படி நினைத்து வில்வலன் முனிவர் வடிவங்கொண்டு சென்று உபசாரத்தோடு அழைத்து வருவான்; ஆட்டுக்கடா வடிவத்தில் இருக்கும் வாதாவியைக் கொன்று கறி சமைத்து அவர்களுக்குப் பெருவிருந்தளிப்பான்; முனிவர் விருந்துண்டபின், வில்வலன் வாதாவியை, 'வாதாவி வருக' என்று கூவி அழைப்பான். ஆடாகிய வாதாவி உயிரோடு கூடிய உடலையுடையவனாய்த் தன்னை உண்ட முனிவருடைய வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியே வருவான். பின் இறக்கின்ற முனிவர்களின் தசைகளை அவரிருவரும் உண்டு களித்து, ஆடாகவும் முனிவனாகவும்

விளங்குவார்கள். இவ்வாறே வில்வலனும் வாதாவியும் அங்கிருந்துகொண்டு நாடோறும் பல முனிவர்களை அழித்து வந்தனர்.

திருவிருத்தம்–31

ஆகத் திருவிருத்தம்–1,104

——oo——

## 21. இந்திரன் கரந்துறை படலம்

### சூரபன்மன் எங்கும் சுற்றி வருதல்

வில்வலனும் வாதாவியும் மற்றை அசுரரும், முனிவர் தேவர் முதலியோரைத் துன்புறுத்தி வருங்காலத்துச் சூரபன்மன் இந்திரஞாலத் தேர்மீது ஏறி ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் சென்று அரசியல் நடாத்தி வந்தான். சூரபன்மன் ஒருநாள் பாதலத்தில் இருப்பான்; ஒரு நாள் விண்ணுலகத்தில் இருப்பான்; ஒருநாள் சத்திய வுலகத்தில் இருப்பான்; ஒருநாள் வைகுண்டத்தில் இருப்பான். இவ்வாறு சூரபன்மன் நாடோறும் உலகங்கள் முழுவதும் சென்று மாலைக் காலத்தில் மகேந்திரபுரிக்கு விரைந்து மீளுவான்.

### இந்திரனையும் இந்திராணியையும் கவர எண்ணுதல்

இங்ஙனம் அரசு புரியுங் காலத்தில், இந்திரனைச் சிறையிலிட்டு அவன் தேவியாகிய இந்திராணியை அபகரிக்க எண்ணங்கொண்ட சூரபன்மன், சேனைத் தலைவன் ஒருவனை அழைத்து, "நீ இப்பொழுதே சென்று இந்திரனைப் பிடித்து என்முன் கொண்டு வருவாயாக" என்று கூறினான்; பிறகு, தன் கோயிலைக் காக்கும் ஒன்பதுகோடி அசுரப் பெண்களை அழைத்து, "நீங்கள் இந்திரன் மனைவியாகிய இந்திராணியைக் கவர்ந்து வருவீர்களாக" என்று கட்டளையிட்டு அனுப்பினான். அவர்கள் எல்லோரும் கட்டளையை நிறைவேற்ற விரைந்து அமராவதியை அடைந்தனர். அதனைக் கண்ட ஒற்றர்கள், விரைந்து சென்று இந்திரனிடம் தெரிவித்தார்கள். இந்திரன் அவுணர்களின் வலிமையை எண்ணித் தன் மனைவியாகிய அயிராணியோடு மாளிகையை அகன்று மாயையினால் மறைந்து பூவுலகை அடைந்தான்.

### சூரபன்மன் கவலை யுறுதல்

இந்திரனைத் தேடிச் சென்ற அவுணர்களும் இந்திராணியைத் தேடிச் சென்ற அசுரப் பெண்களும், இந்திரனையும் இந்திராணியையும் காணாது தேடி அலைந்தார்கள். அதனால் அவ்விரு திறத்தாரும் அறிவு சோர்ந்து கவலை கொண்டார்கள். அங்கிருந்த தேவர்களை அசுரர்கள் பிடித்து அடித்து, "இந்திரனும் இந்திராணியும் இருக்குமிடம் காட்டுக" என்று வாய்கள் தோறும் இரத்தம் வடியும்படி குற்றினார்கள். தேவர்கள் மிகவும் வருந்தி, "யாம் ஒன்றும் அறியேம்; எங்களை வருத்தாதீர்கள்" என்று இரங்கி வேண்ட, தேவர்களை விட்டுவிட்டு அசுரர்கள் மகேந்திரபுரியை அடைந்தார்கள். சூரபன்மன் முன்சென்று பணிந்து, இந்திரனும், இந்திராணியும் விண்ணுலகைவிட்டு வெளியேறிய செய்தியைக் கூறினார்கள். சூரபன்மன் அதனைக் கேட்டுக் கோபங்கொண்டு, அரிய மணியை இழந்த நாகம் போலத் துன்புற்றான்; ஒற்றர்களை அழைத்து, இந்திரனும் இந்திராணியும் இருக்குமிடத்தை உடனே அறிந்து வருமாறு கட்டளையிட்டான். ஒற்றர்கள் உலகம் எங்கும் சென்று தேடியும் காணாதவராய்த் திரிந்துகொண்டிருந்தனர்.

### சுவர்க்கம் பொலிவு இழத்தல்

இந்திரனையும் இந்திராணியையும் இழந்த விண்ணுலகம் விண்மீனும் மதியும் இழந்த இரவுபோலப் பொலிவு இழந்தது; வளங்கள் எல்லாம் அழியப் பெற்றன. துன்பம் மிகுந்தது. தேவர்கள் இன்பம் நீங்கித் துன்பமுற்றனர். விண்ணுலகெங்கும் புலம்பலொலி எழுந்தது. பொன்னுலகம் உயிரற்ற உடலை ஒத்தது.

### சயந்தனின் துயரம்

இச்செயல்கள் நிகழுவதற்கு முன்னரே, இந்திரன் தம்பி எனப்படும் உபேந்திரனாகிய விட்டுணு, விண்ணுலகை விட்டுப் பழைய வைகுண்டத்தை அடைந்தார். இந்திரன் மகன் சயந்தன், தன் சிறிய தந்தையாகிய அவரைக் காண வைகுண்டத்திற்குச் சென்று சிலநாள் தங்கியிருந்தான். அவன், தன் தந்தையும் தாயும் விண்ணுலகைவிட்டு மறைந்தோடியதையும், தேவர்கள்

துன்புற்றிருக்குந் தன்மையையும் கேள்விப்பட்டான்; விரைந்து பொன்னுலகம் வந்து, புலம்பும் தேவர்களைக் கண்டான். தன் உயிர்போன்ற தாய் தந்தையர்களைக் காணுமல் துன்பக் கடலில் மூழ்கினுன். ஏங்கிப் பித்தர்போலாயினுன். அப்போது, நாரத முனிவர் அவன்முன் தோன்றினுர். சயந்தன் நாரதரை வணங்கி நின்று, " அடியேனின் தாய் தந்தையர் சூர பன்மனுக்கு அஞ்சி ஓடி ஒளிந்தனர். அவர்கள் சென்ற இடம் அறியாமல் அலமருகின்றேன். எங்கள் கவலை எக்காலம் நீங்கும் ; அதனை அறியேன் ; எம்பெருமானே ! கூறியருளவேண்டும் " என்றுன்.

**நாரதர் சயந்தனைத் தேற்றுதல்**

நாரத முனிவர் வருந்துகின்ற சயந்தனை நோக்கி, " நன்மை தீமைகள் தாம்தாம் செய்யும் வினைகளினுல் அன்றிப் பிறராலே தத்தமக்கு வாரா. அமுதத்திற்கு இனிமையையும், நஞ்சிற்குக் கசப்பையும் கொடுத்தவர்கள் யார் ? அறிவுடையோர் இன்பம் வந்தபொழுது மகிழார்; துன்பம் வந்தபொழுது வருந்தார். இன்பமும் துன்பமும் இவ்வுடலுக்கே இயைந்தன. வறியவர் செல்வராவர் ; செல்வர் பின் வறியராவர் ; பெரியவர் சிறியோர் ஆவர் ; சிறியவர் உயர்ந்தோர் ஆவர். இவை முறை முறை மாறி மாறி வரும். இவை யாவும் பழைய வினையின் பயன்களே. இஃது உலக வழக்கமுமாகும். உயிர்களுக்குச் செல்வமும் வறுமையும், துன்பமும் இன்பமும் என்றும் நிலையற்றனவாம். சந்திரன் தேய்தலும் வளர்தலும் இயற்கையன்றோ ?

தீங்குவந் தடையு மாறும் நன்மைதான் சேரு மாறும்
தாங்கள்செய் வினையி னுலே தத்தமக் காய அல்லால்
ஆங்கவை பிறரால் வாரா; அமுதநஞ் சிரண்டி னுக்கும்
ஓங்கிய சுவையின் பேதம் உதவினுர் சிலரும் உண்டோ ?

இன்பம தடைந்த காலை இனிதென மகிழ்ச்சி எய்தார்;
துன்பம துற்ற போதுந் துண்ணெனத் துளங்கிச் சோரார்
இன்பமுந் துன்பந் தானும் இவ்வுடற் கியைந்த என்றே
முன்புறு தொடர்பை ஓர்வார் முழுவதும் உணர்ந்த நீரார்.

வறியவர் செல்வர் ஆவர்; செல்வர்பின் வறியர் ஆவர்;
சிறியவர் உயர்ந்தோர் ஆவர்; உயர்ந்துளோர் சிறியர் ஆவர்;

முறைமுறை நிகழும் ஈது முன்னையூழ் வினையே கண்டாய் ;
எறிகதிர் வழங்கும் ஞாலத் தியற்கையும் இனைய தன்றோ.

ஆக்கமும் வறுமை தானும் அல்லலும் மகிழ்வு மெல்லாம்
நீக்கமில் உயிர்கட் கென்றும் நிலையெனக் கொள்ளற் பாற்றோ?
மேக்குயர் கடவுட் டிங்கள் வெண்ணிலாக் கதிரின் கற்றை
போக்கொடு வரவு நாளும் முறைமுறை பொருந்திற் றன்றே.

ஆதலால், உங்கள் தாழ்வும், அசுரர் உயர்வும் நிலைத்து நில்லா. இதனை உண்மை என்று எண்ணுவாயாக. இந்நகரை நீங்கிச்சென்ற உன் தாய்தந்தையர் தங்கள் உருவத்தை மறைத்து நிலவுலகில் இருந்தார்போலும். முன்னர் ஒருசமயம் தேவர்களுக்கு இன்னல் இழைத்த கயமுகன் என்னும் அசுரன் இறக்கும்படி உன் தந்தை முயற்சி செய்தான். அதுபோல் இந்தக் கொடிய சூரபன்மனும் இறக்க வழிதேடுவான். உங்கள் துன்பம் விரைவில் நீங்கும். நீ வருந்தாது இருப்பாயாக!'' என்று சயந்தனைத் தேற்றிச் சென்றார். மனம் தெளிந்த சயந்தன் மற்றைத் தேவர்களையும் மனம் தெளிய வைத்தான். வழக்கம்போல் சூரபன்மனுடைய ஏவல்களைச் செய்துவரும்படி அவர்களை ஏவி விண்ணுலகத்தில் இருந்தான்.

**இந்திரன் சீகாழியில் நந்தனவனம் அமைத்தல்**

இந்திரன் தன் மனைவியோடு நிலவுலகில் தென் தேசத்திலுள்ள சீகாழிப் பதியை அடைந்து, "இத்தலமே யாம் இருத்தற்கு நன்று" என்று எண்ணித் துன்பம் நீங்கியிருந்தான். அதன் பிறகு, சிவபெருமானை வழிபடக் கருதி ஒரு **திருநந்தனவனம்** வைக்க எண்ணினான். சந்தனம் அகில் முதலிய மரங்களால் வேலிகோலி, சிறுசண்பகம், கோங்கு, மல்லிகை, முல்லை, செவ்வந்தி முதலியவைகளை வைத்து ஒரு நந்தனவனத்தை உண்டாக்கினான். அதனில் மணம் மிகு மலர்கள் மலர்ந்தன. அம்மலர்களைக்கொண்டு இந்திரன் எம்பெருமான் திருவடிகளைப் பூசித்துக்கொண்டு அங்கேயே மனைவியுடன் இருந்துவந்தான்.

**இந்திரன் மூங்கில் வடிவம் பெறுதல்**

சூரபன்மனின் ஒற்றர்கள் தன்னைத் தேடி வருவதை இந்திரன் அறிந்தான்; தன் மனைவியோடு அங்கே மூங்கில்

வடிவாய் மறைந்திருந்து தவம்செய்தான். தேடிவந்த ஒற்றர்கள் இந்திரனைக் காணுராய்த் திரும்பினர். அசுரர்கள் ஆணையால் மேகங்கள் மழை பொழியவில்லை; அதனுல் திருநந்தன வனம் வாடி வதங்கியது. அதனைக் கண்டு இந்திரன் வருந்தி எம்பெருமானை வணங்கித் துதித்தான். அப்போது ஆகாயத்தில், "இந்திரனே, நீ வைத்த நந்தனவனம் வாடிப்போயினும் அழிந்து போகாது; இங்கு ஒரு ஆறு வரும். வருந்தாதே" என்று ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. இந்திரன் அதுகேட்டு, "இஃது எம்பிரான் திருவருள்" என்று வணங்கித் துதித்து, உரோமம் சிலிர்ப்ப மன மகிழ்ந்திருந்தான். இனி, சீகாழியில் ஒரு நதி வந்த வரலாற்றைக் காண்போம்.

திருவிருத்தம்–48

ஆகத் திருவிருத்தம்–1,152

——oo——

## 22. விந்தகிரிப் படலம்

**மேருமலையைப் பற்றி நாரதர் கூறுதல்**

இந்திரன் அசரீரி வாக்கைக்கேட்டு மனத்திட்பமுற்றிருக்கும்போது, சிவபெருமான் திருவருளால், பின்னுல் நிகழ்வனவற்றை முன்னரே அறியும் ஆற்றல்பெற்ற நாரத முனிவர், **விந்தகிரி**க்கு முன்னே சென்றுர்; பல ஆசிமொழி புகன்றுர். தெய்வ வடிவம் கொண்ட விந்தமலை அம் முனிவரைத் தொழுது, "எம்பெருமான்! நீவிர் இங்கு எழுந்தருளியது பேரதிசயம் ஆகும்" என்று நல்லுரை பகர்ந்தது. அப்போது நாரத முனிவர், அவ் விந்தமலை மேருமலையின் மீது அழுக்காறு கொள்ளும் வண்ணம் சிலவற்றை எடுத்துக் கூறலானுர்:

"நான் சிவபெருமானின் வில்லாக விளங்தேன். உமாதேவியார் என்னிடமே வந்து வளர்ந்தாள். எல்லா மலைகளுக்கும் நானே அரசனுக விளங்குகிறேன். கதிரவனைத் தொடும்படி விண்ணில் வளர்ந்திருக்கிறேன். ஆயிரம் கொடுமுடிகளைக் கொண்டிருக்கிறேன். திருக்கயிலாய மலை எனது ஒருபாலில் இருக்கிறது. கதிரவன் திங்கள் முதலியோர் என்னைச் சூழ்ந்து நிற்கின்றனர். தேவர்கள் என்னிடம் குடிகொண்டிருக்கிறுர்கள்.

நான் பொன்னைக்கொண்டு திகழ்கிறேன். என்னைச் சூழ்ந்து பல மலைகள் உள்ளன. ஆதலால், எனக்கு ஒப்பான மலை ஒன்றும் இல்லை'' என்று மேருமலை ஆணவமுற்றுப் பேசுகிறது. நீ அதனை அறியமாட்டாய்போலும். நான் அச்செயல்களை யெல்லாம் விரைந்து உனக்குச் சொல்லவே இங்கு வந்தேன்'' என்று நாரத முனிவர் கூறினர்.

### விந்தகிரி மேருவை இழிந்துரைத்தல்

நாரதர் கூறியவைகளைக்கேட்ட விந்தமலை பெருமூச்சுவிட்டு, ''இது நன்று'' என்று நகைத்து, ''நான் மேருமலையின் சிறுமைகளை அறியமாட்டேனே? பெண்களைப்போல நாணமுற்றுவில்லாய் வளைந்தது ஒரு பெருமையாகுமா? உமாதேவியார். இமயமலையரசன் செய்த தவத்தால் அவனிடத்தில் வந்திருந்தாரேயன்றி, அவன் மகளாய்ப் பிறக்கவில்லையே? சூரபன்மன் மேருமலையைக் கல் என்று தாக்காது விட்டான். தான் பொன்மயமான உருவத்தைப் பெற்றிருப்பதாக நினைத்தானே அன்றி அவன் மண்ணால் செய்து அலங்கரித்த பாவையின் அழகை எண்ணினனில்லை. மேருவிடத்தில் இருக்கும் தேவர்கள் என்னிடத்தில் இராமல் இகழ்ந்தார்களோ? கயிலாச மலைக்கு அருகில் எந்த மலை இல்லாதது? வீரபத்திரக்கடவுளாகிய சரபப் பறவை பேருருவம் கொண்டு திருமாலாகிய நரசிங்கத்தின் முன் நின்றபொழுது, மேரு ஒரு பருக்கைக் கல்போல அதன் காலடியில் கிடந்தது. அந்தச் சரபப்பட்சி தன் சிறகுகளை அடித்துக் கொண்டபோது மேரு மின்மினி போலத் திரிந்தது. மேரு வானவன் திருமாலோ, நான்முகனே, இந்திரனே அல்லன்; அவன் ஒரு சாதாரண மலைதான். இச்செய்திகள் எனக்குத் தெரியாதா?'' என்று இழிவாகப் பேசியது.

### விந்தகிரி மிக உயர்ந்து நிற்றல்

பிறகு விந்தமலை நாரதரை நோக்கி, ''முனிவரே! அந்த மேருமலையின் செருக்கை யான் நீக்கி என் பெருமையைக் காட்டுவேன்; காண்பீராக!'' என்று கூறி, கோடி திருமால்கள் ஒன்று திரண்டு. மிக உயர்ந்து நிமிர்ந்தாற்போல ஒரு மாயையினல் ஆகாயத்தில் உயர்ந்து சத்திய வுலகம் வரை நிமிர்ந்து வான

வெளியை அடைத்து இமயமலை வரையும் அகன்று நெருக்கியது. அதனைக்கண்டு கதிரவன் முதலிய கிரகங்களும் விண்மீன்களும் பிறரும் பார்த்து மன நடுங்கி, "இஃது அவுணர்கள் செயலோ? திருமால் செயலோ? நான்முகன் செயலோ? மாயமோ?" என்று கூறினர். பிறகு அவர்கள், "விந்தமலை மேருமலையோடு பகைத்து விண்ணிலும், மண்ணிலும் செல்லும் வழியைத் கடுத்து நின்றது" என்று ஞான உணர்ச்சியினால் தெளிந்து, "அகத்திய முனிவர் இங்கே வந்தால் மேலே உயர்ந்து நின்ற விந்தமலை ஒடுங்கிவிடும்" என்று ஆராய்ந்து அறிந்தனர்.

திருவிருத்தம்–29
ஆகத் திருவிருத்தம்–1,181

——oo——

## 23. அகத்தியப் படலம்

**விந்தத்தின் வலியை அழிக்க அகத்தியரை வேண்டுதல்**

கதிரவன் முதலிய கிரகங்களும் பிறரும் அகத்திய முனிவரைக் கொண்டு விந்த மலையின் ஆணவத்தை அடக்கக் கருதினார்கள்; அகத்தியரை நினைத்து, "முன்னொரு காலத்தில் திருமாலை அர்ச்சிக்கப் பூக்கொய்த கஜேந்திரன், தன்னை ஒரு முதலை மடுவில் பற்றி இழுத்தபொழுது, 'என் நாயகனே' என்று கூறி அழைக்க, அவர் வந்து முதலையிடமிருந்து விடுவித்ததை அறியீரோ? நான்முகன் தான் படைத்த திலோத்தமையிடம் மையல் கொண்டு கிளி வடிவாய்த் தொடர்ந்து சென்றபொழுது திலோத்தமை, 'பரம்பொருளே என்னைக் காத்தருளும்' என்று வேண்ட, சிவபெருமான் அவளுக்கு அருள்புரிந்ததை அறியீரோ? தேவர்களுக்கேனும் மனிதர்களுக்கேனும் ஒரு துன்பம் வந்தால் அதனை நீக்குதல் காத்தற்குரியாருக்கு உரிய கடனாகும். அஃது அடைதற்கரிய முத்தியினும் சிறந்ததன்றோ? இந்திரன் விருத்திராசுரனை அழித்தற் பொருட்டு உள்ளங்கையில் கடலை அடக்கிய எம்பெருமானே! விந்தமலை, நாரத முனிவருடைய சூழ்ச்சியால் இப்பொழுது மேரு மலையோடு பகைகொண்டு அண்டகடாகம் வரை உயர்ந்து நின்று ஆகாய வழியைத் தடைசெய்கின்றது. நிலவுலகம் முழுவதும் இரவும் பகலும் மயங்கின. முனிவர்

பெருமானே! இக்குறையை நீவிர் நீக்குதற்கு எழுந்தருளி வருதல் வேண்டும்'' என்று பலவாறு துதித்து வணங்கினர்கள்.

**அகத்தியர் சிவபெருமானிடம் வலிமை வேண்டல்**

மேரு மலைச்சாரலிலே தவம் செய்துகொண்டிருந்த அகத்திய முனிவர், தம்மைச் சூரியன் முதலாயினோர் நினைத்து வேண்டினமையை அறிந்தார். அக்குறையைப் போக்கக் கருதிச் சிவ பெருமானை மனத்தில் தியானித்தார். சிவபெருமான் இடபாரூடராய் அகத்திய முனிவர்முன் தோன்றி, ''முனிவனே! உனக்கு யாது வேண்டும்?'' எனக் கேட்டருளினர். அகத்தியர் சிவபெருமானை வணங்கி, ''எம்பெருமானே! விந்தமலை மேருமலையோடு மாறுகொண்டு ஆகாய வழியை அடைத்தது. அதன் வலியை அடக்கும்படி அடியேனுக்கு ஆண்மை அருளவேண்டும்'' என்று விண்ணப்பித்தார். சிவபெருமான் அகத்தியரை நோக்கி, ''முனிவனே! உனக்கு வேண்டிய வலிமையைத் தந்தருளினோம்; விந்தத்தின் ஆற்றலை அடக்கித் தென் தேசத்தை அடைந்து, பொதிய மலையிற் சென்று இருப்பாயாக'' என்று அருளிச் செய்தார். அகத்தியர் சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, ''தேவரீரை வழிபடத் தென்றிசைக்கு ஒரு தீர்த்தத்தை அளித்தருள வேண்டும்'' என்று வேண்டினர். சிவபெருமான், திருக்கயிலாய மலையில் இனிது வைகிய ஏழு நதிகளுள் புனிதமாகிய **காவிரி நதியை** அழைத்து முனிவரோடு தென்றிசைக்குச் செல்லப் பணித்தருளினர்.

**அகத்தியர் காவிரியுடன் புறப்படுதல்**

காவிரி, சிவபெருமானை நோக்கி, ''எம்பெருமானே! நான் ஒரு பெண். இம்முனிவர் ஐம்பொறிகளையும் அடக்கியவராயினும், ஓர் ஆடவர். ஆதலால், இவருக்குப் பின்னல் செல்லுதல் முறையாகுமோ'' என்ருள். சிவபெருமான் அதனைக்கேட்டு, ''இம்முனிவன் மாறுபாடில்லாத மனத்தினன்; நம்முடைய அடியார்களுள் சிறந்தவன்; நீ இவன் பின்னே செல்வாயாக'' என்று அருளிச் செய்தார். காவிரி, ''இம்முனிவனை விட்டு நீங்கும் காலம் எப்போது'' என்று சிவபெருமானை வேண்ட, சிவபெருமான் காவிரியைப் பார்த்து, ''பெண்ணே! இம்முனிவன்

என்றைக்கு உன் பொருட்டாகப் பார்த்துக் கைகாட்டுவானே அன்றைக்கே இவனைவிட்டு நீங்கிப் பூமியை அடைவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினர். காவிரி அகத்திய முனிவரின் பின் செல்ல இணங்கியது. அகத்திய முனிவர் காவிரியைத் தன் கமண்டலத்தில் ஏற்றுக்கொண்டார். சிவபெருமான் அகத்திய ருக்கு விடையளித்து மறைந்தருளினர். முன்னே விதர்ப்ப நாட்டு அரசன் தவஞ்செய்து பெற்ற **உலோபாமுத்திரை** என்னும் கன்னிகையை மணந்து **புலத்திய முனிவரைப்** பெற்ற அகத்திய முனிவர், சிவபெருமான் திருவருளைப் பெற்று அங்கு நின்று பொதியமலையை நோக்கிப் புறப்பட்டார்.

திருவிருத்தம்— 28
ஆகத் திருவிருத்தம்—1,209

——oo——

## 24. கிரவுஞ்சப் படலம்

**கிரவுஞ்சன் மாயை**

அகத்தியர் மேருமலையினின்றும் தென்றிசை நோக்கிச் செல்லும் பொழுது, தாரகாசுரனுடைய **மாயாபுரி** என்னும் நகரம் குறுக்கிட்டது. அங்கே இருக்கின்ற **கிரவுஞ்சன்** என்னும் அசுரன் அகத்தியர் வரவைக் கண்டான். அவன், யாவரும் வியந்து அஞ்சும்படி வானுலகை மண்ணுலகாக்குவான். மண்ணுலகை விண்ணுலகமாக்குவான்; கடலை மலையாக்குவான்; மலையைக் கடலாக்குவான்; சூரியனைச் சந்திரனுக்குவான்; சந்திரனைச் சூரியனுக்குவான்; அணுவை மேருவாக்குவான்; மேருவை அணுவாக்குவான்; பூமியைக் கடலாக்குவான்; கடலைப் பூமியாக்குவான்; ஒரு நாழிகைப் பொழுதில் பதினுயிரத்தில் ஒருபங்கைத் தேவராயினும் முனிவராயினும் மயங்கிப் பன்னெடுங்காலமென அயர, மாயைகள் அளப்பில புரிவதில் பேராற்றல் கொண்டவன். இத்தகைய வல்லமையுள்ள கிரவுஞ்சன், அகத்தியர் வரும் வழியில் பல சிகரங்களைக் கொண்ட ஒரு மலையாய்த் தன்னுள்ளே செல்லும் ஒரு வழியைக் காட்டி நின்றுன். அகத்தியர் அது கண்டு வியந்து "இதோ, இம்மலையின் நடுவே ஒருவழி இருக்கிறது. இவ்வழியே செல்வேன்"

என்று எண்ணி அவ்வழியைப் பின் பற்றிச் சென்ருர். சிறிது தூரம் சென்றதும் அவ்வழி மறைந்து வேருெருவழி தோன்ற, அவ்வழியில் செல்லுகையில் வழியில்லாமலிருக்க முனிவன் திரும்பிப்போதற்கு, முன்னுள்ள வழியையுங் காணுது, மயங்கிப் பின்ருெருவழியைக் கண்டு மனங்கலங்கிச் சென்ருன். அவ்வாறு செல்லும் பொழுது அக்கினி சூழ்ந்து, சுழல் காற்று வீசியும், இடி இடித்து மழை பெய்யவும், இருட்படலம் சூழவும் பலவித மாயைகளைக் கிரவுஞ்சன் செய்தான்.

**கிரவுஞ்சன் மலையாதல்**

அகத்திய முனிவர் அதனை நோக்கி, "கொடிய அசுரர்களின் வஞ்சனையே" என்று ஞானத்தால் அறிந்தார். சினம் மிகுந்து கையோடு கைதட்டிச் சிரித்து, "நல்லது நல்லது! இன்றைக்கே இவன் வலிமையைக் கெடுப்பேன்" என்று கூறித் தன் கையிலிருந்த தண்டினுல் பூழைகள்படும்படி அம்மலையினைக் குத்தினுர்; பின்னர் அதனைப்பார்த்து, "நல்லறிவற்ற அசுரனே! நீ உன் பழைய அசுர வடிவை விட்டுவிட்டு மலைவடிவாக இங்கே நில்; அசுரர்களுக்கு இருப்பிடமாய் முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் துன்பம் செய்து கொண்டிரு; நமது கைத் தண்டினுல் உன்மீது செய்த முழைஞ்சுகள் யாவும் பற்பல மாயங்களுக்கு இருப்பிடமாகுக; பின்னுளிலே முருகக் கடவுளின் வேற்படையால் நீ அழிவாய்" என்று சபித்துத் தம் கமண்டலத்திலுள்ள நீரை அள்ளி மந்திரத்தோடு தெளித்து அவன் மாயத்தைக் கெடுத்தார். பிறகு, அகத்தியர் தென்றிசையை நோக்கிப் புறப்பட்டார். அக்கிரவுஞ்சன் என்னும் அவுணன் மலை வடிவாய் நின்ருன்.

திருவிருத்தம்–13
ஆகத் திருவிருத்தம்–1,222

——oo——

## 25. விந்தம் பிலம்புகு படலம்

**அகத்தியருக்கு விந்தமலை வழிவிட மறுத்தல்**

அகத்திய முனிவர் அங்கு நின்றும் நீங்கித் தேவகிரிச் சாரலை அடைந்து காசிப்பதியிற் சென்று அங்கு எழுந்தருளியுள்ள

அகிலநாதருடைய திருவடிகளை வணங்கித் துதித்துப் பிரியா விடைபெற்றுத் தென்றிசைநோக்கி வரும் வழியில் மிக உயர்ந்து நிற்கும் **விந்தமலையைக்** கண்டார். அதனைப் பார்த்து, "யாம் பொதியமலை செல்ல இவ்வழி வந்தோம்; நீ ஒரு சிறிது வழி விடுவாயாக" என்று கூறினர். அதுகேட்ட விந்தமலை, "கதிரவனும், திங்களும் செல்லமுடியாதபடி ஆகாயவழியை மறைத்து நெடிய வடிவுடைய திருமாலைப்போல் யான் நின்றேன்; குறுகிய வடிவுடைய உனக்கு அஞ்சி வழி விடுவேனே? நீ வந்த வழியே திரும்பிப் போவாயாக" என்று கூறியது.

### அகத்தியர் விந்த மலையின் செருக்கழித்தல்

விந்தம் மொழிந்ததைக்கேட்டு அகத்தியர் நகைத்துச் சிவபெருமானுடைய திருவடிகளை எண்ணித் துதித்தார்; முன்னாளில் இந்திரன் வேண்டக் கடலில் நீட்டிய திருக்கரத்தைச் சத்தியவுலகமும் எட்டும்படி நீட்டி, விந்த மலையின் முடியின்மீது தன் உள்ளங்கையை வைத்து ஆற்றலுடன் கீழே அழுத்தினர். விந்தமலை அழுந்திப் பாதலத்தில் புகுந்து ஆதிசேஷன் இடத்தை அடைந்தது. பிறகு அம்மலை அகத்தியரை நோக்கி, "முனிவரே! உம்மை இகழ்ந்ததால் என் மேன்மையை இழந்தேன்; என்னுடைய குற்றத்தை மனத்தில் கொள்ளாது, நான் திரும்பி எழுங் காலத்தை அருள்செய்தல் வேண்டும்" என்று வேண்டிக்கொண்டது. அகத்தியர் அம்மலையை நோக்கி, "நான் சென்று பின்னர் மீண்டு இவ்வழியே வரும்போது நீ மேலெழுவாய்" என்று நாரதரின் சூழ்ச்சிக்கு இசைய நகைத்துக் கூறினர்.

### தேவர்கள் முதலியோரின் மகிழ்ச்சி

விந்தமலை பூமியுள் மறைந்ததும் அகத்திய முனிவர் தம் கையை முன்போலச் சுருக்கிக்கொண்டார். தேவர்கள் பூமாரி பெய்தனர். சூரியன் முதலிய தேவர்கள் அகத்திய முனிவரை வணங்கி, "தேவரீர் செய்த உதவி யார் செய்யவல்லவர்? நீர் எம்பொருட்டுப் பொதிய மலையிற் சென்று வீற்றிருப்பீராக" என்று கூறினர்கள். அகத்தியர் நன்றென்று இசைந்து தென்

றிசை நோக்கிப் புறப்பட்டார். குடக தேசத்தில் **வில்வலன் வாதாவி** இருவரும் அகத்திய முனிவரின் வரவைக் கண்டார்கள்.

திருவிருத்தம்–13
ஆகத் திருவிருத்தம்–1,235

——oo——

## 26. வில்வலன் வாதாவி வதைப் படலம்

**வில்வலன் வாதாவி பொய்வேடம் பூணுதல்**

அகத்திய முனிவரின் வருகையை அறிந்த வில்வலனும், வாதாவியும் அவரைக்கொன்று உண்ண முடிவு செய்தார்கள். இளவலாகிய வாதாவி, மலைச்சாரலிலே ஆட்டுக்கடா வடிவங் கொண்டு தழைகளையும் புதல்களையும் மேய்ந்துகொண்டிருந் தான். மூத்தவனாகிய வில்வலன் அருந்தவ முற்றிய முனிவர் வடிவம் தாங்கி, அகத்தியர்முன் சென்று அவரை மும்முறை வணங்கித் துதித்தான். பின்பு அவன், "முனிவரே! நீர் எழுந் தருளும்படி இதுவரையில் அடியேன் அருந்தவம் செய்தேன்; இன்றைக்கு முடிவுற வந்தீர்" என்று அகத்தியரைப் பலவாறு முகமன் கூறித் துதித்தான். அவனது தீய எண்ணத்தை நினையாத அகத்திய முனிவர் மகிழ்ந்து வில்வலன் ஆச்சிரமத்தை அடைந்தார். வில்வலன் அவரை ஓர் ஆசனத்தில் இருத்திப் பாதங்களைப் பூசித்து வணங்கி, "எம்பெருமானே! நீர், யானும் என் குலத்தவர்களும் உய்யும்படி இங்கு எழுந்தருளினீர் போலும்; இன்றைக்கு அடியவன் குடிசையில் இருந்து அமுது செய்து, அடியேனுக்குத் தேவரீர் உண்டருளிய மீதியைத் தந்தருள்க" என்று பணிவுடன் வேண்டினான்.

**வில்வலன் அகத்தியர்க்கு அமுது படைத்தல்**

அகத்தியர் அமுதுசெய்ய இணங்கினார். வில்வலன் மனம் மகிழ்ந்து ஒரு தடாகத்தில் நீராடி மடைப்பள்ளியை அடைந்து அதனைச் சாணத்தால் சுத்தி செய்து அடுப்பு மூட்டி, ஒரு பானை யில் உலைப்பெய்து அடுப்பின் மேல் வைத்து அரிசியை யிட்டுப் பதமறிந்து சமைத்தெடுத்தான்; பாயசான்னம், குளான் னம் முதலிய இனிய உணவுகளைச் சமைத்தான்; ஆட்டுக் கடா வாய் நின்ற தம்பியாகிய வாதாவியை அகத்திய முனிவர்

முன்னே வலிந்து இழுத்துக்கொண்டு வந்து அரிவாளினுல் வெட்டினுன்; ஊன்களை மிடாக்களிலிட்டுக்கழுவி உப்பு முதலிய சுவைப்பொருள் இட்டு நெருப்பில் வைத்துச் சமைத்து, மிளகு பொடி முதலியவற்றைத் தூவி, நெய்விட்டுப் பொரிப்பனவற்றைப் பொரித்து, வாசனைப் பொடிகள் முதலியன தூவிச் சமைத்தான்; பருப்புக் கறியையும், புளிக்கறியையும் சமைத்தான். அதன்பிறகு, பலாப்பழம் முதலிய பற்பல கனிகளுடன் சர்க்கரையும் தேனும் கலந்து வைத்தான். பூசைக்குரியவற்றையும் தயாரித்து வைத்தான். சமையல் முடிவுற்றபின் வில்வலன் மகிழ்ச்சியுடன் சென்று அகத்திய முனிவருடைய அடிகளில் வீழ்ந்து உணவருந்த எழுந்தருளும்படி வேண்டினுன். அகத்திய முனிவர் உடன்பட்டுச் சென்ருர். ஓர் ஆசனத்திலிருத்தி முகமன் கூறி, அவர்முன் பொன் வட்டிலையும் தண்ணீர்ப் பாத்திரத்தையும் வைத்து, ஆட்டுக்கறியின் வகைகளையும், பிற உணவுகளையும் படைத்தான். அகத்தியர் உணவுகொள்ள வேண்டிய வேத முறைப்படி மந்திரங் கூறி, உணவு வகைகளைத் தூய்மை செய்து மிக விரும்பித் திருவமுது செய்தார்; பிறகு வாய் கைகளைக் கழுவிக்கொண்டு மற்ருேர் இடத்தில் சென்று வீற்றிருந்தார்.

**வாதாவி அழிவு**

வில்வலன் அகத்திய முனிவரைக் கொல்ல நினைத்து, வழக்கம்போலத் தன் இளவலை நோக்கி, "வாதாவியே! என் தம்பியே! விரைந்து வருவாய்" என்று அழைத்தான். உடனே வாதாவி அகத்திய முனிவருடைய வயிற்றினுள்ளே ஆட்டுக்கடாவாய் எழுந்துநின்று, "அண்ணு! வில்வலனே! முன்னே இம் முனிவர் கடலை உண்டதுபோல இப்போது என் உடலை உண்டார். நான் அவர் வயிற்றைக் கிழித்துக்கொண்டு இதோ வருவேன்" என்று சிங்கம்போலக் கர்ச்சித்தான். அகத்திய முனிவர் அவுணர்கள் செய்த மாய வஞ்சனையைக் கண்டு வெகுண்டு, "உயிர் நீங்கிக் கறியாய் உண்ணப்பட்ட வாதாவி நாம் உண்டவாறே அழிந்து போகக் கடவன்" என்று சாபமிட்டு, ஒருதரம் தம் வயிற்றை வலக்கரத்தால் தடவினுர். உடனே வாதாவி, அவர் சிறுவயிற்றினுள் செறித்துப் போனுன்.

**வில்வலன் அழிவு**

தம்பி வாதாவி இறந்ததைக் கண்ட வில்வலன், கோபங் கொண்டு தன் உண்மை வடிவத்தோடு அகத்திய முனிவரைக் கொல்ல நினைத்து ஒரு தண்டாயுதத்தோடு வந்தான். அகத்தியர் தன்கையிலிருந்த தருப்பை ஒன்றைச் சிவப் படைக்கலமாகக் கருதிச் செலுத்த, அதனுல் வில்வலனும் இறந்தான். அகத்தியர் அவ்விடத்தை விட்டு நீங்கிக் கொங்க நாட்டை நோக்கிப் புறப்பட்டுச் சென்ருர்.

திருவிருத்தம்–32
ஆகத் திருவிருத்தம்–1,267

——oo——

## 27. காவிரி நீங்கு படலம்

**அகத்தியர் பிரமகத்தி தோஷம் நீங்கப்பெறுதல்**

அகத்திய முனிவர் கொங்க நாட்டிற்குச் செல்லும்பொழுது இறந்த வில்வலன் வாதாவி இருவரும், முனிவர் போலவந்து, மிகப்பயங்கர வடிவோடு அவரை அணுகியும், அகன்றும், மறைந்தும், சூழ்ந்தும் ஆரவாரம் செய்தனர். அகத்திய முனிவர் அதனைக்கண்டு, "நாம் கொன்ற வில்வலனும் வாதாவியும் துருவாச முனிவரின் புத்திரர்கள். ஆதலால், அவர்கள் நம்மைப் பிரமகத்திகளாய்த் தொடர்ந்து வருகிருர்கள்" என்று அறிந்தார். அத்தோஷம் நீங்க அக்கொங்க நாட்டின் ஒருபுறத்தில் சிவலிங்கம் தாபித்து, மெய்யன்போடு பலநாள் பூசித்துக்கொண்டிருந்தார். அகத்தியரைத் தொடர்ந்த பிரமகத்தி தோஷம் நீங்கியது.

**நாரதர் - இந்திரன்**

அகத்தியரின் செயல் யாவற்றையும் நாரதர் கண்டார்; சூரபன்மனுக்குப் பயந்து மூங்கில் வடிவாய்ச் சீகாழியில் சிவபெருமானை நோக்கித் தவம் செய்துகொண்டிருக்கும் இந்திரனிடம் சென்ருர். இந்திரன் அவரைக் கண்டு வணங்கினுன். நாரதர் இந்திரனின் நலனை வினவினுர். இந்திரன் முனிவரை நோக்கி, "அடியேன் செய்யும் சிவபூசைக்கு ஓர் இடையூறு ஏற்பட்டிருக்கிறது. நான் ஏற்படுத்திய நந்தனவனம்

சிறிதும் நீரில்லாது வாடிற்று. பூசிப்பதற்குப் பூவும் கிடைக்க வில்லை. இதுவே என்குறை. அதனை நீக்கியருள வேண்டும்'' என்றான். நாரதர் இந்திரனை நோக்கி, “இந்திரனே! நீ இழந்த விண்ணுலக வாழ்வு அரசியல் முதலியன சிவபெருமான் திரு வருளால் இனிமேல் உனக்கு வரப்போகின்றன. நீ வருந்தல் வேண்டாம். நினது நந்தனவனம் நீரால் செழிக்கவும், சிவபூசை தீங்கின்றி முற்றுப் பெறவும், நற்காலம் வந்துள்ளது. சிவபெருமான், அகத்திய முனிவரைப் பொதிய மலையிலே போயிருக்கும்படி கட்டளையிட, அவர் போகும் வழியிலே விந்த மலையை அடக்கி, வில்வலன் வாதாவி என்னும் இருவரை அழித்து, அதனால் வந்த பிரமகத்தி தோஷம் நீங்கும்படி கொங்க நாட்டில் இறைவனைப் பூசித்து அருள்பெற்று, இன்னும் அங்ஙனே அமர்ந்திருக்கின்றார். அவருடைய கமண்டலத்துள்ள காவிரி யாற்றை இங்கே வரும்படி செய்தால் உன் மனக்குறை நீங்கும்'' என்றார். அப்போது இந்திரன், “அகத்தியர் கமண்டலத்திலுள்ள காவிரியை இங்கே எப்படி வரச்செய்வது?'' என்று கேட்டான். நாரதர், “இந்திரனே, நீ விநாயகக் கடவுளை மெய்யன்போடு பூசித்து வழிபாடு செய்வாயானால், அக் கடவுள் அவர் கமண்டலத்தைக் கவிழ்த்து, அந்நதியை இங்கே வர வழிசெய்வார்'' என்று உபாயங் கூறினார். இந்திரன் பேரானந்தமடைந்து “அடியேன் கவலையெல்லாம் நீங்கி உய்ந் தேன்; காவிரி இங்கே வரும்படி விநாயகக் கடவுளைப் பூசிப் பேன்'' என்று கூற, நாரதர் விடை பெற்றுக்கொண்டு தம் பதத்தை அடைந்தார்.

**இந்திரன் விநாயகரை வழிபடுதல்**

இந்திரன் விநாயகக் கடவுளின் திருவுருவத்தைத் தாபித்து அருச்சனை புரிந்து, தேங்காய், தினைமா, தேன், முக்கனி, பாகு, மோதகம், கிழங்கு, பால், பலகாரவகைகள் முதலியன நிவேதித்துப் பலவாறு துதித்து வழிபட்டான். அப்போது விநாயகக் கடவுள், பல்கோடி கணங்கள் சூழ இந்திரனுக்குக் காட்சியளித்தார். இந்திரன் பெருமகிழ்ச்சி யடைந்து, “அடியேன் உய்ந்தேன்'' என்று கூறி, அவர் திருவடிகளில் தன் தலை படும்படி வணங்கி நின்றான். விநாயகக் கடவுள், இந்திரனை

நோக்கி, "நாம் உன் பூசையைக் கண்டு மனம் மகிழ்ந்தோம்; உனக்குவேண்டிய வரம் யாது?" என்றார். இந்திரன் அதுகேட்டு, "எம்பெருமானே! சிவபூசை செய்ய இங்கு ஒரு நந்தனவனம் வைத்தேன்; அது, நீரின்மையால் வாடிக் கரிந்து போய்விட்டது" என்றான். விநாயகக் கடவுள், "இந்திரனே! உனக்குக் கங்கை முதலிய நதிகளை இங்கு அழைத்துத் தரவேண்டுமோ? அல்லது சமுத்திரங்கள் எல்லாவற்றையும் அழைத்துத் தரவேண்டுமோ?" என்று கேட்டார். இந்திரன் அவரை நோக்கி, "கொங்க நாட்டில் அமர்ந்திருக்கும் அகத்திய முனிவரின் கமண்டலத்தில் இருக்கும் காவிரி தீர்த்தத்தை தேவரீர் சென்று கவிழ்த்து விட்டால் அஃது இங்கு வரும்; அடியேன் மனக்குறை தீரும்; இதுவே அடியேன் வேண்டிக்கொள்வது" என்றான். விநாயகக் கடவுள், "அங்ஙனமே செய்வோம்" என்று மகிழ்வோடருள் செய்து, இந்திரனை அங்கே நிறுத்தி விட்டுக் கொங்க நாட்டை அடைந்தார்.

**விநாயகர் அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்தல்**

அகத்திய முனிவரின் கமண்டலத்தின் மீது, "விநாயகக் கடவுள் காக வடிவத்துடன் சென்று உட்கார்ந்தார். அகத்திய முனிவர், தம் கமண்டலத்தின் மீது உட்காரும் அக்காகத்தை விநாயகக் கடவுள் என்று அறியாமல், ஒரு பறவை என்று எண்ணி ஓட்டும்பொருட்டுக் கையைத் தூக்கி ஓச்சினார். உடனே காக வடிவாய்நின்ற விநாயகக்கடவுள் கமண்டலத்தைக் கவிழ்த்து, காவிரி யாற்றை நோக்கி, "நீ பூமியில் செல்லக் கடவாய்" என்று கட்டளையிட்டருளினார். காவிரி, மண்ணும் விண்ணும் நடுங்கும்படி பெருமுழக்கத்துடன் நிலவுலகில் பாய்ந்தது.

**அகத்தியருக்கு விநாயகர் உண்மை வடிவுடன் காட்சிதருதல்**

விநாயகக் கடவுள் காக வடிவத்தை மாற்றி அந்தணப் பிரமசாரி வடிவங்கொண்டு சென்றார். அகத்திய முனிவர் வெகுண்டு, "இங்ஙனம் செய்தவன் தேவனோ, அவுணனோ, வேறெவனோ யான் அறிந்திலேன்; நம் கமண்டலத்திலுள்ள நதியைக் கவிழ்த்துச் செல்ல வல்லனோ? அகந்தையுடைய இவன் யாவனோ? இவன் வலிமையை விரைவில் அறிவேன்" என்று

கூறி, விநாயகக் கடவுளாகிய அந்தணச் சிறுவனைப் பின் தொடர்ந்து ஓடினர். விநாயகக் கடவுள் அதுகண்டு அவருக்குப் பயந்து ஓடுபவர்போல் ஓடினர். அகத்தியர், விநாயகக் கடவுளின் தலையில் குட்டுவதற்குத் தன் கைகளைக் கவித்த மாக்கிப் பிடித்துக்கொண்டு, அவரைத் துரத்தினர். அந்தணச் சிறுவனின் வேடம் பூண்ட விநாயகரை அகத்தியரால் பிடிக்க இயலவில்லை. அகத்தியர் மிக முயன்று தளர்ச்சி அடைந்து மெலிந்து நின்றார். அகத்தியரின் மெலிவைக் கண்ட ஆனைமுகக் கடவுள் திருவருள் சுரந்து மனமிரங்கித் தம் மெய்வடிவத்தை அவருக்குக் காட்டியருளினர்.

**அகத்தியர் விநாயகரை வேண்டுதல்**

அகத்தியர் ஆச்சரியத்தில் மூழ்கியவராய், "விநாயகக் கடவுளோ இங்கு எழுந்தருளி வந்தார்? நான் அவர் தலையில் குட்டுவதற்கு முயற்சித்தேனே!" என்று உள்ளம் கலங்கி வெதும்பினர்; குட்டுவதற்குக் கவித்த தம் கைகளிரண்டினாலும் தம்முடைய நெற்றியில் இடிவிழுந்தாற்போல் முழுவன்மையுடன் குட்டிக்கொண்டார். விநாயகக் கடவுள், பேரருளோடு அகத்தியரைப்பார்த்து, "ஏன் இவ்வாறு குட்டிக்கொள்கிறாய்?" என்றார். அகத்தியர் விநாயகரைப் பார்த்து, "எம்பெருமானே! சிறிதும் அறிவில்லாத யான், தேவரீரை அந்தணச் சிறுவன் என்று நினைத்துத் தலையில் குட்ட ஓடி வந்தேன். அந்தப் பாவத்தை நீக்கிக்கொள்ளும் பொருட்டு, "அடியேன் இப்பொழுது குட்டிக்கொள்கிறேன்" என்று விண்ணப்பஞ் செய்தார். விநாயகக் கடவுள் திருப்புன்முறுவல் பூத்தார்; அகத்தியரைப் பார்த்து, "உன் மனத்துயரை ஒழிப்பாய்" என்று அருளிச் செய்தார். அகத்தியர் துயரம் நீங்கி, விநாயகக் கடவுளை வணங்கித் துதித்து, "அடியேன் செய்த சிறுபிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

**விநாயகக் கடவுள் திருவருள்புரிதல்**

விநாயகக் கடவுள், முனிவரைப் பார்த்து, "தேவேந்திரன் சிவபெருமானைப் பூசைசெய்ய நிலவுலகில் நந்தனவனம் ஒன்று அமைத்தான்; அது நீரின்மையால் கரிந்துபோய்விட்டது. அத

ஞல் தண்ணீர் பெற விரும்பி, அவன் நம்மை நோக்கி வழி பட்டான். நாம் காக வடிவாய் வந்து உன் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரி நதியை நிலவுலகத்திற்குப் போகும்படியும் கட்டளையிட்டோம். தவத்தில் சிறிதும் குன்ருத நீ செய்தன வற்றை யெல்லாம் கண்டு மகிழ்ச்சியே கொண்டோம். நீ நம் தந்தையாகிய சிவபெருமானிடம் மெய்யன்பு கொண்டவன். ஆதலால், நீ நமக்கும் அன்பன். நீ வேண்டிய வரங்களைக் கேட் பாயாக'' என்ருர்.

**அகத்தியர் வரம்வேண்டுதல்**

அகத்தியமுனிவர் விநாயகக் கடவுளை வணங்கி,'' அடியவன், தேவரீரிடத்திலும் சிவபெருமானிடத்திலும் என்றும் குன்ருத அன்புடையவனுக இருக்கும் மேன்மையைத் தந்தருளவேண்டும்; அடியேன் இப்போது குட்டிக் கொண்டதுபோல், தேவரீர் சந்நிதானத்தில் குட்டிக்கொள்பவர் குறை தீர்த்து அவர்க ளுக்குத் திருவருள் புரிதல் வேண்டும்'' என்று வேண்டிக்கொண் டார். விநாயகக் கடவுள் அவ்வரங்களை அருள் செய்து, ''நீ இன்னும் வேண்டிய வரங்களைக் கேட்பாயாக'' என்ருர். அகத்திய முனிவர் விநாயக் கடவுளை நோக்கி, ''சுவாமீ! அடி யேன் கமண்டலத்திலிருந்த நதி சிறிதுமின்றிப் பூமியிலே கவிழ்ந்துவிட்டது; சிவபெருமான் தந்தருளிய மேன்மையான அந்நதி போய்விட்டால் அதுபோல அடியேனுக்கு வேறு நதி ஒன்றுண்டோ? தேவரீர் ஒரு நல்ல தீர்த்தத்தைத் தந்தருள வேண்டும்'' என்று வேண்டினுர்.

விநாயகக் கடவுள், பூமியை நோக்கிச் சென்றுகொண் டிருந்த காவிரியாற்றிலேயே தம்முடைய ஒரு திருக்கரத்தை நீட்டிச் சிறிது தண்ணீரை அள்ளி அகத்தியரின் கமண்டலத்தில் விட்டார். அத்தண்ணீர் கமண்டலம் நிரம்பி, மிகுந்த நீர் முழுவதும் ஆற்று வெள்ளத்தோடு பூமியிற் சென்று ஓடியது. அகத்திய முனிவர் தமது கமண்டலத்தில் நீர் நிறைந்திருப்பது கண்டு விநாயகக் கடவுளை நோக்கி, ''கவிழ்ந்த நதியையும் தேவரீர் முன்போலத் தந்தருளினீர்; அன்பில்லாத சிறியேன் உய்ந்தேன்; இன்னமும் தேவரீரை அடியேன் நினைக்குந்தோறும் எழுந்தருளிவந்து அருள் செய்யவேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார். விநாயகக் கடவுள் அவ்வாறே அருள் செய்து

மறைந்தருளினார். அகத்தியர் விநாயகக் கடவுளைத் துதித்துக் கொண்டு கொங்க நாட்டை விட்டுத் தென்றிசை நோக்கி விரைந்து சென்றார்.

திருவிருத்தம்–66

ஆகத் திருவிருத்தம்–1,333

——oo——

## 28. திருக்குற்றாலப் படலம்

**திருமுற்றத்து வீர வைணவர்**

அகத்திய முனிவர் செல்லும் வழியில், விஷ்ணுத்தலமாகிய **திருக்குற்றாலம்** என்னும் ஒரு நகரம் எதிர்ப்பட்டது. முனிவர் சிவநாமங்களை உச்சரித்துக்கொண்டு அந்நகரை அடைந்தார். அங்குத் **திருமுற்றம்** என்று யாவரும் பாராட்டும் திருமாலின் ஆலயம் ஒன்று உண்டு. அங்குக் கணக்கற்ற வைணவ அந்தணர்கள் இருந்தனர். அவர்கள் உண்மை நூல்களைப் படித்த போதிலும் மயக்கம் ஒழியாதவர்கள்; சிவனடியார்களைக் கண்டால் தொன்றுதொட்டுள்ள பகைவர்களைப்போல எண்ணிச் சினங் கொள்பவர்கள்; மறையவர் என்னும் பெயர் மாத்திரம் கொண்டனரே அன்றி அதற்குரிய ஒழுக்கம் ஒன்றையும் கொண்டாரில்லை.

**வைணவர்களின் சீற்றம்**

அகத்திய முனிவர் திருமுற்றத்து வைணவர் செயலையறிந்து அவ்வூரின் தெருவிலே நடந்து திருமால் ஆலயத்தின் முன்னே சென்றார். அங்குள்ள வைணவர்கள் அவரை உற்றுப் பார்த்துக் கோபங் கொண்டு பெருமூச்சுவிட்டு, "நீ கண்டிகையும், திருநீற்றையும் அணிந்துள்ளாய்; அதனால், ஐயமேற்று உண்ணும் சிவனுக்கு அடியவன்; இங்கே வருதல் தகாது. இங்கு நில்லாதே! விரைந்து அப்பாற் போய்விடு" என்றார்கள். அகத்தியமுனிவர் சிறிதும் கோபங்கொள்ளாது நகைத்து, "வேத நெறியை இகழ்ந்த நீவிர் இங்கு இருத்தலை நான் உணரவில்லை; இதனை எவரும் எனக்குச் சொன்னாரில்லை. இது நல்லவழி என்று எண்ணி நான் வந்துவிட்டேன்; என்மீது கோபங்கொள்ளாதீர்கள்; நான் திரும்பிப் போய்விடுகிறேன்" என்றார். வைணவர்கள் மீட்டும் சீற்றங்கொண்டு, "நீ இந்த ஊருக்கு வருவதும்

மகாபாவம்; திரும்பிப்போகக் கடவாய்" என்றார்கள். அகத்திய முனிவர், "திருநந்தி தேவர், பிரமதேவர், துருவாசர், பிருகு, கவுதமர், கண்ணுவர், ததீசி முதலியோர் இவர்களுக்கு இட்ட பெருஞ் சாபங்கள் யாவும் பொய்படுமோ" என்று நினைத்துக் கொண்டு, திரும்பி வெளியே வந்தார்.

**அகத்தியர், திருமால் அடியார் வேடம் தாங்குதல்**

பிறகு அகத்தியர், "சிவபெருமானை இகழும் இவ் வைண வர்கள் அஞ்ஞானத்தினால் கொண்ட அகந்தையை அடியோடு களைவேன்" என்று எண்ணித் தமக்குக் கை வந்த மாயையி னாலே திருமால் அடியவரைப்போல் பொய்க் கோலங்கொண்டு வைணவர்களிடம் மீண்டும் சென்றார். திருமால் வேடம்பூண்ட அகத்திய முனிவரை வைணவர்கள் நெடுந் தொலைவிலே கண் டார்கள். விரைந்து எதிர்கொண்டு சென்று போற்றினார்கள். அப்போது அவர் அவ் வைணவர்களைப் பார்த்துப் பற்பலவாறு புகழ்ந்து, "நாம் முன்னர் அழகர் மலையில் இருந்தோம்; இப் போது அத்திகிரியில் இருக்கச் செல்லுகின்றோம்; இங்கு எழுந் தருளியுள்ள எம்பெருமானைத் தரிசித்துக்கொண்டு செல்ல வந் தோம்" என்றார். வைணவர்கள், "அதோ தோன்றுகின்ற ஆலயம் விஷ்ணுவாலயம்" என்று சுட்டிக்காட்டினார்கள்.

முத்திதரு பேரழகர் திருமலையி
னிடையுற்றோம் முன்னம்; இன்னே
அத்திகிரி தனிலிருப்பச் செல்கின்றோம்;
நம்பெருமான் அமருங் கோயில்
இத்தலமேல் உளதென்பர்; அதுபரவும்
விருப்புடையோம் என்ன அன்னோர்
கைத்தலத்தோர் விரற்சுட்டி அதுதிருமால்
இருக்கையெனக் காட்ட லுற்றார்.

அகத்தியர் அஞ்சலி செய்து விரைந்து கோயிலை அடைந்து வலம் வந்து திருமாலைத் தரிசித்து வணங்கி நின்றார்.

**'குறுகு, குறுகு' குற்றாலம் – சிவத்தலமாதல்**

அப்போது அகத்திய முனிவர் வைணவர்களை நோக்கி, "இப்பெருமானைப் பூசித்து வழிபட என் மனம் விரும்புகிறது;

அதற்குவேண்டிய திருமஞ்சனம் முதலிய உபகரணப் பொருள் களைக்கொண்டு வருவீர்களாக'' என்றார். அவர்கள் திருமஞ் சனம், புஷ்பம், சந்தனம், வஸ்திரம் முதலியனவற்றைக் கொண்டுவந்து கொடுத்தனர். ஆணவம் கொண்டிருந்த வைண வப் பிராமணர்களைப் பார்த்து, ''நாம் இவரை அருச்சனை செய்யும் விதிமுறையை நீங்கள் எல்லோரும் காண்பீர்களாக'' என்றார். அகத்தியர், சிவபெருமானைத் தியானித்துக்கொண்டு திருமாலின் திருமுடியின்மேல் தமது திருக்கரத்தை வைத்து, **'குறுகு, குறுகு'** என்று இருத்தித் திருமாலின் வடிவை அனலிற் பட்ட மெழுகுபோலக் குழையச்செய்து சிவலிங்கமாக்கித் தாபித் துத் தம் சுய வடிவினைக் கொண்டு சிவலிங்கப் பெருமானைச் சிவாகம முறைப்படி பூசனை புரிந்தார்.

**அகத்திய முனிவரின் சீற்றம்**

அதனைக் கண்ட வைணவர்கள் மிகக் கோபித்து, ''இவன் வடிவால் மிகக் குறுகியவன். சிவபெருமானிடத்தில் சிறந்த பத்தி உள்ளவன். முன்னே சிவவேடத்துடன் வந்தபொழுது 'இங்கே நில்லாதே போ' என்று நாம் இகழ்ந்துரைத்தோம் இப்போது பாகவத வடிவில் வந்து நம் சமயத்தையே அழித்து விட்டான். அந்தோ! இவன் மாயத்தை உடையவன். இவனைப் பிடியுங்கள்'' என்று சொல்லிக்கொண்டு அகத்தியரைப் பிடிப்ப தற்காகச் சூழ்ந்து கொண்டார்கள். தம்மைப் பற்றும்படி சூழ் கின்ற அந்தணர்களை அகத்தியர் எரியெழப் பார்த்துக் கோபாக் கினியை விட்டார். அஃது அவர்களைச் சூழ்ந்து பொறிகளைக் கக்கிச் சுடத் தொடங்கியது; அவர்கள் அவ்விடத்தைவிட்டு மூலைக்கொருவராகச் சிதறி ஓடிப் போனார்கள். அன்றுமுதல் அப்பதி சிவத்தலம் ஆயிற்று. அகத்திய முனிவர் அச்சிவலிங் கப் பெருமானைப் பூசித்து வணங்கித் துதித்து விடைபெற்றுக் கொண்டு, பொதிய மலையை அடைந்து தவம் புரிந்து கொண்டி ருந்தார்.

திருவிருத்தம்–20
ஆகத் திருவிருத்தம்–1,353

——oo——

## 29. இந்திரன் அருச்சனைப் படலம்

**காவிரி சோழநாடு செல்லுதல்**

அகத்திய முனிவருடைய கமண்டலத்திலிருந்து புறப்பட்ட காவிரி நதி, நீக்குதற்கரிய பாசத்தளையை நீக்கி நன்னெறிப் படுத்தும் குருவருளால் முத்தியுலகு செல்லும் ஆருயிர் போலவும், தடைசெய்ய வல்லவன் ஒருவன் தனது மந்திர வலிமையால் பெரிய குடத்திலிட்டு வைத்திருந்த பாம்பு அருளுடையோன் ஒருவன் அத்தடை நீக்க விரைந்து செல்லும் தன்மை போலவும், பதிநூல் ஒழுக்கம் போலவும், இறைவன் ஆன்மாக்களுக்குக் காட்டியருளும் கருணை போலவும், பெருகிப் பலகாத தூரம் சென்று சந்தனமரம் முதலிய விருட்சங்களையும் யானைத் தந்தம், முத்து, பொன் முதலிய பொருள்களையும் வாரிக்கொண்டு கீழ்த் திசையை நோக்கி விரைந்து நடந்து இந்திரன் தவஞ் செய்யும் சீகாழிச் சண்பக வனத்தை அடைந்தது.

**இந்திரனின் சிவபூசை**

இந்திரன், காவிரியைக் கண்டு, கவலை நீங்கி ஆனந்தக் கூத்தாடினான்; சிவபெருமானுக்குரிய பூசனை முடிந்ததென்று பாடினான்; பெருந்துன்பஞ் செய்யும் சூரபன்மனை வென்றவனைப் போல் எண்ணி மகிழ்ந்தான். பசிப்பிணியால் வாடினோர் அமிர்தம் உண்டு மகிழ்ந்ததுபோலக் காவிரி நீரைப் பருகி, நந்தனவனம் குளிர்ச்சி யடைந்தது. புன்னை, சண்பகம், பாதிரி, கோங்கு முதலிய மரங்களும், முல்லை மல்லிகை முதலிய கொடிகளும், தாமரை நீலோற்பலம் முதலியனவும் மலர்ந்தன. இவ்வாறு மரங்களும் கொடிகளும் மற்றவைகளும் அரும்புதல், மலர்தல் ஆகிய காட்சி மாலைக்காலத்துச் செக்கர் வானமும், விண்மீனும் கலந்திருத்தலைப் போன்று விளங்கியது. இந்திரன், மலர் வளத்தினைக் கண்டு மகிழ்வுடன் வைகறைக் காலத்தில் சென்று வண்டுகள் வீழாமுன்னே பழுதில்லாத மலர்களைக் கொய்து, சைவாகம விதிப்படி சிவபெருமானைப் பூசனை செய்து கொண்டு சீகாழியில் இருந்தான்.

திருவிருத்தம்—30

ஆகத் திருவிருத்தம்—1,383

——oo——

## 30. தேவர் புலம்புறு படலம்

### தேவர்கள் இந்திரனை அடைந்து முறையிடுதல்

இந்திரன் சீகாழியில் சிவபெருமானைப் பூசித்துக் கொண்டிருக்கும் பொழுது, சில தேவர்கள் சூரபன்மனின் ஏவலால் மெலிந்து தளர்ந்து, இந்திரனைத் தேடிக்கொண்டுவந்து சீகாழியிலே கண்டார்கள். அவன் அடிகளில் விழுந்து வணங்கினார்கள்; அவர்கள் பலவாறு புலம்பி இந்திரனை நோக்கி, "எங்கள் அரசே! நீர் அசுரர் வசத்தில் எங்களை விட்டு விட்டு நீங்கினீர்; இஃது உமக்குத் தகுமா? நீரன்றோ எங்களை ஆளும் நாயகர்? தாரகனாகிய யானையோடும், சிங்கமுகனாகிய சிங்கத்தோடும், பூவுலகை வாட்டுகின்ற சூரபன்மனாகிய புலியின் சிறையிலே தேவர்களாகிய பசுக்களைக் காட்டிக் கொடுத்து, நீர் மறைந்த காரணம் என்ன? சூரபன்மனுக்குப் பன்றி முதலிய மிருகங்களின் இறைச்சியும் கள்ளும் மீனும் சுமந்து, அசுரர்க்கு ஏவல் செய்து, பெருமை இழந்தோம்; கற்ற வேதங்களையும் முற்ற மறந்தோம். முன்னர், கயாசுரன் என்னும் அசுரனுக்கு ஏவல் செய்து வருந்தினோம். சிவபெருமான் அதனை நீக்கி யருளினார். இப்போது சூரபன்மன் வருத்துகிறான். எங்களால் தாங்க முடியாது. நாங்கள் துயரமுற்றிருக்கையில் எங்களைப் பாதுகாவாமல் நீவிர் மட்டும் இங்குவந்து ஒளிந்திருப்பது தகுமோ? அசுரர்கள் இறக்கவும், எங்கள் துன்பம் தீரவும் ஒரு வழி சொல்ல வேண்டுகிறோம்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

### இந்திரன் மறுமொழி

இந்திரன் தேவர்கள் கூறியவைகளைக் கேட்டு, நெடுநேரம் யோசித்தான்; அயர்ந்து பெருமூச்சு விட்டான்; "தேவர்களே, சூரபன்மன் அரிய வீர யாகத்தைச் செய்யத் தொடங்கிய அன்றே நமது உரிமைகளெல்லாம் அழிந்தன. 'பொன்னுலகத்தையும் தோற்றோம்' என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா? சூரபன்மன் தவவலிமையால் விண்ணுலகத்தையும் கைக்கொண்டு, நம்மையும் தனக்குக் குற்றேவல் செய்யும்படி அடிமை கொண்டான். நாம் அவனுக்கு மீன் சுமத்தல் முதலிய குற்றேவல்கள் செய்தாவது உலகில் வாழ்வோம் என்றே எண்ணி

யிருந்தோம். அந்தப் பாதகன் தீய எண்ணங்கொண்டு அயிராணியைக் கைப்பற்றவும், என்னைச் சிறையிடவும், எண்ணிச் சேனைகளைச் சுவர்க்கத்திற்கு அனுப்பினான். அதனை நான் அறிந்து இந்திராணியோடு இவ்விடத்திற்கு மறைந்து ஓடிவந்து விட்டேன். என் மனைவியையும் அவனிடம் பறிகொடுத்துச் சிறைப் படுதல் பெரிய பழியல்லவா? பாவிகளாகிய அசுரர் வசம் சிறைப்பட்டால் நாம் உய்யவும், அவர்கள் அழியவும் இறைவனைக் குறித்துத் தவம் செய்ய முடியாதே. இவை யெல்லாவற்றையும் நான் எண்ணியே, நம் துன்பங்கள் நீங்கும் பொருட்டு இங்குவந்து சிவபெருமானைப் பூசித்துத் தவஞ் செய்து கொண்டிருந்தேன். தேவர்களே! நாம் அவுணர்கள் இட்டபணிகளைச் செய்து வருந்திப் பெருமைகளை இழந்து விட்டோம். இனி, நாமெல்லாம் திருக்கயிலாச மலைக்குச் சென்று சிவபெருமானைத் தரிசித்து நம் குறைகளை முறையிட்டுத் துயர்களை நீக்கிக்கொள்ளுவோம்; வாருங்கள்'' என்றான்.

**தேவர்கள் திருக்கயிலாயம் செல்ல இணங்குதல்**

இந்திரன் இயம்பியவைகளைக் கேட்டுத் தேவர்கள், கார் காலத்தைக் கண்ட மயில்போலக் கூத்தாடி மகிழ்ந்தார்கள்; ''அரசே! நீரே எங்களுக்குத் தந்தையும், குருவும், தெய்வமும், தவமும், செல்வமும், அறிவும், பிறவும் ஆகுவீர். முன்னாளில் எங்களை வருத்திய அசுரர்களை வதைத்தீர். இப்பொழுதும் சூரபன்மனை வதைசெய்ய வழிதேடுகிறீர். நீரே முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் துணை ஆவீர். ஆதலால், எங்கள் குறை நீங்கும் பொருட்டுச் சிவபெருமானிடத்தே திருக்கயிலாயத்திற்கு எங்களை அழைத்துக் கொண்டு செல்வீராக'' என்றார்கள். இந்திரன் அதற்கு இணங்கி, ''அவ்வாறே உங்களை அழைத்துச் செல்கிறேன்'' என்று கூறி, அவர்களை அவ்விடத்திலேயே இருக்கச் செய்து, தன் மனைவியாகிய இந்திராணி இருக்கும் இடத்திற்குச் சென்றான்.

திருவிருத்தம்- 25
ஆகத் திருவிருத்தம்-1,408

——oo——

## 31. அயிராணி சோகப் படலம்

### இந்திராணியிடம் இந்திரன் செல்லுதல்

இந்திரன் வருகையைக் கண்ட இந்திராணி, எதிர்கொண்டு வணங்கித் தொழுது, "என் ஐயனே! தாங்கள் இங்கே ஓர் எண்ணத்துடன் வந்த காரணம் யாது" என வினவினுள். இந்திரன் அதனைக் கேட்டு, "சூரபன்மன் இட்ட பணிகளால் வருந்திய தேவர்கள் சிலர், என்னிடம் வந்து தங்கள் துன்பங்களைக் கூறிப் புலம்பினுர்கள்; அவர்களின் துன்பங்களைச் சிவபெருமானிடம் சென்று விண்ணப்பம் செய்தால், அவர் அசுரர்களை அழித்துப் பொன்னுலகத்தை நமக்குத் தந்தருளுவார்; ஆதலால், தேவர்களோடு நான் திருக்கயிலாயமலைக்குப் போகின்றேன்; இதனை உனக்குச் சொல்லவே இங்கு வந்தேன்" என்றான்.

### இந்திராணியின் துயரம்

இந்திரன் கூறிய மொழிகளைக் கேட்ட இந்திராணி, துன்பக் கடலில் ஆழ்ந்து அறிவிழந்து மயங்கி மூர்ச்சித்தாள். இந்திரன் அவள் மயக்கத்தைத் தீர்த்து அறிவு வரும் வழிகளைச் செய்தான். இந்திராணி, சிறிது மயக்கம் தெளிந்து மனம் நடுங்கி இந்திரனை நோக்கி, "என் ஐயனே! அடியேன் பொன்னுலகை விட்டுப் பூவுலகு வந்தும், உம்முடன் இருத்தலினுலே மகிழ்ந்திருந்தேன். சக்கரவாகப்பட்சிக்குச் சந்திரனும், வானம் பாடிக்கு மேகமும் துணையாவதுபோல், என் துயரத்தை நீக்க நீரே துணையாவீர். உம்மைப் பிரிந்து நான் உயிரோடு இருந்தாலும் துணை வேருெருவரும் இல்லை. தீய அவுணர்கள் வந்து தொல்லை புரிவார்கள். அவர்கள் பல மாயங்களிலும் வல்லவர்கள்; இழிதொழிலாளர்கள்; பழிக்கு அஞ்சாதவர்கள். இங்கு நம் புத்திரனுகிய சயந்தனும் இல்லை; தேவர்களும் இல்லை; ஐராவதமும் இல்லை; ஒரு பெண்களும் இல்லை. பாவத்தையே செய்யும் அசுரர்கள் என்னைக் காணின் ஓடிவந்துபற்றி அடாத காரியங்களைச் செய்ய முயலுவர்; அதனுல் வரும் பழியெல்லாம் உம்மையே சாரும். ஆதலால், நான் உம்மைவிட்டுத் தனித்திருக்க மாட்டேன்;

திருக்கயிலாய மலைக்கு நானும் உமது பின்னே வருகின்றேன் ; புறப்படும்'' என்று கூறி எழுந்தாள்.

**இந்திராணியைத் தேற்றுதல்**

இந்திரன், அயிராணி கூறியவைகளைக் கேட்டுச் சிறிது நேரம் யோசித்தான். பிறகு அன்புடன் அவளைப் பார்த்து, ''நீ வருந்தாதே ; உனக்குத் துணை இல்லாது போனாலன்றோ நீ என்னுடன் வரவேண்டும். சிவபெருமானும், திருமாலும் கூடிப்பெற்ற ஐயனார் நமக்கு ஒப்பற்ற காவலாய் இருக்கின்றார். அவர் இருக்கும்போது நீ வருந்துதல் தகுதியன்று. அவரை 'வருக' என்று அன்புடன் தியானித்தால் இங்கே வருவார். நான் திருக்கயிலாயமலைக்குப் போய்த் திரும்பி வருமளவும் உன்னை அவரிடம் அடைக்கலமாகக் கொடுப்பேன். அந்த ஐயனாரே உன்னைக் காத்தருளுவர். நீ அஞ்சா திருப்பாயாக'' என்று இந்திரன் தேற்றினான். அப்போது அயிராணி, ''அந்த ஐயனாருடைய வரலாறு என்ன? சொல்லுங்கள்'' என்று வினவ, இந்திரன் சொல்லலுற்றான்.

திருவிருத்தம்–21
ஆகத் திருவிருத்தம்–1,429

——oo——

## 32. மகா சாத்தாப் படலம்

**திருப்பாற்கடலைக் கடைதல்**

முன்னொரு காலத்தில் திருமால் முதலிய தேவர்கள், சிவபெருமான் திருவருளைப் பெறாமல் திருப் பாற்கடலைக் கடைந்தார்கள். அப்பொழுது அதனின்றும் ஆலகால விஷம் எழுந்தது. அதனைக்கண்டு, தேவர்கள் அனைவரும் நடுநடுங்கி ஓடிக் கயிலாயமடைந்து சிவபெருமானை வணங்கித் துதித்தார்கள். சிவபெருமான், அவர்களுக்கு அபயமளித்து, விஷத்தைத் தாம் உண்டு, கண்டத்தடக்கி அவர்களைக்காத்துத் திருமால் முதலிய தேவர்களை நோக்கி, ''இன்னும் பாற்கடலைக் கடையுங்கள்; அமுதம் உண்டாகும்'' என்று பணித்தருளினார். திருமால் முதலிய தேவர்கள் பாற்கடலை முன்போலப் பின்னும் கடைந்தார்கள். கடையத்

தொடங்கியபோது விநாயகக் கடவுளை வழிபாடு செய்யவில்லை. அதனால், மந்தரமலையாகிய மத்துக் குலைந்து பாதலத்தில் ஆழ்ந்தது. பிறகு யாவரும் விநாயகக் கடவுளைப் பூசித்து வணங்கினார்கள். விநாயகக் கடவுளுடைய திருவருளால் மந்தர மலை பாதலத்தினின்று வந்து முன்போல் நிலைபெற்று நின்றது.

**அமுதமும் மோகினியும் தோன்றுதல்**

திருமால் முதலியதேவர்கள் மகிழ்ந்து மேலும் பாற்கடலைக் கடைய, பொற்குடத்தோடு **அமிர்தம்** எழுந்தது. அங்கு நின்ற தேவர்களும் அசுரர்களும் தனித்தனியே, "இஃது எங்களால் வந்தது; ஆதலால் எங்களுக்கே உரியது, எங்களுக்கே உரியது" என்று கூறி, ஆரவாரஞ்செய்து அதனால் தங்களுக்குள் மாறு பட்டுப் போர் செய்ய எண்ணினார்கள். அதனைத் திருமால் கண்டு, அவர்கள் பிணக்கை ஒழிக்க நினைந்து மூவுலகத்தாரும் விரும்பும் **ஒரு மோகினி** வடிவை எடுத்து நின்றார். அம்மோகினி யின் அழகைக்கண்ட அவுணர்கள், அமிர்தத்தை விட்டுவிட்டுக் காமப்பித்துக்கொண்டு அறிவழிந்து மயங்கி நின்றார்கள். தேவர் கட்கும் மோகினியிடத்திலே காதல் உண்டாயிற்று.

**திருமால் சூழ்ச்சி**

இவ்வாறு இருதிறத்தாரும் மயங்கி நிற்கையில், மோகினி வடிவங்கொண்ட திருமால் அவர்களை நோக்கி, "நீங்கள் போரை ஒழிமின்; இங்கு நான் இருக்கின்றேன்; அமிர்தமும் இருக்கிறது. இவ்விரண்டுள் நீர் விரும்பியதொன்றை விரைந்து கைக் கொள்ளுங்கள்" என்றார். அசுரர்கள் மோகினியைப் பார்த்து, "எங்கட்கு நீதான் வேண்டும்" என்றார்கள். தேவர் கள். அமிர்தத்தைத் தூக்கிக்கொண்டு ஒருபுறம் சென்றார்கள். அசுரர்கள் மோகினியை அழைத்துக்கொண்டு ஒருபுறம் போனார் கள். தம்மை அழைத்துச் சென்ற அசுரர்களை மோகினி வடிவங் கொண்ட திருமால் நோக்கி, "சயனத்தில் என்னைத் தழுவவல்ல வீரன் ஒருவன் உளனோ அவனை இன்னும் கண்டிலேன்" என்று கூறினார். அசுரர்கள் ஒவ்வொருவரும் இவ்வார்த்தையைக்கேட்டு, 'நானே எவரினும் வலியேன், வீரனும் யானே' என்று தனித் தனியே கூறி, 'என்னையே சேர்வாய்' என்று வந்து கூடி, அதனால் பகை மூண்டு தம்முள் சண்டையிட்டு இறந்தார்கள்.

**கள்ளத் தேவர்கள் அமிர்தம் உண்ணல்**

அசுரர்களில் இருவர் திருமாலின் மாயச் சூழ்ச்சியை அறிந்து கொண்டார்கள். "யாமும் மற்றவர்களைப்போல வீணாய்ப் போர் செய்து இறத்தலாகாது" என்று உறுதி செய்து, தேவ வடிவங்கொண்டு தேவர்களோடு போய்க் கலந்து நின்றார்கள். அசுரர்கள் தம்மில் பொருது அழியக் கண்ட திருமால் மோகினி வடிவத்தை விடுத்துத் தம் பழைய வடிவைக்கொண்டு தேவர் கூட்டத்துள் சென்றார். தேவர்களுக்கு அமிர்தத்தைப் பங்கிட்டுக்கொடுத்தார். தேவ வடிவத்திலிருந்த அவுணர்கள் இருவரும் தங்களுக்குத் திருமால் கொடுத்த அமிர்தத்தை மந்திரத்தோடு உட்கொள்ளாமல், தேவர்களுக்கு முந்தி விரைந்து உட்கொண்டனர்.

**கள்ளத் தேவர்கள் கிரகங்கள் ஆதல்**

அதனைச் சூரிய சந்திரர்கள் கண்டு, "இவர்கள் கள்ளத் தேவர்கள்" என்பதைத் திருமாலுக்குக் கண்ணால் குறித்துக் காட்டினார்கள். திருமால் அவர்களைக் கண்டு, கோபித்துக் கையிலிருந்த அகப்பையினால் அவர்களின் தலையில் அடித்துத் தலையைத் துண்டாக்கினார். உண்ட அமிர்தம் கண்டத்தை அடையுமுன் தலைகள் துணிக்கப்பட்டமையால், அவர்களுடைய உடல்கள் அழிந்தும், தலைகள் அழியாமலும் இருந்தன. தலைகள் அழியாத அவரிருவரையும் திருமால் நோக்கி, "நீங்கள் அமிர்தம் உண்டமையால் விண்ணுலகில் இருக்கத் தகுந்தவர்கள்" என்று சிந்தித்து, சிவானுக்கிரகத்தினாலே நீங்கள் கிரகங்களாகுதிர்" என்று பணித்தார். அவர்கள் இருவரும் சிவபெருமான் அருள்பெற்று **இராகு, கேது** என்னும் பெயரையுடைய கரும்பாம்பும், செம்பாம்புமாகித் தம்மைக் காட்டிக்கொடுத்த சூரியனையும், சந்திரனையும் ஒவ்வொரு காலத்தில் மறைத்து, சூரியன் முதலிய ஏழு கிரகங்களோடும் தாமும் சேர்ந்து ஒன்பது கிரகங்களாக எண்ணப்படுவாராயினர்.

**சிவபெருமானும் மோகினியும்**

திருமால் தாம் முன்புகொண்ட மோகினி வடிவத்தோடு திருப்பாற் கடலின் கரையில் அமர்ந்திருந்தார். சிவபெருமான்,

தம்முடைய நால்வகைச் சத்திகளுள்* திருமாலும் ஒன்று என்பதைத் தெரிவித்தருளும்பொருட்டு, அழகியதோர் திருவுருவம் தாங்கி அங்கு வந்தார். திருமால் சிவபெருமானைக் கண்டு ஆசை கொண்டார். அப்போது சிவபெருமானும், "உன்னைக் கூடும் வேட்கை நமக்கும் உண்டு; நீ கொண்ட வேடம் மிக இனிது" என்றார். மோகினி வடிவம் கொண்ட திருமால் அதுகேட்டு வெட்கமுற்று, "உலகமாதாவாகிய உமாதேவியார் தேவரீரை நீங்காமல் காதலித்திருக்க, தேவரீர் அடியேனை விரும்பி நிற்கும் காரணம் என்ன? முன்னொரு காலத்தில் நாங்கள் நான்முகனுடைய படைப்புத் தொழில் கைகூட உமாதேவியாரைத் தேவரீர் சேரும்படி வேண்டினோம். தேவரீருக்கு அந்த உமாதேவியாரிடத்தும் ஆசை உண்டோ எனில், இல்லை. தேவரீர் மேனோக்கிய வீரியமுடையவர் அல்லவா? உமக்கு எவரிடத்தும் விருப்பும் வெறுப்பும் கிடையாது. அவ்வாறு இருக்க அடியேனைச் சேரும்படி கருதிவந்த காரணம் யாதோ அறியேன். ஆடவர் ஆடவரோடு கூடும் வழக்கம் இல்லை. ஆதலால், எம்பெருமானே! நீர் அடியேனை வலிந்து கூடுதல் முறையோ?" என்று வினவினர். சிவபெருமான் அதுகேட்டு, "திருமாலே! நீயும் நமது சத்திகளில் ஒன்று. தாருகா வனத்திற்குச் சென்ற அன்று நீ ஒரு பெண்ணானாய். பழைய நான்முகன் இறந்து போதலும் நாம் உன்னை வந்து சேர்ந்தோம்; இந்த நான்முகனை நீ தாயாய் உந்தியினால் பெற்றாய். ஆதலால், நீ நமக்கு ஒருசக்தியாகும். இப்போது உன்னைச் சேர வந்தோம் வருவாய்" என்று அவர் கரம் பற்ற வந்தார். திருமால் நாணி ஓடினர். சிவபெருமான் அவரைத் தொடர்ந்து பற்றி **நாவலந் தீவில்** வடதிசையின் கடற்கரையிலுள்ள **சாலமர நிழலை** அடைந்தார். அங்கே, மோகினி வடிவங் கொண்ட திருமால் எம்பெருமானுடன் இன்புறக் கூடினர்.

---

* பராசத்தியே மாயாகாரிய சம்பந்தத்தால், 'நான்கு வகையுற்று, சிவபெருமானுக்கு மனைவியாகையில் பார்வதியாகவும், ஆணுருவாகையில் திருமாலாகவும், கோபங்கொண்டபோது காளியாகவும், போர்முனையில் துர்க்கையாகவும் விளங்குவள்; இதனை, "ஏகைவசக்தி: பரமேச்வரஸ்ய ப்ரயோஜனார்த்தாய சதுர்விதாபூத, போகேபவாநீ புருஷேஷு விஷ்ணு: க்ரோதேச காளீ ஸமரேச துர்கா" எனவரும் சகலாகமத் திரட்டினால் அறியலாம்.

**சாளக் கிராமம்**

அவர்கள் இருவரும் கூடிய காலத்துக் கான்று உமிழ்ந்த நீர் **கண்டகி** என்னும் நதியாகப் பாய்ந்தது. அந்நீரிலே **வச்சிரதந்தி** என்னும் புழுக்கள் உள்ளும் புறமும் சக்கரக்குறியோடு பொன் வண்ணமாய் வரிசை வரிசையாகத் தோன்றின. அப்புழுக்கள் கண்டகி நதியிலுள்ள மண்ணினால் கூடுகளை உண்டாக்கும். அக் கூட்டினுள் சிலநாள் தங்கி வசித்து இறக்கும். இறந்தபின் அக் கூடுகள் சக்கரக் குறியுடையனவாய்க் காணப்படும். அவற்றைக் கண்டகி நதிக்கரையில் கொண்டுவந்து ஒதுக்கிவிடும். அக்கூடு களை உலகத்தார் எடுத்துச் சென்று அதனுள்ளே இருக்கும் பொன்னை எடுத்துக்கொள்வர். அவற்றின் குறிகளைப் பார்த்து இன்ன இன்ன மூர்த்தம் என்று பிரித்தறிந்து கொள்வர். அவற் றைத் திருமாலாகவே நினைத்துப் பூசிப்பார்கள். அதன் பெயர் '**சாளக் கிராமம்**' என்பதாம்.

**ஐயனார் தோற்றம்**

சிவபெருமானும், திருமாலும் கூடிய காலத்துக் கரிய மேனி யும், சிவந்த சடையும், செண்டு ஏந்திய கையுமாய் உக்கிரத் தோடு ஒரு குமாரர் அவதரித்தார். சிவபெருமான் அவருக்கு '**அரிகரபுத்திரன்**' என்னும் பெயரைச் சூட்டினார்; பல வரங் களைத் தந்து, உருத்திரர்களுள் ஒருவராக்கினார்; ஒரு புவனத் தைக் கொடுத்துத் தேவர்களும் முனிவர்களும் வணங்கும் முதன்மையோடு அப்புவனத் தலைவராக்கினார். பிறகு, சிவ பெருமான், திருமாலுக்கும் ஐயனாருக்கும் விடைகொடுத்து மறைந்தருளினார். அரிகரபுத்திரராகிய ஐயனார் எல்லோராலும் வணங்கத்தக்க மேன்மை யுடையவர்; அவருக்கு நிகரானவர் ஒருவருமில்லை. அவர் உன்னை வந்து பாதுகாப்பார்" என்று ஐயனாருடைய வரலாற்றையும் மேன்மைகளையும் எடுத்துக் கூற லும் இந்திராணி அதனைக்கேட்டுச் சீகாழியிலேயே தங்கியிருக்க உடன்பட்டாள்.

**இந்திரனுக்கு ஐயனார் காட்சியருளல்**

இந்திரன் ஐயனாரை வரும்படி தியானித்தான். அவர் பூத கணங்கள் சூழ வெள்ளையானையின்மேல் **பூரணை புட்கலை** என்

னும் இரு தேவியர்களோடு ஏறிவந்து, "இந்திரனே நீ விரும்பியது யாது?" என்றார். இந்திரன் அவர் அடிகளில்வீழ்ந்து வணங்கிப் போற்றி, "எம்பெருமானே! சூரபன்மனுக்குப் பயந்து நான் என் மனைவியுடன் இங்கு வந்து மூங்கிலாக மறைந்து சிவபெருமானை நோக்கித் தவம் செய்துகொண்டிருந்தேன். சூரபன்மன் செய்யும் துன்பத்தைத் தாங்கமுடியாமல் தேவர்கள் அடியேனிடம் வந்து முறையிட்டார்கள். அதனைச் சிவபெருமானிடம் விண்ணப்பிக்கத் திருக்கயிலாய மலைக்குச் செல்லுகிறேன். இவள், தன்னை அவுணர்கள் கைப்பற்றுவார்கள் என்று இவ்வனத்தில் தனித்திருக்க அஞ்சுகிறாள். நான் மீண்டு வரும்வரையும் உம்மிடத்து இவளை அடைக்கலமாக வைத்தேன், காத்தருளும்" என்றான். ஐயனார் இந்திரனுக்கு அருள்புரிந்து, ஒரு பக்கம் போய்த் தனது வீரருள் வாட்போரில் வெற்றிகண்ட **மகாகாளர்** என்பவரை நோக்கி, "இந்திரன் கயிலாய மலைக்குச் செல்கிறான்; அவன் அங்கிருந்து திரும்பும் வரையில் தனித்திருக்கும் அவன் மனைவியாகிய இந்திராணியிடம் ஒரு தீங்கும் அணுகவிடாமல் நீ பாதுகாத்துக்கொள்ளக்கடவாய்" என்று கட்டளையிட்டுச் சென்றார்.

திருவிருத்தம்–68
ஆகத் திருவிருத்தம்–1,497

——oo——

## 33. இந்திரன் கயிலைசெல் படலம்

### இந்திராதி தேவர் முதல் வாயிலில் தடையுற்று நிற்றல்

இந்திரன் இந்திராணியை நோக்கி, "ஐயனார் உன்னைப் பாதுகாப்பார், கவலையுறாதே" என்று கூறி, அவளை அங்கேயே இருக்கச் செய்தனன். தான் தேவர்களை அழைத்துக்கொண்டு திருக்கயிலாய மலைக்குப்போய் முதல் வாயிலை அடைந்து, திருநந்திதேவரை வணங்கித் துதித்து நின்றான். திருநந்திதேவர், "இந்திரனே! நீ வந்த செய்தி என்ன? சொல்வாய்" என்று கேட்க, இந்திரன் தான் வந்த செய்தியைக் கூறினான், அப்போது திருநந்திதேவர், "சிவபெருமான் சனகாதி முனிவர் நால்வருக்கும் ஞானத்தை உபதேசித்துக் கொண்டிருக்கிறார். அங்கே இப்

பொழுது எவரும் செல்லுதல் தகாது'' என்றார். அவ்வார்த்தை செவிகளில் பட்டதும் இந்திரன், இறங்கிய விஷம் மீண்டும் தலைக்கு ஏறினாற்போலத் துன்புற்றான். தேவர்கள் மரக்கலத்தோடு கடலில் மூழ்கியவர்களைப்போல வருந்தினார்கள்.

**இந்திராதிதேவர்கள் இறைவனைக் காணக் காத்திருத்தல்**

இந்திரன், பின்னர் திருநந்திதேவரை வணங்கித் துதித்து, "எம்பெருமானே! சூரபன்மன் அருந்தவம் செய்து அளவற்ற ஆயுளையும், வலியையும், செல்வங்களையும் சிவபெருமானிடம் பெற்றான். நாங்கள் அவனுக்கு மீன் சுமத்தல் முதலிய இழிதொழில் செய்து துன்பப்படுகிறோம். கருணைக் கடலாகிய சிவபெருமானிடம் நாங்கள் இப்பொழுது விண்ணப்பம் செய்தால் எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி அவர், சூரபன்மனை அவன் செல்வத்தோடும் அழித்தல் வேண்டும். அப்படி அவர் செய்தால் சூரபன்மனுக்கு அவர் கொடுத்த வரம் அழியும்; அதனால் கடவுள் சொல்தவறினார் என்னும் சொல்லும் ஏற்படும். இனி எங்கள் துயரத்தை நீக்காவிடில் அருள்வள்ளல் என்னும் புகழுக்குக் குறைவு ஏற்படும்; வேதவாக்கும் மாறுபடும். ஆதலால், இவற்றை யெல்லாம் எண்ணி எங்களை ஆட்கொண்டருளத் தக்க காலம் வரும் வரையில் சிவபெருமான் சனகாதி முனிவர்களுக்கு யோக நிலை காட்டி வீற்றிருக்கிறார் போலும். சிவபெருமானையே அன்றி எங்கள் குறையை நீக்குதற்கு வேறொருவரும் இல்லை. 'எம்பெருமான் ஞானோபதேசம் செய்து கொண்டிருக்கிறார்' என்று அடியேன் தேவர்களோடு பூவுலகத்திற்குப் போனால் அசுரர்கள் எங்களைப் பிடித்துச் சிறையிடுவது திண்ணம். ஆதலால், இனி நாங்கள் பூலோகத்திற்குச் செல்வதில்லை. எம்பெருமானைத் தரிசிக்கும் காலத்தை எதிர் நோக்கிக் கொண்டு இங்கேயே ஒருபுடை காத்திருப்போம்'' என்று கூறினான். திருநந்திதேவர், "உங்கள் துயர் தீர நீங்கள் இங்கேயே இருங்கள்'' என்று அருள்புரிய, இந்திரன் தேவர்களோடு ஒரு புறத்திலே காத்திருந்தான்.

திருவிருத்தம்— 20

ஆகத் திருவிருத்தம்—1,517

——oo——

## 34. அசமுகிப் படலம்

### அசமுகி வருதல்

இந்திரன் திருக்கயிலாய மலைக்குச் சென்ற பிறகு, அவன் சென்ற காரியத்தில் வெற்றி உண்டாக எண்ணிய இந்திராணி அரம்பையர் சூழச் சீகாழிச் சண்பக வனத்திலே தவஞ் செய்து கொண்டிருந்தாள். இந்திரன் நெடுநாளாக வாராதிருக்கக் கண்ட இந்திராணி மெலிந்து வருந்தினாள். அப்போது பொறுமை, நாணம், கற்பு முதலிய நற்குணங்கள் ஒன்றும் இல்லாதவளும், கொலை, களவு, பொய் முதலிய தீச் செயல்கள் புரிபவளும், எவரையும் வலிந்து கூடுபவளும், மூவுலகங்களையும் ஒரு நாழிகையில் சுற்றி வரக்கூடியவளும், எத்துணை வலிமை பொருந்தியவர்களையும் போரில் தோற்கடிக்கக் கூடியவளும், சூரபன்மனுக்குத் தங்கையும், ஆட்டுத் தலையையுடையவளும் ஆகிய **அசமுகி** என்னும் கொடியவள், சூலப்படை ஏந்தித் தன் தோழி **துன்முகி** என்பாளோடு ஆலகால விஷம்போல அங்கே வந்தாள்.

### அசமுகி இந்திராணியை அடைதல்

அசமுகி அச்சோலையின் அழகைக் கண்டு வியந்து அதனுள் புகுந்து வருங்கால், இந்திராணியைப் பாதுகாத்துவரும் மகாகாளர், அவள் வருகையை உணர்ந்து, அவள் செய்யுங் குற்றத்திற்குத்தக்க தண்டனை அளிக்க மறைந்து நின்று பார்த்துக் கொண்டிருந்தார். அதனை அசமுகி அறியாதவளாய், துன்முகியும் உடன்வர, அச்சோலை எங்குந் திரிந்து பார்த்துக்கொண்டு வரும்பொழுது தவஞ் செய்து கொண்டிருந்த இந்திராணியைக் கண்டாள்; உடனே, 'அதோ' இந்திராணி இருக்கின்றாள்' என்று கூறி மகிழ்ச்சி கொண்டாள். "இவள் கிடைக்கமாட்டாளோ என்று எண்ணி என் தமையன் மெலிகின்றான். இவளைக் கொண்டு போய் அவனிடஞ் சேர்ப்பேன். இவள் தனியே இருக்கிறாள். துணையாக ஒருவரும் இல்லை. இந்திரன் வருவதற்கு முன் இவளைக் கொண்டுபோவேன்" என்று விரைந்து இந்திராணியிடம் வந்தாள்.

**அசமுகி - இந்திராணி**

அசமுகி அருகே வருவதைக் கண்ட இந்திராணி பயந்து, " இவள் ஆரோ " என்று விரைந்து எழுந்தாள். அசமுகி, இந்திராணியை நோக்கி, 'நில்' என்று எதிரே வந்து, " இந்திராணியே! உன்னுடைய இளமையும் பேரழகும் வீணுகும் வண்ணம் நீ தவஞ் செய்தல் சரியன்று. வடிவழகில் இலக்குமியும் உனக்கு நிகராகாள். என் தமையனுகிய சூரபன்மன் உன்னைச் சேரும்படி தவஞ்செய்து கொண்டிருக்கிறன். இந்திரன் உன் அழகுக்கு ஏற்ற நாயகன் அல்லன்; அவன் விண்ணுலகம் ஒன்றற்கே அரசன். சூரபன்மனே பல அண்டங்களையும் ஒருங்கே ஆள்பவன்; அழிவில்லாதவன்; பழியில்லாதவன்; துன்பம் அற்றவன்; எவருக்கும் வணங்காதவன். சூரபன்மனுக்குக் குற்றேவல் புரியும் இந்திரனை நாயகனுகக் கொண்டு ஏன் மெலிகின்றுய்? தேவர்களும், அசுரர்களும், அரம்பையர்களும், குற்றேவல் புரிய மும்மூர்த்திகளாலும் புகழப்படும் சூரபன்மனுக்கு உன்னை மனைவியாக்குவேன். அவன் தன் பட்டத்தரசி பதுமகோமளையையும் மற்றைப் பெண்களையும் வெறுத்து உன்மீது அளவு கடந்த ஆசைகொள்வான். இஃது உண்மை. ஆதலால், என்னேடு விரைந்து வருவாயாக!" என்று கூறினுள்.

திருவிருத்தம்-32
ஆகத் திருவிருத்தம்-1,549

—— oo ——

## 35. இந்திராணி மறுதலைப் படலம்

**இந்திராணி மறுத்துரைத்தல்**

அசமுகி கூறிய கொடுமொழிகளைக் கேட்ட இந்திராணி, தன் செவித்துளையில் அக்கினியில் காய்ச்சிய வேல் புகுந்தாற் போல் வருந்தி விம்மினுள். அசமுகியை நோக்கி, " ஏடி! நீ இங்கே சொன்ன தீய மொழிகளைக் கேட்டவர்கள் நரகத்தை அடைவர். இவ்வார்த்தைகளைச் சொன்ன உனக்கு வரும் தீமையை யார் இவ்வளவென்று வரையறுத்துச் சொல்வர்? காசிப முனிவனுக்கு மகளாய்ப் பிறந்த நீ, அறிவில்லாதவர்களைப்

போல் அநீதி பேசலாமா? தமக்கு இன்பம் விரும்புவோர் பிறர்க்கு நன்மையே செய்வர். தமக்குத் தாமே துன்பத்தைத் தேடிக்கொள்பவரே பிறருக்குத் தீமையைச் செய்வர். செல்வம், வலிமை, ஆயுள், கீர்த்தி என்னும் இவற்றை இழப்பவர்களுக்கே இத்தகைய தீய சிந்தனைகள் எழும். நீ இவற்றை நினைக்காமல் வாழ்வாயாக! நான் இந்திரனை அன்றி வேறொருவரையும் விரும்பேன். நான் தீதில்லாத கற்பினையுடையேன். நீ கூறுகின்ற மொழிகள் உன் சுற்றத்தார்க்கு நன்மை பயப்பன அல்ல. என் கணவனாகிய இந்திரன் மீளாத துன்பத்தில் ஆழ்ந்திருக்கிறான் என்று சொல்லுகிறாய். அது நாளைக்கு உங்களுக்கு வாராதோ? நீ நீதியற்றவள். ஆகையால் அறிவு மயங்கி இவ்வாறு தீது பேசினாய்! இஃது உனக்கு அழகல்ல. நீ உய்யும்படி விரும்பினால் இதனை மறந்துவிடு. என் மானம் என் உயிரையும் ஐம்பொறிகளையும் பாதுகாத்துக்கொள்ளும். எனக்கு எங்கும் காவல் உண்டு. ஆகையால், நீ விரைந்து செல்வாயாக'' என்றாள்.

**அசமுகி இந்திராணியைத் துன்புறுத்தல்**

இந்திராணி கூறியவைகளைக் கேட்ட அசமுகி, தன் உதட்டைக் கடித்தாள்; கையோடு கையைப் புடைத்தாள்; ''நன்று நன்று'' என்று நகைத்துச் சீறி, ''இந்திராணியே! நான் உனக்கு இனிய மொழிகளைப் புகன்றேன். நீ என் விருப்பத்திற்கு இணங்காது மறுத்துக் கூறுகிறாய். உன்னை நான் கொன்று தின்றுவிடுவேன். என் தமையனாகிய சூரபன்மன் உன்னை விரும்புவதால் விட்டேன். நான் உன்னைப் பிடித்து இழுத்துக் கொண்டு செல்லுகிறேன், பார்! மும்மூர்த்திகளும் என்னோடு வந்து யுத்தம் செய்து தடுத்தாலும் விடமாட்டேன்'' என்று கூறி, இந்திராணி கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு விரைந்து சென்றாள். இந்திராணி எமபாசம் போன்ற அசமுகியின் கைகளில் அகப்பட்டுப் பூனை வாயில் அகப்பட்ட புள்ளின் பெடைபோல மதிமயங்கி, 'ஐயகோ!' என்று அலறிக் கண்ணீர் வடியத் தேம்பினாள்.

திருவிருத்தம்–24

ஆகத் திருவிருத்தம்–1,573

# 36. மகா காளர் வரு படலம்

**இந்திராணியின் ஓலம்**

அப்போது இந்திராணி, அருகில் ஒருவரையும் காணுமை யால் தப்பும்வகை அறியாது வருந்தி, " திருமாலும், சிவபிரா னும் பெற்ற ஐயனே ! ஓலம்; தேவர்களுக்கு முதல்வனே ! ஓலம் ; செண்டு ஏந்திய கையனே ! ஓலம் ; எங்கள் கடவுளே ! ஓலம் ; மெய்யர்க்கு மெய்யனே ! ஓலம் ; வீரனே ! ஓலம் ; உருத் திரர் என்று வேதங்கள் துதிக்கும் காரணக் கடவுளே ! ஓலம் ; கடல் வண்ணத்தனுகிய எந்தையே ! ஓலம் ; பூரணை மணுளனே ! ஓலம் ; புட்கலை கணவா ! ஓலம் ; வெள்ளை யானையின் மேல் வரும் பெருமானே ! ஓலம் " என்று ஐயனுரைக் குறித்துப் பல வாறு கதறினுள்.

பையரா அமளி யானும் பரம்பொருள் முதலும் நல்கும்
ஐயனே ! ஓலம் ; விண்ணேர்க் காதியே ! ஓலம் ; செண்டார்
கையனே ! ஓலம் ; எங்கள் கடவுளே ! ஓலம் ; மெய்யர்
மெய்யனே ! ஓலம் ; தொல்சீர் வீரனே ! ஓலம் ; ஓலம்.

ஆரணச் சுருதி யோர்சார் அடலுருத் திரனென்று ஏத்துங்
காரணக் கடவுள் ! ஓலம் ; கடல்நிறத்து எந்தாய் ! ஓலம் ;
பூரணைக் கிறைவா ! ஓலம் ; புட்கலை கணவா ! ஓலம் ;
வாரணத் திறைமேற் கொண்டு வரும்பிரான் ! ஓலம் என்ருள்.

**வீர மகாகாளர் – அசமுகி**

இந்திராணியின் ஓலம், ஐயனுரின் படைத் தலைவராகிய **மகாகாளர்** செவிகளை எட்டியது. மகாகாளர் தன் வாட் படையைச் சுழற்றி இடிபோல் ஆர்த்து அசமுகியை நோக்கி, " களவு செய்துகொண்டு எங்கே செல்கின்ருய் ; நில் " என்று அதட்டினுர்; விரைந்து வந்து அயிராணியை நோக்கி, " அம்மே! பாதகியாகிய அசமுகிக்குச் சிறிதும் அஞ்சாதே ; உன்னைத் தீண்டிய இவளுடைய கையைத் துணித்து விடுவிப்பேன் " என் ருர். வீரமகாகாளருடைய வார்த்தையைக் கேட்ட இந்திராணி மழையைக்கண்ட பயிர்போல உயிர்பெற்ருள். அசமுகி அவ ரைக்கண்டு, " மும்மூர்த்திகளும், இந்திரனும், திக்குப்பாலகர்

களும் என்முன் நில்லார்; தேவர்களில் ஒருவனோ என்னை எதிர்த்து வருவான்?" என்று வெறித்துப் பார்த்துத் தன் பற்களைக் கடித்து ஆரவாரம் செய்துகொண்டு நின்றாள். மகாகாளர் அவளை அணுகி, "பெண்ணே! தவம் பூண்ட இந்திராணியைத் தமியள் என்று நீ வஞ்சனையால் பற்றிச் செல்கின்றாய்; நீ இப்பொழுதே இவளை விடுத்துப்போனால், நீ செய்த பிழையைப் பொறுப்பேன்; உன்னைக் கொல்லமாட்டேன்; அஞ்சாதே" என்றார். அசமுகி, "வலிமையோடு இவளைக் காப்பாற்று என்று இப்பணியை உனக்கு இட்டவர் யார்? அவர் பெயரைக் கேட்க விரும்புகிறேன்; சொல்வாய்" என்றாள். மகாகாளர், "பூவுலகம் முதலாகிய மூவுலகங்களையும் பாதுகாப்பவன்; மேகம் போலக் கருநிறமுடையவன்; வெள்ளை யானையை வாகனமாகவுடையவன்; **ஐயன்** என்னும் பெயர் உடையவன்; அவனே எனக்கு இப்பணியைத் தந்தான். என் பெயர் வீரரில் வீரனாகிய **வீரமகாகாளன்**" என்று மகாகாளர் கூறினார்.

தாரணி முதல மூன்றுந்
　　தலையளி புரிந்து காப்பான்
காரணி செறிந்துற் றன்ன
　　கரியவன் கடவுள் வெள்ளை
வாரண முடைய ஐயன்
　　மற்றிது பணித்தான் என்பேர்
வீரரில் வீர னான
　　வீரமா காளன் என்றான்.

மகாகாளர் கூறியது இந்திரனுக்கும், ஐயனாருக்கும் பொதுவாக இருத்தலின், "இங்கு வந்தவன் இந்திரன் ஏவலாள்" என்று அசமுகி எண்ணி, அவனைக் கொல்லத் தன் கையிலிருந்த முத்தலைச் சூலத்தை எறிந்தாள். மகாகாளர் அதனை வாளினால் வெட்டி இரு துண்டாக்கினார். அசமுகி, துன்முகியின் கையிலிருந்த சூலத்தை வாங்கி, அவளிடம் இந்திராணியைக் கொடுத்தாள்; கூற்றுவனும் அஞ்ச ஆரவாரம் செய்து மகாகாளர் மார்பிலே குத்தும்படி சூலத்தை நீட்டினாள். மகாகாளர் அதனையும் வாளினால் வெட்டி வீழ்த்தினார். அசமுகி பின்வாங்கிப் போய் ஒரு மலையைப் பறித்து அவர்மேல் எறிந்தாள். அவர்,

தம் வாளினுல் அதனையும் அழித்தார். அவர் வாட்படையும் ஒடிந்தது. அசமுகி அதனைப் பார்த்து இடிபோல் ஆரவாரம் செய்து, “வீரமகாகாளனே! எல்லாவுலகங்களையும் இனி தாளும் சூரபன்மாவாகிய என் தமையனுடைய தோள்களிலே சேர்க்கும்படி இவளைக் கொண்டுபோகிறேன்; நீ தடுத்தல் முறையாகாது; என் தமையனுகிய தாரகாசுரனுடைய சேனு வீரர்கள் வந்தால் உன்னைக் கொல்லுவார்கள்; அல்லாமலும் நானே உன்னை அடித்துக் கொன்று தின்றுவிடுவேன்; அவ்வாறு தின்பதால் என்னுடைய பெரும்பசி அடங்காது என்று எண்ணி உன்னை விடுத்தேன்; நீ வீணுக இறந்து போகாமல் பிழைத்து ஓடிப்போ” என்ருள்.

அசமுகியின் வார்த்தைகளைக் கேட்ட மகாகாளர், “வாளினுல் உன் சூலப்படையைத் துணித்தேன்; பெண் என்று எண்ணி உன்னைக் கொல்லாது விடுத்தேன். இதனை உணர்ந்து, இந்திராணியை விட்டு விட்டு விரைந்து ஓடிப்போ; வீணுக உன் கையைப் போக்கிக் கொள்ளாதே” என்ருர். அசமுகி கேட்டு, “வாளினை இழந்து நிற்கும் இவனேடு போர்செய்தல் முறையன்று; அன்றியும் இவனை வெல்லுதல் அரிது; இனி, இந்திராணியைக் கொண்டு செல்லுதலே தகுதி” என்று துணிந்து, துன்முகி கைப்பட்டிருந்த இந்திராணியைப் பிடித்து இழுத்துக்கொண்டு விரைந்து சென்ருள்.

**மகாகாளர் அசமுகி கையை வெட்டுதல்**

அதனை வீரமகாகாளர் பார்த்து, விரைந்து சென்று அசமுகி கூந்தலைக் கையால் பிடித்து இழுத்துத் தன் உடை வாளால் இந்திராணியைப் பிடித்த கையை வெட்டி, அவளை விடுத்து அசமுகியைத் தன் காலினுல் உதைத்து உருட்டினுர்; அதுகண்டு பயந்து அருகில் நின்ற துன்முகியை நோக்கி, “ஒரு குற்றமுமில்லாத இந்திராணியை நீயும் தீண்டினுய் அல்லவா?” என்று அவள் கையில் ஒன்றையும் வெட்டி அவளையும் உதைத்து உருட்டினுர். அசமுகியும், துன்முகியும் ஓ! என்று கதறிப் புலம்பிக் கீழே விழுந்தார்கள்.

திருவிருத்தம்–30

ஆகத் திருவிருத்தம்–1,603

——oo——

## 37. அசமுகி சோகப் படலம்

### அசமுகி புலம்பல்

வீரமகாகாளரால் வெட்டுண்டு குருதி ஒழுகா நின்ற அசுர மாதர்களின் கைகள் சூரபன்மனின் செல்வத்தைச் சுடும் கொள்ளிகள் போன்று இருந்தன. அசமுகியின் வெட்டுண்ட கையினின்று இரத்தம் ஆறுபோலப் பெருகியது. அவள் வீழ்ந்து வருந்திக் கதறினாள்; பதை பதைத்தாள்; கையை நிலத்தில் அறைந்தாள்; கடகடவென்று உருண்டாள்; மார்பும் முதுகும் தேயப் புரண்டாள்; "இந்திராணியைப் பிடித்து வாயில் போட்டு உண்பேன்" என்று விரைந்து எழுவாள்; இதழைக் கடிப்பாள்; அதிலிருந்து வெளிப்படும் குருதியைக் குடித்துக் கொப்பளிப்பாள்; இடிபோல் ஒலி உண்டாகப் பற்களைக் கடிப்பாள்; நிலத்தைக் காலால் உதைப்பாள்; மகாகாளரை வியப்பாள்; அறுந்த கையை மற்றைக் கையினால் எடுத்துப் பார்த்துக் கண்களில் ஒற்றிக் கொள்வாள்; 'என்னைப் போல் இத்தகைய துன்பத்தை அனுபவித்தவர் யார்' என்று ஏங்குவாள்; 'எவரும் புகழுகின்ற எங்கள் அண்ணாரிடம் எப்படிச் செல்வேன்' என்று வருந்துவாள்; நிலவுலகில் வரும் கணவர்கள், 'என்னைத் தொடக் கூசுவார்களே' என்று அலறுவாள்; 'என் கரத்தைப் போக்கிய தேவர்களைக் கொன்று, உலகம் எல்லாவற்றையும் அழிப்பேன்' என்று சீறுவாள்; 'சூரியனைக் கறியாகமென்று, தேவர்களை அன்னமாக உண்டு, ஏழு கடலையும் உறிஞ்சிப் பெரும் புறக்கடலில் கைகழுவி வருவேன்' என்பாள்; 'சந்திரனைப் பிடித்துக் கவ்வி அவன்பால் உள்ள அமுதத்தைக் குடித்து எறிவேன்' என்பாள்; இந்திரன் யானையையும் மற்றைத் திக்கு யானைகளையும் பாக்காகவும், ஐந்தருவை வெற்றிலையாகவும், அவற்றிலுள்ள வெண்மலர்களைச் சுண்ணமாகவும் கொண்டு உண்பேன்' என்பாள்; பூமியைச் சுழற்றி மேலுள்ளனவற்றைக் கீழாகவும், கீழுள்ளனவற்றை மேலாகவும் முறை பிறழச் செய்வேன்' என்பாள்; பூமியைத் திருமாலைப் போல் உண்பேன்' என்பாள்; இவ்வாறு வீர வலிமையுடைய அசமுகி கோபங்கொண்டு ஏங்கி வருந்தினாள்.

**துன்முகி அசமுகியைத் தேற்றுதல்**

அப்பொழுது கையிழந்த துன்முகியும் மிகவருந்தி, பின்பு அசமுகி படும் துன்பத்தைப் பார்த்து, "தலைவியே! நீ வீர மகாகாளனால் கையை இழந்தால் அதற்குப் பூவுலகம் என்ன செய்யும்? வானுலகம் என்ன செய்யும்? தேவர்கள் என்ன செய்வார்கள்? உலகங்களை யெல்லாம் நீ அழிப்பது முறையோ? வானுலகத்தையும், பூவுலகத்தையும், மற்றவைகளையும் நீ அழிக்க நினைத்தால், அவற்றிற்குத் தலைவனாகிய சூரபன்மன் உன்னைக் கோபிப்பான். அவன் செல்வங்களே அழியும். ஆதலால், இவற்றை ஒன்றையும் நீ எண்ணாதே. சூரபன்மனிடம் நாம் சென்று முறையிட்டால் அவன் தேவர்களை யெல்லாம் அழிப்பான்.

நினைவருங் கண்ணுதல் நிமலற் கேயலால்
அனையனை அடைதரும் அறிஞர்க் கேயலால்
எனைவகை யோர்க்கும்எவ் வுயிர்க்கும் ஏற்பதோர்
வினைபடும் இழிதுயர் விட்டு நீங்குமோ?

ஆதலால், நீ புலம்பாதே; வெள்கிச் சோகமும் கொள்ளாதே. துன்பமும் இன்பமும் அறியாமையும் உயிர்களுக்கெல்லாம் இயல்பாய் மாறிமாறி வரும். நாம் சூரபன்மனிடம் செல்வோம்; எழுவாயாக" என்று சொல்லித் தேற்றினாள்.

**அசமுகி சூளுரை**

அசமுகி, 'அவ்வாறே செய்வோம்' என்று எழுந்து, சிறிதும் துன்பம் இல்லாமல் நிற்கும் இந்திராணியைப் பார்த்து, "எல்லா அண்டங்களிலும் சூரபன்மனின் ஆணை செல்லும்; ஆதலால், நீ அண்டத்தின் உள்ளே வெளியே, எங்கு ஒளித்தாலும் பிழைப்பது அரிது. மறைந்திருக்கும் இந்திரனையும், இவ்வனத்திலிருக்கும் உன்னையும், மற்றைத் தேவர்களையும் கொண்டு போய்ச் சிறைப்படுத்துவேன். இது நிச்சயம். உங்களைச் சிறை செய்யாவிட்டால், சூரபன்மனின் தங்கை நான் அன்று; என் மார்பில் எழுந்தனவும் தனங்கள் அல்ல. நான் பேடியே. இதனைத் தெரிந்து கொள்வாய்" என்று சூளுரை கூறி, அவ்விடத்தைவிட்டு நீங்கினாள்.

திருவிருத்தம்–30
ஆகத் திருவிருத்தம்–1,633

——00——

## 38. இந்திரன் மீட்சிப் படலம்

### வீரமகாகாளர் பாதுகாவல்

அங்கே சிறிது தூரத்தில் நின்ற வீரமகாகாளர், மகிழ்ந்து நிற்கும் இந்திராணியைப் பார்த்து, "அன்னையே! நீ அசுரர்களுக்குப் பயப்படாதே; உன் நாயகன் வருமளவும் நான் காப்பேன். இங்கே இருப்பாயாக" என்று கூறிப் போனார். இந்திராணி, தன் நாயகன் கருதிச்சென்ற காரியம் கைகூடவேண்டுமென்று தவம் செய்து கொண்டிருந்தாள்.

### நாரதர் இந்திரனிடம் நிகழ்ந்தவற்றைக் கூறுதல்

இதனை நாரத முனிவர் அறிந்து, விரைந்து திருக்கயிலாய மலையை அடைந்து, சிவபெருமானைத் தரிசிக்க எதிர்நோக்கித் தேவர்களோடு அங்கே இருக்கும் இந்திரனிடம் போய், இந்திராணிக்கு ஏற்பட்ட துன்பங்களையெல்லாம் கூறினார். இந்திரன் அவற்றைக் கேட்டுக் கோபங் கொண்டான்; பின்பு, தன்னை நொந்து வருந்தி சிவபெருமானுடைய புகழைத் துதித்துத் தேவர்களோடு எழுந்து வந்து திருநந்தி தேவருடைய பாதங்களை வணங்கி, "இங்கே நமது கடவுளின் சமயத்தை நெடுங்காலம் எதிர் நோக்கி இருந்தோம்; எங்கள் தீவினை காரணமாக அவர் இன்னும் திருவருள் புரிந்திலர். எம்பிரானை நோக்கித் தவம் செய்து பேறுபெறுதற்குரிய நிலவுலகிற்குச் செல்ல அடியேங்களுக்கு அனுமதி தந்தருளுவீராக" என்று வேண்டிக் கொண்டான். திருநந்தி தேவர், 'நன்று' என்று விடைகொடுத்து அருளினார்.

### மேருமலையில் ஒளிந்திருத்தல்

இந்திரன் தேவர்களோடு சீகாழியை அடைந்து, வீரமகா காளரைக் கண்டு தழுவி, நன்றிமொழி கூறி ஐயனரிடம் அனுப்பினார்; அயிராணி தவஞ் செய்து கொண்டிருக்கும் இடத்தை அடைந்து அவள் துன்பத்தை மாற்றினான்; அசமுகி கூறிய சபத மொழிகளைக் கேட்டு, "இனி யாது செய்வது?" என வருந்தி யோசித்தான்; உடனே இந்திராணியை அழைத்துக்

கொண்டு தன் பக்கத்திலுள்ள தேவர்களோடு மேருமலையில் போய் மறைந்திருந்தான்.

திருவிருத்தம்— 9
ஆகத் திருவிருத்தம்—1,642

——oo——

## 39. சூரன் அரசிருக்கைப் படலம்

**சூரபன்மன் அரசாட்சிச் சிறப்பு**

வீர்மகாகாளரால்] கை இழக்கப் பெற்ற அசமுகி துன்முகியோடு மகேந்திரபுரியை அடைந்தபோது, சூரபன்மன் அங்கு அரசு வீற்றிருந்தான். அவனுக்குச் சந்திரனை ஒத்த இரண்டு வெண்கொற்றக் குடைகள் நிழல் தந்து கொண்டிருந்தன. அவன் இருபக்கங்களிலும் தாரகனும் சிங்கமுகனும் வீற்றிருந்தார்கள். அமைச்சர்களும் புதல்வர்களும் அருகில் இருந்தனர். சில அசுரர்கள் சாமரங்களை வீசினர். வேறு சில அசுரர்கள் பொற்காளாஞ்சி ஏந்தினர். இளந்தென்றல் முகில்களின் இடையே சென்று, சந்திரனின்மேல் படிந்து, பாற்கடலில் தோய்ந்து தேவலோகத்தும் பூலோகத்தும் உள்ள சோலைகள் தோறும் உலாவி வந்து தண்மையுடன் வீசியது. ஊர்வசி அரம்பை, திலோத்தமை முதலிய தெய்வப் பெண்களும் இயக்கர், இராக்கதர், அசுரர், வித்தியாதரர் முதலிய பற்பல சாதிப் பெண்களும் வெவ்வேருக நடித்தனர். நான்முகன் நாடோறும் காலையில் வந்து பஞ்சாங்கம் சொல்லுதற்கு ஏற்ற சமயத்தை எதிர் நோக்கி ஒருபக்கம் நின்று கொண்டிருந்தான். முனிவர்கள் அவுணர்களால் நெருக்குண்டு வந்து வெவ்வேருக வாழ்த்தி ஒருபுறம் ஒதுங்கி இருந்தார்கள். பல பெண்கள் வாழ்த்தி ஆலத்திகளைச் சுற்றினுர்கள். கின்னரரும், சித்தரும், கந்தருவரும் பலவகைப் பண்களோடு மங்கலம் பாடினர். திக்குப் பாலகர்களும் பிறரும் கைதொழுது 'மலர்கள் தூவி நின்றனர். சுக்கிராசாரியர் மந்திரத்தோடு ஆசீர்வதித்து அட்சதைகளைத் தூவினுர்.

**அத்தாணி மண்டபத்தில் அரசிருத்தல்**

அதுபோழ்து ஆயிரங்கோடி பொற்றூண்களையும், பலவகை நிறம் பொருந்திய ஓவியங்களையும், கண்ணுடிகளையும், விதானங்

களையுங்கொண்டு, சாமரங்களும் குஞ்சங்களும் இடையிடையே தொங்கப்பெற்று விளங்கும் ஆயிரம் யோசனை விசாலமுடைய அத்தாணி மண்டபத்திலே பொன்னால் செய்யப்பட்டு இரத்தினங்களால் இழைக்கப் பெற்ற சிங்காசனத்தின்மீது அவுணர்கள் துதிக்க அரசர்க் கரசனாகிய சூரபன்மன் அரசு வீற்றிருந்தான்.

திருவிருத்தம்–27

ஆகத் திருவிருத்தம்–1,669

—— oo ——

## 40. அசமுகி நகர் காண் படலம்

### அசமுகியின் துயரத்தை அசுரர்கள் காணல்

அசமுகி, துன்முகியோடு வீரமகேந்திரபுரிக்கு அணித்தாய்ப் போய், மூதேவி தன் தோழியோடும் அந்நகரின் செல்வம் முழுவதும் கெடுவதற்காக வந்தாள்போலக் கீழ்த்திசை வாயிலை அடைந்தாள். மகேந்திரபுரி இனி அடையப்போகும் துன்பத்தை முன் கூட்டியே காட்டுதல்போலக் குருதி சொரிய வெட்டுண்ட கைகளோடு மானமற்ற அசமுகி சென்றாள். அப்போது, அவுணர்கள் யாவரும் கண்டு, "இச்செயலைச் செய்தவர் யாவர்?" என்று கடுங்கோபம் கொண்டார்கள். தங்கள் தொழில்களை விட்டுவிட்டுச் சிலர் விரைந்து எழுந்து வந்தார்கள்.

### பற்பலர் தங்களுக்குள் பேசிக்கொள்ளுதல்

சூதாடிக் கொண்டிருந்தவர்களும், ஆட்டுக்கடா, யானை, கோழி முதலியவைகளைச் சண்டையிடச் செய்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்களும், ஆகாயத்தில் பட்டம் பறக்க விட்டுக் கொண்டிருந்தவர்களும், மற்றவர்களும் ஓடிவந்தார்கள். அசமுகியின் நிலையைக் கண்ட பலரும் பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள். "இங்ஙனம் கைகளைத் துணித்தது சிவபெருமான் செயலோ? துர்க்கையின் செயலோ? ஐயனாருடைய செயலோ?" என்பார் சிலர். "இது கயமுகன் மார்பில் புகுந்து உயிரைப் பருகிய விநாயகருடைய செயலோ?" என்பார் சிலர். "இது, சங்குகன்னர், குண்டோதரர், பானுகம்பர் முதலியோர் செயலோ?" என்பார் சிலர். "இது திருமாலின் செயலோ?" என்

பார் சிலர். "இஃது இந்திரன் செய்த செயலோ?" என்பார் சிலர். "மறைந்து திரியும் இந்திரன் இதனைச் செய்யத் துணியான்" என்பார் சிலர். "முனிவர்கள் சாபத்தால் இங்ஙனம் நேர்ந்ததோ?" என்பார் சிலர். "இவர்கள் தங்களுக்குள்ளே போர் செய்து ஒருவர் கையை மற்றொருவர் வெட்டினார்களோ?" என்பார் சிலர். "அசமுகியின் கையை வெட்ட வல்லவர்கள் யாவர்?" என்பார் சிலர். "நாம் கேட்டால் 'நம்மைக் கோபிப்பாள்' என்று அஞ்சி, காடும் புவியும் ஓடியே திரிந்து இதனை விசாரித்தறிவோம்" என்பார் சிலர். இங்ஙனம் அசுரர்கள் பலவாறு கூற, அசமுகி துன்முகியோடு விரைந்து செல்லுதலை அசுரப் பெண்கள் கேள்வியுற்று வீதிகள்தோறும் நெருங்கிச் சூழ்ந்தார்கள். அசமுகி, துன்முகியோடு சூரபன்மன் அரசு வீற்றிருக்கும் அத்தாணி மண்டபத்தை அணுகினாள்.

திருவிருத்தம்–33

ஆகத் திருவிருத்தம்-1,702

——oo——

## 41. அசமுகி புலம்புறு படலம்

### மாயையை நினைத்துப் புலம்புதல்

அசமுகி, சூரபன்மனின் அவைக்களத்தை அடைந்து அந்நகரிலுள்ள சிதேவி நீங்கும்படி கதறினாள். "அன்னையே! 'சிவபெருமான் வரமருளிய அக்காலத்தில் உங்களைக் காத்துத் திரிவேன்' என்று கூறிச்சென்றாயே! நான் என் கையை இழந்த போது 'நீ அஞ்சாதே' என்று வந்து கூறினாயில்லை. தந்தையர் தம் புதல்வரிடத்திலும், தாய் தம்புதல்வியிடத்திலும் அன்பு வைப்பர் என்று பெரியோர் கூறுவர். அம் முறைபற்றி நீ வந்து என்னைக் காப்பாற்றினாயில்லை."

### பொதுவாகச் சகோதரர்களை நோக்கிப் புலம்புதல்

"சகோதரர்களே! நீங்கள் யாவரும் எங்கும் வந்து காப்பாற்றுவீர்கள் என்று எண்ணினேன். அயிராணியை அஞ்சாது பலவந்தமாய்ப் பிடித்து இழுத்தேன். வீரமகாகாளன் என் கையை வெட்டி இந்திராணியையும் மீட்டுச் சென்றான். நீங்கள்

ஒருவரும் அவ்வனத்திற்குச் செல்லமாட்டீர்களோ? நீங்கள் அத்தேவர்களுக்குப் பயந்து ஒளித்தீரோ? ஊரை அழித்தும், வலியைக் குறைத்தும்; புகழை அழித்தும், செல்வத்தைக் குறைத்தும் தேவர்களை ஏவல் கொண்டோம் என்று கூறுகிறீர்களே! இந்திரனின் ஏவலாள் ஒருவன் என் கையை வெட்டியதை அறியவில்லையா? உங்கள் மூக்கைக் குறைத்தான்போலும். காண்மின்! காண்மின்!! மீன்சுமக்கும் பழிக்கு அஞ்சி நலிந்து மறைந்தோடிய இந்திரனின் செய்கை, வீட்டுக் கூரையில் நெருப்பு மறைந்திருந்த செயலாயிற்றே! என் கையைத் துணித்த வீர மகாகாளனும் இனி உங்களையும் அழிப்பான்.''

**மருகர்களை நோக்கிப் புலம்புதல்**

''இரணியனுக்கு மூன்று தலைகளும், அக்கினி முகனுக்கு இருதலைகளும், வச்சிரவாகுவுக்குப் பத்துத் தலைகளும் இருந்து என்ன பயன்? ஒரு தலையை உடையவன் என் கையைத் துணித்து விட்டானே! குழந்தைப் பருவத்தில் உன்மேல் வெய்யில் பட்டதற்காகச் சினந்து கதிரவனைப் பற்றிக்கொண்டுவந்து சிறை செய்த மருகாவோ! மருகாவோ!! இப்போது என் கையைத் துணித்தது யார் என்று நீ கேட்கின்றாயில்லை. இஃது என்ன கொடுமை?''

**தாரகனை விளித்துப் புலம்புதல்**

''தாரக அண்ணாவே! முன்னொருநாள் நீ திருமாலின் ஆழிப் படையைப் பொன் ஆபரணமாகத் தரித்தாயே! இன்று ஒரு பழியையே ஆரமாகக் கொண்டு நின்றாய். உன்னுடைய பெரிய வலிமை தேய்பிறைச் சந்திரன் போல் ஆயிற்றோ?''

**சிங்கமுகனை விளித்துப் புலம்புதல்**

''சிங்கமுக அண்ணாவே! நீ முன்னொரு கால் இந்திரனை ஐராவதத்தோடும் வானுலகத்திற் செல்ல ஒருகையால் தூக்கி எறிந்து உதைத்தாயே! இன்று இந்திரனின் தூதன் ஒருவனால் என் கை போய்விட்டதே. இதனைக் காண்கிலாயோ?''

**சூரபன்மனை விளித்துப் புலம்புதல்**

''சூரபன்ம அண்ணாவே! நீ அண்டங்களை யெல்லாம் ஒருங்கே ஆண்டாய். உன்னுடைய ஆஞ்ஞாசக்கரமும் செங்

கோலும் வெண்கொற்றக்குடையும் எங்கும் செல்லாநிற்கும். தேவர்கள் எல்லோரும் அவற்றிற்கு அஞ்சுவர். அங்ஙன மிருக்க இந்திரனின் ஆணையைத் தாங்கிய வீர மகாகாளன் அஞ்சக் காணேன். உன்னுடைய ஆணை, வலியாரிடத்துச் செல்லாதோ? முன்னாளில் முனிவனொருவன் பகைவர் சூழ்ச்சியால் என் குமாரர்களைக் கொன்று இன்னும் உயிரோடு இருக்கிறான். அதோடு நில்லாது அப்பகைவர், ஒருவனைக் கொண்டு என் கையைத் துணித்தார்களே! தங்கையாகிய யான் இங்ஙனம் வருந்த நீ நன்றாக அரசு செய்தாய்! இது பிழை அன்றோ? மன்னாவோ! மன்னாவோ!! உலகங்களை ஆளும் அண்ணாவோ! அண்ணாவோ!! கரமிழந்தேன் காண். எவர் எனக்கு உறவு ஆவார்? அங்க மிழந்து உயிரோடு இருப்பதைக் காட்டிலும் இறப்பதே நன்று. ஆதலால் நான் என் உயிரை விடுவேன். அதன்முன் என் மானமே என்னைக் கொல்லுகின்றது. ஐயோ! பாவியேன் பெண்ணாகப் பிறந்த பயன் இதுவோ?" என்று பலவாறு கூறிக் கொண்டு, தன் பின்னே வருகின்ற துன்முகியோடும் போய்ச் சூரபன்மனின் கால்களில் விழுந்து புரண்டு அழுதாள்.

திருவிருத்தம்— 15
ஆகத் திருவிருத்தம்—1,717

——oo——

## 42. சூரன் தண்டஞ்செய் படலம்

**சூரபன்மனின் கோபம்**

அசமுகி, சூரபன்மன் கால்களின் முன்னர் விழுந்து, சகடக் கால்போல் உருண்டபோது, அரசவையினர் அஞ்சி வருந்தினர். சூரபன்மன் கண்களில் தீப்பொறி பறந்தது. சூரபன்மன் தன் தங்கையைப் பார்த்து, "அசமுகியே! ஏன் இங்கே புலம்புகிறாய்? உன் கையையும் இவள் கையையும் வாளினால் வெட்டி, இன்னும் உயிரோடு இருப்பவன் யார்?" என்றான். அசமுகி அண்ணனை நோக்கி, "இந்திரன் மனைவியாகிய இந்திராணி ஓரிடத்திலே தவம்புரிந்துகொண்டு இருந்தாள். அவளை உனக்கென்று சென்று எடுத்தோம். அப்போது ஒருதேவன் விரைந்து வந்து என் கையை வெட்டி, அவளை மீட்டுக்கொண்டு போனான்"

என்று கூறினாள். அவற்றைக் கேட்டதும் சூரபன்மன் கண்கள் நெருப்பைக் கக்கின ; வாய் புகையை உமிழ்ந்தது ; மூக்குத் தீப் போன்ற உயிர்ப்பை விடுத்தது ; பற்கள் உதட்டைக் கடித்தன ; அண்டம் வெடிபடக் கடுநகை உண்டாயிற்று; இதழ் துடித்தது; புருவங்கள் துள்ளி நிமிர்ந்தன ; பற்கள் கறகறவென்று சலிப்போடு கடித்தன ; உடல் வியர்ப்புடன் கோபாக்கினி பொங்கி எழுந்தது. அதனைக்கண்டு திசை காப்பாளர் ஓடினார்கள் ; முனிவர்கள் உலைந்தார்கள் ; நடனமாடும் தெய்வப் பெண்கள் பதை பதைத்து ஓடினர் ; தேவர்கள் ஏங்கி நடுங்கினர் ; கடல்களும் மலைகளும் நடுங்கின ; விண்ணுலகமும் மண்ணுலகமும் நடுங்கின ; நான்முகன் உலகம், திருமால் உலகம் யாவும் நடுங்கின ; அவுணரும் நடுங்கினர் ! உலகில் யார்தாம் நடுங்காதவர் ? அவன் சினம் சிறியதோ ?

### சூரபன்மன் தம்பியர்களைப் பார்த்துக் கூறுதல்

கண்ணோட்டமில்லாத சூரபன்மன் தேவர்களையெல்லாம் அழிக்கக் கருதினான் ; அங்கே இருக்கின்ற தன் தம்பியர்களைப் பார்த்து, “நம்முடைய ஏவலினால் மீன் சுமந்து திரிந்த இந்திரன் காட்டில் மறைந்திருந்து ஒரு ஏவலாள் கொண்டு அசமுகியின் கையை வெட்டினான் என்றால், இனி மனிதர்களும் நம்மைக் கொல்லுவார்களே ! அவள் கையை வெட்டியவன் சிவன் அன்று; நான்முகன் அன்று ; திருமால் அன்று ; பயந்தோடிய இந்திரன் அன்று. இந்திரனின் ஏவலாள் ஒருவனே அவள் கையை வெட்டினான். இங்ஙனம் செய்த அவன் உயிரோடு வாழ முடியுமா ? மறைந்து திரியும் இந்திரனையும் இந்திராணியையும் முன்னே எளியவர்கள் என்று எண்ணிச் சிறையிடாது விட்டேன். அதுவே கூரையில் ஒளித்துவைத்த நெருப்பாகிவிட்டது. இவர்களின் கைகளை வெட்டியது என் அங்கத்தைக் குறைத்ததை ஒக்கும். நம் தூதர்கள், தேவர்கள் செய்த தீமையை அறியவில்லையே ; என் தம்பியர்களாகிய நீர் இருந்தீர்; புதல்வர்களும் இருந்தார்கள்; இணையற்ற இந்திரஞாலத்தேரும் இருந்தது; நேமியும் இருந்தது ; சிறிதே என் பெயரிருந்தது ; யானும் இருந்தேன்; இவ்வளவு இருந்தும் என்ன பயன் ? அந்தோ ! மலையொத்த பஞ்சுப்பொதி ஒரு சிறு தீப்பொறி பட்டமாத்திரத்தில் அழிவது போல், இவள் கையிலிருந்து சிந்திய சிறிய இரத்தத்துளி என்

புகழை மங்கச் செய்துவிட்டதே! இப்பழி என்றும் நீங்குவ தில்லையே! இதனை என் உயிர் பொறுப்பதா! அசமுகி படும் துன்பம் இதுவா! நன்று நன்று என் அரசியல் முறை!" என்று கூறி நகைத்தான்.

**பானுகோபன் தேவர்களைச் சிறைசெய்யப் புறப்படுதல்**

அப்போது சூரபன்மனின் மகன் பானுகோபன், கோபா வேசத்தோடு எழுந்து தந்தைமுன் சென்று வணங்கி நின்று, "எந்தையே! இந்திரன் நமது குற்றேவலால் வருந்தி இளைத்து மறைந்தான். ஏனைய தேவர்களோ இத்திறம் செய்ய நினைக்கவும் வலியற்றவர். உன் தங்கை கையிழந்தது என்ன மாயமோ? அறியேன். தேவர்களில் ஒருவனே இவர்களுடைய கையைத் துணித்தான் என்று நீ கூறுவது, 'மலடி பெற்ற மகன் ஆகாயத் தில் செல்லும் சந்திரனைக் கையால் பிடித்தான்' என்பதை ஒக் கும். தேவர்கள் மிகவும் எளியர்; சிறியர். நீ அவர்கள்பால் கொண்ட கோபத்தை நீக்குவாயாக. இவர்கள் கை துண்டிக்கப் பட்ட இடத்திற்கு நான் விரைந்து செல்வேன். இவர்கள் கைகளை வெட்டினவனையும், இந்திராணியையும், இந்திரனையும், தேவர் களையும் பிடித்துக்கொண்டு வருவேன். அவர்கள் அங்கிருந்து மறைவார்களானால் விண்ணுலகத்தைக் கொளுத்தி, உலகமெங் கும் தேடிப்பார்த்து, தேவர்களையும் அரம்பையர்களையும் பிடித் துக்கொண்டு இங்கு வருவேன்; தமியேனுக்கு அருள்வீராக" என்று பணிவுடன் விண்ணப்பித்தான். சூரபன்மன் சினம் தணிந்து படையோடு செல்லப் பானுகோபனுக்கு அனுமதி தந் தான். பானுகோபன் மகிழ்ந்து சூரபன்மனையும் தன் சிறிய தந்தையர்களையும் வணங்கித் தன் மாளிகைக்குப்போனான்.

**வெட்டப்பட்ட கை கூடுதல்**

பிறகு, சூரபன்மன் நான்முகனை அழைத்துவரச்செய்தான். நான்முகன் சூரபன்மன்முன், வந்து திதி வார நட்சத்திர முதலிய பஞ்சாங்கங்களைக் கூறினான். சூரபன்மன் நான்முகனை நோக்கி, "இவர்களுடைய வெட்டுண்ட கையை விரைந்து உண்டாக்கு வாய்" என்றான். நான்முகன் அதற்கு இசைந்து, "இவர்க ளுடைய வெட்டுண்ட கை கூடுக" எனக் கூற, ஒரு நொடிப் பொழுதில் கைகள் வளர்ந்தன. சூரபன்மன் நான்முகனை வியந்

தான்; அசமுகியை அந்நகரில் இருக்கும்படி செய்தான்; துன் முகியை, "இந்திராணி முன்னிருந்த இடத்தைக் காட்டிவருக" என்று பானுகோபனேடு அனுப்பிவைத்தான்.

**சூரியன் முதலியோரைச் சிறையிடுதல்**

அதன் பின்பு, சூரபன்மன் தன் மருங்கிலே உலவுகின்ற ஏவலாளர்களை அனுப்பிச் சூரியனையும், நட்சத்திரங்களையும், கிர கங்களையும் அழைத்துவரப் பணித்தான். அங்ஙனமே ஏவலாளர் பலர் விடைபெற்று விண்ணுலகு சென்று சூரியன் முதலி யோரை அழைத்துக் கொண்டு வந்து சூரபன்மன் முன் நிறுத் தினர். சூரபன்மன் அவர்களைக் கோபித்துப் பார்த்து, "விண் ணுலகில் திரியும் நீர் என் தங்கையின் கையை வெட்டிய தேவன் ஒருவனைப் பார்த்திருப்பீர்கள். பார்த்தும் வறிதே ஆகாயத்தில் இருந்தீர்கள். அதற்குக் காரணம் என்ன? இவள் கரங் குறைத்த விண்ணவன் உயிரைக் களைந்தீரில்லை. ஆயினும், அவனைத் தளை செய்து இங்கே கொண்டுவந்தீரில்லை. அன்றியும், அந்நிகழ்ச்சியினை நமக்கு வந்து சொன்னீரில்லை. நும் செருக்கு நன்று நன்று! நம்மாட்டு அன்பு சற்றும் கொண்டிலீர். இஃது உங்களுக்கு முறையோ?" என்று கடுகடுத்துப் பேசினன். நீதி யற்ற சூரபன்மன் இவ்வாறு கூற அவர்கள், "அரசே! எங்களை ஏதும் வெகுளல்வேண்டாம்; தங்கள் தங்கையின் கரங்களைத் துணித்தவனைக் கண்டிலேம்; பிறர் உரைக்கக் கேட்டுமிலேம்; வானவீதியில் நாங்கள் செல்லும் நெறியிலே எங்கள் கண்கள் சென்றன" என்று நடுங்கி உரைத்தனர். அவர்கள் மொழிகளைக் கேட்ட சூரபன்பன், "இத் தேவர்களுடைய செயல் மிக அழகிது!" என்று அவர்களெல்லோரையும் பிடித்து நீங்காத சிறையிலிடு வித்தான்.

**வாயுவைச் சிறையிடல்**

சூரபன்மன் வாயுக்களைக் கொண்டு வரும்படி சில ஏவலா ளர்களுக்குப் பணித்தான். வாயுக்கள் ஏவலாளர்களின் மூலம் சூரபன்மன் முன்னே வந்தடைய அவர்களை நோக்கி, "எங்கும் நிறைந்து நிற்கும் நீர் என் தங்கையின் கையை ஒரு தேவன் வாள்கொண்டு வெட்டியதைப் பார்த்துக் கொண்டிருந்தீர்கள்;

உமக்கு ஒளித்திருப்பவர் ஒருவரும் இல்லையே ; அதனை இங்கு வந்து சொன்னீரில்லை; பகைவர் சூழ்ச்சியால், அவுணர்களுக்குப் பழி வருவது நன்று, என எண்ணி நீங்கள் மகிழ்ந்திருந்தீர்கள் போலும் ! உங்கள் பெருமிதம் நன்று !'' என்று சூரபன்மன் கூற, அவர்கள் பதில் ஒன்றும் பேசாது நின்றனர். ஏங்கிநின்ற வாயுக்களைச் சூரபன்மன் கடுஞ்சிறை இடுமாறு ஆணை தந்தான்.

**காலவரையறைத் தெய்வங்களைச் சிறையிடுதல்**

பிறகு சூரபன்மன் வருடம், இருது, மாதம் முதலிய கால வரையறைத் தெய்வங்களை அழைத்து வரச்செய்து, '' நீங்களெல்லோரும் புல்லிய இந்திரன் செயலுக்கு உடன்பட்டு இருந்தீர்கள்; நீங்கள் நடந்தனவற்றை எமக்கு உடனே வந்து தெரிவித்தீரில்லை ; நீங்கள் எங்கும் உள்ளீர் ; நீங்கள் தேவர்களைச் சேர்ந்திருக்கிறீர்கள் '' என்று சீற்றத்தோடு அவர்களையும் சிறையில் அடைத்தான்.

**பூவுலக அரசர்களைத் தண்டித்தல்**

பூவுலகத்திலுள்ள அரசர்கள் யாவரையும் சூரபன்மன் சில ஏவலர்களைக்கொண்டு அழைத்து வரச் செய்தான். பூவுலக அரசர்கள் உடல் வியர்க்கவும், மனத்தில் அச்சமும் நாணமும் தளர்வும் உடையவராய்ச் சூரபன்மன் முன்வந்து கைதொழுது நடுங்கி நின்றார்கள். சூரபன்மன் அவர்களைப் பார்த்து, '' இந்திரன் மண்ணுலகில் மறைந்திருக்கிறான். விண்ணுலகில் அவன் இல்லை. அவனுடைய ஏவலாள் ஒருவன் என் தங்கை அசமுகியின் கையை வெட்டிவிட்டான். நீங்கள் அதனை உணராது கள்ளுண்டு மயங்கிக் கிடந்தீர்களோ ? அல்லது காமத்தில் மூழ்கிப் போனீர்களோ ? பெருஞ் செல்வத்தில் பித்துற்றீர்களோ ? அரசியலை விட்டீர்களோ? என் பகைவர்களோடு மனங்கலந்தீர்களோ ? அன்றியும், அவர்களுக்கு அஞ்சினீர்களோ ? மடவார் மயக்கத்தில் மயங்கி யிருந்தீர்களோ ? நீங்கள் இருந்த நிலைமை என்ன?'' என்று கேட்டான். அவ்வரசர்கள் அஞ்சிச் சூரபன்மனைப்பார்த்து, எங்கள் தாயைப்போன்ற அசமுகி துன்முகியோடு மண்ணுலகில் வந்ததை நாங்கள் காணவில்லை ; அவர்கள் கைகள்

வெட்டுண்டமையும் அறிந்திலோம்; இஃது ஒருமாயமே ஆகும். நாங்கள் கூறுவது யாவும் உண்மையே'' என்றனர்கள். அதற்குச் சூரபன்மன், "திரண்ட செல்வத்தால் செம்மாந்து மயங்கி உலகினை ஆள உளங்கொண்டிலீர். என்னிடம் இப்பழி எய்தியது உமக்கு மாயமாய்த் தோன்றியது அழகிதே!'' என்று கூறிக் கடுங் கோபங்கொண்டு தன் மருங்கில் நின்ற தானைத் தலைவரை ஏவித் தனித்தனியே அனைவரையும் தண்டிக்கத் தொடங்கினன்; சிலருடைய நாக்கையும், மூக்கையும், காதுகளையும் அறுப்பித்தான்; தாளையும் தலையையும் வெட்டுவித்தான். சூரபன்மன் இவ்வாறு பற்பல தண்டனைகள் விதித்துச் சிங்காதனத்தினின்றும் இறங்கித் தம்பியர்களும் பிரமதேவனும் செல்ல விடை கொடுத்தான்.

**நான்முகனால் காலக்கடவுளர் விடுதலை அடைதல்**

அப்போது நான்முகன் சூரபன்மனைப் பார்த்து, "சூரியனும் சந்திரனும், நட்சத்திரங்களும், மற்றைக்காலக் கடவுள்களும் உன் சொற்படி நடப்பார்கள். அவர்கள் தங்கள் காரியங்களை செவ்வனே செய்யாவிடில் உலகம் நடைபெறாது. ஆதலால், அவர்களைச் சிறை விடுவிப்பாயாக'' என்றான். சூரபன்மன், நான்முகன் வேண்டுகோளுக்கு இணங்கிச் சிறைப்பட்டிருந்தவர்களை அழைத்து வரச்செய்து, "நீங்கள் எப்பொழுதும் நம் கட்டளைப்படி நிற்கக்கடவீர்; இந்திரனுடன் எக்காலத்திலும் சேராது உங்கள் தொழில்களைச் செய்து கொண்டிருங்கள்'' என்றான். அவர்கள், "அவ்வாறே செய்கின்றோம்'' என்று விடைபெற்றுச் சென்றார்கள். பிறகு, சூரபன்மன் மற்றை யாவர்க்கும் விடையளித்துத் தன் இருப்பிடம் நோக்கிப் புறப்பட்டான்.

திருவிருத்தம்–71

ஆகத் திருவிருத்தம்-1,778

——oo——

## 43. அமரர் சிறைபுகு படலம்

**பானுகோபன் போருக்குப் புறப்படுதல்**

முன்னர் விடை பெற்றுச் சென்ற பானுகோபன், தன்,மாளிகைக்குச் சென்று போருக்குச் செல்ல அலங்காரஞ் செய்து கொண்

டான்; தும்பை மாலை சூடி, உயர்ந்த படைக்கலங்களை ஏந்தினன்; இரண்டாயிரம் குதிரைகள் பூட்டிய ஒரு தேர்மேல் ஏறி விரைவிற் சென்றான். அவனைச் சூழ்ந்து அசுரர் சேனைகளும், குதிரைச் சேனைகளும், தேர்களும், யானைகளும் எல்லையற்றனவாகச் சென்றன. சேனைகள் புறப்பட்டபோது எழுந்த தூளி மகேந்திரபுரியை மறைத்தது. அதனைக் கண்டு தேவர்களுடைய உள்ளங்கள் மிகத் தளர்ந்தன.

**பானுகோபன் சீகாழி வனத்தை அடைதல்**

பானுகோபன் மகேந்திரபுரியை நீங்கிக் கடலைக் கடந்து பூமியை அணுகியதும், தன் அருகில் வருகின்ற துன்முகியை நோக்கி, "உங்கள் கைகள் வெட்டப்பட்ட இடம் யாது? காட்டுக" என்றான். துன்முகி பானுகோபனைப் பார்த்து, "அரசிளங் குமரனே! அதோ தோன்றுகின்ற சோலையில்தான் ஒரு வீரன் எங்கள் கைகளைத் துணித்து இருந்தான். அங்கு அயிராணியும் இருந்தாள்" எனச் சுட்டிக்காட்டினள். பானுகோபன் சீகாழியிலுள்ள அச்சண்பக வனத்தில் புகுந்தான். அவன் சேனைகள், முன் சென்று அவ்வனத்தை அழித்து வெறு வெளியாக்கின. பானுகோபன் அங்கே இந்திராணியையும், வாள் வீரனையும் தேடி எங்கணும் காணாதவனாய்க் கவலை அடைந்து, பின்பு பூவுலகெங்கும் படைகளுடன் தேடிப் பார்த்தான்.

**சயந்தன் துயரத்துடன் தேவர்களுக்குக் கூறுதல்**

அதன் பிறகு பானுகோபன், நால்வகைச் சேனைகளும் சூழ விண்ணுலகை அடைந்தான். அதனை அறிந்த தேவர்கள் பயந்து அறிவழிந்து ஓடி, இந்திர குமாரனாகிய சயந்தனுக்குக் கூறினர். சயந்தன் தேவர்களைப் பார்த்து, "நம் குருவாகிய வியாழபகவான் இங்கு இல்லை. தேவர்களில் பலர் இங்கு இல்லை. என் தாய் தந்தையர்களும் இங்கு இல்லை. பானுகோபன் இங்கு வந்ததால் ஏதேனும் துன்பம் ஏற்படும். இதற்கு நான் என் செய்வேன்? தேவர்களே! சொல்லுங்கள். என்னுடைய தாய் தந்தையர்களும் சில தேவர்களும் பூவுலகில் மறைந்துள்ளார்கள். அவர்களை இவர்கள் தேடித் திரிகிறார்கள். நான் எங்குச் செல்வேன்?

எனக்கு ஒரு புகலிடமுமில்லையே! இனி வருந்துவதில் பயனில்லை. அவ்வசுரர்களுக்குப் புறங்காட்டி ஓடுவதில்லை. அவர்களை வணங்கிப் புகழ்வதில்லை. எதிர்த்துச் சாவது அல்லது பிழைப்பது இந்த இரண்டே நான்கொண்ட உறுதி. இனி, நான் அசுரர்களுக்கு அஞ்சேன். தம் உயிரை ஒரு பொருளாகக் கருதாதவர் எவ்வளவு பெரிய துன்பம் வந்தாலும் வருந்தமாட்டார்கள்; தம்முடைய வீரச்செயலில் சிறிதும் பிழையார். ஆதலால், நான் பானுகோபனுடைய கொடிய சேனைகளை வீரத்துடன் எதிர்த்துச் சென்று பல அசுரர்களைக் கொல்வேன். நீங்கள் எல்லோரும் என்னைப் பாதுகாத்து வருக. வன்மை இல்லாதவர்கள் இப்பொழுதே ஓடிப்போங்கள். நான் சிறிதும் மனந்தளரேன்" என்று கூறினன். தேவர்கள் அவற்றைக் கேட்டுத் துன்புற்று, "உன் எண்ணம் இதுவானல் எங்கட்கு வேறு எண்ணம் இல்லை. அசுரர்களின் ஏவலைச் செய்து வாழ்வதைக் காட்டிலும் இறப்பதே நல்லது. விரைந்து போருக்குப் புறப்படுவாயாக" என்ருர்கள்.

**சயந்தன் அசுரப் படையை வந்து எதிர்த்தல்**

சயந்தன் சிங்காசனத்தினின்றும் இறங்கி ஐராவதம் என்னும் வெள்ளை யானையைத் தன்னிடம் வருமாறு எண்ணினன். எதிரே ஐராவதம் வந்து நின்றது. சயந்தன் அதன் மீது ஏறிக்கொண்டு தேவர்கள் புடை சூழப் பெருங் கோபத்துடன் போருக்குப் புறப்பட்டான். தேவர்கள் ஓடிப்போவதற்கு இடமின்றிச் சயந்தனேடு பல படைக்கலங்களைத் தாங்கி வீராவேசத்துடன் சென்ருர்கள். சயந்தன் பானுகோபன் படையின் எதிரே சென்ருன். அப்போது அசுரர்கள், தங்கள் மீது தேவர்கள் போருக்கு வந்ததைக் கண்டு, "நேற்றை வரையும் இவர்கள் நம் ஏவல்களைச் செய்துகொண்டிருந்தார்கள்; இன்றைக்குப் போருக்குப் புறப்பட்டு வருவது பெரும் வியப்பை அளிக்கிறது" என்று கூறிக் கொண்டார்கள்.

**தேவர் - அசுரர் போர்**

தேவர்களுக்கும் அவுணர்களுக்கும் போர் மூண்டது. இரு திறத்தாரும் வேற்படைகள் எய்தும், வாட்படைகள் வீசியும்,

சக்கரங்கள், தண்டுகள், மழுப்படைகள் முத்தலைச் சூலங்கள், குலிசங்கள் முதலியவற்றை எறிந்தும் குருதி வெள்ளம் ஓடும்படி போர் புரிந்தனர். போரில் தேவர்கள் வலியிழந்து ஓடினார்கள். அசுரர்கள் அவர்களை விரைந்து பின்தொடர்ந்து பற்றி, வலிமையோடு குத்திப் புயங்களைக் கயிற்றினால் கட்டிப் பானுகோபன் முன்னே கொண்டுவந்து விடுத்தார்கள். பானுகோபன் அவர்களுக்குத் தக்க காவல் ஏற்படுத்தினான்.

**சயந்தன் போர்**

இவற்றைக்கண்டு சயந்தன் கடுங்கோபமுற்று வில்லை எடுத்து அசுரர்கள்மேல் அம்பு மழைகளைப் பொழிந்தான். அசுரர்கள் கடல்போல் ஆரவாரித்து ஐராவதத்தைச் சூழ்ந்து நின்று சயந்தன் மீதும் வெள்ளையானையின்மீதும் கோடி அம்புகளை எய்தார்கள். சயந்தன் தன்னிடம் மேன்மேலும் வந்த அம்புகளை அழித்து அவர்கள் வில்லையும் ஒடித்து வீழ்த்தினான். பின்பு நூறு வெள்ளம் அசுர சேனைகளைச் சயந்தன் அழித்தான். ஐராவதம் பானுகோபனுடைய சேனைகளைக் காலினால் மிதித்தும், வாலினால் அடித்தும், துதிக்கையினால் வாரி எறிந்தும், கோடுகளினால் குத்தியும் கொன்றது. இதனால், பானுகோபனுடைய நூறுவெள்ளம் சேனைகள் கணப்பொழுதில் அழிந்தன. இரத்த வெள்ளம் நதிபோல ஓடியது. சயந்தன் ஐராவதத்தின் மீது ஏறிக்கொண்டு அசுரப் படைகளை அழிக்கும்போது **நீலகேசன்** என்னும் அசுரர் படைத் தலைவன், சயந்தன் முன்சென்று வில்லை வளைத்து அம்புகளை மழைபோலச் சொரிந்தான். சயந்தன் நூறு கணைகள் எய்து நீலகேசனின் கவசத்தை அறுத்தான். நீலகேசன் ஒரு பிறைமுகாஸ்திரத்தைச் செலுத்திச் சயந்தனின் வில் நாணை அறுத்தான். நிராயுதபாணியாய் நின்ற சயந்தன், தான் பயின்ற ஒரு மாயையால் பல்வேறு உருவங்களைக் கொண்டு போரிட்டான். நீலகேசன், குறிப்பினால் 'இது மாயம்' என்று நினைத்து அம்மாயங்களை நீக்க வகை அறியாது எதிர்நின்று ஆர்ப்பரித்து மயங்கி வீழ்ந்து இறந்தான்.

பானுகோபனுடைய சேனைகள் பயந்து ஓடலாயின. அப்போது **சோமாசுரன், மாயாபலி, சுரகேசரி, பதுமன், மாருதபலி, தண்டகன், வாமன், வருணன், மாகதன்** முதலிய

அசுரப் படைத் தலைவர்கள் தாம் பயின்ற மாயைகளைப் புரிந்து சயந்தனை எதிர்த்துப் போராடினர். சயந்தன் செய்த மாயத்தை அசுரப்படைத் தலைவர்கள் தங்கள் மாயத்தால் அழிக்க இயலாது மனம் வருந்தி, "யாம் என் செய்வோம்" என்று கருதி ஏங்கினார்கள்.

### சயந்தன் - பானுகோபன் போர்

அச்சமயம் பானுகோபன், தன் படைத்தலைவர்கள் மெலிவதையும் தன் சேனைகள் அழிவதையும் கண்டான்; சயந்தனின் மாயையை அறிந்து சுக்கிராசாரியர் முன்னே தனக்கு உபதேசித்த ஞான மந்திரத்தை விதிப்படி செபித்துக் கொண்டு சென்றான். உடனே சயந்தனின் மாயாரூபங்கள் யாவும் மறைந்தன. சயந்தன் ஒரு துணையுமின்றி ஐராவதத்தின்மேல் இருந்தான். பானுகோபன் தேரோடு சயந்தனை அணுகி, "அடா, இந்திர குமாரனே! நான் உன்னைக் கருதிவரும் அளவிலேயே உன் மாயையும் வலியும் தொலைந்தன. சூரியனைச் சிறை செய்ததுபோல உன்னையும் சிறை செய்வேன். விரைந்து போருக்கு வருவாய்" என்றான். இருவரும் சினந்து வில்லை வளைத்துப் பாண மழை பொழிந்தனர். பானுகோபன் பல பாணங்களைவிட, சயந்தன் அவற்றை அறுத்தான். சயந்தன் விட்ட கணைகளைப் பானுகோபன் அழித்தான். இவ்வாறு இருவரும் கடும்போர் புரியும் போது சயந்தன் பானுகோபனின் வில் நாணை அறுத்தான். பானுகோபன் கடுங் கோபம் கொண்டு வேறொரு வில்லை வளைத்துச் சயந்தன்மேல் ஆயிரம் கணைகளைச் செலுத்தினான். சயந்தன், ஆயிரம் அம்புகளால் பானுகோபன் தேரில் கட்டிய குதிரைகளை அழித்தான். பானுகோபன் வீடாமழைபோல நூறாயிர கோடி கணைகளை எய்து சயந்தன் வில்லையும், அம்பறாத் தூணியையும் அழித்தான்; சயந்தன் உடம்பிலும், ஐராவதத்தின் உடம்பிலும் கணைகளைச் செலுத்தினான். சயந்தன் மயங்கி வெள்ளை யானையின் மேல் வீழ்ந்து அறிவழிந்தான். அவன் அமுதம் உண்டமையால் இறக்கவில்லை. அவன் உடலெங்கும் குருதி பெருகி ஓடியது.

### ஐராவதம் கீழே வீழ்தல்

அது கண்ட ஐராவதம், கலங்கித் துன்பமுற்றுக் கோபித்து எதிரில்நின்ற பானுகோபனின் தேரில் பாய்ந்து, தேரில் கட்டி

யிருந்த குதிரைகளையும் பாகனையும் அழித்தது. தேர் அழிதலும், பானுகோபன் நிலத்திற் குதித்து ஐராவதத்தைக் கோபிக்க, அஃது அவன் மார்பில் முட்டியது. அப்போது அதன் நான்கு கோடுகளும் மள மள என்னும் ஒலியோடு முரிந்தன. பானு கோபன் அந்த ஐராவதத்தின் துதிக்கையை ஒரு கையினால் பிடித்து, மற்றொரு கையினால் கன்னத்தில் அடித்தான். அது கதறித் தளர்ந்து கீழே வீழ்ந்தது.

**சயந்தன் சிறைப்படுதல்**

முன்னே மயங்கி வீழ்ந்த சயந்தன் தெளிந்து எழுந்து யாவற்றையும் ஆராய்ந்தான்; தன் வலிமை குறைந்ததைக் கண்டான்; இனி அவுணர்கள் தன்னைப் பிடித்துத் தன் நகரத் தையும் அழிப்பார்கள் என்று எண்ணினான். தனித்து நின்ற சயந்தனை அவுணத் தலைவர்கள் கண்டு ஆரவாரம் செய்து வந்து சூழ்ந்து பற்றினர். அப்போது எல்லா அவுணர்களும் ஒன்று கூடி, "இவனை அடியுங்கள்; குத்துங்கள்; இவன் உயிரைக் குடியுங்கள்" என்றார்கள். பானுகோபன் வேறு ஒரு தேரின் மேல் ஏறிவந்து சயந்தனைப்பற்றி நின்ற அசுரர்களைப் பார்த்து, "யான் ஏவிய கணைகளால் இவன் மிகவும் உடல் தளர்ந்தான்; பேசவும் வலியிலன்; ஆதலின், இவனைப் பகைவன் என்று கருதி வருத்தாதீர்கள்; தேவர்களோடு சிறை செய்யுங்கள்" என்றான். அசுரர்கள் சயந்தனைக் கயிற்றினால் கட்டி முன்னர் சிறைசெய்து வைத்திருந்த தேவர் கூட்டத்தோடு ஒருங்கே கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

**சுவர்க்கத்தைக் கொளுத்துதல்**

அப்போது பானுகோபன், தன் அருகில் நின்ற அவுணப் படைத் தலைவர்களை நோக்கி, "இத்தேவர்களும் சயந்தனும் அல்லாத மற்றைத் தேவர்களை யெல்லாம் இங்கே கொண்டுவந்து சிறை செய்து, இத்தேவருலகத்தைத் தீயிட்டுக் கொளுத்துங் கள்" என்றான். உடனே அசுரர்கள் விண்ணுலகம் எங்கும் போய்த் திரிந்து தேவர்களையும் அரம்பையர்களையும் பிடித்துக் கட்டிக் கொண்டு வந்து பானுகோபன் முன் விடுத்தனர்; அதன் பின்பு சுவர்க்கத்தைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். அஃது

எரிந்து சாம்பராயிற்று. இந்திரன் வறியனாய் ஒளிந்து ஓடிப் போனான். தேவர்கள் சிறைப்பட்டார்கள். விண்ணக வாழ்வே இத்தகையதாயின், யாவரும் செல்வத்தை நிலையென மதிக்கலாமோ!

ஊழியின் அன்றி என்றும் ஒழிவுறாத் துறக்க மூதூர்
பூழிய தான தன்றே; புரந்தரன் வறியன் போனான்;
வீழுறு சிறையின் உற்றார் மிக்கவர் என்றால் யாரும்
வாழிய செல்வந் தன்னை நிலையென மதிக்க லாமோ.

சுவர்க்க முழுவதும் எரிந்தொழிந்ததைக் கண்டு பானு கோபன்மிக மகிழ்ந்தான்.

### பானுகோபன் சூரபன்மனை அடைதல்

பிறகு பானுகோபன் அசுரர்களை நோக்கி, "சயந்தனையும் அவனோடு சேர்ந்து வந்து நம்மை எதிர்த்த தேவர்களையும், மற்றைத் தேவர்களையும் நீங்கள் முன்னே கொண்டு செல்லுங்கள்" என்றான். அசுரர்கள் அங்ஙனமே கொண்டு சென்றார்கள். பானுகோபன், சேனைகளோடு பூமியில் வந்து வீர மகேந்திர புரியை அடைந்து, சூரபன்மனது அரண்மனைக்கு முன்னர் ஏகித் தன் தேரினின்றும் இறங்கினான்; சேனைகளை அங்கே நிறுத்தி விட்டுப் பிணித்துக் கொண்டுவந்த தேவர்களைக் கொண்டு சென்று, சூரபன்மனின் முன்னே விடுத்து, வணங்கி நின்று, "எந்தையே! இந்திரனையும் இந்திராணியையும் சுவர்க்கம் எங்கும் தேடித்திரிந்தும் கண்டிலேன். சுவர்க்க லோகத்தை நெருப்பிட்டுக் கொளுத்திவிட்டுச் சயந்தனையும் தேவர்களையும் பற்றி வந்தேன்" என்றான். சூரபன்மன் அதனைக்கேட்டு மகிழ்ந்து பானுகோபனைத் தழுவினான்.

### சூரபன்மன் தேவர்களைத் தண்டித்தல்

சூரபன்மன், சயந்தன் முதலிய தேவர்கள்மேல் சினம் கொண்டான்; காவலரை நோக்கி, "இவர்கள் உறுப்புக்கள் யாவற்றையும் துண்டஞ் செய்யுங்கள்" என்றான். அசுரர்கள் தேவர்களுடைய கால்களையும், கைகளையும், காதுகளையும் அசமுகி காணும் வண்ணம் அறுத்தார்கள். தேவர்கள் தவத்தில் சிறந்தவர்களானதால், குறைந்த உறுப்புக்கள் மீண்டும் வளர்ந்தன. சூரபன்மன் அதனைக்கண்டு வியந்து, "தேவர்களை எவ

ரும் கொல்ல முடியாது. இவர்கள் சிறந்த ஆற்றல் கொண்ட வர்கள். நம்மிடம் அவர்கள் தோற்றதற்குக் காரணம் நம் தவ வலிமையே ஆகும். ஆதலால், இவர்கள் தப்பி ஓடாதபடி சிறையில் அடையுங்கள்" என்று மிகுந்த வலிமை பொருந்திய ஏவலாளர்களுக்குக் கட்டளையிட்டான். அதன்பின்பு சூரபன் மன் அன்போடு பானுகோபனுக்கு அவன் இருப்பிடம் செல்ல விடையளித்து அனுப்பிவிட்டுத் தானும் சபையினின்று நீங்கி மாளிகை அடைந்தான்.

**தேவர்களைச் சிறையில் அடைத்தல்**

ஏவலாளர்கள், சயந்தனையும் தேவர்களையும் கடிந்து பிடர் பிடித்துத் தள்ளிச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோய்ச் சிறைக் காவலரிடம் ஒப்படைத்தார்கள். சிறைக் காவலர்கள் சயந்தன் முதலிய தேவர்களை விலங்கு பூட்டி அரிய சிறையில் அடைத் தார்கள். சிறையில் அகப்பட்ட தேவர்கள் துன்பக் கடலில் மூழ்கினார்கள். இந்திரன் சூரபன்மனுக்குப் பயந்து காட்டில் ஓடி ஒளிந்தான். விண்ணுலகம் எரிந்து அழிந்து போயிற்று. சயந்த னும் சிறையில் அகப்பட்டான். தேவபதத்தின் செய்கை இது வாகும். நாம் ஆராய்ந்து நோக்கின் சிவபெருமான் தந்தருளும் மோட்சம் ஒன்றே அல்லாமல் துன்பமில்லாத செல்வம் வேறு உண்டோ?

காடு போந்தனன் இந்திரன் ; பொன்னகர் கரிந்து
பாடு சேர்ந்தது ; சயந்தனுஞ் சிறையிடப் பட்டான் ;
நாடில் விண்பதச் செய்கையீது ; எம்பிரான் நல்கும்
வீட தேயலால் துன்பறும் ஆக்கம்வே றுண்டோ?

தேவப் பெண்களும் மகேந்திரபுரியில் சிறையில் அகப்பட்டு, அசுரர்களுக்கு இழிந்த ஏவல்களைப் புரிந்து வருந்தினார்கள். வீர மகேந்திரபுரியில் தேவர்கள் முதலியோர் அடைந்த துன்பத்தின் திறத்தை யாவர் சொல்லவல்லவர்?

**ஐராவதம் இழந்த கோடுகளைப் பெறுதல்**

விண்ணுலகில் அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் போர் நிகழ்ந்தபோது கோடுகள் ஒடியப்பெற்று வீழ்ந்த ஐராவதம் என்னும் வெள்ளையானை, அறிவு பெற்று எழுந்து, திருவெண் காட்டை அடைந்தது. சிவாகம விதிப்படி சிவலிங்கம் தாபித்துப்

பூசித்து வழிபட்டது. சிவபெருமான் திருவருளால் இழந்த கோடுகள் மீண்டும் வளர்ந்தன. பெருமகிழ்ச்சி கொண்டு ஐராவதம் அத்தலத்திலேயே தங்கியிருந்தது.

**இந்திரன் தவம் புரிதல்**

இந்திரன் இந்திராணியோடு விண்ணுலகத்திற்குச் சென்ருன்; பானுகோபனுல் விண்ணுலகம் எரிக்கப்பட்டுச் சயந்தனும் தேவர்களும் சிறை செய்யப்பட்டதை உணர்ந்தான்; மனம் வருந்தி மேருமலைக்குச் சென்று சிவபெருமானை நோக்கி நெடுநாள் தவம் செய்தான். இந்திரனது தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான், அவனுக்குக் காட்சி தந்தருளி, "இந்திரனே! உனக்கு வேண்டும் வரம் யாது? சொல்" என்று கேட்டருளினுர். இந்திரன் எம்பெருமானை நோக்கி, "நீதியற்ற சூரபன்மனைக் கிளைகளோடு அழித்து எங்கள் துன்பங்களைப் போக்கியருளவேண்டும்" என்று வேண்டினுன். எம்பெருமான், "யாம் உமாதேவியை மணந்து, ஒரு குமாரனைத் தருவோம்; அவனே அசுரர்களை அழித்து உங்களுக்கு வாழ்வினைத் தருவான்; வருந்தற்க" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினுர்.

**வியாழ பகவான் தேவர்கள் செய்கையைக் கூறுதல்**

எம்பெருமான் திருவாய் மலர்ந்தருளியதை இந்திரன் கேட்டு, திருமால் பிரமன் முதலியவர்களோடு கலந்து யோசனை செய்து மன்மதனைச் சிவபெருமானிடம் அனுப்ப, அவன் அச்சிவபெருமான்மீது மலர்க்கணைகளை எய்து அவருடைய நெற்றிக் கண்ணுல் எரிந்து சாம்பலாயினுன். தேவர்கள் யாவரும் தங்கள் துன்பங்களை நீக்கும்படி எம்பெருமானை வேண்டிக்கொண்டார்கள். எம்பெருமான் அதற்கு இணங்கித் திருமால், நான்முகன், இந்திரன் முதலிய பூதகணத் தலைவர்கள் முதலியோர் சூழ இமய மலைக்கு எழுந்தருளினுர். உமாதேவியாரைத் திருமணம் புரிந்து, திருக்கயிலை மலைக்கு மீண்டு வந்தடைந்து, எங்களுடைய துயரைப் போக்கக்கருதி, கருணைகொண்டு தேவரீரை நெற்றிக் கண்களினின்றும் தந்தருளினுர்.

எந்தையாகிய குமாரமூர்த்தியே! தேவரீர் திருவவதாரம் செய்த பிறகே இந்திரனும், பிரம விஷ்ணுக்களும், மற்றைத்

தேவர்களும், முனிவர்களும், பிறரும் இழந்த தத்தம் உயிரை எய்தியவரை ஒத்துப் பெருமகிழ்ச்சியுற்ருர்கள். தேவரீர் திருவவதாரம் செய்தபின்னும் இந்திரன் முதலாயுள்ள தேவர்கள், "இன்னும் சூரபன்மன் நம்மைக் கண்டால் கடுஞ்சிறையில் வைப்பான்" என்று அவனுக்கு அஞ்சி மண்ணிலும் மற்றை இடங்களிலும் மறைந்து திரிகிருர்கள். தேவரீரையும் சிவபெருமானையும் வழிபட வரும்போதுமட்டும், தேவர்கள் தங்கள் மெய்வடிவோடு வருவர். மற்றைக் காலங்களில் பொய் வடிவம் பூண்டு உழல்கின்றனர். சூரபன்மனுடைய படைத் தலைவர்களைக் கண்டால் மனம் நடுங்கி, உடல் வியர்த்து இறந்தவர் போலாகி, அவர் மறைந்த பின்னரே உயிர் வரப் பெறுகிருர்கள். தேவர்களுக்கு நித்திரை இல்லை. அதனுல், அவர்களுக்குக் கனவு வருவதில்லை. வருமாயின், அக்கனவில் சூரபன்மனைக் கண்டால் உயிரையும் இழப்பர். பெருஞ் செல்வத்தினுலும், மிகுந்த வலிமையினுலும், அழியாத யாக்கையினுலும் தனக்கு நிகரொருவரும் இல்லை என்று நினைத்துச் சூரபன்மன் தேவர்களுக்குக் கொடுமை புரிந்து விளங்குகின்ருன். சூரபன்மன் இந்த ஓரண்டத்தில் செய்த தீமைகளை மட்டுமே இதுவரையில் சொன்னேன். எஞ்சிய ஆயிரத்தேழு அண்டங்களிலும் அவன் செய்த தீங்குகளைத் தேவரீரன்றி வேறு யாவர் அறியவல்லார் உளர்?

**வியாழபகவான் விண்ணப்பம்**

சூரபன்மனது ஆணை என்ருல், திருமால் பிரமன் முதலிய தேவர்களும், முனிவர்களும், ஆயிரத்தெட்டு அண்டங்களிலுள்ள மற்றை உயிர்களும் அதனைக் கடந்து நடவார்கள் என்னின், அவன் பெருமையை யாவர் அளவிடவல்லவர்? அழியாத பெருவளங்களைப் பெற்ற சூரபன்மனைத் தேவரீரேயன்றி வேறு எவராலும் அழிக்க முடியாது. நான்முகனே, சூரபன்மனுக்கு நாடோறும் பஞ்சாங்கம் சொல்லிவருகின்ருன். திருமாலோ, தாரகனேடு போர் செய்து தோற்ருர். சிவபெருமானே, அவனுக்கு வேண்டிய வரங்களைத் தந்தருளினுர். அவனை அவர் கொல்லமாட்டார். ஆதலால், வெற்றிக்குரிய எந்தையே! நீரே அவனைக் கொன்று, அவன் துணைவரையும், புதல்வர்களையும் அழிக்க வேண்டும். சயந்தனையும் தேவர்களையும் சிறை நீக்கி நான்முகன்

திருமால் முதலியவர்களுக்கு அவரவர்களுடைய பதவிகளை அளித்து எங்களைக் காத்தருளவேண்டும்" என்று வியாழபகவான் முருகப்பெருமானிடம் விண்ணப்பம் செய்தார்.

**முருகக் கடவுள் திருவாய் மலர்ந்தருளல்**

முருகக் கடவுள், வியாழபகவான் கூறியவற்றை ஒன்றுமே உணராதவர் போலக் கேட்டு மகிழ்ந்து அவருடைய முதுகைத் தடவிக் கொடுத்து, அருள்புரிந்தார். வியாழபகவான் ஆறுமுகக் கடவுளை நோக்கி, "எம்பெருமானே! கொடிய சூரபன்மன் அழியவேண்டுமென்று தேவரீர் திருவுளம் கொண்டால் அஃது ஆகும். ஒரு திருவிளையாடலை நினைந்து இங்கு எழுந்தருளியுள்ளீர். சூரபன்மனின் வரலாற்றை அறிந்தும், அறியாதவர் போல் அடியேனை வினவினீர். 'சிறியேன் சொன்னேன்' என்னும் தீய பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று கூறி, அவருடைய திருவடித்தாமரைகளை வணங்கித் துதித்தார். முருகப் பெருமான் வியாழபகவானை நோக்கி, "நீ நம்முடைய அனுமதிப்படி சொன்னாய்; ஆதலால் பிழை ஒன்றும் இல்லை" என்று திருவாய்மலர்ந்தருளினார். பிறகு, சண்முகக்கடவுள் தமக்கு அருகில் இருந்த இந்திரனைப் பார்த்து, "சூரபன்மனைக் கிளையோடு அழித்துத் தேவர்களைச் சிறை மீட்டு விண்ணுலகை நீ ஆளும்படி செய்வோம். மனத்தில் சிறிதும் கவலை கொள்ளற்க" என்று அருளிச் செய்தார். இம்மை மறுமை இன்பங்களைத் தந்தருளும் முருகப்பெருமானின் அருள்மொழிகளை கேட்ட இந்திரன், தேவர்களோடு அவரை வணங்கித் துதித்துத் தன் துன்பம் நீங்கி இன்பக் கடலில் மூழ்குவானானான்.

திருவிருத்தம்- 141
ஆகத் திருவிருத்தம்–1,929

திருச்சிற்றம்பலம்

---

ஆகக் காண்டம் இரண்டுக்குத் திருவிருத்தம்–3,712

**அசுரகாண்டம் முற்றுப்பெற்றது**

உ
செந்திலாண்டவன் துணை
திருச்சிற்றம்பலம்

மூன்றாவது

# மகேந்திர காண்டம்

**முருகவேள் வணக்கம்**

விரிஞ்சன்மால் தேவ ராலும் வெலற்கரும் விறலோன் ஆகிப்
பெருஞ்சுரர் பதமும் வேத ஒழுக்கமும் பிறவும் மாற்றி
அருஞ்சிறை அவர்க்குச் செய்த அவுணர்கோன் ஆவி கொள்வான்
பரஞ்சுடர் உருவாய் வந்த குமரனைப் பணிதல் செய்வாம்.

——oo——

## 1. வீரவாகு கந்தமாதனஞ் செல் படலம்

### தூது அனுப்ப எண்ணுதல்

இந்திராதி தேவர்களும் பிறரும் சூழ்ந்து போற்றச் செந்திமா நகரின் திருக்கோயிலில் அரியணைமீது எழுந்தருளியிருக்கும் சண்முகக்கடவுள் தம் திருவுள்ளத்தில் எழுந்த பெருங் கருணை காரணமாகப் பின்வருமாறு எண்ணலானார்: "நான்முகன் முதலாகவுள்ள தேவர் கூட்டமும் முனிவர்குழாமும் போல, அசுரர் குழாமும் எம்பெருமானுக்குப் புத்திரர்களே ஆவர். ஆயினும் கொடியவரை அழித்தல் நீதிநூல் முறையாகும். ஆனால் சூரபன்மனையும் அவன் கிளைஞரையும் நாம் ஒருசேரக் கொல்லுதல் முறையன்று. நாம் ஒரு தூதுவனை அவனிடம் விரைவில் அனுப்புவோம். அத்தூதுவன் சொல்லைக்கேட்டுச் சூரபன்மன் தேவர்களைச் சிறை நீக்கிவிடுவானாயின், அவன் இன்னும் அழியாமல் வாழட்டும். அங்ஙனம் செய்யாது மறுத்தால், "நாம் அங்குச் சென்று அவனைக் கொல்வோம்; இதுவே தருமநெறி" என்று திருவுளம் கொண்டார். இவ்வாறு திருவுளங் கொண்ட

முருகக்கடவுள் தம் அருகிலிருந்த திருமால் பிரமன் முதலிய தேவர்களை நோக்கி, "அசுரர்தம் குழுவையெல்லாம் அழிக்கும் பொருட்டு நாம் நாளைக்குப் புறப்படுவோம். அதற்கு முன்னர் ஒரு தூதுவனை அனுப்பிச் சூரபன்மன் கருத்தை அறியவேண்டும்" என்றார். அதனைப் பிரம விஷ்ணுக்கள் கேட்டு, "எம்பெருமானே! அவ்வாறு செய்தலே அறநெறி" என்றார்கள். உடனே குமரக்கடவுள், "நம் வீரர்களில் வீரமகேந்திரத்திற்குச் சூரபன்மனிடம் தூது செல்லத் தக்கவர் யார்? சொல்லுங்கள்" என்று வினவி அருளினார்.

**வீரவாகுதேவருக்குக் கட்டளையிடுதல்**

நான்முகன், ஆறுமுகக் கடவுளை நோக்கி, "தேவர்கள் எவரும் அசுரர்களுக்குப் பணிபுரிவதற்கன்றி வேறு எதற்கும் வீரமகேந்திரம் சென்று மீளல் அரிது. அடியேனும் அப்படியே. தூது சென்று வெற்றியுடன் மீளத் தகுந்தவர், நம் வீரவாகுதேவர் ஒருவரே ஆவர்" என்று விண்ணப்பித்தார். முருகக்கடவுள் வீரவாகுதேவரை மகிழ்ச்சியோடு நோக்கி, "வீரவாகுவே! நீ வீரமகேந்திரத்திற்கு விரைந்து சென்று சூரபன்மனைக் கண்டு, 'சயந்தனையும் தேவர்களையும் அறநெறியினை நினைத்துச் சிறையினின்று விடுத்துப் பெருஞ் செல்வந் துய்த்து வாழ்வாய்' என்று சொல்லுக. அதனை அவன் ஏற்க மறுத்தால், 'அசுரனே! உன் கிளைஞரை விரைவில் அழித்து உன்னையும் சக்திவேலுக்கு இரையாக்க நாளையே எம்மண்ணல் சேனையோடு ஆங்கு வருவார்; இஃது உண்மை' என்று கூறி மீள்வாய்" என்று கட்டளையிட்டருளினார்.

**வீரவாகுதேவர் விடைபெறுதல்**

வீரவாகுதேவர் அப்பணியைச் சிரமேல் தாங்கி, "எம் பெருமானே! மிக்க வலிமை பொருந்திய அசுரர்கள் நகராகிய வீரமகேந்திரத்திலிருக்கும் சூரபன்மனிடம் சென்று தேவரீர் அருளியவற்றைக் கூறி அவன் கருத்தை அறிந்து வருகின்றேன்" என்று கூறி, வணங்கி விடைபெற்றுச் சென்றார். அப்போது இந்திரன் வீரவாகுதேவருக்குப் பின்சென்று, "வீரரே! வீரமகேந்திரத்தில் சிறையிருக்கும் சயந்தனையும், தேவர்களையும்

முன்னர்க் கண்டு தேற்றிப் பின்னர் நீர் தூதுசெல்லும் செயலை முடிப்பீராக" என்ருன். வீரவாகு தேவர், "அவ்வாறே செய்வோம்; நீ கவலைப்படாதே" என்று கூறித் தம்மைப் பின் தொடர்ந்துவந்த இலக்கத்தெட்டு வீரர்களையும் பார்த்து, "நான் எம்பெருமான் திருவாக்கைச் சூரபன்மனிடம் சொல்வேன். மறுத்தால் அவன் நகர முழுவதையும் அழித்து மீளுவேன்" என்ருர். இளவல்கள் வியந்து அவரை வணங்கினுர்கள். வீரவாகு தேவர் அவர்களை மார்போடு இறுகத் தழுவி, பூதப்படைத் தலைவர்களோடும் அங்கேயே இருக்கும்படி அருள் செய்து விரைந்து கடற்கரையை அடைந்தார்.

**வீரவாகுதேவரின் பேருருவம்**

தென் கடலருகில் சென்ற வீரவாகுதேவர் கால்களில் வீர கண்டை கலீர் கலீர் என்று சத்திக்க, மேருமலையைக் காட்டிலும் உயர்ந்த **கந்தமாதனமலை***யின் உச்சியில் ஏறி நின்ருர். அவர் அம்மலையின் மீது நின்றபோது அவரது பாரத்தைப் பொறுக்க மாட்டாமல் அது குலைந்து பிளந்து பூமியில் ஆழ்ந்தது. அப்போது அம்மலையிலிருந்த பறவைகளும் விலங்குகளும் சிதறி ஓடின. முன் போரில் புறமுதுகிட்டு ஓடிவந்து அம்மலைக் குகைகளில் ஒளிந்திருந்த தாரகன் படைவீரர்கள், அவரைக்கண்டு ஏங்கி இறந்தனர். வீரவாகுதேவர் மகேந்திரபுரிக்குச் செல்ல முருகக் கடவுளைத் தியானித்துக் கைகளைத் தலைமீது குவித்து வணங்கி, திருமால் பிரமன் முதலிய தேவர்கள் கண்டு வியக்கும்படி **பேருருவம்** எடுத்தார். அவ்வுருவம் எல்லா வுலகங்களையும் ஒருங்கே பார்க்கத் தக்க அவ்வளவு பெரிதாய் அமைந்திருந்தது. வீரவாகுதேவர் அங்கு நின்றபடியே பூமியிலுள்ள எல்லா நகரங்களையும் பார்த்தார்; பிறகு சூரபன்மனின் பெரிய நகரத்தையும் கண்டு, இப்பெரிய நகரத்திற்கு மற்றை எந்த நகரங்களும் நிகர்த்தல் இல்லை என்று வியந்தார்; கோபம் பொங்கிய

---

* இராமேச்சுரம் திருக்கோயிலுக்கு வடபால் சுமார் ஒன்றரைமைல் தொலைவில் பெரிய மணற்குன்று ஒன்று உள்ளது. அதனையே இக்கந்த மாதன மலை என்று கூறுவர். இதனைப் பற்றிய ஆராய்ச்சியை திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் இளவரசு, வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் எழுதிய 'இராமேச்சுரம்' என்னும் நாலில் கண்டுணர்க.

வராய், இந்நகரத்தில் ஒரு கையை நீட்டிப் பகைவர்கள் எல்லாம் இறக்கும்படி பிசையலாமா என்று எண்ணினார்; அங்குச் சிறையிலிருக்கும் சயந்தன் முதலிய தேவர்களை எண்ணி அவ்வெண்ணத்தைக் கைவிட்டார். இப்பேருருவத்தை விஞ்சையரும், இயக்கரும், சித்தரும், கதிரவனும், திங்களும் பார்க்கப் பொறுது அஞ்சினர். வீரவாகுதேவர் அவர்களை நோக்கி, "வருந்தாது ஒழிமின்" என்று கை அமர்த்தினார். வீரமகேந்திரத்திலுள்ள அசுரர்களும் வேறிடங்களிலுள்ள அசுரர்களும், வீரவாகு தேவருடைய பெரிய திருவுருவத்தை நோக்கி, "கிரவுஞ்சமலை முன் அழிந்தது என்னும் சொல் பொய்யே. இப்பேருருவம் அக்கிரவுஞ்ச மலையின் மாயமே!" என ஐயுற்றனர். நான்முகன், இந்திரன், இலக்கத் தெண்மர், பூதர்கள் யாவரும் அவ்வுருவத்தைக் கண்டு ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர். தேவர்களும் முனிவர்களும் வீரவாகுதேவரின் பேருருவத்தைக் கண்டு பூக்களைத் தூவி வணங்கி, தூது சென்று 'எங்கள் துன்பத்தை நீக்கியருளும்' என்று வேண்டிக்கொண்டார்கள்.

**ஆறுமுகக் கடவுளை வாழ்த்திப் புறப்படுதல்**

வீரவாகுதேவர், "எம்பிரானுடைய பன்னிரண்டு திருப்புயங்களும் வாழ்க; ஆறுதிருமுகங்களும் வாழ்க; பேரருளைப் பொழியும் பன்னிரண்டு திருக்கண்களும்* வாழ்க; வேற்படை வாழ்க; மற்றைப் படைக்கலங்கள் வாழ்க; தேவாதி தேவராகிய ஆறுமுகக் கடவுளின் திருவடி வாழ்க!" என்று ஆறுமுகக் கடவுளின் திருவடிகளை வாழ்த்தி வணங்கினார்.

ஆவதோர் காலை எந்தை ஆறிரு தடந்தோள் வாழ்க;
மூவிரு வதனம் வாழ்க; முழுதருள் விழிகள் வாழ்க;
தூவுடை நெடுவேல் வாழ்க; தொல்படை பிறவும் வாழ்க;
தேவர்கள் தேவன் சேயோன் திருவடி வாழ்க! என்றான்.

பிறகு முருகக்கடவுளின் பேரருளைப் பெற்றுக் கந்தமாதன மலையில் நின்ற வீரவாகுதேவர், "மிகவும் பெரிய இவ்வுருவத்

---

* சண்முகக் கடவுளுக்கு விழிகள் பதினெட்டு என்று வடமொழிக் காந்த புராணமும் குமாரக் கடவுள் மாலாமந்திரமும் கூறுகின்றன. ஆயினும், "பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளைதோன்றும்" என்று அப்பர் தேவாரத்தில் கூறப்பெற்றுள்ளது.

தோடு நாம் செல்வோமானால் உயிர்கள் அழியும்; ஆதலால், இஃது அழகன்று'' என்று எண்ணி வீரமகேந்திரம் செல்லுதற்கு ஏற்ற திருவுருவம் தாங்கி ஆகாயத்தில் கிளம்பி எழுந்து வீரமகேந்திரபுரியை நோக்கிப் புறப்பட்டார்.

திருவிருத்தம்–53
ஆகத் திருவிருத்தம்–53

——oo——

## 2. கடல் பாய் படலம்

**வீரவாகு தேவர் சென்ற தன்மை**

வீரவாகுதேவர், தாம் ஏறிநின்றமையால் கீழே அழுந்திப் போன கந்தமாதனமலையை நோக்கி, "நீ மீண்டும் எழுவாயாக" என்றார். அது முன்போல் விரைவில் எழுந்து கடற்கரையில் நின்றது. வீரவாகுதேவர் கந்தமாதனத்திலிருந்து வீரமகேந்திரத்தை நோக்கி எழுந்தார். அவர் எழுந்த காலத்தில் தோன்றிய விசைக் காற்றினால் பூமியிலுள்ள மலைகள் அவருடன் சென்றன; அண்டங்கள் திரிந்தன; உயிர்கள் யாவும் சுழன்றன; ஊழிக்காற்று ஆற்றாது ஓடியது; அக்காற்று, கதிரவனையும் அக்கினியையும் குளிரச் செய்தது. வடவாமுகாக்கினியை அவியச் செய்தது; பூமியைக் கிழித்துப் பாதலத்தைக் காட்டிற்று. அவர் மூச்சிலிருந்து பிறந்த தீ மகேந்திரத்தை அடைந்து கொளுத்தியது. விசைக்காற்றால் தள்ளப்பட்டமையின் அத்தீயைக் கடல் அவித்தது. விசைக்காற்றால் விண்மீன்கள் கடலில் உதிர்ந்தன. மறிந்து செல்லும் அக் கடலிலுள்ள மீன்கள் ஆகாயத்திற் சென்றன. வீரவாகு தேவரின் திருக்கரத்திலிருந்த இரத்தின கடகத்தின் ஒளி சென்று சக்கரவாளகிரியைச் சூழ்ந்த இருட்டை நீக்கி, அண்டச் சுவரின் பொன் ஒளியோடு மாறுபட்டது.

**இலங்கையை அடைதல்**

வீரவாகுதேவர் கடலில் பாய்ந்து சென்ற தோற்றம், சிவபெருமான் முப்புரத்தின்மீது விடுத்த நகையாகிய தீயைப்போன்றும், அவருடைய நெற்றிக் கண்ணின் தீயைப்போன்றும், அவர் விடுத்த திருமாலாகிய அம்பைப் போன்றும், முருகக் கடவுள்

சூரபன்மனை அழிக்க விடுத்த வேற்படையைப் போன்றும் இருந்தது. வீரவாகுதேவர் கடல்மீது வான்வழியே பாய்ந்து சென்று வீரமகேந்திரத்தின் வடபாலுள்ள **இலங்கை** என்னும் நகரத்திற்குச் சமீபத்தில் சென்றார். அவ்விலங்கை **யாளிமுகன்** என்னும் அசுர வீரனால் காவல் புரியப்படும் சிறப்பு வாய்ந்ததாகும்.

திருவிருத்தம்–19
ஆகத் திருவிருத்தம்–72

——oo——

## 3. வீரசிங்கன் வதைப் படலம்

**வீரசிங்கன் போருக்கு வருதல்**

வீரவாகு தேவர் செல்லும்போது, இலங்கையைக் காக்கின்ற **யாளிமுகன்** என்பவன் சூரபன்மனைக் காணும் பொருட்டு வீரமகேந்திரபுரிக்குச் சேனைகளோடு சென்றிருக்கையில் அவன் மகன் **அதிவீரன்** ஆயிரம் வெள்ளம் சேனைகளோடு அந்நகரைக் காவல் செய்துகொண்டிருந்தான். அவன் சேனைத்தலைவனாகிய **வீரசிங்கன்** என்பவன் அந்நகரின் வடக்கு வாயிலைக் காத்துக் கொண்டிருந்தான். அவன் வீரவாகு தேவர் விரைந்து செல்லுதலைக் கண்டான்; "சிறிதும் நம் காவலை எண்ணாது தனித்து வரும் இவன் யாவன்" என்று சினந்து, "இவன் உயிரை விரைந்து கவருவேன்" என்று நினைத்து விரைந்து எழுந்து ஐந்நூறு வெள்ளம் சேனைகளோடு, வான்வழிவரும் வீரவாகு தேவர்முன் போய் நின்றான்.

**வீரசிங்கன் அழிதல்**

அப்போது வீரசிங்கன் வீரவாகு தேவரை நோக்கி, "எனது காவலைக் கடந்து இதுவரையில் எவரும் வந்ததில்லை; நீ யாவன்? உனக்கு உன் உயிரிடத்தில் அன்பில்லைபோலும். ஆதலால், தனித்து வந்தாய். நான் உன்னைக் கொல்லுவேன். அதற்குமுன் நீ வந்த காரணத்தைச் சொல்வாய்" என்றான். வீரவாகு தேவர், "நான் இலங்கையைத் தாண்டிச் சென்று சூரபன்மன் வசிக்கும் வீரமகேந்திரபுரிக்குச் சென்று பின்னர்த்

திரும்பிவர நினைத்து வந்தேன். இஃது என் செயல். நீ வலி வுடையவனாய் இருந்தால் செய்யவேண்டியதைச் செய். பார்ப் போம்'' என்றார். வீரசிங்கன் அவர் கூறிய மொழியைக் கேட்டு, "இவன் அவுணர்தம் ஆணையை மதித்தானில்லை. அவன் வலி யன் போலும்; நாம் மீண்டு போதல் நன்றன்று'' என்று எண்ணி, தம் படைவீரர்களை நோக்கி, "இவனது உயிரைக் கவருங்கள்'' என்று கட்டளை யிட்டான். உடனே அவுணர்கள் வீரவாகு தேவரை வளைந்து வேல், தண்டு, இருப்புலக்கை முதலிய ஆயுதங்களைத் தாங்கிப் போர்புரிந்தனர். வீரவாகு தேவர் வாட்படை கொண்டு அவர்களைக் கொன்றார். இரத்தம் பெருகி ஓடியது. அப்போது வீரசிங்கனின் நால்வகைச் சேனை களும் அழிந்தன. நூறு வெள்ளம் அசுரர்களும் அழிந் தனர். மற்றை அசுரர்கள் மனம் நொந்து தம் உயிரை ஓம்புதல் எண்ணிப் புறங்கொடுத்து ஓடினர். அதனைக் கண்ட வீரசிங்கன் சினம் மிகுந்து வீரவாகு தேவர்மீது ஒரு சூலப்படையை எய்தான். அவர் அதனை வாட்படையினால் இரு துண்டாக்கினார். வீரசிங்கன் ஒரு சிறந்த குலிசத்தை வீசினான். அதனையும் வாளால் வெட்டி வீழ்த்தி, மீண்டும் ஆயுதம் எடுப் பதற்கு முன் அவன் எதிரே சென்று கைகளை வெட்டி முடியை அறுத்துக் கடலில் வீழ்த்தினார். பின்பு வாளை உறையுட்புகுத்தி முதலில் இங்ஙனம் ஒரு வெற்றி கொண்டு, அவ்விடம் விட்டுப் பெயர்ந்து இலங்கையிலுள்ள மூன்று சிகரங்களுள் இடையதா யுள்ள சிகரத்தில் போய்ப் பாய்ந்தார்.

திருவிருத்தம்–17
ஆகத் திருவிருத்தம்–89

——oo——

## 4. இலங்கை வீழ் படலம்

**இலங்கை கடலில் அமிழ்தல்**

வீரவாகு தேவர் இலங்கையின் மீது பாய, அதனைக் காவல் பூண்டிருந்த அதி வீரனும் மற்றை அசுரர்களும் இடியேறுண்ட நாகம்போல மெய்ந்நடுங்கி நிலை குலைந்து கலங்கி வீழ்ந்தார்கள். வீரவாகுதேவர் குதித்தமையினால், இந்திரன் வச்சிராயுதத்திற்

குப் பயந்து கடலின் மூழ்கிய மைநாகமலேபோல, இலங்கை ஆற்ருது கலகலத்துக் கடலின்கண் ஆழ்ந்தது.

ஆடல்கெழு மொய்ம்பினன் அடித்தலமது ஊன்ற
முடுதிரை வேலையிடை மூழ்கிய இலங்கை
கூடுமக வண்ணல்குலி சந்தொடர நேமி
யூடுபுக லுற்றிடுமை நாகவரை ஒக்கும்.

அதனைக் கண்டு வீரவாகு தேவர் மனமகிழ்ச்சி யுற்ருர். இலங்கை கடலில் மூழ்க அதிலிருந்த அசுரர்களும் சேர்ந்து கடலில் மூழ்கினர். கடலில் மூழ்கிய அசுரர்களைப் பெருமீன்கள் துன்புறுத்தின. அவைகளைத் தம் படைக்கலங் கொண்டு சில அசுரர்கள் போர் செய்தனர். கடலில் அமிழ்ந்த அசுரப் பெண் களின் ஒரு கையை மீன்கள் இழுக்க, மற்ருெரு கையை அசுரர் இழுக்க அவர்கள் வருந்தினர். வீரவாகு தேவர் செயலைக் கண்டு கடலினின்று எழுகின்ற அவுணர் யாவரும் அஞ்சி ஓடி மறைந்தனர். இன்னும் பற்பல நிகழ்ச்சிகள் நிகழ இலங்கை கடலில் ஆழ்ந்தது.

திருவிருத்தம்-28
ஆகத் திருவிருத்தம்-117

——oo——

## 5. அதிவீரன் வதைப் படலம்

**அதிவீரன் போருக்கு எழுதல்**

இலங்கை மாநகர் கடலிடத்து ஆழ, அதனைக் காவல்செய்து கொண்டு அரண்மனையிலிருந்த **அதிவீரன்** அறிந்து துன்பமும் நாணமும் உற்ருன். உடனே, மிக்க கோபங் கொண்டு நகைத்து, "இவ்வரிய செயல் செய்தவர் யாவர்?" என்று சிந்தித்தான். "சூரபன்மனே, அவன் இளைஞர்களோ, அன்றி அவர் மைந்தரோ இதனைச் செய்தார்! வேறு யார் இதனைச் செய்ய வல்லவர்? அவர்கள் இப்படிச் செய்வதற்கு ஒருகாரணமுமில்லை. மாயையும் இவ்வழிவு செய்வதற்கு நினையாள். இந்திரனே, மற்றைத் தேவர்களோ நம்மைக்கண்டு அஞ்சி நம் ஏவல் வழி நிற்கிருர்கள். மும்மூர்த்திகளும் இங்ஙனம் செய்யமாட்டார்கள். பின்னர் எந்தத் தேவர்கள் இதனைச் செய்ய வல்லவர்? இந்திரனே

தன்னுயிரைக் காத்துக் கொண்டு ஒளிந்து திரிகின்றான்! மற்றைத் தேவர்களோ சூரபன்மன் ஏவலின்படி ஒழுகுகின்றார்கள்! என் தந்தை என்னைக் காவல் வைத்துச் சென்றபோது, நான் இலங்கையைக் காவல் செய்வது நன்றாக இருக்கிறது! என் தந்தைக்கும் சூரபன்மனுக்கும் இது தெரிந்தால் அவர்கள் என்னைக் கொல்வார்கள். மற்றவர்கள் எல்லோரும் இகழ்வார்கள்'' என்று வருந்திக் கடலிலே ஆழ்ந்து கொண்டிருந்தவன், "நான் கடலுக்குமேலே போய் இங்ஙனம் செய்தவர் யார் என்று அறிந்து, அவரைக் கொன்று குருதியைக் குடிப்பேன்'' என்று கடலின் மேல் தன் சேனைகளை அழைத்துக்கொண்டு வந்தான்; வீரவாகு தேவரைக் கண்டு உதட்டைக் கடித்து நகைத்து, "நம் ஊரினைக் கடலில் ஆழச் செய்தவன் இங்கே நிற்கிறான்; இவனைக் கொன்று உயிரைக் குடிப்பேன்'' என்று கூறிக்கொண்டு வீரவாகு தேவருக்கு எதிரே சென்றான். கடலில் ஆழ்ந்த அசுரர்களின் செயலைக் கண்டு நின்ற வீரவாகுதேவர், அதிவீரன் எதிர்த்து வருதலைக் கண்டார்.

**அதிவீரன் அழிதல்**

அப்போது அதிவீரனுடன் வந்த அசுரர்கள் வீரவாகு தேவரைச் சூழ்ந்து போர் செய்தனர். வீரவாகுதேவர் தம் வாட்படையைக் கையில் உருவிக்கொண்டு அவர்களை வெட்டி வீழ்த்தினர். அசுரர்களின் தலைகள் குருதிப் பெருக்கில் மிதந்தன. பிணங்கள் மலைபோல வளர்ந்தன. அதிவீரன் கோபத்துடன் வீரவாகுதேவரை எதிர்த்து அவர்மேல் ஒரு வேற்படையை வீசினான். வீரவாகுதேவர் அதனை இருதுண்டங்களாக வெட்டினார். அதிவீரன் ஒரு தண்டாயுதத்தை எடுத்து வீரவாகு தேவரது மார்பின்மீது வீச, அஃது அவர் மார்பில் பட்டுப் பொடியாகியது. அதிவீரன் ஒரு முத்தலைச் சூலத்தை எடுத்து அவருடைய மார்பில் செலுத்தினான். வீரவாகுதேவர் அதனைக் கையால் பிடித்து ஒடித்தார். அதிவீரன் வாட்படையைச் சுழற்றி, "இந்த வாட்படை நான்முகனால் அளிக்கப்பட்டது. எவராலும் வெல்ல முடியாதது; நீ இதனால் இறப்பாய்'' என்று பெருமை பேசி, வீரவாகுதேவர்முன் வந்தான். வீரவாகுதேவர், "உன்னுடைய வலிமையும் ஆண்மையும் நன்று நன்று! நீ

நம்மை வென்றால் உன்னை யாவரும் வியப்பர்; வெற்றியுடைய வீரர் தம்மைத்தாமே புகழமாட்டார்; நீ விரைந்து வருக'' என்றார். அதிவீரன் விரைந்து வந்து எதிர்த்தான். வீரவாகு தேவரும் எதிர்த்தார். இருவரும் நெடுநேரம் வாட்போரில் கற்ற வன்மையைக் காட்டிப் போர்புரிகையில், வீரவாகுதேவர் சமயம் பார்த்து இடையில் புகுந்து அதிவீரனுடைய கால்களையும், கைகளையும், முடியையும், மார்பையும் தம் வாட்படையினால் வெட்டி வீழ்த்தினார். இயமன் வந்து அவன் உயிரைக் கவர்ந்து சென்றான்.

திருவிருத்தம்–37
ஆகத் திருவிருத்தம்–154

——oo——

## 6. மகேந்திரஞ்செல் படலம்

**வீரவாகுதேவர் வடக்கு வாயிலைக் காணுதல்**

வீரவாகுதேவர் அதிவீரனைக் கொன்றதும் போரை நிறுத்தித் தன் உடைவாளை உறையுள் செலுத்தினார்; வீரமகேந்திரத்திற்குச் செல்ல எண்ணி, இலங்கையைவிட்டு எழுந்தார். கடலில் ஆழ்ந்த இலங்கை விரைவில் மீண்டெழுந்தது. வீரவாகு தேவர், ஆயிரம் யோசனை வானவழியில் சென்று மகேந்திரபுரியின் பெரிய மதில்களையும் உயர்ந்த கோபுரங்களையும் கூர்ந்து நோக்கினார். மகேந்திரபுரியின் வடதிசை வாயிலின்கண் உள்ள ஒரு கோபுரத்துத் திண்ணையில் **கோரன், அதிகோரன்** என்னும் கொடிய அசுரவீரர் இருவர் இருந்து காவல் செய்துவந்தனர். ஆயிரம் வெள்ளம் யானைகளும், ஆயிரம் வெள்ளம் தேர்களும், இரண்டாயிரம் வெள்ளம் குதிரைகளும், இரண்டாயிரம் வெள்ளம் காலாட் படைகளும் கொண்ட நால்வகைச் சேனைகளும் அங்கு இருந்தன. அவற்றைக் கண்டு வீரவாகுதேவர் வியந்து பின்வருமாறு தனக்குள் சொல்லுவாரானார் :

4

**வடக்கு வாயிலின் சேனைகளைக் கண்டு பலவாறு எண்ணுதல்**

"இவ் வடக்கு வாயிலிலுள்ள படைகளுடன் போர் செய்தால் அப்படைகளைக் கொல்ல இப்பகல் முழுவதும் கழியும்.

பிறகு நால்வகைச் சேனைகளும் வரும். அவற்றை முருகவேள் திருவருளால் தமியேன் அழித்து நிற்பினும், இந்நகரிலுள்ள சேனைகளெல்லாம் அழிவு எய்த அளப்பிலாக் காலஞ் செல்லும். அவுணர்களைக் கொல்வது எளிதா? யான் அவுணப்படை அடங்கலும் அழிப்பினும், அதன்பின் சூரபன்மன் தன் புதல்வரையும் துணையாயுள்ள பிறரையும் விடுப்பான். அவர்களை வெல்லுதல் மிக அரிது. ஆறுமுகக் கடவுளின் திருவருள் வலிகொண்டு வெல்லுவேன். எனினும், எவராலும் வெல்லுதற்கரிய சூரபன்மன் பின்னர்வந்து எதிர்ப்பான். அவனோ சிவபெருமானால் அளிக்கப் பெற்ற வரங்களினால் இறக்கமாட்டான். அவனை நான்முகனாலும், திருமாலாலும் வெல்ல முடியாது. அவனை, முருகப்பெருமான் தவிர வேறு யாரால் கொல்ல முடியும்? ஆதலால், யான் சமர் புரிந்து வெற்றிகொள்ளாது வறிதே திரும்புவது பழிப்புக்கிடமாகும். தூது வந்த நான் இவர்களோடு போர் செய்தல் முறையன்று. அஃது எம்பெருமான் திருவுள்ளக் கருத்துமன்று. ஆதலால், நான் போர்புரியாது சூரபன்மனிடம் செல்வதே முறை" என்று வீரவாகுதேவர் கருதினார். இவ்வாறு கருதிய வீரவாகுதேவர் வடக்கு வாயிலில் அமைந்த சேனைத் தொகுதியையும், காவல் வன்மையையும் கண்டு, "இவ்வழியால் உள்ளே செல்லுதல் அரிது; ஆதலால், கீழ்த்திசை வாயிலை அடைவேன்" என்று எண்ணி அவ்வடக்கு வாசலில் செல்லாது கீழ்த்திசை வாயிலை அடைந்தார்.

**வீரவாகுதேவர் கிழக்கு வாயிலைக் காணுதல்**

கிழக்கு வாயிலில் **மகிடாட்சன்** (மேதிக்கண்ணன்) **வீரபானு** என்னும் இரண்டு அசுரத் தலைவர்கள் வாட்படை ஏந்திய கையினராய்க் காவல்செய்து நின்றனர். அவர்களுக்குத் துணையாக நால்வகைச் சேனைகள் நின்றன. அச்சேனை வெள்ளத்தை வீரவாகுதேவர் கண்டு ஆச்சரியமடைந்து, "இவ்வாயிலையும் கடந்து செல்லுதல் அரிது" என்று எண்ணினார். பிறகு அவர் அவ்விடத்தை விட்டுத் தெற்கு வாயிலைக் காணச் சென்றார்.

திருவிருத்தம்–28
ஆகத் திருவிருத்தம்–182

—— oo ——

## 7. கயமுகன் வதைப் படலம்

### கயமுகன் இயல்பு

வீரமகேந்திரபுரியின் தெற்கு வாயிலைக் **கயமுகன்** என்னும் அசுரன் காவல்புரிந்துகொண்டிருந்தான். அவன் ஆயிரம் யானை முகங்களைக் கொண்டவன்; ஆயிரம் துதிக்கைகளும், இரண்டாயிரம் புயங்களும் உடையவன்; கோபங்கொண்ட கொடிய மனத்தை உடையவன்; இயமனுக்கும் ஒரு இயமன் போன்றவன்; தன்னிடம் போர் செய்யப் பகைவர்களில்லையே என்று ஏங்குபவன்; போர்புரிதலையே மிகுந்த விருப்பமாக உடையவன்; மிகப்பெரிய பாவங்களைச் செய்யும் தன்மை வாய்ந்தவன்! யானை, கரடி, புலி, சிங்கம், யாளி முதலிய ஐயாயிரம் மிருகங்களை உண்டு இரத்தம் சிந்தும் வாயினன். அவன், ஆகாயத்தில் செல்லும் வீரவாகுதேவரைக் கண்டு சினங்கொண்டான்.

### கயமுகன் வீரவாகுதேவரை அதட்டிப் பேசுதல்

கயமுகன் வீரவாகுதேவர் முன் சென்று, "நீ நம்மவர் பலருடைய காவலை விலகி இங்கு வந்தாய்; மாயங்களைக் கற்றாய் போலும்!" இதனை எளிய தேவர்கள் இருக்கும் ஊர் என்று எண்ணி விட்டாய். திரும்பிப் போகாது விரைவில் மாளப் போகிறாய். சீறுகின்ற சிங்கம் இருக்கும் குகையில் ஒரு பெண் மான் வருதலையொத்து நீ என்னிடம் வந்திருக்கிறாய். நாகரிகம் அற்ற தேவர்களில் நீ புதியவன் போலும். ஆதலால்தான் அஞ்சாது வாட்படையேந்தி வந்திருக்கிறாய்; சிவனோ, திருமாலோ, பிரமனோ, இந்திரனோ, உன்னை இங்கே அனுப்பினவர் யாவர்? இந்நகரத்தைச் சுற்றா நின்றாய்; ஒற்றுவனாய் வந்தாய் போலும். உன்னை அப்படி அனுப்பினவர் யாவர்? வந்த காரணம் என்ன? இந்திரனுடைய ஆளாயிருந்து தேவர்கள் செயலை அறிந்துபோக வந்தாய் போலும். பெருநெருப்பு இருக்குமிடத்தில் பஞ்சு காற்றினால் தள்ளப்பட்டு வந்துவிழுந்ததைப் போல் ஊழ்வினை உன்னை என்னிடம் கொண்டுவந்து தள்ளியிருக்கிறது. இன்னும் அஞ்சுகின்றாயில்லை. என்னையும் மதிக்கின்றாயில்லை. நீ எனக்கு முன்னே நில்லடா! எங்கடா செல்கிறாய்?" என்று அதட்டிப் பேசி ஆரவாரித்தான்.

**கயமுகன் அழிவு**

வீரவாகுதேவர் கயமுகன் கூறியவைகளைக்கேட்டு நகைத்து, "நீ விரைவில் இறப்பதற்காக என்முன் வந்தாய் போலும்; வா வா" என்றார். அப்பொழுது கயமுகன் ஒரு பெரிய மலையைப் பறித்து அவர்மேல் ஆர்த்து வீசினான். அம்மலை அவர் புயத்தின் மேல் பட்டுத் துகளாய்ப் போயிற்று. கயமுகன், வீரவாகுதேவரின் வலிமையைக் கண்டு சீறிப் பின்னும், ஆயிரம் குன்றுகளைப் பறித்து அவர்மீது மழைபோல் வீசினான். அம்மலைகள் பம்பரம் போல் சுழன்றுகொண்டு வந்து கற்றூணில் பட்ட மட்பாண்டங்களைப்போல் உடைந்து சிதறின. கயமுகன் ஒரு தண்டாயுதத்தை எடுத்து அவர்மேல் வீசினான். அவர் வாளினால் அதனைத் துண்டுகளாக்கிக் கயமுகனுக்கு எதிரே சென்றார். அவன் ஆயிரம் மரங்களைப் பிடுங்கி வீசினான். அவர் அவற்றை விரைந்து வெட்டி வீழ்த்தினார். கயமுகன் மேலும் பல மலைகளைப் பிடுங்கினான். வீரவாகுதேவர் அதனைக் கண்டு வாட் படையினால் அவனுடைய ஆயிரம் துதிக்கைகளை அறுத்தார். கயமுகன் வருந்தி, "இவனைப் பிடித்து உண்பேன்" என்று எண்ணி இரண்டாயிரம் கைகளையும் நீட்டினான். வீரவாகுதேவர் அவன் நீட்டிய கைகளில் முன்வந்த ஆயிரங் கைகளையும் வாட் படையினால் வெட்டித் தள்ளினார். அவன் மற்றை ஆயிரங் கைகளினால் வீரவாகுதேவரின் மார்பில் குத்தினான். வீரவாகுதேவர் மிகக் கோபங்கொண்டு வாட்படையினால் அக் கைகள் யாவற்றையும் வெட்டி வீழ்த்தினார். பிறகு, மூவாயிரங் கைகளை இழந்து நின்ற கயமுகன் மற்போர் செய்ய நினைத்துத் தோள்களினால் வீரவாகுதேவருடைய தோள்களைத் தாக்கி ஆரவாரம் செய்தான். வீரவாகுதேவர் அதனைக்கண்டு, "இனி இவனோடு வாட்போர் செய்யலாகாது" என்று கருதி, வாட் படையை உறையினுள் செலுத்தி, அவனுடைய மார்பில் ஒரு காலால் உதைத்துத் தள்ளினார். கயமுகன் அரற்றி வீழ்ந்து இறந்தான். அப்போது பிளந்த மார்பினின்றும் ஓடிய குருதி வெள்ளம் கடலில் பாய்ந்தது.

**அணு உருவில் வீரவாகுதேவர்**

பெரும் போரைக்கண்ட பல அசுரர்கள், "நம்மவர்களாகிய அசுரர்களே தங்களுக்குள் பகைகொண்டு போர் புரிகிறார்கள்

போலும்! இவர்கள் இப்படிப் போர்புரியக் காரணம் யாதென அறிவோம்'' என்று எண்ணி அங்குப் பலவழிகளிலும் வந்தார் கள். வீரவாகுதேவர் அசுரர்கள் வருகையைப் பார்த்து, "இவர்கள் என் செயலைக் கண்டால் என்னேடு பெரும் போர் புரிவர். அப்போர் இன்றேடு முடியாது. முருகக் கடவுள் பணித்தருளிய திருவாக்கை மறந்து இவர்களோடு போர்செய்து நிற்பது சரியன்று. சூரபன்மன் நகரத்துள் விரைந்து செல் வேன். அங்கு அசுரர்கள் காவல்புரிந்து வருவதால் இவ்வடிவத் தோடு செல்லுதல் முடியாது. ஆதலால், முருகக் கடவுளின் திருவருளால் வேற்றுருக் கொண்டு கீழ்த்திசை வாயிலின் வழியே விரைந்து மகேந்திரபுரியினுள் செல்வேன்'' என்று எண்ணினர்; உடனே சண்முகக் கடவுளைத் தியானித்து யாவரும் காணுதற்கரிய ஓர் அணுவுருவம் கொண்டு கயமுகனைக் கொன்ற போர்க்களத்தை விட்டு ஆகாய வழியாகச் சென்று மகேந்திரபுரியின் கிழக்கு வாயிலில் இருக்கும் கோபுரத்தின்மீது போய் அமர்ந்திருந்தார்.

திருவிருத்தம்-55

ஆகத் திருவிருத்தம்-237

——oo——

## 8. நகர்புகு படலம்

**வீரமகேந்திரத்தின் சிறப்பைக் காணுதல்**

அணுவுருக்கொண்டு கோபுரத்தின்மீது அமர்ந்திருந்த வீர வாகுதேவர், வீரமகேந்திரத்தின் சிறப்புக்களைக் கண்டார். அங்கு நின்ற எண்ணிறந்த நால்வகைச் சேனை வெள்ளங்களை நோக்கி, இந்த வாயிலில், 'ஒரு லட்சம் சேனைகள் நிற்கும்' என்று தேவ குருவாகிய வியாழபகவான் சொன்னர். அது பொய். சுக்கிரனுக் குக் கண் இல்லாதது போல, வியாழனுக்கு அறிவில்லைபோலும்! ஆதலால்தான் அவர் காதில் கேட்டதைக் கொண்டு அவ் வாறு கூறியுள்ளார். சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங் களிலுமுள்ள மலைகளினும் மிக்கன அவன் தேர்கள்; கடல்களி னும் மிக்கன யானைகள்; அக்கடல் அலைகளினும் மிக்கன குதிரைகள்; கரைகளிலுள்ள மணல்களினும் மிக்கன காலாட்

படைகள். சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள வளங்களை யெல்லாம் எண்பதினுயிரம் யோசனை எல்லையினை யுடைய இப்பரப்பினுள் கொணர்ந்து சேர்த்தான். அவற்றை நாம் கண்டோம். ஆனுல் அறம், வாய்மை, இரக்கம் ஆகிய இவற்றைமட்டும் கண்டிலேம். இவ்வளவு வளம் மிகுந்த இம் மகேந்திரபுரியை உண்டாக்க ஒரு நான்முகனுல் முடியுமா? ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள பிரமர்கள் சேர்ந்து வந்து இந்நகரை உண்டாக்கினர் போலும். சுவர்க்கம், மற்றை மேலுலகங்கள், பூமி, பாதலம் முதலிய இடங்களை, "போகம் அனுபவிப்பதற்குரிய இடங்கள்" என்று அறிவுடையோர் கூறுவர். அது, கடலை அறியாதவர் சிறு குளத்தைப் புகழ்தல் போன்றதாகும். மகேந்திரபுரிக்கு இணையானதோர் நகரம் எங்கும் இல்லை.

"பானுகோபன் சுவர்க்கத்தை எரித்தான்" என்று கூறுவது பொய்; சுவர்க்கம் தன்னைக் காட்டிலும் சிறந்து விளங்கும் மகேந்திரபுரியைக் கண்டு சகித்தற்கு முடியாத நாணம் சுடத் தானே தேய்ந்து அழிந்தது போலும்! இங்கு உள்ள மாளிகைகள் எல்லாம் நவமணிகளால் செய்யப்பெற்று விளங்குவன. மாணிக்க மாளிகைகளின் மேலே பெண்கள் அமர்ந்து கள்ளைப் பருகுவது, செந்தாமரைப் பொகுட்டின்மீது வண்டுகள் தேனைப் பருகுவதை ஒத்திருக்கின்றது. சிறந்த அரிசியை வருணன் களைந்து கொடுக்க அவற்றை அக்கினிதேவன் ஊன்களோடு கலந்து சமைக்க, அரம்பையர்கள் பரிமாற நெய்கலந்த அவ்வுணவுகளை அசுரர்கள் தம் மனைவியர்களோடு உண்டு மகிழ்வார்கள். தலைவன் தலைவியர்கள் இருபாலரும் இன்பம் துய்ப்பார்கள். மன்மதனுடைய உலகம் இதுவே. சூரபன்மனின் ஆணையால் வரும் தென்றல், கடலில் அளாவிச் சோலையில் உலாவி மாளிகைதோறும் மெல்ல மெல்ல அசைந்து செல்லும். மாளிகைகளின் உச்சியிலிருக்கும் பெண்கள், கோள்களையும் இடியையும் பிடித்து அம்மனையும் பந்துமாக எறிந்து விளையாடுவார்கள்; சூரியனின் தேரிலுள்ள குதிரைகளைப் பிடித்துத் தம் குழந்தைகளுக்கு விளையாடக் கொடுப்பார்கள். சில பெண்கள் தம் புதல்வர்களுக்கு இடியையும் மின்னலையும் பிடித்துக் கிண்கிணி மாலையாகக் கட்டியும், மேகத்தைப்பிடித்துச் சிற்றுடையாக உடுத்தியும் மகிழ்வர்.

தெய்வப்பெண்கள், அசுரப் பெண்களின் கால்களைத் தோழியர் போல் வருடி ஏவல் செய்வார்கள். இவற்றை யெல்லாம் ஆராயும் பொழுது உலகத்தில் வேண்டியவற்றை வேண்டியபடி கொடுக்கவல்லது தவமே ஆகுமென் றறியலாம்.

ஐந்தருக்களும், சிந்தாமணியும், காமதேனுவும், பதும நிதியும், பிறவும் ஆண்களும் பெண்களும் இருக்கும் இடந் தோறும் சென்று அவரவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்துச் செல்லும். வாயுதேவன் மாடங்களைப் பெருக்குவான். வருணன் நறுமணங் கமழும் நீரைத் தெளிப்பான். கதிரவன் அதனை உலர்த்துவான். அங்கு அவுணர்கள் மிகவிரும்பி இருப்பார்கள். திருமால் பாற்கடலில் இலக்குமியைத் தழுவிக் கொண்டு துயில்கொளல்போலப் பளிங்கு மாடங்கள்மீது சூல் கொண்ட மேகம் மின்னலொடு வந்து உறங்கும். பற்று நீங்கிய தவத்தினராயினும், மகேந்திரபுரியின் செல்வங்களை ஒருவர் சொல்லக் கேட்டால் தாமும் அசுரராகவேண்டும் என்றே இன்னும் தவம் செய்வர். கங்கையும் நன்னீர்க் கடலும், நகரத்தின் மக்கள் நீராடவும் குடிக்கவும் வேண்டி மாளிகைகளிலும், வீதிகளிலும், சோலைகளிலும், வாவிகளாகவும் பொய்கைகளாகவும் திகழும். முதியவர்களையும் நோயாளிகளையும் வறியவர்களையும் இந்நகரில் காண இயலாது. கருப்பஞ்சாற்றுக் கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், மதுக்கடல், பாற்கடல் முதலியனவும் சூரபன்மன் ஆணையினால் இந்நகரின் ஒவ்வொரு வீட்டிலும் பெருங்குளங்களாய்த் தனித்தனியே வந்திருக்கும். ஆகாயத்தில் மாலைக்காலத்தில் சந்திரன் வந்து உதித்தபின் விண்மீன்கள் ஒவ்வொன்ருய்த் தோன்றுதல் போல, ஆசிரியர்கள் கல்லூரிக்கு வந்தபிறகு, கல்வி கற்கும் சிறுவர்கள் தனித்தனியே வந்தடைந்து கற்கத் தகுந்த நூல்களைக் கற்பார்கள்.

'பூமிதேவி செய்த தவப்பயன்' என்று புகழத்தக்க இம் மகேந்திரபுரியின் மாண்பைக் கண்டுகளிக்க அளவற்ற கண்களைப் படைத்தவர்களுக்கன்றி, ஆயிரம் கண்களை உடைய இந்திரனுக்காயினும், இரண்டு கண்களையுடைய மற்றையோர்க்காயினும் எளிதாமோ? ஒரு நாவினால் அவற்றின் சிறப்பினைச் சொல்ல முடியுமா? ஆயிரங் கோடி நாக்களைப் பெற்றவர்களே

அச்சிறப்பினைச் சொல்ல வல்லவர். அப்படிச் சொன்னால் உடல் முழுவதும் செவி உள்ளவரே அன்றி மற்றவர்களால் அவற்றை எங்ஙனம் கேட்க முடியும்? ஆயிரம் பதினாயிரங்கோடி நாக்குகள், அளவில்லாத ஆயிரம் கண்கள், ஆயிரமாயிரம் செவிகள், ஆயிரம் மனங்கள் ஆகிய இவற்றைக் கொண்டவர்களே மகேந்திரபுரியின் வளங்களைக் கண்டு நினைத்துச் சொல்லத் தக்கவர்கள்.

ஆயி ரம்பதி னாயிரங் கோடிநா அளவில்
ஆயி ரம்விழி ஆயிரம் ஆயிரஞ் செவிகள்
ஆயி ரம்புந்தி கொண்டுளார்க்கு அல்லதிவ் வகன்சீர்
ஆயி ரம்யுகங் கண்டுதேர்ந் துரைப்பினும் அடங்கா.

இத்தகைய வளங்களைத் தம் அசுரர்கள் ஐம்புலன்களாலும் அனுபவிக்கவேண்டித் தவஞ்செய்து பத்து, நூறு, ஆயிரம், கோடி என்னும் தொகைகளைக் கொண்ட தலைகளைப் பெற்றார்கள் போலும்.

**வீரவாகு தேவர் தன்னுள்ளே எண்ணுதல்**

முருகக்கடவுளின் திருவருள் வலியால் இந்நகரின் வளங்களையெல்லாம் யான் அளவற்ற உருவங்களை எடுத்துக் காணுவேன். என் உருவத்தைப் பகைவர்களுக்கு இப்போது காட்டுதல் தகாது என்று மறைத்தேன். இப் பெருவளங்கள் எல்லையின்றி உள்ளன. இவற்றை மனத்தால் நினைப்பினும் பற்பல நாள் செல்லும். இவை முழுவதையும் மிக நுண்ணிதாய் ஆராய்ந்து பார்க்க நினைத்தால் இவ்வொருபொழுதில் முடியா. "எம் பெருமான் பணித்த ஏவலைச் செய்யாது இந்நகர் வளங்களைப் பார்த்துக்கொண்டிருந்து யான் காலம் தாழ்த்துவது முறை ஆகாது" என்று வீரவாகு தேவர் நினைத்தார்.

**வீரவாகுதேவர் மகேந்திரபுரிக்குள் நுழைதல்**

பின்பு வீரவாகு தேவர் கீழ்த்திசைக் கோபுரச் சிரத்தினின்று மகேந்திரபுரியின் வளங்கள் சிலவற்றைக் கண்டு, சூரபன்மன் உறையும் இடத்தை அடையும் பொருட்டு அங்கு நின்று நகரத்தின் நடுவே ஆகாய வழியாகச் சென்றார். அப்

போது பானுகோபனின் கோயிலை அடைந்து அதனைக் கண்டு ஆச்சரியப்பட்டார். பின் அதனை நீங்கி, அக்கினிமுகன் கோயிலையும், அதன்பின் இரணியன் கோயிலையும், அதன்பின் வச்சிரவாகு கோயிலையும், அதன்பின் மூவாயிரவர் கோயிலையுங் கடந்து, தலைமை அமைச்சனாகிய **தருமகோபன்** மாளிகைச் சிகரத்தின் மீது தங்கினார்; சயந்தனும் தேவர்களும் அசுரர்கள் சூழ வருத்தமுற்றிருக்கின்ற சிறைக்கூடத்தை உற்று நோக்கிக் கண்டார்.

திருவிருத்தம்-99
ஆகத் திருவிருத்தம்-336

——oo——

## 9. சயந்தன் புலம்புறு படலம்

**சயந்தன் வருந்துதல்**

பானுகோபனால் பிடிக்கப்பட்டுத் தேவர்களோடு சிறையிடப்பட்டிருந்த இந்திர குமாரனாகிய சயந்தன், விற்பயிற்சியினால் தழும்புஅடைந்திருக்கும் கைகளைப்போல,இரண்டு கால்களிலும் பற்பல காலம் விலங்கு பூண்ட காரணத்தால் தழும்படைந்திருந்தான். மானம், வலி, நாணம் முதலியவை நீங்க, பழியாகிய நெருப்புச் சூழ, பெருமூச்சாகிய வாயுநின்று உயிரை அலைக்க, மிக வருந்தித் துன்பக் கடலில் சயந்தன் ஆழ்ந்தான். அவன் துன்பம் தாங்காது வலிய உயிரை விடுவான். ஆனால் அமுதம் உண்டதால் இறக்க முடியாது வருந்துவான். சிறையில் உழன்ற நூற்றெட்டு யுகங்களில் ஒரு கணப்பொழுதாவது துயின்றிருப்பானாகில், அவன் துயர் சிறிதாவது நீங்கியிருக்கும். என்றும் துயிலாத இயல்பு பெற்ற தேவனாதலால், அவன் நீங்காத துன்பத்தில் அமிழ்ந்தான். மரகதத்தினால் செய்த ஓவியம் அழுக்கடைந்தாற்போலச் சயந்தன் ஆனான். நாடோறும் சயந்தன் அசுரர்களைக் கண்டு பயந்து தன் அழகிழந்து உய்யும் வழி தெரியாது தவிப்பான்; தேவலோகத்துப் பலவித இன்ப வாழ்வை எண்ணி வருந்துவான்; தான் முன்போல் சுகமாய் வாழ்வது எக்காலம் என்று ஏங்குவான்; தாய் தந்தையர்களை நினைத்து வருந்துவான்; 'என் தந்தை சூரபன்மனின் கொடுமை

களைச் சிவபெருமானுக்கு விண்ணப்பிக்கும்படி திருக்கயிலாய மலைக்குச் சென்றாரோ' என்று கலங்குவான்.

"பொன்னுலகம் எரிந்ததையும், நான் சிறைப்பட்டதையும் என் தாய் தந்தையர் அறிந்து எங்ஙனம் கலங்குகிறார்களோ!" என்று இரங்குவான்; "மாயங்களில் வல்ல அசுரர்கள் அவர்களைத் தேடிப் பிடித்துக் கொண்டு என்முன் நிறுத்தினால் நான் உயிரோடு இருப்பேனோ?" என்பான்; "என் தாய் தந்தையர் உயிரோடு இருப்பதாக நான் கேள்வியுற்றேனில்லை; அவர்கள் ஆற்றாத துன்பத்தின் காரணத்தால் சிவபெருமானை நினைத்துத் தவம் செய்து முத்தி அடைந்தார்களோ? அறியேன்" என்பான்; "பானுகோபனோடு யுத்தம் செய்தபொழுது கோடுகள் ஒடியப் பெற்று வீழ்ந்த ஐராவதம் எங்குச் சென்றதோ?" என்பான்; "சிவபெருமான் சூரபன்மனுக்கு அழியாத வரத்தைக் கொடுத்தருளியதால் அவன் இறக்கமாட்டான்; நம்மையும் விடுதலை செய்யமாட்டான்; இச்சிறை எப்போது நீங்கும்?" என்பான்; "என் தாய் தந்தையர்களைப் போல நானும் பொன்னுலகத்தை விட்டு ஓடிப்போகாமல் அசுரர்களிடம் அகப்பட்டுச் சிறையில் வருந்துகிறேனே" என்பான். "ஐயகோ! இச்சிறையில் இருத்தற்கு ஆற்றேன், ஆற்றேன்" என்பான்; "அறம் அழிந்ததோ? பாவம் உயர்ந்ததோ? தவப்பயன் தேய்ந்து போய் விட்டதோ? நன்னெறி குறைந்ததோ? கலிகாலம் வந்துவிட்டதோ? வேதம் அழிந்ததோ? சிவன் இல்லையோ?" என்பான்; "கருணையே வடிவாகக் கொண்டு திருவிளையாடல் புரிகின்ற சிவபெருமானன்றி வேறு யார் என்குறையை நினைத்து இரங்குவார்" என்பான். சயந்தன் இவ்வாறு அளவிறந்த எண்ணங்களை எண்ணி எண்ணித் துன்புற்று வெய்துயிர்த்து விம்மினான்; இவ்வண்ணமே சிறையில் மற்றைத் தேவர்களும் தன்போல் பலவாறு துன்படைந்து தளர்தலைக்கண்டு வருந்தினான்.

**காவலர்கள் பயமுறுத்துதல்**

வீரவாகு தேவர் சென்ற அச்சமயத்தில் சிறைக்களத்தைக் காவல்புரிந்து வந்த **கண்டகன், உதாவகன், கராளன், மாபலன், சண்டகன், நிசங்கன், சங்கன்** முதலிய அசுரர்கள் கூடிச் சயந்தனையும் தேவர்களையும் கோபித்து, "இந்திரனும் இந்தி

ராணியும் எங்குச் சென்றார்கள் ? சொல்வீர்களாக; இல்லையேல் உங்களைக் கொலைபுரிவோம் ; உண்மையைச் சொல்லுங்கள் " என்று அதட்டினார்கள். அதனைக்கேட்ட சயந்தன் அவர்களை நோக்கி, "எம் தாய் தந்தையர்கள் பொன் உலகத்தைவிட்டு நீங்கி ஓடியதைக் கண்டேன்; பின்பு அவர்கள் எங்குச் சென்றார்கள் என்பதை அறியேன் " என்றான். தேவர்கள், "அவர்கள் சென்ற இடத்தை நாங்கள் அறியோம் " என்றார்கள். அப்பொழுது அசுரர்கள், "இத் தேவர்களெல்லாம் வஞ்சகத்தால் ஒன்றுகூடி ஒரு படித்தாய்ப் பொய்யையே பேசுகின்றனர். இவர்கள் யாது செய்தால் உண்மை மொழி புகலுவர் " என்று மிகக் கோபம் கொண்டு சயந்தனையும் தேவர்களையும் பலவாறு துன்புறுத்துவார்கள் ; பலவாறு தீய சொற்களைச் சொல்லிப் பழிப்பார்கள்; காதிலே தோமரத்தைச் சொருகிக் கடைவார்கள்; உடலைப் பலவாறு சேதிப்பார்கள்; துண்டப்படுத்திய உறுப்புக்களெல்லாம் உடலில் வந்து கூடுவதைக் கண்டு கோபித்து, வாட்படையினால் மார்பில் குத்திக் குடைவார்கள் ; தண்டத்தினால் தலை உடையும்படி மோதுவார்கள். அதனால் சயந்தனும் தேவர்களும் ஆற்றல் குறைந்து தளர்ந்து வாய்விட்டு ஓ ! ஓ ! என்று கதறுவார்கள்.

**தேவர்களின் வல்லமையை உணர்தல்**

சீற்றமும் வலிமையும் உடைய அவுணர்கள் பல ஆயுதங்களினால் துண்டித்தல் குத்துதல் முதலியன செய்தபோது, இயமன் கையில் அகப்பட்டுத் துன்பமுறும் பாவிகளைப்போல, மிகுந்த துன்பத்தைச் சயந்தன் அனுபவித்தானே அன்றி இறந்திலன் ; தழும்பு பெற்றிலன் ; தேவர்களும் இறந்திலர் ; தழும்பு அடைந்திலர். "சயந்தன் தேவர்களோடு சிறையில் புகுந்தான். இந்திரன் செல்வங்களை யெல்லாம் விட்டுவிட்டுக் காட்டில் ஓடி ஒளிந்தான். மற்றைத் தேவர்களும் மனக்கவலையடைந்தார்கள். தேவர் உலகம் அழிந்தது. ஆதலால், "சிவபெருமான் அளித்தருளும் மோட்சம் ஒன்றே அன்றித் துன்பம் இல்லாத செல்வம் ஒன்று உண்டோ ?"

வாள், தோமரம் வேல், தண்டம் முதலிய படைக்கலங்கள் எல்லாம் முறிவெய்தவும், காவலாளர் கரங்களின் திறம்

குறையவும் நொந்து, சயந்தன் முதலிய தேவர்களைத் தண்டிப்பதை விடுத்து, "இவர்கள் புண்ணியப்பகுதியின் நாளெல்லாம் கழிந்தபின்னர் இறப்பரே அல்லாமல், மற்றோர் வினையினால் இடையில் அழிபவர் அல்லர்; அமிழ்தம் உண்டவர்; தவத்தான் மிக்கவர்; வருந்தார். நம் தண்டனைகளுக்குப் பயந்து ஒன்றையும் கூறினார் அல்லர்" என்று பலவாறு கூறி, அவுணர்கள் அற்புதம் அடைந்தனர். பிறகு, இவர்களை வீணாகத் தண்டிப்பதில் பயனில்லை என்று அவர்களைப் பாதுகாக்கும் தொழிலில் அவுணர்கள் ஈடுபட்டார்கள்.

**சயந்தன் இறைவனை நோக்கிப் புலம்பல்**

சயந்தன் சிவபெருமானை நோக்கிப் பலவாறு புலம்பலானான்: "வழிபடுபவர்களின் பாவங்களைப் போக்குபவரே! தேவர்களின் சிந்தனைக்கும் எட்டாத சிவனே! செழுஞ்சுடரே! இந்தப் பிறப்பில் இடர்ப்படச் செய்தீர். தேவரீர் தந்திரத்தை யார் கடந்தவர்? யானைக்கும், கரிக்குருவிக்கும், நாரைக்கும், பாம்புக்கும், சிலந்திப் பூச்சிக்கும், அவற்றினும் தாழ்ந்த மற்றை உயிர்களுக்கும் முன்னாளில் பேரருளைச் செய்தீர். எனக்கு ஏன் இன்னும் அருள்புரிகின்றிலீர்? நாரணற்கும் நான்முகற்கும் நாடுதற்கரிய முதல்வரே! அனைத்துயிர்க்கும் துணைவா! அடியேன் உயிரைப்பாதுகாக்க வந்தருளும்! வந்தருளும்! முன்னாளில் தேவர்களை வருத்தும்படி இயமனைப்போல வந்த அந்தகாசுரன் வலிமை இழக்க, அவனுடைய மார்பில் முத்தலைச் சூலத்தால் குற்றி அழித்தவர் நீர் அல்லவா? எமக்கு ஏன் இரங்கலீர்? இளம் பிறை அணிந்த தலைவரே! அன்புடையவர்களுக்கு அருள் செய்கின்றீர். அடியேனிடத்துப் பத்திநெறி சிறிதும் இல்லை; எவ்வாறு அருள் செய்வீர்? நல்லருள் பொருந்திய உம்மிடத்தில் அன்பில்லாத அடியவன் மிக வருந்திக் கூறியது எனது அறியாமைத் தன்மையேயாகும். சிவனே! சிவனே! நின் பொற்பாதமே வேண்டுவன் யான்.

வந்திப்பவர் பவங்கள் மாற்றுவோய்! எத்தேவர்
சிந்தைக்கும் எட்டாச் சிவனே! செழுஞ்சுடரே!
இந்தப் பிறவி இடருழப்பச் செய்தனையோ
வந்தித்த நின்புணர்ப்பை யாரே கடந்தாரே?

கைந்நாகத் துக்குங் கயவாய்க்கும் நாரைக்கும்
பைந்நாகத் துக்கும் படருஞ் சிலந்திக்கும்
பின்னாகிய வுயிர்க்கும் பேரருள்முன் செய்தனையால்
என்னா யகனே ! எமக்கேன் அருளாயே?

சீற்றம் விளைத்துமுனந் தேவர் தொகைஅலைப்பான்
கூற்ற மெனவே குறுகுற்ற அந்தகனும்
ஆற்றல் இழப்ப அகல்மார்பில் முத்தலைவேல்
ஏற்றியவன் நீயன்றோ எமக்கேன் இரங்கலையே ?

அன்பா னவருக்கு அருளுதியால்; பத்திநெறி
என்பால் இல்லையால் இறையும்; எவனளித்தி ?
நன்பால் மதிமிலைச்சு நாயகனே! நல்லருள்கூர்
உன்பால் மிகநொந்தே ஓதியதென் பேதைமையே!

என்று பலவாறு புலம்பி இரங்கி, உணர்வெல்லாம் அடங்க மயங்கி இறந்தவர்போல் சயந்தன் நிலத்தில் வீழ்ந்தான். ஆல மரம் சாயும்போது அதன்மேல் சுற்றியிருக்கும் கொடிகளும் விழுந்தன்மைபோல அவனைச் சூழ்ந்த தேவர்களும் ஏங்கி அறி வழிந்து கீழே வீழ்ந்தார்கள்.

திருவிருத்தம்–81
ஆகத் திருவிருத்தம்–417

——oo——

## 10. சயந்தன் கனவுகாண் படலம்

### சயந்தன் கனவில் முருகக் கடவுள்

வீரமகேந்திரபுரியில் சிறையகத்துத் தொல்லைப்படும் சயந்தனுக்கும், தேவர்களுக்கும், எண்ணற்ற உயிர்கள்தோறும் கலந்து இன்னருள்புரிகின்ற முருகக் கடவுள் திருவருள்புரிய எண்ணினர்; வலப்பக்கத்திலே கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல், அபயம் என்பவைகளும் இடப்பக்கத்திலே வரதம், தாமரை, மணி, மழு, தண்டு, வில் என்பவைகளும் பொருந்தி, பன்னிரண்டு திருக்கரங்களையும் ஆறு திருமுகங்களையும் கொண்டு, கீழே மயங்கி விழுந்துகிடக்கின்ற சயந்தனுடைய கனவிலே எழுந்தருளித் தம் திருவுருவத்தைக் காட்டியருளினர்.

வீறு கேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்
மாறி லாதவேல் அபயமே வலமிடம் வரதம்

ஏறு பங்கயம் மணிமழுத் தண்டுவில் இசைந்த
ஆறி ரண்டுகை அறுமுகங் கொண்டுவேள் அடைந்தான்.

சயந்தன் சூக்கும சரீரத்திலுள்ள ஞானக் கண்களால் அவரைத் தரிசித்தான்; அவரை நோக்கி, "அடியேன் படும் துன்பத்தை நீக்கத் திருவுளம் கொண்டு இங்கு எழுந்தருளி வந்த நீர் திருமாலும் அல்லர்; நான்முகனும் அல்லர்; சிவபெருமானும் அல்லர்; நீவிர் யார்? சொல்லியருளும்" என்றான்.

**முருகக் கடவுள் திருவாய்மலர்ந்தருளல்**

அப்போது மெய்ஞ்ஞானிகளுடைய அறிவினுள் அறிவாய் இருப்போராகிய சண்முகக் கடவுள், "நாம் கொன்றையைச் சூடிய சிவபெருமானின் குமரன் ஆவோம்; உன் துன்பத்தையும் இரக்கத்தையும் மயக்கத்தையும் அறிந்து அவற்றை நீக்க இங்கு வந்தோம்; உன் தந்தை தன் குறையையும் உங்கள் குறையையும் என்னிடம் வந்து முறையிட்டு வேண்ட, நாம் அளவில்லாத சேனைகளோடும் புறப்பட்டுப் பூவுலகில் வந்து கிரவுஞ்ச மலையையும் தாரகனையும் அழித்து, செந்திற்பதியில் வீற்றிருந்தோம். நான்முகனும், திருமாலும், உன் தந்தையும், மற்றைத் தேவர்களும் நம்முடன் இருக்கின்றார்கள். உன்னுடைய தாய் மேருமலையிலிருக்கிறாள்; நீ வருந்தற்க. வீரவாகுவை நாம் இந்நக ரிலுள்ள சூரபன்மனிடம் தூது அனுப்பியிருக்கின்றோம். அவன் இற்றைப் பகலில் சூரபன்மனின் குமாரன் ஒருவனையும் அசுரர் களில் பலரையும் தொலைத்து இந்நகரத்தையும் அழித்து இன்று மாலையே எம்மை வந்து அடைகுவன். செல்லுகின்ற இப்பகல் நீங்கியபின் நாளையே செந்திற்பதியை நீங்கி இம்மகேந்திரபுரிக்கு அணித்தாய் வந்திருந்து **பத்து நாளில்** உனக்குத் துன்பம் செய்த சூரபன்மனையும் அவன் கிளைகளையும் அழிப்போம். உன் னையும் தேவர்களையும் சிறைமீட்டு விண்ணுலக வளங்களையும் தந்து அருள்புரிவோம். சயந்தனே! உன் துயரை இப்பொழுதே ஒழிப்பாயாக" என்று கூறியருளினார்.

**ஆறுமுகக் கடவுள் திருவருள்புரிதல்**

சயந்தன், ஆறுமுகக் கடவுளின் அருள்மொழிகேட்டு அஞ் ஞானமாகிய இருள் நீங்கி மகிழ்ச்சிகொண்டான். அவன் மயிர்

கள் சிலிர்த்தன; கண்கள் ஆனந்த மழை பொழிந்தன; புயங்கள் நிமிர்ந்து மலைபோல எழுந்தன; இன்பப் பெருக்கால் ஆடிப் பாடினான். சயந்தன் முருகக் கடவுளை நோக்கி, "எம்பெருமானே! தேவரீர் வலிய வந்து எங்கள் துன்பங்களைப் போக்கி அருளினீர். உம்மிடம் நாங்கள் அடைக்கலம் புகுந்தோம். காத்தருள்வீராக" என்று புகழ்ந்து போற்றினான். சயந்தன் கூறிய மொழியைக்கேட்டு, முருகக் கடவுள், 'நின் குறையை முடிக்குதும்; இஃது உறுதி. அன்றியும் இந்நகர்க்கு யாம் ஏவிய தூதுவன், உன்னையும் தேவர்களையும் வந்து கண்டு இனிய மொழிகளைக் கூறி மீளும்படி செய்வோம்; அதனையும் காண்பாய்' என்று திருவருள் புரிந்து மறைந்தருளினார்; மற்றைத் தேவர்களின் கனவினும் தோன்றி அவ்வாறே தேற்றி மறைந்தருளினார்.

**சயந்தன் முதலியோர் மகிழ்ச்சி**

தேவர்கள் கனவு நீங்கி நனவு வரப்பெற்றதும், சிவகுமாரரின் திருவருளை நினைந்து ஆனந்தக் கடலில் ஆழ்ந்தனர். அப்போது தேவர்கள் சயந்தனை அணுகித் தாம் தாம் கண்ட கனவைக் கூறினார்கள். சயந்தன், அவற்றைக் கேட்டுத் தான் கண்ட கனவைப் போன்றே இருப்பது கண்டு களித்து, ஆறுமுகக் கடவுளின் திருவருளை நினைத்து அவர் திருவடிகளை வழிபட்டுக்கொண்டு சிறைக் களத்திலிருந்தான்.

திருவிருத்தம்–28
ஆகத் திருவிருத்தம்–445

——oo——

## 11. வீரவாகு சயந்தனைத் தேற்று படலம்

**வீரவாகுதேவர் சயந்தனிடம் செல்லல்**

வீரவாகுதேவர் சிறையிலிருக்கும் சயந்தனுக்கு ஆறுதல் கூறித் தேற்ற எண்ணினார். அப்போது அவுணர்கள், சிறையிலுள்ள தேவர்களைச் சூழ்ந்து காத்திருந்த வன்மையை நோக்கி, "இவ்வவுணர்கள் என்னைக் காணாராய் மயங்கவும், சயந்தன் முதலிய தேவர்கள் என்னைக் காணவும் தமியேன் இச் சிறைக்

களத்தில் செல்லவேண்டும்'' என்று கருதினர். உடனே முருகக் கடவுளை அவரது மந்திரத்தால் தியானித்தலும், அச் சிறைக் காப்பாளர் அம்மந்திரமாகிய வலையில் அகப்பட்டு அறிவு மயங்கி வீழ்ந்தனர். அப்போது வீரவாகு தேவர் சிறைக்களத்துட் சென்றார்.

**வீரவாகுதேவர் சயந்தன்முன் தோன்றுதல்**

சயந்தனும் தேவர்களும் வீரவாகு தேவரைக் கண்டார்கள். ''நாம் தேறுதல் அடையும் பொருட்டு நமக்குத் திருவருள் செய்த ஆறுமுகக் கடவுளின் தூதுவர் இவரே'' என்று அவர்கள் எண்ணினர்கள். வீரவாகுதேவர், முருகக் கடவுளின் திருநாமத்தைக் கூறிக்கொண்டு சயந்தன்முன் சென்றார். சயந்தன் காதுகளில் அத்திருநாமம் புகுந்து அவனுக்கு மகிழ்ச்சியை ஊட்டியது. சயந்தன், முன்பு அறியாதவன்போல, வீரவாகு தேவரை வணங்கி நின்று, ''அசுரர்கள் காவலிலிருந்து தளர்வுறும் எங்கள்பால் நீ வந்த காரியம் என்ன? அதனைக் கூற வேண்டும்'' என்றான்.

**வீரவாகுதேவர் - சயந்தன்**

அதனைக்கேட்ட வீரவாகுதேவர், ''சிவகுமாரராகிய ஆறுமுகக் கடவுளுக்கு நான் தம்பியாயுள்ளேன்; அவருக்குத் தூதுவனுமாவேன்; நந்தி கணத்தைச் சேர்ந்தேன்; என் பெயர் வீரவாகு; உங்கள் யாவரையும் சிறையிலிருந்து விடுவிக்கும்படி சூரபன்மனிடம் சொல்ல ஆறுமுகக் கடவுளின் ஏவலால் இங்கு வந்தேன்'' என்றார். வீரவாகுதேவர் கூறியவைகளைத் தேவர்களோடு சயந்தன் கேட்டு, ஞான சமாதியில் தலையிலிருந்து ஒழுகும் அமுத தாரையை நுகர்ந்த பெரியோர் அதன் பின் பாற்கடலில் தோன்றிய அமுதத்தையும் பருகினாற்போல, முன்னர் முருகக் கடவுளைத் தரிசித்ததனால் அடைந்த மகிழ்ச்சியின் மேலும் பெருமகிழ்ச்சி கொண்டு, ''தலைவரே! துன்பம் மிகுந்த எங்கள் குறையை வினவுதற்கு வந்தீர். அதனால் இச் சிறையும் நீங்கிற்று. எங்கள் துன்பம் நீங்கி உய்ந்தோம்; பிறவிகள் அடையும் ஊதியத்தையும் அடைந்தோம்'' என்றான். வீரவாகு தேவர், ''ஆறுமுகப் பெருமான் உங்களை வலிய வந்து

ஆட்கொள்ளுவார். நீங்கள் பொன்னுலக வளங்களைத் திரும்பப் பெறுவீர். பின்னும் வேண்டுவனவற்றையும் பெறுவீர்கள். ‘நான்முகனைச் சிறைசெய்து படைப்புத் தொழிலை ஏற்ற முருகக் கடவுள் உங்களிடத்துப் பேரருள் கொண்டு சூரபன்மனிட்ட சிறையினின்றும் விடுவிக்க வந்தார்’ என்றால் நீங்கள் செய்த தவத்தை வேறு யார்தாம் செய்தார்? அவுணர்கள் செறிந்த இந் நகரில் அறிஞர்கள் செல்லார். யான் எம்பிரான் திருவருளால் சேற்றுநிலத்தில் செல்வார்போல் மனம் வருந்தி ஒருவாறு இங்கு வந்தேன்; உங்களைக் கண்டு மகிழ்ச்சி யுற்றேன்’’ என்றார். சயந்தன் அதனைக்கேட்டு மகிழ்ந்து, ‘‘யாங்கள் சிறையிலகப் படுமுன் என் தாய் தந்தையர் மறைந்து போனார்கள். அவர்கள் அன்றுதொட்டு இன்றுவரை செய்த செயல்களையும், அவற்றின் பயன்களையும் கூறுவீராக’’ என்றான். வீரவாகு தேவர், இந்திரன் அயிராணியோடு பொன்னுலகைவிட்டுச் சீகாழியை அடைந்தது முதல், திருச்செந்தூரில் முருகக் கடவுள் எழுந்தருளியது வரையிலுள்ள நிகழ்ச்சிகளையெல்லாம் கூறினார். சயந்தன் அவற்றைக்கேட்டு, ‘‘சுவாமீ! உம்முடைய வார்த்தைகளைக் கேட்டது என் தாய் தந்தையர்களையும், குருவையும், ஆறுமுகக் கடவுளையும் எதிரில் கண்டது போலாயிற்று’’ என்றான். பிறகு வீரவாகு தேவர் சயந்தனையும் தேவர்களையும் பார்த்து, ‘‘ஆறுமுகக் கடவுள் வந்து உங்கள் சிறையை நீக்கும் நாள் தொலைவில் இல்லை; சமீபத்திலே உள்ளது. அதுவரையில் இங்கு இருப்பீர்களாக’’ என்று கூறினார்.

‘‘சிவபெருமானே ஆறு திருமுகங்களுடனும் பன்னிரண்டு திருப்புயங்களோடும் **கந்தர்** என்னும் திருப்பெயர் கொண்டு உங்கள் துன்பங்களை யெல்லாம் போக்கும்பொருட்டு எழுந்தருளியுள்ளார். சிவபெருமான் ஆறு திருமுகங்களையும் பன்னிரண்டு திருப்புயங்களையும் கொண்டு எழுந்தருளிய காரணம் யாது எனில், பிரமன் சிறுமையையும், இந்திரனின் துன்பத்தையும், உங்கள் சிறையையும் ஒழித்து உலகங்களையெல்லாம் இரட்சிக்கும் பொருட்டேயாகும். சயந்தனே! இதனை நீ அறிவாய்.

தன்னிகர் இன்றி மேலாய்த் தற்பர வொளியா யாரும்
உன்னரும் பரமாய் நின்ற ஒருவனே முகங்கள் ஆறும்

பன்னிரு புயமுங் கொண்டு பாலகன் போன்று கந்தன்
என்னுமோர் பெயரும் எய்தி யாவருங் காண வந்தான்.

பங்கய முகங்கள் ஆறும் பன்னிரு புயமுங் கொண்டே
எங்கடம் பெருமான் போந்த ஏதுமற் றென்னை என்னில்
செங்கண்மால் உந்தி பூத்தோன் சிறுமையும் மகவான் துன்பும்
உங்கடஞ் சிறையும் நீக்கி உலகெலாம் அளிப்பக் கண்டாய்.

நீங்கள் தக்கன் வேள்வியில் கலந்துகொண்டு அவிர்ப்பாகத்தை உண்ட தீவினையால்,வீரபத்திரக் கடவுள் உங்களைத் தண்டித்தும் இன்னும் அத்தீவினைகள் தீரவில்லை. அதனால், நீங்கள் வருந்துகிறீர்கள். இனி அத்தீவினை முருகக் கடவுளால் தீரும். கடல்கள் மலைகள் முதலியவைகளைக்கொண்ட பதினன்கு உலகங்களையும் சகல அண்டங்களையும் ஒரு இமைப்பொழுதில் அழிக்கவல்ல முருகக் கடவுளின் வேற்படை வந்து சூரபன்மனை அழிக்கும். அறநெறியைக் கருதி என்னை அவனிடம் தூதுவிடுத்தார். எம் பெருமான் திருவார்த்தையைச் சூரபன்மனிடம் சொல்வேன். அவன் அதனை நீதியென்று கொள்ளமாட்டான். நான் திரும்பிச் சென்று அதனை முருகப்பெருமானிடம் விண்ணப்பஞ்செய்வேன். முருகக் கடவுள் அவற்றைக் கேட்டு, நாளைக்கே எழுந்தருளி வந்து சூரபன்மனுதியர்களையெல்லாம் அழிப்பார். அவர் இருந்த இடத்திலிருந்தே தமது வேற்படையால் அசுரர் கூட்டத்தைக் கொல்லமுடியும். அவர் இங்கு வந்து போர் செய்து அவர்களைக் கொல்லுவது ஒரு திருவிளையாடலே ஆகும். அவர் **பத்து நாட்கள்** போரிட்டுச் சூரபன்மனையும் அவன் சேனைகளையும் அழிப்பார்; உங்களைச் சிறையிலிருந்து விடுவித்துச் சிறப்புச் செய்தருள்வார்'' என்று கூறித் தேற்றினர்.

ஈரிரண் டிருமூன் றுகும்
இரும்பக லிடையே எங்கோன்
ஆரிருஞ் சமர மூட்டி
அவுணர்தம் அனிகந் தன்னைச்
சூரொடு முடித்து நும்மைத்
துயர்ச்சிறைத் தொடர்ச்சி நீக்கிப்
பேரிருஞ் சிறப்பு நல்கும்
பிறவொன் றும் நினையல் மன்னே.

சயந்தனும் தேவர்களும் இவற்றைக் கேட்டு மகிழ்ந்து, "பெருமையிற்சிறந்த வீரர் திலகமே! நீர் சிறந்த வெற்றியைப் பெறுவீராக" என்று வீரவாகு தேவருக்கு வாழ்த்துக் கூறினர்கள். சயந்தன் வீரவாகு தேவரை வணங்கி, "வீரரே! எங்கள் தன்மைகளை யெல்லாம் கண்டீர். இவைகளை என் தந்தைக்குச் சொல்வீராக" என்றான். வீரவாகுதேவர் சிறைக்கூடத்திலிருந்து புறப்பட்டு அசுரர்களின் மயக்கத்தை அகற்றிப் போனார். அக்காவலர்கள் முன்போல் காவல் புரிந்தனர்.

திருவிருத்தம்–35
ஆகத் திருவிருத்தம்–480

——oo——

## 12. அவை புகு படலம்

### வீரவாகுதேவர் சூரபன்மனைக் காணுதல்

வீரவாகுதேவர், சிறைக்கூடத்தைவிட்டு ஆகாய வழியே சென்று, சூரபன்மன் கோயிலைச் சூழ்ந்த அகழியைத் தாண்டி, பதினாயிரம் வெள்ளம் சேனைகள் சூழ்ந்த மதிற்சுவரின் முன்பு பல நிலைகளைக்கொண்ட கோபுரத்தைக் கண்டு வியந்தார். அக்கோபுர வாயிலை **உக்கிரன் மயூரன்** முதலிய அவுண வீரர்கள் நால்வகைச் சேனைகளோடு காவல் செய்துகொண்டு நிற்பதை அறிந்து, விண் வழியாக வீரவாகுதேவர் சூரபன்மன் கோயிலுக்குப்போய், அதன் முன்னுள்ள சூளிகையிலிருந்து அவன் மாளிகையைக் கண்டார். அங்கு நிறைந்துள்ள பல வளங்களையும் பார்த்து அதிசயித்தார். பின்பு சூரபன்மன் அத்தாணி மண்டபத்திலே இரத்தின சிங்காதனத்தின் மீது அமர்ந்திருப்பதையும் கண்ணுற்றார்.

### சூரபன்மன் அரசு வீற்றிருக்கும் சிறப்பு

ஆயிரம் யோசனை பரப்புடைய நானாவித இரத்தினங்களால் இழைக்கப்பட்டுப் பொன்னால் ஆகிய அத்தாணி மண்டபத்தில் அமைந்த அழகு மிகுந்த சிங்காதனத்திலே, சூரபன்மன் வீற்றிருந்தான். அப்போது மேனகை திலோத்தமை முதலிய தெய்வப் பெண்கள் ஆலவட்டம் வீசினர். சந்திர சூரியர்கள்

இருமருங்கிலும் குடைபிடித்து நின்றார்கள். அசுரர்கள் அடைப்பை தாங்கினார்கள். பானுகோபன் முதலிய புதல்வர்கள் யாவரும் முறைப்படி அருகில் வீற்றிருந்தார்கள். அரம்பையர்கள் நடனமாடினார்கள். வித்தியாதரர், கின்னரர், இயக்கர் முதலியோர் வீணைகளை வாசித்தனர். துதிபாடகர்கள் பிரம்பை ஏந்திக்கொண்டு நின்று துதித்தனர். சூரபன்மன் தலையிலே இரத்தினமுடி ஒளி செய்தது; காதுகளில் குண்டலங்கள் ஆடின; நெற்றியில் நிறைய விபூதி திகழ்ந்தது; மார்பிலே முத்துமாலைகளும், புயங்களில் வாகு வளையங்களும், கரங்களிலே கடகங்களும், கழுத்திலே கண்டசரங்களும், கால்களிலே வீரக் கழல்களும் திகழ்ந்தன; உடலில் கலவைச் சாந்தின் மணம் கமழ்ந்தது; இடுப்பிலே உதரபந்தம் என்னும் அணியோடு பீதாம்பரம் விளங்கிற்று. பொன்னாலும், மணிகளாலும் அலங்கரிக்கப்பட்ட பெரிய சூல்கொண்ட மேகத்தைப் போலச் சூரபன்மன் வீற்றிருந்தான்.

**வீரவாகு தேவர் எண்ணுதல்**

சூரபன்மன் அரசு வீற்றிருத்தலை வீரவாகு தேவர் வியப்போடு கண்டு, "யாவருக்கும் மேலோராகிய சிவபெருமான் திருவடிகளை வழிபட்ட தேவர்களுக்குள்ளே சூரபன்மனைப் போலச் செல்வங்கள் யாவற்றையும் அடைந்தவர் யாவர் உளர்? அவனைப் போல் உயிரைவிட்டுத் தவம் செய்தோரும் இல்லை. இவனுக்கு அளித்ததைப்போல் சிவபெருமான் வேறு எவருக்கும் அளித்ததும் இல்லை. இத்தீயவன் யாகம் செய்து பெறற்கரிய வளங்களைப் பெற்றான். ஆனால் நெடுங்காலம் வாழ நினைக்கின்றானில்லை. கபடமில்லாத தூக்கணங்குருவி சிறிய நெருப்புக் கொள்ளியை மின்மினிப் பூச்சி யெனக் கருதித் தன் கூட்டினுள் கொண்டு போய் வைத்து அழிந்ததைப் போல, சூரபன்மன் பல தேவர்களைச் சிறைவைத்துத் தனக்கு அழிவைத் தேடிக்கொண்டான். இதற்குச் சிறிதும் ஐயமில்லை. மிகுந்த வீரம், வலிமை, செல்வம் முதலியவைகளை மிகப்பெற்றவர்களும் யாரரிடத்தேனும் சிறிதாயினும் பகையுடையவராக வாழ்தல் குற்றமே அன்றி நன்மையாகுமோ? இவன் இந்திரனையும் இந்திராணியையும் விண்ணுலகிலிருந்து துரத்தி, அவர்கள் குமாரனாகிய

சயந்தனையும் தேவர்களையும் சிறைசெய்த பாவத்தால் அரசை இழப்பான்.

மெய்ச்சோதி தங்கு சிறுகொள்ளி தன்னை
    விரகின்மை கொண்ட குருகார்
கச்சோத மென்று கருதிக் குடம்பை
    தனினுய்த்து மாண்ட கதைபோல்
அச்சோ எனப்பல் இமையோரை ஈண்டு
    சிறைவைத்த பாவம் அதனால்
இச்சூர பன்மன் முடிவெய்தும் நாளை
    இதனுக்கோர் ஐயம் இலையே.

மிகையான வீரம் வளமாற்றல் சால
    மேவுற்று ளோரும் இறையும்
பகையார்க ணேனும் உளராகி வாழ்தல்
    பழுதன்றி நன்றி படுமோ ?
மகவானை மங்கை யுடனே துரந்தும்
    அவர்மைந்த னோடு சுரரை
அகலாமல் ஈண்டு சிறைசெய்த பாவம்
    அதனால் இழப்பன் அரசே.

இச் சூரபன்மன் தன்மக்களோடும் சுற்றத்தார்களோடும், நகரத்தோடும், செல்வங்களோடும் நாளைக்கு இறந்துபடுவானாயின், இவனுடைய உயிருக்கு நிலை ஆறுமுகக் கடவுள் தந்தருளும் முத்தியன்றி வேறு யாதுளது ?'' என்று பலவாறு எண்ணினார்.

**வீரவாகு தேவர் சூரபன்மன்முன் வீற்றிருத்தல்**

வீரவாகு தேவர் சூரபன்மன் முன் செல்லத் துணிந்தார். ஆறுமுகக் கடவுளின் திருவடிகளை எண்ணித் துதித்தார். தாமிருந்த சூளிகையை நீங்கி, விண்வழியாகச் சூரபன்மன் அரசிருக்கும் அத்தாணி மண்டபத்தை அடைந்தார். சூரபன்மனை அணுகி அங்குள்ளோர் யாவரும் காணும்படி தன் மெய்வடிவத்தைக் காட்டி, "சிவகுமாரனாகிய ஆறுமுகக் கடவுளின் தூதன் நான்" என்று கூறி, "இவனுக்குக் கீழே நான் எளிமையாய் நிற்றல் எம்பெருமான் பெருமைக்குத் தாழ்மை அளிக்கும்; அவன் சிங்காதனத்தின் பக்கத்தில் போய் இருப்பதும் பெருமை

யன்று ; அஃது எளியோர் செயலே ஆகும். அவனோடு சேர்ந்து இருத்தல் பாவம்" என்று எண்ணி முருகக்கடவுளின் திருவடிகளைத் துதித்தார். அப்போது சிவபெருமான் திருவருளால் திருஞானசம்பந்தருக்கு முத்துப் பந்தரும் முத்துச் சிவிகையும் வந்தவாறுபோல, முருகப் பெருமான் திருவருளால் வீரவாகு தேவருக்கு மிக ஒளியோடு கூடிய இரத்தின சிங்காதனம் ஒன்று விரைந்து அச்சபையில் வந்தது.

நித்தி லப்படு பந்தருஞ் சிவிகையும் நெறியே
முத்த மிழ்க்கொரு தலைவனும் மதலைக்கு முதல்வன்
உய்த்த வாறெனக் குமரவேள் வீரனுக்கு உதவ
அத்த லைப்பட வந்தது மடங்கலேற்று அணையே.

அச் சிங்காதனத்தின் ஒளி அம்மண்டபத்தின் ஒளியை மங்கச் செய்தது ; சூரபன்மன் கீர்த்தியையும் ஆணையையும் ஆபரணங்களின் ஒளியையும் விழுங்கியது. வீரவாகு தேவர், "ஆறுமுகக் கடவுள் எனக்கு இதனை விடுத்தருளினர் போலும்" என்று கருதி அதன் மீது வீற்றிருந்தார். அங்கு வீற்றிருந்த வீரவாகு தேவர் சூரியனுக்கு நடுவே விளங்கும் சிவபெருமானைப் போலத் திகழ்ந்தார்.

**வீரவாகு தேவரைக் கண்டு வியப்படைதல்**

வீரவாகு தேவர் அங்கு வீற்றிருந்த நிலைமையை அங்குள்ளோர் கண்டு நடுங்கி ஆச்சரிய முற்றனர். "சூரபன்மனுக்கு முன் சிங்காசனத்திலிருக்கும் இவன், வீரன் போலும் ; இவன் யார் ? இவன் இங்கு வரவேண்டிய காரணம் யாது ?" என்று சிலர் எண்ணினர்கள். "இவன் பேராற்றலை யுடைய நம் சூரபன்மன்முன் காவல்களைக் கடந்து எங்ஙனம் வந்தான்?" என்று சிலர் கருதினர். " இவன் அமர்ந்திருக்கும் அரியணை இங்கே எவ்வாறு வந்தது ?" என்று வினவினர் சிலர். " இவன் மாயத்தில் வல்லவன் " என்றார் சிலர். " இவ்வீரனைச் சபையிலே ஏன் விடுத்தீர் என்று சூரபன்மன் கோபிப்பான் ?" என்று சில காவலர் கருதினர். " இவன் சூரபன்மன் உறவினரிடமிருந்து வந்தானோ ?" என்று கருதினர் சிலர். அல்லது "பகைவனிடமிருந்து வந்தவனோ?"என்றனர் சிலர். அவனைச் சிவபெருமான் என்றனர் சிலர்.

மூவுலகளந்த திருமால் என்றனர் சிலர். நான்முகன் என்றனர் சிலர். "திக்குப்பாலகருள் ஒருவனே? முனிவருள் ஒருவனே? இவருள் இவன் யாவன்?" என்றனர் சிலர். "சூரபன்மனுக்கு முன்னே அஞ்சாமல் வந்த வலிமையுடைய இவன் யாவன்?" என்றனர் சிலர். "நேற்று இறந்த தாரகாசுரன் தன்னுடைய பழைய உருவம் அழிய இன்றைக்கு அழகிய இவ்வுருவம் கொண்டு தன் தமையனிடத்தில் வந்தான்போலும்" என்றனர் சிலர். இங்ஙனம் பலர் பலவாறு பேச வீரவாகு தேவர் சூரபன்மனுக்கு இணையாக அவன்முன் தமது சிங்காதனத்தில் வீற்றிருந்தார்.

### சூரபன்மன் கோபம் கொள்ளல்

வீரவாகு தேவர் தன்முன் வந்து சிறிதும் அஞ்சாமல் வீற்றிருக்கும் கோலத்தைக் கண்டு சூரபன்மன் பெருங்கோபங் கொண்டான்; பற்களைக் கடித்தான்! நகைத்தான்! சினந்தான்! கனைத்தான்! உடல் வியர்த்தது. கண்கள் தீப்பொறியைக் கக்கின. அவன் வீரவாகு தேவரைப் பார்த்து, "விலங்குகளைப் போலக் காட்டிலிருந்து தம் உடலை வருத்துகின்ற சிற்றுணர்ச்சியுடையோர் செய்யும் சித்து வித்தை இது. சிறியோனுகிய நீயும் அதனைக் கற்றிருக்கின்ருய்போலும். நம்முன் எல்லோருங் காண இவ்வித்தையை நீ காட்டினுய்! நமக்குத் தோற்று ஓடித்திரிகின்ற தேவர்களும் இத்தொழிலில் மிக்க வல்லமையுடையவர்கள். ஆனுல், அவர்கள் உன்னைப்போல் நம்மிடத்தில் சிறிதுங் காட்ட மாட்டார்கள். நீ நம்முன்பு காட்டிய கூத்து மிக நன்று, நன்று! சித்தர்கள் முதலானோர், இத்திறத்தனவாகிய செயல்களைத் தம் தம் இடங்களில் செய்வதல்லது, என் முன்னே செய்வதற்கு அஞ்சுவர். நமக்கு இதனைக் காட்டுதற்கு நீ எண்ணினுய். நீ ஒரு பித்தன் போலும். இந்த ஆடலை இந்த நகரத்திலுள்ள பெண்களும் செய்வர்! கருவிலிருக்கும் குழந்தையும் செய்யும். என்னையும் மதியாது எனக்கு எதிரே இருந்தாய். ஆதலால், என் வாட்படையால் உன்னை வெட்டுவேன். உன் செயல் யாவும் அறிந்த பின்னர் அதனைச் செய்வேன். இப்போது உன்னைவிட்டு உன் உயிரைப் பரிசாக அளித்துள்ளேன். நீயார்? சொல்லுவாயாக" என்ருன்.

**வீரவாகு தேவர் தூது வந்ததை அறிவித்தல்**

சூரபன்மன் சொல்லியவைகளைக் கேட்ட வீரவாகுதேவர் தம் உடலில் வியர்வைதோன்றக் கோபங்கொண்டார். அவர் சூரபன்மனைப் பார்த்து, "மாயங்களைச் செய்து உழலும் வலி யில்லார்போன்று என்னை மதித்தாய். அவ்வாறு என்னை எண் ணுதே. உன் சிற்றறிவை மெச்சினேன்; நான் சொல்வதைக் கேள்: இந்திரனின் குறையையும், நான்முகன் முதலிய தேவர் களின் குறையையும், தேவர்களின் சிறையையும் நீக்கி அவர் களின் பழைய தலைமையை உதவுவதற்குத் திருச்செந்திமா நகரில் எழுந்தருளியிருக்கும் ஆறுமுகக் கடவுளுக்கு அடியவன் யான். அவ்வாறுமுகக் கடவுளின் சேனைத் தலைவராய் அவருக்குப் பின் வந்துள்ளோர் இலக்கத்தொன்பதின்மர் உளர். அவர்களுள் யான் ஒருவன் ஆவேன்; நந்திகணத்தைச் சேர்ந்தேன்; பகைவர் கள் புகழும் திறல் அமைந்த **வீரவாகு** என்னும் பெயருள்ளேன். உன் தம்பியாகிய தாரகனையும் கிரவுஞ்சமலையையும் ஓர் இறைப் பொழுதில் வேற்படையால் கொன்ற ஆறுமுகக் கடவுள் உன் னிடம் கொண்ட பெருங்கருணையால் என்னைத் தூதாக அனுப்பி யருளினுர்" என்றுர்.

அதனைக்கேட்ட சூரபன்மன் வீரவாகுதேவரை நோக்கி, "ஆறுமுகக் கடவுள் என்னிடத்து உன்னைத் தூதாக விடுத்த காரணம் யாது? சொல்லுவாய்"என்னலும், வீரவாகுதேவர் சூர பன்மனை நோக்கி, "நீ இந்திரனை இந்திராணியோடு சுவர்க் கத்திலிருந்து துரத்தினுய்; சுவர்க்கத்தைத் தீயிட்டுக் கொளுத்தி னுய்; அவன் குமாரனுகிய சயந்தனையும் பல தேவர்களையும் சிறையில் வைத்தாய். இவற்றையெல்லாம் ஆறுமுகக் கடவுள் அறிந்தார். திருமால்,பிரமன் முதலிய தேவர்கள் பலமுறை வந்து வேண்ட, அவர் குறையை நீக்கும்பொருட்டு அளவிறந்த பூதப் படைகளோடு பூமியில்வந்து உன் தம்பியாகிய தாரகனையும், கிர வுஞ்சமலையையும் அழித்து, ஆறுமுகக்கடவுள் நேற்றைத்தினமே திருச்செந்தூரில் வந்து எழுந்தருளியுள்ளார்; விரைந்து வந்து உன்னையும் அழிக்குமாறு திருவுளங்கொண்டுள்ளார். இன்று உன்பால்கொண்ட அருளால் சிலவற்றைக் கூறி என்னை உன் னிடம் தூது அனுப்பினுர். அதனைக் கூறுவேன் கேள்: நீ தேவர் களுக்கு விலங்கிட்டு அவர்கள் செய்யும் வைதிக ஆசாரங்களைப்

போக்கினாய். அஃது அரசநெறி அன்று; வீரர்களின் செய்கையும் அன்று. காசிப முனிவரின் குமாரனாகிய நீ தேவர்களைச் சிறை செய்தது அறமோ? நீ வைதிக ஒழுக்கத்தை விட்டாய்; இழி தொழில்கள் பலவற்றைச் செய்தாய். நீதியால் உலகளிப்பது அன்றோ அரச தருமம்? சலந்தராசுரன், அந்தகாசுரன், முப்புரத்து அசுரர் முதலியோர் தேவர்களைத் துன்புறுத்தியதால் அன்றோ அழிந்தனர்? விண்ணுலகிலுள்ள தேவர்களைத் துன்புறுத்துதல் உனக்கு அழகா? நீ சத்திய நெறி தவறினாய். கொலை களவு முதலியவற்றால் மேலோர்களைச் சினந்து அவர்களுக்குத் துன்பம் செய்யும் சிறியோர், சுற்றத்தாரோடு அழிவர். பிறருக்குத் துன்பம் செய்வோர் இம்மையில் செல்வத்தை இழப்பர்; மறுமையில் நரகத்தில் மூழ்குவர்; வருபிறப்பில் துன்பமடைவர்; இத்துன்பம் என்றும் நீங்கார். நீ தேவர்களைச் சிறை செய்த பிழையால் அழிவாய். உன் தம்பியை அழித்த வேற்படை இருக்கிறது; அதனை விடுத்தால் அஃது உன்னையும் கண்டதுண்டமாக்கும். அறநெறியினைக் கருதி விரைவில் உன்னைத் தண்டிக்காமல் ஆறுமுகக் கடவுள் இதுகாறும் தாழ்த்தார். தேவர்களைப் பல யுகங்களாகச் சிறையில் இட்டாய்; அவர்களை உடனே விடுதலை செய்வதே நீ வாழ்வதற்கேற்ற வழி. மறுத்தாயானால் நீ விரைந்து இறப்பது உறுதி. பல ஆண்டுகள் வேள்வி செய்து சிவபெருமானால் நீண்ட வாழ்நாளையும் வளங்களையும் பெற்ற நீ ஒரு புன்னெறியால் இகழ்ச்சி அடைதல் தகுதியோ? பெருவளத்தோடு நீயும் உன் கிளையும் உய்யவேண்டின், தேவரைச் சிறையினின்று விடுவித்து அறநெறியுடன் வாழ்வாயாக. இல்லையேல் ஆறுமுகக் கடவுள் இங்கு வந்து உன்னை நிச்சயம் அழிப்பார். இவற்றையெல்லாம் ஆறுமுகக் கடவுள் உன்னிடம் கூறும்படி எனக்குக் கட்டளையிட்டருளினார். ஆதலால், நீ தேவரைச் சிறை விடுவித்து அறநெறியால் இவ்வளங்களையெல்லாம் நீண்டகாலம் அனுபவிப்பாயாக'' என்று தெளிவுபடக் கூறினார்.

**சூரபன்மன் பதில்**

வீரவாகு தேவர் தூது மொழிகளைக்கேட்ட சூரபன்மனின் கண்களில் தீப்பொறிகள் எழுந்தன. அவன், மிகச் சினங்கொண்டு கையோடு கையைத் தட்டி நகைத்து, வீரவாகு தேவ

ரைப் பார்த்து, “ஆயிரத்தெட்டு அண்டங்களையும் வென்று மன்னர்களுக்கெல்லாம் மன்னனாய் விளங்கும் எனக்குப் பல்முளைக்காத ஒரு பாலகனோ இத்தகைய புத்திமதிகளைச் சொல்லி அனுப்புவது? நன்று! நன்று!! வெற்றியில் மேம்பட்ட அவுணர்கள் வலியில்லாதவராம்; மிகவும் எளியவர்களாகிய தேவர்கள் வலியவராம்; மழலைமொழி பேசும் சிறுவர் பேரரசுக்கு அமைச்சராயின் உலக இயற்கை நன்றாய் இருந்தது! தேவர்கள், அசுரர்களை வருத்தி அவர்க்கு வறுமையைச் செய்தார்கள். அதனால், நான் அந்தத் தேவர்களுடைய செல்வத்தைக் கெடுத்துக் குற்றேவல்களைச் செய்யும்படி செய்வித்தேன்; அவர்கள் ஒழுக்கத்தையுங் கெடுத்தேன்; அவர்களைச் சிறையிலும் அடைத்தேன்; என் முன்னோர்கள் செய்த முறைப்படியே நானும்செய்தேன். நான், தேவர்களைச் சிறையினின்று ஒருபோதும் விடேன்; அவர்களை என்னுடைய அண்டத்தின் உச்சியில் ஓரிடத்திலே கொண்டுபோய் வைப்பேன்; தப்பி ஓடிய இந்திரனையும், தேவர்களையும் பிடித்து வந்து சிறைசெய்ய இருந்தேன். ஒப்பற்ற வலிமையுடைய சூரபன்மன் என்று பெயர்பெற்ற நான் என் சிறையிலகப்பட்டவர்களை விடுவேனோ? அழிவு அடையாத வச்சிர யாக்கையையும், வேறு பல வரங்களையும், முன்னொருநாள் நீ கூறிய குமரனது தந்தையாகிய சிவபெருமான் எனக்களித்திட்ட அரசு முறையையும் பின்னர் அழிப்பவர் யாவர்? பெரும் போர் செய்து என்னை வென்றிடும் தன்மையோர் யாவர்? தாரகனைக் கொன்ற வேற்படையுடைய அப்பாலகன் மீது நான் போருக்கு வர எண்ணினேன். பால் மணம் வீசும் பாலகனோடு போர் செய்தல் பழுதாகும் என்று என்னைத் தடுத்தார்கள்; அதனால் அதனை விடுத்தேன். நேற்றே தாரகனையும் கிரவுஞ்சமலையையும் அழித்த செய்தியைக் கேள்விப்பட்டேன். என்பால் உள்ளோரை அப்பாலகன்மீது அனுப்பி என் பழியையும் போக்குவேன். நாளை அதனை நீ காண்பாயாக. எண்ணில்லாத விஷ்ணுக்கள், இந்திரர்கள், தேவர்கள் அண்டங்கள்தோறும் இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் என்னை எதிர்க்க இயலாது துதித்துப் போனார்கள். சிவபெருமான் கண்களில் நேற்றுத் தோன்றிவந்த பாலகனோ என்னை எதிர்த்து நிற்க முடியும்? பற்பலவாற்றால் உரைத்துப் பயனுவதென்? தேவர்களைச் சிறைவிடுகிலேன்.

நீ பேதையாதலால் உணர்ச்சி சிறிதும் இல்லாத குழந்தையின் புன்மொழியினைக் கொண்டு ஒற்றனாய் வந்தாய்; பிழைத்துப் போவாயாக. யான் உன்னுயிரை உனக்குத் தந்தேன்'' என்று கூறினான்.

### ஆறுமுகக் கடவுளின் வல்லமை

சூரபன்மனின் பதிலைக்கேட்ட வீரவாகு தேவர் கோபாக்கினி பொங்க, கண்கள் சிவக்க, சூரபன்மனை நோக்கி, ''உய்யும் திறம் அறியாத கீழ்மகனே! திங்களைச் சடையில் அணிந்த சிவபெருமானுடைய நெற்றிக் கண்களினின்றும் தோன்றி யருளிய எம் தலைவராகிய ஆறுமுகக் கடவுளின் பெருமையை நீ அறியவில்லை. அவரைப் பாலகன் என்று இழிவாகப் பேசினாய். மனிதர்களைத் தேவர்கள் என்பதும், தேவர்களை மும்மூர்த்திகள் என்பதும், நான்முகன் திருமால் முதலியோரைப் பரம்பொருள் என்பதும் உண்மை அன்று; இவையெல்லாம் வெறும் உபசாரமே ஆகும். அங்ஙனம் ஆறுமுகக் கடவுளை எண்ணாதே. ஆறுமுகக் கடவுள் சிவபெருமானுடைய நெற்றிக் கண்களி லிருந்து பரஞ்சோதி சொரூபமாய்க் குழந்தையாய்த் திருவவ தாரஞ் செய்தருளினார். முன்னவர்க்கு முன்னாகுவோர் தமக்கும் முற்பட்டு, ஈசன் என்னும் திருநாமம் தாங்கி, உயிர்க்குயிராய், அருவுருவாய், எவர்க்கும் தாயும் தந்தையுமாய் இருக்கின்ற சிவபெருமானே அப்பாலகர். சிவபெருமானே தம்முடைய திருவிளையாடலால் ஒரு குழந்தை ஆயினார். சூரபன்மனே! அவருடைய ஆறுமுகங்களின் உண்மையினால் அதனை நீ அறிவாய். இரத்தினங்களோடு அதனொளி வேறுபாடில்லாமைபோல, அப் பாலகர் சிவபெருமானொடு வேறுபாடுடையர் அல்லர். ஆயிரத் தெட்டு அண்டங்களையும் வளங்களையும் படைக்கலங்களையும் முன்னே உனக்குக் கொடுத்த சிவபெருமானே ஆறுமுகக்கடவுள் என்றால், அவர் உனக்கு அருளியதை மாற்றுவது அரிதோ? எவற்றிற்கும் முதலாகிய பிரணவமும், ஸ்ரீ பஞ்சாட்சரமும், நான்கு வேதங்களும், இருபத்தெட்டுச் சிவாகமங்களும், மற்றைக் கலை ஞானங்களும் சேர்ந்து குமரக் கடவுளுடைய ஒப்பற்ற திருமேனியாகும். எங்கும் நிறைந்து அருள் செய்கின்ற ஆறு முகக் கடவுளுக்கு எங்கும் திருமுகங்கள்; எங்கும் திருக்கண்கள்;

எங்கும் திருச்செவிகள்; எங்கும் திருக்கரங்கள்; எங்கும் திருவடிகள்; எங்கும் திருமேனி. வேதங்களுக்கெல்லாம் முதன்மையாகிய பிரணவமே சண்முகக் கடவுளின் திருமுகங்களுள் ஒன்று என்றால், அவர் வல்லமையை யாவர் சொல்ல வல்லவர்?

முன்ன வர்க்குமுன் னுகுவோர் தமக்குமுற் பட்டுத்
தன்னை நேரிலா ஈசனுந் தனிப்பெயர் தாங்கி
இன்னு யிர்க்குயி ராய்அரு வுருவமாய் எவர்க்கும்
அன்னை தாதையாய் இருந்திடும் பரமனே அவன்காண்.

ஈச னேயவன் ஆடலால் மதலையா யினன்காண்
ஆசி லாவவன் அறுமுகத் துண்மையால் அறிநீ
பேசில் ஆங்கவன் பரனொடு பேதகன் அல்லன்
தேசு லாவகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்.

பூதம் ஐந்தினுட் கீழ்நிலைத் தாகிய புவியுள்
ஓது கின்றபல் லண்டத்தின் ஓராயிரத் தெட்டுங்
கோதில் ஆக்கமும் படைகளும் உனக்குமுன் கொடுத்த
ஆதி ஈசனே அவனெனின் மாற்றுவது அரிதோ!

ஆதி யாகிய குடிலையும் ஐவகைப் பொறியும்
வேதம் யாவையுந் தந்திரப் பன்மையும் வேறு
ஓத நின்றிடு கலைகளும் அவ்வவற் றுணர்வாம்
போதம் யாவையுங் குமரவேள் பொருவிலா வுருவம்.

எங்க ணும்பணி வதனங்கள் எங்கணும் விழிகள்
எங்க ணுந்திருக் கேள்விகள் எங்கணுங் கரங்கள்
எங்க ணும்திருக் கழலடி எங்கணும் வடிவம்
எங்க ணுஞ்செறிந் தருள்செயும் அறுமுகத் திறைக்கே.

அவரே சிவபெருமானும், திருமாலும், நான்முகனும், திக்குப்பாலகர்களும், முச்சுடர்களும், முனிவர்களும், தேவர்களும் ஆவர்; இவர்களுக்கெல்லாம் மேலோரும், உயிர்களுக்கு மோட்சத்தைக் கொடுப்பவரும் ஆவர். அவர் குழந்தை போன்றவர்; வயோதிகர் போன்றவர்; தினையைக்காட்டிலும் சிறியர் போன்றவர்; பெரியவராகவும் இருப்பவர். குமாரக் கடவுளின் திருவிளையாடலை யாவர் அறிவார்? அவருடைய ஆணையின்றி ஓர் அணுவும் அசையாது. அவருடைய ஆற்றலைக் கடந்தவர் யாவர் உளர்?

சூரபன்மனே! நீயும் அவருடைய மாயையில் அகப்பட்டு மிக மயங்கினுய். அக்கடவுள் எல்லாப் பொருளும் ஆவர். அவை அல்லவுமாய் இருப்பர்; அருவமுமாவர்; பலவுருவங்களையும் கொள்வர்; புதியவர் போல்வர்; பழையவர் போல்வர்; அநாதியுமாய்த் தோன்றுவர். நின்னல் ஆளப்படும் அண்டங்களும், ஏனைய எண்ணிறந்த அண்டங்களும் அவர் திருமேனியிலுள்ள உரோமத்தில் இருந்து உதித்து இறுதிக் காலத்தில் அதன்கண் ஒடுங்கும். அப்பெருமான் திருவுருவத்தை எவர் காணவல்லார்? உன்னுடைய ஆயிரத்தெட்டு அண்டங்களும் முருகக்கடவுளின் பேருருவத்திலுள்ள ஒரு உரோமத்தில் இருப்பதற்குப் போதா. இன்று நீ அதனை அறியாது அவரைக் குழந்தை என்று இகழ்ந்தாய். தேவர்களைச் சிறை நீக்கவும், நான்முகன் முதலியோரின் துயரைப் போக்கவும், தீயவர்களை அழித்து உலகங்களைப் பாதுகாக்கவும் இங்கு வந்துள்ளார். உன்னுடைய வாழ்நாளையும், வலிமையையும் வரத்தையும், சுற்றத்தையும் முருகனுடைய வேற்படை அழிக்கும். ஐயனை இகழ்ந்த நின் நாவினைக் கணப்பொழுதில் துணித்து உன் உயிரையும் போக்குவேன். ஆனல், அது நம்மைத் தூதனுப்பிய கடவுளின் கட்டளை அன்று. ஆதலால், அங்ஙனம் செய்யேன். நீயும் உன் சுற்றமும் அழியாது உய்யவேண்டுமானல் தேவர்களைச் சிறை விடுவித்துப் போரைத் தவிர்த்து, ஆறுமுகக் கடவுளின் திருவடிகளைப் புகலடைவாயாக" என்று முருகக்கடவுள் பெருமைகள் பற்பலவற்றையும் எடுத்துரைத்தார்.

**வீரவாகுதேவர் தன்னை எதிர்த்த வீரர்களைக்கொல்லுதல்**

சூரபன்மன் அவற்றைக் கேட்டுக் கோபங் கொண்டு, "உன்னைப் பல் முளைக்காத பாலகன் விடுத்த தூதுவன் என்று எண்ணிக் கொல்லாது விடுத்தேன். நீ இவ்விடத்தை விட்டுச் செல்லாது இன்னும் அவன் பெருமையையும் உன் வீரத்தையும் பேசுகிருய். அவன் கடவுளாயினும் ஆகுக. தேவர்கள் அனைவரையும் வென்ற நான் அவனுக்கு அஞ்சுவேனு? தேவர்களைச் சிறையினின்று நான் கனவிலுங்கூட விடமாட்டேன்; நீ எனக்கு எதிரிலிருந்து இறுமாந்து பல மொழிகளைப் பேசினுய். அவற்றையெல்லாம் ஒரு நொடிப்பொழுதில் காண்பேன்". என்று கூறித்

தன்னருகில் நின்ற வீரர்களில் ஆயிரவரை நோக்கி, "தூது வனைக் கொல்வது பழியாகும்; ஆதலால், இவனை விரைவிலே பிடித்துச் சிறையிடுங்கள்" என்று கட்டளையிட்டான். உடனே அவ்வீரர், வீரவாகு தேவரைப் பிடிப்பதற்குச் சூழ்ந்தார்கள். வீர வாகு தேவர் விரைந்து எழுந்து அவர்களுடைய ஆயிரம் குடுமி களையும் ஒரு கையால் பிடித்துச் சூரபன்மனின் அவைக் களத் திலேயே அடித்துக் கொன்று, சூரபன்மனுக்கு முன்னே எறிந்து, "எம்பெருமானுடைய வேற்படை இனி உன்னை அழித்தல் நிச்சயம்; நீ அழிவதற்கு முன்னர் ஐம்புலன்களும் விரும்புகின்ற பல பொருளையும் வேண்டியமட்டும் அனுபவித்து மனந்தெளிந்து இருப்பாய்; நான் போய்வருவேன்" என்று மொழிந்து அவ்விடத்தை விட்டு அகன்றார். அப்போது அவர் அமர்ந்திருந்த சிங்காதனமும் விண்வழியே மாயமாய் மறைந்து சென்றது.

திருவிருத்தம்–159
ஆகத் திருவிருத்தம்–639

—— oo ——

## 13. சதமுகன் வதைப் படலம்

### சூரபன்மன் சதமுகனை வீரவாகுதேவர்மேல் ஏவுதல்

வீரவாகு தேவர் ஆயிரம் வீரர்களைக் கொன்று அவைக் களத்தை விட்டுச் சென்றபோது, சூரபன்மன் சதமுகனை நோக்கி, "இவன் ஆறுமுகனுடைய ஆள்; இவன் இங்கு என்னை இகழ்ந்தது மன்றி, நம்முடைய ஆயிரம் வீரர்களைக் கொன்று விட்டுஞ் செல்லுகிறான். தூதுவனாகிய அவனைக் கொல் லுவது பழியாகும். ஆதலால், அவன் வலியை அடக்கிக் கட்டிக் கொண்டு வருவாயாக" என்றான். சதமுகன் சூரபன்மனை வணங் கிப் பல படைக்கலங்களை ஏந்தி, இலட்சம் வீரர்கள் தன்னைச் சூழ்ந்துவர வீரவாகு தேவரை அடைந்து மறித்து, "பல காவல்களை நீங்கி வரும் கள்வனே! நீ எங்கள் அரசனை இழிவாகப் பேசிச் சில வீரர்களையும் கொன்று எங்கே தப்பி ஓடுகிறாய்? உன் வலிமையை அழிப்பேன். எங்கு ஓடினாலும் உன்னை விட மாட்டேன்; நில்லடா" என்று கூறிக்கொண்டு நெருங்கினான்.

வீரவாகு தேவர், "சூரபன்மன் ஆறுமுகக்கடவுளின் திருவாக்கை ஏற்றுக் கொள்ளாது இகழ்ந்து என்மேல் ஆயிரம் வீரர்களை ஏவினன். நான் அவர்களைக் கொன்று சபையை நீங்கி வரும்போது பின்னும் இவ்வொரு வீரனை என்மேல் அனுப்பியுள்ளான். இனி இவனைக்கொன்று இந்நகரத்தையும் அழித்துச் செல்வேன்" என்று கருதி முருகக்கடவுளைத் தியானித்து, சதமுகனை நோக்கி, "போருக்கு வரும்படி அறைகூவினாய்; சேனையோடு விரைந்து வருக" என்று போருக்கு அழைத்தார்.

**சதமுகன் அழிவு**

அப்போது சதமுகனைச் சேர்ந்த இலட்சம் வீரர்களும் வீரவாகு தேவரை எதிர்த்து அவர் மீது பல படைக்கலங்களைச் செலுத்தினார்கள். அசுரர்கள் எய்த படைக்கலங்கள் துணிபட்டுத் துகளாய் அழிந்து போயின. வீரவாகு தேவர் இருபதினாயிரம் சிகரங்களைக் கொண்ட ஒரு குளிகையைப் பிடுங்கி அசுரர்கள்மேல் எறிந்தார். அஃது அவுணர்கள்மீது விழுந்து அவர்களுடைய் உடல்களைத் தூளாக்கியது. வீரர்களும் குளிகையும் அழிந்ததைக் கண்ட சதமுகன் கலக்கமடைந்து பின் தெளிவுற்று, இரும்புலக்கை, சூலம், வேல் முதலியவைகளை வீரவாகு தேவர் மீது செலுத்தினன். வீரவாகு தேவர் சினங்கொண்டு மலைபோன்ற ஒரு சிகரத்தைப் பிடுங்கி எறிந்தார். அவன் ஆயிரங் கணைகளைச் செலுத்தி அதனை அழித்து வீரவாகு தேவர் மார்பில் ஆயிரங் கணைகளைச் செலுத்தினன். வீரவாகு தேவர் விரைந்து சென்று அவன் வில்லைப் பிடுங்கி முறித்தெறிந்தார். சதமுகன் "இவனைப் பிடித்தற்கு இதுவே ஏற்ற சமயம்" என்று எண்ணித் தன் நூறு கைகளை நீட்டி அவரைப் பிடித்தான். அவர் அவனுடைய மார்பிலே தாக்கிப் பூமியில் வீழ்த்தி, ஒரு காலால் உதைத்தார். மற்றொரு காலால் அவனுடைய தலைகளையும் இடறி உருட்டிக் கொன்று, அதன்பின்னும் மிக்க கோபங்கொண்டு, "ஆறுமுகக் கடவுளின் உறுதிமொழிகளை இகழ்ந்த சூரபன்மன் இருக்கும் அத்தாணி மண்டபத்தை முதலில் அழித்து, அதன் பின்னர் இந் நகரத்தையும் அழிப்பேன்" என்று எண்ணங்கொண்டார்.

திருவிருத்தம்–21

ஆகத் திருவிருத்தம்–660

——oo——

## 14. காவலாளர் வதைப் படலம்

**வீரவாகுதேவர் பேருருவம் எடுத்தல்**

வீரவாகு தேவர் முருகக் கடவுளின் திருவடிகளைத் துதித்தார்; தோள்கள் திசையை எட்டவும், முடி வானுலகத்தை முட்டவும், கால்கள் பூவுலகத்தை அளக்கவும், மிகப்பெரியதோர் உருவம் எடுத்து நின்றார். அவ்வுருவத்தின் சுமையைத் தாங்க ஆற்றாது ஆதிசேடன் முதலிய நாகங்களும், ஆதிகூர்மமும் அஞ்சின. வீரமகேந்திரபுரி நடுங்கியது. அது சூரபன்மன் ஆணையால் இலங்கைபோல் கடலில் ஆழாதிருந்தது. அவருடைய திருவடிகள் பட்ட இடந்தோறும் நிலம் பிளந்தது. பிளவுகளினின்றும் எழுந்த நீர் சூரபன்மன் கோயிலை வளைந்து, அவன் அத்தாணி மண்டபத்திலும் போய், வீதிகளில் பாய்ந்து, நால்வகைப் படைகளையும் மாளிகைகளையும் இழுத்துக்கொண்டு போய்க் கடலில் சேர்த்தது. வீரவாகு தேவரின் பேருருவத்தைக் கண்டு யாவரும் பயந்து ஓடினார்கள்.

**காவலாளர்களை அழித்தல்**

சூரபன்மனின் அரண்மனையைக் காவல்புரிகின்ற ஐம்பது வெள்ளம் அசுரர்கள் வீரவாகு தேவரோடு போர்செய்ய எண்ணி வந்து, எழு, தோமரம், பிண்டிபாலம், தண்டம் முதலிய படைக்கலங்களை அவர்மேல் வீசி ஆரவாரம் செய்தார்கள். வீரவாகு தேவர் ஆயிரங்கோடி இடியைப்போலத் தன் தோள்களைத் தட்டி ஆரவாரம் செய்தார். அவ்வொலியைக் கேட்ட அசுரப் படைகள் கலங்கி அறிவழிந்தன. அவுண வீரர்கள் படைக்கலங்களை அவர்மீது மழைபோலப் பெய்தார்கள். அப்போது வீரவாகு தேவர் அசுரர்களைத் தன் கால்களால் சிலரை மிதித்தும், சிலரை நசுக்கியும், சிலரைத் தகர்த்தும், சிலரைத் துவைத்தும், சிலரை உதைத்தும், சிலர் தலைகளை நெறித்தும், சிலரைக் கழுத்தைத் திருகியும் கொன்றார். ஐம்பது வெள்ளம் சேனைகள் விரைவில் அழிந்தன. இறந்த அவுண வீரர்களின் ஊனை உண்டுகளித்தற்குப் பருந்து, காகம், பிசாசு முதலியன காத்திருந்தன.

திருவிருத்தம்-29

ஆகத் திருவிருத்தம்-689

—·—00——

## 15. நகர் அழி படலம்

### சூரபன்மனின் அத்தாணி மண்டபம் அழிதல்

வீரவாகு தேவர் சூரபன்மன் கோயிலின்முன் இருந்த ஒரு வேரத்தை (செய்குன்றை)க் கண்டார். அதனை ஒரு கையினால் பறித்து, சூரபன்மன் அவைக்களத்தில் வீசி இடிபோலக் கொக்கரித்தார். அவர் ஆர்ப்பொலிக்கு முன்னரே எறிந்த வேரம் அத்தாணி மண்டபத்தின்மேல் வீழ்ந்தது. அதன் பெரும்பகுதி சிதைந்தது; சுவர்கள் இடிந்தன; உத்திரங்கள் பொடியாயின; தூண்கள் முறிந்தன. அதைக்கண்டு அசுரர்கள் பயந்தோடினர்; சிலர் இறந்தனர்; சிலர் கை கால் ஒடியப்பெற்றனர்; சிலர் மெலிந்து புலம்பினர். இவற்றைச் சூரபன்மன் கண்டு, வீரவாகு தேவரின் வலிமையை நோக்கி வடவாமுகாக்கினியைப் போலச் சீற்றமடைந்தான். தன் அருகிலிருந்த ஐஞ்ஞூறு முகங்களும் ஆயிரம் தோள்களுமுடைய ஆயிரம் அவுண வீரர்களை நோக்கி, " ஆறுமுகனுடைய தூதுவன் மிகவுயர்ந்த ஒரு வேரத்தைப் பறித்து அத்தாணி மண்டபத்தின் மீது வீசித் தகர்த்தான். என் புகழும் அழிந்தது. தூதுவனைக் கொல்லுதல் வெற்றி ஆகாது. ஆதலால், அவனைக் கொல்லாது பிடித்துக்கொண்டு வருக. நான் அவன் உடலுக்கு ஊறுசெய்து தேவர்களோடு சிறை செய்வேன் " என்றான்.

### வீரமகேந்திரத்தின் வளங்களை அழித்தல்

ஆயிரம் அசுரர்களும் சூரபன்மன் கூறியவைகளைக் கேட்டு " அரசே ! நாம் முன்னமேயே தூதுவனின் இரத்தத்தை உயிரோடு பருக இருந்தோம். உம்முடைய ஆணையை எதிர்பார்த்து இத்துணைக் காலம் தாழ்த்தோம். இனி, அதனைச் செய்வோம் " என்று கூறி வணங்கி, வீரவாகு தேவரை நோக்கிச் சென்றார்கள். வீரவாகு தேவர் வீரமகேந்திரத்தின் வளங்களை அழிக்கக் கருதிச் சோலை, செய்குன்று, தெற்றி, மண்டபம், கோபுரம், குளிகை, கல்விச் சாலை முதலியவற்றைப் பிடுங்கி எறிந்தார் ; அளவில்லாத யானை, குதிரை, தேர் முதலியவைகளை எடுத்தெடுத்துத் திசைகள்தோறும் வீசினார் ; மதில்களை உதைத்து வீழ்த்திச் சூரபன்மன் கோயிலையும் அழித்தார் ; அதைச் சூழ்ந்த அகழியை

யும் தூர்த்தார். வீரவாகு தேவர் எடுத்து வீசிய சூளிகைகள், செய்குன்றுகள், சோலைகள் முதலியன விண்ணிடம் எங்கும் சென்றன; தேவ கங்கையையும் தூர்த்தன. அப்பொருள்கள் மேலே வரக்கண்ட தேவர்கள் அஞ்சிக் குலைந்து ஓடினார்கள். உலகமெங்கும் சென்று வீழ்ந்தவைகள் அங்கங்குள்ள உயிர்களை வருத்தின. வீரமகேந்திரத்து அசுரர்களில் பலர் அழிந்தனர். துன்பம் தாங்காது வருந்தி ஏங்கும் அசுரர்களின் ஒலி ஏழ்கடலின் ஒலியை வென்றது. இறந்த அசுரர்களின் குருதிப் பெருக்கால் நகரம் முழுவதும் சேறாகியது. புகழ்பெற்ற வீரமகேந்திரபுரி அழிந்து பழைய வளங்களை யெல்லாம் இழந்து நின்றது.

திருவிருத்தம்–81

ஆகத் திருவிருத்தம்–770

——oo——

# 16. சகத்திர வாகுகள் வதைப் படலம்

### சகத்திரவாகுகள் வீரவாகு தேவரை எதிர்த்தல்

வீரமகேந்திரபுரி இவ்வாறு அழிந்தபோது, ஐந்நூறு தலைகளையும் ஆயிரங் கைகளையும் உடைய **சகத்திர வாகுகள்** இடிபோல ஆரவாரம் செய்து, “இரண்டு கைகளும் ஒரு முகமும் உடைய தேவன் ஒருவனை வெல்லுவதற்கு, ஆயிரம் கைகளும் ஐந்நூறு தலைகளையும் உடைய ஆயிரம் அசுரர்கள் செல்வது பழியாகும்” என்று மனம் தளர்ந்தனர்; பின்பு, “இவன் மாயையால் மறைந்து வந்தவன்; ஆதலால் இவன் மறைந்து விண்ணில் செல்லுமுன் நாம் சென்று எதிர்க்கவேண்டும்” எனக் கருதி உடல் வியர்க்கக் கோபம் கொண்டு ஓடிவந்து வீரவாகு தேவரை எதிர்த்தனர்.

### சகத்திர வாகுகள் அழிதல்

வீரவாகு தேவர் அவர்களைக் கண்டு நகைத்தார். ஒரு மராமரத்தைப் பறித்துப் பலமுறை சுழற்றினார். சகத்திர வாகுகள், தோமரம் குலிசம் முதலிய பல படைகளை விடுத்தார்கள். வீரவாகு தேவர் அவற்றை மராமரத்தினால் அடித்துப் பொடியாக்கினார். சகத்திர வாகுகள், வீரவாகு தேவரை நெருங்கிப்

போர்புரிய முயன்றனர். வீரவாகு தேவர் அவர்களின் தோள், தலை, மார்பு முதலியவைகள் அழியும்படி மராமரத்தினால் அடித்துக் கொன்றார். அவர்கள் உடம்பினின்றும் எழுந்த குருதி வெள்ளம் நகரின் வளங்களையெல்லாம் வாரிக்கொண்டுபோய்க் கடலில் சேர்த்தது. வீரவாகு தேவர், தினைப்பொழுதில் சகத்திர வாகுகள் எல்லோரையும் அழித்துப் போர்க்களத்தில் தனித்து நின்றார்.

திருவிருத்தம்–33
ஆகத் திருவிருத்தம்–803

——oo——

## 17. வச்சிரவாகு வதைப் படலம்

### சூரபன்மன் சினம் கொள்ளல்

சகத்திர வாகுகள் போர்புரிவதை ஆகாயத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த சூரபன்மனின் தூதுவர்கள், ஓடிப் போய்ச் சூரபன்மனை அடைந்து, "அரசனே! சகத்திர வாகுகள் தூதுவனோடு போர்புரிய, அத்தூதுவன் ஒரு மராமரத்தைப் பிடுங்கி அதனால் அவர்கள் எல்லோரையும் அடித்துக் கொன்றான்; இதுவே நிகழ்ந்த செய்கை" என்றார்கள். அதனைக்கேட்ட சூரபன்மன் வடவாமுகாக்கினிபோலக் கோபித்து வருந்தி, "உமாதேவி பெற்ற ஒரு சிறுபாலகன் அனுப்பிய தூதுவனொருவன் நம்முன் வந்து அவமதித்தான்; அசுரர்களில் பலரைக் கொன்று இன்னும் இங்கு இருக்கிறான். நமது வெற்றி நன்று! நன்று!!" என்று நகைத்தான்.

### வச்சிரவாகு போருக்கெழுதல்

சூரபன்மனின் இளைய குமாரனாகிய பத்துச் சிரங்களையுடைய **வச்சிரவாகு**, சூரபன்மனின் கோபத்தைக்கண்டு எழுந்து சென்று அவன் கால்களை வணங்கி, "தந்தையே! ஓர் எளிய தூதுவன் பொருட்டு நீர் இவ்வாறு கூறி வருந்துவது தகுமோ? தாங்கள் இங்கே இருங்கள். நான் சென்று அவன் வலிமையை அழித்து அவனை இங்குப் பிடித்துக்கொண்டு வருவேன்" என்று கூறினான். அவன் மொழியைக் கேட்ட சூரபன்மன் மகிழ்ந்து,

"நீ அவ்வாறே செய்க" என்று கூறினான். வச்சிரவாகு, விடை பெற்றுச் சென்று போர்க்கோலம் பூண்டு, தன் தோழர்களைப் பார்த்து, "ஆறுமுகன் விடுத்த தூதுவனைப் போரில் வென்று கயிற்றினால் கட்டி இங்குக் கொண்டு வருவேன். நீங்களும் போர்க்கோலம் கொண்டு வருவீராக" என்றான். தோழர்களும் மற்றை வீரர்களும் விரைந்து போர்க்கோலம் பூண்டு வந்தனர். வச்சிரவாகு ஆயிரம் குதிரைகள் பூட்டிய ஒரு தேரின்மீது ஏறினான். படைத் தலைவர்களின் புதல்வர்களும், அமைச்சர்களின் புதல்வர்களும் ஆகிய அத்தோழர்களும் தேர்மீது ஏறி வச்சிரவாகுவைச் சூழ்ந்து வந்தார்கள். ஐஞ்ஞூறு வெள்ளம் தேர்களும், ஐஞ்ஞூறு வெள்ளம் யானைகளும், ஆயிரம் வெள்ளம் குதிரைகளும், இரண்டாயிரம் வெள்ளம் காலாட்களும் அவனுக்குத் துணையாக வந்து சேர்ந்தன. வச்சிரவாகு, வீரவாகு தேவரை நோக்கி விரைந்து செல்லும்பொழுது காகம், கழுகு, பருந்து, கூகை முதலியன கூடி இரங்கின; அவன் கையிலிருந்து வில் விழுந்தது; அம்பறுத்தூணியும் அறுந்தது; தேர்க் கொடிகள் அறுந்து வீழ்ந்தன; அவன் இடத்தோளும் இடக் கண்களும் துடித்தன. இவ்வாறு பல தீய சகுனங்கள் நிகழ்ந்தன. இவற்றைச் சிந்தியாமல் வச்சிரவாகு போர்க்களத்தை அடைந்தான்.

**வச்சிரவாகு - வீரவாகுதேவர் போர்**

வீரவாகு தேவர் வச்சிரவாகு வருவதைக்கண்டு, "இங்கு வருபவன் சூரபன்மன் அல்லன்; சூரபன்மனின் புதல்வர்களில் ஒருவன். இவனை அழித்து, இன்று மாலை எம்பெருமான் திருவடிகளைத் தரிசிக்கும்படி விரைந்து போவேன். அங்ஙனம் போகா விட்டால் நான் ஆறுமுகப்பெருமான் தூதுவன் ஆவேனோ?" என்று கூறி முருகக் கடவுளை வணங்கித் துதித்து, வானமும் குலுங்கத் தோள்களைத் தட்டி ஆரவாரம் செய்தார். ஆரவார ஒலியைக் கேட்டு அசுர சேனைகள் நடுநடுங்கின. வச்சிரவாகு அவ்வொலியைக்கேட்டு நடுங்கி, "பதினான்கு உலகங்களிலும் இப்பேரொலியைப் போல் இதுவரையில் கேட்டதில்லை. இவ்வொலி யாது?" என்று ஏவலாளர்களைக் கேட்டான். தேர்ப் பாகனாகிய **விசயன்** வச்சிரவாகுவை வணங்கி, "அரச

குமாரனே! என்னைத் தேர்ப்பாகன் என்று நினைத்து என் சொல்லை இகழாதே. நீ சேனைகளோடு வருவதைக் கண்டு ஆரவாரம் செய்த தூதுவனின் ஒலி இது" என்றான். உடனே வச்சிரவாகு தீப்பொறி பறக்கச் சிரித்துக் கனைத்து, "நான் சென்று ஒரு கணப்பொழுதினுள் இத்தூதுவனின் போர் வலியைப் போக்கிப் பிடித்துக்கொண்டு வந்து என் தந்தையின் முன்னே நிறுத்துவேன்" என்றான். அவனுக்குமுன் அசுர வீரர்கள் ஆரவாரம்செய்து விற்களையும், அம்புகளையும், முசலம், கலப்பை, தண்டம், சூலம் முதலிய படைக்கலங்களையும் விடுத்துப் போர் செய்தார்கள். வீரவாகு தேவர் மிகக் கோபங்கொண்டு சில அசுரர்களின் குடுமியைப் பிடித்துப் பூமியிலும், மலைகளிலும் அடித்தார்; சிலரைக் கால்களால் தேய்த்தார்; யானை, குதிரை, தேர் முதலியவற்றை உதைத்துத் தள்ளினார். சிலரை உதைத்தும், கிழித்தும், துவைத்தும், அரைத்தும், மராமரத்தால் அடித்தும் அழித்தார். அப்போது வச்சிரவாகுவின் தோழர்கள் வீரவாகுவின் அருகில் வந்து போர்புரிந்தனர். அவர்களையும் வீரவாகு தேவர் மராமரத் தண்டினால் அடித்து அழித்தார்.

**வச்சிரவாகு அழிதல்**

அசுரர்கள் அழிவதை வச்சிரவாகு பார்த்துக் கோபம் கொண்டு, வீரவாகு தேவருக்கு எதிரே வந்தான். வீரவாகு தேவர் மிகப் பெரியதோர் வடிவம்கொண்டு இடிபோல ஆரவாரித்துத் தீயெழச் சிரித்தார். வச்சிரவாகு வீரவாகுவைப் பார்த்து, "தூதுவனே! உன்னுடைய வீரம் நன்று. உன்னை எதிர்த்த வீரர்களையெல்லாம் கொன்றுவிட்டோம் என்று நீ நினைத்தாய். நான் உன் வலிமையைக் கெடுத்து உன்னைப் பிடித்துக்கொண்டுபோய் என் தந்தையின்முன் நிறுத்துவேன்" என்றான். வீரவாகு தேவர் அவனை நோக்கி, "நான் உன்னை வெல்ல முயல்கிறேன். நீ என்னை வெல்ல முயல்கிறாய். நாம் இருவரும் அதனைச் சொல்லிக்கொண்டு நிற்பதால் பயனென்ன? விரைந்து போர் செய்வாயாக" என்றார். வச்சிரவாகு, வில்லை வளைத்து நாண் ஒலி செய்து ஆயிரம் கணைகளை வீரவாகு தேவர் மேல் விடுத்தான். வீரவாகு தேவர் அக்கணைகளைப் பிடித்துத் தூளாக்கினார். வச்சிரவாகு கோபித்துப் பதினாயிரம் கணை

களைத் தூண்டினான். வீரவாகு தேவர் அதனை நோக்கி, போரில் இறந்து கிடந்த அசுரர்கள் செலுத்திய எழுப் படை ஒன்றை எடுத்து, அக்கணைகளை அடித்து வீழ்த்தினார். வச்சிரவாகு பதினாயிரம் கணைகள் எய்து, வீரவாகு தேவர் எடுத்த மழுவைப் பொடிபடச் செய்தான். அவருடைய தலையிலும், கழுத்திலும், தோள்களிலும், மார்பிலும், கால்களிலும் தனித்தனி ஆயிரம் கணைகளைத் தூண்டினான். வீரவாகு தேவர் ஓர் இமைப்பொழுது வருந்தினார். பின்பு, விரைந்து போய் வச்சிர வாகுவின் தேரை உதைத்துக் குதிரைகளையும் பாகனையும் அழித்தார். வச்சிரவாகு வேறொரு தேரில் பாய்ந்து வீரவாகு தேவருடைய நெற்றியில் ஆயிரங்கணைகளை விடுத்தான். வீரவாகு தேவர் வச்சிரவாகுவின் தேரைக் கையால் எடுத்து விண்ணில் எறிந்தார். அவனுடைய மற்றைத் தேர்களையும் விண்ணில் தூக்கி எறிந்தும், உதைத்தும் அழித்தார். தேரோடு எறியப்பட்ட வச்சிரவாகு இலட்சம் யோசனை தூரம் ஆகாயத்தில் சென்று வீரவாகு தேவரின் முன்வந்து விழுந்தான். உடனே வச்சிரவாகு, வீரவாகு தேவருடன் போர் செய்யக் கருதினான். வீரவாகு தேவர், வச்சிரவாகுவின் வில்லைப் பிடுங்கி முறித்து எறிந்தார். வச்சிரவாகு வாட்படை கொண்டு எதிர்த்தான். வீரவாகு தேவர் தம்முடைய வாட்படை எடுத்து அவன் கையை வெட்டி வீழ்த்தினார். ஒரு கை வெட்டுப்பட்டதும் மற்றொரு கையால் வச்சிரவாகு ஒரு தண்டாயுதத்தை எடுத்து அவர் மேல் எறிந்தான். வீரவாகு தேவர் அத்தண்டாயுதத்தையும், அவனுடைய பத்துத் தலைகளையும் வாட்படையினால் அறுத்து, அவனைக் கொன்றார். அதனைக் கண்டு அசுரர்கள் புலம்பிப் புறங்காட்டி ஓடினர். அப்போது கதிரவன், வச்சிரவாகு இறந்ததைக் கண்டான்; "நான் இங்கு நிற்பேனானால் சூரபன்மன் கேட்டுணர்ந்து எனக்குத் துன்பம் இழைப்பான்" என்று அஞ்சியவனாய் மேற்குக் கடலில் மறைந்து சென்றான்.

திருவிருத்தம்-101
ஆகத் திருவிருத்தம்–904

——oo——

## 18. யாளிமுகன் வதைப் படலம்

### வீரவாகு தேவர் இலங்கையை அடைதல்

வச்சிரவாகு இறந்த பின் வீரவாகு தேவரோடு எவரும் போர் செய்ய வரவில்லை. **மாலைக் காலம்** வருவதைக் கண்டு வீரவாகு தேவர், ஆறுமுகக் கடவுளின் திருவடிகளை நினைத்துத் திரும்பிச் செல்ல எண்ணினர்; போர்க்களத்தை விட்டுத் தெருவழியே காற்றும், கனலும், காலனும் போலச் சென்றார். அவரைக் கண்ட அசுரர்கள், “இவன் நமக்கு ஓர் இயமன்; இவனை அணுகாதீர்கள்; கொல்லுவான்” என்று அரற்றி ஓடினர்கள். வீரவாகு தேவர் மகேந்திரபுரியை விட்டுப் புறப்பட்டு ஆகாய வழியாக வடதிசையிலுள்ள இலங்கை மலையை அடைந்தார்.

### யாளிமுகன் வீரவாகு தேவரைப் பற்றி அறிதல்

அப்போது இலங்கையைக் காவல் செய்துகொண்டு இருந்த **யாளிமுகன்** முப்புரத்து அசுரர்களின் வலிமையை உடையவன்; அவன் ஆயிரம் முகங்களையும், எமபுரத்தின் வாயில்கள் போன்ற வாய்களையும், இரண்டாயிரம் கைகளையும், மேரு மலையைப் போன்ற உடம்பையும் வடவாமுகாக்கினியைப் போன்ற கண்களையும் கொண்டவன்; அதிவீரனின் தந்தையுமாவன். அவன் அன்று காலையில் சூரபன்மனைப் போய்க்கண்டு திரும்பி வந்து, தன் மகன் அதிவீரன் இறந்தமையைக் கேட்டுப் புலம்பி ஒருவாறு தேறி, அவ்விலங்கை மலையில் இருந்தான். அவன், வீரவாகு தேவர் விரைந்து செல்வதைக் கண்டான்; “ஆகாய வழியைக் கடந்துவரும் இக்கள்வன் யார்?” என்று வினவினன். அங்கிருந்த ஏவலாளன் ஒருவன் யாளிமுகனைப் பார்த்து, “அரசனே! நீ இன்று காலையில் இங்கே உன் மகன் அதிவீரனைக் காவல் வைத்து மகேந்திரபுரம் சென்றபோது, இவன் இங்கு வந்து போர் செய்து அதிவீரனையும், வீரசிங்கனையும் கொன்றவன். இவ்வீரன் இலங்கையில் வந்து பாய்ந்ததும், இலங்கை கடலில் ஆழ்ந்தது; அதனால், பல வீரர்கள் இறந்தனர்; பலர் பயந்து ஓடினர். இவன் சென்ற பிறகே மீண்டும் இலங்கை எழுந்தது. இவ்வீரன் சூரபன்மன் நகருக்குச் சென்று அங்குள்ள வளங்களை

அழித்து நம்மவர்களாகிய அசுரர்களை வென்று அதன்பின் எதிர்ப்பு இல்லாமையால் மீண்டவன்" என்றான்.

**யாளிமுகன் போர்**

யாளிமுகன் அவ்வார்த்தைகளைக் கேட்டுப் பெருங்கோபம் கொண்டு, "என் காவலைக் கடந்து என் மகனைக் கொன்று, மகேந்திரபுரி சென்று திரும்பும் இக்கள்வனைக் கொல்வேன்" என்று கூறி, ஒரு வாட்படையை ஏந்திச் சில சேனைகளோடு வீரவாகு தேவர் முன் சென்று, "மதியில்லாதவனே! நீ என் குமாரனைக் கொன்றாய்; இனி, கடலை நீ தாண்டிச் செல்ல முடியாது. நான் உன்னைப் போரில் வெல்வேன்" என்றான். வீரவாகு தேவர் நகைத்து, "தீயவனே! ஒரு தலையுடைய எனது உயர்வையும், ஆயிரம் தலைகள் கொண்ட உனது இழிவையும் போரில் காண்போம்; பேருருவங்கொண்ட தோற்றத்தை மதியாதே; உன்னுடைய ஆயிரம் யாளி முகங்களை அறுத்து வீழ்த்தி நாய்கள் கவரும்படி இரையாகக் கொடுப்பேன்; இஃது உறுதியாகும்" என்றார்.

அப்போது யாளிமுகனின் சேனைவீரர்கள், வீரவாகு தேவரைச் சூழ்ந்து படைக்கலங்களை எய்து போரிட்டனர். வீரவாகு தேவர் அசுரக் கூட்டத்துள் நுழைந்து அவர்களுடைய முகம், மார்பு, கை, கால் முதலிய உறுப்புக்களை வெட்டி வீழ்த்திக் கொன்றார். அதனைக் கண்டு கோபமுற்ற யாளிமுகன் தன் ஆயிரங் கைகளினால் வீரவாகு தேவரை இடிபோல் எற்றினான். வீரவாகுதேவர் யாளிமுகனின் ஆயிரங் கைகளையும் ஒரு கையால் பிடித்து வாட்படையினால் வெட்டினார். யாளிமுகன் மற்றை ஆயிரங் கைகளினாலும் ஆயிரம் மலைகளைப் பறித்து அவர்மேல் வீசினான். அம்மலைகள் அவர் திருமேனியிற்பட்டு உடைந்து துகளாய் வீழ்ந்தன. வீரவாகுதேவர் மற்றை ஆயிரங் கைகளையும் வெட்டித் தள்ளினார். அவன், தன் ஆயிரம் துதிக்கைகளால் வீரவாகுதேவரைப் பிடிக்க நீட்டினான். வீரவாகுதேவர் யாளிமுகனுடைய ஆயிரம் தலைகளையும் ஒருங்கே அறுத்து வீழ்த்தினார்.

திருவிருத்தம்–43

ஆகத் திருவிருத்தம்–947

——oo——

## 19. வீரவாகு மீட்சிப் படலம்

### திருச்செந்தூருக்குத் திரும்புதல்

வீரவாகுதேவர் யாளிமுகனை அழித்தபின்பு, கடலைத் தாண்டிக் கந்தமாதன மலையின் பக்கத்திலே கடற்கரையிலுள்ள திருச்செந்திற்பதியை அடைந்தார். அவரைக்கண்டு பூதசேனைகள் முழுமதியைக் கண்ட கடல்போல் ஆரவாரம் செய்தன. அப்பூதகணங்களின் தலைவர்கள் வந்து கரங்குவித்து வீரவாகு தேவரைத் தழுவி அன்பு பாராட்டினார்கள். வீரவாகு தேவரும் தம்மைத் தழுவிய தலைவர்களைத் தாமும் தழுவிக்கொண்டு "இழிஞர்களாகிய அவுணர்கள் வாழும் ஊரினை அடைந்ததனால் வந்த பாவம் உங்களைக் கண்டமையால் நீங்கிற்று" என்று பேரன்புடன் முகமன்கூறினார்; இலக்கத்தெண்மர்களும் வந்து வணங்க அவர்களைத் தழுவி, யாவர்களும் சூழ, முருகக் கடவுளுடைய கோயிலை அடைந்தார்; முருகக் கடவுள் வீற்றிருக்கும் திருக்கோலத்தை முன்பு தரிசித்து மகிழ்ந்து திருவடித் தாமரைகளை மும்முறை வணங்கித் துதித்து நின்றார்.

### ஆறுமுகக் கடவுள் சூரபன்மன் பதிலை வினவுதல்

ஆறுமுகக் கடவுள், "வீரவாகுவே! நீ சூரபன்மனுக்கு முன்பு சென்று நாம் சொல்லிய வார்த்தைகளைச் சொல்ல அவன் உரைத்த பதிலையும், நீ மீண்டுவந்த விதத்தையும் முறையாகச் சொல்வாயாக" என்றார். வீரவாகு தேவர், "எம்பெருமானே! தேவரீரின் திருவாக்கைச் சூரபன்மனுக்குச் சொன்னேன்; அவன், 'தேவர்களைச் சிறையிலிருந்து விடேன்' என்று சினந்து கூறினான். ஆதலால், அடியேன் அவ்விடம் விட்டு நீங்கி விரைவில் இங்கு வந்தேன்" என்றார். முருகக் கடவுள், "உன் செய்கைகளுள் ஒன்றையும் சொல்லவில்லை; அவற்றைச் சொல்வாயாக" என்றார். வீரவாகு தேவர், "சூரபன்மன் நகரத்திற்குச் சென்று மீண்டபோது அடியேனைத் தடுத்தவர்களைத் தேவரீரின் திருவடிகளின் துணைகொண்டு கொலை புரிந்து வந்தேன்" என்றார். ஆறுமுகக் கடவுளும், "பகைவர்களின் துன்பத்தினால் நீ மிகவும் வருந்தினாய் போலும்" என்று அருளிச் செய்தார்.

அப்போது முருகக் கடவுள், திருமால் பிரமன் இந்திரன் முதலிய தேவர்களைப் பார்த்து, "தேவர்களின் சிறையை விடுத்து நன்மை அடைகுதி என்று சூரபன்மனுக்குச் சொல்லியனுப்பிய மொழிகளை அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. தேவர்களைச் சிறையினின்று நீக்கமுடியாது என்று கூறிவிட்டான். ஆதலால், நாம் நாளைக்கு அவனோடு போர் செய்தற்குப் புறப்படுவோம்" என்று கூறியருளினர். முருகக் கடவுள் மொழிந்தவைகளைக் கேட்ட தேவர்கள் மிக மகிழ்ந்தார்கள்; "நம்முடைய துன்பம் தொலைந்தது" என்று களிப்படைந்தார்கள். வீரவாகு தேவர் தாம் சயந்தனைக் கண்டதையும் அவனைத் தேற்றி வந்ததையும் இந்திரனுக்குக் கூறி, அவன் மனத்தைத் தெளிவித்தார்.

திருவிருத்தம்–22
ஆகத் திருவிருத்தம்–969

——oo——

# 20. சூரன் நகர்புரி படலம்

**வச்சிரவாகு மறைவுக்குச் சூரபன்மன் வருந்துதல்**

சேனைகளோடு வச்சிரவாகு இறந்ததையும், வீரவாகு தேவர் மீண்டு சென்றதையும் தூதுவர்கள் சூரபன்மனிடம் போய்ச் சோகத்துடன் கூறினர்கள். சூரபன்மன் அதனைக் கேட்டுத் துன்பக் கடலில் வீழ்ந்து வருந்தினன்; மகன்பால் வைத்த அன்பால் கண்ணீர் சிந்திக் கதறிப் புலம்பினன். அவனுடைய சுற்றத்தார்களும், பரிசனங்களும் அழுதார்கள். பதுமகோமளை கூந்தல் அவிழ அடித்துக்கொண்டு கதறினள். மற்றை மனைவியரும், சேடியர்களும் பிற பெண்களும் அழுதார்கள். மகேந்திர புரியின் மங்கல ஒலிகளெல்லாம் அடங்கி அழுகை ஒலி மிகுந்தது.

**சூரபன்மனைத் தேற்றுதல்**

அப்பொழுது **தருமகோபன்** என்னும் துன்மந்திரி சூரபன்மனை வந்துவணங்கி, "அரசர்க்கரசே! நீ ஆயிரத்தெட்டு அண்டங்களைப் பெற்றுள்ளாய்; ஒப்பற்ற செல்வங்களைக் கொண்டுள்ளாய்; சொல்லுதற்கரிய வலிமையும், சிறந்த கீர்த்தியும், வாழ்நாளும் கொண்டுள்ளாய். உலகமெல்லாம் அழிந்தாலும் அழியாது

நிற்கும் நீ அழுதாயானால், மும்மூர்த்திகளும் நகைப்பர்; தேவர்களும் நகைப்பர்; உன் புகழும் குன்றும். வெற்றியில் சிறந்த அரசர்கள் தாய் இறந்தாலும், தந்தை இறந்தாலும், மக்கள் இறந்தாலும், தம்மைச் சார்ந்த பிறர் இறந்தாலும் மனவலி குன்றார். இறக்கும் விதி வந்தால் மிகப்பெரிய வலிமையுடையவர்களைப் பெண்களும் வெல்லுவர். ஆதலால், உன் மகனுக்கு வாழ்நாள் குறுகியதால் தூதுவனும் அவனைக் கொன்றான். பகைவர்களின் வலிமையை ஆராய்ந்து செய்யவேண்டியவைகளைச் செய்யாமல் இங்ஙனம் வருந்துவதும் ஆண்மைக்குத் தகுமோ! வரம்பில் வரங்களையும், வீரத்தையும் பெற்ற நீ வருந்துதல் உன் தலைமைக்கு ஏற்குமோ! வருந்தாதே, வருந்தாதே" என்று தேற்றினான்.

சூரபன்மன் சிறிது மனந்தெளிந்து, தன் அருகிருந்த தூதுவரை நோக்கி, "என் மகனைக் கொன்று இந் நகரை அழித்திட்ட வலிய தூதுவன் அப்பால் சென்றதை நீங்கள் பார்த்தீர்களா? அல்லது பிறர் சொல்லக் கேட்டீர்களா? உண்மையைச் சொல்லுங்கள்" என்றான். தூதுவர்கள், "இங்கே தூது வந்தவன் இந்நகரை நீங்கி இலங்கை மலையை நோக்கிச் செல்லக் கண்டோம். இஃது உண்மையே" என்று கூறினார்கள்.

**அழிந்த நகரத்தைச் சீர் செய்தல்**

சூரபன்மன் அதனைக்கேட்டுத் தன் மருங்கில் நிற்கின்ற ஏவலாளர்களை நோக்கி, "நீங்கள் விரைந்து சென்று நான்முகனை அழைத்து வருதிர்" என்று கூறினான். அவர்கள் அவனை வணங்கி, "அரசர்க்கரசே! 'இந்த அண்டத்து நான்முகன், 'இந்திரன் முதலிய தேவர்களோடு சேர்ந்து, இப்பூமியில் சேனைகளுடன் வந்து இருக்கின்ற ஆறுமுகனோடு இருக்கிறான்' என்று கண்டவர்கள் கூறினார்கள்" என்று தெரிவித்தார்கள். சூரபன்மன் நகைத்து, "மற்றை அண்டத்து நான்முகனை அழைத்து வருதிர்" என்றான். அங்ஙனம் அழைத்து வந்த மற்றை அண்டத்து நான்முகனைச் சூரபன்மன் நோக்கி, "அழிந்த இந் நகரை முன்போல் செய்வாயாக" என்றான். நான்முகன் சூரபன்மனைப் பார்த்து, "அரசர்க்கரசே! இமைப் பொழுதில் உன் நகரை முன்போல் அழகுறச் செய்வேன்" என்று கூறி வீதிகள், சிகரங்

கள், வேரங்கள், சோலைகள், வாவிகள், மதில்கள் முதலியவைகளை யும் சூரபன்மனுடைய கோயிலையும் அழகுற அமைத்தான். அவற்றைச் சூரபன்மன் பார்த்து மகிழ்ந்து நான்முகனை நோக்கி, "நீ உன்னுடைய அண்டத்திற்குப் போய்ப் படைத்தல் தொழிலைச் செய்து கொண்டிருப்பாயாக" என்று கூறி அனுப் பினுன். நான்முகன் மற்றை அண்டத்துக்குப் போய்த் தானிருக் கும் சத்திய உலகத்தை அடைந்தான்.

திருவிருத்தம்–29
ஆகத் திருவிருத்தம்–998

—— oo ——

## 21. சூரன் அமைச்சியல் படலம்

**முருகக்கடவுள் போருக்கு வருவதைச் சூரபன்மன் அறிதல்**

சூரபன்மன் வச்சிரவாகுவை இழந்த துன்பத்திலிருந்து ஒரு வாறு தேறி, அத்தாணிமண்டபத்தில் அரசுவீற்றிருந்தான். அப் போது முன்னர் அவனுல் அனுப்பப்பட்ட **பகன், மயூரன்** முதலிய ஒற்றர்கள், கடலைத்தாண்டித் திருச்செந்தூருக்குப்போய் ஆறுமுகக்கடவுளின் சேனைகளையும் பிறவற்றையும் கண்டு திரும்பி வந்தனர்; சூரபன்மனைக் கண்டு அவன் கால்களை வணங்கி நின்று, "அரசே! சிவபெருமானின் மகனுகிய ஆறுமு கக்கடவுள் செந்தில் மாநகரில் எழுந்தருளியிருக்கிறுர். அவருடன் இரண்டாயிரம் பூதப் படைகள் இருக்கின்றன; நூற்றெட்டுப் படைத் தலைவர்களும் இருக்கின்றனர். மற்றும் பெருஞ்சிறப்பினை யுடைய இலக்கத்தொன்பது வீரர்களும் உள்ளனர். உன் தம்பி யாகிய தாரகனையும், கிரவுஞ்ச மலையையும் வேற்படையினுல் அவர் அழித்தார்; இஃது உண்மை. அவர் ஒரு தூதுவனையும் இங்கு அனுப்பினுர். அவன் இலங்கையை அழித்து, இங்கு வந்து திரும்பும் போது இலங்கையைக் காவல் புரிந்து கொண்டிருந்த யாளிமுகனைக் கொன்று கடலைத் தாண்டிச் சென்றுன். சிவ குமார ராகிய முருகக்கடவுள் இங்கு வந்து போர் செய்ய எண்ணியுள் ளார். அதற்கு ஏற்ற ஏற்பாடுகளை நினைத்துச் செய்வாயாக" என்றுர்கள்.

**சூரபன்மன் ஆலோசனை கேட்டல்**

சூரபன்மன் தூதுவர்கள் கூறியதைக் கேட்டான்; சிங்கமுகாசுரன், அமைச்சர்கள், சேனைத் தலைவர்கள் முதலியவர்களை மிகவிரைவில் அழைப்பித்தான். அவர்கள் யாவரும் வந்து சூரபன்மனை வணங்கிப் பக்கத்தில் இருந்தார்கள். சூரபன்மன் அவர்களைப் பார்த்துக் கோபத்தினால் பெருமூச்சுவிட்டு, "நம் பகைவர்களாகிய தேவர்களை நான் நீங்காத சிறையிலிட்டேன். அதனை இந்திரன் சிவபெருமானிடம் சென்று கூறினான். சிவபெருமான் ஒரு குமாரனைப் பெற்று, 'மகனே! நீ தேவர்களுடைய சிறையை நீக்கி வருவாயாக' என்று கூறி இங்கு அனுப்பினார். அவன், நந்தி கணவீரர்களும் பூத கணங்களும் சூழவும், நான்முகனும் திருமாலும் தேவர்களும் துதிக்கவும், பூவுலகில் வந்தான்; வழியில் எதிர்ப்பட்ட கிரவுஞ்சமலையையும் தாரகனையும் கொன்றான்; அதன்பின் கடற்கரையில் வந்திருந்துகொண்டு என்னிடம் ஒரு தூதுவனை அனுப்பினான். அத் தூதுவன் கடலைத் தாண்டி, இலங்கை மலையில் பாய்ந்து அதனை அழித்தான்; இந்நகரில் வந்து என் அவைக்களத்தில் அஞ்சாமல் வீற்றிருந்து தேவர்கள் சார்பில் சில வார்த்தைகளைப் பேசி என் கண்முன்னே சில அசுரர்களைக் கொன்று சென்றான்; என் இளைய மகனாகிய வச்சிரவாகுவைக் கொன்றான்; இந்த நகரத்தையும் அழித்தான்; அளவிறந்த சேனைகளைக் கொன்றான். தூதுவனாய் வந்த அவனைப் பிடித்துச் சிறையில் வைத்திலேன்; கொலை செய்திலேன்; பெரும்பழியைப் பெற்றேன். அவன் வீரமகேந்திரபுரியிலிருந்து மீண்டு செல்லுகையில் இலங்கையில் யாளிமுகனைக் கொன்று கடலைத் தாண்டி நிலவுலகத்தை அடைந்தான். சிவகுமாரன் கடலைத் தாண்டி இங்கு வந்து நம்மோடு போர்புரிய எண்ணியுள்ளான் போலும்! இவற்றையெல்லாம் ஒற்றர்கள் வந்துகூறினர். நான் சென்று ஓர் இமைப்பொழுதில் பூதசேனைகளையும் வீரர்களையும் சிவகுமாரனையும் வென்று வரவல்லேன். சூரன் என்னும் பெயர்பெற்ற நான் பூதர்களோடும் ஒரு பாலகனோடும் போர் செய்து வெல்லினும் வீரமன்று என்று கருதிச் சும்மாவிருந்தேன். மிகச் சிறந்த வலிமையும் செல்வமும் பெற்றிருந்தவரும் ஒரு வினையைத் தம் துணைவர்களோடு ஆராய்ந்தே செய்வர். ஆதலால், செய்யத் தகுந்தவைகளைக் கூறுங்கள்" என்றான்.

**மகிடன்**

சூரபன்மன் கூறியவைகளை அங்கிருந்த யாவரும் கேட்டனர். அப்போது அமைச்சனுகிய **மகிடன்** என்பவன் சூரபன்மனை நோக்கி வணங்கி நின்று, "கிரவுஞ்ச மலையையும், திருமாலை வென்ற உன் தம்பியாகிய தாரகனையும் அழித்த வீரனை ஒரு சிறுவன் என்று கூறுவதும் அறிவுடைமையாகுமோ! கடலைத் தாண்டி நம் நகரை அழித்து வச்சிரவாகுவைக் கொன்ற கள்வனைத் தூதுவன் என்று கூறுவதும் அறிஞர் சூழ்ச்சியோ! நான்முகன், திருமால், இந்திரன் மூவரும் சேர்ந்து அவனுடைய ஒருருவாய் வந்தவர்கள் போலும். உன் தம்பியும், கிரவுஞ்ச மலையும் அழிந்த அன்றே நீ சிவகுமாரன் மேல் போருக்குச் சென்றிருக்க வேண்டும். அல்லது உன் சேனைகளை அனுப்பி வென்றிருக்க வேண்டும். அங்ஙனம் செய்யாது காலந் தாழ்த்தினுய். சிறிய நெருப்பாயினும் அதனைத் தணிக்காதுவிடின் அஃது இமைப்பொழுதில் உலகத்தையே அழிக்கும். பகைவனின் சூழ்ச்சி நம்மிடம் வருமுன் நாம் அதனை எதிர்சென்று காக்கவேண்டும். முன்னரே போருக்குச் சென்றிருந்தால் தூதுவன் இங்கு வந்திருப்பானு! உன் மகனும் நம் நகரமும் அழிந்ததே என்று நீ இரங்க வேண்டியிருக்குமா! இந்நிலைமைக்குக் காரணம் செய்ய வேண்டுவனவற்றைத் தெரிந்து செய்யாத அறியாமையே ஆகும். கடந்ததை நினைத்து வருந்துவது அறிஞர்க்கு அழகன்று. அசுர வீரர்கள் சூழ நால்வகைச் சேனைகளோடு சென்று சிவகுமாரனை வளைத்துப் போர் புரிவாயாக. முன்னை நாட்கள் போலக் காலந் தாழ்த்தாதே" என்று கூறினுன்.

**துர்க்குணன்**

அமைச்சர்களில் ஒருவனுகிய **துர்க்குணன்** என்பவன் 'மிக நன்று' என்று கையைத் தட்டிச் சிரித்துச் சூரபன்மனை நோக்கி, "அரசர்க்கரசே! நீ இதுகாறும் திருமாலோடும் மற்றைத் தேவர்களோடும் போர் புரியச் செல்லவில்லை. அவர்களை உன் தம்பியர்களைக் கொண்டே வென்று வந்தாய். இன்றைக்கு ஒரு சிறுவனை எதிர்த்துப் போருக்குச் செல்லலாமா! அழியாத வளங்களையும், நீண்ட ஆயுளையும், வீரத்தையும், வலிமையையும், பிறவற்றையும் தவத்தால் நீ பெற்றது ஒரு சிறுவனேடு

போர் செய்வதற்கா! தேவர்களைப் புறங்கண்ட நீ பூதகணங்களையும் தூதுவனையும் தொடர்ந்து போர் செய்யப்போகிறாயா! இன்றைக்கே உன் படைத்தலைவர்களை அனுப்புக. அவர்கள் விரைவில் சிவகுமாரனையும் பூதகணங்களையும் வென்று வருவார்கள் ; இதுவே துணிபு '' என்று மொழிந்தான்.

**தருமகோபன்**

உடனே தலைமை அமைச்சன் **தருமகோபன்** என்பவன் சூரபன்மனைப் பார்த்து, ''அரசர் ஏறே! நீ அச்சிறுவனோடு போர் செய்தல், நவரத்தினங்கள் பதித்த பொற் கலப்பையால் புன்செய் நிலத்தை உழுவதை ஒக்கும். அச்சிறுவன் சிவபெருமானும் அல்லன் ; திருமாலும் அல்லன் ; பிரமதேவனும் அல்லன்; இயமனும் அல்லன்; எல்லா வுலகங்களையுங் காக்கின்ற நீ ஒரு சிறுவனோடு எதிர்த்துப் போர்புரிவதால் யாது பயன் ஏற்படும்? நீ அச்சிறுவனோடு போருக்குச் செல்லுவையாயின் அவன் உன் பேராற்றலைக் கண்டு புறங்காட்டி ஓடுவானேயன்றி, உன்னை எதிர்க்கும் வல்லமை உள்ளவனா? தமக்கு ஒப்பாகாதவர்களோடு போர் செய்வது அறிஞர் செயலாகாது. இலக்கத் தொன்பது வீரர்களும், பூதர்களும், சிவகுமாரனும் சேர்ந்து அக்கினி முகன் இரணியன் என்னும் உன்னுடைய குமாரர் இருவருள் ஒருவனுக்கு ஈடாகார். நகத்தால் கிள்ளி எறிய வேண்டியதை வாள்கொண்டு வெட்டுவதா? ஓர் ஆளைக்கொண்டு அழிப்பிக்கத் தக்க அவர்களை வெல்லுதற்கு வில்லேந்திச் செல்ல வேண்டுமா? ஒரு சிறுவனோடு நீ போர்செய்யப் புறப்பட்டாய் என்ற சொல்லைக்கேட்டால் நம்மவர்கள் நாணுவர்; தேவர்களும் சிரிப்பர். தாரகனையும் கிரவுஞ்சமலையையும் அவன் அழித்ததால் அவனை நீ மதிக்கிறாய் போலும்! சிவபெருமான் கொடுத்த வேற்படையை அப்பாலகன் செலுத்தியதும் அதற்கு மாறான படையை விடுக்காததால் தாரகன் இறந்தான். அகத்திய முனிவரின் சாபத்தால் கிரவுஞ்ச மலை அழிந்தது. இவற்றையெல்லாம் நீ பெரிதாக எண்ணவேண்டியதில்லை. வச்சிரவாகு உன்னைப் போல் அழியாத தேர், கவசம், வில் முதலியவைகளைப் பெறவில்லை. அவன் போருக்குச் சென்ற பொழுது நீயும் அவற்றை அவனுக்குக் கொடுத்து அனுப்பவில்லை. ஆதலால், அவன் தூது

வனால் இறந்தான். இனிப் பலவற்றைக் கூறுவதில் யாது பயன்? உன்னுடைய படைத் தலைவர்களுள் ஒருவனை அழைத்துச் சேனைகளோடு முருகன்மேல் போருக்கு அனுப்பினால், அவன் வெற்றி பெற்று வருவான்; அதனையே நீ செய்வாயாக'' என்று கூறினான்.

**காலசித்து**

பிறகு **காலசித்து** என்னும் மற்றொரு அமைச்சன் நகைத்துச் சூரபன்மனை நோக்கி, ''அரசே! திருச்செந்தூரில் வந்திருக்கும் சிறுபாலகன், பூதசேனைகளோடு இங்குப் போருக்கு வந்தால் அவனோடு போர் செய்யச் சிலரை அனுப்புக. இதற்கு ஆலோசனை எதற்கு? திருமாலையும் இந்திரனையும் சயந்தனையும் பிறரையும் சமரில் வென்ற நாளிலும் எம்மை வினவினையில்லை. இன்றைக்கு ஒரு சிறுவனுக்காக இவ்வளவு பெரிய மந்திராலோசனை வேண்டுமோ! அசுரர்களைக் காட்டிலும் பூதர்கள் வலியவர்களா? நீ என்னை அனுப்பினால் நான் சிவகுமாரனையும் பூதப்படைகளையும் கால பாசத்தால் கட்டி இழுத்துக் கொண்டு வருவேன்'' என்று புகன்றான்.

**சண்டன்**

அதனைக் கேட்ட **சண்டன்** என்னும் அமைச்சன் சூரபன்மனை நோக்கி, ''பசியால் வருந்தும் பூதர்களும், சிறு பாலகனும் மதிக்கப்படும் தகுதியுடையரோ! அசுரர்களின் யோசனை நன்றாக இருக்கிறது. நான் பூதர்களைக் கொன்று அச்சிறுவனை வெல்லுவேன்; பிறரையும் அழிப்பேன். அரசர்க்கரசே! உன் அனுமதியில்லாமையால் இதுகாறும் சும்மாவிருந்தேன். தமியேனை அனுப்பினால் நொடிப் பொழுதில் சென்று அவர்களை வென்று மீளுவேன்'' என்று மொழிந்தான்.

**அனலி**

அதன்பின் படைத் தலைவனாகிய **அனலி** என்பவன் கோபம் மிகுந்து சிரித்துச் சூரபன்மனை நோக்கி, ''போரில் எதிர்த்தவன் சிறுவனாயிருந்தாலும், அவனை எதிர்த்துப் போர் செய்யாது எங்களோடு ஆலோசனையில் ஈடுபட்டிருப்பது சூரனின் வலிமைக்கு அழகாகுமா!'' என்று வினயத்தோடு கூறினான்.

**சிங்கன்**

அப்போது **சிங்கன்** என்னும் படைத்தலைவன் கோபம் மிகுந்து பற்களினாலே இதழைக் கடித்துச் சூரபன்மனைப் பார்த்து, "அரசே! நீ வீரர்களை அழைத்து யோசனையில் ஆழ்ந்தது, இந்திரனுக்கு உதவி செய்யும் பாலகனின் வலிமையைப் போக்குவதற்குரிய செய்கை போலும்! இவ்வண்டத்திலுள்ள யாவரும் பகைகொண்டு என்னிடம் போருக்கு வந்தாலும் நான் தனியே எதிர்த்து நின்று போரிட்டு அவர்களெல்லோரையும் வருந்தச் செய்வேன். உன் அடிமையாகிய என்னுடைய வலிமையை நீ அறியாய்போலும். என் வலிமையைப் பற்றி நானே கூறிக்கொள்வது தகுதி அன்று. என்னை, 'போருக்குச் செல்' என்று அனுமதி கொடுப்பாயாக. சேனைகளோடு போய் உன் பகைவர்களை அழித்து வருவேன்" என்று பற்பலவற்றையும் சொன்னான்.

**பானுகோபன்**

அச்சமயம் **பானுகோபன்** அவர்களைக் கையமைத்துச் சூரபன்மனை அணுகி,"என் தந்தையே! கிரவுஞ்ச மலையையும் தாரகனையும் சிவ குமாரன் வென்ற அன்றே நீ என்னைப் போருக்கு அனுப்பினாயில்லை; அழைத்து ஆலோசனையாவது கேட்டாயில்லை. இன்றைக்கு இதனை நீ வினவுகின்றாய். தூதுவந்த ஒரு தேவனோடு போர்புரியப் பல் முழுவதும் முளைக்காத சிறுவனாகிய வச்சிரவாகுவை நீ அனுப்பலாமா! நீ மிகவும் பெரியை! அறிவில்லாமையால் தூதுவனால் துயருற்றாய் என்னும் பழியைப் பூண்டாய். வச்சிரவாகு மாண்டான்; நம் நகரமும் அழிந்தது. பொருளல்லாத ஒன்றைப் பொருளாகக் கொண்டு அதற்குப் பயப்படுவதும், செய்யும் உபாயத்தை அறியாது ஒரு செயலை விரைந்து செய்து அதனால் சோர்வடைந்து வாழ்தலும் பெரியோருக்கு அழகன்று! பேதைமையே ஆகும்.

பொருளல தொன்றினைப் பொருளெ னக்கொடு
வெருவுதல் செய்வதும் வினையம் ஓர்கிலாது
ஒருசெயல் விரைந்துசெய் துயங்கி வாழ்தலும்
பெரியவர் கடமையோ? பேதைத் தன்மையே!

கிரவுஞ்சமலையையும் உன் தம்பியையும் அழித்த சிறுவனின் வலிமையையும், பூதர்களின் வலிமையையும், ஒற்றுவனுடைய தன்மையையும் நீ அறிய வேண்டினுல் நான் போய் அவர்களைப் பாசத்தால் கட்டி இங்குக்கொண்டு வருவேன். தந்தையே! நீ ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் ஒரு தனித் தலைவன். நீ சிவ குமாரனேடு போர்புரியப் புறப்படுவது அழகன்று. என்னை அனுப்புக. நான் சென்று அவர்கள் எல்லோரையும் வென்று மீளுவேன்'' என்று கூறி முடித்தான்.

**இரணியன்**

சூரபன்மனின் குமாரர்களில் ஒருவனுகிய **இரணியன்** தன் தந்தையை நோக்கி, ''சிறந்த வெற்றியைப் பெற்ற சூரபன்மனுகிய நீ ஒரு சிறுவனுடைய வலிமையைக் கருதி இரங்கினுய் என்ருல் அதனைக் கேட்டுத் தேவர்கள் இகழ்வர். இனி யோசனை செய்வதை விடுவாயாக. 'சிவகுமாரன் உன்னேடு போர்புரியப் பூவுலகுக்கு வந்தான்' என்று கேட்டதும், நீ என்னை அழைத்து அவனேடு போர்செய்ய விடுத்தாயில்லை. என்னை வெறுத்தனை போலும். பாவியாகிய நான் உனக்குச் செய்த தவறு யாது? சிவகுமாரன்மீதும், பசிப்பிணியால் உழலும் பூதர்கள்மீதும் பிறர்மீதும் என் தமையனுகிய பானுகோபன் போருக்குச்செல்லு தலும் இழிவேயாகும். நானே போருக்குச் சென்று பகைவர் கூட்டத்தையும், தேவர் கூட்டத்தையும் அழித்து வருவேன்; ''**இன்றிரவே** என்னை அனுப்புக'' என்று கூறினுன்.

**அக்கினி முகன்**

இரணியன் தம்பியாகிய **அக்கினிமுகன்,** சூரபன்மனை நோக்கி, ''எந்தையே! நீ ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் அரசன். உனக்கோ தம்பியாகிய ஒரு வீரசிங்கன் உள்ளான். எண்ணற்ற புத்திரர்களாகிய நாங்கள் இருக்கின்ருேம். அளவற்ற நால்வகைப் படைகள் உள்ளன. அளவிறந்த விற்களும், அம்பருத் தூணிகளும் உள்ளன. தெய்வப் படைக்கலங்கள் உள்ளன. ஆஞ்ஞா சக்கரமும் ஒன்று உளது. ஒரு நாழிகைப் பொழுதில் ஆயிரத்தெட்டண்டங்களையும் போய்ப் பார்த்துத் திரும்பவல்ல இந்திரஞாலத் தேரும், ஒப்பற்ற சிங்க வாகனமும் உள்ளன.

திருமாலும் மயங்கத் தக்க மாயங்கள் பலவும் உள்ளன. இவை யாவற்றையும் பெற்று அழிவில்லாதிருக்கும் அரசர்க்கரசே! உனக்கு இணையானவர் யார்? சிவகுமாரனையும், பூதர்களையும், மற்றையோர்களையும் வெல்லுவதற்கு நம்மவர்களில் விருப்பமுடைய ஒருவரை அனுப்புக. வேறொன்றும் யோசிக்காதே. என் தம்பியாகிய வச்சிரவாகுவின் பத்துத் தலைகளையும் அறுத்த தூதுவனையும், அவன் உறவினரையும் கொன்றல்லாமல் என் நகருக்குத் திரும்பமாட்டேன். சிவகுமாரனோடு போர்புரிய என்னை அனுப்புக. முன்னாளில் பாதலத்தில் உள்ள அரக்கர்கள் மேல் படையெடுத்துச் சென்றாற் போலச் செல்கின்றேன்; பிரமதேவன் எனக்களித்த வில்லும், வச்சிர கவசமும், படைக்கலங்களும் வைத்துள்ளேன். நான் மெலியவன் அல்லேன். என்னைப் போருக்கு அனுப்புவாயாக'' என்று புகன்றான்.

**சிங்கமுகன் அறிவுரை**

அதனைக்கேட்ட **சிங்கமுகன்** அக்கினிமுகனை விலக்கிச், சூரபன்மனை நோக்கி, ''அமைச்சர்களும் சேனைத்தலைவர்களும் உன் புதல்வர்களும் தங்கள் தங்களுடைய வலிமைகளையே கூறினார்கள். ஆனால், உனக்கு ஏற்ற அறிவுரை புகன்றாரில்லை'' நின் பொருட்டு நான் கூறுகின்ற மொழிகளைக் கருத்துடன் கேள்: ''பொருள் பெற்ற காலத்து உண்டாகும் கோபம், கற்றவர் அறிவையும் கடந்து செல்லும். அக்கோபம் முதிர்வதன்முன் அன்புடையோர் உண்மைகளை எடுத்துச் சொல்லித் தெளிவுப்படுத்த வேண்டும். அரசர் காதில் தீக்கோல் செருகுதல் போல, நன்னெறியை அளிக்க வல்ல நடுநிலைமையாகிய நீதியைச் சொல்பவர்களே அமைச்சரும், துணைவரும், மேலோரும் ஆவர். அரசர் விருப்பத்திற்கு ஏற்றவாறு கூறுகின்றவர்கள் பகைவர்களே ஆவர்.

பெற்றிடு திருவினில் பிறந்த வெஞ்சினம்
கற்றவர் உணர்வையுங் கடக்கும் அன்னது
முற்றுறு கின்றதன் முன்னம் அன்பினோர்
உற்றன கூறியே உணர்த்தல் வேண்டுமால்.

மன்னவர் செவியழல் மடுத்த தாமென
நன்னெறி தருவதோர் நடுவு நீதியைச்

சொன்னவர் அமைச்சர்கள் துணைவர் மேலையோர்
ஒன்னலர் விழைந்தவா றுரைக்கின் றார்களே!

எடுத்த கருமத்தையும் அதன் பயனையும் அதற்கு வரும் இடையூறுகளையும் சீர்தூக்கித் தெளிந்தபின், எச்செயல்களைச் செய்தாலும் குற்றம் நிகழாது. மயக்க உணர்வினால் மீன்கள் உணவை விரும்பித் தூண்டின் முள்ளை விழுங்கி அதில் அகப்பட்டு வருந்துதல் போல, நீ தேவர்களுக்குத் தீமை செய்வதால் வரும் துன்பத்தை ஆராயாது வருந்துகின்றாய். இந்திரன் முதலிய தேவர்களை வருத்தியோர் தங்கள் செல்வங்களோடு அழிந்தனரேயன்றி உய்ந்தாரில்லை. மீன்களைப் பிடித்து வருமாறு தேவர்களை ஏவினாய். இது நன்மை பயக்குமா? விண்ணுலகை அழித்தாய். இந்திரனுக்குத் துன்பம் தந்தாய். தேவர்களைச் சிறையிலடைத்தாய். சிறையிட்ட தேவர்களை இன்னும் சிறை நீக்கவில்லை. இரக்கம் என்பதை அடியோடு விட்டுவிட்டாய். அதனாலன்றோ ஆறுமுகக் கடவுள் உன்னோடு போர் செய்ய வந்துள்ளார்? உனக்கு வரங்களை அளித்த சிவபெருமான் 'நீங்கள் பெரிய செல்வங்களுடன் நூற்றெட்டு யுகம் இருங்கள்' என்று அருளினார். அவர் குறிப்பிட்ட அக்காலமும் குறுகியது. அதனை நீ உணர்ந்தாயில்லை. விதி வலியை யாவர் கடந்தவர்? 'எவ்வளவு வலிமை உடையவரானாலும் உங்களை வெல்ல இயலாது. நமது சத்தியே வெல்லும்' என்று சிவபெருமான் சொல்லியருளினார். அதனால்தான் ஆறுமுகக்கடவுள் செலுத்திய வேற்படை தாரகனை அழித்தது. பயனற்ற செயல்களைச் செய்து அதனால் துன்பத்தை அடைவது மேலோரின் செயலோ? குரவர்களையும், சிறுவர்களையும், பெண்களையும், தவத்தினர்களையும், மறையவர்களையும், மற்றை மேலோர்களையும் தண்டித்தவர் நரகம் அடைந்து வருந்துவர்.

குரவ ரைச்சிறு பாலரை மாதரைக் குறைதீர்
விரத நற்றொழில் பூண்டுளோர் தம்மைமே லவரை
அரும றைத்தொழி லாளரை ஒறுத்தனர் அன்றோ
நிரய முற்றவுஞ் சென்றுசென் றலமரும் நெறியோர்.

என் அண்ணாவே! தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்துவிட்டால் குமரக் கடவுள் இங்கு வாரார். நமது குற்றத்தையும்

பொருட்படுத்தாது நாளைக்கே கயிலைக்குத் திரும்புவார். தேவர்களின் சிறையை நீக்காவிட்டால், முப்புரம் எரித்த சிவபெருமானின் குமாரனாகிய சண்முகக் கடவுள் வந்து நம் குலமெல்லாம் தொலையும்படி அழிப்பார். உன்னையும் கொல்வார். இஃது உறுதியாகும்" என்று சூரபன்மனுடைய கருத்தை மறுத்து மொழிந்தான்.

**சூரபன்மன் சிங்கமுகனின் யோசனையை இகழ்தல்**

சூரபன்மன் அவற்றைக் கேட்டுக் கைகளைத் தட்டி நகைத்தான்; உதட்டைக் கடித்தான்; கோபம் பொங்கி எழுந்தான். "மும்மூர்த்திகளாலும் வெல்ல முடியாத வலிமை பெற்ற என் தம்பியே! நமக்கு அஞ்சி மறைந்தோடிய இந்திரனுக்கும், ஏனைத் தேவர்களுக்கும், சிறிய பாலகனுக்கும், கயிலை காக்கும் பூதர்களுக்கும் நீ அஞ்சினாயோ! என் வாழ்நாளுக்கு வரையறை கூறியதையும், 'நம்முடைய சத்தி உங்களை வெல்லும்' என்றதையும் முன்பு சிவபெருமான் சொல்ல நான் கேட்டிலேன். 'நூற்றெட்டு யுகங்கள் செல்வத்தோடு வீற்றிருந்து அரசு செய்யுங்கள்' என்று கூறியது பொய்யாகுமா? அப்பெருமான் கொடுத்த அழியாத வரத்தை விலக்குபவர் யார்? அது தவறுதல் ஆகுமோ! ஆதிமூர்த்தி, "நமது சத்தியன்றி, பிறர் உங்களைக் கொல்ல மாட்டார்" என்று கூறினார். சத்தியும் அக்கடவுளும் வெவ்வேறாகுமோ? இல்லை. வரத்தைக் கொடுத்த அவர் தாமே நம்மைக் கொல்வார் என்று நினைப்பது தவறு. 'சத்தி வெல்லும்' என்று அக்கடவுள் கூறியதாகக் கூறுவது ஒரு சொல் வழக்கே. அஃது உண்மையன்று. தாரகன், நம்மைப்போல் அழியாத வரம் பெறாததால் இறந்தான். வச்சிரவாகுவும் சிறு குழந்தை ஆதலால் இறந்தான். ஆயிரத்தெட்டு அண்டங்களைத் தனி அரசாட்சி செய்த நான், யார் வந்து எதிர்த்தாலும் புறங்கொடேன். நான் தேவர்களைச் சிறைசெய்ததைக் கண்டும், நான்முகனும் திருமாலும் பயந்து வறிதே இருந்தனர். தனித்து வந்த ஒரு பாலகனா என்னைக் கொல்லமுடியும்? வச்சிர யாக்கையையும், அழியாத வாழ்நாளையும் பெற்ற என்னை அவனா வெல்ல வல்லவன்! ஒரு பாலகன் என்னைக் கொல்வான் என்று நீ கூறுவது, கண்ணில்லாதவன் கதிரவனை ஒரு பழம் என்று விரும்பிக் காட்டக் கையில்

லாதவன் போய் அதனைப் பேராசையால் பிடித்தலை ஒக்கும்'' என்று சொன்னான்.

**சிங்கமுகன் மேலும் கூறுதல்**

அறிஞரில் அறிஞனாகிய சிங்கமுகன் சூரபன்மனைப் பார்த்து, ''அண்ணாவே! நான் இன்னும் சொல்கிறேன்; சினம் கொள்ளாது கேட்பாயாக: தமக்கொப்பில்லாத பரம்பொருள் மதி முடித்த சடையும், பவளம்போல் மேனியும், கண் மூன்றும், தோள் நான்கும், நீல கண்டமும் ஆகிய இவற்றைக் கொண்டு நின்றது, படைத்தல் முதலிய ஐந்தொழிலைச் செய்து ஆன்மாக்களைப் பதிந்த பாசமனைத்தையும் நீக்கி வீடுபேற்றை அருளும்படி திருவுள்ளத்தில் கொண்ட பேரருளேயாம். இத்தன்மையினை யுடைய சிவபெருமானை நோக்கி நீ அளவிலாத காலம் பெருந் தவத்தைச் செய்தாய். அவர் அதனைக் கண்டு வெளிப்பட்டு ஒப்பில்லாத வரங்களைத் தந்து அதற்கு ஒழிவையும் கூறி வைத்தார். நீ அதனை அறியவில்லை போலும்! எவராலும் பெறற்கரிய செல்வங்களைப் பெற்ற நீ அறத்தை விரும்பி, நீதிவழி நில்லாது வலிமையினாலே சினந்து தேவர்களைச் சிறையில் வைத்தாய். அதனால், சிவபெருமான் உன்னை அழிக்க நினைத்தார்; 'வரம் அளித்த யாமே அழிப்பது முறைமை அன்று' என்று கருதித் தம் திருவுருவமாகும் ஒரு திருக்குமாரரைக் கொண்டு கொல்ல நினைத்துச் சிவந்த திருமேனியும், ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருப் புயங்களுங்கொண்ட ஒரு திருக்குமாரனைத் தம் நெற்றிக் கண்ணினின்றும் தோற்றுவித்தார். உலகில் பிறந்துழலும் உயிர்களைப் போல அக்குமாரனை நீ நினையாதே. அவர் பரஞ்சோதியாகிய சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் உதித்தவர். அவர் வேதங்களாலும் அறியப்படாத முதற்பொருள். சீலமில்லாதார் அறிய முடியாத அச்சிற்பரனைப் பாலகன் என்று இகழ்ந்தாய். ஒரு சிறிய ஆலம் வித்தில் அகன்றதோர் மரம் அடங்கியிருந்து தோன்றுவது போல, எல்லாப் பொருளும் அவரிடத்தினின்றும் தோன்றும். அவர் அருவமாகுவர், உருவமாகுவர், அருவுருவமாகுவர். ஆதலால், அவருடைய திருவிளையாட்டை யார் சொல்ல வல்லார்! அவர் வேதங்களின் ஞானத்திற்கும், உபநிடதங்களின் ஞானத்திற்கும் காணுதற்கரியவர்; புதியர்க்குப் புதியவர்; மூத்த

வர்க்கு மூத்தவர்; முடிவிற்கு முடிவாய் ஆதிக்கு ஆதியாய் உயிர்க்குயிராய் நின்றுள்ள நிருமலர் ஆவர்.

சீலம் இல்லவர்க் குணரவொண் ணுதசிற் பரனைப்
பாலன் என்றனை அவனிடத் திற்பல பொருளும்
மேலை நாள்வந்து தோன்றிய சிறியதோர் வித்தின்
ஆலம் யாவையும் ஒடுங்கியே அவதரித் ததுபோல்.

அருவு மாகுவன் உருவமு மாகுவன் அருவும்
உருவு மில்லதோர் தன்மையும் ஆகுவன் ஊழின்
கருமம் ஆகுவன் நிமித்தமு மாகுவன் கண்டாய்
பரமன் ஆடலை யாவரே பகர்ந்திடற் பாலார்.

வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்கும் காணலன் புதியரில் புதியன்
மூதக் கார்க்குமூ தக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆதிக் காதியாய் உயிர்க்குயி ராய்நின்ற அமலன்.

ஞானமே திருமேனியாக வுள்ள அவருடைய இயல்பை நானும் நீயுமாகச் சொல்லிக் கொள்வோம் என்றால் அஃது எளிதாகுமோ! இத்தன்மை வாய்ந்த முதல்வனைப் பாலகன் என்று இகழ்ந்து பேசுகின்றாய். அவர் உன்னையும், அசுரர் கிளை முழுவதையும் ஒரு கணப்பொழுதில் கொல்லுவார். தம் பேரருளின் திறத்தைக் காட்டும்படி போர் செய்ய எழுந்தருளி வந்தார். கணக்கற்ற கோடி அண்டங்களை ஓரிமைப்பொழுதில் ஆக்கவும் அழிக்கவும் வல்ல முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே உன்னோடு போர் செய்ய விரும்பித் திருவிளையாடல் புரியச் செந்திற்பதியில் வந்து வீற்றுள்ளார். 'வச்சிர சரீரத்தைப் பெற்றோம்' என்று நினைத்தாய்; இந்த எண்ணத்தை அறவே விட்டு விடுக. 'உடல் எடுக்கும் உயிர்களெல்லாம் இறக்கும்' என்று அறிஞர்கள் உறுதியாகக் கூறினார்கள். நீ மட்டும் அழிவுறாமல் இருப்பாயா? வானுலகத்திலும் நிலவுலகத்திலும் பிறந்தவரது உடல் அழியும். உன் வச்சிர யாக்கையும், பிருதிவி அண்டத்தின் சம்பந்தம் பெற்றது. ஆதலால், அதுவும் அழியும். 'அழியா வரம் பெற்றோம்' என்று நீ கூறினாய். மற்றை உயிர்களைப் போல் சிலநாளில் அழியாது நெடுநாள் வாழ்வாய். அச்சுதன் (அழியாதவன்), அயன் (பிறவாதவன்), அமரர்

(இறவாதவர்) என்று முறையே திருமால், நான்முகன், தேவர்கள் முதலியவர்களை உபசாரமாகக் கூறுவது போல, உன் வரமும் வச்சிர யாக்கையும் பலயுககாலம் அழியாதிருக்கலாம். எல்லா வளங்களைப் பெற்ற நீயும் நின் கிளைகளும் அழியாதிருக்க இவற்றைக் கூறினேன். நீ இப்பொழுதே தேவர்களைச் சிறையிலிருந்து நீக்குவாயாக'' என்று கூறினான்.

**சூரபன்மன் சிங்கமுகனை இழித்துரைத்தல்**

சிங்கமுகன் கூறியவைகளைக் கேட்ட சூரபன்மன் பெருஞ்சினங் கொண்டு சிங்கமுகனை நோக்கி, "காற்றினால் தள்ளப்பட்டும், நெருப்பினால் சூடேறப்பெற்றும், கங்கையால் தாக்குண்டும், சரவணப் பொய்கை அலைகளால் மோதுண்டும், தாயல்லாத வேறு பெண்களுடைய முலையை உண்டும், அழுது விளையாடும் பாலகனையா பரம்பொருள் என்றாய்? கதிரவன் ஒருவனேஎண்ணில்லாக் 'குடங்களிலுள்ள நீர்கள்தோறும் உருவங் காட்டினாற் போல, பிரமம் ஒன்றே உயிர் என்னும் பெயரைப் பெற்றுக் கணக்கற்ற வடிவங்களைக்கொண்டு, தன்னுடைய மாயையினாலே பற்பல வினைகளைச் செய்யும். குடமுடைந்த விடத்திலே குடாகாயம் ஆகாயத்தோடு ஒன்றுபட்டாற்போல, பலவகை உருவங்கள் அழிந்தபொழுது அப் பிரமப்பொருள் முன்போல அபேதமாகும்.

காற்றில் தள்ளுண்டு நெருப்பினில் சூடுண்டு கங்கை
ஆற்றில் தாக்குண்டு சரவணம் புக்கலை யுண்டு
வேற்றுப் பேர்முலை உண்டழு தேவிளை யாடும்
நேற்றைப் பாலனை யோபரம் பொருளென நினைந்தாய்.

பிரம மாகிய ஒருபொருள் உயிரெனப் பேர்பெற்று
உருவம் எண்ணில கொண்டுதன் மாயையால் உலப்பில்
கரும பேதங்கள் ஆற்றிடும் பல்புனற் கடத்துள்
இரவி தன்னுருத் தனித்தனி காட்டிய இயல்பின்.

கடந்த கர்ந்துழி அவற்றிடை வெளிகக னத்தோடு
அடைந்த வாறுபோல் யாக்கையின் பேதகம் அனைத்தும்
முடிந்த காலையில் தொன்மைபோல் அபேதமாம் மொழிக்குந்
தொடர்ந்த சிந்தைக்கும் நாடொணா தமர்பெருஞ் சோதி.

'இவர் பிரமம்; இவர் பிரமம் அல்லாதவர்' என்று இரு வித மாகக் கொள்ளாதே. உடம்பு வேருக வுள்ளது. பலவகை அணிகலன்களும் பொன் என்னும் ஒரு உலோகத்தினுல் அமைதல் போல, உயிர்களெல்லாம் பிரமம் ஒன்றில் அடங்கும். உயிர்களெல் லாம் ஒன்றுதான். வெற்றியும் வலிமையில்லாதவர்களும் தாழ் வர். அவற்றைக் கொண்டவர் உயர்வர். இஃது உலக இயற்கை யாகும்.

நான் அழிவில்லாத பெரியவன். ஆறுமுகன் என்பவன் சிறியன். ஆதலின், அவனை யான் வெல்லுதல் உறுதி. நம் குலத்தவர்கள் பலரை அழித்த பகைவர்களாகிய தேவர்களைச் சிறை செய்து தண்டித்தது குற்றமன்று. 'குற்றம் செய்தவர் களைத் தண்டிப்பது தகுதியே' என்று மனு நூல்கள் கூறும். நான் தேவர்களைச் சிறை நீக்கேன்; இந்திரனையும் சிறையிடு வேன்; சிவபெருமானே வந்தாலும் எதிர்த்துப் போர் செய்ய அஞ்சேன். நீ என்னோடு ஒரு வயிற்றில் பிறந்தவனுக இருந்தும், தேவர்களுக்குச் சார்பாகப் பேசுகிருய். நீயே இருக்க எனக்கு வேறொரு பகைவரும் வேண்டுமோ? ஆயிரம் சிங்கச் சிரங்களையும் அத்துணைக்கு இரட்டிய தோள்களையும், கைகளையும் எதற்காகச் சுமந்தாய்! வலிமையையும் வீரத்தையும் நீ இழந்தாய்; அசுரர் களுடைய குலாசாரங்களை விட்டாய்; இப்பொழுது தேவர் களைப் போல ஆகிவிட்டாய்; தவஞ் செய்யப் போதலே சிறந் தது; வீரத்தையும் மானத்தையும் இழந்தாய்; அசுரர்கள் கீர்த்திகளெல்லாவற்றையும் கெடுக்கப் பிறந்தாய். இவ்வுலகில் ஒருபயனும் பெருத நீ இருந்தும் இறந்தவன் அன்ருே! மந்திரா லோசனையாகிய இதற்கு நீ அஞ்சுவையாயின், உன் கையிலுள்ள ஆயுதங்களை எறிந்துவிட்டு, நான்முகனைப்போல் பஞ்சாங்கத்தை எடுத்துக் கொள்வாய். சதுரக் கள்ளியின் கிளைகளைப்போல, நெடுங்காலமாகப் பல தலைகளையும் கைகளையும் சுமந்து என்ன பயன்? நீ குழந்தைப் பருவத்தில் இயமனையும் வருணனையும் சிறைசெய்தாய்; தேவரை வருத்தினுய்; இப்போது அறிவு உண் டாகியதால் பெண்களைப் போல நடுங்குகிருய். சிங்கமோ பகை என்று ஒன்று வந்தால் பகைத்தெழுந்து சீறி அதனைக்கொல்லும். தம்பி! நீ பல சிங்கத் தலைகளைக் கொண்டதும் வீண். நான் போய்ப் பூதர்களையும், அவர் தலைவர்களையும், சிவகுமாரனை

யும், மற்றைப் பகைவர்களையும் வெற்றிகொண்டு மீளுவேன். நீ வருந்தாது உன் நகரத்திற்குப் போவாயாக" என்றான்.

**சிங்கமுகன் போருக்குச் செல்ல உடன்படுதல்**

சூரபன்மன் கூறியவைகளைக் கேட்டுச் சிங்கமுகன், "உணர்வில்லாத இவன் என்னை இகழ்ந்தான். மேலே வரப்போவதை இவன் அறியான். அறிவில்லாதவர்களுக்குப் புத்தி சொல்லுபவர்கள் அறிவற்றவர்களே. தேன் மழையைப் பொழிந்து வளர்த்தாலும், காஞ்சிரங்காயின் கைப்பு ஒழியுமோ! அத்தன்மையன்றோ அறிவில்லாதவனுடைய மனங்தெளியும்படி தெருட்டுதல்! விதியின் வலிமையை வெல்ல வல்லவர் யார்! ஆவதும் அழிவதும் விதியால்தான். சிவபெருமான் தந்தருளிய கால எல்லை கழிந்தது. இறக்கும் காலம் அணுகுகிறது. இங்குள்ளவர்களும் சூரபன்மனும் இறப்பது திண்ணம். இந்திரன் செய்த தவம் பொய்யாகுமோ! என் தமையன் ஆறுமுகக் கடவுளின் வேற்படையால் இறந்துவிடுவான். நான் இதனைப் பார்த்துக்கொண்டு உயிரோடிருத்தல் தவறாகும்; இவனுக்கு முன் இறப்பதே முறை" என்று மனத்தில் உறுதி கொண்டான். தன் தமையனை நோக்கி, "அண்ணாவே! அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருள்க. சிறியோர் செய்த பிழையைப் பெரியோர் பொறுத்து அதனைக் காப்பர். நான் செய்த பிழையை நீ அன்றி யார் பொறுப்பார்? நான் போருக்குச் சென்று பகைவர்களை எதிர்த்துக் கொன்று வருகிறேன்; எனக்கு விடையளிப்பாயாக" என்றான்.

**சூரபன்மன் மனம் மகிழ்தல்**

"போருக்குச் செல்வேன் ; விடை கொடுப்பாயாக" என்று சிங்கமுகாசுரன் கேட்டதும்; சூரபன்மன் மனம் மிக மகிழ்ந்து தன் தம்பியைத் தழுவி, "தம்பியே! மூவுலகங்களிலும் திசைகளிலும் அண்டங்களிலும் அடையும் வெற்றிகளுள் அருமையானது உனக்கு யாது உளது! பேரறிவினையுடையாய்! நீ முன் கூறியவைகளை ஆராய்ந்தால் என் மனத்துணிவையும், திட்பத்தையும், ஊக்கத்தையும் அறிவதற்கே அவ்வாறு சொன்னாய் என்று தோன்றுகிறது நீ பகைவர்களாகிய விலங்குகளைக்

கொல்லும் ஒரு சிங்கமன்றோ? பகைவர்களைக் கொன்ற பின்போ, அல்லது அவர்கள் கும்பிட்டு ஓட வென்ற பின்போ நீ கோபம் தணிவாய்! உன் வலிமையை நான் அறிகிலேனோ! இப்பொழுது நீ உன் நகரத்திற்குப் போய் அங்குள்ள சேனைகளை யெல்லாம் ஒருங்கு சேர்த்து இனிது உறைகுவாய். சிவகுமாரன் இங்குப் போருக்கு வந்தால் உன்னை அழைப்பேன். அப்பொழுது வருவாயாக" என்றான். சிங்கமுகன் சூரபன்மனை நோக்கி, "சிவகுமாரன் விரைவில் உன் நகரத்திற்குப் போர் செய்ய வந்தால், நீ போருக்குச் செல்லாது, அதனை ஒரு தூதுவனிடம் எனக்குச் சொல்லி அனுப்புக. நான் விரைந்து போர் செய்ய வருவேன்" என்றான். சூரபன்மன் விடைகொடுத்தனுப்பச் சிங்கமுகன் அவனை வணங்கித் தன்னுடைய ஆசுரம் என்னும் நகருக்குச் சென்றான். சூரபன்மன், அங்கிருந்த அமைச்சர்கள் சேனைத் தலைவர்கள், புதல்வர்கள் முதலிய யாவரையும், அவரவரிடங்களுக்கு அனுப்பித் தன் கோயிலுக்குச் சென்று மகிழ்ந்திருந்தான்.

திருவிருத்தம்–180

ஆகத் திருவிருத்தம்–1,178

திருச்சிற்றம்பலம்

—oo—

ஆகக் காண்டம் மூன்றுக்குத் திருவிருத்தம்–4,890

**மகேந்திர காண்டம் முற்றுப்பெற்றது**

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

**நான்காவது**

# யுத்த காண்டம்

### கடவுள் வணக்கம்

நாரணன் என்னுந் தேவும் நான்முகத் தவனும் முக்கட்
பூரணன் தானு மாகிப் புவிபடைத் தளித்து மாற்றி
ஆரண முடிவுந் தேரு அநாதியாய் உயிர்கட் கெல்லாம்
காரண னாய மேலோன் கழலிணை கருத்துள் வைப்பாம்.

——oo——

## 1. ஏமகூடப் படலம்

**முருகக் கடவுள் எழுந்தருளல்**

சூரியன் உதயகிரியினை அடைந்ததும் திருச்செந்தூரில் எழுந்தருளியிருந்த ஆறுமுகக் கடவுள், திருமால் பிரமன் இந்திரன் முதலிய தேவர்களும், மற்றையோரும் கேட்க, வீரவாகு தேவரை நோக்கி, "அளவற்ற பாவங்களைப் புரியும் சூரபன்மனும் அசுரர்களும் அழியவும், தேவர்கள் துன்பம் நீங்கவும் வீரமகேந்திரபுரிக்கு இப்பொழுதே நாம் புறப்படுதல் வேண்டும். நம் தேரைக் கொண்டு வருவாயாக" என்று கட்டளையிட்டருளினர். ஆறுமுகக் கடவுளின் திருவாக்கைத் திருமால் முதலிய தேவர்கள் கேட்டு, இன்பத்தில் மூழ்கித் தங்கள் துன்பம் தீர்ந்ததென எண்ணி, அவர் திருவடியை வணங்கினர்கள். அப்போது வீரவாகு தேவர் '**மனவேகம்**' என்னும் தேரோடு பாகனையும் அழைத்து வந்து குமாரக்கடவுள் முன் நிறுத்தினர். வாயுதேவனால் செலுத்தப்படும் அத்தேரை முருகக் கடவுள் கண்டருளினர்; தம் சிங்காதனத்தினின்றும்

இறங்கி, அங்கிருந்த தேவர்களை நோக்கி, "நாம் கடலின் நடுவி லிருக்கும் மகேந்திரபுரிக்குச் சூரபன்மனை அழிக்கச் செல்லு கிறோம். நீங்கள் நம்மோடு உங்கள் வாகனங்களில் புறப்பட்டு வருவீராக" என்று பணித்தருளினர்.

நான்முகன் அன்னத்திலும், திருமால் கருடனிலும், இந்திரன் விமானத்திலும், மற்றைத் தேவர்கள் தத்தம் வாகனங் களிலும், இலக்கத் தெண்மரும் வீரவாகு தேவரும் தேர்களிலும் ஏறிச் சுப்பிரமணியக் கடவுளைச் சூழ்ந்தார்கள். மிகுந்த கோப முடையவர்களும், எல்லாப் புவனங்களையும் நொடிப்பொழுதில் அழிக்கும் ஆற்றல் பெற்றவர்களுமாகிய **சுப்பிரர், மேகமாலி** முதல் **சுவாலகேசர்** இறுதியாயுள்ள நூற்றெட்டுப் படைத் தலைவர்களும் வந்து நெருங்கினர். இரண்டாயிரம் வெள்ளம் பூதப்படைகளும் ஆரவாரஞ் செய்து புறப்பட்டன. தேவர்கள் பூமாரி பெய்தனர். பூதசேனைகளின் பேரொலி எல்லாத் திக்குக் களிலும் பரவியது. பேரிகை, கரடிகை, துடி, காளம் முதலிய பல வாத்தியங்களைப் பூதர்கள் இயம்பிச் சென்றனர். பூதசேனை களின் செலவினல் எழுந்த தூளி சூரிய சந்திரருடைய ஒளி களைக் குறைத்தது; கடலைத் திடலாக்கியது. பூத சேனைகள் ஆறுமுகக் கடவுள் திருவடிகளைத் துதித்துக் கடற்கரையில் தங்கிக் கடல் வழியாக நடந்தன. கடல் நீர் பூத வெள்ளங்களுக் குக் கணுக்கால் அளவே இருந்தது. கடலில் இருந்த சுறு திமிங்க லம் முதலிய மீன்கள் புழுக்களைப் போல் உலாவின. மலைகள் கால்களில் உறுத்துகின்ற பருக்கைக் கற்கள் போன்றிருந்தன. பூதப்படைகள் செல்லுதலால் கடல் கலங்கிச் சேறுகிக் காய்ந்து புழுதியாய் எங்கும் பறந்தது. இங்ஙனம், பூதப்படைகள் கடல் வழியாகச் செல்ல ஆறுமுகக் கடவுள் தேவர்கள் சூழ விண் வழி யாகக் கடலைத் தாண்டி இலங்கை மலையை நீங்கி மகேந்திரபுரிக்கு அருகில் சென்றருளினர்.

**ஏம கூடம்**

அப்பொழுது நான்முகன், திருமால், இந்திரன் ஆகிய மூவரும் முருகப்பிரானை வந்து வணங்கி, "எம்பெருமானே! இழிந்தவர்களாகிய அசுரர்கள் வீரமகேந்திரபுரியில் இருப்பதால் அங்கே செல்லுதல் முறையன்று. அதற்கடுத்த எல்லையாகிய

இங்கேயே பாசறையை அமைப்பித்துக் கொண்டு அதில் வீற்றிருந்து உபாயங்களை நாடி வேண்டியவாறு செய்தருளவேண்டுகிறோம்'' என்று விண்ணப்பித்துக்கொண்டார்கள். முருகப் பெருமான் அவர்களுடைய வேண்டுதலுக்கிணங்கி, தேவதச்சனை அழைத்து, ''ஒரு பாசறையை இங்கே விரைந்து அமைப்பாயாக'' என்றார். தேவதச்சன் முருகப் பெருமான் திருவடிகளை வணங்கித் துதித்து, ''அங்ஙனமே செய்வேன்'' என்று விண்ணப்பம் செய்தான்; மாடங்கள், கூடங்கள், மண்டபங்கள், சோலைகள், வாவிகள், கோபுரங்கள், வீதிகள் முதலியவைகள் கொண்ட பாசறை ஒன்றை மனத்தால் செய்து **'ஏமகூடம்'** (கதிர்காமம்) என்று பெயரிட்டான். முருகக் கடவுள் தேவதச்சனுக்குத் திருவருள் புரிந்தார். தேரிலிருந்து இறங்கிப் பூத சேனைகளை வீதிகளில் நிறுத்தி இலக்கத் தொன்பது வீரர்களோடும், நான்முகன் முதலிய தேவர்களோடும் திருக்கோயிலினுள் சென்று அரியணையின் மீது அமர்ந்து, **இலக்கத் தொன்பது வீரர்களும்,** திருப்பரங்குன்றத்திலிருந்து உடன்வந்த **பராசரன் புதல்வர்கள் அறுவரும்** அன்பால் போற்ற, விண்ணவர் பணி புரிய மகிழ்ந்து வீற்றிருந்தருளினார்.

திருவிருத்தம்-36
ஆகத் திருவிருத்தம்-36

——oo——

## 2. வரவு கேள்விப் படலம்

**நாரதர் சூரபன்மனிடம் கூறுதல்**

முருகக் கடவுள் ஏமகூடம் என்னும் பாசறையில் எழுந்தருளியிருந்ததை நாரத முனிவர் உணர்ந்தார். அப்பொழுது விரைந்து மகேந்திரபுரியிற் சென்று சூரபன்மன் கோயிலை அடைந்தார்; வாயிற் காவலர் உள்ளே விடச்சென்று சூரபன்மன் அரசு வீற்றிருத்தலைக் கண்டு, '' இக்கொடியவன் மூங்கில் போலத் தானே தன் சுற்றத்தோடு அழியக்கடவன்'' என்று மனத்தில் நினைத்துக்கொண்டு, சூரபன்மனுக்கு வாயினால் ஆசி கூறினார். சூரபன்மன் அவரைப் பார்த்து, ''நீ யாவன்? எங்கே இருப்பவன்? இங்கு வந்த காரணம் என்ன?'' என்று கேட்டான். நாரத முனிவர், ''நான் சிவபெருமான் வீற்றி

ருக்கும் வட கயிலையில் வாழ்பவன்; உன் குலம் சிறப்படைய நாடோறும் தவம் செய்பவன்; வஞ்சனை புகலேன்; காமம் முதலியவைகளை நீத்துப் பல தவங்களைப் புரிபவன்; தேவர்களுக்குத் துன்பம் செய்வேன்; சுக்கிராசாரியாரோடு நட்பு உடையவன்; **நாரதன்** என்னும் பெயருடையவன்; உன்னிடத்து ஒன்று உரைக்க வந்தேன்: சிவபெருமான் உன்னைக் கொல்லும்படி **கந்தன்** என்னும் ஒரு குமாரனை நெற்றிக் கண்ணிலிருந்து தோற்றுவித்தார். உனக்குத் தொண்டு செய்துகொண்டிருக்கும் இந்திரன் முதலிய தேவர்கள் அப்பாலகனிடம் போய் உன்னால் தங்களுக்கு நிகழ்ந்த துன்பங்களைக் கூறி முறையிட்டார்கள். அப்பாலகன் அவர்களைப் பாதுகாப்பதாக உறுதி கூறினான்; சிவபெருமான் அருளினால் பூதசேனைகளோடு, தேவர்கள் சூழ, பூமியில் வந்தான்; உன் தம்பியாகிய தாரகனையும் கிரவுஞ்ச மலையையும் வேற்படையால் அழித்தான்; பிறகு செந்திற்பதிக்கு வந்து தங்கி உன்னிடத்து ஒரு தூதுவனை அனுப்பினான்; தூதுவன் மீண்டு வந்தபின் சேனைகளோடு கடலைத் தாண்டி இந்நகரின் வடதிசையில் வந்து ஒரு பாடி வீட்டை அமைத்துக் கொண்டான். இந்நிகழ்ச்சிகளை யெல்லாம் நான் அறிந்தேன். நீ உடனே ஆவன விரைந்து செய்வாயாக'' என்று இயம்பினார்.

**சூரபன்மன் கூறுதல்**

சூரபன்மன், நாரதர் மொழிகளைக்கேட்டு நெருப்புப் போலக் கோபித்துச் சிரித்தான்; "இந்திரன் நான்முகன் திருமால் முதலியவர்களுடைய ஊர்களைப்போல, இவ்வீரமகேந்திரபுரியை அவன் எளிமையாக நினைத்தானோ! ஆயிரங் கோடி அண்டங்களை அரசு புரியும் என்னோடு வீரமகேந்திரபுரியில் போர் செய்ய ஒரு சிறுவனோ வருபவன்! சிங்கக் கூட்டங்கள் வாழும் ஒரு காட்டில் ஒரு யானைக் கன்றானது மான் முதலிய விலங்குகளோடு வந்தால், போர் செய்து வெற்றிகொள்ள முடியுமா! அதுபோல் முருகன் என்னுடன் போருக்கு வருகிறான். கடலைத் தாண்டி என்னணையைக் கடந்து வந்த அவனை இப்பொழுதே அழிப்பேன். புத்தியில்லாப் பாலகன் என்றும், பழி என்றும் பாரேன். முன்னர், சூழ்ச்சியால் அசமுகியின் கையைத் துணித்த தேவர்கள் வாழ்ந்தார்களா! தாரகனையும் கிரவுஞ்ச மலையையும் அழித்ததால், தன்

உயிர் போவதை அறியாது இந்நகர்க்கு வந்தான். திருமால், இந்திரன், நான்முகன் யாவரும் என் பெயர் கேட்டு அஞ்சுவர். சாம்பலைப் பூசுகின்ற சிவபெருமானுடைய குமாரனா நம்மோடு போர் செய்வான்! என் குமாரன் ஆகிய பானுகோபனை நால் வகைச் சேனைகளோடு அனுப்பிப் பூதர்களையும் மற்றை வீரர் களையும் கொல்வித்துக் கந்தனை விரைவில் வெற்றிகொள்வேன். முனிவனே! இதனைக் காண்பாயாக'' என்றான். நாரத முனிவர், "நன்று இது, நன்று இது; காலம் தாழ்க்காதே! இப்பொழுது அப்பாலகனோடு போர் புரிய உன்னுடைய படைகளை அனுப்புக. நான் உங்களுக்கு வெற்றியுண்டாகும்படி தவம் செய்யும் பொருட்டுச் செல்லுகிறேன்'' என்று புன்முறுவல் செய்து கொண்டு ஆகாய வழியில் சென்றார்.

### சூரபன்மன் வருணனைக் கோபித்தல்

சூரபன்மன், தன் மருங்கில் நின்ற **கோரன், உற்கோரன்** என்னும் ஒற்றர்களைப் பார்த்து, "விரைவில் வருணனைக் கொண்டு வாருங்கள்'' என்று கூறினான். அவர்கள் ஓடிப்போய் வருணனைக் கூவிப் பிடித்துக் கொண்டு வந்து சூரபன்மனுக்கு எதிரே நிறுத்தினார்கள். அவன் வருந்திய மனத்துடன் சூரபன் மனை வணங்கிப் பயந்துகொண்டு நின்றான். சூரபன்மன் அவனை நெருப்பெழப் பார்த்து, "வருணனே! நமக்கு நீ மாறாகச் சிவகுமாரனையும், பூத வெள்ளங்களையும் இங்கு ஏன் விட் டாய்?'' என்று கேட்டான். வருணன் சூரபன்மனை நோக்கி, "அரசர்க்கரசே! திருமால் நான்முகன் இந்திரன் துணை வர்கள் ஆகிய இவர்களோடு சிவகுமாரர் விண் வழியாகச் சென்றார். பூதர்கள் என் மீது நடந்து சென்றார்கள். நான் அவர்களுடைய கணுக்கால் வரையில் கூட எட்டவில்லை. அங்ஙனம் சென்ற பூதர்களை யானோ தடை செய்ய வல்லேன்? அவர்களுடைய கால்களிலிருந்து எழும்புகின்ற புழுதியால் சேறுபட்டு ஓயாமல் புலம்பினேன். ஆழியன் (ஆழமுடைய வன்) என்னும் பெயரும் அழியப் பெற்றேன். வலியவர்களை ஏழையாகிய நான் எதிர்க்க முடியுமா? அகத்திய முனிவர் கையால் அள்ளி உண்டதைப்போல் என்னை உண்டுவிடுவர். இடியைப் பாம்பு தவிர்க்க வல்லதா! சிங்கத்தை யானை வென்ற

துண்டா! விதியை மதி வெல்லுமா! அவ்வாறே வலிமை பொருந்திய பூத வெள்ளங்களை எளியவனாகிய யான் தடுக்க முடியாதவனானேன்" என்று உடல் நடுங்கக் கூறி நின்று கொண்டிருந்தான்.

**ஒற்றர்கள் செய்தி**

அப்பொழுது சில ஒற்றர்கள் ஆறுமுகக் கடவுள் மகேந்திரபுரியை அடைந்ததைக் கண்டு விரைந்து ஓடி வந்தார்கள்; சூரபன்மனைக் கண்டு வணங்கி நின்று, "திருமால் நான்முகன் இந்திரன் முதலிய தேவர்கள் சூழ, இலக்கத்தொன்பது வீரர்கள் போற்ற, இரண்டாயிரம் வெள்ளம் பூத சேனைகளோடு சிவகுமாரர் மகேந்திரபுரியின் வடதிசைக்கண் வந்து, தேவதச்சனைக் கொண்டு ஒரு பாடி வீடு அமைப்பித்து, ஒரு கோயிலில் பூத வீரர்கள் சூழ வீற்றிருக்கிறார். நாங்கள் இதனைக் கண்ணாரக் கண்டோம். இப்பொழுதே செய்யவேண்டுவனவற்றைச் செய்வாயாக" என்று சொன்னார்கள். சூரபன்மன், அண்டங்களும் புவனங்களும் சுழலும்படி தீயெழக் கோபம் கொண்டான். அவன் கண்கள் புண்போலச் சிவந்தன. அவன் தூதுவர்களை நோக்கி, "சிவகுமாரன் வலிமையையும், பிறர் வலிமையையும் அழிப்பேன். பானுகோபனை அழைத்துக்கொண்டுவருவீர்களாக" என்று கட்டளையிட்டான்.

திருவிருத்தம்–27
ஆகத் திருவிருத்தம்-63

——oo——

## 3. முதனாட் பானுகோபன் யுத்தப் படலம்

**சூரபன்மன்–பானுகோபன்**

சூரபன்மனது தூதுவர்கள், நன்றென்று கூறிப் பானுகோபனின் கோயிலை அடைந்தார்கள்; பானுகோபனைவணங்கிச் சூரபன்மனின் கட்டளையைத் தெரிவித்தார்கள். அவன் அரியணையை விட்டு விரைந்து எழுந்தான். மந்திரிமார்களும், சேனைத் தலைவர்களும், பிறரும் அவனைச் சூழ்ந்தனர். பல இசைக் கருவிகள் ஒலித்தன; படைவீரர்கள் வந்து சூழ்ந்தனர். பானுகோபன் ஒரு தேரில் ஏறி ஆயிரங் கோடி வீதிகளைக் கடந்து, ஆங்காங்கு வீரர்

கள் வணங்கச் சென்று, தன் தந்தையின் திருநகர் அடைந்தான்; தேரினின்று இறங்கிக் கோயிலுட் புகுந்து அவனுடைய கால்களை வணங்கி, "வீரர்களில் வீரராகிய பிதாவே! என்னை அழைத்த காரணம் யாது?" என்று வினவினுன். சூரபன்மன் தன் மகனைப் பார்த்து, "முன் கிரவுஞ்ச மலையையும் தாரகனையும் கொன்ற கந்தன், நந்தி கணத் தலைவர்களோடும் பூதர்களோடும் செந்திப்பதியை நீங்கிக் கடல் கடந்து நம் நகரின் வடக்கு வாயிலில் வந்து தங்கியுள்ளான். திருமால் பிரமன் இந்திரன் முதலிய தேவர்கள் அவனேடு வந்திருக்கின்றுர்களாம். வீரமகேந்திரபுரி எளிய தேவர்களும், சிவகுமாரனும், நந்தி கணத்தவர்களும் வரக்கூடிய சாதாரண நகரமா? நன்று! நன்று!! வந்த பகைவர்களோ சிறியவர்கள். நானே அரசர்களுக்கு அரசன். ஆதலால், வாளாவிருந்தேன். இந்திரன் வேண்டச் சிவபிரான் முருகனைப் பூதப்படையோடும் நம்மேற் போருக்கு அனுப்பியுள்ளான். ஆதலின், நீ உன் படைகளுடன் சென்று போரிட்டுச் சிவகுமாரனையும், நந்தி கணவீரர்களையும், பூதர்களையும் வென்று வருவாயாக" என்று சொன்னுன். தன் தந்தை கூறியவற்றைக் கேட்டுப் பானுகோபனின் தோள்கள் பூரித்தன. அவன் உடல் புளகாங்கிதம் அடைந்தது. அவன் சூரபன்மனைப் பார்த்து, "தந்தையே! நான் சிவகுமாரனையும் பூதப் படைகளையும் வென்று வருவது ஒரு பெருஞ் செயலன்று. நான் நேற்றே 'சிவகுமாரன் வருவதற்குமுன் அவனை எதிர்த்துச் செல்கிறேன்' என்று நவின்றேன். நீ அப்போது அதனைக் கேட்கவில்லை. இனிப் பேசி ஆவதென்ன? நான் படைகளோடு சென்று முருகனை வென்று பூதர்களையும் படைத்தலைவர்களையும் அழித்து இங்கே வருவேன்; நீ இதனைக் காண்பாயாக. முருகனை வெற்றி கொண்டபின் அவனேடிருக்கின்ற திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்களைப் பிடித்துக்கொண்டு வந்து நின்னிடம் தருகின்றேன்; அவர்களுக்குத் தக்க தண்டனை அளிப்பாயாக" என்றுன். சூரபன்மன், "மகனே! நீ அவ்வாறே செய்வாயாக" என்று கூறி மகிழ்ந்தான்.

**பானுகோபன் போர்க் கோலம் பூணுதல்**

பானுகோபன் தன் மாளிகையை அடைந்தான்; தூதுவர்களை அழைத்துத் தன் சேனைகளைக் கொண்டுவரச் செய்தான்;

ஆயுத சாலைக்குப் போய் வீரலட்சுமியை வழிபட்டான்; வாட் படையை மருங்கில் செருகி, வீரக் கழலும் கவசமும் அணிந்து, அம்பறாத் தூணியை முதுகில் தாங்கி, நெற்றியில் பட்டங்கட்டிக் கொண்டு, தும்பை மாலை சூடி, போர்க் கோலம் பூண்டான். விசயன், நேமியன், மாயன், முசலி, கண்டகன், முரன், கரன், மூர்க்கன், தசமுகன், கனலி, சண்டன், விசண்டன், அசமுகன், மகிடன், அக்கிரவாகு, விசயசேனன், விடசேனன், விமோகன், சோமுகன், மது, சசிசித்து, சுசிமுகன், அசனி, சூனியகேது, அசுரசேனன் முதலிய அவுணப் படைத் தலைவர்கள் தெய்வப் படைக்கலங்களை ஏந்திப் போருக்குப் புறப்பட்டனர். பதினாயிரம் வெள்ளம் அசுரப்படைகளும், பதினாயிரம் வெள்ளம் யானை, தேர், குதிரைப் படைகளும் பக்கத்தில் வந்தன. பானுகோபன் முப்பதினாயிரம் குதிரைகள் கொண்ட ஒரு தேர் மேல் ஏறினான். சேனைகள் ஆரவாரஞ் செய்தன. பலர் அளவிறந்த சாமரங்களை வீசினர். சிலர் வெண்கொற்றக் குடைகளைப் பிடித்தனர். சிலர் அடைப்பை, கோடிகம், காளாஞ்சி, வாள், பீலிக்குஞ்சம் முதலியவைகளை ஏந்திச் சூழ்ந்தனர். ஆயுதங்கள் அளப்பில கொண்டுள்ள ஒரு கோடி பாதுகாப்புத் தேர்கள் பானுகோபனைச் சூழ்ந்து வந்தன. பானுகோபன் தேர்ப்பாகனை நோக்கி, "நம் தேரினைக் கந்தசுவாமி இருக்குமிடத்திற்குச் செலுத்துதி" என்றான். பாகன், 'நன்று' என்று அவ்வாறே தேரைச் செலுத்தினான். யுத்த பேரிகை முழங்கின. அவுணர் சேனை ஆரவாரித்தன. யானை, குதிரை முதலியன ஆர்த்தன. தேர்கள் அதிர்ந்து சென்றன.

### நாரதர் முருகக் கடவுளிடம் கூறுதல்

பானுகோபன் இவ்வாறு போருக்குப் புறப்பட்டதை நாரதர் கண்டு, விண் வழியே ஆறுமுகக் கடவுள் இருக்கும் ஏமகூடமாகிய பாசறையை அடைந்தார்; அப்பெருமானின் திருவடிகளை வணங்கி, "எம்மை ஆளுடைய பெருமானே! இங்குத் தேவரீர் எழுந்தருளியதைச் சூரபன்மன் தூதுவர்களால் அறிந்தான். தன் குமாரனாகிய பானுகோபனை அழைத்து உம்மை எதிர்த்துப் போர் செய்ய அனுப்பினான். அவன் போர்க்கோலம் பூண்டு, சேனை வெள்ளங்களோடு வருகிறான்.

அப்பானுகோபனை நீரும் சிவனுமன்றி, வேறு எவராலும் எதிர்க்க இயலாது. அவன், நான்முகன், திருமால், இந்திரன் முதலியவர்களை வென்றவன்; பல போர்களை வென்று புகழ் பெற்றவன்; பல மாயங்களில் வலிமை மிக்கவன்; நான்முகன் அளித்த படைக்கலங்களைக் கொண்டவன்; வருணனின் பாசத்தையும், இயமனின் சூலத்தையுங் கவர்ந்தவன். ஆதலால், அவனை மற்றவர்களால் வெல்லுதல் அரிது. நீரே அவனைக் கொல்ல வேண்டும்'' என்று விண்ணப்பஞ் செய்தார்.

**வீரவாகு தேவர் போருக்கு எழுதல்**

நாரத முனிவரின் மொழிகளைக் கேட்டுச் சண்முகக் கடவுள் திருப்புன்முறுவல் கொண்டார்; வீரவாகு தேவரை அழைத்து, "நாம் இங்கே பூதசேனைகளோடு போருக்கு வந்தமையைச் சூரபன்மன் அறிந்து பானுகோபனை நம்முடன் போர் செய்ய அனுப்பியுள்ளான். நீ ஆயிரம் வெள்ளம் பூத சேனைகளோடும் போய், பானுகோபனை எதிர்த்து, அவன் சேனைகளை அழித்து மீள்வாயாக'' என்று கட்டளையிட்டருளினர். வீரவாகு தேவர் முருகக் கடவுளை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார். பிறகு அவர் மேருமலை போன்ற ஒரு வில்லை எடுத்து அம்பறாத்தூணியை முதுகில் ஏந்தி, விரல்களில் புட்டிலையும், கையில் கோதையையும் தரித்து ஒரு தேரில் ஏறினர். ஆயுதங்கள் நிறைந்த பாதுகாப்புத் தேர்கள் அவரைச் சூழ்ந்து வந்தன. இலக்கத்தெண்மரும், பூதப் படைத் தலைவர்களும் போர்க் கோலம் பூண்டு பக்கத்தில் சூழ்ந்தார்கள். "சூரபன்மனோடு போர்புரிய ஆயிரம் வெள்ளம் பூத சேனைகள் புறப்படுங்கள்'' என்று பூத வீரர் பறையறைந்தனர். உடனே ஆயிரம் வெள்ளம் பூத சேனைகள் ஆறுமுகக் கடவுளைக் காத்து நின்றன. மற்றை ஆயிரம் வெள்ளம் பூத சேனைகளும் கடல்போல் ஆரவாரித்து வீரவாகு தேவரைச் சூழ்ந்தன. அப் பூதர்கள் பூமி முழுவதையும் ஒரே தோளில் தாங்கும் ஆற்றல் பெற்றவர்கள்; கூற்றுவனையும் கொல்லக்கூடிய தறுகண்மை வாய்ந்தவர்கள்; சிவந்த சடையினை யுடையவர்கள்; படைக்கலங்களை ஏந்திய கைகளையுடையவர்கள்; வீரக்கழல் ஒலிக்கும் கால்களையுடையவர்கள்; வரத்தில் சிறந்தவர்கள்; மாயங்களை வென்றவர்கள்; அண்டங்களையும் உடைக்க

வல்லவர்கள். இத்தகைய பூத சேனைகள் சூழ, வீரவாகு தேவர் போருக்குப் புறப்பட்டார். திமிலை, பேரி, காகளம் முதலிய இசைக் கருவிகள் ஒலித்தன. கொடிப் படைகள் எழுந்தன. வீரவாகு தேவர் மகேந்திரபுரியின் மதிலின் புறத்து வந்தார்.

### அசுரர்கள் பூதப் படைகளைக் காணுதல்

அப்போது, சில அசுரர்கள் வீரவாகு தேவரைக் கண்டார்கள்; விரைந்து ஓடிச்சென்று, பானுகோபனை வணங்கி, "அரசகுமாரனே! நீ போர்புரிய வந்ததை அறிந்து முன்னர் தூதுவனாக இங்கு வந்த வீரவாகு என்பானைச் சிவகுமாரர் உன்னோடு போர்புரிய அனுப்பியுள்ளார்" என்று கூறினார்கள். பானுகோபன் அதனைக் கேட்டுக் கை கொட்டிச் சிரித்துக் கோபித்து, "பாசறையில் இருக்கும் பாலகனையும், வீரவாகுவையும், பூதர்களையும் புறங்கொடுத்தோடும்படி அழிப்பேன். எனக்குப் பயந்து கந்தனும் தூதுவனும் ஆகாயத்திலும், எண் திசைகளிலும், கடல் ஏழிலும் கடந்து செல்லினும் யான் விடுவனோ? அவர்களைப் பிடித்துக் கொண்டுபோய் என் தந்தைக்குக் காட்டி, எல்லோரும் என்னைப் புகழ, அவர்களைச் சிறையிடுவேன்" என்று பற்பலவற்றைக் கூறினான். அவுண வீரர்கள், வடதிசைக் கோபுரவாயிலைக் கடந்து சென்று, அங்கே வருகின்ற பூதசேனைகளைப் பார்த்து, "முன்னர் நம்மைக் கண்டு பயந்து ஓடிய தேவர்கள் இவர்கள் அல்லர். இவர்கள் வலியர் போலும்" என்று எண்ணி அவர்கள் எதிரே சென்று கனைத்தார்கள்.

### இருதிறத்துப் படைகளும் போரிடுதல்

பூத சேனைகள் அசுரர்களைப் பார்த்து, "உலகத்திலுள்ள உயிர்களை வருத்தியவர்கள் இவர்களோ" என்று கோபித்து அதட்டினர். இருதிறத்துப் படைகளுக்கும் போர் மூண்டது. அவுண வீரர்கள், யானைகளுடைய துதிக்கைகளில் தண்டாயுதத்தைக் கொடுத்துப் பூத வீரர்களை அடித்துக் கொல்லுமாறு குறிப்புக் காட்டினர்; யானைகளிலும், குதிரைகளிலும், தேர்களிலும் ஏறிவந்து படைக்கலங்களை வீசித் தாமும் போர் செய்தனர். காலாட் படையினர், முத்தலைச் சூலம், தோமரம்

முதலிய படைகளை எறிந்து போர்புரிந்தனர். பூதர்கள் அவர்களை மரங்களினுலும் மலைகளினுலும் அடித்து அழித்தார்கள். போரில் இறந்த அசுரர்களும் பலர்; கை, கால் இழந்து வீழ்ந்த பூதர்களும் பலர். இறந்த உடல்களின் இரத்த வெள்ளம் கடல் போலத் தேங்கி நின்றது. பூதர்கள் மிகச் சினங்கொண்டு தேர்களைத் தேர்களாலும், யானைகளை யானைகளாலும், குதிரைகளைக் குதிரைகளாலும், ஆள்களை ஆள்களாலும் மோதி அவுணப் படையைப் பெரிதும் அழித்தார்கள். பூதர்கள் செய்த கடும் போருக்கு ஆற்ருது, அவுணர்கள் சிதறிப் போயினர்.

**அனலி - சிங்கர்**

அப்போது அவுணர்கள் சிதறி ஓடுதலை **அனலி** என்னும் அசுரப் படைத் தலைவன் கண்டு தன் கையிலுள்ள வில்லை வளைத்து நாணெலி செய்தான். அவ்வொலியைக் கேட்ட தேவர்கள் வருந்தினர். அனலி தீக்கணைகளைப் பூட்டிப் பூதர்களின் உடல்களில் செலுத்தினுன். அதனைச் **சிங்கர்** என்னும் பூதப் படைத்தலைவர் கண்டார்; மிகக் கோபங்கொண்டு ஆரவாரஞ் செய்தார்; அனலியின் தேரிற் கட்டிய குதிரைகளைத் தன் தண்டினுல் அடித்துக் கொன்ருர். குதிரைகள் இறந்ததும் தேர் ஓடாது நின்றுவிட்டது. அதனை அனலி கண்டு சினந்து கணக்கற்ற கணைகளை எய்து சிங்கரின் உடலை மறைத்தான். சிங்கர், அனலியின் கணைகளைப் பொருட்படுத்தாமல் விரைந்து சென்று, ஓடாமல் நின்ற தேரிலேறி அவனுடைய வில்லைப் பறித்து நிலத்தில் எறிந்தார். அனலி ஒரு தண்டினுல் சிங்கருடைய தலையில் அடித்தான். சிங்கர், தன்னை அடித்த தண்டோடு அனலியின் கையைப் பிடித்து, மற்ருெரு கையால் அவன் மார்பு ஒடியும்படி அடித்து, அவனைப் பிடித்த தண்டோடு வருந்தச் சுழற்றி, அவன் அறிவழிந்து சோரும் சமயத்தில் பூமியில் மோதி அடித்தார். உடனே அனலி இறந்தான்.

**சண்டன் - சிங்கர்**

அனலி இறந்தமையைக்கண்ட **சண்டன்** என்னும் அவுணப் படைத் தலைவன், இடியேறுபோலக் கோபித்து மனம் வருந்தி, "இப்பொழுதே இவனுடைய உயிரைக் குடிப்பேன்" என்று

சொல்லிக்கொண்டு சிங்கரை எதிர்த்தான். சிங்கர் அதனைக் கேட்டுத் தீயெழ நோக்கி, இறந்த அனலியின் கையிலிருந்த தண்டை எடுத்துக்கொண்டு சண்டனின் தேரில் பாய்ந்து அவனுடைய தோளில் அடித்தார். அவன் வருந்தித் தேர்மீது விழும்போது தன் கைத்தண்டினால் சிங்கருடைய மார்பில் அடித்தான். இருவரும் சோர்ந்து கீழே விழுந்தனர்.

**மாயன் - நீலர்**

சண்டன் சோர்ந்து விழுந்தமையைக் கண்ட **மாயன்** என்னும் அவுணப் படைத் தலைவன் உடனே தேரேறி வந்தான். **நீலர்** என்னும் பூதப் படைத்தலைவர், அவனை எதிர்த்து அவன் மேல் ஒரு தண்டத்தை எறிந்தார். மாயன் இறந்தவன்போல மிக வருந்தி ஒரு முத்தலைச் சூலத்தை நீலர்மேல் வீசினான். அது நீலர் மார்பிற்பட்டு இரத்தம் வடியச் செய்தது. நீலர் சிறிது சோர்ந்து, பிறகு தெளிந்து, மாயனின் மார்பில் கையால் அடித்து அவனுடைய தோள்கள் இரண்டையும் கைகளால் கட்டிப் பிடித்துக்கொண்டு, கழுத்தில் கடித்துக் குருதியைக் குடித்துச் சினந் தணிந்து நின்றார்.-மாயன் இறந்தான்.

**சண்டனும் சிங்கரும் மீண்டும் போரிடுதல்**

முன்பு போர் செய்து மயங்கி வீழ்ந்த சண்டன் சிங்கர் இருவரும், சோர்வு நீங்கித் தண்டாயுதம் ஏந்திப் போரிட்டார்கள். சிங்கர் சண்டனுடைய தண்டத்தைப் பொடியாகும்படி அடித்து எறிந்தார். அதனைக் கண்டு அவுணர்கள் அஞ்சினர். சண்டன் இடியேறுபோலச் சினந்து, "என் தண்டாயுதம் ஒடிந்ததென்று செருக்கடையாதே! நான் என் புயத்தையே தண்டாயுதமாகக் கொண்டுள்ளேன். நான் முன்னாளில் இயமலோகமும் மேல் உலகங்களும் அஞ்சும்படி போர் செய்தேன்; உனக்கு அஞ்சேன்" என்று கூறி, தன் கையையே ஆயுதமாகக்கொண்டு அவரை எதிர்த்தான். சிங்கர் கோபித்து, "நீ வலிமையுடையவன் போலும்; இத் தண்டத்தைக் காத்துக் கொள்" என்று கூறி, அவனைத் தண்டினால் அடித்தார். சண்டன் அந்த அடியைத் தன் கைகளால் தடுத்துத் தோளைக்கொட்டி ஆரவாரஞ் செய்தான். சிங்கர் தண்டினால் அடித்து அவன் புயத்தை ஒடித்தார்.

சண்டன் புயமும் சிங்கர் தண்டும் முறிந்தன. சண்டன் தன்னுடைய ஒடிந்த தோளைப் பிய்த்து எடுத்து அதனையே தண்டாக ஏந்திப் போர் செய்தான். அதனைக் கண்டு, தேவர்கள் "வீரருள் வீரன் இவனே" என்று வியந்தனர். சண்டன் ஒடிந்த கையாகிய தண்டினுல் சிங்கருடைய மார்பில் அடித்தான். சிங்கர் தம்முடைய காலினுல் அவனுடைய மார்பில் உதைத்துத் தள்ளினுர். அதனைக் கண்ட தேவர்கள் ஆரவாரம் செய்து, "தாமதியாது சண்டனின் உயிரைக் கவர்க" என்று வேண்டினுர்கள். அதனைச் சண்டன் கேட்டு, "இவனு என் உயிரைக் கவர வல்லவன்? இதோ பாருங்கள், தேவர்களே! இவனையும் உங்களையும் கொன்று தின்பேன்" என்ருன். அப்போது சிங்கர் அவனுடைய கன்னம் உடையும்படி கையினுல் மோதினுர். சண்டன் இடியொலியோடு கூடிய மேகம்போலப் பூமியில் வீழ்ந்து இறந்தான். கூற்றுவன் தூதுவர்கள் சண்டனை அணுகப் பயந்தார்கள். சிங்கர் இயமதூதுவர்களை நோக்கி, "இந்தக் கீழ்மகனின் உயிரைக் கவர்ந்துகொண்டு செல்லுங்கள்" என்று கூறினுர். அவர்கள் அணுகிவந்து அவன் உயிரைக் கவர்ந்து சென்ருர்கள். சண்டன் வீழ்ந்து இறந்த இடம், சிதறிய கோரப் பற்களாலும் மற்றைப் பற்களாலும் குருதிப் பெருக்காலும், இளம்பிறையை விண்மீன்கள் சூழப்பெற்ற செவ்வானம்போலக் காட்சி அளித்தது.

> போழுறு பகுவாயில் பொலிதரும் எயிருேடும்
> வீழுறு நகையாலும் விரிகுரு தியினுலும்
> தாழுறு மதிதன்னைத் தாரகை நிரைசூழ
> ஊழுற அமர்செவ்வான் ஒத்தவ் வுழியன்றே.

**அசமுகன் - மது**

சண்டன் இறந்ததைக்கண்ட **அசமுகன்** என்னும் அவுணப் படைத் தலைவன், "சற்று நில்! நில்!! யான் உன் உயிரை உண்பேன். மற்றவர்களைப்போல எண்ணுதே" என்று கூறிக்கொண்டு ஒரு தேர்மேல் விரைந்துவந்து சிங்கரை நெருங்கினுன். **மது** என்னும் பூதப் படைத் தலைவர், "நீ எங்கே தப்புவாய்? இங்கே இறந்தாய்" என்று அவ்விருவருக்கும் இடையில் புகுந்தார். அசமுகன் வில்லை வளைத்து நாணெலி செய்து மதுவின்

மீது கணைகளைச் செலுத்தினன். மது அக்கணைகளைப் பொருட் படுத்தாமல் அருகிலிருந்த மராமரத்தைப் பிடுங்கித் தன்மேல் வருகின்ற அசமுகன் கணைகளைத் தடுத்தார்; அசமுகனுடைய தேரில் விரைந்து பாய்ந்து இடிபோல ஆரவாரஞ் செய்தார், அசமுகன் அவ்வாரவார ஒலிகேட்டுச் சோர்ந்து, தன் வில்லையும் கணைகளையும் கீழே நழுவவிட்டு வேர்த்துத் தேரின்மீது நின்றான். மது அவன் நிலைமையைக் கண்டு, "நீ போர் செய்வதற்குத் தகுந்த ஆண்மை உள்ளவன் அன்று" என்று கூறி, அவன் தேரினின்றும் இறங்கிச் சென்றார். அசமுகன் வெட்கிப் பெருமை இழந்து நின்றான்; பிறகு, தன்னுடைய நிலைமைக்கு இரங்கி ஒருவாறு தேறி, மதுவைத் தொடர்ந்து சென்று, "நீ எங்குச் சென்றாலும் உன்னைக் கொல்லுவேன்; ஓடாதே நில்! நில்!! என்று ஆர வாரஞ் செய்தான். மது அசமுகனைப் பார்த்து, "வீரமில்லாத நீ, என்னோடு போருக்கு வருதல் தவறாகும்; என்னை எதிர்த் தமையால் நீ கீர்த்தி பெற்றாய்; உன்னை எதிர்ப்பதால் எனக்குப் பெரும் பழியைத் தருகின்றாய்" என்று கூறினார். அப்போது அசமுகன் பல பிறைமுகக் கணைகளை அவர்மீது எய்தான். மது அவற்றையெல்லாம் கையினால் விலக்கி நின்றார். அசமுகன் அதனைக் கண்டு தன் கையிலிருந்த முத்தலைச் சூலம், வேல் முதலியவைகளை அவர்மேல் எய்தான். மது தளர்ச்சியடைந்து அசமுகன் தேரைக் கையினால் எடுத்துக் கடலில் எறிந்தார். அசமுகன் தேரிலிருந்து பாய்ந்து மதுவுடன் மற்போர் செய்தான். மது அவனை வானுலகத்திற் கப்பால் செல்லும்படி காலினால் உந்தினார். அவன் விண்ணில்போய் நிலத்திற்கு மீண்டு வந்து மதுவின் மார்பில் அடித்து வைதான். பிறகு, ஒரு வஞ்சனையை எண்ணி விண்ணில் மறைந்து சென்று, திருமாலின் சக்கரப் படையை எடுத்து மதுவின் மீது விடுத்தான். அப்போது, மது நிராயுதபாணியாய் நின்றதால் அச் சக்கரப்படை மதுவை ஒன்றும் செய்யவில்லை. அது திரும்பிவந்து அசமுகனின் தலையை அறுத்தது. **"அவரவர் வினைகளுக்கு அவரவர்களே காரணம்"** என்று பெரியோர்கள் கூறுவது உண்மைபோலும். அசமுகன் கீழே விழுந்து இறந்தான். அவுணர்கள் வருந்தினார்கள். தேவர் கள் மகிழ்ந்தார்கள். சக்கரப்படை திருமாலிடம் திரும்பிச் சென்றது. மற்றை அவுணத் தலைவர்கள் நால்வகைச் சேனைக

ளோடு சென்று பூதப் படைத் தலைவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தார்கள். இலக்கம் வீரர்களில் ஒருவராகிய **தண்டர்** என்பவர் வில்லை வளைத்து அவுணர்கள் மேல் கணை மழைகளைப் பொழிந்தார். அவுணர்களின் நால்வகைச் சேனைகளும் அழிந்து குருதி வெள்ளம் ஆறுபோலப் பெருக்கெடுத் தோடியது. பிழைத்த அவுணர்கள் எல்லாத் திக்குகளிலும், பூமியிலும், வானுலகத்திலும் சிதறி ஓடினர்கள்.

**பானுகோபன் போரிடுதல்**

அவுணப் படைகள் அழிந்தமையையும் படைத் தலைவர்கள் பலர் இறந்தமையையும் பானுகோபன் கண்டு, "முன்னர் இந்திரன் முதலாகிய தேவர்கள் புறங்கொடுத்தோடும்படி போர் செய்து வென்ற நம் படைகள், இன்று சிவகுமாரன் விடுத்த சேனைகளால் அழிந்தன போலும். சூரியனைச் சிறை செய்த யான் நிற்கையில், நம்முடைய சேனைகள் கொல்லப் பட்டன. சிங்கம் கோபத்தையும் பகையையும் ஒழித்தால் யானைகள் அதனையும் கொன்றுவிடாவோ! அவுண சேனைகள் இரண்டாயிரம் வெள்ளத்திற்குமேல் இறந்தன. என் பக்கத்தில் ஆயிரம் வெள்ளம் சேனைகளே நிற்கின்றன. நான் முன்னணியில் சென்று பகைவர்களைத் துன்புறுத்தவில்லை. பின்னணியில் நின்றேன். அதன் மூலம் என் சேனைகளை நானே கொன்றேன் என்று கூறுதல் பொருந்தும். கழிந்ததை நினைந்து வருந்துவதில் பயனில்லை. இனி, "நானே போருக்குச் சென்று ஒரு நாழிகைப் பொழுதினுள் போரை முடிப்பேன். அங்ஙனம் செய்யாவிடில் நான் சூரபன்மன் மகன் அல்லேன்" என்று சபதங் கூறினன்; பூதப் படைகளுள் புகுந்து வில்லை வளைத்துப் பூதர்கள் மேல் கணைகளை மழைபோலச் சொரிந்தான். பூதர்கள் அதனைக் கண்டு பானுகோபன்மேல் பல மலைகளைப் பிடுங்கி எறிந்தார்கள். பானுகோபன் அம்மலைகளைத் தன் கணைகளால் துகளாக்கினன்; பின்பு ஆயிரங்கோடி கணைகளைப் பூதர்கள் மீது செலுத்தினன். அதனால், அளவில்லாத பூதர்கள் இறந்தார்கள். எஞ்சியோர் விரைந்தோடி வீரவாகு தேவரை அடைந்தார்கள்.

**பானுகோபன் - உக்கிரர்**

பூதப் படைகள் புறங்காட்டி ஓடுதலைக் கண்ட **உக்கிரர்** என்னும் பூதப் படைத்தலைவர், கோபங்கொண்டு ஒரு தண்டா

யுதத்தை எடுத்துக்கொண்டு ஆரவாரஞ் செய்து பானுகோபனை எதிர்த்தார். பானுகோபன் வில்லை வளைத்து ஆயிரங் கோடி கணைகளை உக்கிரர் உடல் முழுவதும் செலுத்தி மறைத்தான். அக்கணைகள் உக்கிரர் உடலுக்கு ஊறு செய்யாமல் நுனி மழுங்கி அழிந்தொழிந்தன. பானுகோபன் ஓர் எழுப்படையைச் சுழற்றி எறிந்தான். உக்கிரர் அதனை இருப்பு உலக்கையால் அழித்தார்; பின்பு, பானுகோபன் தேரிலிருந்த குதிரைகளை அடித்து வீழ்த்தினர். பானுகோபன் வேறொரு தேரில் ஏறி நூறு மொட்டம்புகளை விடுத்து அவர் தண்டத்தைத் துகளாக்கினன். உக்கிரர், பானுகோபன் தேரைக் கையால் எடுத்து எறிந்தார். அது சூரியமண்டலம் வரை சென்றது. பானுகோபன் தன்பால் வருவதைக் கண்டு கதிரவன் அஞ்சி ஓடினன். விண்ணில் சென்ற பானுகோபன் தேரோடு பூமியில் வீழ்ந்தான்; உடனே தேரினின்றும் குதித்து உக்கிரரைத் தன் கையால் எற்றி, எடுத்து ஏழு கடல்களுக்கு அப்புறம் செல்லும்படி எறிந்தான்; அவர் மீண்டுவருங்கால் அவருடைய மார்பில் பிரமதேவன் அளித்த முத்தலைச் சூலத்தை எடுத்துச் செலுத்தினன். உக்கிரர் சிறிது தளர்ந்து விழுந்தார்.

**பானுகோபன் - தண்டி**

உக்கிரர் தளர்ந்து விழுவதைத் **தண்டி** என்பவர் கண்டு பானுகோபன்மீது ஒரு மலையை எடுத்து வீசினர். பானுகோபன் ஆயிரங் கணைகளால் மலையைக் கண்டதுண்டமாக்கினன். தண்டி மராமரம் ஒன்றைப் பறித்து, பானுகோபன் தேர்க் குதிரைகளை அடித்து அழித்தார். பானுகோபன் பல பதினயிரம் முத்தலைக் கணைகளைத் தண்டியின் நெற்றியில் செலுத்தினன். அதனல், தண்டியும் தளர்ச்சி அடைந்தார்.

**பானுகோபன் - பிருகி**

அதனைப் **பிருகி** என்னும் பூதர் கண்டு ஒரு மலையைப் பறித்துப் பானுகோபன்மேல் வீச முயன்றார். பானுகோபன் அவர் மார்பில் ஆயிரங் கணைகளை எய்தான். பிருகியும் வலி தளர்ந்து நின்றார். அப்போது மற்றைப் பூத வீரர்களும் தனித் தனியே சென்று சிறிதுபொழுது பானுகோபனை எதிர்த்துப் போர்புரிந்து ஆற்றாது உடைந்தோடினர்கள்.

**பானுகோபன் - இலக்கத்தெண்மர்**

பூத கணத் தலைவர்கள் தோற்றோடியதும் **கபாலி, அண்ட லோசனர், நிரஞ்சனர், உருத்திரர், அகண்டர், தண்டகர்** முதலிய இலக்கம் வீரர்கள் சினந்து பானுகோபனுக்கு எதிரே சென்று விற்களை வளைத்து நாணொலி செய்தார்கள். அவ்வொலி பேரொலியாக எங்கும் எழுந்தது. பானுகோபன் அதனைக் கண்டு ஒரு பெரிய வில்லை எடுத்துத் தானும் நாணொலி செய்தான். இலக்கம் வீரர்கள் பானுகோபன்மீது கணைகளை மழைபோலப் பொழிந்தனர். அக்கணைகளெல்லாம் ஆறுகள் கடலிற் சென்று பாய்வதைப்போலப் பானுகோபன் மீது சென்றன. பானு கோபன் ஆயிரங்கோடி கணைகளைச் செலுத்தி அவையெல்லா வற்றையும் அறுத்துப் பின்னும் ஆயிரங் கோடி கணைகளை இலக்கம் வீரர்கள்மேல் விடுத்தான். அவர்கள் அக்கணைகள் முறிந்து பானுகோபன்மீது செல்லும்படி அவற்றிற்கு ஏழு மடங்கு கணைகளைச் செலுத்தினார்கள். பானுகோபன் மிகச் சின மடைந்து அளவில்லாத கணைகளை மேன்மேலும் செலுத்தி இலக் கம் வீரர்களின் கணைகள் அனைத்தையும் விலக்கி, அவர்கள் கையி லிருந்த விற்களையும் அழித்தான். அவர்கள் பாதுகாப்பு விற்களை எடுத்துப் பானுகோபன் விடுகின்ற கணைகளைத் துணித்தனர்; பானுகோபனின் குதிரைகளையும், கொடிகளையும், தேர்ப் பாகனையும் அழித்தனர். பானுகோபன் வேறொரு தேரில் ஏறிக் கொண்டு வில்லை வளைத்து நூறு நூறாயிரம் கணைகளைச் செலுத்தி இலக்கம் வீரர்களின் தேர்களையும் விற்களையும் அறுத்து, அவர் களுடைய உடல்களில் அளவற்ற கணைகளைச் செலுத்தினான். இலக்கம் வீரரும் கணைகள் பட்டு மிக வலிமை குன்றித் துன்புற் றுத் தோற்றுப் போயினர். பானுகோபன் ஒருவனே இலக்கம் வீரர்களை வென்றான்.

**பானுகோபன் - வீரகேசரி**

இலக்கம் வீரர்களும் தோற்றதை **வீரகேசரி** கண்டார்; விடா மழைபோலப் பானுகோபன்மேல் பிறைமுகக் கணைகளைச் சொரிந் தார். பானுகோபன் வீரகேசரியின் வலிமையையும், வெற்றியை யும், வில் வலிமையையும் வியந்து தன் வில்லை வளைத்தான். அவன் நூறு நூறாயிரம் கோடி கணைகளை விடுத்து வீரகேசரி

யின் கணைகளையெல்லாம் அழித்தான். அவருடைய மார்பின் மீது ஆயிரங் கணைகளை அழுத்தினன். வீரகேசரி, அக்கணைகளை யெல்லாம் தடுத்து, பானுகோபன் நடுங்கும்படி அவனுடைய மார்பில் ஆயிரம் கணைகளைச் செலுத்தினர். பானுகோபன் சினந்து, 'வீரகேசரியை வில்வினல் வெல்லுதல் அரிது' என்று கருதி, திருமால் படைக்கலத்தை எடுத்து எய்தான். அப்படைக் கலம் திருமால் உருவங்கொண்டு வீரகேசரி அனுப்பிய கணைகளை யெல்லாம் விழுங்கி ஆரவாரத்துடன் வீரகேசரியை அணுகியது. அதனை வீரகேசரி கண்டு, தன் திருமால் படையை விட எடுக்கு முன், அது விரைவில் அவர் மார்பில் புகுந்தது. ஆனல், முருகப் பெருமானின் ஆணையால் உயிர் நீங்கவில்லை. வீரகேசரி இறந்தவர் போல மயங்கிக் கீழே விழுந்தார். திருமால் படைக்கலம் பானு கோபனிடம் திரும்பியது.

**பானுகோபன் - வீரமார்த்தாண்டர்**

வீரகேசரி வீழ்ந்ததைக் கண்ட **வீரமார்த்தாண்டர்**, வில்லை எடுத்து வளைத்துக்கொண்டு பானுகோபனை நெருங்கினர்; அவன் ஆயிரம் கணைகளினல் அவருடைய வில்லை ஒடித்தான். வேறு ஆயிரம் கணைகளை அவர் நெற்றியில் செலுத்தினன். வீரமார்த் தாண்டர் வேருெரு வில்லை எடுக்க, அதனையும் பானுகோபன் நூறு கணைகளை விடுத்து முறித்தான் ; ஆயிரம் கணைகளை எய்து அவருடைய தேரையும் குதிரையையும் அழித்தான். அவரது தோள்களில் எழுநூறு கணைகளை விடுத்தான். தேர் வில் முதலி யனவற்றை இழந்து தனித்து நின்ற வீரமார்த்தாண்டர், மேகங் களும் அஞ்சும்படி ஆரவாரஞ் செய்து, இராகுவின்மீது சூரியன் பாய்ந்தாற்போல, வேகமாகப் பானுகோபன் தேரில் பாய்ந்து அவன் வில்லைப் பிடுங்கி முறித்தெறிந்தார். பானுகோபன் வெகுண்டு இடையிற் கட்டிய தன் உடைவாளை உருவி, அவர் மார்பில் குத்தினன். வீரமார்த்தாண்டர் பானுகோபனின் வச்சிர கவசம் அழியும்படி தம்முடைய வாளினல் குத்தினர். பானுகோபன் மீண்டும் வீரமார்த்தாண்டர் நெற்றியில் உடை வாளால் குத்தினன். அக்குத்தினல் வீரமார்த்தாண்டர், காற் றடிக்க வீழ்ந்த கற்பக மரம்போலக் கீழே சாய்ந்தார். பானு கோபன் 'அவர் இறந்துவிட்டார்' என்று கருதி, மருங்கிலிருந்த பூதப் படைகளோடு வந்து எதிர்த்தான்.

**பானுகோபன் - வீரராக்கதர்**

வீரமார்த்தாண்டர் வீழ்ந்ததை **வீரராக்கதர்** கண்டு, பானுகோபனை எதிர்த்தார்; ஆயிரம் கணைகளைப் பானுகோபன்மீது எய்தார். அவன் அக்கணைகளை அழித்து நூறு கணைகளினுல் வீரராக்கதரின் தேர்ப்பாகனுடைய தலையை அறுத்தான். வீரராக்கதர் வேருெரு தேர்ப்பாகனை நிறுத்தி, சண்முகக் கடவுளின் திருவடிகளைத் தியானித்து, ஆயிரம் கணைகளை எய்து, பானுகோபன் மணி முடியை அறுத்தார். பானுகோபன் மிகவும் வெட்கமடைந்து பெருங்கோபம் கொண்டான்; திருமங்கலியத்தை இழந்த மங்கையைப்போல, அழகிழந்து காணப்பட்டான்; வேருெரு முடி அணிந்து, வீரராக்கதர் எய்த கணைகளைத் தடுத்து, ஆயிரம் கணைகள் எய்து, அவர் வில்லை அறுத்தான்; வீரராக்கதர் பிறிதொரு வில்லை எடுக்குமுன் அவருடைய தேர்க் குதிரைகளை அழித்தான். வீரராக்கதர் வேருெரு தேரில் பாய்ந்தார். பானுகோபன் ஆயிரம் கணைகளால் அவர் கையிலுள்ள வில்லை அழித்தான். அவர் அவன்மீது ஒரு வேற்படையை விடுத்தார். அதனையும் அவன் நூறு கணைகளால் அழித்தான். வீரராக்கதர் தேரினின்று இறங்கி அறைகூவி, அவனுடைய தேரைத் தூக்கி எறிந்தார். விண்ணிற் சென்ற அவன், நான்முகன் கொடுத்த ஒரு வேற்படையை எடுத்து வீரராக்கதர்மேல் எய்து, தானும் தேரோடு நிலத்தில் வீழ்ந்தான். அவ்வேற்படை சென்று வீரராக்கதரின் உடலில்பட, அவரும் மிகத் தளர்ந்து வீழ்ந்தார். ஆறுமுகக் கடவுளின் ஆணையால் அவர் உயிர் நீங்கவில்லை.

**பானுகோபன் - வீராந்தகர் முதலியோர்**

பானுகோபன் சிறிது தேறி எழுந்து வேருெரு தேரில் ஏறினன். **வீராந்தகர், வீரமாமகேச்சுரர், வீரதீரர், வீரமாமகேந்திரர், வீரபுரந்தரர்** என்னும் இவ்வைந்து வீரர்களும் பானுகோபன் மீது கணைகளை மழைபோலப் பொழிந்தனர். அவர்கள்மேல் பானுகோபன் கணைகளை எய்தான். இவருள் இருவர் வருந்தி நின்ருர்; ஒருவர் வீழ்ந்தார்; மற்றை இருவரும் புறமுதுகிட்டு ஓடினர். பானுகோபன் இவ்வாறு பகைவர்களை வேறு வேருய்ப் போரிட்டு வெற்றிகொள்ளும்போது, முன்னர் தோற்ருேடிய அவுணசேனைகள் அவனைத் திரும்பிவந்தடைந்தன.

**பானுகோபன் - வீரவாகு தேவர் சொற்போர்**

பானுகோபன், சேனைகளோடு வீரவாகு தேவரை நோக்கி வந்தான். வீரவாகு தேவர் ஆறுமுகக் கடவுளை அன்புடன் போற்றித் துதித்து, போர்புரிய அவனுக்கு முன் சென்று, அண்டங்கள் நடுங்க, வில்லை எடுத்து வளைத்து நாணொலிசெய்தார். தேவர்கள் அதுகேட்டு அமுதம் உண்பதைப்போல் மகிழ்ச்சி கொண்டனர். பானுகோபன் ஒரு பெரிய வில்லை வளைத்து நாணொலி செய்தான். அவ்வோசை கேட்ட தேவர்கள் நடுநடுங்கினார்கள். 'இன்பத்தின் முடிவில் துன்பம் வந்தடையும்' என்பதும் உலக வழக்கு அன்றோ! அப்போது, பானுகோபன் வீரவாகு தேவரை நோக்கி, "நீ தாரகனை வேற்படையால் கொன்ற குமாரக் கடவுள் அல்ல; நான்முகனும் அல்ல; இந்திரனும் அல்ல; நீ ஒரு தூதுவன்; நீயோ என்னோடு போர் செய்தற்கு வல்லவன்? நீ கற்ற மாயையினால் நேற்று எம்மரசனுக்கு முன்வந்து சில பழிமொழிகளைக் கூறினாய்; என் தம்பியைக் கொன்றாய்; நகரத்தை அழித்தாய். நான் அவற்றை அறிந்திலேன். அதனால், நீ பிழைத்தாய். குழந்தையாய் இருக்கும் போதே கதிரவனைச் சிறையிட்ட நான், உன்னோடு போரிடுவதால் இகழ்ச்சியை அடைவதன்றிப் புகழ்ச்சியைப் பெறப் போவதில்லை. நான் உன் துணைவர்களை வென்றேன்; சேனைத் தலைவர்களை வென்று, சேனைகளையும் அழித்தேன்; தனியே வந்து எதிர்த்த உன்னைக் கொல்வேன்; உன்னை என்னிடம் விடுத்த பாலகனையும் தோற்கடித்து என் சினத்தைத் தணித்துக் கொள்வேன்; இந்திரனையும் சிறை செய்வேன்" என்று கூறினான். வீரவாகு தேவர் பானுகோபனைப் பார்த்து, "தம்மை எதிர்ப்பவர் எவராயினும் அவரை வெல்பவரே திறமையுடையார். புறங்கொண்டோடுபவரைக் கொல்வது வசையாகும். வெற்றியடையும் வீரர் தம்முடைய வலிமையைப் புகழ்ந்து பேசிக்கொள்ள மாட்டார்கள். ஆதலால் நீ விரைந்து போருக்கு வருவாயாக" என்றார்.

**பானுகோபன் - வீரவாகு தேவர் போர்**

அப்போது பானுகோபன் பத்துக் கணைகளைச் செலுத்தினான். வீரவாகு தேவர் விரைந்து அக்கணைகளை அறுத்துப் பின்

நூறு கணைகளை அவன்மீது எய்தார். பானுகோபன் அவற்றை வீழ்த்தி வீரவாகு தேவர் மீது ஆயிரம் கணைகளை விட்டான். அவர் அவற்றை வீழ்த்திப் பதினுயிரம் கணைகளை விடுத்தார். பானுகோபன் இவற்றை அழித்து நூருயிரம் கணைகளை எய்தான். வீரவாகு தேவர் அவற்றை அழித்துப் பத்து இலட்சம் கணைகளைப் பானுகோபன்மேல் செலுத்தினுர். அவன் அக் கணைகளை மாற்றிக் கோடிக்கணைகளை எய்தான். வீரவாகு தேவர் அவற்றையெல்லாம் மாற்றி நூருயிரங்கோடி கணைகளைச் செலுத்தினுர். பானுகோபன் ஊழிக்காலத்து மேகம்போலக் கணைகளைப் பொழிந்தான். பானுகோபன் வீரவாகு தேவர் ஆகிய இருவருடைய கணைமழைகள் நெருங்குதலால் பூமியும், திக்குக்களும், கடல்களும், குலமலைகளும், வானுலகமும், சூரியனுடைய தேரும் மறைந்தன. அவர்களுடைய தேர்கள் இடசாரி வலசாரியாக எங்கும் சுற்றித் திரிந்தன. இருவரும் உலகமெங்கும் சூறைக் காற்றுப்போலச் சுற்றிப் போர் செய்தனர். அவர்கள் போரைக் கண்டு தேவர்களும் அஞ்சி ஓடினுர்கள். அவர்கள் எய்த கணைகள் பேராற்றல் கொண்டன. அவை பூமியைக் கிழிப்பன ; அண்டங்களைத் துளைப்பன ; ஏழு கடல்களையும் பருகுவன ; வலிமை மிக்கன ; புவனங்களையும் கடப்பன ; யாவராலும் தடுத்தற்கரியன. வீரவாகு தேவரும் பானுகோபனும் செய்த போரின் திறத்தைப் பகரும் வன்மையுடையார் யாவர்? அவர்கள் கையிற்பிடித்த விற்கள் இடைவிடாமல் கணை மழைகளைப் பொழிந்து கொண்டிருந்ததால், அவ்விற்கள் சக்கரம் போல வளைந்தன.

பானுகோபன், வீரவாகு தேவர் விடுத்த கணைகளை அழித்து, அவர் திருக்கரத்திலிருந்த வில்லை நூறு கணைகளால் அறுத்து ஆரவாரித்தான். வீரவாகு தேவர் மிகக் கோபம்கொண்டு வேருெரு வில்லை எடுத்து ஆயிரங்கணைகளைச் செலுத்திப் பானுகோபனுடைய கை வில்லை முறித்தார். அவன் வேருெரு வில்லை வளைத்து ஆயிரம் கணைகளை வீரவாகு தேவருடைய மார்பில் செலுத்தினுன். வீரவாகு தேவர் ஏழு கணைகளினுல் பானுகோபனுடைய முடியை வீழ்த்தினுர். அவன் வேருெரு இரத்தின முடியை எடுத்து அணிந்துகொண்டான். வீரவாகு தேவர் ஆயிரம் கணைகளால் அவன் உடலில் அணிந்திருந்த கவசத்தை

அழித்தார். அதனைக் கண்டு அறங்கள் ஆடிப்பாடின ; கதிரவன் நகைத்தான். பானுகோபன் வீரவாகு தேவர் நெற்றியில் ஆயிரம் கணைகளை அழுத்தினான். அப்போது வீரவாகு தேவர் சற்றும் வலிமை குறையாது அவற்றைப் பறித்து வீசினார். பானுகோபனுடைய முகத்திலும், மார்பிலும், தோள்களிலும் கைகளிலும் தனித்தனியே ஆயிரம் கணைகளை விடுத்தார். பானு கோபன் சிறிது தளர்ந்து நின்றான். அவன் உடல் முழுவதும் இரத்த ஊற்றுப் பெருகத் தொடங்கியது. இரத்தஞ் சோர நின்ற பானுகோபன், அப்போது அந்திக்காலத்து மேகத்தைப் போல விளங்கினான்.

பானுகோபன் வலியிழந்து நிற்றலைக் கண்ட அவுணப் படைத் தலைவர்கள், நால்வகைச் சேனைக் கடல்களோடும் முன் சென்று வீரவாகு தேவரைச் சூழ்ந்து சூலம், தண்டம், எழு, சக்கரம் முதலாகிய படைகளைச் செலுத்திச் சூரியனைச் சூழ்கின்ற இருட்டைப்போல அவரை மறைத்தார்கள். வீரவாகு தேவர் வில்லை வளைத்து ஆயிரங்கோடி கணைகளை விடுத்து, இருட்கூட் டத்தைக் கிழிக்கும் கதிரவனைப்போல, அவுணர்கள் செலுத்திய படைகளெல்லாவற்றையும் அழித்தார்; பின்னும் பலகோடி கணை களைச் செலுத்தி அவுணப் படைகள் அனைத்தையும் அழித்தார். வீரவாகுதேவர் விடுத்த கணைகளின் ஆற்றலை யாவர் அளந்து கூற வல்லவர் ? வரத்திற் சிறந்த அக்கணைகள், அவுண வீரர்களின் தலைகளைத் துணித்துக்கொண்டு அவற்றை வீரமகேந்திரபுரியில் இருக்கும் அவரவர் மனைவியர்களிடத்துச் சேர்க்கும் ஆற்றல் உடையன. போரில் அவுணவீரர்களின் உடல்கள் புரண்டன ; குருதி வெள்ளம் பெருகியது; குதிரைகளும் யானைகளும் மடிந் தன. இயமதூதர்கள் அசுரர்களின் உயிரைக் கொண்டுசென்று கால் ஓய்ந்தார்கள். முன்னர், பானுகோபனுக்கு அஞ்சி ஓடிய பூதப்படைகள் மீண்டும் வீரவாகு தேவரை வந்து அடைந்தன.

அப்பொழுது பானுகோபன் களைப்பு நீங்கி உணர்வு தோன்றக் கண்விழித்து எங்கும் சுற்றிப் பார்த்தான். அளவு கடந்த தன் பெருஞ் சேனைகளைக் காணாது, பருந்தும் கழுகும் ஆர்த்து உண்ணும் பிணக் குவியல்களைக் கண்டான்; அதன் பிறகு, வீரவாகு தேவர் எதிரில் நிற்றலையுங் கண்டான் ; "நம்

முடைய படைகளையெல்லாம் இவனே அழித்தான். இவன் ஒப்பற்ற பேராண்மை படைத்த வீரனாகத் தோன்றுகிறான். வீரன் இவனே அன்றி வேறில்லை'' என்று வீரவாகு தேவரின் வலிமையை வியந்தான். வீரவாகு தேவரை வெற்றிகொள்ள எண்ணிய பானுகோபன், "ஒரு நாழிகைப் பொழுதினுள் கந்தவேளின் தூதுவனைக் கண்டதுண்டங்களாக்குவேன்; அங்ஙனம் செய்யாவிடில் நான் வில்லோடு நெருப்பில் புகுந்து இறப்பேன்'' என்று சபதம் கூறினான். சிவபெருமானுக்கு முன் சென்ற ஆலகால விஷம்போலத் தேரோடு வீரவாகு தேவருக்கு முன்னே பானுகோபன் சென்று தன் வில்லை வளைத்து முத்தலைகளையுடைய ஆயிரம் கணைகளை விடுத்தான். வீரவாகுதேவர் அவற்றை அழித்து, ஆயிரங்கணைகளை அவன்மேல் செலுத்தினார். பானுகோபன் அவற்றைத் தடுத்துப் பதினாயிரம் கணைகளை எய்து வீரவாகு தேவரின் தேரையும், பாகனையும், குதிரைகளையும் அழித்தான். வீரவாகு தேவர் வில்லோடு வேறொரு தேர்மேல் பாய்ந்து பதினாயிரங் கணைகளைச் செலுத்தி, பானுகோபனின் தேரையும், குதிரைகளையும், பாகனையும் அழித்தார். பானுகோபன் வேறொரு தேர்மேல் ஏறி வில்லை வளைத்து எழுநூறு கணைகளைப் பூட்டி வீரவாகு தேவரின் மார்பில் செலுத்தினான். அக்கணைகள் மார்பில் தைத்தலும் துன்பத்தையே அறியாத வீரவாகு தேவர் அப்போதுதான் துன்பச்சுவையைக் கண்டார்; காலன்போல் கடுங்கோபங் கொண்டு, "இவன் தலையைக் காகத்திற்கு இடுவேன்'' என்று கூறி, பதினான்கு கணைகளை எய்து அவன் வில்லை அறுத்தார்; ஆயிரம் கணைகளினால் அவனுடைய தேரையும், குதிரைகளையும் அழித்தார்; நூறு கணைகள் எய்து மார்பைத் துளைத்தார். பானுகோபன் அவற்றிற்கெல்லாம் வருந்தாமல் வேறொரு தேர்மேல் ஏறினான். பானுகோபனின் மார்பில் முன்னர் ஏற்படுத்திய துளையின் வழியாக ஆயிரங் கணைகளைத் தூண்டி அவன் முதுகில் தொங்கிய அம்பறாத்தூணியை வீரவாகு தேவர் அறுத்தார். பானுகோபன் அதனைக் கண்டு, "வீரவாகு தேவரை வில் வித்தையினால் வெல்ல இயலாது'' என்று துணிந்து, வான வெளியில் விரைந்து சென்று ஒரு சூழ்ச்சியினைக் கருதினான்.

**பானுகோபன் மோகக் கணையினைச் செலுத்துதல்**

அப்போது பானுகோபன், நான்முகன் அளித்த மோகப் படையைக் கையிலெடுத்து மனத்தினால் வழிபாடு செய்து, "நீ விரைந்து சென்று சேனைகளோடு பகைவர்களின் அறிவைக் கெடுத்துக் கொன்று வருவாய்" என்று கூறி விடுத்தான். அப்படை எங்கும் இருளைப் பரவச் செய்து, உயிர்களெல்லாம் அஞ்சி நடுங்கும்படி விரைந்து சென்றது. அதனுடைய வரவைக் கண்ட பூதர்கள் அஞ்சி நடுங்கினார்கள். பூதப் படைத் தலைவர்கள் வருந்தினார்கள். இலக்கத் தெண்மரும் அதற்கு எதிராகிய படைகள் ஒன்றையும் செலுத்தாமல் வெறுங் கணைகளையே விடுத்தனர். வீரவாகு தேவர், "இப்படையை எப்படையால் ஒழிக்கலாம்" என்று எண்ணிக்கொண்டு நின்றார். அப்பொழுது மோகப்படை எல்லோருடைய உணர்வையும் மயக்கியது. இலக்கத்தெண்மரும், பிறரும் கலங்கி விழுந்தார்கள். வீரவாகு தேவரும் கருத்தழிந்து தூணைப்போல நின்றார். ஆகாயத்தில் நின்றுகொண்டிருந்த பானுகோபன் அதனைக் கண்டு மகிழ்ந்து அவர்களைக் கொல்லக் கருதி வில்லை வளைத்து அறிவு மயங்கியுள்ள அனைவர்மீதும் கணைகளைச் சொரிந்து அவர்களின் உடல்களைத் துளைத்தான்.

**முருகக் கடவுள் அமோகக் கணையால் அனைவரையும் மீட்டல்**

அவ்வாறாகிய சமயத்தில் ஆன்மாக்கள்தோறும் பரமான்மாவாய்க் கலந்து நின்று அருள்புரியும் ஆறுமுகக் கடவுள், வீரவாகு தேவரும் பிறரும் பானுகோபனால் அறிவிழந்து தீங்குற்று நிற்றலை உணர்ந்து, அமோகப் படையை உண்டாக்கினார். அப்படையை நோக்கி, "நீ நம்மவர்களாகிய வீரவாகு முதலியவர்களை அடைந்து பானுகோபனால் அனுப்பப்பட்ட மோகப் படையின் வலிமையைக் கெடுத்து மீள்வாயாக" என்று பணித்து விடுத்தருளினார். அப்படைக்கலம் விண் வழியாகச் சென்று போர்க்களத்தை அடைந்தது. அவ்வளவிலே பானுகோபனுடைய மோகப்படையின் வலி அழிந்தது. வீரவாகு தேவர் முதலாயினோர் மயக்கம் தீர்ந்தார்கள்; ஆறுமுகக் கடவுளின் அமோகப் படையைக் கண்டு மகிழ்ந்தார்கள்; அதன் ஆற்றலை மிக வியந்து போற்றினார்கள். "ஆறுமுகக் கடவுள்,

நாம் பானுகோபனுல் அறிவு மயங்கியதைத் திருவுளங்கொண்டு இப்படைக்கலத்தை விடுத்தருளினர்" என்று கருதி, அக்கடவுளின் அருட்டிறத்தைத் தியானித்து வணங்கித் துதித்தார்கள். அப்படைக்கலம் மின்போல மீண்டு ஆறுமுகக் கடவுளை அடைந்தது. வீரவாகுதேவர் கோபம் மூண்டு,"ஒரு மோகப் படையால் வலிமையைக் கெடுத்த பானுகோபனை இப்பொழுதே கொல்வேன்" என்று எண்ணிச் சிவப்படைக்கலத்தைக் கையில் எடுத்தார்.

**பானுகோபன் பயந்து ஓடுதல்**

ஆறுமுகக் கடவுள் விடுத்த அமோகப்படை வந்ததையும், தன்னுடைய மோகப்படை மீண்டதையும், வீரவாகு தேவர் சிவப்படைக்கலத்தை எடுத்ததையும் பானுகோபன் பார்த்துத் தன் அகந்தையை ஒழித்தான்; மிகத்துன்பங் கொண்டான். இனி, "இங்கு நிற்பின் சிவப்படைக்கலம் வந்து என் உயிரைக் கொல்லும். நான் என் சிவப்படைக்கலத்தை இங்குக் கொண்டு வந்திலேன். ஆதலால், நகரத்திற்குச் சென்று தெய்வப்படைக் கலங்களை மிகவுங் கொண்டுவந்து மறுநாள் போர்புரிந்து இவன் வலிமையைக் கெடுப்பேன்; இனி இங்கே நிற்றல் ஆகாது" என்று எண்ணி, உடனே கண்ணுக்குத் தெரியாமல் தேரினின்று எழுந்து விண்வழியே மறைந்துசென்று தன்னகரத்திற்குப் போய்ச் சேர்ந்தான்.

**பூதப்படைகளின் மகிழ்ச்சி**

பானுகோபன் மறைந்தோடியதும், அவனைச் சூழ்ந்து நின்ற அவுணப்படைகள் பறந்தோடின. பூதப்படைகள் அன்றைய வெற்றி தங்களைச் சேர்ந்ததே என்று ஆரவாரஞ் செய்தனர். தேவர்கள், வீரவாகு தேவர் மீது மலர்மாரி பெய்தார்கள். புறங்கொண்டோடும் பானுகோபனைப் பூதப்படைகள் பிடித்து வர எண்ணினர்கள். "பயந்து ஓடுபவரைத் தொடர்ந்து போய்க் கொல்வது போர்முறை அன்று" என்று வீரவாகு தேவர் கூறி, அவர்களைத் தடுத்துவிட்டார். அப்போது **சூரியன் மேற்குக் கடலில் மறைந்தான்.** வீரவாகு தேவர், பூத வெள்ளங்களும் இலக்கத்தெண்மரும் சூழப் போர்க்களத்தினின்றும் நீங்கி, ஆறுமுகக் கடவுள் வீற்றிருக்கின்ற பாசறையை அடைந்தார்; ஆறு

முகக் கடவுளை வணங்கி, பானுகோபன் போர் செய்து வலி யிழந்து புறங்கொடுத்துச் சென்றதையும், பிறவற்றையும் விண் ணப்பம் செய்தார். முருகக் கடவுள் அவர்பால் அன்புகொண்டு, " தம்பி ! நீ இன்றைக்குப் பானுகோபனேடு போர்புரிந்து துன் புற்ருய். துணைவர்களோடு உன் இருப்பிடம் செல்க " என்று திருவாய்மலர்ந்தருளினர். வீரவாகு தேவர் விடைபெற்றுக் கொண்டு தம்பிமார் முதலியவரோடு தமது இருப்பிடத்தை அடைந்திருந்தார்.

**பானுகோபன் திரும்பிச் செல்லுதல்**

புறங்கொடுத் தோடிய பானுகோபன், பெருமிதத்தை இழந்து, மனத்திலே துன்பமும் பழியும் மானமும் கொண்டு, சூரபன்மன் கோவிலுக்குட் செல்லாது, தன் இருப்பிடம் சென் றடைந்தான். அவன் தன் அமைச்சருடனும் சேனைத் தலைவர் களுடனும் கலந்து பேசவில்லை; ஆடல் பாடல்களில் நாட்டம் செலுத்தவில்லை; அவனையே விரும்பி நிற்கும் பெண்களையும் நோக்கவில்லை; அன்றிரவு முழுவதும் தனியே ஓர் இடத்தில் அமர்ந்து, " ஆறுமுகக் கடவுளையும் அவர் படைவீரர்களையும் போரில் வெற்றிகொள்ளவேண்டும்" என்று எண்ணிக்கொண்டு, வேறெரு முயற்சியும் இன்றிக் கவலைகொண்டிருந்தான்.

**போர் நிகழ்ச்சியைப் பற்றிச் சூரபன்மன் அறிதல்**

சூரபன்மனின் தூதுவர்கள், போர் நிகழ்ச்சிகளை யெல்லாம் பார்த்து, சூரபன்மனை அடைந்து அவனை வணங்கி, " அரசர்க் கரசே ! உன்னுடைய மகன், வீரவாகுவோடு போர் செய்து பல பூதர்களை அழித்து இங்கே மீண்டு வந்தான் ; தனியே அமர்ந்து யோசனையில் ஆழ்ந்து இருக்கிறுன். வீரவாகுதேவரும் தம் பூத சேனைகளோடு பாசறைக்குச் சென்ருர். இவைதாம் இன்றைய நிகழ்ச்சிகள் " என்று கூறினர்கள். பகைவர்களை வெல்லாது பானுகோபன் திரும்பிய செய்தி, சூரபன்மனுக்குப் பெருஞ் சினத்தை உண்டாக்கியது. அவன் கண்கள் தீப்பொறிகளைக் கக்கின. "யானே நாளைக்குச் சேனைகளோடு சென்று கந்தனை வெற்றிகொண்டு விரைவில் மீளுவேன்" என்று கூறித் தூதுவர் களை அனுப்பினன். அவர்கள் வணங்கிச் சென்றனர். சூரபன் மன் தன் பகைவர்களை வெல்வதில் பேரவாக்கொண்டான்.

அன்றைய இரவு, வலிமையோடு போர்புரியும் வீரர்களுக்கு நீண்டதாகவும், வலிமை இழந்து மனமுடைந்தவர்களுக்குக் குறுகியதாகவும் தோன்றியது.

திருவிருத்தம்–343
ஆகத் திருவிருத்தம்–456

——oo——

## 4. இரண்டாநாட் சூரபன்மன் யுத்தப் படலம்

**சூரபன்மன் போருக்கெழுதல்**

கீழ்த்திசையில் கதிரவன் எழுவதற்குமுன் சூரபன்மன் நித்திரை விட்டெழுந்தான்; முறைப்படி நித்தியகருமத்தை முடித்தான்; அத்தாணி மண்டபத்தை அடைந்து அரியணையில் அமர்ந்தான்; முதல் நாட் போரில் பானுகோபன் வெற்றிபெருது வந்ததை எண்ணினுன்; பெருங் கோபங்கொண்டு, "இனி யான் வேறு யாரையும் போருக்கு அனுப்புவதில்லை. யானே சேனைகளோடு சென்று பகைவர்களின் வலிமையை அழித்து வெற்றி கொள்வேன்" என்று எண்ணினுன்; பல ஒற்றர்களை அழைத்து, "நிலவுலகத்தைச் சூழ்ந்த கடல்கடோறும் இருக்கும் நம் சேனைகளைக் கொண்டு வாருங்கள்" என்று பணித்தான். ஆயிரங் கோடி ஒற்றர்கள் சூரபன்மனை வணங்கிப் பல இடங்களுக்கும் சென்ருர்கள்; சூரபன்மனுடைய கட்டளையைத் தெரிவித்தார்கள். முன்னுளில் பல போர்களில் வென்ற இலக்கம் வெள்ளத்துக்கு மேற்பட்ட படை வீரர்கள், யானை, குதிரை, தேர் முதலியவைகளில் ஏறிக்கொண்டு, சூலம், கணிச்சி, தண்டம், குலிசம் முதலாகிய படைகளை ஏந்தி மகேந்திரபுரியைச் சூழ்ந்து ஆரவாரஞ் செய்தனர். சூரபன்மன் மேருமலை போன்ற சிகரம் ஒன்றில் ஏறி அச்சேனைகள் எல்லாவற்றையும் பார்வையிட்டான்; மனத்தில் கொண்ட துன்பம் நீங்கி வலிமை பெற்றுப் பகைவர்களை வென்றவன்போல மகிழ்ந்து நின்ருன். பிறகு, அவன் போருக்குச் செல்லக் கருதிக் கீழே இறங்கி வந்து போர்க் கோலம் பூண்டான்; ஆயுதங்களையும், தெய்வப் படைக்கலங்களையும் எடுத்துக்கொண்டு தும்பைமாலை சூடி மேருவை ஒத்த ஒரு பெரிய தேரின்மீது ஏறிப் புறப்பட்டான். நால்வகைச்

சேனைகளும் அவனைப் பின்தொடர்ந்து வந்தன. அவுண வீரர்களும், அமைச்சர்களும் அருகில் சென்றார்கள். அரசமாளிகைகளின் வீதிகளைக் கடந்து கோபுர வாயிலை அடைந்தான். அங்குக் குழுமியிருந்த இலட்சம் வெள்ளம் அவுண சேனைகள் சூரபன்மனைச் சூழ்ந்து ஆரவாரித்தன.

அப்போது சிங்கமுகாசுரனுடைய குமாரனாகிய **அதிசூரனும்**, தாரகாசுரனுடைய குமாரனாகிய **அசுரேந்திரனும்** சூரபன்மனை வந்தடைந்தார்கள். சூரபன்மன் அவர்களை நோக்கி, "நீங்கள் இருவரும் நம் பெரும்படைத் தலைவர்களாயிருந்து படைகளை நடத்துங்கள்" என்று பணித்தான். அவர்கள் நன்றென்று சூரபன்மனை வணங்கிச் சென்று, தங்கள் தேரிலேறி நால்வகைச் சேனைகளையும் அணிவகுத்துச் சிறப்புடன் படைத் தலைவர்களாய்ச் சென்றனர். சூரபன்மன், நால்வகைச் சேனைகளும் படைத் தலைவர்களும் தன்னைச் சூழ்ந்துவர, தேவர்கள் நடுங்கத் தேரின்மேல் ஏறிச் சென்றான். தொண்டகம், துடி, பம்பை, தூரியம், முருடு, கொம்பு, படகம் முதலாகிய பல ஒலிக் கருவிகளும் முழங்கின. தேர்களின் ஒலியும், யானைகளின் பிளிறொலியும், வீரர்களின் கழல் ஒலியும், வாத்தியங்களின் ஒலியும் எட்டுத் திசைகளையும் எல்லா உலகங்களையும் உண்டெழுந்தன. சேனைகளின் செலவால் எழுந்த துகள், கதிரவன் ஒளியை முன்னர்ச் சந்திரன்போலவும் பின்னர் நட்சத்திரம்போலவும் மழுங்கச் செய்தன. தேர்களின்மீதும் யானைகளின்மீதும் உள்ள கொடிகள் வானுலகத்திலுள்ள கங்கையில் தோய்ந்து நீர்த் திவலைகளைப் பூமியில் சிதறி ஆடிச் சுற்றுதல், "சூரபன்மன் இன்றைக்கு இறப்பான்" என்று கண்ணீர் சிந்தி அழுதலைப் போன்றிருந்தது.

**முருகக் கடவுள் போருக்கெழுதல்**

சூரபன்மன் சேனைகளோடு விண் வழியாகத் தேரிலேறிப் போருக்கு வருதலை இந்திரன் அறிந்து, முருகக் கடவுளிடம் ஓடிப்போய் அவருடைய திருவடிகளை வணங்கி, "எம்பெருமானே! சூரபன்மன் தன்னுடைய படைகளுடன் போருக்கு விரைந்து வருகின்றான்; அவனை எதிர்த்து வெற்றிகொண்டு எங்கள் செல்வங்களை அளித்தருளும்" என்று வேண்டினான்.

முருகக் கடவுள் அவனுக்கு அருள்புரிந்து, வாயுதேவனை நோக்கித் தேரைக் கொண்டுவரும்படி பணித்தருளினர். வாயு தேவன் நன்றென்று தேரைக் கொண்டுவந்து திருமுன்பு நிறுத்தினன். நான்முகனும் திருமாலும் மலர் தூவித் துதிக்க, ஆறுமுகக் கடவுள் தேர்மீது ஏறியருளினர். அப்போது பூதர்கள் கடலும் அஞ்சும்படி ஆரவாரஞ் செய்துகொண்டு புறப்பட்டார்கள். நிலத்திலிருந்து புழுதி எழுந்தது. தக்கை, உடுக்கை, சல்லரி, தடாரி முதலிய ஒலிக் கருவிகளைக் கண நாதர்கள் ஒலித்தார்கள். நாரதரும், கருடரும், கின்னரர்களும் இசை பாடினர். தேவர்களும் முனிவர்களும் ஆறுமுகக் கடவுளின் திருவடிகளை வணங்கிக் கூத்தாடினர்கள். வீரவாகு தேவரும், எண்மரும், இலக்கம் வீரரும், படைத் தலைவர்களும் போர்க்கோலத்தோடு பூதசேனைகளுக்கிடையே சென்றார்கள். ஆறுமுகக் கடவுள் மாணிக்க மணிகள் இழைத்த தேரின்மேல் ஏறி அவுணர்களுடைய போர் முனையை அடைந்தருளினர்.

### அவுணப் படைகளும் பூதப்படைகளும் போரிடுதல்

அவுணப் படைகள் பூதப் படையினை வந்து சூழ்ந்தன. பூதப் படைகள் உரப்பி அவுணப் படைகளை எதிர்த்துத் தாக்கின. இருபக்கத்துப் படைகளுக்கும் போர் மூண்டது. பூதர்கள் அவுணர்கள்மேல் மரங்களையும், மலைகளையும், தண்டம் கழுமுள் சக்கரம் வேல் முதலிய படைக் கலங்களையும் எறிந்தார்கள். அவுணர்கள் பூதர்கள்மேல் அம்பு, கணிச்சி, தண்டு, சக்கரம், முத்தலைச்சூலம் முதலிய படைகளைச் சிதறினர்கள். பூதர்கள், யானைகளையும் குதிரைகளையும் வாரி நிலத்தில் அடித்தும், திக்குக்களில் எறிந்தும், விண்ணில் எற்றியும், உடலைக் கிழித்தும் பலவாறு அழிப்பர். தேர்களை எடுத்து யானைகள் மேல் மோதி அழிப்பர் ; யானைகளை எடுத்துக் குதிரைகள்மேல் எறிந்து கொல்வர்; குதிரைகளை எடுத்து அவுணர்கள்மேல் மோதி அடித்து அழிப்பர். அவுணர்கள், யானை குதிரை முதலியவைகளில் ஏறிச் சென்றும், கால் நடையாக நடந்து சென்றும் பூதர்களை வளைத்துக் கடும்போர் புரிந்தனர். பல பூதர்களின் கை கால் தலை முதலிய அங்கங்கள் சிதறி விழுந்தன. பூதப்படைத் தலைவர்களால் அவுண சேனைகள் மிகவும் அழிந்தன.

குருதி வெள்ளத்தில் அவுணப் பிணக்குவியல்கள் மலைபோலச் சென்று கடலை மேடாக்கின. பலகோடி உடற்குறைகள் கூத் தாடின. பூதப்படைகளின் ஆற்றலையும், அவுணப் படைகள் அழிதலையும் படைத் தலைவனாகிய சிங்கமுகாசுரனின் மகனாகிய அதிசூரன் கண்டான்; கோபங்கொண்டு இரண்டாயிரம் குதிரை பூட்டப்பெற்ற ஒரு தேரின்மேல் ஏறி, இருமருங்கும் ஆயிரமாயிரம் பாதுகாப்புத் தேர்கள் சூழ மிகுந்த ஆற்றலோடு வந்து, வில்லை வளைத்துக் கணைகள் எய்து எதிர்த்தவர்களைக் கொன்று நின்றான். பூதர்கள் அவன் ஆற்றலைக் கண்டு, 'வில் வீரன் இவனே' என்று வியந்து புகழ்ந்தார்கள்.

**அதிசூரன் - உக்கிரர்**

திருமாலின் சக்கரப் படையை உண்டு உமிழ்ந்தவரும் போரில் வலிமையுடையவருமாகிய **உக்கிரர்** என்னும் பூதப் படைத் தலைவர் அதிசூரனின் போரைக் கண்டார்; கண்கள் புகையையும் தீயையும் கக்குமாறு மிகக் கோபித்து, ஒரு தண்டப் படையை எடுத்து, அதிசூரனுக்கு எதிரே விரைந்து சென்று மார்பில் எறிந்தார். அவுணர்கள், 'அதிசூரன் இறந்தான்' என்று அஞ்சினார்கள். அத்தண்டம் அவன் மார்பிலுள்ள சட்டையை அழித்தது. அதிசூரன் சினங்கொண்டு நூறாயிரம் கணைகளை ஒன்றாக உக்கிரர்மீது எய்தான். அக்கணைகள் அவர் மேல் பட்டு இரத்த வெள்ளம் பெருகி ஓடியது. உக்கிரர் துன்ப மும் சினமும் அடைந்து ஒரு மலையைப் பிடுங்கி, அதிசூரனுடைய தேரின்மீது எறிந்து பொடியாக்கினார். அதிசூரன் வேறொரு தேரின்மேல் பாய்ந்து ஏறினான். அத்தேரிலிருந்த குதிரைகளை உக்கிரர் உதைத்து அழித்தார். அதிசூரன் அவர் உடலில் நூறு கணைகளை எய்தான். அவற்றை உக்கிரர் தண்டாயுதத்தினால் அழித்து நின்று ஆரவாரம் செய்தார். அதிசூரன் விரைந்து வேறொரு தேரில் ஏறி, உக்கிரர்மீது தெய்வப் படைக் கலங்களைச் செலுத்தி அழிக்கவேண்டும் என்று முடிவுசெய்து, தீப்படைக் கலத்தை மனத்தால் வழிபாடு செய்து அவர்மேல் விடுத்தான். தீயைச் சிந்தி வருகின்ற அப்படைக்கலத்தின் கொடுமையைக் கண்ட உக்கிரர், ஆறுமுகக் கடவுளின் திருவடிகளைத் துதிக்க அக் கடவுள் அவருக்குத் திருவருள் புரிந்தார். உக்கிரர் தமக்கு எதிரே வருகின்ற அப்படைக்கலத்தைப் பிடித்துக் கவ்வி விழுங்கினார்.

அதிசூரன் அதனைக் கண்டு வருணப் படைக்கலத்தையும், இயமப் படைக்கலத்தையும், வாயுப் படைக்கலத்தையும் செலுத்தினன். உக்கிரர் அவற்றையும் பற்றி விழுங்கினர். பின்னர் அதிசூரன், நான்முகன் படைக்கலத்தையும் திருமால் படைக்கலத்தையும் விட அவற்றையும் அவர் பற்றி விழுங்கி நிற்றலைக் கண்டான். அப்போது அதிசூரன், "இவன் மும்மூர்த்திகளுள் ஒருவனோ! இங்ஙனம் செய்ய வல்லவர் வேறு யார் உளர்! ஆதலால் இவன் அவருள் ஒருவனே ஆவன்!" என்று வியந்தான். அவுணர்கள் உக்கிரரின் உயர்வைக்கண்டு இயமனைக்கண்ட உயிர்போலக் கலங்கி "இனி யாம் என் செய்வோம்!" என்று ஏங்கினர்கள்.

இந்திரன் முதலிய தேவர்கள் இச்செயலைக்கண்டு அங்கே போரைப் பார்த்துக்கொண்டிருந்த நான்முகனை வ்ணங்கி நின்று, "எங்கள் படைகளையும், உம் படையையும், திருமால் படையையும் இப்பூதப் படைத் தலைவர் பிடித்து விழுங்குங் காரணம் என்ன? சொல்லும்" என்று கேட்டார்கள். நான்முகன் அவர்களைப் பார்த்து, "இவர், சிவபெருமானிடத்தே வரம் பெற்றவர்; முருகக் கடவுளின் திருவருள் பெற்றவர்; எந்த வலிமையையும் மாற்றும் ஆற்றல் பெற்றவர்; திருமாலின் சக்கரப் படையை விழுங்கிய ததீசி முனிவரின் வலிமையுடையவர்; **உக்கிரர்** என்னும் பெயருடையவர். இவர் நம் படைக்கலங்களை உண்டது வியப்பில்லை. அளவற்ற அண்டங்களையெல்லாம் ஆக்கி அழிக்க வல்லவர்" என்று கூறினார். தேவர்கள் "உக்கிரருக்கு இன்னும் பெரிய வெற்றி உண்டாகுக" என்று வாழ்த்தினர்கள்.

அதிசூரன் இறுதியாகத் தன் சிவப்படைக்கலத்தை எடுத்து வழிபாடுசெய்து செலுத்தினன். அஃது உருத்திரரின் வடிவம் தாங்கி எல்லா உலகங்களும் அஞ்சும்படி புறப்பட்டு வந்தது. அப்போது உக்கிரர் தமது கையிலிருந்த சக்கரப்படையை ஒழித்துவிட்டுக் கைகுவித்து **ஸ்ரீ பஞ்சாட்சரத்தை** விதிப்படி உச்சரித்துச் சிவபெருமான் திருவடிகளைத் தியானித்துத் துதித்து நின்றார். சிவப் படைக்கலம், உக்கிரர் நிராயுதபாணியாகவும், வணக்கம் புரிபவராகவும், பஞ்சாட்சரத்தைத் தியானிப்பவராகவும் நிற்றலைக் கண்டது. சிவபெருமான் அதிசூரனுக்குத் தனது படைக்

கலத்தை அளித்த காலத்து, "இதனை ஆயுதம் இல்லாதவர்மீது செலுத்துவையாயின் அவர்களை அணுகாது நம்பால்வந்துவிடும்" என்று அருளியிருந்தார். அதனால், அப்படைக்கலம் ஆயுதமின்றி நிற்கின்ற உக்கிரருக்கு ஊறு செய்யாமல் சிவபெருமானிடம் திரும்பிச் சென்றுவிட்டது. அதிசூரன், "இவன் சிவபெருமானே!" என்று எண்ணி, அஞ்சி நடுநடுங்கினான். பூதர்கள் மகிழ்ச்சிகொண்டு ஆடினர். தேவர்கள் மலர்மாரி பொழிந்தார்கள். அவுணர்கள் அச்சங்கொண்டு கண்ணீர்விட்டு அழுது கொண்டு ஓடினார்கள். அதிசூரன் தேரினின்றும் இறங்கி ஒரு தண்டத்தை எடுத்து உக்கிரர் தோளில் அடித்தான். உக்கிரர் கோபித்து, அத்தண்டாயுதத்தைப் பிடுங்கி அதிசூரனுடைய மார்பில் பதைக்குமாறு அடித்தார். அதிசூரன் நிலத்தில் வீழ்ந்து இறந்தான். இயமன் அவனுடைய உயிரைக் கொண்டு போயினான்.

**அசுரேந்திரன் - கனகர்**

அதிசூரன் இறந்ததைத் தாரகன் மகனாகிய **அசுரேந்திரன்** கண்டான்; நஞ்சுபோலக் கொதித்துத் தீயெழச் சிரித்தான்; பூதர்கள் முன்சென்று வில்லை வளைத்து நாணொலி செய்தான். அவ்வொலிகேட்டு நிலவுலகமும் வானுலகமும் நடுங்கின. பூதர்கள் தண்டங்களையும் மலைகளையும் மரங்களையும் அவன்மீது வீசினார்கள். அவன் கணைமழைகளைப் பூதர்கள்மேல் பெய்து குருதிப் பெருக்கு ஓடச்செய்தான். அசுரேந்திரன் மேலும் பல கணைகளை எய்து பூதர்களின் அங்கங்களைத் துணிக்கப் பூதர்களில் பலர் இறந்தனர். பூதப்படைத் தலைவர்களில் ஒருவராகிய **கனகர்** என்பவர் அதனைக் கண்டு அசுரேந்திரனை எதிர்த்தார். அசுரேந்திரன் அவர்மீது ஒரு கூரிய கணையை எய்தான். கனகர் அசுரேந்திரனின் தேரிற் பாய்ந்து தேர்ப்பாகன் இறக்குமாறு உதைத்து வீழ்த்தினார்; அவனுடைய வில்லின் நாணினைப் பல்லினால் கடித்து அறுத்தார்; ஒரு மலையைப் பறித்து அசுரேந்திரன் மீது எறிந்தார். அசுரேந்திரன் வேறொரு வில் எடுத்து அம்மலையை எட்டுக் கணைகள் எய்து துகளாக்கினான்; ஆயிரங் கணைகளைக் கனகருடைய தோளில் செலுத்தினான். அதனால் கனகர் துன்புற்று நின்றார். அசுரேந்திரன் வேறொரு பாகனைத் தேரில் நிறுத்திவிட்டுப் பூதர்கள் மீது போருக்குச் சென்றான்.

**அசுரேந்திரன் - உன்மத்தர்**

அப்போது **உன்மத்தர்** என்னும் பூதப்படைத் தலைவர் ஒரு மலையைப் பிடுங்கி எறிந்து ஆரவாரஞ் செய்தார். அம்மலை அசுரேந்திரனின் தேரினைத் தாக்கித் தேர்க்குதிரைகளை அழித்தது. அசுரேந்திரன் வேறொரு தேரில் பாய்ந்து கணக்கற்ற கணைகளை உன்மத்தர் உடலில் எய்தான். உன்மத்தர் உடலில் குருதிப் பெருக்கெடுத்து ஓட மரணமடையாமல் மயங்கியிருந்தார்.

**அசுரேந்திரன் - மந்தர்**

அச்சமயம் **மந்தர்** என்னும் பூதப்படைத் தலைவர் அசுரேந்திரனுக்கு முன்னே வந்து எதிர்த்தார். அசுரேந்திரன் மந்தர் மீது பத்துக் கணைகளை எய்து குருதி வடியும்படி செய்தான். மந்தர் மனங்கொதித்து ஒரு மலையைப் பிடுங்கி எறிந்தார். அதனை அசுரேந்திரன் தன் மார்புமீது ஏற்றான். அம்மலை தெறித்து வந்தவழியே திரும்பிச் சென்றது. அசுரேந்திரன் மந்தர்மீது ஒன்றுபோல ஆயிரங் கணைகளைச் செலுத்தினான். அவற்றினால் மந்தர் தளர்ந்து நின்றார்.

**அசுரேந்திரன் - சிங்கர்**

மந்தர் தளர்வுற்றதைக் கண்ட **சிங்கர்** என்னும் படைத் தலைவர் அசுரேந்திரனை எதிர்த்தார் ; ஒரு மலையைப் பிடுங்கி அவன் மார்பில் எறிந்தார். அசுரேந்திரன் அதனை ஒரு கணை எய்து அழித்தான். சிங்கர் போர்க்களத்தில் பகைவர்கள் விடுத்துச் சென்ற ஒரு தண்டை எடுத்து எறிந்தார். அசுரேந்திரன் அதனை விலக்கி நூறு கணைகளை அவர்மீது எய்தான். சிங்கர் தோற்று நின்றார். மற்றைப் பூதப்படைத் தலைவர்கள் அனைவரும் அசுரேந்திரனோடு போர்செய்து தோற்றனர். அசுரேந்திரன் பல கணைகளைப் பொழிந்து மற்றைப் பூதர்களை அழித்தான்.

**அசுரேந்திரன் - தண்டகர்**

இலக்கம் வீரர்களுள் ஒருவராகிய **தண்டகர்** என்பவர் பூதர்கள் அழிந்ததைக் கண்டு மிகுந்த துயரத்தோடு தன் வில்லை

வளைத்து ஆயிரங் கணைகளை அசுரேந்திரனின் முகத்தில் புகும்படி செலுத்தினர். அவன் துன்பமுற்று இரங்கி வெகுண்டு வில்லைவளைத்து எட்டுக் கணைகளைத் தண்டகர் நெற்றியிற் செலுத்தினன். அவர் இரத்தம் வடிய இளைத்துத் தேரின்மீது நின்றார்.

**அசுரேந்திரன் - சோமுகர்**

தண்டகருடைய இளவலாகிய **சோமுகர்** என்பவர் அசுரேந்திரனை எதிர்த்து நின்றார். அசுரேந்திரன் சோமுகர் மார்பில் நூறு கணைகளை எய்தான். சோமுகர் சினந்து வில்லை வளைத்து ஆயிரங் கணைகளை விரைந்து எய்து, அசுரேந்திரனுடைய தேரையும், பாகனையும் அழித்தார். அசுரேந்திரன் வேறொரு தேரில் பாய்ந்து ஒரு வேற்படையை எடுத்துச் சோமுகர் மீது வீசினன். அது சோமுகர் மார்பில் பட்டது. அவர் வாட்டமுற்றுத் தேரின்மீது சோர்ந்து மயங்கியிருந்தார்.

**அசுரேந்திரன் - விசயர்**

அப்போது சோமுகரின் இளவலாகிய **விசயர்** என்பவர் விரைந்து வந்தார். அவர் திருமாலை ஒத்த வலிமையை உடையவர். அவர் வில்லை வளைத்து ஆயிரங் கணைகளைச் செலுத்தி அசுரேந்திரனின் தேர்ப்பாகனை அழித்தார்; அவன் கை வில்லையும் நாணையும் துணித்தார். அதனைக் கண்ட அசுரேந்திரன் வேறொரு பாகனைத் தேரில் நிறுத்தி, ஒரு தண்டத்தை எடுத்து விசயர்மீது எறிந்தான். விசயர் கணக்கற்ற கணைகளை எய்தார். அசுரேந்திரன் எறிந்த தண்டாயுதம், விசயர் எய்த கணைகளைத் துகள் செய்துவிட்டு, விசயர் மார்பில் வந்து பட்டது. விசயர் பதைத்து வில்லைக் கைநழுவவிட்டுக் குருதி சிந்த விழுந்தார். அப்போது மற்றை இலக்கம் வீரர்கள் அசுரேந்திரனோடு போரிட்டுத் தோற்று ஓடிப்போனர்கள்.

**அசுரேந்திரன் - வீரவாகு தேவர்**

அதனைக் கண்ட **வீரவாகு தேவர்** விரைந்து வந்து ஆறுமுகக் கடவுளின் திருவடிகளைத் துதித்து ஒரு வில்லை வளைத்து நாணொலி செய்தார்; கணைகளை எய்து அசுரேந்திரன் உடலை மறைத்தார். அசுரேந்திரன் உடலெங்கும் இரத்தம் வெளிப்

பட்டது. அசுரேந்திரன் ஒரு வில்லை வளைத்து வீரவாகு தேவரின் திருமேனியில் ஆயிரம் பிறைமுகக் கணைகளை எய்து குருதி பெருகச் செய்தான். இருவரும் பால சூரியர்களைப் போன்றுர்கள். அசுரேந்திரன் ஏழு கணைகளை விடுத்து வீரவாகு தேவரின் வில்லைத் துணித்தான். வீரவாகு தேவர் வேருெரு வில்லை வளைத்து நஞ்சு பாய்ச்சிய ஆயிரங் கணைகளைக் குறி தவருமல் எய்து அசுரேந்திரனின் வில்லையும், தேர்ப்பாகனையும், தேரையும், குதிரைகளையும் அழித்தார். அவன் வேருெரு தேரில் ஏறிப் பிறிதொரு வில்லை வளைத்து நூறு கணைகளை விடுத்து வீரவாகு தேவரின் தேரை அழித்தான். வீரவாகு தேவர் சினந்து வானில் எழுந்தார்; ஆறுமுகக் கடவுளைத் துதித்து ஆரவாரஞ் செய்தார்; அசுரேந்திரனின் தேரில் குதித்து வாட்படையை உறையினின்றுங் கழற்றி அவன் கை ஒன்றை வெட்டினுர். அசுரேந்திரன் சினந்து ஒரு தண்டாயுதத்தை எடுத்து வீரவாகு தேவர் மீது மோதினுன். வீரவாகு தேவர் அசுரேந்திரனின் தலையில் உதைத்து விண்ணில் எழுந்து சென்றுர். அசுரேந்திரன் கையில் வாட்படையை ஏந்திக்கொண்டு அவரைத் தொடர்ந்து விண்ணில் எழுந்தான். வீரவாகு தேவர் மிகச்சினந்து தம் வாட்படையினுல் அசுரேந்திரனின் தலையை அறுத்தார். தலையும், உடலும் கீழே விழுந்து உருண்டோடின. அவனுடைய உயிர் நீங்கியது. தேவர்கள் அதனைக் கண்டு இன்பக்கூத்தாடி ஆரவாரஞ் செய்தார்கள். அவுணப் படைகள் சிதறி ஓடின.

**சூரபன்மன் போரிடுதல்**

அதிசூரன் அசுரேந்திரன் என்னும் குமாரர்கள் இருவரும் இறந்ததையும், அருகில் நின்ற சேனைகள் ஓடுவதையும் **சூரபன்மன்** கண்டான்; வடவாமுகாக்கினியைப்போலக் கோபங்கொண்டு பகைவர்களை விரைந்து அழிக்க எண்ணினுன்; தேரின் மீது விரைந்துவந்து பூதப்படைகளை எதிர்த்தான்; வில்லை வளைத்து நகத்தால் நாணெலி செய்தான். பூத கணங்கள் அதனைக் கேட்டு வீரமும், வலிமையும் அழியப்பெற்றன. பூதர்களில் சிலர், உடல்களும் தலைகளும் நடுங்க, மரங்களையும், மலைகளையும் சிதறி எங்கும் ஓடினர். சிலர் பதைத்து நின்றனர். சிலர் வீழ்ந்து இறந்தனர். சிலர் மயங்கினர். பன்னிரண்

டாண்டுவரை அந்த வில்லினுடைய நாணோசை நீங்காமல் ஒலித்தது. அவ்வொலியைக் கேட்டுத் திருமால் தலையை அசைத்தார்; நான்முகன், இந்திரன், இயமன் மூவரும் அஞ்சினார்கள். அறக்கடவுள் அஞ்சியது ; ஐம்பெரும் பூதங்கள் அஞ்சின ; உலகத்து உயிர்கள் அஞ்சின. பூதப்படைகள் அஞ்சி ஓடுவதைக் கண்டு, பூதப்படைத் தலைவர் நூற்றெண்மரும், சூரபன்மன் மீது மரங்களையும், மலைகளையும் மழைபோலச் சொரிந்தார்கள். அப்போது, சூரபன்மன் பத்து இலட்சம் கோடி கணைகளைச் செலுத்தித் தன்மீது வரும் மலைகளையும், மரங்களையும் அழித்தான் ; பூதப்படைத் தலைவர்களுடைய உறுப்புக்களை யெல்லாம் துளைத்தான். நூற்றெண்மரும் பலவாறு ஏங்கித் துன்புற்று வருந்தினர். அவர்களுள் யாவரும் வலிமை இழந்து தோல்வி அடைந்தனர். இலக்கம் வீரர்கள் அதனைக் கண்டு விரைந்து விற்களை வளைத்துச் சூரபன்மன் மீது கணை மழைகளைப் பொழிந்தனர். சூரபன்மன் கோபித்து ஆயிரங்கோடி கணைகளைச் செலுத்தி ஒரு நாழிகையில் அவர்கள் விற்களைத் துண்டித்தான்; அவர்களுடைய தேர்களை அழித்து மார்புகள்தோறும் ஆயிரமாயிரம் கணைகள் எய்தான். இலக்கம் வீரர்களும் வருந்தி இளைத்து வீழ்ந்தார்கள்.

### சூரபன்மன் - வீரமார்த்தாண்டர்

அதனைக் கண்ட **வீரமார்த்தாண்டர்** மிக இரங்கி, விரைந்து வந்து, சூரபன்மனை எதிர்த்து, வில்லை வளைத்து, நாணொலி செய்து கணைமழைகளைச் சொரிந்தார். சூரபன்மன் தன் கணைகளால் அவற்றை அழித்தான்; கொடிய ஆயிரங் கணைகளை அவர் நெற்றியிற் செலுத்தினான். வீரமார்த்தாண்டர் பின்னும் ஆயிரங் கணைகளை விடுத்தார். சூரபன்மன், மேலும் ஆயிரங் கணைகள் செலுத்தி, அவர் விடுத்த அம்பு, வில், அம்பறாத்தூணி மூன்றையும் அழித்து, மார்பையும் பிளந்தான். வீரமார்த்தாண்டர் மனம் வருந்தி இறந்தவர்போல வீழ்ந்தார்.

### சூரபன்மன் - வீரராக்கதர்

வீரமார்த்தாண்டர் கீழே வீழ்தலை **வீரராக்கதர்** கண்டார்; "இப்பகைவனின் வலியை யான் அடக்குவேன்" என்று சினந்து, ஒரு தேரில் ஏறிவந்து சூரபன்மனை எதிர்த்து, வில்லை வளைத்து

ஆயிரங் கணைகளைச் செலுத்தினார். சூரபன்மன் ஆயிரங் கணைகளை விடுத்து ஆரவாரஞ் செய்தான். அக்கணைகள் வீரராக்கதர் விடுத்த கணைகளை விலக்கி அவருடைய வில்லைத் துணித்தன. வீரராக்கதர் வாட்படையை ஏந்தி விண்ணில் ஆர்த்தெழுந்து, சூரபன்மனின் தேரில் பாய்ந்தார்; தன் வாட்படையினால் சூரபன்மனின் வில்லைத் தாக்கினார். வில் ஒடிந்திலது; வாள் தான் ஒடிந்தது. வீரராக்கதர் சூரபன்மனின் மார்பில் அடிக்க முயன்றார். சூரபன்மன், "படைக்கலம் இழந்து நிற்பவனைக் கொல்வது பழி" என்று நினைத்துக் காலின்மேற்போட்டு விண்ணிற் செல்லும்படி எறிந்தான். அவர் வருந்தி நிலத்தில் வந்து வீழ்ந்தார்.

### சூரபன்மன் - வீரமகேந்திரர்

இச்செயலை **வீரமகேந்திரர்** கண்டு சூரபன்மனின் தேர் தெரியாத வண்ணம் கணைமழை சொரிந்து சூரபன்மனை வந்து எதிர்த்தார். சூரபன்மன் அவற்றை விலக்கிப் பல கணைகளைச் செலுத்தினான். வீரமகேந்திரர் தன் கணைகளால் அவற்றை விலக்கினார்; சாரிவட்டமாய்த் திரிந்தார். சூரபன்மனும் கணைகளைச் சிதறி அவருடைய தேரைச் சூழ்ந்து இடசாரி வலசாரியாகத் திரிந்தான். இருவரும் கணைகளைச் சொரிந்து கடும்போர் செய்தனர். சூரபன்மன் சினந்து அவருடைய கால்களில் முப்பது கணைகளையும், மார்பில் இருபது கணைகளையும், தோள்களில் முப்பது கணைகளையும் விடுத்து ஆற்றலை அழித்தான். வீரமகேந்திரர் வீழ்ந்தார். சூரபன்மன், விலங்குகளின்மேல் பாயும் புலிபோலப் பூதப்படைகளின்மேல் பாய்ந்து சென்றான்.

### சூரபன்மன் – வீரதீரர்

அதனைக்கண்ட **வீரதீரர்** வில்லை வளைத்துக் கணைகளைச் சூரபன்மன்மேல் எய்தார். சூரபன்மன் அவர் விடுத்த கணைகளை ஆயிரங் கணைகளால் அறுத்தான்; பிறகு, ஏழு கணைகளை விடுத்து அவருடைய தேரை அழித்தான். வீரதீரர் 'நன்று! நன்று!!' என்று ஒரு தண்டத்தை எடுத்துக் கொண்டு சூரபன்மன்மேல் சென்றார். சூரபன்மன் நான்கு கணைகளால் அத்தண்டத்தைத் துணித்து வீழ்த்தி, அவருடைய மார்பிலும்,

தோள்களிலும் பதினன்கு கணைகளைச் செலுத்திக் கீழே விழச் செய்தான். வீரதீரரும் மயங்கி நிலத்தில் வீழ்ந்தார்.

**சூரபன்மன் - வீரமாமகேச்சுரர்**

அப்பொழுது **வீரமாமகேச்சுரர்,** "வில்லினல் இச்சூரபன் மனின் வலிமையை அழித்தல் வீரவாகு தேவருக்கும் அரிதாகும்" என்று கருதினர்; ஊனையும் உயிரையும் அழிக்கும் தெய்வத் தன்மையினையுடைய ஒரு வேற்படையைச் சூரபன்மன்மீது செலுத்தினர். அவன், வேற்படை வருதலைக்கண்டு வில்லை வளைத்து ஆயிரம் கணைகளை எய்தான். அப்போது வேற்படை சூரபன்மனின் கணைகளை அழித்து அவன் மார்பில்பட்டுத் துக ளாகிச் சிதறியது. வீரமாமகேச்சுரர் ஒரு தண்டத்தை எடுத்து விட முயன்றார். அதற்குள் சூரபன்மன் ஏழு கணைகளை விரைந்து எய்து வீரமாமகேச்சுரரின் தோள்களைத் துளைத்தான். அவர் உடல் கீழே விழுந்தது; உணர்வு அழிந்தது; உயிர் துரிய நிலையை அடைந்தது.

**சூரபன்மன் - வீரகேசரி**

மயங்கி வீழ்ந்த வீரமாமகேச்சுரரை **வீரகேசரி** கண்டு, சூரபன்மனை எதிர்த்து வில்லை வளைத்து நாணெலி செய்தார். சூரபன்மன் அவர் வில்லை ஏழு கணைகளினலும், தேரினை நூறு கணைகளினலும் அழித்தான்; அவர் நெற்றியில் ஆயிரங் கணை களை அழுத்தினன். குருதி வெள்ளம் பெருகியது. வீரகேசரி பூமியில் குதித்து ஒரு பெரிய மலையைத் தூக்கிச் சூரபன்மன்மீது எறிந்தார். அவன் அம்மலையை ஒரு கணையால் அழித்து, அவருடைய மார்பில் நூறு கணைகளை அழுத்தினன். அவை வீரகேசரி மார்பில் புகுந்தன. வீரகேசரி மனம் நொந்து சூர பன்மனின் தேரில் பாய்ந்து அவனுடைய மார்பில் அடித்தார். அடித்த கை பிளந்தது. அதனின்றும் குருதி வடிந்தது. வீரகேசரி துடிதுடித்துப் பெருமூச்சு விட்டுத் துன்பத்தோடு அவனுடைய தேரில் விழுந்தார். சூரபன்மன், "இவனைக் கொல்வது பழி" என்று எண்ணி, அவரை ஒரு கையினல் எடுத்துப் பாற்கடலில் எறிந்தான். வீரகேசரி விண் வழியாக மீண்டு வந்து தம் கூட்டத்தைச் சேர்ந்தார்.

**சூரபன்மன் - வீரமாபுரந்தரர்**

அதன் பின்னர் **வீரமாபுரந்தரர்** சூரபன்மனை எதிர்த்து, "யான் கணைகளைச் சொரிந்து, இவனோடு போர் செய்வதில் வெற்றி ஏற்படாது" என்று எண்ணி, இயமப் படைக்கலத்தை எடுத்து விடுத்தார். அதனைக் கண்ட சூரபன்மன் நகைத்துப் பேசாது நின்றான். அப்படை அவன்மீது பட்டு அழிந்தது. பிறகு, அவர் நான்முகன் படைக்கலத்தை விடுதற்கு எடுத்தார். அதன்முன் சூரபன்மன் வில்லை வளைத்து இலட்சம் கணைகளை எய்து அவர் மார்பைப் பிளந்தான். வீரமாபுரந்தரர் நான்முகப் படைக்கலத்தோடு இரத்தம் சொரியக் கீழே விழுந்து மயங்கினார்.

**சூரபன்மன் - வீரராந்தகர்**

வீரமாபுரந்தரர் தோல்வியடைந்ததைக் கண்டு, **வீரராந்தகர்** இயமனும் அஞ்சும்படி சார்ங்கம் என்னும் வில்லை ஒத்த ஒரு பெரிய வில்லை வளைத்து, இடிபோல நாணொலி செய்து, கணைகளைச் சிதறி நின்று ஆரவாரஞ் செய்தார். அவ்வொலியைக் கேட்டுச் சூரபன்மன் அஞ்சினான்; தேவர்கள் வியந்தனர். வீரராந்தகர் விடுத்த கணைகளைச் சூரபன்மன் விலக்கி, ஆயிரங் கணைகளை அவர்மீது விடுத்தான். வீரராந்தகர் அவற்றைத் தடுத்தார். சூரபன்மன் சினந்து முத்தலைகளையுடைய ஆயிரங் கணைகளைச் செலுத்தினான். அவை வீரராந்தகர் விடுத்த கணைகளைச் சிந்தின; அவருடைய தேரை அழித்தன; வில்லை ஒடித்தன; வீரத்தை கலக்கி மார்பில் புகுந்து இரத்தத்தைப் பருகின; உணர்வைக் கெடுத்தன. வீரராந்தகர் உணர்வு இழந்து கீழே விழுந்தார்.

**சூரபன்மன் - வீரவாகு தேவர்**

அதனை **வீரவாகுதேவர்** அறிந்து கோபங்கொண்டு தன் தேரைச் செலுத்திக்கொண்டு சென்று சூரபன்மனை எதிர்த்தார். சூரபன்மன் வீரவாகு தேவரின் திருவுருவத்தை நோக்கினான்; "இவன் தூதுவனாகும்" என்று தெரிந்ததும் கோபமடைந்தான்; "நம்முடைய வீரமகேந்திரத்தை அழித்தாய்; கணக்கற்ற சுற்றத்தார்களையும், குமாரர்களையும் அழித்துவிட்டு நீ உயிர்

பிழைத்து வந்தாய்! உன்னுடைய போர் வலிமையை இன்றோடு ஒழிப்பேன்'' என்று கூறினான். வீரவாகு தேவர் சூரபன்மனை நோக்கி, ''யான் தூதுவனும் ஆவேன்; அமைச்சனும் ஆவேன்; பகைவருடன் போரும் செய்வேன்; ஆறுமுகக் கடவுள் கட்டளையிட்டருளும் பணிகள் யாவையுஞ் செய்து முடிப்பேன்; உலகில் எத்தொழிலையும் செய்ய வல்லேன். நீ விரும்பிய போரைச் செய்வாயாக'' என்றார்.

அப்போது சூரபன்மனுடைய கண்கள் எரிந்தன; பற்கள் உதட்டைக் கடித்தன; உரோமங்கள் சிலிர்த்தன. சூரபன்மன் மலையை ஒத்த வில்லை வளைத்து நாணொலி செய்தான். அவ்வொலி கேட்டுப் பூவுலகமும், கடல்களும் நடுங்கின; ஆதிசேடன் நடுங்கினான். வீரவாகு தேவர் தம் வில்லை வளைத்து நாணொலி செய்தார். அவ்வொலி சூரபன்மனுடைய நாணொலியோடு கலந்து சென்றபோது ஒருநாழிகையில் மூவுலகங்களும் நிலைகுலைந்தன. சூரபன்மன் ஆயிரங்கோடி கணைகளைத் தூண்டி ஆரவாரஞ் செய்தான். வீரவாகு தேவர் தம் கணைமழைகளால் அவற்றை விலக்கி நின்றார். சூரபன்மன் வெகுண்டு, விரைந்து இலட்சம் கணைகளை விட, வீரவாகு தேவர் ஆயிரங்கோடி கணைகளை விடுத்து அவற்றைத் தடுத்தார். சூரபன்மன் பின்னும் கோடி கணைகளை எய்தான். வீரவாகு தேவர் அவற்றை அழித்து, நூறு கணைகளை அவனுடைய நெற்றியில் விடுத்தார். அக்கணைகள் சூரபன்மனுடைய நெற்றியை அடைந்து, வைரமலையிற் பட்ட பொன் ஊசிகள்போல, ஒடிந்து வீழ்ந்தன. அதனைக் கண்டு வீரவாகு தேவர், ''ஆறுமுகப் பெருமானுடைய வேற்படையினாலன்றி வேறு எப்படையினாலும் இவன் உடலை அழிக்க இயலாது'' என்று பலகோடி கணைகளைச் சொரிந்தார். சூரபன்மன் தன் கணைகளால் அவ்றறை விலக்கி எட்டுக் கணைகளை அவருடைய தோள்களில் செலுத்தினான். அவை அவர் தோள்களில் பாய்ந்து குருதியைப் பருகிப் பிடரியைப் பிளந்துகொண்டு ஓடின. வீரவாகு தேவர் மனம் வருந்தினார்; உடனே, சூரபன்மனின் தேர்ப்பாகர்களின்மீது பலகோடி கணைகளை விடுத்தார். அப்போது, முள்ளிலவமரம் மலர்ந்தாற்போலப் பாகர்களுடைய உடல்களில் இரத்தமும், தசையும் வெளிவந்து நின்றன. அவர்கள் மிக வருந்தித் தேரின்மீது இருந்தார்கள். சூரபன்மன் அத

னைக் கண்டு சினந்து ஐம்பது கணைகளை எய்து வீரவாகு தேவரின் தேரையும் குதிரைகளையும் அழித்தான். வீரவாகு தேவர் வேறொரு தேரில் ஏறி, வாயுப்படை அக்கினிப்படை ஆகிய இவற்றைச் சூரபன்மன் மீது விடுத்தார். சூரபன்மன் அதனைக் கண்டு, எள்ளி நகையாடி அவற்றிற்கெதிராக ஒரு படைக்கலத்தையுஞ் செலுத்தாமல் வில்லொடு வாளா நின்றான். அப்படைக்கலங்கள் அவன்மீது தாக்கி, ஊறுபட்டு நூறாயிரந் துகளாய் உதிர்ந்தன. பிறகு, வீரவாகு தேவர் இயமப்படைக் கலத்தையும் சூரியப் படைக்கலத்தையும் ஒருங்கே செலுத்தினார். அப்படைக்கலங்களும் சூரபன்மனிடம் சென்று பெருமை கெட்டு அழிந்தன. பின்பு, வீரவாகு தேவர் வருணப்படையையும், நிருதிப் படையையும், இந்திரப்படையையும் சூரபன்மன் புயங்களிலும் மார்பிலும் படும்படி செலுத்தினார். அவை அவ்வங்கங்களை அடைந்து ஒன்றும் செய்யாமல் அழிந்தன. அதன்பின்பு, வீரவாகு தேவர், அவன் மீது மாயப்படையையும் ஆசுரப்படையையும் விடுக்க அவையும் பயனற்றுப் போயின.

வீரவாகு தேவர் சூரபன்மனின் வலிமையைக் கண்டு மிகவும் வியந்தார்; நான்முகன் படைக்கலத்தையும், திருமால் படைக்கலத்தையும் விடுத்தார். அப்படைகளிரண்டும் இடி, புகை, நெருப்பு, கடல் முதலிய படைகளையும் உண்டாக்கி எல்லா உலகங்களும் நடுங்கும்படி சூரபன்மனுடைய மார்பில் தாக்கி, வைரமலையைத் துளைக்கும்படி முயன்ற வண்டுகளைப் போல, ஆற்றல் அழிந்து போயின. வீரவாகு தேவர், சிவபெருமான் கொடுத்தருளிய வரத்தை நினைந்து மிக வியந்தார். சூரபன்மன் வீரவாகு தேவரை நோக்கிச் சிரித்து, "மும்மூர்த்திகளுக்கும் முதல்வராகிய சிவபெருமான் தந்தருளிய வரத்தினால் எந்தெந்தத் தேவர்களுடைய படைக்கலத்தை விடுப்பினும் அவை என்னை வெல்ல வல்லன அல்ல; யான் அவற்றிற்கு எதிராக எப்படைகளையும் விடுத்துத் தடைசெய்யேன்; அவற்றின் ஆற்றல்களையும் அறிவேன். திருமால் நான்முகன் முதலிய தேவர்களின் படைகள் என் மார்பை வந்து அடைவது, வடவாமுகாக்கினியைத் தசை என்று கருதிச் சென்றடையும் தேனீக்களை ஒத்ததாகும். நீ விடுத்த படைகளுள் எதுவும் என்னை வெற்றி கொள்ளாததைக் கண்டாய்!" என்று தன் ஆற்றல்களை எடுத்

துப் பேசினன். வீரவாகு தேவர், தன் சிவப் படைக்கலத்தை எடுத்து மனத்தால் வழிபாடு செய்து சூரபன்மனின்மேல் செலுத்தினர். அது நஞ்சையும், நெருப்பையும், இடியையும், காற்றையும், இருளையும், கூற்றுவனையும், கதிரவனையும், பூதப் படைகளையும், கணைகளையும், சூலங்களையும் வெளிப்படுத்தி, அருகில் சூழ மிகுந்த ஆரவாரத்துடன் வந்தது. உடனே சூரபன்மனும் சிவப்படைக் கலத்தை எடுத்து மனத்தால் வழி பாடு செய்து விடுத்தான். இரு சிவப்படைக் கலங்களும் மிகக் கடுமையாக எதிர்த்து உலகம் அஞ்சும்படி போரிட்டுத் தம்மை விடுத்தவர்களிடமே திரும்பிச் சென்றன. பிறகு, சூரபன்மன் தன் வில்லை வளைத்துக் கணைகளைச் சிந்தினன். வீரவாகு தேவரும் அங்ஙனமே செய்தார். சூரபன்மன் முத்தலையையுடைய பதி னைந்து கணைகளை ஏவி வீரவாகு தேவருடைய வில்லை ஒடித் தான். வீரவாகு தேவர் சினந்து ஒரு வேற்படையை வீச அது சூரபன்மன் மார்பிற்பட்டு ஒடிந்தது. சூரபன்மன் ஒரு தண் டாயுதத்தை எடுத்து வீரவாகு தேவர் மேல் எறிந்தான். வீரவாகு தேவர் அதற்கெதிராக ஒரு தண்டத்தை எடுத்து எறிந்தார். சூர்பன்மன் செலுத்திய தண்டம், எதிர்த்து வந்த தண்டத்தை வீழ்த்தி வீரவாகு தேவர் மார்பில் வந்து பட்டது. வீரவாகு தேவர் உடலிலிருந்து குருதி ஆறுகளைப்போல ஓடியது. வீரவாகு தேவர், பிளந்த மார்பும், புகைகின்ற மனமும், குறை கின்ற வலியும், தளர்கின்ற மேனியுங் கொண்டு, தேவர்கள் அஞ்சி ஓடத் தேரின்மீது வீழ்ந்தார். தேரோட்டியாகிய **விசாலி** என்பவன் வீரவாகு தேவரைத் தெளிவிக்கக் கருதித் தேரை ஒரு பக்கத்திற்குச் செலுத்திக்கொண்டு போனன். சூரபன்மன், "வீழ்ந்த வீரவாகு இறப்பான்; இது நிச்சயம்" என்று நினைத்து வில்லை வளைத்துப் பூதகணங்களின்மீது கணைகளைச் சொரிந்து அழித்தான். இறவாதொழிந்த பூதப்படைகள் அஞ்சி ஓடின.

**ஆறுமுகக் கடவுள் போருக்கு வருதல்**

இலக்கத் தெண்மரும், வீரவாகு தேவரும், இரண்டாயிரம் வெள்ளம் பூதப்படைகளும் சூரபன்மனல் ஆற்றல் அழிந்து உடைந்த தன்மையினை ஆறுமுகக் கடவுள் கண்டருளினர்;

தேர்ப்பாகனை நோக்கி, "சூரபன்மன்மீது தேரைச் செலுத்துதி" என்று பணித்தருளினார். சூரபன்மனுக்கு முன் தேர் விரைந்து சென்றது. சூரபன்மன் ஆயிரங்கோடி சூரியர்கள் திரண்டு ஒன்றாய் இருளை ஓட்டி விண்ணினின்றும் நீங்கி வந்தாற்போல, போர்க்களத்திலே தோன்றிய ஆறுமுகக் கடவுளின் தோற்றத்தைத் தரிசித்தான். மலர்ந்த செந்தாமரையை ஒத்த ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக்கண்களும், குண்டல வரிசைகளும், செவ்விய பொற்கிரீடமும், திருமார்பும், படைக்கலங்களேந்திய பன்னிரண்டு திருக்கைகளும், தண்டையும் சிலம்பும் ஒலிக்கும் திவ்விய திருவடிகளும் விளங்க எழுந்தருளிவந்த ஆறுமுகக் கடவுளைச் சூரபன்மன் தன் கண்ணாரக் கண்டான்.

முண்டக மலர்ந்த தன்ன மூவிரு முகமுங் கண்ணுங்
குண்டல நிரையுஞ் செம்பொன் மவுலியுங் கோல மார்பும்
எண்டரு கரமீ ராறும் இலங்கெழிற் படைகள் யாவுந்
தண்டையுஞ் சிலம்பும் ஆர்க்குஞ் சரணமுந் தெரியக் கண்டான்.

சூரபன்மன் முன்னாளில் தவம் செய்ததும், அழியாது பல யுகங்கள் வாழ்ந்ததும், வேதங்களாலும் அறியமுடியாத சிவபெருமானின் திருக்குமாரராகிய ஆறுமுகக் கடவுளின் பேரழகைக் காண்பதற்கே போலும்! மெய்ஞ்ஞானிகள் மனத்தினாலும் அளவிடுதற்கரிய குமாரக் கடவுளின் திவ்விய திருவுருவத்தைத் தரிசித்துச் சூரபன்மன் தீவினை நீங்கி உய்ந்தான். அவன் போர் செய்து முருகக் கடவுளால் இறந்தால் என்ன? தோற்றால் என்ன? சூரபன்மனைத் தீவினையாளன் என்றே அறியாதவர்களில் சிலர் கூறுவர். ஆறுமுகக் கடவுளே அவன்முன் எழுந்தருளப் பெற்றார் என்றால் தவத்திற்கு மட்டுமின்றி, அறத்திற்கும் சூரபன்மனே முதல்வன்போலும்! முனிவரும் தேவரும் மற்றை எவரும் நினைத்தற்கும் அரிய குமாரக்கடவுளைச் சூரபன்மன் தன் இரு கண்களாலும் தரிசித்தான் என்றால் அவன் தவச் சிறப்பை என்னென்று கூறுவது! போர் செய்பவர்போல் விரைந்து வந்து, சூரபன்மன் தரிசிக்கும்படி எளியவராக அவனுக்குக் காட்சிதந்தருளினாரென்றால், ஆறுமுகக் கடவுளின் திருவிளையாடல்களை யாவர் அறியவல்லவர்?

மனத்திற்கும் எட்டாத எம்பெருமானைக் கண்ணினுற் கண்டு முன்னே நின்ற சூரபன்மன், "இவர் சிவபெருமானுடைய குமாரர் ஆகும்" என்று நினைத்து மனத்தில் கோபமுண்டாக, அக்கடவுளை நோக்கி, "உன் சேனைகள் வலிமையிழந்து போன விடந்தெரியாமற் போய்விட்டன. பூதப்படைத்தலைவர்களும் அழிந்தார்கள். விற்போரில் வல்ல மற்றை வீரர்களும் என்னோடு போரிட்டு இறந்தார்கள். என்னிடம் தூதுவந்த வீரவாகுவும் போர் செய்து அழிந்தான். நீ ஒரு பாலகன், என்னோடு போர் செய்ய வருகிருய். உன் தந்தையும், நான்முகனும், திருமாலும் என்னோடு போர் செய்வதற்கு எண்ணிலர்! முன்னாளில் வலியில்லாது அழிந்த கிரவுஞ்ச மலையையும், தாரகாசுரனையும்போல் என்னையும் நினைக்காதே! என் செல்வங்களையும் வரங்களையும் எண்ணிப் பார்க்கவில்லை; என் வலிமையையும், வெற்றியையும், படைத் திறத்தையும் நீ அறிந்துகொள்ளவில்லை. நான்முகனும், திருமாலும், இந்திரனும், மற்றைத் திக்குப் பாகர்களும், உமாதேவியும் வருந்த ஓர் இமைப் பொழுதினுள் என்னுடைய வில் வலியால் நின் வலியை அழிப்பேன்" என்று கூறினன்.

முருகக் கடவுள் சூரபன்மன் கூறியதைக் கேட்டுத் திருப் புன்முறுவல் பூத்து, "நாம் வெற்றியையும் உடையோம்; மிகுந்த வலிமையையும் உடையோம்; மேன்மையையும் உடையோம்; கணக்கற்ற படைக்கலங்களையும் உடையோம்; அழியாத இயல்பையும் உடையோம்; பெரிய சேனைக் கடலையும் உடையோம் என்று நீ ஆணவங் கொள்ளாதே! இவற்றையெல்லாம் நாம் விரைவாக அழிப்போம். 'சிறந்த வரங்களைப்பெற்ற நம்மை மிக இளைய குமாரனே வெல்ல வல்லான்!' என்று நீ மனத்தில் எண்ணியுள்ளாய். நீ மிகவும் அறியாமையை யுடையவனாக விருக்கிருய். சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றுகின்ற ஒரு சிறு பொறி அல்லவா உலகங்கள் எல்லாவற்றையும் அழிப்பது! யாவர் தம்முடன் எதிர்த்தாலும் அவர்களோடு போரிடுவதுதான் முறைமையாகும்.

அறிவுடை முதியர் என்றும்
ஆண்டிளை யோர்கள் என்றும்
சிறியவர் பெரியர் என்றும்
திருத்தகு வளத்தர் என்றும்
வறியவர் என்றும் வீரர்
மதிக்கிலர் யாவ ரேனும்
விறல்வலி படைத்து நேரின்
வெஞ்சமர் விளைப்பர் அன்றே.

நூற்றெட்டு யுகம் செல்வத்தோடு சிறந்து வாழ்கின்ற உன்னுடைய ஆற்றலை, நம்முடைய சிறிய வலிமையினுல் பாலிற் புகுந்த உறையைப்போல, விரைவில் இப்பொழுதே அழிப்போம்!'' என்று திருவாய்மலர்ந்தருளினுர்.

**ஆறுமுகக் கடவுளும் - சூரபன்மனும் போர்புரிதல்**

அப்போது சூரபன்மன் ஆறுமுகக் கடவுள் அருளியவைகளைக் கேட்டான்; மிகப்பெரிய ஒரு வில்லை வளைத்தான். முருகக் கடவுள் தாமும் ஒரு பெரிய வில்லை எடுத்து வளைத்து அண்டங்கள் யாவும் உடைவதைப்போன்று நாணெலி செய்தார். சூரபன்மனும் கடல்கள் யாவும் உடைந்த தன்மை போன்று நாணெலி செய்து, கணை மழைகளைத் தூவி, ஆறுமுகக் கடவுளையும், அவருடைய தேரையும், உலகங்களையும் மறைத்தான். குமாரக் கடவுள் பல கணைகளைத் தொடுத்து அவற்றையெல்லாம் குறைத்தார். சூரபன்மன் சினந்து நஞ்சு தோய்ந்த பல கணைகளைத் தொடுத்தான். குமாரக் கடவுள், கணைமழை பெய்து அவற்றை அழித்து, அவனை மறைத்து விண் வழியை மாற்றினுர். சூரபன்மன் விடா மழைபோலக் கணைகளைப் பொழிந்து ஆறுமுகக் கடவுளின் கணைகளை யெல்லாம் மாற்றினுன்; பத்து லட்சம் கணைகளைக் குமாரக் கடவுள்மீது விடுத்தான். அவர் அவற்றைத் தடுத்துச் சூரபன்மன் தோள்களில் பதினுன்கு கணைகளை எய்தார். அவை சென்று சூரபன்மனுடைய தோள்களைத் துளைக்கவில்லை. ஆறுமுகக் கடவுள், சூரபன்மனின் வச்சிர உடலின் வலிமையைக் கண்டு தீ யெழத் திருப்புன்முறுவல் கொண்டார்; அவன் பின்னும் விடுகின்ற கணைகளையெல்லாஞ் சிந்தினுர். ஆயிரங் கணைகளால் அவனுடைய

வில்லை அறுத்தார். சூரபன்மன் சினந்து நான்முகன் அளித்த ஒரு வேற்படையை ஆறுமுகக் கடவுள்மீது எறிந்தான். அவர் பதினான்கு கணைகளால் அதனை அழித்தார். சூரபன்மன் வேறொரு வில்லை எடுத்து வளைத்துக் கணைமழை பொழிந்து ஆறுமுகக் கடவுள் மாறிமாறி விடுகின்ற கணைகளையெல்லாம் மாற்றினான்; அவருடைய திருத்தோள்களில் ஏழு கணைகளைச் செலுத்தி ஆரவாரஞ் செய்தான். அக்கணைகள் நுண்ணிய துகளாகித் தீயிற்பட்ட பூளைபோல அழிந்தன. குமாரக் கடவுள் சூரபன்மனுடைய ஆற்றலைக்கண்டு, "நன்று, நன்று!" என்று வீர நகைகொண்டார்; பத்துக் கணைகளினால் அவனுடைய வில்லை அறுத்தார்; ஆயிரம் கணைகளினால் அவன் தேரை அழித்தார்; அவனைப் பின்தொடர்ந்து வந்த பதினான்கு லட்சம் பாதுகாப்புத் தேர்களையும் ஓர் இமைப்பொழுதில் கணை மழைகளினால் அழித்தார். தன் பாதுகாப்புத் தேர்கள் யாவும் அழிந்ததைக்கண்டு சூரபன்மன் மிகச் சினங்கொண்டான். உடனே, தன் காவலாய் வைத்திருக்கின்ற ஒரு முத்தலைச் சூலத்தை எடுத்து முருகக் கடவுள்மீது வீசினான். முருகக் கடவுள் அதனை நான்கு கணைகளினால் துணிபடுத்தினார்; ஏழு கணைகளினால் அவனுடைய குடையையும் அழித்தார்; ஒரு கணையால் அவன் முடியை அறுத்தார்; அவன் உடலெங்கும் கணைகளைப் பெய்து ஆபரணங்களை அகற்றினார். சூரபன்மன் வலிமை இழந்தான். அவன் அருகிலிருந்த படைத் தலைவர்கள் அதனைக் கண்டார்கள்; நால்வகைச் சேனைகளோடு வந்து முருகக் கடவுளை எதிர்த்து விடா மழைபோலப் படைக்கலங்களை விடுத்தார்கள்; மேருமலையை ஏழு கடல்களும் சூழ்ந்தாற்போலக் குமாரக் கடவுளைச் சூழ்ந்தார்கள். அப்போது குமாரக் கடவுள், தம் திருக்கையிலிருந்த சக்கரப் படையை விடுத்தார். அப்படை சென்று அவுணர்கள் யாவரையும் அவர்களுடைய நால்வகைச் சேனைகளையும் பலவாறு அழித்தொழித்தது. அன்றியும் சூரபன்மனுடைய நூறாயிரம் வெள்ளம் படைகளையும், ஒரு நாழிகையில் அழித்துவிட்டுத் திருச்செந்திலாண்டவன்பால் திரும்பி வந்தடைந்தது.

**போர்க்களக் காட்சி**

இறந்த அவுணர்களுடைய உடற்குறை புகையாகவும், குருதி நெருப்பாகவும், வெட்டுண்டு வீழ்ந்த குதிரைகளும் தேர்

களும் யானைகளும் அவிகளாகவும், ஓடியாடித் தொழில் புரியும் முருகக்கடவுளின் சக்கரப்படை அங்கு ஒரு பெரிய வீர வேள்வி செய்பவனைப்போலவும் காட்சி அளித்தது.

> போர ழிந்திடும் அவுணர்தம் உடற்குறை புகையாச்
> சோரி வன்னியா அதனிடைத் துணிந்துவீழ் பரியும்
> தேரும் யானையும் அவிகளா எம்பிரான் திகிரி
> வீர மாமகம் ஒன் றியற் றுவதென விளங்கும்.

அச்சக்கரப் படை அவுணர்களை அழித்து அவர்களின் வஞ்சகமும் மாயமுமாகிய பேரிருளைப் போக்கி இரத்த நிறத்தை அடைந்து சூரியனைப்போல் விளங்கியது. இதன் இயல்பைக் கண்டு, திருமாலின் சக்கரப்படை புகழ்ந்து வியந்தது.

பல குடைகளின் காம்புகள் இடையில் வெட்டுண்டு நிணச் சேற்றில் வீழ்ந்து நிற்றல், தடாகத்தில் மலர்ந்த பழைய தாமரைப் பூவின் கூட்டத்தைப்போலத் திகழ்ந்தது. போர்க்களத்தில் செயலற்று வீழ்ந்திறந்த அவுணர்கள், யானைகள், குதிரைகள் ஆகிய சேனைகளின் பிணக் கூட்டங்கள், உலகத்திலுள்ள மலைகளெல்லாம் ஒருங்கே வந்துகூடி நின்றதைப்போன்று விளங்கின. விண்வரையில் உயர்ந்து நின்ற பிணக்குவியல்களின்மேல் கொள்ளிவாய்ப் பேய்க் கூட்டங்கள் ஏறிநின்று பிணத்தை உண்டு நகைத்து ஒலி செய்து நெருங்குதல், முகிற் கூட்டங்கள் மின்னி இடித்து மலைச்சாரல்களில் நெருங்கினாற்போன்றிருந்தது. யானைகளையும் அவுணருடைய உடல்களையும் பிறவற்றையும் வாரிக் கொண்டு குருதி வெள்ளம் பாய்தல், செம்பாம்பு கடலை மறைக்க நினைத்து நஞ்சைக் கக்கி நிலத்திலே செல்லுதலைப்போன்றிருந்தது. சில அவுணர்கள் தலை வெட்டுண்டு விரைந்து மேலே எழுந்து ஆர்த்தலைக்கண்டு, கதிரோன் தன்னைத் துன்பஞ் செய்கின்ற இராகு கேதுக்கள் பல வந்தன என்று அஞ்சி ஓடினான். அளவற்ற உடற்குறைகள், பேய்கள் கைகொட்ட எழுந்து ஆடின.

**சூரபன்மன் மீண்டும் போர்புரிதல்**

ஆறுமுகக் கடவுள் விடுத்த சக்கரப்படை சூரபன்மனின் படைகளை அழித்தது. சூரபன்மன் தன்னுடைய படைகளைக்

காணுதவனுய்ப் பின்னர்த் தன்னெதிரில் நின்ற படை முழுவதும் பட்டொழிந்ததைக்கண்டு, மனமருட்சிகொண்டு தனித்துநின்று, "இந்தப் பாலகன் என் சேனைகளைத் தன் வேற்படையால் அழித்தானே? சிவப் படைக்கலத்தால் அழித்தானே? 'இறந்தொழிக' என்று ஒரு சொல்லால் அழித்தானே? இவன் என் படைகளை யெல்லாம் எங்ஙனம் அழித்தான்!" என்று திகைத்தான்; தனது செல்வங்கள் யாவற்றையும் இழந்த அரசனைப் போல வருந்தினன். பிறகு, சூரபன்மன் கோபங்கொண்டு மார்பு வியர்க்க, தலையை அசைத்து, "நன்று, நன்று! ஒரு பாலகன் வலி" என்று நகைத்து, நான்முகன் படைக்கலத்தை எடுத்து ஆறுமுகக் கடவுள்மீது விடுத்தான். அது முருகக் கடவுளை நெருங்கியபொழுது, அவருடைய திருக்கரத்திலுள்ள வேற்படை சென்று அதனை விழுங்கியது. சூரபன்மன் அதனைக்கண்டு வருந்தித்தீப்போல உள்ளம்கொதித்துத்திருமால் படைக் கலத்தை எடுத்து விட்டான். அப்படை அளவில்லாத திருமால்களின் உருவங்களை உண்டாக்கிக்கொண்டு நெருங்கியது. வேற்படை அதனையும் விழுங்கியது. அதன்பிறகு சூரபன்மன் சிவப்படைக்கலத்தை எடுத்து வழிபாடு செய்து விரைந்து விடுத்தான். அஃது எல்லை யற்ற உருத்திர மூர்த்திகளின் வடிவத்தை உண்டாக்கிக்கொண்டு எண்டிசைகளிலும் ஆரவாரஞ் செய்து, தீயை வீசி விரைந்து புறப்பட்டது. அதனைக் கண்டு திக்குயானைகள் எட்டும் தளர்ந்தன; வடவாமுகாக்கினி ஓடியது; ஆதிசேடன் நடுங்கினுன்; பூமி நெக்கது; கதிரவன் துடித்தான்; சந்திரன் சுழன்ருன்; மேரு வெடித்தது; அண்டம் விண்டது; இலக்கம் வீரர்கள் நடுநடுங்கினர்; மற்றை வீரர்களும் பூதர்களும் கதி கலங்கினர்; தேவர்கள் அஞ்சி ஓடினுர்கள். இங்ஙனம் வந்த சிவப்படைக்கலத்தைக் குமாரக் கடவுள் பார்த்து, "இது நம் தந்தையின் படை" என்று திருவுளங்கொண்டு அதனைத் தன் திருக்கரத்தில் ஏந்தி நின்ருர். சூரபன்மன் அதனைப் பார்த்து, "நான் செலுத்திய படைக் கலங்களுக்கெல்லாம் மாற்றுப் படைக்கலங்களை இவன் எய்யவில்லை. ஆனுல், தன்னை நெருங்கிய படையை மட்டும் கவர்ந்தான்; அழிவில்லாத சிவபெருமானின் திருக்குமாரன் என்னும் முறையினைக் காட்டினன். என்னேடு போர்புரிதற்கு

இவனன்றி வேறு எவரும் இல்லை. இவனோடு பொருதற்கு யானன்றி வேறு ஒருவரும் இல்லை. இவனுடைய வேலின் வலிமையையும், வில்லின் வலிமையையும், பிறவற்றையும் கண்டேன். இனி, இந்தப் பாலகன் செய்வனவாகிய அனைத்தையும் காண்பேன்'' என்று நினைத்து மௌனியாகி நின்றான்.

குமாரக் கடவுள் சூரபன்மனை நோக்கி, ''சூரபன்மனே! நீ சயந்தனையும், தேவர்களையும் அளவில்லாத காலம் சிறையில் வைத்தாய். அனைவரையும் சிறைநீக்கும்படி ஒரு தூதுவனை உன்பால் அனுப்பினோம். நீ தூதுவன் சொல்லைக் கேட்கவில்லை. ஆதலால், நாம் இங்கு வந்தோம். 'போரில் ஒப்பற்ற தாரகனை முன்னர் அழித்தது போல் உன்னையும் இன்றைக்கே அழிப்போம்' என்று வந்தோம். உன்னுடைய இலக்கம் வெள்ளம் சேனைகளும், உன் வில் வலிமையும், உன்னால் தூண்டப்பெற்ற தெய்வப்படைக் கலங்களும் அழிந்துபோனதைக் கண்டாய்! இங்கே உன்னைக் கொல்லுதல் ஒருபொருளும் அன்று; அரிதும் அன்று. படைகளின்றி நிற்கும் உன்னைக் கொல்லுவது அறமுறை தவறிய பழியாகுமே என்று தயங்குகிறோம். இன்னும் பற்பலவற்றைச் சொல்லுவதில் பயனென்ன? தேவர்களின் சிறையை நீ அகற்றினால் உன்னைக் கொல்லமாட்டோம். அவர்களைச் சிறை நீக்க மறுத்தால் உன்னை விரைவில் கொல்லுவோம். உன் எண்ணம் என்ன? கூறுவாயாக'' என்று வினவியருளினார். சூரபன்மன் ஒன்றும் கூறாது, ''பாலகனாகிய இவன், 'நான் படையை இழந்தேன்' என்று கருதி என்னுடைய பலவீனத்தை அறிந்தவன் போலத் தேவர்களைச் சிறையினின்றும் விடுவிக்கும்படி கூறவும் வல்லவனாயினன். சிறுபிள்ளைத் தனத்தால் என் வீரத்தையும், வலிமையையும் சிறிதும் அறிந்திலன். இவன் எவ்வளவு காலம் என்னோடு போர் செய்தாலும் அழியாத வரத்தைப் பெற்ற என்னைக் கொல்லுதல் முடியுமா? நான் முடியும் குடையும் இன்றித் தனித்து நின்றாலும் இவனால் அழியமாட்டேன். இப்பாலகன் என்னுடைய படைகளையும் படைக் கலங்களையும் அழிக்கலாமே அல்லாமல், என்னுடைய அழியாத வரத்தையும் அழிக்க வல்லனோ! அவன் என்னைக் கொல்லுவதும் நான் அவனை வெல்லுவதும் இப்போது அரிது. ஆகையால்,

நான் பெரிய படைகளோடும், வளங்களோடும் திரும்பிவந்து இவனோடு போர் செய்து வெற்றிகொள்வேன். இஃது இழிவாகாது. வீரர்கள் பலநாள் போரிட்டு வெற்றி பெற்றாலும் அது புகழே ஆகும். நானும் அங்ஙனம் செய்வதே கடமையாகும். அறிஞர் சூழ்ச்சியும் இதுவே'' என்று பலவாறு எண்ணினான். மாய மந்திரம் ஒன்றை நினைத்து, அவ்விடத்தைவிட்டு மறைந்து மகேந்திரபுரியிலுள்ள தன் கோயிலுட் சென்றான். மறைந்தோடிய தீயவனாகிய சூரபன்மன்பால் கொண்டிருந்த திருவருள் காரணமாக முருகக் கடவுள் அவன் மீது வேற்படையை விடுத்துக் கொல்லுதற்கு எண்ணிலர்.

**தேவர்கள் ஆறுமுகக் கடவுளிடம் கூறுதல்**

சூரபன்மன் தோற்று ஓடிய பிறகு, திருமால் நான்முகன் இந்திரன் முதலிய தேவர்கள் ஆறுமுகக் கடவுளை வணங்கி, ''எம்பெருமானே! சூரபன்மன் பிறந்ததுமுதல் வெற்றியே கண்டவன். இன்றுதான் தேவரீரோடு போரிட்டுத் தோற்றோடினான். நீர் அவனோடு போர் செய்தல் ஒரு திருவிளையாடலே ஆகும். தேவரீர் அவன் உயிரைக் கவரத் திருவுளங் கொண்டால் அவனால் தப்பி ஓட இயலாது. அவனைத் தேவரீர் உம் வேற்படையினால் அழிப்பீர். அதற்கு முன் அவனோடு போர் புரிதல் அடியவர்களாகிய எங்களிடம் வைத்த திருவருளே காரணமாகும்'' என்று விண்ணப்பம் செய்தார்கள். ஆறுமுகக் கடவுள் திருப்புன்முறுவல் பூத்து, ''சூரபன்மன் இனி நம்முன் வந்து போர் செய்தால் விரைந்து அழிப்போம்'' என்று திருவாய்மலர்ந்தருளினார்.

**பூதப்படைகள் மகேந்திரபுரியை அழித்தல்**

சூரபன்மன் போரில் ஆற்றாது ஓடினவர்களும், துன்பமுற்று வீழ்ந்தவர்களுமாகிய பூதப்படைத் தலைவர்களும், பிறரும் ஆறுமுகக் கடவுளின் அருகே வந்தடைந்தார்கள்; சூரபன்மன் மறைந்தோடிப் போனதைக்கண்டு ஆரவாரித்து, ''போரில் நம்மை அவமதித்த சூரபன்மனின் நகரத்திலுள்ள இம்மதிலை அகழ்ந்து, கோபுரத்தைக் கடலில் இட்டு வருவோம்; வம்மின் வம்மின்!'' என்று ஒருவரையொருவர் விரைந்து கூப்பிட்டுக் கொண்டு மதிற் புறத்தை அடைந்தார்கள்.

படைகளோடு சோர்வின்றி அம்மதிலைக் காத்து நின்ற **அதிகோரன்** என்னும் அவுணவீரன், பூதப்படைத் தலைவர்கள் உள்ளே சென்றதைக்கண்டு மிகவும் சினந்து, உதட்டைக் கடித்துத் திண்டி பேரி திமிலை முதலாகிய ஒலிக்கருவிகள் முழங் கப் போர் செய்யும் பொருட்டுப் படைகளோடு வந்து எதிர்த் தான். பூதர்கள் அவுணர்களோடு எதிர்த்தார்கள். அவுணர்கள் தோமரம், பரசு, சூலம் முதலாகிய படைகளை ஏவியும், ஈட்டியால் குத்தியும் வாளால் துணித்தும் போரிட்டார்கள். பூதர்கள் மலை களையும், மரங்களையும் பிடுங்கி வீசினர்கள்; யானைகளைக் காலால் எற்றியும், தேர்களைக் கைகளால் ஒடித்தெறிந்தும், குதிரைகளைப் பிசைந்தும், அவுணர்களைத் துகைத்தும் போர் செய்தார்கள். எங்கும் குருதி பொங்கியது ; மூளை சொரிந்தது, குடர்கள் சரிந்தன; பருந்தும் காகங்களும் நெருங்கின. பூதர்கள் சிலர் அழிந்தனர். அவுணர்கள் பலர் இறந்தார்கள். பூதர்களின் தாக்குதலுக்குப் பயந்து அவுணர் பலர் அஞ்சி ஓடினர். அத னைக் கண்ட அதிகோரன் ஓர் எழுப்படையை ஏந்திப் பூதர்களின் தலைகளிலும், கைகளிலும் தோள்களிலும், மார்புகளிலும், முகங் களிலும் ஓடியோடி மோதினன் ; ஓரிமைப் பொழுதில் பல ரைக் கொன்றான். அப்போது, பூதப்படைத் தலைவருள் ஒருவரா கிய **மேகர்** என்பவர் கண்டு கோபத்தோடு எதிர்சென்று தமது கையிலிருந்த ஒரு மலையை அதிகோரன் மேல் எறிந்தார். அதிகோரன் அதனைத் தம் கையிலிருந்த எழுவால் தடுத்தான். மேகர் அதிகோரனுடைய மார்பில் அடித்தார். அதிகோரன் மேகருடைய தோள்களில் எழுப்படையால் அடிக்க, எழுப்படை முறிந்தது. மேகர், அதிகோரன் கதுப்பில் கையால் அடித்தார். அதிகோரன் இறந்தான்.

அதனைக் கண்ட பூதர்கள் போரொலி செய்துகொண்டு மதிலின் வாயிலை அடைந்து, அங்கே ஆயிரம் யோசனை உயர்ந்து நின்ற கோபுரத்தைப் பிடுங்கிக் கடலில் எறிந்தார்கள். அப்போது பூமி அசைந்தது. ஆதிசேடன் திகில் அடைந்தான். மகேந்திரபுரியிலுள்ள அவுணர்கள் நடுங்கி அயர்ந்தார்கள். அக் கோபுரம் திருப்பாற்கடலில் அமிழ்ந்திய மந்தரமலைபோல ஆழ்ந் தது. அங்கிருந்த கடல் மீன்கள் யாவும் இறிந்தன. "முற்பகலில்

பிறர்க்குச் செய்யும் தீங்கு பிற்பகலில் தமக்கே வந்து சேரும்'' என்று பெரியோர் கூறுவது போல, முன்னர் மீன்களை அவுணர்கள் உண்டார்கள்; இப்போது அவுணர்களை மீன்கள் உண்டன. கோபுரம் கடலில் வீழ்ந்தமையால் கடல்தண்ணீர் மேலே சென்று வீரமகேந்திரபுரியின் மதிலைச் சூழ்ந்தது. பூதர்கள், நகரின் வடபக்கத்து மதிலைக் கால்களினால் உதைத்தார்கள். அஃது இடிந்து கீழே விழுந்தது. பூதர்கள் மகேந்திரபுரியில் நுழைந்து தம்மோடு எதிர்க்கின்ற அவுணர்களையெல்லாம் கொன்றார்கள்; மாளிகைகளையும் சிகரங்களையும் உதைத்து வீழ்த்தினார்கள். பிறகு, பூதர்கள் ஆறுமுகக் கடவுள் இருந்த போர்க்களத்தை அடைந்தார்கள். ஆறுமுகக் கடவுள் பூதர்களோடு தம் பாசறையை அடைந்து இந்திரன் முதலிய தேவர்களும் பிறரும் துதிக்கத் திவ்விய சிங்காதனத்தில் வீற்றிருந்தருளினார். அப்பொழுது மேலைக் கடலில் **கதிரவன் மறைந்தான்.**

**சூரபன்மனும் - பானுகோபனும்**

போர்க்களத்திலிருந்து ஒளிந்தோடிய சூரபன்மன், மகேந்திரபுரிக்குள் சென்று தன் பட்டத்தரசியாகிய **பதுமகோமளை** இருக்கின்ற கோயிலை அடைந்து ஒருவருடனும் பேசாது தனித்தவனாக அமர்ந்து, இரவு முழுவதும் போருக்குரிய சூழ்ச்சிகளைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தான். சூரபன்மன் போருக்குப் போய்த் தோற்று வந்த செய்தியைத் தூதுவர்கள் பானுகோபனிடம் போய்ச் சொன்னார்கள். பானுகோபன் அதனைக்கேட்டு மனம் வருந்தினான்; உடனே, அவன் தன் தந்தையிடம் வந்தடைந்து, '' தந்தையே! நேற்றுப் பகைவர்களின்மேல் போருக்குச் செல்லும்படி கூறினாய். வந்து எதிர்த்தவர்களோடு நான் கடும்போர் செய்தேன். என்னோடு போர்புரிய ஆறுமுகக் கடவுள் மட்டும் வரவில்லை. ஒழிந்த வீரர்களே வந்து போரிட்டனர். நான் மோகப் படையைச் செலுத்தி அவர்களுடைய உணர்ச்சியையும் வலிமையையும் கெடுத்து எல்லோரையும் வென்றேன். ஆறுமுகன் அப்பொழுது ஒரு படையை விடுத்து மோகப் படையின் வலிமையை நீக்கினான். அது வருந்தி மீண்டது. அதனால், அவர்கள் மயக்கம் தீர்ந்து எழுந்து சென்றார்கள். இஃது என்ன வெற்றி! என்று ''நானும் திரும்பி வந்து

வெட்கப்பட்டு உன்னுடன் ஒன்றும் கூறவில்லை. நான் பெற்ற தெய்வப் படைக்கலங்களை எடுத்துக்கொண்டு மறுநாள் போருக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தேன். அதற்கு முன் நீ சேனைகளோடு புறப்பட்டுவிட்டாய் என்று கேள்விப் பட்டேன். அழியாத வரம்பெற்ற தந்தையே! நீ பகைவர் களோடு போர்புரிதற்கு ஒரு துணையையும் விரும்பவில்லை; அதனை நினைத்துப் போருக்குப் புறப்பட்ட நான் மீண்டு வந்து விட்டேன். இஃது என் செய்கை. நீ போருக்குச் செல்லும் பொழுது என்னுடனும், அமைச்சர்களுடனும் கலந்து ஆலோ சிக்கவில்லை. என்னையும் அழைத்துக் கூறினையில்லை. நீ போருக் குப் புறப்பட்டுவிட்டாய். இது பெருமையோ! நீ ஒரு பாலகனை யும் பூதகணங்களையும் எதிர்த்துப் போருக்குச் செல்லுதல் பொருந்துமா? கீர்த்தியிற் சிறந்த மேலோர் சிறியரோடு போர் செய்வதால் புகழ் பெறுர்; போனது போகட்டும். இன்றிரவு கழிந்தபின் யான் போய் எல்லோரையும் வெற்றி கொண்டு வருவேன். என்னை அனுப்புவாய். நான் சென்று பாலகனை வெல்வதையும், அவனைச் சூழ்ந்த படைகளை அழிப் பதையும், ஒற்றர்கள் மூலம் கேட்டு நீ மகிழ்ந்திருப்பாயாக. நான், ஆறுமுகனை வெற்றிகொள்ளேனுயின் இங்குத் திரும்பி வரமாட்டேன்; நீ எனக்கு அளிக்கும் அரசாட்சியையும் விரும்ப மாட்டேன்'' என்று சூளுரை கூறினன். சூரபன்மன் அவைக ளைக்கேட்டு மகிழ்ந்தான். பானுகோபனை நோக்கி, ''மைந்தனே! மும்மூர்த்திகளாலும் மற்றையோர்களாலும் வேற்படைதாங்கிய பாலகனை வெல்லுதல் அரிது. அவனை வெற்றிகொள்ள என்னை யன்றி வேறொருவராலும் முடியாது. அவனைச் சிறியன் என்று நினையாதே. அவன் ஒப்பற்ற வலிமை உடையவன். யானே சென்று அப்பாலகனை வெற்றி கொள்ளுகின்றேன். நீ நாளைய தினம் படைகளோடு சென்று வீரவாகுவைத் தனியே அழைத்து அவனோடு போர்புரிந்து வென்று வருவாயாக'' என்றான். பானுகோபன் சூரபன்மனைப் பார்த்து, ''தந்தையே! உனது திருவுளம் இதுவாயின் நீ விரும்பிய வண்ணம் செய்துமுடிப் பேன்'' என்றான். சூரபன்மன் மகிழ்ந்து பானுகோபனைப் போருக்குச் செல்லும்படி விடைகொடுத்தனுப்பி, இடையிலே தான் செய்த சூழ்ச்சிகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டுப்

பண்டுபோல் இன்புற்றிருந்தான். பானுகோபன் தந்தையின் ஆணை பெற்றுத் தன் கோயிலை அடைந்ததும், அவனிடத்துப் பல தூதுவர்கள் ஓடிவந்து வணங்கி, "அரசகுமாரனே! பூதப் படைகள், திரண்டுவந்து இந்நகரின் வடபாகத்தைக் காவல் செய்து நின்ற அதிகோரனையும் சேனைகளையும் அழித்து, அங்கு நின்ற கோபுரத்தைப் பிடுங்கிக் கடலில் எறிந்து வடதிசை மதிலையும் அழித்து மீண்டன" என்று கூறினார்கள்.

பிறகு பானுகோபன் தன் அயலில் நின்ற வீரர்களுட்சிலரை அழைத்து, "நம்முடைய அவுணத்தச்சனை விரைவில் அழைத்து வாருங்கள்" என்றான். அவர்கள் அவ்வாறே அவுணத்தச்சனை அழைத்துவந்து விடுத்தனர். பானுகோபன், அவுணத்தச்சனை நோக்கி, "நீ நமது நகரத்தின் வடக்கு மதிலையும், கோபுரத்தையும் பிறவற்றையும், முன்போலச் செய்குதி" என்று கட்டளையிட்டான். அதன்பின், **மாகாயன்** என்னும் வலிமை மிக்க அவுணனை அழைத்து, "நீ வடமதில் சிகரத்தில் போய்க் காவல் செய்துகொண்டிருப்பாய்" என்று கூறிப் பதினாயிரம் வெள்ளம் சேனைகளோடு அவனை அனுப்பினான். அவுணத்தச்சன் உடனே சென்று மனத்தால் நினைத்து அழிந்தவைகளைச் சிறப்புறச் செய்து முடித்தான். மாகாயன் நால்வகைச் சேனைகளோடு வடதிசை வாயிலை அடைந்து காவல்புரிந்துகொண்டிருந்தான். இரவு நீங்கியது; **கதிரவன் தோன்றினான்.**

திருவிருத்தம்–420
ஆகத் திருவிருத்தம்–876

——oo——

## 5. மூன்றுநாட் பானுகோபன் யுத்தப் படலம்

### பானுகோபன் மாயையை நினைத்து அழைத்தல்

பானுகோபன், சூரியோதயத்தில் தன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, தான் முன்னைய நாட் போரில் தோல்வியுற்ற சிறுமையை நினைத்து வருந்தி, மாயையைத் தன் முன்பு வரும்படி மனத்தினால் நினைத்துத் துதித்தான். மாயை பானுகோபன் முன்வந்து தோன்றி நின்றாள். பானுகோபன் அவளை

வணங்கி, "பாட்டி! நான் ஆறுமுகனின் தூதுவனோடு போரிட்டு மானத்தையும் வலிமையையும் இழந்தேன்; பழியும் எய்தினேன்" என்று கூறினான். மாயை அவனை நோக்கி, "நீ வேத வழியை விலக்கினாய்; தேவர்களைச் சிறையிட்டாய்; இந்திரனின் அரசுரிமையை அழித்தாய்; முனிவர்களின் தவத்தைக் கெடுத்தாய்; கொடுமைகளைச் செய்தாய்; முத்தேவர்களும் பிறரும் பகையெனில் நீ எவ்வாறு வாழ்வாய்? கொடுமைகளையே பெரிதும் நீ புரிதலால் பழியைப் பூண்டாய்; பகைவர்களோடு போரிட்டுத் தோற்றாய். விதியைக் கடந்தவர் யார்? இனிப் பலவற்றைப் பகர்வதால் பயன் ஏது? நீ வேண்டுவனவற்றைக் கேள்; அளிப்பேன்" என்றாள். பானுகோபன் அவற்றைக் கேட்டு மிக மகிழ்ந்து, "என்னோடு போர் செய்து வெற்றியடைந்த வீரவாகுவை இன்றைக்குத் தோற்கடிக்கத் தக்க ஒரு படைக்கலத்தைத் தருவாயாக" என்றான். மாயை அதனைக் கேட்டு, ஒரு மாயப் படைக்கலத்தை உண்டாக்கி அவன் கையிற் கொடுத்து, "இது வீரவாகுவைப் படைஞர்களோடும் கெடுத்துக் காற்றின் தொழிலைச் செய்யும் வல்லமை கொண்டது. இதனை மந்திரத்தோடு விடுவையாயின், இதனால் இற்றைநாள் வெற்றி நின்னுடையதாகும். நீ போருக்குச் செல்வாயாக" என்று கூறி மறைந்தாள்.

### பானுகோபன் போர்க்கோலம் பூணல்

மாயப் படைக்கலத்தைப்பெற்ற பானுகோபன் அம்பறாத் தூணியை முதுகில் கட்டி, கவசத்தை அணிந்து, வில்லேந்தி, போருக்குரிய மற்றைக் கருவிகளையும் புனைந்து, வாயுப்படை, அக்கினிப்படை, இயமப்படை, சந்திரப்படை, சூரியப்படை, பிரமப்படை, விஷ்ணுப்படை, சிவப்படை ஆகிய தெய்வப் படைகளை எடுத்துக்கொண்டு தேரேறிப் புறப்பட்டான். பதினாயிரம் வெள்ளம் குதிரைகளும், பதினாயிரம் வெள்ளம் யானைகளும், பதினாயிரம் வெள்ளம் தேர்களும், இருபதினாயிரம் வெள்ளம் காலாட்களும் ஆகிய நால்வகைப் படைகளும் அவனை வந்து சூழ்ந்தன. முரசு, துடி, குடமுழா முதலிய வாத்தியங்கள் ஒலித்தன. அவுண வீரர்கள் இடிபோல ஒலிசெய்து நெருங்கினார்கள்.

**பானுகோபன் தூது அனுப்புதல்**

பானுகோபன் நகரைவிட்டு நீங்கி மதிலின்புறத்தில் வந்தான். ஆயிரங் குதிரை முகங்களையுடைய ஒரு தூதுவனை நோக்கி, "நீ சிவகுமாரனின் பாசறைக்குச் சென்று வீரவாகுவைக் கண்டு, 'பானுகோபன் இன்றைய போரில் உனது உயிரைக் கவருவதாகச் சூளுரைத்து வந்துளான்; ஆதலால் விரைந்து வருகுதி; 'முன்னைநாட் போரென்று எண்ணற்க' என்ற வார்த்தைகளைக் கூறி மீள்வாய்" என்று கூறி அனுப்பினான். தூதுவன் நன்றென்று ஏமகூடம் என்னும் பாசறையை அடைந்தான்; வீரவாகு தேவரைக் கண்டு, "பானுகோபன் இற்றைக்கு உன் உயிரைக் கவரும்படி சபதங்கூறிப் போருக்கு வந்துள்ளான். இதனை உன்னிடஞ் சொல்லிவரும்படி என்னைத் தூது அனுப்பினான். நீ விரைந்து போருக்குப் புறப்படுவாயாக" என்றான். வீரவாகு தேவர் அதனைக் கேட்டுச் சிரித்து, "நான் பானுகோபனுடைய உயிரைக் கவருதற்கு இதோ வருகின்றேன்; நீ அவனிடம் போய்ச் சொல்வாயாக" என்றார். தூதுவன் அதனைக் கேட்டுக்கொண்டு மீண்டான்.

**வீரவாகுதேவர் புறப்படுதல்**

வீரவாகு தேவர் தம்முடைய தம்பியர்கள் படைத் தலைவர்கள் முதலியவர்களோடு முருகக் கடவுள் திருமுன் சென்று அவர் திருவடிகளை வணங்கி நின்றார். ஆறுமுகக் கடவுள், பானுகோபன் தூது அனுப்பியதை அறிந்து, "முன்னை நாளில் உனக்குத் தோற்றோடிய பானுகோபன் இற்றைக்கு உன்னோடு போர்புரிய வந்துளான். நீ முன்போல் சேனைத் தலைவர்களுடன் சென்று அவனை எதிர்த்துப் போர்புரிவாயாக. அவன் செலுத்தும் படைக்கலங்களுக்கு எதிராகிய படைக்கலங்களை விடுவாயாக. அவ்வஞ்சகன் மாயைபுரிந்தால் நம் வேற்படை விரைந்து வந்து அதனைப் போக்கும்; செல்வாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

**பூதப்படைகளும் அவுணப்படைகளும் போரிடுதல்**

வீரவாகு தேவர், குமாரக் கடவுளின் திருவடிகளை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, துணைவர்களும் படைத் தலைவர்

களும் தம்மைச் சூழத் தேரில் ஏறிப் புறப்பட்டார். ஆயிரம்
வெள்ளம் பூத சேனைகள் மரங்களையும், மலைகளையும், படைக்
கலங்களையுங் கொண்டு சூழ்ந்து ஆர்த்து வந்தன. இங்ஙனம்
வீரவாகு தேவர் தம் படைகளோடு போர்க்களத்தை அடைந்
தார். பூத சேனைகளும், அவுண சேனைகளும் போர் புரிந்தன.
அவுணர்கள் வேல், தோமரம், எழு, தண்டு முதலிய படைகளை
எய்தனர். பூதர்கள் முத்தலைச் சூலம், முசலம், மலை, மரம்,
முதலியவைகளை எறிந்தனர். அவுணர், வாட்படையினுல் பூதர்
களின் தலைகளையும் தோள்களையும் வெட்டியும், சுரிகை முதலிய
வற்ருல் குற்றியும், தண்டு முதலியவற்ருல் தாக்கியும் போர்
புரிந்தனர். பூத வீரர்கள் அவுண வீரர்களைப் பிடித்துக் கைகளி
னுல் அடித்தும், கழுத்தை ஒடித்தும், மிதித்து உருட்டியும்
போரிட்டனர்; குதிரைகளையும் வீரர்களையும் கைகளால் அள்ளி
அள்ளி யானைகளிலும் தேர்களிலும் அடித்தார்கள். ஊழித்தீயும்
கடல்களும் மாறுபட்டுப் போரிடுவதைப்போன்று, அவுணர்
களும் பூதர்களும் போரிட்டனர். இரத்த நீர் யாண்டும் பாய்ந்
தது. ஊனை விரும்பும் பறவைகள் மொய்த்தன. பூதர்கள் சில
ரும் அவுணர்கள் பலரும் இறந்தார்கள். இலக்கத்தெண்மர்
கணைகளினுல் அவுணக் கடல்களைக் கலக்கினுர்கள். பல அவுண
சேனைகள் இறந்தன. இறவாதொழிந்த அவுணர்கள் தோற்று
ஓடினுர்கள். அதனைக் கண்ட பானுகோபன் ஒரு பெரிய வில்லை
எடுத்துக் கொண்டு பூதப்படைகளை வந்து எதிர்த்தான்.

**பானுகோபனேடு வீரவாகுதேவர் போரிடுதல்**

பானுகோபன் பூத சேனைகளை நெருங்கிவருவதை, வீரவாகு
தேவர் கண்டார்; துணைவர்களோடு விரைந்து அவன் எதிரே
போய் வில்லை எடுத்தார். பானுகோபன் வீரவாகுவை எதிர்த்து
வில்லை வளைத்து நாணெலி செய்தான். அண்டங்கள் வெடித்தன;
தேவர்கள் தலையை அசைத்தனர். வீரவாகு தேவர் பலகோடி
இடியேறுகள் ஒன்ருய்ச் சேர்ந்து முழங்கினுற்போல் நாணெலி
செய்தார். பானுகோபன் சினந்து பல பிறைமுகக் கணைகளை
விடுத்தான். வீரவாகு தேவர் எண்ணற்ற கணைகளைச் சொரிந்
தார். அவ்விருவருடைய கணைகளும் ஒன்றனையொன்று எதிர்த்
துக் கவ்விக் கீழே விழுந்தன. பானுகோபனும் வீரவாகுவும்

எங்கும் திரிந்து போரிலடாயினர். பானுகோபன் வீரவாகு தேவரின் மார்பில் ஆயிரங் கணைகளை எய்தான். வீரவாகு தேவர் ஆயிரங் கணைகள் எய்து பானுகோபனின் தேர்ப்பாகனை யும், குதிரைகளையும், தேரையும் ஒருங்கே அழித்தார். பானு கோபன் வேறொரு தேர்மேல் ஏறிப் போரிட்டான். அதற்குமுன் வீரவாகு தேவர் ஆயிரங் கணைகளால் அவன் மார்பைப் பிளந் தார். அவன் நடுங்கித் துயருற்றான். அதனைக் கண்ட பூதர்கள் ஆரவாரஞ் செய்தார்கள். பானுகோபன் காதுகளில் நஞ்சுபோல அவ்வொலி பாய்ந்தது. அவன் பொருமிக் கோபித்து, வருணப்படைக் கலத்தை எடுத்து வில்லில் பூட்டி, "நீ சென்று பூதப்படைகளையும், துணைவர்களையும், தூதுவனை யும் கொல்லுக" என்று விடுத்தான். அஃது ஊழிக் காலத்துக் கடல்போல மிகுதியாகப் பரவி இடியொலி செய்து விண்ணு லகத்தைத் தடவி விரைந்து சென்றது. அதனைக் கண்ட தேவர் கள் நடுங்கினர். பூதர்கள் கலங்கி நின்றார்கள். துணைவர்கள் நிலை குலைந்தார்கள். வீரவாகு தேவர், அதனைக் கண்டு அக்கினிப் படையைச் செலுத்தினார். புகையும், பொறியும், வெம்மையும் மிக எழுந்து வானமும் திசையுஞ் செறிந்தன; அண்டங்கள் வெடித்தன. கங்கை வற்றியது; கடல்கள் சுருங்கின; மலைகள் பொடியாயின; நிலம் பிளந்தது. இவ்வாறு அக்கினிப்படை சென்று வருணப்படையை விழுங்கிப் பானுகோபனைச் சூழ்ந் தது. உடனே பானுகோபன் வாயுப்படையை எறிந்தான். அஃது அக்கினிப்படையைக் கெடுத்துப் பூதப்படைகளைக் கொல்ல வந்தது. வீரவாகு தேவர் நாகப்படையைச் செலுத்தி னார். அஃது அளவில்லாத பாம்புகளின் தொகுதியாய்ச் சென்று, நஞ்சையும் நெருப்பையும் உமிழ்ந்து வாயுப்படையினை உண்டு விட்டுப் பானுகோபன்மீது சென்றது. அவன் கருடப்படைக் கலத்தை விடுத்தான். கருடப்படை வீரவாகு தேவருக்கு எதிரில் வந்தது. வீரவாகு தேவர் கோபமுற்று நந்திப்படையைச் செலுத்தினார். நந்திப்படை அளவிறந்த இடபங்களின் உருவங் களைக் கொண்டு பெருமூச்சுவிட்டு அண்டங்கள் அதிர ஆரவா ரம் செய்து தன்முன் வந்த கருடப் படையை விழுங்கி, பானு கோபன்முன் சென்றது. பானுகோபன் இயமப் படையைச் செலுத்தினான். நந்திப்படை அதனையும் அழித்தது. அதன்

ஆற்றலைப் பானுகோபன் கண்டு நான்முகப் படையை விடுத்தான். அது வெகுண்டு விண்வழியே சென்றது; நந்திப் படையைக் கண்டு, "நான் பானுகோபனுடைய ஏவலினுல் வந்தேன். என்மேல் சினங்கொள்ளாதே" என்று வணங்கித் திரும்பியது. பானுகோபன் திருமால் படையைச் செலுத்தினுன். அது நந்திப் படையோடு போர்புரிந்து நின்றது. அதனை வீரவாகு தேவர் கண்டு வீரபத்திரப்படையை எடுத்து வழிபாடு செய்து விடுத்தார். அது செல்லுதலும் நந்திப்படையோடு போர் செய்த திருமால் படையை அழித்தது. பானுகோபன் அதனைக் கண்டு சிவப் படைக்கலத்தை எடுத்து மனத்தால் வழிபாடு செய்து விடுத்தான். உடனே வீரவாகு தேவர் தாமும் சிவப் படைக்கலத்தை அன்பினேடு மனத்தால் பூசித்து விடுத்தார். இரு சிவப் படைக்கலங்களும் போர்புரியத் தொடங்கின; ஊழிக் காற்றையும் ஊழித் தீயையும் உமிழ்ந்தன; புகையையும் நஞ்சையும் கக்கின; பூதத் தொகைகளையும், காளித்தொகைகளையும், வைரவர் கூட்டங்களையும், வீர இலட்சுமிகளையும் உண்டாக்கின. பேய்க் கூட்டங்களையும், இருட்டையும், மாயைகளையும், காலர்களையும் ஒவ்வொரு பக்கத்திலும் வெளிப்படுத்தின. அளவில்லாத கடல்களையும், முகிற் கூட்டங்களையும், பாம்புக் கூட்டங்களையும் வெளிப்படுத்தின; மேலும் ஐயனுர் முதலிய பல படைகளையும் உண்டாக்கின; பல கோடி யானை முகத்தர்களையும் பலகோடி சிங்க முகத்தர்களையும் தந்தன; யானை, குதிரை, தேர், விமானம், சிங்கம், யாளி முதலியவற்றில் ஏறிப் பல படைக்கலங்களைச் செலுத்திக்கொண்டு வரும்படி பற்பல உருத்திர கணங்களை உண்டாக்கின; கற்களையும், கொள்ளிகளையும், இடிகளையும், மழு, சக்கரம், வேல், கணை ஆகிய படைகளையும் பொழிந்தன.

இரு சிவப்படைகளும் இவ்வாருகப் போர்புரிந்தன. போரின் கொடுமையால் ஏழு கடல்களும், தேவ கங்கையும், புறக்கடலும் வற்றின. உயிர்கள் யாவும் துடிதுடித்திறந்தன. பூமி எரிந்தது. வானுலகம் இடிந்தது. மேருமலை பொரிந்தது. நட்சத்திரக் கூட்டங்கள் தூளாயின. சூரியர்களுடைய தேர்கள் எரிந்தன. எல்லா அண்டங்களிலும் புகைமிர்ந்தது. சூறைக்காற்றுகள் உலைந்தன. அண்டச்சுவர்கள் குலுங்கின. தேவர்கள் ஓடினர்கள். பூதேவி

யும் சீதேவியும் பயந்து திருமாலைத் தழுவினர். சரசுவதியும், காயத்திரியும், சாவித்திரியும் வெருவி ஓடி நான்முகனைத் தழுவிக் கொண்டார்கள். பூதவீரர்களும், இலட்ச வீரர்களும் துணைவர்கள் எண்மரும் மயங்கி வீரவாகுதேவரை வந்து சூழ்ந்தார்கள். அவுணர்கள் யாவரும் புரண்டனர். யானைகளும் குதிரைகளும் உருண்டன. பானுகோபன் ஒருவனே பிழைத்து நின்றான். மகேந்திரபுரியிலிருந்த அவுணர்கள் யாவரும் 'பதினான்கு உலகங்களும் அழியும் ஊழிக்காலம் இதுவோ?' என்று அஞ்சி நடுங்கினார்கள். "இவ்வாறு நிகழ்வதற்குக் காரணம் யாது என்று அறிந்துவாருங்கள்" என்று சூரபன்மன் தூதுவர்களை அனுப்பினான். அத்தூதுவர் செல்லுமுன் சில தூதுவர் போர் நிகழ்ந்ததை அறிந்து, மனம் நடுங்கிச் சூரபன்மனிடம் போய், "அரசர்க்கரசே! பானுகோபன் வீரவாகுவோடு போர் செய்து, தெய்வப் படைக்கலங்களை விடுத்தான். பிறகு, சிவப் படைக்கலத்தை விடுத்தான். வீரவாகுவும் சிவப்படைக்கலத்தைவிட அவ்விரண்டு படைக்கலங்களும் பல உருவங்களைக்கொண்டு யாவரும் நடுநடுங்கும்படி போர் செய்தன" என்றனர். சூரபன்மன் அதனைக் கேட்டு, "பானுகோபன் சிவப் படைக்கலத்தைச் செலுத்தியும் இன்னும் வீரவாகுவை வெற்றிகொள்ளவில்லை. அவனை நாம் சிறியவனாக நினைத்தோம். அந்தோ! ஒருவருடைய உருவத்தைக் கண்டு மதிக்காது அவர் வலிமையைக்கொண்டு மதிப்பதே அறிவுடைமையாகும்" என்று கூறினான். சிவப் படைக்கலங்களிரண்டும் தம்மை விடுத்த வீரவாகு தேவரும் பானுகோபனும் காணும்படி போர் செய்து பின்னர், தாம் உண்டாக்கிய உருவங்களெல்லாவற்றையும் ஒடுக்கி, தம்மால் மாறுபட்ட அண்டங்கள், வானுலகங்கள், கடல்கள், மலைகள் எல்லாவற்றையும் முன்போலச் செய்து, தம்மைச் செலுத்தியவர்களிடமே மீண்டு வந்தன.

**பானுகோபன் விண்ணில் மறைந்து நிற்றல்**

இப்போர் நிகழ்ச்சிகளைக் கண்ணுற்ற தேவர்கள், 'வீரவாகு தேவரால் பானுகோபன் இறப்பான்' என்று துணிந்து மகிழ்ந்தனர். பானுகோபன் தன் அருகிலிருந்த நால்வகைச் சேனைகள் யாவும் அழிந்துவிட்டதைக் கண்டான். தான் தனித்து நிற்பதை

எண்ணி ஏங்கினுன். "சிவப் படைக்கலமும் வீரவாகுவிடம் சென்று மீண்டது என்ருல் இனிச் செலுத்த வேறு படைக்கலம் உண்டோ? என்செய்வேன்! என் சேனைகள் யாவும் இறந்தன. நான் தனித்து நிற்கிறேன். இங்கே நான் நின்ருல் இறக்க நேரிடும். ஆதலால், போர் செய்வதும் தகுதியன்று" என்று அஞ்சி, ஒரு சூழ்ச்சியை மனத்தில் கருதி, மாயத்தால் தன் உருவத்தை மறைத்து விரைந்து விண் வழியே சென்ருன். அதனைக் கண்ட பூதப்படைகள், "பானுகோபன் பயந்து ஓடினுன்" என்று ஆரவாரஞ் செய்தன. அப்பொழுது **கதிரவனும் மேற்றிசைக் கடலில் மறைந்தான்.** வீரவாகு தேவர், பானுகோபன் மறைந்ததைக் கண்டு, "பானுகோபன் இன்றைக்கும் இறந்திலன்; விரைந்தோடித் தப்பினுன். மேற்கொண்டு என்ன செய்யலாம்? சொல்லுங்கள்" என்று தம் துணைவர்களைக் கேட்டார். அவர்கள் வீரவாகுவை வணங்கி, "எதிர்த்து நின்ற அவுண சேனைகள் எல்லாம் இறந்தன. பானுகோபன் தனித்தவனுய் மறைந்தோடிப் போனுன். இனி, போருக்கு வரும் வீரரில்லை. மாலைக் காலமும் அணுகியது. நாம் அனைவரும் திரும்பிப் பாசறைக்குச் சென்று எம்பெருமானை வணங்கி நாளைக்கு வருவதே முறை" என்றனர். தம் இளவல்கள் கூறியதைக் கேட்ட வீரவாகு தேவர் ஆறுமுகக் கடவுளின் திருவடிகளைச் சென்று தரிசிக்க எண்ணினுர்.

**பானுகோபன் மாயப் படையை விடுத்தல்**

விண்ணில் மறைந்து நின்ற பானுகோபன், "நேற்று நான் வீரவாகுவுக்குத் தோற்றேன். இன்றைக்கும் தோற்ருேடினுல் என்னை யாவரும் இகழ்வர். போரில் புறங்கொண்டோடுபவரைத் துணைவர்கள், தாய், தந்தையர், மனைவி, மக்கள் ஆகிய இவர்களும் புறக்கணிப்பார்கள் என்ருல் பிறர் இகழ்தலைப் பற்றிக் கேட்கவேண்டுமோ? நான் இன்றைக்கும் இவனுக்குத் தோற்று ஓடினுல் என் தந்தையாகிய சூரபன்மன் கோபிப்பான்; கதிரவனைச் சிறை செய்த என் புகழும் மங்கும்; எந்தையின் புகழ்களும் அழியும். பகைவரை எதிர்த்து நின்று போர் செய்து வெல்லுதலே வலிமை. வஞ்சனையில் வெல்லுதல் நீதியன்று, பகைவரை வெல்ல முடியாதாயின் தாம் இறத்தலே தகுதியாகும்.

அதுவன்றிப் புறங்கொடுத்து ஓடுதல் நன்றன்று. 'இவன் எதிர்த்து நின்று போர் செய்து வருந்தி இன்றைக்கும் தோற் ரேடினன்' என்னும் பழியடைதல் கூடாது. சூழ்ச்சியை யேனும் செய்து பகைவர்களை வெல்லுதல் வேண்டும். இவனுக் கெதிரே நின்று போர் செய்தலினல் ஒன்றும் பயனுண்டாக மாட்டாது. மாயத்தால் மறைந்து நின்று இவனை வெற்றி கொண்டு மீளுதல் வேண்டும். தெய்வப் படைக்கலங்களைச் செலுத்தினல் அவையெல்லாம் இவர்களைக் கொல்வதில்லை. நான் தெய்வப் படைக்கலங்களை விடுத்தால் வீரவாகு மாற்றுப் படைகளால் அவற்றை அழித்துவிடுவான். நான் விண்ணில் மறைந்து நிற்பதும் வெளிப்பட்டுவிடும். வெளிப்பட்டால் பகைவர்கள் இங்கும் வந்து சூழ்ந்து என்னேடு போர் செய்வர். நான் இவர் களோடு போர் செய்து இளைத்தேன். ஆதலால், இன்னும் இவர்களோடு நின்று போர் செய்ய முடியாது. ஒளிந்தோடவும் இயலாது. ஆதலால், இவர்களுடைய அறிவைக் கெடுத்து அழிவைச் செய்கின்ற மாயப் படையை விடுதலே ஏற்றதாகும்'' என்று துணிந்தான். அற்றை நாளில் மாயை கொடுத்த மாயப் படையை விரைந்து எடுத்து வழிபட்டு அதனை நோக்கி, "நீ செல்லும்பொழுது ஒலி, உணர்ச்சி, உருவம் என்னும் மூன்றி னலும் மனத்தினலும் யாவரும் அறியாவண்ணம் நம் பகைவ ரிடத்திற்குச் சென்று, அவர்களின் அறிவைக் கெடுத்து, உயிரை ஒழித்து நன்னீர்க் கடலில் எறிவாய்'' என்று கூறி விடுத்தான்.

பானுகோபன் விண்ணில் நின்று செலுத்திய மாயப் படை, ஒருவரும் அறியாவண்ணம் பூமியை வந்தடைந்தது; பூதப்படை களையும், தலைவர்களையும், இலக்கம் வீரர்களையும், எண்மரையும் வீரவாகு தேவரையும் ஒருங்கே சூழ்ந்து உணர்வைக் கெடுத்தது. அதனல், யாவரும் மயங்கி வீழ்ந்தார்கள். அவர்களுடைய உயிரைக் கவர மாயப் படையால் முடியவில்லை. அப்படைக் கலம் ஊழிக்காற்றின் வடிவத்தைக்கொண்டு வீரவாகு தேவர் முதலிய அனைவரையும் விண் வழியாக எடுத்துக்கொண்டு விரைந்துபோய் ஆறு கடல்களையும் தாண்டி நன்னீர்க் கடலில் இட்டுத் தானும் அங்கேயே காத்திருந்தது. விண்ணில் மறைந்து நின்ற பானுகோபன் இச்செயலைக் கண்டு, "வீரவாகுவும், பூதர்களும், மற்றையோரும் இறந்தார்கள். இவர்கள் கடலில்

ஆழ்ந்தார்கள் ; மீண்டு வரமுடியாது. நம்முடைய சூழ்ச்சி நன்று " என்று எண்ணித் தனக்குள்ளே மகிழ்வடைந்தான்.

**பானுகோபன் சூரபன்மனை அடைதல்**

பானுகோபன் அவ்விடத்தைவிட்டு நீங்கி விரைந்து விண் வழியாக வீரமகேந்திரபுரியை அடைந்தான். தன் தந்தையாகிய சூரபன்மனைக் கண்டு வணங்கி நின்று, "யான் இன்றைக்குப் பலதிறப்பட்ட போர்களைச் செய்தேன்; வீரவாகுவையும் அவன் இளவல்கள் முதலாயினோரையும், ஆயிரம் வெள்ளம் பூதப்படை களையும் வென்று உயிரைப் பருகி அவர்களுடைய உடலை நன் னீர்க் கடலில் இட்டேன். தந்தையே ! நீ சிறிதும் கவலை கொள்ளாதே ! படைகளோடு நாளைக்குச் சென்று பாசறையை அழித்து ஆறுமுகனை வெல்லுவேன்; திருமால், நான்முகன், இந்திரன் முதலியவர்களைச் சிறைபிடித்துக் கொண்டுவந்து உன் முன்னே நிறுத்துவேன் " என்று கூறினன்.

**சூரபன்மன் பானுகோபனைப் பாராட்டுதல்**

பானுகோபன் கூறியதைக்கேட்ட சூரபன்மன் மட்டற்ற மகிழ்ச்சிகொண்டான். மகிழ்ச்சிப்பெருக்கால் அவன் தோள்கள் உயர்ந்தன; கடகங்கள் நெரிந்து வீழ்ந்தன; உரோமங்கள் பொடித் தன. சிரிப்பு உண்டாகியது. அவன் தன்னுடைய இருக்கையை விட்டு எழுந்தான். தன் எதிரில் நிற்கும் பானுகோபனை மார் போடு இறுகத் தழுவிக்கொண்டான். " தன்னுடைய அரியணை யில் உடனிருத்திக்கொண்டு, "என் அப்பனே ! நீ வந்து நம் பழைய குலாசாரத்தைப் பாதுகாத்தாய். நானும் என் மனத்தில் கவலையின்றி மகிழ்ச்சிகொண்டேன். நான் அந்நாளில் செய்த தவத்தால், அரசையும் செல்வங்களையும் சிவபெருமான் கொடுத் தார் என்று முன்னர்க் கூறியதுண்டு. ஆனல், நீ இன்று அவற்றைத் தர நான் பெற்றேன் " என்று அவனுக்குப் பற்பல உபசார மொழிகளைக் கூறினன். புத்தாடைகளும் ஆபரணங் களும் வருவித்தான். பானுகோபன் அணிந்திருந்தனவற்றைக் களைந்து புதியனவாகத் தருவித்தவற்றைத் தன் கையினலேயே அணிந்து மகிழ்ந்தான். பிறகு பானுகோபனை நோக்கி,"மகனே ! நீ முன் கூறியவாறு நாளை காலையில் சென்று ஆறுமுகனை வென்று

அவன் பூதப்படைகளைக் கொன்று தேவர்களைச் சிறையிட்டு என் பகைமையை முடிப்பாயாக" என்றான். பானுகோபன் அவ்வாறே செய்வதாகக் கூற, சூரபன்மன் தன் மைந்தனை மாளிகைக்கு அனுப்பிவைத்து மகிழ்ந்திருந்தான். பானுகோபனும் தன்னுடைய அரண்மனையை அடைந்து அளவில்லாத மகிழ்ச்சியோடிருந்தான்.

**முருகக்கடவுள் வேற்படையால் அனைவரையும் மீட்டல்**

பானுகோபனின் மாயப் படையால் வீரவாகு தேவரும் மற்றையோர்களும் மயங்கி நன்னீர்க் கடலில் கிடப்பதைத் தேவர்கள் கண்டு பெருமூச்சுவிட்டார்கள்; மெய்குலைந்தார்கள்; மனம் பதைபதைத்துக் கண்ணீர்விட்டு அடங்காத துயரத்தோடு அழுதார்கள்; ஆறுமுகக் கடவுளிடம் ஓடினர். நாரத முனிவர் இவையெல்லாவற்றையும் பார்த்துத் தேவர்களுக்கு முன்னே விரைந்தோடினார். பாசறையில் வீற்றிருக்கும் குமாரக்கடவுளின் திருவடிகளை வணங்கித் துதித்து நின்று, "எம்பெருமானே! பானுகோபன், ஒரு சூழ்ச்சியால் மறைந்துநின்று மாயப் படையை விடுத்து வீரவாகு தேவரையும், துணைவர்களையும், மற்றையோரையும் மயக்கி அப்படையைக் கொண்டு நன்னீர்க் கடலில் இடுவித்தான்" என்று விண்ணப்பம் செய்தார். அப்பொழுது தேவர்களும் அங்ஙனமே தனித்தனியே சென்று ஆறுமுகக் கடவுளை வணங்கி முறையிட்டுக் கொண்டார்கள். ஆறுமுகக் கடவுள் அவ்வார்த்தைகளைத் திருச்செவி கொடுத்துக் கேட்டருளினார். தமது வேற்படையை நோக்கி, "நீ நன்னீர்க் கடலுக்குப் போய் அங்கிருக்கின்ற மாயப்படையை அழித்து வீரவாகு முதலியவர்களின் மயக்கத்தைத் தீர்த்து அவர்களை இங்கே விரைந்து அழைத்து வருவாயாக" என்று பணித்து விடுத்தருளினார்.

கங்கை அன்னதோர் வாலிதா கியபுனற் கடற்போய்
அங்கண் வைகிய மாயமாப் படையினை அழித்து
வெங்கண் வீரர்மால் அகற்றியே அனையவர் விரைவில்
இங்கு வந்திடத் தந்துநீ செல்கென இசைத்தான்.

வேற்படை நன்றென்று அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப் பாம்புகளையும், விடத்தையும், கூற்றுவர்களையும், இடிகளை

யும், புகையையும், அக்கினியையும், பலவகைப் படைக்கலங்களையும் உமிழ்ந்துகொண்டு தேவர்கள் துதிக்க விரைந்து சென்றது; ஆறுகளையும் கடல்களையும் தாண்டி, நன்னீர்க்கடலை அடைந்தது.

அப்போது வேற்படையைக் கண்ட மாயப்படை அஞ்சி வீரவாகு தேவர் முதலியவர்களிடமிருந்து நீங்கித் தன் வலிமை கெட்டு அழிந்தது. அச்சமயம் கடல் அரசன் உடல் வியர்க்க, வேற்படையை வணங்கி, ''வலிமைமிக்க பானுகோபன் நம் வீரர்களையும் கணநாதர்களையும் அறிவழியச் செய்து என்னிடம் சேர்த்தான். மாயப் படைக்கலம் அவன் பணியைச் செய்து கொண்டு என்னிடம் இருந்தது. மாயப்படையின் வலிமையை அழிக்க யான் வன்மை பெற்றேன் அல்லேன். 'இவர்கள் எப்பொழுது எழுவார்களோ' என்று மனக்கவலையோடு அடியேனும் புலம்பிக் கொண்டிருந்தேன். 'சிவகுமாரர் அவுணர்களையெல்லாம் ஓர் இமைப்பொழுதில் அழிக்க வல்லவர். ஆனல், அவர் அங்ஙனம் அழிக்காது போர் புரியக் கருதியது ஒரு திருவிளையாடலாகும்' என்று நினைத்துக் கொண்டிருந்தேன். 'பூதவெள்ளங்களோடு அனுப்பிய வீரர்களைப் பானுகோபன் வருந்தச் செய்வது எம்பெருமானின் திருவுள்ளம் போலும்' என்று எண்ணி வருந்தினேன். 'முருகக்கடவுள் அசுரர்களை அழித்த பிறகு நான் உய்வேன்' என்று எண்ணியிருந்தேன். பேதையேன் ஒரு பிழையும் செய்திலேன். அடியேன்மேல் கோபம் கொள்ளாதிருப்பீராக' என்று விண்ணப்பம் செய்தான். வேற்படை கடலரசனை நோக்கி, ''நீ வருந்தாதே'' என்று அருளிச் செய்துவிட்டு, கடலில் ஆழ்ந்து கிடக்கும் வீரர்களை அடைந்தது. அறிவைக் கெடுத்த மாயப் படைக்கலம் உடனே நீங்கியது. அறிவு அழியப்பெற்றுக் கடலில் அமிழ்ந்துகிடந்த யாவரும் முன்னை அறிவு வரப்பெற்று எழுந்து கடலுக்கு மேலே வந்து ஆறுமுகக் கடவுளைத் துதித்தார்கள். பானுகோபனுடைய மாயம் அழிந்தது. உலகம் மகிழ்ந்தது. முனிவர்களும் தேவர்களும் பூமாரி பொழிந்தார்கள்.

அறிஞரில் அறிஞராகிய வீரவாகு தேவர் முதலியோர், வானின் வழியாக வரும் வேற்படையைத் தரிசித்து மகிழ்வுற்றுப் பலமுறை வணங்கித் துதித்து, நடந்தன யாவும் அறிந்து, ''வேற்

படைப் பெருமானே! ஆறு திருமுகம் உடைமை, பேரொளி கொண்டமை முதலிய காரணங்களால் உம்மையே கந்தசுவாமி யென எண்ணித் தரிசித்து மனக்கவலை நீங்கினேம். மாயப்படையினல் அறிவிழந்த நாங்களெல்லாம் படைக்கலங்களுக்கு நாயக மாகிய உம்மால் உணர்வும் உயிரும் பெற்று உய்ந்தோம். அன்று கிரவுஞ்சமலையில் தாரகாசுரன் எங்களை வீழ்த்தி வருத்திய பொழுது வந்து அருள் செய்தீர். இன்றும் வந்து எங்களை ஆண்டுகொண்டு அருள்புரிந்தீர். அதனல், நாங்கள் உய்ந்தோம். உமக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்வோம்!'' என்று கூறினர். வேற்படை அவற்றைக் கேட்டு, ''நீங்கள் அறிவிழந் தமையைக் கேட்ட குமாரக்கடவுள் என்னை இங்கே அனுப்பி யருளினர். ஆதலால் வந்தேன். யான் வருதலை அறிந்து மாயப்படை அழிந்தது. நீவிர் யாவரும் திரும்பி வருவீராக'' என்று கூறியது. வீரவாகுதேவர் நன்றென்று வணங்கி, மகிழ்ச்சியுடன் துணைவர்களும் படைத்தலைவர் முதலாயி னேரும் தம்மைச் சூழ, அவ்வேற்படைக்குப் பின்னே சென்றனர். வேற்படை ஆறுமுகக் கடவுளின் திருக்கரத்தில் வந்து வீற்றி ருந்தது.

திருவிருத்தம்–216
ஆகத் திருவிருத்தம்–1092

—oo—

## 6. நகர் புகு படலம் *

### வீரவாகு தேவரின் சூளுரை

வீரவாகுதேவர் தம் இளவல்கள் முதலியவர்களோடு வேற் படையைப் பின்தொடர்ந்து சென்றூர். மகேந்திரபுரியைக் கண்ட தும் அவருக்கு மிகுந்த சினம் உண்டாகியது. ''வஞ்சகமாகப் போர் செய்து மாயப் படையால் நம்மை வென்று ஓடிப்போன பானுகோபனைக் கொன்ற பிறகே ஆறுமுகக் கடவுளின் திருவடி களைத் தரிசிப்பேன். யான் மகேந்திரபுரிக்குள் புகுந்து அதனை அழிப்பேன்! பானுகோபன் வந்து எதிர்த்தால் அவனைக் கொல் வேன்! அவனைக் கொல்லாவிடில் யான் உயிர் வாழ விரும்பேன்!

* இது மூன்று நாட் பிற்பகல் நிகழ்ச்சி.

யான் பிறந்தவனும் அல்லேன்; என் வில்லோடு யான் நெருப்பிற் புகுவேன்" என்று வீரவாகு தேவர் சூளுரை பகர்ந்தார்.

நன்னகர் அழிப்பன் இன்று ;
நண்ணலன் மதலை நேரின்
அன்னவன் தனையும் யானே
அடுவனால்; அடுகி லேனேல்
பின்னுயிர் வாழ்க்கை வேண்டேன் ;
யான்பிறந் தேனும் அல்லேன் ;
என்னொரு சிலையும் யானும்
எரியிடைப் புகுவன் என்றான்.

துணைவர்களும் பிறரும் வீரவாகு தேவர் கூறியவண்ணம் மகேந்திரத்தை அழிக்க உறுதிகொண்டார்கள். வீரவாகு தேவர், அவர்கள் எல்லோரையும் அழைத்துக்கொண்டு ஓர் இமைப் பொழுதில் மகேந்திரபுரியின் மேற்கு வாயிலை அடைந்தார். பூதப்படைகள் கடல் உடைந்தாற்போல ஆரவாரஞ் செய்தன. அதனைக் கேட்ட அவுணர்களுள் சிலர், 'இஃது என்ன ஒலி' என்று வானை நோக்கினர். சிலர் மனம் பதைத்தார்கள்; சிலர் உடல் வியர்த்தார்கள்; சிலர் கோபம் கொண்டார்கள்

**புலிமுகன்-சிங்கர்**

அப்போது, மேற்கு வாயிலைப் **புலிமுகன்** என்பவன் காவல் புரிந்துகொண்டிருந்தான். புலிமுகன் மாயவளிடத்தில் தோன்றியவன்; தன் கட்டளையை மீறிய கூற்றுவனின் முத்தலைச் சூலத்தையும், வருணனின் பாசத்தையும் பறித்து அவர்களைச் சிறைசெய்தவன் ; தீச்சுடர்போன்ற உடலை உடையவன். நால்வகைப் படைகளும் அவனைச் சூழ்ந்திருந்தன. பூதப்படைகள் ஆரவாரஞ் செய்துகொண்டு அங்கு வந்ததைக் கண்டு, அவன் சினந்து எழுந்து அவர்களை எதிர்த்தான். பூதர்கள் மலைகளையும், மரங்களையும், தண்டு முதலிய படைகளையும் வீசிப் போரிட்டார்கள். அவுணர்கள் அம்பு, வேல், மழு முதலாகிய படைகளைச் சொரிந்து போர் செய்தார்கள். போரில், அவுணர்களிலும் பூதர்களிலும் பலர் அழிந்தனர். இரத்தம் ஆறுபோலப் பெருகி ஓடியது. பூதப் படைத் தலைவர்கள் தேர்களையும், குதிரைகளையும், யானைகளையும் தூக்கி ஒன்றின்மேல் ஒன்றை வீசி யடித்து அழித்

தார்கள்; அவுணர்களின் மூளைகளை உடைத்து எறிந்தார்கள். சேனைகளெல்லாம் அழிந்ததைப் புலிமுகன் கண்டான்; ஒரு சூலப் படையை எடுத்துப் பூதப்படைகளுக்கு எதிரே சென்றான். பூதர்கள் மலையைப் பிடுங்கி அவன்மேல் எறிந்தார்கள். புலிமுகன் சூலப் படையால் அவற்றையெல்லாம் பல துண்டமாக்கி ஆர வாரித்தான். **சிங்கர்** என்னும் பூதப் படைத் தலைவர் ஒரு முத்தலைச் சூலத்தை ஏந்தி அவனுக்கு முன்சென்று உரப்பினர். புலிமுகன், தன் முத்தலைச் சூலத்தினால் அவர் மார்பில் குத்தினான். அவரும் புலிமுகன் மார்பில் முத்தலைச் சூலத்தினால் குத்தினார். சூலங்கள் இருவருடைய மார்புகளையும் பிளந்து கொண்டு முதுகிற் புறப்பட்டன. இருவருடைய உடல்களிலும் குருதி பெருகியது. இருவரும் அச்சூலங்களை மற்றை அவயவங்களிலும் குத்திப் போரிட்டனர். சூலங்கள் இரண்டும் ஒடிந்து வீழ்ந்தன. அவர்கள் இருவரும் மற்போர் செய்தனர். புலிமுகன் இளைத்து வீழ்ந்தான். சிங்கர் அவனை காலினால் உதைத்து உருட்டிக் கொன்றார். தேவர்கள் சிங்கர்மீது பூ மழை பொழிந்தனர். வீரவாகு தேவர் அதனைக் கண்டு மகிழ்ந்தார்.

### வீரமகேந்திரபுரி அழிதல்

அப்பொழுது பூதர்கள் மேற்றிசை மதிலைக் கால்களினால் உதைத்தார்கள்; சிகரங்களைப் பறித்து மகேந்திரபுரிக்குள் வீசினார்கள்; வீதிகளில் நின்ற அவுணர்களை அழித்தனர். வீரவாகு தேவருடைய துணைவர்கள் யானைகளும், குதிரைகளும், தேர்களும், அவுணர்களும், மாளிகைகள் சிகரங்கள் முதலாயினவும் அழியும்படி கோடாகோடி கணைகளைச் செலுத்திச் சென்றார்கள். வீரவாகு தேவர் அக்கினிப் படைக்கலத்தையும் வாயுப் படைக்கலத்தையும் ஏவினார். அவை ஊழிக்காலத்தில் எடுக்கும் உருவங்களை எடுத்து நகர முழுவதையும் கொளுத்தி அவுணர்கள் சிதறி ஓடும்படி சுட்டன. சில இடங்கள் எரிந்தன. சில இடங்கள் புகைந்தன. சிவபெருமானின் திருப்புன்முறுவலால் முப்புரம் எரிந்தாற்போல வீரமகேந்திரபுரி எரிந்து அழிந்தது.

### நகர் அழிந்ததைச் சூரபன்மன் அறிதல்

சூரபன்மனின் கோயிலுள் ஒற்றர்கள் சென்று அவனை வணங்கி, "உன் குமாரனாகிய பானுகோபன், வீரவாகு முதலி

யோரை மாயப் படையைச் செலுத்தி, அவர்கள் அறிவை அழியச்செய்து நன்னீர்க் கடலில் அமிழ்த்தினன். அதனை நீயும் உணர்வாய். நாரத முனிவர் பாசறைக்குச் சென்று இந்நிகழ்ச்சிகளைச் சிவகுமாரனுக்குச் சொன்னர்; சிவகுமாரர் வேற்படையைச் செலுத்தி மாயப் படைக்கலத்தை அழித்தார். வீரவாகு முதலிய அனைவரும் அறிவு மீண்டுவரப்பெற்றுப் பிழைத்து எழுந்தார்கள். ஆறுமுகக் கடவுளின் வேற்படையை வணங்கித் துதித்து அதனைப் பின்தொடர்ந்து யாவரும் வருங்கால் நம்முடைய நகரின் மேற்றிசை வாயிலை அடைந்தார்கள். அவ்வாயிலைக் காவல் செய்துகொண்டிருந்த புலிமுகனை எதிர்த்துப் போரிட்டுக் கொன்றனர். மேற்றிசை மதில்களை அழித்துச் சிகரத்தைப் பிடுங்கிப் பல அவுணர்கள் இறக்கும்படி எறிந்து நகரையும் கொளுத்தி அழித்தனர். அவர்கள் கொளுத்திய தீ பதினுயிரம் யோசனை தூரம் எறிந்தது. அவ்விடத்தை நாங்கள் பார்த்து வந்தோம்" என்று கூறினர்கள்.

ஒற்றர்கள் கூறியவைகளைக் கேட்ட சூரபன்மன் மிக்க சினம் கொண்டான். அவன் மயிர்கள் சிலிர்த்தன. புருவங்கள் நெற்றியில் ஏறின. முடி நிமிர்ந்தது. கண்கள் தீயைக் கக்கிச் சுழன்றன. அவன் ஒற்றர்களை நோக்கி, "நீங்கள் யாவரும் வானுலகத்துக்குச் சென்று ஊழிக் காலத்தில் உலகங்களை அழிக்கச் செல்வதற்காக உறங்கிக் கொண்டிருக்கும் மேகங்களெல்லாவற்றையும் இங்குக் கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டான். உடனே, ஒற்றர்கள் வானுலகத்தைஅடைந்து ஏழு மேகங்களையும் கைகளால் புடைத்து எழுப்பி, "நம் அரசனுகிய சூரபன்மன் உங்களை அழைத்தான்" என்று கூறினர்கள். மேகங்கள் அதனைக் கேட்டுச் சூரபன்மனை வந்தடைந்தன. அவன் அம்முகில்களைப் பார்த்து, "நீங்கள் இந்நகரத்தை எரிக்கின்ற தீயை அணையுங்கள்" என்று பணித்தான். அம்மேகங்கள், நன்றென்று அங்குநின்றும் நீங்கிப் புகையுருக்கொண்டு வானமெங்கும் பரந்து மின்னி ஆயிரங்கோடி இடிகளைக் கக்கின; பிறகு, "நாம் இந்நெருப்பைத் தணித்தால் வீரவாகு தேவர் நம்மைக் கொல்வார். அவிக்காது மீண்டால் சூரபன்மன் நம்மைச் சிறை செய்வான். சூரபன்மனுடைய சிறையில் அகப்பட்டுத் துன்புறுவதைக் காட்டிலும் வீரவாகு தேவரால் நாம்

உயிரை விடுதல் சாலச் சிறந்ததாகும்" என்று துணிந்தன. அம் மேகங்கள் ஓர் இறைப்பொழுது யானையளவினதாக மிக்க மழைத்துளிகளைச் சிதறின. மழையால் அந்நகரின் மேற்றிசையில் எழுந்த அக்கினி அழிந்தது.

வீரவாகு தேவர் அதனைக் கண்டு, வருந்தி, "இந்நெருப்பின் வலியை அழித்தவை ஏழு மேகங்களோ அல்லது பகைவர்களின் மாயமோ" என்று பற்பல விதமாக யோசித்தார். அப்பொழுது நாரத முனிவர் தோன்றி, "வீரரே! இந்நெருப்பைத் தணித்தவை ஊழிக் காலத்தில் வரும் முகில்கள். அவை சூரபன்மன் கட்டளையினால் அங்ஙனம் செய்தன. விரைவில் வடவாமுகாக்கினிப் படையை விடுப்பாயாக" என்று வீரவாகு தேவரிடம் கூறி மறைந்தார். வீரவாகு தேவர் அங்ஙனமே வடவாமுகாக்கினிப் படையைச் செலுத்தினார். அது விரைந்து சென்று முகிற் கூட்டங்களிலுள்ள தண்ணீரை உண்டு, வீரவாகு தேவரை மீண்டு அடைந்தது. முகில்கள் வலியிழந்து வீழ்ந்து ஆறுமுகக் கடவுளின் சடாட்சரத்தை உச்சரித்து வலிமைபெற்று எழுந்து புறவேலையை நோக்கி ஓடிப்போயின. அதனைக்கண்ட பூதசேனைகள் துள்ளி ஆர்த்தன. தேவர்கள் பூமழை பொழிந்தனர். ஒற்றர்கள் இவற்றைக் கண்டு பொறாமல் விரைந்து சூரபன்மனிடம் போய், "அரசே! நீ அனுப்பிய ஏழு மேகங்களும் மழையைப் பொழிந்து இந்நகரின் மேற்றிசையைச் சூழ்ந்த தீயை அவித்தன. வீரவாகு தேவர் அதனைக் கண்டு முகில்களின் நீரை வடவாமுகாக்கினியை விடுத்து வற்றச் செய்து விட்டார். அவை வலியிழந்து புறக்கடலை அடைந்தன. இந் நகர் அக்கினியால் எரிந்ததோடு அல்லாமல் பூதர்களும் மற்றை வீரர்களும் அதில் எண்மடங்காகப் போரிடுகிறார்கள்" என்று கூறினார்கள். சூரபன்மன் அதனைக் கேட்டுச் சினந்து எழுந்து, "நாம் சென்று, போரிடும் பூதர்களையும் வீரவாகு முதலியவர்களையும் கொன்று, சிவகுமாரனை வென்று வருவோம்; நம் தேரைக் கொண்டுவருக" என்று ஒற்றர்களை நோக்கிக் கூறினான்.

திருவிருத்தம்–73
ஆகத் திருவிருத்தம்–1,165

——oo——

# 7. இரணியன் யுத்தப் படலம்

## [மூன்று நாள் இரவு யுத்தம்]

### இரணியன் அறிவுரை

சூரபன்மன் ஒற்றர்களை நோக்கித் தேரைக் கொண்டுவரும்படி சொன்ன பொழுது அருகிலிருந்த சூரபன்மனின் மகனாகிய **இரணியன்** என்பவன் எழுந்தான். அவன் ஆயிரம் வேதங்களை உணர்ந்த கேள்வியை உடையவன்; அறத்தையும் நீதியையும் அறிந்தவன்; மாயங்களையும் வஞ்சனைகளையும் கற்றவன்; அவுணர்களுக்குள்ளே மிக்க வலிமை பெற்றவன்; முன்னாளில் பாதலத்திலுள்ள இராட்சதர்களோடு போர் செய்து வென்றவன்; **மூன்று தலைகளை உடையவன்.** அவன் அப்போது சூரபன்மனின் கால்களை வணங்கி, "தந்தையே! நாம் தேவர்களைச் சிறை செய்தது பாவமே. அதனால் நன்மை ஒன்றுமில்லை. தேவர்களைத் துன்புறுத்துவதால் நம் உயிர் நீங்கும்; செல்வமும் அழியும். இவ்வளவு செல்வங்களையும் நீ யாரிடத்தில் பெற்றாய்? அதனைச் சிந்தனை செய். முன்னாளில் திருமாலை வென்றதும், நான்முகனை ஏவல் கொண்டதும், தேவர்களுக்குத் துன்பம் செய்ததும் சிவபெருமான் அருளிய வலிமையினால் அல்லவா? திருமால் வந்து எதிர்த்தாலும், இந்திரனும் பிரமனும் வந்து எதிர்த்தாலும், வேறு எவர் வந்து எதிர்த்தாலும் அவர்களை வெல்லுதலும், புறந்தரச் செய்தலும் நமக்கு எளிமையாகும்.

நாம் செய்த தவத்தைக் கருதி அளவிறந்த வரங்களைப் பரமசிவன் நமக்குத் தந்தருளினார். நம்மிடத்திலுள்ள தீமை காரணமாக நமக்கு அளித்த வரங்களை அவர் மாற்ற நினைத்தால் நாம் செய்யவேண்டுவது என்ன? அவரை வணங்கித் துதிப்பதன்றி அவரோடு போர் புரியவும் எண்ணலாமா? நன்மை செய்த ஒருவருக்கு அவர் மனம் வருந்தும்படி ஒரு தீமை செய்தால், அவர் செய்தநன்றி ஒன்றே தீமை செய்தவரைக் கொல்லும்; தீமை செய்தவரைக் கொல்லக் கூற்றுவன் வேறு தேவையில்லை.

ஒன்றொரு பயன்றனை உதவி னோர்மனங்
கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்

புன்றொழில் அவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ ?

பரமசிவனுடைய கட்டளைக்கு மாறி நடந்த எவரும் இறந்தார்களேயன்றி உய்ந்தாரில்லை. சிவபெருமான் மன்மதன் பொடிபடச் செய்ததையும், முப்புரங்களை எரித்ததையும், அந்தகாசுரனைச் சுழலும்படி சூலத்தின்மேல் இட்டதையும் நீ கேட்டிலைபோலும் ! கூற்றுவனை உதைத்ததையும், கங்கையின் செருக்கை நீக்கிச் சடையில் அடக்கியதையும், திருமாலும் நான்முகனும் கண்டு பயந்தோடிய ஆலகால விஷத்தைச் சிவபெருமான் உண்டருளியதையும் நீ அறியாயா ? ஒரு நரசிங்கம் தேவர்களைத் துன்புறுத்த அதனை வீரபத்திரக் கடவுளாகிய சரபப் பட்சியைக்கொண்டு பரமசிவன் தண்டிப்பித்ததையும், அவ்வீரபத்திரக் கடவுளைக்கொண்டு தக்கன் யாகத்தை அழிப்பித்ததையும் நீ கேட்டதில்லையோ ? தம்மை இகழ்ந்த நான்முகனின் தலையைச் சிவபெருமான் வயிரவக் கடவுளைக்கொண்டு கிள்ளுவித்ததையும், தம்மை இகழ்ந்த திருமாலிடத்தில் வயிரவரை அனுப்பி இரத்தப்பலி ஏற்பித்ததையும் நீ அறியாயோ ? முன்னாளில் செருக்குக்கொண்ட ஒரு இந்திரன் தோளை முறித்ததையும், பஞ்சராக்கதர்களை அழித்ததையும், யானை புலி முதலியவைகளின் தோலை உரித்ததையும் நீ அறியவில்லைபோலும். உலகங்களை அழித்த திருமாலாகிய பன்றியின் கொம்புகளையும் ஆமையின் ஓட்டையும் பறித்து அணிந்ததையும், நான்முகன் முதலிய தேவர்களின் தலைகளை அணிந்ததையும் நீ அறியாயோ ? தாருகாவனத்து ரிஷிகள் செய்த அபிசார வேள்வியில் தோன்றிய முயலகன் கோபித்து எழ, அவனை உதைத்து மிதித்ததையும் நீ அறியமாட்டாயா ? தன்னிகரில்லாத சிவபெருமான் தன்பால் பகைமைகொண்டவர்களைத் தண்டித்த வரலாறு ஒரு கோடி உள்ளன. சிவபெருமானைப் புகல் அடைந்தவர் உய்வர்; மற்றையோர் உய்யார். இது வேதமும் பிறநூல்களும் கூறும் உண்மை. தந்தையே ! நீ தீயவழியினின்றும் நீங்கி இதனை அறிவாயாக. மேலாகிய செல்வங்களையெல்லாம் தந்தருளிய சிவபெருமான் அவற்றை மாற்றவும் வல்லவராவர். அக்கடவுளுடைய குமாரரோடு நீ போர்புரிவது முறையாகுமா? ஐயனே !

தன்னினும் வலிமை மிக்கவரோடு போர்புரிந்தால் வெற்றி உண்டாகுமோ?

முன்னாளில் பூவுலகமும், வானுலகமும், திக்குக்களும், கடல்களும், மலைகளும், வேறுபாடுற்றதை நோக்கி, 'இஃது என்ன மாயமோ' என்று எண்ணினோம். 'அவையெல்லாம் ஆறுமுகக் கடவுளின் திருவிளையாடல்' என்று பலர் சொன்னார்கள். 'தேவர்கள் சிவகுமாரரின் திருவிளையாடல்களை அறியாது மயங்கிய பொழுது அவர்களுடைய கண்களுக்கு எதிரில் வேறு ஒரு வடிவத்தைக் காட்டி நின்றார். தேவர்கள் அவரை இன்னார் என்று அறியாமல் கோபித்துப் போர் செய்தனர். குமாரக் கடவுள் அவர்கள் யாவரையும் கொன்று பின்பு எழுப்பினார்' என்பர். 'சகல அண்டங்களும், அவற்றிலுள்ள புவனங்களும், உயிர்த்தொகுதிகளும், மற்றை வளங்களும், தேவர்களும், மும்மூர்த்திகளும் தம்முள்ளே கொண்டதோர் விசுவரூபத்தை அந்நாளிலே தேவர்கள் காணும்படி குமாரக் கடவுள் காட்டினார்' என்பர்.

எண்டொகை பெற்ற அண்டம்
  யாவையும் புவன வைப்பும்
மண்டுபல் வளனும் ஏனை
  மன்னுயிர்த் தொகுதி முற்றும்
அண்டரும் மூவர் தாமும்
  அனைத்துமா கியதன் மேனி
கண்டிட இமையோர்க் கெல்லாம்
  காட்டினன் கந்தன் என்பர்.

நான்முகனைச் சிறையிலிட்டு வைத்துத் தாமே உலகங்களைப் படைத்தார். பிறகு, தந்தையின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சிறையினின்றும் வெளியில் விட்டார். ஆறுமுகக் கடவுள் அனைவரிலும் ஆற்றல் மிக்கவர் என்பதைச் சாற்றவும் வேண்டுமோ? திருமாலின் சக்கரப் படையை ஆபரணமாக அணிந்த தாரகாசுரனையும், கிரவுஞ்ச மலையையும் அழித்ததே அதற்குத் தக்க சான்று அன்றோ? சிவபிரானிடம் தோன்றிய அவரைச் சிறுவன் என்று இகழாதே! அவர் செயல்களால் மிகப் பெரியவர். இந்திரன், நான்முகன், திருமால் முதலியவர்க

ளுடைய குறைகளைப்போக்கி, அவர்களுக்குரிய செல்வங்களை மீட்டுத்தரச் சிவபெருமானே ஒரு குழந்தையைப்போலாய் ஆறு திருமுகங்களைக்கொண்ட குமாரக் கடவுளாக தோன்றினார் என்பதல்லாமல் வேறு கூறவும் வேண்டுமோ ? பன்னிரண்டு திருத்தோள்களையுடைய அக்கடவுள் பானுகோபனுடைய மாயத்தினாலே மயங்கிய தம் படைகளை மீட்டற்குச் செலுத்திய வேற்படையை இந்நகரத்தின்மீது செலுத்துவாரானால் உயிரோடிருக்கக் கூடியவர் யாவர்? ஒப்பில்லாத வேற்படையைத் துதித்துக் குமாரக் கடவுளின் திருவடிகளை வணங்குவதே சரியாகும்; அவரை எதிர்த்துப் போரிடுவது தகாது. சிவகுமாரன் கட்டளையினால் இங்கு வந்த தூதுவரான வீரவாகு தேவர் இந்நகரத்தை அழித்தார் என்றால் அவரைக் காட்டிலும் வல்லவர் யார்? அறிஞர்கள் வீரவாகுவோடு போர் செய்யக் கருதமாட்டார்கள். வீரவாகு என்னும் ஒருவனால் இந்நகரம் முழுவதும் அழியும்; அவுணர்களும் அழிவர். ஆறுமுகக் கடவுளே போர் செய்ய நினைத்து வந்தால் எல்லா உலகங்களும் அழிந்து விடும்; நாம் பெற்ற செல்வங்களும், வளங்களும், வரங்களும், பிறவும் அழிந்துவிடும். முருகக்கடவுள் இதுகாறும் போருக்கு வாராதது நம் மீது வைத்துள்ள கருணையினால்தான். அக்கடவுளுடைய திருவுள்ளத்தில் அழியாத கோபம் நம் மீது உண்டாகுவதற்குமுன் இப்பொழுதே தேவர்களைச் சிறையிலிருந்து நீக்கி நம்முடைய உறவினர்களோடு விரைந்து சென்று அவருடைய திருவடிகளைச் சரணடைந்தால், அவர் நம்முடைய பிழைகளை யெல்லாம் பொறுத்து அருள்புரிவர்; மேலும் பல அளவில்லாத வரங்களைத் தந்து இவ்விடத்தை விட்டுச் சேனைகளோடு திரும்பிவிடுவர்; நாமும் உய்வோம். இதனை நன்கு ஆராய்ந்து சொன்னேன்; இதுவே சிறந்த நன்மை பயக்கும்" என்று கூறினான்.

### சூரபன்மன் சினங் கொள்ளல்

இரணியன் கூறியவைகளைச் சூரபன்மன் கேட்டான். உடனே சினங்கொண்டான். உடல் வியர்த்தது; இதழ்கள் துடித்தன; கண்கள் சிவந்தன. அவன் கையோடு கையைத் தட்டி நகைத்துத் தன் மகனைப்பார்த்து, "இரணியா! நீ ஒரு

பாலகனின் வலிமையைப் பற்றியும், தூதுவனின் திறமையைப் பற்றியும் என்னிடம் சொன்னாய். உனக்கு இவற்றைச் சொல்லிக் கொடுத்தவர் யாவர்? அவரை அறிந்தால் இப்போதே அவருடைய உயிரைக் கவருவேன்; அவருடைய குல முழுவதையும் அழிப்பேன். எல்லா உலகங்களையும் படைத்த நான்முகன் எனக்குப் பஞ்சாங்கம் சொல்லிப் போவான். திருமால் என் தம்பியாகிய தாரகனுக்குத் தோற்றுப் போனான். இந்திரன் மீன்களைப் பிடித்துக் கொடுத்துக் கொண்டு என் பணிகளைச் செய்தான். சிவகுமாரனோ என்னுடைய பேராற்றலை அழிக்க வல்லவன்? சிவபெருமானே என்னோடு போருக்கு வந்தாலும் தோற்றோடுவானே அல்லாமல் என்னை வெல்ல முடியுமா? நீ சிறிதும் அறிவில்லாதவன் ஆகின்றாய். நான் பெற்றுள்ள மேன்மைகளை நீ அறிந்திலையோ? வலியை விடுத்தாய்; குலமுறை தவறினாய்; பகைவர்களைக் கண்டு பயந்து இவ்வாறு கூறினாய். இனி இப்படிப் பேசுவாயாகில் உன்னை நான் இயமபுரத்திற்கு விரைந்து செல்லுமாறு செய்வேன்'' என்று கோபித்தான்.

**இரணியன் போருக் கெழுதல்**

சூரபன்மன் கூறியவைகளை இரணியன் கேட்டான்; "என் தந்தையாகிய இக்கொடியவன் நான் கூறியவைகளை ஏற்கவில்லை. இவன் அழிந்தொழிவது திண்ணம். இவ்வுலகில் விதியை யாவர் வென்றவர்? இவனுக்கு அழியுங்காலம் நெருங்குகின்றது. நாம் பல உறுதிகளைச் சொல்வதால் பயனில்லை'' என்று எண்ணினான்; பிறகு சூரபன்மனை நோக்கி, "தந்தையே! நீ மிக்க அறிவுடையை. சிறுவனாகிய நான் செய்த பிழையைப் பொறுப்பாயாக'' என்று அவன் சினத்தைத் தணித்தான்; "என் தந்தையாகிய இவன் இறக்குமுன் யான் இறப்பது நன்று'' என்று துணிந்தான்; பிறகு தந்தையை வணங்கி, "தந்தையே! நீ கூறிய சபதத்தை யான் முடிப்பேன்'' என்றான். அப்போது சூரபன்மன் இரணியனைப் பார்த்து, "மகனே! முன்பு பகைவர்களுக்கு அஞ்சிப் பிழைக்கும்படி கூறிய நீ அவர்களை எதிர்த்து வெற்றிகாணும் பொருட்டு எண்ணிய காரணம் யாது?'' என்று கேட்டான். இரணியன் சூரபன்மனை நோக்கி, "உன் மகனாகிய யான் எதிரிகளுக்கு அஞ்சுவேனோ?'' என்று பதில் அளித்தான்.

சூரபன்மன் அதனைக் கேட்டு மகிழ்ந்து இரணியனைப் போருக்கு அனுப்ப உடன்பட்டான்.

இரணியன் விடைபெற்றுக் கொண்டு தன்னுடைய கோயிலை அடைந்தான். போர்க்கோலம் பூண்டு, தும்பை மாலையைச் சூடி, ஆயிரம் சிங்கங்கள் பூட்டப்பெற்ற ஒரு தேரில் ஏறிப் போருக்குப் புறப்பட்டான். ஆயிரம் தோழர்களும் ஆயிரம் சேனாதிபதிகளும் போர்க் கோலம் பூண்டு நால்வகைச் சேனைகளோடு அவனை வந்து சூழ்ந்தார்கள். எண்ணூறு வெள்ளம் தேர்களும், எண்ணூறு வெள்ளம் யானைகளும், ஆயிரத்து இரு நூறு வெள்ளம் குதிரைகளும், ஆயிரத்து இருநூறு வெள்ளம் காலாட்படைகளும் பக்கங்களில் சூழ்ந்தன. பேரிகை, துந்துபி, சங்கம் முதலிய ஒலிக்கருவிகள் முழங்கின. இவ்வாறு இரணியன் சேனைக் கடல்களோடு தன்னகரத்தை நீங்கிப் பூதர்கள் நிற்கின்ற போர்க்களத்தை அடைந்தான். பூதர்கள் தன்னகரத்தை அழித்துக் கொண்டிருத்தலை அவன் கண்டான்; கோபம் கொண்டு அருகில் வரும் சேனைத் தலைவர்களையும் துணைவர்களையும் நான்கு வகைகளாகப் பிரித்துப் போரிட அனுப்பினான். இரணியன் ஆயிரம் வெள்ளம் சேனைகளோடு மேற்றிசைக்குச் சென்றான். இரணியன் போருக்கு வருதலை வீரவாகு தேவர் கண்டார். "இங்குப் போருக்கு வருபவன் சூரபன்மன் புதல்வர்களுள் ஒருவனோ? அல்லது அவன் சுற்றமாயுள்ளானோ" என்று ஐயமுற்றார். அப்பொழுது **நாரத முனிவர்** அங்குத் தோன்றி வீரவாகு தேவரைப் பார்த்து, "இங்குப் போருக்கு வந்திருக்கும் இரணியன், சூரபன்மனின் புதல்வர்களுள் ஒருவன். அவன் முன்னே நான்கு திசைகளிலும் சேனைகளை அனுப்பிவிட்டு இங்கு வந்தடைந்தான். அவன் மாயையில் வல்லவன்; பல படைக்கலங்களை உடையவன்; மாயச் சூழ்ச்சிகள் புரிபவன். அவனை உன்னாலன்றி வேறு எவராலும் வெல்லுதல் அரிது. அதற்கேற்றவாறு போர் புரிவாயாக" என்று கூறி மறைந்தார். வீரவாகு தேவர் அவற்றைக் கேட்டார்; இலக்கத்தெண்மர்களையும், படைத்தலைவர்களையும், பூதர்களையும் நான்கு திசைகளுக்கும் அனுப்பிப் போர் செய்யும்படி பணித்தார். இரணியன் வரும் மேற்றிசையை நோக்கி வீரவாகு தேவர் சென்றார். அவுண சேனைகள் நான்கு திசைகளிலும் கடல்

போலச் சூழ்ந்தன. எதிர்த்த பூதசேனைகளை அவுணர்கள் மழு, கலப்பை, சக்கரம், தோமரம், தண்டம், குலிசம் முதலிய படைகளைக்கொண்டு தாக்கினார்கள். பூதர்கள் மராமரம், தண்டம், மழு, மலை முதலியவற்றை எறிந்தார்கள். பூதர்கள் தங்கள் தலைகளையும், கை, கால்களையும் இழந்தார்கள். அவுணர்களும், கை முதலியவைகளை இழந்து, தேரிலுள்ள குதிரைகளும் அழியப் பெற்று இரத்த வெள்ளத்தில் மூழ்கினார்கள். வீரவாகு தேவர் இரணியனுக்கு முன்னால் வரும் படைகளை நோக்கி வில்லை வளைத்து நாணொலி செய்தார். பதினாயிரம் கணைகளைத் தொடுத்து, அவுணப்படைகளின் மீது பொழிந்தார். அவுணப் படைகளில் பெரிதும் அழிந்து குருதிப் பெருக்கெடுத்தோடியது. தன் படைகள் அழிவதைக் கண்ட இரணியன் ஆயிரங் கணைகளை ஒரு தொடையில் தொடுத்துச் செலுத்தி ஆயிரங் கோடி பூதர்களை ஒரு நொடிப் பொழுதில் கொன்றான். எஞ்சிய பூதப்படைகள் அஞ்சி ஓடின.

**நீலரும் இரணியனும் போரிடல்**

பூதப்படைகள் பயந்து ஓடுவதை *நீலர்* என்னும் பூதப் படைத் தலைவர் கண்டு வடவாமுகாக்கினியைப் போலச் சினந்தார்; இரணியனுக்கு முன் சென்று அண்டங்கள் நடுங்கும்படி ஆரவாரஞ் செய்தார். இரணியன் ஒரு வேற்படையை எடுத்து அவர் மார்பில் எறிந்தான். நீலர் ஒரு மராமரத்தைப் பறித்து அவன் தேரில் அடித்து அழித்தார். இரணியன் வேறொரு தேரில் பாய்ந்து வில்லை வளைத்துக் கணைகளைப் பொழிந்தான். கணைகள் நீலர் மார்பில் புகுந்தன. அவர் சிறிதும் அஞ்சாது மலைகளைப் பிடுங்கி இரணியன் மீது எறிந்தார். இரணியன் கணைகளினால் அவற்றை அழித்தான். நீலர் விரைந்து இரணியன் தேரை ஒரு கையால் எடுத்து விண்ணுலகில் எறிந்தார். அது விண்ணிற் பறந்தது. இரணியன் வேறொரு தேரின்மேல் பாய நினைத்து வந்தான். நீலர் அவனை மார்பில் அடித்தார். அவன் நீலரைப் பிடித்து வீசினான். நீலர் மீண்டு வந்து அவனைத் தம்முடைய காலினால் உதைத்து உருட்டினார். இரணியன் வீழ்ந்தான். அவன்மேல் பாய்ந்து அவனைக் கால்களினால் மிதித்தார். அவ்வாறு மிதித்ததனால் நிலம் கிழிந்தது. இரணியனின் முடியும்,

மார்பும் பிளந்தன. அவன் வாயினின்றும் குருதி வடிந்தது. அவன் ஆற்றலும் சினமும் அற்றவன் ஆனான்; உயிர் நீங்கும் நிலையை அடைந்தான். பிறகு இரணியன் ஒரு மாயப் போர் செய்யத் தொடங்கித் தன்னை ஒத்த வேறொரு மாயவடிவம் கொண்டான். அந்த மாயவடிவம் நீலரோடு வந்து பலவாறு திரிந்து போரிட்டது. நீலர் ஒரு தண்டத்தால் அதன் தலையில் அடித்தார். அவ்வடிவம் ஆகாயத்தில் எழுந்து சென்றது. நீலர் அதனைப் பின் தொடர்ந்தார். அவ்வுருவம் மறைந்தது. அதே உருவத்தை நீலர் பூமியில் கண்டு, "இது வஞ்சனையாகும்" என்று அறிந்து நாணத்தினால் கோபங்கொண்டு அதனை நெருங்கினார். அதுவும் போர் செய்யத் தொடங்கியது. நீலர் அதனுடன் திரிந்து வலி குறைந்து கால்கள் தளர்ந்தார். அப்பொழுது ஓர் உருவமாய் இருந்த மாய உருவம் பல உருவங்கள் கொண்டது. நீலர் அதனைக் கண்டு, "நன்று! நன்று!! இது மாயம் ஆகும்" என்று கூறி ஐயம் தெளிந்தார். முன்பு நீலரால் உதையுண்டு பூமியில் வீழ்ந்த இரணியன் வலிமைபெற்று எழுந்து, நீலர்மேல் தீக்கணைகளை எய்தான். நீலர் மிகச் சலித்து நின்றார்.

### இரணியன் - வீரவாகு தேவர் போர்

இரணியனின் மாயப் போரால் நீலர் வருத்தம் அடைந்து நிற்றலை **வீரவாகு தேவர்** கண்டு கோபித்து, விரைந்து தேரைச் செலுத்திக் கொண்டு இரணியன் முன் வந்தார்; வில்லை வளைத்து நாணொலி செய்தார். அவ்வொலியைக் கேட்டு அவுணர்கள் அஞ்சி ஓடினார்கள். வீரவாகு தேவர் முருகக் கடவுளைத் தியானித்து ஞானப் படைக்கலத்தை எடுத்து இரணியனின் மாயையின் மீது செலுத்தி அம்மாயையினை அழித்தார். தனித்தவனாக நின்ற இரணியன், வில்லை வளைத்து ஆயிரங் கணைகளை வீரவாகு தேவர்மீது விடுத்தான். அவை அவர் மீது பட்டு அழிந்தன. வீரவாகு தேவர் நூறு கணைகள் எய்து இரணியனின் கொடியையும், வில்லையும், கவசத்தையும் அழித்தார். இரணியன் வேறொரு வில்லை எடுத்தான். வீரவாகு தேவர் ஆயிரங் கணைகளால் அவன் எடுத்த வில்லையும், கணைகளையும், அம்பறுக் கூட்டையும், தேரையும், பாகனையும் அழித்து அவன் மார்பையும் துளைத்தார். அவன் வேறு தேரில் பாய எத்தனித்

தான். வீரவாகு தேவர் அதனையும் அழித்தார். அவன் பின்னரும் ஏறுதற்கு அமைந்து நின்ற எல்லாத் தேர்களையும் நூறு நூறு கணைகளால் அழித்தார்.

**இரணியன் கடலில் மறைதல்**

இரணியன் வலிமை இழந்து, "எனக்கு இப்பொழுது முடிவு வந்தது. என்னுயிர் இவனால் நீங்கும். என் தந்தையும் இறத்தல் நிச்சயம். என் தந்தைக்கு இறுதிச் சடங்குகள் செய்வதற்கு யாருமில்லை. இந்நகரிலுள்ள நம்முடைய உறவினர்கள் பலரும் இறந்தார்கள். எஞ்சியவர்களும் இனி இறப்பார்கள். இஃது உண்மையே. நான் கூறிய உறுதிகளைக் கேட்காத என் தந்தை இறப்பதற்கு முன் நான் இறப்பதே நலமாகும். ஆனால் நான் இறந்தால், என் தந்தைக்கு இறுதிச்சடங்குகள் செய்ய மகன் இல்லையே என்ற வசைமொழி ஏற்படும். புதல்வனைப் பெறுகின்றதும் அன்போடு வளர்ப்பதும், தந்தை இறந்த பொழுது தம் குல முறைப்படி தீக்கடன் முதலாயினவற்றைச் செய்தற்கே அன்றோ?

> மைந்த னைப்பெறு கின்றதும் மாசிலாப்
> புந்தி அன்பொடு போற்றி வளர்ப்பதும்
> தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட
> அந்த மில்கடன் ஆற்றுதற் கேயன்றோ?

போரில் நான் இறந்தால் எனக்குப் புகழுண்டாகும்; இறவாதொழிந்தால் வசைமொழி உண்டாகும். எது எவ்வாறாயினும், என் தந்தைக்குத் தீக்கடன் செய்வதற்கு மகன் இல்லையே என்ற வசைமொழி ஏற்படாதவாறு, என்னுயிரைப் பாதுகாத்துக் கொள்வதே முறைமையாகும்" என்று உறுதி கொண்டான். உடனே, இரணியன் விரைந்து மேலெழுந்து மேகமண்டலத்தில் மறைந்து சென்றான். ஒரு தெய்வ மந்திரத்தை நினைத்து மீன் உருவம் கொண்டு கடலுட் புகுந்து மறைந்து, "யான் இனி நகரத்திற்குச் செல்லேன். இனி நிகழ்கின்றவற்றைக் காண்பேன். என் தந்தையின் இறுதிக் கடன்களை முடிக்குமளவும் இக்கடலிலேயே இருப்பேன்" என்று எண்ணிக்கொண்டு கடலிலேயே இருந்தான். அப்பொழுது கீழ்த்திசையில் **கதிரவன் எழுந்தான்.**

**அக்கினிமுகன் வருகை**

இரணியன் மறைந்தோடிய தன்மையைக் கண்ட வீரவாகு தேவர், "நம் பகைவன் தோற்றுக் கடலில் மறைந்து ஓடினன்" என்று வெற்றிச் சங்கு ஊதினர். தேவர்கள் மகிழ்ந்தார்கள். பூதர்கள் அங்கு எஞ்சி நின்ற அவுணர்களைக் கொன்று ஆரவாரஞ் செய்தார்கள். அதனைப் பார்த்த சூரபன்மனின் தூதுவர்கள் சூரபன்மனிடம் சென்று, "அரசர்க்கரசே! உன் குமாரன் இரணியன் போருக்கு ஆற்ருது, கடலில் மறைந்து ஓடினன். அங்ஙனம் அவன் செய்தது வீரவாகுவைச் சூழ்ச்சியால் வெல்லுவதற்கோ, அல்லது தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கோ, நாங்கள் அறியோம்" என்ருர்கள். சூரபன்மன் அவற்றைக் கேட்டு மனம் குன்றி நாணமுற்றுக் கடுங்கோபத்துடன் பேசாதிருந்தான். அப்பொழுது அவன் குமாரனகிய **அக்கினிமுகன்** அங்கு வந்தான்.

திருவிருத்தம்–138
ஆகத் திருவிருத்தம்–1303

——oo——

## 8. அக்கினிமுகாசுரன் வதைப் படலம்
### [நாலாநாட் பகல் யுத்தம்]

**அக்கினிமுகாசுரன் ஆற்றல்**

சூரபன்மனின் மக்களில் ஒருவனகிய **அக்கினிமுகாசுரன்** முன்னுளில் திக்குப்பாலகர்களையும், யானைகளையும், சூரியனுடைய தேரையும், அதில் கட்டிய குதிரைகளையும் கொண்டுவந்து வட்டாடிய வலிமைகொண்டவன்; பட்டத்தரசி பதுமகோமளையின் கர்ப்பத்தில் அவன் தோன்றிய நாளிலிருந்து அவள் உடல் முழுவதும் அக்கினி சிந்தியது; மாயவள் அங்கு வந்து, "இவளிடத்துப் பிறக்கின்ற இக்குமாரன் அக்கினிமுகன்" என்று கூறிச் சென்றதனுல், **அக்கினிமுகன்** என்ற காரணப் பெயர்பெற்றவன்; நான்முகனுடைய அன்னத்தையும், திருமாலினுடைய கருடனையும் முன்னுளில் கொண்டுவந்து வைத்து விளையாடியவன்; சந்திரனைப் பிடித்துவந்து பலநாட் சிறை செய்தவன்; தெய்வப் படைக்கலங்களையுடையவன்; வஞ்சனையிலும் மாயத்திலும் வல்லவன்; மிக்க வல்லமை பொருந்திய எப்படைக்கலங்களையும் அழிக்கும் ஆற்றல் பெற்றவன்.

**சூரபன்மன் நிகழ்ந்தவை கூறல்**

இத்தகைய ஆற்றலைக்கொண்ட அக்கினிமுகாசுரன் தன் தந்தையாகிய சூரபன்மன்முன் வந்து வணங்கி, "தந்தையே! நீ என்ன காரணத்தினால் மெலிவுறுகிறாய்?" என்று வினவினான். சூரபன்மன் மனத்துயருடன் அவனை நோக்கி, "முன்பு தேவர் பொருட்டுத் தூது வந்த வீரவாகு என்பவன் இப்பொழுது இந்நகரினுள் வந்து அது வேகும்படி நெருப்பிட்டுக் கொளுத்தினான். அதனைத் தணிக்க ஏழு முகில்களையும் அனுப்பினேன். அம்முகில்கள் மழையைப் பெய்து தீயைத் தணித்தன. வீரவாகு ஊழித் தீப்படையை அனுப்பி முகில்களின் வலிமையை அழித்தான். நான் அச்செயலை அறிந்து இரணியனைப் போருக்கு அனுப்பினேன். இரணியன் தோற்றுக் கடலில் மறைந்து போனான். நம் நால்வகைச் சேனைகளும் அழிகின்றன. நகரத்தை இங்கு வந்துள்ள தூதுவன் அழித்தான்; இங்குள்ள நிகழ்ச்சி இதுவே" என்று கூறினான்.

**அக்கினிமுகன் போருக்கெழுதல்**

அக்கினிமுகன் சூரபன்மன் கூறியவைகளைக் கேட்டு, "அரசர்க்கரசே! வீரவாகு, நீ கோபம் கொள்வதற்கேற்ற வலிமைகொண்டவனா? அவனையும், மற்றை வீரர்களையும், பூதர்களையும் வென்று மீள்வேன்; விடைதருவாயாக" என்றான். சூரபன்மன் அவனுக்கு விடைகொடுத்து அனுப்பினான். அக்கினி முகாசுரன் தன்னுடைய கோயிலை அடைந்து போர்க்கோலம் பூண்டு, தன் பாட்டியாகிய மாயவள் கொடுத்த வில்லையும், தெய்வப் படைக்கலங்களையும் ஏந்தித் தேரிலேறி நகர்ப்புறத்தே வந்தான். ஆயிரம் வெள்ளம் யானைகளும், ஆயிரம் வெள்ளம் தேர்களும், இரண்டாயிரம் வெள்ளம் குதிரைகளும், அளவிறந்த அவுண வெள்ளங்களும் போருக்கெழுந்தன. அக்கினிமுகாசுரன் மானம் மேற்கொண்டு, 'பகைவர்களை ஒரு நாழியிற் கொல்வேன்' என்று கூறிக்கொண்டு நால்வகைச் சேனைகளோடு புறப்பட்டான். போர்ப்பறையின் ஒலிகேட்டு மேகங்கள் வீழ்ந்தன. பூதூளியினால் கங்கை வரண்டது. பலவகைப் படைக் கலங்களும் அணிகலங்களும் ஒளி செய்தன. கொடிகள் எங்கும் நெருங்கின. **சோமகண்டன், சோமன், சூரியசித்து, மேகன்,**

**பிங்கலன்** முதலாகிய படைத்தலைவர்கள் அவனைச் சூழ்ந்தார்கள். இவ்வாறாக அக்கினிமுகன் பூதர்களுக்கு எதிரே சென்றான்.

**பூதர்களுக்கும் - அவுணர்களுக்கும் போர்**

பூதர்களும் அவுணர்களும் எதிர்த்துப் போரிட்டார்கள். பேரிகைகள் இடிபோல அதிர்ந்தன. துடிகளும் சங்கங்களும் ஆர்த்தன. விண்ணிலுள்ள நட்சத்திரங்கள் உதிர்ந்தன. பூமி அதிர்ந்தது. அண்டகோளகை பிளந்தது. அவுணர்கள் வேற்படைகளை எறிந்தார்கள்; வாட்களை வீசினார்கள்; பிண்டிபாலம், மழு, தண்டம் முதலிய படைக்கலங்களைக்கொண்டு தாக்கிப் போரிட்டார்கள். பூதர்களில் பலர் இறந்தனர். இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. பூதர்கள் அவுணர்கள்மீது முத்தலைச்சூலம், தண்டம், முசலம், சக்கரம், மழு, மலை முதலிய படைகளை எறிந்தார்கள். அதனால், பல அவுணர்கள் இறந்தார்கள். குதிரை, யானை, தேர் முதலியன அழிந்தன. போர்க்களத்திலே கழுகுகளும் காகங்களும் நெருங்கின. பேய்களும் பூதங்களும் திரண்டன. இலக்கம் வீரர்களும் விற்களை வளைத்துக் கணைகளை விடுத்துப் போரிட்டார்கள். அவுணர்கள் அனைவரும் எதிர்த்துநில்லாமல் தோற்று ஓடினர்.

**வீரபுரந்தரர் செய்த போர்**

அதனைக் கண்ட அக்கினிமுகாசுரன், சோமகண்டகன் முதலாகிய படைத்தலைவர்களை அனுப்பினான். அவர்கள் இலக்கம் வீரர்கள்மேல் கணைமழைகளைப் பெய்தனர். அதனை **வீரபுரந்தரர்** நோக்கி, இடியேறும் அஞ்சப் பெரு முழக்கஞ்செய்து கணைமழைகளைப் பொழிந்து அவுணர்களின் தேர்களை அழித்தார்; சோமகண்டனின் தலையை அறுத்தார். மற்றை அவுண வீரர்கள் தேர்மேல் வந்து வீரபுரந்தரரைச் சூழ்ந்து அவர்மேல் கணைகளைத் தூவினார்கள். வீரபுரந்தரர் அவர்களுடைய விற்களையும், தேர்களையும் அறுத்தார். அவர்களுடைய நெற்றியிலும் தோள்களிலும் மார்புகளிலும் பல கணைகளை எய்தார். அக்கினிமுகனுக்குத் துணையாக நின்ற மேகன் என்பவன் ஒரு தண்டாயுதத்தை எடுத்து வீரபுரந்தரரின் தேர்ப்பாகன் மீது வீசி அவனைக் கொன்றான். வீரபுரந்தரர் ஒரு வேற்படையை மேகன் மீது ஏவினார். அவன் நிலத்தில் வீழ்ந்து இறந்தான். மேகன் இறந்ததைக் கண்ட அவுணப் படைகள் அஞ்சி ஓடின.

**அக்கினிமுகன் - வீரபுரந்தரர்**

அதனை அக்கினிமுகன் கண்டு, தன் படைகளோடு வந்து வில்லை வளைத்து நாணொலி செய்து பிறைமுகக் கணைகளைப் பொழிந்தான். பூதர்கள் பலர் தலை, கை, கால், தோள், மார்பு முதலியன உடைந்து இறந்தார்கள். பூதத்தலைவர்களின் தேர்கள் குதிரைகள் முதலியன அழிந்தன. குருதி வெள்ளம் ஓடியது. தலையை இழந்த உடல்கள் ஆடப் பேய்க் கூட்டங்கள் பாடின. அக்கினிமுகன் போர் புரிதலை வீரபுரந்தரர் கண்டார்; உடனே வில்லை வளைத்துக் கணை மழைகளைப் பொழிந்தார். அக்கினிமுகன் வீரபுரந்தரரின் தேரையும், வில்லையும், அம்புக் கூட்டையும் அழித்தான்; நூறு கணைகளை அவர் மார்பில் செலுத்தி அவுணர்கள் புகழும்படி ஆரவாரஞ் செய்தான்.

**அக்கினிமுகன் - ஏழு வீரர்கள்**

வீரபுரந்தரரின் துணைவர்கள் எழுவரும் அக்கினி முகனை எதிர்த்தார்கள். அக்கினிமுகன் அவர்களுடைய தோள்களில் பல கணைகளை மாரிபோலப் பொழிந்து மறைத்தான். அக்கணைகளினுல் மெலிவுற்ற ஏழுவீரரும் அக்கினிமுகனுடைய முகத்திலும், கைகளிலும், மார்பிலும், தோள்களிலும் ஆயிரமாயிரம் கணைகளைச் செலுத்தி, அவன் தேரையும் அழித்தார்கள். அக்கினி முகன் வேறொரு தேரில் பாய்ந்தான்; எழுவரையும் சினந்து நோக்கினுன். எழுவரும் பல கணைகளை விடுத்து அவனுடைய தேரையும் குதிரைகளையும் அழித்தனர்; மார்பையும் துளைத்தார்கள். அக்கினி முகன் பிறிதொரு தேரில் விரைந்து ஏறிச் சிவப் படைக்கலத்தை எடுத்துத் துதித்துச் செலுத்தினுன். அப்படைக் கலம் விரைந்து சென்றது, அதனை ஏழு வீரர்களும், “இஃது அக்கினிப் படைக்கலம் போலும்” என்று கருதி, அதனை மாற்ற வருணப் படைக்கலங்களை விட்டார்கள். சிவப்படைக்கலம் அவற்றை எதிர்த்து விழுங்கி, ஏழு வீரர்களையும் மெலிவு செய்து அவர்கள் உயிரைக் கவர்ந்து மீண்டது. வீரர் எழுவரும் இறந்து திருக்கயிலையை அடைந்தார்கள். அக்கினிமுகன் அதனைக்கண்டு மகிழ்ந்தான். ஏழு வீரர்கள் இறந்தமையைக் கண்டு பூதர்கள் நடுங்கி ஒடுங்கி ஓடிப்போனுர்கள்.

**வீரவாகு தேவரும் - அக்கினிமுகனும்**

வீரவாகு தேவர், முன்னணியில் நின்ற வீரர்கள் அழிந்தமையையும் பூதர்கள் தோற்றோடுவதையும் கண்டு வருந்தி, விரைந்து அக்கினிமுகன் அருகில் சென்றார். அக்கினிமுகன் வீரவாகு தேவரைக்கண்டு வெகுண்டு, "உன்னையே கொல்லும்படி நான் வந்தேன். தக்க சமயத்தில் நீ இங்கே வந்தாய். விதியே உன்னை என்முன் கொண்டு வந்து விடுத்தது போலும்! உன்னோடு முன்னர்ப் போர்செய்து தோற்றவர்கள்போல, என்னையும் எண்ணாதே. ஓர் இமைப் பொழுதில் உன் தலையைத் துணித்துச் சூரபன்மன் கால்களில் கொண்டுபோய் வைப்பேன்" என்று பல ஆண்மை மொழிகளைக் கூறினான். வீரவாகு தேவர் அதனைக் கேட்டுக் கையோடு கையைத் தட்டிச் சிரித்தார். அக்கினி முகனை நோக்கி, "முன்னர் நம்மோடு போர் செய்த இரணியன் கடலில் ஓடி ஒளிந்தான். அவன் தம்பியாகிய நீ எப்படி உய்யப் போகிறாய்? நம்மோடு போர்புரிந்த அவுண வீரர் எல்லாம் மாண்டனர். பானுகோபன் ஒருவன் மட்டும் தப்பி ஓடினான். அவனும் இனி இறப்பான். நீ உன் உயிரை இழக்கவோ இங்கு வந்தாய்? நீ போர்புரிந்து இறக்கப் போகின்றனையோ? பேடியாகிய இரணியனைப்போல் ஓடி ஒளியப் போகின்றனையோ? உலகிலுள்ளோர் யார் வந்து காத்தாலும் நான் உன்னைக் கொல்வேன்" என்று கூறினார். வீரவாகுதேவர் கூறியவைகளைக் கேட்ட அக்கினிமுகன் வில்லை வளைத்து நாணொலி செய்தான். அதனைக் கேட்டு வீரவாகு தேவரும் வில்லை வளைத்து நாணொலி செய்தார். இருவர்களுடைய நாணொலிகளையும் கேட்ட தேவர்களும் அவுணர்களும் நடுநடுங்கினார்கள். அக்கினிமுகன் பதினான்கு கணைகளை எய்தான். வீரவாகு தேவர் பதினான்கு கணைகளை விடுத்து அவற்றை விலக்கி இடிபோலப் பெருமுழக்கம் செய்தார். அக்கினிமுகன் இருபது கணைகளை எய்தான். வீரவாகு தேவர் இருபது கணைகளைச் செலுத்தி அவற்றைத் தடுத்தார். அக்கினிமுகன் ஆயிரங் கணைகளை வீரவாகு தேவரின் நெற்றியிற் செலுத்தி அவுணர்கள் புகழுமாறு வெற்றிச் சங்கை எடுத்து ஊதினான். வீரவாகு தேவர் ஆயிரங்கணைகளை எடுத்து அக்கினி முகனின் தேரையும், குதிரைகளையும், வில்லையும் அழித்தார். அக்கினிமுகன் வேறொரு தேரில் ஏறி வீரவாகு தேவர் மீது ஒரு தண்டா

யுதத்தை எடுத்து வீசினான். வீரவாகு தேவர் ஒரு மொட்டுக் கணை செலுத்தி அதனை வீழ்த்தினார். அக்கினிமுகாசுரன் வாயுப் படை, இயமப்படை, சூரியப்படை முதலியவைகளைச் செலுத்த வீரவாகு தேவரும் அங்ஙனமே செய்தார். வீரவாகு தேவர் நஞ்சு பாய்ச்சிய நூறு கணைகளை அக்கினிமுகன் மார்பில் செலுத்தி ஆரவாரஞ் செய்தார். அக்கினிமுகன் தேரின் மீது வீழ்ந்தான். அவன் மார்பிலிருந்து குருதி ஆறுபோல் ஓடியது. அவன் ஒருவாறு தெளிந்து தேரினின்றும் எழுந்து, முன்னர் ஒருகால், "போரில் யான் தோல்வியடைந்தால் உதவி செய் வாய்" என்று வெறியாட்டு ஆடிப் பலியூட்டி வழிபட்ட தன் னகர்க் காளியை நினைத்து வரும்படி துதித்தான்.

**காளிதேவி வந்து போர்புரிதல்**

வீரமகேந்திரபுரியிலுள்ள **காளியானவள்** பலகாளிகளும் கூளிகளும் தன்னைச் சூழச் சூலப்படையும் வாட்படையும் ஏந்திய கைகளையும், சிவந்த தலைமயிரையும், உங்காரத்தினால் உரப்பு கின்ற ஒலியையும், கூற்றுவர்களும் அஞ்சும் தோற்றத்தையுங் கொண்டு கூளிகளை எழுதிய கொடிகள் விண்ணை அளாவவும், சங்கு முதலிய வாத்தியங்கள் ஒலிக்கவும், சிங்கவாகனத்தின் மேல் ஏறி வந்தாள். அவள் அக்கினிமுகனை அடைந்து, "நீ வருந்தாதே; உன் பகைவர்களாகிய பூதப்படைகளைக் கொல் வேன்" என்று கூறி ஐம்பெரும் பூதங்களும் அஞ்சும்படி ஆர வாரம் செய்தாள். அவ்வொலியைக் கேட்டுப் பூதர்கள் கோபங் கொண்டு காளியை எதிர்த்தார்கள். அவளைச் சூழ்ந்த காளி களும் கூளிகளும் சூலங்களையும், வேற்படைகளையும், மழுப் படைகளையும், கணைகளையும், மலைகளையும், மரங்களையும், சக்க ரங்களையும் வீசிப் போர் செய்தன. காளியானவள் பூதர்கள் யாவரையும் கொல்லும்படி ஒரு முத்தலைச் சூலத்தை எடுத்து வீசினாள். அது, தீயையும் புகையையும் சிந்தி, பல காளிகளை உண்டாக்கிப் பூதப்படைகள் அஞ்சும்படி விரைந்து சென்றது. சூலத்தின் ஆற்றலைக் கண்ட வீரவாகு தேவர், அதன்மேல் பதினான்கு கணைகளைச் செலுத்திப் பொடியாக்கினார். அதனைக் காளி கண்டு கோபித்து, "இவன் என்னுடைய முத்தலைச் சூலத்தைப் பொடியாக்கிவிட்டு என்னுடைய வலிமையையும்

மதியாமல் உயிரோடு நிற்கின்றான்; இவன் உயிரை உண்பேன்'' என்று வீராவேசத்துடன் சிங்கவாகனத்தின்மேல் ஏறிக் கொண்டு படைகளை விலக்கி வீரவாகு தேவருக்கு முன் சென்றாள். வீரவாகு தேவரைப் பார்த்து, ''நான் முன்னே விடுத்த முத்தலைச் சூலத்தைக் கணைகளால் தடுத்து நின்றாய்! என்னிடம் இன்னும் ஒரு சூலப்படை உள்ளது! அதனைச் செலுத்துகிறேன்; அதனால் இறப்பாய்! அதனை உன்னால் காத்தல் இயலாது'' என்று கூறினாள். வீரவாகு தேவர் அதனைக் கேட்டுப் புன்முறுவல் பூத்து, ''சூலம் ஒன்றல்ல, ஆயிரத்தை ஒருங்கே விடுத்தாலும் அவற்றையெல்லாம் நான் பொடியாக்கு வேன். பெண்ணே, என் வலிமையை அறியாய்'' என்றார். காளி கோபம் மூளப்பெற்று உரப்பி, பூதசேனைகள் அஞ்சும்படி வேறொரு சூலப்படையை எடுத்து விரைந்து வீசினாள். அப் படையைக் கண்ட தேவர்கள், ''இது நஞ்சமோ'' என்று ஓடி னார்கள். சூரிய சந்திரர்கள், ''பாம்போ'' என்று நினைத்துக் கலங்கினார்கள். வீரவாகு தேவர் ஆயிரங் கணைகளால் அதனைத் துணித்தார். சூலப்படை வெட்டுண்டதைக் கண்ட காளி கோபங்கொண்டு வீரவாகு தேவரைக் கொல்லக் கருதிச் சிங்க வாகனத்தினின்றும் இறங்கிக் கூரிய வாட்படை ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு அவருடைய தேரை அணுகினாள்.

**காளி தோல்வியுற்றுச் செல்லுதல்**

வீரவாகு தேவர், ''பெண்ணாகிய இவள் உயிரைப் போக்குதல் தகுதியன்று'' என்று நினைத்து, அக்காளியின் எட்டுக் கைகளையும் தமது ஒரு கையால் பிடித்து, மற்றொரு கையால் மார்பில் அடித்து வலிமை குன்றச் செய்தார். காளியின் மார்பு கிழிந்தது. குருதி பெருகிற்று. அவள் கீழே விழுந்து மயங் கினாள். பிறகு வீரவாகு தேவர் அவள் மார்பில் உதைத்தார். அதனால் அவள் மிகுந்த துன்பமடைந்தாள். அப்போது அவள் உடலில் பெருகிய இரத்தம் அவளுடைய கரிய உடலை மூடியதால் **காளி** என்னும் காரணப் பெயரை மாற்றினாள். பின்பு அவள் சிறிது தேர்ந்து எழுந்து ஆணவமும் வீரமும் அழிந்து நாணம் மிகுந்து வீரவாகு தேவரின் ஆற்றலை வியந்தாள். ''ஆறுமுகக் கடவுளின் ஏவலால் வந்த வீரவாகு தேவரோடு போரிட்டு வெற்றிகாணமுடியுமா? நான் புத்தியில்லாமல் இங்குப் போருக்கு

வந்தேன்" என்று எண்ணி, வலிமையிழந்து எழுந்தாள். வீரவாகு தேவரை நோக்கி, "பெருமைமிக்க வீரரே! அக்கினி முகன் இன்றைக்கு என்னைத் துதித்து, எண்ணில்லாத பலியிட்டு என் உதவியை நாடினான். ஆதலால், நன்றி மறவாதவளாய் நான் இங்கு வந்தேன். உம்முடைய வீரத்தையும், வலிமையையும், உணர்ந்திலேன். இனி நான் என்னுடைய இடத்திற்குச் செல் வேன். விரைந்து அக்கினிமுகனைக் கொல்வீராக! மற்றையோர் களையும் அழிப்பீர்களாக! அதன்மேல் பானுகோபனையும் கொல் வீராக! ஆறுமுகக் கடவுளின் திருவருளைப் பெற்று இனிது வாழ் வீராக!" என்று கூறி, வீரவாகு தேவரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு தான் முன்பிருந்த இடத்திற்குச் சென்றாள்.

**அக்கினிமுகன் வஞ்சினங் கூறல்**

வீரவாகு தேவரிடத்தில் காளி விடை பெற்றுச் செல்லுதலை அக்கினிமுகன் கண்டு சினங்கொண்டான்; காளியின் ஆற்றலை இகழ்ந்தான்; "எனக்குத் துணை வேண்டியதில்லை. நான் இங்குக் காளியை அழைத்தது அவள் வலிமையைச் சோதனை புரிவதற்கே ஆகும். கந்த சுவாமியின் படைகளை அவள் வென்று வருவாள் என்று கருதவில்லை. வாவிகளும், குளங்களும், மற்றை நீர்நிலை களும் பனியினால் நிறைவதுண்டோ? அதுபோலத் தேவர்களை ஏவல் கொண்ட அவுணனாகிய நான் காளியினாலோ வீரத்தன்மை பெறுவேன்? ஒரு நொடிப் பொழுதில் என் தம்பியாகிய வச்சிர வாகுவைக் கொன்ற தூதுவனைக் கொல்வேன். அவனைக் கொல் லாது என் தந்தையாகிய சூரபன்மனிடம் அடையேன்" என்று வஞ்சினம் கூறினான்.

**அக்கினிமுகன் அழிதல்**

அக்கினிமுகன் வஞ்சினங்கூறிச் சேனைகள் சூழத் தேரில் ஏறி வந்தான். வீரவாகு தேவர்மேல் நூறு கணைகளை எய்தான். வீரவாகு தேவர் அவனை நோக்கி, "நீ இறப்பதற்கு இங்கு வந்தாய் போலும்" என்று கூறி, அக்கினிமுகன் விடுத்த கணைகளை அறுத்தார். அவன் நூறு கணைகளை விடுத்து அவர் தேரை அழித்து வெற்றி யடைந்து விட்டதாகக் கருதி வெற்றிச் சங்கை ஊதினான். வீரவாகு தேவர் பதினான்கு கணைகளை எய்து அக்கினிமுகனுடைய வில்லை முறித்தார். அவன் வேறொரு வில்லை

வளைத்து நான்முகப் படைக் கலத்தைத் தொடுத்து வீரவாகு தேவர்மீது விட்டான். வீரவாகு தேவர் வீரப்பத்திரப் படையைச் செலுத்தினர். நான்முகப் படைக்கலம் நடுங்கி ஒடுங்கி யாவரும் நகைக்கும்படி தொலைந்தது. வீரபத்திரப்படை விரைந்து சென்று அக்கினிமுகனுடைய உயிரைக் கவர்ந்து தலைகளைத் தள்ளி வீரவாகு தேவரிடத்து மீண்டது. அக்கினிமுகன் வீழ்ந்து இறந்தான். தேவர்கள் அதனைக் கண்டு வீரவாகு தேவரை வாழ்த்தினர்கள்; பூமழை பொழிந்து, ஆடைகளை வீசிக் கூத்தாடினர்கள்.

**வீரவாகுதேவர் - இருபத்து நாலாயிரவர் போர்**

அக்கினிமுகன் இறந்த அளவிலே அவனுடைய படை வீரர்கள் **இருபத்து நாலாயிரவர்** வீரவாகுதேவரைச் சூழ்ந்தனர்; கப்பணம், சக்கரம், வேல், மழு முதலிய படைகளை வீசிப் போர் செய்தார்கள். வீரவாகு தேவர் சினந்து ஒரு வில்லை வளைத்துக் கணைகளை எய்தார்; அவுணர்கள் ஏங்குமாறு உரப்பினர்; ஒரு கணப்பொழுது இடைவிடாமல் நூறுயிரங்கோடி கணைகளை மழைபோலப் பொழிந்து ஊழிக்காற்றைப்போல் திரிந்தார். அவுணப்படைத் தலைவர்கள் எறிந்த படைகளும் கணைகளும் அழிந்தன. அவர்களுடைய உறுப்புக்கள் பலவாறு வெட்டுண்டு வீழ்ந்தன. அவர்களும் இறந்தார்கள். அவர்களுடைய நால்வகைச் சேனைகளும் அழிந்தன, வானத்தில் பருந்துகள் மொய்த்தன. பூமியில் தசைகளோடு குருதி வெள்ளம் பாய்ந்தது. ஓடும் குருதி வெள்ளத்தில் வெட்டுப்பட்டு மிதந்து செல்லும் யானைகளின் கால்களும் துதிக்கைகளும், ஆமைகளைப் போன்று சென்றன. வெள்ளத்தில் மிதந்து சென்ற வேல் வாள் முதலிய படைக்கலங்களைக் கடலிலுள்ள மீன்கள் தங்கள் இனமென்று கருதி வந்து எதிர்கொண்டன. காம்புகள் இழந்த வெள்ளிய குடைகள் இரத்த வெள்ளத்தில் செல்லுதல், செவ்வானத்தில் முழுமதிகள் செல்வதைப் போன்று இருந்தது. அவுணப் படைஞர்கள் அனைவரும் பலவாறு அழிந்தார்கள். மகேந்திரபுரி கடலுடைந்தாற் போல ஒலியுண்டாக அரற்றியது.

**வீரவாகு தேவர் தம் இளவல்களைத் தேடுதல்**

பலவிடங்களிலும் பிரிந்து சென்று போர் செய்த இலக்கம் வீரர்களும் பூதர்களும், போர்க்களத்தின் நடுவே நிற்கின்ற

வீரவாகு தேவரை மீண்டு வந்து அடைந்தனர். வீரபுரந்தரர் எழுந்து வந்து ஒருபக்கத்தில் இருந்தார். ஆனால், வீரவாகு தேவரின் தம்பியர்களாகிய எழுவர்கள் மட்டும் காணவில்லை. வீரவாகுதேவர் மிக வருந்தி, "அவர்கள் யாண்டுற்றனர்?" என்று வினவினர். அப்போது உக்கிரர் வீரவாகுதேவரைப் பார்த்து, "உம்முடைய தம்பியர்கள் எழுவரையும் அக்கினி முகன் கொன்றான். அவர்களுடைய உயிரைக் கூற்றுவனுங் கொண்டுபோயினன். அவர்கள் இறந்தவிடம் இங்கிருந்து நூறு யோசனைக்கப்பாலுள்ள ஓர் ஆலமரத்தடியாகும். இஃது உண்மை" என்றார். வீரவாகுதேவர் அதனைக் கேட்டு மிகவுந் துன்பமுற்று அருகிலிருந்தோர் அனைவரும் உடன்வர ஆலமரத் தடியை அடைந்தார்; அங்கே பிணக் குவியல்களின்மீது எழுவரும் இறந்து கிடத்தலைக் கண்டார்; கண்கள் குருதி நீரை உமிழ, வீழ்ந்து அவர்களைத் தழுவிக்கொண்டு வாய்விட்டு அரற்றினர்; 'அக்கினிமுகனா உங்களைக் கொல்லவல்லவன்!' என்றும், 'ஆறு முகக் கடவுளிடம் என்ன சொல்வேன்?' என்றும், 'சூரபன்மன் கிளைகளெல்லாம் அழிந்தாலன்றி என் கோபம் தீராது' என்றும், 'என் தம்பியர்களை அழிக்கத்தக்க படைக்கலத்தை அக்கினிமுக னுக்கு அளித்தது யார்? அறியேன்' என்றும், 'என்னுடைய வீரம் மாசுபட்டது' என்றும் பலவாறு புலம்பினர்; பற்களைக் கடித்தார். கவலையில் ஆழ்ந்தார்;

இளவல்கள் உயிர்பெற்றெழும் வகையினைப்பற்றி வீரவாகு தேவர் சிந்திக்கலானர். "அக்கினிமுகன் நான்முகப் படைக்கலம் திருமால் படைக்கலம் முதலாகிய படைகளுள் ஒன்றை என் தம்பி யர்களின்மீது விடுத்தானாயின், அவர்களின் உயிர்களை இயமனன்றோ கவர்ந்தான்? கூற்றுவன், இன்பத்தில் உழலுகின்ற தேவர் களைப்போலவும், அவுணர்களைப்போலவும், நன்னெறியில் ஒழு காத பிறரைப்போலவும் என் தம்பியர்களை நினைத்தானோ? நம்ம வர் உயிரை இவன்தானோ கவர்வான்? தேவர்களுடைய எப் படைக் கலமும் அவர்களின் அறிவைக் கெடுப்பதன்றி உயிரை அழிக்க இயலாது. நம் தம்பியர்கள் இவர்கள் என்பதை இயமன் உணரானோ? மார்க்கண்டேயருடைய உயிரைக் கவரும்படிவந்த பொழுது உதைபட்ட தழும்பு இன்னும் மாறிற்றில்லை; கூற்று

வன் அதனையும் மறந்தானோ? ஒருநாள் முழுவதும் ஊணும் உறக்கமும் இன்றிச் சிவபெருமான்மீது வில்வத்தைச் சொரிந்து வழிபட்ட வேடுவனைக் கவர இயம தூதுவர்கள் வந்தபொழுது நாங்கள் மிக அடிக்க அவர்கள் அஞ்சி ஓடியதை இயமன் மறந்தான்போலும்! முன்னொரு நாளில் தன் புதல்வனுக்குத் தீமை குறித்து 'ஹர' என்று மூன்று தரஞ் சொல்லி* இறந்த வேடனை இயம தூதுவர்கள் வந்து பற்றும்போது அவர்களைக் காலா லுதைத்து விடுத்தவன் யான் அன்றோ?

அக்கா லத்தின் எல்லையின் மைந்தற் கரவென்றே
முக்கா லோதித் தீமை குறித்தே முடிவோனை
மெய்க்கா லன்தூ தாயினர் பற்ற விடுவித்தேம்
இக்கால் கொண்டே அவரை உதைத்தேன் யானன்றோ?

விபூதி உருத்திராக்கம் அணிந்து சிவநாமத்தை உச்சரிப் பவர்களிடம் அணுக அஞ்சும் இயமன், ஆறுமுகக் கடவுளின் அடியார்களாகிய என் தம்பியர்களின் உயிர்களை எங்ஙனம் கவர்ந்தானோ? சேற்றிலாழ்ந்த யானையை ஒரு சிறு புள்ளும் கொல்லாதோ!" என்று கூற்றுவன்மீது வீரவாகு தேவர் மிகச் சினந்தார்.

நீறு முகத்தார் கண்டிகை பூண்டார் நிமலன்பேர்
கூறு முகத்தார் தம்புடை செல்லக் குலைகூற்றன்
ஆறு முகத்தான் அடியவர் ஆவி யலைத்தானே
சேறு முகத்தாழ் கரியை அடாதோ சிறுபுள்ளும்?

**எழுவர் உயிர் பெற்று எழுதல்**

அப்போது வீரவாகு தேவர் எழுந்து முதுகிற் கட்டியுள்ள தூணியில் ஒரு கணையை எடுத்து, அதன் தலையில் இயமன் காணும்படி தமது நகத்தினால் பின் வருமாறு எழுதினார். "வேற்படை ஏந்திய முருகக் கடவுளுக்குத் தம்பியாகிய வீர வாகு என்னும் யான் எழுதி விடுத்ததைக் கூற்றுவன் காண்க:

---

* ஒரு வேடன் தன் மகனுக்கு இறுதிக்காலத்தில் ஆகர (பிடுங்கு), பிரகர (அடி), சங்கர (கொல்) என்னும் சொற்களைக் கூறி, அதன்படி நட என்று கட்டளையிட்டு மாண்டான். அச் சொற்கள் தீமை குறித்தனவாயி னும் சிவநாமம் அடங்கப் பெற்றமையால் அவன் சிவகதி அடைந்தான் என் பது இங்குக் குறித்த வரலாறு ஆகும்.

நீ என்னுடைய தம்பியர்களின் உயிரைக் கவர்ந்தாய். இஃது உனக்கு நன்றன்று, அவர்கள் உயிரை விரைவில் விடுவிப் பாயாக" என்று எழுதி வில்லை வளைத்து அக்கணையைப் பூட்டி ஆறுமுகக் கடவுளைத் தியானித்துத் துதித்து இயமபுரத்தை அடையும்படி செய்தார். அக்கணை ஏழு கடல்களையும் கடந்து மானசோத்திர மலைக்குத் தெற்கின்கண் உள்ள இயமபுரத்தை அடைந்து இயமனுக்கு முன்னே விழுந்தது. இயமன் அதனை எடுத்து எழுதி இருந்தனவற்றைப் படித்துப் பார்த்தான்; துன்பமுற்று அஞ்சினன்; "வீரவாகு தேவருடைய தம்பியர் கள் இங்கே வந்திலர்; அவர்கள் எங்குச் சென்றார்களோ" என்று சிந்தித்தான். அவர்கள் திருக்கயிலைமலையில் இருப்பதாக அறிவு நோக்கில் கண்டுணர்ந்தான்.

உடனே இயமன் எருமைக்கடாவில் ஏறித் தன் படைகள் சூழத் தன்னகரை நீங்கித் திருக்கயிலை மலையை அடைந்தான். அப் பொழுது வீரவாகு தேவருடைய தம்பியர்கள் எழுவரும் அக்கினி முகனுடைய போரில் இறந்த சேனை வீரர்கள் சூழ, அம்மலைச் சார லில் விஞ்சையர்களுடைய ஆடல் பாடல்களைக் கேட்டுக்கொண்டு மகிழ்ந்திருந்தார்கள். இயமன் அவர்களைக் கண்டு முன் சென்று வணங்கி, "எல்லாமறிந்த பெரியோர்களே! வீரவாகு தேவர் உங்களைத் தேடுகின்றார். நீங்கள் இங்கு மகிழ்ந்திருப்பது என்ன? உங்கள் செயல் மிகவும் நன்றாயிருக்கிறது; விரைந்து பூதர் களோடு நீங்கள் எழுவரும் புறப்படுங்கள்" என்று கூறினான். அவர்கள் அதனைக் கேட்டுப் பூதர்கள் சூழ, நொடிப்பொழுதில் வீரமகேந்திர புரியிலுள்ள போர்க்களத்தை அடைந்தார்கள்; தம் தம் உடலில் புகுந்து எழுந்தார்கள். தேவர்கள் பூமழை பொழிந்து ஆர்த்தார்கள். எழுவரும் உயிர்பெற்று எழுந்து, வீரவாகு தேவரின் திருவடிகளை வணங்கினார்கள். வீரவாகு தேவர் அவர்களை மார்போடணைத்துத் தழுவிப் பாம்பு உண்டு மிழ்ந்த சூரியனைப்போல விளங்கினார்; துன்பமும் நீங்கினார். மகிழ்ச்சியும் அடைந்தார். எழுவரும் பிறரும் உயிர் பெற்று எழுந்ததை வீரபுரந்தரரும், இலக்கம் வீரரும், பூதகணத்தலை வரும் கண்டு மிக்க மகிழ்ச்சி யுற்றார்கள்.

அப்போது இயமன் சேனைகளோடு அங்கு வந்து வீரவாகு தேவரை வணங்கி, "வீரரே! தமியேனைக் கோபிக்காதீர். முன்

னர் நிகழ்ந்த வரலாற்றைக் கேட்பீராக. எழுவரும் தங்கள்உடலை விடுத்துத் திருக்கயிலாய மலையை அடைந்து பூதர்கள் சூழ வீற்றிருந்தனர். அறிவை மயக்கும் பெருந்துன்பம் அடைந்ததால் நீர் அதனை அறிகிலீர். விபூதி உருத்திராக்கம் அணிந்தவர்களிடத்தே செல்லுதற்கு அஞ்சும் நான் உன் தம்பியர்களின் உயிரைக் கவர்வேனு? பசியால் வருந்துபவர் தீயை உண்பரோ?

அங்க மீதினில் நீறுகண் டிகையினை அணிந்தார்
தங்கள் பாலினுஞ் செல்லுதற் கஞ்சுறுந் தமியேன்
இங்கு நின் இளை யார்உயிர் கொள்வனே? எவரும்
வெங்க னற்பொறி உண்பரோ பசிப்பிணி மிகினும்?

நீர் விடுத்த கணையை யான் கண்டு திருக்கயிலாய மலைக்குச் சென்று பூதர்களோடு உம் தம்பிமார்களை இங்கே அழைத்துக் கொண்டு வந்து விடுத்தேன்; என்மீது சினங்கொள்ளாதொழிக" என்று கூறினுன்; பின்னர் வீரவாகு தேவரிடம் விடை பெற்றுக் கொண்டு தன்னிருப்பிடஞ் சென்றான். வீரவாகு தேவர் துணைவர்கள் துதிக்கப் பூதர்கள் போற்றப் போர்க்களத்தில் நின்றார்.

### சூரபன்மன், அக்கினிமுகன் அழிந்தமையை அறிதல்

இந் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த தூதுவர்கள் சூரபன்மனின் கோயிலை அடைந்தனர்; அவனை வணங்கி, "அரசே! உன் குமாரனுகிய அக்கினிமுகன், வீரவாகு விடுத்த வீரபத்திரப் படைக்கலத்தினுல் மாண்டான்" என்று கூறினர்கள். அதனைக் கேட்டுச் சூரபன்மன் எந்நாளும் அடையாத துன்பக்கடலில் ஆழ்ந்தான்; "என் உயிரே, கண்ணே, கண்ணுள் மணியே, அக்கினி முகனே, விண்ணுலகு சென்றாயோ? நீ இறந்ததால் பகைவர்களுக்கு மகிழ்ச்சியும் எனக்குத் துயரமும் ஏற்பட்டுள்ளது. வேற்படை ஏந்திய சிவ குமாரனுக்கு முன் நீ என்னை விட்டுப்போதல் முறையாகுமோ? துன்பமுறும் யான் மலையை ஒத்த உன் அழகிய மார்பைத் தழுவும்படி வந்தருள்வாய். செய்யாய், கரியாய், என் திருவே, சிறுவா, என்னுருயிரே, விடலாய், வேற்கையாய், அரசே, களிறே, என் ஐயனே, என்னையும் நீ வெறுத்தாயோ?" என்று பலவாறு புலம்பினுன். இத்

துக்கச் செய்தியைப் பட்டத்து அரசி பதுமகோமளையும் அறிந்து துன்பக்கடலுள் ஆழ்ந்தாள். அன்றைக்கு அந்நகர் முழுவதும் அழுகையொலி மிகுந்தது.

திருவிருத்தம்–242

ஆகத் திருவிருத்தம்–1,545

——oo——

## 9. மூவாயிரர் வதைப் படலம்

### [நாலாநாட் பிற்பகல் யுத்தம்]

**மூவாயிரர் போருக் கெழுதல்**

சூரபன்மன், அக்கினிமுகன் இறந்தமையைக் குறித்து ஆற்ருது வருந்திக் கொண்டிருந்தான். அப்போது, அவன் குமாரர்களாகிய **மூவாயிரர்** அவனை அடைந்து, "எம் தந்தையே வலிமைமிக்க இலக்கம் வீரர்களும், எண்மரும், வீரவாகுவும், பிறரும் போருக்கு வந்தபொழுது அக்கினிமுகன் ஒருவனை அனுப்பினுய். அவன் ஒருவன் தனித்து நின்று போர்செய்ய முடியுமா? மெலிந்தவர்களானுலும் மிகப் பலர் ஒன்று சேர்ந்தால் வலியவர்களையும் வெல்லுவர். இதனை நீ அறியாயோ? அவன் ஒருவன் இறந்ததற்காக வருந்தாதே. நாங்கள் இருக்கிருேம். இரணியன் இன்னும் இருக்கின்ருன். பானுகோபன் இருக்கின்ருன். இவ்வளவு பேர்களும் இருக்கையில் உனக்கு ஒரு குறையும் உண்டோ? நால்வகைச் சேனைகள் அழிந்தன என்று சிறிதும் வருந்தாதே. உன் காலாட் படைகளுக்கு அழிவு இல்லை. இற்றைநாள் வரையும் இறந்த சேனைகள் மேரு மலையில் ஒரு தினையளவு குறைந்ததற்கு ஒப்பாகும். தேவர்களைப் போல் இறந்தவர்களை நினைத்து வீணில் வருந்தாதே. நாங்கள் இந்திரன், நான்முகன், திருமால், இயமன், வாயு, அக்கினி முதலிய யாவரையும் விரைந்து பிடித்துவருவோம். நீ எதனை நினைத்தாலும் விரைவில் செய்து முடிக்க நாங்கள் இருக்கிருேம். எங்களைப் போருக்கு அனுப்புவாயாக. நாங்கள் விரைந்து சென்று பூதர்களையும், கந்தனையும், மற்றவர்களையும் ஒரு நாழிகையினுள் வென்று வருவோம்" என்று கூறினுர்கள்.

சூரபன்மன் தன் மக்கள் கூறியதைக்கேட்டு, "மைந்தர்காள்! நீவிர் கூறியது நன்று போருக்குச் செல்லுங்கள்"

என்றான். அவர்கள் சூரபன்மனை வணங்கி விடைபெற்றுக் கொண்டு அவ்விடத்தைவிட்டு நீங்கினார்கள்; பலவகை அணி கலன்களைப்பூண்டு படைக்கலங்களைத் தாங்கிப் போர்க்கோலம் பூண்டு தேரில் ஏறினார்கள். சேனைகள் வந்து அவர்களைச் சூழ்ந்தன. சங்கம், தண்ணுமை, படகம், பேரி முதலிய ஒலிக் கருவிகள் இடிபோல முழங்கின. யானை, தேர், குதிரை, காலாட் படை ஆகிய இவை நெருங்கி ஆரவாரஞ் செய்து புறப்பட்டன; தேர்க்கொடிகள் ஆடின; பருந்துகளும் காகங்களும் கூடின; பேய் கள் கூத்தாடின ; பூதூளி எழுந்தது. இவ்வாறாகப் போருக்குச் சேனைகள் புறப்பட்டன. மூவாயிரவரும் போர்க்களத்தை அணுகினார்கள்.

**போர் தொடக்கம்**

பூதர்களுக்கும் அவுணர்களுக்கும் போர்மூண்டது. அவு ணர்கள் வாள், வில், எழு, தண்டு, சூலம் முதலியவற்றை ஏந்திப் போரிட்டனர். பூதர்கள் சக்கரம், தண்டம், சூலம் முதலிய படைகளினாலும் மலைகளினாலும் அவுணர்கள் இறக்கும் படி போரிட்டார்கள். அவுணர்களின் உடல்கள் துண்டுபட்டு வீழ்ந்தன. குருதி வெள்ளம் கடலில் பாய்ந்தது. பேய்களும், காக்கைகளும் மொய்த்தன. அசுரர்கள் யானை தேர் முதலியவற் றோடு மடிந்தார்கள். எண்ணிறந்த பூதகணங்களும் இறந் தன. மூவாயிரவர்கள் அதனைக் கண்டு சினங்கொண்டார்கள். விற்களை வளைத்து நாணொலி செய்தார்கள். கணைகளை மழை போலச் சொரிந்தார்கள். பூதப்படைகள் நடுங்கி ஓடின. பூதப் படைத் தலைவர்கள் மூவாயிரவரை எதிர்த்தனர். கடும் போர் நடந்தது. அப்போது பூதப் படைத் தலைவர்கள் தளர்ந்து வருந்தி நின்றார்கள்.

**மூவாயிரவரும் ஆயிரவரும்**

மூவாயிரவருடைய வில்லாண்மைக்கு ஆற்றாது பூதப்படைத் தலைவர்கள் அழிந்தனர். அதனை இலக்கம் வீரர்களுள் ஓர் **ஆயிரவர்** கண்டு அக்கினிபோலக் கோபித்து, வீரவாகு தேவர் முன் சென்று வணங்கி, "அடியேங்களுக்கு இப்போரை அளித் தருளும்" என்று வேண்டினார்கள். வீரவாகு தேவர் அதற்கு

இசைந்து அனுமதியளிக்க விசயர், சயர், இடபர், கரவீரர், அதிகோரர், அசலர், அதிகுணர், வாமனர், அந்தர், அகளங்கர், அநகர், சதவலி, மாருதர், வருணர், சசிகண்டர் முதலாகிய ஆயிரவர் மூவாயிரவருடன் போர் செய்யச் சென்றூர்கள். ஆயிரவர் முருகக் கடவுளை அன்போடு வணங்கி, ஊழிக்காலத்து முகிலைப் போலக் கணைகளை மூவாயிரவரின்மேல் பொழிந்தார்கள். அவர்களுடைய வில்லின் வலிமையை மூவாயிரவர் கண்டு அளவற்ற கணைகளைத் தொடுத்துப் போர்புரிந்தார்கள். ஆயிரவர் தேர்களை மூவாயிரவர் கணைகளால் அழித்தார்கள். மூவாயிரவர்களுடைய பாதுகாப்புத் தேர்களையும் விற்களையும் ஆயிரவர் அழித்தார்கள். தேர்களின்றி நிலத்தில் நின்ற மூவாயிரவர்களை ஆயிரவர் சூழ்ந்துவந்து போரிட்டார்கள். மலைகளைப் பறித்தும் மரங்களை முறித்தும் ஆயிரவர் மார்புகளில் மூவாயிரவர் வீசிப் போர்புரிந்தனர். ஆயிரவர் அவற்றை அரை மாத்திரையில் அழித்து மூவாயிரவருடைய மார்புகளின்மேல் கணைகளைச் செலுத்தினூர்கள்; மற்றைய உறுப்புக்களையும் துளைத்தார்கள். முடிவில் விசயரை யொழிந்த ஆயிரவர்கள் வலியிழந்து மூவாயிரவருக்குத் தோற்றூர்கள்.

**விசயரும் மூவாயிரவரும் போர்புரிதல்**

தம்முடைய துணைவர்கள் தோற்று ஓடியதைக் கண்ட **விசயர்** என்னும் வீரர் சினந்து, “சூரபன்மனின் குமாரர்களாகிய மூவாயிரவரையும் நான் கொல்வேன்” என்று வஞ்சினம் கூறினூர்; சிவபெருமானூல் கொடுக்கப்பட்டதும் அழியாததும் ஆகிய தூணியிலிருந்து வில்லை எடுத்து வளைத்துக் கணைமழைகளைச் சொரிந்தார். அக்கணைகளால் தாக்குண்டு சில அவுணர்களின் கைகள் அறுந்தன; சிலர் கால்கள் அறுந்தன; சிலர் தோள்களும், சிலர் தலைகளும் அறுந்தன. அறுந்த உறுப்புக்கள் மீண்டும் தாமே வந்து கூடின. அவுணர்கள் மீண்டும் போரிட ஆரம்பித்தார்கள்; விசயர்மேல் மலைகளை வீசினூர்கள். தலைகளும், கைகளும், கால்களும் வெட்டப்பட்டு வீழ்ந்த அவுணர்கள் நான்முகனிடம் பெற்ற வரத்தால் மீண்டும் கூடப்பெற்றூர்கள். வெட்டுண்டு இறந்தவர்கள் மீண்டு வந்து போரிடுவதை விசயர் கண்டு போர் வலிமை இழந்து திகைத்தார்; “கணைகள் பட்டு

வீழ்ந்து இறந்தவர்கள் எழுந்தார்கள். இன்னும் இவர்கள்மேல் கணைகளைவிடின் என்ன பயன்? இப்பகைவர்களை இன்றைக்குக் கொல்லுதல் எனக்கு மிகவும் அரியதுபோலும். அவர்களும் என்னைக் கொல்லுதல் எளிதன்று. இவர்களை என்னால் வெற்றி கொள்ளவும் முடியவில்லை. நான் வலிமை இழந்து இறக்கவும் முடியாது. 'பகைவர்களை வென்று வருவேன்' என்று வஞ்சினம் பேசிய நான் அவர்களைக் கொல்லாது வீரவாகு தேவரிடம் மீளலாமா? 'பகைவர்கள் வரத்தையுடையவர்கள்; மாயங்களையுடையவர்; மிக வலியர்' என்று போவேனாயின், 'இவன் தோற்றான்' என்று என்னைச் சேர்ந்தவர்களும் பழிப்பார்கள். அன்றியும், என்பகைவர்கள் நான் மீள்வதற்கு விடுவார்களோ? நான் இன்னும் என் உணர்ச்சியோடு இருக்கிறேன்; பித்தனைப் போல மயக்கங்கொள்ளவில்லை. நான் புகழைப் பெறாது வசையைப் பெற்று நிற்கிறேன். நான் உயிரோடு இருந்தும் ஒரு செயலும் ஆற்றாது இருக்கிறேன். நான் உய்ய ஒரேவழி உண்டு. எனக்கு ஆறுமுகக் கடவுளை அன்றி வேறு துணை இல்லை" என்று மனம் தேறினார்.

விசயர் ஆறுமுகக் கடவுளின் திருவடிகளை நினைத்துக் கண்களில் நீர் பெருகத் துதித்தார். அருள் வள்ளலாகிய ஆறுமுகக் கடவுள் விண்ணில் தோன்றி, "விசயனே! இதனைக் கேட்பாயாக: பகைவர்களாகிய இவர்களைக் கொல்ல நினைத்து இவர்களின் கால்களையும், கைகளையும், தலையையும் அறுத்தாய். வெட்டுண்டனவெல்லாம் மீளவும் வளர்ந்தன. இவ்வவுணர்கள் பெற்ற வரத்தை நீ அறியாய். ஆதலால், இவர்களோடு போரிட்டு வெற்றியடைய முடியவில்லை. இனி மனந்தளராதே; பல படைக்கலங்களை விடுத்துப் பல நாள் போரிட்டாலும் இவர்கள் இறக்கமாட்டார்கள். வைரவப் படைக் கலத்தால் அன்றி வேறு எதனாலும் இவர்களை அழிக்கமுடியாது. இது நான்முகன் முன்னாளில் இவர்களுக்கு அளித்த வரமாகும்" என்று அருளிச்செய்து வைரவப் படைக்கலத்தை அளித்து, "இதனை விடுத்து இவர்களை அழிப்பாயாக" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

**மூவாயிரவர் அழிதல்**

ஆறுமுகக் கடவுள் திருவாய் மலர்ந்தருளியவைகளை விசயர் கேட்டு மகிழ்ந்தார். அன்புடனே வைரவப் படைக்கலத்தைப் பெற்றுப் பூசை செய்தார். **உன்மத்தன்** என்னும் அவுணப் படைத் தலைவன் அதனைக் கண்டு "இவன் நம்மவர்களெல்லாம் இறக்கும்படி ஒரு படையினால் கொல்வான்போலும். அதன் முன் ஒரு மாயப் படையால் இவனை அழிப்பேன்" என்று எண்ணி மாயப் படையை விடுத்தான். விசயர் அதனைப் பார்த்து, வைரவப் படையைச் செலுத்தினர். அது விரைந்து சென்று எங்கும் இருளைப் பரப்பியது; மாயப்படையை அழித்தது; மூவாயிரவரைச் சூழ்ந்து கொன்று மீண்டது. மூவாயிரவர் ஒரு கணப்பொழுதில் இறந்தனர். விசயர் அதனைக் கண்டு முருகக் கடவுளைத் துதித்தார். பூதர்கள், மதியைக் கண்ட கடல் போல் ஆரவாரித்தார்கள். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். எஞ்சிய அவுணர்கள் நாலா திசைகளிலும் சிதறி ஓடினார்கள்.

இந் நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்த தூதுவர்கள் சூரபன்மனிடம் போய் அவனை வணங்கி, "அரசர்க்கரசே! இலக்கம் வீரர்களுள் ஒருவனே உன்னுடைய மூவாயிரம் புதல்வர்களையும் கொன்றான். இது பொய்யன்று; மெய்தான்" என்றார்கள். அதனைக் கேட்டுச் சூரபன்மன் அரியணையினின்றும் வீழ்ந்து அலறினான்; அருவிபோலக் கண்ணீர் வடித்துக் கதறினான். அவனைச் சூழ்ந்தோர் அனைவரும் புலம்பினார்கள். அப்பொழுது **கதிரவன் மேற்றிசையில் மறைந்தான்.**

திருவிருத்தம்-88
ஆகத் திருவிருத்தம்–1,633

——oo——

# 10. தருமகோபன் வதைப் படலம்

## [ நாலா நாள் இரவு யுத்தம் ]

**தருமகோபன் போருக்கெழுதல்**

மூவாயிரம் புதல்வர்களும் இறந்தமையைச் சூரபன்மன் நினைத்து நினைத்து வருந்திக்கொண்டிருந்தான். அப்போது தலைமை அமைச்சன் **தருமகோபன்** சூரபன்மனிடம் வந்து

வணங்கி, "அரசர்க்கரசே! நீ துன்புற்று மெலிவாயாயின் நம்முடைய பகைவர்கள் மகிழ்வார்கள்; தேவர்கள் நகைப்பர்; நம்மவர்கள் நலிவர். போர் முனையிலே தம்முடைய தந்தை இறந்தாலும், மைந்தர் இறந்தாலும், சுற்றத்தார்கள் இறந்தாலும் ஆற்றல் மிகுந்த வீரர்கள் சிறிதும் தளர்ச்சி அடைய மாட்டார்கள். நம்மவர்களின் உயிர்களைக் கவர்ந்த இயமன் இருக்கிறான். முன்போல் யாவற்றையும் உண்டாக்குவதற்கு நான்முகன் இருக்கிறான்; நாமும் இருக்கிறோம்; நம்முடைய வலிமையும் இருக்கிறது. இங்ஙனம் எல்லாம் இருக்க நாம் ஏன் சோர்வு அடையவேண்டும்? அளவில்லாத செல்வங்கள், அழியாத ஆயுள், குறையாத வளமை, எங்கும் செல்லத்தக்க ஆஞ்ஞாசக்கரம், இந்திரஞாலத் தேர் ஆகிய இவையெல்லாம் இருக்கத் தேவர்களைப்போல் ஏன் புலம்ப வேண்டும்? ஆற்றல் அற்றவர்கள் அடைகின்ற துன்பத்தை நீ அடையாதே" என்று பலவாறு கூறித் தேற்றினான். சூரபன்மன் சிறிது துன்பம் நீங்கி, "கூற்றுவன்போல் நானே சென்று பகைவர் கூட்டத்தை அழித்து வருகிறேன்" என்று சினந்து போருக்குப் புறப்பட்டான். அப்பொழுது தருமகோபன் சூரபன்மனை வணங்கி, "அரசர்க்கரசே! நீ இங்கே இருப்பாயாக. யான் சேனைகளோடு விரைந்து சென்று பகைவர்களை வளைத்துக்கொல்வேன்" என்று வேண்டினான். சூரபன்மன் மீண்டு வந்து தன் அரியணையில் அமர்ந்தான். தருமகோபன் சூரபன்மனிடம் விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்தான். போர்க்கோலம் பூண்டு **புண்டரீகம்** என்னும் திக்கு யானையைக் கொண்டுவருமாறு ஏவலர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் அவ்வாறே அதனைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். தருமகோபன் அமைச்சர்கள் முதலாயினோர் சூழ அந்த யானையின்மேல் ஏறினான். படகம் பேரி முதலிய ஒலிக் கருவிகள் முழங்கின; தீபங்கள் விளங்கின; யானைகளும், குதிரைகளும், தேர்களும் நெருங்கி ஒலித்தன; அவுண சேனைகள் யாவும் நிறைந்தன. நால்வகைப்படைகள் சூழப் புண்டரீகம் என்னும் தென் கீழ்த்திசை யானையின் மேல் ஏறித் தருமகோபன் விரைந்து சென்றான். அதனைக்கண்ட தேவர்கள், "தருமகோபன் வில்லேந்திப் புண்டரீகம் என்னும் யானையில் ஊர்ந்து போர்புரிவானாயின், இவனை வெற்றி கொள்

ளுதல் அரிது" என்று வருந்திக் கூறினர். தருமகோபன் பல தெருக்கள் வழியாகச் சேனைகள் சூழ, வீரவாகு தேவர் நிற்கின்ற போர்க்களத்தை அடைந்தான். பூதர்கள் தருமகோபனை எதிர்த்து ஆரவாரஞ் செய்தார்கள்.

### தருமகோபன் மனத்திடங் கொள்ளல்

ஆரவாரஞ் செய்யும் பூதர்களையும், இலக்கத்தெண்மர்களையும், வீரவாகு தேவரையும் தருமகோபன் கண்டான்; "நம்முடைய வாழ்வு அழிந்ததோ!" என்று இரங்கினன்; "பகைவர்கள் எதிர்த்து வரும்போது அவர்களைக் கண்டு அஞ்சுதல் பழியாகும்; போர் செய்வதே முறை" என்று துணிந்தான்; "எண்ணற்ற சேனைகளும், வில்லும், ஆயுதங்களும், புண்டரீகமும் இருக்க நாம் அஞ்சவேண்டுவதில்லை. யான் பகைவர்களை வென்றாலும் சரி; புறங்கொடுத்தாலும் சரி; அல்லது இறந்தேபோயினும் சரி. இனி, யான் சிறிதும் மனம் தளர மாட்டேன்" என்று தேறிப் போருக்கெழுந்தான்.

### இருதிறப் படைகள் போரிடுதல்

அப்போது அவுண சேனைகளும், பூத சேனைகளும் எதிர்த்துப் போரிட்டன. பூதர்கள் எழு, தண்டு, சக்கரம், மழு, மலை, முதலியவற்றைக்கொண்டு போரிட்டனர். அவுணர்கள் அம்பு, வேல், வாள், கழுமுள், தண்டு, பிண்டிபாலம், எழு முதலியவற்றைக்கொண்டு போரிட்டார்கள். அவுண அமைச்சர்களும், இலக்கம் வீரர்களும், விற்களை வளைத்துக் கணைமழைகளைப் பொழிந்து போரிட்டனர். இருபக்கங்களிலிருந்தும் தெய்வப் படைக்கலங்களை மாரிபோலப் பெய்து போரிட்டார்கள். கைகளும், தலைகளும் இழந்து அளவற்ற அவுணர்கள் இறந்தார்கள். யானைகளும், குதிரைகளும், தேர்களும் அழிந்தன. பூதர்களும் இறந்தார்கள். இரத்தம் பெருகியது. பேய்கள் நிறைந்தன. இலக்கம் வீரர்கள் வலியிழந்து நொந்தார்கள். அமைச்சர் போரில் வீரத்தோடு முயன்று நின்றனர். அப்பொழுது **வீரமார்த்தாண்டர்** அதனைக் கண்டு வெகுண்டு இடிபோலப் பெருமுழக்கம் செய்து வில்லை வளைத்துக் கணைகளை அவுணர்களின்

உடல்களில் செலுத்தினர். அமைச்சர்கள் கைகளையும், கால்களையும், தலைகளையும் இழந்து இறந்தார்கள். அவுண சேனைகளும் அழிந்தன. இறவாது எஞ்சிய அவுணர்கள் வருந்திவந்து போரிட்டார்கள். பூதர்கள் வெகுண்டு அவர்கள்மேல் மலைகளை எடுத்து எறிந்தனர். போருக்கு உடைந்து ஓடிய அவுணர்களைப் பூதர்கள் தொடர்ந்து பற்றிக் கொன்றார்கள்.

### தருமகோபன் போர்

அப்போது தருமகோபன் தன்னுடைய படை அழிந்தொழிதலைக் கண்டான்; வில்லை வளைத்து அளவில்லாத கணைகளைப் பூதர்கள்மேல் செலுத்தினன். பூதர்கள் நடுங்கி மெலிந்தனர். தருமகோபனின் யானை பூதர்களைத் துதிக்கையால் தூக்கி வீசியது; கோடுகளினால் குத்தியது; கால்களினால் மிதித்து உழக்கியது; வாலால் அடித்தது; துதிக்கையால் எற்றியது. பூதர்கள் மலைகளை யானையின்மேல் எறிந்தனர். சிலர் கணைகளைச் செலுத்தினர். அதன் உடல் முழுவதும் குருதி பெருக்கெடுத்தோடியது. ஆயினும் யானை தன் வலிமை குன்றாது, பூதசேனைகளைத் தாக்கிக் கொன்றது. மற்றைய யானைப் படைகளும் பூதர்களைக் கொன்றன. புண்டரீகம் என்னும் யானை புரிந்த போரால் பூதசேனைகள் உடைந்தன. வீரமார்த்தாண்டர் அதனைக் கண்டு சினந்து அளவற்ற அக்கினிக் கணைகளைப் புண்டரீகத்தின்மேல் செலுத்தினர். யானை ஒரு முகூர்த்தம் சோர்வுற்று நின்றது. அதனைத் தருமகோபன் கண்டு வீரமார்த்தாண்டர் நுதலில் நூறு அம்புகளைச் செலுத்திக் குருதி பெருகும்படி செய்தான். தருமகோபன் வேற்படை ஒன்றை வீரமார்த்தாண்டர்மீது செலுத்தினன்; வீரபுரந்தரர் விடுத்த கணைகளைக் குறைத்தான். தருமகோபன் விடுத்த வேறு கணைகள் வீரபுரந்தரரின் மார்பில் பட்டுக் கீழே விழுந்தன. தருமகோபன், வீரபுரந்தரர் மேல் ஒரு தண்டாயுதத்தை எடுத்து எறிந்தான். வீரபுரந்தரர் துன்பமுற்று மிக வருந்தினர்.

### வீரவாகுவும் தருமகோபனும்

வீரவாகு தேவர் தருமகோபன் செய்கையை உற்று நோக்கினர்; விரைந்து வீரர் கூட்டத்தை நீக்கித் தருமகோபன் முன்னே

வந்தார். அவரைத்தருமகோபன் சினத்துடன்உருத்துப்பார்த்து, "நீயா என்னை வலியுடன் தாக்க வந்தாய்? நான் உன்னைக் கொல்வேன்; நீ காத்துக்கொள்ள முடியுமானால் காத்துக்கொள்" என்று கூறினான். வீரவாகு தேவர், "நீ கூறியது நன்று! எல்லோரிடத்திலும் வெற்றியைக் கண்ட நான், உன்னிடத்தில் தோல்வியடைய மாட்டேன். வெற்றியே காண்பேன். உன்னுடைய வலிமையையும், வெற்றியையும், வரத்தையும் இன்றே அழிப்பேன்" என்றார். தருமகோபன் யானையின் மேலிருந்து வில்லை வளைத்து நாணொலி செய்தான்; கணைகளை விடுத்து வீரவாகு தேவருடைய உடலை மறைத்தான். அக்கணைகள் அவர்மேல் பட்டு நுனி மழுங்கிப் பயனின்றி வீழ்ந்தன. வீரவாகு தேவர் சினந்து ஒரு வேற்படையை எடுத்துத் தருமகோபனின் மார்புமேல் எறிந்தார். தருமகோபன் பல கணைகளை எய்தான். வீரவாகு தேவர் எய்த வேற்படை, தருமகோபன் செலுத்திய கணைகளை அழித்து அவன் மார்பில் புகுந்து வெளியே சென்றது. தருமகோபன், மார்பினின்றும் இரத்தம் வடிய அறிவிழந்தான்; தருமகோபனுடைய நிலைமையைப் புண்டரீகம் என்னும் யானை உணர்ந்தது. வீரவாகு தேவரைக் கொல்ல எண்ணியது; அவருடைய தேரைத் தன் கோடுகளினால் தாக்கிப் போர்க்களத்தில் கிடந்த ஒரு எழுப்படையை எடுத்துத் தேர்ப்பாகன் இறக்கும்படி அடித்தது. வீரவாகு தேவர் வேறொரு தேரின்மேல் பாய்ந்து, தன்மேல் வந்த யானையின் துதிக்கையை ஒரு கையால் பிடித்து மற்றொரு கையால் அதன் கன்னத்தில் அடித்துத் தூக்கி வெகு தொலைவில் எறிந்தார். யானை விண்ணுலகு சென்று மீண்டும் போர்க்களத்தில் வந்து விழுந்தது. அப்பொழுது தருமகோபன் முன்பு நீங்கிய அறிவு வரப்பெற்று, "யானையை இழந்தேன் போலும்" என்று கூறித் தன் முடியும் அணிகளும் சிதர யானையோடு சோர்ந்து கீழே வீழ்ந்தான். வீழ்ந்த யானை எழுந்து மிகப் பதைபதைத்து வருந்தி ஒரு பக்கம் சென்றது. தருமகோபன் அறிவு தெளிந்து எழுந்து ஒரு தண்டை எடுத்து வீரவாகு தேவர் மார்பில் எறிந்தான். அவர் அதனைத் தம் வாளால் வெட்டி வீழ்த்தினார். வீரவாகுதேவரின் மேல் குலிசத்தை வீசினான். வீரவாகு தேவர் அதனைக் கையால் பற்றித் தருமகோபனின் மார்பில் அடித்தார். தருமகோபன் அடியற்ற மரம்

போல் வீழ்ந்தான். வீரவாகு தேவர் தருமகோபனின் மார்பில் உதைத்தார். தருமகோபன் இறந்தான். அவனுடைய அவுணப் படைகள் அழிந்தோடின.

**புண்டரீகம் எழுந்து தன் திசை அடைதல்**

முன்னர் வீழ்ந்தயர்ந்த புண்டரீகம் என்னும் யானை உயிர்த்து மெல்ல எழுந்தது. தருமகோபன் இறந்ததைக் கண்டு வருந்தியது. வீரவாகு தேவரை அடைந்து, "எம்பெருமானே! கோபங் கொள்ளாதே. சிறியேன் சொல்வதை அருள் கூர்ந்து கேட்பீராக. நான் உலகத்தார் துதிக்கும் புண்டரீகம் என்னும் பெயருடையவன்; திசையைக் காவல் செய்பவன் ; கீழ் மகனாகிய இத்தருமகோபன் சிறையில் பல நாட்கள் அகப்பட்டு, அவனை இற்றை நாள் வரையில் சுமந்து வந்தேன்; அவனுடைய ஏவல்கள் பலவற்றையுஞ் செய்தேன். அவனுடைய ஏவலை நான் மறுத்திருப்பின், அவன் என்னைக் கொன்றிருப்பான். முன்னர் எட்டுத் திசைகளிலுமுள்ள இராட்சதர்கள் தன்னை இகழ்ந்தார்கள் என்று கோபங்கொண்டு, என்மீதேறிச் சென்று அவர்களையெல்லாம் கிளையோடு அழித்தான். அத்தகைய தருமகோபனை நீரே கொன்றீர். வேறு யாரால் அவனைக் கொல்ல முடியும்! நீர் அவனைக் கொன்றமையால் தேவர்கள் கவலை தீர்ந்தார்கள்; யானும் உய்ந்தேன். முன் செய்த பாவத்தால் அவுணர்கள் சிறையிலகப்பட்ட நான், உன்னை இப்போது அடைந்து உய்ந்தேன். நான் என்ன தவம் செய்தேனோ! அடியேன் திசையைக் காக்கும்படி செல்வேன்" என்று கூறி வணங்கியது. வீரவாகு தேவர் அம்மொழிகளைக் கேட்டு, "நீ உன்னுடைய இடத்திற்குச் செல்வாயாக" என்று விடை கொடுத்தனுப்பினர். புண்டரீகம் அவுணர்களுக்கு அஞ்சாது வழிக்கொண்டு தன்னுடைய தென் கீழ்த்திசையை அடைந்து மகிழ்ந்திருந்தது. பூதர்கள் தருமகோபனைக் கொன்ற வீரவாகு தேவரின் தோள் வலிமையைப் புகழ்ந்தார்கள். போர்க்கள நிகழ்ச்சியை அறிந்த தூதுவர்கள் விரைந்து சூரபன்மனிடம் சென்று, "அரசர்க்கரசே! தருமகோபன் வீரவாகுவோடு போரிட்டு இறந்தான். நம் சேனைகளும் அழிந்தன. அவன் யானையாகிய புண்டரீகமும் தன்னுடைய இருப்பிடத்திற்குப் போய்விட்டது" என்றனர்கள். சூரபன்மன் அதனைக் கேட்

டுத் துன்பக்கடலில் ஆழ்ந்தான்; உயிரும் உடலும் துடிக்கப் புலம்பி அழுது, அறிவிழந்து சித்திரப்பதுமைபோல் அசையாமல் இருந்தான்.

திருவிருத்தம்–80
ஆகத் திருவிருத்தம்–1,713

——oo——

## 11. பானுகோபன் வதைப் படலம்

[ ஐந்தாம் நாள் யுத்தம் ]

### தூதுவர்கள் பானுகோபனிடம் நிகழ்ந்தவை கூறுதல்

சூரபன்மன் துன்பம் மிகுந்திருந்தான். மறுநாட் காலையில் தூதுவர்கள் சிலர் பானுகோபனிடம் சென்று, "அரச குமாரனே! முன்னர் நீ மாயப் படையைச் செலுத்தி வீரவாகுவையும் அவன் படைகளையும் மயக்கி நன்னீர்க்கடலில் சேர்த்தாய். அதனைத் தேவர்கள் ஆறுமுகக் கடவுளிடம் தெரிவித்தார்கள். ஆறுமுகக் கடவுள் பாசறையிலிருந்துகொண்டு வேற்படையைச் செலுத்தினார். அது விரைந்து ஆறு கடல்களையும் தாண்டி நன்னீர்க்கடலை அடைந்தது. மாயப் படைக்கலம் வேற்படையின் வரவைக்கண்டு வலி அழிந்தது. வீரவாகு தேவர் பூதர்கள் முதலியவர்கள், மயக்கம் தெளிந்து இங்கே மீண்டு வந்தார்கள். வேற்படை அவர்களுக்கு அருள்புரிந்து கந்தவேள் இருந்த இடத்திற்குத் திரும்பி வந்தது. வீரவாகு முதலாயினோர் மீண்டு வந்து மதிலுட் புகுந்து நம் நகரத்தை அழித்தார்கள். அதனை உன் தந்தையாகிய சூரபன்மன் அறிந்து இரணியன், அக்கினிமுகன், மூவாயிரவர், தருமகோபன் ஆகிய இவர்களை முறையே ஒருவர்பின் ஒருவராகப் போருக்கு அனுப்பினான். அவர்களில் இரணியன் பயந்து மீன் வடிவம் கொண்டு கடலில் மறைந்தான். மற்றவர்கள் இறந்துபோனார்கள். சூரபன்மன் இவற்றையெல்லாம் அறிந்து ஆற்றாது வருந்துகிறான். இந்நகரத்திலுள்ள சேனைகளெல்லாம் அழிந்தன. பகைவர்கள் இன்னும் நம் நகரிலிருக்கிறார்கள்" என்று கூறினார்கள்.

### பானுகோபன் அறிவுரை

பானுகோபன் அவற்றைக்கேட்டு, "நம்முடைய பெரிய வாழ்க்கை முடிவுக்கு வந்துவிட்டதுபோலும்" என்று துன்ப

மும் சினமும்கொண்டு சூரபன்மனின் கோயிலை அடைந்தான்; தன் தந்தையாகிய சூரபன்மனைக் கண்டு வணங்கி, "அரசர்க் கரசே! நான் கூறும் உறுதிமொழிகளை நன்கு கேட்பாயாக; நான் மாயவள் தந்த படையினால் வீரவாகு முதலியவர்களை நன்னீர்க் கடலில் மயக்கிக் கிடத்தினேன். ஆறுமுகக் கடவுளிடம் தேவர்கள் சென்று முறையிட்டார்கள். அப்பொழுதே முருகக் கடவுள் வேற்படையை விடுத்து அவர்களை மீட்டார். அத்தகைய வலிமை பெற்ற பாலகனை நாம் கனவிலும் வெல்ல முடியாது. எல்லாம் தெரிந்த உனக்கு நான் சொல்வது என்ன இருக்கிறது? முதனாள் நீ ஆறுமுகக் கடவுளோடு போர் செய்யச் சென்றாய். வலிமை இழந்து புறங்கொண்டு திரும்பினாய்; வில்லை இழந்து, மானத்தை இழந்து தோற்று வந்தாய். முருகவேள் இன்னும் கோபங்கொள்ளவில்லை. அவருக்குக் கோபம் எழுந்தால் அதனை யாரால் தாங்கமுடியும்? தாரகாசுரனையும் கிரவுஞ்சமலையையும் அழித்த வீராதி வீரரை வெல்பவர் யார்? விலங்குகளைக் கொன் றவர் புதரிலிருந்த புலியால் இறந்ததுபோல், தேவர்களைத் துன் புறுத்திய நாம் குமாரக்கடவுளால் கொல்லப்படுவோம்.

புல்லி தாகிய விலங்கினைப் படுப்பவர் புதலுள்
வல்லி யந்தனக் குண்டியாய் மாய்ந்திடுங் கதைபோல்
எல்லை யில்பகல் அமரரை அலைத்திடும் யாமும்
தொல்லை நாள்வலி சிந்தியே குமரனால் தொலைந்தோம்.

யாவரும் புகழும் அப்பாலகனின் வலிமையைக் கூற இயலுமோ? அவருடைய தூதுவனாகிய வீரவாகுவை வெல்வது கூட அரிது. நீண்ட நாள் செல்லினும் முற்றுப்பெறுவ தொன்றை முழு முயற்சியோடு செய்து அடைவது பெரியோர் இயற்கை. தங்க ளால் முடிவுபெறாததை முடியுமென்று முயல்வது சிறியோர் இயற்கை.

நெடிது பற்பகல் செல்லினும் நிரம்புவ தொன்றை
இடைவி டாமலே முயன்றுபெற் றிடுகின்ற தியற்கை;
உடல்வ ருந்தியும் தங்களால் முடிவுறா ஒன்றை
முடியு மீதெனக் கொள்வது கயவர்தம் முறையே.

வலிமை மிக்க புத்திரர்களை நீ இழந்தாய்; நால்வகைச் சேனை களையும் இழந்தாய். நின் குலத்தை அடியோடு அழிக்கக்

கூற்றுவன் வந்திருப்பதை நீ அறியவில்லை. நீ பாலகனிடம் பகைமேற்கொண்டாய். நான் எதிர்த்துப் போர் செய்யக்கூடிய வீரர்கள் கிடைத்தால் மனம் மகிழ்வேன். அத்தகைய பகைவர்களிடம் போருக்கு அஞ்சேன். அரசே! நீ இன்னும் வாழ வேண்டும் என்னும் ஆசையால் இவற்றைச் சொன்னேன். தேவர்களைச் சிறை விடுவிப்பாயாக. அங்ஙனம் செய்தால் ஆறுமுகக் கடவுள் நம்மிடம் உள்ள பகைமையை நீக்கித் தம் மிடத்திற்குத் திரும்புவார். உன்னுடைய வளங்கள் யாவும் அழியாது நிலைபெற்றிருக்கும் என்று கூறினான்.

உறுதி யொன்றினி மொழிகுவன் பொன்னகர் உள்ளார்
சிறைவி டுக்குதி நம்மிடைச் செற்றம தகற்றி
அறுமு கத்தவன் வந்துழி மீண்டிடும் அதற்பின்
இறுதி யில்பகல் நிலைக்கும்நின் பெருவளம் என்றான்.

**சூரபன்மன் சினங்கொள்ளல்**

பானுகோபன் கூறியவைகளைக்கேட்ட சூரபன்மன் முடியை அசைத்து எள்ளி நகையாடினான். 'நம்பீ! உன்னுடைய யோசனை நன்று! இப்பொழுது நான் எளியவர்களாகிய தேவர்களின் சிறையை நீக்கினால் என்னை அரசர்க்கரசன் என்று யார் மதிப்பர்? கூன், செவிடு, முடம், குருடு, ஊமை ஆகிய உறுப்புக் குறைவினால் உண்டாகும் இகழ்ச்சி, அவ்வுடம்பொன்றுடனே அழியும்; மானமழிந்து வலிமைகெட்டு உயிரோடு வாழ்ந்தால் அந்த வசைமொழி ஏழு பிறப்பிலும் நீங்காது.

கூனொடு வெதிரே பங்கு குருடுபே ரூமை யானோர்
ஊனம தடைந்த புன்மை யாக்கையோ டொழியும் அம்மா!
மானம தழிந்து தொல்லை வலியிழந் துலகில் வைகும்
ஏனையர் வசையின் மாற்றம் எழுமையும் அகல்வ துண்டோ?

தேவர்களும், நான்முகனும், திருமாலும், மற்றவர்களும் ஏவல் புரிய நான் அரசு செய்கிறேன். மும்மூர்த்திகளுக்கும் மேலோராகிய சிவபெருமானிடம் வரத்தைப் பெற்றேன். வலிமை இல்லாதவர்கள்போல் தேவர்கள் சிறையை நீக்குவேனா! கட்டழகு, இளமை, வலிமை, செல்வம், வீரம், சுற்றம், உடல் ஆகியவைகள் ஒன்றும் நிலையா. புகழ் ஒன்றே நிலைபெற்று

நிற்கும். பகைவர்களுடைய போரில் உயிரை விட்டாலும், தேவர்களைச் சிறையிலிருந்து விடமாட்டேன். பெரியோர்கள் உயிரையே இழக்க நேரிட்டாலும் மானத்தையே பெரிதாகக் கருதுவர். சூரன் என்னும் பெயர்பெற்ற நான் நிலையற்ற செல்வத்தை விரும்பி என் கொள்கையை விடமாட்டேன். இன்னும் ஓர் ஊழிக்காலம் உயிரோடிருந்தாலும் இறவாது இருக்கப் போகிறேனா? பிறந்தவர் இறத்தல் உறுதியாகும். திருமாலையும் வென்ற நான் நிலையற்ற வாழ்வை விரும்பி அதற்காகப் பயந்து வாழமாட்டேன். மைந்தனே! நீ அஞ்சினாய் போலும். உன் மாளிகைக்குப் போய் துயில் கொள்வாயாக. அழியாத வரம் பெற்ற நான் அழியமாட்டேன். பகைவர்களோடு போர் செய்ய நான் செல்கிறேன்'' என்று சூரபன்மன் கோபத்துடன் கூறினான்.

**பானுகோபன் போருக் கெழுதல்**

சூரபன்மன் கூறியவற்றைப் பானுகோபன் கேட்டு, "என் தந்தைக்கு வாழ வகையில்லை. யான் சொல்லியது ஒன்றையும் மனத்தில் கொண்டிலன். விதியை வென்றவர் உலகில் யாவர் உளர்? அதற்கேற்ற செயலைச் செய்வேன்'' என்று பலவாறு யோசனைசெய்தான். பிறகு தன் தந்தையைநோக்கி, "தந்தையே! சிறிதும் அறிவில்லாது நான் கூறிய தீய மொழிகளை மனத்திற் கொள்ளாது பொறுத்துக் கொள்ளும். சிறுவர்கள் தீயன சொன்னார்களாயினும் அதற்காகப் பெரியோர்கள் கோபங் கொள்வார்களோ? நீ என்மேற் கோபங் கொள்ளாதே. நம் நகரத்தை அழிக்கும் பூதகணங்களையும், வலிமையிற் சிறந்த வீரவாகுவையும் வென்று உன் மனம் மகிழச்செய்வேன். என்னைப் போருக்கு அனுப்புவாயாக'' என்று கூறி வணங்கினான். சூரபன்மன் சினந்தணிந்து மகிழ்ச்சிகொண்டான். அவன் தன் மகனைப் பார்த்து, 'மகனே! நீ கூறியது நன்று' படைகளைத் திரட்டிக்கொண்டு போருக்கு எழுவாயாக!'' என்றான்.

பானுகோபன் விடை பெற்றுக்கொண்டு மிகுந்த துன்பத்துடன் தன் கோயிலை அடைந்து, போர்க்கோலம் பூண்டான்; பல தேவர்கள் கொடுத்த படைக்கலங்களை யெல்லாம் எடுத்துக் கொண்டான். மார்பில் கவசத்தைக் கட்டினான்; விரலில்

புட்டிலைச் சேர்த்தான்; கையில் தோற்பட்டையைக் கட்டி வில்லை ஏந்தினன்; அம்புக் கூட்டை முதுகில் கட்டினன்; ஒரு பெரிய தேர்மேல் ஏறினன். அப்போது அளவற்ற நால் வகைச் சேனைகளும் வந்து சூழ்ந்தன. பலவகைப் போர்ப் பறைகள் முழங்கின. கொடிகள் சூரிய மண்டலத்தை மறைத்தன. பானுகோபன் பலகோடி தெருக்களைக் கடந்து போர்க்களத்தை அடைந்தான்; அங்கு மூவாயிரரும் பிறரும் இறந்து கிடக்கக் கண்டு வருந்தித் துன்பமுற்றான்; பிறகு பகைவர்களின்மேல் சினங்கொண்டு, "யான் பூதர்களையும், வீரவாகுவையும் இறக்கும்படி வாட்டிக் கொல்வேன்" என்று கூறினன். பூதர்கள் பானுகோபன் வரவைக் கண்டார்கள்.

**போர் தொடங்குதல்**

அவுணசேனைகளும் பூதசேனைகளும் ஒன்றையொன்று ஆரவாரத்துடன் எதிர்த்தன. போர்ப் பறைகள் முழங்கின. பூதூளி, ஆகாயத்தையும் திசைகளையும் மறைத்தது. பூதர்கள், மலைகளையும் மரங்களையும் எறிந்தார்கள். அவுணர்கள் எழு, கலப்பை, மழு, தண்டம், கணை ஆகிய இவற்றை எறிந்தார்கள். போர் கடுமையாக நடைபெற்றது. இருபக்கத்துப் படைகளும் அளவின்றி அழிந்து ஒழிந்தன. குருதி பெருக்கெடுத்து ஓடியது. பிணமலைகள் ஆகாயத்தை முட்டின. நாய்களும், நரிகளும் காக்கைகளும், பருந்துகளும் உலாவின. இருதிறத்துச் சேனை களும் போர் செய்தபொழுது பூதர்களின் தூசிப்படை முறிந்தது. பின்னணியில் நின்ற பூதர்கள் வந்துஎதிர்த்து அவுணர்களின் நால் வகைப் படைகளையும் அழித்தனர். தன் படைகள் மிகுதியாக அழிதலைப் பானுகோபன் கண்டு, "இந்தப் பூதர்களா நம்மு டைய சேனைகளைக் கொல்கின்றனர்! ஆ ஆ! இது மிக இனிது!" என்று கூறித் தேரைச் செலுத்திக் கணைகளைச் சொரிந்து விரை வில் வந்தான். அதனைப் பூதர்கள் கண்டு ஆர்த்து மரங்கள், மலைகள், சூலம், எழு, முதலாயினவற்றை எடுத்து வீசினர்கள். பானுகோபன் அவர்கள்மேல் அக்கினிக் கணைகளைச் செலுத்தி னன். பூதர்கள் விடுத்த மரம் முதலியவெல்லாம் துணிந்து துகளாயின. பானுகோபன் பூதர்கள்மீது பின்னும் அக்கினிக் கணைகளைச் செலுத்தினன். அக்கணைகள் பூதர்கள் உடல்களில் நுழைந்து துளைத்தன.

அவர்கள் உடலினின்றும் குருதி ஓடியது. அவர்கள் மனம் பதைபதைத்துப் பானுகோபனுக்குத் தோற்று ஓடினார்கள். முன்னர் பூதர்களுக்குப் பயந்து ஓடிய அவுணர்கள் பானு கோபனை வந்து அடைந்தனர்.

**பானுகோபனும் வீரவாகுவும்**

பூதர்கள் தோற்று ஓடியதையும், பானுகோபன் வெற்றி கொண்டதையும் வீரவாகு தேவர் கண்டார்; தேரில் விரைந்து சென்று ஆறுமுகக் கடவுளின் திருவடிகளைத் தியானித்து ஒரு வில்லை வளைத்தார். அதனைக் கண்ட அவுணர்கள் தண்டம், தோமரம், சூலம் முதலாகிய படைகளை அவர்மீது சொரிந் தனர். வீரவாகு தேவர் அவற்றையெல்லாம் அழித்தார்; அவர்களுடைய கால், கை, தலை, முதலாகிய உறுப்புக்கள் அறு படும்படி மேலும் கணைகளைச் செலுத்தினார். அவுணர்களின் குதிரைகளும் யானைகளும் அழிந்தன. அவுணர்களின் உடல் களில் குருதி பெருகியது. பானுகோபன் அதனைப் பார்த்து வீரவாகு தேவர்முன் சென்றான். பானுகோபன் வில்லை வளைத்து வீரவாகு தேவரை நோக்கி, "குறைவில்லாத என் சேனைகளைக் கொன்றாய். இனி நீ உயிரோடு இருத்தல் அரிது. உன்னைக் கொல்வதாகச் சபதம்செய்து இங்கு நான்வந்தேன். நீ உயிரோடு திரும்பிச்செல்வது அரிது. காலம் தாழ்த்தாது போருக்கு வருவா யாக" என்றான். பானுகோபன் கோபம் மிகுந்து ஆயிரம் கணைகளைச் செலுத்தி வீரவாகு தேவரின் மார்பைத் துளைத்தான். வீரவாகு தேவர் துன்பத்தோடு தன் வில்லை வளைத்து நாணொலி செய்து, ஆயிரங் கணைகளைப் பானுகோபன் தோள்களில் செலுத் தினார். பானுகோபன் அவற்றினால் வருந்தி, நூறு கணைகளினால் வீரவாகுவின் வில்லை முறித்தான். தேவர்கள் அதனைக்கண்டு அஞ்சினார்கள். வீரவாகு தேவர் ஒரு வேற்படையை எடுத்துப் பானுகோபன் நெற்றியில் எறிந்தார். அது நெற்றியிற் புகுந்த அளவில் இரத்தம் ஆறுபோல ஓடியது. பானுகோபன் ஓர் இறைப்பொழுது அறிவு இழந்து தேரில் நின்றான்; பிறகு உணர்வு வரப்பெற்றான். வீரவாகு தேவர் விரைவில் வேறொரு வில்லை எடுத்து வளைத்து வாயுப்படையை விடுத்தார். பானுகோபனும் அதனை விடுத்தான். வீரவாகு தேவர் அக்கினிப்படையை எடுத்

துச் செலுத்தினர். பானுகோபனும் அதனை விடுத்தான். வீரவாகுவும் பானுகோபனும் இவ்வாறு பல்வேறு தெய்வப்படைக் கலங்களைச் சிந்திக் கொண்டார்கள். பானுகோபன் கடைசியாகச் செலுத்திய திருமால் படைக்கலத்தையும் வீரவாகு தேவர் விலக்கினர். பானுகோபன் அதனைக்கண்டு, "மற்றைப் படைக்கலங்கள் பயனற்றவையாயின. ஆதலால், நான் சிவப் படைக்கலத்தை விடுப்பேன். ஆனல் அவனிடமும் சிவப் படைக்கலம் இருப்பதால் அதனாலும் பயனென்றும் ஏற்படாது. இனி மாயையினாலேயே அவனை வெல்லவேண்டும்" என்று எண்ணி, வீரவாகுவுக்கு நாற்புறத்திலும் தேருடன் சுற்றிவந்து கணைகளைப் பொழிந்தான். அக்கணைகள் வீரவாகு தேவர்மேல் பட்டன; அவர் உடலிலிருந்து இரத்தம் ஆறுபோலப் பெருகியது. தேவர்கள் அதனைக் கண்டு மனம் அழிந்தார்கள். வீரவாகு தேவர் ஞானக் கணையை வழிபாடு செய்து பானுகோபனைக் குறித்துச் செலுத்தினர். அதனால் பானுகோபனின் மாயை அழிந்தது. அவன் தேரோடு ஆகாயத்தில் வெளிப்பட்டு நின்றான். பானுகோபன் தன் மாயை அழிந்ததைக்கண்டு வருந்தி, வீரவாகு தேவரின் வலிமையை வியந்தான். முன்னர் வருத்தமுற்ற தேவர்கள் இப்போது மகிழ்ந்தார்கள். வீரவாகு தேவர் ஆகாயத்தில் நின்ற பானுகோபனை நோக்கி, "வஞ்சகனே! இனி நீ எங்குப் போவாய்? யான் உன்னை இங்கே கொல்வேன்" என்று கூறி ஆகாயத்தில் எழுந்து பானுகோபன் முன் சென்று பலகோடி கணைகளைப் பொழிந்தார். பானுகோபனும் கோபித்துக் கணைகளைச் சொரிந்தான். அவர்களுடைய தேர்கள் ஓர் இறைப் பொழுதில் ஆயிரம் நூறுகோடி சாரிகைகள் திரிந்தன. அவர்கள் இருவரும் செலுத்தும் கணைகள், எல்லாவுலகங்களில் உள்ளவர்களுக்கெல்லாம் துன்பம் விளைவித்தன. எங்கும் கணைகள் திரியும் போது தேர்கள் அழிந்தன; குதிரைகள் யானைகள் அழிந்தன; அசுரர்களின் தலைகள் வெட்டுண்டன; பூதர்களின் உடல்கள் வெட்டுண்டன. இருவரும் கடுமையாகப் போர் புரிந்தனர்.

இரு வீரர்களும் போர் புரிவதைக் கண்டு தேவர்களும் வியந்தார்கள். அப்போது, பானுகோபன் நூறாயிரங் கணைகளால் வீரவாகு தேவரின் தேரைப் பொடிபடுத்தினன். வீரவாகு

தேவர் சினந்து வானில் எழுந்து ஆயிரங் கணைகளால் பானு கோபனின் தேரை அழித்தார். பானுகோபன் வீரவாகு தேவரின் மார்பில் நஞ்சு பாய்ச்சிய இருபத்தைந்து கணைகளைத் தூண்டி ஆரவாரஞ் செய்தான். பானுகோபன் செலுத்திய கணைகளால் வீரவாகு மனம் நொந்தார். பிறகு பதினான்கு கணைகளைச் செலுத்தி அவன் முடியை அழித்தார். பானுகோபன் பதினான்கு கணைகளால் வீரவாகு தேவரின் கவசத்தை அறுத்தான். வீரவாகு தேவர் ஏழு பிறைமுகக் கணைகளைச் செலுத்திப் பானுகோபன் வில்லைத் துணித்தார். பானுகோபன் கூற்றுவனைக் காட்டிலும் மிக்க கோபம் கொண்டு, நான்முகன் முன்னாளில் தனக்கு அளித்த வேற்படையை எடுத்து, "இவனைக் கொல்" என்று கூறி விடுத்தான். வீரவாகு தேவர் ஆயிரங்கோடி கணைகளினால் அதனைத் தடுக்கும்படி செலுத்தினார். நான்முகக்கணை, வீரவாகு தேவர் விடுத்த கணைகளை அழித்து விண்வழியே வந்தது. வீரவாகு தேவர் அதன் வலிமையைக் கண்டார்; கந்தக் கடவுளின் திருவடிகளைத் துதித்தார்; சிவபெருமான் கொடுத்த வாட்படையை எடுத்து விண்வழியே வந்த வேற்படையை வெட்டி வீழ்த்தினார். அதனைக் கண்டு தேவர்கள் கூத்தாடினர்; அவுணர்கள் ஏங்கினார்கள். வீரவாகு தேவர் வாட்படையை உறையிலிட்டார். பானுகோபன் தன் வாட்படையை எடுத்து வீரவாகுவின் முன் சென்றான். வீரவாகு தேவர் வில்லை வளைத்துப் பல்லாயிரங் கணைகளைச் செலுத்திப் பானுகோபன் மார்பைக் கிழித்தார். மலையிலிருந்து விழும் அருவிபோல, அவன் உடலி லிருந்து இரத்தம் வழிந்தது. மார்பு பிளந்து குருதி பெருகி ஓடியும் கவலையுறாது, பானுகோபன் வீரவாகு தேவரை எதிர்த் துச் சென்றான்; அவருடைய வில்லை வாளால் வெட்டினான்; இடிபோல உரப்பி, வாளை வீசித் திரிந்தான்.

**பானுகோபன் அழிதல்**

வீரவாகு தேவர் உருத்திரரைப் போலக் கோபித்து வாட் படையை உருவிப் பானுகோபனைத் தாக்கினார். அவனும் வாயு வேகத்தில் எதிர்த்து வந்தான். இருவரும் கோபாவேசத்தோடு வாட்போர் புரிந்தனர்; மாறி மாறிச் சென்று கால் முதலிய அவயவங்களைத் துணிக்கும்படி வாட்படையை வீசுவர்; சூறைக்

காற்றுப் போலச் சுற்றியும், வட்டமாக வளைந்துவந்தும் போரிடுவர். பானுகோபன், வாட்போர்த் திறமையால் வீரவாகு தேவரின் வாளை விலக்கி, அவருடைய திருத்தோளில் வெட்டினான். அவருடைய தோளினின்றும் குருதி பெருகி ஓடியது. தேவர்கள், "வீரவாகு தேவர் தோற்றுவிடுவாரோ" என்று அஞ்சினார்கள். வீரவாகு தேவர் ஆறுமுகக் கடவுளின் திருவடித் தாமரைகளைத் துதித்தார்; விரைந்து வாளை வீசிப் பானுகோபனின் வலது தோளை வெட்டினார். அவன், வலது கையோடு சேர்ந்து விழும் வாளை இடது கையாற் பிடித்தான்; அடங்காத கோபத்தோடு பின்னும் போர் புரிய முயன்றான். வீரவாகு தேவர் அவனது இடது கையையும் துணித்தார். அவன் மாயப்படைக் கலத்தை எடுக்க எண்ணினான். வீரவாகு தேவர் அவனது தலையை அறுத்தார். பானுகோபனின் தலையும், புயங்களும், உடலும் பூமியில் வீழ்ந்தன. அவன் இறந்தான். அவன் உயிரை இயமன் கவர்ந்து தென்புலத்தை அடைந்தான். தேவர்களும் முனிவர்களும் வீரவாகு தேவரை 'வீராதிவீரர்' என்று புகழ்ந்தார்கள்; அவர்மேல் பூமழை பெய்தார்கள். தன்னைச் சிறைசெய்த பானுகோபன் இறந்தமையைக் கண்டு கதிரவன் கவலை நீங்கி மகிழ்ந்தான்.

**வீரவாகு தேவர் வெற்றியுடன் திரும்புதல்**

வீரவாகு தேவர் மகிழ்ந்து ஆகாயத்திலிருந்து பூமியை வந்தடைந்தார்; தம் துணைவர்களை நோக்கி, "மாயங்கள் செய்த பானுகோபனை அழித்தோம். நம் சபதம் நிறைவேறியது. நாம் சேனைகளோடு ஆறுமுகக் கடவுளை அடைந்து வணங்குவோம்; வாருங்கள்" என்றார். துணைவர்கள் அதனைக் கேட்டு அங்ஙனமே செய்ய விரும்பினர். தம்பிமார்களும், படைத்தலைவர்களும், பூதர்களும் சூழ வீரவாகு தேவர் போர்க் களத்தை விட்டு, ஏமகூடப் பாசறைக்கு வந்துசேர்ந்தார். அவர், துணைவர்களோடும் மற்றைப் படைத்தலைவர் முதலாயினரோடும் சென்று, ஆறுமுகக் கடவுளின் திருவடித் தாமரைகளைப் பலமுறை பணிந்து போற்றினர். முருகக் கடவுள் வீரவாகு தேவரைப் பார்த்து, "தம்பி! நீ பானுகோபனோடு போர் செய்து அவனைக் கொன்றாய். அது குறித்து நாம் மகிழ்ந்தோம். உனக்கு

வேண்டிய வரத்தைக் கேட்பாயாக'' என்று அருளிச்செய்தார். வீரவாகு தேவர் முருகக் கடவுளை நோக்கி, "எம்பெருமானே! நின்னையன்றி அடியேன் செய்த செயல் ஒன்றுமில்லை. ஆயினும் அடியேனுக்கு ஒரு வரம் தந்தருளல் வேண்டும். குபேரனுடைய வாழ்க்கையையும் கருதேன்; இந்திரனுடைய அரசினைக் கனவிலும் விரும்பேன்; பிரம விஷ்ணுக்கள் பெறுகின்ற பதங்களையும் பொருளென மதியேன். தேவரீருடைய திருவடித் தாமரைகளை இடையறாத பேரன்பையே அடியேன் மிக வேண்டுவேன். அந்த நல்ல வரம் முத்தியினும் அரியது. அதனைத் தேவரீரை வழிபட்டுத் தவம் புரிபவர்களும் பெறுகிலர். எளியேன் உய்யும் வண்ணம் அப்பேற்றினைத் தந்தருளல் வேண்டும்'' என்று பிரார்த்தித்தார். கந்தக் கடவுள், அங்ஙனமே வீரவாகு தேவருக்கு அருள்புரிந்தார்.

கோல நீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன் ;
மேலை இந்திரன் அரசினைக் கனவிலும் வெஃகேன் ;
மால யன்பெறு பதத்தையும் பொருளென மதியேன் ;
சால நின்பதத் தன்பையே வேண்டுவன் தமியேன்.

அந்த நல்வரம் முத்தியின் அரியதொன் றதனைச்
சிந்தை செய்திடு தவத்தரும் பெறுகிலர் ; சிறியேன்
உய்ந்தி டும்வகை அருள்செய வேண்டுமென் றுரைப்ப
எந்தை கந்தவேள் உனக்கது புரிந்தனம் என்றான்.

மற்றைய யாவர்க்கும் முருகக் கடவுள் நல்லருளைச் செய்து விடை கொடுத்தனுப்ப, எல்லோரும் அவரவர் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள்.

**சூரபன்மன் போர்ச் செய்தியைக் கேட்டல்**

பானுகோபன் இறந்தமையைக் கண்ட தூதுவர்கள் மனம் நடுங்கினார்கள். விரைந்து ஓடி மகேந்திரபுரத்தை அடைந்தார்கள்; சூரபன்மனை வணங்கி, "அரசர்க்கரசே! வீரவாகு தேவர் பானுகோபனைக் கொன்றார்'' என்று தெரிவித்தார்கள். சூரபன்மன் அதனைக் கேட்டுத் துன்பக் கடலில் ஆழ்ந்தான் ; ஓவென்று புலம்பி வீழ்ந்தான் ; பூமியில் விழுந்து புரண்டான் ; உடம்பு வியர்த்து மனம் நடுங்கினான் ; அறிவு சோர்ந்து மயங்கினான் ; கண்ணீர் வடிய, உயிர் ஊசலாட, இறந்தவர் போல

வீழ்ந்தான் ; ஒருவாறு தெளிந்து இரங்கினுன். பானுகோபனை நினைத்து, "என் மைந்தனே! மதக்களிறே! தீவினையேனுடைய சிந்தைக்குத் தெவிட்டாத தெள்ளமுதே! என் தந்தையே! தன் தந்தைக்குத் தந்தையில்லாத பாலகன் உன்னைக் கொன்ருனே? உன்னை இதற்கோ வளர்த்தேன்? அழகுமிகுந்த குமாரர்கள் பலர் இறந்தார்கள். உன்னையே என் உற்ற துணை என்று கருதி இருந்தேன். 'பகைவர்களைச் சிறை நீக்கினுல் உய்யலாம்' என்று கூறினுய். அதனையும் இகழ்ந்தேன்; உன்னைத் தோற்றேன். இனி அவற்றைப் பற்றி எண்ணுவதால் பயனென்ன? உன்னை முப்பொழுதும் மலரேந்தி வழிபட்ட தேவர்கள் இன்று முதல் பகை நீங்கி மனங்களிப்பர். உன் ஆணைக் கஞ்சி துயிலாது உழலும் திருமால், இன்றைக்கு நீ மாண்டாய் என்ற செய்தியை மகிழ்ச்சியோடு கேட்பான். சூரியனும் மகிழ்ந்து வானில் செல்வான். அசுரகுல நாயகமே! நீ எங்குள்ளாய்? என் அமைச்சர்கள் அருமைப் புதல்வர்கள் யாவரும் அழிந்தார்கள். என் துயரைத் தீர்க்க எவரும் இல்லை. 'நீ இறந்தாய்' என்று கேட்கும் நான் இறக்கவில்லை. என் மனம் வேகின்றது. மிகுந்த துன்பம் வந்தவிடத்து இறப்பதற்கு ஒரு வரத்தையும் நான் சிவபெருமானிடத்துப் பெற்றேனில்லையே" என்று இங்ஙனம் புலம்பிய சூரபன்மன் முன், அவுணர்கள் போர்க்களத்தில் இறந்துகிடந்த பானுகோபனைக் கொண்டுவந்துகிடத்தினர். சூரபன்மன் பானுகோபனின் வெட்டுண்ட உடலைக்கண்டு கலங்கி அழுதான்; "போர்க்களத்தில் உன்னைக் கொன்ற வீரவாகுவை நான் கொன்ருலன்றி என் மனத்துயர் நீங்காது" என்பான். வெட்டுண்ட தலையையும், மார்பையும், கைகளையும் முன்போல் வைத்துப் பொருத்திப் பார்ப்பான் ; மருளுவான் ; கைகளை உதறுவான் ; மனம் சோர்வான் ; வாயிலடித்துக் கொள்வான்; பூமியில் உருளுவான்; பெருமூச்சு விடுவான் ; வியர்ப்பான்.

**பதுமகோமளை புலம்பல்**

இங்ஙனம் சூரபன்மன் வருந்திக்கொண்டிருக்கும் பொழுது, பானுகோபனின் தாயாகிய பதுமகோமளை பானுகோபன் இறந்தமையை அறிந்தாள்; நிலத்தில் வீழ்ந்தாள் ; கூந்தல் சோரக் கைகளை உதறி வயிற்றில் அடித்துக் கொண்டாள்;

'இறந்த என் மகனை இனி என்று காண்பேன்?' என்று ஆவலித்து ஓடிவந்தாள். பல பெண்களும் பதுமகோமளையின்பின் ஆவலித்தோடிவந்தார்கள். பதுமகோமளை, அப்பெண்களுக்கு முன் வெட்டுண்டிறந்த பானுகோபனின்மீது வீழ்ந்து புரண்டு அழுதாள்; "நீ எதனால் இறந்தாயோ? பாவத்தினால் இறந் தாயோ? தேவர்கள் சாபத்தினால் இறந்தாயோ? மும் மூர்த்தி களின் கோபத்தினால் இறந்தாயோ? நான் ஒன்றும் அறிந்திலேன். 'வருந்துகின்ற தேவர்களுக்குத் துன்பம் செய்வது நன்றன்று' என்று நான் உன் தந்தையிடம் கூறினேன். அதனைக் கேளாது, உன்னை இழந்தார்" என்று பலவாறு புலம்பினாள். பானு கோபனின் கிளைஞர்களும் பிறரும் கன்றை இழந்த பசுவைப் போன்று கதறினார்கள். மகேந்திரபுரி அன்றைக்கு வெற்றியை இழந்து துன்பத்தில் ஆழ்ந்தது.

சூரபன்மன், அழுகை நீங்கிப் பதுமகோமளை முதலாகிய பெண்களை அவரவர் இருப்பிடங்களுக்கு அனுப்பினான்; சில அவுணர்களை நோக்கி, "என் பகைவர்கள் யாவரையும் இன் றைக்கே விரைவில் கொல்வேன். அவர்களின் இரத்தத்தைச் சொரிந்து ஒரு யாகத்தைச் செய்து இறந்த என் மகனை எழுப்பு வேன். அவன் உடலை ஓரிடத்தில் வைத்துப் பாதுகாத்து வருவீர் களாக" என்றான். அசுரர்கள் அங்ஙனமே பானுகோபனின்உடலை ஒருபக்கத்தில் கொண்டுபோய் வைத்துப் பாதுகாத்து வந்தார் கள். சூரபன்மன் சினந்தெழுந்து சில தூதர்களை அழைத்தான்; "நம் பகைவர்களை என் தம்பியாகிய சிங்கமுகனுக்கு உண வாக்குவேன்; நீவிர் ஆசுர நகரம் சென்று அங்கு அரசு செய்யும் என் தம்பியை அழைத்து வருக" என்று கட்டளையிட்டான்.

திருவிருத்தம்-209

ஆகத் திருவிருத்தம்-1,922

——oo——

## 12. சிங்கமுகாசுரன் வதைப் படலம்

### [ஆறு நாள் யுத்தம்]

**சிங்கமுகாசுரன் செய்தியை அறிதல்**

சூரபன்மன் சிங்கமுகாசுரனை அழைத்து வரும்படி கூறிய தைத் தூதுவர்கள் கேட்டு, அவனை வணங்கி மனத்தினும்

விரைந்து சென்று வடகடலில் உள்ள ஆசுர நகரத்தை அடைந்தார்கள். பல வீதிகளையும் கடந்து சென்று கோயிலுட் புகுந்து சிங்கமுகாசுரனைக் கண்டு, அவனை வணங்கி நின்றார்கள். சிங்கமுகாசுரன் தூதுவர்களைப் பார்த்து, "நீவிர் இங்கே வந்த காரணம் யாது" என வினவினான். தூதுவர்கள் அவனை நோக்கி, "நம் அரசன் சூரபன்மன் உன்னை அழைத்து வருமாறு கட்டளையிட்டான். விரைந்து வருக!" என்றார்கள். சிங்கமுகன் அதனைக் கேட்டு, அங்கே நிகழ்ந்தது யாது? கூறுங்கள்" என்றான். தூதுவர்கள் அவனை வணங்கி, "அரசே! பூமியில் வந்து உன் தம்பி தாரகனைக் கொன்ற கந்தவேள், மகேந்திரபுரியை வந்தடைந்தார். அவரை எதிர்த்துச் சென்ற நம் அரசரின் புதல்வர்களும் அமைச்சர்களும் இறந்தனர். இரணியன் கடலில் ஓடி ஒளித்தான். நமது அரசன் சூரபன்மன் இருக்கிறான். இதுவே அவ்விடத்து நிகழ்ச்சி" என்றார்கள்.

சிங்கமுகன், தூதுவர்கள் கூறியவற்றைக் கேட்டுக் கோபம் பொங்கித் தன் இருப்பிடம் விட்டு எழுந்தான். தூதுவர்களை நோக்கி, "என் சேனைகளைக் கொண்டு வருக" என்று கட்டளையிட்டான். நால்வகைச் சேனைகளும் விரைவில் அவனை வந்து சூழ்ந்தன. சிங்கமுகன், கிளைஞர்களும் படைத் தலைவர்களும் சூழ ஒரு தேரில் ஏறினான். சல்லிகை, முரசம், காளம், சங்கு முதலிய ஒலிக்கருவிகள் முழங்கின. ஒரு நாழிகைப் பொழுதினுள் சிங்கமுகாசுரன் மகேந்திரபுரியை விண்வழியாக வந்தடைந்தான். தேவர்கள் அதனைக் கண்டு அஞ்சி ஓடினார்கள்.

**சிங்கமுகன் சூரபன்மனைக் காணுதல்**

சிங்கமுகன் சூரபன்மனுடைய கோயிலின் வாயிலை அடைந்து தேரினின்றும் இறங்கி உள்ளே சென்று தன் தமையனை வணங்கி நின்றான். சூரபன்மன் அவனை மார்போடு இறுகத் தழுவினான். சிங்கமுகன் சூரபன்மனை நோக்கி, "அரசர்க்கரசே! உன்முகம் வாடும்படி வந்த துக்கம் யாது? கூறுவாயாக" என்றான். சூரபன்மன் அவனை நோக்கி, "தம்பியே! அன்று நீ அமைச்சியலுக்கு வந்து மீண்ட பிறகு சிவ குமாரன் தன் சேனைகளோடு இங்கு வந்தான். அவனையும் அவன் சேனைகளையும் எதிர்த்து என் குமாரர்கள் இறந்தார்கள்; அமைச்சர்கள் இறந்

தார்கள்; சேனைகள் அழிந்தன; இரணியன் தோற்றோடிக் கடலில் மறைந்தான். இவையே, இவ்விடத்தில் நிகழ்ந்தன ஆகும். நீ அளவிறந்த படைகளோடு சென்று சிவ குமாரனின் வலிமையைக் கெடுத்து வருவாயாக; இதற்காகவே உன்னை இங்கே அழைத்தேன்" என்றான்.

**சிங்கமுகன் அறிவுரை**

சிங்கமுகன் சூரபன்மனை வணங்கி, "அரசர்க்கரசே! நீ உன் புத்திரர்களையும், அமைச்சர்களையும், மற்றவர்களையும் இழந்துவிட்டு இருக்கின்றாய்! உன் எண்ணம் மிக இழிந்தது! தோற்றமும் அழிவும் இல்லாத கடவுளைப் பாலகன் என்று எண்ணினாய். மேல் விளையக்கூடியதனை எண்ணிப்பார்க்கவில்லை. என் சொல் உனக்கு விஷமாக இருந்ததே! ஊழை வெல்வார் யாவர்? பெருகும் வெள்ளத்திற்கு அணைகோலுவதால் பயன் என்ன? நான் இப்பொழுதே சென்று பகைவர்களைக் கொன்று தின்று வருகின்றேன். நீயும் அதனைக் காண்! அதன் பின்னர் ஆறுமுகனை வென்றால் மீண்டு வந்து உன்னைக் காண்பேன். இல்லையேல் யாவரும் இறப்பர். அண்ணா! இனி உன் மனத்தில் நினைத்தனவற்றைச் செய்குதி" என்று தொழுது கூறி அவ்விடம் நில்லாமல் விடைபெற்றுக்கொண்டுப் புறப்பட்டான்.

**சிங்கமுகன் போருக்கெழுதல்**

சிங்கமுகன் தன் சேனைகளோடு மகேந்திரபுரியிலுள்ள தன் மாளிகையை அடைந்து, மேருமலைபோன்ற சோற்றுக் குவியலையும், அதைச் சூழ்ந்த மிகுந்த மாமிசங்களையும், தேன், பால், தயிர், கள் முதலியவைகளையும் உண்டான்; மாலை சூடி, ஆபரணங்கள் பூண்டு, வாசனைபூசித் தன் ஆயிரம் நெற்றிகளிலும் விபூதி பூசினான்; சிவபெருமான் கொடுத்த சூலப் படையையும், குலிசம் முதலாகிய தெய்வப் படைகளையும், தன் தாய் கொடுத்த பாசத்தையும், மற்றை எத்திறப்படைகளையும் கைகளில் ஏந்தினான்; பத்து லட்சம் குதிரைகள் பூண்ட ஒரு தேரில் ஏறினான்; அமைச்சர்களும், தன் புத்திரர்களும் யானை தேர் குதிரை முதலியவைகளும் சூழ நகரத்தின் வாயிலில் வந்தான். இலக்கம் வெள்ளம் நால்வகைப் படைகள் வந்து சூழ்ந்தன. சிறந்த அவுண வீரர்கள் பலர் தண்டம், மழு, வில், வேல் முதலியவற்றை ஏந்திப் புறப்பட்டார்கள். யானைகள், படைகளுக்கு

முன் சென்றன. குதிரைகள் எழுப்பிய துகள், விண்ணுலகை மண்ணுலகாக்கியது. மாயவள் மகனும், சிங்கமுகாசுரனைப் போலத் தலைகளைக்கொண்டவனும் ஆகிய **சிங்கன்** என்னும் பெயர்பூண்ட படைத் தலைவன் முன்னணியில் சென்றான். கொம்பு, பேரி, நிசாளம், உடுக்கை முதலாகிய ஒலிக் கருவிகள் முழங்கின. கழுகுகள் காகங்கள் முதலியன நெருங்கின. சிங்கமுகாசுரன் போருக்கு எழுந்தான்.

**நான்முகன் முதலியோர் வேண்டுகோள்**

சிங்கமுகன் போருக்குச் செல்வதை நான்முகன், இந்திரன், தேவர்கள் யாவரும் கண்டு அஞ்சினர்; விரைந்து பாசறையை நோக்கி ஓடினர்; திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஆறு முகக் கடவுளை நோக்கி, "சிங்கமுகன் ஆயிரம் தலைகளும், இரண்டாயிரம் கைகளும் உடையவன்; ஆயிரத்துக்கு மேற்பட்ட அண்டங்களை வென்றவன்; ஆயிரம் யோசனை உயரமுடைய உடலைக்கொண்டவன்; நினைத்தற்கரிய வஞ்சனையிலும், மாயையிலும், வலிமையிலும் சிறந்தவன்; இவ்வுலகமெல்லாம் அழியினும் அழியாதவன்; முன்னர் ஒருகால் உலகங்கள் யாவற்றையும் ஒரு கையால் சுமந்தவன்; சிவபெருமான் கொடுத்து அருளிய சூலத்தை ஏந்தியவன்; எட்டுத்திசைகளையும், பூமியையும், ஏழு பாதலங்களையும், விண்ணுலகையும் வாரி உண்டு உமிழ்கின்ற வலிமை உடையவன்; அவன் நடந்து செல்லும்போது ஒரு பக்கம் தாழ்ந்து ஒரு பக்கம் உயர்வதால் கடல்கள் உலகில் தாக்கும்படி நடக்கின்ற வலிமை கொண்டவன்; மேரு மலையைத் தண்டாயுதம் என்று எடுத்து அண்டகடாகத்தை அடித்தவன்; எவ்வுலகங்களையும் பிணிக்கத்தக்க இரண்டு பாசங்களை ஏந்திய கைகளை உடையவன்; வடகடலிலுள்ள ஆசுரம் என்னும் நகரத்தில் வாழ்பவன்; சூரபன்மனுக்கு இளவல் ஆவான்; நம்மவர்களைத் துன்புறுத்துபவன். இத்தகைய தன்மைகளைக் கொண்ட சிங்கமுகாசுரன் என்னும் கொடியோன், அளவற்ற சேனைக் கடல்களோடு போருக்கு வருகிறான். எம்பெருமானே! அவனைக் கொன்று எங்களைக் காத்தருளவேண்டும்" என்று கூறினார்கள்.

**வீரவாகு தேவர் போருக்குப் புறப்படுதல்**

யாவற்றையும் திருச்செவிமடுத்த ஆறுமுகக் கடவுள் வாயு தேவனை அழைத்து, "நம்முடைய தேரைக் கொண்டுவருதி" என்று பணித்தார். அவர் அருகிலிருந்த வீரவாகு தேவர் ஆறு முகக் கடவுளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "எம்பெரு மானே! அடியேன் இலக்கத்தெட்டு வீரர்களுடனும் சேனை களுடனும் சென்று சிங்கமுகனைக் கொன்று மீண்டு வருவேன். அடியேனை அனுப்பி அருள்க" என்று வேண்டினர். ஆறுமுகக் கடவுள் திருப்புன்முறுவல்பூத்து, "வீரவாகுவே! இறக்கும்படி இங்கே வந்த சிங்கமுகாசுரனுடன் நீ போர் செய்ய விரும்பினுய். நல்லது! சேனைகளோடு முன்னே செல்வாயாக" என்று கூறி யருளினர். வீரவாகு தேவர் எழுந்து வணங்கித் தம் மாளி கையை அடைந்தார்; போர்க்கோலம் பூண்டு, தெய்வப் படை களை எடுத்து, தும்பை மாலை சூடித் தேரில் ஏறிப் புறங்கடை வாயிலுக்கு வந்தார். இலக்கத் தெண்மரும் போர்க்கோலம் பூண்டு தங்கள் தேர்களில் ஏறி ஆரவாரத்துடன்வந்து அவரைச் சூழ்ந்தார்கள். ஆயிர வெள்ளம் பூதப்படைகள் மலைகளையும், மரங்களையும், படைக்கலங்களையும் ஏந்திக் கொண்டு வந்தன; போர் முரசுகள் முழங்கின; பூதூளி பறந்தது. இங்ஙனம் பூதப் படைகளும், பூதப் படைத் தலைவர்களும், இலக்கத் தெண்மரும் சூழ, வீரவாகு தேவர் போர்க்களத்தை அடைந் தார்.

**போர் தொடங்குதல்**

அப்பொழுது சிங்கமுகாசுரனின் படைகளும் பூதப்படை களும் கைகலந்து போரைத் தொடங்கின. கோடுகளும், கொக் கரைகளும், பேரிகைகளும் முழங்கின. மயிர்ப் பீலிகளும், மணி களும், கொடிகளும் ஒலித்தன. யானைகளும், குதிரைகளும், தேர்களும் ஒலித்தன. எதிர்த்த பூதர்களை அவுணர்கள் தண்டம், மழு, பிண்டிபாலம், தோமரம் முதலிய படைகளை எறிந்து போரிட்டார்கள். பூதர்கள் மரங்களையும், மலைகளையும், தண் டங்களையும், எழுப்படைகளையும், மழுக்களையும் வீசினர்கள். பூதர்களில் சிலருடைய கால்களும், கைகளும், புயங்களும், மார்பு களும், முடிகளும், தலைகளும் சிதறி வீழ்ந்தன. எங்கும் இரத்த வெள்ளம் பெருகியது. அதனல் பூமி செவ்வானம்போல் காட்சி

யளித்தது. பிண மலைகள் மிதந்தன. கழுகுகளும் பிசாசுகளும் நெருங்கின. அவுணப் படைகளின் தாக்குதலால் பூதப்படைகளின் முன்னணி முறிந்தது. பூதர்கள் அழிதலைக் கண்ட **சிங்கர்** என்னும் பூதப்படைத் தலைவர் கண்டு சினந்து ஒரு தண்டத்தை எடுத்து அவுணர்களை அடித்து வீழ்த்தினர். **தசமுகன்** என்னும் ஓர் அவுணன், அவர் எதிரே சென்று வில்லை வளைத்துக் கணை மழைகளைச் சொரிந்தான். சிங்கர் அவ்வம்புகளை ஒரு தண்டங்கொண்டு அடித்து வீழ்த்தினர். அவன் தரித்த கவசத்தையும் அழித்தார். தசமுகன் ஒரு தண்டத்தைச் சிங்கர்மீது எறிந்தான். அஃது அவர் மார்பில் பட்டு ஒடிந்தது. அதனைக் கண்ட தசமுகன் ஒரு மழுவை எறிந்தான். அது தீயோடும் காற்ருேடும் கலந்து சிங்கர்மேல் சென்றது. சிங்கர் அதனை ஒரு தண்டினுல் அடித்து வீழ்த்தினர்; அத்தண்டினுலே தசமுகன் வில்லைப் பொடியாக்கினர். தசமுகன் தீ வடிவாகிய ஒரு வேற்படையைச் செலுத்தினன். சிங்கர் சக்கரப் படையை எய்து வேற்படையை அழித்தார். தசமுகன் ஒரு தண்டத்தைச் சிங்கர் மார்பில் எய்து இரத்தம் வடியச் செய்தான். சிங்கர் சிறிதுதளர்ந்தார்; பின்பு ஓடிப் போய் அவன் மார்பில் ஒரு கையால் அடித்தார்; தசமுகன் வீழ்ந்து இறந்தான். அவுணர்கள் பலர் பூதர்களை எதிர்த்துப் போர்புரிந்தார்கள். அப்போது, இலக்கம் வீரர்களுள் **அநகர்** என்பவர் கோபங்கொண்டு அவுணப் படைகளைத் தாக்கி, அவர்களின் தலைகளைக் கணைகளினுல் வீழ்த்தினர். அநகர் இவ்வாறு அவுணப் படைகளைக் கொன்று திரிதலும், ஒழிந்த அவுணர்கள் யாவரும் பயந்து ஓடினுர்கள். **துன்முகன்** என்னும் அவுணன், பயந்தோடும் அவுணர்களை நோக்கி, "நீங்கள் வருந்தாதீர்கள். மின்மினிகள் சூரியனை வெல்லுமா? நான் கோபங்கொண்டால் பூதர்கள் என்முன் நிற்க முடியுமா?" என்று அவர்களுக்கு உற்சாகம் ஊட்டினுன். ஆயினும் அவர்கள் நில்லாது ஓடினுர்கள். துன்முகன் வில்லை வளைத்துக் கணைகளை விடா மழைபோலச் சொரிந்தான். பூதர்களும், மரங்களையும் மலைகளையும் வீசி அக்கணைகளை அழித்தனர். துன்முகன் அதனைப் பார்த்து, "என் கணைகள் பூதர்களை அழித்தில. நான் இவர்களோடு தனித்துப் போர் செய்வதும் அரிது" என்று கருதினுன்; ஒவ்வொரு பூதரையும் நூறுநூறு மாயா வடிவங்கொண்டு தாக்கினுன்.

**துன்முகன் தோற்றோடுதல்**

வீரவாகு தேவர் துன்முகனின் மாய வடிவங்கள் பூதர்களோடு போர் செய்வதைக் கண்டார்; "மாயத்தை மாற்றுவது எங்ஙனம்?" என்று யோசித்தார். ஞானப் படைக்கலத்தை எடுத்துச் செலுத்தினர். உடனே துன்முகனின் மாய வடிவங்கள் எல்லாம் மறைந்தன. அவன் மட்டும் தனித்து நின்றான்; மனங் கொதித்து எழுந்து ஆயிரம் கணைகளை ஒரு தொடையில் செலுத்தினன். வீரவாகு தேவர் தம் வில்லைவளைத்து அவனுடைய அம்புகளையும், வில்லையும், கவசத்தையும் அழித்தார். அவன் உடலெங்கும் கணைகளைப் பெய்தார். துன்முகன் வீழ்ந்து மயங்கி, "நான் இனிப் போர் செய்தால் இறப்பேன். ஆதலால், ஓடிப்போவதே முறையாகும்" என்று எண்ணினன்; ஒரு மந்திரத்தை நினைத்து, விண்ணில் மறைந்து போனன். அதனைக் கண்ட பூதர்கள், "மாயையில் வல்ல இவனை விரைந்து ஓடிப் பிடிப்போம்; வாருங்கள்" என்றனர்கள். அதனைக் கேட்ட வீரவாகு தேவர் அவர்களை நோக்கி, "அவ்வாறு செய்யலாகாது; போருக்குப் பயந்து ஓடியவர்களையும், தம்மைச் சரணடைந்தவர்களையும், வாட்டமுற்றோர்களையும், வலிமையிழந்தோர்களையும் கொன்றவர்கள் குற்றத்திற்குள்ளாவார்கள்" என்று கூறித் தடுத்தார். பூதர்கள் துன்முகனைத் தொடர்தலை விடுத்தார்கள்.

ஓடினர் தம்மையும் உற்றுத் தாள்மலர்
சூடினர் தம்மையும் தொழுத கையராய்
வாடினர் தம்மையும் வலியி லோரையுஞ்
சாடினர் அல்லரோ நவைக்கட் டங்குவார்.

**சிங்கமுகாசுரன் போர்**

தன் படைகள் எல்லாம் தோற்றோடுவதைச் சிங்கமுகாசுரன் கண்டான்; "நாம் பின்னே நிற்றலால் பயன் ஒன்றுமில்லை" என்று பூதர்கள் முன்னே சென்றன். பூதர்கள் மலைகளையும், மழுக்களையும், சூலங்களையும், தண்டங்களையும், எழுப்படைகளையும், கலப்பைப் படைகளையும் எறிந்து போரிட்டார்கள். சிங்கமுகன் அவற்றை நோக்கி நெருப்பெழ உயிர்த்தான். பூதர்கள் வீசிய மரம் முதலியன சிங்கமுகனின் மூச்சுப்பட்டுச் சில கரிந்து போயின; சில தீய்ந்தன. பூதர்கள் அதனைப் பார்த்து

யாவரும் ஒருங்குபோய், மலைகளையும் மரங்களையும் கொண்டு வந்து அவன்மேல் வீசினார்கள். அவையெல்லாம் விண்வழியெங்கும் நிறைந்ததால் கதிரவன் ஒளி மங்கியது. பறவைகள் 'இரவு வந்தது' என்று எண்ணிக் கூடுகளை அடைந்தன. பூதர்கள் எறிந்த மலைகளைக் கண்டு, கதிரவனும் அஞ்சினான். அவர்கள் எறிந்த மலைகளிலிருந்த முகில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து, இடியையும், மின்னலையும், மழையையும் கக்கின. மலைகள் தாக்குறுவதால் எங்கும் தீ சிந்தியது. சிங்கமுகனின்மேல் எறிந்த மலைகள் அவனை ஒன்றும் செய்யாது மலைமீது மோதிய பஞ்சுப் பொதிபோலாகிக் கீழே விழுந்தன. அதனைக்கண்டு பூதர்கள் துன்பமுற்றார்கள்; தேவர்களும் ஏங்கினார்கள்.

சிங்கமுகாசுரன் தேரிலிருந்து இறங்கினான்; பூமியில் குதித்துச் சிலரைக் கீழே எற்றினான். சிலரைத் தேவருலகில் எற்றினான். சிலரைச் சூரியன் தேரில் எற்றினான்; சிலரைக் கடலில் எற்றினான்; சிலரை வாயில் குத்தினான்; சிலரைத் தூக்கித் தூர எறிந்தான் சிலரை அள்ளி எறிந்தான். சிலரை நான்முகன் உலகத்தில் வீசினான்; சிலரைத் திருமால் உலகத்தில் எறிந்தான்; சிலரை இந்திரன் உலகத்தில் எறிந்தான்; சிலரை நிலமெங்கும் வீசினான். சிங்கமுகன், பூதர்களைக் கண்டபடி அள்ளி வீசியதால் உலகெங்கும் பூதர்கள் நிறைந்தார்கள். சிங்கமுகன் சிலரை மிதித்தான்; சிலரைக் காலினால் தூக்கித் தள்ளினான்; சிலரை நசுக்கினான்; சிலரை உதைத்தான். சிலரைச் சூலத்தால் கொன்றான். சிலரை வாரி வாய்நிறையப் போட்டு உண்டான். இவ்வாறு சிங்கமுகாசுரன் கண்ட கண்டபடி பூதர்களைக் கொன்றதால் எழுந்த குருதிப் பெருக்கு எங்கும் மிகுந்து, கடலை அடைந்து செந்நிறமாக்கியது. தன்னை எதிர்த்த பூதர்களைச் சிங்கமுகன் கொன்று தன் தேரில் ஏறினான்.

### அழற் கண்ணர்-சிங்கமுகன்

சிங்கமுகாசுரன் செய்த போர் விளையாட்டை **அழற் கண்ணர்** என்னும் பூதப்படைத் தலைவர் கண்டார்; மனம் வெதும்பிச் சிங்கமுகன் எதிரே சென்று, "கொடியவனே! உன்னை இப்பொழுதே போர் செய்து கொல்லுவேன்" என்றார். சிங்கமுகாசுரன் அவரை நோக்கி, "நீ எதனையும் எண்ணுகின்றா

யில்லை; அஞ்சுகின்றாயில்லை; பயப்படாமல் என் எதிரே நின்று இவ்வாறு சொல்லிய உன் வலிமை நன்று!" என்று தேவர்கள் அஞ்சச் சிரித்தான். அழற்கண்ணர், வடவாமுகாக்கினி போலச் சினந்து, ஒரு சூலப்படையை அவன் மேல் எறிந்தார். சிங்கமுகன், அப்படை தன்னை நோக்கி வருதலைக்கண்டும், அதற்கு எதிர்ப்படையைச் செலுத்தாது நின்றான். அச்சூலம், அவன் மார் பிற்பட்டு மலையிற்பட்ட முள்ளைப்போல ஒடிந்தது. சூலப் படையின் வலியையும் சிங்கமுகன் வலியையும் அழற்கண்ணர்' கண்டு, "இவன் பெற்ற வரத்தின் வலிமையே வலிமையாகும்' என்று வியந்தார்; ஒரு தண்டத்தை எடுத்து அவன்மேல் செலுத்தினார். அது சிங்கமுகனின் தேர்ப்பாகனது தலையைச் சிதற அடித்தது. சிங்கமுகன் அதனைக் கண்டு தன் கையிலிருந்த தண்டாயுதத்தை எறிந்தான். அஃது அழற்கண்ணரின் மார்பில் தாக்கிற்று. அவர் மனம் வருந்தினார். அப்போது அழற் கண்ண ரின் மூக்கிலும், மார்பிலும், வாயிலும் இரத்தம் சிந்தியது. அவர் அறிவு இழந்து சோர்ந்து நின்றார். சிங்கமுகன் தன் தேரில் வேறு தேர்ப்பாகனை நிறுத்திப் பூதப்படைத் தலைவர் களின் மீது போர்புரியச் சென்றான்.

**சிங்கமுகன்-சுமாலி**

சிங்கமுகனின் வரவைக்கண்ட **சுமாலி** என்னும் பூதப் படைத் தலைவர், மேரு மலையைப் போன்றதோர் மலையைப் பிடுங்கி வீசி ஆரவாரஞ் செய்தார். அம்மலையைச் சிங்கமுகன் ஒரு கையால் பந்துபோலப் பிடித்துச் சுமாலிமேல் திருப்பி எறிந்தான். சுமாலி செயலற்று நிலத்தில் வீழ்ந்தார்.

**சிங்கமுகன்-தண்டி**

சுமாலி வீழ்ந்ததைத் **தண்டி** என்பவர் கண்டு, ஒரு தண்டை ஏந்திச் சிங்கமுகாசுரனின் தேரில்பாய்ந்து அவன் மார்பில் அடித் தார். அத்தண்டாயுதம் அழிந்தது. அதைக்கண்டு தண்டி சினந்து, சிங்கமுகாசுரன் மீது கையினால் அடித்தார். அவன், தீ எழச் சிரித்து அவரைக் காலினால் உந்தி எறிந்து, தேவர்கள் அஞ்சும்படி ஆரவாரித்தான். தண்டி, ஆகாயத்தில் எழுந்து போய்த் திரும்பி வந்து சிங்கமுகாசுரனுடைய இரண்டாயிரங்

தோள்களின் மீது குதித்தார்; அவனுடைய உடலெங்கும் குரங்குபோலப் பாய்ந்து பாய்ந்து மிதித்தார்; அவனுடைய கை, கால், தலை, செவி முதலிய இடங்களிலும் சென்று துவைத்தார். சிங்கமுகன் என்ன, சிறியவனா? தன் உடலில் தண்டி திரிவதை அறியாது, "நம் உடலில் ஓர் ஈ வீழ்ந்து உலாவிச் சூழ்கின்றது போலும்" என்று எண்ணி ஒரு கையால் சொறிந்து உருட்டித் துடைத்து விட்டான். அதனால், தண்டி மிகவும் செயலற்று வருந்தித் தோற்றுப்போனார். பூதர்கள் யாவரும் பயந்து ஓடினார்கள். அரிதாகச்செய்த தவமே அன்றி வலியது வேறொன்று உண்டோ!

**சிங்கமுகன் - இலக்கத்தெண்மர்**

பூதர்கள் பயந்து ஓடுவதை இலக்கத்தெட்டு வீரர்களும் கண்டார்கள்; தேரைச் செலுத்திக்கொண்டு சிங்கமுகனுக்கு முன்னே சென்று அவனைச் சூழ்ந்தார்கள்; மலர்மழை பொழிந்தாற்போல விற்களை வளைத்துக் கணைமழைகளைப் பொழிந்தார்கள். அக்கணைகளெல்லாம் அவனுக்கு ஊறுசெய்யாது அவன் பக்கத்தில் வீழ்ந்தன. அதனை இலக்கத்தெண்மரும் கண்டு, "நம்முடைய வலிமை அழிந்தது" என்று அஞ்சினார்கள், சிங்கமுகாசுரன் தேரிலிருந்து கீழே இறங்கிச் சென்று இடிபோலப் பெருமுழக்கம் செய்து சிலருடைய தேரை எடுத்து எறிந்தான்; சிலருடைய தேரை ஒன்றோடொன்று மோதும்படி அடித்தான்; சிலருடைய தேரைக் கையால் அள்ளி ஒடித்தான்; சிலருடைய தேரை உதைத்தான்; சிலருடைய தேரைப் பொடியாக்கினான்; சிலருடைய தேரை நிலத்தில் புதைத்தான். இவ்வாறு சிங்கமுகன் தாக்கவே, இலக்கத்தெண்மரும் தங்கள் உயிரைத் தாங்கிப் புறமுதுகு காட்டி ஓடினார்கள். பிறகு சிங்கமுகாசுரன் தேரில் ஏறினான்.

**வீரவாகு தேவர் போர்**

இலக்கத்தெண்மர்களும் தோற்று ஓடியதை அங்கு நின்ற வீரவாகு தேவர் கண்டு, "நம்முடைய பூதர்களில் பாதியைச் சிங்கமுகன் கொன்றான். இலக்கத்தெண்மரும் போரில் அழிந்தனர். பெரிய படைகளும் இன்றொருநாளில் அழிந்துவிடும் போலும்" என்று எண்ணிக் கோபம் மிகுந்து, பெரிய வில்லை

வளைத்துப் பல கோடி கணைகளை விடா மழைபோலப் பெய்து நின்றார். எதிர்த்து நின்ற அவுணர்கள் தங்கள் தலைகள் சிதற வெட்டுண்டு பூமியில் விழுந்தார்கள். குதிரைகளும், தேர்களும், யானைகளும் அழிந்தன. அளவில்லாத அவுணர்களும் மடிந்தார்கள். எங்கும் பிண மலைகள் மிகுந்தன. பேய்கள் மொய்த்தன. இறவாத அவுணப் படையை இரத்த வெள்ளம் வாரிக் கொண்டுபோய்க் கடலில் சேர்த்தது. போர்க்களம் எங்கும் பல வகை ஒலிகள் மிகுந்தன. வீரவாகு தேவருடைய கணைகள் அவுணப்படைக்கு மிகுந்த அழிவைச் செய்தன.

**நூற்றுவர் - வீரவாகு தேவர்**

அவுணப் படைகள் பலவாறு வீரவாகு தேவரால் அழிந்தொழிதலைச் சிங்கமுகனுடைய மக்களாகிய **நூற்றுவர்கள்** கண்டார்கள்; சினந்து உதட்டைப் பற்களால் கடித்து, "நம்முன் கடும்போர் செய்யும் இவனை விரைந்து கொல்வோம்" என்று வீரவாகு தேவரை நோக்கித் தங்கள் தேரைச் செலுத்தினார்கள்; விற்களை வளைத்துக் கணை மழைகளை வீரவாகு தேவர் மேல் பொழிந்தார்கள். வீரவாகு தேவர் அதனைக் கண்டு பல கோடி கணைகளைச் செலுத்தி அவற்றை அழித்து ஆரவாரித்தார். சிங்கமுகனின் புதல்வர்கள் மேலும் கோடாகோடி கணைகளைச் செலுத்தினார்கள். வீரவாகு தேவர் அவற்றைக் கணைகளால் மாற்றினார்; அவர்களுடைய விற்களையும் தேர்களையும் அழித்தார். நூற்றுவர்கள், ஒரு சூழ்ச்சியை மனத்தில் எண்ணி, வீரவாகு தேவரை நோக்கி, "வீரனே! நீ விற்போர் பயின்றதே அன்றி வாட்படை பயின்றிலைபோலும்! வாட்போரில் வல்லையாயின் எங்களோடு போருக்கு வருவாயாக" என்று தோள்களைத் தட்டிக் கூற்றுவனும் நடுங்கும்படி ஆரவாரஞ் செய்தார்கள். வீரவாகு தேவர் அவர்கள் கூறியதைக் கேட்டு நகைத்துச் சிவபெருமான் கொடுத்த வாட்படையை ஏந்தி, விரைந்து பூமியில் பாய்ந்து சென்றார். அதனைக் கண்டு நூற்றுவர் தங்கள் வாட்படைகளை ஏந்தி, நிறைமதியைச் சூழும் இருளைப்போல, வீரவாகுதேவரை வந்து சூழ்ந்தார்கள்; வீரவாகுதேவரின் தோள்களிலும், மார்பிலும், கைகளிலும், கழுத்திலும், தலையிலும், குறிபார்த்து வாட்படையை வீசினார்கள்.

அதனால், வீரவாகு தேவருக்குத் தீங்கு ஒன்றும் நேரவில்லை. அதனைக் கண்ட நூற்றுவர்கள் கூட்டமாகச் சென்று வீரவாகு தேவரைக் கட்டிப் பிடித்தார்கள். வீரவாகு தேவர் கோபித்து வாட்படையை வீசி, உடல் உறுப்புக்கள் சிறிதும் தெரியாத வாறு நூற்றுவரையும் துணித்துக் கொன்றார்.

**சிங்கமுகன் - வீரவாகு தேவர்**

நூற்றுவரையுங் கொன்ற வீரவாகு தேவர் மீண்டும் தேரி லேறினார். சிங்கமுகாசுரன் தன் புதல்வர்கள் இறந்ததைப் பார்த்துத் துன்பத்தில் ஆழ்ந்தான்; 'வீரவாகு தேவரையும் பிறரையும் அழிப்பேன்' என்று அளவற்ற சினங்கொண்டு அக்கினியும் நடுங்கும்படி தேர்ப்பாகனை நோக்கி, "என் புதல்வர்களைக் கொன்ற வீரவாகு தேவர்முன் தேரைச் செலுத்துவா யாக" என்றான். தேர்ப்பாகன் விரைந்து குதிரைகளைத் தூண் டினான். சிங்கமுகன் வருதலைக்கண்டு, வீரவாகு தேவர் தேரோடு வந்து எதிர்த்தார். சிங்கமுகன், கண்கள் தீயைச் சிந்த வீரவாகு தேவரைப் பார்த்து, "சிவகுமாரர் ஆறுமுகங்கள் கொண்டவர். நீ அவர் அன்று; எண்மர்களில் ஒருவனோ? இலக்கம் வீரர் களின் தலைவனோ? நம் ஊருக்கு வந்த தூதுவனோ? இவருள் நீ யார்? சொல்வாயாக" என்றான். வீரவாகு தேவர் அதனைக் கேட்டு, "நான் சிவகுமாரராகிய ஆறுமுகக் கடவுளின் அடிமை ஆவேன்; முன்னே உங்களுடைய மகேந்திரபுரியை அழித்துத் தூதுவனாய் மீண்டேன்; எல்லையில்லாத அவுணர்களை ஒரு கணப்பொழுதில் அழித்து உன்னையும் வெல்ல இங்கு நிற்கின் றேன். என் பெயர் வீரவாகு" என்று கூறினார்.

வீரவாகு தேவர் கூறியவைகளைக் கேட்ட சிங்கமுகாசுரன் கோபித்து, "படைக்கலப் பயிற்சியில்லாத சிறுவர்களையும், நகரிலுள்ள எளியவர்களையும் நீ வெல்ல வல்லாய்; இஃது ஆண் மையாகுமா? என்னுடைய நூறு குமாரர்களை எளிதில் கொன்ற உன் வலிமையைச் சிவகுமாரன் காணக் கெடுப்பேன். உன் உயிரைப் போக்கிக் கூற்றுவனுக்கு உணவாகக் கொடுப் பேன். உன் உடலைப் பருந்தினுக்கு உணவாக்குவேன். உன் வலிமையையும், உன் தலைவனாகிய பாலகனின் வலிமையையும், படைகளின் வலிமையையும், தேவர்களின் வலிமையையும்

அழிப்பேன்'' என்று தன் வலிமையைப் பெருமையுடன் இடியிடித்தாற்போலக் கூறினன். அவற்றைக் கேட்ட வீரவாகு தேவர் வில்லை வளைத்துப் பதினெட்டுக் கணைகளைச் சிங்கமுகன் மார்பில் செலுத்தினர். அக்கணைகள் அவன் மார்பிற்பட்டுப் பயனற்று முறிந்து வீழ்ந்தன. சிங்கமுகன் தன் கையிலிருந்த ஒரு தண்டாயுதத்தை வீரவாகு தேவர்மேல் செலுத்தினன். அதனை வீரவாகுதேவர் நான்கு கணைகளால் அழித்தார்; ஆயிரம் கணைகளைச் சிங்கமுகாசுரன் தலையில் செலுத்தினர். அவன் தலையிற் பட்ட கணைகள் பல துண்டங்களாய் விழுந்தன. சிங்கமுகன், தன்கையிலுள்ள சூலப் படையைச் சுழற்றி எறிந்தான். வீரவாகு தேவர் விண்வழியாக வரும் அச்சூலத்தின் ஆற்றலையும் வெற்றியையும் கண்டு எதிர்த்து ஆயிரங் கணைகளைச் செலுத்தினர். வீரவாகு தேவரின் ஆயிரங் கணைகளையும் அச்சூலப்படை அழித்தது. மேலும் அவர் ஆயிரங் கணைகளைத் தூண்டினர். அவற்றையும் சூலப்படை எதிர்த்து வீழ்த்தி, வீரவாகு தேவர் மேல் சென்றது. அதனைக்கண்டு எண்மரும் இலக்கத்தவரும் கலக்கமடைந்தனர்; பூதர்கள் துன்புற்றனர்கள். வீரவாகு தேவர், தம் தோள்களை நோக்கி வரும் சூலத்தைச் சிவபெருமான் கொடுத்த வாட் படையால் இரு துண்டாக்கினர். வீரவாகு தேவர் சினந்து சிவப் படைக்கலத்தை எடுத்து, வழிபாடு செய்து, "சிங்கமுகனைக் கொல்லுவாயாக" என்று விடுத்தார். சிங்கமுகனும், தன் கையிலிருந்த சிவப் படைக்கலத்தை வழிபாடு செய்து செலுத்தினன். அப்படைகள் இரண்டும் ஒன்றோடொன்று வந்து கலந்து தம்மைச் செலுத்தியவர்களிடமே மீண்டன. வீரவாகு தேவர் துன்பம் மிகுந்து, "சிங்கமுகனைக் கொல்லுவதற்கு வலிமையுடையவர் ஒருவருமில்லை. இவன் வலிமையிலும் பலத்திலும் மிகுந்தவன்; பிறரைக் கொல்லுவதில் திறமை மிக்கவன்; கோடி கூற்றுவர்கள் வந்து எதிர்த்தாலும் இமைப்பொழுதில் கொல்ல வல்லவன்; இவன் தவம் வலியதென்பேனோ? அத்தவத்திற்காகச் சிவபெருமான் கொடுத்த வரம் சிறந்ததென்பேனோ? எதனைப் பெரியது என்று யான் சொல்லவல்லேன்? அவன் உடல், கணைகளால் ஊறுபாடு அடையாது. அவன் வலிய தெய்வப் படைகளாலும் அழியான். ஆறுமுகக் கடவுளின் திருக்கரத்திலுள்ள படைகளாலன்றி வேறு

எவற்ருலும் அவன் இறக்கமாட்டான். என்னுல் இவனைக்கொல்ல முடியாது. ஆயினும் அவன் தேரையும், படைக்கலங்களையும், சேனைகளையும் நான் விரைவில் அழிப்பேன்" என்று கூறினுர். பதினுன்கு கணைகளைச் செலுத்திச் சிங்கமுகனின் தேர்ப்பாகனது தலையை அழித்தார். தேர்ப்பாகன் தலை கீழே விழுமுன், சிங்கமுகன் கோபித்து ஒரு தண்டாயுதத்தை வீரவாகு தேவர் மார்பில் செலுத்தினுன். அத்தண்டாயுதம் பொடியாகப்போயிற்று. வீரவாகு தேவர் ஆயிரங் கணைகளைச் செலுத்திச் சிங்கமுகனின் தேரை அழித்தார். அப்போது பூதர்கள், இது தான் சமயமென்று கருதிச் சிங்கமுகனைச் சூழ்ந்து மலைகளையும் படைக்கலங்களையும் வீசினுர்கள். சிங்கமுகன் வேருேர் தேரில் ஏறி ஆயிரங் கைகளினுலும் ஆயிரம் விற்களை எடுத்து வளைத்து நாணெலி செய்தான். அவ்வொலியைக் கேட்ட உயிர்கள் யாவும் துடித்தன; அண்டங்கள் நடுங்கின; நான்முகன் தலையை அசைத்தான். சிங்கமுகன், வளைத்த விற்களில் எல்லையில்லாத கணைகளைத் தொடுத்து விடுத்தான். போருக்கு வந்து எதிர்த்த பூதர்கள் பிணங்களாயினர். பூதர்களின் கைகளும், கால்களும், தலைகளும் சிதறி விழுந்தன; தசைகளும், இரத்தமும், மூளைகளும் சிந்தின. பாற்கடல் தன் திரைகளாகிய கைகளினுல் துளிகளைச் சிந்துதல் போலச் சிங்கமுகன் தன் ஆயிரம் கைகளினுலும் ஆயிரம் கணைகளைத் தூண்டினுன். சிங்கமுகனின் கணைகள் நிலமெங்கும் நெருங்கின; விண்ணைத் தூர்த்தன; திக்குக்களையும் மறைத்தன; கடல்களெங்கும் செறிந்தன; அப்பால் உள்ள அண்டங்களுக்கும் சென்றன. அவனுடைய கணைகளால் ஊறுபாடு அடையாத உடலும் உயிரும் இல்லை. சிங்கமுகனின் கணைகள் எங்கும் நிறைந்து, அளவின்றிப் பாய்ந்து செல்லுதலால் அவனுடைய படைகளையும் கொன்றன. அக்கணைகள் விண் வழியை மாற்றியதால் கதிரவன் கலங்கி நின்ருன். எங்கும் குருதி வெள்ளம் பெருகிக் கடலை அடைந்தது.

இவ்வாறு சிங்கமுகன் போர் புரிவதைக் கண்ட வீரவாகு தேவர், அவனுக்கு எதிரேபோய் நாணெலி செய்தார். அதனுல் அண்டங்கள் நடுங்கின. அவுணர்கள் ஏக்கமடைந்து அஞ்சி ஓடினுர்கள். யானை, தேர், குதிரை முதலியவற்றில் இருந்த வீரர்கள், தங்கள் படைகள் நழுவ நடுங்கி வீழ்ந்தார்கள். வீர

வாகு தேவர் நாணொலி செய்து கணை மழைகளைச் சிந்திச் சிங்க முகன் செலுத்தும் கணைகளை யெல்லாம் அறுத்தார். அளவற்ற பிரமர்கள் படைக்கின்ற உயிர்கள் எல்லாவற்றையும், ஊழிக் காலத்தில் உருத்திரர் ஒருவரே அழிப்பர்; அதுபோல ஆயிரம் விற்களால் சிங்கமுகன் விடுகின்ற கணைகள் எல்லாவற்றையும், வீரவாகு தேவரே தம் கணைகளால் அழித்தார். கடல்களிலும், விண்ணிலும், நிலத்திலும், திசைகளிலும், மேருவிலும் மற்றை மலைகளிலும் வீரவாகு தேவர் கணைகளைச் செலுத்தி, சிங்கமுக னின் கணைகளை அவ்வப்பொழுது அழித்தார். அதனைக் கண்டு தேவர்கள் புகழ்ந்தார்கள். இவ்வாறு தன் கணைகளை வீரவாகு தேவர் அழித்தலைச் சிங்கமுகன் கண்டு சினந்து, "நான் உன்னை அழிக்கவே வில்லை எடுத்தேன். உன் தோள்களையும், கைகளையும், மார்பையும், மற்றை உறுப்புக்களையும் கணை களால் அழிப்பேன். பல கைகளைக் கொண்ட என்னை இரண்டு கைகளையுடைய உன்னால் எதிர்க்க முடியுமா? வில்லைத் தொட்ட உன் கையைக் காகம் உண்ணும்படி கொடுப்பேன்; நீ முன்னர் மகேந்திரபுரியில் பெற்ற வெற்றிகளை நீக்குவேன்; உன் உயிரை உண்பேன்" என்று கூறினான். வீரவாகு தேவர், "நீ பலவாறு பேசுவதில் பயனில்லை. நான் உன் படைகளையும் சேனைகளையும் அழித்து உன்னை வெல்வேன்" என்றார்.

சிங்கமுகாசுரன் ஆயிரம் விற்களை வளைத்துப் பத்துலட்சம் கணைகளை வீரவாகு தேவர் மேல் விடுத்தான். வீரவாகு தேவர் அவற்றைப் பத்துலட்சங் கணைகள் கொண்டு அறுத்து மேலும் பத்துலட்சம் கணைகளை விடுத்தார். வீரவாகு தேவர் விட்ட கணை களைச் சிங்கமுகன் அழித்தான்; மேலும் வீரவாகு தேவரின் மேல் ஆயிரம் கணைகளை விடுத்தான். வீரவாகு தேவரும் ஆயிரங் கோடி கணைகள் விடுத்து அவை யெல்லாவற்றையும் அழித்தார். சிங்கமுகாசுரன் இரண்டாயிரம் கணைகளை விடுத்து வீரவாகு தேவரின் வில்லை வெட்டி வீழ்த்தினான். அவர் வேறொரு வில்லை வளைப்பதற்குமுன் அவருடைய மார்பில் நூறுகோடி கணைகளை அழுத்தினான். அவர் மார்பினின்று இரத்தம் ஆறுபோலப் பாய்ந்தது. வீரவாகு தேவர் வில்லை வளைத்து இலட்சம் கணை களைச் சிங்கமுகன் மேல் செலுத்தினார். சிங்கமுகன் அவற்றை யெல்லாம் அழித்தான்; பின்னும் கணைகளை மழைபோலப்

பொழிந்தான். வீரவாகு தேவர் அவற்றை மாற்றி ஆயிரங் கணைகளால் அவன் தேரை அழித்தார். சிங்கமுகன் வேறொரு தேர்மேல் பாய்ந்து விற்களை வளைத்தான். வீரவாகு தேவர் அவனுடைய ஆயிரம் விற்களையும் நொடிப் பொழுதில் அறுத்தார். சிங்கமுகன், வில் மானம் கீர்த்தி முதலியன யாவும் இழந்து, பல் இழந்த பாம்பைப் போலத் துன்பமுற்றான். அதனைக் கண்டு பூதர்கள் மகிழ்ந்தார்கள். தேவர்கள் ஆரவாரஞ் செய்தார்கள்.

**சிங்கமுகன் மாயாபாசத்தை வீசுதல்**

தன்னுடைய ஆயிரம் விற்களும் ஒருசேர வெட்டுண்டதையும், வீரவாகு தேவரின் வில்லின் திறமையையும், பூதர்களின் வலிமையையும் சிங்கமுகன் கண்டு, "தேவர்கள், இந்திரன், திக்குப்பாலகர்கள், முனிவர்கள் முதலியோர் மகிழ்ந்து ஆரவாரம் செய்வதை ஒழிப்பேன்" என்று கூறினான்; தன் தாயாகிய மாயை அளித்த மாயாபாசத்தை எடுத்து அதனை நோக்கி, "நீ விரைந்து சென்று பகைவர்களைக் கட்டி, அவர்களின் உயிரை உண்டு, கதிரவன் தோன்றும் மலையில் கொண்டுபோய் வைத்து அவர்களை விட்டு நீங்காமல் அங்கேயே இருப்பாயாக" என்று கூறி வீசினான். உடனே, மாயா பாசம் ஏழு கடல்களும் ஒன்றாய் வந்து சேர்ந்தாற் போன்று இருள் மயமாய்த் தீயைச் சிந்திச் சென்றது. அதனைக் கண்ட தேவர்களும் பூதர்களும் பயந்து ஓடினர். வீரவாகு தேவர் அதனைப் பார்த்து, "இஃது ஒரு மாயமோ" என்று கருதி, "இது கடலோ? நம்மை மூடும்படி வந்த இருளோ? தோள்களைக் கட்டி இழுக்க வந்த கயிறோ? எதுவாக இருந்தாலும் இதனை அழிப்பேன்" என்று துணிந்து அதனைக் கெடுத்தற்குரிய படைக்கலத்தை எடுக்கு முன், அப்பாசம் விரைந்து வந்து எல்லோரையும் கட்டியது. பூதப் படைஞர்களும், படைத் தலைவர்களும், இலக்கத் தெண்மரும், வீரவாகு தேவரும் ஆகிய அனைவரும் மாயாபாசத்தால் கட்டுண்டார்கள். அப்பாசம், "இந்த வீரர்கள் அறிவோடு இருந்தால் நம்மை மாற்றுவர்; ஆதலால் விரைந்து இவர்களை இச்செயலுக்கு ஈடுபடாதபடி செய்வேன்" என்று

கூறி, அவர்களுடைய அறிவை மயக்கி ஆற்றலைக் கெடுத்தது; அனைவரையும் விண்வழியாகத் தூக்கிக்கொண்டு மனத்திலும் விரைந்து சென்றது; உதயகிரியில் கொண்டுபோய் உயிர்ப் பின்றி உறங்கும் அவ்வீரர்களை வைத்துக்கொண்டு இருந்தது. வீரவாகு தேவர் முதலியோர் உதயகிரியை அடைந்ததைச் சிங்க முகன் அறிந்து, "நம் பகைவர்களை விரைந்து கொன்று அவர்கள் உயிரைக் கவர்ந்தேன்" என்று கூறி மகிழ்ந்தான். தன்னை எதிர்த்துப் போர்புரிய ஒருவரும் வாராதது கண்ட சிங்க முகன், "சிவகுமாரன் ஓடிவிட்டானா? நம்மை எதிர்த்துப் போருக்கு வரக்காணோம். அப்பாலகன் எங்குளான்? என் தம்பியை அவன் கொன்றான் என்று கூறுவது பொய்யா?" என்று அண்டங்கள் வெடிக்க ஆரவாரஞ் செய்தான். சிங்க முகன் இவ்வாறு ஆரவாரம் செய்யும்பொழுது ஒரு தூதுவன், "சிவகுமாரன் ஆயிரம் வெள்ளம் சேனைகளோடு பாடி வீட்டில் இருக்கிறான். நான் பார்த்து வந்தேன்" என்று கூறினான். சிங்கமுகன் அதனைக் கேட்டுப் பற்களெல்லாம் தெரியும்படி நகைத்தான்; "சிவகுமாரன் என்னோடு போர்புரியப் பயந்து புற்றினுள் ஒளிந்திருக்கும் பாம்பைப்போலப் பாசறையில் இருக் கின்றான்போலும்! யான் விரைந்து சென்று இன்றைக்கு ஒரு கணப்பொழுதில் போரை முடிப்பேன்" என்று கூறிப் பாச றையை நோக்கிப் புறப்பட்டான்.

**வாயுதேவன் முருகக் கடவுளிடம் கூறுதல்**

இந் நிகழ்ச்சிகளை அறிந்து வாட்டமடைந்த தேவர்கள் ஓட்டம் பிடித்தார்கள். அதனை வாயுதேவன் பார்த்து ஆறுமுகக் கடவுளின் திருவடிகளை வணங்கி, "எம்பெருமானே! பூதர் களும் வீரவாகு முதலிய வீரர்களும் போரிடுகையில், சிங்கமுகன் அவர்களை மாயாபாசத்தினால் கட்டி உதயகிரியில் வைத்துள் ளான்" என்று விண்ணப்பம் செய்தான். அவற்றைக்கேட்ட ஆறுமுகக் கடவுள், "அந்தச் சிங்கமுகன் எங்கிருக்கிறான்?" என்று வினவினார். "அவன் தேர்மீதேறிப் படைகள் சூழ இங்கு வருவது விதியால் இறப்பதற்குப்போலும்" என்று வாயுதேவன் கூறினான்.

**முருகக் கடவுள் போருக்கெழுதல்**

ஆறுமுகக் கடவுள், வாயுதேவன் கூறியதைக் கேட்டுத் திருப்புன்முறுவல் பூத்தார்; வெளியே வந்து தம்முடைய தேரைக் கொண்டுவரும்படி பணித்தார். வாயுதேவன் அப்பணியைத் தலைமேற்கொண்டு முன்னர் சிவபெருமானால் கொடுத்தருளப்பெற்ற **மனவேகம்** என்னும் தேரை முருகப்பெருமான் திருமுன் கொண்டு வந்து நிறுத்தினன். ஆறுமுகக் கடவுள் தேரின் மேல் எழுந்தருளினர். தேவர்கள் இந்திரன் முதலியோர், ஆறுமுகக் கடவுளுக்குப் பல்வகை உபசாரப் பொருள்களை ஏந்தி வந்தனர்; கடல்கள் நாணும்படி ஆயிரம் வெள்ளம் பூதர்கள் ஆரவாரஞ்செய்து, சூலம், மழு, தண்டம், எழு, கலப்பை, மலை, முதலியவைகளை ஏந்தி ஆறுமுகக் கடவுளைச் சூழ்ந்து வந்தார்கள். பூதர்கள் பறைகளை அடித்தார்கள்; சங்கங்களை ஆர்த்தார்கள்; கீர்த்திகளைப் படித்தார்கள். பக்கங்களில் குடை ஆலவட்டம் முதலியவற்றைப் பிடித்தார்கள். "மும்மூர்த்திகளுக்கும் முதல்வன் வந்தான்; சிவகுமாரன் வந்தான்; பகைவர்களாகிய யானைகளுக்கு ஆண்சிங்கமாயுள்ளான் வந்தான்; வேற்படை வீரன் வந்தான்; யாவரும் அறிதற்கரிய தனிமுதல்வனாகிய சண்முகப் பெருமான் வந்தான்; தேவாதிதேவன் வந்தான்" என்று பூதர்கள் ஊதும் திருச்சின்னங்கள் ஒலித்தன.

மூவர்கள் முதல்வன் வந்தான்;
  முக்கணன் குமரன் வந்தான்;
மேவலர் மடங்கல் வந்தான்;
  வேற்படை வீரன் வந்தான்;
ஏவருந் தெரிதல் தேற்ருது
  இருந்திடும் ஒருவன் வந்தான்;
தேவர்கள் தேவன் வந்தான்;
  என்றன சின்ன மெல்லாம்.

**இருதிறப் படைகளும் போர் புரிதல்**

பூதர்கள் சூழவும், தேவர்கள் வாழ்த்தவும், ஆறுமுகக் கடவுள் பாடி வீட்டை விட்டுப் போர்க்களத்தை அடைந்தார். சிங்கமுகனும் படைகளோடு வந்து எதிர்த்தான். பூதர்கள் எழு, மரம், தண்டு, சூலம், சக்கரம், மலை முதலியவற்றை

அவுணப் படைகளின்மீது வீசி யானை, குதிரை, தேர் முதலிய வைகளையும் அழித்தார்கள். அவுணர்கள் வேல், மழு, தண்டு, குலிசம், எழு, அம்பு, சூலம், இருப்பு உலக்கை, கவண்கல் முதலியவற்றை எறிந்து பூதர்களை அழிக்கலுற்றார்கள். இரு திறத்துப் படைகளும் போரிட்டபோது அவுணர்களில் பலர் குருதி சிந்த, தலை தோள் முதலிய உறுப்புக்கள் வெட்டப் பட்டுக் கீழே வீழ்ந்து அழிந்தனர். அதனைச் சிங்கமுகாசுரன் கண்டான். நெருப்புச் சிந்தும் கண்களை உடையவனாய், "நம் பகைவர்களை விரைவில் வாரி உண்டு என் கோபம் தணிவேன்" என்று சினந்து எழுந்தான்.

**சிங்கமுகாசுரன் பேருருவங்கொண்டு பூதர்களை விழுங்குதல்**

சிங்கமுகாசுரனின் ஆயிரம் தலைகளும் அண்ட முகட்டை அளாவின; இரண்டாயிரம் கைகள் அண்டத்தின் திக்குகளை அலைத்தன. பூமியில் புதைந்த கால்கள் அண்டத்தின் அடியை எட்டின. இவ்வாறு சிங்கமுகன் மாயையினால் ஒரு பேருருவம் எடுத்து ஆரவாரஞ் செய்தான். அவ்வுருவத்தைக் கண்டு கூற்று வன் அசைந்து நின்றான்; கதிரவன் ஓடினான்; இந்திரன் நடுங் கினான்; அக்கினி பதைபதைத்தான்; நான்முகன் முதலிய தேவர்கள் மனம் மருண்டார்கள். அப்போது சிங்கமுகன் தன் இரண்டாயிரம் கைகளை நீட்டினான்; ஒவ்வொரு கையிலும் ஆயிரங்கோடி பூதர்களை அள்ளினான்; அவர்களை வாயில் போட்டு விழுங்கினான். அவனுடைய ஆயிரம் வாய்களும் ஆயிரம் அண்டங்களைப்போல் விளங்கின. அவன் வாயினுள் புகும் பூதர்கள், "இது மண்ணுலகமோ! விண்ணுலகமோ!" என்று ஐயுற்றனர். சிலர் அவுணர்கள் உலகமென்று கருதினர். சிங்கமுகனால் விழுங்கப்பெறும் பூதர்கள், அவனுடைய மூக்கை யும் காதையும் பார்த்து, "இவை மலை முழைஞ்சுகளோ!" என்ற னர். சிலபூதர்கள், பாதலத்தில் செல்வதைப்போலச் சிங்கமுக னின் வயிற்றில் புகுந்தார்கள். அவன் காற்றினை உள்ளே இழுக் கும்பொழுது, அதன் வேகத்தால் காற்றோடு சேர்ந்து வயிற்றில் புகுந்தவர் சிலர். உள்ளே சென்றவர்கள், காற்று வெளிவருகை யில் ஆயிரம் யோசனைகளுக்கு அப்பால் போய் விழுந்தார்கள். அவன் வயிற்றை அடைந்த பூதர்களில் சிலர், "மற்ற இடங்கள்

எல்லாவற்றைக் காட்டிலும், சிவபெருமானைத் தியானித்தற்கு ஏற்ற இடம் இதுவே" என்று கூறினர். வயிற்றில் புகுந்த வேறு சில பூதர்கள், கையிலுள்ள படைகளினால் கீறியும் துளைத்தும் அவன் வயிறு கெடாதது கண்டு வலிமை இழந்து நின்றனர். இங்ஙனம் சிங்கமுகன் ஆயிரம் வெள்ளம் பூதர்களையும் வாயிலிட்டு விழுங்கித் தன் வயிற்றில் வைத்துவிட்டான். சிங்கமுகனின் செயலைத் தேவர்கள் கண்டு, "இவன் பூதர்களை வாரி உண்டான்; இனி உலகிலுள்ள பொருளையும் வாரி யுண்பான்; நம்மையும் பிடித்து உண்பான்" என்று அஞ்சி ஓடினார்கள்.

### சூரபன்மன் போர்ச்செய்தி அறிதல்

இந்நிகழ்ச்சிகளைக் கண்டு கொண்டிருந்த தூதுவர்கள் சூரபன்மனை விரைந்து அடைந்தனர்; அவனை வணங்கி, "அரசர்க்கரசே! உன் தம்பியாகிய சிங்கமுகாசுரன் வீரவாகுவையும், மற்றை வீரர்களையும், பூதவெள்ளங்களில் பாதியையும் மாயா பாசத்தினால் கட்டி உதய வெற்பிலிட்டான். இதனைச் சிவகுமாரன் அறிந்து, சிங்கமுகனிடம் வந்து எதிர்க்கச் சிங்கமுகன் பேருருவம் ஒன்று எடுத்துப் பூதர்கள் யாவரையும் அள்ளி விழுங்கினான். நாங்கள் இங்குத் திரும்பும் வரையில் நடந்தன, இவையேயாம். சிங்கமுகன் இப்போது சிவகுமாரனோடு போர்செய்து கொண்டிருப்பான். ஒரு நாழிகைப் பொழுதினுள்ளே பகைவர்களே இலர் என்று கூறும்படி செய்து மீளுவான்" என்று கூறினார்கள். அவற்றைக் கேட்ட சூரபன்மன், அரியணையினின்றும் இறங்கிப்போய் மகிழ்ச்சியுடன் தூதுவர்களைத் தழுவினான்; அவர்கள் விரும்பியவற்றை அளித்தான்; அருகிலிருந்த ஒருவனை நோக்கி, "சிவகுமாரனோடு என் தம்பி சிங்கமுகன் போர் செய்கிறான். அவனோடு சென்ற பல சேனைகள் அழியும். ஆதலால், நகரிலுள்ள சேனைகள் எல்லாவற்றையும் அங்கே அனுப்புக" என்று பணித்தான். ஏவலாளர்கள் பறைசாற்றிச் சிவகுமாரனோடு போருக்குச் செல்லும்படி கூறினர். மகேந்திரபுரியிலுள்ள சேனாவெள்ளங்கள் அணிவகுத்து ஆரவாரஞ் செய்து சிங்கமுகாசுரன் நிற்கின்ற போர்க்களத்தை அடைந்தன. சூரபன்மன், தன் தம்பியின் போர் வலியைக் காணக் கருதி, அரியணையினின்றும் இறங்கினான்; மேருவை ஒத்த ஒரு சிகரத்தில் ஏறினான்;

சிங்கமுகன் கொண்ட பேருருவத்தையும், ஆறுமுகக் கடவுள் தனித்து நிற்பதையும், பூதர்கள் சிங்கமுகனுக்கு உணவாகிய தையும் தன் கண்களால் கண்டு களித்தான்.

**முருகக் கடவுள் - சிங்கமுகன்**

ஆறுமுகக் கடவுள் திருவிளையாடல் புரியத் திருவுளம் கொண்டார்; வாயுதேவன் தேரைச் செலுத்தப் போர்க் களத்தை அடைந்தார். அவுணப் படைஞர்களெல்லாம் பூதப் படைகள் அழிந்ததைக் கண்டு, யானை குதிரை முதலியவை களோடு ஆறுமுகக் கடவுளை வந்தடைந்து எதிர்த்தார்கள்; தங்க ளுடைய படைகள் யாவற்றையும் பொழிந்தார்கள். அதனை ஆறுமுகக் கடவுள் கண்டு, மேருமலை போன்ற வில்லை வளைத்து நாணொலி செய்தார். அவ்வொலியைக் கேட்டு ஆயிரங்கோடி அண்டங்களும் வெடித்தன. அவுண வீரர்கள் அறிவிழந்து தங்கள் கையிலிருந்த ஆயுதங்களை நழுவவிட்டுக் கீழே வீழ்ந் தார்கள். யானைகளும் குதிரைகளும் வீழ்ந்தன. தேர்கள் உடைந்தன. அந்நாணொலியைக்கேட்ட சிங்கமுகன், "இந்த நாணொலியைச் செய்ய வல்லவர் யார்? இவன் சிவகுமாரனே ஆகும்! 'இவன் முன்னே தாரகனைக் கொன்றான்' என்பது உண்மையே போலும். இப்பாலகன் வலிமையை நானே கெடுத்து மீள்வேன்" என்று கூறி, ஆறுமுகக்கடவுளின் எதிரே சென்றான்; அவரை நோக்கி, "சிவகுமாரரே! நான் ஒன்று சொல்வேன். கேளும்: பகைவர்களின் வலிமையை அழித்தல் அரசர்களின் கடன். தேவர்கள் நம் பகைவர்கள். அதனால் அவர்களைத் தண்டித்தோம். நீவிர் அத் தேவர்களில் ஒருவர் அல் லர். நமக்கு வேறுபகைவரும் இல்லை. அங்ஙனமிருக்க நீர் நம் மோடு போருக்கு வருவதேன்?" என்று வினவினான். குமாரக் கடவுள் சிங்கமுகனை நோக்கி, "எளியவனை வலியவன் தண்டித் தால், அதனை ஆராய்ந்து அவ்வலியவனுக்கு நீதி நூல்களில் சொல்லிய தண்டனைகளைச் செய்து எளியவனைப் பாதுகாப் போம். எல்லா அண்டங்களுக்கும் இறைமைத் தொழில் பூண்டுள்ளோம். வலியவர்களாகிய நீவிர் எளியவர்களாகிய தேவர்களைச் சிறையிலிட்டீர்கள். அச்சிறையை நீக்கவே நாம் வந்தோம்" என்று கூறியருளினார்.

உறைதரும் அளியன் தன்னை
வலியவன் ஒறுக்கின் நாடி
முறைகெழு தண்ட மாற்றி
அண்டங்கள் முழுவ துக்கும்
இறையினைப் புரிதும் அற்றால்
நீவிர்கள் இமையோர்க் கிட்ட
சிறையினை அகற்ற வந்தேம்
செருவுமத் திறத்துக் கென்றான்.

சிங்கமுகன் இடியேறு போல் கையோடு கையைக் கொட்டி அண்டங்களும் குலுங்க நகைத்தான்; மிக்க கோபம் கொண்டு, "நீ இங்கே நம்மவர்களை வென்றாய்! சயந்தனையும் தேவர் குழுவையும் சிறையிலிருந்து நீக்குவதற்குச் சிவபெருமானாலும் முடியாது. நீ அதனைச் செய்யப் போகிறாய் போலும்! சிவபெருமான் உனக்குத் தந்த வேற்படையின் வலிமையைத் தாரகன் அறிந்து கொள்ளவில்லை. அதனால் நீ அவனைக் கொன்றாய். ஓடிப்போனால் உயிர் பிழைப்பாய். நீ இங்கு வந்தது, எங்கள் நல்வினையே ஆகும். கடப்ப மாலையை அணிந்த பாலகனே! நான் உன் வலிமையையும், வேற்படையின் வலிமையையும், தாரகனைப்போல் அறியாதவனன்று. விரைந்து போர் புரிவாயாக. வீரவாகு முதலிய வீரர்களும் பூதர்களில் பலரும் இறந்து உதயகிரியை அடைந்தார்கள். மற்றைப் பூதர்கள் நீ காண என் வயிற்றில் போய் இறந்தார்கள். நீ தனித்தவனாய் நிற்கிறாய், ஆயினும் போர்புரிய எண்ணுகிறாய். சயந்தனையும் தேவர்களையும் சிறையிலிருந்து நீக்க வந்த நீ, உன் துணைவர்களையும் பூதர்களையும் அழித்தாய். நம்மோடு போருக்கு அளவில்லாதவர் வந்து இறந்தனர். தேவர்களைச் சிறையிலிருந்து நாங்கள் கனவிலும் விடமாட்டோம்" என்று கூறினான். ஆறுமுகக் கடவுள் அவற்றைக் கேட்டுத் திருப்புன்முறுவல் செய்தார்; ஒரு கணையை வில்லில் பூட்டிச் சிங்கமுகன்மேல் விடுத்தார். அது விந்த மலை போன்ற வடிவம் கொண்ட அவன் மார்பில் புகுந்து முதுகில் ஊடுருவிச் சென்றது. இரத்தம் அருவிபோலச் சொரியச் சிங்கமுகன் துன்பமுற்று நின்றான். தேவர்கள் அதனைக்கண்டு ஆரவாரித்தார்கள். கணைகள் ஊடுருவிச் சென்றதால், மார்பும் முதுகும் வாயில்களைப் போலப் பிளக்க, அவ்வழியே அவன்

வயிற்றிலிருந்த பூதர்கள் யாவரும் வெளியே புறப்பட்டு வந்தார்கள். சிங்கமுகன் அதனைப் பார்த்துக் கைகளினால் துவாரங்களை மாற்றி, ஒரு தண்டத்தை எடுத்து, ஆறுமுகக் கடவுளின் மீது வீசினான். மணிகள் ஒலிக்க அத் தண்டாயுதம் குமாரக் கடவுளை நோக்கி வந்தது. குமாரக் கடவுள் நொடிப் பொழுதில் நான்கு கணைகளை எடுத்து எய்தார். அவை தண்டாயுதத்தை அழித்துச் சிங்கமுகனின் நெற்றியில் புதைந்தன. அவன் மகிழ்ச்சியும் மனத்தில் எழுந்த சினமும் நீங்கி உணர்விழந்து வருந்தி நின்றான். இரத்தம் வடியும் துளைகளை மூடிய கைகள் சோர்ந்தன. பூதர்கள் அவ்வழியே கூட்டிலிருந்து கிளம்பும் பறவைகளைப் போலப் புறப்பட்டு ஆறுமுகக் கடவுளை வந்தடைந்தனர். சிங்கமுகன் அன்று விழுங்கினவைகளும் கொன்றவைகளுமாகிய பூத கணங்கள் யாவும், குமாரக் கடவுளின் திருவருளால் முன்போல் ஒருங்கு வந்து கூடின.

### வீரவாகு தேவர் முதலியோர் உயிர்பெற்று எழுந்து வருதல்

ஆறுமுகக் கடவுள், வீரவாகு தேவர் முதலிய தம்பியர்களையும், படைத்தலைவர்களையும், பூத கணங்களையும் அழைக்கத் திருவுளம் கொண்டார். ஒரு கணையை எடுத்துத் தொடுத்தார். அஃது உதயகிரியை அடைந்து அவர்களைச் சூழ்ந்திருந்த மாயையை அகற்றியது. ஆறுமுகக் கடவுளின் திருவருளால் துயில் நீங்கி எழுந்தவர் போல் யாவரும் எழுந்தனர்; நல்லுணர்வு வரப்பெற்று இன்பம் அடைந்தனர்; குமாரக் கடவுளின் திருவடிகளை வாழ்த்தினார்கள். அக்கணை நான்முகனால் ஆக்கப்பட்ட ஒரு புட்பக விமானம்போல் ஆகியது; வீரவாகு தேவர் முதலியவர்களைச் சேனைகளோடு தாங்கி உதய கிரியைவிட்டுப் புறப்பட்டு விண்வழியாகப் போர்க்களத்தில் நின்ற ஆறுமுகக் கடவுளின் திருமுன் கொண்டுவந்து விடுத்துத் தூணியினுள் புகுந்தது. வீரவாகு தேவரும், இலக்கத்தெண்மரும், பூதர்களும் குமாரக் கடவுளின் திருவடிகளை வணங்கினர்; வறிஞன் திடீரென்று செல்வம் வரப்பெற்றாற்போல, மகிழ்ந்து அவரைத் துதித்தார்கள். முருகக் கடவுள் அவர்களை நோக்கி, "நீங்கள் யாவரும் சிங்கமுகன் பாசத்தால் கட்டுப்பட்டு உதய கிரியை அடைந்து வருந்தினீர்கள்!" என்று அருளிச் செய்தார்.

அவர்கள் குமாரக் கடவுளை நோக்கி, "எங்கள் உணர்வு நீங்கினுலென்ன? உயிர்போய் நரகத்தில் அழுந்திஞலென்ன? கொடிய துன்பத்தில் மூழ்கி வினைவயத்தால் பிறவிகளில் புகுந்தால் என்ன? மேலான தந்தையாகிய தேவரீருடைய திருவருள் உண்டானுல் எங்களுக்கு என்ன குறை?" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். குமாரக் கடவுள் அதுகேட்டு அவர்களுக்குப் பேரருள் புரிந்தார்.

### அவுண வீரர்கள் எதிர்த்து அழிதல்

ஆறுமுகக் கடவுளின் நாமெணுலி கேட்டுச் சோர்வுற்று வீழ்ந்த அவுண சேனைகள் விரைந்து எழுந்தன; "இப்பாலகன் நம்மை நாணேசையால் அழிக்கவல்லனோ?" என்று கோபங் கொண்டு படைக்கலங்களைவீசி அவரைச் சூழ்ந்தன. அவர் திருப்புன்முறுவல் தோன்ற வில்லை வளைத்து நாண்பூட்டி மிகுந்த கணைகளை விடுத்தார். அவர் எய்த கணைகளில் சில அக்கினியை ஒத்தன; சில நஞ்சை ஒத்தன; சில இருளை ஒத்தன; சில பாம்புகளை ஒத்தன; சில இயமனை ஒத்தன; சில கதிரவனை ஒத்தன; சில மின்னல்களை ஒத்தன; சில சூலத்தை ஒத்தன; சில குலிசத்தை ஒத்தன; சில தருமத்தை உண்டாக்குதலால் நான்முகனை ஒத்தன; சில உலகங்களைப் பாதுகாத்தலால் திருமாலை ஒத்தன; சில அவுணர்களை அழித்தலால் உருத்திரர்களை ஒத்தன.

அறத்தை நல்கலின் அந்தணன் போல்வன; அகிலத்
திறத்தை அன்பொடு போற்றலில் செங்கண்மால் போல்வ;
ஒறுத்து மன்னுயிர் உண்குறும் அவுணரை ஒருங்கே
இறுத்தல் செய்திடுந் தன்மையால் ஈசனே போல்வ.

அவை மன வேகத்தினும் கடிந்து செல்லக்கூடியன. ஒரு கணையைத் தொடுத்தால் அது கோடியாகும். அவை கோடாகோடியாகும். மேலும் அவ்வாறே மிகுந்து சென்றமையால் அவருடைய கணைகளை எண்ண இயலாததால் அவற்றை அனந்தம் என்று கூறுவதே நன்று. முருகக் கடவுளின் கணைகள் மேகங்களைப் பிளக்கும்; கடலை உறிஞ்சும்; தேர்களை உடைக்கும்; தேவர்களின் உலகத்தைப் பிளக்கும்; வடவாமுகாக்கினியை விழுங்

கும்; மேருவைத் துளைக்கும்; ஆயிரம் கோடி அண்டங்களை ஊடுருவிச்சென்ற பின்னரும் மேலும் செல்லும். அவற்றின் சத்தி அளவிடற்கரியது. ஆறுமுகக் கடவுளைச் சூழ்ந்த அவுணர்களின் கால்களும், கைகளும், தோள்களும், முடிகளும் அழிந்தன; நால்வகைச் சேனைகளும் அழிந்தன. அவரிடமிருந்து செல்லும் கணைகள் அசுரர்களின் தலையை அண்டத்து உயிர்களுக்கு அப்பால் கொண்டுபோய்ப் போடும். தேவர்களும் அவற்றைக் காண்கிலர். கணைகள், அவுணர்களுடைய உடல்களை எங்கும் சிதறி, அவ்வண்டங்களை இரத்த அண்டங்களாக்கும். அவுணர்களின் இரத்தமும், தலை தோள் முதலிய உறுப்புக்களோடும், யானை குதிரை முதலியவைகளோடும் அண்டங்கள் எங்கும் செறிந்தன. அவுணர்கள் அழிந்தனர். இவைகளைக் கண்டு தேவர்களும் அஞ்சினர். போர்க்களத்தில் பருந்துகளும் காகங்களும் மிகுந்தன. உடற் குறைகளும் பிணமலைகளும் மலிந்தன.

சிங்கமுகனின் நால்வகைச் சேனைகளும் அழிந்தன. அவன் மாத்திரம் தனித்து நின்றான். முன்னர்க்கொண்ட மாயப் பேருருவம் ஆறுமுகக் கடவுளின் கணையால் அழியவே, சிங்கமுகன் பழைய வடிவோடு தேரின்மேல் நின்றான்; தன் படைகளைக் காணாது மனங்கொதித்தான்; தன் ஆயிரம் கைகளால் ஒரே தன்மையான ஆயிரம் விற்களை எடுத்தான்; பத்து லட்சம் கணைகளை விடுத்தான். குமாரக் கடவுள், அதனைக் கண்டு திருப்புன்முறுவல்பூத்து, ஆயிரங் கணைகளைச் செலுத்தி அவன் கணைகளை அழித்தார். மேலும் ஆயிரங் கணைகளைச் செலுத்தினார். சிங்கமுகன் அவர் விடுத்த கணைகளை அழித்து அவர்மேல் பத்து லட்சம் கணைகளை விடுத்தான். முருகக் கடவுள் அவற்றை விலக்கினார். சிங்கமுகன் ஆயிரம் கணைகளை முருகக் கடவுளின் தேர்ப்பாகனாகிய வாயுதேவனின் மார்பில் செலுத்தினான். வாயுதேவன், இரத்தம் வடிய வலிமை இழந்து துன்பமுற்றான். அதனைக் கண்ட ஆறுமுகக் கடவுள் நூறு கணைகளால் சிங்கமுகன் தேரை அழித்தார். அவன் பூமியில் இறங்கிப் பல கணைகளைப் பொழிந்தான். சிவகுமாரர் அவன் கணைகளை மாற்றி ஆயிரம் கணைகளால் விற்களை அறுத்தார். அதனைக் கண்டு திருமால், நான்முகன், தேவர்கள் முதலியோர் ஆறுமுகக் கடவுளைக் கையெடுத்து வணங்கினார்கள். சிங்கமுகன் வடவாமுகாக்கினியைப் போலக்

கோபித்தான்; ஒரு சூலப்படையை எடுத்துச் சுழற்றி எறிந்தான். முருகக்கடவுள் அதனைப் பதினான்கு கணைகளால் அறுத்து மேலும் ஆயிரங் கணைகளைச் செலுத்தினார். சிங்கமுகன் ஒரு தண்டாயுதத்தினால் அவற்றை அழித்தான்; ஒரு தண்டத்தை ஏந்திக் குமாரக் கடவுளை எதிர்த்துச் சென்றான். குமாரக்கடவுள் தண்டாயுதத்தை எடுத்த சிங்கமுகனின் கையை ஏழு கணைகளினால் பூமியில் வீழ்த்தினார். சிங்கமுகன் தன்கை கீழே விழுமுன் வேறொரு கையால் அத்தண்டத்தை எடுத்து ஆறுமுகக் கடவுள் மேல் வீசினான். அவர் ஆயிரம் கணைகளால் அதனை அழித்தார். தண்டம் கீழே விழுந்தது. சிங்கமுகன் கூற்றுவனிடம் கவர்ந்த பாசத்தைக் குமாரக் கடவுள்மேல் வீசினான். அவர் அப்பாசத்தை ஆயிரம் கணைகளால் பொடியாக்கினார். சிங்கமுகன் தன் இரண்டாயிரம் கைகளையுங் கொண்டு அவரைப் பிடிக்க நினைத்துச் சினத்துடன் வந்தான். குமாரக் கடவுள் இரண்டாயிரம் கணைகளால் இரண்டாயிரம் கைகளையும் அறுத்தார். வெட்டுண்ட கைகள் நிலத்தில் விழுமுன் வேறுகைகள் மீண்டும் முளைத்தன. நிலத்தில் விழுகின்ற கைகளை முளைத்தெழுந்த கைகளால் பற்றிக் கொண்டு சிங்கமுகன் போருக்கு வந்தான். அதனைச் சிவகுமாரர் கண்டு ஆயிரங் கணைகளால் அவனுடைய தலைகளையும் விரைவில் அறுத்து இரண்டாயிரங் கணைகளால் அவனுடைய இரண்டாயிரங் கைகளையும் வெட்டி வீழ்த்தினார். அவை மீட்டும் முளைத்தெழுதலைக் கண்டு தேவர்கள் நடுங்கித் துன்பமடைந்தார்கள். அதனை முருகக் கடவுள் கண்டு, “முன்னாளில் இவன் ஆலவனத்தில் இயற்றிய யாகத்தில் தலைகளையும் கைகளையும் ஆகுதி செய்ததால், இவை மீண்டும் முளைத்தன” என்று எண்ணினார். தேவர்கள், “சிங்கமுகன் எவ்வாறு இறப்பான்?” என்று ஐயமுற்றுச் சோர்வுற்றார்கள்.

அப்போது சிங்கமுகன் சினந்து குமாரக் கடவுளின் முன் நின்று, “பாலகனே! நீ பல யுககாலம் என் கைகளையும், தலைகளையும் அறுத்தாலும் அவை மீட்டும் முளைப்பன அன்றி அழியுமோ! அதனால் நீ சோர்வடைவாய். நீயா என்னை வெல்வாய்? என்னுடைய தவ வலிமையை நீ அறியாய். உன் தந்தை எனக்கு அருளிய வலிமையைப் பற்றி உனக்குத் தெரியாது போலும்! நீயோ ஒரு குழந்தை. என்னோடு போருக்கு வந்தது நீ வாழ்வ

தற்கேற்றதன்று. தேவர்கள், நாங்கள் இட்ட சிறைகளிலிருந்து மீளப்போவதுமில்லை. நான் அழியப்போவதுமில்லை. நீ திரும்பிச் செல்வாயாக; உன்னுயிரை விட்டேன்" என்ருன். இவற்றை ஆறுமுகக் கடவுள் கேட்டு, "உணர்வற்றவனே! உன்னுயிருக்கு வரையறுத்த காலம் நீங்கியது. நீ ஏன் வீணில் பிதற்றுகிருய். நான் விரைவில் உன்னைக் கொல்வேன்" என்ருர். சிங்கமுகன் அதனைக் கேட்டு இடிபோல ஆர்த்து, இரண்டாயிரம் மலைகளைப் பிடுங்கி வீசினுன். ஆறுமுகக்கடவுள் அவற்றைப் பொடி படுத்தி அவனுடைய மார்பில் ஆயிரங் கணைகளை விடுத்தார். அவை மார்பைப் பிளந்தன. சிங்கமுகன் அளவில்லாத பெரிய மலைகளைத் தேடிப் பிடுங்கினுன். உடனே முருகக் கடவுள் ஆயிரங்கணைகளை விடுத்து அவனுடைய தலைகளை அறுத்து வீழ்த்தினுர். அவை விழ, மீட்டும் ஆயிரம் தலைகள் முளைத்தெழுந்தன. சிங்கமுகன் முன் பறித்த மலைகள் எல்லாவற்றையும் குமாரக் கடவுள்மேல் எறிந்து தோள்களைத் தட்டினுன். முருகக் கடவுள் இரண்டாயிரங் கணைகளால் மலைகளையும் அவன் தோள்களையும் அழித்தார். தோள்கள் அழியுமுன் வேறு தோள்கள் பின்னும் முளைத்தன. முருகக் கடவுள், அதனைக் கண்டு திருவிளையாடலில் விருப்பங் கொண்டு ஆயிரத்தெட்டுத்தரம் சிங்கமுகாசுரனுடைய கைகளையும் தலைகளையும் கண்டதுண்டம் செய்தார்.

அங்ஙனம் வெட்டுண்ட கைகளும் தலைகளும் நாலா திசைகளிலும் சென்றன; கடலிற் சென்றன; மலைகளிற் சென்றன; பூமியில் சென்றன; விண்ணுலகிற் சென்றன; விண்ணுலகையும் வைகுண்டத்தையும் தாண்டி அண்ட கோளகைகளிலும் சென்றன. விண்ணுலகு சென்ற அவன் தலைகளைக் கண்ட தேவர்கள், அச்சமுற்று மயங்கிக் கீழே விழுந்தார்கள். வெட்டுண்டு வீழ்ந்த அவன் தலைகளிலுள்ள வாய்களினுள்ளே சில பேய்கள் ஆயிரங்கோடி பிணங்களை இட்டு, 'இது நமக்கு ஒரு பெரிய சிகரமாடம்' என்று அதனுட் புகுந்து குடி இருந்தன. வெட்டுண்ட தலை ஒன்று துடித்து வாயைப் பிளக்க, அங்கு விளையாடிக் கொண்டிருந்த கோடி பிசாசுகள், பிணக்குவியல்களை அதனுள் இழுத்துக்கொண்டுபோய்ச் சேர்த்தன; வாய் விரைந்து மூடியதும் வெளியே வர வழி தெரியாது வாய்க்குள் ஓடி

உலைந்தன. சில பேய்கள் மூக்கின் துவார வழியாகவும், காது களின் துவார வழியாகவும் புறப்பட்டு வெளியே வந்தன.

**சிங்கமுகன் அழிவு**

சிங்கமுகாசுரனின் தோள்களும் தலைகளும் அறுக்க அறுக்க மீட்டும் முளைத்தலை முருகக் கடவுள் கண்டார்; பல கணைகளைச் செலுத்தி அவனுடைய ஒரு தலையையும் இரண்டு கைகளையும் மட்டும் நிறுத்திவிட்டு, மற்றைத் தலைகளையும் கைகளையும் அறுத்தார். சிங்கமுகனின் வெட்டுண்ட கைகளும் தலைகளும் தோன்ற ஆரம்பித்தலைக் குமாரக் கடவுள் கண்டு அதட்டினர். உடனே முளைக்கின்ற சிரங்களும் தோள்களும் மீட்டும் முளைக் காமல் உடம்பினுள் அடங்கிவிட்டன. அதனல் சிங்கமுகன் மானமுற்றுச் சோர்ந்து பலமிழந்து வருந்தி நின்றான். குமாரக் கடவுள் சிங்கமுகனை நோக்கி, "நம் கணைகளால் வெட்டப் பெற்ற உன் தலைகளும் கைகளும் இனித் தோன்ரு. நீ இங்கே இறந்த பிறகோ தோன்றும்?" என்று கூறியருளினர். சிங்க முகன் அவரைப் பார்த்து, "பாலகனே! என் தலைகளும் கைகளும் வெட்டுண்டன என்று எண்ணுதே; தேவர்களனைவரும் என் ஆற்றலை அறிவர். ஒரு தலையையும் இரண்டு கைகளையும் கொண்டே எல்லாவுலகங்களையும் அழிப்பேன்" என்று கூறி னன்; ஒரு மலையைப் பிடுங்கி அவர்மீது எறிந்தான். அம்மலையைக் குமாரக் கடவுள் ஒரு கணையால் பொடியாக்கினர். சிங்கமுகன் ஒரு தண்டத்தை ஏந்தி, "பாலகனே! நீ பகைவர்களை வேற்படை யால் கொல்லக் கற்றிருக்கிருய்; அவர்களின் படையை உன் கணை களால் அழிப்பாய். நீ வேறு படைக்கலங்கள் ஒன்றும் பயின்ற தில்லை போலும்" என்று கூறிக் கையிலிருந்த தண்டத்தை முருகக் கடவுள்மேல் எய்தான். சிங்கமுகாசுரன் கூறியதையும் அவன் விடுத்த தண்டத்தையும் அருள் வள்ளலாகிய ஆறுமுகக் கடவுள் திருவுள்ளத்தில் மதித்துத் தம் திருக்கரத்தில் இருக்கின்ற குலிசப் படையை நோக்கி, "நீ சிங்கமுகனின் உயிரை உண்டு வருவாயாக" என்று விடுத்தருளினர். குலிசம் விரைந்து சென்று தண்டத்தைத் துகளாக்கியது; சிங்கமுகனின் மார்பில் பாய்ந்து, அவன் உயிரைக் குடித்துக் குருதியைக் கொப்பளித் துச் சென்றது. சிங்கமுகன் பதைபதைத்து வீழ்ந்து இறந்தான்.

குலிசப்படை தேவகங்கையில் மூழ்கித் தண்டமிழ்ச் சங்கப் புலவராகிய ஆறுமுகக் கடவுளின் திருக்கரத்தில் வந்து வீற் றிருந்தது. நான்முகன் முதலிய தேவர்கள் அதனைக் கண்டு ஆரவாரித்து மகிழ்ந்து ஆடிப்பாடினர்; பூமழை பொழிந்தனர்; ஆறுமுகக் கடவுளை அடைந்து மகிழ்ந்து வணங்கினர். குமாரக் கடவுள் யாவருக்கும் பேரருள் செய்து, வீரவாகு முதலிய தேவர் களோடும் தம் பாசறைக்குத் திரும்பியருளினுர்.

**சூரபன்மன் போர்ச் செய்தியை அறிதல்**

சிங்கமுகன் முருகக் கடவுளோடு போர்புரிந்து இறந்ததை அறிந்த ஒற்றர்கள் மகேந்திரபுரத்தை நோக்கி ஓடினுர்கள். கோபுரத்தின்மேல் நின்று தன் தம்பியின் போரைப் பார்த்துக் கொண்டிருந்த சூரபன்மன், தன் தம்பி போர்க்களத்தில் வீழ்ந்த தைக்கண்டு, ''அவன் இறந்தானே மயங்கினுனே'' என்று ஐயங் கொண்டிருக்குங்காலை, ஓடிச்சென்ற ஒற்றர்கள் சூரபன்மனைக் கண்டு வணங்கி, ''அரசர்க்கரசே! உன் தம்பியாகிய சிங்க முகாசுரன் சிவகுமாரரின் குலிசப் படையால் இறந்தான். அவன் உண்டதால் இறந்த பூதர்களும், மாயாபாசத்தால் உதயகிரியி லிட்ட வீரவாகு தேவர் முதலியவர்களும் உயிர்பெற்றுத் திரும்பி வந்தார்கள்; இஃது உண்மை'' என்று கூறினுர்கள். சூரபன்மன் அவற்றைக்கேட்டு மிகச் சினந்தான்; கண்ணீர் பெருக்கி வாயில் புகை உண்டாக வாடினுன்; பதைபதைத்துத் துன்புற்றுத் தீயை உண்டவர்போலவும், காஞ்சி காமகோட்டத்தின் மேனிலை யினின்றும் சக்கரதீர்த்தத்தில் விழுபவர்களைப் போலவும், கோபு ரத்தினின்றும் தவறிக் கீழிடத்தில் வீழ்ந்து மிக வருந்தினுன்.

வண்ணச் சிகரம் வழுவுற்றுக் கீழ்த்தலத்தில்
கண்ணிற் பொழிந்த கடலினிடை வீழ்ந்தனனுல்
ஒண்ணுற்ற காஞ்சி உமையவள்கோட் டத்தினின்றும்
தண்ணுற்ற நேமித் தடத்திடையே வீழ்பவர்போல்.*

---

* இங்குக் காஞ்சி காமாட்சி ஆலயத்தின் மேல் மாடியிலிருந்து சக்கர தீர்த்தம் என்னும் உலகாணித் தீர்த்தத்தில் தலை கீழாகவும் கால் மேலாகவும் ஆகுமாறு விழுவது உவமையாகக் குறிக்கப்பெற்றுள்ளது. இச்செயலைக் 'கரு மாறிப் பாய்தல்' என்பர். இது கச்சியப்ப சிவாசாரியர் காலத்து நடந்து வந்தமையால், தாம் பாடியருளிய கந்தபுராணத்தில் இதனை உவமை காட் டினர். தற்போது இந்நிகழ்ச்சி நிகழும் வழக்கம் காமகோட்டத்தில் இல்லை.

சூரபன்மன் கரியமேகத்தைபோலக் கீழேவிழுந்து பூமியில் அங் கையினால் அடித்துச் சுழன்று வலிமையும், வெற்றியும், நலமும் தொலைய மிக்க துன்பத்தில் மூழ்கி அலறி, "என் ஐயனேயோ! எனது தம்பியேயோ! தாரகன் தமையனேயோ! சிங்கமுகத் தவோ! 'அவுணர்கள் எம் அன்னையே' என்றுரைக்க அவர்கட்கு அருள்புரிந்த ஆண்டகையேயோ! தூதுவர்கள் உன்னையா இறந் தனை என்று வந்து கூறினர்! இஃது என்னையோ! முன்னாளில் இந்திரன் முதலாகிய தேவர்களை வென்று எனக்கு வெற்றி யளித்த உன்னை இன்றைக்குப் போரில் இளைய ஒரு பாலகன் கொன்றானோ? உன்னுயிரைக் கூற்றுவனும் கொண்டுபோ னானோ! உன்னைக் கூற்றுவன் கொண்டுபோனான் என்று பிரம விஷ்ணுக்கள் கேள்வியுற்றால் மிக மகிழ்ந்து தம் தம் பதிகளில் ஆட்சி செலுத்துவார்களே! பொன்னையும், பூமியையும், புதல் வர்களையும், மனைவியர்களையும், மற்றைப் பொருள்களெல்லா வற்றையும் பெறலாம்; என் தம்பியே! இப்பிறப்பில் உன்னை இனி யான் பெறுவதுண்டோ? சொல்லுவாய்.

பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரைப்
பின்னை யுளபொருளை யெல்லாம் பெறலாகும்
என்னை யுடைய இளையோனே! இப்பிறப்பில்
உன்னை இனிப்பெறுவ துண்டோ? உரையாயே.

பகைவர்களுக்குச் சிங்கமே! நீ உன் தமையன் தாரகனைக் காண விண்ணுலகம் சென்றாயோ? செஞ்சோற்றுக் கடனையும் சகோ தரர் செய்யுங் கடனையும் நீ இன்றைக்குக் கழித்துச்சென்றாயோ? தாரகன் இறந்தபோது என் ஒரு தோள் அழிந்ததென்று அயர்ந் திருந்தேன். சிங்கமுகனே! இன்றைக்கு நீ இறந்ததால் யான் மற்றைத் தோளையும் இழந்தேன்; வலியற்றவனாயினேன்" என்று சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களும் செவிடுபடும்படி கதறி, அலறி அழுதான். அதனைத் திருமால் பிரமன் முதலாகிய தேவர்கள் கேட்டு மகிழ்ந்து ஆர்த்தார்கள்.

திருவிருத்தம்–475
ஆகத் திருவிருத்தம்-2,397

——oo——

# 13. சூரபன்மன் வதைப் படலம்*

**[ ஏழாநாள் முதல் பத்தாநாள் வரை யுத்தம் ]**

**அவுணப்படைகள் எழுச்சி**

சூரபன்மன், தான் குமாரக்கடவுளோடு போர் செய்ய எண்ணினன்; பல கோடி ஒற்றர்களை அழைத்து அவர்களை நோக்கி, "ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள என்னுடைய படைகள் எல்லாவற்றையும் விரைவில் அழைத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டான். ஒற்றர்கள் நன்றென்று அவனை வணங்கி எல்லாவண்டங்களுக்கும் விரைந்து சென்று சூரபன்மனின் கட்டளையைத் தெரிவித்தனர். அண்டங்கள்தோறும் உள்ள அவுணத் தலைவர்கள் நால்வகைச் சேனைகளோடும் இவ்வண்டத்தை நோக்கிப் புறப்பட்டு வந்து சேர்ந்தார்கள். அச்சேனைகளின் பெருக்கம், முன்னொருகால் திருமால் பிரமனோடு பகை கொண்டு உலகிலுள்ள உயிர்களை உண்ண அவ்வுயிர்கள் பின்பு திருமாலுடைய உந்திக்கமலத்தின் வழியே தோன்றிவந்ததையும், ஐம்பெரும் பூதங்களும் உயிர்க் கூட்டங்களும் புவனங்களும் வேதாகமங்களும் பிறவும் தொடக்கப் படைப்புக் காலத்திலேயே சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளினின்றும் தோன்றிவந்ததையும் போன்றதாகும்.

முந்தை அண்டத்தின் நெறிதனில் முழங்கிருஞ் சேனை
வந்து வந்திவட் செறிவன விதியொடு மாருய்ச்
சுந்த ரங்கெழு மாயன்இவ் வுலகுயிர் துய்ப்ப
உந்தி யின்வழி அங்கவை தோன்றுமா றொப்ப.

பூதம் யாவையும் உயிர்களும் புவனமுள் ளனவும்
பேதம் நீங்கிய சுருதியா கமங்களும் பிறவும்

---

*இந்நிகழ்ச்சி ஏழாநாள்முதல் பத்தாநாள்வரை நிகழ்ந்ததாகும். சூரபன்மன் இறுதியாகக் குமாரக்கடவுளோடு நான்குநாள் போர்புரிந்து இறந்தான் என்பதை "......ஈரிரு நாள்வரைத், துன்ன லன்தொலை யாதமர் ஆற்றியே" எனவரும் கந்தபுராணம் - சூரபன்மன் வதைப்படலம் 409-ஆம் செய்யுள் அடிகளால் உணரலாம். மகேந்திரபுரியில் சூரபன்மனுதியோர் முருகப் பெருமானுடன் போர் புரிந்தது பத்துநாட்களாகும். இதனை, "சொல்லும் ஐந்திரு வைகலின் அவுணர்தம் தொகையும், அல்லல் ஆற்றிய சூரனும் முடிந்திட அடுதும்" எனவரும் கந்தபுராணம் - மகேந்திரகாண்டம் - சயந்தன் கனவு காண் படலம் 11 - ஆம் செய்யுளின் அடிகளால் அறியலாம்.

ஆதி காலத்தின் அநாதியாம் எம்பிரான் அளப்பில்
பாத பங்கயத் துதிப்பவும் போன்றன பகரின்.

ஆகவே, படைகளின் எண்ணிக்கை அளவிடற் கரியதாய் இருந்தது. சேனைகள் வரவால் கதிரவனின் ஒளிகள் மங்கி மறைந்தன. அக்கினி வாயு முதலியோர் நடுங்கினர். சேனைகளின் ஒலிகேட்டு உலகம் யாவும் நடுங்கின. எழுந்த பூதூளியால் கடல்கள் தூர்ந்து போயின. சேனைகள் நடையால் அண்டங்கள் பிளந்தன. தேவர்கள், சேனைப் பெருக்கைக் கண்டு இரங்கினார்கள். இந்திரன் மருண்டான். நான்முகனும் திருமாலும் கலங்கினார்கள். அவுண சேனைகள் மண்ணினும், விண்ணினும், திக்குக்களிலும், கடல்களிலும், மலைகளிலும், மற்றை இடங்களிலும் நிறைந்தன. அச் சேனைகள், செல்ல இடம் போதாமையால், நான்முகன் உலகம், திருமால் உலகம், முனிவர்கள் உலகம், இந்திரன் உலகம் முதலிய உலகங்களிலெல்லாம் சென்று நிறைந்தன. சூரபன்மனின் சேனைகள் எண்ணில் அடங்காவாயின. அதற்கு ஏற்ற உவமை கூறுவதற்கும் உலகில் வேறொன்றும் இல்லை. தூசிப்படைகள் மகேந்திரபுரியை மறைத்து இவ்வண்டம் முழுவதும் இமைப் பொழுதில் நிறைந்தன. இவ்வாறு சேனைகள் வருவதைச் சூரபன்மனிடம் ஒற்றர்கள் போய்த் தெரிவித்தார்கள்.

**சூரபன்மன் போருக்கு எழுதல்**

சூரபன்மன், ஒற்றர்கள் கூறியதைக் கேட்டுத் தன் இருப்பிடம் விட்டு எழுந்தான்; மாளிகையினுட் சென்று நீராடி, ஐவகை உணவுகளோடு கூடிய அறுசுவைப் பொருளும் பொருந்திய அன்னத்தை உண்டான்; நெற்றியில் விபூதி தரித்தான்; கலவைச் சாந்தணிந்து, புது ஆடைகளும் ஆபரணங்களும் அணிந்தான்; பாசுபதம், வீரபத்திரம், சருவசங்காராத்திரம் முதலிய தெய்வப் படைக் கலங்களை ஆயிரம் கோடி தேர்களில் வைத்துச் சிங்க வாகனத்தையும் இந்திரஞாலத் தேரையும் கொண்டு வரும்படி கட்டளையிட்டான்.

**சூரபன்மன் பொற்றேர் ஏறிப் போர்க்களம் அடைதல்**

அதன்பின் சூரபன்மன் தன் அருகில் வரும் தேர்ப்பாகர்களின் கூட்டத்தைப் பார்த்து, "உயர்ந்த தேர் ஒன்றைக்

கொண்டு வருக" என்ருன். அவர்கள் சூரபன்மனை வணங்கிச் சென்ருர்கள்; எழுபதினுயிரம் சிங்கங்களையும், எழுபதினுயிரம் குதிரைகளையும், எழுபதினுயிரம் பேய்களையும் பூட்டிய ஒரு தேரை அலங்காரஞ் செய்தார்கள். அத்தேர் பூமியைக் காட்டிலும் பெரிய இடங் கொண்டது; ஆயிரங்கோடி அண்டங்களையும் சுமக்கும் வலிமை கொண்டது; சிங்கக் கொடி உடையது; காற்றினுங் கடிது செல்லும் வேகமுடையது; செல்லும் வேகத்தால் கதிரவனையும் வடவாமுகாக்கினியையும் அழியச் செய்வது; பலமணிகள் இழைக்கப் பெற்றுள்ளது; சூரபன்மன் இயற்றிய வேள்வியினின்று அவனேடு தோன்றியது; பகைவர்களைப் புறங்கொடுத்து ஓடச்செய்வது; பிரமகற்பத்திலும் அழியாதிருப்பது; சிவபெருமான் முன்னர் அளித்த இந்திரஞாலத் தேரை ஒத்தது; அழகில் சிறந்தது. அத்தகைய சிறப்பு வாய்ந்த தேரைச் சூரபன்மன்முன் ஏவலாளர்கள் கொண்டுவந்து நிறுத்தினுர்கள். சூரபன்மன் அத்தேரில் ஏறியபொழுது அவுணர்கள் பூமாரி பெய்தனர். தேர், நகரத்திலுள்ள ஆயிரங்கோடி வீதிகளையும் கடந்து முதற் கடைவாசலில் வந்தது. பலவகை முரசங்கள் முழங்கின. அவுணர்கள் ஆரவாரஞ் செய்தனர். நிசாளம், சல்லிகை, பேரி, கொம்பு, தண்ணுமை, முரசம், காகளம், துடி முதலானவை ஒலித்துச் சென்றன. படைகள் எங்கும் பரந்து நெருங்கிச் சென்றன. மைநாகம் மேருமலையில் ஏறிவந்தாற் போலச் சூரபன்மன் பொன்மயமாகிய தேரில் ஏறிப் போர்க்களத்தை அடைந்தான். அவனுடைய தூசிப்படைகள், பூமியிலும் வானத்திலும் நிறைந்தன; ஆறுமுகக்கடவுளின் பாசறையையும் சூழ்ந்தன. சூரபன்மன் படைகளுடன் வருவதைக்கண்டு, தேவர்கள் நடுங்கினுர்கள்; இந்திரன் அஞ்சினுன்; நான்முகன் திருமால் முதலியோர் மனம் வருந்தினர்; பூதர்கள் ஏங்கினுர்கள்.

### முருகக்கடவுள் போருக் கெழுதல்

நான்முகன், திருமால், இந்திரன் முதலியோர் ஆறுமுகக் கடவுளின் திருவடிகளை வணங்கி, "எம் பெருமானே! சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள சேனைகளோடு போர்புரியப் புறப்பட்டு வருகிருன். அவன் தூசிப்படைகள் நம் பாசறையை நெருங்கி வருகின்றன" என்ருர்கள். ஆறுமுகக்

கடவுள் திருப்புன்முறுவல் பூத்தார்; வாயுவை நோக்கிக் குறிப்புத் தோன்றப் பார்த்தார். அவன், மனவேகம் என்னும் தேரை அவர் திருமுன் கொண்டுவந்து நிறுத்தினன். குமாரக்கடவுள் **மழு, குலிசம், சூலம், வேல், வாள், பரிசை, சக்கரம், தண்டு, எழு, வில், அம்பு, கைவேல்** ஆகிய இவற்றைத் தம் திருக் கரங்களில் ஏந்தினர். இங்ஙனம் போர்க்கோலம் பூண்ட முருகக் கடவுள் மனவேகம் என்னும் தேரில் வந்து ஏறியருளினர். வீரவாகு தேவரும் இலக்கத்தெண்மரும், பக்கத்திலே துதித்துக் கொண்டு வந்தார்கள். இரண்டாயிரம் வெள்ளம் பூதர்களும், மராமரங்களையும், மலைகளையும், அளவற்ற படைக் கலங்களையும் தாங்கியவர்களாய் முருகக் கடவுளைச் சூழ்ந்து வந்தார்கள். திருமால், நான்முகன், இந்திரன் முதலிய தேவர்கள் பூமழை பொழிந்து போற்றித் துதித்து வந்தார்கள். இவ்வாறு குமாரக் கடவுள் உருத்திரரைப்போலத் தேர்மேல் ஏறிப் போருக்குப் புறப்பட்டுவந்தார்.

**பூதப் படைஞர் முதலியோரின் கலக்கம்**

பூதப் படைகள், அவுணப் படைகளின் பரப்பையும் வளத்தையும் வரபலத்தையும் கண்டு வியந்து கலக்கமுற்று, "இப் படையை நம்மாலும் நம் தலைவர்களாலும் மற்றை இலக்கத் தெண்மராலும் வெல்லுதல் இயலுமோ? நமது இறைவனாகிய ஆறுமுகக் கடவுளே அன்றி வேறு யாவர் எதிர்த்து அழிக்க வல்லவர்!" என்று எண்ணி, 'இனி, நாம் ஓடி உய்ய இயலாது; இயன்றவாறு இவ்வவுணர்களை எதிர்த்துப் போர்புரிந்து மாளுவோம்" என்று துணிந்து, அவுணப்படைமீது போருக்குச் சென்றார்கள். அப்போது பூதப்படைத் தலைவர்களும், இலக்கத் தெண்மரும், வீரவாகு தேவரும் தங்களை நெருங்கிச் சூழ்கின்ற அவுண சேனைகளைப் பார்த்து, "நம்முடைய வலிமை அழிந்தனவோ" என்று கருதினர்கள். இந்திரனும் தேவர்களும் மிக நடுங்கி அஞ்சிக் கலங்கினர்.

**திருமால் இந்திரனைத் தெளிவித்தல்**

இந்திரன் திருமாலை நோக்கி, "நம் குமாரக் கடவுள்மீது ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் உள்ள அவுண சேனைகளெல்

லாம் போருக்கு வந்துள்ளன. இச்சேனைகளைப் போரிட்டு வெல்ல ஊழிக்காலம் முழுவதும் செல்லும்போலும்! சூரபன்மன் இறப்பது எப்படி? போர் வலிமை மிக்க அவுணர்களாகிய இராக்காலம் கழிவதும், தேவர்களின் சிறை நீக்கமாகிய சூரியோதயம் உண்டாவதும், நாம் நம் துன்பங்களைப் போக்குவதும், பழையசெல்வங்களை அடைவதும் எப்பொழுது?'' என்று வினவினான். திருமால், இந்திரனின் மனக்கவலையை அறிந்து அவனை நோக்கி, ''காலங்களாயும், அவையின்றித் தொழில்களாயும், அவையின்றிக் குணங்களாயும், அவையின்றி உலகங்களாயும், அவையின்றி அநாதியாய் நமக்கெல்லாம் மூலகாரணராய் இருந்த சிவபெருமானே ஆறு திருமுகங்களைக்கொண்டு எழுந்தருளி வந்துள்ளார்.

காலமாய்க் காலம் இன்றிக் கருமமாய்க் கரும மின்றிக்
கோலமாய்க் கோலம் இன்றிக் குணங்களாய்க் குணங்கள் இன்றி
ஞாலமாய் ஞாலம் இன்றி அநாதியாய் நங்கட் கெல்லாம்
மூலமாய் இருந்த வள்ளல் மூவிரு முகங்கொண் டுற்றான்.

குன்றுதோருடல் செய்யுங் குமாரக் கடவுளே அந்நாளில் மேருமலையில் வந்து புவனங்களையும், அங்குள்ள சீவராசிகளையும், தேவர்களையும் தமது திருமேனியிற் காட்டி விசுவரூபங் கொண்டதை அறிந்த நீயும் மறந்தனையோ? அக்குமாரக் கடவுள், நான்முகனின் படைத்தல் தொழிலைச் செய்வார்; என் உருவத்தை ஏற்றுக் காத்தல் தொழிலைச் செய்வார்; உருத்திரரைப்போல் அழிப்பார். அவர் திருவுருவம் வேதங்களாலும் சொல்வதற்கரியது.

பொன்னுரு வமைந்த கஞ்சப் புங்கவ னாகி நல்கும்;
என்னுரு வாகிக் காக்கும்; ஈசன்போல் இறுதி செய்யும்;
மின்னுரு வென்ன யார்க்கும் வெளிப்படைபோலும் அன்னான்
தன்னுரு மறைக ளாலும் சாற்றுதற் கரிய தன்றே.

அவர் பகைவர்களை விரைந்து அழிப்பார். அவரைப் பாலகன் என்று எண்ணாதே! அவர் ஆயிரங்கோடி அண்டங்களிலுள்ள உயிர்களுக்கெல்லாம் தலைவர். நாம் செய்த நல்வினையால் அவர் இங்குப் போர்புரிய எழுந்தருளி வந்தார். அவர் சூரபன்மன் முதலிய அவுணர்களை அழிக்கத் திருவுளங்கொள்ளின் திருப்புன்

முறுவலால் அழிக்க வல்லவர்; கோபத்தால் அழிக்க வல்லவர்; வாக்கால் அழிக்க வல்லவர்; திருநோக்கால் அழிக்க வல்லவர். அவருடைய வல்லமையை யார் அறிவார்? அவர் பூத சேனைகளோடும் இலக்கத்தொன்பது வீரர்களோடும் படைகளை ஏந்திச் சூரபன்மனை அழிக்கும்படி வந்தது ஒரு திருவிளையாடலே ஆகும். பாலகனாக இருக்கும் அவர், கொடிய அவுணர்களையும் சூரபன்மனையும் வேற்படையால் வெல்வார்; நீ சிறிதும் ஐயுறாதே" என்று கூறித் தேற்றினார்.

### போர்த் தொடக்கம்

பூதப் படைஞர் முதலியோரின் கலக்கத்தை ஆறுமுகக் கடவுள் கண்டு திருப்புன்முறுவல் பூத்துப் போர்புரிய எண்ணினார். வானுலகமும் பூமியும் ஒன்றாய் நிறைந்த அவுண சேனைகள் போரைத் தொடங்கின. அவர்களை எதிர்த்துச் சென்ற பூதர்கள் யாவரும் தோற்றார்கள். பூதப் படைத் தலைவர்கள் புறங்கொண்டோடினார்கள். இலக்கத் தெண்மர் வலிமை இழந்து நீங்கினார்கள். அவற்றை வீரவாகு தேவர் கண்டார்; தம் வில்லை வளைத்துக் கணைமழைகளைப் பொழிந்தார்; அவுணர்களுடைய தலை, தோள், மார்பு முதலியவைகளை அறுத்துச் சிறிதுநேரம் போர் செய்தார்; பிறகு அவுணர்களுக்கு எதிரேபோய்ப் போர் செய்து அச்சேனைகள் அழியாதிருக்கக் கண்டு வருந்தி ஆறுமுகக் கடவுளின் அருகில் சென்றார். அவுணர்கள் ஆறுமுகக் கடவுளைச் சூழ்ந்து தண்டு, சக்கரம், குலிசம், சூலம், வேல் முதலிய படைகளையும் தெய்வப் படைக்கலங்களையும் சொரிந்து ஆரவாரஞ் செய்தனர்.

### முருகக் கடவுள் போரிடுதல்

பூத சேனைகள் யாவும் உடைந்தமையையும், வீரவாகு தேவரும் பிறரும் வருந்திமீண்டதையும், அவுணர்களின் செய்கைகளையும் முருகக் கடவுள் கண்டார்; தம் வில்லைத் திருக்கரத்தில் ஏந்தி நாணொலி செய்தார். அந்நாணொலியைக் கேட்டுத் தேவர்கள் நடுங்கினார்கள்; உயிர்த்தொகைகளெல்லாம் நடுங்கின; அவுணர் கூட்டங்கள் அஞ்சின; தேர்கள் பிளந்தன; குதிரைகள் புரண்டன; யானைகள் மலைகளைப்போல் வீழ்ந்தன. ஆறுமுகக்

கடவுள் கணக்கற்ற கணைகளை மழைபோலப் பொழிந்தார். அக்கணைகள் அவுணர்களின் கொடிகளையும், குடைகளையும், படைக்கலங்களையும், நால்வகைச் சேனைகளையும் அழித்தன. அவுணர்கள், மரங்கள் வீழ்வதைப்போல் வீழ்ந்தார்கள். கணைகள் அசுரர்களின் கால்களையும், கைகளையும், வாய்களையும் மற்றைய உறுப்புக்களையும் அறுத்தன. அக்கணைகள் அட்டகுல மலைகளிலும், திக்கு யானைகளிலும், சக்கரவாளகிரியிலும் பட்டு ஊடுருவிச்சென்றன; சத்திய உலகத்திலும் வைகுண்டத்திலும் சென்றன; பூமியைக் கிழித்துச் சென்றன; திக்குக்களில் சென்றன; சென்ற இடங்களிலெல்லாம் பகைவர்களை மட்டும் கொன்றன; மற்றவர்களையெல்லாம் ஒன்றும் செய்தில. ஆறுமுகக்கடவுள் இவ்வாறு அவுணர்களை அழிக்கும்போது நான்முகன், திருமால், இந்திரன் முதலியோர் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். அவுணர்களைக் கண்டு வருந்திய பூதப்படைத் தலைவர்களும் பிறரும் ஆறுமுகக் கடவுளை அடைந்து ஆரவாரத்துடன் துதித்தனர்.

### அவுணரின் மனத்தேற்றம்

இவ்வண்டத்தில் நுழைவதற்கு இடமில்லாமல் அண்டத்தின் வாயிலில் நெருங்கி நின்ற அவுணர்கள், மேலும் இவ்வண்டத்தில் வந்து நிறைந்தார்கள் ; அப்போது தமக்கு முன்னே வந்து போர்புரிந்து பிணமலையாய்க் கிடந்த அவுணர்களை இரத்தவெள்ளம் இழுத்துக்கொண்டு செல்லுதலைக் கண்டு மனம் வருந்தி, "நம்மவர்களாகிய அவுணர்களை அழித்த இவனோடு போர் செய்து வெற்றி கொண்டு மீள்வோம்" என்று கருதி மனத்தைத் தேற்றினுர்கள்.

### முருகக் கடவுள் அவுண சேனையை அழித்தல்

அப்போது தேவர்கள் துதிக்கவும், வீரவாகு முதலிய வீரர்கள் அருகு சூழவும், பூதர்கள் ஆரவாரிக்கவும் ஆறுமுகக்கடவுள் வெளிப்பட்டு அருளினுர். அவ்வவுணர்கள் அவரைக்கண்டு, "இவன் மிகச் சிறியவன்; யானைப் படைகளும் குதிரைப் படை படைகளும் அற்றவன்; ஏயே! இவனு நம் பகைவன்! இப்பாலகனு இவ்வண்ட முழுவதும் நெருங்கிய நம் சேனைகளை இமைப்பொழுதில் கொன்ருன்? இதுதான் மிகுந்த அற்புதம்!

இவனோடு அரசர்க்கரசனாகிய நமது சூரபன்மன் போர் செய் வதற்குமுன் யாம் இவனைக் கொல்வோம்" என்று அகங்காரத் தோடு கூறி ஆறுமுகக்கடவுளைச் சூழ்ந்தார்கள். அப்போது மீண்டும் பெரும் போர் மூண்டது. முருகக்கடவுள் வாயுவைப் பார்த்து, "அவுணப்படைகள் நிற்கின்ற இடத்தில் தேரினை விரைந்து செலுத்துதி" என்று கட்டளையிட்டருளினார். வாயு அதனைக்கேட்டு வணங்கி, அவுணர்கள் நிற்கும் இடங்களெங் கும் தேரைச் செலுத்தினான். அத் தேர் பூமியிலும், திசைகளி லும், வானத்திலும், கடல்களிலும் எங்கும் விரைந்து சென்றது. குமாரக்கடவுள், தம்மை நெருங்கி நிற்கும் அவுண சேனைகளின் மேல் ஆயிரங்கோடி கணைகளைச் செலுத் தினார். அவுணர்களின் தலைகளும் கைகளும் துணிந்து வீழ்ந்தன. இரத்த வெள்ளம் பெருகியது. பிணமலைகள் உயர்ந் தன. அவுணர்களுடைய பிணங்களை அவர்கள் வளர்த்த நாய் களே பிடுங்கித் தின்றன. குமாரக் கடவுளின் தேர், அவர் எய்யும் கணைகளினும் விரைந்து சென்றது. என்னே, அத் தேரின் வேகம்! தேரைச் செலுத்தும் வாயுவையும், கணைகளை எய்யும் குமரக் கடவுளின் கரங்களையும் யாவரும் வியந்தனர். அவுணர்களும் அவர்களுடைய நால்வகைச் சேனைகளும் அழிந் தன. பிணமலைகள் மண்ணுலகம் முழுவதும் பரந்து விண்ணுல கத்தையும் விழுங்கின. அவருடைய கணைகளினால் தலைகளை இழந்து கூத்தாடிய உடல்கள் ஆயிரங்கோடியாகும். இறந்தவர் களின் எண்ணிக்கையை எண்ணிக்கூற இயலாது. இரத்த வெள்ளம் கடல்போலப் பூமியிற் பெருகி ஏழு பாதலங்களிலும் சென்றடைந்தது. இவ்வண்டத்திலுள்ள அவுண சேனைகள் யாவும் அழிந்தன.

**அண்டகோளகையின் வாயிலை அடைத்தல்**

மற்றை அண்டங்களில் பொருந்திய அவுண சேனைகள் பின்னரும் புறப்பட்டு வருவதைக் கண்ட குமாரக் கடவுள், அவற்றையும் கணைகளினால் அழித்தார்; பின்னும் மற்றை அண் டங்களிலிருந்து சேனைகள் வந்தடையும் என்று கருதினார்; அதனால் அண்ட கோளகைகளின் வாயில்களைக் கணைகளினால் அடைத்து அச்சேனைகள் வாராதபடி தடுத்தார்; அதன் பின்னர்

தம் கணைகளினுல் இறந்த அவுணப் பிணமலைகள் பாதலத்திலும், கடலிலும், பூமியிலும் மிக உயர்ந்து நிற்பதைக் கண்டார்; தம் பன்னிரண்டு திருக்கண்களையும் கொடிய தீச்சுடரினையுடைய வடவாமுகாக்கினியைப்போலச் சொலிப்பித்து உற்று நோக்கினுர். பிணமலைகள் வெந்து சாம்பராயின. இரத்தம் வரண்டு போயிற்று. மூவுலகங்களும் முன்போல விளங்கின. பிரமாதி தேவர்கள் அச்செயலைக் கண்டு முருகக் கடவுளைப் புகழ்ந்து துதித்து வணங்கினுர்கள்.

**சூரபன்மனுடன் போர்**

அச்சமயம் போர்க்களத்தில் நின்ற சூரபன்மன், முருகக் கடவுளின் திருவிளையாடல்களை யெல்லாம் பார்த்து, "நம் சேனைகளை அழித்த இப்பாலகனைத் தேவர்களோடு அழிப்பேன்" என்று மனத்தில் மிகுந்த கோபங் கொண்டான்; போர் செய்யத் தேரோடு ஆறுமுகக் கடவுளின் எதிரே சென்றுன். குமாரக் கடவுளின் தோற்றத்தையும், பன்னிரண்டு திருக்கரங்களையும், அத் திருக்கரங்களில் ஏந்திய ஆயுதங்களையும், வலிமையையும், வீரத்தையும் கண்டு, "பாலகனே! சிவபெருமான் எனக்கருளிய வரத்தின் வலிமையால் நான் இறக்கமாட்டேன். என்றும் இத்தன்மையனுகவே இருப்பேன். தேவர்கள் என்னுடன் மறந்தும் போர் செய்திலர்; போர்செய்து அழிந்தவர்கள் பலர். நீ இச்செய்தியை உணரவில்லை போலும். தேவர்கள் மனம் நொந்து என் ஏவல்களைச் செய்து வருகிறுர்கள். அவர்களின் சொற்கேட்டுச் சேற்று நிலத்தில் இரங்கிய யானைக் கன்றுபோல், சிறுபிள்ளைப் புத்தியால் என்னேடு போருக்கு வந்தாய்; என் சேனைகளை அழித்தாய். நீ சிறு பாலகன் என்று நான் உன்னை விடப்போவதில்லை; விரைந்து கொல்வேன்; தேவர்களையும்,பூதர்களையும் அழிப்பேன்" என்று கூறினுன். அவற்றைக் கேட்ட குமாரக் கடவுள், சூரபன்மனை நோக்கி, "ஓ மூடனே! நீ வீணே வம்புரைகளை மொழிந்தாய். அதனுல் சிறிதும் பயனில்லை. உன் மார்பு சிவந்த துவாரமாகும்படி யாம் விடுகின்ற வலிமையும் கூர்மையும் பொருந்திய ஒரு கணையே உனக்கு மறுமொழி கூறும்" என்று திருவாய்மலர்ந்தருளினுர்.

சூரபன்மன் முருகக் கடவுளின் மொழிகளைக் கேட்டுச் சினம் கொண்டு மேருமலை போன்ற வில்லை எடுத்து வளைத்து நாணேற்

றினன். அதனைப் பூதர்கள் கண்டு அவன்மேல் மலைகளையும், மரங்களையும், முத்தலைச் சூலங்களையும், வேறுபல படைகளையும் வீசினார்கள். சூரபன்மன் கணைமழைகளைப் பெய்தான். அப்போது மெழுகுமலை ஊழித் தீயால் அழிவதைப்போலப் பூதப் படைகள் அழிந்தன. இலக்கத் தெண்மரும், வீரவாகு தேவரும் சூரபன்மனைச் சூழ்ந்து விற்களை வளைத்துக் கணைகளைப் பொழிந்தனர். சூரபன்மன் அக்கணைகளை அழிக்காமல் நின்றான். அக்கணைகள் அவன் உடலில் பட்டு அழிந்துபோயின. சூரபன்மன் நூறுகோடி கணைகளை ஒரு தொடையாகச் செலுத்தி அவர்களின் தேர்களையும் விற்களையும் அழித்தான்; தோள்களிலும் தலைகளிலும், கைகளிலும், ஆயிரமாயிரம் கணைகளைச் செலுத்திக் குருதி பெருகி ஓடச்செய்தான். இலக்கத்தெண்மர் வில் வலிமை இழந்து புறங்கொடுத்து ஓடினார்கள். அதனைக் கண்ட வீரவாகு தேவர் சூரபன்மனின் தேரிற் பாய்ந்தார்; சிவபெருமான் கொடுத்த வாட்படையை எடுத்து அவனுடைய வில்லை வெட்டி வீழ்த்தினார். சூரபன்மன், தீ எழச் சினந்து வீரவாகு தேவரின் மார்பில் ஒரு கையினால் இடி விழுந்தாற்போலத் தாக்கினான். அவர் இரத்த வெள்ளம் ஓடச் சோர்ந்து கீழே வீழ்ந்து அயர்ந்தார். சூரபன்மன், "தூதுவனைக் கொல்லுதல் கூடாது" என்று அவரைத் தூக்கி வானத்தில் எறிந்தான். வானத்தில் சென்ற வீரவாகு தேவர் உணர்வு வரப்பெற்று விரைவில் மண்ணில் மீண்டு வந்து குமரக் கடவுளின் அருகிற் போய் நின்றார்.

சூரபன்மன் வெட்டுண்ட வில்லைக் கீழே எறிந்தான்; வேறொரு வில்லை எடுத்து நாணொலி செய்தான். அதனைக் கண்ட குமாரக் கடவுள் ஒரு பெரிய வில்லை எடுத்து வளைத்து நாணொலி செய்தார். சூரபன்மன் இருபது லட்சம் கணைகளைச் செலுத்தினான். அக்கணைகள் திக்குக்கள், பூமி, கடல்கள், ஆகாயம், தேவருலகங்கள் முதலியனவற்றை மறைத்தன. அக்கணைகள் காற்றைப் போல விரைந்து செல்வன; தீயைப் போல வெம்மை கொண்டு பரவிச் செல்வன; எமனைப் போலக் கொல்வன; நஞ்சினுங் கொடியன; பருந்துச் சிறகுகளும், பல தலைகளும் உடையன; மேருவைத் துளைப்பன; மலைகளைக் கிழிப்பன; அண்டங்களைத் துளைசெய்வன; இடிகள் போல்வன. இவ்வாறாகிய கணைகள் எங்கும் செறிதலைக் கண்டு, தேவர்கள் அஞ்சி

ஞர்கள். குமாரக் கடவுள், சூரபன்மன் செலுத்திய கணைகளைத் தம் சில கணைகளால் அழித்தார். அதனைக் கண்டு தேவர்கள் மகிழ்ந்தனர். சூரபன்மன் குமாரக் கடவுளுக்கு எதிரே சென்று அளவற்ற கணைகளைப் பொழிந்தான். அவர் அவற்றைத் தமது கணைகளால் அறுத்தார். பின்னும் சூரபன்மன் அவர்மேல் கணைகளைச் சொரிந்தான். முருகக் கடவுள் அவற்றை நூறு கணைகளால் அழித்து எழுநூறு கணைகளை அவன்மீது செலுத்தினர். சூரபன்மன் அவற்றை அறுத்து மேலும் இரண்டாயிரம் கணைகளை விடுத்தான். ஆறுமுகக் கடவுள் அவற்றை அழித்து வருந்தும்படி இரண்டாயிரங் கணைகளை விடுத்தருளினர். சூரபன்மன் அவற்றை அழித்து ஆரவாரஞ் செய்தான். சூரபன்மன் செலுத்திய கணைகள், நெருப்பை அடைந்த விறகுகள் போலக் குமாரக் கடவுளை அடைந்து அழிந்தன. அவர் செலுத்திய கணைகளைச் சூரபன்மன் அழித்தான். இவ்வாறு இருவரும் போர் புரிந்து வெட்டி வீழ்த்திய கணைகள் வானுலகத்தைத் தொட்டு நின்றன. அக்கணைகள் ஒன்றினை ஒன்று தாக்கி விழும்போது எழுந்த நெருப்பு, பூமியில் வீழ்ந்து பற்றி எரிந்தது. அதனல் மலைகள் பிளந்தன; கடல்களும், கங்கையும் வற்றின. குமாரக் கடவுளும் சூரபன்மனும் போரிடும் வீரத்தை வீரஇலட்சுமி பார்த்து வியந்து, "நாம் யாரை அடைவது" என்று ஐயங் கொண்டு திகைத்தாள்.

**பானுகம்பர் வெற்றிச் சங்கொலி**

சூரபன்மன் குமாரக் கடவுள் விடுகின்ற கணைகளை யெல்லாம் அழித்தான்; அவருடைய தேரிற் கட்டிய கொடியை அறுத்துத் தன் வெற்றிச் சங்கினை எடுத்து ஊதினன்; மேலும் கணைகளைச் செலுத்தி அவருடைய திருமேனியை மறைத்தான். குமாரக் கடவுள் சூரபன்மனின் தேர்க் கொடியை ஏழு கணைகளினல் அறுத்துக் கடலில் இட்டார். அதனைப் **பானுகம்பர்** என்னும் பூதப்படைத் தலைவர் கண்டு களித்துத் தம் ஆயிரம் வாய்களிலும் ஆயிரம் வெற்றிச் சங்குகளை வைத்து ஊதினர். பானுகம்பருடைய சங்கொலிகளைக் கேட்டுத் திருமாலின் பாஞ்ச சன்னியம் என்னும் சங்கும் திடீரென முழங்கியது.

**அக்கினி தேவன் முருகக் கடவுளுக்குக் கொடியாக நிற்றல்**

அப்பொழுது தேவர்கள் யாவரும் அக்கினி தேவனைப் பார்த்து, "நமது குமாரக் கடவுளின் தேரில் கொடியில்லை. நீ சென்று கொடியாயிருப்பாயாக" என்று ஏவினார்கள். அவன் அவ்வாறேகோழிக் கொடியாக ஆறுமுகக் கடவுளின் தேர்மீது ஏறி அமர்ந்து அண்டங்கள் வெடிக்கக் கூவினான்.

ஏவ லோடும் எரிதழற் பண்ணவன்
வாவு குக்குட மாண்கொடி யாகியே
தேவ தேவன் திருநெடுந் தேர்மிசை
மேவி ஆர்த்தனன் அண்டம் வெடிபட.

பானுகம்பர் சங்கை ஊதி ஆரவாரஞ் செய்ததைக் கேட்டுத் திருமால், நான்முகன், இந்திரன், சூரிய சந்திரர்கள், இயமன், வாயு, வருணன், குபேரன் எல்லோரும் பேராரவாரஞ் செய்தார்கள். இவ்வாரவாரவொலி அண்டகடாகத்தை முட்டியது; சூரபன்மன் காதுகளைத் துளைத்தது.

**சூரபன்மன் விண்ணுலகில் சென்று போர் புரிதல்**

சூரபன்மன் கடுங் கோபங்கொண்டு தேவர்களை நோக்கி, "நிகரற்ற என்முன் வருவதற்குப் பயந்து காடுகளில் அலைந்த தேவர்கள் இப்பொழுது பயந்தெளிந்து வந்து ஆரவாரஞ் செய்கின்றார்கள்; ஆறுமுகனின் வலிமையைக் கண்டு அங்ஙனம் செய்தார்கள் போலும். நன்று! நன்று!! இங்கே நிற்கும் தேவர்களின் நிலையை விரைவில் கெடுத்துச் சிவகுமாரனை வெல்வேன்" என்று கூறினான்; தேர்ப்பாகனை நோக்கி, "தேவர்களின் வலிமையைக் கெடுக்கத் தேரை ஆகாயத்திற் செலுத்துக" என்று பணித்தான். தேர் வானத்தில் எழுந்து விண்ணுலகத்திற்குச் சென்றது. சூரபன்மன் தேரோடு விண்ணுலகத்திற்குச் சென்றான்; வில்லை வளைத்துத் தேவர்கள் கூட்டம் சிதறி ஓடும்படி கணைமழைகளைப் பொழிந்தான். அதனைக் குமாரக் கடவுள் கண்டு பூமியில் நின்ற வண்ணமே அளவற்ற கணைகளைச் செலுத்தி அவன் கணைகளை அழித்து அதன்பின் வாயுவை நோக்கி, "நம்முடைய தேரை விரைந்து விண்ணுலகத்திற்குச் செலுத்துதி" என்று பணித்தருளினார். வாயுதேவன் தேரைச் செலுத்திக்கொண்டு போய்ச் சூரபன்

மனுக்கு முன்னே நிறுத்தினன். குமாரக் கடவுள், சூரபன் மனுக்குப் பயந்தோடும் தேவர்களைப் பார்த்து, "தேவர்களே, வருந்தாதீர் ; புலம்பாதீர் ; நடுங்காதீர்" என்று அருள் புரிந் தார். தேவர்கள் குமாரக் கடவுளின் திருவாக்கைக் கேட்டு, அவரை வணங்கி மனம் மகிழ்ந்தார்கள். அதனைக் கண்ட சூர பன்மன் பல கணைகளை விரைந்து செலுத்தினன். ஆறுமுகக் கடவுள் அவற்றைப் பல கணைகளால் விலக்கிச் சூரபன்மனோடு எதிர்த்துப் போர் செய்தார். இங்ஙனம் ஒருவர் செலுத்திய கணை களை ஒருவர் அழித்துப் போர் செய்தார்கள். அவர்கள் இரு வரும் கணைகளை விடுத்துப் போர் செய்யும்போது திசைகள் எரிந் தன ; பூலோகத்திலுள்ளார் யாவரும் இரங்கினர். இருவ ருடைய தேர்களும் காற்றூடிகள் போன்றும், சூறைக் காற்றுகள் போன்றும், பாதலத்திலும், பூமியிலும், திசைகளிலும், மலை களிலும், சத்தியவுலகத்திலும், சக்கரவாளகிரியிலும், இருட் பூமியிலும், அண்டகடாகங்களிலும் சென்று சாரிகை திரிந்தன. அத்தேர்களின் ஒலியைக் கேட்டு நான்முகர்கள் நடுங்கினர்கள். சூரியர்கள் மயங்கினர்கள். தேவர்கள் மருண்டார்கள். பூவுலகத் தோர் வாடினர்கள். நாகர்கள் உலைந்தார்கள். தேர்களின் செலவினல் மூவுலகமும் அதிர்ந்தது. கடல்கள் அலைந்தன. அண்டமுகடுகள் பிளந்தன. விண்மீன்கள் உதிர்ந்தன. மேகங் கள் சிந்தின. இங்ஙனம் இருதேர்களும் சாரிகை வரும்போது சூரபன்மன் குமாரக் கடவுள்மீது தீப்போன்ற கணைகளைச் சொரிந்தான் ; அவற்றோடு மழு, வச்சிரம், முத்தலைச் சூலம், கப்பணம், கலப்பை, குலிசம், வேல், எழு முதலிய பலகோடி படைகளை இடிபோலச் சொரிந்தான். முருகக் கடவுள் விரைந்து முறைமுறையாக அவற்றை அழித்தார் ; பிறகு பதினன்கு கணை களைச் செலுத்திச் சூரபன்மனின் தேரையும், குதிரைகளையும் அழித்தார்.

**சூரபன்மன் பூமியிலும் பிறவிடங்களிலும் நின்று போரிடுதல்**

சூரபன்மன் கையிலேந்திய வில்லோடு நிலத்தை அடைந்து எண்ணற்ற கணைகளைச் செலுத்தி எதிர்த்தான். முருகக் கடவுள் பல கணைகளைத் தொடுத்து அவற்றை அழித்தார். சூரபன்மன் பலகோடி கணைகளை அவர்மேல் எய்தான். குமாரக்கடவுள் அக்

கணைகளை யெல்லாம் தம் கணைகளால் அழித்து அவன் தோள்களில் ஆயிரம் கணைகளைச் செலுத்தினர். அவை அவன் தோள்களிற் பட்டு மலையின்மேல் வீழ்ந்த கல்மழைத் தாரை போலச் சிதறின. சூரபன்மன் இரண்டாயிரங் கணைகளை எடுத்து மன வேகத்தைக் காட்டிலும் மிக வேகமாகச் செல்லும்படி முருகக் கடவுளின் திருத்தோள்களில் எய்து ஆரவாரித்தான். அக்கணைகள் சிவபெருமான் நெற்றிக்கண்ணிற்பட்ட மன்மதனைப் போன்று வெந்து துகளாய் அழிந்தன. குமாரக் கடவுள் அவன் மீது கணை மழைகளைப் பொழிய, சூரபன்மன் தன் கணைகளால் அவற்றை அழித்தான். அவருக்கு அருகில் நின்ற வீரர்கள்மீதும், பூத சேனைகள்மீதும் கணைகளை விடுத்தான். குமாரக் கடவுள் அதனைக் கண்டு ஆயிரம் கணைகளால் அவன் வில்லைத் துண்டு படுத்தினர். அவன் வேறொரு வில்லை ஏந்தினன். உடனே அருவாய் வானில் தோன்றினன். அதனைக் கண்ட ஆறுமுகக் கடவுள் வானத்தில் சென்று அவனோடு ஓர் இறைப்பொழுது எதிர்த்தார். அவன் மீட்டும் மாயமாய் மறைந்து பூமிக்கு வந்தான். குமாரக் கடவுளும் பூமியில் வந்து போர் செய்தார். சூரபன்மன் தன் வடிவை மறைத்து நன்னீர்க் கடலுக்குச் செல்ல அங்கும் முருகக் கடவுள் சென்று போர் செய்தார். சூரபன்மன் மறைந்து திக்கின் முடிவிற்குச் செல்ல அங்கும் போய் முருகக் கடவுள் போர் செய்தார். அவன் பாதாளத்திற்குச் செல்ல அங்கும் போய் முருகக் கடவுள் போர் செய்தார். சூரபன்மன் மறைந்து மேருமலை, வைகுண்டம், அண்டகோளகை முதலிய இடங்களுக்கும் சென்ருன். அவ்விடங்களுக்கெல்லாம் சுப்பிரமணியக் கடவுளும் சென்று அவனுடைய தேரைக் கணைகளினுல் அழித்து வெற்றி கொண்டார். சூரபன்மன் தன்னுடைய இந்திரஞாலத்தேரை அழைத்து அதன்மேல் ஏறிப் போர் செய்தான்.

**அண்டமுகடுகளில் அடைத்த வாயில்களைத் திறத்தல்**

இவ்வாறு போர் புரியும் போது அண்டங்களின் வாயில்களை முருகக் கடவுள் தம் கணைகளினுல் அடைத்திருத்தலையும் அதனுல் தன் படைகள் வாராது தடைப்பட்டு நிற்றலையும் சூரபன்மன் கண்டான். உடனே பலகோடி கணைகளை எய்து அண்ட கடாகத்தின் வாயிலை மூடியிருந்த கணைக்கதவுகளைத் திறந்து

விட்டான். அப்பால் அண்டங்களில் நின்று கொண்டிருந்த நால்வகைச் சேனைகளையும், வரும்படி அழைத்து ஆரவாரஞ் செய்தான். தடைபட்டு நின்ற நால்வகைச் சேனைகளும் இவ்வண்டத்திற்கு வந்தன. படைகளை வீசி ஆறுமுகக் கடவுளைச் சூழ்ந்தன. சோதி வடிவாகிய ஆறுமுகக் கடவுள் தீ எழும்படி அச்சேனைகளைச் சிறிது விழித்து நோக்கினர். அச்சேனைகள் யாவும் எரிந்து சாம்பர் மயமாகி அழிந்தன. பிறகு வேறு அண்டத்திலுள்ள சேனைகள் வந்து சிவகுமாரரை எதிர்த்தன. அவற்றையும் ஆறுமுகக் கடவுள் பார்த்து நெருப்பைச் சிந்தினாற்போல மூச்சுவிட்டுச் சிறிதே அதட்டினர். உடனே பூளைப் பஞ்சுமலையில் நெருப்புப் பட்டாற்போல, அச்சேனைகள் முழுவதும் புழுதி மயமாயின. பின்னும் மற்றைய அண்டங்களிலுள்ள நால்வகைச் சேனைகள் வந்தன. குமாரக் கடவுள் தமது திருக்கரத்திலுள்ள மழு, சூலம், சக்கரம், தண்டு, எழு என்னும் ஐந்து படைக்கலங்களையும் நோக்கி, "படைகாள்! நீவிர் விரைந்து சென்று நம்மைச் சூழ்ந்த அவுண சேனைகளையும் அப்பால் அண்டத்தில் நிற்கும் அவுண சேனைகளையும் கொன்று வருக" என்று கூறி விடுத்தார். அப்படைக்கலங்கள் பலகோடி சூரியர்களும், அக்கினிகளும், பாம்புகளும் போலத் தோன்றி அரைநொடிப் பொழுதில் முருகக் கடவுளைச் சூழ்ந்து நின்ற சேனைகள் யாவற்றையும் அழித்தன; மற்றை ஆயிரத்தேழு அண்டங்களுக்கும் சென்று ஆங்காங்கிருந்த அவுணர்களை யெல்லாம் அடியோடு அழித்து உலவித் திரிந்தன.

### சூரபன்மனின் சக்கரப்படையை அழித்தல்

அவுணர்கள் அழிந்ததைக் கண்டு சூரபன்மன் சினந்து, "ஒரு கணப்பொழுதில் இவன் உயிரை உண்பேன்" என்று கூறினன்; முன்னர் சிவபெருமான் தனக்குக் கொடுத்த சக்கரப் படையை எடுத்து வழிபட்டுத் துதித்து ஆறுமுகக் கடவுள் மீது செலுத்தினன். ஆறுமுகக் கடவுள் தம் ஒரு திருக்கரத்தை நீட்டி, "வருதி" என்று அதனைப் பற்றினர். சூரபன்மன் அதனைக் கண்டு மனம் தளர்ந்து உயிர்த்துத் தேரின் மீது நின்று அளவற்ற உருவங்களை எடுத்துக் கணைமழைகளைச் சொரிந்தான். முருகக் கடவுள் திருப்புன்முறுவல் செய்து ஞானஸ்திரத்தை

எடுத்து விடுத்தார். அது விரைந்து சென்று அவன் மாயங்களை யெல்லாம் நொடிப்பொழுதில் அழித்தது. அவன் வலியிழந்து தன் தேரின்மீது தனித்து நின்றான். தேவர்கள் கடல்போல ஆரவாரஞ் செய்து ஆறுமுகக் கடவுள்மீது மலர்மாரி பொழிந்தார்கள். சூரபன்மன் தன் தேரோடு விரைவில் மறைந்தான். அண்டப்பித்திகையிலுள்ள வாயிலை அடைந்து அறைகூவி அப்பால் அண்டத்திற்குச் சென்றான். சுப்பிரமணியக் கடவுளும் அவனைத் தொடர்ந்து சென்றார். சூரபன்மன் அங்கே அவரோடு போர்புரிந்து மாயையினால் அப்பால் அண்டத்திற்குச் சென்றான்; அங்கிருந்து பிருதிவி அண்டம் முழுவதும் சென்றான். முருகக் கடவுள் சூரபன்மனை விடாது தொடர்ந்து சென்று யுத்தம் செய்துகொண்டே போனார்.

**முருகக் கடவுளைக் காணாது வருந்தித் தெளிதல்**

அப்பொழுது நான்முகன் முதலிய தேவர்கள், முருகக் கடவுளைக் காணாது தாய் தந்தையரை விட்டுப்பிரிந்த குழந்தைகள்போல வாடி வருந்தினர்; "சூரபன்மன் அண்டப் புரையுட் போயினான். அவனைத் தொடர்ந்து ஆறுமுகக் கடவுளும் சென்றுள்ளார். இனி என்ன விளையுமோ?" என்று அஞ்சினார்கள். அப்போது திருமால் தேவர்களைப் பார்த்து, "தேவர்காள்! சூரபன்மன் வலிமையை மதித்து அஞ்சாதீர்கள். ஆறுமுகக் கடவுளின் வில் வலிமையையும், வீரத்தையும் அறிந்தும், நீவிர் ஐயுறுகின்றது முறையோ? ஞான வடிவாகியும், உணர்ந்தார்க்கும் உணர்வரிய நீதியாயும், நிருமலசோதியாயும், வழிபடுகின்ற எம்மனோர்க்கெல்லாம் ஆதியாயும் நின்றவர் ஆறுமுகக் கடவுள் அன்றோ?

ஓதி யாகியும் உணர்ந்தவர்க் குணரவும் ஒண்ணா
நீதி யாகியும் நிமலம தாகியே நிகழுஞ்
சோதி யாகியுந் தொழுதிடும் எம்மனோர்க் கெல்லாம்
ஆதி யாகியும் நின்றவன் அறுமுகன் அன்றோ!

அழியாத் தன்மையுள்ள பரமசிவனே ஒரு குழந்தையின் வடிவமாய் ஆறு திருமுகங்களைக்கொண்டு திருவவதாரம் செய்தார் என்பதன்றி வேறு சொல்லுதற்குக் கூடுமோ? அக்கடவுள்

தன்மையைப் பலமுறை அறிந்தும் உங்கள் மனம் இன்னும் தெளிவடையவில்லே. சூரபன்மன் ஆயிரங்கோடி அண்டங்களுக்குச் சென்ருலும் அவனைத் துரத்திக்கொண்டு செல்வார். நீங்கள் காண்பீர்கள்'' என்று கூறி, அவர்கள் மனத்தைத் தெளிவித்தார். தேவர்கள் யாவரும் நன்றென்று தெளிவுற்று மகிழ்ந்தார்கள். சூரபன்மன் எல்லா அண்டங்களிலும் ஓடிச்சென்று போர் செய்து மீட்டும் இவ்வண்டத்திலுள்ள மகேந்திரபுரிக்கு வந்தான். ஆறுமுகக் கடவுளும் அவனை விடாது தொடர்ந்து வந்தார். அங்கிருந்த அவுண சேனைகள் சிவகுமாரரைச் சூழ்ந்து ஆரவாரஞ் செய்தன. அவற்றை நோக்கிச் சண்முகக் கடவுள் திருப்புன்முறுவல் செய்தார். அவுண சேனைகள் யாவும் அழிந்து வெந்து பொடியாயின. தேவர்கள் அவுண சேனைகள் அழிந்ததைக் கண்டு மகிழ்ந்து பூமாரி பெய்தார்கள்.

**சூரபன்மன் மாயையை வருவித்தல்**

அவுண சேனைகள் யாவும் குமாரக் கடவுளின் திருப்புன் முறுவலால் அழிந்ததைக் கண்ட சூரபன்மன் வடவாமுகாக்கினியைப்போலக் கொதித்தெழுந்தான். தன் தாயாகிய மாயையை மனத்தால் நினைத்தான். அவள் வந்து தோன்றி, ''மகனே! நீ தனியனுகி மனம் தளர்ந்து என்னை அழைத்தாய். நீ விரும்பியது என்ன? கூறுக'' என்ருள். சூரபன்மன் அதுகேட்டு, ''சிவகுமாரனுடைய போரில் என் தம்பியர்களும், புதல்வர்களும், அமைச்சர்களும், சேனைகளுமாகிய யாவரும் அழிய, யான் ஒருவன் மட்டும் எஞ்சினேன். இறந்தவர் யாவரும் எழுவதற்கு ஒருவழி கூறுவாயாக'' என்ருன். மாயை அவனை நோக்கி, ''மைந்தா! நீ யாவரையும் இழந்து தனித்து நின்றும் தேவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்க விரும்பினுயில்லே. ஆறுமுகக் கடவுளோடு இன்னும் போர் செய்ய எண்ணினையாயின், அதனுல் உன் பெரும் செல்வத்தையும், பெருவாழ்வையும் நீங்கினை போல்வாய்; பன்னிரு புயங்கள் கொண்ட ஆறுமுகக் கடவுளைப் பாலகன் என்று எண்ணுதே. அவருடைய கையிலுள்ள வேற்படையினுல் விரைந்து இறப்பாய். உயிரை இழக்கப்போகிற நீ என் சொல்லைக் கேட்கமாட்டாய். தலைவிதியை வென்றவர் எவரேனும் உண்டோ? உன் விருப்பப்படி இறந்தோரை எழுப்ப எண்ணினுல் பெரும்புறக்

கடலின் அருகில் **அமுத சீத மந்தர கூடம்** என்று ஒரு மலை இருக்கிறது. அதனை இங்கே கொண்டுவருவாயானால் உன் எண்ணம் கைகூடும்'' என்று கூறி மறைந்தாள்.

உறுபடை சுற்றந் துஞ்ச ஒருவனே யாயும் விண்ணோர்
சிறைவிடுத் துய்யு மாறு சிந்தனை செய்தி லாய்நீ
அறுமுகன் தன்னோ டின்னும் அமர்செயக் குறித்தி யாயின்
நிறைபெருஞ் செல்வ வாழ்க்கை நீங்கினை போலும் அன்றே.

பன்னிரு தடந்தோள் கொண்ட பகவனைப் பாலன் என்றே
உன்னலை அவன்கை வேலால் ஒல்லையிற் படுதி கண்டாய்;
இன்னுயிர் துறக்க நின்றாய்; என்மொழி கேட்பாய் அன்றே;
சென்னியில் விதியை யாவ ராயினுந் தீர்ந்தார் உண்டோ?

நின்றிட அனைய தன்மை நின்னுளம் மகிழு மாற்றால்
பொன்றினர் எழுதல் வேண்டில் புறக்கடற் கொருசா ராக
மன்றல்கொள் **அமுத சீத மந்தர கூடம்** என்றோர்
குன்றுளது அதனை ஈண்டே கொணருதி கூடும் என்றாள்.

**சூரபன்மன் இறந்தவர்களை எழுப்புதல்**

சூரபன்மன் மாயை கூறியவற்றைக் கேட்டு மனம் மகிழ்ந்தான்; இந்திரஞாலத் தேரினின்றும் இறங்கிச் சிங்கவாகனத்தில் ஏறி அத்தேரை நோக்கி, ''நீ பெரும் புறக்கடலை அடைந்து அமுதசீத மந்தர மலையை இங்கே கொண்டு வருக'' என்றான். இந்திரஞாலத் தேர் பெரும்புறக் கடலின் ஒரு பகுதியை அடைந்து, அங்கு நின்ற அமுதசீத மந்தர மலையை எடுத்துக் கொண்டு மகேந்திரபுரியை வந்தடைந்தது. அம்மலையிலிருந்து வரும் காற்றுப் பட்டவுடன் அன்று வரையில் போர் செய்து இறந்த அனைவரும் உயிர்பெற்றெழுந்தனர். குதிரைகள் எழுந்தன. யானைகள் எழுந்தன. தேர்களை இழுக்கும் சிங்கங்கள் எழுந்தன. அவுணப் படைகள் எழுந்தன. மார்பு, கை, கால் முதலிய உறுப்புக்களை இழந்த உடலங்கள் உயிர்பெற்று எழுந்தன. ஆறுமுகக் கடவுளின் பார்வையால் பொடிபட்ட உயிர்களும் எழுந்தன. இவ்வாறு உயிர்பெற்று எழுந்த சேனைகள் பூமியிலும், பாதலத்திலும், கடல்களிலும் மேல் ஏழு உலகங்களிலும் நிறைந்து நின்றன. எழு, குலிசம், வாள், வில் முதலிய படைக்கலங்களை ஏந்தி யானை, தேர், குதிரை முதலியவைக

ளோடு அண்டங்கள் வெடிக்க ஆர்த்தன. இறந்த சிங்முகாசுரன் எழுந்தான்; பானுகோபன் எழுந்தான்; அக்கினிமுகன் எழுந் தான்; வச்சிரவாகுவும் எழுந்தான்; தருமகோபன் எழுந்தான்; அதிசூரன், அசுரேந்திரன் ஆகிய இரு குமாரர்களும் எழுந்தனர்; மூவாயிரவரும், மற்றையோர்களும் எழுந்தனர்.

உயிர்பெற்றெழுந்தவர்கள் போர்க்களத்தில் கிடந்த ஆயுதங் களைக் கையில் எடுத்துக்கொண்டார்கள். இந்திரஞாலத் தேர் சூரபன்மனுக்கு முன்னே வந்தது. சிங்கமுகன் முதலிய யாவரும் உயிர்பெற்றெழுந்ததையும் அழிந்த படைகள் முற்றும் எழுவதை யும் சூரபன்மன் கண்டு மகிழ்ந்து ஆரவாரித்தான்; தேவர்களை இகழ்ந்தான்; தாயைப் புகழ்ந்தான்; மிகுந்த தரித்திரன் இந்திர பாக்கியத்தைத் திடீரென்று அடைந்தாற்போல மகிழ்ந்தான். அவன் தலை நிமிர்ந்தது; புயங்கள் உயர்ந்தன; உடல் பருத்தது; உரோமங்கள் சிலிர்த்தன. அவன் மகிழ்ச்சியைச் சொல்ல வல் லவர் யார்? தேவர்கள் அவற்றைக் கண்டு நடுநடுங்கி, மெலிந்து நாலாபக்கமும் திரும்பிப் பாராமல் ஓடினார்கள். அவர்களுள் சிலர் கிளி, புறா, மயில், அன்னம், காகம், குயில் முதலிய பறவை கள் வடிவங்கொண்டு ஓடினார்கள்; பூதகண வீரர்களில் சிலர் மனம் தளர்ந்தார்கள். இலக்கத்தெண்மரும், வீரவாகு தேவரும் துன்பமும் கடுஞ்சினமும்கொண்டு உலைமுகத்து நெருப்புப்போல உயிர்த்து நின்றார்கள்.

ஆறுமுகக் கடவுள் இந்நிகழ்ச்சிகளை யெல்லாம் கண்டார். சூரபன்மனுடைய சூழ்ச்சியையும், மாயையின் உபாயத்தையும், அமுத சீத மந்தர கூடத்தின் வலிமையையும், உயிர்பெற்று எழுந்த அவுணக் கூட்டங்களையும் கண்டார்; தம் திருக்கரங் களைக் கொட்டித் தீ யெழத் திருப்புன்முறுவல் பூத்தார். அப் போது சிங்கமுகன், பானுகோபன், அக்கினிமுகன், தரும கோபன், சேனைத் தலைவர்கள் ஆகிய இவர்கள் சூரபன்மன்முன் சென்றனர்; "அரசே! நீ இங்கேயே நிற்பாயாக. நாங்கள் சென்று குமாரக் கடவுளையும், அவருடைய படை வீரர்களையும் பூதர்களையும் கொன்று விரைந்துவந்து உன்னுடைய பாதங்களை வணங்குவோம்" என்றார்கள். சூரபன்மன், "அவ்வாறே செய் யுங்கள்" என்று கட்டளையிட்டான்.

**உயிர்பெற்றெழுந்தோர் மீண்டும் அழிதல்**

சூரபன்மனிடம் விடைபெற்றுச் சென்ற சிங்கமுகாசுரன் முதலிய அவுணர்கள் தம் சேனைகள் சூழ்ந்து வரச்சென்று பல வகைப் படைகளையும் எய்து ஆறுமுகக் கடவுளைச் சூழ்ந்தார்கள். அதனைக்கண்டு பூதர்கள் ஏங்கினார்கள். மற்றை வீரர்கள் மயங்கினார்கள். ஆறுமுகக் கடவுள் எல்லா உயிர்களையும் அழிக்கும் உருத்திர பாசுபதப் படைக்கலத்தைத் தம் திருக்கரத்து எடுத்தார்; திருவுளத்தால் வழிபாடு செய்து, "சிங்கமுகாசுரன் முதலிய அவுணர் கூட்டங்களையும் அவுணப் படைகளையும் விரைவில் அழிப்பாயாக" என்றார். உடனே, உருத்திரபாசுபதப்படைக்கலம் பாம்புகளும், நஞ்சும், இடிகளும், உருத்திரர்களும், நெருப்பும், தெய்வப் படைக்கலங்களுமாக விரிந்து அண்டம் முழுவதும் நிறைந்தது. ஆரவாரம் செய்து விரைந்து அவுண சேனைகளை ஒருங்கே அழித்தது. இந்திரஞாலத் தேரின் மேலிருந்த அமுத சீத மந்தர கூடத்தையும் அழித்து, ஆறுமுகக் கடவுளிடம் மீண்டது. சிங்கமுகாசுரன், பானுகோபன், அக்கினிமுகன், வச்சிரவாகு, மூவாயிரர், சிங்கமுகாசுரனின் குமாரனாகிய அதிசூரன், அவன் தம்பியர் நூற்றுவர்கள், தாரகன் மகனாகிய அசுரேந்திரன், தருமகோபன் முதலாயினோர் அடியோடு அழிந்தனர். சேனைகளும், அமுதசீதமந்தர மலையும் மடிந்தன. சூரபன்மன் அவற்றைக் கண்டு மனம் தளர்ந்து வலிமை இழந்தான்; மெய்ம்மறந்தான்; முன்போலத் தனித்து நின்று வருந்தினான். சூரபன்மனின் படைகள் யாவும் அழிந்தமையைக் கண்டு பூதர்களும், நான்முகன் முதலிய தேவர்களும் மகிழ்ந்து ஆரவாரஞ் செய்தனர். சூரபன்மன் உயிர்பெற்றெழுந்த தன் கிளைஞர்களை இழந்து சொல்லமுடியாத துயரத்தில் ஆழ்ந்து நின்றான்.

**சூரபன்மன் இந்திரஞாலத் தேரை ஏவிப் போர்புரிதல்**

சூரபன்மன் சினம் பொங்கி, இந்திரஞாலத் தேரை நோக்கி, "பாலகனைச் சூழ்ந்த பூத சேனைகளையும், வீரர்களையும் தூக்கிக் கொண்டுபோய் அண்டத்தின் உச்சியிலே வைத்துக்கொண்டிருப்பாயாக" என்றான். உடனே இந்திரஞாலம் நன்றென்று ஓடிச் சென்று வீரவாகு முதலிய வீரர்களையும், பூத சேனைகளையும் மயக்கிச் சுற்றங்களோடு வாரிக்கொண்டு அண்டகோளகைக்குச்

சென்று சூரபன்மன் கட்டளைப்படி அங்கேயே வைத்துக்கொண்டிருந்தது. முருகக் கடவுள் தனித்து நின்றார். சூரபன்மன் அவர் நிலைமையைக் கண்டு, "நம்முடைய இந்திரஞாலத் தேரின் ஆற்றல் நன்று" என்று நகைத்து மகிழ்ந்தான். தேவர்கள் அதனைக் கண்டு வருந்தினார்கள். ஆறுமுகக் கடவுள் சூரபன்மனின் சூழ்ச்சியை அறிந்து சினங்கொண்டார். ஒரு கணையை எடுத்து வில்லிற் பூட்டி, "நம் சேனைகளைக் கவர்ந்து அண்ட கோளகையில் கொண்டுபோய் வைத்திருக்கும் இந்திரஞாலத் தேரை விரைவில் இங்குக் கொண்டுவருக" என்று கூறி விடுத்தார். அக்கணை வேற்படைபோல ஒளிவீசி எல்லா உலகங்களையும் கடந்து சென்று இந்திரஞாலத் தேர் இருக்கும் இடத்தை அடைந்தது; அதன் ஆற்றலைத் தொலைத்தது; பிறகு அதனைத் தூக்கிக்கொண்டு வந்து குமாரக் கடவுளின் திருமுன்பு நிறுத்தியது. இந்திரஞாலத் தேரிலிருந்த வீரவாகு தேவர் முதலிய வீரர்களும், பூதர்களும், கீழே குதித்துக் குமாரக் கடவுளின் திருவடியைப் பணிந்து போற்றினர். குமாரக் கடவுள், இந்திரஞாலத் தேரைப் பார்த்து, "நீ சூரபன்மனிடம் முன்போலச் செல்லாதே. இங்கே நில்; அவன் இறத்தல் நிச்சயம்" என்றார். அத்தேர் அஞ்சி அங்ஙனமே நின்றுவிட்டது.

**கந்தக் கடவுள் கணைப் போர்புரிதல்**

இந்திரஞாலத் தேர் குமாரக் கடவுளுடைய ஒரு கணையினால் பூமியில் வந்ததையும், பூதர்களும் பிறரும் மீண்டதையும், தேர் தன்னிடத்தில் திரும்பிவாராததையும், சூரபன்மன் கண்டான்; தீயைப்போலச் சினந்து ஒரு பெரிய வில்லை எடுத்து வளைத்து ஆறுமுகக் கடவுள்மீது கணைகளைச் சொரிந்தான். ஆறுமுகக் கடவுள் மிகுந்த கோபங்கொண்டு பெரிய வில்லை வளைத்துச் சூரபன்மன் செலுத்திய கணைகளையெல்லாம் விலக்கினார். சூரபன்மனும் மிகச் சினந்து கந்தக் கடவுளின் தேர்ப்பாகனாகிய வாயுவின் உடல் முழுவதும் கணைகளைச் செலுத்திப் போர் செய்தான். சூரபன்மனின் கணைகள்பட்டு வாயுதேவன் வருந்திப் புலம்பி மயங்கிக் குதிரைகளைத் தூண்டாமல் வாளாவிருந்தான். கந்தக் கடவுள் ஆயிரங் கணைகளைச் செலுத்திச் சூரபன்மனின் வில்லைத் துண்டித்தார்.

**சூரபன்மன் முத்தலைச் சூலத்தை எறிதல்**

சூரபன்மன், தன் வில் முறிந்ததும் சிவபெருமான் முன்னர் அளித்த ஒரு முத்தலைச் சூலத்தை எடுத்துக் கொண்டு சிங்க வாகனத்தின் மீது ஏறி, முருகக்கடவுளை நெருங்கினான். அவன் ஏறிச்சென்ற அச் சிங்கம் ஆறுமுகக்கடவுளின் தேர்க் குதிரை களை நகம் பொருந்திய கைகளால் பதைக்கும்படி அடித்து வருத்தி ஆரவாரித்தது. சூரபன்மன் தன் வலக்கையில் ஏந்திய சூலத்தைச் சுழற்றிக் குமாரக்கடவுள் மேல் எறிந்தான். அது மின்போல ஒளிவீசிக் கொண்டு ஆகாயவழியாகச் சென்றது. அது செல்லும் பொழுது தீ சிந்தியது; இடிகள் உண்டாயின; பல படைக் கலங்கள் உதிர்ந்தன. பூதர்கள் அதனைக் கண்டு அஞ்சி ஓடினார்கள். சண்முகக் கடவுள் அம் முத்தலைச் சூலத்தின் மீது ஆயிரம் கோடி கணைகளைச் செலுத்தினார். சூலப்படை அக் கணைகளை யெல்லாம் துணித்து வீழ்த்திச் சூரபன்மனுடைய சினத் தீயின் வடிவு போல் நடந்தது. அதன் ஆற்றலை முருகக் கடவுள் கண்டார்; தம்முடைய திருக்கரத்திலிருக்கும் குலிசப் படையை நோக்கி, "சூரபன்மன் விடுத்த சூலப்படையைப் பிடித்துக் கொண்டுவருக" என்று விடுத்தார். குலிசப்படை தீயைக் கக்கிக் கொண்டு சூலத்தின் மூன்று தலைகளையும் பிடித்து ஆறுமுகக்கடவுளின் திருக்கரத்தில் சேர்த்துத் தானும் இருந்தது. தேவர்கள், "இவனை இங்கே அழித்து எங்களைக் காத்தருளும்" என்று வேண்டிக் கொண்டார்கள். முருகக்கடவுள் அதைக் கேட்டு இரண்டாயிரம் கணைகளைச் செலுத்திச் சூரபன்மன் ஏறியிருந்த சிங்கத்தின் தலையில் அழுத்தினார். சிங்கம் ஆகாயத் தில் கிளர்ந்து எழுந்து கீழே விழுந்து மடிந்தது.

**சூரபன்மன் சக்கரவாகப் பறவை வடிவுகொண்டு போர்புரிதல்**

சூரபன்மன், தன் சூலமும் சிங்கமும் அழிந்ததைக் கண்டு ஊழித் தீப்போலச் சினந்தான்; யாவரையும் விழுங்க எண்ணி மாயத்தால் சக்கரவாகப் பறவையின் உருவை எடுத்தான்; இறகுகள் முளைக்கப் பெற்ற மலையைப் போல் எழுந்தான்; கடல்போல் ஆரவாரஞ் செய்தான்; பூமி பிளக்கும்படி சிறகு களை அடித்துக் கொண்டு ஆகாயத்தில் எழுந்தான்; தன் சிறகி னால் கதிரவனின் ஒளியையும் மறைத்துத் திரிந்தான்; விரைந்து

பூத சேனைக் கடலில் புகுந்து, சிறகுகளால் வீசி அடித்தான்; மூக்கினால் கொத்திச் சிலரை விழுங்கினன்; குமாரக்கடவுளின் தேரைச் சூழ்ந்து, தேர்ப் பாகனை அடித்தான்; தேர்க் குதிரைகளை மூக்கினால் குத்தினன். பூதப்படைத் தலைவர்களைப் பற்றினன். இவ்வாறு சூரபன்மன் சக்கரவாகப் பறவை வடிவுடன் ஆகாயத்தில் பறந்து திரிந்தான். அதனை ஆறுமுகக்கடவுள் கண்டு திருப்புன்முறுவல் செய்து, "இவனுடைய கல்வித் திறமை மிக நன்று" என்று சினந்து ஒரு வில்லை எடுத்துச் சக்கரவாகப் பறவை வடிவங் கொண்ட சூரபன்மன் மீது பெரிய பல கோடி கணைகளை எய்தார். அவன் அவற்றை யெல்லாம் சிறகுகளினால் அடித்துச் சிந்திக் குறைத்தான்; மூக்கினால் கொய்தான்; கால்களினால் பிடித்து முறித்தான்; ஏழு கடல்களிலும், விண்ணுலகத்திலும் பறந்து திரிந்தான்; பூத சேனைகளை அடித்துக் கௌவி எங்குஞ் சென்றான். குமாரக் கடவுள் பறவையின் வடிவங்கொண்டு பறந்து திரிபவனைத் தேரோடு தொடர்ந்து சென்று கொல்லுதல் பழியெனத் திருவுளம் கொண்டார்; அங்குத் தேவர்களோடு நின்ற இந்திரன் மீது திருக்கடைக்கண் சாத்தியருளினர். அத்திருக் குறிப்பை அறிந்த **இந்திரன், ஒரு மயில் வடிவை எடுத்துக்கொண்டு வந்து, முருகக்கடவுள் திருமுன் ஒரு மரகத மலைபோல நின்றான்;** அவரை நோக்கி, "பிரமாதி தேவர்கள் யாவரும் தேவரீரை வழிபட நாயினும் கடையேனாகிய அடியேன்மேல் பேரருளை வைத்தீர்; ஆதலால் அடியேன் எல்லாச் சிறுமைகளும் தீர்ந்தேன்; உய்யும் வழிகண்டேன்; உம்முடைய அருமைத் திருவடிகளைச் சுமக்கும் பேறு பெற்றேன்; பொய்யாகிய மாயவாழ்வில் புகுந்துழலும் எளிமையையும் இனி நீங்கப் பெறுவேன். பறவை வடிவுகொண்ட சூரபன்மன் செல்லும் இடங்களுக்கெல்லாம் சென்று போர் செய்து வெல்ல, அடியேன் மீது எழுந்தருளும்" என்று வேண்டினன். ஆறுமுகக்கடவுள் தேரிலிருந்து இறங்கினர்; இந்திரனாகிய மயிலின் மீது ஏறினர்; சூரபன்மன் செலவைப் பின் தொடர்ந்து சென்றார். சக்கரவாகப் பறவை வடிவங் கொண்ட சூரபன்மன் மயில் வடிவம் கொண்ட இந்திரனைத் தாக்கினன். மயில் வடிவம் கொண்ட இந்திரன் அவனை எதிர்த்துப் போரிட்டான். பறவை வடிவம்கொண்ட இருவரும், மூக்கை நீட்டி உடல் முழுவதையும்

கிழித்து இரத்தம் வாயிற்படக் கௌவி இழுத்தும், சிறகுகளினுல் அடித்தும், கால்களினுல் தாக்கியும் பெரும் போர் செய்தார்கள். சக்கவாகப்பறவை வடிவுகொண்ட சூரபன்மன், மயில்வடிவு கொண்ட இந்திரனின் தலையிற் பொருந்திய தூவியைப் பறித்து, முகத்தைக் கொத்திக் கலாபத்தை இழுத்துத் துன்பம் செய்தான். குமாரக்கடவுள் அதனைக் கண்டு சினந்தார்; கணைகளை அவன் மார்பிலும், முகத்திலும், கால்களிலும் எய்து வருத்தினுர். அவன் பதைத்துச் சிறகுகளை உதறி அக்கணைகளை அழித்து, எண்டிசைகளிலும், ஆகாயத்திலும், கடலிலும், பிறவிடங்களிலும் கோபத்துடன் திரிந்தான். முருகக் கடவுள் இந்திரனுகிய மயிலைச் செலுத்திக் கொண்டு சென்று கணைகளைத் தூண்டி எவ்விடங்களிலும் அவனைத் துரத்தினுர். அப்போது அவன் இளைத்து மனம் மெலிந்து ஆறுமுகக்கடவுளின் திருக்கரத்திலுள்ள வில்லைக் கறிக்கும்படி எண்ணி வந்தான். அதனைக் கண்ட முருகக் கடவுள் தம் திருக்கரத்திலுள்ள வாட்படையை வீசி அவனுடைய பறவை வடிவை இரண்டு துண்டங்களாகும்படி வெட்டி வீழ்த்தினுர். தேவர்கள் யாவரும் மகிழ்ந்து கூத்தாடினுர்கள்.

**சூரபன்மன் பற்பல வடிவுகொண்டு மாயப்போர் புரிதல்**

அப்போது சூரபன்மன் அண்டமுகட்டைத் தொடும்படி உயர்ந்து பூமியின் உருவமெடுத்தான்; ஏழு கடல்களையும் தூர்த்துக் கதிரவன் செல்லும் வழியை மறைத்தான்; திக்குக்களையெல்லாம் மூடி நின்றுன். முருகக்கடவுள் சூரபன்மனின் மாயத்தை அறிந்து, ஏழு கணைகளை எய்தார். அக்கணைகள் ஏழு கடல்களாகச் சென்று அவன் உருவை அழித்தன. பிறகு கணைகள் கடல்களின் வடிவை நீக்கி ஆறுமுகக்கடவுளை அடைந்தன. சூரபன்மன் தண்ணீர் வடிவாகி விண்ணுலகத்தைத் தொடும்படியாக எழுந்து நின்றுன். முருகக்கடவுள் நூறு கணைகளை எய்தார். அவை ஊழித் தீயின் வடிவமெடுத்து நீரை உண்டு திரும்பின. சூரபன்மன் தீயின் வடிவமெடுக்க முருகக்கடவுள் ஆயிரம் கணைகளை எய்தார். அவை பெருங்காற்று வடிவுகொண்டு சூரபன்மனின் மாயைகளை அழித்து, ஆறுமுகக்கடவுளைத் திரும்பி வந்து அடைந்தன. சூரபன்மன் வாயுவின் வடிவை எடுத்து ஆர்த்து நின்றுன். ஆறுமுகக்கடவுள் இலட்சம் கணைகளை விடுத்தார். அவை பாம்பின் வடிவாய்ச் சென்று தீப்போல்

எழுந்து அவ்வடிவங்களை அழித்து மீண்டன. இவ்வாறு சூர பன்மன், நான்கு நாட்கள் தொடர்ந்து பல்வேறு மாய வடிவங் கள் எடுத்து வந்து, சண்முகக் கடவுளோடு போர் புரிந்தான்.

பின்னும் மாயங்களைச் செய்ய எண்ணி மும்மூர்த்திகள் போல் வந்தான் ; மற்றைத் தேவர்கள்போல் வந்தான் ; அசுரர் களைப்போல் வந்தான்; இந்திரனைப்போல் வந்தான்; பூதங்களைப் போல் வந்தான்; இயமனைப்போல் வந்தான்; பேயைப்போல் வந்தான்; அக்கினியைப்போல் வந்தான்; வாயுவைப்போல் வந் தான்; கடலைப்போல் வந்தான்; நஞ்சு, பாம்பு, முகில், இடி, இருள், மலை முதலியவைகளைப்போல் வந்தான்; கதிரவன், தன் சேனைகள், திக்கு யானைகள், சிங்கம், சக்கரவாகப் பறவை, தாரகன், சிங்கமுகன், பானுகோபன், அக்கினிமுகன், மற்றைப் புதல்வர்கள், தருமகோபன், தன் படைத்தலைவர்கள் முதலியவர் களின் உருவத்தில் வந்தான்; இவ்வாறு பற்பல வடிவு எடுத்து வந்து குமாரக் கடவுளைச் சூழ்ந்தான். அதனைக்கண்ட தேவர்கள் ஓடி உலைந்தார்கள், ஆறுமுகக் கடவுள் ஆயிரங்கோடி கணைகளை எய்து, "அம்புகளாகிய தெய்வங்காள், நீங்கள் சூரபன்மனின் மாயை அனைத்தும் அழித்து வருக" என்றார். அவை சென்று சூரபன்மன் எடுத்த ஒவ்வொரு வடிவத்திற்கும் தனித்தனியே ஏழு மடங்கு வடிவம் எடுத்து, எங்கும் நிறைந்து நெருங்கி, மாய வடிவங்கள் எல்லாவற்றையும் அழித்தன. பிறகு சூரபன்மன் போர்க்களத்தில் பெருங் கோபத்தோடு தனித்து நின்றான். ஆறுமுகக் கடவுள் செலுத்திய கணைகள் மீண்டுவந்து அவர் தூணியை அடைந்தன.

**முருகக் கடவுள் பேருருவம் எடுத்து நிற்றல்**

முருகக்கடவுள் சூரபன்மனை நோக்கி, "ஓ சூரபன்மனே! நீ அழியும் மின்னலைப்போலப் பயனற்ற பல பொய் வடிவங்களை நம்முன் கொண்டாய்; அவற்றையெல்லாம் நாம் அழித்தோம். இப்போது அழியாத நம்முடைய பெரிய வடிவத்தைக் காட்டு வோம்; நீ செய்த தவத்தால் காண்பாய்" என்று கூறினார்.

கடல், உலகம், திக்கு, புவனம், அண்டம், தேவர்கள், உயிர்கள் ஆகிய எல்லாம் அடங்கப் பெற்ற மிகப் பெரியதோர் திருவுருவம் கொண்டருளினர். அத் திருமேனியில் உள்ளடியில் மலைகளும், புறவடியில் கடல்களும், காலடி விரல்களில் இடி விண்மீன் இரகங்களும், பரட்டில் வருணன் குபேரன் நிருதி அரக்கர்களும், கணைக்கால்களில் முனிவர்களும் சிந்தாமணி முதலிய மணிகளும், முழந்தாளில் வித்தியாதரர் முதலியவர்களும், தொடையில் இந்திரனும் சயந்தனும், தொடை மூலத்தில் இயமனும் காலனும், அரையில் அசுரர்களும், விலாப் புறங்களில் தேவர்களும், மூலாதாரத்தில் நாகர்களும், குறியில் அமிர்தமும், நாபியில் சேவராசிகளும், மார்பில் சகல சாஸ்திரங்களும், உபவீதத்தில் ஞானமும், உரோமத்தில் அண்டங்களும், அங்கையில் சகல போகங்களும், தோள்களில் திருமாலும் பிரமனும், கைவிரல்களில் தெய்வப் பெண்களும், கண்டத்தில் ஒலிக்கூட்டங்களும் அக்கினியும், வாயில் வேதங்களும், பற்களில் அட்சரங்களும், நாக்கில் சிவாகமங்களும், உதட்டில் சப்த கோடி மகாமந்திரங்களும், மூக்கில் வாயுவும், கண்களில் சூரிய சந்திரர்களும், காதுகளில் திக்குக்களும், நெற்றியில் பிரணவமும் தலையில் பரசிவமும் இம்முறையே பொருந்திப் பேரொளி கொண்ட ஒப்பற்ற பேருருவத்தைக் காட்டியருளினர். தேவர்கள் சண்முகக் கடவுளின் திருவுருவத்தைக்கண்டு மனம் நடுக்கமுற்றுநின்றார்கள். ஆறுமுகக்கடவுள் தேவர்களை நோக்கி, "அஞ்சற்க, அஞ்சற்க" என்று திருவருள்புரிந்தார். தேவர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வணங்கி நின்றார்கள்.

**சூரபன்மன் ஆறுமுகக் கடவுளைப் போற்றுதல்**

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியாகிய சண்முகக் கடவுள் கொண்ட பேருருவத்தைச் சூரபன்மன் கண்டு மிகுந்த வியப்படைந்தான். அப்போது முருகக் கடவுள் அவனுக்குச் சிறிது நல்லுணர்ச்சியைக் கொடுத்தருளினர். நல்லுணர்வு பெற்ற சூரபன்மன் "இப்பாலகர் அவுண சேனைகள் யாவற்றையும் ஒரு நொடிப்பொழுதில் அழித்தருளினர்; உலகங்

கள்தோறும் என்னோடு போர்புரிந்து என்னைச் சேர்ந்தவர்கள் யாவரையும் அழித்தார்; இந்திரஞாலத்தேரையும், என்னிடம் மீண்டு வாராது செய்தார் ; மிக்க வலிமையுடைய படைக் கலங்களை மாற்றினர்; நான் கொண்ட மாயவடிவங்களை யெல்லாம் கணைகளால் அழித்தார்; அண்டங்களும் புவனங்களும் தேவர்களும் பிறவும் தம்மிடத்தே அமைந்த ஒரு பேருருவங்கொண்டு என் கண் முன்னே காட்டி நின்றார். அழகிய மயில் வாகனத்தின்மீது எழுந்தருளிய இவரை அந்நாளில் பாலகன் என்று எண்ணியிருந்தேன். இவர் பிரம விஷ்ணு முதலிய தேவர்களுக்கெல்லாம் மூலகாரணமாய் நின்ற மூர்த்தியன்றோ! முன்னர் தூதுவந்த வீரவாகு, வேலாயுதம் பொருந்திய கையையுடைய இவரை "விருப்பு வெறுப்பற்ற பராபரத்தின் முதல்வர்" என்று கூறினர். "இவரே ஈசன்" என்று இன்று கண்டேன். தூதுவர் அன்று சொன்ன வார்த்தைகள் யாவும் உண்மையாகும். நான் பெற்ற ஆயிரத்தெட்டு அண்டங்களும் பிறவும் ஆறுமுகக் கடவுளின் பாததாமரைகளிலுள்ள ஓர் உரோமத்தில் தேங்கி நிற்கின்றன. எல்லாப் பொருள்களையும் உள்ளடக்கி இக்கடவுள் கொண்டுள்ள வடிவம் முழுவதையும் யாவர் குறித்தறிய வல்லவர்? உடலெல்லாம் கண்களைப் படைத்தவர்களும் இக்காட்சியைக் காணப் பல கோடி கற்பகாலம் செல்லும். குமாரக் கடவுள் கொண்ட இப் பேரழகும், மிக்க பேருருவத்திலுள்ள ஒளியும், சீரும்இளமையும், அழகும் ஆகிய இவை யெல்லாம் உலகில் வேறு யாவரிடத்தில் உள்ளன. பல முறை நான் பார்த்தும், எனக்குத் தெவிட்டவில்லை. நான் அழியாவரம் பெற்றதால் இவ்வடிவத்தைக் கண்டு களிக்கிறேன். ஆயிரம் கோடி மன்மதர்களின் அழகெல்லாம் திரண்டாலும், இந்தத் திருவடியின் அழகுக்குச் சிறிதும் ஈடு செய்யாது. இவர் பேருருவத்திற்கு உவமை ஒன்றுமில்லை. என் தம்பியாகிய சிங்கமுகனும், குமாரனாகிய இரணியனும், முருகக்கடவுளைப் பாலகன் என்று எண்ணாதே; அவர் சிவபெருமானேயாகும் என்று கூறினர்கள். அஃது உண்மை. அவர் திருவடிவத்தை எண்ணற்ற ஊழிக்காலங்கள் நோக்கிக் கொண்டிருந்தாலும் கண்களுக்கு அடங்காது; நினைத்தால் மனத்திற்கு அடங்காது. இத்தன்மை கொண்ட கடவுள் என்னோடு போருக்கு வந்தது என்பால் அவர் வைத்த அருள் என்றே உறுதியாக எண்ணலாம்.

என்னுடைய சினம் தீர்ந்தது. போரில் எனக்கு ஊக்கம் குறைந்தது. உரோமங்கள் பொடித்தன. ஆனந்தக் கண்ணீர் பெருகுகிறது. எனக்கு இவர்பால் அன்பு பிறந்தது. என் அகந்தை போய்விட்டது. ஞானம் உண்டாகியது. என் வலத் தோளும், வலக்கண்ணும் துடிக்கின்றன. இவருடைய பரமேசுவர வடிவத்தை நான் கண்டுகொண்டேன். இது நான் முன்பு செய்த தவத்தின் பயன் அன்றோ! இக்கடவுளை என் கால்கள் வலம் வருதல் வேண்டும். கைகள் தொழுதல் வேண்டும். தலை வணங்குதல் வேண்டும். நா புகழ்ந்து பேசுதல் வேண்டும். நான் தீவினையினின்று நீங்கி இக் கடவுளுக்கு அடிமையாய் வாழ என் மனம் விரும்புகிறது. மானம் ஒன்றே அவ்வாறு செய்யாது என்னைத் தடுக்கிறது. தேவர்களின் பொருட்டு வந்து போரைச் செய்த இக் கடவுளின் உருவத்தைக் கண்டு கோபம் கொள்வதே சரி. என் உடலும் உணர்வும் அனலிற்பட்ட வெண்ணெயேபோல் வலி யழிந்து உருகின. இப் பெருமான் இந்நாள்வரை என்னோடு கொடிய போரைச் செய்து பிரியாதவராக நிற்பதெல்லாம் ஒரு திருவிளையாடலே ஆகும். இவர் என்னைக் கொல்லக் கருதினால் தடுப்பவர் யார்? ஒரு குற்றமும் செய்யாத தேவர்களை யான் சிறைசெய்ததெல்லாம் தீது என்று பலர் பலமுறை சொன்னார்கள். அத்தேவர்களைச் சிறை செய்தமையினால்தான் வேதங்களாலும், திருமாலாலும், நான்முகனாலும், இந்திரனாலும், தேவர்களாலும் அறிய முடியாத இக்கடவுள் இங்குஎழுந்தருளி வரப்பெற்றேன். ஆதலால், யான் தேவர்களைச் சிறை செய்தது நன்றே ஆயிற்று! ஒப்பற்ற முழுமுதற் கடவுள் திருமுன்பு நின்று இந்நாள்காறும் போர் செய்தேன். ஆகா! இனி நான் மனந்தளரேன். மேலாகிய பெருமையைப் பெற்றேன். வீரனும் நானே ஆயினேன். என் உடல் அழிந்தாலும் என் புகழ் என்றும் நிலைத்து நிற்கும். என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இவரை வணங்குவது தகுதியாகாது. அப்படி வணங்கினால் ஆயிரம் கோடி அண்டங்களிலும் பரவிய என் புகழும் வீரமும் அழியும்'' என்று இவைபோல்வன பலவற்றைக் கூறிப் போற்றி முருகக் கடவுள் திருமுன்பு நின்றான். ஆறுமுகக் கடவுள் தம் பேருருவத்தை நீக்கி முன்போல் மயில் வாகனத்தில் பழைய வடிவத்தோடு காட்சி

தந்தருளினர்; சூரபன்மனுக்கு அளித்த ஞானத்தை நீக்கினர். அவன் முன்போன்று அகம்பாவம் கொண்டான். சிவபெருமானின் குமாரர் சூரபன்மனுக்கு முன்பு ஞானத்தைக் கொடுத்துப் பின்பு அதனை மாற்றிச் சூரபன்மனை மயக்குகின்ற சூழ்ச்சி செய்தது ஒரு பெரியதாமோ?

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை உணர்ந்தி லேன்யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி அன்றே?

ஒன்றென முன்னம் வந்தோன் ஒருதனி வேலோன் தன்னைப்
பற்றிகல் இன்றி நின்ற பராபர முதல்வன் என்றே
சொற்றனன் சொற்ற வெல்லாம் துணிபெனக் கொண்டி லேனல்
இற்றையிப் பொழுதில் ஈசன் இவன்எனுந் தன்மை கண்டேன்!

மீயுயர் வடிவங் கொண்டு மேவிய தூதன் சொற்ற
வாய்மைகள் சரதம் அம்மா மற்றியான் பெற்ற அண்டம்
ஆயவை முழுது மற்றும் அறுமுகம் படைத்த செம்மல்
தூயபொற் பதரோ மத்தில் தோன்றியே நிற்கும் அன்றே.

ஆயிர கோடி காமர் அழகெலாந் திரண்டொன் றாகி
மேயின எனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னில்
தூயநல் எழிலுக் காற்ற தென்றிடின் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்?

போயின அகந்தை போதம் புகுந்தன வலத்த தான
தூயதோர் தோளுங் கண்ணும் துடித்தன புவனம் எங்கும்
மேயின பொருள்கள் முற்றும் வெளிப்படு கின்ற விண்ணோர்
நாயகன் வடிவங் கண்டேன் நற்றவப் பயன்ஈ தன்றே!

சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டுந் தாலும்
ஆழுதல் வேண்டும் தீமை அகன்றுநான் இவற்கா ளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே.

ஏதமில் அமரர் தம்மை யான்சிறை செய்த தெல்லாம்
தீதென உரைத்தார் பல்லோர் அன்னதன் செயற்கை யாலே
வேதமும் அயனும் ஏனை விண்ணவர் பலரும் காணா
நாதன்இங் கணுகப் பெற்றேன் நன்றதே ஆன தன்றே.

ஒன்றொரு முதல்வ னாகி உறைதரு மூர்த்தி முன்னம்
நின்றமர் செய்தேன் இந்நாள் நெஞ்சினித் தளரேன் அம்மா
நன்றிதோர் பெருமை பெற்றேன் வீரனும் நானே ஆனேன்
என்றும்இப் புகழே நிற்கும் இவ்வுடல் நிற்ப துண்டோ?

வானுளோர் சிறையை நீக்கி வள்ளலை வணங்கி இந்த
ஊனுலாம் உயிரைப் போற்றி அளியர்போல் உறுவன் என்னின்
ஆனதோ எனக்கி தம்மா ஆயிர கோடி அண்டம்
போனதோர் புகழும் வீரத் தன்மையும் பொன்றி டாவோ.

என்னஇத் தகைய பன்னி நிற்றலும் எவர்க்கும் மேலோன்
உன்னருந் தகைத்தாய் நின்ற ஒருபெருந் தோற்றம் நீத்து
மின்னிவர் கலாபம் ஊர்ந்த வியனுருக் கொண்டு நண்ணித்
துன்னலன் போத மாற்றித் தொன்மைபோ லாகச் செய்தான்.

**சூரபன்மன் தேவர்களை உண்ணப் பேருருவங் கொள்ளல்**

சூரபன்மன் முருகக்கடவுளின் திருவருளினால் தன் மனத்தில் உண்டாகிய ஞானம் நீங்கிப் பழைய கோபமும் பகையும் கொண்டான்; மயில் வாகனராய் நின்ற குமாரக் கடவுளின் தோற்றத்தைக் கண்டான்; தணிக்கமுடியாத கோபம் கொண்டான்; போரில் ஊக்கஞ் செலுத்தினான்; தலையை அசைத்துக் கையொடு கையைத் தட்டிச் சிரித்தான்; "பாலகனாகிய கள்வன் என்னோடு போர்செய்ய முடியாதவனாய்த் தான் கற்ற மாயத்தால் என்னை மயக்கிவிட்டான். யான் அந்த மாயத்தைத் தெரிந்து அழித்துவிட்டேன். எனக்கு நிகரானவர் எவருமிலர்? என்றும் அழியாத உடல் பெற்ற யான் கருத்தழிகின்றது உண்டோ? இந்தப் பாலகனோடு போர் செய்து மெல்ல மெல்ல வெல்வேன். இப்போது பெரும்போர் மூட்டிய தேவர்களின் உயிரை யெல்லாம் முன்னே உண்டு என் கோபத்தைத் தணிப்பேன்" என்று கூறினான்.

பிறகு, சூரபன்மன் மாயமந்திர மொன்றை உச்சரித்தான். கதிரவனும் மயங்கும்படி மிகப் பெரியதோர் இருள்வடிவம் கொண்டு அதனுள் மறைந்து நின்று ஆரவாரஞ் செய்தான். அவ்விருள் வடிவத்தைக் கண்டு தேவர்கள், "இது சூரபன்மன் மாயம்" என்று கலங்கினார்கள். அப்போது சூரபன்மன் அந்த

இருளில் பாய்ந்து பலதலைகளும் அளவற்ற கைளும் கொண்ட பெரியதோர் வடிவத்தை விரைந்து கொண்டான். தேவர்களை உண்ண நினைத்து ஆகாயத்தில் கிளர்ந்து எழுந்து நின்றான்; அவன் எழுதலைத் தேவர்கள் ஞானத்தாலும் குறிப்பாலுமறிந்து, "இவன் நம்மைக் கொல்லும்படி வருகின்றான்" என்று எண்ணிச் சிதறி ஓடினார்கள். அவர்கள் முருகக்கடவுளை நோக்கி, "அடைந்த அன்பர்களுக்கு இனியவரே அடைக்கலம்; ஞான முதல்வரே அடைக்கலம்; முனிவர்களுக்குத் தலைவரே அடைக்கலம்; சோதி சொரூபரே அடைக்கலம்; நினைத்தற்கும் அரிய கடவுளே அடைக்கலம்; எல்லாவற்றையும் படைத்த கடவுளே அடைக் கலம்; நெற்றி நாட்டத்தையுடைய சிவபெருமான் பெற்றருளிய கடவுளே அடைக்கலம்; அடைக்கலம்; தேவாதி தேவரே அடைக்கலம்; சூக்கும சித்தாயுள்ள கடவுளே அடைக்கலம்; பகைவர்களாகிய பாம்புகளுக்கு இடியேறு போல்பவரே அடைக்கலம்; வேற்படையையுடைய நிருமலரே அடைக்கலம்; பொய்யடிமையில்லாத புலவர்க்கு எளியவரே அடைக்கலம்; பன்னிரு திருப்புயங்களை உடையவரே அடைக்கலம்; மும் மூர்த்திகளுமாய் நின்ற முதல்வரே அடைக்கலம்; அடைக்கலம்.

நண்ணினர்க் கினியாய் ஓலம்! ஞானநா யகனே ஓலம்!
பண்ணவர்க் கிறையே ஓலம்! பரஞ்சுடர் முதலே ஓலம்!
எண்ணுதற் கரியாய் ஓலம்! யாவையும் படைத்தாய் ஓலம்!
கண்ணுதற் பெருமான் நல்கும் கடவுளே ஓலம்! ஓலம்!!

தேவர்கள் தேவே ஓலம்! சிறந்தசிற் பரனே ஓலம்!
மேவலர்க் கிடியே ஓலம்! வேற்படை விமலா ஓலம்!
பாவலர்க் கெளியாய் ஓலம்! பன்னிரு புயத்தாய் ஓலம்!
மூவரும் ஆகி நின்ற மூர்த்தியே ஓலம்! ஓலம்!!

சூரபன்மன் செறிந்த இருளுருவில் மறைந்து வந்து எங்களை உண்ணும்படி வருவான்; நாங்கள் அவனுக்குத் தப்பி ஓடவும் வலிமையற்றவர்களாக இருக்கின்றோம்; இனிநாங்கள் எங்கே உய் வோம்? தேவரீர் சிறிதும் தாழ்க்காமல் அவன் உயிரையுண்டு எங்கள் உயிரைக் காத்தருளும்" என்று வேண்டினார்கள். மயி லுருவங்கொண்டு முருகக்கடவுளைத் தாங்கிநின்ற இந்திரனும் பலவாறு குமாரக் கடவுளை வேண்டினான்.

**சூரபன்பன் மாமரமாக நின்று அழிதல்**

முருகக்கடவுள் அத்தேவர்களுடைய வேண்டுகோளையும் சூர பன்மனுடைய மாயையின் ஆற்றலையும் திருவுள்ளத்திலடைத் துத் தம்முடைய ஒரு திருக்கரத்திலிருக்கும் **வேற்படையை** நோக்கி, "இச்சூரபன்மனின் மார்பைப் பிளந்து விரைவில் மீள் வாய்" என்றுகூறி அதனை அவன்மீது விடுத்தார். அவ்வேற்படை ஆயிரங்கோடி சூரியர்களைப்போல ஒளிவிட்டுத் தீச்சுவாலைகளை உமிழ்ந்து சென்று சூரபன்மனின் இருள் வடிவத்தை அழித்தது. சூரபன்மன் தன்மாயம் அழிந்ததையும் வேற்படை எதிரே வருவதையும் நோக்கி, "அழியாத மேன்மையினையுடைய என்னை இப்பாலகன் விடுத்த வேற்படை என்ன செய்யும்?" என்று எள்ளி நகைத்தான்; பெருங்கோபம் கொண்டு, "பூமியையும், திக்குக்களையும், மேல் கீழ் உலகங்களையும் அதன் உயிர்களோடு அழிப்பேன்" என்று கூறினன். உடனே சூரபன் மன் கடலின் நடுவில் சென்றான். தீயைப்போன்ற தளிர்களையும் புகையைப் போன்ற இலைகளையும், பொன்னைப் போன்ற பூங் கொத்துக்களையும் ஈன்று, மரகதமணிபோலக் காய்த்து, மாணிக்க மணிகள்போலப் பழுத்து, முகில்களைப் போலக் கிளைகளைப் போக்கி, அண்ட கூடம் வரையிலும் உயர்ந்து திகந்தம் வரையும் சிறுகிளைகளை நீட்டி, பூமியில் ஆதி கூர்மம் வரையும் வேர்களைப் பாய்ச்சி மண்ணிலும் விண்ணிலும் நிழலைப் பரப்பி **மிகப்பெரிய ஒரு மாமர வடிவாகச்** சூரபன்மன் நின்றான்; தன் வடிவத்தை அசைத்தான். அவ்வசைவினால் நிலவுலகங்கள் இடிந் தன; உலகத்துப் பொருள்களெல்லாம் நிலைதடுமாறின. மாமர வடிவமாக நிற்கும் சூரபன்மனின் தன்மையை வேற்படை கண் டது; சினத்துடன் விரைந்து சென்று சூரபன்மனாகிய அம் மா மரத்தைத் தாக்கி அழித்தது. சூரபன்மன் அரற்றி வெட்டுண்டு கீழே வீழ்ந்தான். ஆயினும் சூரபன்மன், முன்னர் சிவபெரு மானிடம் பெற்ற வரத்தின் வலிமையால் இறந்திலன்; அவன் தன் பழைய வடிவங்கொண்டு உடைவாளை உறையினின்றும் எடுத்துப் போர்புரிய எண்ணி ஆர்த்து எதிர்த்துச் சீறி னன். வேற்படை அவன் மார்பைப் பிளந்து அவன் உடலை இருதுண்டாக்கிக் கடலில் வீழ்த்தியது. வேதங்கள் முழங்கின.

தேவர்கள் பூமழை பெய்தனர். வேற்படை தேவகங்கையில் மூழ்கி முருகக்கடவுளின் திருக்கரத்தில் வந்து வீற்றிருந்தது.

**சூரபன்மன் சேவலும் மயிலும் ஆதல்**

சிவபெருமான் அளித்தருளிய அழியா வரத்தினுல் சூரபன்மன் மீட்டு எழுந்தான். முன்னே ஊழ்வலியால் பிளவுண்ட அவனுடைய இரண்டு உடற் கூறுகளும் **கோழியும், மயிலுமாக** ஆயின. மாணிக்க மலேயும் மரகத மலேயும், கால்களேயும் சிறகுகளேயும் பெற்றுப் பறந்து செல்வதுபோலத் தேவசேனுபதியும் ஞானநாயகரும் ஆகிய ஆறுமுகக்கடவுளை நோக்கிப் போர் புரியுஞ் செருக்குடனே, கோழியும் மயிலுமாகிய சூரபன்மன் அவர் திருமுன் வந்தான். தேவர்கள் அஞ்சி ஓடுமாறு போர்ச் செருக்குக் கொண்டான். ஆறுமுகக் கடவுள் அவன்மீது திருவருள் நோக்கஞ் செய்தார். ஞானிகளின் பார்வையால் இரும்பு பொன்னுவது போல, ஆறுமுகக்கடவுளின் பார்வையால் சூரபன்மன் பகைமை நீங்கி நல்லறிவு பெற்ருன். அப்பொழுது ஆறுமுகக்கடவுள் தம் திருவருளினுல் ஞானம் பெற்ற கோழியை நோக்கி, "நீ நம் தேரில் கொடியாக அமர்ந்து நின்று கூவுவாயாக!" என்ருர். அங்ஙனமே கோழி அவர் தேரில் ஏறிக்கொடியாகிக் கூவியது. பிறகு முருகக்கடவுள் இந்திரனுகிய மயிலினின்றும் இறங்கினுர். தம் ஞானத்தைப் பெற்று நின்ற சூரபன்மனுகிய மயிலின்மீது ஏறி, "நம்மைச் சுமப்பாயாக" என்று அதனை வாகனமாகக் கொண்டார். அம் மயில், கடல்கள் உடையவும், மேரு இடியவும், பூமி வெடிக்கவும், அண்டங்கள் கலங்கவும், கலாபத்தை வீசி, ஆரவாரஞ் செய்து உலாவியது. முருகக்கடவுள் மயிலின் மீதேறி எங்கும் சென்ருர். மயில் வாகனராய் ஆறுமுகக்கடவுள் எழுந்தருளி, மகேந்திரபுரியிலுள்ள போர்க்களத்தை அடைந்தார். அங்கு மயிலாகவும் கோழியாகவும் நின்ற இந்திரனேயும் அக்கினியையும் நோக்கி, அவர்களேப் பழைய வடிவு அடையும் படி அருளிச்செய்தார். அவர்கள் முன்னை வடிவங்கொண்டு அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி நின்ருர்கள். ஆறுமுகக்கடவுள் சூரபன்மனை அழித்து மயிலே வாகனமாகவும், கோழியைக் கொடியாகவும் கொண்டு போர்க்களத்தில் நின்றதைப் பூதர்களும், மற்றை வீரர்களும்,

வீரவாகு தேவரும் கண்டனர்; அவர் திருவடிகளை வணங்கி ஆரவாரம் செய்து அவரைச் சூழ்ந்தார்கள்.

திருவிருத்தம்–507
ஆகத் திருவிருத்தம்-2,904

—oo—

# 14. தேவர்கள் போற்று படலம்

**தேவர்கள் மகிழ்தல்**

ஆறுமுகக்கடவுள் வேற்படையினால் சூரபன்மனின் உடலைப் பிளந்து, மயிலில் வீற்றிருந்தருளியதைத் திருமால், நான்முகன், இந்திரன் முதலிய தேவர்கள் கண்டு தரிசித்து ஆரவாரஞ் செய்து எழுந்தனர்; மகிழ்ச்சிப் பெருக்கால் துள்ளினர்; ஆடிப் பாடினர்; புளகாங்கிதம் அடைந்து மலர்மாரி பெய்தனர். ஆறுமுகக்கடவுளைத் தொழுது பலவாறு தோத்திரஞ் செய்து நோக்கி, "எம் பெருமானே! நீர் வேற்படையை விடுத்துச் சூரபன்மனைச் சங்கரித்தீரல்லீர்; அடியேங்களுடைய வினையின் வேரை அறுத்தீர். இனி எங்கட்கு வேறோர் குறையுண்டோ? வலிய அவுணர்கள் நூற்றெட்டு யுகங்களாக எங்களை வருத்தினர். தேவரீர் ஆறுமுகங்கொண்டு திருவவதாரம் செய்து காத்தருளினீர். நாங்கள் அவுணர்கள் தீமைகளினின்றும் நீங்கினோம்; பழிகளினின்றும் விலகினோம்; வேதாசாரத்தையும் பழைய செல்வங்களையும் பெற்றோம்; இன்றைக்குச் சூரபன்மனைத் தேவரீர் கொன்றதால், சென்ற உயிர் திரும்பியதுபோல் இன்பமடைந்தோம்; காண்பானும், காட்சியும், காட்டுவானும், காட்சிப் பொருளும் ஆகிய இவை யெல்லாம் தேவரீரே என்பதை உணர்ந்தோம்; அதனால் இனிக் கொடுமை பொருந்திய பிறவித் துன்பத்திலிருந்து நீங்கி, வீடு அடைவோம்; தேவரீரின் திருவடிகளுக்குத் தொண்டு பூண்டோம்; இனிப் பிறரைப் புகழோம்" என்று மகிழ்ச்சியோடு பலவாறு துதித்து வணங்கினார்கள். இவ்வாறு தம்மைத் துதித்த தேவர்கள் முதலாயினோர் யாவருக்கும் முருகக் கடவுள் பெருங் கருணை புரிந்தருளினார்.

திருவிருத்தம்–9
ஆகத் திருவித்தம்–2,913

—oo—

## 15. இரணியன் புலம்புறு படலம்

### பதுமகோமளை முதலியோர் இறத்தல்

போர்க்கள நிகழ்ச்சியை நோக்கிக்கொண்டிருந்த அவுணர்களில் சிலர் மகேந்திரபுரிக்கு விரைந்து சென்று, "ஆறுமுகக் கடவுளின் வேற்படையால் சூரபன்மன் இறந்தான்" என்று அவனுடைய பட்டத்தரசி பதுமகோமளைக்கும் மற்றைத் தேவியர்களுக்கும் சொன்னார்கள். அம்மொழியினைக் கேட்ட பதுமகோமளை உயிர் நீங்கினாள். தலைவி, தலைவன்மாட்டுக் கொள்ளும் தலையாய அன்பிற்கு எடுத்துக்காட்டு இதுவன்றோ? சூரபன்மனின் மற்றை மனைவியர்களும் அச்செய்தியைக் கேட்டு, வயிற்றில் அடித்துக்கொண்டு அழுதார்கள்; தீக்குழி ஒன்றை உண்டாக்கினார்கள்; இறந்த பதுமகோமளையின் உடலை அதிலிட்டுத் தாமும் வீழ்ந்து இறந்தார்கள். அப்பொழுது **கதிரவன் மேலைக் கடலில் மறைந்தான்.** மாலைக் காலம் வந்தது. திருமகள் வீர மகேந்திரபுரியை விட்டு நீங்கினாள்.

### இரணியன் புலம்பல்

தன் தந்தை இறந்து சேவலும் மயிலுமாகி ஆறுமுகக் கடவுளை அடைந்தமையை இரணியன் கண்டு கலங்கி மனம் நொந்தான்; ஆகாயத்தில் நின்றுகொண்டு, "அரசர்க்கரசே! நான் சொன்னவைகளை நீ உறுதி என்று கைக்கொள்ளவில்லை. நீ இறப்பதற்காகவோ ஆறுமுகக் கடவுளோடு போர் செய்தாய்! தந்தையே! சிவபெருமான் கொடுத்த வரம் உண்மையே. நீ ஒருகாலும் இறக்கமாட்டாய். ஆனால் சிவபெருமானின் புதல்வராய்த் தோன்றிய சண்முகக் கடவுள் அவற்றையெல்லாம் பொய்யாகும்படி உனக்குக் கூற்றுவராயினரே! நிலையில்லா உடலை நிலையென்று நம்பிப் பலரும் கண்டு பழிக்கும்படி உனக்கும் சொல்லாமல் ஒளித்து ஓடினேன்; நீ இறந்தபின் வந்தேன்; உனக்கு நான் மகன் என்று கூறிக்கொள்வது பூமிக்குப் பாரமேயாகும். திருமால், நான்முகன், இந்திரன் முதலியவர்கள் வாழ்த்தி வணங்கும்படி அரசுபுரிந்த நீ சிவகுமாரன் தேரில் கோழியாக நின்று விலா ஒடியக் கூவுகின்றனையோ! அண்டங்களிலுள்ள உயிர்க

ளெல்லாம் வந்து வணங்க, அதனுல் இறுமாந்து வீற்றிருக்கும் நீ வேலாயுதத்தைக் கையிலேந்திய ஆறுமுகக் கடவுளை மயில் வாகனமாய் நின்று சுமக்கின்றனையோ! தோன்றுலோ!

ஆழியான் வேதன் அமரர்க் கிறைமுதலோர்
வாழியா யென்று வழுத்தியிட வைகியநீ
பூழியார் மேனிப் புராரிசிறு வன்தேரில்
கோழியாய் நின்று விலாவொடியக் கூவுதியோ!

ஓகையால் அண்டத்து உயிர்களெலாம் வந்திறைஞ்சச்
சேகையாய் மல்குந் திருத்தாள்கொண் டுற்றிடுநீ
வாகையார் கின்ற வடிவேற் கரத்தோனைத்
தோகையாய் நின்று சுமக்குதியோ தோன்றுலோ!

நீ தோற்பாய் என்று நான் சொன்னேன். நீ அதனைச் சிறிதும் கேட்டிலையே! பகைவராய் வந்த சிவகுமாரரோடு போர் புரிந்து தோற்றுயே! அதனுல்தான் அவரை மயிலாய்ச் சுமக்கின்றனையோ! நீ உன் ஒப்பற்ற வடிவத்தை இழந்து வேறுபட்ட பறவைகளின் வடிவங்களை எடுத்தாய். ஆதலால், நீ இறக்கவில்லை. அதனுல், நான் அந்திய கருமத்தைச் செய்யும் பேற்றையும் பெற்றிலேன். இவ்வுயிரை வீணுகப் பாதுகாத்தேனே! உன் கோபம், மானம், வெற்றி, அகந்தை, வலிமை எங்குப் போயினவோ? எனக்கு அதனைக் கூறுவாய்'' என்று பெருமூச்சுவிட்டுப் புலம்பினுன்.

**ஈமக்கடன்**

பூதர்கள் தன்னைக் கண்டால் கொன்று சினம் தீர்த்துக் கொள்வார்கள் என்று கருதி, இரணியன் முன்போல மீண்டும் கடலிற் போய் மறைந்தான். அதன்பின், வருத்தத்தோடு சுக்கிராசாரியரை அடைந்தான். இறந்த தந்தையர்களுக்கும், துணைவர்களுக்கும், தாயர்களுக்கும், ஏனையோர்களுக்கும் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களைச் செய்தான். துன்பத்திற்கு ஒரு வித்தான செல்வத்தை வெறுத்துச் சிவபெருமானைஎண்ணித்தவம் செய்து வீடுபேற்றை அடையும்படி ஓரிடத்திற்குச் சென்றுன்.

திருவிருத்தம்-21
ஆகத் திருவிருத்தம்-2,934

——oo——

## 16. மீட்சிப் படலம்

**தேவர்களைச் சிறை மீட்டல்**

சூரபன்மனாகிய மயில் வாகனத்தின்மீது எழுந்தருளிய ஆறுமுகக் கடவுள் வீரவாகு தேவரை அன்புடனே நோக்கி, "வீரனே! சூரபன்மனின் பெரிய சிறையிலே வருந்தும் சயந்தனையும், தேவர்களையும் மீட்டு வருக" என்று பணித்தருளினார். வீரவாகுதேவர் அதனைக்கேட்டு நன்றென்று அவரை வணங்கிப் போர்க் களத்திலிருந்து புறப்பட்டு மகேந்திரபுரியிலுள்ள சிறைச்சாலையை அடைந்தார். வீரவாகு தேவரைக் கண்ட சயந்தனும் தேவர்களும் ஆச்சரியமடைந்தனர். கால்களில் பூட்டிய விலங்குகள் ஓடிய அவரை வணங்கி, "வீரரே எங்கள் துன்பம் தீர்க்க இங்கே வந்தீரோ" என்று வினவி ஆரவாரஞ் செய்தனர். வீரவாகுதேவர் அவர்களை நோக்கி, "தேவர்காள்! நீங்கள் யாவரும் வெளியே வருவீர்களாகுக; சூரபன்மனை அவுண சேனைகளோடும் எம்பெருமானாகிய சண்முகக் கடவுள் வேற் படையினால் அழித்தருளினார்" என்று கூறினார். அதனைக் கேட்ட சயந்தன் முதலிய தேவர்கள் சதேகமுத்தி அடைந்தவர்போல மகிழ்ந்து, தங்கள் கால்களில் பூட்டிய விலங்குகளின் பூட்டுக்களை அறுத்து, மகேந்திரபுரியைவிட்டு நீங்கிப் போர்க் களத்தை அடைந்து ஆறுமுகக் கடவுளுடைய திருவடிகளை வணங்கித் துதித்தார்கள். ஆறுமுகக் கடவுள் அவர்களுக்குப் பேரருள் புரிந்து, "சூரபன்மனின் சிறையில் பலகாலம் அகப்பட்டு வருந் தினீர். இனி, துன்பமற்றுச் சுவர்க்க லோக பாக்கியத்தில் இருப்பீர்களாக" என்று அருளிச்செய்தார். தேவர்கள் அத் திருவாக்கைக் கேட்டுக் களிப்படைந்து "அடியோங்கள் உய்ந் தோம்" என்று மீட்டும் அவரை வணங்கித் துதித்தார்கள். இந்திரன் பழைய துன்பங்களெல்லாம் நீங்கி மிக மகிழ்ந்து இந்திர பாக்கியத்தைப் பெற்ற அந்நாளிலும் இனிமையோடு இருந்தான். சயந்தன் தன் தந்தையாகிய இந்திரனை அடைந்து வணங்கினான். இந்திரன் சயந்தனைத் தழுவி முதுகைத்தடவி, "மகனே! நீ பல யுக காலம் சூரபன்மனின் சிறையில் வருந்தி இளைத்தாய் போலும்" என்று கூறி, தேவர்கள் யாவரையும் முறை முறையாகத் தழுவி மகிழ்ச்சியுற்றான்.

**பூதர்கள் உயிர் பெற்று எழுதல்**

சூரபன்மனுடைய போரில் அன்று வரையில் இறந்த பூத சேனைகள் முழுவதும் எழுந்து வருமாறு முருகக்கடவுள் திருவுளங் கொண்டார். இறந்த பூத கணங்கள் வந்து கூடின. பூத சேனைகள் குமாரக் கடவுளின் சந்நிதியை அடைந்து அவரை வணங்கின. எல்லா நதிகளும் கடைசியில் கடலை அடைவது போலப் பூத சேனைகள் எல்லாம் ஒன்றுகூடி ஆறுமுகக் கடவுளை வந்தடைந்தன.

**மகேந்திரபுரியை அழித்தல்**

ஆறுமுகக்கடவுள் வருணனை அழைத்து, "சூரபன்மனின் மகேந்திர புரியை ஊழிக்காலத்தில் பூமியை அழித்தல்போல அழித்துவிடுவாயாக" என்று கூறியருளினுர். வருணன் நன்றென்று உடனே மேலெழுந்து மகேந்திரபுரியை அதிலுள்ள உயிர்களோடு கடலினுள் அழுத்தினன். மகேந்திரபுரி மறைந்தது.

**முருகக்கடவுள் திருச்செந்தூருக்கு எழுந்தருளுதல்**

ஆறுமுகக்கடவுள், திருமால் நான்முகன் இந்திரன் முதலிய தேவர்களும், வீரவாகு முதலிய வீரர்களும், பூத சேனைகளும் சூழப் போர்க் களத்தைவிட்டுப் புறப்பட்டு மகேந்திரபுரியைக் கடந்து, இலங்கை நகரையும் கடலையும் தாண்டி, அழகு மிக்க திருசெந்திற் பதியை வந்து அடைந்தார்; மயில் வாகனத்தைவிட்டு இறங்கிக் கோயிலுட் புகுந்தார்; எல்லா உயிர்களுக்கும் அருள்புரியும் கருணையோடு திவ்விய சிங்காதனத்தின் மீது இனிது வீற்றிருந்தருளினுர். அப்போது **சூரியன் மேற்குக் கடலில் மூழ்கினன்.**

**ஆறுமுகக் கடவுளை வழிபடுதல்**

அவ்வேளையில் நான்முகன் முதலிய தேவர்கள் வந்து ஆறுமுகக் கடவுளை வணங்கி, "எம் பெருமானே! அடியவர்களாகிய நாங்கள் தேவரீருடைய திருவடிகளை அர்ச்சிக்க வேண்டுகிறோம்" என்று வேண்டிக் கொண்டனர். ஆறுமுகக்கடவுள் அதற்கு உடன்பட்டார். தேவர்கள் திருமஞ்சனம், சந்தனம்,

மலர், தூபதீபம் முதலியவைகளை வரவழைத்தனர்; குமாரதந்திர விதிப்படி பத்தியுடன் ஆறுமுகக் கடவுளைக் **கும்பம், அக்கினி, உருவம்** ஆகிய இம் மூவிடங்களிலும் அவர் திருவுளம் மகிழப் பூசனை செய்து வணங்கித் துதித்தார்கள். ஆறுமுகக்கடவுள் அவர்களை நோக்கி, "உங்களுக்குக் குறைகள் உண்டானால் கூறுங்கள்" என்று அருளிச் செய்தார். அவர்கள், "எம் பெருமானே! தேவரீர் சூரபன்மனை அழித்து எங்களைக் காத்தருளினீர். எங்களுக்கு ஒரு குறையும் இல்லை. உம்முடைய திருவருளைப் பெற்றோம். எங்கள் உயிர் உடலில் நிற்கும் வரையில் உம்முடைய திருவடிகளிடத்தே தலைமையான அன்பு நீடித்திருக்கும்படி வரம் தந்தருளவேண்டும்" என்றார்கள். முருகக்கடவுள், 'நன்று' என்று அவர்களுக்கு அங்ஙனமே அருள்புரிந்தார். யாவரும் குமாரக் கடவுளைத் துதித்துக் கொண்டு அங்கேயே இருந்தார்கள். அன்றைய இரவு கழியக் **கதிரவன் கீழ்த்திசையில் உதித்தான்.**

**முருகக் கடவுள் சிவபூசை புரிதல்**

குமாரக் கடவுள் தேவதச்சனைக் கொண்டு அங்கு ஒரு சிறந்த கோயில் அமைப்பித்துச் சிவலிங்கத்தில் இறைவனைப் பிரதிட்டை செய்து பஞ்சகவ்வியம், சந்தனம், திருமஞ்சனம், மலர், தூபதீபம் முதலியவைகளைக் கொண்டுவரச் செய்து, சிவாகம விதிப்படி அவரைப் பூசித்து வழிபட்டார்.

திருவிருத்தம்–33

ஆகத் திருவிருத்தம்-2,967

திருச்சிற்றம்பலம்

——oo——

ஆகக் காண்டம் நான்குக்குத் திருவிருத்தம்–7,857

**யுத்த காண்டம் முற்றுப்பெற்றது**

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

**ஐந்தாவது**

# தேவ காண்டம்

**முருகவேள் வணக்கம்**

துய்யதோர் மறைக ளாலும் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க ! சேவலும் மயிலும் வாழ்க !
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க ! அன்னான்
பொய்யில்சீர் அடியார் வாழ்க ! வாழ்கஇப் புவனம் எல்லாம்.

——oo——

## 1. திருப்பரங் குன்று சேர் படலம்

### திருப்பரங் குன்றுக்குப் புறப்படுதல்

ஆறுமுகக் கடவுள் சிவபூசை செய்தபின்பு தேவர்கள், முனிவர்கள், சேனைத்தலைவர்கள் முதலாயினோர் சூழ, மயில்வாகனத்தின்மீது ஏறித் திருச்செந்தூரைவிட்டுப் புறப்பட்டருளினார்; அப்போது நான்முகன், திருமால், இந்திரன், படைவீரர்கள் ஆகிய யாவரையும் பார்த்து, "நீங்கள் உங்கள் உங்கள் வாகனங்களிலேறி நமக்குப் பக்கத்தில் புறப்பட்டு வாருங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அங்ஙனமே அவர்கள் யாவரும் புறப்பட்டு ஆறுமுகப் பெருமானுடன் சென்றார்கள். இரண்டாயிரம் வெள்ளம் பூதர்களும் வந்து நெருங்கினார்கள்; பூதூளியினால் தேவலோகம் பூழியாகியது. குடை, கொடி, ஆலவட்டம் முதலியன நெருங்கின. கொம்பு, காகளம், பேரிகை முதலிய இசைக் கருவிகள் முழங்கின. வேதவொலியும், தேவர்களுடைய வாழ்த்தொலியும், மற்றை ஒலிகளும் முருகக்கடவுளின் ஊர்தியாகிய மயிலும் கொடியாகிய கோழியும் செய்கின்ற ஒலிகளால் மறைந்தன.

பூதர்கள் செல்லுவதால் மலைகள் அசைந்தன. இவ்வாறு சேனைகள் இருமருங்கிலும் முன்னணியிலும் பின்னணியிலும் நெருங்கிச் செல்ல, ஆறுமுகக் கடவுள் திருச்செந்தூரை நீங்கிக் குறிஞ்சி நிலத்தின் வழியாக நான்மாடக் கூடல் என்னும் மதுரைத் திருநகருக்கு மேற்கிலுள்ள திருப்பரங் குன்றத்தை அடைந்தார்.

**திருப்பரங் குன்றத்தில் முருகக்கடவுள் வீற்றிருந்தருளல்**

அப்பொழுது திருப்பரங்குன்றில் தவஞ்செய்து கொண்டிருந்த பராசரமுனிவரின் புதல்வர்கள் அறுவரும், நான்முகன் முதலிய தேவர்களும் ஆறுமுகக் கடவுளை வணங்கி, "தேவரீர் இக் குன்றத்தில் வீற்றிருந்தருளவேண்டும்; இது மிகச் சிறந்த இடமாகும்" என்று விண்ணப்பம் செய்தார்கள். அதனை முருகக் கடவுள் கேட்டு மகிழ்ந்து அவர்கள் விருப்பத்திற்கிணங்கி, அத் திருப்பரங் குன்றத்தின் சாரலில் பூதசேனைகளோடு ஏறினர். தேவதச்சன் அக் குன்றின் மீது அளவற்ற வீதிகளையும், கோயில்களையும், சோலைகளையும், வாவிகளையும் அமைத்தான். ஆறுமுகக்கடவுள் அவரவர்கட்குரிய இடங்களில் அனைவரையும் அமர்த்தி யாவற்றையும் கண்டு மகிழ்ந்து தேவதச்சனுக்கு அருள் புரிந்தார்; தம் திருக்கோயிலை அடைந்து மயில் வாகனத்தினின்றும் இறங்கித் திருமால் பிரமன் இந்திரன் முதலிய தேவர்களும் வீரவாகு முதலிய வீரர்களும் மருங்கில்வர, சிற்சபையில் அமைக்கப்பட்டிருந்த திவ்விய சிங்காதனத்தின் மீது வீற்றிருந்தருளினர்; நான்முகன் முதலிய தேவர்களை அவரவர் இடங்களுக்குச் செல்லும்படி விடை கொடுத்தருளினர். வீரவாகு தேவரும், இலக்கத்தெண்மரும், பூதப்படைத் தலைவர்களும் பூதர்களும் முருகக் கடவுள் திருவடிகளை வணங்கி ஏவல் செய்து கொண்டு நின்றார்கள். பராசரமுனிவரின் புதல்வர்கள் அறுவரும் ஆறுமுகக் கடவுளின் திருவடிகளைப் பூசித்துத் துதித்து நின்றார்கள். அப்போது முன்னர்ச் சிவபெருமான் அவர்களுக்குச் சொல்லியருளிய திருவாக்கின்படி, முருகக்கடவுள் ஞானத்தை உபதேசித்துத் திருப்பரங்குன்றில் வீற்றிருந்தருளினர்.

திருவிருத்தம்–35

ஆகத் திருவிருத்தம்-35

——oo——

## 2. தெய்வ யானையம்மை திருமணப் படலம்

### இந்திரன் தன் மனைவியையும் மகளையும் வரவழைத்தல்

இந்திரன், தன் பகைவனாகிய சூரபன்மனை அழித்து விண்ணுலக அரசாட்சியை அளித்தருளிய ஆறுமுகக் கடவுளுக்குத் தன் மகளாகிய **தெய்வயானையம்மையைத்** திருமணம் செய்து கொடுக்க எண்ணினான்; அக்கருத்தினைத் திருமால் நான்முகன் முதலிய தேவர்களிடம் கூறினான். அவர்கள் அதனைக் கேட்டு மகிழ்ந்து, "உன் எண்ணம் மிக நன்று" என்று வியந்து, "உன் மகளாகிய தெய்வயானையும் முன்னர்ச் சரவணப் பொய்கையில் முருகக்கடவுளைக் கணவனாக அடையவிரும்பித் தவம் புரிந்தாள். அதற்கு ஏற்ற பயன் இப்போது கிடைத்தது போலும். இங்கு நீ அவளை மணஞ்செய்து கொடுத்தற்குரிய ஏற்பாடுகளை விரைந்து செய்வாயாக" என்று கூறி அங்கே இருந்தார்கள்.

அப்பொழுது இந்திரன் ஓர் ஒற்றனை அழைத்து, "நீ மேரு மலைக்கு விரைந்து சென்று அங்கிருக்கும் என் மனைவியாகிய இந்திராணியையும் மகளாகிய தெய்வயானையையும் இங்கே அழைத்து வருக" என்று கட்டளையிட்டான். ஒற்றன் உடனே விரைந்து மேருமலையை அடைந்து அயிராணியைக் கண்டு, வணங்கி, "சூரபன்மனை அறுமுகக் கடவுள் அழித்துவிட்டார். சயந்தனும், தேவர்களும் சிறையினின்றும் நீங்கினார்கள். ஆறு முகக் கடவுள் சேனைகளோடு மீண்டுவந்து திருப்பரங் குன்றத்தில் வீற்றிருக்கிறார், உனதுகணவர் உன்னைத் தெய்வயானையோடு திருப்பரங்குன்றத்திற்கு அழைத்துவரும்படி கட்டளையிட்டார். உடனே தெய்வயானையம்மையோடும் புறப்பட்டு வருவாயாக !" என்றான். இந்திராணி ஒற்றன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு வியந்து மகிழ்ச்சி அடைந்தாள் ; தன் மகளாகிய தெய்வ யானையோடு புறப்பட்டு ஐராவதத்தின்மேல் ஏறினாள்; அரம்பையர்கள் பாதுகாவலாகத் தன்னைச் சூழ ஆகாயவழியாய்த் திருப்பரங்குன்றத்தை அடைந்தாள்; தன் கணவனாகிய இந்திரனைக் கண்டு மகிழ்ந்தாள். இந்திராணியின் வரவைக்கண்ட தேவப்பெண்கள் மகிழ்ச்சி யுற்றார்கள். இந்திராணி சயந்தனைக் கண்டு, கட்டித் தழுவி அளவற்ற மகிழ்ச்சியடைந்தாள். இந்திரன் இந்திராணியைக்கண்டு பெரு மகிழ்ச்சியுற்றான்.

**ஆறுமுகக் கடவுள் திருமணத்திற்கு இணங்குதல்**

பிறகு இந்திரன் தேவர்களோடு ஆறுமுகக்கடவுளை அடைந்து, வணங்கித் துதித்து, "எம் பெருமானே! தேவரீர் அடியேனுக்குச் சுவர்க்கவுலகபாக்கியத்தைமீட்டுத் தந்தருளினீர்; தேவரீரின் பெருங்கருணைக்குச்சிறியேன் செய்யத்தக்க கைம்மாறு ஏதும் இல்லை. ஆயினும் அடியேனின் மகளாகிய **தெய்வ யானையைத்** தேவரீர் திருமணம் செய்தருளல்வேண்டும்" என்று விண்ணப்பம்செய்தான். ஆறுமுகக் கடவுள் இந்திரனை நோக்கி, "முன்னரே நம்மைத் திருமணம் செய்துகொள்ளக்கருதித் தெய்வ யானை தவம் செய்துள்ளாள். ஆதலால், நீ கருதியபடி நாளையே நாம் அவளைத் திருமணம் புரிவோம்" என்று திருவாய் மலர்ந்தருளினர். அதனைக்கேட்ட இந்திரன் அளவுகடந்த மகிழ்ச்சி அடைந்து முருகக்கடவுளின் திருவடிகளை வணங்கி, "முதல்வரே! அடியேங்கள் சிறப்புற்றேம்" என்று கூறி வாசலின் வெளியே வந்தான்.

**திருமண ஏற்பாடுகள்**

இந்திரன் தூதர்களை நோக்கி, "**முசுகுந்தச் சக்கிரவர்த்தி** முதலாகிய பூவுலக அரசர்களுக்கும், தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், மற்றையவர்களுக்கும் ஆறுமுகக் கடவுளின் திருமணம் நாளைக்கு என்று கூறி, அவர்கள் அனைவரையும் விரைவாகத் திருப்பரங்குன்றத்திற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டான். தூதுவர்கள் யாவரும் 'நன்று' என்று உடனே விரைந்து சென்றார்கள்.

இந்திரன் தேவதச்சனை அழைத்து, "ஆறுமுகக்கடவுளுடைய திருமணத்திற்கு ஏற்றவாறு அலங்காரங்கள் எல்லாவற்றையும் செய்வாய்" என்று கட்டளையிட்டான். தேவதச்சன் அதனைக்கேட்டுச் சிற்பநூல் விதிப்படி நவரத்தினங்களால் இழைத்ததோர் மண்டபம் அமைத்தான்; மண்டபத்தின் நடுவில் ஓர் அரியணையையும் அமைத்தான்; அதன்பின் திருமால் நான்முகன் முதலிய தேவர்களும் பிறரும் இருப்பதற்கு ஏற்ற ஏற்ற இடங்களையும் அமைத்தான்; பல கோபுரங்களையும், எண்ணில்லாத மண்டபங்களையும் அமைத்தான்; சோலை, வாவி, சுனை முதலியவைகளையும் உண்டாக்கினான்; திருமணத்திற்கு

வேண்டிய பிறவற்றையும் உண்டாக்கினான். பிறகு, இந்திரன் திருமணத்திற்கு வேண்டிய உபகரணங்கள் எல்லாவற்றையும் விரைவில் வரவழைத்தான்.

**முசுகுந்தச் சக்கரவர்த்தி வரலாறு**

முன்னொரு காலத்தில் திருக்கயிலாயத்தில் உள்ள சோலை ஒன்றில் சிவபெருமானும் உமாதேவியும் இனிது வீற்றிருந்தார்கள். அப்போது அங்கிருந்த வில்வமரங்களிலே முசுவின் (குரங்கின்) கூட்டங்கள் தங்கி இருந்தன. அவற்றுள் ஓர் ஆண் முசு, சிவபெருமான்மீதும் உமாதேவியார் மீதும் அளவிறந்த வில்வபத்திரங்களைப் பறித்துச் சொரிந்து கொண்டிருந்தது. அதனைக்கண்டு உமாதேவியார் சிறிது கோபங்கொண்டார். உமாதேவியாரின் சினத்தைக்கண்ட சிவபெருமான் உமையை நோக்கி, "சத்தியே! இங்கே நம்மைப் பூசிக்கும் முசுவின்பால் நீ சினம் கொள்வது என்னை? அதனைத் தவிர்ப்பாயாக" என்று கூறியருளினார். உமாதேவியார் தாம் கொண்ட சினத்தைத் தவிர்த்து, முசுவிற்கு அருள்புரிந்தார். சிவபெருமான் அம் முசுவின் அஞ்ஞானத்தைக் கெடுத்து மெய்ஞ்ஞானத்தைக் கொடுத்தருளினார். ஞானம் பெற்ற முசு, வில்வமரத்தினின்றும் விரைந்து இறங்கி வந்து உள்ளம் நடுங்கி உமாதேவியாரையும் பரமசிவனையும் அன்போடு வணங்கி, 'அடியேன் செய்த பிழையைப்பொறுத்தருளல் வேண்டும்' என்று விண்ணப்பம் செய்தது. சிவபெருமான் முசுவை நோக்கி, "நீ பிழையொன்றும் செய்யவில்லை. நாம் உவக்கும் வில்வபத்திரங்களைக் கொண்டு நம்மைப் பூசனை செய்தாய்; அதனால், நீ மனுவின் வழித்தோன்றி உலகமுழுவதையும் அரசாள்வாய்" என்று அருள்புரிந்தார். முசு இறைவனை நோக்கி, "எம்பெருமானே! தேவரீரை நாடோறும் தரிசனஞ் செய்து இருத்தலாகிய அழியாத பேரின்பச் செல்வத்தை விடுத்து, நிலவுலகில் சென்று, அழியும் இயல்பையுடைய செல்வ வலையில் அகப்பட்டால் மீட்டு நான் எங்ஙனம் உய்வேன்" என்றது. சிவபெருமான் அதனைக் கேட்டு, "முசுவே, உன் உள்ளக் கிடக்கை நன்று! நீ இப்போது பூமியையடைந்து, அரசு புரிந்து, பின்னர் நம்பால் வருக; இதன் பொருட்டு வருந்தற்க" என்று திருவாய்மலர்ந்தருளினார். உடனே முசு சிவபெருமானை

நோக்கி, "அடியேன் மானுடப் பிறப்பில் மயங்கா வண்ணம் இம் முசுவின் முகத்தோடு பிறக்கும்படி அருளல் வேண்டும்" என்று வேண்டிக் கொண்டது. சிவபெருமான் அங்ஙனமே முசுவிற்கு வரமருளினர். அம் முசுக்கலை திருக்கயிலாய மலையை நீங்கிப் பூமியை அடைந்து சத்தியநிலை தவருது அரசு புரிந்த அரிச்சந்திரனுக்கு ஒரு வழித்தோன்றலாகக் குரங்கு முகங்கொண்டு பிறந்தது. முகம் குரங்கு முகமாக இருப்பினும் மற்றைய உறுப்புக்கள் அழகிற் சிறந்து விளங்கின. அது **முசுகுந்தன்** என்னும் பெயரைப்பெற்றது. இவ்வாறு தோன்றிய முசுகுந்தன் சோழ நாட்டில் உள்ள கருவூரிலிருந்து அரசு புரிந்து வந்தான்.* ஆயினும், முசுகுந்தன் சூரபன்மனின் ஆணையை மீறமுடியாதவனுய் அவனுக்கு அஞ்சி வாழ்ந்து வந்தான். பிறகு சூரபன்மன் ஆறுமுகக் கடவுளால் அழிந்தமையைக் கேட்டுப் பழைய கவலை நீங்கி மகிழ்ச்சியுடன் தன்னரசைச் சிறப்புற நடாத்தி வந்தான்.

---

*இதனை,

மிக்க இன்னது நின்றிட முன்னம்
வெள்ளி விண்டுவில் விண்தொடு காவில்
இக்கு வேளை எரித்த நுதற்கண்
எம்பி ரான்உமை யோடும் இருப்ப
அக்க ணத்தின் முசுக்கலை ஒன்றங்(கு)
ஆதி மீதினும் ஆரியை மீதும்
தக்க வில்லுவ நல்லிலை சிந்தத்
தையல் சீறலும் ஐயன் விலக்கி.

கூவி ளத்தழை கொண்(டு)எமை இங்ஙன்
கோதில் பூசை குயிற்றிய பண்பால்
நீவ ளர்ந்திட வேலை சுலாவும்
நீள்பு விக்(கு) அரசாகுதி என்றே
மாவ ளக்கை இடத்தன் இசைப்ப
வைய கத்திடை வந்து பிறந்தே
காவ ளத்த வயற்கரு வூர்வாழ்
காமர் சேர்முசு குந்தன் இடத்தின்.

என வரும் கந்த புராணச் சுருக்கச் செய்யுட்களால் அறியலாம்.

### முருகக் கடவுளின் திருமணச் செய்தியைக் கேட்டு மகிழ்தல்

இந்திரனின் தூதுவர்கள் முசுகுந்தச் சக்கரவர்த்தியை அடைந்து வாழ்த்தி, "அரசே! நாங்கள் உனது நண்பனாகிய இந்திரனின் தூதுவர்கள்; உன் சுற்றமும் நீயும், அழியாத செல்வத்தோடு வாழ்வாயாக! ஆறுமுகக் கடவுள் சூரபன்மனைக் கொன்று தம் துணைவர் முதலாயினாரோடு திருப்பரங் குன்றத்தில் வந்து வீற்றிருக்கின்றார். அக்கடவுளுக்கு இந்திரன் தன் மகளாகிய தெய்வயானையை நாளைக்குத் திருமணஞ் செய்து கொடுக்கிறான்; அச்செய்தியை உனக்குச் சொல்லும்படி இந்திரன் எங்களை அனுப்பினான். அத்திருமணத்தைத் தரிசிக்கச் சேனைகளோடு புறப்பட்டுத் திருப்பரங் குன்றத்திற்கு வருவாயாக" என்று கூறினார்கள். முசுகுந்தச் சக்கரவர்த்தி அதனைக் கேட்டு அளவற்ற மகிழ்ச்சியுற்றான்; தூதுவர்களைப் பலவாறு புகழ்ந்தான்; மகிழ்ச்சிப் பெருக்கால் தூதுவர்களைத் தழுவி, "இந்த நற்செய்தியை வந்து கூறிய உங்களுக்கு நான் செய்யத்தக்க உபகாரம் ஒன்றுமில்லை. இங்குள்ள என் நிதிகள் யாவற்றையும் தரவா? என் விருதுகளைக் கொடுக்கட்டுமா? என் அரசியலையே அளிக்கட்டுமா? நீங்கள் விரும்பியது யாது? சொல்லுங்கள்; கொடுக்கின்றேன்" என்று கூறினான். தூதுவர்கள், "நீர் மிக விரைந்து நம்மரசனாகிய இந்திரனிடத்துச் செல்வதே நீர் கூறிய அவற்றையெல்லாம் எங்களுக்குக் கொடுத்ததற்கு ஒப்பாகும்" என்று கூறி, விடைபெற்று அவ்விடத்தைவிட்டுச் சென்றார்கள். பிறகு அவர்கள் மற்றைய பூவுலக அரசர்களுக்கும், முனிவர்களுக்கும், திக்குப்பாலகர்களுக்கும், கதிரவன் முதலியோருக்கும் திருமணச் செய்தியை அறிவித்துச் சென்றார்கள்.

### முசுகுந்தன் முதலியோர் திருமணத்திற்குப் புறப்பாடு

முசுகுந்தச் சக்கரவர்த்தி, தூதுவர்கள் சென்ற பிறகு தனது நகர மக்களும் பிறரும் ஆறுமுகக் கடவுளின் திருமணத்தைத் தரிசிக்கச் செல்லுமாறு யானையின் மீது முரசறையும்படி கட்டளையிட்டான். அவ்வாறே வள்ளுவன் யானைமீதேறி நகர மக்கள் முதலியோர்க்கு முரசறைந்து திருமணச் செய்தியைக் கூறினான். உடனே நகர மக்கள் திருமணத்திற்குப் புறப்பட்டார்கள். அரசனுடைய நால்வகைச் சேனைகளும் புறப்பட்டன.

படைத் தலைவர்களும், வீரர்களும் புறப்பட்டார்கள். முருகக் கடவுளின் திருமணத்தைத் தரிசிக்க வேண்டுமென்ற விருப்பத்தினால் பல பெண்கள் பூமியில் நடந்து சென்றார்கள். பல பெண்களும் ஆடவர்களும் யானையின்மேல் ஏறிச் சென்றார்கள். பலர் பெண்களோடு தேர்களில் ஏறிச் சென்றார்கள். திருமணத்திற்குச் செல்கின்றவர்களுள் கை கால் முதலிய உறுப்புக்கள் இல்லாதவர்கள் அவற்றைப் பெற்றார்கள்; ஊமையர்கள் பேசும் ஆற்றலைப் பெற்றார்கள்; குருடர்கள் கண் பார்வை பெற்றார்கள்; வலிமையில்லாதவர்கள் வலிமையைப் பெற்றார்கள். பலர் கொக்கரை, படகம், பேரி, குடமுழா முதலிய வாத்தியங்களை முழக்கிச் சென்றார்கள். ஆகாய வழியே சென்ற தேவர்களும், முனிவர்களும் முசுகுந்தச் சக்கரவர்த்தியின்மேல் பூமாரி பொழிந்தனர். இங்ஙனம் முசுகுந்தச் சக்கரவர்த்தி, தன் சுற்றத்தாரும் அமைச்சரும் முன்னும் பின்னும் இருமருங்கும் வர, ஒரு தேரின்மேல் ஏறி முல்லை, மருதம், குறிஞ்சி, முதலிய நிலங்களையும் பற்பல ஆறுகளையும் கடந்து உச்சிப் பொழுதில் திருப்பரங்குன்றத்தை அடைந்தான். அப்போது மற்றைப் பூவுலக அரசர்கள் யாவரும் தங்கள் தங்கள் சேனைகளோடு அங்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு வந்து சேர்ந்த அரசர்கள் தம்முடைய படைகளையும் மக்களையும் திருப்பரங்குன்றத்தைச் சூழ நிறுத்தினார்கள். ஆடவர்களும் பெண்களும் அங்குள்ள சோலையில் படங்கு வீடுகளில் தங்கினார்கள். அச்சோலையில் முசுகுந்தச் சக்கரவர்த்திக்கும் ஒரு படங்கு வீடு அமைக்கப்பட்டிருந்தது. அங்கு வணிகர்கள், நவரத்தினங்களையும் ஆடையாபரணங்களையும் கொண்டுவந்து குவித்து வியாபாரஞ் செய்தனர். மக்கள் அனைவரும் பற்பல மகிழ்ச்சியில் திளைத்து மிகுந்த ஆடல் பாடலில் ஈடுபட்டனர்.

முசுகுந்தச் சக்கரவர்த்தி முதலிய அரசர்கள் தேரினின்றும் இறங்கித் திருப்பரங் குன்றில் ஏறி, நகரத்தின் சிறப்பைக் கண்டு மகிழ்ந்தார்கள்; பிறகு திருமணச்சாலையை அடைந்து, இந்திரனை வணங்கினார்கள். இந்திரன் அவர்கள் நலன்களை வினவிப் பற்பல உபசாரங்கள் செய்தான். கதிரவன் முதலிய கோள்களும், திக்குப் பாலகர்களும், முனிவர்களும், தேவர்களும், பாதலவாசிகளும், பிறரும் இந்திரனைக் கண்டு தொழுதனர். வரையர

மகளிர்களும், தேவ மகளிரும், நீரர மகளிர்களும், முனி பத்தினி களும், நாக கன்னிகளும் இந்திராணியை வந்தடைந்து வணங்கி னார்கள். பிறகு அவர்கள் தெய்வயானையம்மையை அடைந்து, "தெய்வயானையே! நீ ஆறுமுகக் கடவுளின் மனைவியாகின்றாய்; ஆதலினால் எவ்வுலகிற்கும் இறைவியாவாய்" என்று அன்புடன் தனித்தனிப் போற்றித் துதித்து வணங்கினார்கள்.

### தெய்வயானையம்மையை மணவழகு படுத்துதல்

தெய்வப் பெண்கள் தெய்வயானை அம்மைக்குச் செயற்கை அழகு செய்ய எண்ணினார்கள். தெய்வயானை அம்மையின் தலைக்கு நறுநெய் தடவி நீராட்டினார்கள்; பச்சைக் கற்பூரம் தடவிப் பன்னீர் தெளித்தார்கள்; கூந்தலுக்கு அகிற் புகை ஊட்டினார்கள்; எதிர்முக மஞ்ஞை, வலம்புரி, மகரப்பகுவாய் என்னும் தலைக் கோலங்களைச் சாத்தினார்கள்; கோங்கம், வெட்சி முதலிய மலர் வகைகளைச் செருகினார்கள்; தெரியல், தொடை யல் முதலிய மாலைகளைச் சூட்டினார்கள்; கருஞ் சாந்துப் பொட்டிட்டு, அதனைச் சேரச் சுட்டியையும் காதிலே புலிமுகப் பணியையும், கழுத்திலே முத்துமாலையையும், கைகளிலே வளையல்களையும், தோள்களிலே தொடிகளையும் புனைந்தார்கள்; கால்களிலே பாடகம், சிலம்பு, பாதசாலம் என்னும் அணிகளைத் தரித்தார்கள். இங்ஙனம் பலவாறு அணிகலங்களைப் புனைந்து அழகுசெய்து தெய்வயானையை வணங்கித் துதித்தார்கள்.

### முருகக் கடவுள் திருமணச் சாலைக்கு எழுந்தருளல்

இந்திரன் நான்முகனை நோக்கி, "திருமணச் சாலை அமைக் கப்பட்டது. திருமணத்திற்கு வரவேண்டிய எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். முருகக் கடவுளுக்குத் திருமணஞ் செய்யத்தக்க நற்பொழுதை ஆராய்ந்து சொல்லும்" என்றான். நான்முகன் அதனைக் கேட்டு, "ஆறுமுகக் கடவுள் திருமணம் செய்தற்கு எந்த நேரமும் நல்ல நேரந்தான். ஆயினும் இந்த நேரம் மிகவும் சிறந்த நேரமாகும்" என்று கூறினான். உடனே இந்திரன், நான்முகன் திருமால் முதலாயினோருடன் ஆறுமுகக் கடவுளை அழைத்துவரப் புறப்பட்டான். முனிவர்களும், தேவர்களும் முன் சென்றார்கள். இந்திரன் முதலிய யாவரும் ஆறுமுகக்

கடவுளின் திருக்கோயிலை அடைந்து, வணங்கித் துதித்து, "எம்பெருமானே! தெய்வயானையைத் திருமணம் செய்யத் தேவரீர் திருமணச் சாலைக்கு எழுந்தருளி வருதல் வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள். முருகக் கடவுள் அதனைக் கேட்டு, "அவ்வாறே ஆகுக" என்று அருள் புரிந்து, வீரவாகு தேவர் முதலியோரும் பூதப்படைத் தலைவர்களும் போற்ற அரியணையினின்றும் விரைந்தெழுந்து திருமுன் நின்ற மயில் வாகனத்தின் மீது ஏறினர். நான்முகன் முதலிய தேவர்கள் வணங்கித் துதித்துப் பூமழை பொழிந்து மருங்கிலே சென்றார்கள். கதிரவனும், சந்திரனும் வெண்கொற்றக் குடைகளைப் பிடித்தார்கள். வாயு சாமரம் வீசினன். வருணன் ஆலவட்டங்களை அசைத்தான். இயமன் வாட்படை ஏந்தினன். கோழிக் கொடி அண்டங்கள் குலுங்கக் கிளர்ந்து ஆர்த்தது. வேதங்கள் ஒலித்தன. அரம்பையர்கள், முனிவர்கள், பூதர்கள், பஞ்ச பூதங்கள், பூவுலகவரசர்கள் முதலியோர் ஆர்த்தார்கள். திண்டி, பேரிகை, தண்ணுமை, சல்லரி, திமிலை, குடமுழா, காளம், சங்கம் முதலிய இசைக் கருவிகளைப் பூதர்கள் அண்டங்கள் வெடிக்கும்படி முழக்கினார்கள். மேனகை, ஊர்வசி, அரம்பை, திலோத்தமை முதலியோர் பாடியாடினர். வித்தியாதரர் முதலாயினோர் இன்னிசை பாடினார்கள். இங்ஙனம் முருகக் கடவுள் பொன்மயமாகிய வீதியின் வழியாய்த் திருமணச் சாலையின் முன் வந்தருளினர். முனிவர்கள் திரண்டு முன்வந்து முருகக் கடவுளைத் துதித்து எதிர்கொண்டழைத்தார்கள். அரம்பையர்களும் முனிபத்தினிகளும் மங்கலப் பொருள்களை ஏந்தி முருகக் கடவுளின் எதிரே வந்து வணங்கினார்கள். தேவ மங்கையர் ஆலத்தி சுற்றினர். முருகக் கடவுள் மயில் வாகனத்தைவிட்டு இறங்கித் திருமணச் சாலை வாயிலை அடைந்தார். இந்திராணி அரம்பையர்களோடு எதிரே வந்து வணங்கிக் காமதேனுவின் பாலினால் முருகக்கடவுளின் திருவடிகளுக்கு அபிஷேகஞ் செய்து மாலைகளையும் மலர்களைச் சூட்டி, ஆலத்தியெடுத்து மும்முறை சுற்றிவணங்கித் துதித்து மற்றைப் பெண்களோடு தன் கோயிலை அடைந்தாள். முருகக் கடவுள் அதனைக் கண்டு அருள் செய்து, திருமால் பிரமன் முதலாயினோர் உடன்வரத் திருமணச் சாலையை அடைந்து தமக்கு அமைக்கப்பெற்ற திவ்விய சிங்காதனத்தின்

மீது வீற்றிருந்தருளினர். திருமால், நான்முகன், முனிவர்கள், தேவர்கள், வீரவாகு முதலிய வீரர்கள் முதலியோர் அவரவர் களுக்குரிய இடங்களில் அமர்ந்தார்கள். முசுகுந்தச் சக்கரவர்த்தி முதலிய பூவுலக மன்னர்கள் வந்து குமாரக் கடவுளை வணங்கினர் கள். குமாரக் கடவுள் அவர்கள் யாவர்க்கும் அருள் புரிந்தார்.

**உமாதேவியோடு சிவபெருமான் திருமணத்திற்கு எழுந்தருளல்**

அப்போது சிவபெருமான் பூதசேனைகள் சூழ உமாதேவியா ரோடு ஆகாயத்தில் எழுந்தருளினர். முருகக் கடவுள் தம்மு டைய தாய் தந்தையர் எழுந்தருளியதைத் தரிசித்து மிக மகிழ்ந்து தம் இருக்கைவிட்டு எழுந்தார். திருமால் முதலிய தேவர்களும், முனிவர்களும் எம்பெருமானைக் கண்டு கூப்பிய கரங்களோடு எழுந்தார்கள். சிவபெருமான் உமாதேவியாரோடு திருமணச் சாலையை வந்தடைந்தார். முருகக் கடவுள் அன்போடு தாய் தந்தையரின் திருவடிகளை வணங்கினர். சிவபெருமானும் உமாதேவியாரும் தம் திருக்கரங்களால் ஆறுமுகக் கடவுளை எடுத்து மார்போடு தனித்தனியே தழுவி உச்சிமோந்தார்கள். திருமாலும், நான்முகனும், இந்திரனும், மற்றைத் தேவர்களும் சிவபெருமான் உமாதேவியார் ஆகிய இருவருடைய திருவடிகளை யும் வணங்கித் துதித்தார்கள். ஆறுமுகக் கடவுள் இறைவனை யும் இறைவியையும் திருக்கலியாண மண்டபத்துள் அழைத்துக் கொண்டு சென்றார். அப்போது திருவருளினல் விண்ணிலிருந்து ஒரு திவ்விய சிங்காதனம் வந்து இறங்கியது. அதன்மீதுசிவபெரு மான் உமாதேவியாரோடு வீற்றிருந்தருளினர். முருகக் கடவுளைத் தம் மடிமீது இருத்தித் தண்ணளியைப் புரிந்தனர். அப் போது நான்முகன் சிவபெருமானை நோக்கி, "எம்பெருமானே! அன்று அவுணர்களை அழிக்க ஆறுமுகக் கடவுளை விடுத்தருளினீர்; அவர் அவுணர்களை அழித்துத் தேவர்களைச் சிறையிலிருந்து மீட் டருளினர்; இந்த நன்றிக்கு ஏற்ற கைம்மாறு ஒன்றுமே செய்வ தற்கில்லை; ஆயினும் இந்திரன் அன்பு காரணமாகத் தன் மகளைத் திருமணஞ் செய்து கொடுக்க எண்ணினன்; தேவரீர் அம்மையா ரோடு இச்சமயத்தில் எழுந்தருளி வந்ததால் எங்கள் செயல் சிறப்புற்றது" என்று விண்ணப்பஞ் செய்தான். சிவபெரு மான் மகிழ்ச்சியடைந்து, "நாமும் திருமணத்தைக் காணும்படி

உமையோடு இங்கு வந்தோம். இனித் திருமணச் சடங்குகளைச் செய்வீராக'' என்று அருளிச் செய்தார்.

**தெய்வயானையம்மையாரின் திருமணம்**

நான்முகன் திருமால் இருவரும் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்டு மகிழ்ந்தார்கள்; இந்திரனை நோக்கி, ''முருகக் கடவுளுக்கு வேதவிதிப்படி திருமணஞ் செய்ய உன் மகளாகிய தெய்வயானையை இங்கே அழைத்து வருக'' என்றார்கள். இந்திரன் அந்தப்புரத்தை அடைந்து தெய்வயானையைச் சிறப்புடன் திருமணத்திற்கு வரும்படி அழைத்தான். தெய்வயானையம்மையார் எழுந்து, தம் கால்களிலுள்ள சிலம்புகள் அரற்ற,இடைவருந்த, மேகலை இரங்க, இலக்குமியும் சரசுவதியும் துதிக்க நடந்து வந்தருளினர். இந்திரன் திருக்கலியாண மண்டபத்தின் முன் தெய்வயானையம்மையை அழைத்து வந்தான். தெய்வயானையைக் கண்ட முனிவர்கள்,''தாயே! வாழ்க'' என்று துதித்தார்கள். தெய்வயானையம்மையார் உமாதேவியாரையும் பரமசிவனையும் வணங்கினர்; முருகக் கடவுளைக் கண்டு நாணமுற்றார். சகல உயிர்களுக்கும் தாயாகிய உமாதேவியார் முருகக்கடவுளையும் தெய்வயானையம்மையாரையும் அங்குள்ள இரத்தினச் சிங்காதனத்தின்மீது அமரச் செய்தார். திருமணக் கோலத்தில் தெய்வயானையம்மையாரோடு ஆறுமுகக்கடவுள் வீற்றிருத்தலைக் கண்டு பார்வதியும் பரமசிவனும் திருவருள்புரிந்தனர். திருமணக் கோலத்தைக் கண்ட இந்திரன், கைகளைச் சிரசின்மேல் தூக்கி வணங்கினன். இந்திராணி திருமஞ்சனம் மலர் முதலியவைகளை ஏந்திவந்து நாணத்தோடு திருமஞ்சனத்தைவிட, இந்திரன் ஆறுமுகக் கடவுளின் திருவடிகளை விளக்கி, மலர்களைச் சூட்டித் தூபதீபங்களைப் பணிமாறிப் பூசனைசெய்தான். பிறகு ஆறுமுகக் கடவுளின் திருக்கரத்தில் தெய்வயானையம்மையாரின் திருக்கரத்தைவைத்து,''அடியேன் இவளைத் தேவரீருக்குத் திருமணஞ் செய்து தந்தேன்'' என்று வேத மந்திரங் கூறி, நீரை விடுத்துத் தத்தம் செய்தான். ஆறுமுகக் கடவுள், தம் திருக்கரத்தில் அதனை ஏற்றருளினர். நான்முகன் ஒரு திருமாங்கிலிய சூத்திரத்தை மனத்தினல் படைத்துத் தந்தான். அதனை முருகப் பெருமான் தன் திருக்கரத்தால் வாங்கித் தெய்வயானையம்மை

யாரின் திருக்கழுத்தில் தரித்தார்; அம்மையாரின் தலையில் ஒரு மலர் மாலையுஞ் சூட்டினார். இந்திரன் முக்கனி, கரும்பு, தேன், காமதேனுவின் பால் ஆகிய இவற்றை முருகக் கடவுளுக்கு நிவேதித்தான். மத்தளம், தக்கை, சங்கம், பேரிகை முதலிய இசைக் கருவிகள் முழங்கின. இலக்கத்தொன்பது வீரர்களும் பூதப்படைத் தலைவர்களும் ஆரவாரஞ் செய்து மகிழ்ந்தார்கள். திருமாலும், நான்முகனும், திக்குப்பாலகர்களும், இந்திரனும், பிறரும் திருமணக் கோலத்தில் எழுந்தருளியிருந்த ஆறுமுகக் கடவுளையும், தெய்வயானை அம்மையாரையும் தெரிசித்தார்கள். நான்முகன் தீயை வளர்த்து ஆறுமுகக் கடவுளைக் கொண்டு திருமணச் சடங்குகளைச் செய்து முடித்தான். ஆறுமுகக் கடவுள் தெய்வயானை அம்மையாரோடு சிவாக்கினியை வலம் வந்தார்; தெய்வயானை அம்மையின் பாதத்தை அம்மியில் தூக்கிவைத்து அருந்ததி தரிசனம் செய்தார். இவ்வாறு திருமணச் சடங்கு முடிந்தபின் சுப்பிரமணியக் கடவுளும் தெய்வயானை அம்மையாரும் உமாதேவியாரையும் சிவபெருமானையும் வலம்வந்து வணங்கினார்கள். அவர்கள் இருவரும் தம் மகனையும் மருமகளையும் அன்போடு எடுத்து அணைத்துத் தம் அருகே அமரச்செய்து மகிழ்ச்சி மிகுந்து, "உங்களுக்கு எங்களுடைய முதன்மையைக் கொடுத்தோம்" என்று கூறியருளினார்கள். அதனைக் கண்ட நான்முகன் முதலிய தேவர்களும், முனிவர்களும், அரம்பையர்களும் தெய்வயானை சமேதராய் எழுந்தருளிய ஆறுமுகக் கடவுளை வணங்கினார்கள். சிவபெருமானும் உமாதேவியாரும் அனைவருக்கும் அருள் புரிந்து மறைந்தருளினார்கள்.

**திருமண நிறைவு**

பிறகு ஆறுமுகக் கடவுள் சிங்காதனத்தினின்றும் இறங்கி அனைவரும் அஞ்சலி செய்து உடன் வரவும், மங்கல வாத்தியங்கள் ஒலிக்கவும் தெய்வயானை அம்மையாரோடு தம் திருக்கோயிலில் புகுந்தார்; இந்திரனுக்கும் திருமால் முதலிய தேவர்களுக்கும் விடை கொடுத்து அனுப்பினார்; தமது பரிசனங்களை நோக்கிக் கோயில் வாயிலைக் காவல் புரியும்படி கட்டளையிட்டார்; உலகிலுள்ள சகல உயிர்களும் உய்யும்படி செம்பொன் மஞ்சத்தின்

மேல் விரித்த அமளியின் மீது தெய்வயானை அம்மையாரோடு கலந்திருந்தருளினுர். இந்திரன், திருமணத்திற்கு வந்திருந்த முசுகுந்தச் சக்கரவர்த்தி முதலிய அரசர்களுக்கும், மற்றவர்களுக்கும், பல்வேறு உணவு வகைகளையும், ஆடையாபரணங்களையும் வழங்கி உபசரித்தான். யாவரும் திருப்பரங்குன்றத்தை விடுத்துத் தத்தம் ஊர்களை அடைந்தார்கள். இந்திரன் இந்திராணியோடு துன்பம் நீங்கி இன்பமனுவித்துக் கொண்டு திருப்பரங்குன்றத்தில் இருந்தான். இவ்வாறு சில நாட்கள் கழிந்தன.

திருவிருத்தம்–268
ஆகத் திருவிருத்தம்–303

——oo——

## 3. விண்குடியேற்று படலம்

**ஆறுமுகக் கடவுள் அமராவதியை அடைதல்**

ஆறுமுகக் கடவுள் திருப்பரங்குன்றத்தில் தெய்வயானை அம்மையாரைத் திருமணஞ்செய்து அங்கே அவரோடு சிலநாள் வீற்றிருந்தருளினுர். பிறகு முருகக் கடவுள், இந்திரன் முதலிய தேவர்களை விண்ணுலகத்தில் குடியேற்றுவதற்குத் திருவுளங்கொண்டு, தெய்வயானை அம்மையாரோடு தம் திருக்கோயிலை நீங்கி வெளியே வந்தருளினுர். வீரவாகு முதலிய வீரர்களும் பூதர்களும் அவர் வரவைக்கண்டு ஆரவாரஞ் செய்தனர். திருமால் நான்முகன் இந்திரன் முதலிய தேவர்களும், முனிவர்களும் அவ்வாரவாரத்தைக் கேட்டு முருகக் கடவுளை அடைந்து, வணங்கிச் சூழ்ந்தார்கள். முருகக் கடவுள் தம் தேரைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டார். வாயுதேவன் **மனோவேகம்** என்னும் தேரைக் கொண்டுவந்து நிறுத்தினுன். ஆறுமுகக் கடவுள் தெய்வயானை அம்மையாரோடு அதன்மீது ஏறி அருளினுர். தேவர்கள் மலர்மழை பொழிந்தார்கள். பூதவீரர்களும், படைத்தலைவர்களும், பராசர முனிவரின் புத்திரர்களும் உடன் புறப்பட்டார்கள். முருகக் கடவுள் நான்முகன் முதலிய தேவர்களைப் பார்த்து, "நீங்கள் யாவரும் உங்களுங்கள் வாகனங்களில் ஏறி எம்மோடு விண்ணுலகத்திற்கு வருவீர்களாக" என்று அருளிச் செய்தார். நான்முகன், திருமால், இந்திரன், மற்றைத் தேவர்

கள், முனிவர்கள் முதலாயினோர் ஆறுமுகக் கடவுளோடு தோத்திரம் செய்துகொண்டு புறப்பட்டார்கள். இரண்டாயிரம் பூத வெள்ளங்களும் விரைந்து புறப்பட்டன. பூதர்களில் பலர் குட முழா, முரசு, சங்கு, மிருதங்கம், படகம் முதலிய இசைக் கருவிகளை முழங்கிக்கொண்டு புறப்பட்டனர். இங்ஙனம் ஆறுமுகக் கடவுள் ஆகாயவழியாக அமராவதியை அடைந்தார்.

**விண்ணுலகைப் புதுப்பித்தல்**

பானுகோபனால் எரிக்கப்பட்ட விண்ணுலகை ஆறுமுகக் கடவுள் புதுப்பிக்கத் திருவுளம் கொண்டார்; தேவதச்சனை நோக்கி, "விண்ணுலகத்தைப் பழைய வளங்களோடு விரைந்து மீண்டும் அமைப்பாயாக" என்று கட்டளையிட்டருளினார். உடனே தேவதச்சன் விண்ணுலத்தைச் சூழ மதிலையும், நான்கு வாயில்களையும், எழுநிலை மாடங்களையும், கோபுரங்களையும், எண்ணில்லாத வீதிகளையும், நடுவில் ஒரு கோயிலையும், செய்குன்றுகளையும், அளவற்ற நீர்நிலைகளையும் அமைத்தான்; மாளிகைகளையும், மண்டபங்களையும், சிங்காதனங்களையும் உண்டாக்கினான்; இந்திரனுக்கும், நான்முகனுக்கும், திருமாலுக்கும் தனித்தனியே கோவில்களையும் அமைத்தான்; ஆறுமுகக் கடவுள் எழுந்தருளுவதற்கு ஏற்றதோர் திருக்கோயிலையும் உண்டாக்கினான்; இவ்வாறு அழிந்த விண்ணுலகை மீட்டும் கண்டோர் கண்கவரத் தக்கவாறு சிறப்புடன் விளங்கும்படி உண்டாக்கினான்.

**முடிசூட்டு விழா**

தேவதச்சன் திறமையுடன் அமைத்த வளங்களையெல்லாம் நான்முகனும், திருமாலும் கண்டு "உனது சிறந்த தொழிலுக்கு நிகரில்லை" என்று புகழ்ந்தார்கள். இந்திரன், நகரத்தின் அழகை வியந்து தேவதச்சனை மகிழ்ச்சிப் பெருக்கால் கட்டித் தழுவினான். தேவதச்சன் அமராவதியை அழகுபெற உண்டாக்கி, ஆறுமுகக் கடவுளின் திருவடிகளை வணங்கி நின்றான். ஆறுமுகக் கடவுள் தேவதச்சனுக்கு அருள் புரிந்து தம் கணங்களோடு நகரத்தினுள் சென்றார்.

அப்போது இந்திராணி அரம்பையர்கள் சூழ ஒரு விமானத்தில் வந்து இந்திரன் கோயிலை அடைந்தாள். ஆறுமுகக் கடவுள்

தெய்வயானை அம்மையாரோடு தேரினின்றும் இறங்கித் தம் கோயிலை அடைந்து சிங்காதனத்தில் வீற்றிருந்தருளினார். நான் முகன் முதலிய தேவர்களை நோக்கி, "இந்திரனுக்கு அமரா வதியை அரசு செய்யும் வண்ணம் விரைவில் முடிசூட்டுக" என்று கட்டளையிட்டார். உடனே தேவர்கள் சாமரம், குடை, வாள், கிரீடம் முதலிய அரச அங்கங்களையும், மற்றையவற்றையும் கொண்டுவரச் செய்தனர்; இந்திரனைக் கங்கை நீரினால் அபிஷேகஞ் செய்தனர்; ஆடையாபரணங்களால் அலங்கரித்துச் சிங்காதனத்தில் அமரச் செய்து வரிசையோடு அவனுக்கு முடி சூட்டினார்கள். தேவர்கள் யாவரும் இந்திரனை வணங்கினார்கள். முனிவர்கள் யாவரும் அவனுக்கு ஆசிகூறினார்கள். அரம்பையர் கள் ஆடல் புரிந்தனர். இந்திரன் ஆறுமுகப் பெருமானின் சந்நி தியை அடைந்து அவரை வணங்கித் துதித்து, "எம்பெருமானே! அடியேன் இழந்த அரசுரிமையையும், சுவர்க்கபோகத்தையும், செல்வங்களையும் ஒருங்கே மீட்டுத் தந்தருளினீர். அடியேன் உய்ந்தேன். இதனைவிட அடையக் கூடிய பெரும்பேறு உண் டோ!" என்று விண்ணப்பஞ் செய்தான். ஆறுமுகக் கடவுள் இந்திரனுக்கு அருள் புரிந்து, "இந்திரனே! இந்நகரத்தை இனிது அரசு புரிந்து எல்லா நலங்களுடன் வாழ்வாயாக" என்று ஆசி கூறியருளினார்; மற்றைத் தேவர்கள் முதலியவர்களை அவ ரவர் இடங்களுக்குச் செல்லும்படி பணித்தார்; பிறகு தெய்வ யானை அம்மையாரோடு திருக்கோயிலுள் புகுந்தார்; பூதர் களும் மற்றை வீரர்களும் கோயிலின் திருவாயிலைக் காவல் செய்யத் தெய்வயானை அம்மையாரோடு திருவிளையாடல் செய்து கொண்டு அங்கே வீற்றிருந்தருளினார். திருமால் பிரமன் முதலிய தேவர்கள் தத்தம் இடங்களை அடைந்தார்கள். இந்திரன் விண்ணுலகத்தை அரசாண்டு இந்திராணியோடு இன்பமனுபவித்துக் கொண்டிருந்தான். தேவர்கள் யாவரும் இந்திர பாக்கியத்தோடு மற்றைப் பாக்கியங்களையும் ஒருங்கே பெற்றதைப் போன்று மகிழ்ந்து, தத்தம் இருக்கைகளை அடைந்து விழாக் கொண்டாடி இருந்தார்கள்.

திருவிருத்தம்–46

ஆகத் திருவிருத்தம்–349

——oo——

## 4. கந்த வெற்புறு படலம்

**ஆறுமுகக் கடவுள் கந்தவெற்புக்கு எழுந்தருளல்**

முருகக் கடவுள் விண்ணுலகில் சிலநாள் தங்கி இருந்த பிறகு, தெய்வயானை அம்மையாரோடு அங்கிருந்து கந்தவெற்புக்குப் புறப்பட்டார். அதனை அறிந்த நான்முகன் முதலிய தேவர்கள் அங்கே வந்தார்கள். ஆறுமுகக் கடவுள் அவர்களை யெல்லாம் தத்தம் இருப்பிடங்களுக்குப் போகும்படி கட்டளை யிட்டருளினார்; இந்திரனை நோக்கி விண்ணுலகை அரசுபுரிந்து வருமாறு கூறியருளினார்; தெய்வயானை அம்மையாரோடு தேரில் ஏறினார். வீரவாகு தேவர் அத்தேரைச் செலுத்த, இலக்கத் தெண்மரும் பூதர்களும் சூழ, ஆறுமுகக் கடவுள் திருக்கயிலாய மலையை அடைந்தார்; சிவபெருமானையும், உமாதேவியாரையும் வணங்கி அவர்களின் திருவருளையும் விடையையும் பெற்றுக் கொண்டு **கந்த மலையை** அடைந்து, வீரவாகு முதலிய வீரர்கள் பணிகளைச் செய்து நிற்கவும், படைத்தலைவர்களும் பூதர்களும் துதித்துக் கொண்டு நிற்கவும், தெய்வயானை அம்மையாரோடு இரத்தின சிங்காதனத்தின்மீது வீற்றிருந்தருளினார்.

திருவிருத்தம்–6
ஆகத் திருவிருத்தம்-355

——oo——

## 5. இந்திரபுரிப் படலம்

**இந்திரன் தவத்தில் நாட்டங் கொள்ளுதல்**

ஆறுமுகக்கடவுளின் திருவருளால் விண்ணுலகைத் திரும்பப் பெற்று அரசு புரிந்து கொண்டிருந்த இந்திரன் ஒரு நாள் முன்னர்த் தான் அடைந்த துன்பங்கள் பலவற்றை எண்ணினான். சூரபன்மனுக்குப் பயந்து குற்றேவல் புரிந்ததும், ஒளிந்து திரிந்ததும், பிற துன்பங்களும் அவன் மனக்கண்முன் தோன்றின; உடனே இந்திராணியோடு வாழும் இன்ப வாழ்க்கையையும் அரசாட்சிச் செல்வத்தையும் வெறுத்துத் தவஞ்செய்து வீடு பேற்றையடைய விரும்பினான். இந்திரனின் எண்ணத்தைத்

தேவ குருவாகிய பிரகஸ்பதி அறிந்தார்; அதனைமாற்ற ஒரு சூழ்ச்சியை எண்ணினர்; உடனே இந்திரனை அடைந்தார். இந்திரன் தேவ குருவை வரவேற்று உபசரித்தான்.

**இந்திரனின் எண்ணத்தைத் தேவகுரு மாற்றுதல்**

பிரகஸ்பதி இந்திரனைப் பார்த்து, "ஓ அரசனே! நீ சூரபன்மனால் அடைந்த துன்பத்தை நினைத்து உன் இல்வாழ்க்கையையும், விண்ணுலக அரசாட்சியையும் வெறுக்கின்றாய். இவற்றை வெறுத்து, ஐம்பொறிகளை அடக்கிச் செய்யும் தவத்தால் நீ அடையக்கூடிய பயன் யாதோ? மிகவும் துன்பமடைந்தவர்களுக்கே பெருஞ்செல்வமும், பெருவாழ்வும் கிட்டும். இஃது உனக்குமட்டும் அன்று; இம் மூவுலகங்களிலும் வழங்கும் இயற்கையாம். பெரும் தவம் செய்த முனிவர்களிலும், தேவர்களிலும், பாதல வாசிகளிலும், மும்மூர்த்திகளிலும், யாவர்தாம் பெண்களின் போகத்தை விட்டிருந்தவர்? கழிந்து போன துன்பத்திற்குப் பயந்து, கிடைத்த இப்பெரு வளங்களை இழந்து, தவம் செய்வதால் உண்டாகும் துன்பத்திற்கு எல்லை இல்லை. சிறிய கானலுக்குப் பயந்து, கடலில் போய் விழலாமா? உடல் வருந்த ஐம்புலன்களை அடக்கி, காமம் முதலிய முக்குறும்புகளையும் நீக்கி, யோகாப்பியாசம் செய்யும் பெரியோர்கள் அடையும் பயனைச் சொன்னால் அதுவும் போகமேயன்றி வேறொன்றில்லை. ஐம்புலன் ஒடுங்கி, உடல் அழிந்து, மனம் முதலியன அற்ற இடத்தில் பேரின்பம் உண்டு என்பர் சிலர். அதனை அறிந்தவர் யார்? உலகிலுள்ள அறிஞர்கள் அனைவரும் இவ்வுலகிற் கண்டதே மெய் என்பர். பொய்யாகிய கானல் நீரை மெய் என்று விரும்பிக் கைநிறையக் கொண்ட நன்னீரை நிலப்பிளப்பினுள் சொரிந்தாற் போல, அறியார் சிலர் உள்ளது போலக் கூறுகின்ற வீடுபேற்றை மெய் என்று எண்ணி, நீ இம்மைப் பயனை இழக்கின்றாய். இந்த உன் எண்ணம் நன்று! நன்று!! பெண்களோடு கூடி நுகரும் இன்பமே இன்பம்! அவர்களோடு கூடி வாழும் வாழ்வே பெருவாழ்வு! அவர்களையடைதலே பெருஞ்செல்வம்! அவர்களைத் தழுவாமையே வறுமை! பெண்களிடத்துப் பெறும் இன்பத்தைச் சிலர் சிற்றின்பம் என்று கூறுவர். உண்மையில் அதுவே பேரின்ப

மாகும். நீ அதனைப்பற்றி அறிய விரும்பினால் கூறுகிறேன்" என்றார். அவற்றைக் கேட்ட இந்திரன் நகைத்து மனமுடைந்து காமம் மிகுந்த மனத்தனாய்ப் பிரகஸ்பதியை நோக்கி, "பரமாசாரியரே! நீர் இதுகாறும் பெண்களின் மேன்மையையும், காம இன்பத்தையும் பற்றி உபதேசியாமலிருந்ததேன்?" என்றான். தேவகுரு அதனைக் கேட்டு, "இந்திரனே! மதன நூலைக் கற்கவேண்டும் என்னும் பக்குவம் அடையாதவர்களுக்குப் பெண்களின் மேன்மையை அறிஞர்கள் எடுத்துக் கூறமாட்டார்கள். ஆதலினால், நான் இதுகாறும் அதனை உனக்கு உபதேசிக்கவில்லை. நான் காமநூலை நுட்ப அறிவால் கற்றுள்ளேன். அவற்றைப்பற்றிக் கூறுகிறேன் கேட்பாயாக: "சமயங்கள் எல்லையற்றன என்றும், ஆயிரத்தெட்டு என்றும், பின்னும் வேறு உள்ளன என்றும், அவற்றுள் மெய்ச்சமயம் ஆறு என்றும் அறிவுடையோர் கூறினர். அவற்றுள் தேவாமிருதம் போல மிகவும் இன்பத்தைத் தருவதும் இம்மையில் வீடுபேற்றைத் தரத்தக்கதுமாகிய **உலோகாயதம்** என்ற ஒரு சமயம் உள்ளது. அச்சமய நெறிப்படி முத்திபெற்று இன்பம் அனுபவிப்போர் ஆடவர்களும், முத்தி இன்பத்தைத் தருபவர்கள் பெண்களும் ஆவர்; ஆடவர் பெண்டிர் இவர்களின் இயற்கைகளையும், இருவரும் சேரும் திறன்களையும் அம்மதன நூல் கூறும்" என்று கூறி, ஆண் பெண் இருபாலருடைய சாதி, இயற்கை, தத்துவம், குணம், தேகம், அவத்தை, காலம், கருத்து முதலியவற்றையும், புணரும் திறன்களையும் மதன நூலிற் கூறிய முறைப்படி தொகுத்தும், வகுத்தும், விரித்தும் தேவகுரு இந்திரனுக்கு எடுத்துரைத்தார்.

தேவகுரு கூறியவற்றை யெல்லாம் கேட்டு உணர்ந்த இந்திரன் தேவகுருவை நோக்கி, "பரமாசாரியரே! நீர் உபதேசித்த காம நூற்பொருள்கள் முழுவதையும் நன்கு உணர்ந்து கொண்டேன். இனி, காமத்தையன்றி வேறு எதனையும் விரும்பேன்; எல்லையில்லாத இன்பத்தை அடைந்தேன்" என்று கூறி விடைபெற்றுச் சென்றான். தேவகுருவும் தம் கருத்து முற்றுப்பெற்றதென்று மகிழ்ச்சியோடு போயினார். பிறகு இந்திரன் விண்ணுலக அரசாட்சியைத் தன் குமாரனாகிய

சயந்தனிடத்தில் ஒப்புவித்தான். இந்திராணியை அடைந்து மதன நூல் விதிப்படி காமத்தை அனுபவித்து இன்பக் கடலிலே இனிது மூழ்கிக் கிடந்தான்.

**சயந்தன் தேவகுருவை வினவுதல்**

சயந்தன் அரசு புரிந்து கொண்டிருக்கையில் ஒருநாள் தன் சபையில் வீற்றிருந்த தேவகுருவாகிய பிரகஸ்பதியை நோக்கி, "தேவகுருவே! நான்முகன் முதலிய தேவர்களும், முனிவர்களும் சூர்பன்மனுல் துன்பமடைந்து தங்கள் மேன்மைகளை இழந்ததற்குக் காரணம் என்ன?" என்று வினவினன். பிரகஸ்பதி சயந்தனைப் பார்த்து, "சிவபெருமானை விலக்கித் தக்கன் செய்த யாகத்தில் தேவர்களும் முனிவர்களும் கலந்துகொண்ட பாவத்தால் தங்கள் பெருமைகளை இழந்து வருந்தினர்கள்" என்று கூறினர். அதனைக் கேட்ட சயந்தன், "அங்ஙனமாயின் அத்தகைய இழிதொழில் புரிந்த தக்கன் வாழ்வையும், அவன் சிவபெருமானை நீக்கிச்செய்த யாகத்தில் நடந்த நிகழ்ச்சிகளையும், பிறவற்றையும் சொல்லியருள வேண்டும்" என்றான். உடனே பிரகஸ்பதி **தக்கன் சரித்திரத்தை** எடுத்து உபதேசிக்கலானர்.

திருவிருத்தம்–66
ஆகத் திருவிருத்தம்–421

திருச்சிற்றம்பலம்

——oo——

ஆகக் காண்டம் ஐந்துக்குத் திருவிருத்தம்–8,278

**தேவ காண்டம் முற்றுப்பெற்றது**

உ
செந்திலாண்டவன் துணை
திருச்சிற்றம்பலம்

ஆறுவது

# தக்ஷ காண்டம்

**முருகவேள் வணக்கம்**

மாயையின் வலியோ ளுகி மான்முத லோரை வென்றே
ஆயிரத் தோரெட் டண்டம் அரசுசெய் துகநூற் றெட்டுக்
காயம தழிவின் ருகிக் கடவுளர்க் கலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற **குமரன்ருள்** சென்னி வைப்பாம்.

—oo—

## 1. உபதேசப் படலம்

**தக்கன் தான் கொண்ட ஐயங்களை நான்முகனிடம் அறிவித்தல்**

நான்முகன், சத்திய உலகிலுள்ள தன் கோயிலிலே ஒரு நாள் முனிவர்களும், தேவர்களும், தன் மக்களும் சூழ வீற்றிருந்தான். அப்போது நான்முகனின் பத்துப் புதல்வர்களில் மூத்தவனும் அறிவிற் சிறந்தவனுமாகிய **தக்கன்** என்பவன் தன் தந்தையை நோக்கி, "தந்தையே! தேவர்களில் தலைவரும், ஞானத்தில் முதன்மை பெற்றவரும், முத்தேவரில் உயர்ந்தவரும், அழியாதவரும், உயிர்க்குயிராயுள்ளவரும் ஆகிய முழுமுதற் கடவுள் யாவர் என்பதை அடியேன் அறியும் வண்ணம் கூறியருளல் வேண்டும்" என்று வேண்டினுன். நான்முகன் தக்கனைப் பார்த்து, "மகனே! முன்னொருகால் யானும் திருமாலும் "நாமே பரம்பொருள்" என்று செருக்குற்றுப் போரிட்டபொழுது அழல் வடிவாய் அடிமுடி காணுதவாறு எழுந்து நின்ற சிவபெருமான் ஒருவரே, யாவர்க்கும் மேலான கடவுள் ஆவர்" என்று கூறினுன். அதனைக் கேட்ட தக்கன், "முத்தொழில்களில் படைத்தல் காத்தல் ஆகிய

முதல் இருதொழில்களைப் புரியும் நீரும் திருமாலும் பரம்பொரு ளாக விளங்காது, இறுதித் தொழிலாகிய அழித்தல் தொழிலைப் புரியும் சிவபெருமானைப் பரம்பொருளாகக் கூறக் காரணம் யாது?" என்று வினவினன்.

**நான்முகன் சிவபெருமானின் பெருமையைக் கூறல்**

சிவபெருமானின் பெருமைகளை அறிந்த நான்முகன், "தக்கனே! நீ வேதங்களில் கூறும் உட்பொருளின் உண் மையை நன்கு அறிந்துகொள்ளவில்லை. என்னையும், திரு மாலையும், தேவர்களையும், மற்றை உயிர்களையும் இறுதி யில் அழிப்பவர் அச் சிவபெருமானே ஆவர். நம்மையெல்லாம் முன்னர்ப் படைத்தவரும் அவரே அன்றோ? இறுதிக் காலத் தில் ஒருவராய் உயிர்களை யெல்லாம் முன்பு தோன்றியவாறே ஒடுங்கச் செய்து, பின்பு அழிந்தவைகளை உயிர்பெறச் செய்து, அவற்றிற்கு அன்னையும் அத்தனுமாக இருந்து வினைக்கேற்ற தனுகரணாதிகளை அளித்துக் காத்து வருகின்ற சிவபெருமானின் செய்கைகளை இன்ன தன்மையென்று எடுத்துக் கூற இயலு மோ? அவர்தம் வலத்தோளினின்றும் என்னையும், இடத்தோளி னின்றும் திருமாலையும் உண்டாக்கிப் படைத்தல் காத்தல் ஆகிய தொழில்களையும் அளித்து, 'யாமும் உங்கள் மாட்டு இருக்கின் றோம்' என்று எம்முயிர்க்குயிராய் நின்று, அவரே எல்லாவற்றை யும் செய்து வருகின்றார். எங்களால் நடக்கும் செயல் ஒன்றும் இல்லை. நம்முடைய மனத்தினுள்ளும் இருந்து நாம் பிழைபடா வண்ணம் காப்பார். அவர் நம்முடைய கண்ணினுள்ளும் உளர்; நாம், நம்மை அறியாமல் மயங்கும் போது நம்மிடத்து வந்து அருள் புரிவார். தாமும் ஒரு செயலைச் செய்கின்றவர் போல எம்மோடு ஒருவராக எண்ணப்படுவார். எள்ளும் எண்ணெ யும் போலவும், மணியும் நாதமும் போலவும், மலரும் மணமும் போலவும், இரத்தினமும் ஒளியும் போலவும் உலகம் எங்கும் உள்ளும் புறம்புமாகி நிறைந்து நிற்பார்.

எள்ளுறும் எண்ணெய் என்ன எறிமணி அரவ மென்னக்
கள்ளுறு போது கான்ற கடியெனச் சலாகை தன்னில்
தள்ளுற அரிய சோதி தானென உலக மெங்கும்
உள்ளொடு புறமு மாகி ஒருமையாற் பரவும் அன்றே.

வேதாகமங்கங்கள் முதலிய உயர்ந்த கலைகளை யெல்லாம் முன்னாளில் அருளிச் செய்தவர் அவரே ஆகும். அவர் அவ்வேதங்களை எங்களுக்கு உபதேசிக்க நாங்கள் அவற்றை உணர்ந்தோம். இச்செய்திகளை நீ அந்நூல்களில் கண்டு அறிவாயாக. உண்மை இங்ஙனமிருக்க, எங்களையும் சிவபெருமானையும் ஒன்றாக நீ எண்ணியது பேதமையே ஆகும்'' என்று கூறினான்.

**நான்முகன், பிரமம் என்பதைப்பற்றிய விளக்கம் கூறுதல்**

தக்கன் அவற்றைக் கேட்டு, ''சிவபெருமான் அருளிச் செய்த வேதங்கள் பஞ்ச பூதங்களையும், உயிர்களையும், மற்றைத் தேவர்களையும் **பிரமம்** என்று கூறுவது ஏன்? அதன் உண்மையை அறியாது என் மனம் கவற்சி அடைகிறது. எந்தையே! அதனை விளக்கிக் கூறியருளும்'' என்றான். நான்முகன் தக்கனைப் பார்த்து, ''மகனே! அழிவில்லாத முழுமுதற் பொருளாகிய சிவபெருமானைப்பற்றி வேதங்கள் கூறியவை மட்டும் விதிவாதமும், ஒழிந்தன துதிவாதமும் ஆகும். ஆதலால், சிவபெருமானை ஒழிந்த மற்றைத் தேவர்களுக்கும், உயிர்களுக்கும், பஞ்சபூதங்களுக்கும் வேதங்கள் முதன்மை கூறுதல் வெறும் புகழ்ச்சியே ஆகும். ஒரு பொருளைப் புகழ விரும்பினால் அதன் உண்மையான நிலைமைக்கு மேலாகவும் புகழலாம். அஃது உலகிலுள்ளோர் 'பிராமணர்களைப் பிரமாவாகிய யான்' என்று கூறுதல் போலும்.

**சிவபாத்துவம்**

யாதொரு பொருளை யாவர் வணங்கினாலும் அவ்வணக்கமெல்லாம் சிவபெருமானையே சென்றடையும். ஆறுகள் யாவும் முடிவில் கடலையே சென்றடையும்; அதுபோல வேதங்கள் மற்றைத் தேவர்களைப்பற்றிக் கூறும் புகழ்களெல்லாம் சிவபெருமானையே சென்று சேரும்.

யாதொரு பொருளை யாவர் இறைஞ்சினும் அதுபோய் முக்கண்
ஆதியை அடையும் அம்மா அங்கது போலத் தொல்லை
வேதம துரைக்க நின்ற வியன்புகழ் அனைத்தும் மேலாம்
நாதனை அணுகும் எல்லா நதிகளுங் கடல்சென் றென்ன.

எல்லாப் பொருள்களையும் படைத்துக் காத்து அழித்து மீண்டும் படைப்பவனும், உயிர்களுக்குத் திருவருள் புரிந்து ஆண்ட

ருளும் தலைவனும், ஆதியந்த மில்லாதவனும் **சிவனே** என்றும், உலகத்திற்குத் தந்தையாகவும், சுத்த சாட்குண்ணியனுகவும், அருவும் உருவுமாகி நிற்கும் சுத்தனும் **சிவனே** என்றும், அறிய வொண்ணுத சோதியும், எங்கும் நிறைந்திருக்கும் ஞானசொரூபி யும், அநாதியாயுள்ளவனும், தேவாதி தேவனும் **சிவனே** என் றும், எக்காலத்திலும் அழியாதவனும், ஆன்மாக்களுள் நீங்காது இருக்கின்ற பரமானந்தத் தாண்டவனும் **சிவனே** என்றும், மூவுலகங்களில் தோன்றுகின்ற பொருள்களையெல்லாம் பெற்ற ருளும் தந்தையாகிய திரியம்பகனும், யாவருக்கும் சாட்சியாய் நிற்பவனும் **சிவனே** என்றும், தாணுவும் பரனும் தனக்கு ஒப் பாரும் மிக்காரும் இல்லாத கடவுளும் **சிவனே** என்றும், பெரு மையிற் சிறந்தோனும், ஏகனும், அளவற்ற குணங்களை உடைய வனும் **சிவனே** என்றும், நான்முகனுலும் திருமாலினுலும் அறியப்படாதவனும், ஆண், பெண், அலி என்னும் மூன்றும் இல்லாதவனும், அன்பர் யாவர்க்கும் வேண்டியவற்றை வேண்டி யாங்கு ஈபவனும் **சிவனே** என்றும், பிரமனை முதலாகக் கொண்ட பசுவர்க்கங்களுக்கெல்லாம் பதியாக நின்றருள் செய் யும் பசுபதியும், பிரமாதியர் இறக்க அவர்களின் உடலைச் சுட்ட சாம்பலையும் என்பையும் அணிபவனும் **சிவனே** என்றும், ஊனுலாகிய உடலிற் புகுந்தார் எவரையும் தன் குணத்துள் ஒடுக்கித் தானே புகலிடமாகி நின்று பிறரின் குணங்களோடு கலவாதிருப்பவனும், தன் தன்மை இன்ன தன்மையதென்று எடுத்துரைத்தற்கரிய தேவனும், ஈசனும் **சிவனே** என்றும் அவ் வேதம் கூறும்.

**சிவபெருமானே முழுமுதற் கடவுள்**

சிவனுகிய தனிமுதல்வனே முத்தியை அளிக்க வல்லவன் என்று வேதங்கள் கூறுகின்றன. உண்மை இங்ஙனமிருக்க, சிவனை விடுத்து வீடுபேற்றை அடைவது என்பது, உருவமற்ற ஆகாயத்தின் தோலை உரித்து உடுப்பதாகக் கூறுவதை ஒக்கும் என்று உபநிடதமே கூறினல், சிவனே பரம்பொருள் என்பதற்கு வேறு ஆதாரம் வேண்டுமோ! அச்சிவபெருமானே பரம் பொருள் என்பதனை வலியுறுத்த வேதங்கள் கூறியவை இன் னும் பல உள. அவை யாவற்றையும் இப்போது கூற என்னுல்

இயலாது. ஒருவாறு கூற முயன்றாலும் பல காலஞ் செல்லும். இவற்றை முன்னரே நீ என்னிடம் அறிந்துள்ளாய்; இப்பொழுது மறந்தனை போலும். என்னையும், திருமாலையும் வேதங்கள் பரமசிவனைத் துதித்தது போலத் துதிப்பதில்லை. நான்கு வேதங்களிலும் ஒருபாதி சிவபெருமானின் பெருமையை எடுத்துக் கூறும்; மற்றொரு பாதி என்னைப்பற்றியும், திருமாலைப் பற்றியும், மற்றைத் தேவர்கள், பஞ்சபூதங்கள், பிறபொருள்கள் முதலியவற்றைப்பற்றியும் எடுத்துக் கூறும். இதுவே உண்மை என்று அறிவாயாக. என்னையும், திருமாலையும் பரம்பொருள் என நினைத்துச் சிறப்புச் செய்யும் தீயர்கள் கொடிய நிரயப் படுகுழியில் வீழ்வார்கள். அவர்களைத் தன்னகப்படுத்திய நரகம் வெளியே விடாது. நம்மோடு அச்சிவபெருமானையும் ஒப்பெனக் கூறுகின்றவர்கள் எப்பிறப்பினும் துன்பக் கடலுள் ஆழ்வார்கள். நம்மைச் சிவபெருமானின் அன்பர் என்றும், சிவபெருமானுக்குத் தொண்டு புரிந்து அவரருளால் வாழும் தேவர்கள் என்றும் கருதி வழிபடுபவர்களுக்கு நாம் அருள் புரிவோம். இவ்வாறன்றி நம்மையும் பரம்பொருள் என்று நினைப்பவர்களைப் பகைவர்களாகக் கருதுவோம்.

நம்மையும் பரமென் றுன்னி நாதனிற் சிறப்புச் செய்யும்
வெம்மைகொள் நெஞ்சர் தீரா விழுமவெந் நிரயம் வீழ்வர்;
தம்மையஃ தெடுத்தல் செய்யா சமமெனப் புகல்கிற் போர்கள்
எம்மையுந் துயர மென்னும் இருங்கடற் படுப்பர் அன்றே.

கானுறு புலித்தோ லாடைக் கண்ணுதற் கடவுட் கன்பர்
ஆனவர் என்றும் அன்னாற் கடித்தொழில் புரிந்து வாழும்
வானவர் என்றும் எம்மை வழுத்தினர்க் கருள்வோம் அல்லா
ஏனையர் தம்மைத் தெவ்வென் றெண்ணியே இருத்தும் யாமே.

'சிவபெருமானே **பசுபதி**; நாமெல்லாம் பாசவலையில் அகப்பட்டு உழலும் **பசுக்களே**' என்ற உண்மையை வேதங்கள் கூறுகின்றன. மைந்தனே நீ இன்னும் தெளிய வேண்டினால் கூறுவேன் கேள்: யானும், திருமாலும், படைத்தல் காத்தல் ஆகிய இத்தொழில்களைச் செய்யும்படி சிவபெருமானின் திருவடிகளைப் பூசித்து வணங்கித் துதித்த சிவாலயங்கள் பலவற்றையும் பார்ப்பாயாக!

**அவனன்றி வேறில்லை**

சிவபெருமானின் திருவருளைப் பெறுமல் வீடுபேற்றை அடைந்தவர்கள் இல்லை. அவருடைய அருளின்றி வாழ்கின்ற தேவர்களும் பிறரும் இல்லை. சிவபெருமானின் திருவருளைப் பெற்றபின் அடைதற்கரிய பொருள் ஒன்றும் இல்லை. அவரன்றிப் பதிப்பொருளும் இல்லை. ஆதலால், சிவபெருமானின் திருவடிகளைச் சரணடைவாயாக'' என்று கூறியருளினுன்.

*அவனருள் பெருது முத்தி அடைந்தனர் இல்லை அல்லால்*
*அவனருள் இன்றி வாழும் அமரரும் யாரும் இல்லை*
*அவனருள் எய்தின் எய்தா அரும்பொருள் இல்லை ஆணை*
*அவனல திறைவன் இல்லை அவனைநீ அடைதி என்ருன்.*

*திருவிருத்தம்–32*
*ஆகத் திருவிருத்தம்–32*

——oo——

## 2. தக்கன் தவஞ்செய் படலம்

**தக்கன் தவம் புரிதல்**

நான்முகன் பகர்ந்த நல்லுபதேசத்தைக் கேட்டுணர்ந்த தக்கன், ஊழ்வினை காரணமாக, வீடுபேற்றை அடைய விரும்பவில்லை. பிரமா முதலிய தேவர்களின் வளங்களினும் மேலாகிய வளங்களைத் தவம்புரிந்து பெற எண்ணினுன். தன் தந்தையாகிய நான்முகனை வணங்கி, ‘‘ தந்தையே! நீர் உபதேசித்த வண்ணம் பரமசிவனையே நான் பரம்பொருள் என்று துணிந்தேன்; அவரை நோக்கி அருந்தவம் புரிந்து பல வளங்களைப் பெற விரும்புகின்றேன்; யான் தவஞ்செய்தற்குரிய ஓர் இடத்தை விரைவில் கூறியருளுக'' என்ருன். நான்முகன், தம்முடைய மனத்தினின்றும் முன்னை நாளில் தோன்றிய **மானச வாவி**யிடத்துச் சென்று தவம்புரியும்படி கூறி அனுப்பினுன். தக்கன், தன் தந்தையிடம் விடை பெற்றுக்கொண்டு மானச வாவியை அடைந்து அதன் ஒரு பக்கத்தில் அமர்ந்தான்; காற்று, மழை, வெய்யில், பனி முதலியவற்றிற்கெல்லாம் அஞ்சாமல் பிராணவாயுவைச் சுழுமுனை வழியாய் எழுப்பி, மூலத் தீயை

வெளிப்படுத்திப் புருவ நடுவிலுள்ள அமிர்த தாரையை வீழ்த்தித் தன் இருதய கமலத்திலுள்ள சிவபெருமானுக்கு அன்பினுல் அபிஷேகம் புரிந்து, உட்பூசை செய்து மனத்தை ஒருமைப்படுத்தி, ஐந்தெழுத்தை விதிப்படி செபித்துக்கொண்டு, பாசத்தை நீக்க முயலும் ஞானிகளைப்போல, ஆயிரம் ஆண்டுகள் அருந்தவஞ் செய்தான்.

**சிவபெருமான் தக்கனுக்கு அருள்புரிதல்**

சிவபெருமான், தக்கன் செய்யும் தவத்தைத் தம் திருவுளங்கொண்டு அவனுக்கு வரங்களை அளிக்க விரும்பி, உமாதேவியாரோடு இடபவாகனத்தின் மீது எழுந்தருளி வந்தார். அவர் வரவை அறிந்த தக்கன், விரைவில் இருக்கையை விட்டெழுந்து அம்மையப்பரின் திருவடிகளை வணங்கி ஒன்றுபோலப் பல துதிகளைக் கூறியவண்ணமாக நின்ருன். சிவபெருமான் அவனை நோக்கி, " தக்கனே! உன் வழிபாட்டைக் கண்டு களித்தோம். உனக்கு வேண்டுவது யாது? சொல்லுதி" என்ருர். தக்கன் தன் ஊழ்வலியால் வீடுபேற்றை விரும்பாது, சிவபெருமானை நோக்கி, " எம்பெருமானே! எனது ஆஞ்ஞா சக்கரம் விண்ணுலகு மண்ணுலகு முதலிய இடங்களிலும், திருமால் நான்முகன் முதலியவர்களிடத்தும் செல்லும்படி அருள்புரியவேண்டும்; உம்மை வந்து போற்றும் உயிர்களெல்லாம் என்னை வந்து துதிக்கவும், யான் உம்மை அன்றி மனத்தாலும் பிறரை வழிபடாதிருக்கவும் வரந்தந்தருள வேண்டும்; தேவர்களும் அவுணர்களும் யான் பணித்த பணிகளைச் செய்யவும், எனக்குப் பல புதல்வர்களும் புதல்விகளும் உண்டாகவும் அருள்புரிதல்வேண்டும் உமாதேவியார் எனக்கு மகளாக வந்து தோன்றவும், நீர் மறையவராய் வந்து அன்போடு திருமணம் புரிந்தருளவும் வேண்டும்" என்று வேண்டினுன். சிவபெருமான் அவற்றைக் கேட்டு, " தக்கனே! நீ விரும்பிய வரங்களைத் தந்தோம்; நீ நன்னெறியில் செல்வாயாகில் இவ்வரங்கள் நிலைபெறும்" என்று அருள்புரிந்து மறைந்தருளினுர்.

**தக்கன் அரசு புரிதல்**

எம்பெருமான் அருளிய வரங்களைப் பெற்ற தக்கன் பெருமகிழ்ச்சியுற்றுத் தன் தந்தையை வரும்படி நினைத்தான். நான்

முகன், தக்கன் பெற்ற வரங்களையும் அவற்ருல் நடைபெறப் போகின்ற நிகழ்ச்சிகளையும் ஞானத்தால் அறிந்தான். "தக்கன் சிவபெருமானை நோக்கித்தவஞ் செய்தவாறு நன்று!" என்று பெருமூச்சுவிட்டுச் சிரித்து, "ஐயோ இனி என்செய்வேன்? நாடோறும் அமுதத்தைச் சொரிந்து வளர்த்தாலும் வேம்பின் கசப்பு நீங்குமோ? அதுபோன்றே மேலாகிய தவம் புரிந்து வீடு பேறடையாமல், பழி பாவங்களுக்கு ஈர்த்துச் செல்லும் வளங்களைப் பெற்ருனே! விதியின் வலிமையைத் தடுக்க வல்லவர் யார்? இனியான் செய்வதென்ன?" என்று எண்ணி மனம் வருந்தினுன். பிறகு நான்முகன் தக்கனை அடைந்து ஆசிபல கூறினுன். தக்கன் நான்முகனைப் பார்த்து, "இங்கு ஒரு நகரத்தை அமைப்பீராக" என்ருன். உடனே நான்முகன், **தக்ஷபுரி** என்னும் ஒரு நகரைப் பொன்னுலகமும் நாணும்படி எல்லா வளங்களோடும் அமைத்துத் தந்தான். தக்கன், தக்ஷபுரியினுள் சென்று யாவற்றையும் கண்டு, "விண்ணுலகிலுள்ள நகர் எதுவும் இதற்கு ஈடில்லை; இதற்கு இணை இதுவேயாகும்" என்று பிரமதேவனிடத்து அன்புகாட்டி மகிழ்ந்து பாராட்டினுன்; பின்னர்த் தன் கோயிலுள்புகுந்து முனிவர்கள் துதிக்கச் சிங்காதனம் ஏறி அரசு புரியலுற்ருன். சிவபெருமானிடத்தினின்று தக்கன் பெற்ற வரங்களைத் தேவகுருவாகிய வியாழபகவான் சொல்ல, இந்திரன் முதலிய தேவர்கள் கேட்டு அஞ்சினுர்கள். உடனே தேவர்கள் தக்கனை வந்தடைந்து வழிபட்டு நின்ருர்கள்.

**அசுர மன்னன் தக்கனை அடைதல்**

தேவர்கள் யாவரும் தக்கனை அடைந்து வணங்கி வழிபாடு புரிவதை அறிந்த அசுர குருவாகிய சுக்கிராசாரியர், மேரு மலைச்சாரலில் இந்திரனுக்குப் பயந்து ஒளிந்திருந்த அசுர மன்னனிடம் சென்று, "இனி நீ அஞ்சவேண்டுவதில்லை. இந்திரனுக்குத் தக்கன் தலைவனுனன். நீ அத்தக்கனைச் சென்றடைவாயாக. இனி உன் துன்பம் நீங்கியது" என்று கூறினுர். அசுர மன்னன் அதனைக் கேட்டு மனத்தில் மட்டிலா மகிழ்ச்சியடைந்து, தன் சுற்றம் சூழத் தக்கனை அடைந்தான்.

**தக்கனது அரசியல் சிறப்பு**

சூரியன் முதலாகிய கிரகங்களும், விண்மீன்களும், தேவர்களும், திக்குப்பாலகர்களும், பாதலவாசிகளும், பிறரும் தக்கனை

வந்தடைந்து வணங்கினுர்கள்; சிவபெருமானின் திருவருட்டிறத்தைப் புகழ்ந்து நின்ருர்கள். நான்முகன் முதலிய அனைவரும் தங்கள் தங்கள் கடமைத் தொழிலாக நினைத்து நாடோறும் வந்து தக்கனை வழிபட்டனர். தக்கன் தன் ஆஞ்ஞா சக்கரம் எங்குஞ் செல்லும் வண்ணம் பெருமிதத்தோடு அரசு புரிந்து வந்தான்.

திருவிருத்தம்–30
ஆகத் திருவிருத்தம்–62

——oo——

## 3. தக்கன் மகப்பெறு படலம்

**தக்கன் மக்களைப் பெறுதல்**

நான்முகன் பாதத்தில் பிறந்தவளும், கற்பில் அருந்ததியினும் சிறந்தவளும், அழகில் மிகுந்தவளுமாகிய **வேதவல்லி** என்பாளைத் தக்கன் மணம்புரிந்து கொண்டு **ஆயிரம் புதல்வர்களைப்** பெற்ருன். தக்கன் அவர்களுக்கு உபநயனமும் வேதாத்தியயனமும் செய்வித்து அப்புதல்வர்களை நோக்கி, "நீவிர் யாவரும் மானச வாவியை அடைந்து சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்து உயிர்களைப் படைக்கும் வரத்தைப் பெற்று இங்கே வருக" என்று கூறி அனுப்பினுன். அப்புதல்வர்கள் அவனை வணங்கி விடைபெற்று மானச வாவியை அடைந்து அதில் மூழ்கிச் சிவபெருமானை நோக்கி நெடுங்காலம் தவஞ்செய்து கொண்டிருந்தார்கள்.

**தக்கனின் மக்கள் ஆயிரவர்க்கு நாரதர் கூறும் நல்லுபதேசம்**

அப்போது நாரத முனிவர், தக்கனுடைய புதல்வர்கள் தவம்புரிந்து கொண்டிருந்த மானச வாவிக்கு வந்து, அவர்களைப் பார்த்து, "நீவிர் எதனை விரும்பித் தண்ணீரின்கண் நின்று தவம் செய்கிறீர்கள்?" என்று வினவினுர். அவர்கள் நாரதரை நோக்கி, "முனிவரே! எங்கள் தந்தையின் நோக்கப்படி படைத்தல் தொழிலைப் பெறுவதற்காகச் சிவபெருமானை நோக்கித் தவம் புரிகின்ருேம்" என்ருர்கள். அதனைக் கேட்ட நாரதர் அவர்களை நோக்கி நகைத்து, "இதுதானு சிவபெரு

மானிடத்தில் பெறத்தக்க வரம்? சிவபெருமானைத் திரிகரணங்களாலும் வழிபட்டு அருந்தவத்தைச் செய்து முப்பாசங்களும் நீங்குதற்குரிய வழியை நாடாமல், படைப்புத் தொழிலில் ஆசை வைத்தீர்களே! நீவிர் அருந்தவம் இயற்றிப் பெறும் படைத்தல் தொழிலினால், பெரும் துன்பத்தை அளிக்கும் பிறப்பும் இறப்புமே வரும். அஃது உங்களுக்கு இனியதோ? இப்பொழுது நீவிர் விரும்பிய படைத்தல் தொழிலைப் புரியும் நான்முகனின் தலைகளுள் ஒன்றைச் சிவபெருமான் தமது திருக்கரத்தால் கிள்ளும்படி அப்பிரமர் செய்த தீமையை (சிவதூஷணத்தை)யும் அதனால் நேர்ந்த பழியையும் அறிகிலீரோ? முன்னொருகால் நான்முகனும் திருமாலும் போரிட்டபோது, சிவபெருமான் அடிமுடி காணப்பெறாத அழலுருவாய் எழுந்து நின்றார். நான்முகன் அவ்வுருவத்தின் முடியைக் காண்பதற்கு அன்னப்பறவை வடிவங்கொண்டு அலைந்ததை நீவிர் அறிந்திலீர்களோ? எள்ளுக்குள் எண்ணெய் போல எங்கும் நிறைந்த சிவபெருமானே எல்லாவற்றையும் படைக்கின்றார். அப்படைப்புத் தொழில் புரிவதால் அடையக்கூடிய பயன் பெருமையேயன்றி வேறொன்றுமில்லை. இஃது அழகாக இருக்கின்றதென்று ஒருவர் பொன் விலங்கைக் காலிலே பூட்டிக் கொள்ளுவாரா? ஒருவர் எவ்வளவுக் கெவ்வளவு இன்பத்தை நாடுகிறார்களோ, அவ்வளவுக் கவ்வளவு துன்பமே வந்தடையும்; அஃது உண்மை. நீங்கள் படைப்புத் தொழிலைப் பெறுவீர்களாயின் பெருந் துன்பத்தை அடைவீர்கள்; மேலும் சிவபெருமானை மறந்து யாமே முழுமுதற் கடவுள் என்று எண்ணுவீர்கள்; தீவினைகள் பல புரிவீர்கள்; மயங்கிப் பேருணர்வை இழப்பீர்கள். ஆதலால், படைப்புத் தொழில் பெறுவதை விடுத்து வீடுபேறு அடைவதற்குரிய வழியை நாடுங்கள். மேலாகிய தவம் புரிந்து வீடுபேறடைந்தவர் பலர். வீடுபேற்றைப் பெறும்படி இருந்தவர் பலர். அவர்கள் யாவரும் சிவபெருமானின் திருவடித் தாமரைகளையே அன்றி வேறு பற்று இல்லாதவர்கள்; மிகவும் இனிய குணம் படைத்தவர்கள்; எவ்வகைக் குற்றங்களும் இல்லாதவர்கள்; அன்பினால் சிவத்தை அடைபவர்கள்; சிவபெருமானையே அடைக்கலமாகச் சார்ந்து வாழ்பவர்கள்; கூறுவதற்கரிய பெருமையினை உடையவர்கள். ஆதலால், நீவிரும் அவர்களைப் போன்று எவ்

வகைப் பற்றுமில்லாத வழியில் சென்று வீடுபேற்றை அடைவீர்களாகுக. பெருஞ் செல்வங்களைப் பெற்றதால் அறிவிழந்து நிற்கும் உங்கள் தந்தையாகிய தக்கன் பணித்த பணியை மறந்து விடுங்கள்'' என்று நல்லுரை பகர்ந்தார்.

**தக்கனின் புதல்வர்கள் வீடுபேறடைதல்**

நாரதர் கூறிய நல்லுபதேச மொழிகளைக் கேட்ட தக்கனின் புதல்வர்கள் ஆயிரவரும் தம்முள் ஆராய்ந்து பார்த்தனர்; தம் தந்தை சொல்லினும் நாரதர் கூறியது நல்லதே என்று முடிவு செய்து நாரதரை வணங்கித் துதித்தார்கள். நாரதர் மகிழ்ந்து, அவர்களுக்கு மேலும் சிவபெருமானின் புகழ்களை எடுத்துக் கூறினார்; ஞானிகளின் நிலையை விளக்கிக் கூறினார்; மந்திரங்களையும், கிரியைகளையும் உபதேசஞ் செய்தார்; பிறகு அவர்களின் பழைய உணர்வை மாற்றி உண்மை ஞானத்தைப் புகட்டி, ''புதல்வர்காள்! நீங்கள் யாவரும் நாம் உபதேசித்தபடி பெருந்தவம் புரிந்து வீடுபேற்றை அடைமின்கள்'' என்று கூறி வானவழியே சென்றார். தக்கனின்குமாரர்கள் ஆயிரவரும், நாரதமுனிவர் உபதேசித்த முறையைக் கடைப்பிடித்து, காமக்குரோதம் முதலிய குறும்புகளை நீக்கி மௌனியாகி மானச வாவியில் அருந்தவம் புரிந்து வீடுபேற்றை அடைந்தனர்.

**தக்கனின் வேறு ஆயிரம் புதல்வர்களின் தவமும் வீடுபேறும்**

மக்களைத் தவத்துக்கு அனுப்பிய தக்கன், அவர்களுடைய நிலைமையை ஞானப் பார்வையினால் நோக்கினான்; நாரதர் உபதேசத்தால் தன் மக்கள் யாவரும் வீடுபேறு அடைந்ததை அறிந்தான்; தனக்கு இனிப் புத்திரர்கள் இல்லையே என்று எண்ணி வருந்தினான்; பிறகு **ஆயிரம் புதல்வர்களைப்** பெற்று வேதாத்தியயனஞ் செய்வித்து அவர்களைப் பார்த்து, ''நீங்கள் மானச வாவிக்குச் சென்று சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்து படைத்தல் தொழிலைப் பெற்று வாருங்கள்'' என்று கூறியனுப்பினான். அப்புதல்வர்கள் அதனைக் கேட்டு நன்றென்று தந்தையின் பாதங்களை வணங்கி விடைபெற்று மானச வாவியை அடைந்து தவஞ் செய்துகொண்டிருந்தார்கள். நாரதமுனிவர் முன்போல் இவர்களிடத்திற்கும் வந்து, ''நீங்கள் யாவர்? எப்

பொருளை விரும்பித் தவஞ் செய்கின்றீர்கள்? அதனை எனக்குச் சொல்ல வேண்டும்'' என்று கேட்டார். தக்கன் புதல்வர்கள் ஆயிரவரும் நாரதரைப் பார்த்து, ''நாங்கள் தக்கனுடைய மக்கள்; எங்கள் தந்தையின் விருப்பப்படி சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்து படைப்புத் தொழிலைப்பெற விரும்புகிறோம்'' என்று கூறினார்கள். நாரதர் அவர்களை நோக்கி, ''தவத்தின் பயன் சிவத்தை அடைதலே என்பதை எண்ணினீர் இல்லை. அரிய தவம் செய்து படைப்புத் தொழிலைப்பெற விரும்பினீர்! பிறப்பு இறப்புக்களை நீக்க விரும்பினீர் இல்லை; பின்னர் அஞ்ஞானத்தை நீக்குவீரோ? நீங்கள் கைக்கொண்ட இந்நிலைமை, அழுக்குப் படிந்த உடலை யுடையவர்கள் தூய்மையாகிய நீர்த்துறையை அடைந்தும் அதனால் தம்முடம்பிலுள்ள அழுக்கைக் கழுவிக் கொள்ள எண்ணாமல் சேற்றில் மூழ்குதலைப் போலுமாம். சிறந்த தவத்தின் பயனாக நீவிர் பெறும் படைப்புத் தொழில், நிலையுள்ள தாகுமோ? அழிவும் தோற்றமும் இன்பதுன்பங்களும் இல்லாத வீடு ஒன்றே உயிருக்கு உறுதி பயக்கும். நீங்கள் அவ்வியல்பை யுடைய வீடுபேற்றையடைய விரும்புகின்றீர்கள் இல்லை. பிறப் பிறப்புக்கள் உம்மைவிட்டு நீங்குமோ? தவஞ் செய்து படைப்புத் தொழிலைப் பெறும்படி உங்களுக்குக் கற்பித்தவன் உங்கள் தந்தையாகிய தக்கனேயாயின், அவன் சிவபெருமானால் பெரிய வரங்களைப் பெற்று அவருடைய திருவடிகளிடத்து அன்பு கொள்ளாத தன்மையால் அறியாமை யுடையவனாகும். அவ னுடைய மக்களாகிய நீங்களும் அவனைப் போன்றே இருக்கின் றீர்கள். தன்னை அடைந்து வழிபட்டவர்களின் தீமைகளைப் போக்கி வீடுபேற்றை அடையும் நன்னெறியைப் போதிப்பவனே ஆசாரியன் ஆவான்! உமக்கு முன் பிறந்து தந்தையின் சொற்படி இங்கு வந்து தவம் புரிந்த உங்கள் ஆயிரம் சகோதரர்களுடைய அஞ்ஞானத்தைப் போக்கி வீடுபேறடையும்படி நாம் செய்வித் தோம்'' என்று கூறினர். நாரதர் கூறியவற்றைக் கேட்ட தக்கனுடைய குமாரர்கள் அவருடைய பாதங்களை வணங்கி, ''சிறியேங்கள் உய்யவேண்டும் என்று திருவருள் செய்து இங்கு எழுந்தருளி வந்தீர்; நீர் உபதேசிக்கும் மெய்ந்நெறியை நாங்கள் இன்னதென்று அறியேம்; எமக்கு அதனைக் கூறியருளும்'' என்று கேட்டார்கள். நாரதமுனிவர் மிக்க அன்போடு அவர்

களுக்கு அருள் புரிந்து, "யான் உங்களுக்கு ஞானத்தைப் போதித்து உங்கள் பிறவித் துன்பத்தை இனி நீக்குவேன்" என்று கூறி, "சிறுவர்காள்! சிவபெருமானுடைய திருவடிகளை அவர் அருளால் வழிபடுகின்ற பெரியோர்கள் அனுஷ்டிக்கும் பாதங்களும் நான்கு; அதனுல் அவர்கள் அடையும் பதங்களும் நான்கு ஆகும். அவற்றுள் ஞான பாதத்தில் நின்று பெறும் பேறு எல்லாவற்றிலும் உயர்ந்த கதியாம். அதுவே **முத்தி** என்று சொல்லப்படும். அம் முத்தி, இருவினையொப்பு மலபரிபாகமுற்ற மெய்ஞ்ஞானிகளால் அறியப்படுமேயன்றி, தேவர்களாலும் அறிதற்கரியது. அந்த ஞான பாதத்தில் நிற்போர் சிவபெருமான் திருவடித் தாமரைகளை அடைவர்; பிறவித் துன்பத்தில் அழுந்தார்; அருள் ஞானத்தோடு இயைந்து எந்நாளும் பேரின்பத்தை அனுபவித்திருப்பர். ஆதலால் நீங்களும் ஞான யோகம் புரிந்து வீடு பேற்றை அடையுங்கள்" என்று சிவாகமத்தின் ஞானபாதப் பொருளை அவர்களுக்கு உபதேசித்து அவர்கள் யாவரையும் அந்நெறியில் நிற்கும்படி நிறுத்தி விண்வழியே சென்ருர். தக்கனின் குமாரர்கள் ஆயிரவரும் ஒருமைப்பாடு பொருந்திய உள்ளத்தோடு நின்று ஞானமார்க்கத்தைக் கடைப்பிடித்துச் சிவபெருமானின் திருவருளினுல் வீடு பேறடைந்தார்கள்.

**தக்கன் நாரதரைச் சபித்தல்**

தக்கன், தான் மறுமுறை அனுப்பிய தன் மக்கள் ஆயிரவரும், "இன்னும் திரும்பி வரவில்லையே! எங்குச் சென்ருர்களோ" என்று அயர்ந்து ஞானத்தால் ஆராய்ந்து நோக்கினுன்; அப்பொழுது நாரதரின் தூண்டுதலால் தன் விருப்பத்தை நிறைவேற்ருது வீடுபேறு பெற்றதை அறிந்தான். உடனே அவனுக்குச் சினம் எழுந்தது; மனம் வருந்தியது; உயிர் பதைத்தது; உடல் வியர்த்தது. தக்கனுடைய கோபத்தைக் கண்ட கோள்கள் ஆகாயத்தில் பயந்து ஓடின; நிலவுலகங்கள் இரங்கின. தன்புதல்வர்களின் செயலை நினைத்துக் கோபங்கொண்ட தக்கன், "சிவபெருமானிடத்து வரம் பெறச் சென்ற என் புதல்வர்களை எனக்கு இல்லாமற் செய்த நாரதன், இனி நாடோறும் உலகெங்கும் உழன்று திரியக்கடவன்" என்று சபித்தான்.

**தக்கன் பெண்களைப் பெறுதல்**

பிறகு தக்கன், "இனித் தவஞ்செய்தற்காகப் புத்திரர் களைப் பெறேன்! புத்திரர்களைப் பெற்றதுபோதும்; இனிப் பெண்களையே பெறுவேன்" என்று உறுதிசெய்து, சுபுத்தி, புத்தி, சுரசை, திருதி, துட்டை, கிரியை, கீர்த்தி, சிரத்தை, இலச்சை, மேதா, கத்தி, சாந்தை, வபு, கியாதி, சம்பூதி, நாரி சன்னதி, மிருதி, பிருதி, ஊற்சை, அனசூயை, சுவா, கமை, சுவதை என்னும் **இருபத்து மூன்று பெண்களைப்** பெற்றான். அவர்களுள் சுபுத்திமுதலிய முதற் பதின்மூன்று பெண்களையும் தருமருக்குத் திருமணம் செய்து கொடுத்தான். மற்றைக் கியாதி முதலிய பத்துப் பெண்களையும் பிருகு, மரீசி, புலத்தியர், அங் கிரா, புலகர், வசிட்டர், அத்திரி, அக்கினி, கிரது, பிதரா என் பவர்களுக்கு முறையே திருமணம் செய்து கொடுத்தான். தரு மர் இருபத்தேழு புதல்வர்களைப் பெற்றார். பிருகு என்பவர் விதாதா தாதா என்னும் இரு புத்திரர்களையும், இலக்குமியை யும் பெற்றார்; இலக்குமியைத் திருமாலுக்குத் திருமணம் செய்து கொடுத்துவிட்டுத் தவம் புரியலானார். மரீசி என்பவர் நான்கு பெண்களைப் பெற்றார். அந் நால்வர்களின் மூலம் பலர் பிறந் தார்கள். புலத்தியர் பல மக்களைப் பெற்றார். அங்கிரா என்பவர், அங்கிரன், பரதன் என்னும் இரண்டு புத்திரர்களையும், நான்கு பெண்களையும் பெற்றார். அவர்கள் வழியில் பல முனிவர் கள் பிறந்தனர். புலகர் தத்தாத்திரியைப் பெற்றார். அவர் வழி யில் கும்பர் தோன்றினார். வசிட்டர் ஒரு பெண்ணையும், ஏழு புத்திரர்களையும் பெற்றார். அத்திரி என்பவர் சத்திநேத்திரன், சந்திரன், சனி, சங்கதானன் முதலிய புதல்வர்களைப் பெற்றார். அக்கினி மூன்று புதல்வர்களைப் பெற்றார். கிரது மூன்று புதல்வர் களைப் பெற்றார். பிதரா என்பவர், மேனை பூமி என்னும் இரு பெண்களைப் பெற்றெடுத்தார். அந்த மேனையை இமயமலையர சன் மணம்புரிந்து கொண்டான். பூமியை மேருமலை மணந்து, மந்தரகிரியைப் பெற்றது. மந்தரமலை தவம்புரிந்து சிவபெரு மானைத் தன்பால் எந்நாளும் எழுந்தருளியிருக்கப் பெற்றது. மேருமலை, பின்னர் வேலை என்பவளைப் பெற்றெடுத்து வருண னுக்கு மணம்புரிந்து கொடுத்தது. வருணன், சரவணி என்னும்

பெண்ணைப் பெற்றுப் பிராசினன் என்பானுக்கு மணம் புரிந்து கொடுத்தான். பிராசினன் பத்துப் புத்திரர்களைப் பெற்றான்.

திருவிருத்தம்-66
ஆகத் திருவிருத்தம்–128

——oo——

## 4. சந்திர சாபப் படலம்

### சந்திரனின் திருமணம்

இவ்வாறாகப் பரந்த கிளைகளோடு இராநின்ற தக்கன் பின்னும் நட்சத்திரக் கூட்டத்து இருபத்தேழு பெண்களைப் பெற்றான்; அவர்களை அழகு மிகுந்த சந்திரனுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தான். அவன் சந்திரனை நோக்கி, "நீ சில பெண்களிடத்து மட்டும் அன்பு கொண்டு மற்றைப் பெண்களை வெறுக்காது இருபத்தேழு பெண்களிடத்தும் ஒரேவிதமான அன்பு பாராட்டி வருவாயாக" என்று கூறித் தன் பெண் மக்களைச் சந்திரனோடு கூட்டி அனுப்பினான். சந்திரன் தன் பதத்தை அடைந்து எல்லோரிடத்தும் ஒரே மாதிரியான அன்பு பாராட்டி வந்தான்; இருபத்தேழு பெண்களையும் ஒருநாளைக்கு ஒவ்வொருவராக அவர்களோடு கூடிமகிழ்ந்து வந்தான். இங்ஙனம் சிலகாலம் சென்றபின் இருபத்தேழு பெண்களில் பேரழகோடு விளங்கிய கார்த்திகையையும், உரோகணியையும், சந்திரன் பெரிதும் காதலித்து, மற்றை இருபத்தைந்து மனைவியர்களிடமும் கூடி வாழாமல் வெறுத்துத் திரிந்தான். அங்ஙனம் வெறுக்கப்பட்டவர்கள், மனம் வருந்தித் தங்கள் தந்தையாகிய தக்கனிடம் போய் நிகழ்ச்சியைக் கூறினார்கள். தக்கன் கோபமடைந்து, "சந்திரனுடைய கலைகள் யாவும் தேய்ந்து பொலிவு அழிக" என்று கடுஞ் சாபம் கூறினான்.

### சந்திரனின் கலைகள் தேய்தல்

தக்கன் சாபத்தாலே, பொய் சொல்பவனுடைய புகழ் குறையுமாறு போலச் சந்திரனின் கலைகள் நாளுக் கொன்றாகக் குறைந்து வந்தன. இங்ஙனம் பதினைந்து நாட்கள் சென்றதும் பதினைந்து கலைகளும் அழிந்து ஒரு கலை மட்டும் எஞ்சியது. சந்

திரன் அதனைக் கண்டு மயங்கி மெலிந்து வெட்கமடைந்தான்; பிறகு இந்திரனை அடைந்து, "தக்கனுடைய சாபத்தால் என்னுடைய எல்லாக் கலைகளும் அழிந்தன. இந்த ஒரு கலைமட்டும் எஞ்சி நின்றது. இன்றைக்கு இவ்வொரு கலையும் அழிந்தால் என் இயல்பு குன்றும்; பேருந்தொலையும்; எங்கும் பரவிய என் புகழும் அழியும்; வசையுமாகும். இனி நான் என் செய்வேன்? யான் ஒன்றையும் அறிகிலேன்! எனக்கு ஓர் அறிவுரையைக் கூறுவாயாக" என்று கூறித் துன்பக் கடலுள் மூழ்கினன். இந்திரன் திங்களைத் தழுவி, "என் நண்பனே! நீ அஞ்சாதே; ஒரு காலத்தில் நீ திருக்கயிலாச மலையில் விநாயகக் கடவுளின் பெரிய வயிற்றையும், அவர் திருக்கரத்திலுள்ள மோதகத்தையும் பார்த்துச் சிரித்தாய்; அப்போது அவர் கோபித்து, 'உன்னை யாரும் காணாது இகழ்ந்து கூறும்படி நீசர்போல ஆகுதி' என்று சாபமிட்டார். அந்தச் சாபத்தால் நீ வெட்கமடைந்து ஆகாயத்தில் செல்லாது ஒடுங்கினாய். அதனைக் கண்ட நான்முகன் முதலிய தேவர்கள் விநாயகக் கடவுளை அடைந்து வணங்கி, "சந்திரன் தேவரீரின் மேன்மையை அறியாது இகழ்ந்தான். நீர் அளித்த சாபத்தினால் நீச்சத்துவம் அடைந்து வருந்தி ஒடுங்கினன். அவன் இவ்வுலகத்திற்குத் தேவையானவன். ஆதலால், தேவரீரிட்ட சாபத்தை ஆண்டில் ஒருநாளைக்கு அவன் அனுபவிக்கும்படி திருவருள் புரிய வேண்டும்" என்று இறைஞ்சினார்கள். விநாயகக் கடவுள் அவ்வண்ணமே திருவருள் புரிந்தார். அதனால், **ஆவணி மாதத்துப் பூர்வபக்ஷ சதுர்த்தியில்** உலகோர் உன்னைக் காணாதிருந்து அக்கடவுளுக்குச் சிறப்பான பூசை செய்வர். இந்தப்பழி யொன்று முன்னமே இருக்கையில், இப்போது புதியதோர் சாபத்தை நீ தக்கனிடம் பெற்றாய்; பொலிவும் அழகும் நீங்கினாய். நீ விரைந்து நான்முகனிடத்துச் சென்று உன் குறையைக் கூறுக. அவர் தம் மகனாகிய தக்கனிடம் கூறி உன் சாபத்தை நீக்குவார்" என்று கூறினான்.

**சந்திரன் நான்முகனிடம் முறையிடுதல்**

சந்திரன் அதனைக்கேட்டு, "இது நன்று; நீ கூறியபடியே செய்வேன்" என்று விரைந்து சத்திய உலகத்திற்குச் சென்று நான்முகனைக் கண்டு வணங்கித் தன் மாமனாகிய தக்கன் இட்ட

சாபத்தை அவனுக்குக் கூறி, "உமது குமாரனுக்கு அறிவு புகட்டி என்னுடைய இச் சாபத்தை நீக்கிக் கவலையைப் போக்கி அருளல் வேண்டும்" என்று வேண்டினன். நான்முகன் சந்திரனின் வேண்டுகோளைக் கேட்டு, "தக்கன் தன் விருப்பப்படி நடப்பானே அன்றிப் பிறர் நல்லுரை ஒன்றையும் கேளான்; என் சொல்லைச் சிறிதும் கொள்ளான்; நானும் அவனிடம் செல்லேன். அவன் முன்னைத் தக்கன் அல்லன். எல்லையற்ற செல்வத்தை அளித்த சிவபெருமானையே அவன் எண்ணிப் பார்ப்பதில்லை. யாராக இருந்தாலும் தமக்குள்ள எந்தக் குறைகளையேனும் சிவபெருமானிடம் கூறி வேண்டலாம். ஆனால், தக்கனிடமோ எவரும் சென்று ஒரு வார்த்தை கூடக் கூறமுடியாது. தக்கன் செல்வச் செருக்கில் அழுந்திவிட்டான். அவன் யாரையும் மதிப்பதில்லை; நீதியை மறந்தான்; அன்பை விடுத்தான்; அருளை இழந்தான்; ஆணவம் மிகுந்து விளங்குகிறான். சிவபெருமானே அவனுக்கு வேண்டிய வரங்களையெல்லாம் விரைந்து கொடுத்துவிட்டார். என் செய்வது? அத்தக்கனை யாம் வேண்டுவோமாயின் எம்மையும் கோபித்து இகழ்வான்; உன் சாபத்தையும் நீக்கான். ஆதலால், நீ சிவபெருமானை அடைந்து விண்ணப்பம் செய்தால் அவர் உடனே உன் குறையை நீக்கி அருளுவார். சிவபெருமான் அருளுக்கு எல்லாரும் உரியவர்களே. அவர் அருளைப் பெறாதவர் இல்லை. தம் திருவடிகளைச் சரணமடைந்த அடியார்களின் துன்பங்களைத் துடைப்பதற்கன்றோ? சிவபெருமான் திருவருளே திருமேனியாகக் கொண்டு திருக்கயிலாய மலையில் வீற்றிருக்கின்றார். அவர், தம் திருவடிகளைச் சரணடைந்தவர்களின் துன்பங்களைத் துடைத்து வினைகளையும் தொலைப்பார். தம்முடைய திருவடிகளை வழிபட்டுப் பூசித்த மார்க்கண்டேயர்மேல் வந்த இயமனைச் சிவபெருமான் உதைத்து, அம்மார்க்கண்டனுக்கு முன் வந்து அருள் புரிந்ததை நீ மறந்தனை போலும். முன்னாளில் பாற்கடலில் ஆலகால விஷம் எழுந்ததைக் கண்டு நாம் யாவரும் நடுங்கிய பொழுது அவர் அதனை உண்டு அருள் புரிந்ததை நீ மறந்தாயா? உமாதேவியாரின் திருக்கரத்தில் தோன்றி ஆர்த்தெழுந்த கங்கை இவ்வுல முழுவதையும் மூடியபொழுது நாம் அஞ்சித் துதிக்க, சிவபெருமான் அதனைத் தமது திருமுடியில்

32

அணிந்து நம்மைக் காத்தருளியதை நீ காணவில்லையா? ஆதலால், நீ திருக்கயிலாய மலைக்குச் சென்று சிவபெருமானின் திருவடிகளைச் சரணடைந்து உன் சாபத்தைப் போக்கிக் கொள்வாயாக'' என்று கூறினான்.

**சந்திரன் சாபம் நீங்குதல்**

சந்திரன் நான்முகனை வணங்கி, ''எம்பெருமானே நல்ல புத்தி புகன்றீர். சிவபெருமானிடம் செல்கின்றேன்'' என்று விடைபெற்றுத் திருக்கயிலாய மலையை அடைந்து திருநந்தி தேவரைத் தரிசித்துத் தன் குறையைக் கூறி முறையிட்டான். அவர் சிவபெருமானின் அனுமதி பெற்றுச் சந்திரனை உள்ளே விடுத்தார். சந்திரன் சிவபெருமானை அடைந்து போற்றித் துதித்து வணங்கினான். சிவபெருமான் சந்திரனை நோக்கி, ''நீ இங்கே வந்த காரணம் யாது?'' என்று ஒன்றும் அறியாதவர் போல வினவியருளினார். சாபத்தினால் கருநிறங் கொண்டு வடிவம் வேறுபட்ட சந்திரன் சிவபெருமானைப் பார்த்து, ''எம்பெருமானே! தக்கன் கூறிய சாபத்தால் அடியேனுடைய கலைகளெல்லாம் தேய ஒரு கலை மட்டும் மிஞ்சியிருந்தது. இனி அதுவும் தேய்ந்து போய்விடும். நான் என் செய்வேன்? மிஞ்சியுள்ள இக்கலை தேயாமல் இருக்கவும் தேய்ந்த கலைகளை மீண்டும் பெறவும் திருவருள் புரிய வேண்டும்'' என்று வேண்டினான். கருணையங் கடலாகிய எம்பெருமான், ''சந்திரனே! அஞ்சற்க'' என்று அருள் புரிந்து எஞ்சியிருந்த ஒரு கலையை எடுத்துத் தம் திருச்சடையில் அணிந்து கொண்டார். அப்போது சிவபெருமான் சந்திரனை நோக்கி, ''இனி நீ கவலையுறுதே; இக்கலை நம் முடியில் அணியப்பெற்றதால் இனி அழியாதிருக்கும். அதனால், உனது பழைய கலைகள் யாவும் பதினைந்து நாட்களில் ஒவ்வொன்றாக உன்னை வந்தடையும்; பிறகு அங்ஙனமே தேய்ந்து கடைசியில் ஒரு கலை மாத்திரம் மிஞ்சும். இவ்வாறே எக்காலமும் நிகழும்'' என்று அருளிச் செய்தார். சந்திரன் எம்பெருமான் திருவடிகளை வணங்கி, விடை பெற்றுக்கொண்டு சென்று தன் பதத்தை அடைந்து முன்போல வானுலகில் சஞ்சரித்து வந்தான். அவனுடைய கலைகள் வளர்வதும் தேய்வதுமாக இருந்தன.

### தக்கன் சிவபெருமானை இகழ்தல்

தக்கன் சந்திரனின் செயல் முழுவதையும் ஞானத்தால் அறிந்தான். "நான் சந்திரன் மீது கோபமுற்றுக் கொடுத்த சாபத்தைச் சிவபெருமானு தடுக்க வல்லவர்?" என்று நகைத்து, "என் தந்தையாகிய நான்முகனும், திருமாலும் என் மருகனுக்கு நான் கூறிய சாபத்தை விலக்கிலர்; விலக்குமாறு என் முன் வந்தும் கேட்டிலர். யாவரும் எனக்கு அஞ்சியிருக்க, தாய் தந்தையற்ற பரமசிவனு என் சாபத்தைத் தடுக்க வல்லவர்? இது மிகவும் நன்றாக இருக்கிறது! அச்சிவன், "நாமே பரம்பொருள்; நான்முகன் முதலாகிய உயிர்கள் யாவற்றையும் அழித்து நாம் அழிவின்றி நின்று ஐந்தொழில்களையும் புரிகின்றோம்; எங்கும் வியாபித்திருக்கிறோம்" என்று தம் மனத்தில் அகந்தையுற்றாரோ? அஃதன்றி 'தன்னிகரற்ற தக்கன் தவத்தால் நேற்றுச் செல்வங்களைப் பெற்றவன்தானே' என்று கருதி என் ஆணையை இகழ்ந்து இவ்வாறு செய்தாரோ? நான் அவரிடத்து வளங்களைப் பெற்றும், 'அவரை வணங்கவில்லையே' என்று கருதிச் சந்திரனின் சாபத்தைப் போக்கினாரோ?" என்று கூறிக் கோபங்கொண்டான்.

### புலக முனிவரும் தக்கனும்

நடுவு நிலைமையும் அன்பும் நீங்கிய தக்கன் கூறிய வார்த்தைகளைக்கேட்ட **புலகர்** என்னும் **முனிவர்** தக்கனைநோக்கி, "தமக்கு நிகரில்லாத தனிப்பெருங் கடவுளாகிய சிவபெருமானை இகழாதே; அவரை இகழ்ந்தால் உன்னை யாவரும் இகழ்வர்; உன் செல்வமும் அழியும்" என்றார். தக்கன் அவரை நோக்கி, "நான் தவம் செய்து பெற்ற இச்செல்வங்கள் என்னைவிட்டு நீங்குமோ? திருமால் முதலாயினோர் என் பணி ஒன்றையும் மறுத்திலர். அவர்கள் என்னை இகழ்வதுண்டோ? உம்முடைய அறிவு நன்று! நன்று!" என்று கூறி நகைத்தான். புலக முனிவர், "அரசே! உன்னைப் பிறர் இகழும் இகழ்ச்சி அடையாதாயினும் உனது பெரும் செல்வம் குறையாதாயினும் உனக்கருள்புரிந்த சிவபெருமானைப் பழிப்பது தகுமோ?" என்றார். தக்கன் அவற்றைக் கேட்டுப் பெருமிதங் கொண்டு, "தவத்தின் வலிமையால் நான் முன்னே பெற்ற வளங்களை அனுபவிக்கு முன் அக்கடவுள்

மாற்றுவாரல்லர். செய்த வினைக்குத் தகுந்தபடியன்றி அதற்கு மேலாக வலியதாக அவர் ஒன்றையும் செய்ய வல்லவர் அல்லர். ஆதலால், சிவன் என்னிடத்தில் செய்யக்கூடியது யாது ?'' என்றான். புலகர், ''நீ கூறியதே உறுதியாயினும் 'சிவபெருமானை இகழ்ந்தவர்கள் உய்யமாட்டார்கள்' என்று வேதங்கள் வரையறுத்துக் கூறுகின்றன. ஆகையால், அவரை நீ சிறிதும் இகழற்க ! இனி அவரைத் தியானித்துத் துதிப்பாயாக ! அவர் தம்மைச் சரணடைந்த அன்பர்களின் துன்பத்தை மாற்றி, அவர்கள் விரும்பியவைகளை அளித்தருள் புரிவதே அவருடைய இயற்கையாம். அதனைச் சந்திரன் உணர்ந்து அவரை அடைந்தான். சிவபெருமான் சந்திரனின் சாபத்தை நீக்கியருளினர். ஆயினும் உன் சாபம் நிலைபெறும் பொருட்டு அக்கலைகள் நாடோறும் குறையவும் விதித்துள்ளார். ஆதலால், நீ ஏன் கோபமடைகிருய் ? சந்திரன் யார் ? உன்மருகனே ஆவன். அச்சிவபெருமானும் வருங்காலத்தில் உனக்கு மருகன் ஆவார்'' என்று கூறினர். தக்கன் கோபந் தணிந்து நான்முகன் முதலிய தேவர்கள் புகழ, நெடுங்காலம் அரசு புரிந்து வந்தான்.

திருவிருத்தம்–62
ஆகத் திருவிருத்தம்–190

——oo——

## 5. உமை கயிலை நீங்கு படலம்

### சிவபெருமான் தம் நிலைமையை உமைக்கு உபதேசித்தல்

திருக்கயிலாய மலையில் சிவபெருமானும் உமாதேவியாரும் வீற்றிருக்கையில், ஒரு நாள் உமாதேவியார் சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, ''தேவரீரின் உண்மை நிலையினை எனக்கு உரைத்தருள வேண்டும்'' என்று வேண்டினர். சிவபெருமான் அன்புகூர்ந்து தம் நிலைமையினை உமாதேவியாருக்குக் கூறலானுர் : உருவமும், குணமும், செயலுமின்றிக் குற்றமற்றவராய்ச் சிவபெருமான் நீக்கமற எங்கும் நிறைந்து நின்றதும், உயிர்களின் பாசங்களை நீக்குமாறு திருவருட் சத்தியால் எண்ணியதும், பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியா சத்தி ஆகிய ஐவகைச் சத்திகளைத் தோற்றுவித்ததும், உயிர்கள்

யாவும் நிட்கள சகளராகிய சதாசிவ மூர்த்தியை வழிபடப் பரா சத்தி முதலிய ஐவகைச் சத்திகளினின்றும் சிவசாதாக்கியம் முதலிய பஞ்ச சாதாக்கிய வடிவங்களை அடைந்ததும், இருபத்தைந்து மகேசுவர வடிவங்கொண்டதும், குடிலையினின்று தோன்றிச் சிவ முதலிய நவந்தரு பேதங்களாயதும், சுத்த மாயை, அசுத்தமாயை, பிரகிருதி என்னும் மும்மாயைகளினின்றும் முப்பத்தாறு தத்துவங்கள் தோன்றச் செய்ததும், ஆன்மாக்கள் பொருட்டு ஐவகைத் தொழில்களைப் புரிவதும், விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் என்னும் ஆன்மாக்களையும், முப்பத்தாறு தத்துவக் கூட்டங்களையும், அத்தத்துவங்களில் உள்ளவர்களையும் தோன்றிய முறைப்படி ஒடுங்கச் செய்து தாம் எக்காலமும் ஒரே தன்மையராய் விளங்குவதும் ஆகிய தம் நிலைமைகள் அனைத்தையும் வேதசிவாகமப்படி தொகை வகை விரியாக உமா தேவியார் கேட்கச் சிவபெருமான் உபதேசித்தருளினர்.

**உமாதேவியார் தம்மை வியந்து கொள்ளுதல்**

கந்தனை அருளிய கடவுள் கூறியவற்றைக் கேட்டுணர்ந்த உமாதேவியார், இறைவனைநோக்கி, "நிருமலமூர்த்தியே! உமக்கு வடிவமில்லை என்று முன்பு கூறினீர்; பின்னர்ப் பல வடிவங்களை நீர் அடைந்ததேன்?" என்று வினவினர். சிவபெருமான் இறைவியைப் பார்த்து, "நமக்கென்று ஒரு வடிவம் இல்லை என்றது பொருந்தும். பின்பு நாம் வடிவம் என்று கூறியவை யெல்லாம் சத்தியின் காரியமே ஆகும்" என்று கூறினர். அதனைக் கேட்ட தேவியார் மெய்ம்மை என்று எண்ணிப் பெருமகிழ்ச்சியடைந்து, "என்னை உம்முடைய சத்தியென்று கூறுவது உண்மையாகில் அவ்வடிவங்களெல்லாம் என்னுடைய வடிவங்களே" என்று தம்மை வியந்து கொண்டார். உடனே சிவபெருமான் தேவியைப் பார்த்து, "நங்கையே! நீ உன் புகழை நம்முன்னே வியந்து பேசினாய்! நாம் ஆணவ இருளில் அகப்பட்டுழலும் உயிர்கடோறும் நிறைந்திருந்து அவற்றை அழியுமாறு செலுத்துவோம். நாம் அச்செயலைச் செலுத்தாவிடில் உயிர்களெல்லாம் அறிவு விளக்கம் பெறுமலே அழிந்து போகும். சத்தியாகிய உன்னிடத்திலும் நாம் இல்லாது போனால் நீயும் உணர்வு பெறமாட்டாய். அதனை நாம் உனக்குக் காட்டுவோம்; காண்பாய்" என்று கூறியருளினர்.

### செயல் புரியாது சிவன் நிற்றல்

சிவபெருமான் பிரமன் முதலிய உயிர்களைத் தாம் இயக்குதலைச் சிறிதே ஒழித்து நின்றார். சிவபெருமான் ஒரு செயலுமின்றி இருந்தமையால் பூவுலக முதலிய புவனங்களிலுள்ள உயிர்களெல்லாம் உணர்வின்றி ஓவியம் போலச் செயலற்று வாளா இருந்தன. ஆட்டுவோன் அது செய்யாவிடத்துப் பாவைகள் குலைந்து வீழ்ந்தாற் போல, உயிர்கள் யாவும் செயல் அழிந்து கிடந்தன.

ஆட்டுவித் திடுபவன் அதுசெ யாவழிக்
கூட்டுடைப் பாவைகள் குலைந்து வீழ்ந்தென
நாட்டிய பரனருள் நடாத்தல் இன்மையால்
ஈட்டுபல் லுயிர்த்தொகை யனைத்து மாய்ந்தவே.

உமாதேவியார் அதனைக் கண்டு பயந்து நடுநடுங்கினர்; அரனடிகளைத் தொழுது, "எம்பெருமானே! நீர் அசையும் பொருள் அசையாப் பொருள் ஆகி எங்கும் நிறைந்து நிற்றலை நான் அறியேன்; உலக முடிவிற்போலச் சீவராசிகளெல்லாம் இருளின் கண்ணே மூழ்கிப்போக, நீர் அவற்றுள்ளே நின்று அவ்வவற்றின் அறிவை இயக்கி நிற்பதை என்பொருட்டு ஓர் இறைப் பொழுது நீக்கி நின்றீர். அதனால் உயிர்களுக்கெல்லாம் அளவற்ற பல யுகங்கள் ஆயின. அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளி, உயிர்கள் யாவும் தெளிவுபெற்றெழுந்து தத்தம் தொழிலில் செல்லும்படி திருவருள் செய்தருள வேண்டும்" என்று பன்முறை பணிந்து வேண்டினர்.

### சிவன் உயிர்களை மீண்டும் இயக்குதல்

சிவபெருமான் உமாதேவியார் விருப்பின்படி உயிர்த்தொகைகள் முன்போல் வினைப்பயனை அனுபவிக்கத் தத்தம் தொழிலில் ஈடுபடத் திருவுளம் கொண்டார். பதினோருருத்திரர்களுக்கு முன்னே உணர்வு வரும்படி செய்தார். அவர்கள் சிவபெருமானை நினைத்து, "இச்செயல் சிவபெருமானுடைய செய்கை" என்று ஞானத்தினால் அறிந்து, செயலற்றுக் கிடந்த சீவராசிகளை எழுப்ப எண்ணி எம்பெருமான் திருவடிகளைப் பூசித்துத் துதிக்கக் கருதினர். சிவபெருமானின் சுடர் வீண்

ணில் இன்மையால் மிக இருளடைந்துள்ள பூவுலகில் திகழும் **திருவிடை மருதூருக்கு** வந்து, "எங்கும் செறிந்த இருள் வீசுத லினால், இஃது இராக் காலமே போன்றுளது. இப்பொழுதே சிவபெருமானுக்கு ஏற்ற பூசையைப் புரிவோம்" என்று ஆராய்ந்தனர். பிறகு பதினோருருத்திரர்கள், குண்டம் மண்ட லம் வேதிகை என்னும் மூன்றனுள் மண்டல மிட்டு அதில் சிவ பெருமானைச் சிவாகம விதிப்படி நான்கு யாமங்களிலும் அன் போடு பூசித்து வழிபட்டார்கள். சிவபெருமான் அவர்கள் வழிபாட்டை உவந்து அங்கு எழுந்தருளினார்; அவர்கள் விரும் பிய வண்ணம் முன்போல எவ்வுயிர்களையும் தொழிற்படுத்தத் திருவுளம் கொண்டார். உடனே நான்முகன், திருமால், இந்தி ரன் முதலிய தேவர்கள் எழுந்தார்கள்; முனிவர்கள் எழுந்தார் கள்; மற்றை ஏனையோர்களும் எழுந்தார்கள்; எல்லாச் சீவராசி களும் உறங்கி எழுந்தாற்போல விரைந்து எழுந்தன. அவற் றைக் கண்ட நான்முகன் முதலியோர், "இச் செயல்கள் யாவும் சிவபெருமானின் செயல்களே" என்று கூறினார்கள். பதினோரு ருத்திரர்களும், "சிவபெருமானே உயிர்களுக்கு உணர்வு தந் தார்" என்று உணர்ந்து, தமக்கெதிரே எம்பெருமான் எழுந் தருளி வர அவர் திருவடிகளை வணங்கித் துதித்தார்கள். சிவ பெருமான் அவர்களை நோக்கி, "உங்கள் விருப்பப்படி உயிர் களுக்கெல்லாம் உணர்வைக் கொடுத்து எழுப்பினோம். நீங்கள் வேண்டும் வரங்கள் யாவை? விரைந்து கேண்மின்கள்" என்றார். அன்பிற் சிறந்த அவர்கள், "எம்பெருமானே! உம்முடைய திருவடிகளை எங்களைப்போல நாடோறும் இராக்காலத்தில் அன் போடு நான்கு யாமங்களிலும் வழிபடுபவர்களுக்கு மாசி மாதத் துக் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி திதியாகிய **சிவராத்திரியில்** அடை யக்கூடியதாகிய சிவபூசாபலத்தைக் கொடுத்தருளல் வேண்டும்" என்று வேண்டினார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி, "நாம் உங்கள் பூசையை மகிழ்ந்து ஏற்றுக் கொண்டமையால் உயிர்கள் யாவும் உய்ந்தன. உங்களைப் போலப் பூவுலகத்தில் நம் மைப் பூசிப்பவர்களுக்கு வீடு பேற்றை அளிப்போம்" என்று கூறி மறைந்தருளினார். பதினோரு ருத்திரர்கள் யாவரும் முன் போலத் தங்களுடைய பதத்தை அடைந்தார்கள்.

**உமாதேவியார் வருந்துதல்**

அப்பொழுது நான்முகன் முதலிய தேவர்கள் அனைவரும் திருக்கயிலாயமலையை அடைந்தார்கள்; சிவபெருமானை வணங்கி நின்று, "உயிர்க்குயிராயுள்ள கடவுளே! நாங்களெல்லாம் உம்முடைய திருவருளைப் பெருமையால் பன்னெடுங்காலம் செயலற்று வீணேகிடந்து பாவத்தில் மூழ்கினோம். அப்பாவங்கள் நீங்குவதற்குரிய வழியைக் கூறியருளும்" என்று வேண்டினார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி, "நீவிர் யாவரும் உணர்வு மயங்கிய காலத்து, வேதாநுட்டானங்களைப் புரியாமையால் உங்கள்பால் வரும் பாவமெல்லாம் உங்களை அடையா; உமாதேவியையே அடையும். இனி, நீங்கள் உங்கள் கடமைகளைச் செய்து கொண்டிருப்பீர்களாகுக" என்று திருவாய் மலர்ந்தருளினார். தேவர்கள் யாவரும் இறைவனை வணங்கி விடைபெற்றுக் கொண்டு சென்றார்கள். அப்போது, உமாதேவியார் சிவபெருமானை வணங்கி, "முன்னாளில் உயிர்களைப் பற்றிய பாவங்கள் என்னை வந்து சாருதற்குக் காரணம் யாது? பணித்தருளும்" என்று வினவினார். சிவபெருமான், "உமையே! முன்னர் நீ உன்னை வியந்தாய்; அதனால் உன்னைக் கோபித்து உனக்காக உயிர்களின் உணர்ச்சியை நீக்கிப் பின்பு உணர்ச்சியை அளித்தோம்; அதனால் அவ்வுயிர்கள் அடைந்த பாவங்கள் யாவும் உன்னை வந்து அடைவதே முறையாகும். மேலும் இப்பெரிய பாவத்தைத் தாங்கும் ஆற்றல் உயிர்களுக்கு இல்லை. உலகத்து உயிர்களுக்கெல்லாம் தாயாக விளங்கும் உன்னால் தான் அதனைத் தாங்க இயலும். ஆதலால், நீயே அப்பாவத்தைச் சுமப்பாயாக" என்று தாம் முன்னர்த் தக்கனுக்குக் கொடுத்த வரத்தைப் பூர்த்தி செய்வாராய் இவ்வாறு கூறியருளினார்.

**உமாதேவியார் காளிந்தி நதியை அடைதல்**

சிவபெருமான் கூறியவற்றைக் கேட்ட உமாதேவியார் நடுநடுங்கி, "பேதமையேன் செய்த பிழையைப் பொறுத்து அப்பாவத்தை அடியேன் நீக்கிக்கொள்ளும் வழியைக் கூறியருளல் வேண்டும்" என்று அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். சிவபெருமான், "உமையே! நீ காளிந்தி என்னும் நதியில் உலகங்களை இரட்சிக்கும் குறிப்போடு ஒரு சங்கின் உருக்

கொண்டு பலகாலம் தவம் புரிவாயாக. தக்கன் என்பவன் அங்கு வந்து உன்னை எடுப்பான். நீ அப்போது ஒரு குழந்தையின் உருவாகி அவன் மனைவியிடத்து அடைந்து சிறுமியாய் வளர்ந்து வருவாய். ஐந்து வயது ஆகியபின், அன்போடு எம்மை நோக்கித் தவம் புரிவாயாக. அப்போது நாம் வந்து உன்னைத் திருமணம் செய்து திருக்கயிலாய மலைக்கு அழைத்துச் செல்வோம்'' என்று கூறியருளினர். அதனை உமாதேவியார் கேட்டு அவருடைய பாதங்களை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, நிலவுலகை யடைந்து **காளிந்தி** என்னும் **யமுனை** ஆற்றை யடைந்தார்; சங்கின் உருவத்தை யெடுத்து ஐந்தெழுத்தைத் தியானித்துக் கொண்டு ஒரு வெண்டாமரை மலரின் மீது தவம் புரிந்து கொண்டிருந்தார்.

திருவிருத்தம்-52
ஆகத் திருவிருத்தம்-242

——oo——

## 6. காளிந்திப் படலம்

**தக்கன் உமாதேவியைக் கண்டெடுத்து வளர்த்தல்**

பல்வகைச் சிறப்புக்கள் நிறைந்த **யமுனா நதியில் மாசி மகப் புனலாட** அந்நாட்டினர் யாவரும் சென்றனர். தக்கனும் அதனை அறிந்து நீராடுதற்கு எண்ணினன். தன் மனைவியாகிய வேதவல்லியைப் பல பெண்களோடும் மற்றைப் பரிசனங்களோடும் முன்னர் அனுப்பிவிட்டு, பின்னர் பிரமனும் முனிவர்களும் ஆசி கூறவும், தேவர்கள் துதிக்கவும் தக்கன் யமுனா நதியை அடைந்து மாசிமகப் புனலாடி மீண்டு திரும்பி வரும் பொழுது, ஓரிடத்தில் ஒரு வெண்டாமரையின்மீது சங்கின் உருவாய் உமாதேவியார் வீற்றிருக்கக் கண்டான். அச்சங்கினைப் பெருமகிழ்ச்சியோடு தக்கன் கையிலெடுத்ததும், அது பேரழகு கொண்ட ஒரு பெண்குழந்தை வடிவமாயிற்று. தக்கன் அதனைக் கண்டு விம்மித முற்று, "சிவபெருமான் எனக்கு அளித்த வரத்தால் உமாதேவியே ஒரு பெண்குழந்தையாய் வந்தாள்" என்பதை ஞானத்தினல் அறிந்து மகிழ்ந்தான். தன் மனைவியாகிய வேதவல்லியை அடைந்து அக்குழந்தையை அவளிடம் கொடுத்

தான். அவள் அதனை மகிழ்ந்து பெற்றுத் தழுவினுள்; தன் தனங்களிலிருந்து ஒழுகும் பாலை யூட்டினுள்; பிறகு தன் மாளிகைக்கு அரமகளிர்கள் துதிப்ப எடுத்துக் கொண்டு சென்று வளர்க்கலானுள். தக்கன் தன் கோயிலை அடைந்து முன்போல் தேவர்கள் சூழ அரசியலை நடத்திக்கொண்டிருந்தான்.

திருவிருத்தம்–20
ஆகத் திருவிருத்தம்–262

——oo——

## 7. உமை தவம் புரி படலம்

**உமாதேவியார் தவம்புரிய எண்ணுதல்**

உமாதேவியாராகிய குழந்தையை வேதவல்லி பேரன்போடு தனது மகளாக வளர்த்து வந்தாள். உமாதேவியார், வளர்பிறை போல வளர்ந்து ஐந்து வயது நிரம்பிப் பின் ஆறும் வயது ஆரம்பமாகியதும், சிவபெருமான் தம்மைத் திருமணஞ்செய்துகொள்ளுதலைக் குறித்துத் தவஞ்செய்ய எண்ணினுர்; தாய் தந்தையர்களாகிய வேதவல்லியையும் தக்கனையும் நோக்கி, "யான் சிவபெருமானுக்கே உரித்தாகும் பேறுடையேன்; அவர் என்னை வந்து மணம் புரிந்துகொள்ளும் பொருட்டுத் தவம் புரிவேன். ஆதலால், அதற்கு ஏற்றதோர் மாடத்தை அமைத்துத் தருவீராக" என்று வேண்டினுள். தாய் தந்தையர் அதனைக் கேட்டு மகிழ்ந்து, நகரின் புறத்தேயுள்ளதோர் இடத்தில் அழகு மிக்கதோர் மாடம் அமைப்பித்து, உமையைப் பலவாறு பாராட்டி, "நீ விரும்பியபடி தவம் செய்வாயாக" என்று கூறி, உமாதேவியாரைப் பல பெண்களோடு தவமாடத்திற்கு அனுப்பினுர்கள்.

**வேதவல்லி, மகளின் திறம் அறிதல்**

தங்களிடம் விடைபெற்றுக்கொண்டு உமாதேவியார் தவம் செய்யவிரைந்து செல்வதைக்கண்ட வேதவல்லி, தக்கனை நோக்கி, "பேதைப் பருவத்தினளாகிய இவள் சிவபெருமானைப்பற்றி எவ்வாறு அறிந்தாள்?" என்று வினவினுள். தக்கன், "மானச வாவியில் தவம் புரிந்து சிவபெருமானிடம் பல வரங்களைப் பெற்றேன். அப்போது உம்முடைய சத்தியாகிய "உமாதேவியார்

எனக்கு மகளாகப் பிறக்க வேண்டும்; நீர் மருகராகவந்து அவளை மணம் புரிய வேண்டும் என்று வரம் பெற்றேன். அதன்படி உமாதேவியாரைச் சிவபெருமான் காளிந்தி நதிக்கு அனுப்பினார். அவள் நம்மிடத்து மகளாய்த் தோன்றினாள். இனி அவள் தவம் புரிந்து சிவபெருமானின் மனைவி ஆவாள். எம்பிராட்டியைப் பேதைப் பருவத்தினள் என்று எண்ணாதே'' என்று கூறினான். வேதவல்லி அவற்றைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தாள்.

**அமலன், அந்தணன் வேடத்தில் வருதல்**

உமாதேவியார், இருமுது குரவர்களுடைய ஏவலினால் சேடியர்கள் சூழ, நியமத்தோடு ஆறாண்டுகள் தவம் புரிந்தார். அவருக்குப் பன்னிரண்டு வயது நிரம்பியது. அப்போது சிவபெருமான் உமாதேவியார் செய்யும் தவத்தை உவந்து ஆண்டுகொண்டருள எண்ணினார்; திருக்கயிலைமலையை நீங்கி ஓர் அந்தணக் கோலத்தோடு கூடிய பிரமசாரியாக, உமாதேவியார் தவம்புரியும் மாளிகையை அடைந்தார். காவல் புரிந்துகொண்டிருந்த சேடியர்கள் அவருடைய பாதங்களை வணங்கினார்கள்; அம்மையாரின் அனுமதிபெற்று, அந்தணரை உள்ளே அழைத்துச் சென்றனர். தேவியார் அவரை விரைந்து எதிர்கொண்டு சென்று, "இவர் சிவபெருமானின் அடியார்'' என்று பூசித்து வணங்கித் துதித்து நின்றார். அந்தணர் தேவியாரை நோக்கி, "அழகிற் சிறந்த பெண்ணே! நாம் இங்கே ஒரு காரியம் கருதி விரைந்து வந்துள்ளோம்; அருள் செய்வாயாயின் அதனைச் சொல்வோம்'' என்றார். உடனே தேவியார், "எனக்கு இசைந்ததொன்றைக் கூறினால் இப்பொழுதே உமக்கு அதனை யான் தருவேன். நீர் விரும்புவது யாது? கூறும்'' என்று கேட்டாள். அந்தணர், "உன்னை நாம் மணம் புரியவேண்டி வந்தோம்; அதனையே நீ எனக்கு அருள்புரிய வேண்டும்; தடுத்துக் கூறாதே'' என்றார். பிரமசாரி வடிவுகொண்ட சிவபெருமான் கூறிய அவ்வார்த்தைகளைக் கேட்ட அம்மையார், உடனே கைகளால் தன் காதுகளைச் 'சிவ சிவ' என்று பொத்திக் கோபம் கொண்டு பெருமூச்சுவிட்டு, "நீர் இவ்வாறு கூறுவது அடாது. ஒப்பற்ற சிவபெருமான் வந்து

என்னை மணம் புரியுமாறு வேண்டி யான் அருந் தவம் புரிகின்றேன்'' என்றார். உடனே அந்தணர், "யாவராலும் அறிதற்கரிய முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் உன்னை மணம் புரிதல் அரிது. கன்னியே! நீ பெரிய தவம் புரிந்து வருந்தாதே'' என்று கூறினர். அதனைக் கேட்ட உமாதேவியார், "சிவபெருமானே விரும்பி வந்து என்னை மணம்புரியும்படி நான் அரிய தவம் புரிவேன். அவர் அங்ஙனம் வாராவிடில், நான் என் உயிரை வலிய விடுவேன்; இது நிச்சயம். நீ ஒரு பித்தனோ? இங்கு நில்லாது வெளியே போ! போ!'' என்று கடிந்து கூறிவிட்டு ஒரு பக்கம் போயினர்.

**சிவபெருமான் மெய்யுருவம் காட்டியருளல்**

சிவபெருமான் உமாதேவியார் கூறியவைகளைக் கேட்டு மகிழ்ந்து, "பெண்ணே! உன் அன்பையும் உறுதியையும் கண்டு வியந்தோம்'' என்று கூறிப் பிறரொருவரும் அறியாவண்ணம் தம் மெய்யுருவத்தைத் தேவியாருக்குக் காட்டியருளினர். உமாதேவியார், இறைவரைக் கண்டு மெய்ந்நடுங்கி, "தேவரீர் மாறுவேடம் பூண்டு வந்ததை நான் அறியேன்; எவரோ என்று எண்ணி இகழ்ந்துவிட்டேன். அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்'' என்று வேண்டினர். சிவபெருமான் உமாதேவியாரைப் பார்த்து, "உமையே! நீ வருந்தாதே; உன் செயல் யாவும் நன்றே'' என்று கூறினர். உமாதேவியார் பின்னும் சிவபெருமான் திருவடிகளை வணங்கித் தன் பக்கத்தில் நின்ற சேடியர்களை நோக்காமலும், வேறொன்றையும் நினையாமலும், ஆனந்தக் கண்ணீர் சொரியச் சிவபெருமானின் புகழ்களைத் துதித்துக்கொண்டு நின்றார். பக்கத்தில் நின்ற சேடியர்கள், "நம்முடன் பலகாலம் பழகிய தேவி நம்மை நோக்காது அந்தணன் மாயத்தில் அகப்பட்டனள் போலும்! இவர்கள் நிலைமை முன்னே எதிர்ப்பட்டார் இருவர் ஒருவரை யொருவர் சந்தித்த தன்மை போன்றது; இதனை நாம் ஆராய வேண்டும்'' என்று மனத்தில் ஐயங்கொண்டார்கள். சிலர் மிக விரைந்து தக்கனை அடைந்து, "உன் மகளுடைய நிலைமை இத்தன்மையது'' என்று நிகழ்ந்தவற்றையெல்லாம் முறையாகக் கூறினார்கள். தக்கன் மனத்தில் ஓர்ந்து ஞானத்தால் ஆராய்ந்தபொழுது தவமாடத்திற்கு

எழுந்தருளி வந்தவர் சிவபெருமானே என்பதை அறிந்தான்; அளவற்ற மகிழ்ச்சி கொண்டு எழுந்து துள்ளி, " நான் பெற்ற பெண்ணைச் சிவபெருமானுக்கே திருமணம் செய்து கொடுப் பேன் " என்று கூறினன்.

திருவிருத்தம்-30

ஆகத் திருவிருத்தம்-292

——oo——

## 8. திருமணப் படலம்

**உமாதேவியார் திருமணம்**

தக்கன் உமாதேவியாரைச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்து கொடுக்க ஏற்றதோர் நல்ல முகூர்த்தத்தை ஆராய்ந் தான். அன்றைக்கே நல்லதோர் நேரம் வந்தது. தக்கன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து, " இன்றே என் மகளைச் சிவ பெருமானுக்கு மணஞ் செய்துகொடுப்பேன் " என்று உறுதி செய்தான்; ஒற்றர்களை அனுப்பித் தேவர்கள் யாவரையும் அழைத்து வரச்செய்தான்; தன் நகரத்தையும் கோயிலை யும் அலங்கரிக்கும்படி செய்தான்; உமாதேவியின் தவச் சாலையை அடைந்தான்; அங்கு எழுந்தருளியிருந்த சிவ பெருமானுகிய அந்தணருடைய திருவடிகளை வணங்கி, " உம்மை மணம் புரிந்து கொள்ளும்படி நம்முடைய மகள் தவம் புரிந்தாள். அடியேன் நகருக்கு எழுந்தருளுக " என்று வேண்டினன். சிவபெருமான் நன்றென்று உமாதேவியோடு தட்சபுரியிலுள்ள தக்கன் மாளிகையை அடைந்தார். அவரெ திரே மங்கையர் மங்கலப் பொருள்களை ஏந்தி வந்தார்கள். பிறகு சிவபெருமான் உமாதேவியாருடன் மாளிகையுட் சென்று ஓர் ஆசனத்தில் வீற்றிருந்தருளினர். அப்போது வேதவல்லி உமா தேவியைக் கண்டு மகிழ்ந்து தன் கோயிலுக்கு அழைத்துச் சென்ருள்; உமாதேவியின் கூந்தலின் சடையை மெல்லப் பிரித்து வாசனை நெய் பூசிக் கங்கை நீராட்டி ஆடையாபரணங்கள் அணி வித்து எம் பெருமானுக்கு அருகில் அழைத்து வந்து அமரச் செய்தாள். திருமால், நான்முகன், இந்திரன் முதலியதேவர்கள் தூதுவர்களின் வார்த்தையைக் கேட்டு மகிழ்ந்து திருமணத்தின்

பொருட்டு விரைந்து வந்து, சிவ பெருமானை வணங்கினார்கள். கின்னரரும் கருடரும் யாழ்வாசித்து மங்கல கீதம் பாடினர். அரம்பையர்கள் கற்பக மலர்களைத் தூவி மங்கலகீதம் பாடினார் கள். வேதவல்லி நீர்விடத் தக்கன் வேதமந்திரங்களைக் கூறிச் சிவபெருமான் திருவடிகளை விளக்கிப் பூசைசெய்து, உமாதேவி யாரின் திருக்கரத்தை அவருடைய திருக்கரத்தின்மேல் வைத்து, "உமாதேவியை உமக்குத் திருமணம் செய்து கொடுத்தேன்; அவளைப் பாதுகாத்தருளும்" என்று கூறிக் கரக நீர் வார்த்துத் தத்தம் செய்தான். தேவர்கள் முதலியோர் திருமணக்கோலத் தைக் கண்டு கை தொழுது ஆரவாரம் செய்தனர். நான்முகன் திருமணச் சடங்குக்கு வேண்டிய உபகரணங்களைக் கொண்டு வந்தான்; திருமால் முதலியோர் வேதங்களை ஒலிக்க, வேத முறைப்படி மணச்சடங்குகளைச் செய்து முடித்தான். அப்போது திடீரென்று சிவபெருமான் தம்முடைய திருவுருவத்தை மறைத் தருளினார். உமாதேவியார் இறைவனைக் காணாதவராய்த் தவஞ் செய்து பெற்ற சேமநிதியை இழந்தவர் போல உவகை நீங்கி வருந்தினார்; இலக்குமி முதலிய பெண் கூட்டத்தில் சென்று விம்மி உயிர்த்து அழுதார்; அயர்ந்து வாடினார்; மனம் வெதும்பி இரங்கினார்.

**உமாதேவியார் மீண்டும் தவம் புரிதல்**

உமாதேவியாரின் துன்ப நிலையைக் கண்டு வேதவல்லி, "மகளே! நீ மனந்தளராதே; உன் கணவரை நீ அடைவதற்கு மீண்டும் தவம்புரிதலே சிறந்த வழி; இன்னும் அதனையே செய்வாயாக" என்று கூறினாள். அங்கு நின்ற நாமகளும், திரு மகளும், "அன்னையே! வாழி; நீ உலகங்கள் யாவற்றையும் ஈன்றவள்; உலகங்களில் உள்ள பொருள்கள் யாவும் உன்வடி வமே; எவ்விடத்தும் உன்னைவிட்டு நீங்காத உன் நாய கரை உன்னில் நின்றும் மறைக்கும் மறைவு உள்ளதோ? தவத்தைக் காக்கும்படி நினைத்தாயோ? உங்கள் திரு விளையாடல்களை யார் அறியவல்லார்? உங்களைத் தரிசித்ததால் எங்கள் வினைகள் போயின. நாங்கள் பிறவிக் கடலை நீந்தினோம்; மனத்தில் ஞானம் வரப்பெற்று உய்ந்தோம். இப்பேறு பெற நாங்கள் என்ன தவம் செய்தோமோ?" என்று வாழ்த்தினார்கள். உமாதேவி அவர்களுக்கு அருள்புரிந்து தவச்சாலையை அடைந்

தார். திருமால் முதலாயினோர் இறைவன் மறைந்ததை எண்ணிக் கவலையுற்றார்கள். இவற்றை யெல்லாம் கண்ட தக்கன் மிகவும் சினந்து எழுந்தான்; கண்கள் சுழல உயிர்த்தான்; மூக்குமேல் விரல் வைத்து மனம் புழுங்கினான்; "நான் சிறப்புடன் செய்த திருமணம் மிக அழகாக இருக்கிறது! சிவன் எனக்கு அருளிய வரம் காரணமாக என் மகளிடம் வந்து தன்னை மணம் புரிந்து கொள்ளும்படி இரந்தான்! நான் அதனைக்கேள்வியுற்றுத் தேவர்கள் முன்னிலையில் முறைப்படி மணம் செய்து கொடுத்தேன். கொடுத்த பின் எவரும் நாணமுறும்படி அந்தச் சிவன் மறைந்தான்! அவன் என்னிடத்து என்ன குற்றத்தைக் கண்டானோ? அழகோடு செய்த திருமணச் சடங்கைச் சிறுமை ஆக்கி ஊறு படுத்தி அதன் மூலம் எனக்கும் பழியை உண்டாக்கி ஒளித்தானே! தாயும், தந்தையும், உறவினரும், யாருமின்றிப் பொது இடமே தனக்கு வீடு என்று கொண்டு அங்கே கூத்தாடுகின்ற ஒரு பித்தன் மறையோனாய்விடின், அவனுடைய மயக்கம் போகுமோ? ஆராய்ந்து பார்த்தால் அவன் இயல்பு தீயதே. இன்றைக்கு யான் அதனை அறிந்தேன்" என்று கூறினான். திருமால், பிரமன் முதலான தேவர்களை, "நீங்கள் உங்கள் உலகங்களுக்குப் போங்கள்" என்று அனுப்பிவிட்டுச் சிவபெருமான் செய்த மாயத்தை நினைத்து நினைத்துக் கோபமடைந்து இருந்தான்.

**உமாதேவியார் சிவபெருமானுடன் கயிலாயமலையை அடைதல்**

உமாதேவியார் முன்னைத் தவச்சாலை அடைந்து பல பெண்கள் தம்மைச் சூழ அங்கே வீற்றிருந்து சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தார். சிவபெருமான், ஒரு நன்னாளில் வெண்டலை மாலையும், விபூதிப்பூச்சும், உருத்திராட்ச மாலையும், காதணியும், சிலம்பும், சூலமும், சடையும் ஆகிய இவற்றைத் தரித்த ஒரு தவ வேடம் பூண்டு, உமாதேவியாரிடத்து எழுந்தருளி வந்தார். அவரை உமாதேவியார் சிவனடியார் என்று எண்ணி வணங்கித் துதித்தார். உடனே சிவபெருமான் இடபவாகனத்தின் மீது உமாதேவியார் இடப்பாகத்திலில்லாது தாமாந் தன்மையை அறிதற்குரிய வடிவத்தோடு தோன்றியருளினார். உடனே தேவியார், "பரமசிவன் நம்மிடத்து எழுந்தருளி வந்தார்" என்று மகிழ்ந்து, அவர் திருவடிகளில் பன்முறை வீழ்ந்து வணங்கித் துதித்து,

"முன்னர் என்னை விடுத்துச் சென்ற குறையை நீக்குவதற்கு எழுந்தருளினீர் போலும்" என்றார். சிவபெருமான் அவரை அழைத்து இடபவாகனத்தில் அமரச் செய்து திருக்கயிலாயத்தை அடைந்தார்.

**தக்கன் சினம் அடைதல்**

உமாதேவியாரின் சேடியர்கள் அதனைக் கண்டு வருந்தி இரங்கித் தக்கனை அடைந்து, "சிவபெருமான், தவவேடம் பூண்டு வந்து, தம் பழைய உருவைக் காட்டி உமாதேவியாரை அழைத்துச் சென்றுவிட்டார்" என்றார்கள். தக்கன் அச்செய்தி கேட்டு, அளவற்ற கோபங்கொண்டான். அப்போது தேவர்கள் அங்கு வந்து தக்கனை வணங்கிப் பக்கத்திலிருந்தார்கள். தக்கன் தன் அருகிலிருந்த தேவர்களை நோக்கி, "முன்னே என் மகளைத் திருமணஞ் செய்து மணச்சடங்கு முடிவதற்குள் சிவன் திடீரென்று மறைந்து போனான். பிறகு தவ வேடம் தாங்கி, என் மகளிடம் நானறியாது சென்று அவளை அழைத்துச் சென்றான். தாய் தந்தையர்களாகிய எங்களை மறைத்து இவ்வாறு செய்தது முறையாகுமோ? அவன் எங்கள் குலத்துக்கு இழுக்கைத் தேடினான்; என் ஆணையைக் கடந்தான். சிவன் பிச்சை எடுத்தான் என்று முன்னரே இழிவாகக் கூறுகிறார்கள். இப்போது களவு செய்தான் என்னும் செய்தி எங்கும் பரவியது. வேறு பழியும் வேண்டுமோ?" என்று பற்பலவாறு கூறிச் சிவபெருமானை இகழ்ந்தான்; தம் அருகிலிருந்த தேவர்களை அவரவரிடங்களுக்கு அனுப்பிவிட்டு அன்று முதல் சிவபெருமானை நினையாமல் இகழ்ந்து சினத்தோடு இருந்தான்.

திருவிருத்தம்–55
ஆகத் திருவிருத்தம்-347

——oo——

## 9. தக்கன் கயிலை செல் படலம்

**தேவர்கள் யோசனை**

தக்கனுடைய செயலைக் கண்ட பிரமன் முதலிய தேவர்கள் வருந்தி, "தவம் செய்து சிவபெருமானிடமிருந்து செல்வங்களைப் பெற்ற தக்கன், அவரை எண்ணாமல் இறுமாப்படைந்

திருக்கிறான். ஆதலால் அவன் விரைவில் உயிரை இழப்பான். அவனுக்கு நாம் ஏவல் புரிந்துவருவதால் நம் உயிர்க்கும் அழிவுக் காலம் வந்தது போலும். ஆனால் நாம் தக்கனுக்கு ஏவல் புரிவதை விடுத்து, அவனை மதியாதிருப்போமாயின் அவன் நம் பதங்களை மாற்றுவான். ஆதலால், தக்கனைத் திருக்கயிலாயமலைக்குப் போகும்படிச்செய்தால் அவன் சிவபெருமானை அன்போடு தரிசிப்பான். அதனால், அவன் செல்வங்கள் அழியாது நிலைபெறும்; நமக்கும் நாசம் வாராது'' என்று எண்ணினார்கள்; தக்கனை அடைந்து, ''அரசே! நீ உன் தவத்தால் பெற்ற உமாதேவியாரையும், சிவபெருமானையும் மறக்கின்றனை போலும். இஃது உன் பெருந்தன்மைக்குப் பொருந்தாத செயல். குற்றம் பார்க்கில் ஒருவருக்குச் சுற்றம் எவ்வாறுளதாகும்? ஆதலால், நீ திருக்கயிலாயம் சென்று உன் மகளையும் மருகரையும் கண்டு வருதலே சாலச் சிறந்ததாகும்; இதனைச் செய்யாதொழியின் உனக்கு வசை உண்டாகும்'' என்று எடுத்துக் கூறினார்கள்.

**தக்கன் கயிலை செல்லப் பூதர்கள் தடுத்தல்**

தக்கன் தேவர்கள் கூறியதைக் கேட்டு யோசித்து உமாதேவியாரையும் சிவபெருமானையும் திருக்கயிலாயம் சென்று காண இசைந்தான். நான்முகன் முதலிய தேவர்களைத் தன் நகரிலேயே இருக்கச் செய்துவிட்டுத் தன்னை நீங்காத சில துணைவர்களோடு தக்கன் திருக்கயிலாய மலையை அடைந்து, சிவபெருமான் வீற்றிருக்கும் செம்பொற்றிருக் கோயிலை அணுகி, திருநந்திதேவர் இருக்கின்ற கோபுரவாயிலைச் சார அங்குக் காவல் செய்யும் பூதர்கள் அவனை உள்ளே செல்லவிடாது தடுத்தனர். தக்கன் அதனைக் கண்டு பூதர்களைக் கோபித்து, ''என் மகள் தன் கணவனோடு இங்கு இருப்பதைக் காண வந்தேன். நீவிர் என்னைத் தடுப்பதற்குக் காரணமென்ன?'' என்றான். வாயில் காக்கும் பூதர்கள் அவனைக் கோபித்துப் பார்த்து, ''மிகவும் அறியாமை பொருந்திய தக்கனே! முன்னாளில் நமது கடவுளாகிய சிவபெருமானை நீ இகழ்ந்தாய். அத்தன்மையையுடைய நீ இங்கே எவ்வாறு வரலாம்? முப்புரத்தரக்கர்கள் உலகத்தார்களையும் தேவர்களையும் வருத்தினாலும் சிவபெருமானுக்கு நல்லவர். அவர்கள் சிவபெருமானிடத்துக் கொண்டுள்ள அன்பில் ஓர்

அணுவாயினும் நின்பால் இல்லை. நீ எவ்வாறு வாழ்வாய்? சிவபெருமானிடம் மேலாகிய வரங்களைப் பெற்று அனுபவித்தும் நீ செய்ந்நன்றி கொன்றாய்! மாய வலையில் சிக்கி அறிவுகெட்டிருக்கின்றாய்! சிவபெருமானைப் போற்றாத தீவினையாளர்களுடைய பழக்கமே கூடாது. மிகக் கொடியோனாகிய உன்னைப் பார்த்து நாங்கள் பேசுவதே பாவம். ஆயினும் நீ அன்புடன் சென்று எம்பெருமானை வணங்குவதாயிருந்தால் இங்கே நில். இன்றேல் உன்னுடைய நகருக்குத் திரும்பிச் செல்லுதி'' என்று கூறினார்கள்.

**தக்கன் சிவதூஷணை புரிந்து தன்னகர் திரும்புதல்**

தக்கன் அவற்றைக் கேட்டுப் பெரும் கோபங்கொண்டான்; பூதர்களால் காக்கப்பெறுகின்ற வாயிலைக் கடந்து உள்ளே செல்ல முடியாதவனானான்; மிகவும் நாணி மனம் வருந்தினான். அங்கு நின்று திரும்பத் தொடங்கியவன் பூதர்களைப் பார்த்து, "ஓ பூதர்களே! இனி எக்காலத்திலும் உங்கள் கடவுளாகிய சிவனை நான் வணங்கேன். அவன் என் மருகன். இதனை நீங்கள் அறியீர் போலும். நான்முகனும் திருமாலும் எனக்கு ஏவல் புரிகிறார்கள். மற்றை யாவரும் என்னுடைய தொண்டர்கள். பெரிய நிலவுலகை அரசு புரியும் பேரரசன் நான். என் பெயர் தக்கன் என்பர். உங்களுடைய பெரும் பித்தனை நான் போய் வணங்குவேனோ? என்னைப் பார்த்து, 'இங்கே நில்' என்று நீவிர் தடை செய்தது என் மருகனும் மகளுமேயன்றி நீங்கள் அல்ல. எண்ணிப்பாராது இங்ஙனம் நடந்துகொண்ட உங்கள் கடவுளை இனி எவரும் வந்து வணங்காமலும், துதிக்காமலும் புகழ்ந்து பேசாமலும், இகழும்படியும் செய்வேன்'' என்று கூறி முன்செய்த வினை தன்னைப் பிடர் பிடித்துத் தள்ளக் கயிலையை விட்டுப் புறப்பட்டுத் தன்னகரை அடைந்தான்.

**தேவர்களுக்குத் தக்கன் கட்டளை யிடுதல்**

தன்னகர் திரும்பிய தக்கன், நான்முகன் முதலிய தேவர்களை நோக்கி, "என் மகளும், சிவனும் ஒத்த மனமுடைவர்களானார்கள்; என்னைத் தங்கள் வாயிற் காவலர்களைக் கொண்டு உள்ளே விடாது தடுப்பித்தார்கள்; பலவாறு பூதர்களைக் கொண்டு

நம்மை இகழவும் செய்தார்கள்; ஐயோ! அவற்றை என்னென்று நான் வாயாற் கூறுவேன்? அவர்களைக் குறை கூறுவதில் பயனில்லை. அவர்களைக் காணச் சென்ற என்னையே நொந்து கொள்ளவேண்டும். இன்று முதல் நீங்கள் யாவரும் என்னை மதியாத சிவனையும் உமையையும் வணங்கித் துதிப்பதை விலக்குக; அன்றியும் அவர்களை மதியாதீர்கள். என் கட்டளையை மறுத்தால் உங்கள் உரிமைகளை இன்றைக்கே விரைவில் மாற்றுவேன். இஃது உறுதி" என்று கூறினான். தேவர்கள் யாவரும் தக்கனை நோக்கி, "நாங்கள் யாவரும் உன் கட்டளையை மறுத்ததும் உளதோ? இல்லையே. எப்பொழுதும் உன் பணியிலே நிற்போம்; எங்களைக் கோபியாதொழிக" என்று கூறித் தத்தம் பதங்களை அடைந்தார்கள்.

திருவிருத்தம்-23

ஆகத் திருவிருத்தம்–370

——oo——

## 10. பிரம யாகப் படலம்

**நான்முகன் வேள்விக்குரிய ஏற்பாடுகளைச் செய்தல்**

தக்கனின் ஆணைக்கு அஞ்சி யாவரும் பலகாலம் அவனுக்கு வேண்டிய பணிகளைச் செய்து வந்தனர். நான்முகன், ஒரு நாள் சிவபெருமான் திருவருளால் ஒரு வேள்வியைச் செய்ய எண்ணினான்; அதற்கு வேண்டிய பொருள்கள் யாவற்றையும் சிரத்தையுடன் சேகரித்து, தக்கன் கூறியதை நினைத்து, "நானே இறக்க நேரினும் நான் சிவபெருமானை இங்கு அழைப்பித்து முதலில் அவருக்கு அவிப்பாகத்தை அளிப்பேன்; இஃது என் துணிவு" என்று கூறி, மனத்தை உறுதிப்படுத்தித் தன் ஏவலைச் செய்யும் புதல்வர்களை அழைத்து, "திருமால் முதலிய தேவர்கள் அனைவரையும் அவிப்பாகம் கொள்ளும்படி நீவிர் அழைத்து வருதிர்" என்று கூறினான். பிறகு, பிரமதேவன் திருக்கயிலாய மலையை அடைந்து திருநந்திதேவர் அனுமதி பெற்று உள்ளே சென்று சிவபெருமானை வணங்கித் துதித்தான். சிவபெருமான் நான்முகனை நோக்கி, "பிரமனே! நீ இங்கு வந்த காரணம் யாது?" என்று வினவியருளினார். நான்முகன், "எம்பெருமானே!

அடியேன் ஒரு யாகம் செய்யப் போகிறேன் ; தேவரீர் அங்கே எழுந்தருளி வந்து அது முடியுமாறு அருள்புரிய வேண்டும்'' என்று வேண்டினன். இறைவன் திருப்புன்முருவல்பூத்து, ''நம் வடிவத்தைக் கொண்ட நந்தி அங்கு வருவான்; நீ போ'' என்று கூறியருளினர்.

பிறகு நான்முகன் சிவபெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு தக்கனை அடைந்து வேள்விக்கு வருமாறு அழைத்து விட்டுத் தன் இருப்பிடமாகிய மேருமலையிலுள்ள **மனோவதி நகரை** அடைந்து யாகம் செய்யலுற்றான். அதனைத் திருமால், இந்திரன், தேவர்கள், முனிவர்கள் யாவரும் அறிந்து தக்க னிடம் வந்தார்கள். தக்கன் அவர்களோடு கூடிச் சிவபெருமா னுக்கு அளிக்கும் அவிப்பாகத்தை விலக்கும்படி முயன்று, அவர்கள் யாவரும் தன்னைத் துதித்துச் சூழ யாகத்திற்கு வந் தான். நான்முகன் எழுந்து தக்கனுக்கு ஆசி கூறித் தமக்குப் பக்கத்திலே ஓர் ஆசனத்தில் இருத்தி, திருமாலை வணங்கி அவரை யும் ஓர் ஆசனத்தில் இருத்தி, இந்திரன் முதலிய தேவர்களை அவரவர் தகுதிக்கு ஏற்றவாறு இருக்கை அளித்துப் போற்றி னன்.

**வேள்விக்குத் திருநந்திதேவர் வருதல்**

சிவபெருமான் நந்திதேவரைப் பார்த்து, ''நீ நான்முக னுடைய யாகத்திற்குச் சென்று நம் அவிப்பாகத்தைப் பெற்று விரைவில் வருக'' என்று பணித்தருளினர். திருநந்திதேவர் சிவபெருமானை வணங்கித் தியானித்துக்கொண்டு நூறுகோடி பூதகணங்கள் சூழ, பிரமதேவனுடைய யாகத்திற்கு வந்து சேர்ந் தார். நான்முகன் அவரைக் கண்டு விரைந்தெழுந்து வணங்கி ஒரு அரியணை மீது வீற்றிருக்கச் செய்தான்; திருநந்திதேவ ருடன் வந்த பூதப்படைத் தலைவர்கட்கும் இருக்கைகள் அளித் தான் ; பிறகு யாகத்தைச் செய்தான். அப்போது தக்கன் அதனைக் கண்டு மிகவும் கோபங்கொண்டு, ''இவன் கயிலாயத் திலுள்ள நக்கனுடைய ஆள் போலும்'' என்று நகைத்தான்; ''திருமால் முதலிய தேவர்களும், இலக்குமி முதலிய தெய்வ மக ளிரும், முனிவர்களும் சூழ்ந்திருக்கும் பிரமனுடைய யாகத்தில் நஞ்சையுண்டு கூத்தாடும் சிவனின் காவலனாகிய நந்தியும் பூதர்

களுமோ வந்திருப்பது? இது நன்றாயிருக்கிறது! சிவனுடைய வெள்ளி மலையைக் காக்கும் நந்தியையும் பூதர்களையும் இங்கே அழைத்தவர் யார்?'' என்று உள்ளத்தில் எண்ணலானான். தேவர்கள் அஞ்சும்படி நான்முகனை நோக்கி, ''நீ யாகம் செய்யப் போவதைச் சிவனுக்குத் தெரிவித்து அவன் அனுப்ப வந்த நந்தியை என் முன்னிலையில் அன்போடு தொழுது நடுவில் அமரச் செய்தாய். உனக்கு இது தகுமோ? நீ என் தந்தையானதால் பிழைத்தாய். இல்லையேல் உனது தலையைத் துண்டாடியிருப் பேன். இன்னும் ஒன்று யான் கூறுகிறேன். கேட்பாயாக; சுடுகாட்டை இருப்பிடமாகக் கொண்டு பூதர்கள் சூழச் சூலம் ஏந்தித் தீயில் நின்றாடும் சிவனுக்கு நீ முன்போல் அவிப்பாகம் கொடாதே. இன்று முதல் அஃது அவனுக்குக் கிடையாது. எலும்பையும், பாம்பையும், தலைமாலையையும் தாங்கிச் சாம் பலைப் பூசும் பித்தனா அவிப்பாகம் ஏற்பதற்குரியவன்? இன்று வரை அங்ஙனம் செய்வது வேத ஆசாரம் என்று கருதி யாவரும் செய்துவந்தார்கள். இனி அதனை மாற்றித் தேவர்களுக் கெல் லாம் கொடுப்பாயாக. இன்று முதல் திருமாலையே கடவுளாகக் கொண்டு அவருக்கு அவியை முதலில் கொடுப்பாயாக. சிவனைப் பரம்பொருள் என்று கூறிய மறைகளை விலக்குவாயாக'' என்று தக்கன் கூறினான்.

### திருநந்திதேவர் சினங்கொண்டு சாபமிடல்

திருநந்திதேவர் தக்கன் கூறிய மொழிகளைக் கேட்டு, காது களை இரு கைகளினாலும் பொத்தினார்; அன்போடு சிவநாமங்களை எண்ணினார்; ''இப்பாதகனின் அடாத சொற்களைக் கேட்கும் படி எம்பெருமான் என்னை இங்கு அனுப்பினாரே'' என்று வருந் தினார்; திடீரென்று சினம் பொங்கி எழுந்தார். அவர் சினத் தைக் கண்டு தேவர்கள் யாவரும் நடுங்கினார்கள்; அக்கினியும் வருந்தினான்; உயிர்கள் யாவும் அசைந்தன; திருமாலும் நான் முகனும், ''சிவபெருமானின் கீர்த்திகளுள் ஒரு சிறிதையும் நினையாது, அவருக்குரிய அவியை விலக்கிய தக்கனுக்கு அஞ்சி அவன் வார்த்தைக்கு எதிராக ஒன்றும் கூறாது நாம் இங்கிருந் தோம். அந்தோ! அதனைப் பொறாதுதான் நந்திதேவர் கோபம் கொண்டு எழுந்தார்'' என்று எண்ணி மனம் வருந்தினார்கள். அப்

போது திருநந்திதேவர் தக்கனைத் தீயெழப்பார்த்து, "சிவபெருமானை இகழ்ந்த உன் வாயைத் துளைத்திடுவேன். ஆனால் அங்ஙனம் செய்வது கடவுளின் ஆணையன்று; அதனால் நீ உய்ந்தாய். இனி எம்பெருமானை இகழ்ந்தாயாயின் விரைவில் உன் தலையைத் துணிப்பேன்" என்று தக்கன் அஞ்சுமாறு கூறினார். மேலும் தக்கனைப் பார்த்து, "வேள்வியில் சிவபெருமானுக்கு அவிப்பாகம் இல்லை என்று இயம்பினாய். வேள்விக்கு இறைவர் சிவபெருமான் அல்லர் என்றால், வேறு யார் இறைவர் ஆவர்? நீ திருமாலைப் பரம்பொருள் என்று கூறினாய். சிவபெருமானை விலக்கி வேள்வி செய்வோருடைய தலை விரைவில் அறுந்து விழுவதாகுக" என்று சபித்தார். தக்கன் அம்மொழிகளைக்கேட்டுத் துணுக்குற்றான். திருநந்திதேவர் மேலும் தக்கனைப் பார்த்து, "சிவபெருமானின் இயல்புகளை மதியாத உன் வளங்கள் யாவும் விரைந்து அழிக. எம்பெருமானைப் புகழாது இகழ்ந்த வாயையுடைய உன் தலை அழிய வேறோர் இழிவான தலை எவரும் காணும்படி விரைவில் உண்டாகுக. உன்னைச் சார்ந்த தேவர்கள் யாவரும் ஒருநாள் இறந்து மீண்டெழுந்து அளவற்ற யுககாலம் சூரன் என்னும் அவுணனால் துன்பக்கடலில் மூழ்க!" என்று பல சாபங்களை இட்டார். பூதகணங்கள் சூழ, திரு நந்திதேவர் திருக்கயிலாயத்தை அடைந்து, சிவபெருமானிடம் நிகழ்ந்தவைகளை விண்ணப்பஞ்செய்து முன்போலத் தமது கீழ்த்திசை வாயிலைக் காவல் செய்திருந்தார்.

### பிரமதேவன் வேள்வியைக் கைவிடுதல்

திருநந்திதேவர் யாகசாலையை விட்டு நீங்கிச்சென்றதும், அந்த யாகத்தில் இருந்த தேவர்கள் யாவரும் "இஃது என்ன விளைந்தது?" என்ற இரங்கி ஏங்கினார்கள். நான்முகன் இரு தலைக்கொள்ளி எறும்புபோலத் திருநந்திதேவரின் சாபத்தை எண்ணி எண்ணி வருந்தினான்; ஒருபுறம் தக்கனின் சொல்லை மறுப்பதற்கு அஞ்சி மிகவும் மனம் வருந்தித் தாம் எடுத்த வேள்வியின்சடங்குகளைக் கைவிட்டான். தக்கன் அதனைக்கண்டு ஒன்றும் பேசாமல் கோபங்கொண்ட மனத்தினனாய்த் தேவர்களோடு எழுந்து தன்னகரை அடைந்தான். தேவர்கள் யாவரும் திருநந்தி

தேவரின் சாபத்தை எண்ணி வருந்தியவாறு தம் தம் இடங்களை அடைந்தார்கள்.

திருவிருத்தம்-33
ஆகத் திருவிருத்தம்-403

——oo——

## 11. சாலை செய் படலம்

**தக்கன் வேள்வி புரிய எண்ணுதல்**

முனிவர்களும், தேவர்களும், அந்தணர்களும் நீண்ட காலமாக வேள்விபுரிவதை விடுத்தார்கள். ஒருநாள் தக்கன் தன் முன் வந்த தேவர்களை நோக்கி, "வேதங்களை அறிந்த தேவர்களே! நெடுங்காலமாக நீங்கள் ஏன் யாகங்களைச் செய்யாது விட்டீர்? அதனை எனக்குச் சொல்லுங்கள்" என்று வினவினன். தேவர்கள், "அரசே! முன்னாளில் நான்முகன் புரிந்த யாகத்திலே, நீ அவிப்பாகத்தைச் சிவபெருமானுக்குக் கொடாதொழிக என்று கூறியுள்ளாய். அதனாலும் நந்திதேவர் இட்ட சாபத்தாலும் யாங்கள் யாகம் புரியாதிருக்கின்றோம்" என்றார்கள். தக்கன் அவர்களை நோக்கி, "அந்நாளில் சிவன் அனுப்பிய நந்திக்குப் பயந்து, இந்நாளிலும் நீங்கள் அஞ்சி யாகம் செய்யாமல் விடுத்தீர்கள். முதலில் வேத முறைப்படி நான் ஒரு யாகத்தைச் செய்வேன். அது முடிவுபெறுமாயின் பின்னர் நீங்கள் விரும்பிய யாகங்களைச் செய்யுங்கள்" என்று கூறினன். தேவர்கள் "நீ முதலில் ஒரு யாகத்தைச் செய்தலே முறை" என்று கூறிச் சென்றார்கள்.

அதன் பிறகு தக்கன் ஒரு யாகஞ்செய்ய எண்ணி விசுவகன்மனை அழைத்து, "நான் ஒரு வேள்விசெய்யப் போகின்றேன்; நீ வேள்விச்சாலை ஒன்றை முறைப்படி அமைப்பாயாக" என்று கட்டளையிட்டான். விசுவகன்மன் நன்றென்று அவனை வணங்கி, கங்கை யாற்றங்கரையிலுள்ள **கனகலம்** என்னும் இடத்தில் வேள்விச்சாலையை அமைப்பானாயினன்; ஆயிரம் யோசனை நீளமும், ஆயிரம் யோசனை அகலமும் கொண்டதோர் இடம் கோலினன்; அதனைச்சுற்றி ஒரு மதிலும், நான்கு திசைகளிலும் நான்கு கோபுரங்களையும் உண்டாக்கினன்; வாவி

களையும், சோலைகளையும், ஆடுதற்குரிய இடங்களையும், உண்டற்குரிய இடங்களையும், அமர்தற்குரிய இடங்களையும், யாகசாலைகளையும், குண்டங்களையும், வேதிகைகளையும் பிறவற்றையும் அழகுபெற அமைத்தான்; திருமால் நான்முகன் முதலிய தேவர்கள் முனிவர்கள் யாவரும் அமருவதற்கு ஏற்ற ஆசனங்களையும், இன்னும் வேண்டுபவைகளையும் உண்டாக்கி யாவும் முடித்துவிட்டுத் தக்கனை வந்து வணங்கி, "யாகசாலை முற்றுப்பெற்றது; அதனை வந்து காணுதி" என்றான்.

**வேள்விக்கு ஆவன செய்தல்**

தக்கன் வேள்விச்சாலையை வந்து பார்த்து அளவற்ற மகிழ்ச்சியடைந்தான்; வேள்விக்குரிய சமித்துகள், சாகைகள், இலைகள், பரிதிகள், யூபம், கயிறு, பறப்பை, பசு, தீக்கடைகோல், முதிரைத் தானியங்கள் முதலியவைகளைக் கொண்டுவரச் செய்தான்; காமதேனு, சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி, ஐந்தருக்கள் ஆகிய இவற்றை அழைத்து," நம் வேள்வியைப் பார்க்கும்படி பூலோகத்திலுள்ள அந்தணர்கள் வருவர்; நீங்கள் அவர்களுக்கு உணவுகளையும் மற்றைப் பொருள்களையும் கொடுங்கள்" என்று கட்டளையிட்டான். அவையாவும் தத்தமக்குரிய இடங்களில் போயிருந்தன. தக்கன், தன் விருப்பம்போல் நடத்தக்கூடிய முப்பதினாயிரம் முனிவர்களை வேள்விக்கு வருபவர்களுக்கு உணவு முதலியவைகளைப் பரிமாறுமாறு கூறினான்; அறுபதினாயிரம் முனிவர்களை அழைத்து, உணவுப்பொருள் தவிர மற்றும் வேண்டுவன யாவும் வழங்குமாறு கூறினான். அதன்பின் தக்கன் தூதுவர்களை அழைத்து, "நீங்கள் சென்று, சிவனைத் தவிரத் தேவர்களையும், முனிவர்களையும், அந்தணர்களையும் எங்குஞ் சென்று அழைத்து வருக" என்று கட்டளையிட்டான்.

**வேள்விக்குத் தேவர்கள் முதலியோர் வருகை**

முன்பு தக்கனால் அனுப்பப்பட்ட முனிவர்கள் யாகத்திற்கு வேண்டிய பல உபகரணங்களையும் கொண்டுவந்து சேர்த்தார்கள்; பிறகு வேத விதிப்படி யாகபூசையைச் செய்தார்கள்; தக்கன் கட்டளையைப் பெற்றுச்சென்ற தூதுவர்கள், உலகமெங்குஞ் சென்று தக்கன் செய்யும் வேள்விக்கு வருமாறு யாவரையும்

அழைத்தார்கள். திருமால், பூதேவி சீதேவி என்னும் மனைவிமாருடனும் கருடன்மீது ஏறித் தம் சேனைகள் சூழ, யாகத்திற்கு வந்தார். நான்முகன், சரசுவதி காயத்திரி சாவித்திரி ஆகிய மனைவியர் மூவரோடும் அன்னவாகனத்தின்மீது ஏறித் தம் புதல்வர்களும் முனிவர்களும் சூழ வந்தான். இந்திரன் வந்தான். தேவர்களும் அரம்பையர்களும்வந்தார்கள். திக்குப்பாலகர்களும், ஆதித்தர், உருத்திரர், வசுக்கள், மருத்துவர் என்னும் நால் வகைத் தேவர்களும், தாரகைகளும், சந்திரனும், கிரகங்களும், இய்க்கர்களும், சித்தர்களும், வித்தியாதரர்களும், மற்றையோர்களும், தக்கன் புத்திரிகளாகிய அசுவினி முதலிய இருபத்தேழு பேரும் வந்தார்கள். சோணிதபுரத்து அவுண ராசனும் தன் கிளை சூழ வந்து சேர்ந்தான். தக்கன் அனைவரையும் வரவேற்று, யாகசாலை யிடத்து அழைத்துச்சென்று உபசரித்து அவரவரிடங்களில் அமரச் செய்தான்.

பிறகு தக்கன், திருமால் பிரமன் இருவர்களை யாகசாலைக்குள் அழைத்துச் சென்று இரத்தின பீடத்தில் அமரச்செய்தான்; வேதங்கள் ஒலிக்கத் தான் எல்லோர்க்கும் மத்தியில் வீற்றிருந்தான். இலக்குமி, சரசுவதி, இந்திராணி முதலியவர்களும் மற்றைத் தேவமகளிரும் வேதவல்லி இருக்குமிடத்தை அடைந்து தத்தமக்கேற்ற இருக்கையில் இருந்தார்கள். பூலோகத்து முனிவர்களும் அந்தணர்களும் ஒரு பகுதியில் அமர்ந்தார்கள். அனைவரையும் அழைக்கச்சென்ற தூதுவர்கள் திரும்பிவந்து தக்கனைப் பணிந்து நின்றார்கள். தக்கன் அவர்களைப் பார்த்து, "நீங்கள் சென்று அழைத்தவர்களில் யாகத்திற்கு வாராதவர்கள் யாவர்?" என்று வினவினான். அவர்கள், "அகத்தியர், சனகாதிமுனிவர், அத்திரி, வசிட்டர், பிருகு, ததீசி, துர்வாசர், பராசரர் ஆகிய இவர்கள், நீ செய்யும் யாகத்தை இகழ்ந்து பேசி, இங்கு வரவில்லை" என்று கூறினார்கள்.

அகத்தியன் சனகன் முன்னோர் அத்திரி வசிட்டன் என்பான்
சகத்துயர் பிருகு மேலாம் ததீசிவெஞ் சாபத் தீயோன்
பகைத்திடு புலத்தை வென்ற பராசரன் இனைய பாலார்
மகத்தினை இகழா ஈண்டு வருகிலர் போலும் என்றார்.

தக்கன் அதனைக் கேட்டு, “ இங்ஙனம் செய்தவர்கள் யாவர்? முனிவர்களுள் இவர்கள்தாமோ சிவன்பால் அன்பு கொண்டவர்கள் ?” என்று கூறித் தேவர்கள் யாவரும் அஞ்சும்படி கோபத்தோடு உயிர்த்துச் சிரித்தான்.

திருவிருத்தம்-51
ஆகத் திருவிருத்தம்-454

——oo——

## 12. ததீசிப் படலம்

### ததீசிமுனிவர் வேள்விச்சாலையை அடைதல்

அப்பொழுது தவத்தில் சிறந்த **ததீசி முனிவர்**, முனிவர்கள் சூழத் தக்கனுடைய வேள்விச்சாலைக்குவந்தார். தக்கன் அவரைப் பார்த்து, “ இம்முனிவர் பரமசிவனைச் சேர்ந்தவர் அல்லர் ; எனக்கு அஞ்சி என் யாகத்தைக் காண்பதற்கு வந்தவர் ” என்று தனக்குள்ளே எண்ணி மகிழ்ந்தான் ; அவரை வரவேற்று உபசரித்து உயர்ந்ததோர் இடத்தில் அமரச் செய்தான். ததீசி முனிவரின் இரு பக்கங்களிலும், உடன் வந்த முனிவர்கள் அமர்ந்தார்கள்.

### தக்கன், தனக்கு நேர்ந்த குறைபாட்டைத் ததீசியிடம் கூறல்

ததீசி முனிவர் தக்கனை நோக்கி, “ நீ இங்கே எம்மை அழைத்த காரணம் யாது? விரைவில் ஒன்றும் ஒளிக்காமல் சொல்லுதி ” என்று வினவினர். தக்கன், ததீசி முனிவரைப் பார்த்து, “ ஒரு நாள் சிவன் என் மகளை விருப்பத்தோடு வந்து திருமணம்புரிந்து மறைந்து போனுன். பிறகு ஒரு நாள் சிவன் வந்து யான் அறியாதவாறு இடப வாகனத்தின்மீது அவளை ஏற்றிக்கொண்டு கயிலாசத்திற்கு அழைத்துச்சென்முன்; உமைக்குப் பெரிய மாயத்தைச் செய்தான். அச்சிவனையும் உமையையும் காணக் கருதி நான் கயிலாயத்திற்குச் சென்றேன். அவ்விருவரும் அதனையறிந்து பூதர்களைக் கொண்டு என்னை உள்ளே விடாது தடுத்தார்கள்; பலவாறு இகழவும் செய்தார்கள். உடனே நான் கைலாசமலையை நீங்கி என் நகரை அடைந்தேன். நான் கயிலாயத்திலிருந்து திரும்பியபொழுது அங்கே என் மக

ளும் என்னை வந்து காணவில்லை. அவள் என் செய்வாள்? அச் சிவனுடைய மாயையில் சிக்கி எல்லா மேன்மைகளையும் விடுத்தாள்.

இஃது இவ்வாறிருக்கையில், என் தந்தையாகிய நான்முகன் ஒரு யாகத்தைச் செய்தான். அந்த யாகத்திற்கு நான் சென்று, தொன்றுதொட்டுச் சிவனுக்குக் கொடுக்கப்பட்டுவரும் அவிப் பாகத்தைக் கொடுக்கக்கூடாது என்று தடுத்தேன். அப்போது அங்கிருந்த நந்தி சபித்துவிட்டுச் சென்றான். மிருதங்கம் அடிக்கும் தொழில் புரியும் நந்தியின் சாபத்திற்கு அஞ்சி, நான்முகன் யாகத்தை முடிக்காது விட்டுவிட்டான். என்னுடைய கட்டளைக்கும், நந்தியின் சாபத்திற்கும் அஞ்சி அன்றுமுதல் இன்று வரை யாவரும் வேள்வி செய்தலை மேற்கொள்ளாமல் விட்டு விட்டார்கள். ஆதலால், பிச்சை யேற்கும் பித்தனாகிய சிவனுக்கு உரிய அவியை மாற்றுவதற்காகவே நான் இந்த வேள்வியை நடத்துகின்றேன்; வேறொரு பயனையும் விரும்பவில்லை. இந்த யாகத்திற்குத் தேவர்களும், முனிவர்களும் மற்றை யாவர்களும் வந்துள்ளார்கள். உமக்கும் இதனைச் சொல்லி அனுப்பினேன். நிகழ்ந்தது இதுவேயாம்'' என்று கூறினான்.

ததீசி முனிவர் தக்கன் கூறியவற்றைக் கேட்டு இகழ்ச்சி தோன்றச் சிரித்தார். அதனைக்கண்ட தக்கன் வடவாமுகாக்கினி போலச் சினந்து எழுந்து அவரைப் பார்த்து, ''நீ சிவனடியான் போலும்; ஆதலால் தான் என்னைச் சிரித்து இகழ்ந்தாய்'' என்று கூறினான்.

**ததீசி முனிவர் தக்கனுக்குக் கூறல்**

ததீசி முனிவர் தக்கனைப் பார்த்து, ''அளவில்லாத உயிர்களைப் படைத்தருளிய தன்னிகரற்ற தனிப்பெருங் கடவுளாகிய சிவபெருமானை நீ இகழ்ந்தோ வேள்விபுரிய நினைக்கின்றாய்! சிவபெருமான் வேள்விக்குத் தலைவர் அல்லர் என்றால், பிறர் யார் தலைவராகக் கூடியவர்? தேவர்கள் எல்லோரும் கொடுக்கும் அவிப்பாகங்களை ஏற்றுக்கொள்பவரும், அக்கினியின் முதல்வரும், யாகத் தலைவரும், யாகங்களைக் காப்பவரும் சிவபெருமானே என்று வேதங்கள் கூறும்.

புங்கவர் எவர்க்கும் நல்கும்
புவிபுகழ் அவிகொள் வானும்
அங்கியின் முதலும் வேள்விக்
கதிபனும் அளிக்கின் ருனும்
சங்கரன் தானே வேதஞ்
சாற்றுமால் மகத்துக் காதி
இங்கொரு தேவுண் டென்னின்
எழுகென உரைத்தி மாதோ.

அநாதிமலமுத்தராகிய சிவபெருமானை அன்றி யாகத்தலைவராகத் தேவர்களில் வேறு யாவர் உளர்? தேவதேவன், மகாதேவன், ஈசன், எங்கோன், மூவரில் முதல்வன், ஏகன், முடிவிற்கு முடிவாய் நின்ருேன், ஆவியுள் ஆவியானேன், அந்தணன் என்று மறைகள் வேறு யாரைப் புகழ்ந்துள்ளன? நான்முகன் திருமால் முதலியோர் **பசுக்களே** ஆவர். சிவபெருமான் ஒருவரே **பதியாவர்**; இத்தேவர்கள் அனைவரும் சிவபெருமானுடைய பணியையே மேற்கொண்டவர்கள். இது வேதமொழியாகும். ஆதலால், தக்கனே! மேலான ஈசனை இகழ்ந்து நிற்றல் உன்னுடைய அறியாமையே ஆகும். உன் செயல் உனக்குப் பெருமையை அளிக்காது. துன்பத்தை விரும்பி யார் தவத்தைச் செய்வார்கள்? அத்தன்மை பொருந்தியவன் நீயே ஆவாய். நீ வேத முறையினை விடுத்து வேள்விபுரிய முயலுகிருய். அங்ஙனம் செய்தால் அது முடிவுபெருது. சிவாஞ்ஞை வந்து இவ்வேள்வியை அழித்துவிடும். சிவபெருமானுக்கு அஞ்சாதவர்கள் எவராயினும் இருப்பின் அவர் இறந்தொழிவர். சிவபெருமானுக்கு அவிப்பாகத்தைக் கொடுத்து வேதமுறை தவருது யாகம் செய்ய நினைக்கின்றிலை; நின் எண்ணம் தீயது'' என்று கூறினுர்.

**தக்கன், ததீசி முனிவருக்கு மறுத்துக் கூறல்**

அப்போது தக்கன், ''சிவபெருமானுக்குக் கொடுக்கும் அவியைத் திருமாலுக்குக் கொடுத்து வேள்வியைச் செய்வேன்'' என்ருன். தக்கனின் தகாத மொழி கேட்ட ததீசி முனிவர், ''தக்கனே! நீ சொல்வது குற்றம்; பெரியோரை விட்டுவிட்டுச் சிறியோரை உயர்த்துதல் உய்யும் வழியன்று. இச்செயல் உன்

னைச் சேர்ந்த உயிர்கட்கெல்லாம் தீமையை உண்டாக்கும்'' என்றார்.

மேலும் தக்கன் ''உம்முடைய உருத்திரரைப்போலப் **பதினோ ருருத்திரர்** உளர்; வடகீழ்த்திசையில் **ஈசான உருத்திரர்** உளர்; அவர்களுக்கே முன்பு அவியைக் கொடுத்து யாகத்தை முடிப்பேன்'' என்றான். ததீசி முனிவர், ''நீ கூறும் உருத்திரர்கள் சங்கார காலத்து **மகா உருத்திரருக்கு** ஈடாகமாட்டார்கள். யாம் கூறும் மகா உருத்திரர் உயர்ந்த பரம்பொருளாவர். அவர், உயிருக்கு உயிராய் நின்று விளங்கும் சித்தியர்; நீ கூறும் உருத்திரர் அவருடைய திருவடிகளை வழிபடுபவர்; அவருடைய உடலையும், பெயரையும் தாங்குபவர்; சிவபெருமானுக்குரிய உருத்திரர் என்னும் பெயரைப் பெற்றவர். யாவரும் சிவபெருமான் ஆகார். உருத்திரர்களின் வடிவங்கள் சிவசொரூபமாகாது. ஆயினும், அவர்கள் நிலவுலகந்தோறும், வானுலகந்தோறும் கடவுள் என்றெண்ணும்படியே இருப்பர்; அளவற்ற காலம் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து அவருடைய சாரூபத்தைப் பெற்ற அடியவர்களைப் போன்றவர்கள். இந்த ஏகாதச ஈசான உருத்திரர்கள் இந்திரன் முதலிய தேவர்களைப்போல் இங்குவரத் தகுந்தவர் அல்லர். அவர்கள், நீ சிவபெருமானிடத்து அன்பில்லாத தன்மையை நினைத்திலர் போலும்!'' என்று கூறினார்.

**ததீசி முனிவர், உருத்திரர் இன்னார் என்பதை விளக்கிக் கூறல்**

தக்கன் ததீசி முனிவரை நோக்கி, ''இது நன்று! நன்று! படைத்தலும் காத்தலும் புரியும் நான்முகனையும் திருமாலையும் விடுத்து, அழித்தல் தொழில் புரியும் உருத்திரன் மாத்திரம் முழுமுதற் கடவுளாய் விளங்குவது ஏன்? சொல்லும்'' என்று கேட்டான். ததீசி முனிவர், ''தக்கனே! நான்முகன் திருமால் முதலியவர்களோடு சேர்த்து உருத்திரரை எண்ணுவதால், உருத்திரமூர்த்தியே முழுமுதற் கடவுள் என்பதை நீ அறிந்துகொள்ளவில்லை. தோற்றமும் அழிவுமில்லாத நமது முழுமுதற் கடவுளுக்குப் பெயரும் உருவமும் செயலும் இல்லை என்று வேதங்கள் யாவும் உறுதியாகக் கூறும். அவர், ஆணவமலத்தால் கட்டுண்டு அல்லலுறும் ஆன்மாக்களின் வினைகளை நீக்க எண்ணிப் பெயரை

யும், வடிவத்தையும், செயல்களையும், தமது சிற்சத்தியினால் கொண்டு உயிர்களுக்கு அறிவு விளக்கம் செய்து, நான்முகன் முதலிய தேவர்களை உண்டாக்கினார்; அவரவர்களுக்குரிய தொழில்களைக் கொடுத்து, அவற்றை நடத்தும் முறைகளையும் உபதேசித்தருளினார்; பிறகு அழித்தல் தொழில் பிறரால் செய்தற்கரியது என்று அதனைத் தாமே மேற்கொண்டார். அப் போது தேவர்கள் யாவரும் சிவபெருமானை வணங்கி "எமக்குப் படைத்தல் முதலிய தொழில்களைத் தந்தருளினீர். நாம் அவற்றை ஏற்று நடத்துவதற்கு ஆற்றல் பெற்றிலேம். எங் களைவிட்டு இப்பாரம் என்று நீங்கும்? கூறியருளவேண்டும்" என்று வேண்டினார்கள். சிவபெருமான் அத்தேவர்களை நோக்கி, "நீவிர் உங்கள் வாழ்நாள் முழுவதும் இத்தொழில்களைச் செய் யுங்கள்; தூய மந்திரத்தால் விபூதியை உண்டாக்கி அதனை உட லில் அணிந்து ஐந்தெழுத்தை எண்ணுங்கள்; அப்போது இத் தொழில்களைத் தாங்கும் ஆற்றலைப் பெறுவீர்கள். நீவிர் அறி யாதனவற்றை நும்மாட்டு முன்னமேயுள்ள நம்முடைய கலைகள் காட்டி நின்றருளும். நீங்கள் அழியாத நன்மைகளைப் பெறுவீர் கள்" என்று அருள்புரிந்தார்; அத்தேவர்களைக் கொண்டே ஏனைய தொழில்களையும் செய்வித்து, அழித்தல் தொழிலை மாத் திரம் தாமே செய்வர். அக்கடவுளையே வேதங்கள் **பஞ்ச கிருத் திய கர்த்தா** என்று கூறும். பிறவிப் பெருங்கடலில் அழுந்தி வருந்துவோர்களின் கவலைகளைக் கெடுத்தொழித்து, அவர்களை உய்யும்படி உயர்த்திவிடுவதால், சிவனுக்கு **உருத்திரர்** என்னும் பெயர் உண்டாயிற்று. அப்பெயரே அவர் குமாரர்களுக்கும், அவர் திருவடிகளையடைந்த அன்பர்களுக்கும், அவர் சாரூபம் உற்றோர்க்கும் எய்தியதாகும்.

**அக்கினிக்கு உருத்திரர் என்ற பெயர் வரக்காரணம் கூறல்**

முன்னொரு காலத்தில் தேவர்கள் யாவரும் அவுணர்களோடு போர்புரியச் சென்றார்கள். அப்போது அவர்கள் தமக்குள்ள செல் வங்களைப் பாதுகாக்குமாறு அக்கினிதேவனிடம் ஒப்படைத்து விட்டுப் போருக்குச் சென்றார்கள். பகைவர்களோடு போர் செய்து திரும்பியபின் அக்கினிதேவனிடம் சென்று தாம் கொடுத்து வைத்த செல்வங்களைத் திருப்பிக் கொடுக்குமாறு கேட்

டார்கள். அக்கினிதேவன் அதனைத் திருப்பிக் கொடாமல் கைப் பற்றிக்கொண்டு ஓடினுன். தேவர்கள் அவனைத் தொடர்ந்து ஓடிச் சூழ்ந்து வருத்தியபோது அக்கினிதேவன் அழுதான். அதனல் அவனுக்கு **உருத்திரன்** என்னும் பெயர் உண்டாயிற்று. இதுபோல் வேதங்களில் உருத்திரன் என்னும் பெயரால் தாழ்ந்த வர்களைக் கூறியது மகாருத்திரரைச் சாராது. ஆதித் தலைவரா கிய உருத்திரரைச் சுட்டி உரைத்த உருத்திர நாமம் மற்றை யோர்க்குப் பொருந்தாது. இவ்வேற்றுமையினை அறிவுடை யோர் நன்குணர்வர். வேதங்களில் உருத்திரன் என்னும் பெய ரினுல் அக்கினிதேவனையும் பிறரையும் கூறியவற்றை இங்கே எடுத்துச் சொல்லாதே; சிவபெருமானுக்குக் கூறிய இடங்களை ஆராய்ந்து அவருடைய தலைமையைக் காண்பாய்; இன்னும் ஒன்று கேட்பாயாக:

**ததீசி முனிவர், பிரமதேவன் கூறிய சிவபரத்துவத்தைக் கூறல்**

முன்னொரு காலத்தில் முனிவர்கள் யாவரும் பரம்பொருள் யாதென்று அறியாது வாதம் செய்தனர். கடைசியாக அவர்கள் நான்முகனை அடைந்து, "நாங்கள் 'பரம்பொருள் யார்?' என் பதை அறியாமல் வாதமிட்டோம். அதனைக் கூறியருள வேண் டும்" என்று வேண்டினுர்கள். அதனைக்கேட்ட நான்முகன் சிவபெருமானை மனத்தில் எண்ணி எழுந்தான்; கண்கள் ஆனந்த பாஷ்பஞ் சொரிய,மெய்ம்மயிர் பொடிப்ப,மனமுருகக் **கைகளைத் தூக்கி முழுமுதற்கடவுள் சங்கரனே** என்று மும்முறை சத்தியம் செய்தான். அவர்களை நோக்கி, "முனிவர்களே! தேவர்களை யும் எங்களையும் உண்டாக்கியவர் சிவபெருமானே ஆவர். அவர் வேதங்களைத் தந்தவர்; ஆக்கல், காத்தல் முதலிய தொழில்களைக் கற்பித்தவர்; உயிர்களிடத்து வைத்த பெருங்கருணை காரணமாக **ஐந்தொழில்** புரிபவர்; அநாதியானவர்; காரணங்களுக்கெல்லாம் காரணமாய் நிற்பவர்; எவரிடத்தும் பிறவாதவர்; அருவமும், உருவமும், அருவுருவமும் ஆகி விளங்குபவர்; யாவர்க்கும் ஈசர்; எல்லாம் ஆனவர்; முடிவிற்கு முடிவானவர்; என்றும் நிலைத்திருப் பவர்; தம் திருவடிகளையடைந்த ஞானிகளுக்கன்றிப் பிறரால் அறிய ஒண்ணுதவர். அவரே பரம்பொருள் என்று வேதங்கள் யாவும் எடுத்துக் கூறும். திருமாலும் நானும் இன்னும் அவர்

நிலையை உன்னி ஆராய்ந்தும் காண்கிலம். அவரே **பதியாவர்;** மற்றையோர் **பசுக்களே** ஆவர்'' என்று கூறி, எம்பெருமான் திருவடிகளை வணங்கினுன்.

முனிவர்கள் அஞ்ஞானம் நீங்கப்பெற்று, மெய்யறிவு பெற்ற னர்; மகிழ்வோடு நான்முகனை நோக்கி, ''சுவாமீ! நீர் எங்களைப் பெற்றீர்; நாங்கள் உம்முடைய மக்கள்; எங்களுக்கு உண்மையை உபதேசித்த நீர் ஆசாரியன் ஆயினீர்'' என்று அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினுர்கள். நான்முகன் அவர்களைப் பார்த்து, ''நீவிர் இன்று முதல் சிவபெருமானைத் தியானஞ் செய்யுங்கள்; அவரையே பூசித்து வழிபடுங்கள்; விபூதியைத் தரித்து, ஐந்தெழுத்தை*ச் செபித்துப் பிறவியை நீக்குங்கள்'' என்று விடை கொடுத்தனுப்பினுன்.

**ததீசி முனிவர், தக்கன் உய்யும் வழியினைக் கூறல்**

ஆதலால், எங்கள் சிவபெருமான் ஒருவரே பதிப்பொருள் ஆவர். மற்றையோரெல்லாம் பசுக்களே ஆவர். நான் அக்கடவுளின்மேற் கொண்ட அன்பு காரணமாகக் கூறவில்லை; உண்மை பற்றியே கூறினேன். இதனை வேத முதலிய கலைகள் யாவும் கூறும். தக்கனே! உன்னுடைய தந்தையாகிய நான்முகனும் இவற்றையெல்லாம் உனக்கு முன்னே ஐயந்திரிபறப் போதித் துள்ளான். அதனுலேயே நீ சிவபெருமானை நோக்கி நெடுங் காலம் தவம் புரிந்து வளங்களைப் பெற்ருய். ஆனுல், இப்போது உனக்கு அழிவுக் காலம் நெருங்கியது. அதனுல் சிவனை மறந் தாய் போலும். நான்முகன் முதலிய யாவரும் இறக்கும் இயல் பினராகவே வந்து உன் சபையில் இருக்கின்றுர் போலும். மாய வலையில் பட்டு மருளும் நீ, உய்யவேண்டுமானுல், சிவபெரு மானுக்குரிய அவியைக் கொடுத்து இப்பெரிய யாகத்தைச் செய் வாயாக'' என்று ததீசி முனிவர் கூறினுர்.

திருவிருத்தம்–65
ஆகத் திருவிருத்தம்–519

——oo——

* இதன் பெருமையினை, ''வாயிலே வைக்கும் அளவில் மருந்தாகித், தீய பிறவிநோய் தீர்க்குமே - தூயவே, கம்பெருமா தேவியொடு மன்னு கயிலாயத், தெம்பெருமான் ஓரஞ் செழுத்து'' எனவரும் கயிலைபாதி காளத்தி பாதி அந்தாதியால் அறியலாம்.

## 13. ததீசி யுத்தரப் படலம்

### தக்கன் சிவனைக் குறித்துப் பலவாறு இகழ்வாகக் கூறல்

ததீசி முனிவர் கூறியவற்றைக் கேட்ட தக்கன் நகைத்தான்; மேலும் முனிவரைப் பார்த்து, "பரம்பொருளாகிய சிவன் எலும்பையும், தலை மாலைகளையும் அணிவாரோ? தேவர்களின் உடல்கள் வெந்த சாம்பலைப் பூசுவாரோ? கங்காளத்தை ஏந்தித் திரிவாரோ? களைந்த கேசத்தைத் தரிப்பாரோ? பன்றிக் கோட்டையும் ஆமை யோட்டையும் அணிவாரோ? உயிர்களை அழிப்பாரோ? புலித் தோலை உடுப்பாரோ? யானைத் தோலைப் போர்ப்பாரோ? அக்கினி, மழு, மான், முத்தலைச் சூலம் ஆகிய இவைகளை ஏந்துவாரோ? எங்கும் பிச்சை ஏற்பாரோ? கூத்தாடுவாரோ? பூதப்படை சூழத் திரிவாரோ? பாம்புகளைப் பூணுவாரோ? வெண்டலையைத் தலையில் அணிவாரோ? நிருவாணியாய் நிற்பாரோ? பல்வேறு உருவங்களைக் கொள்வாரோ? இடபத்தில் ஏறுவாரோ? நஞ்சை உண்ணுவாரோ? சுடலையில் ஆடுவாரோ? ஒரு பெண்ணைத் தலையிலும், மற்றொரு பெண்ணைப் பக்கத்திலும் வைத்திருப்பாரோ? பிள்ளையையும் பெறுவாரோ? தாமத குணத்தைப் பொருந்துவாரோ? உங்கள் கடவுளாகிய சிவன் ஒரு நற்குணமும் இல்லாதவர். ஆதலால், நான் செய்கின்ற வேள்வியில் அவருக்கு அவிப்பாகம் கொடுப்பதில்லை" என்று கூறினான்.

தக்கன் கூறியவற்றைக் கேட்ட ததீசி முனிவர், "நமது கடவுளையா இவன் பழிப்பவன்?" என்று வீரநகை புரிந்து மனங் கொதித்தார்; மிகுந்த சினங்கொண்டார்; "இப்பாதகன் பரம சிவத்தின் உண்மை இயல்புகளை அறிய வல்லவன் அல்லன்; இவனோடு சிறிதும் வார்த்தையாடுதல் தகாது. சிவபெருமானை இகழ்ந்த இவனுக்கு மறுமொழி கூறும்படி என் மனம் தூண்டுகிறது. ஆதலால், இவன் வினவிய வினாக்களுக்குச் சில விடைகள் கூறுவேன்" என்று உறுதிகொண்டார்.

### சிவபெருமான் எலும்பு முதலியவற்றை அணிதல்

ததீசி முனிவர் தக்கனைப் பார்த்து, "கயவனே! எம்பெருமானைப்பற்றி நீ இகழ்ந்து பேசினாய். திருவருளையே திருமேனி

யாகக் கொண்ட சிவபெருமான், பிரம விஷ்ணுக்களை முன்னே தந்து, தாம் அவர்களைப் பொருந்திநின்று, முறையே உயிர்களைப் படைத்தல் காத்தல் தொழில்களைச் செய்து உயிர்களுக்கு வினைப் பயன்களை நுகர்வித்து, இருவினையொப்பு மலபரிபாகம் வரப் பெற்ற ஆன்மாக்களுக்கு வீடுபேற்றை அடையச்செய்து, மற்றைய உயிர்களையும் உலகங்களையும் பின்னர் அழித்து, பிரம விஷ்ணுக்களை ஒடுக்கித் தாம் முன்போல் ஏகமாய் அழிவற் றிருப்பர். அதன்பின்னும் என்றும் இவ்வாறே ஐந்தொழில் களையும் செய்தருளுவர். இவ்வாறு சிவபெருமான் அழித்தல் தொழிலைச் செய்யுந்தோறும், ஒடுக்கிய நான்முகன் முதலியவர் களுடைய எலும்புகளை அணிவர்; அவர்களுடைய தலைகளை மாலையாகத் தொடுத்துப் பூண்பர்; அவர்களுடைய தலைமயிர் களைப் பூணூலாகத் தமது திருமார்பிலே அணிவர்; அவர்களை முத்தலைச் சூலத்தில் கோத்து ஏந்துதலுஞ் செய்வர்; அவர்களை நெற்றிக் கண்ணால் சாம்பராக்கி அச் சாம்பரைத் திருமேனியில் பூசுதலுஞ் செய்வர். இப்படியெல்லாம் சிவபெருமான் செய் தற்குக் காரணம் அத் தேவர்கள் முன்னர்ச் செய்த தவத்தின் பயனே ஆகும். யாவரும் தம்மை வியத்தல் வேண்டும் என்று கருதி அவர் எலும்பு முதலியவற்றை அணியவில்லை; தாம் தலைவர் என்பதை உயிர்கள் உணர்ந்து, பாவத்தை விடுத்து, வீடு பேற்றைப்பெற்று உய்தல் வேண்டும் என்ற அருளாலே ஆகும். சிவபெருமான் உயிர்கள்பால் கொண்ட பெருங்கருணையாலேயே **எலும்பு, சாம்பல், கங்காளம், சிகை, தலை** ஆகிய இவற்றை அணிந்தருளினர் என்பதை நீ அறிவாய். இன்னும் சொல்லு வேன் ; கேள் :

**பன்றிக் கோடு அணிதல்**

தேவர்களுக்கு நாடோறும் துன்பத்தையே இழைத்துவந்த **இரணியாக்ஷன்** என்னும் அசுரன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு நாள் நிலவுலகத்தைக் கவர்ந்து, வயிற்றில் மறைத்துக் கொண்டு, உலகமெல்லாம் நடுங்கும்படி பாதலத்தில் புகுந்தான். தேவர்கள் அதனைக் கண்டு பயந்தார்கள். திருமால், நான்முக னின் மூக்கில் ஒரு பன்றியாய்த் தோன்றி வானத்திற்குச் சென்று மேருமலைபோல வளர்ந்து ஆரவாரத்துடன் நின்றார் ; நொடிப்

பொழுதில் பாதலத்தில் புகுந்தார்; இரணியாக்ஷனைத் தம் கொம்பினால் குத்திக் கொன்று, பூமியை முன்போல் கொண்டுவந்து நிலைக்கும்படி செய்தார். இச்செயலால் திருமால் தம்மையே பரம்பொருள் என்று நினைத்து அகந்தை கொண்டார்; அறிவு இழந்தார்; நிலத்தைக் கோடுகளினால் கிண்டிக் கடலை உடைத்தார். அதனைக்கண்ட சிவபெருமான் அங்கு வந்து திருமாலாகிய பன்றியின் கோடுகளில் ஒன்றைத் தமது திருக்கரத்தால் பிடுங்கினார். அப்போது திருமால் பழைய உணர்வு வரப்பெற்று, "சிவபெருமான் மற்றைக் கொம்பையும் பிடுங்குவார்" என்று அஞ்சிப் பழைய உருவம் கொண்டு சிவபெருமானை வணங்கி நின்று துதித்தார். சிவபெருமான் உடனே மறைந்தருளினார்; அன்றைக்குத் திருமாலிடத்திலிருந்து பிடுங்கிய பன்றிக் கொம்பை அடையாளமாக அணிந்தார். அஃது இன்றைக்கும் அவர் மார்பில் பிறைபோல் விளங்குகிறது.

**ஆமையோட்டை அணிதல்**

முன்னொரு காலத்தில் தேவர்களும், அசுரர்களும் திருப்பாற் கடலைக் கடைந்தார்கள். அப்போது மத்தாகிய மந்தரமலை கவிழ்ந்தது. உடனே திருமால் ஆமை உருவம் எடுத்துக் கடலுக்குள் சென்று அம்மலையைத் தாங்கினார். பிறகு கடலைக் கடைய அமுதம் எழுந்தது. அதனைத் தேவர்களும் அசுரர்களும் கண்டு, 'இது நமது; இது நமது' என்று ஆசை மிகுதியால் போரிட்டார்கள். திருமால் அந்தப் போரை விலக்காமல், "மந்தரமலையைப் பாற்கடலில் ஆழாமல் நாமே காத்தோம்" என்று பெரிதும் அகந்தை கொண்டார்; கடல்களில் சென்று அவற்றை எங்கும் கலக்கித் திரிந்தார். அதனால், நிலவுலகத்திற்கு அழிவு உண்டாகியது. அப்பொழுது சிவபெருமான் அங்கு விரைந்து சென்று திருமாலாகிய ஆமையுருவத்தைக் கண்டு கோபித்துத் தமது திருக்கரத்தால் பற்றித் திருமாலின் அகந்தையையும், வலிமையையும் அகற்றினார். திருமால் பழைய வடிவத்தை அடைந்து சிவபெருமானைத் துதித்தார். சிவபெருமான், "அசுரரைத் தவிர்த்துத் தேவர்களுக்கு அமுதத்தைக் கொடுப்பாயாக" என்று கூறி மறைந்தார். உடனே திருமால் மோகினி வடிவமெடுத்து, மாயையினால் அசுரர்களைக்கொன்று, தேவர்களுக்கு அமுதத்தை

வழங்கினூர். திருமாலாகிய ஆமையின் ஓட்டினைச் சிவபெருமான் வாங்கி முன்னே அணிந்த பன்றிக் கொம்புடன் சேர்த்து அணிந் தருளினூர்.

**பிச்சை யேற்றல்**

முன்னொரு காலத்தில் தாருகாவனத்து முனிவர்கள் யாவரும் சிவபெருமானிடத்தில் அன்பற்றவர்களாக இருந்தார்கள்; கருமமே வீடுபேற்றை அளிக்க வல்லது என்றும் நம்பினூர்கள்; அருள் இன்றித் தாமே வீடுபேற்றை அடைய முடியும் என்றும் எண்ணினர்; உடல் வருந்த அளவற்ற தவங்களையும், வேள்வி களையும் செய்தனர். சிவபெருமான் அம்முனிவர்களின் செயலை அறிந்தார்; திருமாலைத் தம்மிடம் வருமாறு நினைந்தார். திருமால் கயிலைமலையை வந்தடைந்து திருநந்திதேவர் அனுமதிபெற்றுக் கோயிலினுட் சென்று சிவபெருமானின் திருவடிகளை வணங்கித் துதித்தார். சிவபெருமான் தாம் திருவுளத்திற் கொண்ட குறிப்பைத் திருமாலுக்கு உணர்த்தி, அங்கு நின்றும் எழுந்து அவரை அழைத்துக்கொண்டு கைலாய மலையை நீங்கித் தாருகா வனத்தை நோக்கிப் புறப்பட்டார். அப்போது, திருமாலை நோக்கி, "நீ முன்னொரு நாளில் கொண்ட மோகினி வடிவை எடுப்பாயாக" என்றூர். உடனே திருமால் நன்றென்று அழகிற் சிறந்த ஒரு பெண் வடிவை எடுத்துக்கொண்டு சிவபெருமான் மருங்கில் வந்தார். அச்சமயம் சிவபெருமான் அழகிற் சிறந்த ஓர் ஆணுருவைக் கொண்டார். நிருவாண உருக்கொண்ட சிவ பெருமான், முத்தலைச் சூலத்தையும் பிக்ஷா பாத்திரத்தையும் திருக்கரங்களில் ஏந்திக்கொண்டு, மோகினி வடிவுகொண்ட திருமால் பக்கத்தில் வரத் தாருகா வனத்தை அடைந்தார். பிறகு சிவபெருமான் மோகினியை நோக்கி, "நீ முனிவர்களிடம் சென்று அவர்களை மயக்கி அவர்களுடைய விரதங்களைக் கெடுத்து நம்மிடத்து வருவாயாக" என்று கூறினூர். மோகினி வடிவுகொண்ட திருமால், முனிவர்களிடம் சென்று தம் கடைக் கண் வீச்சினுல் யாவரையும் மயங்கச் செய்தார். முனிவர்கள் மோகினியைக் கண்டு, காமவேட்கை மிகுந்து தவவலி குறைந்து வேள்வியை விடுத்து, வேழமுண்ட விளாங்கனிபோல் உள் ளழிந்து, விளக்கில் வீழும் விட்டில்களைப்போல மோகினியிடம் விரைந்து வந்து சூழ்ந்தார்கள்; மோகினியை நோக்கி "நீர்

இருக்குமிடம் நிலவுலகமோ? விண்ணுலகமோ? சத்திய உல கமோ? வைகுந்தமோ? இவற்றுள் யாது? உம்மை அறிய வல்லவர் யாவர்? எங்களுக்குச் சொல்லியருளும்'' என்று பலவாறு பிதற்றி னார்கள். முனிவர்களுடைய பெருமைகள் யாவும் காமத்தீயால் அழிந்தன.

பிக்ஷாடன வடிவங்கொண்டு சென்ற சிவபெருமான், பிச்சை ஏற்பாற்போல முனிவர்களின் மனைவியர்கள் இருக்குமிடங்களிற் போய் இசையோடு வேதங்களைப் பாடினார். இசையைக் கேட்ட முனிவர்களின் மனைவியர்கள், "இங்கே வந்தவர் யாவர்? அவரைக் காண்போம்'' என்று ஆசைகொண்டு எழுந்தனர்; கூட்டமாக வீதியில் வந்து சேர்ந்து பிக்ஷாடனரைக் கண்டனர்; கண்டவுடன் காமம் மிகுந்து தம் வசமிழந்தனர். அவருக்குப் பிச்சையிட்டவர்களின் ஆடைகளும், வளையல்களும் நழுவின; நாணமும் கற்பும் அழிந்தன. அவர்கள் மயக்கங் கொண்டவர்க ளாய் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். பிக்ஷாடனமூர்த்தி சில இடங்களில் வீணை வாசித்தும், சில இடங்களில் வேதங்களைப் பாடியும், சில இடங்களில் ஆகமங்களை ஓதியும், சில இடங்களில் தம் உண்மை வடிவத்தைக் காட்டியும், சில இடங்களில் பிச்சை யேந்தியும், சில இடங்களில் அடியார்களைப் போன்று தம் புகழ் களை எடுத்துச் சொல்லியும் திருவடித்தாமரை சிவக்க வீதியிலே நடந்து சென்றார். அப்போது தம்மைத் தொடர்ந்த பெண் களுக்கெல்லாம் இந்திரசாலம்போல் எல்லையில்லாத திருவுருவைக் காட்டி மயக்கினார். அப் பெண்கள் யாவரும் அவரைக் கண்டு நிலைகலங்கி காம மயக்கங்கொண்டு கருப்பமடைந்து **நாற்பத் தெண்ணாயிரம் புதல்வர்களைப்** பெற்றார்கள். அப் புதல்வர்கள் சிவபெருமானுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் துதித்த னர். எம்பெருமான் அவர்களை நோக்கி, "நீங்கள் இங்கேயே நம்மைத் தியானித்துத் தவம் புரிந்துகொண்டிருங்கள்'' என்று பணித்தருளினார். அவர்களும் அவ்வாறே ஒரு பக்கத்தில் தவம் புரிந்துகொண்டிருந்தார்கள்.

**முனிவர்கள் சிவபெருமான்மீது கோபங் கொள்ளுதல்**

பிக்ஷாடன வடிவங்கொண்ட சிவபெருமான் முனிவர்களின் மனைவியர்கள் ஆசையோடு தம்மைப் பின்தொடர வீதியைக்

கடந்து அப்பால் சென்றருளினர். மோகினி வடிவங்கொண்ட திருமால் அக்கடவுளைப் பின்தொடர்ந்து சென்றார். மோகினியைக் கண்டு மயங்கிய தாருகாவன முனிவர்கள் யாவரும் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். சிவபெருமான் அம் முனிவர்களுக்குத் தம் திருவுருவை மறைத்து வேறோர் வடிவத்தைக் காட்டி நின்றார். முனிவர்கள், தம் மனைவியர்கள் ஆடையையும் நாணத்தையும் விடுத்து பிக்ஷாடனரின் பின் செல்வதைக் கண்டார்கள்; அவர்கள் மோகினிபால் கொண்ட மயக்கம் சிறிது நீங்கித் துன்பமுற்று அழிய, "இப்பெண் ஒருத்தி நம்மிடத்து வந்து மயக்கி நம் தவத்தைக் கெடுத்தாள்; இந்த ஆடவன் ஒருவன் வந்து நம் மனைவியர்களை மயக்கிக் கற்பை அழித்தான். அந்தோ! இஃது என்ன மாயம்" என்று எண்ணி யாவரும் ஒருங்கு கூடி ஆலோசித்தனர்; பிறகு ஒருவாறு தெளிந்து ஆண் வடிவாய் வந்தவர் சிவன் என்றும், பெண் வடிவாய் வந்தவர் திருமால் என்றும் உணர்ந்து, "திருமால் நம் தவத்தைக் கெடுக்கும்படி தாமாக வந்தவர் அல்லர்; சிவனுடைய ஏவலினால் மாயத்தைச் செய்தார். சிவன் நம் பெண்களின் கற்பைக் கெடுத்த வசைமொழி என்றும் நமக்கு அழியாதே. தாம் ஒரு வடிவெடுத்தும் திருமாலை வேற்றுருவோடு விடுத்தும் நமக்கு இப் பெரும் பழிகளைச் செய்தவர் சிவனே அன்றோ?" என்று கூறி, மிகக் கோபங் கொண்டு தங்கள் மனைவியர் குழாங்களை நோக்கிக் கூவி, "நீங்கள் யார் பின் செல்லுகிறீர்கள்? உங்கள் கற்பை இழந்தீர்கள்! ஆதலால், நீங்கள் இறந்துவிடுதலே நன்று; இல்லையேல் உங்கள் ஊருக்குச் செல்லுங்கள்" என்று கோபித்துக் கூறினார்கள். அதனைக்கேட்ட அப் பெண்கள், "இவ் வாடவரைக் கண்டவர்கள் சீவன் முத்தராயிருப்பதன்றி இறப்பாரோ! இம் முனிவர்களும் பித்தர்களோ!" என்று கூறி, பிக்ஷாடனரின் வடிவத்தை மனத்தில் எண்ணிக்கொண்டு அவர் திருவருளால் மீண்டு இருப்பிடங்களை அடைந்தார்கள். பிறகு சிவபெருமானை அடைந்த மோகினி வடிவுகொண்ட திருமால் அவர் திருவருளினால் ஆணுருவை எடுத்து நின்றார்.

**புலித்தோல் உடுத்தல்**

அறியாமை மிகுந்த தாருகாவன முனிவர்கள், சிவபெருமான் மீது கோபங்கொண்டு அவரை அழிக்கக் கருதி அபிசாரஹோமம்

ஒன்றைச் செய்தார்கள். அந்த வேள்விக் குண்டத்திலிருந்து வலிமை மிகுந்த **புலி** ஒன்று விரைந்து இடிபோன்ற பெருங்குரலோடு எழுந்து வந்தது. முனிவர்கள், தறுகண்மையையுடைய அப்புலியினை நோக்கி, "நீ சென்று பரமசிவனைக் கொல்வாயாக" என்று வணங்கி விடுத்தார்கள். புலி யாவரும் நடுங்கும்படி சிவபெருமான் திருமுன் சென்றது. அவர் அப்புலியைப் பிடித்து, அதன் தோலை உரித்து, ஆடையாக அணிந்து கொண்டார்.

**சூலம் ஏந்துதல்**

பிறகு ஓம குண்டத்திலிருந்து ஒரு **முத்தலைச்சூலம்** தோன்றியது. முனிவர்கள் அதனைச் சிவபெருமான் மீது செலுத்தினுர்கள். முத்தலைச் சூலம் சிவபெருமான் திருமுன் சென்றது. அவர் அதனைத் தம் திருக்கரத்தில் பற்றி "நீ நம்முடைய படையாகக் கடவாய்" என்று பணித்து ஏந்தியருளினுர்.

**மான் ஏந்துதல்**

பின்பு வேள்விக் குண்டத்தினின்றும் **மான்கன்று** ஒன்று தோன்றியது. முனிவர்கள் அதனைச் சிவபெருமான் மீது விடுத்தார்கள். அஃது எழுந்து பாய்ந்து பெருங்குரலினுல் சீவராசிகளை அழித்துக்கொண்டு சென்றது. அதனுல் உயிர்கள் அழிவுருவண்ணம், சிவபெருமான் திருவருள் நோக்கஞ் செய்து அதனை விரைந்து அழைத்து, "நம் காதுக்கு அருகில் நின்று எப்போதும் கூவுவாயாக" என்று அருள்புரிந்து தம் இடக்கரத்தில் ஏந்தி நின்ருர்.

**அரவம் அணிதல்**

அதன்பின் யாகத்தினின்றும் அளவில்லாத **பாம்புகள்** சீறிக்கொண்டு எழுந்து வந்தன. அப்பாம்புகள் முனிவர்களின் கட்டளைப்படி சிவபெருமானிடம் சென்றன. அவர் அவற்றை, முன்னர்க் கருடனுக்கு அஞ்சித் தம்மைச் சரணடைந்த பாம்புகளோடு சேர்த்து ஆபரணமாக அணிந்து கொண்டார்.

**பூதப்படை வருதல்**

அதன் பிறகு வேள்விக் குண்டத்தினின்றும் அளவற்ற **பூத வெள்ளங்கள்** உண்டாயின. முனிவர்கள் அவற்றை நோக்கி,

"நீங்கள் பரமசிவனின் வலிமையை மாற்றுங்கள்" என்று கூறி அனுப்பினார்கள். சிவபெருமான் அப்பூத வெள்ளங்களைப் பார்த்து, "நீர் நம்மை அகலாது சேனைகளாய்ச் சூழ்ந்திருங்கள்" என்று கட்டளையிட்டார். அது முதல் பூதங்கள் சேனை வெள்ளங்களாய் இறைவனைச் சூழ்ந்து நின்றன.

### வெண்டலை அணிதல்

அதன்பின் வேள்வித் தீயினின்றும் **வெண்டலை** ஒன்று உலகம் யாவும் அழியும்படி சிரித்துக்கொண்டு எழுந்தது. முனிவர்கள் அதனையும் சிவபெருமான் மேல் விடுத்தார்கள். அது சிவபெருமானை அணுகுதலும் அவர் அதனைத் தம் திருக்கரத்தால் பிடித்து, "உன் செயலைச் செய்குதி" என்று கூறித் தம் சடையின்மேல் அணிந்துகொண்டார்.

### உடுக்கை ஏந்துதல்

சிவபெருமானை நோக்கி மனங்குலைந்த தாருகாவன முனிவர்கள் யாது செய்வதென்று அறியாமல் தங்கள் மந்திரங்களை எல்லாம் ஒன்றாக ஏவி, "சிவனைக் கொல்லுங்கள்" என்றார்கள். அம்மந்திரங்கள் ஒரு **உடுக்கை** வடிவமாகிப் புவனங்கள் செவிடாகும்படி ஒலித்துக்கொண்டு சிவபெருமானை அணுகின. அந்த உடுக்கையின் ஓசையினால் உலகத்து உயிர்கள் யாவும் சிவபெருமானின் திருவருளால் இறவாமல் இடியேறுண்ட நாகம்போல் மயங்கின. சிவபெருமான் அவ்வுடுக்கையைத் தன் திருக்கரத்தில் ஏந்தி, "நீ நம் காதினருகே ஒலித்துக்கொண்டிருப்பாயாக" என்று கூறினார்.

### முயலகனும் வேள்வித்தீயும் வருதல்

முனிவர்கள், "இவ்வாறு யார் செய்ய வல்லார்?" என்று கூறிச் சங்காரத் தலைவராகிய சிவபெருமானுக்கு இறுதியில்லை என்பதை அறியாதவர்களாய்க் கோபங்கொண்டு வினைவசத்தால் பின்னும் அபிசார வேள்வியைச் செய்தார்கள். அதனினின்றும் **முயலகன்** என்ற **பூதவுருவம்** ஒன்று எழுந்தது. பிறகு முனிவர்கள் வேள்வியை நிறுத்தி **வேள்வித்தீயை** அழைத்தார்கள். அதுவும் வந்தது. முனிவர்கள், முயலகனையும் வேள்வித்

தீயையும் பார்த்து, "நம்முடைய ஆற்றலைக்கெடுத்த சிவபெருமானைக் கொல்லுங்கள்" என்று சொல்லி விடுத்தார்கள். அவை இரண்டும் மிக விரைந்து சென்றன. சிவபெருமான் வேள்வித் தீயை ஒரு கரத்தில் ஏந்தி, முயலகனை மெல்லத் திருவடியால் கீழே தள்ளித் திருவடியை முயலகனுடைய முதுகின்மேல் ஊன்றிக்கொண்டு தேவர்கள் போற்ற நின்றார். முனிவர்கள் இன்னும் சிவபெருமான் அழியாது இருப்பதைக்கண்டு, "சிவனை அழிக்கும் பொருட்டு நாம் வேள்வியினின்றும் எழுப்பி அனுப்பியன யாவும் அழிந்துவிட்டனவே" என்று வருந்தி, "சிவன் அழிக" என்று எண்ணிலாத சாபமிட்டனர். அச்சாபங்கள் யாவும் அவர் திருமுன்பு செல்லாமல் பயனற்று அழிந்தன. முனிவர்கள் யாவரும் வலிமையிழந்து வாட்டமும் நாணமும் கொண்டு நடுங்கிப் பாவமும் பழியும் பூண்டு பூமிக்குப் பாரமாய் வீணாக நின்றார்கள்.

**கொல்ல வந்தவர்களுக்குத் திருவருள் புரிதல்**

சிவபெருமானுடைய திருவடியின் கீழே அகப்பட்டுக் கொண்ட **முயலகன்** மெல்ல மெல்லத் தலையைத் தூக்கி அசைத்தான். சிவபெருமான் அதனை நோக்கி அவன் மீது நின்று நடித்தார். அதனைத் தாங்க முடியாது உலகங்கள் யாவும் நடுங்கின. உயிர்கள் அஞ்சி இரங்கின. தாருகாவனத்து முனிவர்கள் நடுங்கி வீழ்ந்தார்கள். நான்முகன் திருமால் முதலிய தேவர்கள் அந்நடனத்தைத் தரிசித்து மனமகிழ்ந்து அருகில் நின்றார்கள். இந்திரன் முதலிய தேவர்கள் வணங்குவாரைப்போல வீழ்ந்தார்கள். சிவபெருமான், உலகங்கள் யாவும் அஞ்சுதலையும் வீழ்ந்த தேவர்களின் அயர்வையும் கண்டு, தம் திருநடனத்தை நிறுத்தினார். இந்திரனும் தேவர்களும் எழுந்து கைதொழுது பக்கத்தில் வந்தார்கள். சிவபெருமான் தம்மை மதியாத தாருகாவனத்து முனிவர்கள் யாவர்க்கும் நல்லறிவு கொடுத்து அருள் புரிந்தார். உடனே அவர்கள் எழுந்து சிவபெருமானை வணங்கி வாழ்த்தினார்கள்; தாங்கள் புரிந்த குற்றங்களைப் பொறுத்தருளும்படி வேண்டினார்கள். சிவபெருமான் அவர்களைப்பார்த்து, "நீங்கள் நம்முடைய வேதாகம முறைப்படி ஒழுகுங்கள்; தீவினைகளை நீக்கித் தவம்புரியுங்கள்" என்று கூறி, அவர்களை அங்கே நிறுத்

தித் திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் யாவரையும் அவரவரிடங்களுக்குச் செல்லும்படி விடையளித்துத் தாம் திருக்கயிலாச மலையை அடைந்து உமாதேவியாரோடு வீற்றிருந் தருளினர்.

**யானைத் தோலைப் போர்த்தல்**

முன்னொரு காலத்தில் யானை வடிவம் கொண்ட **கயாசுரன்** என்னும் அசுரன் ஒருவன் இருந்தான். அவன் மேரு மலைக்குச் சென்று, நான்முகனை நோக்கித் தவம் புரிந்தான். நான்முகன் அவ்வசுரனின் தவத்திற்கு மகிழ்ந்து சென்று அவனை நோக்கி, "நீ வேண்டிய வரம் யாது? சொல்லுதி" என்றார். கயாசுரன், "சுவாமி! அடியேன் அழியாத ஆயுளையும், வலிமையையும், வீரத்தையும் பெறுமாறு அருள்புரியும்" என்றான். நான்முகன் நகைத்து, "நீ வேண்டிய வரத்தைத் தந்தோம். ஆனால் நீ சிவ பெருமான் முன் செல்லாதே; சென்றால் உன் வரங்கள் யாவும் அழியும்" என்று கூறி மறைந்தருளினர். கயாசுரன் அவ் வரத்தை நினைத்து,"சிவபெருமானிடத்துச் செல்லேன்; மற்றவர் களிடத்துச் சென்று போர் புரிந்து எவ்வுலகங்களையும் அழித்து யாவருக்கும் துன்பம் புரிந்துகொண்டிருப்பேன்" என்று எண்ணினன். வானுலகத்திற்குச் சென்று தேவர்கள் புறமுது கிட்டோடப் போர் புரிந்து வானுலகத்தை அழித்தான்; பிறகு சுவர்க்கத்திற்குச் சென்று இந்திரனோடு போரிட்டான்; ஐரா வதத்தின் வாலைப்பிடித்துச் சுழற்றி இந்திரன் மயங்கும்படி அதனை எறிந்தான்; சுவர்க்கத்தை அழித்தான்; இந்திரனைப் பயந்தோடச் செய்தான்; திக்குப் பாலகர்களைத் துரத்தினன்; நிலவுலகத்திற்கு வந்து மக்களுக்குத் துன்பம் புரிந்து ஆலகால விஷம்போல எங்குந் திரிந்தான். முனிவர்கள் அவனைக் கண்டு பயந்து சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் **காசிப்பதியை** அடைந்தார்கள். முனிவர்களும், அந்நகர மக்களும் **மணி கர்ணிகை** என்னும் ஆலய வாயிலை அடைந்து, அங்கு எழுந் தருளியுள்ள விசுவேசரை (அகில நாதரை) வணங்கி நின்று "சுவாமி! கயாசுர னென்பவன் நிலவுலகத்தை அழித்து அடி யேங்களையும் கொல்லும்படி விரைந்து வருகின்றான். ஆதலால், தேவரீரின் திருவடிகளையே அடைக்கலம் புகுந்தோம். அடியேங்

களை உய்யும்படி அருள்புரியும்" என்று கூறித் தோத்திரஞ் செய்தார்கள். கயாசுரன் அதனைக் கண்டு கோபங் கொண்டு மணிகர்ணிகை வாயிலில் வந்து இடிபோல் உரப்பினன். கோயிலினுள் இருந்த மக்கள் யாவரும் நடுநடுங்கி விசுவேசுரரைத் தழுவி மயங்கினார்கள். கயாசுரன் அதனைக் கண்டும் அவர்களைக் கொல்லும்படி கோபத்துடன் வந்தான். உடனே சிவபெருமான் கோபம் கொண்டு தமது திருமுடி அண்டத்தின் உச்சியைத் தொட, ஆயிரம் கோடி சூரியப் பிரகாசத்தோடு எழுந்து நின்றார். அப்பேரொளியைக் காணும் சக்தி, தேவர்கள் முனிவர்கள் முதலியவர்களின் கண்களுக்கு இல்லாதுபோயிற்று. அதனால், அவர்கள் கண்களைப் பொத்தி வருந்தினார்கள். உக்கிர வடிவொடு சிவபெருமான் கயாசுரன் முன் சென்றார். கயாசுரன், 'இவர் சிவபெருமான்' என்றறிந்தும் நான்முகன் கூறியதை மறந்து, அவரோடு போர்புரிய எண்ணினன். சிவபெருமான் அவனைத் தம் திருவடியால் உதைக்க அவன் கவிழ்ந்து பதைத்து விழுந்தான். சிவபெருமான், அவனுடைய சிரசை ஒரு திருவடியினாலும் தொடையை மற்றொரு திருவடியினாலும் மிதித்துக் கொண்டு, இரண்டு திருக்கரங்களின் நகங்களால் முதுகில் கிழித்து நான்கு கால்களும் பக்கங்களில் பொருந்தும்படி தோலை உரித்தார். அதனைக்கண்டு உமாதேவியார் கலங்கினார்.

ஒருப தத்தினைக் கவானுறுத் திருகரத் துகிரால்
வெரிநி டைப்பிளந் தீரிரு தாள்புடை மேவக்
குருதி கக்கியே ஓலிட அவுணர்தங் குலத்துக்
கரியு ரித்தனன் கண்டுநின்(று) அம்மையுங் கலங்க.

சிவபெருமானுடைய உக்கிரத் திருமேனியின் பேரொளியைக் கண்ட உயிர்களின்கண்கள் ஒளியிழந்தன. சிவபெருமான், உயிர்களின் கண்ணொளி மயங்கியதைப் போக்கக் கருதி, யானைத் தோலைத் தமது திருப்புயத்தின் மேல் போர்த்துத் தம் பேரொளியை மாற்றினார்; உயிர்களுக்குக் கண்ணொளியை அளித்து அருள்புரிந்தார். தேவர்கள் அவரை வணங்கித் துதித்தார்கள். யாவரும் கயாசுரன் அழிந்தமையைக் கண்டு ஆடிப் பாடிக் களித்தார்கள். பிறகு காசிப்பதியில் வாழ்பவர்களும் முனிவர்களும் அகிலநாயகரை வணங்கி அவருக்கு விசேட பூசை புரிந்து அருள்பெற்றுச் சென்றார்கள்.

**நான்முகனின் மண்டையோட்டை ஏந்தியது**

முன்னொரு நாளில் திருமாலும் நான்முகனும் மேருமலையின் ஒரு கொடுமுடியில் இருந்தனர். அப்போது பல முனிவர்களும் தேவர்களும் வந்து அவர்களை வணங்கி நின்று, "மும்மூர்த்திகளுக்கும் முதன்மையானவரும், அநாதியாயுள்ளவரும், உயிருக்குயிராய் உள்ளவரும் ஆகிய கடவுள் யார்? நீங்கள் இருவரும் கூறுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்கள். நான்முகன் சிவபெருமானுடைய மாயத்தில் அகப்பட்டு, "நானே பரம்பொருள். நீங்கள் இதனை நன்கு உணர்ந்துகொள்ளுங்கள்" என்று கூறினான். திருமாலும் அத்தன்மையில் ஈடுபட்டு, "உன்னைத் தோற்றுவித்த யானே உன்னிலும் உயர்ந்த பரம்பொருள்" என்றார். இவ்வாறு இருவரும் கோபங்கொண்டு ஒருவருக்கொருவர் மாறுபட்டுப் போரிட்டனர். அதைக்கண்ட முனிவர்களும் தேவர்களும், "இவ்வாதம் நம்மால் உண்டாகியது" என்று கூறி எல்லோரும் அவ்விடம் விட்டு நீங்கினார்கள். திருமாலும் நான்முகனும் மேலும் போரிட்டார்கள். அப்போது வேதமும் பிரணவமும் வேறு வேறு உருக்கொண்டு அவர்களை நோக்கி, "சிவபெருமான் ஒருவரே மெய்க்கடவுள். ஆதலால், நீவிர் புரியும் வாதங்களை விலக்குங்கள்" என்று கூறின. அவர்கள் அவ்வாக்குகளுக்குச் செவி சாய்க்காது போரிட்டார்கள். சிவபெருமான் அதனைக்கண்டு அவர்களின் கொடிய போரை நிறுத்தத் திருவுளங்கொண்டு சோதி வடிவமாய் ஆகாயமத்தியில் தோன்றியருளினார். அகந்தையில் மிகுந்துழலும் திருமாலும் நான்முகனும், "இச்சுடர் யாதோ?" என மருண்டார்கள். பரமசிவன் அச்சோதியிலே உமாதேவியாரொடு வீற்றிருக்கும் திருக்கோலத்தில் எழுந்தருளினார். திருமால் மயக்கம் நீங்கி, "எம்பெருமான் எழுந்தருளி வந்தார்" என்று விரைந்து எழுந்து வணங்கினார். ஆனால், ஒருசிறிதும் மயக்கம் நீங்காத நான்முகன் அகந்தை வயப்பட்டுச் சிவபெருமானை வணங்காது, தனது உச்சித் தலையிலுள்ள வாயினால் அவரை இகழ்ந்தான்.

சிவபெருமான், ஐந்து முகங்களையுடைய நான்முகனின் அகந்தையை அழிக்கத் திருவுளம் கொண்டு, **வைரவக் கடவுளை** உண்டாக்கினார். வைரவக் கடவுள் நீலநிறத் திருமேனியோடு, திருவடிகளில் சிலம்புகள் ஒலிக்கவும், மார்பில் சிர

மாலைகள் அலையவும், திருக்கரங்களில் சூலமும், மழுவும், பாசமும், உடுக்கையும் ஏந்தவும், மூன்று திருக்கண்களும், கோரைப் பற்களும், செஞ்சடையும், கோபப் புன்னகையும் கொண்டு தோன்றினார். கருணைக் கடலாகிய சிவபெருமான் வைரவக்கடவுளை நோக்கி, "நான்முகனுடைய உச்சித் தலை நம்மை இகழ்ந்தது. அத்தலையைக் கிள்ளிக் கரத்தில் ஏந்தி, மீட்டு அவனுக்கு உயிரைக் கொடுப்பாயாக. தம்மைத்தாமே புகழு கின்ற முனிவர்களிடத்தும், தேவர்களிடத்தும் சென்று அவர் களுடைய உடலிலுள்ள இரத்தத்தைப் பிச்சையாக ஏற்கக்கட வாய்! அங்ஙனம் ஏற்கும் பொழுது இறந்தவர்களுக்கு மீட்டும் உயிரைக் கொடுத்து அகந்தையை மாற்றி, உனக்காக அமைந்த **வைரவ புவன பதத்தில்** இருந்து, மனிதர்கள் தேவர்கள் ஆகிய இவர்களின் துன்பத்தைப் போக்கிப் பாதுகாப்பாயாக" என்று கூறிச் சோதியில் மறைந்தருளினார். சோதியும் மறைந்தது. திரு மால் இவற்றைக்கண்டு,'நாம் இங்கே நிற்றல் முறையல்ல'என்று சிவபெருமானை வணங்கித் தம் வைகுண்டத்தை அடைந்தார்.

வைரவக் கடவுள் நான்முகனின் உச்சித் தலையைத் தன் நகத்தால் கிள்ளி ஏந்தினார். பீறிக்கொண்டு எழுந்த இரத்த வெள்ளம் பூமியைச் சூழ்ந்தது. அப்போது நான்முகன் இறந்து கீழே விழுந்தான். வைரவக் கடவுள் தமது நெற்றிக்கண்ணின் அக்கினியினால் இரத்த வெள்ளத்தைச் சுவறச் செய்தார்; நான் முகனுக்கு மீட்டும் உயிரைக் கொடுத்தார். அவன் எழுந்து நல்லுணர்வு வரப்பெற்று, வைரவக் கடவுளுடைய திருவடிகளை அன்போடு வணங்கி, "நான் சிவபெருமானுக்கு அளவற்ற குற்றங்களைச் செய்தேன்; ஆதலால், இப்பெரும்பழியைப் பெற் றேன்; உம்முடைய பேரருளினால் அகந்தை நீங்கிப் பழைய நல் லறிவு பெற்றேன். என் பிழைகளை பொறுத்தருள வேண்டும்; சிவபெருமானை இகழ்ந்த என் உச்சித் தலை தூய்மை அடையும் பொருட்டும், உம்மை நான் தரிசிக்கும்போது என் மயக்கம் தீரும் பொருட்டும்,சூலப்படையைப்போல, இச்சிரசையும் உமது திருக்கரத்தில் ஏந்தி அருள்க" என்று போற்றினான். வைரவக் கடவுள் பிரமனை நோக்கி, "அவ்வாறே ஆகுக" என்று அருள் புரிந்து, அங்கு நின்றும் புறப்பட்டார். அன்றுமுதல் பிரமா நான்கு முகங்களைக் கொண்டவரானார்.

பிறகு வைரவக் கடவுள் **காலவேகன், அக்கினிமுகன், சோமகன், ஆலகாலன், அதிபலன்** முதலாகிய பல பூதர்களை உண்டாக்கி, அப் பூதகணங்கள் சூழ, செருக்குற்ற முனிவர்களிருக்கும் இடங்கடோறும், தேவர்கள் இருக்கும் விண்ணுலகந்தோறும் சென்று, அவர்கள் உடலிலுள்ள இரத்தத்தைப் பிச்சையாக ஏற்றுப் பின்பு உயிர் அளித்து, அவர்களை எழுப்பி அவர்களின் மனங்களைத் தூய்மைப் படுத்தினுர். இறுதியில் திருமாலின் வைகுந்தம் அடைந்தார். அவருடைய பூதகணங்கள் முன்னே சென்றன. திருமாலின் காவலாளனுகிய **விடுவசேனன்** என்னும் சேனுதிபதி அப்பூதகணங்களை உள்ளே விடாமல் தடுத்தான்; காலவேகன் முதலாகிய பூதர்கள் அவனேடு போர்புரிந்து நின்ருர்கள். வைரவக் கடவுள் வந்து விடுவசேனனைத் தம் சூலத்தில் கோத்துப் பூதகணங்களோடு உள்ளேபோய்த் திருமாலை அடைந்தார். திருமால் தம் மனைவியர்களோடு எழுந்து நின்று வைரவக் கடவுளின் பாதங்களை வணங்கி நின்று, "தேவரீர் இங்கு எழுந்தருளிய காரணம் யாது?" என்று வினவினுர். "நாம் இங்கே வந்தது பிக்ஷைக்கு; உன் தலையிலுள்ள குருதியை உதவுவாய்" என்ருர். திருமால் நன்றென்று கூறித் தம்முடைய நெற்றியிலுள்ள நரம்பு ஒன்றை நகத்தால் கீறிக் குருதியைப் பிச்சைப் பாத்திரத்தில் உகுத்தார். இவ்வாறு பதினுயிர வருஷகாலம் குருதியை உகுத்தும் பிரம கபாலத்தில் பாதியும் நிறைந்திலது. திருமால் வலிமை நீங்கிச் சோர்ந்து விழுந்தார். உடனே திருமாலின் மனைவியர்களாகிய பூதேவியும் சீதேவியும் வைரவக் கடவுளைச் சரணடைந்து திருமாலை எழுப்பித் தரும்படி வேண்டினுர்கள். அங்ஙனமே அவர் திருமாலின் சோகத்தை நீக்கி உய்ந்தெழும்படி அருள் செய்தார்; பிறகு சூலத்தின்மீது கோத்த விடுவசேனனை விடுவித்து, அவனுக்கு உயிரைக் கொடுத்து அருள் புரிந்து கணங்களோடு தம் புவனத்தை அடைந்தார். வைரவக் கடவுள், சிவபெருமானின் ஆணையினுல் சங்கார காலத்தில் யாவற்றையும் அழிப்பார்; யாவும் அழிந்த சுடுகாட்டில் **வேதமாகிய நாய் வாகனத்தில்** ஏறிப் பேரானந்தத்தோடு உலவுவார். பரமசிவன், பிரம கபாலத்தை யேந்தி வீடுகடோறும் பிச்சை ஏற்றதும், நான்முகன் முதலிய தேவர்கள் ஆணவமுற்ற காலத்து அவர்களைத் தண்டித்து நல்வழிப் படுத்தியதும் பேரருளே ஆகும்.

**வேற்றுருக் கொள்ளல்**

ஒருநாள் இந்திரன் அகந்தை கொண்டு சிவபெருமானைத் தரிசிக்கத் திருக்கயிலாயமலைக்குச் சென்றான். அதனையறிந்த சிவபெருமான் ஒரு பூத வடிவம் கொண்டு தம் கோயிலின் வாயிலில் நின்றார். அவரை இந்திரன் பார்த்து, "நீ யார்? இங்கு மிகப் புதியவனா யிருக்கின்றாய்? உன்னை இன்றைக்குத்தான் இங்குக் கண்டேன். சிவபெருமானைத் தரிசித்தற்கு இது தக்க சமயமா? சொல்லுதி" என்று கேட்டான். சிவபெருமான் அவனுக்குப் பதிலொன்றும் கூறாதவராய் நின்றுகொண்டிருந்தார். இந்திரன் கோபங்கொண்டு அவர் மேல் தன் குலிசாயுதத்தை எறிந்தான். அது சிவபெருமான் மேற்பட்டுத் துகளாகி விரைவில் அழிந்தது. சிவபெருமான், தம் மாறு வேடத்தை நீக்கி உருத்திர வடிவம் தாங்கிப் பெருங் கோபத்துடன் சிறிது உரப்பி, நான்முகன் முதலிய தேவர்கள் அஞ்சும்படி நின்றார். அதனைக்கண்டு இந்திரன் மனம் நடுங்கி, அவர் பாதங்களில் விழுந்து, "எம்பெருமானே! நாயினும் கடையேனாகிய அடியேன் உம்முடைய மாயத்தை அறியேன். தீவினையேன் செய்த பிழைகளைப் பொறுத்தருள்வீராக" என்று கூறிப் பலமுறை துதித்து வேண்டினான். சிவபெருமான் இந்திரனுக்குக் கருணைபுரிந்து காத்தருளினார்; தம்பால் எழுந்த சினத்தை மேற்குக் கடலில் வீசினார்; இந்திரனுக்கு விடைகொடுத்து அனுப்பித் தம் திருக்கோயிலை அடைந்து உமாதேவியாரோடு வீற்றிருந்தருளினார்.

**சலந்தராசுரன் தோற்றம்**

சிவபெருமானால் மேற்குக் கடலில் வீசப்பெற்ற சினமானது ஒரு குழந்தை வடிவமாயிற்று. அக் குழந்தையை வருணன் எடுத்து வளர்த்தான். அக் குழந்தை சிறிது அழுதபொழுது வானுலகமும், மண்ணுலகமும், எண்டிசைகளும் செவிடுபட்டன. நான்முகன் அவ்வொலியைக் கேட்டு, "இவ்வொலி யாது?" என்று எண்ணிக் கடலை அடைந்தான். வருணன், நான்முகனை ஓர் ஆசனத்தில் அமரச்செய்து, "இவன் யான் பெற்ற பாலகன்; பார்த்தருள்க" என்று பாலகனை அவனுடைய கையில் நீட்டினான். நான்முகன் பாலகனைப் பெற்றுத் தன்மடியிற் கிடத்தினான். அப்பாலகன் நான்முகனுடைய நான்கு தாடிகளையும் தன் கை

களால் வலிமையோடு இழுத்துத் தொங்கினான். நான்முகனின் கண்களினின்று நீர் சிந்தியது. அப்போது நான்முகன் அப் பாலகனுடைய கையினின்றும் தன்னுடைய தாடிகளை மெல்ல நீக்கிப் பல கைகளால் அவனை எடுத்து வருணனுடைய கையிற் கொடுத்தான்; சிறிதுநேரம் யோசித்து வருணனை நோக்கி, "இவன் பரமசிவனுடைய கோபத்தினின்று எழுந்தான். ஆதலால் இவன் ஒரு கடவுளையும் நினையான்; அவர்களிடத்து ஒரு வரத்தையும் வேண்டான். தேவர்களும், இந்திரனும், திக்குப் பாலகர்களும் இவனைக் கண்டு நடுங்கி ஓடுவார்கள். இவனுக்குத் திருமால், கூற்றுவன் யாவரும் அஞ்சுவர்; மண்ணுலகமும் விண்ணுலகமும் அஞ்சும். இவன் தன் பரிசனங்களோடு பூவுலகில் கொடுங்கோல் ஆட்சி நெடுங்காலம் புரிவான். சிவபெருமான் அன்றி வேறு யார் இவனைக் கொல்வார்?" என்று கூறினார். வருணன் நான்முகனை நோக்கி, "நீர் இக்குழந்தைக்கு நல்லதொரு பெயர் இடும்" என்று கூறினான். நான்முகன் "நீ தரித்தமையால் இவனுடைய பெயர் **சலந்தரன்*** என்பது ஆகும்" என்று கூறித் தன் இருப்பிடம் அடைந்தான். வருணன் சிறுவனைச் சீரோடு பலநாள் வளர்த்து வந்தான். அவன், காளைப் பருவம் எய்திப் பூமியிலே அவுணர்களைச் சேர்ந்து அவர்களோடு சென்று திசைகளை வென்று, இந்திரனும் தேவர்களும் அஞ்சி மேரு மலைக்கு ஓடும்படி பல கொடுமைகள் புரிந்தான்; அவர்களுடைய உலகமுழுவதையும் அவுணர்களுக்கே அளித்தான்; பின்பு, அவுணத்தச்சனை அழைத்து **சாலாந்தரம்** என்னும் ஒரு நகரை அமைத்து அதிலிருந்து அரசுபுரிந்தான்; அதன் பின்பு காலநேமி என்னும் அவுணனின் மகளாகிய **விருந்தை** என்பாளை சுக்கிராசாரியர் சொற்படி திருமணம் புரிந்துகொண்டான்; பின்னாள் உலகிலே யாவரும் அஞ்சும்படி சகல செல்வங்களுடன் இன்பம் அனுபவித்துக்கொண்டிருந்தான். இங்ஙனமிருக்கும் நாளில் சலந்தரன் மேரு மலையில் மறைந்திருந்த தேவர்களோடு போர்புரிய எண்ணி அங்கே சென்றான். அதனை அறிந்த தேவர்கள், "பாதகனாகிய சலந்தரன் இங்கும்வந்தான்; என்செய்வோம்" என்று சிங்கத்தைக் கண்ட யானைகளைப்போலத் தேம்பிச் செய்வ

---

** சலந்தரன் - கடலால் வளர்க்கப்பட்டவன். சலம் - கடல். தரம் - தரித்தல். ஆகவே கடலால் தாங்கப்பெற்றவன் சலந்தரன் என்பதாம்.*

தின்னதென்று அறியாமல் திருமாலை நோக்கிக் காத்தருளுமாறு வேண்டித் துதித்தார்கள். திருமால் உடனே மேருமலைக்கு வந்து சலந்தராசுரனோடு இருபதினாயிரம் வருடம் பெரும் போர் புரிந்தார். ஆயினும் அவனை வெல்ல இயலாது, புகழ்ந்து சென்றார். திருமால் சலந்தரனோடு போர் புரியும்போது இந்திரனும் தேவர்களும் பயந்து கயிலைமலையை அடைந்தார்கள். சலந்தரன் தேவர்களை எங்கும் தேடிக் காணாதவனாய், 'அவர்கள் கயிலை மலையை அடைந்தார்கள் போலும்' என்று கருதிக் கோபமுடையவனாய்த் தன்னூரில் சிலகாலம் இருந்து, பின்பு தேவர்களை வெல்லக் கயிலைமலைக்குச் சேனைகளோடு புறப்பட்டான். அச்சமயம் அவன் மனைவியாகிய விருந்தை தன் கணவனை நோக்கி "என் நாயகரே! பரமசிவனோடு போர் வேண்டாம், வேண்டாம். அவருடன் பொருதால் நீ அழிவாய்" என்று பணிவுடன் கூறினாள். மனைவியின் சொல்லைக் கேளாமலும் வருங்கேட்டை நினையாமலும் சலந்தரன் சேனைகளோடு கயிலைமலையை அடைந்தான். அவன் வருகையைக் கண்ட இந்திரன் முதலிய தேவர்கள், திருநந்திதேவரின் அனுமதிபெற்றுக் கோயிலினுட்சென்று சிவபெருமானை நோக்கித் தங்களைக் காத்தருளுமாறு வேண்டினார்கள்.

### சலந்தரன் அழிதல்

அப்போது சிவபெருமான் இந்திரனை நோக்கி, "இந்திரனே! உன் துன்பத்தை நீக்குவாயாக" என்று கூறி, அவனை அனுப்பினார். பிறகு சிவபெருமான் ஒருதிருவிளையாடலைச்செய்ய எண்ணிக் கமண்டலத்தையும் குடையையும் ஏந்தி, தண்டூன்றி நரைத்த அந்தணர் வேடங்கொண்டு, தேவர்கள் மறைந்து பின்தொடரச் சலந்தராசுரனிடம் போய், "நீ யார்? எங்குள்ளாய்? யாரைத் தேடி இங்கு வந்தாய்? சொல்வாய்" என்று வினவினார். சலந்தரன் "பூவுலகத்திலுள்ளேன்; சமுத்திரத்தின் குமாரன்; சலந்தரன் என்னும் பெயரினேன். தேவர்களையும் பரமசிவனையும் வெல்வதற்கு இங்கு வந்தேன்" என்றான். அதனைக்கேட்ட அந்தணராகிய கடவுள் அவனைப் பார்த்து, "யான் சிவபெருமானுக்குப் பக்கத்தில் இருப்பவன். அவரோடு போரிட்டால் நீ இறப்பது நிச்சயம். ஆதலால், நீ பிழைக்க நினைத்தால் திரும்பிச் செல்வாயாக" என்றார். உடனே சலந்தரன் கோபங்

கொண்டு கண்களில் தீப்பொறி பறக்க அவரைப் பார்த்து, "அந்தணரே! நீர் என்னைச் சிறியவன் என்று நினைத்தீர். ஒரு கணப்பொழுது இங்கு நின்று என் வலிமையைக் காண்பீராக" என்று கூறினன். சிவபெருமானுகிய அந்தணரும், "யாமும் உன் வலிமையைக் காண வந்தோம்" என்று கூறித் தம் திருவடியினுல் நிலத்தில் ஒரு சக்கரத்தைக் கீறினர். அஃது ஒரு சக்கராயுதமாக ஆகியது. சலந்தரனை நோக்கி, "இந்தச் சக்கரத்தை உன் வலிமையினுல் தலையில் தூக்கி வைத்துத் தாங்க வல்லையோ?" என்று வினவினர். சலந்தரன் அவரைப் பார்த்து "நான் தேவர்கள் யாவரையும் புறங்கண்டேன்; கங்காநதியின் பெருக்கை அடக்கினேன்; சமுத்திரத்திலுள்ள வடவாமுகாக்கினியை அவித்தேன்; திருமாலையும் போரில் வென்றேன். எனக்கு இதனைத் தாங்குவது அரிதோ? என்று கூறிச் சக்கரப் படையைக் கையிலெடுத்தான். அது மிகக் கனமாக இருந்தது. அவன் ஒருவாறு முயற்சித்துத் தலையில் தூக்கி வைத்தான். சக்கரப்படை அவனுடைய உடலைத் தலையிலிருந்து கால் வரையில் இருகூருகக் கிழித்துச் சிவபெருமானைத் திரும்பி அடைந்தது. சலந்தரன் உடலினின்று விழுந்த இரத்தம் நிலவுலகமெங்கும் பரவியது. அது சிவபெருமான் ஆஞ்ஞைப்படி நரகத்தில் போய் விழுந்தது. சிவபெருமான் சலந்தரனுடைய சேனைகளைத் திருக்கண்பொழிந்த தீயினுல் பொடியாக்கித் தன் சுய உருவத்தைக் காட்டியருளினர். இந்திரன் முதலிய தேவர்கள் அவரை வணங்கி, "தேவரீர் அடியவர்களாகிய எங்கள் துன்பத்தை நீக்கியருளினீர்" என்று துதித்தார்கள். சிவபெருமான் அவர்கள் யாவருக்கும் அருள்புரிந்து தத்தம் இடங்களுக்குச் செல்ல விடையளித்துத் தமது திருக்கோயிலை அடைந்தருளினர்.

**திருமாலும் விருந்தையும்**

திருமால், சலந்தரன் மனைவியாகிய விருந்தையை விரும்பினர்; தவக்கோலம் பூண்டு சலந்தரனுடைய மாளிகையின் அருகிலுள்ள ஒரு சோலையில் வந்து வஞ்சனையாகத் தங்கியிருந்தார். கற்பிற்சிறந்த சலந்தரனுடைய மனைவியாகிய விருந்தை, தன் கணவன் இறந்ததை அறியாமல் 'தன் கணவன் நிலைமை யாதாயிற்ருே?' என்னும் எண்ணத்துடன் அச்சோலைக்குச் சென்ருள்.

அங்கே திருமாலின் காவலாளர் இருவர் சிங்க வடிவம் எடுத்து முழங்கிக்கொண்டு அவள் முன் வந்தார்கள். அச்சிங்கங்களைக் கண்ட விருந்தை பயந்து சோலையிலே தவவேடம் கொண்டிருந்த திருமாலிடம் ஓடி அடைந்தாள். அவர், "பெண்ணே! அஞ்சற்க" என்று மொழிந்தார். சிங்கங்களாய் அவளைத் துரத்திக்கொண்டு வந்த காவலர்கள் திரும்பி ஓடிவிட்டார்கள். விருந்தை தவ வேடங்கொண்டிருந்த திருமாலை நோக்கி, "தந்தையே! சிவ பெருமானோடு போர்புரியச் சென்ற என் கணவர் இன்னும் திரும்பி வரவில்லை. அவர் இறந்தாரோ? அல்லது பிழைத் தாரோ? என்று அறியேன். அதனை விபரமாகக் கூறியருளும்" என்றாள். அப்போது திருமாலின் காவலர் இருவரும் மாயையினால் குரங்குகளின் வடிவமெடுத்து இறந்த சலந்தர னின் உடலை விரைவில் கொண்டுவந்து விருந்தை முன் போட்டனர். அதனைக் கண்ட விருந்தை பதைத்து வீழ்ந்து அரற்றி இறந்தவள்போல் மூர்ச்சித்துக் கிடந்தாள். திருமாலா கிய தவசி அன்பினோடு கையை நீட்டி, "பெண்ணே! நீ வருந் தாதே" என்று கூறித் தேற்றி எழுப்பினார். விருந்தை அவரை வணங்கி நின்று, "உம்மைப் போன்று தவம் புரியும் மாதவர்கள் இவ்வுலகத்தில் இல்லை. நீவிர் என் கணவனின் பிளவுபட்ட உடலைப் பொருத்தி அவரை உயிர்ப்பித்தருள வேண்டும்" என்று வேண்டினாள். திருமால் உடனே சலந்தரனின் உடலைப் பொருத்தித் தாம் மாயமாக மறைந்து அவனுடைய உடம்பினுள் புகுந்தருளினார். அப்போது குரங்கு வடிவிலிருந்த காவலாளர்கள் விரைவில் மறைந்தார்கள். சலந்தரனுடைய உடம்பினுட் புகுந்த திருமால் சலந்தரனாய் எழுந்தார். விருந்தை தன் கணவன் உயிர் பெற்றெழுந்தான் என்று கருதி மகிழ்ந்தாள். தன் கண வன் வடிவத்திலிருந்த திருமாலை மகிழ்ச்சியோடு தழுவினாள். அவ்வாறு தழுவிய விருந்தையைத் திருமால் இரவும் பகலும் இறையளவும் பிரியாதவராய்க் காமவின்பம் நுகர்ந்து அவளோடு பலநாள் அச்சோலையில் இருந்தார். இங்ஙனம் இருக்கும் பொழுது, ஒருநாள் தம் மாயத்தை மறந்து கண்ணுறங்கினார். அப்போது விருந்தை அவரைப் பார்த்து, 'இவன் வஞ்சகன்! வஞ்சகன்! திருமாலே ஆகும்!' என்று அறிந்து வருந்தினாள். தன் கற்புநிலை அழிந்ததற்காகப் பெரிதும் ஏங்கி இரங்கினாள். தன்

ஞான உணர்வினல் திருமால் செய்த மாயங்கள் முழுவதையும் அறிந்து அவரை நோக்கி, "முன்பு இங்கே சிங்க வடிவத்தில் வந்த இருவரும் உன் காவலர்களே. அவர்கள் உனக்குப் பகைவர் களாக வர, நீ பூமியில் ஓர் அரசனுகிக் குரங்குகளோடு அலேந்து திரிவாயாக! என்னை நீ வஞ்சித்தது போல உன் மனைவியை உன் பகைவர்கள் வஞ்சித்து, மாயையினல் கவர்ந்து செல்லுவார்கள். அதனல் நீ பெரும்பழியை அடைவாய்" என்று சாபம் கொடுத் துத் தீயில் விழுந்து உயிர் நீத்தாள்.

**திருமால் துளபம் அணிதல்**

திருமால், விருந்தையின் பிரிவைத் தாங்காமல் மிகவருந்தி அவள் வெந்த சாம்பலில் வீழ்ந்து, புரண்டு பலவாறு புலம்பி வாடினர். அப்போது நான்முகனும் தேவர்களும் சிவபெரு மானை அடைந்து வணங்கித் திருமாலின் நிலைமையை விண்ணப் பித்தார்கள். அருகிலிருந்த உமாதேவியார் அதனைக் கேட்டுப் பேரருள் புரிந்து ஒரு விதையை உண்டாக்கி, அத்தேவர்களிடம் கொடுத்து, "இதனைத் திருமாலுக்கு முன்னே கொண்டுபோய் இடுங்கள்" என்று கூறினர். அதனை நான்முகன் இரு கையை யும் நீட்டி வாங்கிச் சிரமேற்கொண்டுபோய் ஈமத்தில் விருந்தை வெந்த சாம்பலின்மீது விதைத்து அமுதத்தை ஊற்றினர். அது திருமாலின் முன் ஒரு துளவமாய் வளர்ந்து ஒரு பெண் வடிவமா யிற்று. திருமால் அப் பெண்ணைக் கண்டு விருந்தையின்மேல் வைத்த ஆசை நீங்கிப் புதிய பெண்மேல் ஆசைகொண்டார். நான்முகனும் தேவர்களும் அப்பெண்ணைத் திருமாலுக்குத் திரு மணம் புரிந்து வைத்தார்கள். திருமால் துளவம் என்னும் பெண் ணேடு தம் நகருக்குச் சென்றார்; அவளோடு பல போகங்களை அனுபவித்தார்; அவளை முடிமாலையாகவும் அணிந்துகொண்டார்.

**திருமால் சக்கரப் படையைப் பெறுதல்**

திருமால், சலந்தராசுரனைக் கொன்ற சக்கராயுதத்தைச் சிவ பெருமானிடமிருந்து பெற விரும்பினர்; சிவபெருமான் திருவடி களை நாடோறும் ஆயிரம் தாமரை மலர்களால் அர்ச்சித்துப் பூசித்து வந்தார். ஒருநாள் ஒரு தாமரை மலர் குறைந்தது. திரு மால் தாமரை மலருக்குப் பதிலாகத் தம் கண்ணில் ஒன்றைத்

தோண்டித் தாமரை மலராக எடுத்துச் சிவபெருமான் திருவடிகளில் சாத்தினர். சிவபெருமான், திருமாலின் பூசைக்கு உவந்து, இடபாரூடராய்த் தோன்றி அச் சக்கரப் படையை அவருக்குக் கொடுத்தருளினர். திருமால் சக்கரப் படையைப் பெற்றதால் உலகம் அவரை, '**நேமியான்**' என்று வழங்குகிறது.

**இடப வாகனம் : தருமதேவதை, திருமால்**

இரண்டாயிரம் சதுர் யுகங்கள் சென்றால் அது நான்முகனுக்கு ஒரு நாளாகும். அந்த நாள் முப்பது கொண்டது ஒரு திங்களாகும். பன்னிரண்டு திங்கள் கொண்டது ஒரு ஆண்டாகும். நூறு ஆண்டுகள் கழிந்தால் நான்முகனுடைய ஆயுள் நீங்கும். அது திருமாலுக்கு ஒரு நாளாகும். திருமாலுடைய ஆயுளும் இங்ஙனமே கழியும். அப்போது உலகங்களும் உயிர்களும் அழியும். எல்லா உலகங்களிலும் அக்கினி பரவி உண்ணும். அப்போது எங்கும் சுடலை மயமாய் விளங்கித் தூய்மைபெறும். அச்சமயத்தில் ஞான முதல்வராகிய சிவபெருமான் உமாதேவியார் காண நடனஞ்செய்து உலவுவார். அந்த அக்கினிப் பிரளயத்தைத் தருமதேவதை கண்டு அஞ்சி, "யாம் இங்கிருந்தால் இறப்போம்; இனிச் செய்வது யாது" என்று ஆலோசித்துச் 'சிவபெருமானைச் சரண் புகுந்தால் என்றும் அழியாதிருப்போம்' என்று எண்ணி இடபத்தின் வடிவத்தை எடுத்துச் சிவபெருமானை அடைந்து துதித்து, "அடியேன் இப்பொழுது இறக்கும் தன்மையை மாற்றி எனக்கு வலிமையையும் தேவரீருக்கு வாகனமாகும் பேற்றையும் தந்தருளும்" என்று வேண்டியது. கருணைமூர்த்தியாகிய சிவபெருமான், எருது வடிவமாக வந்து போற்றிய அறக்கடவுளுக்கு இறவாத தன்மையையும், வாகனமாகத் தம்மைத் தாங்கும் தன்மையையும், ஒப்பிலாத ஆற்றலையும், அன்பையும், மெய்யுணர்வையும் அளித்து அதனை நோக்கி, "உன்னை நாம் வாகனமாக ஏற்றோம் ; உன்னிடத்தில் நாம் எக்காலமும் நீங்காதிருப்போம். நீ எல்லோருக்கும் தலைமை தாங்குவாய். நீ இடப வாகனமாய் நம்மிடத்தில் இருப்பாயாக; இவ்வடிவையன்றி மானிட வடிவமெடுத்தும் நம்மைப் பூசிப்பாய். உன்னிடத்து யாம் என்றும் உள்ளோம்" என்று அருள்புரிந்தார். அந்நாள் முதலாகச் சிவபெருமான் தம்மை மெய்யன்போடு வழிபடும் அன்

பர்களுக்குக் காட்சி யளிக்கும்போது அந்த இடபவாகனத்தின் மேல் எழுந்தருளிவந்து தோன்றுவர். சிவபெருமான் முப்புரம் எரித்த காலத்தில் திருமால் இடப வடிவங்கொண்டு வந்து எம் பெருமானைத் தாங்கினர். ஆதலால் இடபத்தைச் செலுத்துதல் சிவபெருமானுக்கு இழுக்கன்று.

**நஞ்சுண்டல்**

முன்னொரு காலத்தில் அசுரர்களும் தேவர்களும் ஒருவரோடொருவர் எதிர்த்துப் போர் புரிந்தனர். இருதிறத்திலும் பற்பலர் உயிர் இழந்தனர். தேவர்கள் இறக்காது இருக்கக் கருதி நான்முகனை அணுகி, "பலநாள் இறவாமல் இருந்து போர் புரியும்படி பாற்கடலைக் கடைந்து அதிலுள்ள அமுதத்தை எடுத்துத் தந்தருளும்" என்று வேண்டினர்கள். நான்முகன் அவர்களை அழைத்துக்கொண்டு திருப்பாற்கடலில் அறிதுயில் புரியும் திருமாலிடம் சென்றார். திருமால் அவர்கள் வந்த காரணத்தை வினவினர். நான்முகன், தேவர்களும் அசுரர்களும் வேண்டிக்கொண்டதைக் கூறினர். திருமால் அவர்களின் விருப்பத்திற்கு இணங்கினர்; மந்தரமலையை மத்தாகவும், சந்திரனைத் தூணாகவும், வாசுகியைக் கயிறாகவும் கொண்டு, ஒருபுறத்தில் தேவர்களும் மற்றொருபுறத்தில் அசுரர்களும் பிடித்து நாணை இழுத்துத் திருப்பாற்கடலைக் கடையும்படி கூறினர்; மத்தின் அடியையும் முடியையும் தானே தாங்கினர். இங்ஙனம் திருமால் மத்தைத் தாங்கத் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தார்கள். கடையும்போது நாணாக இருந்த வாசுகி என்னும் பாம்பு, பொறுக்கமுடியாமல் அயர்ந்து மயக்கமடைந்து சினங்கொண்டு, தம் ஆயிரம் முகங்களிலுள்ள வாய்களின் மூலமாக ஆலகால விஷத்தைக் கக்கியது. திருப்பாற்கடலும் தன்னிடமிருந்த விஷத்தை உமிழ்ந்தது. விஷங்களின் கொடுமை எங்கும் பரவியது. அசுரர்களும், நான்முகன் முதலிய தேவர்களும் அதனைக் கண்டு ஓடலாயினர். திருமால் மந்தரமலையைத் தாங்குவதை விடுத்து அந்நஞ்சைத் தடுப்பதற்கு முயன்று எதிரே சென்றார். விஷம் வெகுண்டு அவரைத் தாக்கியது. அப்போது **அது திருமாலின் செந்நிறத்தை மாற்றி நீலநிறமாக்கியது.** அவரும் விஷத்திற்கு முன் நிற்கலாற்றாது ஓடினர்.

திருமால் முதலிய தேவர்கள் நஞ்சின் முன் நிற்க ஆற்றாத வர்களாய்த் திருக்கயிலாயத்தை அடைந்தார்கள். அசுரர்களும் தேவர்களும் வாயிலில் நிற்கத் திருமாலும் நான்முகனும் திரு நந்திதேவரின் அனுமதிபெற்றுக் கோயிலினுட் சென்று எம்பெரு மானைத் தரிசித்துப் பன்முறை வணங்கித் துதித்தார்கள். சிவ பெருமான் திருமாலை நோக்கி, "திருமாலே! உன் மேனியின் நிறம் மாறுபட்ட காரணம் என்ன?" என்று வினவினர். திருமால் சிவபெருமானை நோக்கி, "எம்பெருமானே! தேவர் களும் அசுரர்களும் நெடுநாள் இறவாமலிருந்து போர் புரிய எண்ணினர்கள். அவர்கள் தங்கள் விருப்பத்தை நான்முக னிடம் சென்று கூறினர்கள். நான்முகன் அதனை என்னிடம் வந்து கூறினன். நான் அமுதத்தைப் பெறவேண்டித் திருப் பாற்கடலை நான்முகன் முதலிய தேவர்களோடும் அவுணர்க ளோடும் கடைந்தேன். அப்பொழுது திருப்பாற் கடலிலிருந்து ஆலகால விஷம் சீறி எழுந்து வந்தது. அதனைக்கண்டு யாவரும் பயந்து ஓடினர்கள். ஓடாது முன்னின்ற அடியேனுடைய உடலை அவ்விஷம் தாக்கி வேற்றுருவாக்கியது. நஞ்சின் கொடு மையைத் தாங்க ஆற்றாது தேவர்களோடும் நானும் தேவரீரிடம் ஓடிவந்தேன். தேவரீரின் திருவருளை நினையாது திருப்பாற் கடலைக் கடையச் சென்றதால் இத்தகைய துன்பம் நேர்ந்தது. நஞ்சை மாற்றி எங்களைக் காத்தருளவேண்டும்" என்றார்.

அப்போது வாயிலின் வெளியே இருந்த திக்குப்பாலகர் களும், தேவர்களும், அவுணர்களும் தாம் தாம் நின்ற இடங் களிலிருந்தபடியே கைலாசபதியை வணங்கித் துதித்துப் புகழ்ந் தார்கள். சிவபெருமான் அதனை அறிந்து அனைவரையும் உள்ளே அழைத்துவருமாறு கட்டளையிட்டருளினர். அவர்களும் உள்ளே வந்து சிவபெருமானை வணங்கி நின்று தங்களுக்கு நேர்ந்த துன் பத்தைப் போக்கியருளும்படி வேண்டினர்கள். இவற்றையெல் லாம் கேட்ட சிவபெருமான் தம் அருகிலிருந்து தொண்டு செய் யும் **சுந்தரர்** என்பவரை நோக்கி, "அக்கொடிய விஷத்தை இங்குக் கொண்டு வருக" என்று கட்டளையிட்டார். சுந்தரர் இனிதென்று வணங்கிச் சென்று, எங்கும் பரந்து நின்ற விஷத் தைப் பற்றிக்கொண்டு வந்தார். சிவபெருமான் அதனை ஒரு திவலைபோல் ஒடுங்கச் செய்து தம் திருக்கரத்தில் வாங்கித் தேவர்

களை நோக்கி, "இந்த நஞ்சை உண்போமா? அல்லது தூரத்தில் செல்ல எறிவோமா?" என்று வினவினர். அப்பொழுது நான்முகன் முதலிய தேவர்கள் அவருடைய திருவடிகளை வணங்கி நின்று, "எம்பெருமானே! இந் நஞ்சை எறிந்தால் அதனைத் தாங்க வல்லவர் யார்? அது தேவரீர் திருக்கரத்தில் இருப்பதால் இத்தகைய சிறிய அளவு கொண்டிருக்கிறது. இக் கொடிய நஞ்சை இப்பொழுது எறிந்தால் எவரும் பிழைக்க முடியுமா? எல்லோரும் ஒருங்கே சேர்ந்து அழிந்திடுவர். எப்பொருளாயினும் அதனின் முதற் பாகம் தேவரீரையே சேர்ந்தது ஆகும். எங்களைக் காத்தருளும் பொருட்டுத் தேவரீர் இந்த நஞ்சைத் திருவமுது செய்தருளல் வேண்டும்" என்று வேண்டினார்கள். எம்பெருமான் அவர்கள் விரும்பிய வாறு நஞ்சை உண்டருளினர். அஃது அவருடைய திரு மிடற்றில் சென்றது. அதனை யாவரும் நோக்கி, "எம்பெருமானே! இன்றைக்கு எங்கள் உயிரை நீர் காத்தருளியதற்குச் சான்ருக, நஞ்சைத் திருக்கண்டத்திலேயே நிற்கும்படி அருள் செய்ய வேண்டும்" என்று அவரைத் துதிப்பாராயினர். அவ்வண் ணமே சிவபெருமான் நஞ்சைத் தம் திருக்கண்டத்தில் நிறுத்தி ஒரு நீல இரத்தினுபரணம்போல விளங்கும்படி செய்தார். தேவர்கள் யாவரும் மிகுந்த மகிழ்ச்சியை அடைந்தார்கள்.

பிறகு சிவபெருமான் அவர்களைப் பார்த்து, "மேலும் திருப் பாற்கடலைக் கடையுங்கள்; அமுதம் உண்டாகும்" என்று கூறியருளினர். அவர்கள் யாவரும் எம்பெருமானை வணங்கித் துதித்துப்போய்த் திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். திருப்பாற் கடலிலிருந்து அமுதமும், வேறு பல உயர்ந்த பொருள்களும் தோன்றின. அவற்றையெல்லாம் தேவர்களே எடுத்துக் கொண் டார்கள். சிவபெருமான் நஞ்சை உண்டருளியது உயிர்களைப் பாதுகாப்பதற்கே யாம் விஷத்தைத் திருவமுது செய்த சிவபெரு மான் செய்தருளும் சங்காரகாலத்தில், உயிர்களும் அவற்றிற்கு ஆதாரமாகிய உடல்களும் ஒடுங்கிய இடம் சுடலையே ஆகும். அச் சுடலையே அக் கடவுள் திருநடனஞ் செய்யும் இடமாகும். அஃது எவராலும் அறிதற்கு அரிய தன்மையுடையது. மகாசங்காரஞ் செய்யுங் காலத்தில் எங்கும் வெளியிடமாய்ச் சுடலையாகும். அச் சுடலையிலே உமாதேவியாரும் தாமுமாய் நிற்பர். இது தவறு!

**சிவபெருமான் கங்கையைத் தாங்குதல்**

முன்னொரு காலத்தில் திருக்கயிலாயத்திலுள்ள சோலை யொன்றில் சிவபெருமான் வீற்றிருந்தார். அப்போது உமா தேவியார் விளையாட்டாக யாதும் பேசாமல் சிவபெருமானுக்குப் பின்புறம் வந்து தம் திருக்கரங்களினால் அவருடைய இரண்டு கண்களையும் மூடினார். உடனே புவனங்கள் எங்கும் இருள் பரந்தது. சிவபெருமானுடைய திருக்கண்களினால் எல்லாச் சோதிகளும் தழைப்பனவாகும்; ஆதலால் சந்திரன், சூரியன், அக்கினி ஆகிய இவர்களின் ஒளிகளும், மற்றைத் தேவர்களின் ஒளிகளும் பிற ஒளிகளும் மறைந்தன. எங்கும் இருள் கவ்வியது. உமா தேவியார் சிவபெருமானின் திருக்கண்களை மூடிய அக்கணப் பொழுதில் உயிர்களுக்கு எல்லையில்லாத ஊழிக் காலங்கள் ஆயின. அதனைக் கண்டு சிவபெருமான் உயிர்களுக்கு அருள் புரியத் திருவுளம் கொண்டார்; தமது திரு நெற்றியிலிருந்து ஒரு திருக்கண்ணை உண்டாக்கி எங்கும் நோக்கிப் பேரருளை மாற்றியருளினார். சூரியன் முதலியோர் தங்கள் ஒளியைப் பெற்றார்கள். சிவபெருமானின் செய்கையைக் கண்ட உமாதேவியார், பயந்து நடுங்கித் தாம் மூடிய கைகளைத் துண்ணென்று எடுத்தார்; எடுக்கும் பொழுது தமது பத்து விரல்களிலும் பயத்தினால் வியர்வை தோன்ற அதனை உமாதேவியார் பார்த்துத் திருக்கரங்களை உதறினார். அவ்வியர்வை பத்துக் கங்கைகளாகி, ஆயிர நூறு கோடி முகங்களைப் பெற்றுக் கடல்களைப்போல எங்கும் பரவியது. அவற்றைக் கண்ட திருமால், நான்முகன், இந்திரன் முதலிய தேவர்களும், பிறரும் அஞ்சி நடுங்கிச் சிவபெருமானை அடைந்து வணங்கி, "எம்பெருமானே! எங்களைக் கங்கைப் பெருக்கிலிருந்து காத்தருளும்" என்று வேண்டினார்கள். சிவபெருமான் அந்நதியின் வரலாற்றை அவர்களுக்குச் சொல்லி அதனை அங்கே அழைத்துத் தமது சடாபாரத்திலுள்ள ஒரு மயிரின்மீது விடுத்தார். கங்கையின் பெருக்கு உடனே அடங்கியது.

அதனைக்கண்ட திருமால், நான்முகன், இந்திரன் ஆகிய மூவரும், "எம்பெருமானே! கங்கை, உமது அருட்சத்தியாகிய உமையின் திருக்கரத்தில் தோன்றினமையாலும், உமது திருச்சடையில் சேர்ந்தமையாலும் பரிசுத்தமுடையது. அதனை எங்கள் நகரங்

களுக்கு எடுத்துச் செல்லுமாறு சிறிது கொடுத்தருள் வேண்டும்'' என்று விண்ணப்பம் செய்தார்கள். சிவபெருமான் தம் திருச் சடையில் புகுந்திருந்த கங்கையில் சிறிது அள்ளி அம்மூவருக்கும் வழங்கியருளினார். நான்முகனின் உலகத்தை அடைந்த கங்கை யைப் பகீரதன் தவம் புரிந்து நிலவுலகிற்கு வருமாறு செய்தான். கங்கை நிலவுலகை ஆங்காரத்துடன் நோக்கி வந்தது. அதனைக் கண்டு யாவரும் நடுங்கினர். கருணைக் கடலாகிய சிவபெருமான் அக்கங்கையை மீண்டும் தம் திருமுடியில் தாங்கிப் பின்னர்ப் பூமி யில் செல்லுமாறு விடுத்தார். அக்கங்கை, சகரர்கள் நற்கதி யடையும்படி அவர்கள் எரிந்து வெந்த உடலெலும்பில் பாய்ந்து, கடலை யடைந்தது. இதனை ஒழிந்த மற்றை இரண்டு நதிகளும் தாம் அடைந்த இடத்திலேயே இருந்தன. உமாதேவியார் கரத்தில் தோன்றிய கங்கை உலகங்களை அழிக்கா வண்ணம் சிவபெருமான் தம் தலையில் தாங்கினார்.

**உமாதேவியாருக்கு இடப்பாகம் அளித்தல்**

முன்னொரு காலத்தில் ஒரு நான்முகன் தோன்றினான். அவன் பல உயிர்களைப் படைக்கக் கருதினான்; முதலில் சனகர் முதலிய நான்கு குமாரர்களை உண்டாக்கினான். அவர்கள் ஞான மடைந்து நல்ல தவத்தர்களாயினார்கள். அதன்பின்பு, நான் முகனுடைய படைப்புத் தொழில் தடைப்பட்டு நின்றது. நான் முகன் துன்பமுற்றுச் சனகர் முதலிய நான்கு குமாரர்களோடும் திருமாலை யடைந்து வணங்கித் தனது குறையைச் சொல்லி நின்றான். திருமால், நான்முகனை அழைத்துக்கொண்டு திருக் கயிலாயத்தை அடைந்தார்; சிவபெருமானின் திருவடிகளை வணங்கி நின்று, ''தேவநாயகரே! நான்முகன் படைப்புத் தொழில் செய்ய நினைத்தான்; அது கைகூடிற்றில்லை. இக் குறையை நீக்கியருளவேண்டும்'' என்று விண்ணப்பஞ் செய் தார். திருக்கயிலாசபதி திருமாலையும், நான்முகனையும், சனகர் முதலிய நான்கு முனிவர்களையும் நோக்கித் துகளாகும்படி அழித்துத் தாம் மட்டும் தனித்து நின்று தம் இடத்தோளை நோக்க, அதனின்றும் உமாதேவியார் தோன்றினார். அவரை இடப்பாகத்தில் இருக்கச்செய்து, அவரோடு கலந்து வீற்றிருந்து திருமாலையும் நான்முகனையும் சனகர் முதலிய நால்வரையும் மீட்

டும் உண்டாக்கினார். அவர்கள் அக்கடவுளை வணங்கித் துதித்தார்கள். கருணையங்கடலாகிய சிவபெருமான் திருமாலை நோக்கி, "நாம் நமது அருட்சத்தியாகிய உமையோடு கலந்தோம்; ஆதலால், இனி நான்முகனின் படைப்புத் தொழில் முன்போலக் கைகூடும்; செல்வாயாக" என்று அருள்புரிந்தார். திருமால் முதலியவர்கள் அதனைக்கேட்டு மகிழ்ச்சியடைந்து, "இனி யாம் உய்ந்தோம்" என்று கூறிச் சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்கிச் சென்றார்கள். சிவபெருமான், நான்முகனின் படைப்புத் தொழில் கைகூடும் வண்ணம், தம்முடைய அருட் சக்தியை ஒரு பெண்ணாக மாற்றித் தம் இடப்பக்கத்தில் வைத்தருளினார்.

மதியற்ற தக்கனே! உயிர்களிடத்து வைத்த கருணையினால் அவர் அங்ஙனம் செய்தார் என்பதை நீ அறியாய். நீ தேவர்களைப்போல் சிவபெருமானையும் எண்ணிவிட்டாய். நாம் காணும் வடிவங்களெல்லாம் சத்தியின் வடிவங்களாகும். அந்தந்த வடிவச் சத்திமயமாக நிற்பவர் சிவபெருமானாவர். இதனை வேதங்கள் யாவும் கூறும்" என்று ததீசி முனிவர் கூறினார்.

திருவிருத்தம்-388
ஆகத் திருவிருத்தம்-907

——oo——

## 14. கயமுகன் உற்பத்திப் படலம்

**அசுரேந்திரன் கவலை**

முன்னொரு காலத்தில் இந்திரன், தன் படைகளோடு சென்று அசுரர்களுக்கு அரசனாகிய அசுரேந்திரனோடு போரிட்டுத் தோற்கடித்தான். புறங்கொடுத்த அசுரேந்திரன் மனம் மிக வருந்திச் சுக்கிராசாரியரை அடைந்து வணங்கி, "இந்திரன் தேவர்களோடு என்னிடம் போருக்கு வந்து என்னைத் தோற்கடித்தான். நம்முடைய வழியிலுள்ள வீரர்கள் யாவரும் இறந்தனர். நாம் மிகவும் மாசடைந்தோம்; நமது ஆற்றலையும் இழந்தோம். மீண்டும் நாம் உயர்வுபெறும் வழியினைக் கூறுவீராக" என்று வேண்டினான். சுக்கிராசாரியர் அதனைக்கேட்டு, "அசுரேந்

திரனே! நீ வருந்தாதே; வசிட்டர் மரபில் தோன்றிய **மாகதர்** என்னும் முனிபுங்கவர் ஒருவர் உளர். அவர் எல்லா வேதங்களை யும் அறிந்தவர்; அறிஞரில் அறிஞர். அவரிடத்தே நம்மைச் சேர்ந்த ஒரு அசுர கன்னிகையை அனுப்புவாயாக. அவளுக்கு யானை முகத்தையுடைய மகன் ஒருவன் தோன்றுவான். அவன் சிவபெருமானை நோக்கி அருந்தவம் புரிவான். சிவபெருமான் அவனுக்குப் பெறற்கரிய செல்வங்களையும் கொடுத்தருளுவார். அவனால் உன் குலம் சிறப்படையும்'' என்று கூறினார். அசுரேந் திரன் அவ்வாறே செய்வதாகக் கூறிச் சுக்கிராசாரியரை வணங்கிச் சென்றான்.

அசுரேந்திரன் தன் நகர் அடைந்து தன் குலத்தில் பிறந்த பேரழகு வாய்ந்தவளாகிய **விபுதை** என்னும் அசுரகன்னிகையை அழைத்து, ''பெண்ணே! உன் குலத்தோர்களைத் தேவர்கள் வென்று புறந்தரச் செய்ததை நீயும் அறிவாய் அல்லவா? ஆத லால், அவர்களை வெல்லுதற்கு நம் குலத்தில் ஒருவரும் இல்லை. அஃது உன்னால்தான் முடியவேண்டும். நீ மேருமலையின் தென் பாகத்தில் அருந்தவம் செய்து கொண்டிருக்கும் மாகதர் என்னும் முனிவரிடம் சென்று அவருடைய குறிப்பறிந்து நடந்து அவரு டைய தவத்தைக் கெடுத்து அவரைக் கூடுதல் வேண்டும். அவ் வாறு செய்வாயாகில் உன்னிடத்தில் ஒரு குமாரன் பிறந்து பூவுலகத்தையும் வானுலகத்தையும் வென்று அரசு புரிந்து, வீராதிவீரனாய்த் திகழ்வான்; நம்மவர் துன்பத்தைப் போக்கு வான்; ஆதலால், நான் சொன்னவாறே நீ செய்வாயாக'' என்று கூறினான்.

**விபுதை மாகதரை அடைதல்**

விபுதை அசுரேந்திரனின் வேண்டுகோளுக்கு இணங்கி, மாகதமுனிவரை அடைந்தாள்; மாகத முனிவரின் மாதவத்தைக் கண்டு வியந்து, ''மேனகையே வந்தாலும் ஏறிட்டுப் பார்க்காத இம்முனிவரின் தவத்தை நான் எவ்வாறு கலைப்பேன்?'' என்று ஏங்கினாள். பிறகு அவள், ''எவ்விதத்திலாயினும் இம்முனிவரை என்மீது ஆசை கொள்ளும்படி செய்யவேண்டும்'' என்று உறுதி கொண்டாள். நம்பினோர்க்கு நல்லருள் புரியும் சிவபெரு

மானை மனத்தில் எண்ணி, மாகத முனிவருக்கு எதிரே நின்று, நெடுங்காலம் அருந்தவம் புரிந்தாள். அங்கே ஒரு களிருனது பெண் யானையோடு சேர்ந்து இன்பமனுபவித்துக் கொண்டிருந்தது. அதனை மாகத முனிவர் ஆசையோடு பலகாலும் பார்த்துக் கொண்டிருந்தார்; அதனுல் தவச் செயலை மறந்து காம வலையிற் பட்டுக் கருத்தழிந்தார். எங்ஙனமாயினும் இன்பமனுபவிக்க வேண்டும் என்னும் காமத் தீ அவர்பால் எழுந்தது. தம் எதிரே விபுதை இருப்பதைக் கண்டு மகிழ்ந்து தவத்தை விடுத்து அவளிடம் சென்ருர். விபுதை முனிவரைப் பார்த்துத் தன் எண்ணம் கை கூடியது என்று எண்ணிக் களிப்படைந்தாள்; முனிவரை அணுகி அவர் திருவடிகளை வணங்கி நின்ருள். முனிவர் விபுதையின் உறுப்புக்கள் யாவற்றையும் நன்ருகப் பார்த்துக் காமப் பித்துத் தலைக்கேறப் பெற்ருர். எனினும் விபுதையை நோக்கி, "நீ யார் கன்னிகையோ? நம்மிடத்து வந்த காரணம் யாது?" என்ருர். விபுதை அவரை நோக்கி, "கன்னிகையாகிய நான் உம்மைக் கணவனுக அடையும் பொருட்டுப் பலநாள் பெருந் தவம் செய்தேன். அஃது இன்று முற்றுப் பெறுதலால் உம்மை அடைந்தேன்" என்று கூறினுள். முனிவர் மகிழ்ந்து அவளை நோக்கி, "நாம் இருவரும் யானையின் உருவமெடுத்துக் கூடியின்புறுவோம். நீ பிடியின் உருவைக் கொள்வாய்" என்று கூறினுர். விபுதை பெண் யானை வடிவமெடுத்து மேலும் அன்பு காட்ட முனிவர் களிற்றி யானையாகித் துதிக்கையை நீட்டித் தழுவி, இன்பம் நுகர்ந்து ஆசை நீங்கினுர்.

**கயமுகன் தோற்றம்**

அப்பொழுது அவ்விருவருடைய கலவியிலிருந்து **கயமுகன்** என்னும் (கயம்-யானை) ஓர் அவுணன் பிறந்தான். அவன் கேடகத்தையும் வாளையும் சுழற்றி, மலைகளைத் துகளாம்படி உந்தி எற்றி, ஆரவாரஞ் செய்து கோபம் மிகுந்து ஆலகால விஷம்போலத் திரிந்தான். விபுதையாகிய பிடியின் மயிர்க்கால்கள் தோறும் அநேக அவுண வீரர்கள் படைகளோடு தோன்றினுர்கள்; கயமுகாசுரன் அச்சேனைகளோடு கூடி ஆரவாரித்தான். அவர்களைக் கண்டு தாயும் தந்தையும் பயந்து பழைய வடிவங்களை எடுத்தார்கள்.

**மரகத முனிவர் முன்னை உணர்வு பெறுதல்**

மாகத முனிவர் மீண்டும் முன்னைய நல்லுணர்வு வரப்பெற்றார். தன் முன் நின்ற விபுதைமேல் கோபம் கொண்டு அவளை நோக்கி, "நீ எக்குலத்தில் பிறந்தாய்? எதனை நினைந்து இங்கு வந்தாய்?" என்று வினவினர். விபுதை தன் குலத்தையும் தான் வந்த வரலாற்றையும் கூறி நின்றாள். மாகதர் அதனை அறிந்து, "தேவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தன்னால் துன்பம் ஏற்பட்டதே" என்று எண்ணித் துன்பக் கடலுள் ஆழ்ந்தார்; விபுதையை அனுப்பிவிட்டு முன்போல் தவம் புரியச் சென்றார். விபுதை அசுரேந்திரனை அடைந்து நிகழ்ந்தனவற்றைக் கூறினாள். அசுரேந்திரன் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான்.

**சுக்கிராசாரியர் – கயமுகன்**

கயமுகாசுரன் அவுண சேனைகளோடு எங்கும் சுற்றித் திரிந்தான்; பல உயிர்களைக் கொன்று தின்றான். அதனால் பல உயிர்கள் அழிந்தன. முனிவர்களும் தேவர்களும் வருந்தினார்கள்; வேதநெறி அழிந்தது. கயமுகாசுரனின் செயல்களை அறிந்த அசுரேந்திரன் அசுர குருவாகிய சுக்கிராசாரியரைக் கயமுகனிடம் அனுப்பினான். சுக்கிராசாரியர் கயமுகனை அடைந்து, "நான் உங்கள் குலத்துக்குக் குரு ஆவேன்; வேதப்பொருள்களை அறிந்துள்ளேன். என் பெயர் வெள்ளி. உங்கள் குலத்து அரசனாகிய அசுரேந்திரன் என்னை உன்னிடம் அனுப்பினான். நான் உனக்கேற்ற நல்ல வழிகளை உபதேசிக்க இங்கு வந்தேன்" என்று கூறினார். கயமுகாசுரன் அவரை வணங்கினான். அவனுடைய சேனை வீரர்களும் அவரை வணங்கினார்கள். சுக்கிராசாரியர் கயமுகாசுரனைப் பார்த்து, "நீ சிறப்பு வாய்ந்த தவங்களைச் செய்யவில்லை; சிவபெருமானை அறிந்துகொள்ளவில்லை; பகைவரின் இயல்புகளையும், வலிமையையும் அறியவில்லை; இவ்வுடல் நிலையற்றது. இதுவரை உன் வாழ்நாளை வீணாக்கினாய். காமம் முதலியவைகளை நீ வென்று தவம் செய்து பேராற்றல்களைப் பெற்று உன் பகைவர்களாகிய தேவர்களை வென்று பழைய செல்வங்களை அடைந்தாயில்லை; இம்மையில் இன்பத்தை இழக்கின்றாய்; சென்ற பிறப்பிலும் இன்பத்தை அடையவில்லை; வரு பிறப்பிலும் அதனை நீங்கினைபோலும்! பிறகு எப்பிறப்பிலே

இன்பம் அனுபவிக்க இருக்கின்றாய்! ஆக்கமும், வலிமையும், சிறப்பும், ஆயுளும், அழகும், வீடுபேறும் ஆகிய இவற்றையெல்லாம் தவத்தாலன்றோ பெறக்கூடும்? எமன் வந்து அழைக்கும்போது, தருமம், கல்வி, சந்ததி, புகழ், ஆற்றல், வெற்றி, செல்வம், பெருமை, இன்பம், விரதம், சீலம், ஞானம் முதலியன வந்து கைகூடுமோ? இயமனாகிய வலைஞன், காலம் என்னும் வலையை வீசிப் பூமி என்னும் தடாகத்திலுள்ள உயிர்களாகிய மீன்களை வாரிப் பொருந்துமாறு இழுக்கின்றான். உயிர்கள், வாழ்நாள் முடிவு என்னும் கரையை அடையும்போது, அவன் கையில் அகப்பட்டு இறக்கும். உடலால் பெறுதற்கரியதை நீ தெரிந்துகொள்ளவில்லை. பலநாள் தங்கி உயிரோடு இருக்க வேண்டும் என்பதையும் நீ எண்ணவில்லை. நீ பிறவி எடுத்ததன் பயன் என்ன? பூமியிலுள்ள உயிர்களை இறக்கும்படி செய்வதுதானா? நீ மந்திரம் கற்கவில்லை; மாயத்தைக் கற்கவில்லை; வரங்களைப் பெறவில்லை. இந்திரன், தேவர்களோடு சேர்ந்து வந்து உன்னை எதிர்த்தால் என்ன செய்வாய்? பகைவர்களின் சூழ்ச்சிகளை அறியாது நீ வாளா விருக்கின்றாய். ஆதலால் நீ யாவருக்கும் மேலோராகிய சிவபெருமானைத் தியானித்து அருந்தவம் செய்வாயாக. அங்ஙனம் செய்தால் அவரிடமிருந்து பல வரங்களைப் பெறுவாய். தேவர்களும் உனக்குக் குற்றேவல் புரிவார்கள். உலகங்களுக்கெல்லாம் பேரரசனாவாய்" என்று கூறினார்.

இவற்றைக் கூர்ந்து கேட்ட கயமுகாசுரன் அவரைக் கைதொழுது, "இதற்கு முன் இவற்றை எவரும் எனக்குக் கூறவில்லை. நானும் இவற்றை எண்ணவில்லை. இனி நீர் கூறிய படி சிவபெருமானை நோக்கித் தவம்புரிவேன். தவம்புரியும் விதத்தைக் கூறியருளுக" என்றான். அசுரகுரு, தவம் செய்வதற்குரிய மந்திரங்களையும், தந்திரங்களையும், சங்கற்பத்தையும் மற்றவைகளையும் கூறி, "நீ மேருமலையை அடைந்து தவம் புரிவாயாக" என்றார். கயமுகன் அவ்வண்ணமே அசுரகுருவை வணங்கித் தவம்செய்யச் சென்றான். சுக்கிராசாரியர் மகிழ்ச்சியோடு அசுரேந்திரனிடம் திரும்பிச்சென்று நிகழ்ந்தனவற்றையெல்லாம் கூறினார். அசுரேந்திரன் மகிழ்ந்து சுக்கிராசாரியரைப்

பாராட்டினுன். கயமுகாசுரன் தவம்புரியச் சென்றதை அறிந்து இந்திரனும் ஏனைய தேவர்களும் துன்புற்ருர்கள்.

**கயமுகாசுரன் தவம்**

கயமுகாசுரன் மேருமலையை அடைந்து முறைப்படி வேண்டியவைகளைச் செய்தான்; அசுரகுரு கூறியவண்ணம் ஐம்புலன்களையும் அடக்கினுன்; காமம் முதலிய குற்றங்களையும் நீக்கினுன்; ஐந்தெழுத்தைப் பிரணவத்தோடு செபித்துச் சிவபெருமானை நோக்கி அருந்தவம் புரிந்தான்; ஆயிரம் ஆண்டுகள் புற்களையும் இலைகளையும் உண்டும், ஆயிரம் ஆண்டுகள் சிறிதளவு நீரைப் பருகியும், ஆயிரம் ஆண்டுகள் காற்றை நுகர்ந்தும், இங்ஙனம் மூவாயிரம் ஆண்டுகள் தவம் செய்தான்; பின்பு பிராண வாயுவை எழுப்பி, மூலத்தீயை வளர்த்து, விந்துத்தானத்திலுள்ள அமுதத்தைப் பருகினுன். அவனுடைய தவத்தைக் கண்ட தேவர்கள் வருந்தித் துன்பமுற்ருர்கள். இவ்வாறு தவம் புரிந்தும் கயமுகாசுரன் சிவபெருமானைக் காணவில்லை; நாற்புறங்களிலும் நடுவிலும் பெருந்தீ வளர்த்து அந்தப் பஞ்சாக்கினியின் நடுவில் பதினுயிரம் ஆண்டுகள் நின்று தவம் புரிந்தான். அக்கினி தேவன், அவன் தவத்தை வியந்து அருள்புரிந்தான். தவத்தால் கயமுகனின் உடல் மாசற்ற பொன்னைப்போல் விளங்கியது; வைரத்தின் வலிமையைப் பெற்றது. அவுணர்கள் அவ்னுடைய தவத்தின் வலிமையை வியந்து, மலர்களைத் தூவி ஆசி கூறினுர்கள். தேவர்கள் துன்பமுற்று நடுங்கினுர்கள். கயமுகன் புரியும் அருந்தவத்தைச் சிவபெருமான் கண்டு இடபவாகனரூடராய் அவன் முன் வந்து தோன்றியருளினுர். கயமுகன், சிவபெருமானைக் கண்டு, கைகூப்பித் தொழுது நின்ருன். சிவபெருமான் அவனை நோக்கி, "கயமுகனே! நீ தவம் செய்து வருந்தினுய். நீ வேண்டும் வரம் யாது?" என்று கேட்டருளினுர். கயமுகன், "எம்பெருமானே! திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்களும், மற்றையவர்களும் என்னை வந்து எதிர்த்தால் அவர்கள் புறங்காட்டி ஓடவேண்டும்; எத்தகைய கலங்களாலும் இறவாதிருத்தல் வேண்டும்; தேவர்களினுலும், மானிடர்களாலும், அசுரர்களாலும், மற்றையோர்களாலும், விலங்குகளாலும் நான் இறவாதிருத்தல் வேண்டும்; எனக்கு

நிகராகிய ஒருவன் வந்து போர் செய்தாலும், அவன் ஆயுதங்களால் எனக்கு அழிவு ஏற்படா வண்ணம் செய்தல் வேண்டும். எல்லா உலகங்களிலும் என் ஆஞ்ஞாசக்கரமும், செங்கோலும் செல்லவேண்டும். அடியேன் பிறர் சூழ்ச்சியால் இறந்தாலும் எனக்கு மீண்டும் பிறவி ஏற்படக்கூடாது'' என்று வேண்டினுன். கருணாநிதியாகிய கடவுள் அவ்வரங்களை அளித்து மறைந்தருளினுர். கயமுகாசுரன், மற்ற வரங்களையும் ஆயுதங்களையும் பெற்றுத் தன் கிளைகள் யாவும் சூழ நின்ருன். அப்போது அசுரேந்திரனும் அசுர குருவாகிய வெள்ளியும் அதனை அறிந்து கயமுகாசுரனை அடைந்து, "வெற்றியுண்டாகுக" என்று வாழ்த்துக் கூறினுர்கள்.

**கயமுகாசுரன் நகர் உண்டாக்குதல்**

சிவபெருமானிடம் வரங்களைப் பெற்ற கயமுகன் இந்திரனையும், மற்றைத் தேவர்களையும் வென்ருன்; நிலவுலகத்திற்கு வந்து அசுரத் தச்சனை அழைத்து, "யான் வசித்தற்கு ஏற்றதோர் நகர் அமைப்பாயாக'' என்று கட்டளையிட்டான். அசுரத் தச்சன், சம்புத் தீவின் தென்றிசையில் ஒரு நகரத்தை உண்டாக்கி, அங்கு ஒரு சிங்காதனத்தையும் மனத்தால் அமைத்தான். அந்நகரைக் கண்டு களித்த அசுர குரு, அதற்கு **மதங்கமாபுரம்** என்று பெயரிட்டார். கயமுகாசுரன் பத்துக் காத நீளமும், ஐந்து காத அகலமுமுள்ள நகரின் வீதிகளைக் கண்டு வியந்து, அரக்கர்களும், அவுணர்களும், அசுரேந்திரனும் சூழ, அந்நகரில் புகுந்தான்; தன் தம்பியர்களாகிய அசுரர்களையும் அந்நகரில் இருக்கும்படி செய்து, சிங்காதனத்தின்மீது வீற்றிருந்தான்; அசுரேந்திரனின் மகளாகிய **விசித்திர காந்தி** என்பவளையும், அரம்பையர்களையும், அசுரப் பெண்களையும், நாக கன்னியர்களையும், வித்தியாதர மகளிர் பலரையும் மணம் செய்து கொண்டான். அவனைத் தேவர்களும் அசுரர்களும் வந்து வணங்கினுர்கள். அவனது ஆஞ்ஞாசக்கரம் ஏழுலகங்களிலும் சென்றது. காமதேனுவும், சங்க நிதியும், பதும நிதியும், ஐந்தருவும், சிந்தாமணியும், நான்முகன் முதலிய தேவர்களும் அவனுக்கு ஏவல் புரியச் சுக்கிராசாரியரும் அசுரேந்திரனும் மந்திரிகளாயிருக்கக் கயமுகாசுரன் அரசுபுரிந்து வந்தான்.

**தேவர்கள் குட்டிக்கொள்ளுதல்**

கயமுகாசுரன், ஒரு நாள் இந்திரன் முதலிய தேவர்களை நோக்கி, "இனி நீங்கள் நம்முன் வரும்பொழுதெல்லாம் உங்கள் கைகளால் தலைகளில் மும்முறை குட்டிக் கொள்ளுதல் வேண்டும். பிறகு, கைகளால் காதுகளை மாறி மாறிப் பிடித்துக்கொண்டு தாழ்ந்து எழுதல் வேண்டும். அதன் பிறகு நமக்குரிய பணிகளைச் செய்யத் தொடங்குதல் வேண்டும்" என்று கட்டளையிட்டான்.

வைக லும்இவண் வந்துழி நுங்கள்தம்
மெய்கொள் சென்னியில் மும்முறை தாக்கியே
கைகள் காதுறக் கால்கொடு தாழ்ந்தெழீஇச்
செய்க நம்பணி தேவர்கள் நீர்என்றான்.

அவன் பணியை மறுத்தற்கஞ்சிய இந்திரனும் தேவர்களும், அவன் கூறியபடி செய்து, பிறகு பணிகளைச் செய்யலானார்கள்.

**அரிபிரமேந்திராதி தேவர்கள் சிவபெருமானிடம் முறை யிடுதல்**

இவ்வாறு பணிகளைச் செய்து வருத்தமுற்ற இந்திரன், நான்முகன் திருமால் இருவரையும் அடைந்து, தன் துயரத்தைக் கூறி இரங்கினான். அவர்கள், "இந்திரனே! நீ வருந்தற்க" என்று கூறி, இந்திரனும் தேவர்களும் தம்மைச் சூழக் கயிலையை அடைந்தார்கள்; எம்பெருமான் திருக் கோயிலை அடைந்து, திரு நந்திதேவர் அனுமதி பெற்றுக் கோயிலினுட்சென்று, சிவபெருமானைத் தரிசித்து வணங்கித் துதித்தார்கள். சிவபெருமான் திருமாலைப் பார்த்து, "நீ தேவர்களோடு துன்பமுற்று இங்கு வந்த காரணம் யாது?" என்று வினவியருளினார். திருமால், சிவபெருமானை நோக்கி, "எம்பெருமானே! கயமுகாசுரன் தான் பெற்ற வளங்களின் வலிமையால் தேவர்கள் யாவரையும் துன்புறுத்துகிறான். அவனுடைய வலிமையைத் தேவரீர் போக்கியருளல் வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தார். சிவபெருமான் அவர்களை நோக்கி, "நாம் இனி ஒரு புதல்வனைப் பெற்றுக் கயமுகாசுரனை அழித்து வெற்றி கொண்டுவரும்படி அனுப்புவோம்" என்று அருளிச்செய்தார். திருமால் முதலிய தேவர்கள் தொழுத கையினராய் ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள். சிவபெருமான் அவர்களுக்கு விடை கொடுத்தருளினார். யாவரும் அவரவர் இடங்களுக்குச் சென்றார்கள்.

**விநாயகக் கடவுள் தோற்றம்**

தேவர்கள் சென்றபின் சிவபெருமான் உமாதேவியாரை அழைத்துக்கொண்டு ஒரு நந்தவனத்திற்குள் சென்ருர். உமாதேவியார் பேரழகுடைய அவ்வனத்தின் இயல்புகளை அவரோடு கண்ணுற்று, ஓவியங்கள் நிறைந்ததோர் மண்டபத்துள் சென்ருர். உமாதேவியார் அங்குள்ள ஓவியங்களின் அழகுகளைத் தம் திருக்கண்களால் பார்த்தார். அருகில் வருகின்ற சிவபெருமானின் ஆணையினலே அம் மண்டபத்தின் நடுவே ஒரு பிரணவ எழுத்தே இரண்டு யானைகளின் வடிவங்களை எடுத்து உமாதேவியார் காணும்படி கலவிபுரிய முயன்றது. உமாதேவியார் அதனைப் பார்த்துச் சிவபெருமானை வணங்கி, "பிரணவ எழுத்து யானை வடிவாய்ப் புணர்ச்சி செய்வது என்ன?" என்று கேட்டார். சிவபெருமான் அவரை நோக்கி, "உமையே! யாவற்றிற்கும் மூலமாகிய பிரணவ எழுத்தானது நீ விரும்பிப் பார்த்ததால் இரண்டு யானைகளின் வடிவங்கொண்டு புணருகின்றது. ஆகையால், உன்னுடைய பெருமையை நீயும் அறியாய்; உன் மாட்சிமையை யாம் அன்றி வேறு யாவர் அறிய வல்லார்? உன் திருவருட் செயல் வேதங்களுக்கும் எட்டாதது ஆகும்" என்று புகழ்ந்து கூறியருளினுர். யானைகள் இரண்டும் புணர்ச்சி நீங்கி முன்போலப் பிரணவ வடிவமாயின. அப்போது, ஐந்து திருக்கைகளையும், மூன்று திருக்கண்களையும், தொங்குகின்ற வாயையும், திங்களை அணிந்த சடையினையும், யானை முகத்தையும் கொண்ட ஒரு புதல்வர் தோன்றியருளினுர்.

அக்கணத் தாயிடை ஐங்கரத் தவன்அருள்
முக்கண்நால் வாயினன் மும்மதத் தாறுபாய்
மைக்கருங் களிறெனும் மாமுகத் தவன்மதிச்
செக்கர்வார் சடையன்ஓர் சிறுவன்வந் தருளினன்.

அவர் மெய்யன்பர்களின் அறிவுக்கு அறிவானவர்; எங்கும் நிறைந்தவர்; எவராலும் அறியப் பெருதவர்; எவராலும் போற்றத் தக்கவர்; நான்மறைப் பொருளாக வுள்ளவர்; அருளையே வடிவமாகக் கொண்டு தோன்றியவர். அப்புதல்வர் சிவபெருமானையும் உமாதேவியாரையும் வந்து வணங்கிப் போற்றி

னூர். சிவபெருமானும், உமாதேவியும் அவரை எடுத்து மார்போடணைத்துத் தழுவி அருள் புரிந்தனர். சிவபெருமான் அவரை நோக்கி, "யாராக இருந்தாலும் எடுத்த காரியத்தைத் தொடங்குமுன், அஃது இடையூறின்றி முற்றுப்பெற வேண்டுமென்று உன்னை வழிபடுவாராயின் அக்காரியத்தை முற்றுப் பெறச் செய்வாயாக; உன்னை முன்பு வழிபடாமல் தொழில் புரிவோர்க்கு இடையூறு செய்வாயாக.

என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்
முன்னரே உனதுதாள் முடியுறப் பணிவரேல்
அன்னர்தஞ் சிந்தைபோல் ஆக்குதி அலதுனை
உன்னலார் செய்கையை ஊறுசெய் திடுதிநீ.

நான்முகன் திருமால் முதலிய தேவர்களுக்கும், மற்றை ஆன்மாக்களுக்கும், நம் பூத கணங்களுக்கும், பிறருக்கும் அருளோடு தலைமை தாங்குவாயாக. கயமுகாசுரனை அழித்துத் திருமாலின் சாபத்தையும் நீக்கி வருதி" என்று கூறியருளினார்; பூதர்களைத் தோற்றுவித்து அவருக்குச் சேனைகளாக உதவியருளி, உமாதேவியாரோடும் விநாயகக் கடவுளோடும் சோலையைவிட்டு நீங்கித் திருக்கயிலாயமலைக்குச் சென்று, விநாயகக் கடவுளை நோக்கி, "நீ நம் கோபுர வாயிலின்கண் கண நாயகனாய் அமர்ந்திருப்பாயாக" என்று அன்போடு அவரை அங்கே இருத்தித் தாம் உமாதேவியாரோடு கோயிலினுட்போய் வீற்றிருந்தருளினார். விநாயகக் கடவுள், கோயிலின் வாயிலில் பூதசேனைகள் யாவும் நெருங்கிச் சூழவும், திருநந்தி தேவர் போற்றவும், பிரமன் முதலிய தேவர்கள் வந்து வணங்கவும் மகிழ்வுடன் வீற்றிருந்தருளினார்.

**திருமால் சாபமடைதல்—உமையும் சிவனும் சூதாடுதல்**

அதன்பிறகு ஒரு நாள் திருமால் சிவபெருமானைத் தரிசிக்கும்படி திருக்கயிலாயத்திற்குச் சென்றார்; திருநந்தி தேவர் அனுமதி பெற்று உள்ளே சென்று சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கித் துதித்தார். சிவபெருமான் திருமாலை இருக்கும்படி பணித்து, ஒரு திருவிளையாடல் புரிய திருவுளங் கொண்டார்; உமாதேவியாரைப் பார்த்து, "நாமும், நீயும் சூதாடுவோம்; நீ

தோற்ருல் உன் ஆபரணங்களை எமக்குத் தருக. நாம் தோற்ருல் நம் அணிகலன்களை உனக்குத் தருகின்ருேம்'' என்ருர். உமாதேவி யார் அதற்கு இசைந்தார். சிவபெருமான் திருமாலை நோக்கி, ''நீ இதற்குச் சாட்சியாக இருப்பாய்'' என்று பணித்தார். அவர் நன்றென்று அதற்கு உடன்பட்டார். **ஆலாலசுந்தரர்** சூதாடும் உபகரணங்களைக் கொண்டுவரத் திருமால் அவைகளைப் பெற்று வைக்கச் சிவபெருமானும் உமாதேவியாரும் மகிழ்வுடன் சூதாட் டத்திற்குரிய குழூஉக்குறிகளை எதிரெதிராய்க் கூறி விளையாடி ஞர்கள். சிவபெருமான் தோற்ருர்; ஆயினும் சிவபெருமான் உமாதேவியாரைப் பார்த்து, ''நீ தோற்ருய். ஆதலால் உன் அணிகலன்களைக் கூறியபடி நமக்குத் தருவாயாக'' என்ருர். உமா தேவியார் சிவபெருமானேடு வாதுபுரிய அஞ்சித் திருமாலை நோக்கி, ''சாட்சியாயிருக்கும் நீ, 'யார் வென்றது' என்பதைக் கூறுக'' என்ருர். திருமால், ''வென்றவர் சிவபெருமானே'' என் ருர். உமாதேவியார் அதனைக் கேட்டுத் திருமாலைப் பார்த்து ''நீ நல்ல உண்மையைச் சொன்னுய்; உன் திறம் நன்று நன்று!'' என்று கோபித்து, ''நீ இதனைப் பாராதவனும் அல்லை; நீ அறி யாத தொன்றுமில்லை. கடவுளே பொய் கூறினும் சாட்சியாக இருந்த நீ நடுநிலைமை தவறிப் பொய் கூறலாமா? மாயையும் வஞ்சனையும் நிறைந்த நீ இப்பொய்யைக் கூறியதால் பாம்பு ஆகக்கடவை'' என்று சபித்தார். உடனே திருமால் பாம்பு ஆனர். திருமால் மிகவும் வருந்திச் சிவபெருமானின் திருவடி களை வணங்கி, ''இவ்வடிவம் அடியேனுக்கு எப்பொழுது எவ்வாறு நீங்கும்? சொல்லியருள வேண்டும்'' என்ருர். சிவபெரு மான் ''நீ நம்பால் அன்புகொண்டு பொய் கூறினுய்; உன் துன்பத்தை நாம் நீக்குகின்ருேம். நீ தென்னுட்டிலுள்ள **ஆலங் காட்டை** அடைந்து, அங்குள்ள ஓர் ஆலமரப் பொந்திலிருந்து பெரும் தவம் செய்வாயாக; அஞ்சற்க. நம் மகனுகிய விநாயகன் வந்து உன் சாபத்தைப் போக்குவான்'' என்று கூறியருளினுர். அங்ஙனமே திருமால், சிவபெருமானை வணங்கி விடைபெற்றுக் கொண்டு பெரியோர்கள் வாழும் தென்றிசையை அடைந்து, ஆலவனத்திற் போய் அங்குள்ள மிகப்பெரிய ஆலமரப்பொந்தில் புகுந்து அருந்தவம் செய்துகொண்டிருந்தார்.

### இந்திரன் விநாயகக் கடவுளை வேண்டுதல்

கயமுகாசுரனின் தொல்லைகளினால் வருந்திய இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் விநாயகக் கடவுளை அடைந்தார்கள்; அவருடைய திருவடிகளை வணங்கித் துதித்தார்கள். விநாயகக் கடவுள் அவர்கள் யாவருக்கும் திருவருள் புரிந்து, "உங்கள் குறை யாது? சொல்லுங்கள்" என்று கேட்டார். இந்திரன் அவரை நோக்கி, "சுவாமீ! முன்னாளில் சிவபெருமானிடம் எல்லையற்ற வரங்களைப் பெற்ற கயமுகாசுரன் என்பவன் எங்களுக்குப் பெருந்துன்பம் இழைத்து வருகிறான். நாங்கள் எங்கள் பெருமைகளை இழந்து அவனைக் காணும்போதெல்லாம் எங்கள் நெற்றிகளில் குட்டிக் காதுகளைப் பிடித்துக்கொண்டு தாழ்ந்து எழ வேண்டுமென்று கூறினான். அதன்படி செய்து வருகின்றோம். ஆதலால், தேவரீர் எங்கள் துன்பத்தைப் போக்கி அருள வேண்டும்" என்று கூறி, மோதகம் முதலியவைகளை நிவேதித்து வணங்கினார்கள். விநாயகக்கடவுள் இந்திரனை நோக்கி, "அஞ்சற்க; அஞ்சற்க. நாம் கயமுகாசுரனை அழித்து உங்கள் துன்பங்களைப் போக்குவோம்" என்று அருள்புரிந்தார். யாவரும் மகிழ்ச்சியுற்றார்கள்.

### கயமுகாசுரன் போர்

விநாயகக் கடவுள் கயமுகாசுரனை அழிக்கக் கருதி **அசலன்** என்னும் பூதன் தோளின் மீது ஏறிப் போருக்குப் புறப்பட்டார். பூதர்கள் வந்து அவரைச் சூழ்ந்தார்கள்; சாமரைகளை வீசினார்கள்; குடைகளை ஏந்தினார்கள். உடுக்கை, தண்ணுமை முதலிய இசைக்கருவிகள் முழங்கின. இந்திரனும் தேவர்களும் கற்பக மலர்களைத் தூவி, விநாயகக் கடவுளுடன் சென்றார்கள். விநாயகக் கடவுள், பூதர்களும் தேவர்களும் சூழ, மதங்கமாபுரியை அடைந்தார். அதனைக்கண்ட ஒற்றர்கள் ஓடிப்போய் கயமுகனுக்கு விநாயகர் வரவைத் தெரிவித்தார்கள். கயமுகாசுரன் கோபங்கொண்டு ஆயுதங்களை ஏந்தினான்; தேர் ஏறி இசைக்கருவிகள் முழங்க ஆயிரம் வெள்ளம் சேனைகளோடு புறப்பட்டு விநாயகக் கடவுள் முன் வந்தான். பூத சேனைகளும், அசுரசேனைகளும் கைகலந்து பெரும் போர் செய்தன. அசுரர்களில் போருக் காற்றாது புறங்கொடுத் தோடினர் பலர்;

இறந்தனர் பலர். தேர் யானை குதிரை முதலியன அழிந்தன. அசுர சேனை யாவும் அழியக்கண்ட கயமுகன், கோபங்கொண்டு வில்லை வளைத்துப் பூதர்கள்மேல் கணைமழைகளைப் பொழிந்து அவர்களுடைய உடம்புகளைத் துளைத்தான். பூதர்கள் வருந்தி ஓடினார்கள்.

பூத சேனைகள் புறங்கொடுத்து ஓடுவதைக் கண்ட விநாயகக் கடவுள், அசலனை கயமுகாசுரன் அருகு நடத்திச் சென்றார். கயமுகாசுரன் தன் அருகில் நின்ற தூதுவர்களைப் பார்த்து, "என்னோடு போருக்கு வருகின்ற இவன் யார்?" என்று கேட்டான். தூதுவர்கள் கயமுகாசுரனைப் பார்த்து, "முக்கண்களையும் ஐங் கரங்களையும் யானை முகத்தையும் உடையவராய், ஒரு பூதன்மேல் ஏறிக்கொண்டு வருகின்ற இவர், சிவபெருமானின் மூத்த பிள்ளை ஆவார்" என்று கூறினார்கள். கயமுகாசுரன் தேர்ப் பாகனை நோக்கி, "நம் தேரை அந்த யானைமுகனுக்கு முன்பு செலுத்துதி" என்று கூறினான். அவன் விநாயகக் கடவு ளுக்குமுன் தேரைச் செலுத்தினான். கயமுகன் விநாயகக் கடவுளைப் பார்த்து, "ஓ மைந்தனே! உன் தந்தை எனக் குக் கொடுத்த வரங்களை நீ அறியாய் போலும். என்னோடு போருக்கு வர உனக்கு வலிமை ஏது? என்னோடு போரிட் டவர் எவரேனும் வென்றதுண்டா? நான் தேவர்களா லும், ஆயுதங்களாலும் இறக்கமாட்டேன். நான் உன்னை வென்று தேவர்களின் உயிரைப் பருகுவேன். என்னை வெற்றி கொள்ள முடியுமானால் போருக்கு வருவாயாக" என்றான். விநா யகக் கடவுள் கயமுகன் கூறியவற்றைக் கேட்டு, "கயமுகனே! உனக்குப் பல வரங்களையும் படைக்கலங்களையும் தந்தருளிய எம் தந்தையே உன்னைக் கொன்று தேவர்களின் துன்பங்களைப் போக்குமாறு பணித்தருளினார். நீ உயிரோடிருக்க வேண்டு மானால் விண்ணுலகத்தை இந்திரன் அரசு புரியும்படி கொடுத்து விட்டு, மண்ணுலகத்தை மட்டும் அரசு செய்வாயாக. நீ அங் ஙனம் செய்யாவிடில் நாம் உன் உயிரைக் கொண்டு செல் வோம்" என்றார்.

உடனே கயமுகாசுரன் ஒரு வில்லை வளைத்துக் கணைகளைப் பொழிந்தான். விநாயகக் கடவுள் அவற்றை ஓர் எழுப் படை யினால் அழித்து அவன் வில்லை முறித்தார். அவன் வேறொரு

வில்லை எடுத்தான். அதனையும் விநாயகர் அழித்தார். அவன் ஒரு தண்டாயுதத்தை எடுத்து எதிர்த்தான். அவர் எழுவினால் அதனை அடித்து, அவன் மார்பிலும் அதனால் அடித்தார். அவன் மனம் நடுங்கிச் சோர்ந்து இறந்தவன்போல் நின்றான். விநாயகக் கடவுள் அவனுடைய நால்வகைச் சேனைகளையெல்லாம் கொல்ல நினைத்து ஒரு பாசத்தை வீச, அஃது அவனுடைய சேனைகள் எல்லாவற்றையும் கட்டியது. அதன்பின் மழுப் படையைச் செலுத்தி அசுர சேனைகளைக் கொன்றார். கயமுகாசுரன் தன்னிடமிருந்த படைக்கலங்களை யெல்லாம் அவர்மேல் செலுத்தினான். அப்படைக்கலங்கள் யாவும் அவரை ஒன்றும் செய்யாது அவரை வலம் செய்து துதித்து அவருடைய ஏவலின் வழி நின்றன. விநாயகக் கடவுள், "நம் தந்தையின் வரத்தின் வலிமையால் அவனை எந்த ஆயுதத்தினாலும் கொல்ல இயலாது" என்று துணிந்து, தம்முடைய கொம்புகளில் ஒன்றைத் திருக்கரத்தால் முறித்துக் கயமுகன் மேல் எறிந்தார். அஃது அவனுடைய மார்பைப் பிளந்து, உடலைக் கீழே வீழ்த்தி, விரைந்து நன்னீர்க் கடலில் மூழ்கி, அவர் திருக்கரத்தைத் திரும்பி வந்தடைந்தது. கயமுகாசுரன் ஆர்த்துத் தேர்மேல் வீழ்ந்து மயங்கினான். அவனுடைய மார்பினின்றும் ஆறுகள்போலப் பெருகிய இரத்த வெள்ளம் பக்கத்திலிருந்த ஒரு காட்டில் பரவியது. அந்த இடம் **திருச்செங்காடு*** என்று பெயர் பெற்றது. அவ்விடம் இன்னும் யாவரும் காணும்படி செந்நிலமாக விளங்குகிறது.

**பெருச்சாளி வாகனம்**

சிவபெருமானிடம் பெற்ற வரத்தினால் கயமுகாசுரன் இறவாமல் பழைய வடிவை விட்டு **ஒரு பெருச்சாளி** வடிவம் கொண்டான்; விநாயகக் கடவுளைத் தாக்கிப் போரிட மிகக் கோபத்துடன் வந்தான். விநாயகக் கடவுள் அவனுடைய பேராற்றலைக் கெடுத்து, அசலனின் தோள்களினின்றும் இறங்கி, "நீ நம்மைச் சுமப்பாயாக" என்று கயமுகாசுரனாகிய பெருச்சாளியின்மீது தாவி ஏறியருளினார். நான்முகன் இந்திரன் முதலிய தேவர்கள், அதனைக் கண்டு, நம் துன்பம் தீர்ந்ததென்று எண்ணி, இன்பக் கூத்தாடினார்கள்; விநாயகக் கடவுளுக்கு மலர்

* இது தற்போது திருச்செங்காட்டங்குடி என வழங்குகிறது.

மழையைப் பொழிந்து வழிபட்டுத் துதித்தார்கள். விநாயகக் கடவுள் யாவருக்கும் பேரருள் புரிந்தார். விநாயகக் கடவுள் போரில் இறந்த பூதர்களை உயிர் பெற்றெழச் செய்தார். அவர்கள் யாவரும் எழுந்து விநாயகக் கடவுளை வணங்கிச் சூழ்ந்தார்கள்.

அசுரேந்திரன் நிகழ்ந்தன யாவற்றையும் சுக்கிராசாரியரோடு ஆலோசித்து, வருந்திப் புலம்பி இந்திரனுக்கும் பூதர்களுக்கும் பயந்து பறவை வடிவமெடுத்து, மதங்கமாபுரியினின்றும் புறப்பட்டு மேருமலைக்குச் சென்று அங்கு மறைந்திருந்தான். சுக்கிராசாரியரும் பறவை வடிவமெடுத்துத் தன்னுடைய உலகத்தையடைந்தார். பூதர்கள் மதங்கபுரியினுள் நுழைந்து அவுணர்கள் யாவரையும் கொன்று போர்க்களத்திற்கு மீண்டார்கள்.

**விநாயகக்கடவுள் சிவவழிபாடு**

விநாயகக் கடவுள், போர்க்களத்தை விட்டு நீங்கித் திருச்செங்காட்டங்குடிக்குப் போய்ச் சிவலிங்கப் பிரதிட்டை செய்து, பேரன்புடன் பூசித்து வழிபட்டார். விநாயகக் கடவுள் சிவபெருமானை வழிபட்ட இடம் **கணபதீச்சரம்**† என்ற பெயர் கொண்டு இன்றும் விளங்குகிறது.

திருவிருத்தம்-265
ஆகத் திருவிருத்தம்–1,172

——oo——

## 15. அனந்தன் சாப நீங்கு படலம்

**திருமாலின் சாபம் நீங்குதல்**

விநாயகக் கடவுள், கணபதீச்சரத்தை விட்டுத் தேவர்கள் சூழப் புறப்பட்டு, **ஆலங்காட்டை** அடைந்தார். அங்குத் திருமால், ஓர் ஆலமரப் பொந்தில் சிவபெருமான் திருவடிகளை எண்ணித் தவம் புரிந்துகொண்டிருந்தார்; விநாயகக் கடவுள் வரவை அறிந்து அவரை விரைவாக எதிர்கொண்டு வணங்கித் துதித்தார். உடனே திருமாலின் பாம்பு வடிவம் நீங்கியது. அவர்

† இது திருச்செங்காட்டங்குடியிலுள்ள சிவாலயத்தின் பெயர் ஆகும்.

சக்கரம் முதலிய பஞ்சாயுதங்களை ஏந்தித் தம் பழைய வடிவத்தைப் பெற்றார்; பிறகு விநாயகக் கடவுளை முறைப்படி பூசித்து வழிபட்டுத் துதித்து, "சுவாமீ! **மார்கழி மாதத்தில் பூர்வபக்ஷ சஷ்டியாகிய இத்திதியில் அடியேன் உம்மை வழிபட்டேன்.** அதுபோல உம்மை வழிபடுவோர் துன்பங்கள் நீங்கப் பெற்றுச் செல்வங்களை அடையும்படி வரமருளவேண்டும்" என்று வேண்டினார். விநாயகக் கடவுள், "அவ்வாறே ஆகுக" என்று திருமாலுக்கு அருள்புரிந்து, "உன் பூசைக்கு மகிழ்ந்தோம்" என்று கூறித் திருமால் பிரமன் முதலிய தேவர்கள் துதிக்கப் பெருச்சாளி வாகனத்தில் ஏறிப் பூதகணங்கள் சூழத் திருக்கயிலாயம் அடைந்து, பரமசிவனை வணங்கி அவர் திருவருளைப்பெற்றுத் தமது இடத்தில் எழுந்தருளினார்.

**தேவர்கள் விநாயகர் திருமுன் குட்டிக் கொள்ளுதல்**

சிவபெருமானை வழிபடத் திருக்கயிலாயத்தை அடைந்த திருமால் பிரமன் இந்திரன் முதலிய தேவர்கள், திருக்கோயிலின் வாயிலில் வீற்றிருந்த விநாயகக் கடவுளை வணங்கித் துதித்து நின்றார்கள். விநாயகக் கடவுள் அவர்களுக்கு அருள்புரிந்தார். அவர்கள் விநாயகப் பெருமான் மேல் பேரன்பு கொண்டு, "எம்பெருமானே! எங்களுக்குத் துன்பத்தை இழைத்த கயமுகாசுரனை தேவரீர் அழித்தீர்; அதனால் அடியேங்கள் உய்ந்தோம்; அதற்கு நாங்கள் தேவரீருக்குச் செய்யக்கூடிய கைம்மாறு ஒன்றுமில்லை. ஆயினும், நாங்கள் நேற்றுவரையும் அக் கயமுகாசுரனுக்குச் செய்துவந்த வணக்கத்தைத் தேவரீருக்குச் செய்ய வேண்டுகிறோம்" என்றார்கள். விநாயகக் கடவுள், "அவ்வாறே செய்குதிர்" என்று அருள்புரிந்தார். தேவர்கள் யாவரும், அன்பினோடு முட்டியாகப் பிடித்த இரு கைகளாலும் தங்கள் தங்கள் நெற்றியில் மும்முறை குட்டிக்கொண்டு, பிறகு காதுகளை மாறிமாறிப் பிடித்துக்கொண்டு மும்முறை தாழ்ந்து எழுந்து துதித்தார்கள். அதனைக்கண்டு பூதகணங்கள் ஆரவாரம் செய்தன. விநாயகக் கடவுள் மகிழ்ந்தார். தேவர்கள், "இன்று முதல் தேவரீரை அடையும் யாவரும் இத்தொண்டைச் செய்து வரும்படி அருளவேண்டும்" என்று வேண்டினார்கள். விநாயகர், "அவ்வாறே ஆகுக" என்று அருள்புரிந்து அனைவருக்கும்

விடைகொடுத்தனுப்பினர். அவர்கள் தத்தம் பதங்களிற் போய் மகிழ்ச்சியோடு இருந்தார்கள். "தக்கனே! நீ சிவபெருமானுக்குத் தாமதகுணம் வந்ததைப்பற்றி வினவினுய்; அதனைக் கேட்பாயாக" என்று ததீசி முனிவர் கூறலானுர்:

**சிவபெருமானின் தாமத குணம்**

"சிவபெருமான் முக்குணங்கள் அற்றவர். அவர் ஆன்மாக்களின் பாசங்களை நீக்கக் கருதிய கருணையினுல் நான்முகனுக்குப் படைத்தல் தொழிலையும், திருமாலுக்குக் காத்தல் தொழிலையும் கொடுத்துத் தாம் அழித்தல் தொழிலை மேற்கொண்டார்; படைத்தல் தொழிலுக்குச் சாத்துவிக குணத்தையும், காத்தல் தொழிலுக்கு இராசத குணத்தையும் உண்டாக்கினுர்; அழித்தல் தொழில் சினத்தினுல் முடித்தல்வேண்டுமாதலால் அதற்குத் தாமத குணத்தை வைத்தார். அதனுல், சிவபெருமான் தாமத குணத்தைக் கொண்டவர் அல்லர். அவர் தாமத குணத்தராயின் வேத சிவாகமங்களை அருளிச்செய்து கல்லால விருட்ச நிழலிலே இருந்து சனகாதி முனிவர்களுக்கு ஞானேபதேசம் செய்ய வல்லவராவாரோ? குற்றமற்ற வெண்ணிற வடிவங்கொண்டு விளங்குவாரோ? வேதங்கள் அவரை, "வித்தையின் மூலம்" என்று புகழுமோ? இதனை ஞானமில்லாதவர்களுக்கு எவ்வாறு தெளிவிப்பது? சிவபெருமான் இறுதிக் காலத்தில் அழித்தல் தொழில் புரிவதால் அவரைத் தாமத குணத்தவர் என்ருய். அக்குணம் அவருக்கு இயற்கைக் குணம் அன்று; செயற்கைக் குணமே ஆகும்.

திருமால், வடிவு நீலநிறம் பெற்றதாலும், கடலில் உறங்குவதாலும், அகந்தை முதலியன கொண்டதாலும், தாமத இராசத குணங்களைக் கொண்டுள்ளார். அவர் நல்லறிவுபெற்ற காலத்துச் சிவபெருமானை வழிபட்டுத் துதித்து, அவரது திருவருள் ஞானம் அடைவதினுல் சாத்துவிக குணம் பெற்றுள்ளார். நான்முகன், வடிவு பொன்னிறம் பெற்றதாலும், நானே பரம்பொருள் என்று கூறிய மயக்கத்தாலும், பரமசிவனை வழிபடும் தன்மையாலும், எல்லாக் குணங்களையும் கொண்டுள்ளார். ஆனுல் விருப்பு வெறுப்புக்கள் அற்ற சிவபெருமானுக்கு ஒரு குணத்தைக் கூறு

தல் அறியாமையே ஆகும். "முன்னுளிலே மூன்று மாயா தத்துவப் பொருள்களையும் தந்தவர் சிவபெருமானே" என்று நான்மறைகள் ஓதும். திருமால் முதலிய தேவர்களிடத்தும், உயிர்களிடத்தும், உயிரில்லாதவைகளிடத்தும் நிறைந்து, யாவற்றையும் இயற்றுகின்ற சிவபெருமான் ஒரு குணத்தில் பொருந்துவரோ? அழித்தல் தொழில் ஒன்றைக் குறித்து மேலோர்கள் சிவபெருமானுக்குத் தாமத குணத்தைக் கூறினர் அல்லது வேறொரு செய்கையினால் அக்குணத்தைச் சொன்னாரில்லை" என்று இவைபோல்வன பலவற்றைத் ததீசி முனிவர் உபதேசித்தார்.

### ததீசி முனிவர், தக்கன் முதலியோர்க்குச் சாபம் கொடுத்தல்

தக்கன், ததீசி முனிவர் கூறிய அறிவுரைகளை நன்றென்று மனத்தில் ஏற்றுக்கொள்ளாது, அவரைப்பார்த்து, "முனிவரே! நீர் இங்கே பலவாறு கூறுவதில் பயனில்லை. உங்கள் சிவன் அறுகுணங்களை உடைய கடவுளே ஆயினும் ஆகுக. நான் அவருக்கு யாகத்தில் அவிப்பாகம் தரமாட்டேன். நான் எண்ணியபடி என் யாகத்தைச் செய்து முடிப்பேன்" என்றான். அம்மொழிகளைக் கேட்ட ததீசி முனிவருக்கு மனத்தில் கோபம் பொங்கியது. முனிவரின் கோபத்தைக் கண்டு ஊழித்தீயும் அஞ்சியது; தேவர்களும் மனம் தளர்ந்தார்கள்; கடல்களும் ஒடுங்கின; உலகங்களும் நடுங்கின. ததீசி முனிவர், தம்மால் யாவும் துன்புற்று வருந்துவதைக் கண்டு தம் சினத்தைத் தணித்துக் கொண்டார்: தம்மைச் சூழ்ந்த முனிவர்களோடு எழுந்து நின்று தக்கனைப் பார்த்து, "தக்கனே! நீ இன்றைக்குச் சிவபெருமானை விலக்கிச் செய்யும் வேள்வியும், உன்னோடிருக்கும் தேவர்களும் அழிக" என்று சாபமிட்டார். அதன்பின்பு வேள்விச்சாலையிலிருக்கின்ற அந்தணர்களை நோக்கி, "நீங்கள் யாவரும் அந்தணர்களில் பேடிகளாயினீர்; உங்கள் குலத் தலைமையை இழந்து விட்டீர்; சிவபெருமானையும், அவன் அடியார்களையும், விபூதி உருத்திராட்சங்களையும் இகழ்ந்து பூமியில் எந்நாளும் பிறந்திறந்து கதியடையாமல் வேதத்திற்குப் புறம்பான வழியைப் பின்பற்றி வாழக்கடவீர்" என்று சாபமிட்டார்.

பிறகு முனிவர்கள் சூழத் ததீசி முனிவர் வேள்விச்சாலையிலிருந்து புறப்பட்டுத் தம் இடத்தை அடைந்தார்.

திருவிருத்தம்–38
ஆகத் திருவிருத்தம்-1,210

——oo——

## 16. தானப் படலம்

**வேள்வி புரிய முயலுதல்**

ததீசி முனிவர் வேள்விச் சாலையை விட்டுச் சென்றதும், தக்கனுடைய கொடி அறுந்தது. வேள்வித் தூணில் காக்கைகளும், கழுகுகளும் நெருங்கின. தக்கனுடைய மனைவியாகிய வேதவல்லியின் மங்கல நாண் தானே சுழன்றது. இங்ஙனம் பல தீய நிகழ்ச்சிகள் ஏற்பட்டதைக் கண்டும் தக்கன் அஞ்சவில்லை. நான்முகனையும் திருமாலையும் முகமன்கூறி வழிபட்டான்; தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் வேண்டியன வேண்டியவாறே அளித்தான்; அதன்பின் தான் பெற்ற பெண்களுக்கும் மருகர்களுக்கும் மங்கல வரிசைகளை மிகவும் அளித்தான்; திருமாலும் பிறரும் காவல்புரியத் தீய வேள்வி புரிய ஆரம்பித்தான்.

**தக்கன் ஏவலில் யாவரும் நிற்றல்**

தக்கனின் கட்டளைப்படி காமதேனு, உணவு வகைகளையும் பலகார வகைகளையும் கொண்டுவந்து குவித்தது ; வேள்விக்கு வந்தவர்களுக்கெல்லாம் அவற்றை வழங்கிற்று. சிந்தாமணியும், சங்கநிதியும், பதுமநிதியும், ஐந்தருக்களும், பலவகை இரத்தினங்களையும், ஆடைகளையும், ஆபரணங்களையும் கொண்டுவந்து குவித்தன.

**யாவரும் உணவு அருந்தி மகிழ்தல்**

ஏவல் புரிந்த முனிவர்கள், அந்தணர்கள் முதலியோரை அழைத்துப் பொன் தட்டுக்களில் உணவு வகைகளைப் படைக்க, அவர்கள் தங்கள் தங்கள் மனம்போல விரும்பிய வரையில் பற்பல உணவுப் பொருளை உண்டு, அவற்றின் சிறப்பைப் பலபடியாகப் பேசி மகிழ்ந்தார்கள். உணவு முடிந்தபின் அவரவர்

களுக்குச் சந்தனம், புஷ்பம், தாம்பூலம் முதலியவைகள் கொடுக்கப்பெற்றன.

**யாவரும் தானம் பெறுதல்**

பிறகு அந்தணராதியோர் தானசாலை அடைந்து ஆடை ஆபரணங்களையும், பசுக்களையும், பிறவற்றையும் மிகுதியாகப் பெற்றார்கள்.

**மகிழ்ச்சியின் பேரொலி**

திருமாலினுடைய கருடனும், நான்முகனுடைய அன்னமும், இந்திரனுடைய ஐராவதமும், அக்கினியினுடைய ஆட்டுக்கடாவும், இயமனுடைய எருமைக் கடாவும், சூரியனுடைய குதிரைகளும் ஒருபால் நின்று ஒலித்தன. தேவர்களும் பிறரும் ஒவ்வொரு பகுதியில் நிறைந்திருந்தார்கள். அரம்பையர்கள், வீணை, வேய்ங்குழல், மிருதங்கம் ஆகிய இசைக் கருவிகள் முழங்க, ஒரு பக்கத்தில் நடனமாடினார்கள். வேதவல்லியின் புதல்வர்களும், மகளிர்களும், இந்திராணியும் ஒரு புறத்திலிருந்து வேள்வியின் சிறப்புக்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவ்வாறாகிய நிகழ்ச்சிகள் எங்கும் நெருங்குதலினாலே தக்கனுடைய யாகத்திற்குக் கடல்கள் யாவும் வந்து சூழ்ந்தாற்போலப் பேரொலி உண்டாயது. தேவர்களும் பூவுலகிலுள்ளாரும் நெருங்கினமை, தேவகங்கையும் பூவுலகிலுள்ள நதியும் கலந்தாற்போன்றது.

திருவிருத்தம்–46
ஆகத் திருவிருத்தம்–1,256

——oo——

## 17. வேள்விப் படலம்

**வேள்வி ஆரம்பித்தல்**

யாகத் தலைவனாகிய தக்கன், நான்முகனோடும் திருமாலோடும் யோசித்து, முன்பு தன்னால் வரிக்கப் பெற்ற மேலோர்களைப் பார்த்து, "மூவகை அக்கினிகளையும் உண்டாக்குங்கள்" என்று கட்டளையிட்டான். அவர்கள் நன்றென்று முறைப்படி அக்கினியை வளர்த்தார்கள். தக்கன் தன் அருகிலுள்ள இருத்துவிக்கு

கள் யாவரையும் பார்த்து, "நீங்கள் உங்கள் கிரியைகளைச் செய்யுங்கள்" என்ருன். அவர்களுள் பன்னிருவர், வேள்விக்குரிய அவிசுகளையும், வன்னி, சமித்து, தருப்பை முதலியவைகளையும் கொண்டுவந்து கொடுத்தார்கள். ஒருவர் வேள்வியைச் செய்தார். ஒருவர் சிவபெருமான் அல்லாத மற்றைத் தேவர்கள் அவிகளை ஏற்குமாறு அவரவர்க்குரிய மந்திரம் கூறினர். ஒருவர் தேவர்களுடைய பெயர்களைச் சொல்லி அழைத்தார். மற்றொருவர் அவியை அக்கினியில் ஆகுதி செய்தார். வேள்வியில் குறையொன்றும் ஏற்படாதிருக்குமாறு ஒருவர் நின்று மேற்பார்வை செய்து கொண்டிருந்தார். ஒருவர் அவ் வேள்விக்கு முதல்வராகிய கடவுளைப்போல இருந்து அருள் செய்தார்.

இவ்வாறு வேள்வி செய்யும்போது, யாகத் தலைவனாகிய தக்கன், அவரவர் அவிகளை ஆகுதி செய்யும்போது அத்தேவர்களை நினைத்து, "இதனை ஏற்று உண்ணுங்கள்" என்று கூறி, அவிகளை அமுதுபோல ஊட்டிக் கொண்டிருந்தான். அவ்வவிகள் சுவை முதலியவற்றில் அமுதத்தை ஒத்திருந்தன வெனினும், உயிர்க்குயிராகிய சிவபெருமானை இன்றி நுகர்ந்தமையால், தேவர்களுக்கெல்லாம் உண்ணத் தகாத நஞ்சை ஒத்திருந்தன.

திருவிருத்தம்–9
ஆகத் திருவிருத்தம்-1,265

——oo——

## 18. உமை வரு படலம்

**உமாதேவியார் வேள்வியைக் காண எண்ணுதல்**

நாரத முனிவர், நிலவுலகத்திற்கு வந்து தக்கன் வேள்வி செய்தலைக் கண்டு, "இவன் சிவபெருமானை நீக்கித் தேவர்களோடு வேள்வி செய்கின்ருன்; இஃது இவனுடைய வலிமை தானே?" என்று எண்ணித் திருக்கயிலாயத்தை அடைந்து திருநந்தி தேவரின் அனுமதி பெற்று உள்ளே சென்று சிவபெருமானின் திருவடிகளை வணங்கித் துதித்து, "எம் அண்ணலே! தக்கன், கங்கைக் கரையில் திருமால் நான்முகன் முதலியவர்களோடு அறிவில்லாதவனுகி ஒரு வேள்வி செய்கிருன்; அஃது

ஒரு புதுமை'' என்று கூறினர். உமாதேவியார் அதனைக் கேட்டுத் தன் தந்தை செய்யும் யாகத்தைக் காண வேண்டு மென்று அவாக் கொண்டு எழுந்தார்; சிவபெருமானை வணங்கி, "எம்பெருமானே! என் தந்தை செய்யும் யாகத்தைப் பார்த்து வர விடை தந்தருளும்'' என்று வேண்டினர். சிவபெருமான் "உமையே! தக்கன் தான் பெற்ற வளங்களால் அகந்தையுற்றுத் தேவர்களோடு மயங்கி நிற்கிறான். ஆதலால், அவன் உன்னை மதிக்க மாட்டான். நீ அவன் யாகத்திற்குச் செல்லாதே'' என்று கூறினர். உமாதேவியார், "சுவாமீ! தக்கன் அறிவில்லாதவன்; அவன் செய்த பிழையைப் பொறுத்தருளும்; நான் விரைவிலே சென்று வேள்வியைப் பார்த்துவிட்டு மீண்டு வருவேன்; விடை தந்தருளும்'' என்று மீண்டும் வேண்டிக் கொண்டார். சிவபெருமான், "உமையே! நீ தக்கனின் யாகத்தைப் பார்க்கும் அவாக் கொண்டிருந்தால் சென்று பார்த்து விரைந்து வருவாயாக'' என்று கூறி அனுமதி புரிந்தார்.

**உமாதேவியார், தக்கன் வேள்வியை அடைதல்**

உமாதேவியார், சிவபெருமானின் திருவடிகளை வணங்கிக் கொண்டு ஒரு விமானத்தில் ஏறினர். அப்போது, **சுமாலீ மாலினி** என்ற பெண்கள் குடையைத் தாங்கினர்கள். **மங்கலை சுமனை** முதலிய பெண்கள் சாமரைகளை இரட்டினர்கள். வேறு பல பெண்கள் ஆலவட்டம் பீலி முதலியவற்றை வீசியும் மலர்களைத் தூவியும் சென்றார்கள். நந்திதேவரின் மனைவியாகிய **சுகேசை** என்பவர் பாதுகையைக் கொண்டு பின்னே சென்றார். **கமலினி அனிந்திதை** என்னும் சேடிகள் இருவரும் புஷ்ப மாலைகளைத் தாங்கிக்கொண்டு சென்றார்கள். பற்பல பெண்கள் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் பற்பல இசைக் கருவிகளை ஒலித்துக் கொண்டும் சென்றார்கள். **சோமநந்தி** அம்மையாரின் திருவடிகளை வணங்கிப் பன்னிருகோடி பூதர்கள் சூழ இடபவாகனத்தில் ஏறிக்கொண்டு முன்னே சென்றார். உமாதேவியார், விமானத்தின் மேற்கொண்டு விரைந்து சென்று பல பெண்கள் சூழத், தக்கனின் யாகசாலையை அடைந்து தக்கனைக் கண்டார். தக்கன், உமாதேவியாரைக் கண்டதும், கோபங்கொண்டு "தாய் தந்தையற்ற சிவனுக்கு மனைவியாகிய நீ ஏன் இவ் வேள்விக்கு

வந்தாய்? நான் உன்னை வேள்விக்கு வரும்படி அழைத்தேனா? நீ உன் இருப்பிடமாகிய கயிலைக்குத் திரும்பிச் செல்க'' என்று கூறினான். உமாதேவியார் தக்கனை நோக்கி, "நீ உன்னுடைய மருகர்கட்கும், என்னுடைய தங்கையர்கட்கும் இவ் வேள்வியில் சிறப்புச் செய்து உறவு கொண்டாடினாய். ஆனால் எங்களை மாத்திரம் நீ மறந்தாய். வலிய வந்த என்னையும் கோபித்து நோக்குகின்றாய். இது நல்லதா? இது பெருங் குற்றமாகும்; உனக்கு நன்மையைப் பயக்காது. உன் கருத்துத்தான் யாது? சொல்லுவாயாக'' என்றார்.

**உமாதேவியார் சினம் கொள்ளல்**

தக்கன் உமாதேவியாரைப் பார்த்து, "தாமத குணத்துக்குரிய அழித்தல் தொழிலைச் செய்து, பேயோடாடும் பித்தனாகிய சிவனுக்கு நீ மனைவியானாய். அவனோடு சேர்ந்து நீயும் அகந்தை கொண்டாய். அதனால் உன்னை இகழ்ந்தேன். உன்னுடைய தங்கையர்களும், என் மருகர்களும் எனக்கு இனியவர்கள்; ஆகையால், அவர்களுக்குச் சிறப்புச் செய்தேன்; இந்த வேள்வியில் அவிப் பாகத்தையும் கொடுத்தேன்; சீர்களையும் செய்தேன். திருமால் நான்முகன் முதலிய யாவரும் என்னைப் புகழ்கிறார்கள். நீயும் சிவனும் மட்டும் என்னை மதிப்பதில்லை. ஆதலால், உங்களிடத்தில் எனக்கு அன்பில்லை. மாட்டின்மேல் ஏறுகின்ற உன் கணவனுக்கு இந்த வேள்வியில் அவியையுங்கொடேன். அவனைப் புகழ்கின்ற வேத வாக்கியங்களையும் என் வலிமையினால் மாற்றுவேன். இங்கு வலிய வந்த உனக்கும் ஒரு சிறப்பும் செய்யேன்'' என்று கூறினான். அம் மொழிகளைக் கேட்ட உமாதேவியாரிடத்து அளவற்ற சினம் எழுந்தது. அச் சினத்தைத் தாங்காது, நிலவுலகம் நடுங்கியது; கடல்கள் நடுங்கின; அக்கினி நடுங்கியது; தேவர்களும், நான்முகனும், திருமாலும் நடுங்கினார்கள். அப்போது, உமாதேவியாரின் தோழியாகிய **விமலை** அவரை வணங்கி, "உலகத்திற்குத் தாயாக விளங்கும் உமக்கு இக்கோபம் தகுமா? உயிர்களைப் பெற்றெடுத்த தாயே! அவற்றை அழிக்கக் கருதினால் உயிர்கள் எங்ஙனம் வாழும்? இத் தக்கன் தருமத்தினின்றும் நீங்கினான். இக் கோபம் இறைப்பொழுதில் யாவற்றையும் அழித்துவிடும். ஆதலால், இதனைப் பொறுத்தருள்க'' என்று துதித்து நின்றாள்.

**உமாதேவியார் தக்கனுக்குச் சாபம் இடுதல்**

உமாதேவியார் தம் கோபத்தைத் தணித்துத் தக்கனை நோக்கி, "நீ என்னை அவமதித்ததைப் பெரிதாகக் கருதவில்லை; என் கணவராகிய சிவபெருமானை இகழ்ந்ததை நான் பொறுக்க மாட்டேன். உன் மொழிகள் என் செவிகளில் புகுந்த நஞ்சு போல்வன ஆகும். சிவபெருமான் சாத்துவிகாதி குணரகிதரே. அவர் அருள்ஞானங் கொண்டு விளங்குகிறார். அழிக்கும் தொழில் புரியுங்காலத்து அவரிடத்துத் தாமதகுணம் இருப்பதாக நாம் எண்ணுகிறோமே தவிர, அவர் ஒரு குணத்தையும் உடையவர் அல்லர். உயிர்கள் பிறந்து துன்புறுத வண்ணம் அவற்றை அழித்து, வருத்தத்தை மாற்றுகின்ற அழித்தல் தொழில் தீயதன்று. அஃது அருட்செயலே ஆகும். இச்செயலை வேறு எவராலும் செய்ய இயலாது. அவர் யாவற்றையும் அழித்துப் பின் அவற்றைத் தோற்றி அருளுவார். அவரிடத்திலிருந்தே எல்லாம் தோன்றும். இவ்வியல்புதான் பதியின் இலக்கணத்திற்குரிய உண்மை. வேதாகமங்கள் யாவும் அவரைத் துதிக்கின்றன. அவர் ஒருவரே அனைவருக்கும் தலைவர். '**சிவ**'* என்னும் இரண்டு எழுத்துக்களை உச்சரிப்பவர்கள் யாவரோ அவர்கள் வீடுபேற்றை அடைவார்கள்.

சிவனெ னுந்துணைச் சீரெ ழுத்தினை
நுவலு வோர்கதி நொய்தில் எய்துவார்

* * * *

அத்தகையவருக்கு அவியைக் கொடுக்க மறுக்கும் நீ எங்ஙனம் வாழப்போகிறாய்? சிவபெருமானை இகழ்ந்தவர்களுக் கெல்லாம் விரைவில் தண்டனை கிடைக்கும் என்று வேதங்கள் உறுதியாகக் கூறுகின்றன. தக்கனே! சிவபெருமானை விலக்கி வேள்வி புரிந்தாய்; ஆதலால் உனக்கும் தண்டனை வருவதாக" என்று உமாதேவியார் சாபமிட்டார்.

**உமாதேவியார் திரும்பிக் கயிலையை அடைதல்**

பிறகு உமாதேவியார், தக்கன் கூறியவற்றை எண்ணி மனம் புழுங்கிப் பரிசனங்களோடு வேள்விச்சாலையை விட்டு

---

* இதன் பெருமையினை, "சிவசிவ என்கிலர் தீவினையாளர்; சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்; சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்; சிவ சிவ என்னச் சிவகதி தானே" என வரும் திருமந்திரச் செய்யுளாலும் அறியலாம்.

நீங்கி விமான மேற்கொண்டு திருக்கயிலாயத்தை அடைந்தார்; விமானத்தினின்றும் இறங்கிச் சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, "சிறியவனாகிய தக்கன் தேவரீரை மிகவும் இகழ்ந் தான். ஆதலால் அவன் செய்யும் வேள்வியை அழித்தருள வேண்டும்" என்று வேண்டினார்; கருணாநிதியாகிய கடவுள் உமாதேவியார் கூறியவற்றிற்குச் செவிசாய்க்கா திருந்ததைக் கண்டு வருந்தினார்; அவரை நோக்கி, "தேவரீருக்கு விருப்பும், வெறுப்பும் இல்லையாயினும் அடியாளுக்காக அத்தீய வேள்வியை அழித்தல் வேண்டும்" என்று கூறித் துதித்தார்.

திருவிருத்தம்-61
ஆகத் திருவிருத்தம்-1,326

——oo——

## 19. வீரபத்திரப் படலம்

**வீரபத்திரக் கடவுள்-பத்திரகாளி தோற்றம்**

சிவபெருமான் தக்கனுடைய யாகத்தை அழிக்கத் திருவுளம் கொண்டார். உடனே ஆயிரம் தலைகளையும், ஆயிரம் முகங் களையும், அம் முகங்கள்தோறும் மும்மூன்று கண்களையும், வளைந்த கொடிய பற்களையும், இரண்டாயிரம் தோள்களையும், சிரமாலை என்புமாலை ஆமையோடு முதலியன இடையிடையே கலந்த மாலையையும், நாகாபரணம் நீலகண்டம் பூணூல் முதலிய வற்றையும், வாள் கேடயம் சூலம் வேல் குலிசம் சக்கரம் முதலிய ஆயுதங்களையும், வீரக்கழல்களையும், செம்மேனியையும், உருத் திரர் போன்ற பேரொளியையும் உடைய **வீரபத்திரக்கடவுள்** சிவபெருமானின் திருக்கண்ணினின்றும் தோன்றியருளினார். உமாதேவியார் அதனைக்கண்டு தம் கோபத்தினின்றும் ஆயிரம் முகங்களையும், இரண்டாயிரம் கைகளையும் உடைய **பத்திர காளியை** உண்டாக்கினார். அப்பத்திரகாளி வீரபத்திரக் கடவுளுக்குத் துணைவியாய் அவரை அடைந்தாள். எப்படை களுக்கும் அதிதேவதையாகிய அஸ்திர தேவரையும் அவர் சத்தி யாகிய அஸ்திரசத்தியையும் போல, இவ்விருவரையும் சிவபெரு மானும் உமாதேவியாரும் பார்த்து மகிழ்ந்தார்கள்.

வீரபத்திரக் கடவுள், பத்திரகாளியும் தானுமாக முன்னே நின்ற சிவபெருமானையும் உமாதேவியாரையும் வலம் வந்து வணங்கி அஞ்சலி செய்து நின்று, அவர்களை நோக்கி, "அடியேன், நான்முகன் திருமால் முதலியவர்களை இங்குப் பற்றிக் கொண்டு வரவேண்டுமா? இயமனைக் கொல்ல வேண்டுமா? உலகங்களை அழிக்க வேண்டுமா? அண்டங்களைத் தகர்க்க வேண்டுமா? எதனைப் பணித்தாலும் அடியேன் செய்வேன். தேவரீர் என்னை உண்டாக்கியதன் காரணத்தைக் கூறியருளவேண்டும்" என்று விண்ணப்பம் செய்தார்.

சிவபெருமான் வீரபத்திரக் கடவுளை நோக்கி, "தக்கன் நம்மை இகழ்ந்து ஒரு வேள்வியைச் செய்கின்றான். நீ அவ் வேள்விக்குச் சென்று நமக்குரிய அவியைக் கேட்பாயாக. அவன் அவியைத் தந்தால் பெற்றுக்கொண்டு திரும்பி வருவாயாக. இன்றேல் அவனுடைய தலையை அறுத்து, அவனைச் சேர்ந்தவர்களையும் அழித்து, அவன் செய்யும் வேள்வியையும் கலக்குவாயாக. அப்போது நாமும் அங்கு வருவோம். நீ முன்னர்ச் செல்லுதி" என்று கட்டளை யிட்டார்.

### வீரபத்திரர் வேள்விச் சாலையை அடைதல்

வீரபத்திரக் கடவுளும் பத்திரகாளியும், சிவபெருமான் உமாதேவியார் இருவரையும் வணங்கி விடை பெற்றார்கள். வீரபத்திரக் கடவுள், தக்கன் வேள்வியை அழிக்க நினைத்து மிகுந்த கோபம் கொண்டு தம்முடைய உயிர்க் காற்றினின்றும் வியர்வையினின்றும், மற்றும் பல உறுப்புக்களினின்றும் எண்ணற்ற பூத கணங்களை உண்டாக்கினார். அவர்கள் பலவித நிறங்களையும் உருவங்களையும் பற்பல ஆயுதங்களையும் உடையவர்கள் ஆயினர். பத்திரகாளி பல காளிகளை உண்டாக்கினாள். இங்ஙனம் தோன்றிய பூதர்களும் காளிகளும், வீரபத்திரர் பத்திரகாளி ஆகிய இருவரையும் வணங்கி அவர்களுடைய மருங்கில் சூழ்ந்தார்கள். **பானுகம்பர்** முதலிய பூதர்கள் பல இசைக் கருவிகளை முழக்கிக் கொண்டு முன்னே சென்றனர். **தண்டன், பிருகி, சிங்கன்** முதலியோர்கள் குடைகளையும், சாமரங்களையும் ஏந்திச் சென்றார்கள். பெண்கள் பலர் குடைகளைப் பிடித்தும், மலர்களைச் சிந்தியும் பத்திரகாளியைச் சூழ்ந்தார்கள். நிலவுலக முழுவதும்

நிறைந்து நின்ற சேனை வெள்ளங்களின் ஆரவாரத்தால் அண்ட முகடும் உடைந்தது. அங்குள்ளவர்கள், "எவ்வண்டம் உடைந்ததோ," என்று நடுங்கித் தம்முள் பேசுவாராயினர். பூதூளி எழுந்து எங்கும் இரவு பகல் தெரியாவண்ணம் மறைத்தது.

இத்தன்மையினையுடைய சேனைகள் தம்மைச் சூழ, வீரபத்திரக் கடவுள் பெருங்கோபத்தோடு தக்கனின் யாகசாலையை நெருங்கினார்; தம் படைத் தலைவர்களை நோக்கி, "தீயவனாகிய தக்கனுடைய இவ்வேள்விச்சாலையையும், சுற்றுப் புறங்களையும் நன்றாகக் காவல் புரிவீர்களாக" என்று கட்டளை யிட்டார். அவர்கள் உடனே மதில்களிலும், ஆகாயத்திலும், வாயில்களிலும் நிறைந்து நின்று காத்தார்கள்; தக்கனுடைய சேனைகளாய் வந்து எதிர்த்தவர்களைக் கொன்று தின்று இயமனும் நடுங்கும் படி ஆரவாரம் செய்தார்கள்.

திருவிருத்தம்-60

ஆகத் திருவிருத்தம்–1,356

-----oo-----

## 20. யாக சங்காரப் படலம்

### வீரபத்திரர் வேள்வியைக் காணல்

வீரபத்திரக் கடவுள் பத்திரகாளியோடு தக்கனின் வேள்விச் சாலைக்குள் சென்றார். அவர்கள் இருவரையும் நான்முகன் முதலாகிய தேவர்கள் அனைவரும் கண்டு, மனம் பதைபதைத்து அச்சங்கொண்டார்கள்; சிங்கத்தைக் கண்ட மான்களைப் போலவும், இடி ஒலி கேட்ட பாம்புகள்போலவும் மனம்நடுங்கி வலிமை இழந்து முகம்வாடி ஒடுங்கினார்கள். அவர்களிருவரையும் கண்டு, "இங்கே, சிவபெருமானும் உமாதேவியாருமே வந்தார்கள்" என்றனர் சிலர். "இவர்கள் அவர்களின் கடுஞ் சினத்தினின்றும் தோன்றியவர்கள்" என்றனர் சிலர். "நம்முடைய உயிருக்கு இன்றே அழிவுக்காலம் வந்துவிட்டது" என்றனர் சிலர். "தக்கனுக்கும் இன்றே அழிவு வந்தது போலும்" என்றனர் சிலர். "விதியை யாவர் விலக்க வல்லார்" என்றனர் சிலர். "சிவபெருமானை இகழ்ந்தவர் அப்பொழுதே அழிவர், என்ப

தற்கு ஐயமுண்டோ?" என்றனர் சிலர். இத்தீமைகளெல்லாம் உமாதேவியார் காரணமாக எழுந்தனவோ?" என்றனர் சிலர். "பூதர்கள் எங்கும் வந்து வளைந்து கொண்டார்கள்" என்றனர் சிலர். "இனிச் செய்வது என்ன" என்றனர் சிலர். இவ்வாறு பலரும் பலவாறு புலம்பி, நாற்புறங்களிலும் தீ சூழ அதன் நடுவில் அகப்பட்ட யானைகள்போலப் பெருந் துன்பமுற்று வருந்தினர்கள்.

கடுங் கோபங்கொண்ட வீரபத்திரக் கடவுள், பத்திரகாளியும் படைத் தலைவர்களும் தம்மைச் சூழச் சென்று, தக்கன் செய்யும் வேள்வியைக் கண்டார்; இடி யிடித்தாற்போலச் சிரித்துத் தீயெழ விழித்து ஆர்த்துக் கொம்பு என்னும் வாத்தியத்தை ஊதினர். அக் கொம்பின் ஒலியினல் மேருமலை பிளந்தது; பூமி வெடித்தது; அண்டங்கள் துடித்தன; உயிர்கள் துளங்கின; தேவர்களும், முனிவர்களும் சோர்ந்து, பின் எழுகின்றவரும், பதைபதைக்கின்றவரும், ஏங்கி அழுபவரும், ஓடுகின்றவரும், 'வேள்வி அழிந்ததோ' என்கின்றவரும் ஆனர்கள். ஏனையோர் இன்ன ஒலியைக் கேட்ட அசுணமாவின் தன்மையைப்போல மயங்கி விழுந்து செயலற்றார்கள்.

**வீரபத்திரர் சிவபெருமானுக்குரிய அவியைக் கேட்டல்**

வீரபத்திரக் கடவுள் வேள்விச்சாலையின் முன்னே சென்றதும், தக்கன் அவரைக்கண்டு மிகவும் நடுங்கி உள்ளம் தளர்ந்து தலைமை நீங்கினன்; பூதர்கள் வேள்விச்சாலையைச் சூழ்ந்ததையும், அஃது அழிவடைதலையும், தேவர்கள் அயர்தலையும் கண்டு வருந்தினன்; பிறகு ஒருவாறு தேறி வீரபத்திரக் கடவுளைப் பார்த்து, "நீ யார்? இங்கு ஏன் வந்தாய்?" என்று வினவினன். அவர் தக்கனைப் பார்த்து, "யான் சிவபெருமானின் மகன். நீ அவருக்குக் கொடுக்கவேண்டிய அவியைக் கொடுப்பாயாக; அதனைப் பெற்றுச் செல்லவே இங்கு வந்தேன்" என்று கூறினர். தக்கன் அதனைக் கேட்டு, "இனி, சிவனுக்கு உலகத்திலுள்ளோர் வேள்வியில் அவியைக் கொடுக்கமாட்டார்கள்" என்றான். அப்போது அங்கே இருக்கின்ற நான்கு வேதங்களும், பிரணவமும் திடீரென்று எழுந்து, "ஒப்பற்ற தலைவராகிய சிவபெருமான் அன்றி வேள்விக்கு வேறு ஒரு தலைவர் உண்டோ?

தக்கனே! சிவபெருமானுக்குக் கொடுக்கவேண்டிய அவிப் பாகத்தைத் தாமதஞ் செய்யாமல் கொடுப்பாயாக'' என்று தக்கன் கேட்கும்படி கூறின. ஆனால் அறிவிலியாகிய தக்கன் அவியைக் கொடுக்க மறுத்தான். உடனே நான்கு வேதங்களும் பிரணவமும் சிவபெருமானின் புகழ்களைக் கூறிக்கொண்டு, வேள்விச்சாலையினின்றும் புறப்பட்டுத் தத்தம் உறைவிடங் களுக்குச் சென்றுவிட்டன. வீரபத்திரக் கடவுள் தக்கனை நோக்கி, ''நான்மறைகளும், பிரணவமும் கூறிய உண்மைப் பொருளைக் கேட்டாயல்லவா? சிவபெருமானுக்குரிய அவியை இப்பொழுதாயினும் கொடுப்பாயாக'' என்றார். தக்கன், ''சுடு காட்டிலே ஒரு பெண்ணோடு நின்று கூத்தாடும் அப்பித்தனுக்கு அவியைக் கொடுக்கமாட்டேன்'' என்று கூறினான்.

**வீரபத்திரர் தேவர்களைத் தண்டித்தல்**

வீரபத்திரக் கடவுள் தக்கனின் பதிலைக்கேட்டுப் பெருங் கோபம் கொண்டார். தக்கனின் அருகிலிருந்த நான்முகன் முத லிய தேவர் கூட்டத்தை நோக்கி, ''நீங்களும் இவன்பக்கமாயினீர். சிவபெருமானுக்கு அவியைக் கொடாமல் தக்கன் அவரை இகழ்ந் தான். அவன் அங்ஙனம் செய்தது உங்களுக்கும் உடன்பாடு போலும்'' என்றார். தேவர்கள் ஊழின் வலியால் ஒன்றும் பதில் கூறாது ஊமையர்களைப்போலப் பேசாதிருந்தனர். வீர பத்திரக் கடவுள் சினந்து எழுந்து ஒரு தண்டாயுதத்தினால் திரு மாலின் மார்பில் அடித்தார். திருமால், தக்கன் அஞ்சும்படி கீழே விழுந்தார். அதன் பிறகு, வீரபத்திரக் கடவுள், நான்முக னின் தலையில் இடிவீழ்ந்தாற்போல் ஒருகையால் குட்டி அவனை வீழ்த்தினார்; நான்முகனின் மனைவியர்களின் மூக்கையும், கொங்கைகளையும் அறுத்தார். அவற்றைக் கண்ட தேவர்கள் யாவரும் ஓடி உலைந்தார்கள்; ஒளிந்துகொள்ள இடம் தேடிக் கதறினார்கள்; அங்கிருந்தும் தப்பி ஓட முயன்றார்கள். பூரண சந்திரனை வீரபத்திரக் கடவுள் கீழே தள்ளித் தம்முடைய ஒரு காலால் அவன் உடலைச் சின்னம்படத் தேய்த்தார்; சூரியனைக் கன்னத்தில் அடித்துப் பற்களை உதிர்த்தார். அவன் உயிர்நீங் கிக் கீழே வீழ்ந்தான். பின்பு வீரபத்திரர் பகன் என்னும் சூரிய னுடையகண்களைப் பிடுங்கினார்; இயமனைப் பிடித்து அவன்

தலையை வெட்டினார் ; குயிலுருக்கொண்டு அஞ்சி ஓடிய இந்திரனைப்பிடித்து வெட்டி வீழ்த்தினார் ; சிவபெருமானை இகழ்ந்த தக்கன் கொடுத்த உணவுகளை உண்ட அக்கினி தேவனின் கைகளை வெட்டினார்; ஏழு நாக்குகளையும் துணித்தார். அக்கினி வெட்டுண்ட நாவோடும் கையோடும் தள்ளாடி வீழ்ந்தான். பிறகு வீரபத்திரர் அக்கினியின் மனைவியாகிய சுவாகா தேவியினுடைய மூக்கை நகத்தினால் கிள்ளி எறிந்தார்; பயந்தோடுகின்ற நிருதியைக் கண்டு 'நில்' என்று கூறித் தடியினால் அடித்து வீழ்த்தினார்; தம்மை வந்தடைந்து வீழ்ந்து வணங்கிய உருத்திரர்களைத் தண்டனை செய்யாது, "போங்கள்" என்று கூறி ஓடிப்போதற்குரிய வழியைக் காட்டிவிட்டார் ; வருணனை எழுப்படையினால் அடித்தார் ; வாயுவை மழுப்படையினால் தாக்கினார் ; குபேரனை முத்தலைச் சூலத்தினால் குத்திக் கொன்றார்; ஏங்கிப் பயந்து தம்மைப் பணிந்த ஈசான உருத்திரரைப் போகும்படி விடுத்தார் ; அவர் நாணத்தோடு போயினார். சோணிதபுரத்து அரசனாகிய அசுரேந்திரனின் தலையை ஒரு கணையால் வீழ்த்தினார்; பிணைமான் உருக்கொண்டோடிய வேள்வித் தெய்வமாகிய எச்சன் தலையை ஒரு கணையினால் அறுத்தார்.

**தக்கனின் எண்ணமும் துணிவும்**

தக்கன், நிகழ்ந்தவற்றையெல்லாம் கண்டு வலையில் அகப்பட்ட மான்போல் வருந்தினான். "இத்தகைய பெருமையையுடைய இவ்வேள்வியும் என்முன் இவ்வாறு அழியுமோ? என் தந்தையாகிய நான்முகன் கூறியபடி, யான் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தேன்; அழிவில்லாத வரங்களைப் பெற்றேன்; ஆனால் அவற்றை அளித்த அக்கடவுளை அன்போடு நினையாமலும் துதிக்காமலும் செல்வத்தினால் செருக்குற்றேன்; உமையை மணம் செய்துகொடுத்து, அவரை மருமகன் என்று கருதி மிகவும் இகழ்ந்து பேசினேன்; நான்முகன் இயற்றிய வேள்வியில் அவிப்பாகத்தைச் சிவபெருமானுக்கு அளிக்கலாகாது என்று தடை செய்தேன்; ததீசி முனிவர் கூறிய நல்லுரைகளையும் இகழ்ந்தேன்; என்னைத் தேடிவந்த என் மகளை அவமதித்து அனுப்பினேன். இவ்வீரபத்திரக் கடவுள் வந்து, "சிவபெருமானுக்குரிய அவிப்பாகத்தைத் தருவாய்" என்று

கேட்டபொழுதும் நான் கொடுக்க மறுத்தேன். வேதங்கள்வந்து கூறியதையும் யான் கேட்கவில்லை. இத்தகைய புத்திகளெல்லாம் எனக்கு அழிவுக்காலத்திற்கு ஏதுவாய் வந்தனபோலும்! நான்முகன் முதலிய தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், அந்தணர்களுக்கும், ஏனையோர்களுக்கும் யான் ஓர் இறுதியைத் தேடிக்கொடுத்தேன்; சிவபெருமானை இகழ்ந்து இப்பொழுது இறப்பதற்கு ஏதுவாயினேன். விதியின் வழியே மதியும் செல்லும்போலும்!'' என்று இவைபோல்வனவற்றைத் தன் மனத்திற் கூறி வருந்தி, "இறக்கும் சமயத்தில் அறிவிழந்ததைப் பற்றி நினைத்துப் பலவாறு பேசுவதால் ஆகும் பயன் என்ன? இனிச் செய்வது யாது'' என்று எண்ணி, "இனி நான் தப்பி ஓடுவது அரிது; தப்பியோடினாலும் பிழைப்பது அரிது. ஆதலால், வலிமை மிக்க வீரபத்திரக்கடவுள் முன் ஆற்றல் மிக்கவன் போல் நிற்றலே என் துணிபாகும்'' என்று எண்ணி, அவ்வாறே நின்றான்.

### தக்கன் அழிவு

வீரபத்திரக் கடவுள் தக்கனின் நிலைமையைக் கண்டார்; கடுங்கோபங்கொண்டு, அவனை அணுகி, "தக்கனே! நீ தேவர்களோடு கூடிச் சிவபெருமானை இழிவாகப் பேசினாய்; ஆதலால் உனக்கு இதுவே தண்டனை'' என்று கூறித் தம் வாட்படையினால் அவனுடைய தலையைத் துணித்தார்; அது கீழே விழுமுன் கரத்தாற்பற்றி அக்கினியைப் பார்த்து, "இதனை உண்பாயாக'' என்று கொடுத்தார். அது நொடிப்பொழுதில் அதனை உண்டுவிட்டது. தக்கன் மனைவியர்களாகிய வேதவல்லி முதலாயினோரும் அவனுடைய புதல்விகளும் அதனைக் கண்டார்கள்; கைகளை உதறிப்புலம்பிக்கொண்டு அங்கே வந்தார்கள். பத்திரகாளி வேதவல்லியின் காதை அறுத்தாள்; மற்றைய மனைவியர்கள், புதல்வியர், ஏனைய மங்கையர்கள் முதலியோரின் தலைகளை வெட்டி, அவற்றைப் பந்துகள்போல அடித்து விளையாடினாள். வீரபத்திரரும் பத்திரகாளியும் மற்றை முனிவர்களையும் தேவர்களையும் கால்களாலும், கரங்களாலும், ஆர்ப்பினாலும், படைக்கலங்களினாலும் கொன்றார்கள். அப்போது, பூதசேனைவீரர்களும், காளிகளும், அதனை நோக்கி, வீரபத்திரக்

விடுத்தார். வீரபத்திரக் கடவுள் அவற்றை விலக்கித் திருமாலின் நெற்றியில் ஒரு கணையைச் செலுத்தினார். திருமால் அதனைத் தாங்க இயலாது தளர்ந்தார்; தளர்ச்சி நீங்கியதும் வீரபத்திரக் கடவுளை வந்து எதிர்த்தார். இருவரும் கணை மழைகளைப் பொழிந்து போரிட்டார்கள். வீரபத்திரக் கடவுள் வடவாமுகாக் கினிப் படையை விடுத்தார். திருமால் மிக வருந்தித் தெய்வப் படைக்கலங்களை யெல்லாம் விடுத்தார். வீரபத்திரக் கடவுள் அவற்றை அழித்துத் திருமாலின் சார்ங்கம் என்னும் வில்லையும் துணித்தார்; கருட வாகனத்தின் சிறகுகளை வெட்டி வீழ்த்தினார். திருமால், மாயத்தினால் பல திருமால்களின் உருவங்களைக் கொண்டு வந்தார். அவர்கள் யாவரையும் வீரபத்திரக் கடவுள் தம் நெற்றிக் கண்ணின் அக்கினியினால் பொடிபடுத்தினார். திருமால் சக்கரப் படையைச் செலுத்தினார். வீரபத்திரக் கடவுள் அதனைப் பிடித்து விழுங்கினார். திருமால் தண்டாயுதத்தை வீசினார். அதனை வீரபத்திரக் கடவுள் தமது தண்டினால் தடுத்தார். அஃது அழிந்து வீழ்ந்தது. திருமால் வாட்படையை ஏந்தி நெருங்குதலைக் கண்டு வீரபத்திரக் கடவுள் உங்காரம் செய்தார். திருமால் செயலற்றுப் பயந்து, தளர்ந்து நின்றார். வீரபத்திரக் கடவுள் யாது நினைந்தோ சிறிது சினந்தெழுந்தார். அப்போது "மிகுந்த சினத்தை விடுவாயாக" என்று சிவபெருமான் அருளிச் செய்த ஓர் அசரீரி வாக்கு ஆகாயத்தில் கேட்டது. வீரபத்திரக் கடவுள் அதனைக் கேட்டுச் சினம் தணிந்தார். அப்போது, சாரதியாகிய நான்முகன் அவரை வணங்கித் துதித்து, "தக்கன் வேள்வியில் வந்து அவிப்பாகத்தை உண்ட அறிவற்ற அடியேன் செய்த பிழைகளைப் பொறுத்தருள்புரியும்" என்று வேண்டினான். வீரபத்திரக் கடவுள் "அவ்வாறே ஆகுக" என்று அருள்புரிந்தார். திருமால் அதனைக்கண்டு, "இதுவே சமயம்" என்று கருதி வீரபத்திரக் கடவுளை வணங்கி, "வீரரே! தமியேனுடைய வில்லையும் துணித்துப் பல படைக்கலங்களையும் அழித்துச் சக்கரப்படையினையும் பிடித்து விழுங்கி, அடியேனையும் வென்ற உம் புகழை யார்தாம் கூறவல்லார்? அறிவில்லாத யான், நல்வழி தவறிய தக்கன் செய்த பூசனையை விரும்பி, அவனுடைய வேள்வியில் வந்து கலந்து கொண்டேன். அதனால் இத் தண்டனையை அடைந்தேன். சிவபெருமானை இகழ்ந்து பேசும் பாவிகளிடம்

அறிவில் சிறந்தவர்கள் செல்வார்களா? சிவ நிந்தனை செய்தோரும் அவரைச் சார்ந்தோரும் ஆகிய எல்லோர்க்கும் வேதங்களில் கூறியுள்ளபடியே தண்டனையை நீர் அளித்தீர். எம்மனோர் மாட்டு நீர் செய்த இத்தண்டனைகளெல்லாம் நீதியாம். எம்மிடத் தன்றி உம்மிடத்து ஒரு குறையுமில்லை. நீர் இவ்வேள்வியில் பலரையும் அழித்தது உமக்கு ஒரு திருவிளையாடல் அன்றோ? சிவபெருமானுக்கு **இலயசத்தி, கோரசத்தி, போகசத்தி, புருஷ சத்தி** என்ற நால்வகைச் சத்திகள் உளர். அவர்களுள் இலயசத்தி துர்க்கையும், கோரசத்தி காளியும், போகசத்தி உமாதேவியும் ஆவர். யான் புருஷசத்தி யாவேன். இதனை வேதங்கள் கூறும்.

இறுதிசெய் திடலே சீற்றம் இன்பமே ஆண்மை என்னு
அறைதரு சத்தி நான்காம் அரன்தனக்(கு) **ஐயை காளி**
முறைதரு **கவுரி** இன்னோர் மும்மையும் பெற்றோர் ஏனைப்
பெறலருஞ் **சத்தியான்** இப் பெற்றியும் மறைகள் பேசும்.

ஆதலால் நான் சிவபெருமானுடைய சத்தியே யன்றி வேறல்லேன்; அவரிடத்து அன்புடையேன்; யான் இழந்த ஆற்றலையும், சக்கரப் படையையும், சிவபெருமானுடைய திருவடிகளைப் பூசித்து விரைவில் பெற்றுக்கொள்கின்றேன்; தேவரீர் நீதியைக் கருதிச் செய்த தண்டனைக்காக வருந்தமாட்டேன்; உம்மிடம் தண்டனை பெற்றதைப் புனிதச் செயலாகக் கருதுகிறேன். அடியேன் பிழைகளைப் பொறுத்தருள்க'' என்று வேண்டினர். வீரபத்திரக் கடவுள் திருமாலுக்கு அருள்புரிந்தார்.

**சிவபெருமான் எழுந்தருளுதல்**

அப்போது சிவபெருமான் உமாதேவியாரோடு இடப வாகனத்தில் பூதகணங்கள் சூழ அங்கு எழுந்தருளினர். வீரபத்திரக் கடவுள் எம்பெருமானை வணங்கி நின்றார். திருமாலும், நான்முகனும் சிவபெருமானை வணங்கினர்கள். தக்கனும் தேவர்களும் வேள்விச்சபையிலே கால், கை, தலை, மார்பு, தோள், மூக்கு முதலாகிய அங்கங்கள் துணிந்து இழந்துகிடந்த தன்மையை உமாதேவியார் கண்டார்; முன்னே கொண்ட சீற்றம் நீங்கி அருள் மிகுந்து சிவபெருமானை நோக்கி, ''எம்பெருமானே! இந்திரனுக்கும், தேவர்களுக்கும், மற்றையோர்க்கும் முடிவு

என்னால் வந்ததென்று உலகத்தவர் கூறுவர். அவர்கள் உம்மை இகழ்ந்ததால் வீரபத்திரரால் பெறத்தக்க தண்டனையை அடைந்தார்கள். இறந்தவர்கள் உயிர்பெற்றெழுமாறு அடியேனுக்கு வரமருளல் வேண்டும்'' என்று வேண்டி நின்றார்.

**வேள்வியில் மாண்டவர்கள் எழுதல்**

அப்போது சிவபெருமான் திருப்புன்முறுவல் பூத்து வீர பத்திரக்கடவுளை நோக்கி, ''இந்த யாகத்தில் நம்மை யிகழ்ந்து உன்னுடைய கோபத்தால் அழிந்தவர்களுடைய உயிரை மீண்டும் அளித்து அவர்களுடைய உடல்களை முன்போல் ஆக்குக'' என்று அருளிச்செய்தார். வீரபத்திரக் கடவுள் அங்ஙனமே ''இறந்தவர்கள் அனைவரையும் முன்போல் எழுவீராக'' என்று கூறினர். உடனே தேவர்களும், முனிவர்களும், அந்தணர்களும், மற்றையோர்களும் எழுந்தார்கள்; தக்கனுடைய வேள்விக்கு வந்து இறந்ததையும் மீண்டு உயிர்பெற்று எழுந்ததையும் கனவு கண்டதுபோல உணர்ந்து மனம் மருண்டு, சிவபெருமானை இகழ்ந்ததால் வந்த பிழையை எண்ணி வருந்தி மிக வெட்க மடைந்தார்கள்.

உயிர்பெற்றெழுந்த தேவர்களும் முனிவர்களும் வீரபத்திரக் கடவுளின் அருகில் நின்று பார்வதி சமேதராகிய சிவபெருமான் ஆகாய வெளியில் வெளிப்பட்டு நிற்றலைத் தரிசித்து அஞ்சி நடுங்கினார்கள். எம்பெருமான் அவர்களைப் பார்த்து, ''நீங்கள் மனம் தளராதீர்கள்'' என்று கூறியருளினர். அவர்கள் யாவரும் அவரை நோக்கி, ''எம்பெருமானே! தக்கன் வேள்வியில் கலந்துகொண்ட பாவிகளாகிய எங்களுக்கு அருள்புரிந்தீர். மைந்தர்களுக்குத் தந்தையின்றித் தஞ்சம் உண்டோ? வேதநெறி தவறிய வேள்வியினில் அவியுண்டோம். அதனால், நாங்கள் நீண்டகாலம் துன்பமுறாத வண்ணம் எங்களைத் தண்டித்துக் காத்தருளினீர். உமக்கு நாங்கள் செய்யும் கைம்மாறு யாது? தேவரீர் எங்களைக் காத்தருளும்'' என்று வேண்டினார்கள். சிவபெருமான், ''நீங்கள் செய்த பிழைகளைப் பொறுத்தோம்'' என்று அருளிச் செய்தார். தேவர்கள், சிவபெருமானுடைய திருவருளைத் துதித்து மகிழ்ந்து ஆடிப்பாடிச் சிறப்புற்றார்கள்.

அப்போது சிவபெருமான், நான்முகன் முதலிய தேவர்களை நோக்கி, "உங்கள் அரசுரிமையை உங்களுக்கே அளித்தோம். நீங்கள் முன்போல் உங்கள் செயல்களைச் செய்து வருக" என்று திருவாய்மலர்ந்தருளினார். திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் சிவபெருமானின் திருவருளைப் போற்றித் துதித்து மகிழ்ந்தார்கள்.

**தக்கன் உயிர்பெற்று எழுதல்**

நான்முகன், வீரபத்திரக் கடவுளால் வேள்வியில் இறந்த பின்பு எழுந்த கூட்டத்தினுள் தன் மகனாகிய தக்கனைக் காணாதவனாய்ச் சிவபெருமானுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "எம்பெருமானே! தக்கன் அகந்தையால் தேவரீரை இகழ்ந்து வேள்வி செய்தான். அவன் அகந்தையை நீக்கக் கருதி அவனைத் தண்டித்து அருள் புரிந்தீர். அவனும் எங்களைப்போல் பிழைத்தெழுமாறு அருள்புரிய வேண்டும்" என்று வேண்டினான். சிவபெருமான், "அவ்வாறே ஆகுக" என்று அருள்புரிந்தார். வீரபத்திரக் கடவுள், தக்கனின் உடலைக் கொண்டுவரும்படி பானுகம்பருக்குக் கூறினார். பானுகம்பர் தக்கனுடலை வீரபத்திரக் கடவுளுக்கு முன் கொண்டுவந்தார். வீரபத்திரக் கடவுள் அங்கு இறந்து கிடந்த ஒரு ஆட்டின் தலையை எடுத்துத் தக்கனின் உடலில் பொருத்தி, "எழுக" என்றார். உடனே தக்கன் உயிர் பெற்றெழுந்தான்; எதிரில் நின்ற வீரபத்திரக் கடவுளைக் கண்டு அஞ்சினான்; தன்னுடைய ஆட்டுத்தலையால் வணங்கி நாணினான்; அப்போது தான் செய்த செயல்களை நினைத்து வருந்தினான்; உமாதேவியாரையும், சிவபெருமானையும் கண்டு நடுங்கினான். சிவபெருமான், "தக்கனே! நீ அஞ்சற்க" என்று அருள் புரிந்தார். அவன் எம்பெருமான் திருவடிகளை வணங்கி, "பாவியாகிய யான் அளவிட முடியாத தீமை புரிந்தேன். அதனை நினைக்கும் போதெல்லாம் என் மனம் என்னைச் சுடுகின்றது. தேவரீர் திருவருளால் அடியேன் உய்ந்தேன்; உம்முடைய பெரிய மாயையினால் திருமாலைத் துணையென்று கருதி உம்மை இகழ்ந்தேன் சிறியேன். யாதுமறிகிலேன்" என்று விண்ணப்பஞ் செய்தான். உமாதேவியார் பத்திரகாளியோடு அருகுநின்ற, வீரபத்திரரை, "வருக" என்று அழைத்து

அவர்களுக்குப் பல வரங்களைக் கொடுத்தருளினார். திருமால், நான்முகன், இந்திரன் முதலிய தேவர்களும், தக்கனும், முனிவர் களும் சிவபெருமானை வணங்கி நின்றார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி, "தேவர்காள்! நீங்கள் நம்மை இகழ்ந்து துன்புற்றவெல்லாம் முன்னைய ஊழ்வினையாலாகும். உங்களுக்கு இப்பிறப்பில் நாம் தண்டனை புரிந்ததும் முறையே ஆகும்; இதற் காக நாணமுற்று வருந்தாதீர்கள்" என்று அருளிச்செய்தார். தேவர்கள் அவரையும் வீரபத்திரக்கடவுளையும் வணங்கித்துதித் தார்கள். சிவபெருமான், வீரபத்திரக்கடவுளும் பத்திரகாளியும் பக்கத்தில் வரவும், திருநந்திதேவர் முன் செல்லவும், பூத சேனைகள் சூழவும், உமாதேவியோடு அவ்விடத்தைவிட்டு நீங்கித் திருக்கயிலாச மலையை அடைந்தார்; தம் திருக்கோயிலில் அமர்ந்து வீரபத்திரக் கடவுளுக்கும், பத்திரகாளிக்கும் ஒரு புவனத்தை அளித்தருளினார். வீரபத்திரக்கடவுள் உமாதேவி யாரையும் சிவபெருமானையும் வணங்கினார்; யாகத்தை அழிக் கும் காலத்தில் சிவபெருமான் கொடுத்தருளிய தேரில் பத்திர காளியோடு ஏறினார்; பானுகம்பர் தேரைச் செலுத்தச் சேனைக ளோடு தம் புவனத்தை அடைந்து, பூதர்கள் சூழத் துணைவி யோடு இனிதாக வீற்றிருந்தார்.

திருவிருத்தம்–176
ஆகத் திருவிருத்தம்–1,562

——oo——

## 21. அடிமுடி தேடு படலம்

### தக்கனுக்கு நான்முகன் நல்லுரை கூறுதல்

சிவபெருமான் சென்றபின் வேள்விச்சாலையில் நின்ற நான் முகன், தக்கனைப் பார்த்து, "மகனே! நீ செய்த காரியத்தின் பயன் என்ன ஆயிற்று? அதனால், நீ என்ன பாடுபட்டாய்? நீ தேவர்களுக் கும், முனிவர்களுக்கும், அந்தணர்களுக்கும் கூற்றுவன் ஆனாய். உன் பெருமையையும், அழகையும் இழந்தாய்; துன்பத்தில் ஆழ்ந்தாய்; பெரியோர்கள் கூறியதையும் உன் கருத்தில் கொள்ள வில்லை. சிவபெருமானுடைய பெருந்தன்மையை அறிந்த நீ, ஊழ்வினை காரணமாக அவரை இகழ்ந்தாய்; உனக்குச் செல் வங்களை அளித்த சிவபெருமானை மறந்தாய். இந்த மயக்கம்

உனக்கு மாத்திரம் அன்று; சீவராசிகள் யாவற்றிற்குமே உண்டு. ஆதலால் நீயும் மயங்கினாய். எல்லாவற்றையும் படைத்துக் காக்கும் எனக்கும், திருமாலுக்கும் இத்தகைய மயக்கம் முன்னொரு காலத்தில் ஏற்பட்டது. இற்றைநாள்போலவே, சிவபெருமான் அன்றும் வந்து அருள்புரிந்தார். ஆதலால், தக்கனே! நீ அவருடைய திருவடிகளை அன்போடு வழிபடுவாயாக. உன் மயக்கத்தைப் போக்கிப் பிறவியை நீக்கி, அறிவையும், வீடுபேற்றையும் அவர் அளிப்பார்'' என்று கூறினார். நல்லுரைகளைக் கேட்ட தக்கன், நான்முகனை நோக்கி, "தந்தையே! நான் உய்யும் திறத்தை எனக்குக் கூறியருளினீர். முன்னாளில் சிவபெருமான் வந்து உங்கள் மயக்கத்தைத் தீர்த்தருளியதை விளக்கமாகத் தமியேனுக்குக் கூறவேண்டும்'' என்று வேண்டினான். நான்முகன் அவ்வாறே தக்கனுக்குக் கூறலானான் :

**பிரமவிஷ்ணுக்கள் ஆணவம் கொண்டு பேசுதல்**

"ஆயிரம் சதுர்யுகம் கழிந்தால் எனக்கு ஒரு பகற்காலமாகும். அப்பகற்காலம் கழிந்து இரவு வந்ததும் நான் துயில் கொண்டேன். அப்போது கதிரவன், திங்கள், கோள்கள், விண்மீன்கள், இந்திரன் முதலிய தேவர் கூட்டங்களும் இவ்வுலகமும் உயிர்களும் அழிந்தன. மேலுலகத்திலுள்ள முனிவர்கள் யாவரும் பயந்து சனலோகத்தை அடைந்தார்கள். நாற்றிசைக் கடல்களும், விரைந்து எழுந்து உமாதேவியார் தவஞ் செய்கின்ற **காஞ்சிப்பதி** முதலாகிய தலங்களை ஒழிந்த மூவுலகத்தை விழுங்கிச் சத்தபாதலங்களையும் தேவர் உலகத்தையும் அழித்து, மேலும் சென்றன. அப்போது, திருமால் சிவபெருமானை எண்ணிய வண்ணம் ஓர் ஆலிலையின்மீது துயில்கொண்டார். அதனைச் சனலோக முனிவர்கள் கண்டு புகழத் திருமால் துயில் நீங்கி எழுந்து பூவுலகத்தைத் தேடினார். பூவுலகம் பாதாளத்தில் ஆழ்ந்திருந்தது. அதனை ஒரு பன்றியின் வடிவம் கொண்டு தேடி அப்பூமியைத் தம்முடைய கொம்பினால் மீட்டுவந்து முன்போல நிறுத்தினார். அப்போது ஆயிரம் சதுர்யுகங்கள் கழிந்தன. எனக்கு ஒரு பகற் பொழுதாகியது. நான் துயில் நீங்கி எழுந்து படைத்தல் தொழில் செய்யும்படி நினைக்கப் பொங்கி எழுந்த கடல்களெல்லாம் பழையநிலையை அடைந்தன.

திருமால் "நாம் நிலவுலகத்தைக் கொம்பிலெடுத்து நிலை நிறுத்தினேம்" என்று எண்ணி ஆணவம் கொண்டு திருப்பாற் கடலில் அறிதுயில் கொண்டார். அப்போது நான் தேவர்களையும், அசுரர்களையும், மனிதர்களையும், விலங்குகளையும், மற்றைச் சீவராசிகளையும் படைத்து வானுலகத்திலும் பூவுலகத்திலும் வைத்து, இந்திரனை விண்ணுலக அரசனாக்கி, மற்றைத் திக்குப் பாலகர்களை அவரவர் இடங்களில் நிலைக்கச் செய்தேன்; இத்தன்மையான படைப்புத் தொழிலை நான் பெரிதென எண்ணி, எனக்கு மிஞ்சிய கடவுள் ஒருவரும் இல்லை என்று நினைத்தேன். "நான் துயிலும்போது உயிர்கள் யாவும் இறக்கும்; நான் எழும்போது உயிர்கள் யாவும் எழும். ஆதலால், நானே எல்லா உயிர்களுக்கும் தந்தை; எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருள். யாவற்றையும் உண்டாக்கிய எனக்கு ஒருவரும் நிகரில்லை" என்று கருதினேன். திருப்பாற்கடலில் துயில் கொண்டிருந்த திருமாலை, "துயில் விட்டெழும்" என்று தட்டி எழுப்பினேன். அவர் எழுந்தார். நான் அவரை அறிந்தும் செருக்கினால் அறியார்போல நோக்கி, "நீர் யார்" என்று கேட்டேன். அவர் "மைந்தனே! நான் உன் தந்தை. என்னை நீ அறியாயோ?" என்றார். நான் நகைத்து, "சேஷசயனத்தை விட்டு எழுந்தும் உமக்குத் தூக்கம் நீங்கவில்லை போலும். நீ நமக்கு முன்னே இதனைக் கூறியது முறையன்று. நீ எனக்குத் தந்தை என்ற செருக்கை விட்டுவிடுக. 'யாமே பரப்பிரமம்' என்று அறிக. உன்னுடைய உந்திக் கமலத்தினின்று வந்த உண்மையை உணராமல் நம்மை உன் மகனாக நினைத்தாய். விறகிலிருந்து தீ உண்டாகிறது. அதனால் தீயினுக்குத் தந்தை விறகு என்று கூறலாமா? நீ முன்னாளில் ஒரு தூணில் தோன்றினாய். அதனால் உன்னைக்காட்டிலும் அந்தத் தூண் உயர்ந்ததாகுமா? என் மகனாகிய பிருகுவின் சாபத்தால் நீ பத்துப் பிறப்பெடுத்தாய். உன் பத்துப் பிறப்புக்களுக்கும் உரிய உடல்களைப் படைத்து என் கை சிவந்திருக்கிறது. அதனைப் பார்ப்பாயாக!" என்றேன்.

நான் கூறியவற்றைக் கேட்ட திருமால் கோபம் கொண்டார்; கையைத் தட்டிச்சிரித்து, "பரமசிவன் உன்னுடைய உச்சித்தலையை நகத்தினால் கிள்ள, நீ பயந்து விழுந்தாய்;

கிள்ளப்பட்ட தலையை இன்னும் படைத்து வைத்துக்கொண்டா யில்லை. இப்படியிருக்கையில் நீ நம்மைப் படைப்பதென்பது நன்றாயிருக்கிறது! மைந்தனே! நானே உன் தந்தை, தாய், தெய்வம், குரு யாவும் ஆவேன். நீ நம் மாயையால் மயக்க மடைந்தாய். பொன்னில்லாமல் ஆபரணம் உண்டாகுமோ? நில மில்லாது வளங்கள் உண்டாகுமோ? அவைபோல என்னை யின்றி எந்தச் சராசரங்களும் உண்டாகுமோ? எவ்வுயிர்களை யும் ஆட்டுகின்றவன் யான். பதிப்பொருளும் யான். ஐம்புலன் களும் யான். அணுகுதற்குரியவனும் யான். நாரணனுமாகிய கடவுளும் யான். இந்திரனும் யான். வேதமும் யான். வேதப் பொருளும் யான். உருவமும் யான். அருவமும் யான். ஆதி யும் யான். சோதியும் யான்'' என்று பலவாறு கூறினார்.

உடனே யான் கோபம் கொண்டு "நாமிருவரும் போர் புரிவோம். நம்மில் யார் வெற்றி அடைகிறார்களோ, அவர்களே மேலவர். போருக்கு வருக'' என்றேன்.

**திருமாலும் பிரமனும் போர்புரிதல்**

உடனே திருமால் இயமப்படைக்கலங்களை என்மீது விடுத் தார். யான் அவ்வப்போது படைகளை உண்டாக்கி விடுத்து அவற்றை அழித்தேன். அவர் திருமால் படையைச் செலுத்தி னார். யான் அதனை என் படையால் தடுத்தேன். திருமால் சிவப்படைக்கலத்தை விடுத்தார். யான் என் சிவப்படைக் கலத்தை விடுத்தேன். சிவப்படைக்கலங்கள் இரண்டும் எங்கும் திரிந்து, தீயைச்சிந்தி உலாவின. தீயின் வெம்மையைத் தாங் காது உயிர்கள் நடுங்கின; தேவர்கள் ஏங்கினர்; விண்ணுலகமும் மண்ணுலகமும் எரிந்தன. தேவர்களில் பலர் சிவபெருமானை நோக்கித் திருக்கயிலாயத்திற்கு ஓடினார்கள். பல உயிர்த் தொகைகள் அழிந்தன.

**நாரதர் தோன்றி அறிவுரை கூறிச் செல்லுதல்**

இவ்வாறு நாங்களிருவரும் போர் செய்தபொழுது சிவ பெருமான் திருவருளால் என்னுடைய முகத்தில் நாரத முனிவன் தோன்றி, "நீவிர் இருவரும் 'நாம் முதற்கடவுள், நாம் முதற்

கடவுள்' என்று தர்க்கமிடுகின்றீர்போலும்! முழுமுதற் கடவுள் ஒருவரே அன்றிப் பலர் அல்லர். உங்களில் யார் முதல்வர்? இருவரும் முதல்வரல்லீர். நீங்கள் சிவப்படைக்கலத்தை விடுத்தீர்கள். ஆனால் அப்படையை அளித்த கடவுளை மறந்தீர்கள். நீங்கள் இன்னும் போரிட்டால் யாவருக்கும் முதல்வரும் முழுமுதற் கடவுளுமாகிய பரமசிவன் உங்களுக்கு நடுவில் சோதி வடிவமாய்த் தோன்றுவார். அதனைக் கண்டுகொள்ளுங்கள்" என்று கூறிப் போனார். நாங்கள் அவர் கூறியவற்றைக் கேளாது செருக்குற்றோம். ஆயிரம் ஆண்டுகள் வரையும் போரிட்டோம். அதனால் உலகங்களும் உயிர்களும் அழிந்தன. அவற்றைக் கண்ட சிவபெருமான் யாவற்றையும் காக்கத் திருவுளம் கொண்டார். அப்போது **மாசித்திங்கள் அமரபக்ஷ சதுர்த்தசி திதியில் நள்ளிரவில்** எங்கள் நடுவில் சிவபெருமான் ஒரு சோதி மலைபோலத் தோன்றியருளினார். நாங்கள் செலுத்திய சிவப் படைக்கலங்களை அம்மலை தன்னுள் அடக்கிக்கொண்டிருந்தது. அது பொறுத்தற்கரிய வெம்மையோடு கூடியதாக விளங்கியது. நாங்கள் போர் செய்தலை விட்டுவிட்டுத் தூரத்தில் சென்று சோதியைப் பார்த்துக்கொண்டு நின்றோம். அப்போது, "சிறுவர்காள்! உங்கள் வலிமையைச் சிவபெருமானே காண்பார். நீங்கள் இந்தச் சோதிமலையின் அடியையும், முடியையும் காண்பீராக" என்று நாங்கள் கேட்கும்படி ஓர் அசரீரி எழுந்தது. நாங்கள் அதனைக் கேட்டுச் சினம் நீங்கினோமாயினும் ஆணவம் நீங்காதவராய், "அதன் அடியையும் முடியையும் தேடிக் காண்போம்" என்று சூளுரை கூறிக்கொண்டோம்; "அடி முடிகளில் ஏதேனும் ஒன்றை யார் முதலில் காண்கின்றாரோ, அவரே முழுமுதற் கடவுள் ஆவார்" என்று முடிவு செய்தோம். யான், "சோதிமலையின் முடியைக் காண்பேன்" என்றேன். திருமால், "அடியைக் காண்பேன்" என்றார்.

**ஆணவம் நீங்குதல்**

திருமால் ஒரு பெரிய உடலைக்கொண்ட பன்றியின் வடிவைக் கொண்டு, பூமியைத் தோண்டிக் கீழேயுள்ள உலகங்கள் எங்கும் தேடிச் சென்றார். அவர் பன்னெடுங்காலம் தேடியும் அடியைக் காணவில்லை. நான் ஒரு பெரிய அன்னப்பறவையின் வடிவை

எடுத்து விரைவில் மேலுள்ள உலகங்களில் தேடிச் சென்றேன். அச்சோதி என் கண்ணுக்கு அகப்படாமல் மேன்மேலும் போயிற்று. நிலத்தைத் தோண்டிய திருமாலுக்குப் பற்கள் நொந்தன ; உடல் ஒடுங்கியது ; வலிமை அழிந்தது ; நாவறண்டது ; சபதமும் அகந்தையும் அழிந்தன ; முடிவில் நல்லறி வுண்டாயிற்று. நல்லறிவடைந்ததும் திருமால் உளம் நொந்து, "எம் பெருமானே ! உம்முடைய திருவடிகளன்றி அடியேனுக்குப் புகலிடமில்லை. தேவரீரின் திருவடிகளைப் பணிந்து வழிபடுதற்கும் உடலில் வலிமையில்லை ; அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருள்க" என்று வேண்டினர் ; சிவபெருமானின் திருவருளால் வலிமை உண்டாகப் பெற்றுப் பன்றி வடிவத்தோடு நிலவுலகத்தை அடைந்து, அச்சோதி வடிவத்திற்கு அருகில் வந்து, அதனை வணங்கி நின்றார்.

நான் ஆயிரம் ஆண்டுகள் சோதியின் முடியைக் காண மேலுலகங்களை யெல்லாம் தாண்டிச் சென்றேன். சோதி, என் கண்ணுக்கு அகப்படாது மேன்மேலும் போய்க்கொண்டேயிருந்தது. என்றால் சோதியின் முடியைக் காண இயலவில்லை; மீண்டு வரவோ மனமில்லை. ஆதலால் "முடியின் முடிவைக் காணாது திரும்பேன்" என்று மேலும் சென்றேன். என் உள்ளம் வெதும்பியது ; உயிர் உலைந்தது ; வலிமை அழிந்தது ; கண்கள் சுழன்றன ; கால்கள் ஓய்ந்தன ; இறகுகள் நொந்தன. அறிவு தடுமாறியது. அப்போது அந்தச் சோதியினின்று சித்தர் போலப் பலர் தோன்றி வந்து, "இந்த அன்னப்பறவையா உயர்ந்தெழுகின்ற பரஞ்சோதியின் முடியைக் காண வல்லது? இஃது இன்னும் சிறிது போனால் இறந்துபோகும். திருமால் என்பவனும் நிலத்தைத் தோண்டிக்கொண்டு சென்று, சோதியின் அடியைக் காணாது, வலிமையிழந்து, 'சிவபெருமானே சரண்' என்று மீண்டு நிலவுலகத்திற்கு வந்து, சோதிமலையின் அருகில் நின்றான். முன்னே இப்பறவைக்கு மயக்கத்தைக் கொடுத்த கடவுளே அதனைத் தீர்த்து அருள்புரிந்தால் இஃது உய்யும்" என்று கூறிச் சென்றார்கள். அம்மொழிகளைக் கேட்டு என் ஆணவத்தை விடுத்தேன். சிவபெருமானுடைய புகழ்களைத் துதித்துக்கொண்டு திருமாலை அடைந்து, "நாமிருவரும் 'நாமே பரம்பொருள்' என்று பூசலிட்டுப் போரிட்டோம். நாரதர்

கூறிய நல்லுரைகளைக் கேட்டோமில்லை. சிவபெருமானே சோதிவடிவமாய் எழுந்தருளியதை அறியாமல் அவருடைய அடி முடிகளைத் தேடிச் சென்றோம். உயிர் நீங்கும் சமயத்து அவரைப் புகழ்ந்து அவர் திருவருளால் வல்லமை பெற்று இங்கு மீண்டு வந்தோம். இனி நாமிருவரும் சிவபெருமானைப் பூசனை செய்து அவருடைய வடிவைத் தரிசிப்போம்'' என்று கூறினேன். திருமாலும் அதனை ஏற்றுக்கொண்டார்.

### சிவ வழிபாடு

நாங்கள் இருவரும் சிவலிங்கத்தை முறைப்படி தாபித்துப் பூசித்து வழிபட்டோம். அப்போது சிவபெருமான் உமாதேவி சமேதராய் அச்சோதிக்கு அணித்தாக நாங்கள் காணும் வண்ணம் தோன்றியருளினர்; நாங்கள் இருவரும் அவர் திருவடிகளை வணங்கினோம்; அவருடைய அருள் வெள்ளத்தில் ஆழ்ந்து, நல்லறிவு பெற்றோம்; அவரை நோக்கி, ''தேவரீருடைய இயல்புகளை மெய்யன்பினாலன்றி வேறு எவற்றாலும் அறிய முடியா. வேதங்களும் அவற்றை அறியா. நாங்கள், ''நாமே பரம்பொருள்'' என்று போரிட்டதைத் தவிர்த்து நல்லருள் புரிந்தீர். நாங்கள் சூத்திரப்பாவை; தேவரீர் ஆட்டுகின்ற வண்ணம் ஆடுகின்றோம். எங்கள் பிழைகளைப் பொறுத்தருள்க'' என்று வேண்டினோம். சிவபெருமான் எங்களை நோக்கி, ''உங்கள் குற்றங்களை நாம் திருவுள்ளம் கொள்ளோம். உங்கள் பூசனையை உவந்தோம். முன்னர் உங்களுக்குத் தந்த பதங்களைத் தந்தோம். உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேட்பீர்களாக'' என்று கூறியருளினர். நாங்கள் ''தேவரீரின் திருவடிகளிடத்துத் தலையாய அன்பு ஏற்படுமாறு அருள வேண்டும்'' என்று பிரார்த்திக்க, சிவபெருமான் அதனை அங்ஙனமே அருளி விரைவில் சோதியிலே மறைந்தருளினர்.

### அருணாசலம் (திருவண்ணாமலை)

சிவபெருமான் மறைந்ததும், நாங்கள் சோதியை வணங்கி நின்றோம். அப்போது உயர்ந்து நின்ற சோதி சுருங்கிச் சுருங்கி வந்து ஒரு மலையாகியது. அந்தச் **சிவலிங்க வடிவாகிய மலையை** நாங்கள் மும்முறை வலம் வந்து வணங்கித் துதித்து எங்கள்

பதங்களை அடைந்தோம்; அதன் பிறகு, சிவபெருமானை மறந்திலோம்; பெரிதும் வழிபடுகின்றோம். நாங்கள் இருவரும் தேடிய அம்மலை **அருணாசலம்** (அருணம்-அக்கினி; அசலம்-மலை) என்னும் திருப்பெயரோடு விளங்கி வருகிறது. சோதி தோன்றிய இரவே **சிவராத்திரி** ஆகியது. அந்நாளில் சிவபெருமானைப் பலர் பூசித்து வழிபட்டு அருள் பெற்றார்கள். சிவபெருமானின் அருளைப் பெற்றால் அவர் இயல்பை அறியும் ஞானத்தைப் பெற இயலும். மெய்யறிவைப் பெருதொழிந்தால் பல நூல்களைப் படித்தும், மறைகளை ஆராய்ந்தும் பயனில்லை. இருவினையொப்பு மலபரிபாகம் பெற்ற சத்தினிபாதர்களுக்கே மெய்யறிவு கிட்டும். அவரே பரிபக்குவராவர். "தக்கனே! உனக்கு இப்பொழுது எம்பெருமானுடைய இயல்பை, அறியத்தக்க மெய்யறிவு கிட்டியது. அந்தச் சிவபெருமானே நமக்குத் தாயும், தந்தையும், குருவும், கடவுளும், தவமும், செல்வமும் ஆவர். ஆதலால், அவரையே அடைவாயாக" என்று நான்முகன் தக்கனுக்கு உபதேசித்தான்.

திருவிருத்தம்-99
ஆகத் திருவிருத்தம்-1,661

——oo——

## 22. தக்கன் சிவபூசை செய் படலம்

**தக்கன் காசியில் சிவபூசை செய்தல்**

நான்முகன் கூறியவற்றைக் கேட்ட தக்கன், மெய்யறிவு வரப்பெற்று, "நீர் கூறிய வண்ணமே சிவவழிபாடு செய்வேன்" என்று கூறினான்; நான்முகனை வணங்கிக் **காசி நகரை** அடைந்தான்; கங்கைக் கரையிலே **மணிகர்ணிகைக்கு** அருகில் ஒரு கோயிலை அமைத்தான். அதில் சிவபெருமானின் திருவுருவமாகிய சிவலிங்கத்தைத் தாபித்துச் சிவாகம விதிப்படி ஆயிரம் ஆண்டுகள் பூசித்து வழிபட்டு வந்தான். தக்கனின் அன்பைக் கண்டு சிவபெருமான் தோன்றியருளினார். அவன் அவரைக் கண்டு வணங்கித் துதித்து, "எம்பெருமானே! அடியேன் அகந்தையால் தேவரீரை இகழ்ந்தேன்; அதனால் பல பாவங்கள் என்னை வந்தடைந்தன. அப்பாவங்களைப் போக்கி, அடியே

னுக்கு அன்பு பாலித்தருள வேண்டும்" என்று வேண்டினான். சிவபெருமான் அவனது பாவங்கள் எல்லாவற்றையும் தொலைத்து அருள்புரிந்தார்; அவனைத் தம்முடைய பூதகணங்களுக்குத் தலைவனாக்கி மறைந்தருளினார். தக்கன் தூய்மையுடையவனாயினான்.

**திருமால் முதலியோர் சிவபூசை செய்து பேறுபெற்றது**

தக்கன் கங்கைக்கரையில் சிவபூசை புரியப் போனபொழுது திருமால், நான்முகன், இந்திரன் முதலிய தேவர்களும், அரம்பையர்களும், வீரபத்திரக் கடவுளை வணங்கித் தங்கள் தங்கள் இடங்களுக்குச் சென்றார்கள்; அங்கங்கே சிவபெருமானைப் பூசித்து வழிபட்டு வணங்கி அவர் அருளைப் பெற்றார்கள்; தங்கள் தங்கள் உடல்களிலுள்ள ஊறுபாடுகள் யாவும் ஒழியப் பெற்றார்கள். தக்கனின் யாகத்தில் வந்திருந்து தானமேற்றுப் பூதர்களால் இறந்து, பின் உயிர்பெற்று எழுந்த அந்தணர்கள் யாவரும் தத்தம் இடங்களுக்குச் சென்றார்கள்.

இவ்வாறு தக்கனுடைய வரலாற்றை **வியாழபகவான்** கூறச் **சயந்தன்** கேட்டு மகிழ்ந்தான்; ஆறுமுகக் கடவுளால் குடியேற்றப்பட்ட விண்ணுலகத்தில் கவலையின்றி வாழ்ந்து வந்தான்.

திருவிருத்தம்-12

ஆகத் திருவிருத்தம்-1,673

——oo——

## 23. கந்த விரதப் படலம்

**வெள்ளிக்கிழமை விரதம்**

முசுகுந்தச் சக்கரவர்த்தி ஒரு நாள் வசிட்ட முனிவரை அடைந்து, அவர் பாதங்களை வணங்கித் துதித்து, "ஆறுமுகக் கடவுளுக்குரிய விரதங்களை எனக்குக் கூறும்" என்று கேட்டார். உடனே அவர், "ஏழு கிழமைகளுக்குள்ளே **வெள்ளிக்கிழமை** முருகக் கடவுளுக்குரிய விரத நாளாகும். அவ்விரதம் இருப்போர்கள் உள்ளத்தில் எண்ணியவைகளை எண்ணியவாறு அடைவார்கள்.

எள்ளருஞ் சிறப்பின் மிக்க எழுவகை வாரந் தன்னுள்
வெள்ளிநாள் விரதந் தானே விண்ணவர் உலகங் காத்த
வள்ளல்தன் விரத மாகும் மற்றது புரிந்த மேலோர்
உள்ளமேல் நினைந்த வெல்லாம் ஒல்லையின் முடியும் அன்றே.

பகீரதன் என்னும் ஒரு பேரரசன் இருந்தான். அவன் பூவுலக முழுவதையும் ஆண்டு வந்தான். அவன் அரசாட்சியைக் கோரன் என்னும் ஓர் அரக்கன் கவர்ந்துகொண்டான். பகீரதன் சுக்கிராசாரியரை அடைந்து தன் குறையைக் கூறினன். அவர் பகீரதனைப் பார்த்து, "நீ ஆறுமுகக் கடவுள் மன மகிழுமாறு **மூன்றாண்டுகள் வெள்ளிக்கிழமை விரத**மிருந்து வருவாயாகில் உனக்குத் துன்பமளித்த கோரன் இறப்பான்; நீயே உலக முழுவதையும் ஆளுவாய்" என்றார். பகீரதன் நன்றென்று கேட்டு, வெள்ளிக்கிழமை ஊண் உறக்கம் முதலியனவற்றைத் தவிர்த்து, அதற்கு முதல் நாளும் மறு நாளும் பகலில் ஒரு வேளை மட்டும் உண்டு, மூன்றாண்டுகள் முறைப்படி விரதமிருந்தான். ஆறுமுகக் கடவுளின் வேற்படை வந்து கோரன் உயிரைக் கவர்ந்து சென்றது. பகீரதன் தன் அரசுரிமையைப் பெற்றான்.

**கார்த்திகை விரதம்**

நாரதர் ஏழு முனிவர்களுக்குள் சிறந்த முனிவராகத் திகழ விரும்பினர்; தம் எண்ணம் நிறைவேற விநாயகக் கடவுளை வணங்கி, வழிபட்டார். விநாயகக் கடவுள் நாரதரை நோக்கி, "முனிவரே! நீ நமது தம்பியாகிய சுப்பிரமணியனை வழிபட்டுப் **பன்னிரண்டாண்டுகள் கார்த்திகை விரதம்** இருந்து வருவாயாகில் நீ எண்ணியது கைகூடும்" என்று அருளிச் செய்தார். நாரத முனிவர், "அதனை அனுட்டிப்பேன்" என்று நிலவுலகத்தை வந்தடைந்தார்; பரணி நட்சத்திரத்திலே நண்பகலில் மட்டும் ஒருபொழுது உண்டு, கார்த்திகை நட்சத்திரத்தன்று விடியற்காலையில் நீராடி வெண்மையான ஆடையணிந்து நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு, ஐம்புலன்களை அடக்கி, ஆசாரியனைத் தியானித்து ஆறுமுகக் கடவுளைப் பூசித்து வழிபட்டு அவருடைய புராணத்தைப் படித்தார்; தண்ணீர் மட்டும் சிறிது உட்கொண்டு, பெண்ணாசையை விடுத்துத் தருப்ப சயனத்தில் படுத்து அன்றிரவு முழுவதும் முருகப்பிரானை எண்ணிய

வண்ணமாய் நித்திரை இன்றி இருந்தார் ; மறுநாட் காலையில் உரோகிணி நட்சத்திரத்திலே நீராடி ஆறுமுகக் கடவுளை வழிபட்டு முனிவர்களோடு பாரணை செய்த பகற்பொழுதில் உறங்கினால் காரணமின்றி நூறு அந்தணர்களைக் கொன்ற பாவம் உண்டாகும் ஆதலால், அன்று பகல் முழுவதும் உறங்காமல் இருந்தார். இவ்வாறு பன்னிரண்டாண்டுகள் நாரத முனிவர் கார்த்திகை விரதமிருந்து ஏழு முனிவர்களில் மேலான பதவியைப் பெற்றார்.

கார்த்திகை விரதத்தைக் கடைப்பிடித்த அந்தணன் ஒருவன் முதல் மனுவாகி உலக முழுவதையும் ஆண்டான். வேறோர் அந்தணன் கார்த்திகை விரதமிருந்து நினைத்தவற்றையெல்லாம் பெற்றான் ; இறுதியில் **திரிசங்கு மன்னனும்** ஆனான். முன்னாளில் ஓர் அரசனும், வேடனும் கார்த்திகை விரதத்தைக் கடைப்பிடித்து முதல் வள்ளல்களாகிய **அந்திமான் சந்திமான்** என்னும் பெயர்களைப் பெற்றுப் பூவுலகத்தை ஆண்டார்கள் என்பர். இங்ஙனம் பலபேர் கார்த்திகை விரதத்தை அநுட்டித்து மேன்மை பெற்றார்கள்.

### சஷ்டி விரதம்

ஆறுமுகக் கடவுளுக்குரிய ஒப்பில்லாத விரதம் **சஷ்டி** விரதமாகும். ஐப்பசித் திங்களில் சுக்கிலபக்ஷத்தில் பிரதமை முதலாக ஆறு நாட்களும் காலையில் நீராடி முறைப்படி முருகக் கடவுளை உருவம், கலசம், அக்கினி என்னும் மூன்றினும் விதிப்படி இரவில்பூசை செய்து, மோதகம் படைத்து, வழிபட்டு அவர் புராணத்தைப் படித்துச் சிறிது நீர் மட்டும் அருந்தி, ஏழாம் நாளாகிய சப்தமி திதியில் முருகக் கடவுளுக்கு விசேடபூசை செய்து வழிபட்டுப் பாரணம் செய்து வழிபடுவோர் சிறந்த நன்மைகளை அடைவர். இவ்விரதத்தைக் கடைப்பிடித்த தேவர்களும் முனிவர்களும் அவுணர்கள் கவர்ந்த தங்கள் பதங்களை மீண்டும் பெற்றார்கள்" என்று கூறினார்.

### முசுகுந்தச் சக்கரவர்த்தி விரதமிருத்தல்

இவ்வாறு முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு வசிஷ்டமுனிவர் முருகக் கடவுளுக்குரிய விரதங்களைப்பற்றிக் கூறினார். அதனைக்

கேட்ட முசுகுந்தச் சக்கரவர்த்தி அவற்றில் மிகவும் ஆசை கொண்டு, "ஐயனே, இவ்விரதங்களை யானும் அநுட்டிப்பேன்" என்று கூறினன்; அன்று முதல் முருகக் கடவுளைத் தியானித்து அளவில்லாத காலம் விரதங்களை அநுட்டித்து வந்தான். முருகக் கடவுள் மயில்வாகனத்தின்மீது, வீரவாகுதேவர், இலக்கத்தெண்மர், பூதகணங்கள் முதலியோர் சூழத் தோன்றியருளினர். முசுகுந்தன் முருகப்பெருமானின் திருவடிகளை வணங்கித் துதித்தான். முருகக்கடவுள் அவனை நோக்கி, "அரசனே! நீ வேண்டும் வரம் யாது? சொல்வாய்" என்று வினவினர். முசுகுந்தன், "எம்பெருமானே! உலகமுழுவதையும் அடியேன் அரசாளும் வண்ணம் வீரவாகு முதலாகிய வீரர்கள் யாவரையும் துணைவர்களாகத் தந்தருளும்" என்று வேண்டினன். முருகக் கடவுள் அவனுக்கு அவ்வாறே அருள்புரிந்தார். வீரவாகு முதலிய சேனைத்தலைவர்களை நோக்கி, "தவத்திற் சிறந்த முசுகுந்தச் சக்கரவர்த்தி உங்களைக் காட்டிலும் நம்மிடத்து மிகுந்த அன்புடையவன். அவன் பூவுலக முழுவதையும் அரசு செய்வதற்கு நீவிர் ஏற்ற துணைவர்களாகக் கடவீர்" என்று பணித்தார். வீரர்கள் யாவரும் அதனைக் கேட்டு, "எம்பெருமானே! சூரன் குலத்தை வதைத்த நாங்கள் சூரியகுலத்து மானிடனுக்குப் பணி புரியோம்" என்று மறுத்துக் கூறினர்கள். ஆறுமுகக் கடவுள் அவர்களை நோக்கி, "நீவிர் நம் கட்டளையை மறுத்தீர்களாதலால் மானிடவடிவமெடுத்து, முசுகுந்தனின் சேனைகளாய்ப் பலகாலம் இருந்து, பின்பு தவம் செய்து, நம்மை அடைவீர்களாக" என்று கட்டளையிட்டார். வீரவாகுதேவர் முதலாயினோர் மானிட வடிவம் தாங்கி, முன்னை வலிமை நீங்கி நடுநடுங்கி, "தேவரீர் எங்கள் பிழையைப் பொறுத்தருள்க" என்று அவர் திருவடிகளில் வீழ்ந்து அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு முசுகுந்தச் சக்கரவர்த்திக்குச் சுற்றத்தாராக அடைந்தார்கள். பிறகு முருகக்கடவுளும் தம் பூதப்படைகளோடு மறைந்தருளினர்.

**முசுகுந்தச் சக்கரவர்த்தி ஆட்சிபுரிதல்**

முசுகுந்தச் சக்கரவர்த்தி மகிழ்ச்சியோடு கருவூர் என்னும் நகரத்தில் அரசுபுரிந்துவந்தான்; அந்நகரில் அனேக மாடவீதிகளை உண்டாக்கி அவற்றில் வீரவாகு முதலிய வீரர்களை

இருக்கச் செய்தான்; அவர்களுக்கு வளங்கள் நிறைந்த நாடுகளை யும், நால்வகைச் சேனைகளையும், கொடி, குடை முதலாகிய வரிசைகளையும் அளித்து, அவர்களைச் சேனைத்தலைவர்களாக்கி னன். அப்போது அரம்பையர்கள் பூவுலக அரசர்கள் மாட்டு வந்து தோன்றி வளர்ந்தார்கள். அவர்களை வீரவாகுதேவருக் கும், பிறருக்கும் திருமணம் செய்வித்தான். **புட்பகந்தி** என் னும் கன்னிகையை வீரவாகுதேவர் மணந்து **சித்திரவல்லி** என் னும் பெண்ணைப் பெற்று, அவளை முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு மணம் செய்துகொடுத்தார். பின்னும் வீரவாகுதேவர் **அனகன், சனகன்** என்றும் இருபுதல்வர்களையும் பெற்றார். மற்றைய வீரர்களும் இல்லறத்தில் ஒழுகிப் பல புத்திரர்களையும் புத்திரிகளையும் பெற்று மனுவம்சத்தில் கலந்திருந்தார்கள். அப்போது முசுகுந்தனுடைய மனைவியாகிய சித்திரவல்லி ஒரு கிளிப்பிள்ளையை வளர்க்க, அதனை இயமனுடைய மனைவி விரும்புதலும், அவனுடைய தூதுவர்கள் வந்து அக்கிளியைப் பிடித்துக்கொண்டு போய் இயமனுடைய மனைவியிடம் கொடுத் தார்கள். சித்திரவல்லி கிளியைக் காணாது வருந்தினாள். முசுகுந் தன், இயமனின் மனைவிகையில் கிளி இருப்பதை உணர்ந்து வீர வாகு முதலியோரை அழைத்துக் கிளியைக்கொண்டு வரும்படி அனுப்பினான். அவர்கள் சேனையோடு இயமபுரம் அடைந்து, இய மனின் வலிமையை அழித்துக் கிளியை மீட்டு வந்து சித்திர வல்லி மகிழுமாறு கொடுத்து, முசுகுந்தனுக்கு வெற்றியை அளித் தார்கள். சித்திரவல்லி கருவுற்ற காலத்துக் காய் கனிகளை விரும் பிக் கேட்க, முசுகுந்தன் அவற்றைக் கொண்டு வருமாறு மலை நாட்டிற்குத் தன் ஏவலர்களை அனுப்பினான். மலைநாட்டினர் முசு குந்தனின் கட்டளைக்கு அஞ்சாது அவனை இகழ்ந்தனர். அதனை அறிந்த வீரவாகு முதலியோர் சென்று மலைநாட்டாரை வென்று, சித்திரவல்லி விரும்பிய காய் கனிகளைக் கொண்டு வந்து கொடுத் தார்கள்; பிறகு நிலவுலக மெங்குஞ் சென்று அரசர்களிடமெல் லாம் திறை வாங்கி, முசுகுந்தச்சக்கரவர்த்தியின ஆணை நிலை பெறுமாறு செய்தார்கள். சித்திரவல்லி **அக்கினி வர்மன்** என் னும் குமாரனைப் பெற்றெடுத்தாள். முசுகுந்தன் அதனைக் கண்டு மகிழ்ந்து அரசு புரிந்து கொண்டிருந்தான்.

**முசுகுந்தன் விண்ணுலகம் செல்லுதல்**

முசுகுந்தச் சக்கரவர்த்தி ஆட்சி புரியுங் காலத்தில் **வலன்** என்னும் அவுணன் படைகளுடன் விண்ணுலகத்தை அடைந்து முற்றுகையிட்டான். இந்திரன் சில நாள் அவனை எதிர்த்துப் போரிட்டும் அவனை வெல்ல முடியவில்லை. உடனே இந்திரன் ஒரு தூதுவனை அனுப்பி முசுகுந்தச் சக்கரவர்த்தியைத் தன்னிடம் அழைத்து வரும்படி அனுப்பினான். தூதுவன் நிலவுலகத்தை அடைந்து முசுகுந்தச் சக்கரவர்த்தியைக் கண்டு, இந்திரன் வேண்டுகோளைத் தெரிவித்தான். அப்போது முசுகுந்தன், வீரவாகு முதலிய வீரர்களோடு விண்ணுலகை அடைந்தான்; இந்திரனை வணங்கித் தேவசேனாபதியாற் தலைமையைத் தாங்கி, அவுணர் சேனைகளையெல்லாம் அழித்தான். இந்திரன் சில நாள் வலாசுரனோடு எதிர்த்துப் போரிட்டு அவனைத் தன் குலிசாயுதத்தினால் கொன்றான். வலனைக் கொன்றதனால் இந்திரன் '**வலாரி**' என்னும் பெயர் பெற்றான். இந்திரன் முசுகுந்தச் சக்கரவர்த்தியை அமராவதியிலுள்ள தன் கோயிலுக்குள் அழைத்துக்கொண்டு போய், "அரசர்க்கரசே! என் பகைவர்களை அழித்து என்னை விண்ணுலகத்திற்கு அரசனாக்கினாய்; வீரத்தையும், புகழையும் தந்து, எனக்கு உற்ற துணைவனுமானாய்" என்று பல உபசார மொழிகளைக் கூறினான். பிறகு இந்திரன் ஸ்நானம் செய்து நித்திய கருமானுஷ்டானங்களைப் புரிந்து திருமாலினால் பூசிக்கப்பெற்ற **தியாகேசப் பெருமானைப்** பூசித்து வழிபட்டான்.

**விண்ணுலகில் முசுகுந்தன் தியாகராசப்பெருமானைத் தரிசித்தல்**

சிவபெருமான் உமாதேவியாரும் சுப்பிரமணியக் கடவுளும் ஒரு பக்கத்தில் மகிழ்ச்சியுடன் பொருந்தத் திருக்கயிலாயத்தில் எழுந்தருளியுள்ளதைப் போன்று, இந்திரன் வழிபட்ட தியாகேசப்பெருமான் அங்கு விளங்குவதை முசுகுந்தன் கண்டு பேரானந்தங் கொண்டான்; உளமுருகத் தொழுது, கூத்தாடி உரை தடுமாறி, "முன்னர்த் திருக்கயிலாயத்தில் இந்த அருமைத் திருகோலத்தைக் கண்டு மகிழ்ந்தேன்; இம் மானிடப் பிறப்பினால் மயங்கி, அவரை இது வரையில் மறந்திருந்தேனே!" என்று வருந்திப் பின்வருமாறு புகழ்ந்து துதித்தான்.

ஏகனே போற்றி ! யார்க்கும் ஈசனே போற்றி ! அம்மை
பாகனே போற்றி ! மேலாம் பரஞ்சுடர் உருவே போற்றி !
மேகமார் களனே போற்றி ! விடைமிசை வருவாய் போற்றி !
மோகமார் தக்கன் வேள்வி முடித்திடு முதல்வா ! போற்றி !

அம்புயா சனன்மால் இன்னும் அளப்பருந் திறத்தாய் போற்றி !
நம்பனே போற்றி ! எங்கள் நாதனே போற்றி ! கோதில்
செம்பொனே மணியே போற்றி! சிவபெரு மானே போற்றி !
எம்பிரான் போற்றி! முக்கண் இறைவனே போற்றி! போற்றி!

பொங்கரா அணிக ளாகப் புனை தரு புனிதா போற்றி !
அங்க ராகத்திற் பூதி அணிந்திடும் ஆதி போற்றி !
வெங்கரா சலத்தின் வன்றோல் வியன்புயம் போர்த்தாய் போற்றி!
சங்கரா பரமா போற்றி! தாணுவே போற்றி! போற்றி!

முன்னெனும் பொருளுக் கெல்லாம் முன்னவா போற்றி! முப்பால்
மன்னுயிர்க் குயிரே போற்றி! மறைகளின் முடிவே போற்றி!
என்னைமுன் வலிந்தாட் கொண்டே இருநிலம் விடுத்தாய் போற்றி!
நின்னுருக் காட்டி யென்னை நினைப்பித்த நித்தா போற்றி!

எவ்வெவர் தம்மை யேனும் யாவரே எனினும் போற்றின்
அவ்வவரிடமாக் கொண்டே அவர்க்கருள் தருவாய் போற்றி!
மெய்வரு தெளிவில் உன்னை வெளிப்பட உணர்ந்து ளோர்க்குத்
தெய்வத போக முத்தி சிறப்பொடு தருவாய் போற்றி!

அம்புய மலர்மேல் அண்ணல் அச்சுத னுதி வானோர்
தம்பதம் எமக்கு நல்குந் தற்பரா என்றே யாரும்
நம்புறு பொருட்டால் வேதம் நவின்றிட அடைந்தோர்க் கெல்லாம்
உம்பர்தம் பதமும் ஈயும் உலகுடை முதல்வா போற்றி!

உறைதரும் அமரர் யாரும் உழையராய்ச் சூழ நாப்பண்
மறைபயில் பெரியோ ருற்று வழிபட இருந்தாய் போற்றி !
அறுவகை ஐந்தும் ஆறு மாகிய வரைப்பின் மேலாம்
இறைவனே போற்றி! போற்றி! என் பிழை பொறுத்தி என்றான்.

இவ்வாறு முசுகுந்தன் துதிக்கக் கண்டு மகிழ்ந்த எம்பெருமான் கருணைபுரிந்து அவனை நோக்கி,"திருமால் நம்மை அளவில்லாத காலம் அன்போடு வழிபட்டு இந்திரனிடத்தில் வைத்தான். முசுகுந்தனே ! நீ நம்மை நிலவுலகத்திற்குக் கொண்டுபோய்

வைத்து வழிபடுவாயாக'' என்று இந்திரன் கேளாவண்ணம் கூறியருளினர். முசுகுந்தன் அதனைக் கேட்டு, "சுவாமீ! உமது திருவுள்ளம் இதுவாயின் அடியேன் உய்ந்தேன்'' என்று ஆச்சரிய மடைந்தான். இந்திரன் தன் சிவார்ச்சனை முதலியவற்றை முடித்துக்கொண்டு, பின்னர் முசுகுந்தனுக்கு விருந்து செய்வித்து, ஆடையாபரணங்களையும், மணிகளையும், முத்துக்களையும், தெய்வப் படைக்கலங்களையும் அளித்து, "இன்னும் உனக்குவேண்டியதைக் கேள்'' என்று கூறினன். முசுகுந்தன், "இந்திரனே! நீ பூசை செய்கின்ற கடவுளை யான் பூவுலகத்திற்குக் கொண்டுபோய் வைத்துப் பூசிக்க எனக்கு அப்பெருமானை அன்போடு கொடுப்பாயாக'' என்றான்.

**இந்திரன், தியாகராஜப்பெருமானின் வரலாறு கூறல்**

இந்திரன் முசுகுந்தனைப் பார்த்து, "ஒரு காலத்தில் திருமால் மகப்பேறின்மையால் சிவபெருமானையே தஞ்சமென்று ஓர் ஊழிக்காலம் வரை தவம் செய்தார். சிவபெருமான் உமாதேவியாரோடு தோன்றியருளினர். திருமால் அவரை வணங்கி வழிபட்டார். சிவபெருமான் மகிழ்ந்து, 'நீ வேண்டிய வரம் யாது?' என்று வினவினர். திருமால், "எம்பெருமானே! அடியேனுக்குக் குறைவற்ற ஆயுளையும், காத்தல் தொழிலையும், சீதேவியோடிருக்கும் வளத்தையும் தந்தருளினீர். ஆனல் எனக்கு மகப்பேறு மாத்திரம் இல்லை. அதனைத் தந்தருள வேண்டும்'' என்று வேண்டினர். சிவபெருமான் திருப்புன்முறுவல் பூத்து, "உனக்கு மகப்பேறு அருளினேம்'' என்று அருள்புரிந்தார். அப்போது திருமால், உமாதேவியாரை வணங்கி வழிபடவில்லை. உமாதேவியார் திருமாலை நோக்கி, "நீ என்னை அவமதித்தாய்; அதனால் நீ எம்பெருமானிடத்தும் அன்புகொண்டவன் ஆகமாட்டாய்; நீ பெறும் மகனும் எம்பெருமான் கோபத்தால் விரைவில் அழிக'' என்று சபித்தார்; பிறகு உமாதேவியார் இறைவனை நோக்கி, "உயிர்க்குயிராகிய கடவுளே! மீண்டு செல்வோம்; வருக'' என்று கூறி, அழைத்துக்கொண்டு போயினர்.

திருமால் அதனைக்கேட்டு மிகவும் வருந்தி, சிவபெருமான், உமாதேவியார், குமரக்கடவுள் ஆகிய மூவரையும் ஒருங்கே கொண்ட **சோமாஸ்கந்தமூர்த்தியின்** திருவுருவத்தை அமைத்து

முறைப்படி வழிபட்டார்; பிறகு பல்லாயிரங்கோடி ஆண்டுகள் கடுந்தவம் இயற்றினுர். அத்தவத்தைக் கண்டு மகிழ்ந்த சிவ பெருமான் உமாதேவியாரோடு தோன்றியருளினுர். திருமால் ஓடிச்சென்று அம்மையாரின் திருவடிகளை முதலில் வீழ்ந்து வணங்கிப் பிறகு எம்பெருமானை வணங்கினுர்; இருவரையும் வேதங்களைக் கூறித் துதித்தார். சிவபெருமான் அவருக்கு நல் லருள்புரியத் திருவுளம் கொண்டு, "உமையே! நீ இவனுக்கு அருள் புரிவாயாக" என்ருர். தேவியார் திருமாலை நோக்கி, "எம்பெருமான் கூறிய வரமும், நான் கூறிய சாபமும் பிழைபட மாட்டா. உனக்குத் தோன்றும் மகன் எம்பெருமானின் நெற் றிக்கண்ணின் தீயினுல் அழிவான்; பின்னர் உயிர் பெற்றெழு வான்" என்று கூறியருளினுர். சிவபெருமானும், "அவ்வாறே ஆகுக" என்று கூறி உமாதேவியாரோடு மறைந்தருளினுர். திருமால் தம் இருப்பிடத்தை அடைந்தார்.

**திருமால் மகப்பேறு அடைதல்**

திருமால் மனத்தினின்று அழகே உருவான **மன்மதன்** தோன்றினுன். அவன், ஆடவர்களின்மீதும் பெண்களின்மீதும் தன் கரும்பு வில்லால் மலர்க்கணைகளைப் பொழிந்து உலாவினுன். ஒருநாள் அவன் சிவபெருமான்மீது, மலர்க்கணையை எய்து, அவரது நெற்றிக்கண்ணுல் பொடிபட்டான்; பின்னர் அவர் அருளால் உயிர்பெற்ருன். திருமால், முன்பு தாம் பூசித்து அன் போடு வழிபட்ட சோமாஸ்கந்தமூர்த்தியைத் தம்முடைய மார் பில் வைத்துக்கொண்டு, பாற்கடலிலே பற்பல காலம் பள்ளி கொண்டிருந்தார்.

**இந்திரன் சோமாஸ்கந்த மூர்த்தியைப் பெறுதல்**

அக்காலத்தில் **வாற்கலி** என்னும் அவுணன் என்னையும் தேவர்களையும் தோற்கடித்தான். நான் திருமாலிடம் சென் றேன். அப்போது திருமால், திருப்பாற்கடலில், தாம் வழிபட்ட சோமாஸ்கந்தமூர்த்தியைத் தம் மார்பில் வைத்தவண்ணம் துயில் கொண்டிருந்தார். நான் அவரை நோக்கி, என்னைக் காத்தருளும்படி வேண்டினேன். உடனே திருமால், "என் மார்பிலிருக்கும் சோமாஸ்கந்தமூர்த்தியை வழிபட்டு உன் தீவினை

யைப் போக்கிக்கொள்க" என்று அம்மூர்த்தியைத் தம் மார்பினின்றும் எடுத்து என் கரத்தில் அளித்தார். நான் அம்மூர்த்தியை என் தலைமேல் அன்போடு வைத்துத் தாங்கினேன். அதன்பின் திருமால், பாற்கடலை விட்டு நீங்கிச் சிவபெருமான் ஆனந்தநடனம் புரியும் தில்லையம்பதியிலுள்ள கனகசபையை அடைந்து, எம்பெருமான் திருமுன்னே வீழ்ந்திறைஞ்சி மெய்ம் மயிர்சிலிர்க்க ஆனந்தக்கண்ணீர் சொரியப் பேரின்பத்தில் நான்கு மாதம் திளைத்தார். அதன்பின்பு, வாற்கலியை எதிர்த்துப் போரிட்டுக் கொன்றார். பிறகு நான் விண்ணுலகத்திற்கு மீண்டு வந்து அன்றுமுதல் இன்றுவரையில் திருமால் அளித்த **சோமாஸ்கந்தமூர்த்தியை** வழிபட்டுவருகிறேன். அரசர்க் கரசே! இந்த மூர்த்தியை உனக்குத் தருவதில் திருமாலுக்கும் விருப்பமிருந்தால் நான் தருகிறேன்" என்று கூறினான்.

முசுகுந்தன் திருப்பாற் கடலை அடைந்து, திருமாலை வணங்கி நின்று சோமாஸ் கந்தமூர்த்தியைத் தனக்குத் தரும்படி வேண்டுதலும், திருமால் முசுகுந்தனின் வேண்டுகோளுக் கிணங்கி, "நாம் இந்திரனிடத்தில் வைத்துள்ள தியாகராஜ மூர்த்தியைப் பூமியிற்கொண்டுபோய்ப் பூசித்து வழிபடுவாயாக" என்று கூறினார். முசுகுந்தன், நன்றென்று திருமாலிடம் விடை பெற்றுக்கொண்டு இந்திரனிடம் திரும்பி வந்து, திருமால் கூறியதைத் தெரிவித்துக் கேட்டான். இந்திரன், பசுவைப் பிரியும் கன்றுபோல் மனந்தளர்ந்து இரங்கிப் புலம்பி, மூர்த்தியைக் கொடுக்க மனமின்றிச் சோமாஸ்கந்த மூர்த்தியைப் போன்ற ஆறு மூர்த்திகளைத் தெய்வத் தச்சனைக்கொண்டு செய்வித்து, முசுகுந்தனிடம் ஒவ்வொன்றாகக் கொடுத்தான். முசுகுந்தச் சக்கரவர்த்தி அவற்றை வாங்கி, அம்மூர்த்திகள் தியாகராஜப் பெருமானைப்போல இருந்தும் தனக்கு ஒன்றும் சொல்லாதிருந்தமையால் வஞ்சனை என்று அறிந்து, "இவர் அவர் அன்று" என்று ஆறுதரமும் கூறினான். இந்திரன் கடைசியாகத் திருப்பாற் கடலில் திருமால் மார்பில் பொன்னூஞ்சலிலே ஆடிய சோமாஸ்கந்த மூர்த்தியைக் கொண்டு வந்து, "இவர் அவராமோ?" என்று உரைக்க, அப்போது சோமாஸ்கந்த மூர்த்தி, இந்திரன் அறியாவண்ணம் முசுகுந்தன் முகத்தை நோக்கி, "நாம் உன்பால் வந்தோம். இனி நம்மைப் பூவுலகத்திற்குக்

கொண்டுபோய் வழிபடுவாயாக" என்று அருள்செய்தார். முசுகுந்தன் பெருமகிழ்ச்சியடைந்து துதித்து வணங்கி, "அரசே! இவரே திருமாலின் வழிபாட்டை ஏற்றிருந்தவர்; இவரைத் தருக" என்று வாங்கினன். இந்திரன் முசுகுந்தனை நோக்கி, "இவரை முன்னர் யான் அளித்த அறுவரோடும் நிலவுலகத்திற்குக் கொண்டுபோய்த் திருவாரூர் முதலாகிய சிவத்தலங்களில் வைத்துப் பூசிப்பாய்" என்று கூறி விடைகொடுத்து அனுப்பினன்.

**முசுகுந்தன் பூவுலகு அடைதல்**

முசுகுந்தன் இந்திரனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு நிலவுலகை அடைந்தான். திருவாரூரிலே வன்மீகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் கமலாலயத்தில், திருமால் பூசித்த சோமாஸ்கந்த மூர்த்தியை* விதிப்படி முசுகுந்தன் தாபித்தான். மற்றை ஆறு சோமாஸ்கந்த மூர்த்திகளையும் **திருநாகைக்காரோணம், திருநள்ளாறு, திருக்காருயல், திருக்கோளரியூர்** (திருக்கோளிலி), **திருவான்மியூர்,** (திருவாய்மூர்) **திருமறைக்காடு** (வேதாரணியம்) என்னும் சிவத்தலங்களில் ஒரே நாளில் தாபித்து விதிப்படி வழிபாடு செய்வித்தான். பிறகு திருவாரூர்த் தியாகராஜப் பெருமானுக்குத் திருவிழா நடத்தக் கருதினன். அப்போது இந்திரன், தான் பூசித்த கடவுளை முசுகுந்தனுக்குக் கொடுத்த பாவத்தால் விண்ணுலக அரசை இழந்து, புலையன் வடிவுதாங்கி நிலவுலகத்தை அடைந்து, "தியாகராஜப் பெருமானின் திருவிழாவைத் தரிசித்தற்கு யாவரும் வருக" என்று யானைமீதேறித் திருவாரூர் வீதிகளிலெல்லாம் முரசு அறைந்து சாற்றினன். முசுகுந்தன் தியாகராஜப் பெருமானுக்குச் சிறப்பாகத் திருவிழா நடத்தினன்; மற்றைச் சிவத்தலங்களில் தாபித்த தியாகேச மூர்த்திகளுக்கும்** திருவிழாவைச் செய்

* இவர், 'வீதிவிடங்கர்' எனவும் பெயர் பெறுவர்.

** திருநாகைக்காரோணத்தில், 'அழகவிடங்கர்' எனவும், திருநள்ளாற்றில் 'நகரவிடங்கர்' எனவும், திருக்காருயலில், 'ஆதிவிடங்கர்' எனவும், திருக்கோளிலியில், 'அவனிவிடங்கர்' எனவும், திருவான்மியூரில், 'நீலவிடங்கர்' எனவும், திருமறைக்காட்டில், 'புவனிவிடங்கர்' எனவும் தியாகராஜப் பெருமான் பெயர் பெறுவர். (டங்கம்-உளி, வி-நீக்கம். விடங்கர்-உளியினல் செய்யப்படாதவர்; சுயம்பு.)

வித்து வீரவாகு முதலிய வீரர்களோடும் நிலவுலகத்தைச் சிறப்புற அரசுபுரிந்து வந்தான். இந்திரன் பல்லாண்டுகள் தியாகராஜப் பெருமானின் திருவிழாவைக் கண்டு வழிபட்டான்; பிறகு தவம் செய்து புலியன் வடிவு நீங்கிப் பழைய தேவ வடிவு பெற்று விண்ணுலகை அடைந்து இழந்த செல்வங்களைப் பெற்று இருந்தான்.

முசுகுந்தன் கருவூரில் நெடுங்காலம் அரசுபுரிந்த பின், தன் மகனாகிய **அக்கினிவன்மனுக்கு** முடிசூட்டினான்; பிறகு தவம் செய்து திருக்கயிலாய மலையை அடைந்தான். வீரவாகுவும், இலக்கத் தெண்மர்களும் தங்கள் குமாரர்களுக்குத் தத்தம் வரிசைகளை வழங்கி, அக்கினிவன்மனுக்குத் துணையாக இருக்கச் செய்தனர்; பின்னர் அரும் தவம் புரிந்து மானிட வடிவம் நீங்கிக் கந்தகிரியை அடைந்து, முருகப்பெருமானின் திருவடிகளை வணங்கி வழிபட்டுக் கொண்டிருந்தார்கள்.

முருகக் கடவுளுக்குரிய விரதங்கள் இத்துணைப் பெருமைகள் வாய்க்கப் பெற்றனவாகும். ஆதலால், அவற்றைக் கடைப்பிடித்தவர்கள் யாவராயினும் விரும்பும் வரங்களை யெல்லாம் விரைவில் பெறுவார்கள். தேவர்களும் அவர்களை வந்து வணங்குவார்கள்.

திருவிருத்தம்-127

ஆகத் திருவிருத்தம்-1,800

——oo——

## 24. வள்ளியம்மை திருமணப் படலம்

### வள்ளியம்மை பிறப்பு

தொண்டை நாட்டிலே, **மேற்பாடி** என்னும் ஊருக்கு அருகில் **வள்ளிமலை** என்னும் பெயருடைய மலை ஒன்று உளது. அம்மலை, பல வளங்களைக் கொண்டு வானோங்கி நிற்கும் சிறப்புடையது. அம் மலையிலுள்ள ஒரு சிற்றூரில் **நம்பி** என்னும் பெயர் பூண்ட வேட்டுவத் தலைவன் வாழ்ந்து வந்தான். அவன் சில குமாரர்களைப் பெற்று மகட்பேறு இல்லாமையால் அதற்காக வருந்தித் தன் குலதெய்வத்தை வழிபட்டுக் கொண்டிருந்

தான். அப்போது வள்ளிமலைச்சாரலில் ஐம்புலன்களை ஒரு வழிப் படுத்திய **சிவமுனிவர்** என்னும் மேலோர் ஒருவர் சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்து கொண்டிருந்தார். அங்கு ஓர் அழகிய பெண்மான் முருகக் கடவுளின் திருவருளினால் வந்து உலாவியது. மானைச் சிவ முனிவர் கண்டதும் காம உணர்ச்சி பெற்றுக் கலங்கினார்; தெய்வப் புணர்ச்சிபோல அவருடைய இன்பப் பார்வையால் அம்மானிடத்து இன்பம் அனுபவித்து ஆசை நீங்கிப் பின்பு மெய்யுணர்வு வரப்பெற்றுத் தவஞ் செய்யச் சென்றார். அவருடைய பார்வையால் மான் சூல் கொண்டது. திருமாலின் மகளாகிய **சுந்தரவல்லி** அந்த மானின் வயிற்றிலுள்ள கருவில் புகுந்தாள். கருக்கொண்ட பிணைமான், எங்கும் உலாவித்திரிந்து, வள்ளிமலையில் வேட்டுவப் பெண்கள் வள்ளிக் கிழங்கு அகழ்ந்தெடுத்த குழி யொன்றில் சூலின் பாரத்தினால் தளர்ந்து வயிறு நொந்து மயங்கி, வாய்விட்டுக் கதறிக் கருவை ஈன்றது. அம்மான், தான் பெற்றது மானிடக் குழந்தையாய் இருத்தலைக் கண்டு அஞ்சி ஓடியது. மான் வயிற்றில் பிறந்த சுந்தரவல்லி, குண்டலம், தொடி, வளை முதலிய ஆபரணங்களை அணிந்து, மரவுரி தரித்துத் தன் பழைய உணர்வின்றி, அழுதவாறு தனித்துக் கிடந்தாள்.

அப்போது முருகப்பெருமானின் திருவருள் தூண்டுதலால் வேட்டுவ மன்னனாகிய நம்பி, தினைப்புனத்திற்குத் தன் மனைவியோடு பரிவாரங்கள் சூழச் சென்றான்; அங்கு அழுகை ஒலியைக் கேட்டு, ''இவ்வொலி யாது'' என்று ஆராய்ந்தான்; வள்ளிக் கிழங்குக் குழியிலிருந்த தூண்டா மணிவிளக்குப் போன்ற குழந்தையை எடுத்துத் தன் மனைவி கையில் கொடுத்து, மகட்பேறில்லாத மனக் கவலை நீங்கி மகிழ்ந்தான்; ஆடிப் பாடினான்; தோள்களைத் தட்டிக் கொண்டான்; சிரித்தான்; ஆனந்தப் பெருக்கில் மூழ்கினான். அவன் மனைவியாகிய கொடிச்சி, அக் குழந்தைக்குத் தன் தனங்களில் ஊறும் பாலை ஊட்டினாள். பிறகு குழந்தையை இல்லத்திற்கு எடுத்துச் சென்றனர். மகளைப் பெற்ற மகிழ்ச்சியால் நம்பி ராசன் தன் கிளைஞர்களுக்கு இன்னமுது அளித்தான்; பறை ஒலித்துக் குரவைக் கூத்தாட்டுவித்தான்; முருகக்கடவுளுக்கு விழாக் கொண்டாடினான். நம்பிராசனின் மனைவி, தன் மகளுக்குக் காப்பிட்டுப் பூந்தொட்டி

விலேற்றிச் சீராட்டிப் பாராட்டி மகிழ்ந்தாள். வள்ளிக்கிழங்குக் குழியில் அக்குழந்தை காணப்பட்டதால் பெரியோர்கள் அக் குழந்தைக்கு **வள்ளி** என்று பெயரிட்டார்கள். குழந்தை வள்ளி, தளர்நடை பயின்று சிற்றிலிழைத்துச் சிறுசோறு அட்டு முன்னை யுணர்வு சிறிதுமின்றி விளையாடித் தம் தாய் தந்தையர்களை மகிழ் வித்தாள். வள்ளியம்மைக்கு வயது பன்னிரண்டு ஆயிற்று.

**வள்ளியம்மையார் தினைப்புனம் காத்தல்**

தாய் தந்தையர், வள்ளியம்மையின் பருவ நிலையைக் கண்டு, வேட்டுவர் குலத்தின் வழக்கப்படி அவரைப் புனத்திலே தினைக் கொல்லையைக் காவல் புரிய வைத்தனர். முருகக் கடவுளுக்குத் தேவியாகின்ற வள்ளியம்மையை வேட்டுவர்கள் தினைக்கொல்லை யைக் காக்க வைத்தது, தூக்கணங் குரீஇ காட்டில் எளிதாகக் கிடைத்த தெய்வமணியைக் கொண்டுவந்து தன் கூட்டில் இரு ளோட்ட வைத்தது போலாகும்.

காட்டில் எளிதுற்ற கடவுள்மணி யைக்கொணர்ந்து
கூட்டில் இருளோட்டக் குருகுய்த்த வாறன்றோ?
தீட்டுசுடர் வேற்குமரன் தேவியாம் தெள்ளமுதைப்
பூட்டுசிலைக் கையார் புனங்காப்ப வைத்ததுவே.

வள்ளியம்மையார், தினைப்புனத்தில் எத்திசையையும் பார்க்கத்தக்க பரணில் இருந்து தட்டை முதலிய கருவிகளைக் கொண்டு கிளி முதலிய பறவைகள் அணுகாமல் ஓட்டியும், பன்றி, மான் முதலிய மிருகங்களுக்கு மணிக்கற்களைக் கவணில் வைத்து வீசியும், 'ஆலோலம்' தனித்தனியே கூவித் தினைப்புனங் காத்து வந்தார். அப்போது ஆறுமுகக் கடவுள் அம்மையா ருக்கு அருள்புரியத் திருவருள் கொண்டார். கந்த மலையிலிருந்து நீங்கித் தனியே **திருத்தணிகைமலை**யில் வந்து எழுந்தருளினார். அவ்வமயம் நாரத முனிவர், வள்ளிமலைக்கு வந்து, வள்ளிநாயகி யைப் பார்த்து வணங்கிவிட்டு, திருத்தணிகையை அடைந்தார்; ஆறுமுகப் பெருமானைக் கண்டு பன்முறை வணங்கி, "எம்பெரு மானே! வள்ளிமலையில் சிவமுனிவனுக்கு மான் வயிற்றில் பிறந்த பேரழகு மிக்க வள்ளி நாயகியார் தினைப்புனங் காத்துக் கொண்டிருக்கிறார். அவருடைய அழகுக்கு இலக்குமியின்

அழகையும் இணையாகக் கூற இயலாது. முற்பிறப்பில் அம்மையார், திருமாலின் திருமகளாய்த் தோன்றி உம்மை அடையும்படி தவம் புரிந்தார். ஆதலால், தேவரீர் வள்ளிமலைக்கு எழுந்தருளி அவருக்கு அருள் புரிவீராக'' என்று விண்ணப்பஞ் செய்தார்.

**முருகக்கடவுள் வேங்கை மரமாதல்**

ஆறுமுகக் கடவுள் நாரதர் கூறியதைக் கேட்டு மகிழ்ந்து, "முனிவனே! நீ புகன்றது நன்று, நன்று!'' என்று அவரை அனுப்பிவிட்டுக் காமநோய்க் கவலையுற்று, வள்ளிநாயகிக்கு அருள்புரியுமாறு தம் திருவுளத்திற்கொண்டு மானிட வடிவம் பூண்டார்; வீரக்கழல் அணிந்து, வில்லும் கணையும் ஏந்தி, வேட்டுவ வேடம் பூண்டு திருத்தணிகை மலையை நீங்கி வள்ளி மலையையடுத்த தினைப்புனத்தை அடைந்தார்; வள்ளிநாயகியைக் கண்டு, இன்ப மயக்கம் கொண்டவர்போல் நடிக்கலானார்; பிறகு பரணினுக்கு அருகிற் சென்று அம்மையாரை நோக்கி, "வாட்படை போன்ற கண்களையுடைய பெண்ணே! பூவுலகப் பெண்களுக்கெல்லாம் இறைவியாகிய உன்னை வேட்டுவர்கள் தனியே தினைப்புனத்தைக் காக்க வைத்துப் போயினரே! அவர்களுக்கு நான்முகன் பகுத்தறிவைச் சிறிதும் படைக்கவில்லை போலும். உன் பெயர் என்ன? உன் ஊர் யாது?

மொழியொன்று புகலா யாயின் முறுவலும் புரியா யாயின்
விழியொன்று நோக்கா யாயின் விரகமிக் குழல்வேன் உய்யும்
வழியொன்று காட்டா யாயின் மனமுஞ்சற் றுருகா யாயின்
பழியொன்று நின்பாற் சூழும் பராமுகம் தவிர்தி'' என்றான்.

இங்ஙனம் வள்ளியம்மைமாட்டு முருகக்கடவுள் அனலிற்பட்ட மெழுகுபோல உருகிப் பலவாறு இன்பவுரைகள் பகர்ந்தார். அப்போது வள்ளிநாயகியின் தந்தையாகிய நம்பிராசன், கொம்பு முதலிய இசைக் கருவிகள் ஒலிக்க, வேடுவர்களோடு அங்கு வந்தான். உடனே முருகக்கடவுள், அடி வேதங்களாகவும், நடு சிவாகமங்களாவும், கிளைகள் யாவும் பல கலைகளாகவும் தாம் ஒரு வேங்கைமர வடிவமுமாகி நின்றார். நம்பிராசன் வள்ளிநாயகிக்கு வள்ளிக்கிழங்கும், தேனும், தினைமாவும், ஆவின் பாலும் அளித்தான்; அங்கிருந்த வேங்கைமரத்தைக் கண்டான்.

அவனுக்கு அருகில் நின்ற வேடுவர்கள், அங்குப் புதிதாகத் தோன்றிய வேங்கை மரத்தின் நிலைமையை நோக்கி ஆச்சரியமுற்று, "இது முன்னுள்ளது அன்று; புதிதாய் உள்ளது; இதனால் தீங்கு வருதல் நிச்சயம்" என்று கூறி அதனை வெட்ட முயன்றார்கள். நம்பிராசன் தன் மகளை நோக்கி, "இப்புனத்தில் இம்மரம் புதிதாக உண்டாகிய காரணம் என்னை? சொல்லுதி" என்றான். வள்ளிநாயகியார் பயந்து, "தந்தையே! இதன் வரலாறு நான் அறியேன்; இது மாயம் போலும்" என்றார். நம்பிராசன், வள்ளிநாயகியை வாழ்த்திவிட்டு முருகக்கடவுளின் அருளால் அதனை வெட்டாது விடுத்துச் சென்றான்.

**முருகக்கடவுள் சிவனடியாராய்த் தோன்றுதல்**

வேட்டுவர்கள் திரும்பிச் சென்றதும், ஆறுமுகக்கடவுள் வேங்கை வடிவம் நீங்கிப் பழைய மானுட வடிவம் கொண்டார்; வள்ளிநாயகியை அடைந்து, "குறவர் மகளே! உன் கழல்களைப் புகலடைந்தேன்; உன்னைவிட்டு நீங்கிப் பிரிந்து வாழேன்; உன் கண்ணாகிய வலையில் அகப்பட்ட எனக்கு அருள்புரிவாயாக. நீ தினைப்புனத்தைக் காத்தல் உன் பெருமைக்கு ஏற்றதன்று. அரம்பையர்கள் வாழ்த்தி வணங்கும் செல்வங்களை உனக்கு அளிப்பேன். நீ என்னோடு வருக" என்றார். வள்ளிநாயகியார், அவர் மனக்கருத்தை அறிந்து நாணி, "நான் இழிகுலமாகிய வேட்டுவச் சாதிப் பெண். நீர் உலக முழுவதிற்கும் அருள் செய்யும் முதல்வர். கேவலம் தினைப்புனம் காக்கும் ஒரு பேதையை நீர் தழுவ விரும்புவது முறைமையன்று. புலி பசித்தால் புல்லைத் தின்னுமோ?" என்று பற்பலவற்றைக் கூறி நின்றார். அப்போது நம்பிராசன், இசைக் கருவிகளை முழக்கிக் கொண்டு வேட்டுவக் கூட்டத்தோடு அங்கே வந்தான். வள்ளிநாயகியார் மனம் நடுங்கிக் கந்தக்கடவுளாகிய வீரரை நோக்கி, "வேடுவர்கள் மிகவும் வலிமையுடைய தீயர்கள். இனி நீர் பிழைக்க நினைத்தால் இங்கு நில்லாது ஓடிப்போய் விடும்" என்றார். வள்ளிநாயகியார் தம்மிடத்துக்கொண்ட அன்பை முருகப்பெருமான் எண்ணி மகிழ்ந்து ஒரு முதிய சிவனடியார் வேடம் கொண்டார்; வேட்டுவ மன்னனுக்கு எதிரில் சென்று, விபூதியைக் கொடுத்து, "அரசனே! உனக்கு வெற்றி உண்டா

வதாகுக; வலிமை மிகுக; வளங்கள் பெருகுக'' என்று ஆசி கூறினர். நம்பிராசன் அவர் திருவடிகளை வணங்கி, "இந்த உயர்ந்த மலைக்கு வந்த முதியோரே! உமக்கு வேண்டியதைக் கூறும்'' என்றான். அவர், "அரசனே! என் மூப்பு ஒழியவும், மனமயக்கம் தீரவும் இங்கே நும் வரைக் குமரியாடுவதற்கு விரும்பி வந்தேன்'' என்றார். முதியவர் கூறியதைக் கேட்ட அரசன், "அங்ஙனமாயின் நீர் கூறிய தீர்த்தத்தில் நாடோறும் முழுகி, இங்குத் தனித்திருக்கும் நமது மகளுக்குத் துணையாக இருப்பீராக'' என்றான்; பிறகு வள்ளியம்மையாருக்கு வழக்கம் போல் தேன், தினைமா முதலிய உணவு வகைகளைக் கொடுத்து விட்டுத் தம் மகளுக்குத் துணையாக அத்தவசியை வைத்து வேடுவர்களோடு திரும்பிச் சென்றான்.

**கந்தக்கடவுள் கனிமொழி பேசுதல்**

அரசன் திரும்பிச் சென்றதும், முதியவர் வள்ளிநாயகியைப் பார்த்து, "பெண்ணே! நான் என்ன செய்வேன்? என்னைப் பசிநோய் வருத்துகின்றது'' என்று கூறினர்; வள்ளியம்மையார் தேனும் தினைமாவும் எடுத்தளிக்க வாங்கி உட்கொண்டு, "வெய்யிலும் மிகுந்தது; எனக்கு நீர் வேட்கை மிகுதியாக உள்ளது'' என்றார். வள்ளியம்மையார் அதனைக் கேட்டு, "எந்தாய்! இங்குள்ள மலைக்கு அப்பால் ஏழு மலைகள் கடந்தபின் ஒரு சுனை உளது; அங்கே போய்த் தண்ணீர் பருகி வாரும்'' என்றார். விருத்தர், "பெண்ணே! நான் புதியவன்; மலை வழியை அறியேன்; நீ வந்து காட்டுதி'' என்றார். அம்மையார், முதியவரைச் சுனைஒன்றுக்கு அழைத்துச்சென்று நீர்பருகச்செய்தார். தண்ணீர் அருந்திய பிறகு அம்மையாரை நோக்கி, "பெண்ணே! என் உடலை வருத்தும் பசியைப் போக்கினாய். நீர் வேட்கையையும் தணித்தாய். என் மோகத்தையும் தணிக்கவேண்டும்'' என்று முனிவர் இரங்கிக் குறையிரந்து வேண்டி மயங்கிக் கும்பிட்டு நின்றார். உடனே வள்ளியம்மையார், "பெரியவரே! தவவேடம் பூண்ட உமக்கு இச்செயல் தகாது. பெருந் தவத்தினராகிய நீர், வேட்டுவர் மகளாகிய என்னை வணங்கி நிற்றல் தகாது. நரைத்த முடியைப் பெற்றும் நல்லுணர்வு அற்றீர். எதற்காக மூத்தீர்! உம் செயலால் வேட்டுவக் குலத்திற்கே பழி ஏற்படும்''

என்று கூறிச் சுனையை விட்டுத் தினைப்புனத்தை நோக்கிச் சென்றார்.

**ஆனைமுகக் கடவுள் வருதல்**

வள்ளிநாயகியார் செல்லுதலை முருகக்கடவுள் கண்டு, 'இனி என் செய்வது' என்று இரங்கி, விநாயகக் கடவுளை எண்ணி, "இவண் முன்வந்து அருள்புரியும்" என்று வேண்டினார். அப்போது விநாயகர் யானை வடிவம் எடுத்துக் கடல்போல் முழங்கி, வள்ளிநாயகியார் முன் வந்தார். யானையைக் கண்டதும், வள்ளிநாயகியார் அச்சங்கொண்டு ஆறுமுகக் கடவுளை நெருங்கி, "நமது தலைவரே! யானையிடமிருந்து என்னைக் காப்பாற்றும்; நீர் சொல்லியபடி செய்வேன்" என்று அவருக்குப் பின்பக்கத்தில் சென்று தழுவிக்கொண்டார். முருகக் கடவுள் யானையாக வந்த விநாயகக் கடவுளை வழிபட்டு, "எம்பெருமானே! நீர் தோன்றியதால் என் மனமயக்கம் தீர்ந்தது; வள்ளிநாயகியும் என்னைச் சேர்ந்தாள். நீர் மீண்டெழுந்தருள்க" என்றார். விநாயகக்கடவுள் நன்றென்று திரும்பிச் சென்றார்.

**முருகக் கடவுள் காட்சி தருதல்**

ஆறுமுகக் கடவுள் வள்ளியம்மையாரை ஒரு பொழிலில் கூடி மகிழ்ந்தார்; கருணைகொண்டு பன்னிரண்டு திருப்புயங்களும், ஆறு திருமுகங்களும், வேற்படையும், குலிசமும் மற்றை ஆயுதங்களும் ஏந்தி மயில்வாகனத்தில் காட்சி அளித்தார். வள்ளியம்மையார், முருகக்கடவுளைத் தரிசித்து, வணங்கித் துதித்து, ஆச்சரியமுற்று நடுங்கி, "எம்பெருமானே! நீர் இத்திருவுருவத்தை முன்னமே காட்டியருளாது இதுகாறும் வீணே கழித்தீர். அடியேன்செய்த குற்றங்களைத் தவிர்த்து, ஆட்கொண்டருளவேண்டும்" என்று அன்பினோடு கூறினார். முருகக்கடவுள் அவரை நோக்கி, "பெண்ணே! நீ முற்பிறப்பில் திருமாலின் மகளாய்த் தோன்றி, எம்மை நோக்கித் தவம் செய்தாய்; அதனால் இப்பிறப்பில் நாம் உன்னை வந்தடைந்தோம்" என்று கூறினார். பின்பு வள்ளிநாயகியாரைத் தழுவி அருள்புரிந்து, "நீ தினைப்புனத்திற்கு முன்னே செல்லுக; யாமும் அங்கே வருவோம்" என்று கூறி அனுப்பினார். வள்ளிநாயகியார் முருகக்கடவுளின் பாதங்

களை வணங்கி விடைபெற்றுக்கொண்டு தினைப்புனத்திற் சென்றிருந்தார்.

**பாங்கியர் உதவியை முருகப்பெருமான் நாடுதல்**

அப்பொழுது வள்ளியம்மையாரை அயற்புனத்திலிருந்த பாங்கி வந்து வணங்கினாள்; அம்மையார், சூடிய பூக்களின் நாற்றம், அவயவங்களின் தோற்றம் முதலியவைகளின் மாற்றத்தைக்கண்டு ஐயங்கொண்டு, "தேவியே! தினைப்புனம் அழிய நீ எங்குச் சென்றாய்? சொல்லுக" என்றாள். வள்ளிநாயகியார் அதனைக் கேட்டு வெள்கி, "நான் வெய்யிலால் மெலிந்து, அருகிலுள்ள சுனையிலே நீராடச் சென்றேன்" என்றார். அதற்குப் பாங்கி, "கண் சிவக்கவும், வாய் வெளுக்கவும், உடல் வேர்க்கவும், தனங்கள் விம்மவும், கை வளையல்கள் கழலவும் செய்யும் சுனை எங்கு உள்ளது? அதனைச் சொல்லுவாய்" என்று வினவினாள். வள்ளியம்மையார் பாங்கியைப் பார்த்து, "உன்னையே உற்ற துணைவியாக நான் எண்ணி யிருந்தேன். நீ எனக்குக் குற்றம் கூறினாய். நீ மிகவும் கொடியவள்" என்றார். அச்சமயம் பார்த்து, முருகக்கடவுள் வேடர் வடிவம் பூண்டு வேட்டை விளையாட்டால் இளைத்தவர்போல அங்கு வந்தார்; அவர்களைப் பார்த்து, "பெண்களே! என் கணையால் அடிபட்டு இரத்தமும், பிளந்த வாயும், புண்பட்ட மேனியும் கொண்ட யானை யொன்று இங்கு வந்ததோ? சொல்லுதிர் சொல்லுதிர்" என்று வினவினார். காதலர் இருவரின் கருத்தைக் கண்களினின்றே கண்டுகொண்ட பாங்கி, "இத்தலைவர் இங்கு வேட்டைக்கு வருதலும், நம் தலைவி தினைப்புனம் காப்பதும் உண்மையாகுமோ?" என்று எண்ணினாள். அப்போது வேழம் வினவி வந்த வீரராகிய குமாரக்கடவுள், அவர்களைப் பார்த்து, "தோழியே! எனக்கு உற்ற உறவினர் நீங்களே. யான் நீங்கள் விரும்பிய பொருளெல்லாவற்றையும் தருவேன்; உங்கள் பணிகளெல்லாவற்றையும் தேடிச் செய்வேன்; நீவிர் என்மேல் வெறுப்பின்றி அருள்புரிவீராக" என்றார். உடனே பாங்கி, "எங்கள் சுற்றத்தாருக்குப் பழி உண்டாக்க இங்கு வந்தீரோ? பெரியோர் மறவர்களுடைய பெண்ணை ஆதரிப்பாரோ?" என்றாள். அதனைக்கேட்ட முருகக்கடவுள், "திருமால் தந்த அமுதமும்,

வேடுவர் செய்த மாதவப்பயனும், பெண்களுக்கு அரசியும், எனக்கு ஆசையைத் தந்து பேரருள் செய்த பேரழகியுமாகிய தலைவியைப் பேதை என்று கூறுவதே பேதமை'' என்று கூறினர். உடனே பாங்கி, "தலைவரே! இங்கே வேடர் வருவர்; அவர் மிகக்கொடியர். அவர் காண்பாராயின் எம்மைக் கொல்வர்; நீர் இங்கே நின்று ஆவதென்? போம்'' என்று கூறினள். முருகக்கடவுள், "தோழியே! நின் தலைவியோடு என்னைக் கூட்டிவையாவிடில் அவள் வடிவத்தைப் படத்தில் எழுதிப் பனைமடலேறி உங்கள் ஊர்த் தெருவில் ஓட்டுவேன்; இது நாளைக்கு யான் செய்வது'' என்றார். அதனைக் கேட்ட தோழி பயந்து, "நீர் மடலேறுதல் நீதியன்று. நீர் இக் குருக்கத்தி மரச்சோலையில் மறைந்திரும். நான் என் தலைவியை அங்கே அழைத்து வருவேன்'' ஏன்றாள். எம்பெருமான் மனம் மகிழ்ந்து சோலையில் மறைந்திருந்தார். பாங்கி, வள்ளிநாயகியாரிடம் தலைவனின் காதலைக் கூறித் தேற்றித் தினைப்புனத்தினின்றும் மெல்லச் சோலைக்கு அழைத்து வந்து, "தலைவியே இங்கு இருப்பாயாக; நான் உனக்கு மலர் கொண்டு வருவேன்; நீ இங்கு நில்'' என்று குறிப்புணர்த்திச் சென்றாள். ஆறுமுகக் கடவுள் மனம் மகிழ்ந்து அம்மையாரிடம் வந்தார். அம்மையார் ஆறுமுகப் பெருமானின் திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். முருகக் கடவுள் அவரைத் தம் திருக்கரங்களால் எடுத்துத் தழுவி இன்பமுற்றார். பிறகு "தினைப்புனத்தை நீ காவல் செய்யச் செல்வாயாக. உன் தந்தையும் பிறரும் உன்னை வந்து தேடுவர்'' என்று கூறி மறைந்தார். வள்ளியம்மையார் சோலையை நீங்கி வருதலும், அவரைத் தோழி எதிர்கொண்டு சில காந்தள் மலர்களைக் காட்டி, அவர் கூந்தலிற் சூட்டி அழைத்துக்கொண்டு தினைப் புனத்தை அடைந்தாள்.

### வெறியாட்டயர்தல்

தினைப்புனத்தில் கதிர்கள் முற்றின. குறவர்கள், அதனைக் கண்டு வள்ளியை நோக்கி, "தினைகள் விளைந்துவிட்டன. ஆதலால் நீ உன் சிற்றூருக்குச் செல்வாயாக'' என்றார்கள். வள்ளி நாயகியார் அதனைக் கேட்டு வருத்தமுற்றார்; மனங்கலங்கிப் பாங்கியோடு புனத்தை விட்டுச் சென்றார்; தம் இருப்பிடம்

அடைந்து, முன்போல ஆடாமலும், பெண்களோடு பேசாமலும் புலம்பித் தனியே இருந்தார். அப்போது நற்றாயும் செவிலித்தாயும் மகளின் மாறுதலைக் கண்டு, "உன் மேனி வேறுபட்டுள்ளது; காரணம் என்ன?" என்று கடினமாகப் பேசிக் கோபித்து அவரை வெளியே போகாவண்ணம் இற்செறித்தார்கள். வள்ளிநாயகியார் உடல் மெலிந்து, உள்ளம் வெம்பி உயிரற்றார்போலப் பரவசமாய் வீழ்ந்தார். அவருடைய மெய் நுடங்கியது; கண் பனித்தது; கை வளைகள் கழன்றன. அச் செயல்களைப் பெண்கள் கண்டு, முருகக்கடவுள் தொட்டதை அறியாமல், "நம் பெண்ணைத் தெய்வம் தீண்டியது போலும்!" என்று எண்ணினார்கள். நம்பிராசனும், கிளைஞரும் மற்றையோரும் வள்ளியம்மையாரின் செயலை நோக்கித் தேவராட்டியையும், வெறியாட்டாளனையும் அழைத்து வந்து முருகக்கடவுளுக்கு வெறியாட்டயர்வித்தார்கள். வெறியாட்டாளன்மேல் குமாரக்கடவுள் தோன்றி, "வள்ளிநாயகியைத் தினைப்புனத்தில் நாம் தொட்டோம்; நம் மனம் மகிழும்படி சிறப்புச் செய்தால் இக்குறை நீங்கும்" என்று குறிப்பினால் சொன்னார். உடனே வள்ளிநாயகியார் அவசம் நீங்கி எழுந்து உட்கார்ந்தார். அப்போது அவர்கள் முருகக்கடவுளை நினைத்துப் பூசனை முதலியவற்றைச் செய்தார்கள்.

**முருகப்பெருமான் வள்ளிநாயகியைத் தேடி அலைதல்**

வள்ளிநாயகியார் தினைப்புனத்தை விட்டுத் தம் சிற்றூருக்குச் சென்ற பிறகு, முருகக்கடவுள் தினைப்புனத்திற்கு வந்து அம்மையாரைத் தேடி அலைந்து அவரைக் காணாது கலங்கினார்; மேகத்தை வினவினார்; மயில்களை வினவினார்; தினைப்புனத்தை வினவினார்; கிளிகளை வினவினார்; யானைகளை வினவினார்; மான்களை வினவினார்; சோலைகளை வினவினார்; மலைகளை வினவினார்; வள்ளியைக் காணாது வாடி வதங்கினார்; நெஞ்சம் வருந்தி மயங்கினார். குமாரக்கடவுளுக்கு இவையெல்லாம் திருவிளையாடல்கள் போலும்!

**வள்ளிநாயகியை உடனழைத்துப் போதல்**

பகலெல்லாம் வள்ளிநாயகியைத் தேடி வாடிய குமாரக்கடவுள், நள்ளிரவில் சிற்றூரை அடைந்தார்; நம்பியின் குடி

வின் வெளிப்புறத்தில் போய் நின்றார். அவரைப் பாங்கி கண்டு, "சுவாமீ! நீர் இராக்காலத்தில் இங்கு வரலாகாது. நம் தலைவி உம்மைப் பிரிந்தால் உயிர் வாழமாட்டாள். நீவிர் இருவரும் கூடுவதற்கு ஏற்றதோர் இடம் இங்கு இல்லை. ஆதலால் அவளை உடனழைத்துச் செல்க" என்றாள்; வள்ளிநாயகியாரை அழைத்துக்கொண்டு வந்து ஆறுமுகக்கடவுளிடம் சேர்த்தாள். அம்மையார் அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி, அஞ்சலி செய்தாள். அப்போது பாங்கி, முருகக் கடவுளின் திருக்கரத்தில் வள்ளி நாயகியாரை அளித்து, "வேடர்கள் கண்டால் தீமை விளையும். இவரை இப்போதே நும் ஊருக்கு அழைத்துச் செல்லும்" என்றாள். முருகக் கடவுள் தோழியை நோக்கி, "தோழியே! நீ நம்மாட்டு வைத்த கருணையை நாம் மறக்கமாட்டோம்" என்று அருள் செய்து, வள்ளிநாயகியை உடன் அழைத்துச் சென்றார். தோழி தன் இல்லம் அடைந்தாள்.

**வள்ளியம்மையை வேடுவர்கள் தேடுதல்**

நம்பிராசன் மனைவி, அதிகாலையில் உறக்கம் நீங்கி எழுந்தாள்; வள்ளி நாயகியைக் காணாது திடுக்கிட்டாள்; எங்கும் தேடினாள்; மகளைக் காணாது தோழியை வந்து வினவினாள். பிறகு தன் கணவனாகிய நம்பிராசனிடம் கூறினாள். அவன் சினந்து எழுந்து, "நம் காவல்களைக் கடந்து, நம் மகளை எவனோ கொண்டு போனான்? நம் கன்னியைக் கவர்ந்த கள்வனைக் காண்பேன்" என்று வில்லையும், அம்பையும் ஏந்திப் புறப்பட்டான். அவனோடு வேடர்கள் கொம்பு முதலியவற்றை ஊதிக்கொண்டு எங்கும் தேடித் திரிந்தார்கள். களவு ஒழுக்கம் கொண்டிருந்த அம்மையார் வேடர்கள் வருவதைக் கண்டு பயந்து, குமாரக் கடவுளின் திருவடிகளில் வீழ்ந்து, "எம்பெருமானே! வேடர்கள் பலர் அம்பு, வில், வாள், வேல் முதலியவைகளை ஏந்திப் போருக்கு வருகின்றார்கள். என் மனம் நடுங்குகின்றது. என் செய்வேன் நான்?" என்று கூறினார். முருகக் கடவுள், "பெண்ணே! வருந்தாதே. கிரௌஞ்ச மலையையும் சூரனையும் பிளந்த வேற்படை நம்மிடமிருக்கிறது. அவர்கள் நம்மோடு போருக்கு வந்தால் அவர்களைக் கொல்லுவோம். நீ அதனைப் பார்த்துக்கொண்டிருப்பாயாக" என்றார். வேடுவர்கள் அதற்குள் சோலையை வந்து

வளைத்துக் கொண்டார்கள். நம்பியும் வேடுவர்களும் ஆரவாரஞ் செய்து கணைகளை வீசினார்கள். அக்கணைகள் யாவும் கருணையங் கடலாகிய ஆறுமுகக் கடவுள் மீது மலர்களைப் போல வந்து வீழ்ந்தன. வள்ளி நாயகியார் அதனைக் கண்டு வருந்தி, "தேவரீர் கீழோர்களாகிய வேட்டுவர்களை உம் படையால் கொல்லுதல் வேண்டும்" என்றார். முருகக் கடவுளின் அருகிலிருந்த சேவல் உடனே எழுந்து நின்று கூவியது. வேட்டுவராசனும் அவன் குமாரர்களும் சுற்றத்தார்களும் கீழே வீழ்ந்து மடிந்தார்கள்.

**இறந்தவர்கள் உயிர் பெற்றெழுதல்**

வள்ளி நாயகியார், தம் தந்தையும் உறவினர்களும் வீழ்ந்து இறந்ததைக் கண்டு மனம் வருந்தினார். முருகக் கடவுள், அம்மையாரின் அன்பைக் காணத் திருவுளங் கொண்டு அச் சோலையைவிட்டு நீங்கிச் சென்றார். அம்மையாரும் அவரைப் பின் தொடர்ந்து சென்றார். அப்போது நாரத முனிவர் தோன்றி வள்ளியம்மையாரோடு முருகக் கடவுளை வணங்கி, "சுவாமீ! பெற்ற தந்தையையும், சுற்றத்தாரையும் தேவரீர் கொன்று அருளினீர்; இறந்தவர்களுக்கு அருள் செய்து அவர்களை உயிர்ப்பித்தருளாமல், அவர்கள் பெண்ணை அழைத்துச் செல்லுதல் தகாது" என்று கூறினார். அருள் வள்ளலாகிய முருகக் கடவுள் சோலைக்கு மீண்டும் சென்று, வள்ளிநாயகியாரை நோக்கி, "நம்மோடு போரிட்டிறந்த உன் சுற்றத்தார்களை எழுப்புக" என்றார். உடனே அம்மையார் முருகக் கடவுளை வணங்கி, "உயிர் நீங்கிய சுற்றத்தார் யாவரும் எழுக" என்று அருளிச் செய்தார். உடனே வேட்டுவ மன்னனாகிய நம்பி, துயில் நீங்கி எழுந்ததைப் போன்று சுற்றத்தாரோடு எழுந்தான். முருகக் கடவுள் தம் உண்மைத் திருவுருவத்தோடு காட்சி தந்தார். உடனே வேடுவர்கள் ஆச்சரியமடைந்து, "எங்கள் சேரியைக் காக்கும் நீரே, எங்கள் பெண்ணைக் களவு செய்து எங்கள் குலத்துக்குத் தீராத பெரும் பழியைச் சுமத்தினீர். எங்கள் மகள் மேல் கொண்ட காதலால் அவளைக் கவர்ந்து வந்தீர். இனி நமது சிற்றூருக்கு வந்து அக்கினி சாட்சியாக அவளைத் திருமணம் செய்துகொண்டு உம்முடைய ஊருக்கு அழைத்துச் செல்வீராக" என்று வேண்டிக்கொண்டார்கள்.

**வள்ளியம்மையாரின் திருமணம்**

ஆறுமுகக் கடவுள் வேடுவர்களின் விருப்பத்திற்கிணங்கினுர்; வள்ளி நாயகியாரை அழைத்துக்கொண்டு நாரத முனிவரோடு தம் திருவடிகள் வருந்தச் சிற்றூரை அடைந்தார். முருகக் கடவுளே வள்ளியை மணம் புரிய வந்திருப்பதைக் கேட்டு யாவரும் மகிழ்ச்சி கொண்டார்கள். வேட்டுவ மன்னனுகிய நம்பி ஆறுமுகக் கடவுளேயும், வள்ளியம்மையாரையும் தன் இல்லத்திற்கு அழைத்து வந்தான்; இருவரையும் புலித் தோலின் மீது வீற்றிருக்கச் செய்தான். அப்போது ஆறுமுகக் கடவுள், அருகிலிருந்த வள்ளி நாயகியாரை அருளோடு நோக்கினுர். அம்மையார் வேட்டுவக்கோலம் நீங்கிப் பழைய தெய்வத் திருக்கோலம் கொண்டு விளங்கினுர். வள்ளியம்மையாரின் திருக்கோலத்தைக் கண்டு நம்பியும், சுற்றத்தார்களும், பாங்கியர்களும், நற்றுயும், செவிலித்தாயும், "இவள் எங்களிடத்துத் தோன்றியது நாம் செய்த தவப்பயனே" என்று கூறினுர்கள். சுபமுகூர்த்தத்தில் வேட்டுவ மன்னன் வள்ளி நாயகியாரின் திருக்கரத்தைச் சுப்பிரமணியக் கடவுளின் திருக்கரத்தில் வைத்து, "எங்கள் குமாரியை உங்களுக்குத் திருமணம் செய்து தந்தேன்; ஏற்றுக் கொள்க" என்று நீர் வார்த்துத் தத்தம் செய்தான். ஆறுமுகக் கடவுளின் கட்டளேப்படி நாரதமுனிவர் திருமணச் சடங்குகளேச் செய்துமுடித்தார்.

அப்போது சிவபெருமான், திருமால் நான்முகன் இந்திரன் முதலிய தேவர்கள் சூழ, உமாதேவியாரோடு விண்ணில் எழுந்தருளினுர்; ஆறுமுகக் கடவுள் வள்ளிநாயகியாரைத் திருமணம் புரிவதைக் கண்டு தண்ணளி புரிந்தார். திருமால் முதலிய தேவர்கள் மலர்மழை பொழிந்து, முருகக்கடவுளே வணங்கினுர்கள். ஆறுமுகக் கடவுள் அவர்கள் யாவருக்கும் அருள் புரிந்தார். அப்போது சிவபெருமான், நான்முகன் திருமால் முதலிய தேவர்களோடு மறைந்தருளினுர்; நாரத முனிவர் திருமணச் சடங்குகளே முடித்து வள்ளிநாயகியாரையும், முருகக் கடவுளேயும் வணங்கித் துதித்தார். நம்பி, தன் மகளேயும் மருகரையும் திருமணக்கோலத்தில் கண்டு மட்டிலா மகிழ்ச்சிகொண்டான். வேட்டுவப் பெண்கள், "மணமக்கள் இன்றுபோல

என்றும் வாழ்க" என்று ஆசி கூறி மலரையும், அறுகையும் சொரிந்தார்கள். வேட்டுவர்கள், தேனையும், தினைமாவையும், காய்களையும், கனிகளையும் வள்ளிநாயகியாருக்கும் முருகக் கடவுளுக்கும் படைத்து உண்ணுமாறு வேண்டினார்கள். இருவரும் அவற்றை உட்கொண்டு அருளினார்கள்.

**திருத்தணிகைக்கு எழுந்தருளுதல்**

முருகக்கடவுள், நம்பிராசனை நோக்கி, "நாம் வள்ளிநாயகியோடு திருத்தணிகை மலைக்குச் சென்று இனிது எழுந்தருளியிருப்போம்" என்று கூறியருளினார். அதற்கு நம்பிராசன் உடன்பட்டான். நற்றாய், செவிலித்தாய், பாங்கியர் முதலியோர்கள் வள்ளிநாயகிக்குப் பல ஆசிகளைக்கூறி, அன்போடு தழுவினார்கள். ஆறுமுகக் கடவுள் நம்பிராசனை நோக்கி, "நீ சிற்றூரைத் தேவர்களும் வணங்கும்படி அரசுபுரிந்து வருவாயாக" என்று கூறி, அவனை அங்கேயே இருக்கச் செய்தார்; வள்ளிநாயகியாரை அழைத்துக்கொண்டு விண் வழியாகச் **செருத்தணி** (திருத்தணிகை) மலையை அடைந்தார். அங்குத் தெய்வத் தச்சனால் அமைக்கப்பட்ட திருக்கோவிலில் எழுந்தருளியிருந்தார்.

**திருத்தணிகையின் பெருமை**

திருத்தணிகை மலையில் வீற்றிருக்கும்போது வள்ளிநாயகியார், ஆறுமுகக்கடவுளின் திருவடிகளை வணங்கி, "சுவாமீ! இந்த மலையின் பெருமைகளை எனக்குக் கூறியருளும்" என்று வேண்டினார். முருகக் கடவுள் அம்மையாரைப் பார்த்து, "வள்ளிநாயகியே! நாம், சூரபன்மனோடும், நும்மவர்களாகிய வேடுவர்களோடும் புரிந்த போரின் கோபம் தணிந்து, இங்கு வந்து வீற்றிருத்தலால் இம்மலை **செருத்தணி** (செரு - கோபம், தணி - தணிதல்) என்னும் காரணப்பெயர் பெற்றது. இது காஞ்சி நகருக்கு அருகிலிருப்பதால் மிகவும் சிறப்புடையது. மலர்களில் தாமரையும், ஆறுகளில் கங்கையும், பதிகளில் காஞ்சியும் சிறந்து விளங்குதல் போன்று, மலைகளில் இச்செருத்தணி மலை சிறந்து விளங்குகிறது.

விரையி டங்கொளும் போதினுள் மிக்கபங் கயம்போல்
திரையி டங்கொளும் நதிகளிற் சிறந்தகங் கையைப்போல்
தரையி டங்கொளும் பதிகளிற் காஞ்சியந் தலம்போல்
வரையி டங்களிற் சிறந்ததித் தணிகைமால் வரையே.

இம்மலையின்கண் வேய்ங்குழல் ஊதி, யாழ் மீட்டி, ஏழிசை பாடி நாம் திருவிளையாடல் புரிவோம். சிவபெருமான் திருக் கயிலாய மலையையே விரும்பியிருத்தல்போல, உலகில் பலமலைகள் இருந்தும் நாம் செருத்தணி மலையில் மிகவும் விருப்பத்தோடு வீற்றிருப்போம். இதற்குச் சான்று ஒன்று உளது. அதனைக் கூறுகிறேன்: இந்திரன் நாடோறும் சாத்தும்படி இம்மலையி லுள்ள சுனையில் மூன்று நீலோற்பலங்களை வைத்து உண்டாக் கினன். அம்மலர்கள் காலையில் ஒன்றும், நண்பகலில் ஒன்றும், மாலையில் ஒன்றுமாக மூன்று வேளைகளிலும் ஊழி திரும்பினும் ஒழிவின்றி மலரும். இம்மலையின் பெருமையை யார் கூறவல்லார்? இம்மலையைத் தொழுதவர்களின் பாவங்கள் நீங்கும். அன்போடு இங்கு வந்து, இச்சுனையில் நீராடி நம்மை வழிபடுவோர்கள் நமது இடத்தை அடைவார்கள். இம்மலையில் வந்து, ஐந்து நாள் தங்கியிருந்து நம் திருவடிகளைத் தஞ்சமென்று வழிபடுகின்ற தவத்தர்கள், மனத்தில் விரும்பிய பேறுகள் எல்லாவற்றையும் பெற்றுப் பின்பு வீடுபேற்றை அடைவார்கள். தேவர்களா யினும், மற்றையவர்களாயினும் இம்மலையை வந்து வணங்காத வர்கள் இழிந்த பிறப்பினையுடையவர்களே ஆவர். பாவங்கள் பல செய்தோரும் நம்பால் அன்புகொண்டு செருத்தணிமலையை அடைந்து வழிபட்டால் அவர்கள் நான்முகன், திருமால் முத லியவர்களைவிட உயர்ந்தவர்கள் ஆவார்கள். இம்மலையிலிருந்து ஒரு அறம் செய்தால் அது பல அறங்களாகப் பெருகும்; பாவங் கள் பல செய்தாலும் அவை தேய்ந்து குறைந்துவிடும். இவை போன்ற பல அற்புதங்கள் இங்கு உள்ளன" என்று கூறி யருளினர். வள்ளிநாயகியாரும் ஆறுமுகக் கடவுளும் செருத்தணி மலையின் ஒரு பக்கத்தில் சிவபெருமானின் திவ்விய திருவுருவ மாகிய சிவலிங்கப்பெருமானைச் சிவாகமவிதிப்படி தாபித்து அன் போடு வழிபட்டுச் சிலநாள் அங்கே வீற்றிருந்தார்கள்.

**கந்த வெற்பு அடைதல்**

ஆறுமுகக் கடவுள் வள்ளிநாயகியாரோடு செருத்தணிமலையி லிருந்து புறப்பட்டுத் திருக்கைலாய மலைச்சாரலிலுள்ள கந்த வெற்பை அடைந்தார். அங்குத் தம் கோயிலிலிருந்த தெய்வ யானை அம்மையார் இருக்குமிடத்தைச் சார்ந்தார். தெய்வ யானை அம்மையார் எதிர்கொண்டு வந்து அவருடைய திருவடி

களை வணங்கினர். ஆறுமுகக் கடவுள் அவரை எடுத்துத் தழுவி அவரது தனிமைத் துன்பத்தைப்போக்கியருளினர். அப்போது, வள்ளிநாயகியார் தெய்வயானை அம்மையாரின் திருவடிகளை வணங்கினர். தெய்வயானை அம்மையார், வள்ளிநாயகியை எடுத்துத்தழுவி, "தனித்திருக்கும் எனக்கு நீ துணைவியானாய்" என்று கூறி, வள்ளிநாயகியாரிடம் பேரன்பு பாராட்டினர். திருமால் பாற்கடலில் சேஷசயனத்திலே சீதேவியும் பூதேவியும் உடனிருக்க வீற்றிருத்தல்போல, ஆறுமுகக் கடவுள் தெய்வயானை அம்மையாரும், வள்ளிஅம்மையாரும் தம் இருமருங்கிலுமிருக்கத் திவ்விய சிங்காதனத்தில் கருணையோடு வீற்றிருந்தருளினர்.

சூர்க்கடல் பருகும் வேலோன் துணைவியர் இருவ ரோடும்
போர்க்கடல் கொண்ட சீயப் பொலன்மணி அணைமேற் சேர்ந்தான்
பாற்கடல் அமளி தன்னில் பாவையர் புறத்து வைகக்
கார்க்கடல் பவள வண்ணன் கருணையோ டமரு மாபோல்.

அப்பொழுது, தெய்வயானை அம்மையார் ஆறுமுகக்கடவுளை நோக்கி வள்ளியம்மை வரலாற்றினைக் கூறியருளுமாறு கேட்டார். குமாரக்கடவுள், "நீவிர் இருவரும் திருமாலின் பெண்களாவீர்; நம்மை மணம் செய்துகொள்ள விரும்பிப் பன்னிரண்டாண்டுகள் தவம் புரிந்தீர்கள். அப்போது நாம் உம்மிடத்து வந்து "உம்மை மணம் புரிகின்றோம். நீவிர் இருவரும் தனித்தனி சுவர்க்கத்திலும் பூமியிலும் போய்த்தோன்றுங்கள்" என்று கூறினோம். அதன்படி மூத்தவளாகிய நீ இந்திரன் மகளாய் வளர்ந்தாய். நாம் வந்து அப்போது உன்னை மணந்தோம். இளையவளாகிய வள்ளி தீயில் மூழ்கிப் பழைய வடிவத்தை விடுத்துச் சூக்குமவடிவத்தோடு வள்ளிமலையில் தவஞ்செய்த சிவமுனிவருக்கும் பிணைமானுக்கும் குழந்தையாய்ப் பிறந்து வேடர் குலத்தில் வளர்ந்து வந்தாள். நாம் சென்று பல மாயங்கள் புரிந்து, அவளுக்கு முன் உணர்வை அருளினோம். அவளுடைய தாய் தந்தையர்கள் அவளை நமக்கு மணம் புரிந்து கொடுத்தார்கள். அவளோடு வள்ளிமலையை விட்டுச் செருத்தணி மலையில் சில நாள் தங்கியிருந்து இங்கு வந்தோம்" என்று கூறியருளினர். தெய்வயானை அம்மையார் முருகக்கடவுளின் திருவருள் வல்லபத்தை வியந்தார். வள்ளிநாயகியார், "முற்பிறப்பில் உமக்குத் தங்கையாக இருந்த நான் இப்பிறப்பிலும் தங்கையாகி

உம்மை வந்து அடைந்தேன். என்னைக் காத்தருள்க" என்று தெய்வயானை அம்மையாரின் திருவடிகளை வணங்கினார். அவர் வள்ளிநாயகியாரை எடுத்துத் தழுவி, "நான் இன்றைக்கு உன்னைத் துணைவியாகப் பெற்றேன்; எம்பெருமானின் திருவருளையும் பெற்றேன். இவற்றைக் காட்டிலும் எனக்கு அரியது ஒன்றுமில்லை" என்றார்.

தெய்வயானை அம்மையாரும், வள்ளிநாயகியாரும் மலரும் மணமும்போல விளங்கினார்கள். கங்கையும், யமுனையும் கடலில் கலந்திருத்தல்போல, ஆறுமுகக் கடவுளைச் சேர்ந்து வழிபட்டு வந்தார்கள். கொடியாகிய சேவலும், வாகனமாகிய மயிலும், மனவேகம் என்னும் தேரும், நாரதமுனிவரின் வேள்வியில் எழுந்த ஆட்டுக்கடாவும், வேலாயுதமும், மற்றை ஆயுதங்களும் முருகக்கடவுளுக்குப் பணிகளைச் செய்துகொண்டு அவருடைய ஆலயத்தின் அருகிலும் சந்நிதானத்திலும் அணுகி வீற்றிருந்தன. ஞானசத்தி கிரியாசத்தியாகிய தேவிமார் இருமருங்கும் சூழ, ஆறுமுகக் கடவுள், அவர்களுக்கு அருள் புரிந்து, உயிர்களுக்கெல்லாம் வீடுபேற்றை அளித்துக் கந்தகிரியில் என்றும் வீற்றிருந்தருளுவார்.

**வாழ்த்து**

ஆறிரு தடந்தோள் வாழ்க; அறுமுகம் வாழ்க; வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க; குக்குடம் வாழ்க; செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க; யானைதன் அணங்கு வாழ்க;
மாறிலா வள்ளி வாழ்க; வாழ்கசீர் அடியார் எல்லாம்.

திருவிருத்தம்-267

ஆகத் திருவிருத்தம்-2,067

திருச்சிற்றம்பலம்

——oo——

**தக்ஷகாண்டம் முற்றுப்பெற்றது**

ஆகக் காண்டம் ஆறுக்குத் திருவிருத்தம்-10,345

**கந்தபுராண வசனம் முற்றுப்பெற்றது**

செந்திலாண்டவன் திருவடி வாழ்க!

## ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி*

### நிலப் பெறுமானம் ரூ. 50,000/-

——oo——

சிறந்த தமிழ்ப் புலவரும், 17-ம் நூற்றாண்டில் தென் குமரி முதல் வடவிமயம் வரை தமிழ்ப் பண்பாட்டினைப் பரப்பியருளிய வருமான **ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்** அவர்களின் ஞாபகார்த்தமாகத் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** இத்தருமம் ஏற்படுத்தப்பெற்றது. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய 1—3 திருமுறைகளும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய 4—6 திருமுறைகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய 7-ம் திருமுறையும், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய 8-ம் திருமுறையும், திருமாளிகைத் தேவர், சேந்தனார் முதலிய புலவர்கள் இயற்றிய 9-ம் திருமுறையும், திருமூல நாயனார் இயற்றிய 10-ம் திருமுறையும், சேரமான் பெருமாள் நாயனார் முதலிய பலர் இயற்றிய 11-ம் திருமுறையும், சேக்கிழார் சுவாமிகள் அருளிய 12-ம் திருமுறையும் ஆகப்பன்னிரண்டு திருமுறைகளையும் பரப்புதற் பொருட்டும், மாணவர் உள்ளத்தில் திருமுறைகள் மாட்டு நன்மதிப்பும் பற்றும் ஊட்டி அவர்களைச் சிறந்த பாரத நாட்டுப் பிரஜைகளாக ஆக்குதற்பொருட்டும் இந்நிதி நிறுவப் பெற்றது.

2. இத்தருமத்தை நிறுவியவர்கள் தம் பேரில் பட்டா பிராசுகளுடன் சர்வ சுதந்திரத்துடன் அனுபவித்து வருகிறதும், இதன் சேர்க்கையில் (ஷெட்யூலில்) விவரிக்கப்பெற்றுள்ளதுமான கும்பகோணம் தாலுக்கா திருப்பனந்தாள் கிராமத்திலிருக்கும்

---

* இப்பத்திரத்தின் மூலம் ஆங்கிலத்திலுள்ளது.

இது திருவிடை மருதூர் சப் ரிஜிஸ்தரார் ஆபீஸில் ரூ. 375/- ஸ்டாம்பு பத்திரத்தில் 14—4—1950-ல் 1-ம் எண் புத்தகத்தில் 1002-ம் வால்யூமில் பக்கம் 181 முதல் 186 வரையில் 794-ம் எண்ணாக ரிஜிஸ்தர் செய்யப் பெற்றது.

ஒரு வீடும் 15 சென்டு புன்செய்யும், மரத்துரை வட்டம், மரத்துரை கிராமத்திலுள்ள நன்செய் புன்செய் நிலம் 48 ஏக்கர், 98 செண்டும் இத்தருமத்தை நடத்துவதற்கென ஒதுக்கப் பெற்றுள்ளன. இந்தச் சொத்தின் மதிப்பு ரூ. 50,000; உத்தேச வருஷ வருமானம் ரூ. 2500.

3. மேற்குறித்த சொத்து, திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீ வைகுண்டத்திலுள்ள குமரகுருபர சுவாமிகள் மடத்தின் ஆதரவில், அம்மடத்து மானேஜிங்கு டிரஸ்டி அவர்கள் பரிபாலனத்தில் இருந்துவரும். அரசியலாருக்குச் செலுத்தவேண்டிய கிஸ்தி, கிராம சிப்பந்திச் செலவு, மராமத்துச் செலவு முதலிய செலவுகள் போக எஞ்சியுள்ள நிகர வருமானத்தைக் கீழே 4-வது பாராவில் விவரித்துள்ளவாறு செலவு செய்யவேண்டும். ஷை குமரகுருபர சுவாமிகள் மடத்து மானேஜிங்கு டிரஸ்டி அவர்கள் வருமானத் தொகையைச் சரிவரச் சேமித்துவைத்து, இந்தத் தருமத்தை நடத்துவதற்குத் தக்க முறையில் நிரந்தரமாகப் பயன் படுத்தவேண்டும்.

4. ஷை மானேஜிங்கு டிரஸ்டி அவர்கள் 12 திருமுறைகளை வரிசையாகவோ அல்லது அவ்வக் காலங்களில் எந்தத் திருமுறை வேண்டுமோ அந்தத் திருமுறையையோ அச்சியற்றி வெளியிட வேண்டும். ஒவ்வொரு திருமுறையையும் வெளியிடும்பொழுது அப்புத்தகத்தின் முகவேட்டில் (தலைப்புப்பக்கத்தில்) (Title page) **"ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகளின் ஞாபகார்த்தமாக 8—4—1950ல் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவிய தருமக் கட்டளையின்படிக்கு இந்நூல் வெளியிடப் பெறுகிறது"** என்ற விவரம் கண்டிருக்கவேண்டும். இந்தத் தருமத்தை ஏற்படுத்தியவர்களுக்கும், அவர்களுக்குப்பின் உரிமையுள்ளவர்களுக்கும் அச்சிடப்பெறும் திருமுறைகளில் 25-பிரதிகள் விலையின்றி அனுப்பப்பெறவேண்டும். எஞ்சிய பிரதிகளை அடக்க விலைக்கு மேற்படாத விலைக்கு விற்கவேண்டும். ஷை புத்தக விற்பனை வருமானத்தை ஷை மானேஜிங்கு டிரஸ்டி அவர்கள் திருமுறைகள் அச்சியற்றுவதற்குத் தன் கைவசமுள்ள தொகையுடன் சேர்த்துக் கொள்ளவேண்டும். தமிழிலக்கியத்

தையும் பண்பாட்டையும் பரப்பும்படியான சிறந்த நூல் நிலையங்களுக்கு ஒவ்வொரு பிரதியை இலவசமாக வழங்கலாம்.

5. ஷை மானேஜிங்கு டிரஸ்டி அவர்கள் வரவு செலவு கணக்கைச் சரிவர வைத்திருக்கவேண்டும். அக்கணக்கு ஆண்டு தோறும் ஆடிட்டர் (Auditor) ஒருவரால் தணிக்கை செய்யப் பெறவேண்டும். மேற்குறித்த ஆடிட் ரிப்போர்ட்டு (Audit Report)ம், வெளிப்படுத்தப்பெற்ற திருமுறைகள், அச்சியற்றிய பிரதிகள், இலவசமாக வழங்கியவை, விற்றவை, எஞ்சியுள்ள வை, விற்பனை வருமானம், அச்சியற்றி வெளிப்படுத்தற்கான செலவு, விற்பனை வருமானத்தினின்று கையகத்துள்ள முதற் பொருளோடு சேர்த்ததொகை முதலிய தலைப்புக்களில் புள்ளி விவரமும், இந்தத் தருமத்தை ஏற்படுத்தியவர்களுக்கும், அவர்க் குப்பின் உரிமையுள்ளவர்களுக்கும் ஆண்டுதோறும் அனுப்பி வரவேண்டும்.

6. நிலங்களினின்று வரும் நிகர வருமானமும் வெளி யிட்ட புத்தகங்களின் விற்பனைத் தொகையும் திருமுறைகளை அச்சியற்றி வெளியிடுவதற்குரிய செலவுகளுக்கே பயன்படுத்த வேண்டும்.

7. இந்தத் தருமத்தை வேறு எம்முறையிலும் பயன்படுத் தக்கூடாது. ஸ்ரீ வைண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் மடத் துக்கு இப்பொழுதுள்ள மானேஜிங்கு டிரஸ்டி அவர்களாலும் அவர்களுக்குப்பின் உரிமையுள்ளவர்களாலும் இது பரிபாலிக் கப் பெற்றுவரும்.

8-4-1950 (Sd.) காசிவாசி அருள்நந்தித் தம்பிரான்

—oo—

## சென்னையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் திருக்குறள் பதிப்பு நிதி*

### சேமவைப்பு ரூ. 35000/-

தமிழ்ப் பண்பாட்டையும் திருக்குறள் கருத்துக்களையும் கன்னியாகுமரி முதல் இமயம் வரையிலும் உள்ள பாரததேச மக்களுக்குப் பரப்பியருளிய சிறந்த தமிழ் வல்லுநராகிய ஸ்ரீகுமர குருபர சுவாமிகள் அவர்களின் ஞாபகார்த்தமாகத் திருப்பனந் தாள் ஸ்ரீ காசிமடம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம் பிரான் சுவாமிகள் அவர்களால்** இந்நிதி நிறுவப்பெற்றது.

2. இதற்குரிய மூலதனம் ரூ. 35000/-(ரூ. முப்பத்தையாயிரம்) ஆண்டொன்றுக்கு 3% வட்டி தரும்படியான அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்யப்பெற்றுள்ளது.

இந்துமத பரிபாலன போர்டாரின் 4—3—1950-உ கொண்ட எண் 18/1950 அறிவிப்பின்படிக்கும், 13-6-1950-ல் போர்டு செயின்ட் ஜார்ஜு கெஜட் 228—229-ம் பக்கங்களில் வெளியிடப்பெற்ற அறிவிப்பின்படிக்கும், மைலாப்பூர் திருவள்ளுவர் திருக்கோயிலோடு இணைக்கப்பட்டுள்ளதும், சென்னையில் தற்பொழுது திரு. P. M. லிங்கேசன் அவர்கள் B. A., திரு. V. சங்கரன் செட்டியார் அவர்கள், S. பாஸ்கரன் அவர்கள் ஆகிய மூவர் அங்கம் வகித்துத் தொடங்கியுள்ளதும் ஆன திருக்குறள் தருமநிதி (Tirukkural Specific Endowment) குழுவிற்கு ஷ மூலதனத்தினின்று கிடைக்கும் வட்டித்தொகை இம்மூல தனத்தை ஏற்படுத்தியவர்களால் ஆண்டுதோறும் அனுப்பப் பெறும்.

இந்துமத பரிபாலன போர்டாரின் 16—8—1950-உ கொண்ட 4493 எண்ணுள்ள கடித மூலம் ஒப்புதல் பெற்று இந்தத் தருமம் நிறுவப்பெற்றது.

3. ஷ குழுவினர் திருக்குறளைத் தமிழிலும், இந்தி ஆங்கில மொழி பெயர்ப்புக்களுடனும், குறிப்புரையுடனும் அச்

---

* இப்பத்திரத்தின் மூலம் ஆங்கிலத்திலுள்ளது.

இது 4—10—1950-ல் திருவிடை மருதூர் சப் ரிஜிஸ்தரார் ஆபீஸில் 68/1950 எண்ணாக 4-ம் நெ. புத்தகத்தில் 48-வது வால்யூமில் 195—199 பக்கங்களில் ரிஜிஸ்தர் செய்யப்பெற்றுள்ளது.

சியற்றி வெளியிட வேண்டும். ஒவ்வொரு வெளியீட்டிலும் 100 பிரதிகள் இந்தத் தருமத்தை நிறுவியவர்களுக்கும் அவர்களுக்குப்பின் உரிமையுள்ளவர்களுக்கும் இலவசமாக அனுப்பி வரவேண்டும். எஞ்சிய பிரதிகளை அடக்கவிலைக்கு அதிகப்படாத விலைக்கு விற்கவேண்டும். புத்தக விற்பனைத் தொகையை ஷை குழுவினர் திருக்குறள் பதிப்புக்கென இந்தத் தருமத்தை நிறுவியவர்களிடத்தினின்று பெறும் தொகையுடன் சேர்த்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு வெளியீட்டின் முதற்பக்கத்தில் (Title page) **"ஆதி குமரகுருபர சுவாமிகளின் ஞாபகார்த்தமாகத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஏற்படுத்திய திருக்குறள் பதிப்பு நிதியினின்று வெளியிடப்பெறுவது"** என்ற விவரம் கண்டிருத்தல் வேண்டும். தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ் இலக்கியத்தையும் வளர்க்கும் நூல் நிலையங்களுக்கு இலவசமாக ஒவ்வொரு வெளியீட்டிலும் ஒவ்வொரு பிரதியளிக்கலாம்.

4. ஷை குழுவினர் வரவு செலவுக் கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும். அதன் பிரதியொன்று தணிக்கைக் குறிப்புடன் (Audit Report) ஆண்டுதோறும் இந்நிதியை ஏற்படுத்தியவர்களுக்கும் அவர்களுக்குப் பின் உரிமையுள்ளவர்களுக்கும் அனுப்பப்பெறல் வேண்டும். அச்சிட்ட பிரதிகள் எத்தனை, விற்றவை எத்தனை, கையிருப்பு எத்தனை என்றாற்போன்ற விவரங்களும் கொடுக்கப்பெறல் வேண்டும்.

5. இந்நிதியை நிறுவியவர்களிடமிருந்து ஆண்டுதோறும் பெறுந்தொகையும், புத்தக விற்பனைத் தொகையும் மேற்குறித்தவாறு திருக்குறளை அச்சிடுதற்காகவே செலவு செய்யப் பெற வேண்டும். ஷை குழுவினர் எப்பொழுதாயினும் தம் அலுவல்களை நடத்தாமற் போயினும், திருக்குறளை வெளியிடாமற் போயினும் இம் மூலதனத்தினின்று பெறும் வட்டித்தொகையை ஷை குழுவினர்க்கு அனுப்பாமல், இந்நிதியை ஏற்படுத்தியவர்களும், அவர்களுக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களும் தாமே திருக்குறளை மேலே விவரித்துள்ளவாறு பதிப்பிக்க உரிமையுடையவராவர்.

2—10—1950. **காசிவாசி அருள்நந்தித் தம்பிரான்**

——oo——

உ

செந்திலாண்டவன் துணை

# திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவராக எழுந்தருளியிருக்கும்

## ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி

## அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

**தமிழ்க் கல்வி, சைவசித்தாந்தம், தேவாரத் திருமுறைகள், இசைத் தமிழ், அன்னதானம், வைத்தியம் இவற்றின் அபி விருத்திக்காகவும் பொதுமக்களின் அனுகூலத்துக்காகவும் மன முவந்து அமைத்திருக்கும் பேரறக் கட்டளைகள்.**

| தொடர் எண் | தரும விபரம் | மூலதனம் ரூபாய் |
|---|---|---|
| 1. | சிவஞான சித்தியார் உபந்நியாசக் கட்டளை அண்ணுமலைப் பல்கலைக் கழகம் ... | 15,000 |
| 2. | கொட்டையூரில் நடுத்தரக் கல்விச்சாலை ஏற்படுத்த ... | 11,500 |
| 3. | திருவாங்கூர் மகாராஜா தேவாரப் பரிசு ... | 5,000 |
| 4. | சேரமான் பெருமாள் தேவாரப்பரிசு, கொச்சி... | 5,000 |
| 5. | மூவர் தேவாரப் பரிசு ; சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள், ஆடுதுறை ... | 10,000 |
| 6. | ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந் தப் போதகாசிரியர் நியமிக்க ... | 60,000 |
| 7. | அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் சைவசித் தாந்த உபகாரச் சம்பளம் அளிக்க ... | 30,000 |
| 8. | திருப்பனந்தாளில் தமிழ்க் கல்லூரி நிறுவ ... | 1,50,000 |
| 9. | இசைத் தமிழ்க் கல்விக்கு ... | 1,00,000 |
| 10. | திருப்பனந்தாளில் கால்நடை வைத்தியசாலை ஏற்படுத்தவும், குடந்தைக் கல்லூரியில் உபகாரச் சம்பளமளிக்கவும் ... | 20,000 |

| | | |
|---|---|---|
| 11. | ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவுநாள் அன்னதானம் வைகாசி அமர பக்ஷம் திருதியை ... | 10,000 |
| 12. | இராமேசுவரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னதானம் வைகாசிஅமரபக்ஷம் திருதியை ... | 10,000 |
| 13. | திருநள்ளாற்றில் ஆவணி மூல அன்னதானம் ... | 3,000 |
| 14. | ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம் ... | 17,000 |
| 15. | திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி மாண வர்கள் உணவு நிதி ... | 1,00,000 |
| 16. | திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை நிறுவ நிலப் பெறுமானம் ... | 66,000 |
| 17. | திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் கேதார கட்டம் ... | 2,900 |
| 18. | திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் அரிச்சந்திர கட்டம் ... | 3,300 |
| 19. | கும்பகோணத்தில் மணிக்கூண்டு ... | 25,000 |
| 20. | தஞ்சையில் காசநோய் வைத்தியசாலை ... | 28,500 |
| 21. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரர் நினைவுநாள் அன்னதானம் வைகாசி அமரபக்ஷம் திருதியை | 9,000 |
| 22. | மைசூர் மகாராஜா தேவாரப் பரிசு ... | 5,000 |
| 23. | தருமை ஸ்ரீ குரு ஞானசம்பந்த சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, மாயூரம் ... | 5,000 |
| 24. | சென்னை விவேகானந்தா கல்லூரியில் ராஜாஜி சைவசித்தாந்தக் கட்டளை ... | 10,000 |
| 25. | ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சர். எஸ். ராதா கிருஷ்ணன் சைவசித்தாந்தக் கட்டளை ... | 20,000 |
| 26. | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, ஸ்ரீ வைகுண்டம் ... | 5,000 |
| 27. | மதுரைத் திருமலை நாயக்கர் தேவாரப் பரிசு ... | 10,000 |
| 28. | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், திருநெல் வேலி மாணவிகட்கு ... | 1,00,000 |

| | | |
|---|---|---|
| 29. | ஸ்ரீ காசியில் மகாத்மா காந்தியடிகள் நினைவு அன்னதானம் ... | 5,000 |
| 30. | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்—ஸ்ரீகாசி மதுரை, குடந்தை மாணவிகட்கு ... | 1,50,000 |
| 31. | டாக்டர் சுவாமிநாத ஐயர் நினைவுத் திருக்குறட் பரிசு, சென்னை ... | 3,500 |
| 32. | குடந்தையில் காந்தியடிகள் பசுப் பரிசு ... | 1,000 |
| 33. | காந்தியடிகள் நினைவு அரியநாயகிபுரத்தில் ஹரிஜன மாணவ உபகாரநிதி ... | 3,000 |
| 34. | ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நித்திய மகேசுவர பூசை ... | 10,000 |
| 35. | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமிக்கு வெள்ளிக் கவசம் ... | 5,400 |
| 36. | விஷ்ணுபுரத்தில் ஹைஸ்கூல் படிப்பக நிதி ... | 1,000 |
| 37. | குடந்தையில் ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு ... | 3,500 |
| 38. | திருநெல்வேலியில் ஸ்ரீ அரியநாயக முதலியார் நினைவு அபிராமி அந்தாதிப் பரிசு ... | 3,500 |
| 39. | திருப்பனந்தாளில் அப்பூதி அடிகள் நினைவுத் தண்ணீர்ப்பந்தல் தர்மம் ... | 3,500 |
| 40. | ஸ்ரீ வைகுண்டத்தில் படிப்பக நிதி ... | 3,500 |
| 41. | சிதம்பரம் உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கு உணவு நிதி ... | 35,000 |
| 42. | சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை, ஆனி உத்தர நாட்களில் அன்னதானம் ... | 12,000 |
| 43. | இராமேசுவரத்தில் ஆடி, தை அமாவாசைகளில் அன்னதானம் ... | 3,500 |
| 44. | ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நூல்நிலையக் கட்டிடம் ... | 20,525 |
| 45. | பஞ்சாப் அகதிகளுக்கு நன்கொடை ... | 5,000 |
| 46. | அரியநாயகிபுரத்தில் நூல்நிலைய நிதி ... | 3,500 |
| 47. | ஸ்ரீ காசி கேதாரீசுவரர் கோயிலில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அன்னதானம் நவராத்திரி, விஜயதசமி நாட்களில் ... | 5,000 |

| | | |
|---|---|---|
| 48. | ஸ்ரீவில்லிபுத்தூரில் தேவாரப் பரிசு ... | 3,500 |
| 49. | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோயிலில் மின்சார தீபம் போட ... | 7,500 |
| 50. | காஞ்சியில் மூவர் தேவாரப் பரிசு ... | 5,000 |
| 51. | திருவஞ்சைக்களத்தில் ஆடிச்சுவாதியில் சேரமான் பெருமாள் நினைவு அன்னதானம் ... | 7,000 |
| 52. | 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம் உதவி நிதி ... | 18,500 |
| 53. | 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்திற்கு நான்கு ஆண்டு மூலதனம் ... | 28,000 |
| 54. | 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் திருச்செந்தூர் உதவி மூலதனம் ... | 15,500 |
| 55. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் படிப்பகப் பராமரிப்புக்காகக் கட்டிடமும் நிலமும் ... | 15,000 |
| 56. | மாளவியாஜி பெயரால் கல்கத்தா, டெல்லி, அலகாபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் முதலிய பல்கலைக் கழகங்களில் சைவசித்தாந்த உபந்நியாசக் கட்டளை ... | 5,000 |
| 57. | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்—சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர் ... | 60,000 |
| 58. | திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் சோமேசர் ஸ்நானக் கட்டம் நிறுவ ... | 2,275 |
| 59. | ஸ்ரீ வைகுண்டத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி நிறுவ ... | 45,000 |
| 60. | ஸ்ரீவைகுண்டம் தேவார மாணவர்கள் காசி யாத்திரை நிதி ... | 5,000 |
| 61. | பனைசைக் கல்லூரியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பரிசு ... | 5,000 |
| 62. | (6) ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த நிதிக்காக அதிகப்படியாக அளித்தது ... | 16,000 |
| 63. | 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் மதுரை முதலாண்டு மூலதனம் ... | 7,000 |

64. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி மாணவிகள் ஹாஸ்டல் ஏற்படுத்த நன்செய் நிலக்கிரயம் ... 14,000

65. 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம் வகையரு-திருநெல்வேலி இரண்டாண்டு உதவி மூலதனம் ... 10,000

66. 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசி வகையரு-கும்பகோணம் முதலாண்டு உதவி மூலதனம் ... 7,000

67. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு நன்கொடை... 10,000

68. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்திற்கு அச்சகம் வாங்க நன்கொடை கட்டிடம் உள்பட ... 27,975

69. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு உபகாரச் சம்பளமளிக்க நெல்லை ஜில்லா போர்டாரிடம் ... 10,000

70. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு இடம் வாங்க நன்கொடை ... 8,000

71. ஸ்ரீ காசியில் தை மாசத்தில் இந்தியக் குடியரசு தின அன்னதானம் ... 10,000

72. ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு மாணவர்கள் உணவு நிதி... 1,50,000

73. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் மடத்திற்குப் பன்னிரு திருமுறைகள் அச்சிட நிலப்பெறுமானம் ... 50,000

74. சண்டேசுவர நாயனர் நினைவு தண்ணீர்ப்பந்தல் தருமம் திருவாப்பாடி ... 3,500

75. காஞ்சிபுரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவு உபகாரச் சம்பள நிதி ... 7,000

76. திருச்செந்தூரில் ஸ்ரீ செந்திலாண்டவன் தேவாரப் பரிசு நிதி ... 5,000

77. சென்னையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு திருக்குறள் பதிப்பு நிதி ... 35,000

78. ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் மங்கையர்க் கரசியார் நினைவுப் பரிசு நிதி ... 3,500

79. கும்பகோணம் தாலூகா மேலச் சூரியமூலை கண்டியன் பழவாற்றின்மீது பாலம் கட்ட ... 7,470

80. ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தண்ணீர்ப்பந்தல் தரும நிதி ... 3,500

81. பழுத்த தமிழ்ப் புலவர் காசியாத்திரை நிதி செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள் ... 5,000

82. திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் நினைவு அன்னதானம் சித்திரைப் பரணியில்... 7,000

83. திருவஞ்சைக்களத்தில் ஸ்ரீ சேரமான் ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனர் நினைவு வாசகசாலை நிறுவ ... 5,000

84. திருநாரையூரில் ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகள் நினைவுத் திருமுறை நிதி ... 35,000

85. இராமநாதபுரத்தில் ஸ்ரீ தாயுமானவர் சன் மார்க்க சங்க நூல் நிலைய நிதி ... 5,000

86. லால்குடியில் ஸ்ரீ காரைக்கால் அம்மையார் நினைவு மாணவிகள் உபகாரச் சம்பள நிதி ... 15,000

87. அவிநாசியில் முந்நூல் அணியும் கலியாண நிதி (திருப்பனந்தாளில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நினைவுப் பரிசும்) ... 5,000

88. குடந்தையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதி நெறி விளக்கப் பரிசு ... 5,000

89. திருப்பூந்துருத்தியில் அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு சித்திரைச் சதயத்தில் ... 15,000

90. திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தமிழ்ப் பரிசு ... 5,000

91. ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்தர் நினைவுப் பரிசு, ஸ்ரீவைகுண்டம் ... 3,500

92. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம், இராமேசுவரம் ... 3,500

93. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்ன தானம், சென்னபுரி அன்னதான சமாஜம், சென்னை (வைகாசி அமரபக்ஷம் திருதியை) ... 5,000

| | | |
|---|---|---|
| 94. | காசியில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவு அன்னதானம் (ஆனி மகத்தில்) ... | 5,000 |
| 95. | திருச்செந்தூரில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் (வைகாசி அமரபக்ஷம் திருதியை) ... | 5,000 |
| 96. | திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் நினைவுப் பரிசு நிதி ... | 5,000 |
| 97. | திருநாரையூரில் ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் நினைவுக் கட்டிடம் நிறுவ ... | 5,600 |
| 98. | திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதி நெறி விளக்கப் பரிசு ... | 5,000 |
| 99. | தஞ்சை, கலைக்கூடத்திற்கு நன்கொடை ... | 5,000 |
| 100. | மணிக்குடியில் கடலூர்க்கலயர் புனறப்பந்தர் நிதி | 3,500 |
| 101. | காசியில் ஸ்ரீ மாசிலாமணித் தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் நினைவு மாசி மாத அன்னதானம் | 5,000 |
| 102. | திருவாங்கூர் பல்கலைக் கழகத்தில் திருவள்ளுவர் நினைவுப் பரிசு ... | 5,000 |
| 103. | ஸ்ரீ காசியில் பங்குனி மாசத்தில் கமலை ஞானப்பிரகாசர் நினைவு அன்னம் பாலிப்பு ... | 5,000 |
| 104. | திருச்செந்தூரில் ஐக்கிய வேளாள சங்கப் படிப்பக நிதி ... | 5,000 |
| 105. | காசியில் சித்திரை மாசத்தில் அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு ... | 7,000 |
| 106. | ஆடுதுறையில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி நிதி ... | 30,000 |
| 107. | செந்திலாண்டவன் திருவருள் பாலிப்பு நிதி ... | 50,000 |
| 108. | திருச்செந்தூரில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நித்திய மகேசுவர பூஜை நிதி ... | 12,000 |
| 109. | ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு - திருச்செந்தூர் - ஸ்ரீவைகுண்டம் உயர்நிலைப் பள்ளிகளில் ... | 7,000 |
| 110. | ஸ்ரீ காசியில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு (கார்த்திகை மாதத்தில்) ... | 7,000 |
| [illegible]. | சென்னைக் கல்லூரிகளில் ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் நினைவு சிவபோகசாரம் பரிசுநிதி... | 5,000 |

| | | | |
|---|---|---|---|
| 112. | தஞ்சையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு—சேமவைப்பு | ... | 5,000 |
| 113. | மதுரையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு—சேமவைப்பு | ... | 5,000 |
| 114. | திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல் தரும நிதி தத்துவாஞ்சேரி | ... | 3,500 |
| 115. | காஞ்சிபுரத்தில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு மாசி - மிருக சீருஷம் | ... | 7,000 |
| 116. | திருக்காளத்தியில் கண்ணப்பர் நினைவு அன்னம் பாலிப்பு | ... | 5,000 |
| 117. | ஸ்ரீ காசியில் சுந்தரர் நினைவு ஆடிமாத அன்னம் பாலிப்பு சேமவைப்பு | ... | 7,000 |
| 118. | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சகலகலாவல்லி மாலைப் பரிசு—அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாயூரம் | ... | 1,000 |
| 119. | சிதம்பரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு | ... | 5,000 |
| 120. | வெள்ளியம்பலவாண முனிவர் நினைவு முது மொழிமேல் வைப்புப் பரிசு—திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் | ... | 3,000 |
| 121. | காசியில் ஜாபள்ளி ஜமீன்தார் அன்னம் பாலிப்பு சேமவைப்பு | ... | 6,000 |
| 122. | மதுரையில் கமலை வெள்ளியம்பலவாணர் நினைவு முதுமொழிமேல் வைப்புப் பரிசு | ... | 5,000 |
| 123. | திருவாதவூரில் ஸ்ரீ மாணிக்கவாசகர் நினைவு அன்னம் பாலிப்பு நிதி | ... | 5,000 |
| 124. | சீகாழியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பால் நிதி | ... | 3,500 |
| 125. | திருவண்ணாமலையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு | ... | 5,000 |
| 126. | கல்கத்தா சர்வகலாசாலையில் ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகள் தமிழ்ப் பரிசு நிதி | ... | 3,500 |
| 127. | தில்லையில் பல்லாண்டு விளக்கு நிதி | ... | 5,000 |

திருச்சினாப்பள்ளி யூனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்